O,IC5 : 24

கடவுள்துணை.

[illegible]

திருவள்ளுவ நாயனார்

அருளிச்செய்த

தமிழ்மறையாகிய

திருக்குறள் மூலமும்,

பரிமேலழகருரையும்,

இவ்வுரைக் கியையுமாறு

லோகோபகாரி பத்திராதிபர்

பண்டிதர்

கோவிந்தவேலுச்செட்டியாரவர்கள்

இயற்றிய

தெளிபொருள் விளக்கமும், கருத்துரையும்,

குறிப்புரையும்.

[illegible]

ஆங்கில மொழிபெயர்ப்புடன்

இவை

ஷெ. செட்டியா ரவர்களாலும்

மங்கலம் - ஷண்முகமுதலியா ரவர்களாலும்

சென்னை, கோமளேசுவரன்பேட்டை,

[illegible]


பதிப்பிக்கப்பட்டன.

மூன்றாம் பதிப்பு.

1889.

Copy Right Registered.

MADRAS-1



திருவள்ளுவ நாயனார்.

முதற்பதிப்பின்

முகவுரை

காண வியாபாரத்தைச் செல்வமயமாகவுடைய எவ்வுயிர்களும் சர்வ துக்க நிவிர்த்தியும் பரமாகாந்தப் பிராப்தியும் பெற விரும்புவ தியற்கை யாம்; ஆனால், அவை அவற்றிற்குப் பொருளல்லவற்றைப் பொருளாகக் கொள்ளும் மயக்கம் காரணமாக வுண்டாம் காமம் வெகுளி உள்ளவையி லும் உண்டாகா வென்பது ஒருதலையாம்; பொருளைப் பொருளாகவும், பொருளல்ல வற்றைப் பொருளல்லவாகவும் கொள்ளுந் தத்துவ ஞான முதிர்ந்த விடத்து உண்டா மென்பது "பொருளல்ல வற்றைப் பொரு ளென் றுணரு, மருளாஞ் மாணப் பிறப்பு" "இயுணர் வெய்தியக் கண் ணும் பயமின்றே, மெய்யுணர் வில்லா தவர்க்கு" "காமம் வெகுளி மயக்க மிலைமூன்று, மெம்கெடக்கெடு நோய்" என்றற் றொடக்கத்தன திருக் குறளால் ன்கு வெளியாம். உயிர்கள் நீழ்போன ஜன்மங்களிற்செய்த புண்ணிய பரிபாகத்தால் கான்மறை வழங்கும் பாதகண்டத்தில் ஒழுக் கத்தை யுயிரினுஞ் சிறந்ததாகக்கொண்டு கடைப்பிடித்து நன்னெறியிற் செல்லும் நன்மக்கள் குலதநிற்பிறந்த விலக்கியனவற்றை ஒழித்து விதித் தனவற்றையே செய்தவர்தால், அவவுயிர்களுக்குத் தத்துவஞான வாயிலா கச் சர்வ துக்க நிவிர்த்தியும் பரமாகாந்தப் பிராப்தியுமாகிய மோட்சம் ஒரு தலையா யுண்டாமென்பத நன்னூல் உணர்ந்தோரது கொள்கையாம்.மக்கள் தத்துவஞானம் பெறுதற்பொருட்டு, ஒவ் வொரு சிருஷ்டியி னாரம்பத்திலும் பரமேசுவரன் அநாதியாய வேதத்தை எடுத்துக்கூறி வருகின்றனென்பதும், நாமே குருவடிவம் கொண்டு வந்த அதனை விரித்தும் சுருக்கியும் சிஷ்ய பரம்பரைகளுக்குக்கூறி வருகின்ற தென்பதும் சாஸ்திரசம்மதமாம். இதனால், மக்கள் தத்துவஞான மடைதற்கு எதவாயுள்ளது வேதமேயா மென்பது பெறப்படும். இது "சத்திய மாதி வேத மொன்றுமே யாவை யாகும்" "வேத மியாதியே மெய்ப்பொருண் மற்றைப் பொருளெலா மித்தையே" "ஆதி யான் முறையிற் சொலப்பட்ட அருத்தமே உண்மையானது" என்ற நூதசங்கதை கூறுவதால் ன்கு விளக்கமாம். இதனை மூலமாகக்கொண்டு ாழுந்தனவில் பல; அவற்றுள் திருக்குறளும் ஒன்றாம். இது மாங்குடி ருதனார் "தந்தம் வெளிய புணர்தற் தரிதாகி,வேதப் பொருளாய் மிகவினம் ந்த்-நீதற்றோர், உள்ளுறை யுள்ளுதொ றின்ன முருக்குமே, வள்ளுவர் ாய்மொழி மாண்பு" என்றும்,தனஞ்சயனாரும் "வேத மிழப்பொ ருளை வெண்பாவின் வகுத்தவனார், ஒதவழுக் கற்ற வுலகு ன்றும் திரு ள்ளுவமாலையிலிருந்தனை செல்வனே புலவ, ரேவே,"மறைக்கு ிரோன்றரு மொழியாய் நூலெத பிரமாணங்கள் முற்றும்பிரமா ணங்களே" ன்ற நூதசங்கதை கூறியவாற திருக்குறளும் பிரமாண நூல்களுள் ஒன் மென்பது பெறப்பட்டது. இத்திருக்குறள் தமிழில் வெளியாய நூல்

களுள் அறம் பொரு ளின்பங்களே எப்பாலவரும் இயைந்தேற்குமாறு முறைப்படக் கூறுவதுபற்றித் தலைமைபெற்றுத் தமிழறிஞர் களாலும் வேதம்போன்று போற்றப்பட்டுவருதலும், இதன் சிறந்த தெலுங்கு, இங்கிலீஷ், பிரஞ்சு, ஜர்மனி முதலிய பாஷைச் சுரியாராலும் சமஸ்கிருத பாஷையில் மொழிபெயர்த்துக்கொண்டு பொன்னேபோற் போற்றப்பட்டு வருதலும் குன்றின்மேலிட்ட விளக்கம். இத்திருக்குறளே ஒவ்வொருமதல்தரும் தத்தம் மதநூலென்று பாராட்டிவருதலினால், இது யாவரும் உய்யுநெறிகண் டெளிதி னுய்யுமாறு இயற்றப்பட்ட நூலாம். இது "சமயக் கணக்கர் மதிவழி கூரு, தலகியல் கூறிப் பொருளிது வென்ற, வள்ளுவன்" என்று கல்லாடங் கூறுமாற்றலும் அறிதற்பாலதாம். "பல்காற் பழகினுந் தெரியா வுளவேல், தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார், மூன்றினு முழங்கு மாண்டினு மிலேயேல், வடமொழி வெளிபெற வழங்கு மென்க" என்று இலக்கணக் கொத்தநூலார் கூறுவதனாலும் இதன் மாட்சிமை கன்குவெளியாம். நாயனர், தேவர் என்றற் றொடக்கத்தத் திருநாமங்களுடைய தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனரால் அருளிச்செய்யப்பட்ட உத்தரவேதம், தெய்வநூல் என்றற் றொடக்கத்தத் திருநாமங்களுடைய இத்திருக்குறளுக்கு உரையியற்றிய தருமர் முதலிய பதின்மருள் பரிமேலழகர் உரையே சிரிய உரையாய் நிலவித்தென்பது "நூலித், பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன், தெரித்தவுரை யாமோ தெளி" என்றன்ன பிரயோகத்தினால் இனிது விளங்குவதாம். இப்பரிமே லழகருரை தருக்கம், இலக்கணம், சாங்கியம், யோகம், வேதாந்தம், தருமசாஸ்திரம், சங்கநூல் முதலியவற்றிற் பயிற்சியுடையவர்க்கேயன்றி மற்றையோர்க்குப் பெரிதும் பயன்படாதிருப்பது கருதி, இவ்வுரை முழுதிற்கும் கன்கு பரவும்வண்ணம் தெளிபொருள்விளக்கமும், கருத்துரையும், செடி உரையில் இயைபறைகாய்போலிருக்கும் விஷயங்கள் கன்கு விளங்குமாறு குறிப்புரையும் (பரிமேலழகர் மேற்கோளாக எடுத்துள்ள செய்யுள்களுக் குரையும், அவர்காட்டிய இலக்கணங்களுக்கு விளக்கமும், சாங்கியமத முதலியவற்றின் சித்தாந்தமும், பெரும்பான்மையும் மேற்கோளாய்க் காட்டியுள்ள செய்யுட்களின் நூற்பெயரும், நூற்பிரமாணங்களும் அக்குறிப்புரையில் விளக்கிக்) கற்றோர்க்கேயன்றி மற்றையோர்க்கும் உபாத்தியாயரின் சகாயம் பெரும்பான்மையு மின்றி யினிது விளங்குமாறெழுதி இந்நூல் அச்சிடப்பட்டது.

இந்நூலில் உரையுடன் திருவள்ளுவமாலையும், திருவள்ளுவரது சரித்திரமும் சேர்க்கப்பட்டிருத்தலே யல்லாமல், நாயனரது வேறுசரித்திர விசேஷங்களும், அவரது பத்துத் திருநாமங்களுக் கர்த்தமும், திருக்குறளின் பத்துத் திருநாமங்களுக் கர்த்தமும், இலக்கண விசேஷங்களும், பரிமேலழகரது சரித்திரமும், வேறு சில விசேஷமும் எழுதிச் சேர்க்கப்பட்டுமிருக்கின்றன.

15—7—1904. கோ - வடிவேலுசெட்டியார்.

இரண்டாம் பதிப்பின்
முகவுரை.

இப்பதிப்பு இரண்டாவது பதிப்பாம். முதற் பதிப்புச் சஞ்சிகை வடிவமாக அச்சிடப்பட்டமையின், அது காரணமாகச் சில பிழைகள் அப் பதிப்பில் சேர்ந்துவிட்டன ; அவை இப்பதிப்பிற் திருத்தப்பட்டிருக்கின்றன ; எழுதாது விடப்பட்டனவும் எழுதப்பட்டிருக்கின்றன; பல நூலர் ராய்ச்சியால் கண்ட பாட பேதங்களும் காட்டப்பட்டிருக்கின்றன ; மூலத் திற்கு முரைக்குமொத்த வேறு சில பிரமாணங்களும் காட்டப்பட்டிருக் கின்றன ; நண்பர் பலரது விருப்பின்படி திருக்குறள் மூலத்திற்கு ஆங்கி லேய மொழிபெயர்ப்பும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாங்கிலேய மொழிபெயர்ப்பை யியற்றியவர் எமது முக்கிய நண்பருள் ஒருவரும், எம்மோடெப்போதும் பழகி வருகின்றவருமாவர். அவர் தம் பெயரை வெளியாக்குதல் கூடாதென் றெம்மைக் கேட்டுக் கொண்டமையால், அவர் பெய்ரை அவர் விருப்பத்திற் கேற்றவா றெழு தாதுவிட்டனம் அவர் கைம்மாறு கருதாது செய்த இவ்வுதவி யெஞ் ஞான்றும் மறத்தற்பாலதன்றும்.

இப்புத்தகத்தை யச்சிடும்போது எம்முடனிருந்து வேண்டிய உதவி யைச் செய்துவந்த ஸ்ரீமந் - மங்களம்-ஆண்டிய ந பூதலியார அவர்களுக்கு யாமென்று மறவாத அன்பு செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேம்.

இப்பதிப்பு அச்சாகி வரும்போது ஐரோப்பா யுத்த மாரம்பமாய் விட் டது ; அதனால், காகிதத்தின் வீலை மிக அதிகமாய்விட்டது ; உயர்ந்த காகிதம் கிடைப்பது மிக அருமையாய்விட்டது ; அதுபற்றி மிகச் சில பாகம் முதற்றாமான காகிதத்தில் அச்சிடுதல்கூடாமற் போயிற்று. முதற் பதிப்பு (டிம்மி 8-பக்கங்கொண்ட) 168-பார வளவினதாம் ; இப்பதிப்போ (டிம்மி 8-பக்கங்கொண்ட) 185-பார வளவினதாக முடிவுபெற்றது. அது பற்றி இப்பதிப்பின் வீலை ஒரு ரூபாய் அதிகமாக வைக்கப்பட்டிருக்கின் றது.

யுத்தங் காரணமாகக் காகிதத்தின் வீலை ஒன்றுக்கு நான்கு மீத்து வீத மாய் விட்டமையால், மிக அதிகவீலை கொடுத்தக் காகிதம் வாங்கி இப்புத் தகத்தை அச்சிடல் வேண்டியதாயிற்று. அதுபற்றி இப்புத்தகத்திற்கு யாம் அதிக வீலை வைக்கவில்லை.

இப்பதிப்பிலும் பிராந்திப் பிரமாதங்களால் பிழைகள் சேரிட்டிருத்தல் கூடும்; அவற்றை யறிவுடையோர் தெரிவித்தால், அவை பிழைதிருத்த மாகச் சேர்த் தச்சிடப்படுவதுடன் அவர்களுக்கு வந்தனமும் மளிக்கப்படும்.

இப்புத்தகம் யாதொரு இடையூறுமின்றிப் பூரணமாக முற்றுப்பெற லாறு திருவருள் புரிந்த எல்லாம்வல்ல இறைவன் இன்தெஞ்ஞான்றும் வீலைபெறுமாறும் அருள்புரிவானெனப் பிரார்த்திக்கின்றனம். இதிற்பிழை னதாயின், உலகி[illegible]பதுக்க.

சென்னை,
1—10—1918.

கோ - வடிவேலு செட்டியார்.

	அதிகாரம்
54 பொச்சாவாமை	16
55 செங்கோன்மை	17
56 கொடுங்கோன்மை	18
57 வெருவந்தசெய்யாமை	19
58 கண்ணோட்டம்	20
59 ஒற்றுடல்	21
60 ஊக்கமுடைமை	22
61 மடியின்மை	23
62 ஆள்வினையுடைமை	24
63 இடுக்கணழியாமை	25

2. அங்கவியல்—(32)

64 அமைச்சு	1
65 சொல்வன்மை	2
66 வினைத்தூய்மை	3
67 வினைத்திட்பம்	4
68 வினைசெயல்வகை	5
69 தூது	6
70 மன்னரைச்சேர்ந்தொழுகல்	7
71 குறிப்பறிதல்	8
72 அவையறிதல்	9
73 அவையஞ்சாமை	10
74 நாடு	11
75 அரண்	12
76 பொருள்செயல்வகை	13
77 படைமாட்சி	14
78 படைச்செருக்கு	15
79 நட்பு	16
80 நட்பாராய்தல்	17
81 பழைமை	18
82 தீநட்பு	19
83 கூடாநட்பு	20
84 பேதைமை	21
85 புல்லறிவாண்மை	22
86 இகல்	23

	பக்கம்.
Against forgetfulness	599
On upright government	609
On unjust government	622
Against acting with a reign of terror	632
On a gracious demeanour	643
On the employment of spies	655
On energy	666
Against idleness	674
On manly effort	684
On perseverance in spite of difficulties	694

On the constituents of Royalty.

The ministers	706
The power of speech	717
Purity of action	728
Firmness of action	737
Method of action	747
The Ambassador	756
Service under the sovereign	768
Knowing the sovereign's mind	778
Knowing the court	788
Fearlessness before the court	799
The country	808
The Fort	820
The way to accumulate wealth	830
The excellence of the Army	840
Excessive valour of the Army	850
Friendship	859
Discerning friendship	869
Longstanding friendship	879
Evil friendship	888
False friendship	898
Ignorance	907
The fool's self-conceit	916
Enmity	926

	அதிகாரம்.		பக்கம்.
87 பகைமாட்சி	24	The greatness of enmity	935
88 பகைத்திறந்தெரிதல்	25	Examining the nature of enmity	945
89 உட்பகை	26	Internal enmity	954
90 பெரியாரைப்பிழையாமை	27	Against disregard for the great	963
91 பெண்வழிச்சேறல்	28	Inclining towards the wife	973
92 வரைவின்மகளிர்	29	Prostitutes	983
93 கள்ளுண்ணாமை	30	Against drunkenness	993
94 சூது	31	Gambling	1001
95 மருந்து	32	Medicine	1012

3. ஒழிபியல்—(13) *Appendix.*

96 குடிமை	1	Noble birth	1025
97 மானம்	2	Honor	1034
98 பெருமை	3	Greatness	1043
99 சான்றாண்மை	4	Perfection of good qualities	1053
100 பண்புடைமை	5	Proper behaviour	1062
101 நன்றியில்செல்வம்	6	Unprofitable wealth	1072
102 நாணுடைமை	7	Modesty	1082
103 குடிசெயல்வகை	8	Method of maintaining the family	1091
104 உழவு	9	Agriculture	1101
105 நல்குரவு	10	Poverty	1111
106 இரவு	11	Mendicancy	1120
107 இரவச்சம்	12	Fear of begging	1130
108 கயமை	13	Baseness	1139

III-காமத்துப்பால் (25)- **On Love.**

1. களவியல்—(7) *In Union.*

109 தகையணங்குறுத்தல்	1	Pain at the sight of beauty	1152
110 குறிப்பறிதல்	2	Recognition of the signs of mutual love	1164
111 புணர்ச்சிமகிழ்தல்	3	Rejoicing in sexuality	1174
112 நலம்புனைந்துரைத்தல்	4	Praise of pleasure	1185
113 காதற்சிறப்புரைத்தல்	5	Declaration of excessive love	1195
114 நாணுத்துறவுரைத்தல்	6	Abandonment of modesty	1204
115 அலரறிவுறுத்தல்	7	Talk about rumour	1216

தெளி.—(இ-ன்). பெண்டிர் - மனைவியர், பெற்ருன் - (தம்மைக்) கொண்டானவனே, பெறின் - (வணங்கியுபசரித்தல்) பெறுவராயின், புத் தேளிர்-தேவர், வாழும்-வாழ்வதற்கிடமாகிய, உலகு-உலகத்தில், பெருஞ் சிறப்பு—(அத்தேவராற் செய்யப்படும்) பெரிய சிறப்பினை, பெறுவர் - அடைவார். (எ-று).

வணங்கியுபசரித்த லென்பது குறைந்து நின்றமையின் அது சொல் லெச்சமாம். இதனுல் தன்னைக்கொண்ட கணவனைத் தெய்வமாக வணங் கும் பெண்டிர் மறுமையில் தேவர்களால் வணங்கப்படுவ ரென்பது சொல் லப்பட்டது.

(க-து). கணவரைவணங்கும்மனையியர் மறுமையில்தேவரால் (சுவர்க்கத்தில்) வணங்கப்படும் பெருஞ்சிறப்படைவர் என்பது.

8. If women shew reverence to their husbands they will obtain great excellence in the world where the gods flourish.

கூ புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

பரி —(இ-ள்). புகழை விரும்பிய இல்லாளை யில்லாதார்க் கில்லை, தம்மை யிகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்கவேறுபோல நடக்கும் பெருமித நடை, (எ-று).

புரிந்தவென்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தாற்றொக்கது. பெரு மித முடையாளுக்குச் சிங்கவேறு நடையா ¶ னுவமமாகலின் 'ஏறுபோல்' என்ருர். இதனுற்றகைசான்றசொற்காவாவழிப்படுகுற்றங்கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). புகழ் - கீர்த்தியை, புரிந்த - விரும்பிய, இல்-மனை யாளை, இல்லோர்க்கு-இல்லாதவர்க்கு, இகழ்வார்முன் - (தம்மை) அவமதித் துப்பேசும் பகைவர்முன், ஏறுபோல்-ஆண் சிங்கம்போல, (நடக்கும்), பீடு நடை-கம்பீரமானநடை, இல்லை - இல்லையாம், (எ-று).

புரிந்தவென்னும் பெயரெச்சத்தின் அகரவீறு (விகுதி) செய்யுள்விகா ரத்தால் தொக்கது. தருக்குடையவனுக்கு ஆண்சிங்கம் நடையினும் உப மானமாதலால் 'ஏறுபோல்' என்ருர். இதனுல் மனையாள் நன்மையமைந்த புகழைக் காப்பாற்றுதவிடத்தண்டாகுங் குற்றம்சொல்லப்பட்டது.

(க-து). கீர்த்தியை விரும்பிய மனைவியை யில்லாதவர்க்குத் தமது பகைவர்முன் மேம்பாடாகச்செல்லும் நடையின்றும்.

9. The man whose wife seeks not the praise (of chastity) cannot walk with lion-like stately step, before those who revile him.

¶ இது புலிபோலப் பாய்ந்தானென்பது போலத் தொழிலுவமை.

அதிகாரம்.		பக்கம்.	
2. கற்பியல்—(18)			*Wedded love.*
116 பிரிவாற்றுமை	1	Unendurable separation	1226
117 படர்மெலிக்கிரங்கல்	2	Languishing in sorrow	1237
118 கண்விதுப்பழிதல்	3	Eyes consumed with sorrow	1247
119 பசப்புறுபருவரல்	4	Suffering sallowness	1256
120 தனிப்படர்மிகுதி	5	The solitary anguish	1266
121 நினைத்தவர்புலம்பல்	6	Sad memories	1275
122 கனவுநிலையுரைத்தல்	7	Relating the dreams	1284
123 பொழுதுகண்டிரங்கல்	8	Lamenting at the approach of night	1293
124 உறுப்புநலனழிதல்	9	Wasting away of the limbs	1302
125 நெஞ்சொடுகிளத்தல்	10	Soliloquy	1312
126 நிறையழிதல	11	Loss of modesty	1321
127 அவர்வயின்விதும்பல்	12	Mutual desire	1331
128 குறிப்பறிவுறுத்தல்	13	The reading of the feelings	1342
129 புணர்ச்சிவிதும்பல	14	Desire for intercourse	1352
130 நெஞ்சொடுபுலத்தல	15	Expostulation with oneself	1361
131 புலவி	16	Feigned dislike	1370
132 புலவிநுணுக்கம்	17	Dislike arising from trifles	1379
133 ஊடலுவகை	18	The delights of temporary displeasure	1390

நான்காவது.

திருவள்ளுவர் சரித்திரம்.

புண்ணிய பூமியாகிய இப் பாரதகண்டத்திலே இமயமலையினுச்சியிலே பிறப்பும்பெருமை வினவுங்கும் திருக்கயிலாயத்திலே உயர்வொப்பிலாத செம்பொற்றிருச்சோபியிலே திவ்விசிக்காசனத்தின்மீது நிதியாகுந்தவடிவின ராய்ச் செல்பெருமான் சிவமூர்த்தி முப்பித்த முக்கோடி தேவர்கள் நாற்பத் தென்ணாயிரம் இருடிகள் சின்னார் இம்புருடர் கருடர் காந்தருவர் சித்தர் வித்தியாதரர் முதலினவர் இருபுடையும் சூழ்ந்து வணங்கித் தோத் திரித்து நிற்கவும், பூதர்கள் பலவாத்தியங்களும் முழுகியும் வெண்சாமரை வீசியும் அவைவட்டம் அசைத்தும் நிற்கவும், மாமரை என்னும் பேரொலி எங்கும் தழைத்தோங்கவும், கழுது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமா தேவியார் இடப்பக்கத்தில் வீற்றிருக்கவும், அளவிறந்த பெருங்கருணை யோடு திருவோலக்கமாகவெழுந்தருளி யிருந்தனர்.

அப்போது உமாதேவியார் எழுந்து பரமபதியாகிய சிவபிரானைப் பணிந்துநின்று, "சுவாமி! திரிலோகத்திலே நில்லாதும் வழுவாது நடாத்தி முத்தியடைந்தவர் உண்டோ? அவரை நிருவாய்மலர்ந்தருளல் வேண்டும்" எனச், சிவபெருமான் "உமையே! தெய்வலோகத்திலே வசிட்டர், அகத்தியர், அயன், புயங்கன், சம்பு என்னும் ஐவரும் பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவரும், தென்புலத்தார்கடன் தேவர்கடன் விருந்தோம்பல் சுற்றந்தழுவல் தபிலூசை செய்தல் முதலியன முடித்துக் கற்பின் வழுவாத நற்குண நற்செய்கைகளையுடைய மனிலக்களோடிருந்து இல்லறத்தை நடாத்தி முத்தியடைந்தனர்" என்று திருவாய் மலர்ந்தருளினர். பார்வதியார் "பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவர் யார்? அவர் சரித்திரத்தைக் கேட்க விரும்புகின்றேன்" எனச் சிவபிரான், பூர்வதிதிலே ஒரு பிரளயம்வர அதனைப் பிரமன் முன்னரேயறிந்து வேற்றுருவடைத்து ஒரு சுணைக்கூட்டிற் புகுந்திருந்த அவ்வெள்ளத்திலே மிதந்து வந்தனன். நாம் யாதும் அறியாதவன்போலச் சுரைக்கூட்டினருகணைந்து, இதற்குளிருப்பவன் யாவன்? என்று கேட்க, அவன் 'யான்வருங் காலமறிந்து நடத்தவல்ல வள்ளுவன்' என்றான் 'இப்பிரளயத்தில் நீ எப்படி பிழைத்திருக்கின்றாய்' என்றோம். அப்போது பிரமன் நம்மை அறிந்துகொண்டு பேராநந்தத்தி லழுந்தி, 'பரமபதியே! ஜகத்ரக்ஷகனே! உமது திருவருளினலன்றே பிழைத்திருக்கின்றேன்; தேவரீர் திருபைகூர்ந்து இத்தன்பக் கரும் நீர்ப்பெருக்கைத் தவிர்க்கவேண்டும்' என்று வேண்ட, அவ்வகிலாத்தை உமக்கே தந்தோம் என்றுசொல்லி முன்போலவே உலகத்தை மீண்டுமே படைப்பித்தோம்.

பிருகுவானவர் இவள் வேற்றுவடிவுகொண்டு, நீ பூமியில் பிறக்கக்கடவை எனறனர். அவள் கணவனுத்தரவின்படி உப்பை என்பவளாக அவதரித்து வண்ணூர் வளர்க்க வளர்ந்து, மாரியம்மையாய் உலகமெல்லாந் தன்னேப்போற்ற இப்பொழுதும் அவ்வூரில் தெய்வமாக இருக்கின்றனள்.

இதுநிற்க; முன்புபோன அவ்விருவருஞ் சோழதேசத்திற் கருவூரிலடைந்து ஒரு சோலையிற்கூட அதிகமான் என்பவர் பிறந்தார். இந்தக்குழந்தையை யாவா காப்பாற்றுவார் என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது அது சொல்லியது.

அதிகமான்.

கருபைக்குண முட்டைகருங் கல்லினுட் டேரைக்கும்
விருபமுற நுமுதனிகரு மெயய—னுகபெற்று
வாட்டி வளர்கைகளே ஒகெயெவா யனஞய்கேள
வாட்ட முளகேனை மதிழ.

அதுகேட்டு மனந்துணிந்து போயினன். அந்தக் குழந்தையைச் சேரமான் எடுத்து வளர்க்க வளர்ந்து, வில்வேதம் மனுவிக்கியான முதலிய யாவுங்கற்று, முடிசூட்டப் பெற்று, சோக்கநாதர் திருமுகமெழுதிக் கொடுக்க, பாணபத்திரருக்கு வேண்டிய திரவியங்கள் கொடுத்துப் பொன்வண்ணத்

இப்படியிருக்கையில், பூமியில் பாவம் அதிகமாகி, தர்மம் க்ஷீணித்துப்போனதால், பூமிதேவி பொருட்டு அவர்கள் கர்வ பங்கமாகும்படி பிரமனையும், திருமகளையும் மஹாவிஷ்ணுவை இடைக்காடராகவும், சரசுவதியை வெண்பலாவாகவும் பிறக்கும்படி அனுப்பினேன்.

ஆதிமேரு பிரம புத்திரர்களாகிய காசிபர்முதலிய ஏழுபிரஜாபதிகளில் காசிபர் ஊர்வசியைச்சேர்ந்து விவிட்டரைப் பெற்றார்; அவர் புருஹோத்திரையைச் சேர்ந்த சத்தியரைப் பெற்றார்; அவர் புஷ்கரணியில் தபஸ்செய்து பராசரைப் பெற்றார்; அவர் மச்சகந்தியைச் சேர்ந்து வியாசரைப் பெற்றார். இக்கால்வரும் வேதகருத்துக் குரியவர்களானார்.

பின்பு பிரமாவானவன் மற்றுஞ் லெடுத்தோல் டமோரிலியும் தென்மொழியையும் விளங்கச்செய்ய வேண்டுமென்றெண்ணி வேதவிதிப்படி ஒரு யாகஞ்செய்தான்; அதன்கண் வைத்திருந்த குண்டத்தினின்றும் கலிமகனவதரித்தனன்; அவனைப் பிரமன் விலாகஞ் செய்துகொண்டான்; பின்பு அதனொடு சூரியனிடமிருந்து அர்கும்பரதத்தனைப் பெற்றான். அவர் சமுத்திர கன்னிகையை மணந்து பெருமகாகரன் என்பவரைப் பெற்றார். அவர் திருவாரூர்ப் புலிதகேசரை நோக்கு பகவன் என்பவரைப்பெற்று, அவர்க்குச் சகலகாரியங்களையும் கற்பித்தார். அதனாலே பிரமவம்சத்தில் முனி என்பது நாமமாயிருந்தும் பிராமணமாதைச் சேர்ந்து ஒரு புத்திரனைப் பெற்றதால் பிராமணமுனியாய் தவஞ்செய்யச் சென்றனர். அக்குழந்தையைத் தாய்ப்பெரும்பாலை மண்ணிலே தத்தஞ் செய்து சிலகாலம் வளர்த்து வருகையில், அந்தச்சேரியில் அகாரணமாய் மண்மாரிபெய்தது; பெய்யவே, மேல் நடக்கப்போகிற காரணத்தினால் இந்தப் பெண் தவிர மற்றவர் யாவரும் இறந்தனர். பின்பு அந்தப்பெண் எப்படியோ அதற்கடுத்த மேலூர் அகரத்திலே நீதியையன் வீட்டையடைந்து வளர்ந்து வந்தனள்.

அப்போது பகவனென்பவர் சகல சாஸ்திர பண்டிதராய்க் கண்டவர் யாவரும் மதிக்கும் படி பிராமண சிரத்தியத்தில் வழுவாதவராய்க் காயோத்திரைக் சேரும் மாக்கத்திலே மேலூர் அகரத்தகடுத்த ஒரு சத்திரத்திலிறங்கி நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு சமையல் செய்துகொண்டிருந்தார்; அவ்வீட்டில் அந்தப்பெண் வர, அவளைக் கண்டு 'ஏயார்? புலைச்சியோ? வேலசாலியோ? இங்கே என்வந்தாய்' என்று அதட்டி மிருந்தோபங் கொண்டு சட்டுவத்தால் அவளது தலையிலே உறுரஞ்சோர அடித்து ஓட்டினர். அவள் அழுதுகொண்டே தன்னிடத்துக்குப் போய்விட்டாள்.

மறுபடியும் பகவனென்பவர் ஸ்நானஞ்செய்து போஜனம் பண்ணி அதிசிக்கிரத்தில் வழிநடைகொண்டு சிலநாளில் காளிஸ்தலமடைந்து கங்காஸ்நானஞ் சார்ந்து பிரயாகையிலிருந்து தீர்த்தமெடுத்துக்கொண்டு வரும்போது முன் தடைப்பட்டசத்திரத்திலேயே வந்திறங்கினர். மேற்சொல்லிய பெண்ணவள் அப்போது யௌவனமும் பேரழகும் உடையவளாய் அங்கே வந்தாள். பகவனென்பவர் இவளுடைய சௌந்தரிய முதலிய

குறிக்கோளைப் பார்த்து மனமருண்டு நிற்கு அச்சத்தோடு அதிபராகிய தீதி னையர் அக்குறிப்பினைக் கண்டு 'என் பெண்ணை நீர் விவாகம் பண்ணிக் கொண்டு இங்கேயே இருக்கலாம்' என்று சொல்லி, அதற்கவர் 'நான் கொண்டுவந்த கல்கையை இராமேச்சுரத்திற் செலுத்திக் திரும்பி வரு வேன்' என்ற உறுதிமொழிகூறிச் செலவு பெற்றுக்கொண்டுபோய் இராமலிங்கத்துக்கு அபிஷேகம்பண்ணித் திரும்பி வந்தார். அப்போது நீலையர் பக்தி மித்தினிலோடிருந்து குறித்த கன்னிகையைப் பகவஞ ர்க்குப் பாணிக்கிரகணஞ் செய்தகொடுக்க, நான்குகாவ சடங்குகள் சம் தஷ்டியாகநடந்தேறின ; இந்தாகான் மங்கலகானஞ் செவ்விக்கும்போது பகவனென்பவர் அந்தப் பெண்ணுடைய தலையில் எண்ணெயைப் பெய் யும்படி மயிலாவுகிர்ந்தார் ; அப்போது தாம் முன்பு சட்டுவத்தா லிடித்த வடுவைக்கண்டு அனுமானித்து, 'இந்தப் பெண் யார்' என வாலாறு மூற் றும் விசாரித்து வியசனமடைந்து, 'ஆரியாளல்லவா ?' என்று சொல்லி அவ்விவிட்டு ஓடினர். அவவாரியென்னும்பெயரே அவளுக்குக் காரணப் பெயராயிற்று.

அதகண்டு ஆதி என்பவளும் பின் தொடர்ந்தசென்று, பொழுது போகையில் எதிரேகண்ட பாணர்சேரியில் ஒரு மண்டபத்திலே தங்கிய பகவனென்பவர் அருகிற்சென்று வணங்கிநின்று, 'என் பர்த்தாவே ! தெய்வச்செயலால் உமக்கும் எனக்கும் இந்தக்காரியம் நடந்திருக்கச் சகல நீதியும் அறிந்த நீர் என்னைவிட்டு நீங்குதல் தருமோ அல்லது தருமமோ?' என்றும், 'உம்மை நீங்கி நான் உயிர்தரித்திருப்பேனோ ?' என்றும் மிகவும் இரக்கத்துடன் சொல்லப், பிரார்த்த காமவசத்தால் இவர் புத்தியிலும் அது சரியென்ற தோன்றப் 'பெண்மணி ! மன்னிடத்திற் உனக்கு அன் பிருக்குமானால் யான் சொன்னபடி கேட்கவேண்டும்; அந்தாவது உனக் குப் பிள்ளைகள் எங்கெங்கே பிறக்கின்றனவோ அப்பிள்ளைகளை அங்கங்கே அப்பொழுதே விட்டுவருவையானால் யான் உன்னைக்கூடச் சம்மதிப்பேன்' என்று சொல்ல, அவள் அதற்கு உடன்பட்டாள்; அதனால், அன்றிரவில் அம்மண்டபத்தி லிருவரும் கூடிக் களித்திருந்தனர்.

அப்போது நமது கட்டளைப்படி சரசுவதி யாவராலும் புகழப்பட்ட * னைவையாகப் பிறந்தனள். உடனே அவ்விருவரும் புறப்பட்டுப் போகை

* " அருந்தவ மாமுனி யாம்பக வற்குக், கருவூர்ப் பெருமபதிக் கட் பெரும்புலச்சி,யாதி யயிற்றினி லன்றவ நித்த, சான் முப்பா யாகிய கபில ரும் யானே, யென்னுடன் பிறந்தவ ரெத்தனை பேரெனி,லாண்பான் மூவர் பெண்பா னால்வர், யாம்வளர் திறஞ்சிறி தியம்புவல் கேண்மி, னூற்றுக் கா டெனு மூர்தனிற் றங்கியே,வண்ண ரகத்தி லுப்பை வளர்த்தனள், காவிரிப் பூம் பட்டினத்திற் பெரும்பிலேஞர் சேரியிற், சான்ரு ரகத்தனி லுறவை வளர்த் தனை, னாப்புக் கருவியோர் நண்ணிடு சேரியிற், பாண ரகத்தி லெனவை வளர்த்தனள், சூறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ், வண்மலைச் சாரலில் வள்ளி வளர்த்தனை, பொன்னகர் மண்டபத்தில் வண்டமிழ் மயிலைப்,

வள்ளியம்மை.

அன்னை வயிற்றி லருத்தி வளர்த்தவன்ரு
னின்னும் வளர்க்காளை வென்றுரையே—பின்னரவஞ்
சூடும் பெருமான் சுடுகாட்டி னின்றுவிளை
யாடும் பெருமா னவன்.

திருவள்ளுவர்.

எவ்வுயிருங் காக்கவொரு வீசனுண் டோ வில்லையோ
வவ்வுயிரில் யாதொரு நவ னல்லனோ—வவ்வி
யருகுவது கொண்டிவ் வுலகுவந் தனன்மேன
வருகுவது தானே வரும்.

இப்பாடல்களைக் கேட்டுத் தாய் மனந்துணிந்து நீங்க, அவ்விருவரும் நீர்த்த யாத்திரைக்குச் சென்றனர்.

திருமயிலாப்பூரில் விடப்பட்ட குழந்தை அங்குள்ள ஆலயத்தில்சம்மை ஆத்மார்த்தமாகப் பூசித்துக்கொண்டு, இலுப்பை மரத்தடியிலிருந்து அம்மல நிற்றுளிக்குச் சேனையுண்டி, பூர்வம் பிரமவாதலால் சிகை எக்யோபவீதம் சதுர்வேத புத்தகமுங்கொண்டு வளர்ந்துவருகையில், ஒருவேளாளனமனைவி புத்திரபாக்கியத்தைக்குறித்து மேற்படி ஆலயத்திலேர்புறம் தவஞ்செய் திருந்தனள். அப்போது 'இக்குழந்தையை மீயெடுத்துக் கொண்டுபோய்த் திருவள்ளுவரென்று நாமகரணஞ்செய்' என்று கம்மாள் அசரீரி வாக்குண் டாக்கப்பட்டது; அதனை யவள் கேட்டு மனமகிழ்ச்சியுடன் அக்குழந்தை யை எடுத்தகொண்டு போய்க் கணவன்கையிற் கொடுக்க அவனும் இரு கரமுமேந்தி வாங்கித் தன் மடிமேலிருத்தி உச்சிமோந்து, மகிழ்ந்தனன்; பின் அக்குழந்தையை யவரிருவரும் அருமையாக வளர்த்துவந்தனர். அது கண்ட அவர்கள சுற்றத்தார் 'ஏதோ ஒரு பிள்ளையை வளர்க்கிறார்கள்' என்று இகழ்ச்சிசெய்ய, அதற் கவர்களஞ்சிப் புறத்திலுள்ள தொழுவத் தில் தொட்டிலிட்டு அதில் அக்குழந்தையைக் கிடத்திப் பண்ணைக்கா ரைக் காவல்வைத்து வளர்த்து வந்தனர். ஐந்தவயதானபின்பு திருவள்ளு வர் தம்மை வளர்ப்பவர் சுற்றத்தார்களால் நிந்தை செய்யப்படுகிறார்களே என்று கருதி அவர்களைப் பார்த்து 'என்னிமித்தம் உங்களுக்கு வருத்தம் வேண்டுவதில்லை; இனி நான் வேறிடத்திலிருந்து நீங்கள் நினைக்கும்போது வந்து வேண்டியதைச் செய்வேன்' என்று சொல்லிப் புறப்பட்டு அவ்வூரில் ஒரு பனைமரத்தினிழலில் இருந்தார். அமமரத்தடி நிழல் அவர்வசிட்டு நீங்காதிருந்தது; அதனைக் கண்டவர்களெல்லாம் 'இப்பிள்ளை தேவ்னே, முனிவனே' என்று துதிக்க, தாயனர் அவ்விடம்விட்டுத் திருமூலர், போகர் முதலிய சித்தர்கள் வாசஞ்செய்யும் மலைக் சென்றருளினர். இவ்விருந்த திருமூல நிவனைக்கண்டு 'வள்ளுவரே! பூர்வத்தில் நான் எனக் கனுக்கிரகம் பண்ணினபோது அங்கிருந்தீரே? உலகத்தாக்குச் சென்று

முத்தியருளும்படிக்கும், அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலேயும் தமிழில் அருளிச் செய்யும்படிக்கும், இங்குவந்து அவதரித்தீரோ?' என்று துதிக்க, நாயனார் மகிழ்ந்து அங்குத் தவஞ்செய்வோரில் ஒருவராகத் தாமும் இருக்தனர்.

அக்காலத்தில் தொண்டைமண்டலத்தில் ஒரு வேதாளமானது பயிர்களை அழித்தும், உயிர்களை வதைத்தும், பிராணிகளுக்குப் பல தீங்குகளைச் செய்துவந்தது; வருகையில், காவேரிப்பாக்கமென்னும் ஊரிலிருக்கும் ஆயிரம் எல்வைதப்பயிர்த்தொழில் நடாத்தும் மார்க்கசகாயனென்னும் ஒரு வேளாளன் அதனை யடக்கினவர்க்கு வேண்டிய திரவியமும் ஒரு ரும் தருகிறேனென்று பிரசித்தப்படுத்தி யிருந்தான். அதனையடக்குதல் ஒருவர்க்கும் முடியாமையால், அவ்வேளாளன் பெரியோர்கள் வாசஞ்செய்யும் மலையிலுள்ளது திருமூலர் முதலானவருடன் சொல்லி, அவர்கள் 'அதோ இருக்கும் திருவள்ளுவருடன்சொல்' என்றனர். அதனை யறிந்து சிவகாருண்யராகிய நாயனர் அவ்வேதாளத்தை ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தால் வென்று யாவரையும் காத்தனர்.

அதுகண்டு அவ்வேளாளன் நாயனரைத் துதித்து 'யான் கொடுக்கும் ஊரையும் திரவியங்களையும் பெற்றுக்கொண்டு, வாசுகியென்னு மெனது பெண்ணையுந்தேவரீர் அங்கீகரித் தருளல்வேண்டும்' என்றுபிரார்த்தித்தான். நாயனர் உலகத்தார்க் கில்லறம் நடாத்திக் காட்டவேண்டிய காரணத்தை யோசித்து 'அந்தப்பெண் நான் கொடுக்கும் மணிலை அன்னமாக்கி எனக்குப் படைக்குமானால் அப்படியே விவாகஞ்செய்து கொள்ளுவேன்' என்றார். அந்தப்பெண் அதற்குச் சம்மதித்து அவர் கொடுத்த மணிலைச்சமைத்துப் படைத்தனள். பின்பு நாயனர் வாசுகி என்னுமப்பெண்ணை விதிப்படி விவாகஞ் செய்துகொண்டு சிலகாலங்கிருந்து திருமயிலைக்குத் தம்மனைவியுடன்வந்து, ஓர் இல் ஆக்கிக்கொண்டு, செய்தொழில்களில் பாவமில்லாதது செய்தற்றொழிலில் என்று தீர்மானித்து, அவ்வூரிலிருக்கும் எலேலசிங்கனென்னும் வர்த்தகரிடத்தில் நூல்வாங்கி ஆடைநெய்து அதனைவருங் கூலியால் காலங்கழித்திருந்தனர்.

அக்காலத்தில் திருவாலங்காட்டில் சபாநாயகராக எழுந்தருளியிருக்கும் நாம் மகிடாசுர சங்காரஞ்செய்து கர்வித்திருந்த பத்திரகாளியுடன் பலவித நடனம் புரிகையில் அக்காளியும் சோர்வுறாமல் நடனம்புரிந்தனள்; அப்போது நமது குண்டலங்கழன்றது; அதனைக்காணில் சோர்க்கும்படி ஊர்த்துவ தாண்டமாக நடனஞ்செய்தோம்; அப்படி பத்திரகாளியாட நாணி நின்றனள். அதுகண்டு தேவர்கள் சுந்தேகமுற்றுத் தற்செயலாய் நாம் ஊர்த்துவநடனஞ்செய்த காரணம் தெரியாமல்மயங்க, அப்போது நீங்கள் திருமயிலையிலிருக்கும் திருவள்ளுவரிடத்து இதனைத்தெரிந்து கொள்ளுங்களென்று ஆக்ஞாபித்தோம். தேவர்கள்அங்கேபோய் அவர் முன்னின்றனர்; நாயனர் அவர் நின்ற குறிப்பறிந்து

வேண்பா.

பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவி
லிழைநக்கி நூனெருடு மேழையறி வேனே
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

என்று கூறியருளினர்- அதனைக்கேட்டு அவர்கள் சந்தேகந் தெளிந்தார்கள்.

ஒருநாள் நாயனர் நூல் வாங்கும்பொருட்டு எலேலசிங்கர் வீட்டுக்குப் போய்த் 'செட்டியார் எங்கே?' என்றுகேட்க, அங்குள்ளார் 'சிவபூசை செய்கிறார்' என்றனர்; 'அவர் சிவபூசை இங்குச்செய்கிறாரோ குப்பத்தில் செய்கிறாரோ' என்றனர; அதனை அவாபத்தினி கேட்டு உள்ளேபோய்ச் செட்டியார்க்குக் கூற, அவா திடுக்கிட்டுச் சிவபூசைவிட்டு ஓடிவந்து நாயனருடைய உபயசரணங்களையும் வணங்கி, 'சுவாமி! அடியேனைப் பந்தசாகரத்தினின்றும் எடுத்துக் கரையேற்றி யருளல் வேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்தனர். பின்பு ஒருநாள் நாயனர் அவரதி பக்குவத்தையும் மற்றுஞ் சில மாணாகர் பாகுவத்தையும் சோதிக்கவெண்ணி அவர்களை யழைத்துக்கொண்டு ஒருவனத்திற்செல்ல, அங்குப் பெருகி வரும் வெள்ளத்தில் தம்மைப் பின்தொடர மற்றவராய்ச் சில மாணாக்கர் பயந்து நின்றுவிட, எலேலசிங்கர் மாத்திரம் அவர்தம்மைத் தொடர்ந்துவந்தனர். அவ்வெள்ளம் வழிவிட்டது. பின்பு நாயனர்எலேலசிங்கரைப் பார்த்து, ஓர் உயாந்த மாத்திரனியிடம் செல்லும்படி கூறினார்; அவா வறிய பின்பு 'நின்ற கொம்பையும் பிடித்த கொம்பையும் விட்டுவிடு' என்று கூறினர்; அவா அவ்வாறே யோசியாமல் விட்டனர்; விட்டும், ஓர் அபாயமுமில்லாம லிருக்கக்கண்டு எலேலசிங்கரை நாயனர் தமது மடிமீதுவைத்து ஞானோபதேசஞ் செய்தருளினர். பின்பு திருமயிலை நாட்டுக் காசஞ்சிய அக்கூதராஜன் ஒருநாள் எலேலசிங்கரோடு பேசிக் கொண்டிருக்கையில் 'உமக்குப் புத்திரப்பேறில்லையே; உமது ஞானசாரி யரைக் கேட்கலாகாதா' என்றனன். அவர் 'கல்லது' என்று போயி நாயனரைக்கண்டு விண்ணப்பஞ்செய்ய, நாயனர் 'சுவாமி கடாகஷிப்பார்' என்று அனுக்கிரகம் பண்ணினர்.

பின்பு ஒருநாள் எலேலசிங்கரும் அவர் மனைவியாரும் தாம் வழக்கப்படி காலையில் தரிசிக்கும் பசுவின் வாற்புறத்தில் நாம் சிறுகுழியாயிருந்தமை வதைக் கண்டு அக்குழந்தையை எடுத்து உச்சிமோந்து முத்தமிட்டு ஆனந்த சாகரத்திலழுந்தி ஞானகுருவாகிய நாயனர் சந்நிதிக்குக் கொண்டுபோய் வைத்து வணங்கினர்கள். அவர் அக்குழந்தைக்கு 'அழகானந்தர்' என்று நாமகரணஞ் செயதனுப்பினர். இச்செய்தியை எலேலசிங்கர் அக்கூதராஜ னுக்குறிவிக்க, அவன் 'அப்படி தெய்வீகமாய்க் கிடைத்திருக்கால் அக்குழ ந்தை இங்கு வாலாமே' என்றான். உடனே அரசனது மடியில் குழந்தை வந்திருந்தது. அதுகண்டவ்வரசன் ஆச்சரியமடைந்து 'இக்குழந்தைமேல்

என்று ஆனந்தமடைந்து, அதனைத் தன் மனைவி கையிற் கொடுக்க அவளும் ஆனந்தமடைந்து அருமையாக வளர்த்தவந்தனள். பின்பு நாயனார் அதே கார்குளூஞ்ஞேதேசஞ்செய்துகொண்டுஅதிமகிமையோடுவாழ்ந்திருந்தனர்.

மற்றொரு தினத்தில் எலேலசிங்கரது கப்பல் கரைதட்டிப்போயிற்று; அதனை அவர் அரசனுக்குச்சொல்ல, அவன் 'உம்முடைய ஆசிரியரு டனே சொல்லும்' என்றனன். நாயனர் அதனை முன்னமேயறிந்து தமது திருமுன் விண்ணப்பஞ்செய்ய வருகின்ற எலேலசிங்கரை யழைத்துக் கொண்டு கப்பலருகிற்சென்று தமது திருக்கரங்களால் அதனைத்தொட்டு "'ஏலயாவென் றிழுங்கள்' என்று கட்டளையிட்டனர்; அப்படியே யிழுக்க வடனேகப்பல் சரியாகின்றது.

பின்பொருகாலத்தில் மழையில்லாமையால் தானியங் கொள்ளக் கிடை யாமல் அகோரித்ததுபோலதைக் கண்டு ஜீவகாருண்யராகிய நாயனர் தமக் கன்புள்ள எலேலசிங்கரைப் பார்த்து 'நீர் இதற்குப் பஞ்சம் மாறுகிறவரைக் கும் வாங்கிவைத்திருக்கும் கொலையெலாம் வாங்கின விலைக்குக் குறைவு பேற்றமாக விற்கக்கடவை'என் றருளினர்;அவர் அவ்வாறே குருமொழிதவ றுதலிற்றனர். பொருள் மலிவாற் குறைந்தது. கட்டியிருக்க கெற்கூடோ குறையாமலே யிருந்தது. பின்பு மழைபெய்ய உலகம் செழிப்படைந்தது. மறுபடியும் நாயனர் எலேலசிங்கரை நோக்கி 'நறுணி குறையில்' என்றார்; அவர் அவ்விதமாகவே விற்க, மாநாளோக்குள் அவரிடத்திலிருந்த நெல்லெல்லாம் செலவாய்விட்டன.

நாயனர் எலேலசிங்கரைப்பார்த்து 'நீ கெல்லிற்றின்று விருத்திசெய்திருக் கிற பொன்னைமாற்றிப் பொன்னுக்கு ருசுவித்திரட்டிக்கட்டிலிற் போட்டு விடு' என்றனர்; அவர் அப்படியே செய்தனர். அதனை யொரு மீன்விழுங் கிற்று. சிலநாள் சென்றபின் அம்மீன் வலைக்காரர் கையிலகப்பட, அவர்கள் அதனைச் சேதிக்கையில் அதன் வயிற்றில் மலினம்படிந்த வொருதம்பரிருக் கக்கண்டு அதிசயித்து, அதனை எலேலசிங்கர்க்குக் கொடுத்தனர். அவர் அதனைக் கல்லென்று நினைத்து ஸ்நானஞ்செய்யுமிடத்திற் போடுவித்தார். அது கடற்தல் முதலிய பயிற்சியால் மலினம் நீங்கிப் பிரகாசித்தது; அவர் அதில் தமது பேர் வெட்டியிருக்கக் கண்டு † 'இது குருவருள்' என்று மகிழ்ச்சி யடைந்தார்.

திருவள்ளுவர் இப்படி அநேக அற்புதங்களைச்செய்துகொண்டிருக்கும் நாளிலே பாண்டிய நாட்டிலே மதுரையில் சங்கோர்முதலிய சங்கப் புலவர்கள் தாம் அடைந்திருந்த கல்விப்பெருக்கத்தால்கர்வமடைந்து அங்குப்போந்த வித்வத்சிரோமணிகளை எல்லாம் அவமதித்துவடப்பதைக்கேள்வியுற்றிருந்த

---

* இது முதற்கொண்டு பலுவிழுப்பேர் "ஏலேலோ எலவலி" என்று சொல்லிக்கொண்டு வருகின்றனர் என்று சொல்லப்படுகிறது.

† இது முதற்கொண்டு "எலேலசிங்கன்பொன் எழுகடலோலும் மறுபடியும் வரும்" என்னும் பழமொழி வழங்கப்பட்டு வருகிறதென்று சொல்லப்படுகின்றது.

அழகானந்தர் முதலிய பெரியோர்கள் திருவள்ளுவரைப் பார்த்து, 'கற்றற் கெளிதாகவும் இம்மைமுதலிய மும்மைக்கு முதலியாகவும், உலோகோப காரமாகவும் உமது பெயரால் ஒரு நூல் செய்யவேண்டும்' என்று வேண்ட, நாயனார் வேதாகம சாரங்களையெல்லாந் திரட்டி அறம், பொருள், இன்பம் என மூப்பாலாக்கி (1330) குறள் வெண்பாவா லொரு நூல் செய்தருளினர். அழகானந்தர் முதலாயினோ அதனைக்கண்டு சந்தோஷித்து இதனைக் கொண்டு சங்கத்தாரை வெல்லலாம் என்று துணிந்து, நாயனார்க்குத் தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தனர் நாயனார் அடியார் வேண்டுகோளுக்கியைந்து தமது மனைவியை இல்லின்கணிறுத்திப் புறப்பட்டு இடைக்கழிநாட்டின் வழியாகப் போகையில், ஔவையார் நேர்பட அவரோடும் போனார்; போம்போது இடைக்காடரைக் கண்டு தாம் செல்லுங்காரணத்தைத் தெரிவிக்க, இடைக்காடரும் நாயனாரை நோக்கி 'இடையாலுங் கடையாலு மழியக்கடவதென்று சுவாமி தமமை நிராகரித்த நக்கீரர் முதலிய சங்கப் புலவரைச் சபித்திருக்கின்றனர்; ஆதலால் என்னுடனும் உம்மாலு மச்சங்க மழிவுபடப் போகின்றதாகையால், நாமும் உம்முடன்வருவோம்' என்றனர். பின்பவர்கள் சென்று மதுரையை யடைந்து வையை நதியில் ஸ்நானஞ்செய்து சபகபாகளை மூடி முதுகுகொண்டு பிரதக்ஷிணமாக ஆலயத்திற்குட்சென்று அந்த நீராட்டி சொக்கலிங்க மூர்த்தமாகி யமர்ந்துள்ள நம்மைத் தரிசனஞ்செய்தனர். பின்பு நாயனார் மேற்படி சங்கிதானத்தில் பாண்டியராஜன் மந்திரி பிரதானி முதலானவர்கள்சூழ, ஔவையார் இடைக்காடர் மற்றுமுள்ளவரு மாதரு கேட்டும்படி தாமருளிய திருக்குறண் மூப்பாலைச் சங்கத்தார் செருக்கில் திகிலேறவும், எனையர் நெஞ்சிற் களிப்பேறவும், அரங்கேற்றி முடித்தனர். அதனைச் செவியார்க்கேட்ட பாண்டியராஜன் முதலானவர் மிகுந்த ஆநந்தபரவசராய் நாயனரைப் புகழ்ந்து துதித்தனர்.

அதன்பின்பு நாயனார், இடைக்காடர் ஔவையார் முதலாயினோர் தம்மைச் சூழ்ந்தவரப், பொற்றாமரைத் தீர்த்தத்தின்கண்ணே சங்கப்பலகை மீது தமிழ்க்கரசாக வீற்றிருக்கின்றவரும், திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவை பார் நாறற்றுக் தம் நூறு குற்றங் கூறினவரும், நம தன்பருகிய தருமி என்னும் பிராமணனுக்குப் பொற்கிழி கொடுத்தற்பொருட்டு நாம் அருளிச்செய்த

அ க வல்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறிவெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே.

என்னும் அருமைப பாசுரத்திற்குக் குற்றங் கூறினமையால் நாம் ஒருவித்து வாளுக்குப்பின் சபைக்கேகி நக்கீரனைப் பார்த்து,

வெண்பா.

[illegible]கைக் தகிலப வரிவாளி னெய்பூசிப்
பங்கய மடிரண்டு காலபரப்பிச்—சங்கதனைக்
கர்ணனென வறுக்குங் கிரமனை வென்றவியை
யாராயுமுள்ளத் தவன்.

என்று கேட்டபோது, கச்சிரன் நம்மை யறிந்துகொண்டு,

வெண்பா.

சங்கறுப்ப தெங்கள்குலஞ் சங்கரனுக்* கேதுகுலம்
பங்கமறச் சொன்னற் பழுதாமே—சங்கை
யறிந்துண்டு வாழ்வோ மரனெனின் போல
விரக்துண்டு வாழ்வ துலே.

என்று சொல்ல, நாம் நமது தெற்றிகண்ணைக்காட்ட, அப்போதம அஞ் சாமல் தெற்றிக்கண்ணேயன்றி உடம்பெல்லாங் கண்ணுக்கு காட்டினுயுங் குற்றக் குற்றமேயென்று கூறினவரும், மற்றப் புலவர் பாடலெயெல் லாம் கொ[illegible]யிட்டவரும், பழுதற இலக்கண விலக்கிய வாராய்ச்சியுள்ள வருமாய [illegible]ரோர்முதலிய புலவர்களுடைய தைரியமும் தருக்கும் அறி வுக்கலகலப்ப [illegible]சார்வடையும்படி அவர்களிடத்திற் சென்று, அவர்கள் தம்மை வினவிய அசதி வினுக்களுகெல்லாம் செந்தமிழ்ப்பாவா லுத்தரங் கொடுத்தனர். பின்பு சங்கததார் நாயனுரை நோக்கி 'நீ சொக்கலூர்' என் றனர்; அதற்கவர்

எந்தவூ ரென்றி ருந்தவூர் நீர்கேளி
ரந்தவூர் செய்தி யறியீரோ—வந்தவூர்
மூப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
ரப்பாலும் பாழா யறும்

என்றற்றொடக்கத்து ஞானார்த்தமான செய்யுட்களால் அவர் வினவிய வினுக் களுக்கெல்லாம் உத்தரம் கொடுத்தனர். பின்பு சங்கத்தாரை நோக்கி ஔவை யார் கைச்செய்கையாய் 'இவை என்ன' என்று வினவிய விஞ்விற்கு அவர்கள்

இவ்வளவு கண்ணினு லிவ்வளவு நிற்றிடையா
லிவ்வளவு பேரன்ற விளமுலையா—லிவ்வளவாய்க்
காமத் தலைவனையுங் காணுது கண்ணினு
ணாமத்தை நாட்டுகுறி தானு.

என்று விடைகூற, இது தகுதியான உத்தரமன்றென்று [illegible]களுக்கு ஔவையார்

ஐயமிடுமி னறகெறியைக் கைப்பிடிமி
னிவ்வளவே னும்மனத்தை யிட்டுண்மின்—றெய்வ
மொருவனே யென்ன வுரைவல் லீரே
லருவினைகளைந்து மறும்.

என்று மொழிந்தனர்; அதுகேட்டுச் சங்கத்தார் திகிலடைந்து, இவரை வெல்லுதல் முடியாதென்று தணிந்து, இடைக்காடருடனே பேசி அவர

ஆறறங் கரையி னருகிருந்த மாமரத்திற்
காக்கை யிருந்துகஃ கஃகெனக்—காக்கைதனை
பெய்யக்கா லில்லாம லிச்சித் செனவெய்தான்
வையக்கோ னுத்தம மகன்.

என்று கூறினர் பின் சங்கத்தார் இதுபோன்ற செய்யுட்களுக்கு உத்தரங கொடுக்கச் சக்தியில்லாமல் இவர்களை வெல்வதரிதென் றறிந்து காணமுற் று, நாயனரைப் பார்த்து 'நீர் பாடிய குறளை நாங்க ளொப்புக்கொள்ளுவ தற்கு ஐயமொன்றுளது; அஃதியாதெனின், நாங்களிருக்கு மிக்கப்பலகை தென்னிய செந்தமிழ் நூலைக்கண்டால் இடங்கொடுக்கு மாதலால், இஃ தொப்புக்கொள்ளுமாயின், எங்களுக்கெல்லாம சம்மதமாம்' என்று சொல்ல, அவ்வாறே நாயனர் தாமருளிச்செய்த திருக்குறளை அச்சங்கப்பலகைமீது வைத்தனர். உடனே அப்பலகை தன்னிடத்திருந்த சங்கத்தார் யாவரும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் விழும்படி தெயவத்தன்மை பெற்றிருந்த திருக் குறட் புத்தகத்தி னளவாகச்சுருங்கி அதற்குமாத்திரம் இடங்கொடுத்தது. அதனைக் கண்டவா யாவரும் களிகூர்ந்தனர்; அவருட்சிலர், ஆதியே தமிழ் வேதமென்றும், ஆகமமென்றும், சாஸ்திரமென்றும், மதனூலென்றும் பலவாறுஞ் சொல்லித் துதித்தனர். பின்பு பொற்றாமரைத் தீர்த்தத்தில் விழுந்ததுமாறி வந்திருந்த சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மருங் கரை யேறி நாயனரையும் திருக்குறளையும் புகழ்ந்து நாற்பத்தொன்பது வெண் பா பாடினர். அது திருவள்ளுவமாலை எனப் பெயர் பெறும்.

மேற்படி சங்கத்தாரும் உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டியன் முதலானவரும் நாயனரைத் துதித்து 'இந்நூலை அகஸ்தியரும் ஒப்புக் கொள்ளினும், அதனன்றும்' என, அதற்கு நாயனர் சம்மதித்ததற் பொதிய மலைக்குப்போய் அகஸ்தியர் முதலிய முனிவர்களைக்கண்டு தாஞ்செய்த நூலைக் காண்பித்தனர். அவர்கள் அதனை கண்குணர்ந்து அடைந்த சந்தோ ஷம் அந்தனனுக்கும் சொல்லுதல் முடியாது. அவவிடத்தில் கொக்கண சித்தர் தம்மை வழிபட நாயனர் அவர்க்கனுக்கிரகித்து, அவவிடத்திருந்து நீங்கி நாமெழுத்தருளியிருக்கும் ஸ்தலமான மெல்லாம் தரிசனஞ்செய்து கொண்டு திருமயிலைக்குச் சமீபமாக வருகையில், அப்பதியாரும் எலேல சிங்கரும் கேள்விப்பட்டெதிர்கொண்டழைத்தவர, நாயனரும் தம மெல்லஞ் சேர்ந்து வசிப்பானினோடு கூடிக் களித்திருந்தனர்.

இவ்வண்ண மிருக்கையில், ஒருவர் அவரில்லின்கட்சென்று 'ஐயனே! பரிதேர் துறவறிஞரொருவர் அடியேனுக் கனுக்கிரகஞ் செய்ய வேண்டும்

என்று வெகுகாள்காத்திருந்தனர். நாயனர் அதற்குஉத்தரமொன்றுஞ்சொல்லாமல் அவரே யறிதுபோகும்படி செய்தனர். ஒருநாள் நாயனர் தமது மனையான் கிணற்றில் சலந்தூக்கிக்கொண் டிருக்கையில் அழைக்கப் பாதிக் கிணற்றளவில் தூக்கின குடத்தை நிற்கவிட்டு அவ்வம்மையார்வந்ததையும், ஒருநாள் அந்த அம்மையார் நாயனர்க்குப் பழையது பரிமாறிநிற்கையில் 'இதுகூடுகின்றது' என அவ்வம்மையார் சுக்கிரத்தில் விரிதிகொண்டுவிசிறியதையும், மற்றொருநாள் பகலில் நாயனர் நெய்யும்போது கையிலிருந்து குழல் தவறி வீழ்ந்ததை யெடுக்க மனையாளைநோக்கித் ' தீபங்கொண்வா ' என, அவ்வம்மையார் தீபங்கொண்டுவந்ததையும் வந்திருந்தவர் கண்டு கற்புடைய மனையாள் வாய்க்கில் இல்லறமேபெரிது, இல்லேயேல் துறவறமே பெரிது என்றெண்ணிக்கொண்டு நாயனரை வணங்கிப் போய்விட்டனர்.

இவ்வாறு யாவருங்காண நாயனரும் அவர்தம்மனேவியாரும் அருமையாக இல்லறம் நடாத்திவருங் காலத்தில்,வாசுகியம்மையார் முத்தியடையும் போது நாயனர் திருமுகத்தைப்பார்த்தனர். நாயனர் ' யாதுவிரும்புகின்றாய்' என; அவ்வம்மையார் ' என்னே மணஞ்செய்தவன்று தொடங்கித் தேவரீர்க்கு அன்னம் பரிமாறுகையில் தேவரீர் சிறுபாத்திரத்தில் சலமும் ஊறியும்சமீபத்தில் வையென்ற கட்டளையிட்டதன் காரணம் இன்று வரையில் அடியேற்குத் தெரியவில்லே' என்ற விண்ணப்பஞ்செய்தனர். நாயனர் ' அன்னம் புறத்திற்கிதறுமாயின், அதனை யெடுத்துப் பரிசுத்தஞ் செய்வதற்கு' என்று கூறினர். அதனைக்கேட்டவர் வீடனே முத்தியடைந்தனர். அப்போது நாயனர்

அடிசிற் கினிபாலே பன்புடை யாலே
படிசொற் றவறுகி பாவா—யடியருடிப்
பின்றங்கி முன்னெழு மீபத்தையே போற்றியா
வென்றங்கு மென்ன வினர.

என்றுஅரத்தஅவ்வம்மையார் திருமேனியைச் சமாதிபண்ணினர். பின்பு நாயனர் மகாவம்புதங்களைச் செய்துகொண்டிருந்து எலேலசிங்கர் முதலிய சீடர்களுக்குப் பூரணஞானோபதேசஞ்செய்து எலேலசிங்கரைப் பார்த்து, ' நமக்குப் பரிபூரணதசை கூடாட்டிருப்பதால், நமது சரீரத்தைப் பூரிகட்டி இழுத்தூர்க்குப் புறத்திற்போட்டிடுவீயே' என்று கட்டளையிட்டு கிஷ்டை கூடிப்பரிபூரணமானவர்போலிருந்தனர். அதுகண்டு, எலேலசிங்கர் அவரைப் பொற் பெட்டியில்வைத் தடக்கஞ்செய்ய யத்தனித்தனர்.. அதுகண்டு நாயனர் கண்விழித்துப் பார்த்து, ' அப்பா! நான் சொன்னசொல்லேக்கடவாதே ' என்று சொல்லி உடனே விதேகமுத்தி யடைந்தனர். எலேலசிங்கர் நாயனர் கட்டளையை நிறைவேற்றுகையில் அவரது சரீரப் பரிசமடைந்த பிராணிகளெல்லாம் பொன்னிறமடைந்து சுவர்க்கம் பெற்றன ' என்று உமாதேவியார்க்குப் பரம கிருபாளுவாகிய சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர்.

நயமிரு புகழ்ச்சோ ணுட்டுளோ ரந்தீண
னுயர்மனைக் கிழத்தியங் குயிர்த்தமீவார் மைந்தற்
கியாணர்சால் பகவ னெனப்பெய ரீந்துபின்
மீகாணிலே நாணிலே குறித்தசா தகத்தாற்
புன்குல மாகு மீதாள புணருமென் றோர்ந்தீதிலீ
தென்குலக் கிழுக்கதா வெனவளங் கழுமிய
பீழையி னீஞ்டி நீஇப பின்பொரு சில்நாள்
மாழையுண் கண்ணியை மதலையைத் தணந்து
கோவீணீர்க் கங்கையிற குடைகுவா னேங்கினன
மீபணுழ்ச சிறுவனும் பிரம கிரியமீமற்
றீறுவா வருமறை ஞியா தித்தா னுணர்ச்சியின்
மூவா நலத்தினம் மூவாட் டையனு
யெருதைகரிற் பிரிதரற மீகதுவென் னெனத்காய்
பத்திநெரு நுமைசெயப் பொறுன்வட புலக்குரீ இப்
போதருவ தெரிபிடைப் புலிமகள் கருவு
சாதியென பெபரின ளநமபெற்ற செவவியள்
பொற்கொடி போன்றதிர் புகமருண் டினிய
சோறுகொடு புதுலந் மீதாய்தணைர்ந் தகன்பி
னரிச்செய றகாதென வெண்ணினிவிட் மீடருழி
மெய்சசெறற் கற்பினள் விடாதுடன் றொடர்ச
கண்டருத் தொருசில் லைக்கொடு றுகனமிசைப்
புண்டர வெறிகவட மீபாகது / விசைதுமீடாய்த
திகழ்பா கீசதி தீசமீம ழுளபதி
யகமெலர்ந தீதடியு மகதணைக் கண்டிலா
தசகதையிற் றுணுதுகா டடைதுவான் றீன்ற
வருமபொழு திரவவன் மருவறச் சாலயிற
றற்பிரி வாற்றுத் தளாசசியா தீரிதா று
மற்பக னேடுறு மாதிதற் காணு
வுற்றடி வணங்கலு முயர்மறை யோனவ
ணுற்றியிற் சிலவுடு மீகரி னேங்கிமுன்
பிணங்குமா தெனத்தெளிந் திவண்வர வென்னென
வணங்குநிற் றிரிந்துறி வுவிவா மேழனென
வீன்றிடு மகவிலா மீன்முழி யேவிடத்

இன்றிய துணிபொடு முடன்வர வல்லீயேல்
வருகென வண்ணலம் மடவர லியையதலா
லிருவருந் தலந்தொறு மியங்குகா லங்களி
னுய்ப்பு யெளன்வு யுறுவை வுள்ளியென்
றிப்புவி போற்றுமீ ரிருவர் மகளிரு
மன்னுசீ ரதிகமான் வள்ளுவர் கபில
ரென்னு மாடவ ரிம்மூ வரும்பிறந்
தெவ்வத் தலுமெவ ரெவர்க்குப் பிறபபிட
மவ்வத் தலங்களி னவரவர் வளர்ந்தனர்
செப்புமவ் வெழுவருட் டிருவள் ளுவர்தா
மைப்புய லணிபொதின் மயிலாப் பூரில
வள்ளுவர் மனைபிடி வளர்ந்தன ராங்கவ
ருள்ளுமுத் தேவரு ளொருவ ராகிய
சதுர்முகன் றிருவுவ தார மாகலின்
முதுமறை யாகமமூத் தமிழ்க் கல்பிற
வையக் திரிபிலா தணைததுகன் குணர்ந்து
தெய்வப் புலமையிற் சிறநதரன் குருவா
யறபுத நீறணிந தைகெழுத தியம்பித்
தற்பர லிங்கமெய் தரித்தருள் செயபபெரி இ
வலங்கொள்பூ வைசிபர் மரபினுற றெரண்குண
மிலங்குறு வாசுகி யெனுமபெயர்த் தையலை
மணந்தக னமர்ந்து பகிழ்ந்துற வறதருஞ்
வணங்குற வில்லற வாழ்வினுற நருளா
லென்னி னுயர்வுற மினிதமிழ் மொழியென
முன்னுறு பெருவட மொழியழுக் காறுற
மலைதருமப் பற்பல மதததருமு வியநது
தலைமிசைக் கொண்டி நு தக்கதென் றேத்த
விழ்மை மறுமைவீ டெய்தவிந நூலொன
றம்ம வமையுமென் றறிஞருள் ளுவப்ப
வெஙகட் கிணையீலை யெனதததருக குறுகடைச்
சங்கப் புலவரத தருகுளத் தொழிய
லீரிரு வேதமே யெழுவா யாகிய
சீரிய விழுமிய செவ்விய நூல்களிற்
சிறந்த பொருளெலாஞ் செந்தமிழ்க் குறளி
லறம்பொருள் காமமென் றுகுமுப் பாலாற
கூறின வொருநூல் கொண்டுளந
தேறினர் பயனெலாஞ் சேர்ந்தனாழ் குவரே.

நாயனார் சோதபஸ்துதி.

திருமுடி மிசையார் மயிர்முடி யழகுஞ் தீர்க்கபுண் டீர்றத லழகும்-திரண்மணி புயத்தை வருஞ்செவி யழகுஞ் திகழ்நெடுங் காடியி னழகும், அருமுடி செபமா லிகைகின்முத் திரைசே ரபய நேர் வலக்கையி னழகும் - அமிழ்துறழ் தமிழ்மா மறைமுறை வரத மமைதரு மிடக்கையி னழகுப், கருமுடி யோகப் பட்டையி னழகுங் கடிகொள்கீட் கோவண வழகும்-கழல்களிற் றிகிரி வலீ வரை யழகுங் கமலநல் லாதனத் தழகும், தருமுடிமுகிரேய் மயி லிலி னிடைமா தவர்கள்கண் டிறைஞ்சிநிற் றிருக்கும் - தமைபுக ழ்த் திருவள் ளுவனெனு நாம சிற்குரு சரணமே சரணம்.

திருவள்ளுவர் சரித்திரத்தைப் பற்றிய வேறு குறிப்புக்கள்.

ஒருநாள் சாயங்காலம் திருவள்ளுவநாயனார் தாம் நெய்த ஆடையை விற்றற்குக் கடைத்தெருவிற்குப்போய் அவ்வாடையைக் கையிற் பிடித் தக்கொண்டு நிற்கையில், இவரீது திருகுறளைப்படித்த வொரு சிறுவன் இவரிடத்தஇவர் கூறியநூலகேற்றபடி யொழுகமிருக்கின்றதாவென்று ஆராயவெண்ணி, நாயனரிடத்தசென்று "இவவாடையின் விலையென்ன" என்று கேட்க, அவர் "ஒரு பணம்" என்ன, அச்சிறுவன் அதனை வாங்கிக் குறுக்கே கிழித்த "இப்பாதியின் விலையென்ன" என்று வினவ, அதற்கு அவர் "அரைப்பணம்" என்ன, அவன் அப்பாதியையும் பாதியாகக் கிழித்த "இதன்விலையென்ன" என்று கேட்க, அவர் "காற்பணம்" என்று கூறினர். அதுகேட்டு அச்சிறுவன் நாயனரது பொறுமையைக் கண்டு மகிழ்ந்த விலகிப்போய் இன்னும் இவரது பொறு மையைப் பரிசோதிக்கவேண்டுமென்றெண்ணி, மறுநாட் காலையில் அது இல்லின்கட்சென்று வாசியாரைச் சண்டைக்கிழுத்துத் தொந்தரவு செய்ய வாரம்பித்தான். அதனைகண்டு நாயனர் நெய்தற்றொழிலிலிட டெழுந்து போய் அச்சிறுவனை யைப்புடைத்தனர். புடையுண்ட அச் சிறுவன் நாயனரை நோக்கி "ஐயரே! நீர் 'அகழ்வாரைத் தாங்கு நிலம் போலத் தம்மை,யிகழ்வார்ப் பொறுத்த றலே'என்று கூறிய குறள் பயனற்ற தாயிற்றே" என்றனன். அதற்கு நாயனர் "நீ திருக்குறளை முற்றும் படிக்கவில்லைபோலும்! திருக்குறளில் 'செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க, செய்யாமை யானுங கெடும்' என்னும் செய்யுளைப் படித்திருந் தால் இக்காரியஞ் செய்யமாட்டாய்" என்று கூற, அதற்கு அச்சிறுவன் திருக்குறளில் சமயோசிதமாகக் கூறவேண்டிய விஷயமனேகமிருப்பதும் மாறு பாடின்றி யமைந்திருத்தலையறியாது வீணே பெரியாரைப் பழித்த பாவத் திற்காளானேனென்று மனம்வருந்தி நாயனரிடத்தில் மன்னிப்புக்கேட் டுக்கொண்டு விடைபெற்றுச்சென்றனன் என்பதும்,

காவனரில்லாத வேளையில் இவரில்லின்கட் சென்ற ஒருநந்தவ சித்தர் நாயனாரது இல் லிலமான குடிசையாயிருக்கலேக்கண்டு, தமது தவமகிமை யால் அவ்விலை ஓராஜ மாளிகைபோலாக்கிச் சென்றனர். அவர் சென்ற பின்னர் நாயனர் வந்து பார்த்து " ஆட் கொல்லியுள்ளவிடத்து நாமிருக்க லாகாது " என்று கூறி மனைவியை யழைத்துக்கொண்டு சென்று வேறோ ரிடத்து ஒரு சிறு குடிசை கட்டி அதிற் குடிபுகுந்திருந்தனர். சிலநாள் கழித்து அச்சித்தர் நாயனரைத் தரிசிக்கவந்து தாமமைத்துத்தந்த மாளிகை யிற் காணாது விசாரித்துச்சென்று, மற்றோர் குடிசையிலிருக்கக்கண்டு, அவருடன் தனிமையாய்த் தத்துவங்களி னிலைமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில், அவர் பெய்த மூத்திரம் பட்டகல்லொன்று மாற்றயர் ந்த பொன்னனைதைக்கண்டு மனமுடைந்து, நம்மினுமுயர்ந்த சித்திபெற் றுள்ள இப்பெரியாரக்கு நாம் மாளிகையுமைத்துத்தருதல் அவமான சரிய மாமென்றெண்ணி, நாயனரிடத்தடியான்செய்த காரியத்தை மன்னித்தல் வேண்டுமென்று மன்னிப்புக்கேட்டுக்கொண்டு சென்றனர் என்பதும்,

ஒருநாள் நாயனர் தமது மனைவியார் ஆபரணங்களின்மேல் ஆவல் கொண்டிருப்பதையறிந்து அவரது வியர்வை நீரால் சுத்தியில் வெந்து கொண்டிருந்த பாத்திரங்களே யெல்லாம் பொற்பாத்திரமாகிக் காட்டி, " உன தடம்பின் வியர்வை சேர மட்பாத்திரங்களே யெல்லாம் பொற் பாத்திரங்களாக்கும் தன்மையதாயிருக்க, நீ ஆபரணத்தைக் காசைகொள்ளு தல் பயனற்றகாரியமாம் " என்றுகூறி, அவ்வம்மையார்க்குப் பொருளு டையார்க்குவரும் ஆபத்தினை விரித்துபதேசித்தனர்; அது முதற்கொண்டு " பொன்னின் குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்ப்பதேன் " என்னும் பழ மொழி வழங்கிவருகின்றது என்பதும்,

ஒளவையாரும் இடைக்காடரும் நாயனரைச் சந்தித்த போது அவர் களி னவஸ்தை கோக்கி " சீரியற்றியா குறளெத்தன்மைத்து " என்றுவினவ, அதற்கவர் " குறுமுனிவன் முத்தமிழு மென்குறளு நன்கை, சிறுமுனிவன் வாய்மொழியின் சேய் " என்று விடை பகர்ந்தனர்; அதுகேட்ட ஒள வையாரும் இடைக்காடரும் முறையே " மும்பொருளு நாற்பொருளு முப் பொருளிற் பெய்தமைத்த, மிசம்பொருளா யெம்மறைக்குஞ் சேட்பொரு ளாத் - தண்குருகூர்ச், சேய்மொழிய தென்பர் சிலரியா னிவ்வுலகின், தாய்மொழிய தென்பேன் றகைந்து " என்றும், " சேய்மொழியோ தாய் மொழியோ செப்பி லிரண்டுமொன்றவ, வாய்மொழியை யாரு மறை யென்ப - வாய்மொழிபோ, லாய்மொழிகள் சால வுளவெனினு மம்மொழி யின், சாய்மொழியென் பேன்யான் றகைந்து " என்றும் கூறினரென்ப தும், பிறவும் கர்ணபரம்பரையாக வழங்கிவருகின்றன.

ஒருசார்சார் நாயனர் ஸ்மார்த்தப் பிராமணரென்றும், அவர் வாக்கே அதற்குச் சான்றுமென்றும், யோகானுபவ முடைய அவா இன்னுமுயிரோ டிருக்கின்றாரென்றும், வேளாளர் வீட்டில் வளர்ந்தார், பறையர் வீட் டில் வளர்ந்தார், வள்ளுவர் வீட்டில் வளர்ந்தாரென்று கூறுதல் கட்டுக்கதை யாமென்றும், வள்ளுவனர் என்னும் பெயர் சாதிபற்றிய பெயரன்றென் றும் பிறவும் கூறுவர்

திருவள்ளுவமாலையில் ஆசிரியன்பெயர், வழி, எல்லை, நூற்பெயர் யாப்பு, அதனியல்பொருள், கேட்போர், பயன், காலம், களம், காரணமென்னும் பதினொன்றும் நன்குவிளங்கிக் கிடத்தலின், அவற்றைவிரிக்கவி லிட்டனம்.

திருவள்ளுவனார் திருக்குறளேயன்றி ஞானவெட்டி, திருவள்ளுவ என்னூறு (இதுவைத்தியநூல்), திருவள்ளுவமாயிரம் (இது சோதிடநூல் என்றற்றொடக்கத்தனவுமுதலையும் இயற்றினரென்று கூறுவாருமுண்டே திருக்குறளுக்கும் ஞானவெட்டி முதலிய நூற்களுக்குமுன்ன வேற்றுமை மின்னலுக்கும் மின்மினிப்பூச்சிக்குமுன்ன வேற்றுமைபோலிருத்தலின் அஃதாராய்ச்சியில்லாதார் கட்டுரைமனலிடுக்க.

கடைச்சங்கத்து வழங்கிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினென் கீழ்க்கணக்கு என்னும் தொகைநூல்களுளொன்றான பதினெண்கீழ்க் கணக்கிற் சேர்ந்தநூல்களுள் திருக்குறளும் ஒன்றுமென்பர் சிலர்; திருக் குறளாங்கேரியபின் கடைச்சங்கமழித்து விட்டமையால், அதன்கண் வழங் கிய பதினென் கீழ்க்கணக்கில் திருக்குற லெப்படிசேரும்? அதுகடா தென்பர் சிலர்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கென்பவை இன்னின்ன வென்பதை,

> கற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறு நூ
> றொத்த பதிற்றுப்பற் றோங்கு பரிபாடல்
> கற்றறிந்தா ரேத்துங் கலியே யகம்புறமென்
> றித்திறத்த வெட்டுத் தொகை
> மூருரு பொருநாறு பாணிரண்டு முல்லை
> பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
> கோலெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
> பாலி னடாத்தெடுப் பத்து.
> நாலடி நான்மணி நானூற்ப தைந்திணை மு
> ப்பால்கடுகங் கோவை பழமொழி மாமூல
> மின்னிலைசெஞ் சொல் காஞ்சியுட னேலா தி யென்பவே
> கைக்கிளைய வாங்கீழ்க் கணக்கு.

என்னும் வெண்பாக்களினுணர்க.

நன்னூல் முப்பால் என்பது திருக்குறளாகாதெனல் திருவள்ளுவ சரித்திரப்படி பார்த்தால் விளங்குவதாம்

காலம்.

[illegible] நூலும் மதுரையில் கடைச்சங்க மிருந்தகால மென்ற வரலாறு சரித்திர வாயிலாக வெளியாவதால், இந்நூற்குச் சங்

தேதக்குறைய இரண்டாயிர வருடத்திற்கு முன்னும். சரித்திர ஆராய்ச்சி புடையார் "சிலப்பதிகாரம்" "மணிமேகலை" முதலிய நூல்களினாலி னும் பிறவாற்றலும் திருவள்ளுவர் இ. பி. முதலாற்றண்டில் இருத் தல்வேண்டும் என்பர்.

சாதி.

இவரது சாதி இவரது சரித்திரத்தின்படி பிராமண சாதியாம். இவர் சாதியை யொத்தக்கொண்டவரென்பது "மறப்பினு மோத்தக் கொளலா கும் பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என்னுங்குறளாலும் பிறவாற்றலும் கன்குவினங்கும்

மதம்.

இவரைச் சைவரென்றும், வைணவரென்றும், அத்வைதியென்றும், பௌத்தரென்றும் சமணரென்றும், கிறிஸ்தவரென்றும் அவ்வவ்வகுப் பினர் கூறுகின்றனர்.

சைவர், வைணவர், அத்வைதிகள் என்பார் மூவரும்ஒத்தக்கொண்டுள்ள வேள்வியை இவர் "அவிசொரிக் தாயிரம் வேட்டலி னொன்ற, னுயிர் செகுத் தண்ணமை கன்று" என்றும், "செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி, னுள்ளுரோ டொப்பர் நிலத்து" என்றும் கிறப்பித்துடம் பட்டுக் கூறுதலினாலும், பௌத்தர் - சமணர் - கிறிஸ்தவர்கள் அதனைப் பல்லாற்றானும் இழித்துக் கூறுதலினாலும், இவரது மதம் வைதிகமதமே யாம். வேதவழித்தாய மதம் வைதிக மதமாம். "அந்தணர் நூற்கு மறத் திற்கு மாதியாய், நின்றது மன்னவன் கோல்" என்னுங் குறளாலும் பிறவாற்றலும் இவர் வேதத்தைப் பிரமாணமாகக்கொண்ட வாதியென் பது செவவனே வினக்கமாம். இவர் உலகிற்குக்காரணம் ஆதிபகவன் என்று கூறியிருத்தலால், சாங்கிய ராதியோருமாகார் சாங்கிய ராதியோர் கடவுளை யொப்பாது வேதத்தினைப் பிரமாணமெனக் கொண்டமையின், அவர்கள் வைதிக நாஸ்திகராவர். உலகிற்குக் காரணம் கடவுளென்பதை யொப்பாத பௌத்தரும் சமணரும் "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு" என்று உலகிற்குக் காரணம் கடவுளென்று கூறிய நாயனாரைத் தத்தம் மதத்தினரென்று கூறுவதும், மறபிறப்பையும் புலாலுண்ணுமையையு மொப்பாத கிறிஸ்தவர் மறுபிறப்பையும் புலாலுண் ணுமையையுமொப்பிய நாயனாரைத் தமது மதத்தினரென் றுரைப்பதும் வியப்பேயாம்.

நாயனார் வைதிகமதத்தினரென்று கூறுவதற்குத் திருக்குறளில் தக்கவேதுக்கள் வெளிப்படையா யிருத்தல்போல, சைவரென்றுவது வைணவரென்றுவது அத்வைதியென்றுவது குறிப்பிட்டுரைப்பதற்குத் தக்கவேதுக்கள் வெளிப்படையாயின்மையின், இவரை அவருள் ஒருவ ரென்று குறிப்பிட்டுரைத்தலியலாது.

ஔவையார்

தேவர் குறளுரை திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியுங் – கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

என்று கூறியிருத்தலினலும் திருக்குறள் வேதவழித்தாயதனல் என்பது செவ்வனே விளங்கும்.

இந்நூலாசிரியர் திருநாமங்கள் 10.

(1) திருவள்ளுவர்
(2) நாயனர்
(3) தேவர்
(4) முதற்பாவலர்
(5) தெய்வப்புலவர்
(6) நான்முகனர்
(7) மாதானுபங்கி
(8) செந்நாப் போதார்
(9) பெருநாவலர்
(10) பொய்யில் புலவர்

இவற்றின் பொருள் வருமாறு :—

(1) திருவள்ளுவர்.

திரு - அறிவுடையவரால் விரும்பப்படுந்தன்மை; வள்ளுவர் - ஈகை யுடையார். வள்ளுவனென்பது வண்மையென்னும் பண்படியாகப் பிறந்த பெயர். வண்மை - ஈகை. எனவே, வள்ளுவனென்பது சுருதி ஸ்மிருதி புராணேதிகாசங்களில் இலேமறைகாய்போலிருந்த முக்கிய விஷயங்களே யெல்லாந் தமிழ்மக்க ளெளிதி லறிந்துய்யுமாறு தொகுத்தருள் செய்தவ னென்னுங் குறியீடு பெற்றதாயிற்று. குறியீடு - காரணம்பற்றி வரும் பெயர். இங்ஙனமன்றி, மூசலறபுந் தொழிலுடைய வள்ளுவரிடத்து வளர்ந்தமைபற்றி இவ்வாசிரியர்க்கு வள்ளுவனென்னும் பெயருண்டாயிற் றெனக் கூறினும் பொருந்தும். இதுபற்றித்தான் மாமூலனர் "மறந்தே யும், வள்ளுவ னென்பானேர் பேதை யவன்வாய்ச்சொற், கொள்ளா ரறி வுடை யார்" என்று கூறினர்போலும்!

(2) நாயனர்.

நாயன்-நடத்துவோன். நாயன் என்பது இறையனர் – நந்தனர் என் பவற்றைப்போல உயர்வுப்பொருளுணர்த்தும் ஓர் விகுதி புணர்ந்து நாயனர் என்றுயிற்று. நாயன் என்பதன் பொருள் நடத்துவோனென்பது "கோ நாய" "அலவாய" என்றற் றொடக்கத்துப் பிரயோகங்களால் நன்கு விளங்கும். எனவே, நாயனர் என்பது திருக்குறள் வாயிலாக மக்களை நன் னெறியிற் செல்லுமாறு நடத்தும் முதன்மை பெற்றவரென்னுங் குறியீடு பெற்றதாயிற்று. மதுரைப் பெருமருதனர் "வேத விழுப்பொருளை வெண்குறளாற் வள்ளுவனர் தோவமுக் கற்ற தலரு" என்ற கூற்றையும் நுணர்ந்து பார்த்தாம்.

(3) தேவர்.

தேவர்—தெய்வத்தன்மையுடையவர். ஈண்டுத் தெய்வத்தன்மையின் வேறு பிறபுலவர் எடுத்துச் சொல்லுதற்கரிய முக்கிய விஷயங்களோ யெல்லாம் மக்களெளிதி லறியுமாறு தொகுத்துச் சொல்லுதலாம். உறையூர் முதுகூற்றனார் "தேவிற்சிறந்த திருவள்ளுவர்" என்ற கூறியதில் குணர்தற்பாலதாம். இவ்வனமன்றி, தேவர் என்பதற்கு மற்றப் புலவரினும் மிகுநியான பிராசாதத்தினை (மிகுபுகழை) யுடையவனென்ற பொருள் கூறுதலும்பொருத்தும். தேவர் என்பதன் பகுதியதான தில் என்பதற்குப் பிராசாதம் என்பது பொருளாம்.

(4) முதற்பாவலர்.

முதற்பாவலர்—முதன்மையாகிய பாவலர். முதன்மை—எப்பாவலரினுஞ் சிறந்திற்றல்; பாவலர்—பாடியற்றுவதில் வன்மையுடையார். பா—பாட்டு. இவ்வனமன்றி, பாக்களில் முதன்மையுடைய வெண்பாக்களில் முதன்மையாயுள்ள குறள்வெண்பாவினால் சொற்சுருங்கிப் பொருள் விரிக்துமிக்க நூலியற்றினமைபற்றி இவ்வாசிரியாக்கு முதற்பாவலர் என்ற பெயருண்டாயிற்றென்ற கூறினுமொக்கும். ஆசிரியர் கல்லாடனார் 'மூப்பான் மொழிந்த முதற்பா வலசொப்பா, செப்பா வலரினு மில்" என்றும், சேரைதரார் "தப்பா முதற்பாவாற் றுமாண்ட பாட்டினும், மூப்பாலி னூப்பான் மொழிந்தவர், ×× தெய்வத் திருவள் ளுவர்" என்றும் கூறினமையிங்குச் சுவனித்தற் பாலதாம்.

பாக்கள் நான்கு. அவை:—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன.

வெண்பா ஏழுவகையாம். அவை:—குறள்வெண்பா, சிரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, பஃறொடைவெண்பா, சிரிசைச் சிந்தியல்வெண்பா, இன்னிசைச சிந்தியல்வெண்பா, சவலைவெண்பா என்பன.

(5) தெய்வப்புலவர்.

தெய்வப்புலவர் - தெய்வத்தன்மை பொருந்திய அறிவுடையவர். புலமை-கல்வியறிவு தெய்வப்புலமை-பிறர்மாட் டோதுதற் காரணமாகப் புலமை பெருது இயல்பாகவே புலமை நிரம்பப் பெறுதல். இவ்வனமன்றி, அசரீரி (உடலில்)-ஆகாயத்தில் என்னும் தெய்வங்களால் தெரிவித்துச் சொல்லப்பட்ட புலமையுடையவரானதினாலே இவ்வாசிரியர் தெய்வப்புலவரென்று தெரிவித்துச் சொல்லப்பட்டாரெனினு மொக்கும். "தெரிவி னுயர் வெள்ளிலைச் செல்விக்கு" என்னும் தொல்காப்பியச் சூத்திரவுரையில் சேனாவரையர் "தெரிவாவது மன்னர் முதலாயினோரைத் தெரும்வரிசை" என்றும், உதாரணங்களுள் "தெய்வப்புலவன் திருவள்ளுவன்" என்றும் எடுத்துக்காட்டினால், திருவள்ளுவர்க்குத் தெய்வப்புலவர் என்னும்பெயர் சிறப்புப்பெயரா மென்பதாயிற்றென்க. இவர் தெய்வப்புலம் உலகம் புகழ்

யன்றே அச்சரி " திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ, பெருத்தகு மற் பலவை யோக்க - விருக்க, உருத்திர சன்மர்" என்று கூறிற்று.

(6) நான்முகனார்.

நான்முகனார்-நான்முகனது அம்சமாகப் பிறந்தவர். நான்முகன் - பிர மன்; அம்சம்-கூறு. ஆரியபாஷை வாயிலாக வேதத்தை வெளியிட்டரு ளிய நான்முகனுரே திருவள்ளுவராகப் பிறந்து தமிழ்ப்பாஷை வாயிலாக வேதத்தி னருங்கருத்துக்களே வெளியிட்டருளினமைபற்றி, இவ்வாசிரியர் நான்முகனுரென்றுசொல்லப்பட்டார். உக்கிரப்பெருவழுதியார் "நான்மறை யின் மெய்ப்பொருளோ மூப்பொருளா நான்முகத்தோன், ருன்மறைந்த வள்ளுவனுய்த் தந்தரைத்த-தான்முறையை " என்றும், சாவிரிப்பூம் பட் டினத்துக் காரிக்கண்ணனுர் " மெய்யாய வேதப் பொருள்வினாக்-பொய் யாது, தந்தா னுலகிற்குத் தான்வள்- ளுவனுகி, யந்தா மரைமே லயன் " என்றும் கூறியுள்ளவை யிற்குக் கவனித்தற்பாலனவாம்

(7) மாதானுபங்கி.

மாதானுபங்கி - தருக்கொழிதலுடையான் தருக்கு - அகங்காரித்தலி முகுதல். மாதானுபங்கி என்பது மாதம், அதுபங்கியென்னும் இருமொழி யாலாயதொடர்மொழி. மாதம் - தருக்கு; அநு - உபசர்க்கம்; பங்கி – பங் கஞ்செய்தவன். இங்ஙனமன்றி, மாதானுபங்கி யென்பதற்கு மாதாவைப் போலும் ஒழுக்கினன் என்று பொருள் கூறுதலுமுண்டு. தாய் தனது பின்னேயினிடத்து அன்புசெலுத்துதல் போன்று இவர் உலகத்தாரிடத்து அருள் செலுத்துபவர் என்பது இதன் நிரண்டாபொருளாம். நல்கூர் வேள் வியார் "இப்பக்கம், மாதானு பங்கி மறுவில் புலச்செங்காப், போதார் புனற் கூடற் கச்சு" என்று கூறியதிங் குணர்தற்பாலதாம்.

(8) செங்காப்போதார்.

செங்காப்போதார் - செம்மைவாய்ந்த காவாகிய மலரையுடையார்.செம் மை - சொல்லின்கண் கோணுதலின்மை; அஃதாவது மனத்தின்கண் கோணுதலின்றி அறங்கிடந்தவாறு சொல்லுதல். காயனுர் தாங்கூறுவதை "நன்றென,எப்பாவலரும்"இயையுமாறுதேன்போலினிக்கக்கூறுதல்பற்றி அவரது காவானது தேனிருத்தற்கிடனுன பூவாகவுருவகிக்கப்பட்டது. காமகள் " பின், வள்ளுவன் வாயதென் வாகு " என்று கூறியவுரிமைபற் றித் திருவள்ளுவரது காவை (வெண்டாமரைப்)பூவாகச்செங்காப்போதார் என்று அவர் கூறப்பட்டாரெனினுமமையும். நல்கூர்வேள்வியார் "செங் காப், போதார் புனற்கூடற் கச்சு " என்று கூறியது மறிக.

(9) பெருநாவலர்.

பெருநாவலர் - பெருமை பொருந்திய நாவலர். பெருமை - பிறர்க்கில் லாத சிறப்பு. நாவலர் - நாவன்மையுடையவர். நாவன்மை - ஐம்பெரும் யன்றிற் பலவற்றையும் விரும்பி வேற்றுச்சொல்லுரை சொல்லு செல்

வன்மை. இது "கேட்டார் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல்" என்னும் குறளாலும், "இதனுற் சொல்லினிலக்கணம் உதப்பட்டது" என்னுமதனுரையாலும் கண்குவினங்கும். அரிசில் கிழார் "பாத்த பொருளெல்லாம் பாரறிய வேறு, தெரிந்த நிறன்தொறுஞ் சேரச் - சருங்கிய, சொல்லால் விரித்துப் பொருன்வினவக்கச் சொல்லுதல், வல்லார்கா வள்ளுவல் லால்' என்றும், கௌணியனார் "நாப்புலமை வள்ளுவனுர்' என்றும் கூறியன விக்குக்கவனித்தற்பாலனவாம்

(10) பொய்யில்புலவர்.

பொய்யில் புலவர் - பொய்ம்மையின்றிய புலமையுடையார் எனவே, திருவள்ளுவர் ஐயத்திரிபின்றி யுள்ளதையுள்ளபடி யுலகத்தார்க்குணர்த்தின ரென்பதாயிற்று. ஈண்டுப்பொய்ம்மை - ஐயத்திரிபு. பரணர் "வாலறிவின் வள்ளுவரும்" என்றும், காரிக்கண்ணனுர் 'மெய்யாய வேதப் பொருள்வினவ்ப் - பொய்யாத, தந்தா னுலகிற்கு" என்றும், தேனீக்குடிக் கீரனுர் "பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத, மெய்ப்பால மெய்யாய் வினவினவே - முப்பாலிற், றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால், வையத்து வாழ்வா மனத்து" என்றும் கூறியன விக்குணர் தற்பாலனவாம்

இந்நூலின் திருநாமங்கள் 10.

(1) திருக்குறன்	(6) பொய்யாமொழி
(2) முப்பால்	(7) வாயுறைவாழ்த்து
(3) உத்தரவேதம்	(8) தமிழ்மறை
(4) தெய்வநூல்	(9) பொதுமறை
(5) திருவள்ளுவர்	(10) திருவள்ளுவப்பயன்

இவற்றின் பொருள் வருமாறு:—

(1) திருக்குறள்.

திருக்குறன் - சிறந்த குறன்வெண்பாவினுலாகியநூல். திருவென்னும் அடையடுத்த (குறுமைப்பண்பின் விகாரமாகிய) குறன் என்னும் பண்புப் பெயர் அதனையுடைய வெண்பாவிற்காதலால், அடையடுத்த பண்பாகுபெயராம்; அது தன்னுற்சமைந்த நூலுக்காதலால், கருவியாகுபெயராம். ஆகவே, இஃதிருமடியாகு பெயராமென்க.

(2) முப்பால்.

முப்பால் - அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையுடையதனால். பால் - பகுப்பு. முப்பாலென்பது மூன்றுபகுப்புடைய தொகுப் பன்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய்த் தானைக்குறி பெற்றின்றது.

(3) உத்தரவேதம்.

உத்தரவேதம் - பின்ரோன்றியவேதம். உத்தரம் - பின்; வேதம் - (உண்மைப்பொருளை) அறிவிப்பது திருக்குறள் வேதபொருளைத் தன்னகத்தடக்கிப் பின்னெழுந்தமைபற்றி உத்தரவேதம் என்று கூறப்பட்டது. உத்தரம் என்னுமடையடைத்த வேதமென்னும் காரியப்பெயர் அதனை யுணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்காதலால், அடையடைத்த காரியவாகுபெயராம். இது தானியாகுபெயரென்று கூறற்குமியையும்

(4) தெய்வநூல்.

தெய்வநூல்-தெய்வத்தன்மையமைந்த சாஸ்திரம். தெய்வத்தன்மை – எந்நூலகத்துமில்லாத மாட்சிமையை யுடையதாயிருத்தல். இது தெய்வத்தினருளால் தோன்றிய நூலெனினும் ஒக்கும். நூல்-உவமையாகுபெயர். இதன் நன்மையைப் " பஞ்சிதன் சொல்லாப் பனுவ லிழையாகச், செஞ் சொற் புலவனே சேயிழையா-வெஞ்சாத,கையேவா யாகக் கழிசே மடியாக, மையிலா தான்முடியு மாறு" என்னும் வெண்பாவினாலறிக.

(5) திருவள்ளுவா.

திருவள்ளுவா-திருவள்ளுவராலருளிச் செய்யப்பட்டநூல். திருவள்ளுவர் என்னுங் கருத்தாவின் பெயர் அவராலருளிச் செய்யப்பட்ட நூலுக்காதலால், கருத்தாவாகுபெயராம்.

(6) பொய்யாமொழி.

பொய்யாமொழி–பொய்ம்மைகலவாத மொழியினாலாகியதால்; உள்ளதையுள்ளவாறுணர்த்தும்நூலென்றவாறும். பொய்யா என்னுமடையடைத்த மொழியென்னும் கருவியின்பெயர் அதன் காரியமாகிய நூலுக்காதலால், அடையடைத்த கருவியாகுபெயராம். இனிச்சிறப்புப்பெயரே சினையாகுபெயராய் வருமென்னும் நியதியறியாதார் இதனை அடையடைத்த சினையாகுபெயரென்று கூறுவர். பொய்யாமொழி யென்பதனை அன்மொழித்தொகையென்று கூறுதலுமுண்டு; பொய்யாமொழி யென்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத தொடராகலின், அது பொருந்தாதென்க.

(7) வாயுறைவாழ்த்து.

வாயுறைவாழ்த்த-உடற்குறுதியாயவற்றைச்செய்யும்மருந்துபோன்று உயிர்க்குறுதியாய வற்றைக் கூறும் நூல். வாயுறை-சொன்மருந்து; வாழ்த்த-வாழச்செய்தல். எனவே, இது மக்களுக்கு நீதிகளை வற்புறுத்திக் கூறுவ தென்றுயிற்று; ஆகவே, மக்களுக்கு மருந்து போல்வ தென்றுயிற்று. கௌணியஞர் 'சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய, வந்த வினைவீரர்க்கு மாமருந்து " என்றனர். " வாயுறை வாழ்த்தே வயங்க லடிண்,

வேம்புங் கடிவும் போல வெஞ்சொற், றூங்குத லின்றி வழினெ பய்க்குமென், றேம்படைக் னெவியின் வாயுறத் தற்றே " என்னுஞ் தொல்காப்பியச் சூத்திரமும்,"மூற்பருவத்தக் ளைத்தும் பிற்பருவத்த உறநிபயக்கும் வேம்புங்கடிவும்போல வெய்யவாய் இன்சொல்லினைத் தடையின்றிப் பிற்பயக்கு மெனக்கருதிப் பாதுகாததுக் ளெக்குற னெப்பிழுன்மெய்யாகஅறிவுறுத்த லது வாயுறைவாழ்த்தெனப்படும்" என்ற நச்சிணர்க்கினியர் கூறிய அத னுரையு மிங்குக் கவனித்தற்பாலனவாம்

(8) தமிழ்மறை.

தமிழ்மறை-தமிழ்வேதம். மறை - இரகசியப்பொருளைக் கூறவது பிரத்தியட்சத்தாலும் அநுமானதாலும் எவரும் எளிதிலறிய முடியாத பொருளைத் தெளிவாய்க் காட்டுஞ் சொன்மயக் கருவியாயுள்ளது வேதமாக லின், அது தமிழில் மறையென்று கூறப்பட்டது. தமிழ்மறை - தமிழிற் கூறிய வேதம் என்று விரியும். செயனார்க் கொடுஞ்செங்கண்ணனர் " வே தப் பொருளை யிராகால் விரித்தலகோ, சோதத தமிழா னுரைசெய்தார் " என்றும், வண்ணக்கஞ்சாத்தனர் " ஆரியம், வேத முணடதுத் தமிழ்நிரு வள்ளுவனு, சோது குறட்பா வுடைதது"என்றும் கூறியவை யிவருணர்தற் பாலனவாம.

(9) பொதுமறை.

பொதுமறை-பொதுவாகிய வேதம். பொதுமை-நான்கு வருணத் தார்க்கு முரிமையுடையதாதல். அநதணா அரசா வைசியனென்னுந் தவி சர் மூவரும் ஒதுதற்குரிய நெறப்பியலுடைய வேதமபோலாகாது, நான்கு வருணதாரும் ஒதுதற்குரிய பொதுவியலுடைமை பற்றித் திருக்குறன் பொதுமறை என்று கூறப்பட்டது வெள்ளிவீதியார் " செய்யா மொழிக் குத் திருவன் ளுவர்மொழிந்த, பொய்யா மொழிக்கும் பொருளொன்றே— செய்யா, வதற்குரிய நந்தணரே யாராயினேனு,யிதற்குரிய ல்லாதா ரில்" என்று கூறியதிவருணர்தற்பாலதாம்

(10) திருவள்ளுவப்பயன்.

திருவள்ளுவப்பயன்-திருவள்ளுவரா லருளிச்செய்யபபட்ட பயனிறைந்த தால். இரு பயன்-அறம், பொருள, இன்பம், வீடென்பனவற்றை யுடை யச்செய்தல் " அறம்பொரு ளின்பம்வீ டடைதனுற் பயனே" என்பது குந்நாம். திருவள்ளுவபயனென்பது மூன்றும் வேற்றுமைத் தொகைப் புறத்தப பிறந்த வன்மொழித்தொகைக் காரணக்குறிபபெயராம். தொடி ழுமுன் மாணிழுதனுர் " அறனறிந்தேமான்ற பொருளறிந்தே மின்பின், றினனறிந்தேம் வீடு தெளிந்தே-மறனெறிந்த, வானார் நெடுமொற வள்ளு வனுர் தம்வாயாற், கோளா தணவெல்லாங் கேட்டு " என்று கூறினமை காண்க. இப்பெயர்களேயன்றி, இதற்குப் "பொருளுரை" "முதுமொழி" "புனன் முறை" என்னும் பெயர்களுமுண்டி.

கடவுள் துணை.

திருவள்ளுவர்

திருக்குறள்.

மூலமும் உரையும்.

உரைப்பாயிரம்.

பரி.—† இந்திரன் முதலிய இறையவர் ‡ பதங்களும் அத்தகு லின் பத் தழிவில் வீடும் § நெறி யறிந்து செய்ததற் குரிய ¶ மாந்தர்க் குறுதி யென உயர்த்தோரா †† னெனக்கப்பட்ட பொருள் கான்கு.அவை ‡‡ அறம்

† இந்திரன் முதலிய றையவர்:—இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானனென்னு மெண்மர்.

‡ பதங்கள்—அமராவதி, தேஜோவதி, சயந்தினி, நிருத்ஸுங்கனை, சிரத்தாவதி, கந்தவதி, அலகாபுரி, யசோவதி என்னு மெட்டினாம்.

§ நெறியறிந்து—இதுவே சொன்னளத்தக்க சன்மார்க்கமென்று கல் லாசிரியர் வாயிலாக வுணர்ந்து.

¶ மாந்தரெனப் பொதுப்படக்கூறினமையின், ஆண், பெண் என்னு மிருபாலாரும் முத்தியடைதற் குரியரா ரவரெனபதும், தேவர் முதலியோர் அதற்குரிய ரல்லரென்பதும் பெறப்படுமாறறிக.

†† 'எடுக்கப்பட்ட' என்றமையின், அறமுதலியவை தொன்றுதொட்டு வழங்கி வருவன வென்பது பெறப்படும்.

‡‡ அறமுதலியவற்றை வடநூலார் முறையே தருமார்த்தகாமமோகூ வென்பர்; புருஷார்த்த மெனப்படும் இவற்றனுள், அறம் பொருளின் பங்களோத் திரிவர்க்கமெனவும் மோகூத்தை அபவர்க்கமெனவுங் கூறுவர்.

இவற்றுள், மூன்னைய மூன்றும் கௌணமும், பின்னையதொன்று முக்கியமுமாம். புருஷார்த்தம் - புருஷனால் விரும்பப்படுவது. அபவர்க்கம் திரிவர்க்கத்தினின்றும் நீங்கல்.

i. அறம்-தர்மம். அஃதாவது மநுமுதலிய நூல்கள் விதித்தவற்றைச் செய்து, விலக்கியவற்றைச் செய்யா தொழிதலாம்.

ii. பொருள் - அர்த்தம். அஃதாவது மனைவி, மக்கள், பூமி, பசு, தாசி, தாசன், திரவியம், மனை, தானிய மெனபனவாம்

பொருளின்பம் வீடென்பன. அவற்றுள், வீடென்பது † சித்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின், அறவுதமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது ‡ இலக்கண வகையாற் கூறப்படாமையி னுல்களாற் கூறப்படுவன வெனை மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மதமுதலிய நூல்களில் விதித்தன செய்த லும் விலக்கியன வொழிதலுமாம். அஃது ¶ ஒழுக்கம், வழக்கு, தண்ட மென மூவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய * வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய 0 நிலைகளினின் றவ்வவற்றிற் கோதிய அறங்களில் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒருபொருளைத் தனித்தனியே யெனதெனதென் றிருப் பார் அது காரணமாகத் தம்முண் மாறுபட்டப் பொருண்மேற் ¶¶ செல் வது. அது $ கடன் கோடன் முதலிய பதினெட்டுப் பதத்ததாம்.

iii. இன்பம்-காமம். அஃதாவது பொருள் இவைக்காரணமாக ஒரு காலத்து ஒருபொருளால் ஐம்புலன்களும் நுகர்தற் பிறப்புடையதாம் ஒரு பொருளென்றது சற்புடைய மகளிரை.

iv. வீடு - மோட்சம். அஃதாவது உயிர் தவிர்ச முதலிய பஞ்சக் கிலேசத்தினின்றும் நீங்குதல். இவற்றுள், அறம் இம்மைப்பயன், மறு மைப்பயன், வீடென்னு மூன்றையும், பொருள் இம்மைப்பயன் மறுமைப் பயனென்னு மிரண்டையும், இன்பம் இம்மைப்பய னொன்றையும் தருவ தாம். அத முதலியவற்றப் பொருளென்றது வைசேடிகமதம பற்றியாம்.

" ஈதலறங் நீவிவேவிட் டுட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காதலிருவர் கருததொருமித்—தாதாவு
பட்டதே யின்பம பரணேகினோர் இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு." என்று ஔவைப் பிராட்டியார் அறமுத லிய வற்றிற் கிலக்கணங் கூறுமாறு முணர்க.

† இதனை "வாக்குமன முங்கண்ணு மற்றனவிற் றியங்களுமே,
சோக்கரிய பரஞ்சுடர்" என்ற புராணங் கூறுமாற்றினு முணர்க.

‡ இலக்கண வகையாற் கூறல்:—பிருதிவிக் கிலக்கணம் கந்தமுடை மை, அப்புவிற் கிலக்கணம் குளிர்ந்தபரிச முடைமை என்றற் றொடக்கத் தனவாகக் கூறுதல் போல்வதாம். அசாதாரண தர்மம் (சிறக்குறி) இலக் கண மெனப்படும்.

¶ ஒழுக்கம், வழக்கு, தண்டமென்பன முறையே ஆசாரம், வியவ காரம், பிராயசித்தம் (கழுவாய்) என்று கூறப்படும்.

* வருணம் - சாதி. 0 நிலை-ஆச்சிரமம்.

¶¶ சொல்லுவ தென்னும் பாடமுண்டு.

$ கடன்கோடல் முதலியவாவன:—கடன்கோடல், ஒருவனிடத்திற் கார்க்கும்படி வைத்தபொருள், உடையவனல்லான் வித்தல், கூடியிலாபஞ்

தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழுவுரை ஆற்நெறி நிறுத்துதற்பொருட் § டொப்பாடியதற்குத்தக வொறுத்தல்.

இவற்றுள், வழக்குத் தண்டமும் முலக்நெறி நிறுத்துதற் பயத்தலால் தல்ல தொழுக்கம்போல மக்களுயிர்க் குறுதி பயத்தற் சிறப்பில வாதலானும், அவைதாம் நூலானேயன்றி யுணர்வு மிகுதியானுஞ் தேயவியற்கையானு மறியப்படுதலானும், அவற்றையொழித் நீண்டித் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாற் சிறப்புடைய வொழுக்கமே அறமென வெடுத்துக்கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அசுநெறப்பியல்புகளொழித் தெல்லார்க்கு மொத்தலிற் பெருப்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறம் துறவறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது.

அகற்றுள், இல்லறமாவது இவ்வாழ்க்கை நீலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கணின் றதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப் படுவ தாகலின், அதனை முதற்கட் கூறுவான் தொடங்கி ¶ எடுத்துக் கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துங் கூறுகின்றார்.

சம்பாதித்தல், தானஞ்செய்த பொருளைக் கொடாமை, சம்பளங்கொடாமை, கட்டுப்பாட்டை மீறி நடத்தல், ஒருபொருளை விற்றுவது வாங்கியவது பின்பு சந்தேகித்தல், மாட்டை உடையவனுக்கும் மேய்ப்பவனுக்கும் வரும் வழக்கு, எல்லை வழக்கு, அடித்தல், திட்டல், திருட்டு, வன்செய்கை, அயலான் மனைவியை யபகரித்தல், மாதாடலர் தருமம், தாயபாகம், சூதாடல் என்பனவாம். இவ்வாறு மநுதர்மசாஸ்திரம் எட்டா மத்தியாயத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

§ ஒப்ப நாடி யத்தக வொறுத்தி என்பது புறநானூறு 10 - வது செய்யுளிலுள்ளது. இதன் பொருள் - நீதிநூற்குத்தக வாராய்ந்து அத்நீமைக்குத் தகத் தண்டஞ்செய்வை என்பது.

¶ எடுத்துக்கொண்டது லிடையூறின்றி யினிது முடிதற்பொருட்டு நூன்முகத்துச செய்யப்படும் வாழ்த்து மங்கலமெனப்படும். அது வஸ்துநிர்த்தேசம் (பொருளியல் புரைத்தல்), நமஸ்காரம் (வணக்கு), ஆசீர்வாதம் (வாழ்த்து) என மூவகைத்தாம்.

(i.) நமஸ்கார முதலியனவின்றிச் சேவலம் கடவுளின் சங்கீர்த்தனம் (ஸ்துதி) வஸ்துநிர்த்தேசவடிவ மங்கலமாம். (ii.) நமஸ்காரத்திற்குத்தகுதியான கடவுள் குரு முதலியோரிடத்து நமஸ்காஞ் செய்பவன் தனதிழிதகைமையை யுணர்த்துதற்பொருட்டு மற்றவர்க்குக் காயமென்னுந் திரி

தெளிவு:—இந்திரன் முதலிய தேவர்களுடைய பதங்களேயும், முடிவில்லாத இன்பத்தையுடைய அழிவில்லாத வீட்டையும், வழிபறித்து அடைதற்கு உரிய மனிதர்க்கு உறுதிபயத் தருவதென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். அவற்றுள், வீடென்பது இப்படிப் பட்டதென்று குறிப்பிட்டு நினைக்கவும் சூசிப்பிட்டுச் சொல்லவும்கூடாத நிலைமையது புடைய தாதலால், அது துறவறமாகிய காரணவகையால் சொல்லப்படுவதல்லாமல் இலக்கண வகையினால் சொல்லப்படாமையால், நூல்களாற் சொல்லப்படுவன மற்றைய மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மதமுதலிய நூல்களில் விதித்தனவற்றைச் செய்தலும் விலக்கியனவற்றை ஒழித்தலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூன்றாவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது பிராமணர் முதலிய வருணத்தார் தத் தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளில் நின்று அந்தந்த நிலைகளுக்குச் சொல்லிய அறங்களில் வழுவாமல் நடத்தலாம்.

வழக்காவது ஒருபொருளைத் தனித்தனியே எனது எனது என்று இருப்பவர் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருளின்மேற் செல்வது. அது கடன்கோடல் முதலிய பதினெட்டு வகையினதாம்.

தண்டமாவது அவ்வொழுக்க வழியிலும் வழக்கு வழியிலும் தவறினவரை அவ்வழியில் நிறுத்துதற் பொருட்டு நீதிநூற்குருதியாக வாராய்ந்து அக்குற்றத்திற்குத் தருதியாகத் தண்டித்தலாம்.

காரணங்களாலுஞ் செய்யப்படும் வியாபார விசேடம் கல்காரவடிவமங்கலமாம். (iii.) தொலாசிரியர் தாம் விரும்பியபொருளையும் தமதுமானுக்கர் விரும்பிய பொருளையு மடைதற்பொருட்டுக் கடவுளைப் பிரார்த்தித்தல் ஆசிரவாதவடிவ மங்கலமாம். 'அகரமுதல' என்னுங்குறள் வஸ்துநிர்த்தேசவடிவ மங்கலமாம். ஏனையகுறள்களில் ஏனைய மங்கலங்கள் வருமாற்றினையுய்த்துணர்க.

"அகர முதல வெழுத்தெல்லாம்" என்புழி அகரம் கடவுள் வாசகமாயிருத்தலின், அதுவே யீண்டு மங்கலமொழியாம். அகரம் கடவுள் வாசகமாமென்பது "ஆரு மறியா ராரா மவனென்ற" என்று திருமூலரும் "அக்ஷ ரம் கலி லகாரன" என்று கண்ணபிரானும் கூறுவதால் இனிது விளங்கும்.

'அகர முதல வெழுத்தெல்லாம்' என்பதில் பிரணவாட்சரத்தின் வடிவமாய அகர, உகர, மகரமெய் அமைந்திருத்தலின் அகர, உகர, மகரமெய் வடிவப் பிரணவாட்சரம் மங்கலமொழியாக வைக்கப்பட்ட தென்னும் பொருத்தம்.

இவற்றுள், வீழ்க்கும் தண்டமும் உலகவழியில் நிறுத்தலாகிய பயனைத் தருவனவாவதல்லாமல் ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதியை(நன்மையை)த் தருவதாகிய சிறப்புடையனவல்ல வாதலாலும், அவைதாம் தாமாலே யல்லாமல் அறிவு மிகுதியாலும் தேசவியற்கையாலும் அறியப்படுதலாலும், அவ்விரண்டையும் ஒழித்து இக்குத் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென வெடுத்துக்கொள்ளப்பட்டது.

அவ்வறத்தான் நால்வகை நிலைமை உடையதாய் வருணத்தோறும் வேறுபாடு உடைமையால் சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புமை யொழித்து, எல்லார்க்கும் ஒத்திருத்தலால் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலைகளாற் சொல்லப்பட்டது.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற வழியில் நின்று அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடும் செயப்படுவதாதலின், அதனை முதலிற்கூறத் தொடங்கி வெடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்.

வீடொன்று பாயிர நான்கு வினக்கரு, காடிய மூப்பத்து மூன்றெனு நூழ்—கூடுபொரு, ளெள்ளி லெழுப நிருபதிற் றைந்நின்பம், வள்ளுவர் சொன்ன வகை.

அறநான் கறிபொரு ளேழொன்று காமத், திறமூன் றெனப்பகுதி செய்த - பெறலரிய, நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார், போலு மொழிந்த பொருள்.

பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே, தூய துறவறமொன் றாழாக - வாய, வறத்திற்பா லெல்லையா வாய்ந்துரைத்தார் தாலின், நிறத்தப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

அரிய லையைத் தலைச்சிய லீரைந், தருவல் லாணிரண்டொன் றெண்கூழியல, நிண்பகட நட்புப் பதினேழ் குடிபதின்மூன், றெண்பொரு ளேழா மிவை.

ஆண்பாலே ழாதிரண்டு பெண்பா லறத்தன்பு, பூண்பா லிருபாலோ ராறுக-மாண்பாய, காமத்தின் பக்கமொரு மூன்றுக் கட்டுரைத்தார், நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

இத்திருவள்ளுவ மாலைச் செய்யுட்களால் திருக்குறளினது பால் முதலியவற்றி னளவு நன்கு விளங்கும்.

கடவுள் துணை.

திருவள்ளுவர்

திருக்குறள்.

1. அறத்துப்பால்—ON VIRTUE.

1. பாயிரம்—Preface.

முதல் அதிகாரம்—கடவுள் வாழ்த்து—*praise of God.*

பரிமேலழகர்:—அஃதாவது கவி தான் $ வழிபடு கடவுளாயாதல் எடுத்துக்கோண்ட டொருட் கேற்புடைக் கடவுளாயாதல் வாழ்த்துதல். அவற்றுள், இவ்வாழ்த்தற்புடைக் கடவுளை யெனவறிக; என்னை? † சத்துவமுதலிய குணங்களான் மூன்றிய உறுதிப்பொருட் ‡ கவும்

$ (i) நூலாசிரியர் தாமெடுத்துக் கொண்ட நூலிற் கூறும் விஷயத்திற்கேற்ப நான்முகத்திற் கடவுள்வாழ்த்தைக் கூறுதல் தாம் வழிபட்டவெருங் கடவுளை வாழ்த்துதல் வழிபடுகடவுள் வாழ்த்தாம். அஃது ஆத்திசூடியில் "ஆத்தி சூடி யமர்ந்த தேவனை, யேத்தி யேதஞ்சொழுவோ மியாமே." என்பது போல்வதாம்

(ii) நூலாசிரியர் நான்முகத்தில் நூலிற்கூறும் விஷயத்திற் கேற்பக் கடவுள்வாழ்த்துதல் ஏற்புடைக்கடவுள் வாழ்த்தாம். அது ஞான வாசிட்டத்தில் "பொன்னுல கத்தினிற் புலியி லன்தரத், தென்னுடை யுட்புறத் திலங்கு கின்றது, மன்னுறிற் சோதியே வடிவ மியாவுமாய்த், தன்னுவ தப்பொரு டொழுதி றைஞ்சுவாம்" என்பது போல்வதாம். 'அகரமுதல' என்றற் றொடக்கத்துக் குறள் எற்புடைக்கடவுள் வாழ்த்தென்பது வெளிப்படையாம்.

† 'சத்துவ முதலிய குணங்களான் மூன்றிய உறுதிப்பொருட்கு' என்பதற்கு—சத்துவகுணத்தால் அறமும், இராசதகுணத்தால் பொருளும், தாமதகுணத்தால் இன்பமும் ஆகிய உறுதிப்பொருட்கு எனக்கொள்க.

‡ 'அவற்றுள் மூவாகியமுதற்கடவுள்' என்பதற்கு—சத்துவம் ராஜசம் தாமச என்னும் மூகுணங்களால் காத்தல், படைத்தல், அழித்தல் செய்தற்பொருட்டு முறையே அரி, அயன், அரனென்னும் மும்மூர்த்திகளின் ஆடியமாகிய பாப்பிரஹ்மம் என்று கொள்க.

படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை" என்பது தேவாரம்; "குலவு மூவ ருருவமுங் கொண்டதே" என்பது பாகவதம்.

றன் முவராகிய முதற் ¶ கடவுளோ டியைபுண்டாகலான், அம்மூன்று பொருளையுங் கூறலுற்றார்க் † கம்முவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்தும் முவர்க்கும் பொதுப்படக் கூறினரென வுணர்க.

தெளிபொருள் விளக்கம்:—அஃதாவது கலி தான் வழிபடுங் கடவுளையாவது எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்புடைய கடவுளையாவது வாழ்த்துதலாம். அவற்றுள், இவ்வாழ்த்து ஏற்புடையகடவுளே யென்றறிக; எங்ஙனமெனின், சத்துவமுதலிய முக்குணங்களால் அறம் பொருள் இன்பமென மூன்றாகிய உறுதிப் பொருளுக்கு அம்முக்குணங்களால் அரியயனரனென மூவராகிய முதற்கடவுளோடு சம்பந்தமுண்டா யிருத்தலின், அம்மூன்று பொருள்களையும் சொல்லத்தொடங்கிய நாயனுர்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாதலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படச் சொல்லினரென் றறிக.

க. ‡ அகர முதல வெழுத்தெல்லா 8 மாதி
பகவன் முதற்றே யுலகு.

¶ கடவுள் என்பதன்பொருள்—மன மொழி மெய்களுக் கப்பாற்பட்டது என்பது.

† அம் மும்மூர்த்திகளில் எம்மூர்த்தியை வாழ்த்தினும் பயன் வேறுபடுவதின்றென்பது "உணர்ந்துணர்ந் திழிந்தகன் றுயர்ந்தரு லியக்தலிக்லேமை, யுணர்ந்துணர்ந் தணர்னு மிறைலே யுணர்வரி தயிர்கா, ணுணர்ந்தணர்ந் தரைத்தரைத் தரியய னரனென்னு மிவரை, யுணர்ந்தணர்ந் தரைத்தரைத் திறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே" என்று பெரியாருரைத்தலால் நன்கு விளங்கும்.

இவ்வதிகாரத்தின் 1. 2. 4. 5. 7. 10. வது எண்ணுள்ள குறள் முதற் கடவுளது வாழ்த்தும், 3. வது எண்ணுள்ள குறள் அயனது வாழ்த்தும், 6. 8. வது எண்ணுள்ள குறள் அரியினது வாழ்த்தும், 9. வது எண்ணுள்ள குறள் அரனது வாழ்த்துமாம். இதனை யூகித்துணர்க.

‡ அந்தணர் வந்தார், வசிட்டரும்வந்தா ரென்புழி, அந்தணருட் டலைமைநோக்கி, அந்தணருள் ஒருவனாகிய வசிட்டரைப் பிரித்துக்கூறுவது போன்று 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்புழி, எழுத்துக்களுட் டலைமைநோக்கி, எழுத்துக்களுள் ஒன்றாகிய அகரம் பிரித்துக் கூறப்பட்ட தென்க. "முனிவர்வந்தார் அகத்தியனும் வந்தான்" என்பதுமிதுவே யாம்.

8 "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" ஆதலின், நாயனுர் தமதன்னையாகிய ஆதிலையும், பிதாவாகிய பகவனையும் உலகிற்கு முதலாகிய கடவுளாகப் பாவித்து 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என்றனர் என்று கூறுவாருமுளர்.

பரி.—(இதன்பொருள்) அகரமாகிய முதலெழுத்துடையன எழுத்துக்க ளெல்லாம்; அதுபோல, ஆதிபகவனாகிய முதலெழுத்தைத் தலைத.—(என்ற வாறு).

இது தலைமைபற்றிவந்த † எடுத்துக்காட்டுவமை. ‡ அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி § நாதமாத்திரையாகிய வியல்பாற் பிறத்தலா னும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கை யுணர் வான் முற்று முணர்தலானுங் கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வட வெழுத்திற்கு முதலாதலுங்கொ ' எழுத் தெல்லாம் ' என்றார். ¶ ஆதி

---

† எடுத்துக்காட் டுவமையாவது உவமானத்தையும் உவமேயத்தையும் வெவ்வேறு வாக்கியமாக நிறுத்தி இஃதுவமானம் இஃதுவமேயம் என்பது தோன்ற இடையில் அதுபோல என்னும் உவம உருபு கொடா மற் கூறுவதாம். இதுபற்றி இலக்கணவிளக்கனூலார் அணியியலில் "அக ர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு' என்புழி இரண்டு பொருள் வேறுவேறு கூறியதன்றி அகரமுதல எழுத்தெல்லாம் அதுபோ ல என்றலும், ஆதிபகவன் முதற்றே உலகு அதுபோல என்றலும் ஒன்று கத் தணியுமாற்றான் உவமையும் பொருளும் நீதியின் நிறுவாமையின் அது வேறுபட வந்த உவமத் தோற்றமாய் இதன்பாற்படும்; என்னே! ' வேறு படவந்த உவமத் தோற்றம், கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்'. என்ப வாகலின். மறுபொருளுவமை எனினும் எடுத்துக்காட் டுவமை எனினும் ஒக்கும்" என்றனர்.

‡ "சிறப்பிலு மினத்திலும்" என்னும் நன்னூற் சூத்திர விருத்தி யுரையில், அகரத்தைப்பற்றிக் கூறுமிடத்து " நாதமாத்திரையா யெல்லா வெழுத்திற்குங் காரணமாய் முன்னிற்றலின் அம்முதல் " என்று கூறப் பட்டிருத்த லீண்டறியத்தக்கதாம்.

§ நாதம் என்பது வெண்கலமணி யடித்தபின் கலிசென் றுண்டாகும் பொதுச் சத்தம்போன்ற தொடர்ச்சியாகிய சத்தம்; அஃது உயிர் முயற்சியா லெழுகின்ற வுதானவாயுவாற் றோன்றுவது.

¶ ஒரு பொருளை யுணர்த்துதற் பொருட்டு நமதே ஆயவென்னும் பண்புருபு தொக்கு நிற்கப் பொதுப்பெயருஞ் சிறப்புப் பெயரும் தம்முட் புணர்ந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம். ஆதிபகவ னென்பது ஆதியாகிய பகவனெனவிரியும்; இதில் ஆதியென்பது சிறப்புப் பெயரும் பகவனென்பது பொதுப்பெயருமாம். அது தமிழ்நூன் முடிபா யின் "நம்பிக் கொற்றன்" என்பதுபோன்று வல்லொற்றுமிகும். 'அக ர முதல' என்பதும் இருபெய ரொட்டுப் பண்புத் தொகையாம்.

பகவனென்னுமிருபெயரொட்டுப்பண்புத்தொகை வடநூன்முடிபு. †உல கென்ற நீண் மெயிர்கண்மேனின்றது. ‡ காணப்பட்ட வுலகத்தாற் காணப்

** ஐசுவரியம், வீரியம், கீர்த்தி, சம்பத்து, ஞானம், வைராக்கிய மென்னு மறுகுணங்கட்கும் பகமென்னும் பெயருண்மையின், பகவனென் பதன்பொருள் அவ்வாறு குணங்களோடு முடையாரென்பதாம்.*

† உலகென்பது உயிர்ப்பொருள் உயிரில் பொருளென்னு மிரண் டையு முணர்த்துவதாக, அவ்விரண்—டற்கும் ஆதிபகவன் முதலெனக் கூறுது உயிர்ப்பொருட்கு மாத்திரம் ஆதிபகவன் முதலெனக் கூறியது யாதுபற்றியெனின், உயிர்ப்பொருள் மெய்யுணர்வால் அவிச்சை முத லிய மாசு நீங்கி முத்தியிபெறுதற் குரியதாஞ் சிறப்புப்பற்றி, உலகென்ற நீண் மெயிர்கண்மே னின்றது' என்று கூறப்பட்டதே யன்றி, உயிரில் பொருட்கு ஆதிபகவன் முதலன்றென்னுங் கருததால் கூறப்பட்ட தன் றும். உயிர்ப்பொருள் உயிரில்பொருளெனனு மிரண்டிற்கு மிறைவன் முதலாமென்பது "தானே திசையொடு தேவரு மாய்நிற்குந், தானே யுடலு யிர் தத்துவ மாய்நிற்குந், தானே கடன்மலை யாகியு மாய்நிற்குந், தானே யுலகிற் றலைவனுமாமே". என்னு திருமந்திரங் கூறுவதாலினிது விளங்கும்.

‡ காணப்பட்ட புகையால் காணப்படாத அதன் காரணமாய தெருப் புண்டென்று அனுமானித்தல் போன்று காணப்பட்ட உலகத்தால் காண ப்படாத அதன்காரணமாய கடவுட்கு (உலகம் தனக்கொரு முதலையுடை யது; தோற்றமுடையதாகலின், யாது தோற்றமுடையது அது தனக் கொரு முதலையுடையது கடம்போல என்று) உண்மை கூறவேண்டி, புகையானது நீயை உடைத்தாயிருக்கின்றது என்பதுபோல 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என ஆதிபகவனே உடைமையாகவும் உலகை உடைய தாகவும் வைத்துக் கூறினர் அங்ஙனம் கூறினுரேனும் உலகத்தை உடை மையாகவும் ஆதிபகவனே உடையவனுகவும் கொள்ளவேண்டு மென்பது தோன்ற, 'உலகிற்குமுத லாதிபகவனென்பது கருத்தாகக் கொள்க'என்று கூறப்பட்டது. காணப்பட்ட வுலகென்பது உயிர்ப்பொருளுக்காமிடத்து உடம்போடு (கூடி) காணப்பட்டிவரு முயிர்ப்பொருளென்றும், உயிரில் பொருளுக்காமிடத்துப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும ஸ்தூல பூதமைந்தனுள் பிருதிவி அப்பு தேயுவடிவ வுயிரில் பொருளென் றுங்கொள்க. "நிலநீர் நீவளி விசும்போ டைந்துங், கலந்த மயக்க முலக மா தலின்" என்பது தொல்காப்பியம். இதுபற்றி ஆசிரியர் நச்சினர்க்கினியார் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் மொழிமரபு 'மெய்யி னியக்க மகரமொடு வெணும்' என்னும் சூத்திரவுரையில் "இறைவ னியங்கு நிலைக்கண்ணு நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் றன்மையாய் நிற்கு மொன்றெல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல அகரம் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்தவற்றின் றன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க் கெல்லா மொப்ப முடிந்தது. 'அகரமுதல' என்னும் குறளான் அகர மாகிய முதலெயுடைய வெழுத்துக்க ளெல்லாம் அதுபோல இறைவனுகிய

பயந்த உடவுட் குண்மை உறவேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என வுலகின்மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முத லாதிபகவ னென்பது கருத்தாக்கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவுள் தண்மை உறப்பட்டது.

தேனி:—(இதனது பதப்பொருள்). எழுத்தெல்லாம் - * எழுத்தக்க ளெல்லாம், அகரமுதல - அகரமாகிய முதலே யுடையன (அதுபோல), உலகு—உலகமானது, ஆதிபகவன் முதற்று—ஆதிபகவனுடைய முதலே யுடையது, (எ-று).

இக்குறள் தலைமைபற்றி வந்த வெதிர்தக்காட் வேமையணி. அகரத் திற்குச் தலைமை (முதன்மை) † விகாரத்தாலன்றி நாதமாத்திரையாகிய வியல்பாற் பிறத்தலாலும், ஆதிபகவனுக்குச் தலைமை செயற்கை யுணர்வா லன்றி யியற்கை யுணர்வால் முற்ற மதிதலாலுங்கொள்க. தமிழெழுத்துக் களுக்கே யல்லாமல் வடவெழுத்துக்களுக்கும் முதலாதலே நோக்கி 'எழுத் தெல்லாம்' என்றார். ஆதிபகவனென்னும் இருபெயரொட்டுப் பண்புத் தொகை வடநூல் முடிபாதலின் வல்லொற்றுமிகாத இயல்பாயிற்று. உல கென்ற திற்கு உயிர்களின்மேல் நின்றது. காணப்பட்ட உலகத்தைக் கொண்டு காணப்படாத கடவுளுக்கு இருப்பைச் சொல்லவேண்டுதலின் 'ஆதி பகவன் முதற்றே யுலகு' என்று உலகின்மேல் வைத்துச் சொல்லினர்; அப் படிச் சொல்லினாயினும், உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தா க்கொள்க. 'முதற்றே' என்னும் ஏகாரம் தேற்றப்பொருளது. இச்செய்யு ளால் முதற் கடவுளது இருப்புச் சொல்லப்பட்டது.

(கருத்து). உலகம் கடவுளே முதலாகவுடையது என்பது.

1. As the letter A is the intimate cause of all letters, so God is the intimate cause of the world.

உ. கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

முதலே யுடைத் தலகமென வள்ளுவனார் உவமைகூறிய வாற்றாலும், கண் ணன் 'எழுத்தக்களில் அகரமாகின்றேன் யான்' எனக்கூறிய வாற்றாலும், பிறநூல்களாலும் உணர்க". என்றார்.

* ஈண்டெழுத் தென்றது பதை, பைசாசி, மத்திமை, வைகரி யென்னு நால்வகை வாக்கினுள், அகர் தொழுவனவாகிய பதைமுதல் மூன் றனையு மொழித்தெழுத்து புறத்திசைப்பதாகிய வைகரி வாக்கினை.

† விகாரத்தாலன்றி என்பதற்கு அண்பல் முதலன விளிம்புதல் முதலிய தொழில்களால் பிறப்பதாகாது என்றும், இயல்பாற்பிறத்த லென்பதற்கு அங்ஙாக்கூற முயற்சியாற் பிறத்தலென்றும், செயற்கை யுணர்வென்பத ற்கு நூலாராய்ச்சி முதலியவற்றாலாய வறிவு என்றும், இயற்கையுணர் வென்பதற்கு இயல்பாகவேயுள்ள (ஜன்மஸித்தியான) வறிவு என்றும் கொள்க.

பரி.—(இ - ன்) எல்லா நூல்களையுங் கற்றவர்க் கக்கல்வியறிவா யை பயன் யாது, ‡மெய்யுணர்வினை யுடையாளது நல்ல தாள்களைத் தொழாராயின், (எ - று).

*எவனென்னும் வினப்பெயர் என்னென்றுய் ஈண்டின்மை குறித்து நின்றது. கொல்லென்ப தசைசில. பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் 'கற்றுள்' என்றார் * ஆகம வறிவிற்குப்பயன் அவன்றாளைத் தொழுது பிறவி யறுத்தலென்பது இதனுற் கூறப்பட்டது.*

தெளி:—(இ - ன்). *கற்றதனால் - (எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு அக்)கல்வி யறிவினால், ஆய - உண்டாகிய, பயன் - பிரயோசனம், என் - யாது, வாலறிவன் - மெய்யறிவினை யுடையவனது, நற்றாள்-நல்லவடிகளை, தொழாஅ ரெனின் - வணங்காராயின், (எ - று).*

எவனென்னும் வினப்பெயர் என்னென்று யிங்கு இல்லை யென்னும் பொருளைக்குறித்து நின்றது. கொல்-அசைசில, பிறவிப்பிணியையொழித் தற்கு மருந்தாதலின் 'நற்றாள்' என்றார். தூலறிவிற்குப்பயன் அவனடிகளை வணங்கிப் பிறவியை யொழித்த லென்பது இதனுற் சொல்லப்பட்டது.

(க-து). மெய்பறிவுடைய கடவுளடியை வணங்காதவரதுகல்வி யறிவு பயனுடையதன்றும் என்பது.

2. What benefit have those derived from learning, who worship not the good feet of Him who is possessed of pure knowledge.

கூ. மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

பரி.—(இ-ன்). மலரின்கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார் எல்லாவுலகிற்கு மேலாய வீட்டுலகின்கண் அழி வின்றி வாழ்வார், (எ - று).

அன்பானினைவாதது உள்ளக்கமலத்தின்கண் அவர் கினைந்த வடி வோடு விரைந்து சேறலின் 'எகினுன்' என இறந்த காலத்தாற் கூறினுர்; என்னே? †"வாராக் காலத்து நிகழுங் காலத்து,மோராங்கு வருஉம் வினைச்

‡ மெய்யுணர்வு - ஐயந்திரி பின்றிய ஞானம்

* "ஆகமை மென்ப மறுமுத லாகிய, வறிவனு புணர்ந்த நிறனறி நூலே" என்பது தண்டியலங்காரம்.

† இது தொல்காப்பியம் சொல்லதிகாரம் வினையியல் நாற்பத்திரண்டாஞ் சூத்திரம்.

இதன்பொருள் " எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் ஒருபடியாகவரும் வினைச்சொற் பொருண்மை யிறந்தகாலத்தாற் சொல்லுதல் விரைவுப்பொ ருளையுடைய." என்பது. [இது சேனவரையருரை].

மெய்ம் மொழி, பிறப்பு வன்றுயர்க்குறிப்பொடு சென்றல், வினைச்சுபொருள் வெண்மலர் மலை', என்ப தொகுத்தலின். இதனைப் உ "பூமேலாள் தான்" என்பதோர் பெயர்த்தாய்ப் பிறிதோர் கடவுட் கேற்றுவாரு முளர். சேர்தல்—இடைவிடாது தியானித்தல்.

தெளி:—(இ-ள்). மலர்மிசை-(அன்பாது மனத் தாமரையாயெ) மல ரினிடத்து, எனைநன்-சென்றவன்து, மாணடி-பெருமை பொருந்திய வடி களை, சேர்ந்தார் - சேர்ந்தவர், நிலமிசை - (எல்லாவுலகங்களுக்கு மேன்மை) முத்தியுலகத்தின்கண், நீடுவாழ்வார் - அழிவில்லாது வாழ்வார், (எ - று).

மலரென்பது மலரையொத்தமனத்திற்காதலின் உவமையாகுபெயர். அன்பால் தியானிக்கின்றவாது மனத்தாமரையிடத்து அவர் சினைந்தவடி வோடு விரைவு செல்லுதலால் எருவாளென எதிர் காலத்தாற் கூறுது "எனினன்" என இறந்தகாலத்தாற்சொல்லினர். இது விரைவுபற்றி வந்த காலவழுவமைதி. மலர்மிசை யேகினனென்பதை வேறு கடவுள்மீ தேற் றிக கூறுவாருமூளர். சேர்தல் - இடைவிடாது தியானித்தல்.

(க-து) கடவுளடிபைத் தியானிப்பவர் முத்தி யடைவர் என்பது.

3. They who meditate the sacred feet of Him who passes swiftly into the flower of the mind, shall flourish long in the highest of worlds.

உ. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

பரி.—(இ-ள்). ஒருபொருளையும் விழைதலும் வேறுத்தலும் இல் லாதவ னடியைச் சேர்ந்தார்க் கெக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா.

‡ பிறவித்துன்பங்களாவன:—தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர் களைப்பற்றி வருவனவும், தெய்வதத்தைப்பற்றி வருவனவும் என மூவகை யான் வருந்தன்பங்கள். அடிசேர்ந்தார்க் கவ்விரண்டு மின்மையின், அவைசாணமாகவரு மூவகைத்துன்பங்களும் இலவாயின.

உ வண்டபுருடனிண்டு அருகன் (சமணமதக்கடவுள்) பெயரைக் கூறமிடத்து "பூமிசைநடந்தோன் போதன்" என்றும், புத்தன் (பௌத்த மதக்கடவுள்) பெயரைக்கூறுமிடத்து " பூமிமேற்நடந்தோன் புத்தன் " என்றும் கூறுதலின், ' பூமேனடந்தான் ' என்பது அருகனையாயினும் புத்த னையாயினும் குறிக்குமென்க.

‡ பிறவித்துன்பங்களை யடைதலார் ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்ப.

தெளி.—(இன்). வேண்டுதல் - (ஒரு பொருளேயும்) விரும்புதலும், வேண்டாமையெதனையும், இனன் - இல்லாதவினையன, அடி-பாதங்களே, சேர்ந்தார்க்கு - சேர்ந்தவர்க்கு, யாண்டும் - எக்காலத்திலும், இடும்பை - பிறவித்துன்பங்கள், இல - உண்டாவனவல்ல, (எ-று.)

பிறவித் துன்பங்களாவன:—தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையால் வருந்துன்பங்களாம். இறைவனது அடிகளைச் சேர்ந்தார்க்கு அவ்விருப்பு வெறுப்பிரண்டு மில்லாமையால் அவ்விருப்பு வெறுப்பு காரணமாக வருகின்ற மூவகைத் துன்பங்களும் இல்லையாயின.

(கு-து). கடவுளடியைச் சேர்ந்தவர்களுக்குப் பிறவித்துன்பங்களிலவாம் என்பது.

4. To those who are united to the feet of Him who is without desire or aversion, evil shall never come.



ரு. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

பரி.—(இ-ள்). மயக்கத்தைப்பற்றி வரும் நல்வினை தீவினையென்னு மிரண்டு வினையு முளவாகா, இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினரிடத்து, (எ-று).

இன்ன தன்மைத்தென ஒருவரானுங் கூறப்படாமையின் † அவிச்சையை 'இருள்' என்றும், நல்வினையும் பிறத்தற் கேதுவாகலான் 'இருவினையுஞ் சேரா' என்றுங் கூறினர். ‡ இறைமைக் குணங்களிலராயினுமையுடையரெனக்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின், அவை முற்றுமுடைய இறைவன் புகழே 'பொருள்சேர்புகழ்' எனப்பட்டது. புரிதல் - எப்பொழுதுஞ் சொல்லுதல்.

தெளி.—(இன்). இருள்சேர்—மயக்கத்தைப்பற்றி வருகிற, இருவினையும்-(நல்வினை தீவினையென்னும்) இரண்டுவினைகளும், சேரா-உண்டாகாவாம். இறைவன்-தலைவனது, பொருள்சேர் - மெய்ம்மைசேர்ந்த, புகழ்-கீர்த்தியை, புரிந்தார் மாட்டு - விரும்பினவரிடத்து, (எ-று).

† அவிச்சையை இருளென்பது "போதமென்பதே விளக்கொவ்வு மவித்தையொய் யிருளாம்" என்ற தாயுமானவர் கூற்றாற்றானு முணரப்படும். அவிச்சையென்பதன் பொருள் விச்சையினும் வேறுபட்டதென்பது; விச்சை - ஞானம்.

‡ இறைமைக் குணங்கள்—வியாபகத்துவம், சர்வஜ்ஞத்துவம், சர்வசக்திமத்துவம், நிட்களத்துவம், நியாமகத்துவம், சர்வபிரேரகத்துவம், அத்விதீயத்துவம், சர்வசுதந்தரத்துவம், சர்வேசுவரத்துவ முதலியனவாம்.

இத்தன்மையதான சொருபமுடைய தென்று (கல்வியறிவால் மேம் பாடடைந்த டிக்களுள்) ஒருவராலும் குறிப்பிட்டுச் சொல்லப்படாமையால் அஞ்ஞானத்தை 'இருள்' என்றும், நல்வினையும் பிறத்தற்குக்காரணமாயிருத்தலால் 'இருவினையுஞ்சோர' என்றும் சொல்லினர். தலைமைக்குணங்களில்லாதவரை அக்குணங்கள் உடையவரென்று நினைத்து அறிவிலார் சொல்லுகின்ற கீர்த்திகள் பொருள்சேராவாகையின் அவை முழுதுமுடைய தலைவனது கீர்த்தியே 'பொருள்சேர் புகழ்' எனப்பட்டது. புரிதல் - எப்பொழுதும் வாயால் துதித்தல்.

(க-து). கடவுளைத் துதிப்பவரிடத்துப் பிறவிக்கேதுவாகிய வினைகளிரண்டு மடையாவாம் என்பது.

5. The two-fold deeds (virtue & vice) that spring from darkness shall not adhere to those who delight in the true praise of God.

சு· † பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

பத.—(இ-ள்). மெய் வாய கண் மூக்குச் செவி யென்னும் ஐம் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது ‡ மெய் யான வொழுக்க நெறியிற்கண் வழுவாது நின்றார் பிறப்பின்றி யேக்கா லத்து மோரு தன்மையராய் வாழ்வார், (எ-று).

புலன்கள் ஐந்தாலான் அவற்றின்கட் செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று. ஒழுக்கநெறி ஐந்தவித்தாலும் சொல்லப்பட்டமையின் ஆண்டை ஆறனுருபு * செய்யுட்டிழைமக்கண் வந்தது; "சிலரது பாட்டு" என்பது

† பொறிவாயி லைந்தவித்தா னென்பது இருஷீகேச னென்னும் வடமொழிப்பெயரின் மொழிபெயர்ப்பாம். இதன் பொருள் இந்திரியங்கட் கீச (தலைவ)னாயிருப்பவனென்பது. இது விஷ்ணுவின் திருநாமங்களு ளொன்று.

‡ மெய்யான வொழுக்க நெறியைப் போதிப்பது வேதமாகலின் அதன்நெறி பொய்தீ ரொழுக்கநெறி' என்று கூறப்பட்டது. இது 'வேதமுமற் றெனதீனுக்குச் சேட மாகா, தெத்தலைய வுயிர்களுக்கும் தாய்போல வுண்மையே யெடுத்தியம்பும்' என்றும், "ஆதலான் மறையிற் சொலப்பட்ட வருத்தமே புண்மையானது" என்றும் சூதசங்கிதை கூறுவதால் நன்கு விளங்கும்.

* செய்யுட்டிழைமை ஒலிவடிவால் தந்திழைமையும் வரிவடிவால் பிறிதின் டிழைமையுமாம்; இது பொருட்பிறிதின்டிழைமையி லடக்கும்.

[illegible] மனத்தில் (தொன்று) துன்பங்களே, மற்றும் நீங்குதல் அரிது - உண்டாகாது, (எ-து).

இங்கு அரிதென்றதற்கு பருதியைய அருமை இல்லையென்னும் பொருளில் வந்தது. உலகமயில்லாதவனது பாதங்களைச் சேராதவர் பிற விக்துக்காரணமாகிய காமவெகுளிமயக்கங்களே நீக்கமாட்டாமையின், பிறக்கிறந்த அச்சம வெகுளி மயக்கங்களால் வருகிற துன்பங்களும் அழுத்தல் சென்பதாம்.

(உ-து). உடனடியைச் சேர்ந்தவர்களுக்கு மனக்கவலை இல்லை என்பது.

7. Anxiety of mind cannot be removed, except from those who are united to the feet of Him who is without likeness.

அ அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

பரி.—(இ-ள்). அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணை யைச் சேர்ந்தார்க்கல்லது அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது, (எ-து).

அறம் பொருளின்பமென உடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப்பிரித்தமையான், வீடும் பொருளும் இன்பமும் 'பிற' எனப்பட்டன. † பலவேற வகைப்பட்ட அறங்களெல்லாவற்றையுங் தனக்கு வடிவாக உடையனாகலின் 'அறவாழியந்தணன்' என்றார். 'அற வாழி' என்பதனைத் தருமசக்கர மாகவும் அதனையுடைய அந்தணனென் றுரைப்பாரு முளர். அப்புணையைச் சேராதார் கரைகாணு தலற்றாலே அழுந்துவராகலின் 'நீந்தலரிது' என்றார். ‡ இஃதேகதேச வுருவகம்.

தெளி.—(இ-ன்). அறவாழியந்தணன்-தருமக்கடலாகிய கடவுளது, தாள் - அடியாகிய (மாக்கலத்தை), சேர்ந்தார்க்கல்லால் - சேர்ந்தவர்க் கல்லாமல், பிறவாழி - (அதனின்) வேறுகியகடல்களை, நீந்தல் - கடத்தல், அரிது - கூடாது, (எ-று).

அறம்பொருளின்பமென வுடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்புபிரித்ததனால் மற்றைப்பொருளு மின்பமும் 'பிற' எனப்பட்டன.

† "அறமே யெனைக் கொருவடிவ மாகும்" என்பது காஞ்சிப்புராணம்.

‡ ஏகதேசவுருவகமாவது ஒருபகுதியை யுருவகஞ்செய்து மற்றொரு பகுதியை யுருவகஞ்செய்யாமல் விடுவது, உருவகமாவது உவமையையும் பொருளையும் வேற்றுமையொழிவித் தொன்றென்னும் உன்னுறை தோன்றவைப்பது. பிறவென்னும் பொதுவின்பங்களை ஆழி (கடல்) எனவுருவகப்படுத்தித் தாள் (அடியை) ப்புணையென் றுருவகப்படுத்தாமை யின் ஏகதேச வுருவகமாயிற்று.

போல. இவை நான்கு பாட்டாலும் இன்றவனே நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறி நிற்றலுஞ்செய்தார் வீடுபெறுவரென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). பொறிவாயில் - (மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்) பொறிகளே வழிகளாகவுடைய, ஐந்து - ஐந்தாசைகளையும், அவித்தான் - ஒழித்தவனது, பொய்தீர் - மெய்யான, ஒழுக்கநெறி-ஒழுக்கவழியில், நின்றார் - (வழுவாது) நின்றவர், நீடுவாழ்வார்-பிறப்பில்லாமல் எக்காலத்திலும் ஒரு தன்மையராய் வாழ்வார், (எ-று).

சுவை, ஒளி, ஊறு, ஓசை,நாற்றம் என விஷயங்கள் ஐந்தாகலின் அவற்றிற் செல்லுகிற ஆசையும் ஐந்தாயிற்று. ஐந்தவித்தானது ஒழுக்கவழி அவனுற்சொல்லப்பட்ட வேதமார்க்கம். ஐந்தவித்தான் பொய்தீரொழுக்க நெறி என்புழித் தொக்குநின்ற ஆறனுருபு செய்புட்டிழமைப்பொருளது. அது விரியுமிடத்து ஐந்தவித்ததானது பொய்தீரொழுக்கநெறி எனவிரியும். இவை நான்கு பாட்டாலும் கடவுளை நினைத்தலும் வாழ்த்துதலும், அவன் வழியில் நிற்றலுமுடையார் முத்திபெறுவரென்பது சொல்லப்பட்டது.

(க-து.) கடவுள் கூறிய நூல வழியே யொழுகுபவர் பிறப்பகன்றினிதிருப்பர் என்பது.

6. Those shall long prosper who abide in the faultless way of Him who has cut off the five desires of the senses.

எ. * தனக்குவமை யில்லாதான் ரள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

பரி.—(இ-ள்). ஒருவாற்றலுந் தனக்கு நிகரில்லாதவனது தாளைச் சேர்ந்தார்க் கல்லது மனத்தின்கணிகழ்ந் துன்பங்களை நீக்குதல் லுயிராகாது, (எ-று).

† "உறற்பால நீண்டாவிடுத லரிது" என்றுற்போல ஈண்டருமை இன்மைமேனின்றது. தாள்சேராதார் பிறவிக்கேதுவாகிய காமவெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின் பிறந்திறந் தவற்றுன் வருந்துன்பங்களுள் அழுந்துவ ரென்பதாம்.

தெளி.—(இ-ள்.) தனக்கு உவமையில்லாதான் - (ஒருவகையினுமும்) தனக்கு ஒப்பில்லாதவனது, தாள் - பாதங்களை, சேர்ந்தார்க்கல்லால்-சேர்ந்

* 'தனக்குவமையில்லாதான்' என்று கூறப்பட்டதாயினும் தனக்கு மிக்காருமில்லாணென்றுங் கொள்க. "ஈடு மெடுப்புமி லீசன்" என்பது திருவாய்மொழி.

† இது நாலடியார் பழவினை 9-வது செய்யுளின்க ணுள்ளது. இதன் பொருள் (ஊழால்) வரத்தக்கனவை (ஒருவரை) சேராமற்போவது இல்லை யென்பது.

பலவேறு வகைப்பட்ட அறங்களெல்லாவற்றையும், தனக்கு உடம்பாக உடையவனுதலின் 'அறவாழியந்தணன்' என்றார். அறவாழி என்பதற்குத் தருமசக்கரமெனப் பொருள் கூறுவாருமுளர். அம் மாசக்கரத்தைச் சோதவர் சைகாலுது பொருளின்பமென்னுமக்கடலுள்ளே அழுந்துவாகலின் 'கீழ்ந்து வரிது' என்றார். இஃது ஏகதேச உருவகவணி.

(க-து). கடவுளடியைச் சேராதவர் பொருளும் இன்பமுமாகிய கடல்களி னழுலுவர் என்பது.

8. None can swim the sea of vice, but those who are united to the (ship of) feet of that gracious Being who is himself a sea of virtue.

கூ. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

பரி.—(இ-ள்). தத்தமக்கே உற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகளைபோலப் பயன்படுதலுடையவல்ல, எண்வகைப்பட்ட குணங்களை யுடையானது தாளை வணங்காத் தலைகள், (எ-று).

† எண்குணங்களாவன:—தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, முடிவி லாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்திற் கூறப்பட்டது. ‡ அணிமாவை

† எண் குணங்களின அர்த்த விசேடங்களைச வெஞானவள்ளலார் பதி சங்கையிற் காண்க.

‡ 'அணிமாவை முதலாக வுடையன' எண்வகைப்படும். அவை அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவமென்பன. (1) தேகம் பரமாணுபோன்ற மிகசிறிய வருவினை யுடையதாதல் அணிமாவெனவும், (2) தேகம் ஆகாயம்போன்ற மிகப் பெரிய வருவினை யுடையதாதல் மகிமாவெனவும், (3)தேகம் மலைபோன்ற மிகக்கனத்திருத்தல் கரிமாவெனவும், (4) தேகம் தருப்புபோன்ற னமின்றி மிகலொய்தாயிருத்தல் லகிமாவெனவும், (5)விரும்பியதை விரும்பியவா றடைதல் பிராப்தியெனவும், (6) பரகாயப் பிரவேசஞ்செய்தல் ஆகாய கமனம்புரிதல் இச்சித்த சர்வபோகங்களையு மிருந்தவிடத்திற் பெறுதல் ரூரியவொளியால் பொருள்களைக் காணுமாறு போன்ற தனதுடலெ லியால் பொருள்களைக்காண்டல் திரிகாலவுணர்ச்சி முதலியன பிராகாமிய மெனவும், (7) எத்தகையோர்க்கு மேம்பட்டிருத்தல் ஈசத்துவமெனவும், (8) சராசரப்பொருள்க ளிவாவுத்தையுந் தன்வசமாக்கல் வசித்துவமென்றிக. இவற்றின் விரிவைத் திருவிளையாடற் புராணம் அட்டமாசித்தி யுபதேசித்த படலத்திற் காண்க.

முதலானவுடைய வென்றும், †கடையிலா வறிவை முதலானவுடைய வென்றும் உரைப்பாரு முளர். காணுத கண்முதலியனபோல வணங்காத தலைகள் பயனில வெனத் தலைமேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும், ¶ இறைப்பற்றி வாழ்த்தாத நாக்களும் அல்லாதே பயனில வென்பதனாலே கொள்க. இனை மூன்றுபாட்டானும் அவனே ‡ நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்யாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

தேவி.—(இ - ள்). கோளில்-(தத்தமக்கேற்ற விஷயங்களைக்) கொள்ளுதலில்லாத, பொறியின்—இந்திரியங்களைப்போல, எண்குணத்தான்-எண்வகைப்பட்ட குணங்களையுடைய இறைவனது, தாளை-பாதங்களை, வணங்காத்தலை - தொழாத தலைகள், குணமிலவே - பயன்படாத லுடையனவல்ல வாம், (எ - று).

எண் குணங்களாவன:—சுவதந்திரத்துவம், விசுத்ததேகம், நிராமயான்மா, சர்வஜ்ஞத்துவம, அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, திருப்தி என்பனவாம். இக்கணம் சைவாகமத்திற் சொல்லப்பட்டது. எண்குண மென்பதற்கு அணிமாமுதலிய வெண்குணமென்றும் கடையிலாவறிவுமுதலிய வெண்குணமென்றும் பொருள் கூறுவாருமுளர். காணுத கண் முதலானவைபோல வணங்காத தலைகள் பயனில வெனத் தலைமேல் வைத்துச் சொல்லினார்; அவனருள் சொல்லினாரேனும் இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அப்படியே பயனிலவா மென்பதங்கொள்க.

இவைமூன்றுபாட்டானும் அவனே நினைத்தலும் வாழ்த்தலும், வணங்கலும் செய்யாவிடத்துண்டாகின்ற குற்றஞ் சொல்லப்பட்டது.

(க-து). கடவுளது அடியை வணங்காத தலையும் வாழ்த்தாத நாக்கும் பயன்படாத வுடையன வாகாவாம் என்பது.

9. The head that worships not the feet of Him who is possessed of eight - fold attributes, is as profitless as a sense without the power of sensation.

---

† 'கடையிலாவறிவை முதலானவுடையன' என்னுகைப்பாடம். அவை கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், கடையிலாவின்பம், காமமின்மை, சோத்திரமின்மை, ஆயுவின்மை, அழிவாவியல்பு என்பனவாம். இவ்வாறு சமணர்கள் கூறுவர். "கடையிலா வறிவொடு" என்னுஞ் சித்தாமணிச் செய்யுளிற் கறியத்தக்கதாம்.

¶ வணங்காததலைகள் வாழ்த்தாத நாக்களுக்கு உபலட்சணமாய் நின்றன. உபலட்சணமாவது ஒரு மொழி ஒழிந்தவின்ற தன்னினங்களைத் தொன்றுதற்குரித்தாய் வருவது. இது விடாத வாருபெயரின்பாற் படும்.

‡ நினைத்தல் மனத்தின்வினையும், வாழ்த்தல் வாக்கின்வினையும், வணங்கல் காயத்தின் வினையுமாமென்க.

கஉ. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
நிறைவ னடிசேரா தார்.

பரி.—(இ-ள்). இறைவ னடியென்னும் புணையைச் சேர்ந்தார்* பிறவியாகிய பெரியகடலை நீந்துவர், அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனு ழைத்துவர், (எ-று).

* காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் 'பிறவிப் பெருங்கடல்' என்றார். சேர்ந்தா ரென்பது † சொல்லெச்சம். ‡ உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியதனாலும் ¶ அவ்வாறன்றி மாறி நினைப்பார்க் கஃதருமையும் ஆகிய இரண்டும் இதனால் நியமிக்கப்பட்டன.

தெளி—(இ-ன்). இறைவன்-தலைவனது, அடி - பாதமாகிய (மரக்கலத்தை) (சேர்ந்தார்), பிறவிப்பெருங்கடல்-பிறவியாகிய பெரிய கடலை, நீந்துவர்-கடப்பார், சேராதார் - (அம்மரக்கலத்தைச்) சேராதவர், நீந்தார் - கடக்கமாட்டாதவராகி யக்கடலு ளழுந்தா நிற்பர், (எ - று).

---

* வித்தினுல் மூலையு (மரமு) ம் மூலையினுல் வித்தும் தொன்று தொட்டுத் தோன்றி வருவது போல, முற்சன்மத்தின கருமத்தா லிச்சன்மமும் இச்சன்மத்தின் கருமத்தா லினிவருஞ் சன்மமுமாகத் தொன்று தொட்டுக் காரண காரியத் தொடர்சி யுடையதாய்ச் சன்மம்முடிவில்லாது வருதலின் அது 'பிறவிப்பெருங்கடல்'என்று கூறப்பட்டது. பிறவியைக் கடலாக வுருவகப்படுத்திக்கூறுவதேயன்றி மாமாக வுருவகப்படுத்திக்கூறுவதுமுண்டு. பிறவிக்கடலின வர்ணனையை சிவஞான போதத்திலும் பிறவிமரத்தின் வர்ணனையைப் பகவற்கீதை பதினைந்தாவ தத்தியாயத்திலுங் காண்க.

† சொல்லெசமாவது செய்யுளி லொருசொற்கு முன்னுவது பின்னுவது சொல்மாத்திரம் குறைந்து நிற்பது. "சொல்லென் னெச்ச முன்னும் பின்னுஞ், சொல்லள வல்ல தெஞ்சுத லின்றே" என்பது தொல்காப்பியம்.

‡ உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைத்தல் சவிகற்ப சமாதி, அல்லது சம்பிரஞ்ஞாத சமாதியெனப்படும். இதற்கிலக்கணம் " விஜாதீயப் பிரத்தியய நிருத்திகளின் அந்தராயமி (மறைப்பி) ன்றிய ஸதல தாஹபோன்ற இடைபீடில்லாத சஜாதீயப் பிரஹ்மாகார விருத்திப்பிரவாகம்" என்ற யோகநூல் கூறுகின்றது.

¶ அவ்வாறன்றி மாறிநினைத்தல்—அவ்வாறு சமாதிபுரியாது தான் (ஆத்மா) அல்லாத வுடம்பை யானென்றும் தன்னுடையில்லாத பொருளை யெனதென்றுங் கருதுதல்.

இப்பிறப்பிற்கு முற்பிறப்புக் காரண மாகவும் இப்பிறப்பு இனிவரும் பிறப்பிற்குக் காரணமாகவு மிருத்தலின் இப்பிறப்பு முற்பிறப்பை நோக்கக் காரியமும் இனிவரும் பிறப்பை நோக்கக் காரணமுமாம். இவ்வாறு தொன்றுதொட்டுக் காரணகாரியத் தொடர்ச்சி யுடையதாய்ப் பிறவி யெல்லையில்லாத வருதலால் 'பிறவிப் பெருங்கடல்' என்றார். சேர்ந்தார் என்றுஞ் சொல் குறைந்து நின்றமையின் அது வருவித் துரைக்கப்பட்டது. இவ்வாறு வருவது சொல்லெச்சமெனப்படும். உலகியல்பை நினையாமல் கடவுளடியினையே நினைப்பவர்க்குப் பிறவி நீங்குதலும் அவ்வினஞ்செய்வதை வேறுபட்டு (உலகியல்பாகிய பொருளின்பங்களே) நினைப்பவர்க்கு அப்பிறவி நீங்காமையுமாகிய விரண்டும் இக்குறளால் விளக்கப்பட்டன.

(உ-து). கடவுளது அடியைச் சேர்ந்தவர் பிறவிக்கடலைக் கடந்தலும், சேராதவர் அதனைக் கடக்க மாட்டாமையு முடையராவர் என்பது.

10. None can swim the wide extended sea of births, but those who are united to the (ship of) feet of God.

இரண்டாம் அதிகாரம்.

வான்சிறப்பு—The Excellence of Rain.

பரி.—அஃதாவது † அக்கடவுள் தானேயான் உலகமும் அதற் குரியவாகிய அறம் பொரு ளின்பங்களும் நடத்தற் ‡கேதுவாகிய மழையினது சிறப்புக்கூறுதல். அதிகார முறைமையும் இதனுளே விளங்கும்.

தெளி.—அஃதாவது கடவுளது வலியால் உலகமும் அதற்கு உரிமையத் தருவதாகிய அறம் பொரு ளின்பங்களும் நடத்தற்குத் தானேகாரணமாகிய மழையினது சிறப்பைச் சொல்லுதலாம். கடவுள் வாழ்த்தின் பின் வான்சிறப் பென்னும் அதிகாரம் வைத்த முறைமையும் இதனுளே விளங்கும்.

கு. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
தானமிழ்த மென்றுணரற் பாற்று.

---

† ஒவ்வொரு நெட்டியி னாரம்பத்திலும் கடவுளிடத்து ஜீவர்களின் தாலசன்ம பரிபாகத்திற் கியைய இவ்வனுக்கிரகம் மழையுண்டாகவு, இவ்வனுக்கிரகம் குளிருண்டாகவு, இவ்வனுக்கிரகம் வெயிலுண்டாகவு மென்றற் றொடக்கத்தனவாகச் சங்கற்ப முண்டாகின்றதென்பது சான்றோர் தீர்ச்சியம்.

‡ "கருவி மாமழை" என்பது வைடூரியம், சித்தாமணி.

பரி.—(இ-ள்). மழை யிடையறாது நிற்ப உலகம் நிலைபேற்று வருதலான் அம்மழை தான் உலகத்திற் † அமிழ்தமென் றுணரும் பான்மையை யுடைத்து. (எ - று).

‡ நிற்ப வென்பது நின்றெனத் திரிந்து நின்றது. உலகமென்றது ஈண்டுயிர்களே. அவை நிலைபெற்று வருதலாவது பிறப்பிடையருமையின் எஞ்ஞான்று முடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்த முண்டார் சாவாது நிலைபெறுதலின், உலகத்தை நிலைபெறுத்தின்றவாலே 'அமிழ்தமென் றுணரற்பாற்று' என்றார்.

தெளி.—(இ-ள்). வான—மழையானது. நின்று - (நடவே நீக்காது) நிற்க, உலகம் - உயிர்கள், வழங்கிவருதலால் - நிலைபெற்று வருதலினால், தான் - (அமமழை) தான், அமிழ்தமென்று - (உயிர்களுக்கு) அமிழ்தமென்று, உணரற்பாற்று - அறியுந்தன்மையை யுடையதாம். (எ-று).

நிற்பவென்பது நின்றெனத் திரிந்தது உலகமென்பதிலு முயிர்கள் மேல் நின்றது. அவ்வுயிர்கள் நிலைபெற்று வருதலாவது பிறப்பு நடவே நீங் காமையால எந்நாளும உடம்போடு காணப்பட்டுவருதல். அமிழ்தமுண்டார் சாவாது நிலைபெறுதலின் உயிர்களே நிலைபெறச செய்யும் மழையை 'அமிழ்தமென் றுணரற்பாற்று' என்றார்.

(க-து). உயிர்கள் நிலைபெற்று வருதற்கேது மழையாம் என்பது.

1. As by the continuance of rain the world subsists, it is worthy to be called ambrosia.

உ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

பரி.—(இ-ள்). உண்பார்க்கு நல்ல வுணவுகளே யுணவாக்கி அவற்றை யுண்கின்றார்க்குந் தானுமுணவாயி நிற்பதூஉ மழை, (எ-று).

தானு முணவாதலாவது தண்ணீரா யுண்ணப்படுதல். நெற்புடைய வுயர்திணைமேல் வைத்துக் கூறினமையின், அஃறிணைக்கு மிஃதொக்கும். இவ்வா றுயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் கீக்குதலின், அவை வழங்கிவருத லுடையவாயின என்பதாம்

† அமிழ்தம் - மரணத்தை யொழிப்பதென்னும் பொருளது. இஃது அம்ருதமென்னும் வடமொழியின் திரிபு.

‡ "நின்றென்னும்" செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம் வழங்கி வருதலாலென்னும் வேற வினைமுதல்வினையைக்கொண்டு முடிதற்கு விதியில்லாமையின் "நிற்ப வென்பது நின்றெனத்திரிந்து நின்றது" என்றார்.

தெளி:—(இ-ன்): துப்பார்க்கு - உண்பவருக்கு, துப்பாய - கண்மை யாகிய, துப்பாகி - உணவாகியுண்டாகி, துப்பார்க்கு-(அவ்வுணவாகிய) உண்கின்றவருக்கு, துப்பாயதூஉம் - (தானும்) உணவாய்நிற்பதும், மழை-மழையாம், (எ-று).

தானும் (மழையும்) உணவாதலாவது தண்ணீரா யுண்ணப்படுதல். (துப்பார்க்கென்று) தெப்புடைய உயிர்களின் மேல் வைத்துச் சொல்லுதலின், (மற்றையுயிர்களாய) அஃறிணைக்கும் இஃது ஒக்கும். (உணவாக்கல் உணவாதலென்ற) இப்படி உயிர்களது பசியையும் தாகத்தையும் நீக்குதலால், அவ்வுயிர்கள் வழக்கிவருதல் உடையனவாயின வென்பதாம்.

(கு-து). உண்பவருக் குணவுகளை யுண்டாக்கித் தானும் உணவாக நிற்பதும் மழையாம் என்பது.

2. Rain produces good food, and is itself food for those who eat.

* விண் † ணின்று போய்ப்பின் ‡ விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

பரி:—(இ-ள்). மழை வேண்டுங்காலத்துப் பெய்யாது போய்த்து மாயின் கடலாற் சூழப்பட்ட அகன்ற வுலகத்தின்கண்நிலைபெற் றுயிர் களை வருத்தும் பசி, (எ-று).

கடலுடைத் தாயினு மதனுற் பயனில்லை யென்பார் ‘விரிநீர் வியலுலகத்தின்’ என்றார். உணவினமையின் பசியை யுயிர்க ளிறக்கும் என்பதாம்.

தெளி:—(இ-ள்). விண்-மழையானது, இன்று - (பெய்யவேண்டுங் காலத்தில்) பெய்யாமல், போய்ப்பின்-போய்க்குமாயின், விரிநீர்-கடலாற் சூழப்பட்ட, வியனுலகத்தின் - பாரத வுலகத்தினுள், பசி - பசியானது, நின்றுநிலைபெற்று, உடற்றும் - (உயிர்களை) வருத்தும், (எ-று).

கடலுடைத்தாயினும் அதனாலுயிர்களுக்குப் பயனில்லை யென்பார் ‘விரிநீர் வியனுலகத்தின்’ என்றார். உணவில்லாமையினால் பசியால் உயிர்கள் இறக்கு மென்பதாம்.

(கு-து). மழைபெய்தல் தவறுமாயின் பசியால் உயிர்கள் வருந்தி யிறக்கும் என்பது.

---

* விண் - ஆகாயம்; அஃது இடவாகுபெயராய் மழைக்காயிற்று.

† இல்லாமலென்னும் பொருளையுடைய இன்றி யென்னுஞ்சொல் தன்மை இன்று எனத்திரிந்து நின்றது. நின்றெனவும் பிரிக்கலாம்.

‡ கடலிலும் விரிந்தநீர் மற்றொன்றில்லாமையின், அது ‘விரிநீர்’ என்று சொல்லப்பட்டது.

3. When clouds withhold rain deceiving (our hopes), hunger will long give distress to the sea-girt spacious world.

ஏரி னுழாஅ ருழவர் ¶ புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

பரி:—(இ-ள்). உழவர் ஏரா னுழுதலேசீ செய்யார், மழையென்னும் வருவாய் தன்பயன் குன்றின், (எ-று).

குன்றியக்காலெனபது குறைதலின்றது. உணவின்மைக்குக் காரணங் கூறியவாறு.

தேளி.—(இ-ள்). உழவர் - உழுதொழில் செய்வோர், ஏரின் - ஏரினால், உழாஅர்-உழுதலேசசெய்யார், புயலென்னும் வாரி - மழையென்னும் வருவாய், வளங்குன்றிக்கால்-(செய்தலாகிய தன்) பயன்குறையின், (எ-று).

குன்றியக்காலென்பது செயலுள் விகாரத்தால் குன்றிக்கா லெனச் குறைந்தின்றது. உணவில்லாமைக்குக் காரணஞ் சொல்லியபடியாம்.

"மல்லெடு வளமே வாரி பருகியும் வருவா யின்பேர்" என்பது சிக்கும்.

(க-து). மழை வளங்குறைந்தால் பயிர்செய் மாக்கள் ஏருழா ரென்பது.

4. If the flow of wealth-imparting rain diminish, the fruitful toils of the plough must cease.

டு. கெடுப்பதூஉங் கேட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

பரி:—(இ-ள்). பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம் அவ்வாறு கேடடார்க்குத் துணையாயப பெயது முன்கெடுத்தார்போல எடுபபதூஉம் இவை யெல்லாம் வல்லது மழை, (எ-று).

* மற்று வினைமாற்றின்கண் வருதது. † ஆங் கென்பது மறுதலைத்

¶ புயல்—மேகம்; அது கர்த்தாவாகுபெயராய் மழைக்காயிற்று.

* பெய்யாது நின்று கெடுப்பதென்னும் வினையைப் பெய்துகெடுக்காது எனமாற்றியதனால் மற்று வினைமாற்றின்கண்வந்தது.

மற்று என்னும் இடைச்சொல் முன் சொல்லுகின்ற சொழிய இனி வேருன்று என்னும் பொருளைக் குறிக்குமிடத்து வினைமாற்றெனப் படுகின்றது.

† எடுப்பது என்னும் தொழிலுக்கு விரோதமாகிய கெடுப்பது என்னும் மறுதலைத்தொழிலை யுவமையாக ஆங்கு என்பது (முன் கெடுத்தாற் போல எனச்) குறிப்பித்தல்பற்றி 'ஆங்கென்பது மறுதலைத் தொழிலுன் மத்தின்கண் வந்தது என்று கூறப்பட்டது.

தொழி லமைத்தின்கண் † வந்தது. கெடுக் குத்தரும் எய்துதற் குரியார் மக்களாதலின் 'கெட்டார்க்கு' என்றார். 'எல்லாம்' என்றது அம் மக்கள் முயற்சி வேறபாடெனாற் கெடுத்தல் எடுத்தல்டாம் பலவாதல் நோக்கி. வல்ல தென்பது ‡ அவாய்நிலையான் வந்தது. மழையின தாற்றல் கூறியவாறு.

தெளி:—(இ-ன்). கெடுப்பதூஉம்-(பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது கின்ற) கெடுப்பதற், கெட்டார்க்கு - (அவ்வாறு) கெட்டவர்க்கு, சார்வாய் - தஞ்சமாய்ப் (பெய்து), மற்றுங்கே - மீண்டெடுத்தாற்போல, எடுப்பதூஉம் - (அவரை) எடுப்பதும், எல்லாம் - (இவை) எல்லாம் (வல்லது), மழை - மழையாம், (எ-று).

மற்று கெடுக்காதென்னும் வினைமாற்றுப்பொருளில் வந்தது. ஆங் கென்பது மற்றதன்தொழிலுவமைப்பொருளில் வந்தது. கெடும் பெருக்கமும் பெறுதற்குரியவர் மக்களாதலால் கெட்டார்க்கு' என்றார். 'எல்லாம்' என்றது அம்மக்களது முயற்சி வேறபாடெனால் கெடுதலெடுத்தல்கள் பலவாதலை நோக்கியாம். வல்லதென்பது அவாய் நிலையால் வந்தது. மழை யினது வல்லமையைச் சொல்லியபடியாம்.

(க-து). மக்களைக் கெடுபடாதுங் காப்பதும் மழையாம் என்பது.

5. Rain by its absence ruins men, and on the other hand helping, restores them to fortune; such is the power of rain.

கூ. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் ரூங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

பரி.—(இ-ள்). மேகத்திற் றுளிவிழிற் காண்பதல்லது வீழாதா யின் அப்பொழுதே பசும்புல்லினது தலையையுங் காண்டலரிது, (எ-று).

விசும்பு—ஆகுபெயர். மற்ற வினைமாற்றின்கண் வந்தது. இழிவு தெப்பும்மை விகாரத்தாற் செக்கது. ஓதி வுயிரும் இல்லை யென்பதாம்.

தெளி.—(இ-ன்). விசும்பின் - மேகத்தினின்றும், துளி - மழைத் துளிகள், வீழினல்லால் - வீழிற்காண்பதல்லாமல், மற்று - வீழாதாயின், ஆங்கே-அப்பொழுதே, பசும்புற்றலை-பசும்புல்லினது தலையையும், காண்பு-காணுதல், அரிது - கூடாது, (எ-று).

விசும்பு—இடவாகுபெயர். மற்று வீழாதாயி னென்னும் வினைமாற் றுப் பொருளில் வந்தது. தலையுமென்னும் இழிவு தெப்பும்மை செய்யுள்

† வந்த வுருமச்சொல் என்றும் பாடமுண்டு.

‡ அவாய்நிலையாவது ஒருபதம் தன்னைமுடிப்பதொருபதம் இல்லாத வழி முடிவு பெறாது நிற்றல். எல்லாமென்பது வல்லதென்பதை யவாவி நின்றது.

விசாரத்தால் தொக்கது. (புல்முதலிய) ஓரறிவுயிரும் இல்லாமற்போமென்பதாம். புத்தேளென்பதற்குப் பனைமரத்தின் கொழுந்தென்று பொருள் கூறுவாருமுளர்.

(க-து) மழை பெய்யாதாயின் ஓரறிவுயிரையுங் காணுதலரிதென்பது.

6. If no drop fall from the cloud, not even a head of green blade of grass will be seen.

எ. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
நானல்கா தாகி விடின்.

பரி:—(இ-ள). அளவில்லாதகடலுந் தன்னியல்பு குறையும், மேகந் தான் அதனைக்குறைத் ததன்கட் பெய்யாது விடுமாயின், (எ-று).

உம்மை - சிறப்பும்மை. தன்னியல்பு குறைதலாவது நீர்வாழுயிர்கள் பிறவாமையும் மணிமுதலாயின படாமையுமாம். ஈண்டுக் குறைத்தலென்றது முகத்தலே; அது ¶ "கடல்குறை படுத்தநீர் கல்குறை படவெறிந்து" என்பதனாலு மறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழைவேண்டுமென்பதாம்.

இவை யேழு பாட்டானும் மழை உலக நடத்தற் கேதுவாதல் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). நெடுங்கடலும் - அளவிடற் கியையாத கடலும், தன்னீர்மைகுன்றும் - தன்னியல்பு குறையும், எழிலிதான் - மேகந்தான், தடிந்து - (அக்கடலைக்) குறைத்து, நல்காதாகிவிடின் - (அக்கடலிடத்தப்) பெய்யாது விடுமாயின், (எ-று).

கடலுமென்ற உம்மை உயர்வுசிறப்பும்மை. தன்னியல்பு குறைதலாவது நீர்வாழும் மீன்முதலிய வுயிர்கள் பிறவாமையும் மணிமுதலானவை உண்டாகாமையுமாம். இங்குக் குறைத்த லென்றது மொள்ளுதலே. மழைக்கு முதலாகிய கடலுக்கும் மழைவேண்டுமென்பதாம்.

இவை எழுபாட்டாலும் மழை உலகம் நடைபெறுதற்குத் துணைக் காரணமாதல் சொல்லப்பட்டது.

---

* மணிமுதலாயின: முத்து, பவளம் முதலியனவாம். "கடலுக்குப் பெருமை முத்தும் பவளமும் படுவது. வைகாசியிலே ஞாயிற்றுச் சோதியின் மழையிலே முத்திற்குக்கரு, ஐப்பசிப் பூசத்து மழையிலே பவளத்திற்குக்கரு; ஆகலின் மழையில்லாத விடத்துக் கடல்பெருமை குறையும்" என்பர் கடலியல்புணர்ந்தார்.

¶ பரிபாடல். இதன்பொருள்(மேகமானது)கடலினின்றும்மொண்ட நீரை மலையினது நிலைமை குறையும்படி(அதன்கண்)பொழிகிறது என்பது.

(க-து). மழை பெய்யாவிட்டால் கடலும் வளங்குறையு மென்பது.

7. Even the wealth of the wide sea will diminish, if the cloud that has drawn (its waters) up give them not back again (in rain).

அ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

பதி.—(இ-ள்). தேவர்கட்கு மிவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழாவோடுகூடிய பூசை நடவாது, மழைபெய்யாதாயின், (எ-று).

† நைமித்திகத்தோடு கூடிய நித்திய மென்றாராகலின் 'செல்லாது' என்றார். உம்மை தெறப்பும்மை. நித்தியத்திற் சூழ்வு நீரச்செய்வது நைமித்திக மாதலின் அதனை முற்கூறினர்.

தெளி.—(இ-ன்).—வானோர்க்கும்-தேவர்களுக்கும், ஈண்டு - இவ்வுலகத்தில், சிறப்பொடு-(மக்களாற் செய்யப்படும்) திருவிழாவுடன் (கூடிய), பூசனை - பூசையானது, செல்லாது - நடவாது, வானம்வறக்குமேல் - மழைபெய்யாதாயின், (எ - று).

(விழாவென்னும்) நைமித்திகத்துடன் கூடிய (பூசையென்னும்) நித்தியமென்ற காதலால் 'செல்லாது' என்றார். நித்தியத்தில் (பூசையில்) சூழ்வு நீரச்செய்வது (விழா வென்னும்) நைமித்திகமாதலின் அதனை (சிறப்பொடு என) முன்பு கூறினர். வானோர்க்கு மென்ற வும்மை உயர்வு சிறப்பும்மை.

(க-து). மழை பெய்யா தொழியின் தேவர்கட்கும் திருவிழாவுடன் கூடிய பூசை நடவாதென்பதாம்.

8. If the heaven dry up, neither yearly festivals, nor daily worship will be offered in this world to (Gods) inhabitants of heaven.

கூ. தானந் தவமிரண்டுந் தங்கா வியலுலகம்
வானம் வழங்கா தெனின்.

† யாதானுமோர் நிமித்தம் பற்றிச் செய்யுங்கன்மம் நைமித்திக கன்ம மெனப்படும். அது நிரகண காலத்திற் செய்யுமொரார்த்தம் சமுத்திர ஸ்நான முதலியனவாம். எப்போதும் செய்யுங் கன்மம் நித்திய கன்மமெனப்படும், அது ஸ்நானம், சந்தியாவந்தனம், தேவபூஜை முதலியனவாம்.

பரி.—(இ-ள்). அகன்ற உலகின்கண் தானமுந் தவமுமாகிய விரண்டறமும் உளவாகா, மழை பெய்யாதாயின், (எ - று).

தானமாவ தறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்குவகையோடுக்கொடுத்தல். தவமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களா னுண்டிசுருக்கல் முதலாயின. பெரும்பான்மைபற்றித்தானம் இல்லறத்தின்மேலும் தவம் துறவறத்தின் மேலும் நின்றன.

தேவி.—(இ-ள்). வியனுலகம் - விரிந்தவுலகத்தில், தானந் தவமிரண்டும்—தானமும் தருமமுமாகிய விரண்டறங்களும், தக்கா-உளவாகாவாம், வானம் - மழை, வழங்காதெனின் - பெய்யாதாயின், (எ-று).

தானமாவது தருமவழியால் வந்தபொருள்களைப் பெரியோர்க்கு மகிழ்ச்சியோடுக்கொடுப்பது. தவமாவது மனம் (கண்முதலிய) பொறிவழியிற் போகாமல் நிற்கும்பொருட்டு விரதங்களால் உணவைச் சுருக்குதல் முதலானவையாம். மிகுதிபற்றித் தானம் இல்லறத்தின் மேலும் தவம் துறவறத்தின் மேலும் நின்றன.

(க-து). மழை பெய்பா தொழியின் தானமும் தவமு முண்டாகா வென்பது.

9. If rain fall not, alms - deeds and penance will not dwell within the spacious world.

கo. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

பரி.—(இ-ள்). எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரை யின்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடையறு தொழுதும் ஒழுக்கும் வானையின்றி யமையாது, (எ - று).

பொருளின்பங்களை உலகியல் என்றார்; அவை இம்மைக்கண்ணவாகலின். இடையருதொழுகுதல் எக்காலத்துமெவ்விடத்து முளதாதல். நீரின்றமையா துலகென்பது எல்லாராலுங் தெளியப் படுதலின் அது போல ஒழுக்கும் வானின் றமையாமை தெளியப்படுமென்பார், 'நீரின் றமையா துலகெனின்' என்றார். † இதனை நீரையின்றியமையா துலகா

† இக் குறளுக்கு நீரின்று - நீரையின்றி, அமையாது-பொருந்தாது, உலகெனின்-உலகியலாயின், யார் யார்க்கும்-எத்திறத்தோர்க்கும், வானின் று-மழையல்லையின்றி, ஒழுக்கமையாது - ஒழுக்கம் நிரம்பாது என்று பொருள் கூறுவாரு முண்டு. ஒழுக்கம்—வருணாசிரம தருமத்திற் கேற்றவாறு கடத்தல்.

யின் எந்திறத்தார்க்கும் மழையின்றி பொருட்கள் நிரம்பாதெனவுரைப் பாருமுளர்.

இவையுன்ற பாட்டாலும் மழை அறம் பொருளின்பங்கள் நடத்தற் கேதுவாதல் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). வார்பார்க்கும்-எல்லாரை மேம்பாட்டினே யுடையோர்க்கும், நீர்-மீரை, இன்று - இல்லாமல், உலகு - உலகியலானது, அமையாதெனின்-பொருந்தாதாயின், ஒழுக்கு-(அகிர்ஸ்ரவேலிக்காத செல்லும்) செலவும், வான் - மழையை, இன்று - இல்லாமல், அமையாது-பொருந்தாது, (எ-று).

இம்மைப்பயனு மனுபவிக்கப்படுவன வாதலின் பொருளின்பங்களை உலகியல் எனருர். மேலே நிகழ்தலென்றதல் எக்காலங்களிலும் எவ்விடங்களிலும் நிகழ்ந்துவருதல். நீரில்லாவிடின் உலகிய லாகிய பொருளின்பங்கள் பொருந்தாவென்பது பாவாலும் தணிந் தறியப் பட்டிருத்தலின், அதுபோல நீரினெழுக்கமும் மழையின்றுயின் பொருந்தாமை தணிந் தறியப்படுமென்பார் 'நீரின்றமையா துலகெனின்' என்றார்.

இவை மூன்று பாட்டாலும் மழை அறம் பொருளின்பங்கள் நடை பெறுவதற்குத் துணைக்காணமாதல் சொல்லப்பட்டது.

(க-று). உலகியல் நீரில்லாமலும் அகிரோழுக்கம் மனமுயில் லாமலும் பொருந்தாவென்பது.

10. If it be said that the duties of life cannot be discharged by any person without water, so without rain there cannot be the flowing of water.

முன்றும் அதிகாரம்.

நீத்தார்பெருமை - *The greatness of ascetics.*

பரி.—அஃதாவது முற்றத்துறந்த * முனிவரது பெருமைகூறுதல். அவ்வற முதற்பொருளையே உலகிற் தன்னை நுணர்த்துவார் அவராகலின் இது வான்சிறப்பின் பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது (யானெனதென்று மமிமானத்தை) முற்றும் விட்ட முனிவரது பெருமையைச் சொல்லுதலாம். (வான்சிறப்பிற்கூறிய) அவ்வறம் பொருளின்பமாகிய பொருள்களை உலகத்தார்க்கு உள்ளவாறு அறிவிப்பவர் அம்முனிவராதலால் இக்கிளார் பெருமை வான்சிறப்பின் பின் வைக்கப்பட்டது.

* இறைவனை மனனுங் (தியானஞ்) செய்பவர் முனிவரெனப்படுவர்.

க. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவற் றுணிவு.

பரி.—(இ-ள்). தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தாரது பெருமையை விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிதென விதந்தும் நூல்களது துணிவு, (எ-று).

தமக்குரிய வொழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தலாவது:— † தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய வொழுக்கங்களில் வழுவாதொழுக அறம்வளரும், அறம்வளரப் பாவந்தேயும், பாவந்தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க ‡ நித்த ¶ அநித்தங்களது வேறுபாட்டினர்வும் அழிதன் மாலிய வாய இம்மை மறுமை யின்பங்களின் உவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும், அவைதோன்ற * வீட்டின்கண் ஆசையுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்கெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய § யோகமுயற்சியுண்டாம், அஃதுண்டாக மெய்யுணர்வு பிறகது புறப்பற்றுகிய என தென்பதும் அகப்பற்றுகிய யானென்பதும் விடும்; ஆகலான், இவ்விரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்துவிடுதலெனக் கொள்க. பனுவலெனப் பொதுப்படக் கூறியவதனான், †† ஒன்றையொன் றெவ்வாத சமய நூல்களெல்லாவற்றிற்கும் இஃதொத்த துணிவென்பது பெற்றாம். ‡‡ செய்யாத துணிவு பனுவன்மே லேற்றப்பட்டது.

தேவி.—(இ-ள்). பனுவல் - நூல்களது, துணிவு - நிச்சயமானது, ஒழுக்கத்து - (தமக்குரிய) வொழுக்கத்திலே (நின்று), நீத்தார் - துறந்தவரது, பெருமை - மகிமையை, விழுப்பத்து-நிறைந்த பொருள்கள் பலவற்றுள்ளும், வேண்டும் - (இதுவேநிறைந்த பொருளென்று) விரும்பும், (எ-று).

---

† இவ்வடுக்குச் சூதசங்கிதை பிரசாதக் கிரமத்திற் கூறிய வடுக்கிற் கணக்கமாயிருத்தலறிக.

‡ அழிவுபாட் டபாவத்திற் கெதிர்மறையாகாதது நித்தமெனப்படும். அஃதாவது நாசமின்றி யிருப்பதென்பது.

¶ அழிவுபாட் டபாவத்திற் கெதிர்மறையாவது அநித்தமெனப்படும். அஃதாவது நாசத்தை யடைவதாயிருப்பதென்பது.

* இது முமுட்சுத்துவ மெனப்படும்.

§ ஓரிலட்சியத்தில் (குறியில்) வியாபாரமில்லாது மனம் லயப்பட்டிருத்தல் யோகமெனப்படும்.

†† ஒன்றற்கொன்று நெற்பியலில் மாறுபட்டிருத்தல்பற்றி 'ஒன்றையொன்றெவ்வாத சமய நூல்கள்' என்று கூறப்பட்டது.

‡‡ இது சருத்தாவின் தொழிற்பண்பு காரியத்தின்மே லாய உபசார வழக்கு.

தமக்குரிய வொழுக்கத்திலே நின்று துறத்தலாவது:—தத்தமது சாதிக்கும் ஆசிரமத்திற்கும் உரிய ஒழுக்கங்களில் நின்றதலருது கடக்கப் புண்ணியம்வளரும், புண்ணியம்வளரப் பாவங்குறையும்,பாவம் குறைய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க, இது நித்தியம் இஃது அநித்தியம் என்னும் பகுத்தறிவும் அறிவுத் தன்மையளான இம்மை மறுமையின்பங்களில் வெறுப்பும் பிறவித்துன்பங்களும் தோன்றும், அவை தோன்ற மோகூத்தில் விருப்பமுண்டாம், அஃது உண்டாகப் பிறவிக்குக் காரணமாயிய(பொருளின்பங்களைத் தேடுதற்குரிய)வீண் முயற்சிகளெல்லாம் நீங்கி மோகூத்திற்கு நிமித்தகாரணமாயிய யோகமுயற்சி உண்டாம், அஃது உண்டாகத் தத்துவஞானம் பிறந்து புறப்பற்றுயிய என தென்பதும் அகப்பற்றுயிய நானென்பதுமாயிய மமகாரமும் அகங்காரமும் நீங்கும்; ஆதலின், இவ்விரண்டு பற்றுக்களையும் இம்முறையே வெறுத்து விடுதலைனக் கொள்க. பலவுலென்ற பொதுவாகச் சொல்லியதால் ஒன்றையொன் றொத்தில்லாத மதநூல்களெல்லாவற்றிற்கும் இஃதொத்த சித்தியமாமென்பது பெறப்பட்டது. நூல்செப்தவரது சித்தியம் நூலின்மேல் ஏற்றப்பட்டது.

(க-து). துறந்தவர் மகிமையே சிறப்புடையபொருள்கள் பலவற்றுள்ளும் மேலானதென்பது நூல்களின் சித்தியமா மென்பது.

1. The clear sense of every treatise desires beyond all other excellence, the greatness of those who, while abiding in the rule of conduct peculiar to their state have forsaken all desire.

உ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

பரி.—(இ-ள்). இருவகைப் பற்றினையும் விட்டாரது பெருமையை இவ்வளவென்றெண்ணுற்கூறி யறியலுறின், அளவு படாமையான், இவ்வுலகத்துப் பிறந் திறந்தாரை யெண்ணி யித்துணையரென வறிய லுற்றாற்போலும், (எ - று).

முடியாதென்பதாம். கொண்டாலென்னும் வினையெச்சம் கொண்டெனத் திரிந்து நின்றது.

தெளி.—(இ-ள்). துறந்தார் (யானென தென்னு மிருவகைப் பற்றினையும்) விட்டவரது, பெருமை - மகிமையை, துணைக்கூறின் - (இவ்வளவென்று) எண்ணிக்கையினுற் சொல்லி அறியப்புகுந்தால் (அளவுபடாமையால்), வையத்த - இவ்வுலகத்தில், இறந்தாரை-(பிறந்து) இறந்தவரை, எண்ணிக்கொண்டற்று - எண்ணி (இத்தனைபேர்களென்று) அறியப் புகுந்தாற்போலும், (எ - று).

எண்ணியதிதல் முடியாதென்பதாம். கொண்டாலென்னும் செயி னென்னும் வாய்பாட்டு வினையெச்சம் கொண்டென்னுஞ் செய்தெனெச்ச மாகத் திரிந்து நின்றது.

(க - து). துறந்தவரது பெருமைக் களவில்லை யென்பது.

2. To describe the measure of the greatness of those who have forsaken the two - fold desires, is like counting those who have died in this world.

கூ. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

பரி.—(இ-ள்). பிறப்பு வீடென்னும் இரண்டனது துன்பவின்பக் கூறுபாடுகளே யாராய்ந்தறிந்து அப்பிறப்பறுத்தற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டாரதுபெருமையே உலகின்கணுயர்ந்தது,(எ-று).

* "தெரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப் போல † இருமை யென்ப நீண் டெண்ணின்க ணின்றது. பிரிகிலையேகா ரம் விகாரத்தாற் றொக்கது. இதனால் நிகிரியருட்டி யுலகமுழுதாண்ட அரசர் முதலாயினர் பெருமை பிரிக்கப்பட்டது.

இவை மூன்று பாட்டானும் நீத்தார் பெருமையே எல்லாப் பெரு மையினு மிக்கதென்பது கூறப்பட்டது.

தேளி.—(இ - ள்). இருமை - (பிறப்புவீடென்னும்) இரண்டனது, வகை - (துன்பவின்பக்) கூறுபாடுகளே, தெரிந்து-ஆராய்ந்தறிந்து (அப்பிற ப்பை நீக்குதற்கு), ஈண்டு-இப்பிறப்பின்கண், அறம் - துறவறத்தை, பூண் டார் - கொண்டவரது, பெருமை - மகிமையே, உலகு - உலகத்தில், பிற ங்கிற்று - உயர்ந்தது, (எ - று).

---

* பரிபாடல். ஆராயப்பட்ட மாட்சிமையுடைய இயலிசை நாடக மென்னு மூன்று தமிழையுமுடைய தெற்கின்கணுள்ளவழிய பொதிய வெற்பன் என்ப திதன்பொருள். மும்மைத்தமிழ் என்று கொள்க.

† மும்மைத்தமிழ் என்பதில் மும்மையென்பது மூன்றன் தன்மை யையுணர்த்தாமல் மூன்றென்னு மெண்ணே யுணர்த்தினுற் போல இரு மை யென்பது இரண்டன் தன்மையை யுணர்த்தாது இரண்டென்னு மெண்ணே யுணர்த்தி நின்றதென்க. இவ்வாறு வருவது பகுதிப்பொருள் விகுதியென்னும் சுவார்த்தபாவதத்திதப் பிரத்தியய மெனப்படும். அஃ தாவது சொன்னிலையாற் பகுபதமாயும் பொருணிலையாற் பகாப்பதமாயு மிருப்பதாம்.

இருமையென்பதில் சென்மென்னும் பொருளில்வந்தது. பெருமை யே வென்னும் பிரிநிலை யேகாரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது. இவ்வேகாரத்தால் ஆசூரசக்கரத்தைச்செலுத்தி உலை முற்று மாண்டவர் முதலானவருடைய பெருமை பிரிக்கப்பட்டது.

இவை மூன்று பாட்டாலும் தற்றவரது பெருமையே எல்லாப் பெருமைகளினும் உயர்ந்தெனபது சொல்லப்பட்டது.

(க - து). துறவறத்தைக் கொண்டவரது பெருமையே உலகின்கண் மேம்பாடுடைய தென்பது.

3. The greatness of those who have discovered the properties of both states of being, and clothed themselves in virtue, shines forth in this world (beyond all others).

ச. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

பரி.— (இ - ள்). தின்மை யென்னுந் தோட்டியாற் § பொறிகளா கிய யானையைத்தானேயும் தத்தம் ‡ புலன்கண்மேற் செல்லாமற் காப பான், எல்லாநிலத்திலு மிக்கதென்று சொல்லப்படும் வீட்டுலகத்திற் கோர் ¶ வித்தாம், (எ - று).

---

§ பொறிகள் - இந்திரியங்கள். அவை சுரோத்திரம் (காது), தொக்கு (உடம்பு), சட்சு (கண்), ரெசுவை (நாக்கு), கிராணம் (மூகு) ஆம்.

‡ புலன்கள் - விடயங்கள். அவை சத்தம் (ஒலி), பரிசம் (ஊறு), ரூபம் (உருவம்), ரசம் (சுவை), கந்தம் (நாற்றம்) ஆம்.

¶ அறிவினால் இந்திரியங்களே விடயங்களிற் செல்லாவண்ணங் காப்பவன் மேட்சிலத்தில் முனைக்குமோர் வித்தென் றருவகப் பதிந்தி னமையின் இல்லேதவருவகவனியாம். "உரனென்னும்-காப்பா"னென் றது பேகவிச்சையற்றப் பிரானேபாசனே செய்யுஞ் சன்மியாயை. இவன் மறவையில் பிரம லோகத்தையடைந்த பிரமனுக்குச் சமமாகப் போகத்தையனுபவித்து அவ்வுலகத்திற்கு காலம்வரும்போது தத்துவஞான முண்டாகப்பெற்ற முத்தியடைவனென்பது சன்னிர் சித்தமாயையால், 'வித்து'என்று கூறப்பட்டான். இஃது "அங்ஙனாதலே முன்னிந்தி னனு ருவர்க்குமே." என்று வெருளசித்தியார் கூறுவதாலு முணரப்படும்.

¶ இஃதேகதேச வுருவகம். நிண்மை யீண்டறிவின்மேற்று. அக்கிலத்திற்சென்று மூனைத்தலின் 'வித்து' என்றார். ஈண்டுப் பிறந்திறந்து வரும் மாணல்ல னென்பதாம்.

தெளி.—(இ-ன்). உரனென்னுந் தோட்டியான் - அறிவென்னு மங்குசத்தினால், ஒரைந்தும் - (பொறிகளாகிய யானைகள்) ஐந்தையும், காப்பான் - (தத்தம் புலன்களின்மீது செல்லாமற்) காப்பவன், வரனென்னும் வைப்பிற்கு - (எல்லாநிலங்களிலும்) மேலானதென்ற சொல்லப்படுகிற மோக்ஷநிலத்திற்கு, ஓர்வித்து-ஒருவித்தையாவான், (எ - று).

இக்குறள் ஏகதேச வுருவகவணி. நிண்மையென்பதினுக்கு அறிவென்னும் பொருளின்மேலாயது. அம் மோக்ஷநிலத்திற் போய் மூளாத்தலின் 'வித்து' என்றார். இவ்வுலகத்திற் பிறதும் இறந்தும் வரும் மனிதனல்ல னென்பதாம்.

(க-து). இந்திரியங்களை விஷயங்களிற் செல்லாவாறு தடுப்பவன் முத்தியடைதற் குரியவனெனென்பது.

4. He who guides his five senses by the hook of wisdom will be a seed in the world of excellence.

ரு. ஐந்தவித்தா ஞற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

பரி.—(இ - ள்). புலன்களிற்செல்கின்ற அவாவைந்தனையும் அடக்கினது வலிக்கு அநன்ற வானத் துள்ளா ரிறைவனுகிய இந்திரனே அமையுஞ் சான்று, (எ - று).

ஐந்து மென்னு முற்றும்மையும் ஆற்றற்கென்னு நான்கனுருபுஞ் செய்யுள் விகாரத்தாற் றொக்கன. § தான் ஐந்தவியாத சாபமெய்திகின்று,

¶ உரனென்னு மறிவைத் தோட்டியாக வுருவகப்படுத்தினவர் 'ஒரைந்தும்' என்று எண்ணலளவை யாருபெயராகக் கூறிய இந்திரிய மைக்கையும் யானைகளென்று உருவகப்படுத்தாமையின், இச்செய்யுள் ஏகதேச வுருவக மாயிற்றென்க.

§ இந்திரிய நிக்கிரகஞ் செய்யாத விந்திரன் இந்திரியநிக்கிரகஞ் செய்துள்ள கௌதம முனிவரது மனைவியாகிய அகலிகையைக் கரவிற்புணர்ந்து, அக்கௌதமரால் "ஆயிர மாதர்க் குள்ள வறிகுறி" தனதுடலிலுண்டரச் சாபமடைந்த கதையை இராமாயணம் பாலகாண்டம் அகலிகைப்படலத்திற்காண்க. " எனைத்தூணைய ராயினு மென்னும் " என்னுங் குறளின் மிசேடவுரையில் " இந்திரன்போல எல்லாப்பெருமையு மிழந்து சிறுமையெய்தல் நோக்கி 'என்னும்' என்றார் " என்றுகூறி யிருத்தலு மிங்கறியத் தக்கதாம்.

அவித்தவனதாற்ற லுணர்த்தினு ஞல்லின் 'இந்திரனே சாலுங்கரி' என்ருர்.

தெவி.—(இ - ன்). ஐந்தவித்தான் - (சப்தாதிவிடயங்களிற் செல்லுகின்ற) ஐந்தாசைகளையுமொழித்தவனது, ஆற்றல் - வல்லமைக்கு, அகல் விசும்புளார் - அகன்றபொன்னுலகத்தின்ன தேவர்க்கு, கோமான் - அரசனுகிய, இந்திரனே - தேவேந்திரனே, சாலுங்கரி - போதுமான சாட்சியம், (எ - று).

ஐந்தும் என்னு மினைத்தென் றறிபொருளில்வந்த மூற்றும்மையும் ஆற்றற்கு என்னும் நான்காம் வேற்றுமையுருபும் செய்புள் விகாரத்தால் தொக்குநின்றன. இந்திரன் தான் ஐந்தாசைகளையும் ஒழிக்காமல் சாபமடைந்துநின்ற அவ்வாசைகளை ஒழித்தவனுகிய கௌதம முனிவனது வல்லமையைத் தெரிவித்தானுதலின் 'இந்திரனே சாலுங்கரி' என்ருர்.

(க - து). இந்திரிய நிக்கிரகஞ் செய்தவர்க்கன்றி யேனையோர்க்குச் சாபாநுக்கிரக வல்லமை யுண்டாகாது என்பது.

5. Indra, the king of the inhabitants of the spacious heaven, is himself a sufficient proof of the strength of him who has subdued his five senses.

கூ. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

பரி.—(இ - ன்). ஒந்த பிறப்பினாய மக்களுளசெய்தற்கெளிய வற்றைச்செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர், அவ்வெளிய வற்றைச் செய்து அரியவற்றைச் செய்ய மாட்டாதார் சிறியர், (எ-று).

செயற் கெளியவாவன:—மனம்வேண்டியவாறே அதனைப்பொறிவழி களாற் புலன்களிற்செலுத்தலும் வெஃகலும் வெருட்டலுமுதலாயின. செயற் கரியவாவன:—இயம நியம முதலாய † எண்வகை யோக வுறுப்புக்கள்.

† எண்வகை யோகவுறுப்புக்கள் - யோகத்திற்குரிய வெண்வகை யங்கங்கள். அவை இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்பன. இவற்றன்:—

இயமம் - கொல்லாமை, மெய்ம்மைகூறல், திருடாமை, பிறர்பொருட்கண் ஆசையில்லாமை, இந்திரியங்களை யடக்கலென்னு மைந்துமாம்.

நியமம்-தவம், சௌசம் (உடலையும் மனதைச் சத்தியத்தினுலும் தூய்மை யாக்கல்), தத்துவஞானாராய்ச்சி, பெற்றதுகொண்டே மகிழ்தல், தெய்வவழிபாடென்னு மைந்துமாம்.

* நீர்பலகால் மூழ்கல் முதலாய நாலிருவழக்கிற் றருபதபக்கமென் பாருமூளர். அவை நியமத்துள்ளே யடங்கலின், நீத்தாரது பெருமைக் கேலாமை யறிக.

ஆசனம் (இருப்பு):—பத்திரம் (பீஜத்தின் கீழ்ப்பாக ரம்பிளிரு பக்கங்களிலும் இருகாற் பாட்டையுஞ் சேர்த்து அவ்விரண்டு காலேயும் இரண்டு கைகளாலு மிறுகப்பிடித்து அசையாது இருத்தல்), கோமுகம் [சகன பக்கத்தி (பிருஷ்டபாகத்தி) லிருகாற் பரட்டையும் மாறவைத்து அவ்விருகாற் பெருவிரல்களைக் காங்களால் பிடித்திருத்தல்],பங்கயம் (இரு தொடைமேலும் இரண்டுள்ளங்காலேயுமாறித் தோன்றவைத்தல்), கேசரி (பீஜத்தின் கீழ்ப்பாக ரம்பி ளிருபக்கத்திலும் இரண்டு பாதங்களேயுஞ்சேர்த்து முழந்தாளின் மீது இரண்டு கைகளேயும் நன்றூய்ப் பொருந் தம்படிவைத்து அக்கைகளின் விரல்களைச் செவ்வையாய் விரித்து வாய் திறந்து நாக்கை நீட்டிக்கொண்டு மூக்கு நுனியைப் பார்த்திருத்தல்), சுவத்திகம் (தொடைக்கும் முழங்காற்கு மிடையே யிரண்டுள்ளங் காலேயுஞ் செலுத்தி யிறுமாந்திருத்தல்) என்னு மைந்தமாம்.

பிராணயாமம்-இரேசக (வாயுவை மூக்கின் வலது துவாரவாயிலாக விடுதல்), பூரக (வாயுவை மூக்கின் இடது துவார வாயிலாக வுள்ளுக்கிழுத தல்), கும்பகம்(வாயுவை யுள்ளேயடக்குதல்) செய்தலாம்.

பிரத்தியாகாரம் - விஷயங்களில் செல்லாவண்ணம் சகல இந்திரியங் களையுந் தடித்து உண்ணேக்கியிருத்தலாம்.

தாரணை - தைலதாரைபோன்று இடைவிடாது அநதக்கரணம் ஒரு வகைப்பட் டிருத்தலாம்.

தியானம்-கடவுளிடத்துச் செல்லும் அநதக்கரணத்தின் பிரவாகமாம்.

சமாதி - உண்டாயிருக்கும் சம்ஸ்காரங (வாசனை)களின் ஒழிவும் அடங்கியிருக்கும் சம்ஸ்காரங்களின் வெளிப்பாடு முண்டாகி யநதக்கரண மொருமுகமாய்ப் பரிணமித்திருத்தலாம்.

இயமம் பத்துவகைப்படு மென்பதும், நியமம் பத்துவகைப்படுமென் பதும், ஆசனம் எண்பத்துநான்கு வகைப்படு மென்பதும், பிராணயாம மிருவகைப்படுமென்பதும் எண்வகைப்படுமென்பதும், பிறவுமாகிய இவற் றின் விரிவை அடியோகப் பிரதீபிகை முதலியவற்றிற் காண்க.

* 'நீர் பலகால் மூழ்கல் முதலாய நாலிருவழக்கிற்றருபதபக்கம்' என்ப தற்கு நீரின்கண்பலமுறைமூழ்கலும், வெறுநிலத்தறக்கலும், மான்றோலே யாடையாகத்தரித்தலும், சடைதரித்தலும், எரியோம்புதலும், ஊரடை யாமையும், காணகத்துண்டலும், கடவுளேப்போற்றலுமென்னும் எண்வகை மார்க்கத்தைத் தவம்புரியுங் கூறு என்று கொள்க. இது

"நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாய்ச், சோர்சடை தாழச் சுடரோம்பி-யூரடையார், காணகத்த கொண்டு கடவுள் விருந்தோம் பல், வானகத் துய்க்கும் வழி" என்னும் புறப்பொருள் வெண்பமாலேசெ

தெளி.—(இ-ன்). (ஒத்தபிறப்பினாகிய மனிதர்களுள்) பெரியர் - பெரியோர், செயற்கரிய - (செய்வதற் கெளிமையானவற்றைச் செய்யா மல்) செய்வதற்கருமையானவற்றை, செய்வார்-செய்வர், சிறியர்-சிறியோர், செயற்கரிய—(அல்லெளிமையான வற்றைச் செய்து) செய்வதற் கருமை யானவற்றை, செய்கலாதார் - செய்யமாட்டாதார், (எ-று).

செய்வதற் கெளிமையாவன:—மனம்விரும்பியபடியே அதனை (கண் முதலிய) இந்திரிய வாயிலாக விடயங்களிற் செலுத்தலும் விரும்புதலும் கோபித்தலு முதலாயினவாம். செய்வதற் கருமையாவன:—இயமம் நியம முதலான எண்வகை யோகாங்கங்களாம்.

(க-து.) பெரியோர் செய்வதற் கரியவற்றையும் சிறியோர் செய்வதற் கெளியவற்றையும் செய்வரென்கனென்பது.

6. The great will do those things which it is difficult to do; the mean cannot do those things which it is difficult to do.

எ. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

பதி.—(இ-ள்). சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமுமென்று சொல்லப்பட்ட தன்மாத்திரைக ளோர்தனது கூறு பாட்டையும் ஆராய் வா னறிவின் கண்ணதே உலகம், (எ-று).

† அவற்றின் கூறுபாடாவன:—‡ பூதக்கட்கு முதலாகிய அவைதா மைத்தும், அவற்றின்கட் டோன்றிய அப்பூதக்களோத்தும், அவற்றின்கூறு கிய § ஞானேந்திரியக்களோத்தும், ¶ கன்மேந்திரியக்களோத்தும் ஆக லிரு

செய்யுளாலும், தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியலில் "அ றவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்னும் சூத்திரத்திலுள்ள "காலி ருவழக்கிற் ரூபத பக்கமும்" என்றவடிக்குள்ள வுரையில் நச்சினார்க்கினி யர் "நீஇ ராட னிலக்கிடை கோட, ரோடு ஓடுத்த ரெல்லெரி யோம்ப, ஞாடை யாமை யுறுசடை புனைதல், காட்டி லுணவு கடவுட் பூசை, யேற் ற தவத்தி னியல்பென மொழிப." என்ற காட்டிய மேற்கோட் செய்யுளி னாலும் விளக்கமாமென்க.

† அவற்றின்:— சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றங்களின்.

‡ பூதங்கள்:—பிருதிவி (மண்), அப்பு (நீர்), தேயு (அக்கினி), வாயு (காற்று), ஆகாயம் (வெளி).

§ ஞானேந்திரியம்—அறிகருவி. அவை சுரோத்திரம் (காது), தொக் கு (உடம்பு), சட்சு (கண்), சிங்குவை (நாக்கு), க்ராணம் - (மூக்கு).

¶ கன்மேந்திரியம்.—தொழிற்கருவி. அவை வாக்கு (வாய்), பாதம் (கால்), பாணி (கை), பாயுரு (குதம்), உபத்தம் (குறி).

பதுமாம். 'வகைதெரிவான் கட்டே' என ‖ வுடம்போடு புணர்த்ததனால் தெரிகின்ற புருடனும், அவன்தெரிதற் கருவியாகிய † மான் அகங்கார மனங்களும் அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாம். தத்துவ மிருபத்தைந்தனையுந் தெரிதலாவது மூலப்பகுதியொன்றிற் ‡ றோன்றிய தன்மையிற் பகுதியே யாவதல்லது விகுதியாகாதெனவும், அதன்கட்டோன்றிய மானும் அதன்கட் டோன்றிய அகங்காரமும் அதன்கட் டோன்றிய $ தன்மாத்திரைகளு மாகிய வெழுத் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும் தங்கட்டோன்றுவன வற்றை நோக்கப் பகுதியாதலு முடையவெனவும், அவற்றின்கட் டோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினொன்றும் தங்கட் டோன்றுவன வின்மையின் விகுதியே யாவதல்லது பகுதியாகாவெனவும், புருடன் தானொன்றிற் றோன்றுமையானுந் தன்கட் டோன்றுவன வின்மையானும் ' இரண்டும் அல்லனெனவுஞ் †† சாங்கியனூலு ளோதியவாற்று ஞாய்தல். இவ்விருபத்தைந்து மல்ல துலகெனப் பிறி

‖ உடம்பொடு புணர்த்ததென்னுமுத்தியை வடனூலார் நிபாதம் என்பர். அஃதாவது கூறவேண்டிய பருத்தத்தை வெளிப்படையாகக்கூறுதி தான் கூறுவதன் குறிப்பினால் விளங்கச்செய்தல். இவ்வுத்தியை நச்சினார்க்கினியர் ஒருதலே மொழிதல் என்னும் உத்திக்கு இனமாகக் கொண்டு "உடம்பொடு புணர்த்துச் சொல்லுவன அதற்கு இனமெனப்படும்; என்னே? விதியல்லாதது விதிபோல மற்றொருவழிச சேறலின் " என்றார். ஈண்டு ' சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகை ' என்றதனால் சுவைமுதலின வாகிய தன்மாத்திரைகளும், அவற்றின் காரியமாகிய பிருதிவிமுதலிய பூதங்களும், அத்தன்மாத்திரைகளின் கூறுபாடாகிய ஞானேந்திரியங்களும் கருமேந்திரியங்களும் ஆகிய இருபதுதத்துவங்களையுங்கூறினாற் போன்று புருஷனும் அவன் தெரிதற்குக்கருவியாகிய மான் அகங்காரமனங்களும், அந்தமான் முதலானவற்றிற்குக் காரணமாகிய மூலப் பிரகிருதியும் ஆகிய ஐந்தையும் வெளிப்படையாகக் கூறுதி, 'தெரிவான்' எனக் கூறியதன் குறிப்பினால் பெறவைத்தமையினு லுடம்பொடு புணர்த்தலாயிற்று. 'சுவை.....வகை' என்னுமிருபதையு முடம்பாக நிறுத்தி,'தெரிவான்' என்னுங் குறிப்பினால் அவற்றோடு புருடன்முதலிய வைக்தையும் புணர்த்தினமையின், உடம்பொடு புணர்த்தலாயிற் றென்பது மொன்று.

† மான்—புத்தி. ‡ தோன்றியதன்மையின்—(தோன்றியது + அன்மையின்) தோன்றிய தல்லாமையினால். $ தன்மாத்திரைகள்—சூக்கும பூதங்கள். †† சாங்கியம் ஸேசுர சாங்கியம், நிரீசுவர சாங்கியம் என இருவகைப்படும். இவ்விரண்டனுள், முன்னது பாகவதம் மூன்றாங்கந்தத்திற் கூறப்படும் கருத்தமரிஷியின் புத்திரரான கபிலராற் சொல்லப்பட்டது; பின்னது மற்றொருகபிலராற் சொல்லப்பட்டது. ஈண்டுக் கூறியது நிரீசுவர சாங்கியமாம். இதன் தத்துவம் (பாதார்த்தம்) 25.

தொன் நில்லையென வுண்ணை தன்மையறிதலின், அஃ தவனறிவின்கண் வைதாயிற்று. இவை சான்குபாட்டானும் பெருமைக்கேது ஐச்தலித்தலும் யோகப் பயிற்சியுந் தத்துவ வுணர்வுமென்பது கூறப்பட்டது.

அவையாவன:—

(1) பிரதானம்	... 1.	(6) ஞானேந்திரியம்	... 5.
(2) மகத்தத்துவம்	... 1.	(7) கன்மேந்திரியம்	... 5.
(3) அகங்காரம்	... 1.	(8) மனம்	... 1.
(4) தன்மாத்திரை	... 5.	(9) புருடன்	... 1.
(5) ஸ்தூலபூதம்	... 5.		ஆ—25.

இவற்றுள்:—பிரதானம் என்பது பிரகிருதியாம். பிரகிருதி என்பது மூதற்காரணமாம். இது மகத்தத்துவத்திற்கு மூதற்காரணமா யிருப்பதால் பிரகிருதி என்றுயிற்று. இஃது அநாதியாயிருப்பதால் விகிருதியாவதின்று. விகிருதி என்பதகாரியம். இப்பிரகிருதி மூலம் (சித்தம்), புரியட்டகம் (சத்தாதி தன்மாத்திரைகளோடு மனம் புத்தி அகங்காரமும் சேர்ந்தது), விகிருதி (ஸ்தூலதேகமும் பிரபஞ்சமும்) என மூன்றாகப் பரம்,ருக்குமம், ஸ்தூலமென நிற்கும் மகத்தத்துவம், அகங்காரம், பஞ்சதன் மாத்திரைகளாகிய ஏழும் பிரகிருதிகளாயும் விகிருதிகளாயு மிருக்கின்றன. எங்ஙனமெனின், முன்னுள்ளது பின்னுள்ளதற்குப் பிரகிருதியாயும், பின்னுள்ளது முன்னுள்ளதற்கு விகிருதியாயும் இருப்பதாலென்க. தன்மாத்திரைகளும் (ஸ்தூல) பஞ்சபூதங்களுக்குப் பிரகிருதிகளா யிருக்கின்றன. இவ்வாறு மேற்சொன்ன மகதாதி ஏழு பிரகிருதிகளும் விகிருதிகளாயிருக்கின்றன. பஞ்சபூதங்கள், தசேந்திரியங்கள்(ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள்) மனம்ஆகிய இந்த 16-ம் விகிருதிகளேயாம்; பிரகிருதிகளாவதில்லை. இம்மகப்படி மான் (மகத்தத்துவம்) எனினும் புதன் எனினும் ஒக்கும். அப்படியே புருடன், ஆத்துமா என்பவுமாம். புருடன் அல்லது ஆத்துமா பல; ஒவ்வொன்றும் வியாபகமே. பிரகிருதியும் வியாபகமே. உலகம் சத்தியம். இதற்குக்கர்த்தா ஒருவன் இல்லை. புருடன் ஒன்றற்கும் காரணமாகாமையின் பிரகிருதியன்று;காரியமாகாமையின் விகிருதியுமன்று. ஆதலா லவன் அசங்ஞனவன். மூலமாதி மூன்று வகையாகப் பிரகிருதி பேதிக்க அதனோப் புருடன் தனதெனக்கொண்டு நிற்பன். முடவனும் குருடனும் கூடியபோது (குருடனதோளில் முடவன் எறியபோது) கடத்தலென்னுந் தொழி னுண்டாமாறுபோன்று மூக்குணவடிவப் பிரகிருதியும் அசங்ஞனாகிய புருடனும் கூடியபோது வியவகார முண்டாகும். சுதந்தரமான பிரகிருதியே ஜகத்திற்குக் காரணமாயிருந்து புருஷனுடைய போகமோக்ஷங்களின் பொருட்டுப் பிரவர்த்திக்கின்றது; புருஷன் பிரவர்த்திப்பதில்லை. பிரகிருதியின் விஷயவடிவப் பரிணமத்தால் புருஷனுக்குப் போகம் (இன்பத் துன்பங்கள் புலப்படத் தோன்றல்) உண்டாகின்றது. புத்திவாயிலாக விவேகவடிவப் பிரகிருதியின் பரிணமத்தால் மோக்ஷமுண்டாகின்றது. புரு

தெளி.—(இ-ன்).உலகு - உலகமானது, சுவையொளி யூருசை காற்றம் - சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் காற்றமும், என்று - என்று சொல்லப்பட்ட, ஐந்தின் - பஞ்ச தன்மாத்திரைகளது, வகை - கூறுபாட்டையும், தெரிவான்கட்டே - ஆராய்பவனறிவினிடத்தே, (எ-று).

அப்பஞ்சதன்மாத்திரை (சூக்கும பூதங்)களது கூறுபாடாவன:—(ஸ்தூல)பூதங்களுக்குக் காரணமாகிய அப்பஞ்சதன்மாத்திரைகளேந்தும், அவற்றின்கண் தோன்றிய அப்பூதங்களேந்தும், அப்பஞ்ச தன்மாத்திரைகளின் கூருகிய ஞானேந்திரியங்களேந்தும், கன்மேந்திரியங்களேந்தும் ஆகவிருபதுமாம். 'வகைதெரிவான்கட்டே' என்று உடம்பொடு புணர்த்திக்கூறியதினுல் தெரிகின்ற புருடனும் அவன் தெரிதற்குக் காரணமாகிய மான் அகங்காரமனங்களும் அவற்றிற்குக் காரணமாகிய மூலப்பகுதியும் பெற்றனம். தத்துவ மிருபத் தைந்தையு மாராய்தலாவது: மூலப்பகுதி யொன்றினின்று முண்டானதன்முகலின் அது பகுதியே யாவதல்லாமல் விகுதியாகாதென்றும், அம்மூலப் பகுதியிலுண்டான மகத்தத்துவமும் அம்மகத் தத்துவத்தினுண்டான அகங்காரமும், அவ்வகங்காரத்தினுண்டான (பஞ்ச)தன் மாத்திரைகளுமாகிய ஏழும் தத்தமக்குக் காரணமா யிருப்பதைகோக்கவிகுதியாவதன் அசங்கதி யிருப்பதால் அவனிடத்தில்போக மோக்ஷங்கள் பொருந்துதலின்று; ஆயினும், ஞானம், சுகம், துக்கம், இராகம், துவேஷம் முதலியன புத்தியின் பரிணமமா யிருக்கின்றன. இந்தப் புத்திக்கு ஆத்ம விவேகமில்லை; ஆனல், அவிவேகமிருக்கின்றது. அதனல், பரதமோக்ஷங்கள் ஆத்மாவின்கண் ஆரோபிக்க (கற்பிக்க)ப் படுகின்றனவே யன்றி, பரமார்த்த (உண்மை)மாக இல்லை; அவிவேகத்தாற் தெரிக்கிற போகத்தால் ஆத்மா போக்தாவெனச்-சொல்லப்படுகிறது பரமார்த்தமாக ஆத்மா போக்தாவன்று; புத்தியே போக்தா. புத்தி ஆத்துமாவிற்கு வேறு. பிரகிருதி யித்தன்மைய தென்றும் புருஷன் இததன்மையனென்றும வெவ்வேருகப் பகுத்தணர்ந்து பிரகிருதியை யொழித்த வேருதலே முத்தியிலை என்பது.

இந்திரியங்களும் மனமும் அகங்காரத்தின் காரியமாமென்பதினுல் கறியத்தக்கது. இதனது விரிவைச் சர்வதரிசன சங்கிரகத்தின் சாங்கிய தரிசனத்திற் காண்க.

இச்சாங்கிய சாத்திரத்தைக் கபிலர் ஆதத்தியாயங்களாக்கி, முதலத்தியாயத்தில் விஷயநிரூபணஞ்செய்து, இரண்டாவதத்தியாயத்தில் மகதாதி தத்துவங்கள் பிரதானத்தின் காரியங்களென்றுகாட்டி, மூன்ருவதத்தியாயத்தில் விஷயத்தினின்றும் வைராக்கியமடையும் வழியைவிளக்கி, நான்காவ தத்தியாயத்தில் விரக்தர்களுடைய சரித்திரங்களேச்சொல்லி, ஐந்தாவதத்தியாயத்தில் ஆக்ஷேப கண்டனம் பண்ணி, ஆருவதத்தியாயத்தில் முதலிலுள்ள அத்தியாயங்களிற் கூறியவற்றைச் சுருக்கிமுடித்துள்ளார்.

இதனேப் பரிமேலழகர் ஈண்டு விதந்து கூறியது, இது பதார்த்த விசாரணைக்குத் தக்கதா யிருப்பது பற்றி அவ்விசார மாத்திர மேற்கொண்டென்க.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARA MALAI ADIGAL

தும் தம்மிடத் தண்டாவனவற்றை நோக்கப் பருதியாவது முடையனவென்றும், அவ் வகைகாரத்தி லுண்டாயமனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும், அத் தன்மாத்திரையி லுண்டாய பூதங்களுமாகிய பதினைந்தும், தம்மிடத் தண்டாவன வில்லாமையின் விருதியே யாவதல்லாமல் பருதியாகா வென்றும், புருடன் தான் ஒன்றினின்று முண்டாகாமையாலும் தன்னிடத்துண்டாவன வில்லாமையாலும் (காரியமாதல் காரணமாதலென்னும்) இரண்டுமுடைய னல்லனென்றும் சாங்கிய சாஸ்திரத்திற் கூறிய வகையா லராய்தலாம். இல்லிருபத்தைந்து தத்துவமுமல்லாமல் உலகைப் பிறிதொரு பொருளில்லையென்று உலகினது உண்மையை யறிதலின் அவ்வுலகு அவனது அறிவினிடத்ததாயிற்று.

இவை நான்கு பாட்டாலும் பெருமைக்குக் காரணங்கள் ஐம்பொறி யடக்கலும், யோகாப்பியாசமும் தத்துவ ஞானமும் ஆமென்பது சொல்லப் பட்டது.

(க-து). உலகமானது தத்துவக்கூட்டங்களே யாராய்ந்தறிபவனது அறிவினிடத்ததா மென்பது.

7. The world is within the knowledge of him who knows the properties of taste, sight, touch, hearing and smell.

அ. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
* மறைமொழி காட்டி விடும்.

பரி.—(இ-ள்). நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே ‡ கண்கூடாகக் காட்டும், (எ-று).

நிறைமொழி யென்பது † அருளிற் கூறினும் ¶ வெகுண்டு கூறினும் அல்வப்பயன்களேப் பயந்தேவிடும் மொழி. காட்டுதல்-பயனுணர்த்துதல்.

தெளி.—(இ-ன்). நிறைமொழி- (பயன்) நிறைந்த சொல்லியுடைய, மாந்தர் - முனிவரது, பெருமை - மகிமையை, நிலத்து - நிலவுலகத்தில், மறைமொழி - (அவராணையாகசொல்லிய) மந்திரங்களே, காட்டிவிடும்- (பிரத்தியக்ஷமாகக்) காட்டும், (எ-று).

* மறைமொழி -"புறத்தார்கருப் புலனாமல் (அறியாவாறு) மறைத்துச்சொல்லும் சொற்றொடர்." என்பர் நச்சினார்க்கினியர். இதனுல் மறைமொழி மந்திரமாயிற் றென்க. "நிறைமொழி மாந்த ராணையிற் கொள்ள, மறைமொழி தானே மந்திர மென்ப" என்பதுதொல்காப்பியம்.

‡ கண்கூடு - பிரத்தியட்சம்; அஃதாவது இந்திரியவிஷய சம்பந்தத்தால் தோன்றும் ஞானம்.

† அருளிற்கூறல்-அனுக்கிரகமொழி. ¶ வெகுண்டுகூறல் - சாபமொழி.

பயனிறைந்த சொல்லென்பது அருளினுஞ் கூறினுலுங் கோபித்துக் கூறினலும் அத்தவத்தப் பிரயோசனத்தைக் கொடுத்தே விடுகிற சொல். காட்டுதல் - பிரயோசனத்தால் தன்மகிமையை யறிவித்தல்.

(க-து). துறந்தவரது மகிமையை அவரது பயனிறைந்த சொற்களே வெளிப்படையாகக் காட்டுமென்பது.

8. The hidden words (Mantras) of men whose words are full of effect will shew their greatness to the world.

கூ. குணமென்னுங் குன்றேறி நின்ருர் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

பரி.—(இ-ள்). துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற் குணங்களாகிய குன்றின் முடியின்கணேறிநின்ற மூவரது வெகுளி தானுள்ள வளவு கணமேயாயினும் வெகுளப்பட்டாரைத் தடித்தலரிது,(எ-று).

§ *சலியாமையும் பெருமையும்பற்றிக் குணங்களைக் குன்றாக வருவ கருஞ்செய்தார். குணம் ‡ சாதியொருமை. ‖ அநாதியாய் வருகின்றவாறு பற்றி ஒரோவழி வெகுளி தோன்றிய பொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்குமாகலின் 'கணமேயும்' என்றும், நிறைமொழிமாந்தராகலின் 'காத்தலரிது' எனறும், கூறினர். இவை இரண்டு பாட்டானும் அவராணை கூறப்பட்டது.*

தெளி.—(இ-ள்) குணமெனுங்குன்று - (துறவு தத்துவஞானம் ஆசையில்லாமை முதலிய) நற்குணங்களாகிய மலையின்முடியினிடத்து, ஏறி நின்ருர் - ஏறினதாழ்வரது, வெகுளி - கோபமானது, கணமேயும் - (தானுள்ளவளவு) கூடகாலமேயாயினும், காத்தல் - (கோபிக்கப் பட்டவரால்) தடுத்தல், அரிது - அரிதாம், (எ-று).

§ *சலியாமையினுலும், பெருமையினுலும் குணங்களே மலையாகக் கூறியது எது உருவக அலங்காரமாம்.*

‡ *"சாதியொருமையைச சாத்தியேகவசன மென்பர். அஃதாவது ஒருசொல் ஒருமையீறு தோன்ற நின்றும், தோன்றுதுநின்றும், பின் ஒருமைப் பன்மை யினேயீறாக மேல்வந்து முடிக்குஞ் சொற்களுநின்றித் தானே பன்மைப்பொருளுணர்த்துவது. ஈறு தோன்றிய சாதி யொருமையு, மீறு தோன்றுத சாதி யொருமையு, மெனவிரு திறப்படி மிருதிணை மருங்கினும் இஃதுரைச்சுத்திரம்" என்ருர் பிரயோக விவேக நூலார். ஈண்டுக் கூறியுள்ள குணம் ஈறுதோன்றுத அஃறிணைச் சாதியொருமைப் பெயர்*

‖ *அநாதி - உற்பத்தியில்லாதது.*

அசையாமையும் பெருமையும் பற்றிக் குணக்குன்மலையாக உருவகம் செய்தார். குணம்-சாதியொருமைப் பெயர். அநாதியாய் வருகின்ற வகையால் ஓரோவிடத்துக் கோபக்தோன்றியபொழுதே அக்கோபத்தினைத் தத்தவனுணம் அழிக்குமாகலால் 'கணமேயும்' என்றும், பயனிறைந்த சொல்லையுடைய தூவினனாதலின் 'காத்தலரிது' என்றும், சொல்லினர். இவை யிரண்டு பாட்டாலும் அவராணை (கட்டளை) சொல்லப்பட்டது.

(க-து). முனிவர்களது கோபத்தை அவர்களாற் கோபிக்கப் பட்டவராலே தடுத்தல் கூடாது என்பது.

9 The anger of those who have ascended the mountain of goodness(good dispositions), though it continue but for a moment, connot be resisted.

கo. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

பரி.—(இ-ள்). எல்லா வுயிர்கண்மேலுந் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகலான், அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தி னின்றவர், (எ-று).

பூணுதல்-விரதமாகக் கோடல். * அந்தணரென்ப தழகிய தட்பத்தை யுடையாரென வேதுப்பெயராகலின், அஃதவ் வருளுடையார்மேலன்றிச் செல்லாதென்பது கருத்து. அவ்வா ருணையுடையாராயினும் உயிர்கண்மாட்டருளுடையரென்ப தினதனைக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). எவ்வுயிர்க்கும் - எல்லாவுயிர்களின்மேலும், செந்தண்மை - செவ்வையானவருளை, பூண்டு - (விரதமாகக்)கொண்டு, ஒழுகலான் - நடத்தலால், அந்தணரென்போர் - அந்தணரென்று சொல்லப்படுவோர், அறவோர் - துறவறத்தினின்றவர், (எ-று).


மற்று - அசைநிலை. அந்தணரென்பது அழகிய குளிர்ச்சி (கருணை)யை யுடையவரெனக் காரணப்பெய ராகலின், அஃதவ்வருளுடையார் மேலல்லாது மற்றவர்மேல் செல்லாதென்பது கருத்து. அப்படி ஆணையையுடையவராயினும் உயிர்களிடத்துக் கருணையுடையாரென்பது இதனாற் சொல்லப்பட்டது.

---

* "அந்தத்தையணவுவாகந்தணர் என்றது வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்போர்ப்பார்" என்பர் நச்சினர்க்கினியர்.

(க-து). அந்தணரென்று சொல்லப்படுவோர் உயிர்களிடத்துக் கருணையுடைய முனிவர்களே என்பது.

10. The virtuous are truly called Andhanar, because in their conduct towards all creatures they are clothed in kindness.



நான்காம் – அதிகாரம்.

அறன்வலியுறுத்தல்—*The Power of Virtue.*

பரி.—(இ - ள்). அஃதாவது அம்முனிவராணுணர்த்தப்பட்ட அம்முன்றனுள், ஏனைப் பொருளும் இன்பமும் போலாது, அறன் இம்மை மறுமை வீடென்னு முன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்தென்பது கூறுதல். அதிகாரமுறைமையும் இதனானேவிளங்கும்.‡"சிறப்புடை மாபிற் பொருளு மின்பமுமறத்து வழிப்படூஉந் தோற்றம் போல" என்றார் பிறரும்.

தெளி.—அஃதாவது அம்முனிவரால் அறிவிக்கப்பட்ட அறம்பொருளின்பமென்னும் மூன்றனுள்,மற்றைப் பொருளுமின்பமும்போலாகாமல், அறம் இம்மைப்பயன் மறுமைப்பயன் வீடு என்னும் மூன்றையும் தருதலால், அப்பொருளின்பமென்னு மிரண்டிலும் உறுதியுடையதென்பது சொல்லுதலாம். அதிகாரமுறைமையும் இதனுலே விளங்கும்.

க. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனே வுயிர்க்கு.

பரி.—(இ-ள்). வீடுபேற்றையுந்தரும்; துறக்க முதலிய செல்வத்தையுந்தரும்; ஆதலான், உயிர்கட் கறத்தின்மிக்க ஆக்கம் யாது? (எ-று).

எல்லாப் பேற்றினுஞ் சிறந்தமையின் வீடு 'சிறப்பு'எனப்பட்டது.ஆக்கந் தருவதனை 'ஆக்கம்' என்றார். ஆக்கம்-மேன்மேலுயர்தல் ஈண்டியிரென்றது மக்களுயிரை; சிறப்புஞ் செல்வமும் எய்துதற்குரிய ததுவேயாகலின். இதனுன் அறத்தின் மிக்க வுறுதி யில்லை யென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). சிறப்பு - மோக்ஷமடைதலையும், ஈனும் - கொடுக்கும், செல்வமும் - (சுவர்க்கமுதலாகிய) செல்வத்தையும், ஈனும் - கொடுக்

‡ இது புறநானூறு ௩௬ - வது செய்யுட்கணுள்ளது. இதன்பொருள் மேன்மை யுடைய முறைமையினால் பொருளுங் காமமும் தருமத்தின் பின்னே தோன்றுங் காட்சியைப்போல என்பது.

கும், (ஆதலால்), உயிர்க்கு - (மக்கள்) உயிர்கட்கு, அறத்தினூஉங்கு - சருமத்தின்மேற்பட்ட, ஆக்கம் - பெருக்கத்தைத்தருவது, எவன் - யாது? (எ-று).

இ - அசை நிலை. எல்லாப் பேறுகளினும் சிறந்ததாகலின் மோக்ஷம் 'சிறப்பு' என்று கூறப்பட்டது. ஆக்கத்தைத்தருவதாகிய அறத்தை (காரிய வாகுபெயரால்) 'ஆக்கம்' என்றுகூறினர். ஆக்கம்-மேன்மேலுயர்தல். சிறப்புஞ் செல்வமும் மடைதற்குரியது மக்களுயிரேயாதலின், இவ்வே யுயிரென்றது மக்களுயிரை. இதனால் அறத்தைப்பார்க்கினும் மிக்க உறுதியைத்தருவது வேறொன்றில்லை யென்பது சொல்லப்பட்டது.

(க-து). மக்களுயிர்க்கு நன்மையைத் தருவது தருமத்தினும் மேம்பட்ட தொன்றில்லை என்பது.

1. Virtue will confer Moksha and wealth (Heaven &c); what greater source of happiness can man possess.

உ. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

பரி.—(இ-ள்). ஒருவனுக் கறஞ்செய்தலின் மேற்பட்ட வாக்கமில்லை; அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை, (எ-று).

அறத்தினூஉங் காக்கமு மில்லை' என மேற்சொல்லியவதனையே * அநுவதித்தார்; ‡ அதனற் கேடுவருதல் கூறுதற் பயனேக்கி. இதனால் † அது செய்யாவழிக் கேடுவருதல் கூறப்பட்டது.

* அநுவதித்தல் - அநுவாதம். அஃதாவது யாதானுமோர் நிமித்தத்தால் ஒன்றனை முற்கூறி, வேறொரு நிமித்தத்தாலதனையே பின்னுங் கூறுதல். அனுவாதமெனினும் வழிமொழிதலெனினு மொக்கும். அனுவதித்தற்கு முன்னர்ப் பெறப்பட்ட தொன்றினை வடநூலார் புரோவாதமென்பர். (புரோவாதம் - முன்பு கூறுதல்). இதனால் அனுவாதம் கூறியது கூற லன்றென்ப தாயிற்று. கூறியது கூறலாவது "அங்க மிலாத வனங்கன்" என்பதுபோல் யாதானுமோர் நிமித்தமின்றி முன்னர்க்கூறியதனையே பின்னருங்கூறுதல். அஃதாவது இருகாற்சொல்லி யொருகாற் பயன் கொள்ளுதல். பிரயோக விவேகநூலார் "ஒருபொருளை முன்னரெடுத்துக் கூறுவது புரோவாதம்: அதனை யொருநிமித்தத்தாற் பின்னருமெடுத்துக்கூறுவது அனுவாதம். உதாரணம் 'அறத்தினூஉங் காக்க மெவனோ வுயிர்க்கு' 'அறத்தினூஉங் காக்கமு மில்லை' எனவரும்." என்றார். இங்கே "அறத்தினூஉங் காக்கமெவனோ வுயிர்க்கு" என்பது புரோவாதம், 'அறத்தினூஉங் காக்கம்' என்னு மதனையே 'மறத்தலி னூங்கில்லை கேடு' என்னும் நிமித்தம் பற்றிப் பின்னருங் கூறியது அநுவாதம்.


‡ அதனால் - அறஞ்செய்தலை மயக்கத்தினால் மறத்தலினால்.
† அது செய்யாவழி - தருமஞ்செய்யா விடத்தி.

தெளி.—(இ-ன்). (ஒருவனுக்கு) *அறத்தினூஉங்கு - தருமஞ் செய்தலின் மேற்பட்ட, ஆக்கமும் - பெருக்கத்தைத் தருவதும், இல்லை—, அதனை - அத்தருமத்தை, மறத்தலினூங்கு - (மயக்கத்தால்) மறந்துவிடுதலின் மேற்பட்ட, கேடு - கேட்டைத்தருவதும், இல்லை, (எ-று).*

'அறத்தினூஉங் காக்கமு மில்லை'என முன்னோர்ச் சொல்லியவதனையே அறவாதஞ் செய்தார்; அதனைற் கேடுவருதலைச் சொல்லுதலாகிய பயனெக்கி. இதனால் அது செய்யாதவிடத்துக் கேடுவருதல் சொல்லப்பட்டது

(க-து). *தருமஞ்செய்தலின் மேற்பட்ட செல்வமும் அதனை மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை யென்பது.*

2. There can be no greater source of good than (the practice of) virtue; than the forgetfulness of it, their can be no greater source of evil.



கூ. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

பரி.—(இ-ம). தத்தமக்கியலுந் திறத்தான் † அறமாகிய நல்வினையை யொழியாதே அஃதெய்துமிடத்தா னெல்லாந்தீர்க்க,(எ-று).

இயலுந்திறமாவது இல்லறம் பொருளளவிற் கேற்பவும் துறவறம் யாக்கைகிலைக் கேற்பவுஞ் செய்தல். ஓவாமை - இடைவிடாமை. எய்தமிடமாவன:மனம் வாக்குக் காயமென்பன. அவற்றுற் செய்யும் அறங்களாவன முறையே ‡ நற்சிந்தையும் நற்சொல்லும் நற்செயலுமென இவை. இதனுண் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). ஒல்லும்வகையான்-(தத்தமக்குக்)கூடும்வகையால், அறவினை - தருமமாகிய நல்வினையை, ஓவாதே - ஒழியாமலே, செல்லும் வாயெல்லாம் - (அவ்வறவினை) செல்லு மிடங்களிலெல்லாம், செயல் - செய்யக் கடவர், (எ - று).

கூடும்வகையாவது இல்லறம் பொருளளவிற்கு ஏற்பவும் துறவறம் சரீரநிலைக்கு ஏற்பவும் செய்தலாம். ஓவாமை - நடுவே நீங்காமை. செல்லுமிடங்களாவன: மனமும் வாக்கும் காயமுமாம். அவற்றினுற்செய்யும் அற

---

† *அறத்திற் (தருமத்திற்) கேதுவாகிய நல்வினையை யென்றுகொள்க. நல்வினையால் தருமமும் அதனால் சுகமுமுண்டா மென்பதிங் குணர்த்தக்கதாம்.*

‡ *மனத்தால் நல்லனவற்றை யெண்ணுதலும், வாயால் நல்லனவற்றைச் சொல்லுதலும், உடம்பால் நல்லனவற்றைச் செய்தலுமாம்.*

ஏனைய முறையே எதிர்மறையும் நற்சொல்லும் நற்செயலுமாம். இத னால் அறஞ் செய்யும் வகை சொல்லப்பட்டது.

(கு-று). மனம் வாக்குக் காயமென்னும் இரிகாணத்தாலும் கூடுமானவளவு இடைவிடாது தருமஞ் செய்யக் கடவர் என்பது.

3. As much as possible, in every way, incessantly practise virtue.

மனத்துக்கண் மாசில னுதல் லனைத்தற
னுகுல நீர பிற.

பதி.—(இ-ன). * அவ்வாற்றுன் அறஞ்செய்வானின் தன் மனத்தின்கட் தூற்றமுடைய னல்லனாக; அவ்வளவே அறமாவது; அஃதொழிந்த சொல்லும் வேடமு மறமெனப்படா, ‡ ஆவா நீர்மைய, (எ-று).

குற்றம் - † நீயன செய்திதல். பிறரறிதல் வேண்டிச செய்கின்றனவாகலின் 'ஆகுவகீர' என்றார். மனத்து மாசுடையனாயவழி § அதன் வழிய வாகிய மொழி மெய்களாற செய்வன பயனில வென்பதாலும் பெறப்பட்டது.

தெளி.—(இ-ன்). மனத்துக்கண் - (அவ்வகையாக அறஞ்செய்பவன் தன்) மனத்தினிடத்து, மாசிலனுதல் - குற்ற மில்லாதவனாக கடவன், அறம் - தருமமாவது, அனைத்து - அவ்வளவே, பிற-அஃதொழிந்த சொல

* அவ்வாற்றுன் - கூடுமானவினல்.

‡ ஆவாநீர்மைய-பிறரறியச்செயும் ஆடம்பர நன்மையுடையனவாம்.

'பயனேக்கா தாற்றவும் பாத்தறிவோன் றின்றி, யிசைநோக்கி யீகின்று ரீகை...கூலிக்குச் செய்தண்ணு மாறு" எனபது பழமொழி.

† நீயன செய்தித்தலாவது பிறர்பொருளே யெவ்வா றபகரிக்கலா மென்றெண்ணுதல், பிரமஹத்தி முதலிய தகாதகாரியகளேச செய்ய லிரும்புதல், தேகமே ஆன்மாவென் றதனிடத்து (பரலோகப் பிரயோ ஜனம் கருதாது) லீனே அபிமானம் வைத்தல் முதலியனவாம்.


§ வாக்கும் காயமும் மனத்தினிஷ்டப்படி ஒழுகுதலன்றித் தம் மிஷ்டப்படி ஒழுகுதற் நிமித்தமை பற்றி 'அதன்வழியவாகிய மொழிமெய கள்' என்று கூறப்பட்டது. மாசுடைய மனத்தின் வழிப்பட்ட வாக்கு: கடினமாகப்பேசுதல் பொய்சொல்லுதல் கோட்சொல்லுதல் பயனில்லாத வார்த்தைகளேப் பேசுதல் முதலிய வற்றையும், காயம் பிறரது பொருளேத் திருடுதல் ஜீவஹிம்சை செய்தல் பிறமாதரைப் புணர்தல் முதலிய வற்றையும் உடையனவா யிருக்குமென்க.

லும் வேடமும், ஆகுலநீர - (அறமெனப்படுவெனவல்ல) ஆரவார குணத்தையுடையனவாம், (எ-று).

குற்றம்—நீயனவற்றை நினைத்தல். பிறரறியவேண்டிச் செய்கின்றனவாதலால் 'ஆகுல நீர' என்றார். மனத்தின்கண் குற்ற முடையவனுடைய போது அம்மனத்தின் வழியிற் பொருந்துவதாகிய வாக்கினாலும் காயத்தி (உடம்பி) னாலும் செய்யுந் தருமங்கள் பயன்தருவதில்லை யென்பதும் பெறப்பட்டது.

(க-து). தருமஞ்செய்பவன் மனத்தின்கண் மாசற்றிருத்தலே தருமமாம் என்பது.

4. Whatever is done with a spotless mind is virtue ; all else is vain show.



நி. அழுக்கா றவாவெகுளி யின்னுச்சோ னென்கு
மிழுக்கா வியன்ற தறம்.

பரி.—(இ-ள்). ¶ பிறராக்கம் போறமையும் * புலன்கண்மேற் செல்கின்ற அவாவும் அவையேதுவாகப் பிறர்பால் வரும் வேதனையும் அதுபற்றி வருங் கடுஞ்சொல்லுமாகிய இந்நான்கினையுங் கடிந்து இடையறது நடந்தது அறமாவது, (எ-று).

இதனுன் இவற்றோடு விரவி யியன்றது அறமெனப்படா தென்பது உங்கொள்க. இவைஇரண்டோட்டானும் அறத்தினதியல்புகூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). அழுக்காறு - (பிறருயர்ச்சி) பொறுமையும், அவா-(ஐம்புலன்கள்மீது செல்லுகின்ற) ஆசையும், வெகுளி - (அவைகாரணமாகப் பிறர்மே லுண்டாகின்ற) கோபமும், இன்னுச்சொல் - (அதுபற்றி வருகின்ற) கடுஞ்சொல்லும். நான்கும்-(ஆகிய விந் நான்கினையும்,இழுக்கா-கடிந்து, இயன்றது-(ஒழிவில்லாமல்)நடந்தது, அறம்-தருமமாவது,(எ-று).

இதனுல் அழுக்காறுமுதலிய இந் நான்கோடுங்கலந்து நடந்தது அறமெனப்படாது என்பதுங்கொள்க. இவை இரண்டு பாட்டாலும் அறத்தினது இயல்பு சொல்லப்பட்டது.

¶ பிறராக்கம் பொறுமையாவது அன்னியருக்குண்டாகும் கல்வி செல்வம் அதிகாரம் மரியாதை முதலாயினவற்றைக் கண்டு அருளையடைதல்.

* புலன்கள் - லீரோதமின்றிய சப்தாதி விஷயங்கள்.

(க-து). பொறாமை ஆசை கோபம் கடுஞ்சொல் என்னும் இந் நான்கினையு மொழித்து கடைபெறுவது தருமமாம் என்பது.

5. That conduct is virtue which is free from the four things: malice, desire, anger, and bitter speech.

சு. † அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை.

பரி.—(இ-ள்). யாம் இது பொழ தினைய மாகலின் இறக்கு ஞான்று செய்துமெனக் கருதாது அறத்தினை நாடோறுஞ்செய்க; அவ்வாறு செய்தவறம் இவ்வுடம்பினின்று முயிர்போங்காலத்து அதற்கு அழிவில் லாத துணையாம், (எ-று).

மற்றென்ப தசைசிலே. 'பொன்றுத்துணை' என்றார்; * செய்தவுடம் பழியவும் உயிரோடொன்றி யேனையுடம்பிலுஞ் சேறலின். இதனுன் இவ்வியல்பிற்ரய அறத்தினை நிலையாதயாக்கை நிலையினபொழுதே செய்க வென்பது கூறப்பட்டது

தெளி.—(இ-ன்). (நாம்இப்போது இவையோமாகலின்) அன்று · இற க்குகாளில், அறிவாமென்னுத - செய்வோமென்று நினையாமல், அறம்-தரு

† "மற்றறிவா நலவினை யாமினைய மென்னுது, கைத்துணடாம் போழ்தே கரவா தறஞ்செய்மின், முற்றி யிருந்த களிபொழியுந் தீவ ளியா, னற்கா யுதிர்தலு முண்டு" என்பது நாலடி.

* மனோவாகுக் காயமென்னுஞ் திரிகரணங்களாலும் செயயப்படு கின்ற கிரியைகள கர்மங்களெனப்படும்; அக்கிரியைகள அனுஷ்டான மான (செய்த) வுடன் பின்வரும் நன்மை தீமைகளுக்கேதுவான தர்மா தர்மங்களை யுற்பத்திசெய்து கெடுகின்றன இததர்மாதர்மங்கள் அதற்கக ணத்தில் அதற்பூதமாய் (வெளிப்படாது) தங்குகின்றன. அதற்கரணம் விடாது பிறவிகள் தோறும் அவ்வவ் வுடம்புகளைப்பற்றியே யிருத்தலின அவ்வக்கரணத்தில் அதற்பூதமாயிருக்கும் தர்மாதர்மங்கள் அவ்வப்பிற விகளி லுண்டாகும் நன்மைதீமைகளுக் கேதுவாயிருக்கின்றன. இவ் வாறு அந்தக்கரணத்தி லதற்பூதமாய்த்தங்கி யவ்வப்பிறவிகளில் இன்பத் துன்பங்கள் புலப்படுதல் வாயிலாக அனுபவிக்கப்படும் தர்மாதர்மங்களையே "பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே" என்று பெரியார் கூறியுள்ளா ரென்க. இவ்விரண்டி லொன்றுய தருமத் (அறத்) தினைச 'செய்தவுடம் பழியவும் உயிரோடொன்றி(உயிரோடென்ன அந்தக்கரணத்தி லதற்பூதமாய்த்தங்கி) யேனையுடம்பிலுஞ் சேறலின்' என்று கூறினு ரென்க.

செய்க - (இனச்தோறஞ்) செய்யக்கடவர், அது - அப்படிச்செய்த தருமமானது, பொன்றுங்கால் - இவ்வுடம்பினின்று முயிர்போங்காலத்து, பொன்றுத்துணை - (அவ்வுயிர்க்கு) அழியாததுணையாம், (எ-று).

மற்று - அசை. தன்னைச்செய்த வுடம்பழியவும் உயிரோடு கூடி மற் றையுடம்பிலுஞ் செல்லுதலால் அறத்தினை 'பொன்றுத்துணை' என்றார். இதனால், இத்தன்மையினதான தருமத்தை நிலையில்லாதவுடம்பு இருக் கின்ற பொழுதே செய்க என்பது சொல்லப்பட்டது.

(க-து). இறக்கும்பொழுது தருமஞ் செய்வோமென் றெண் ணாது இருக்கும்போதே தருமஞ்செய்தால் அஃதிறக்கும்போ துதவியாம் என்பது.

6. Say not we will hereafter make choice (of virtue): be virtuous now; in the hour of death, she will be to you a deathless help.

எ. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே தோள்தா னிடை.

பரி.—(இ-ள்). அறத்தின்பயன் இதுவென்று யாம் ஆகமவளவை யான் உணர்த்தல்வேண்டா, சிவிகையைக் காவுவானேடு செலுத்து வானிடைக் காட்சியளவைதன்னானே யுணரப்படும், (எ-று).

* பயனே 'ஆறு' என்றார்; $ பின்னதாகலின், †'என' என்னும் எச் சத்தாற் சொல்லாகிய ‡ ஆகம வளவையும், 'பொறுத்தானே தோள்தானிடை' என்றதனாற் காட்சி அளவையும் பெற்றும். உணரப்படு மென்பது சொல் லெச்சம். இதனு லறம் பொன்றுத் துணையாதல் தெளிவிக்கப்பட்டது.

தெளி.—(இ-ள்). அறத்தாறு - தருமத்தின்பயன், இதுவென - இது வென்று (யாம் ஆகமப்பிரமாணத்தாலறிவித்தல்), வேண்டா - வேண்டிய

* அறமார்க்கத்திற் செல்லுவதாலடையும் பயனே 'ஆறு (வழி)' என் றது கருவியாகுபெயராம்.

$ 'பின்னதாகலின்' என்றற்கு அறத்தின்பயன் அறத்தைக் கைக் கொண் டொழுகியதன்பின்னருண்டாகின்ற தாகலின் என்றுகொள்க.

† 'என' என்னும் செயவெனெச்சத்திற்கு என்று சொல்ல என்பது பொருளாகலால் ஆகம (சாஸ்திர)ப்பிரமாணமும், 'சிவிகை பொறுத்தானே தோள்தானிடை' என்று குறித்துச் சொன்னதினுல் பிரத்தியட்சப் பிரமா ணமும், பொருண்முடிவின்மையினுல் உணரப்படும் என் னும் சொல் லெச்சமும் பெற்றும்.

‡ உண்மையறிவு அறிவிற்குக் கருவியாயுள்ளது அளவை யெனப் படும். அளவையெனினும் பிரமாணமெனினு மொக்கும்.

இல்லை, இல்லை - பல்லக்கை, பொறத்தானேறி - சுமப்பவனேறி, ஊர்ந்தானிடை-(அதன்கண் இருந்து அதை)செலுத்துவோனிடத்து (பிரத்தியட்சப் பிரமாணத்தினாலே யறியப்படும்), (எ-று).

அறத்தின்பயன் அறத்தின்பின்னுண்டாவதாகலின், பயனை ஆறு என் றார். 'என' என்னுஞ் செயவெனெச்சத்தால் சப்தமாகிய ஆகமப் பிரமாண மும், 'பொறத்தானேறி சேர்தானிடை' என்றதனால் பிரத்தியகஷப் பிரமாண மும் பெற்றனம். அறியப்படுமென்பது (குறைத்துரின்றதனால்)சொல்லெச் சம். இதனால் அறம் அழியாத தன்மையாதல் தெளிவாகக் கூறப்பட்டது.

(க-து). தருமத்தின் பயன் சப்தப்பிரமாணத்தாலே யன்றிப் பிரத்தியட்சப் பிரமாணத்தினாலு மறியப்படும் என்பது.

7. You need not describe (in books) the fruit of virtue; it may be inferred from seeing the bearer of a palankeen and him who rides in it.

அ. வீழ்நாள் படாஅமை நன்றுற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

பரி.—(இ-ள்). செய்யாது கழியுநா ளுளவாகாமல் ஒருவன் அறத் தைச் செய்யுமாயின், அச்செயல் அவன் யாக்கையோடு கூடுநாள் வருமவழியை வாராமலடைக்குங் கல்லாம், (எ-று).

ஐவகைக் குற்றத்தான் வரும் இருவகைவினையு முள்ளதனையும் உயிர் யாக்கையோடுங் கூடின் றவ்வினைகளது இருவகைப்பயனையுந்தரு மாகலான், அந்நாண்முழுவதும் 'வாழ்நாள்' எனப்பட்டது. குற்றங்கள் ஐந்தாவன:—‡ 1 அவிச்சை, 2 அகங்காரம், 3 அவா, 4 விழைவு, 5 வெறுப்பென்பன. இவற்றை வடநூலார் † பஞ்சக்கிலேசமென்ப. வினையிரண்டாவன:—நல்வினை தீவினையென்பன. பயனிரண்டாவன:—இன்பதுன்பமென்பன. இதனுன் அறம் வீடு பயக்குமென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்). ஒருவன்-,வீழ்நாள்-(செய்யாமற்)கழியுநாள்,படாஅ மை - உண்டாகாமல், நன்று - தருமத்தை, ஆற்றின் - செய்வானுயின், அஃது - அச்செய்கையானது, வாழ்நாள்-(அவன் சரீரத்தோடு) கூடுங்கால்,

‡ 1 அவிச்சை - அநாதியாய வஞ்ஞானம். 2 அகங்காரம்—அவ்வவிச் சைபற்றி யானென மதிக்குஞ் செருக்கு. 3 அவா-அவ்வகங்காரம் பற்றி யெனக்கிது வேண்டுமென்பது. 4 விழைவு - அவ்வவாபற்றி அப்பொருட் கண் செல்லும் ஆசை. 5 வெறுப்பு - அவ்வாசைபற்றி யதன் மறுதலைக் கண் செல்லுஞ் சோபம்.

† பஞ்சக்கிலேசம் - ஐவகைக்குற்றம்.

வழி - (வரும்) வழியை, அடைக்குங்கல் - (வாராமல்) அடைக்குங் கல் லாம், (எ-து).

அஞ்ஞானம், அகங்காரம், அவா, விருப்பு, வெறுப்பு என்னும் ஐவ கைக் குற்றங்களால் வருகிற நல்வினை தீவினை என்னும் இருவகை வினை களும் உள்ளவரைக்கும் உயிர் உடம்போடுங் கூடிநின்று அவ்விருவினைக ளது பயன்களாகிய சுகதுக்கங்களிரண்டையும் அனுபவிக்கு மாதலால் அக்காலமுழுதும் 'வாழ்நாள்' எனப்பட்டது.

இதனால் தருமம் மோட்சந் தருமென்பது சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் சோர்வடையாது தருமத்தைச் செய்தால் அஃதவன் பிறப்பை நீக்கும் என்பது.

8. He who suffers no day to pass unimproved, but (continually) does some good, such conduct will be a stone to block the passage to other births.

கூ. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

பரி.—(இ-ள்). இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது; அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம் இன்பமாயினுந் துன்பத்தி னிடத்த; அதுவேயுமன்றிப் புகழுமுடைய வல்ல, (எ-று).

ஆறுருபு ஈண் ¶ டெனிகழ்ச்சிக்கண் வந்தது. † "தூங்கு கையா னெஞ்சு நடைய" என்புழிப்போல. இன்பம் - காமதுகர்ச்சி. அஃதாமாறு ‖ காமத்துப்பாலின் முதற்கட் சொல்லுதும். இன்பத்திற் புறமெனவே துன்பமாயிற்று. பாவத்தான் வரும் பிறனில்விழைவு முதலாயின அக்

¶ உடனிகழ்ச்சிப் பொருளாவது வினைகொண்டு முடியும் பொரு ளின் தொழிலோடு தன்னிடத்தும் உடனிகழ்வதாக வுடையபொருள், ஈண்டு 'அறத்தான் வருவதேயின்பம்' (இல்லறத்தோடு பொருந்திவருவதே யின்பமாவது) என்பதில் இன்பம் வினைகொண்டு முடியும்பொருள்; வரு வது என்பது அப்பொருளின் தொழில். அவ்வருவது என்னுந்தொழிலோ தன்னிடத்தும் உடனிகழ்வதாக வுடையபொருள் அறமாதலால் அறம் உடனிகழ்ச்சிப் பொருளதாயிற்றென்க.

† புறநானூறு 22. இதன் பொருள் அசைந்த (பெருங்) கையுடனே (தலையெத்தி நடக்கும்) உயர்ந்தநடையை யுடையன என்பது.

‖ காமத்துப்பாலின் முதலில் "ஈண்டின்ப மென்றது ஒருகாலத் தொரு பொருளான் ஐம்புலனுகர்தற் பிறப்புடைத்தாய காமவின்பத் தினை" என்று கூறப்பட்டிருக்கின்றது.

னைத்தும் இன்பமாய்த்தோன்றுமாயினும் பின் துன்பமாய் விளைதலின் 'புறத்த' என்றார். அறத்தோடு வாராத புகழுமில' எனவே, வருவது புகழுமுடைத்த என்பது பெற்றாம். இதனுள் அறஞ்செய்வாரே இம்மை யின்பமும் புகழும் எய்துவர் என்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). அறத்தான் - இல்லறத்தோடு (பொருந்தி), வருவ தே—, இன்பம்-இன்பமாம், மற்றெல்லாம் அவ்வில்லறத்தினோடு பொரு ந்தாது வருவனவெல்லாம் (இன்பமாயினும்), புறத்த - துன்பத்துட் சேர் வனவாம், (அதுவுமல்லாமல்) புகழும் - புகழையும், இல-உடையவல்ல, (எ-று).

அறத்தானென்னும் ஏழாவது இங்கு உடனிகழ்ச்சிப்பொருளில்வந்தது. இன்பம்-காமத்தினனுபவம். அஃதாகுவிதம் காமத்தப்பாலின் மூதலிற் கூறப்படும். (மற்றது) இன்பத்தின் புறமெனவே துன்பமாயிற்று. பாவச் தால்வரும் பிறனது மனைவியை விரும்புதல் முதலானவை அச்சமயத்தில் இன்பமாய்த்தோன்றுமாயினும் பின்பு துன்மாய் விளைதலால் 'புறத்த' என் றார். இல்லறத்தோடு பொருந்தி வாராதன 'புகழுமில' எனவே, அல்வில் லறத்தோடு பொருந்தி வருவதாகிய இன்பம் புகழு முடைத்தாமென்பது பெற்றாம். இதனுல் அறஞ்செய்வாரே இம்மை இன்பமும் புகழும் பெற வாரென்பது சொல்லப்பட்டது.

(கு-து). இல்லறத்தோடு கூடிவரு மின்பமே இன்பமாம்; அது னோடு பொருந்தாதுவரு மின்பம் துன்பமாமென்பது.

9. That pleasure only which flows from domestic virtue is pleasure; all else is not pleasure, and it is without praise.

கo. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

பழி.—(இ-ன்). ஒருவனுக்குச் செய்தற் பான்மையது நல்வினையே; ஒழிதற் பான்மையது தீவினையே, (எ-று).

ஒருமென்பன இரண்டும் அசைநிலே. தேற்றேகாரம் பின்னுங்கூட்ட ப்பட்டது § பழிக்கப் படுவதனைப் 'பழி' என்றார். இதனுள் † செய்வதும் ஒழிவதும் சியமிக்கப்பட்டன.

---

§ பழியென்பது செயப்படுபொருளுணர்த்தும் இகரவீருதி புணர்த்த தெட்ட தொழிற்பெயர். அல்லது பழியென்பது பழிப்பதற்கேது வாகிய தீவினையையுணர்த்தலால் காரியவாகுபெய ரெனினு மொக்கும்.

†செய்வது நல்வினையும், ஒழிவது தீவினையுமாம்.

தெளி.—(இ-ன்). ஒருவற்கு - ஒருவனுக்கு, செயற்பாலது - செய்தற் றன்மையது, அறனே - நல்வினையே, உயற்பாலது - ஒழிதற்றன்மையது, பழி(யே) - தீவினையே, (எ-று).

அறனேயென்னும் தேற்றேகாரம் பழியென்பதனோடுங் கூட்டப்பட் டது. ஒருமிரண்டும் அசை நிலைகள். பழிக்கப்படுவதாகிய தீவினையைப் 'பழி' என்றார். இதனைச்செய்வதும் ஒழிவதும் நியமிக்க (நிச்சயிக்க)ப் பட் டன.

(க-து). செய்யத்தக்கது நல்வினையும் செய்யத்தகாதது தீவி னையுமா மென்பது.

10. That which it is meet to do is virtue ; that which it is meet to abandon is vice.

பாயிரம் முற்றிற்று.

அதிகாரம் நான்கிற்குச் செய்யுள்—40.

2. இல்லறவியல்—

On Domestic Virtve.

முதல் அதிகாரம்.

இல்வாழ்க்கை—The Domestic State.

பரி —அஃதாவது இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பு. இன்னிலை (இல்-நிலை) அறத்துக்கேற்ற தரிய இருவகை நிலையுள முதலர்த லின், இஃதறன்வழி யுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது மனையாளோடு கூடி வாழ்தலினது சிறப்பாம். இல்வாழ்க்கை நிலையானது அறஞ்செய்தற்குரிய இல்லறம் துறவறமென் னும் இருவகை நிலைகளுள் முதலாவதாதலின், இஃது அறன்வலியுறுத்த லின் பின் வைக்கப்பட்டது.

க. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

பரி:—(இ-ன்). இல்லறத்தோடு கூடி வாழ்வானென்று சொல்லப் படுவான் அறவியல்பினையுடைய ஏனை மூவர்க்கும் அவர்செல்லும் நல் லுலகுக்க நேறிக்கண் நிலைபெற்ற துணையாம், (எ-று).

* இல்லென்ப தாருபெயர். † என்பானெனச் செய்யப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது. ஏனை மூவராவார் ஆசாரிய னிடத்தி னின்றுணர்தலும் விரதங் காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தானும், இல்லில் வீட்டுத் ‡ நீயொடு வனத்தின்கட்சென்ற மனையான் வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கத்தானும், முற்றத்துறந்த யோகவொழுக்கத்தா

* இல்லின் (வீட்டின்) கண் செய்யப்படும் அறத்தை இல் என்றது இடவாகுபெயர்.

† முன்னும் வேற்றுமைக் கருத்தாவிற்குச் செய்யப்படுபொருள் முதல் வேற்றுமையாக வருதல்பற்றி 'என்பானெனச் செய்யப்படுபொருள் வினை முதல் போலக் கூறப்பட்டது' என்ற கூறப்பட்டது. என்பான் என்பதில் அகரச்சாரியையும் பகுதிபொருளும் தொக்குநின்றன. சொல்லின்கண் பகு திபொருள் தொக்குப் பொருளின்கண் அது விரித்து வருவதனைப் பிரயோக விவேகனார் நிகழ்த்துபடலம் மூன்றாஞ் செய்யுளினுரையில் "நயக்காய்த் தோன்றி யக்காய்ப் பொருள் விரியுமாறு காண்க" என்பர்.

‡ நீ - மித்திரபாவினி.

னும் என இவர். இவருள் முன்னே பிருவரையும் ¶பிறர்மத மேற்கொண்டு கூறினர். இவ ரிவ்வொழுக்க நெறிகளே முடியச் செல்லுமளவும் அச் செலவிற்குப்பரிசோப்குளிர் முதலியவற்றுள் இடையூறுவாராமல் $ உண்டியும் மருந்தும் உறையுளு முதலிய உதவி அவ்வக் நெறிகளின் வழுவா மற் செலுத்துதலான் 'நல்லாற்றினின்ற துணை' என்றார்.

தெளி.—(கு-ள்). இல்வாழ்வா னென்பான் - இல்லறத்தோடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவோன், இயல்புடைய - (அற) இயல்பினை யுடைய, மூவர்க்கும் - (மற்றை) மூவர்க்கும், நல்லாற்றில்-(அவர்செல்லும்) நல்லொழுக்க வழிகளில், நின்ற - நிலைபெற்ற, துணை - துணையாவான், (எ-று).

இல்லென்பது அதனறத்தை உணர்த்தலால் ஆகுபெயர். என்பானெனச் செயப்படுபொருள் எழுவாய் போலச் சொல்லப்பட்டது. மற்றை மூவராவார் ஆசாரியனிடத்திருந்து வேதமும் ஒதுதலும் விரதங்காத்தலும் ஆகிய பிரமசரிய வொழுக்கமுடையவனும், வீட்டைவிட்டுத் தியுடன் காட்டினிடத்துப் போய் மனையாள் தொண்டுசெய்யத் தவஞ்செய்கின்றவனுகிய வானப் பிரஸ்தனும், எல்லாப் பற்றுக்களையும்விட்டுச் சமாதியுரி பவனுகியசந்நியாசியும் என்னுமூவர். இம்மூவருள் பிரமசாரி வானப்பிரஸ்தனென்னுமிருவரையும் பிறமதத்தை யுடன்பட்டுக் கூறினர். இவர்கள் இவ்வொழுக்கநெறிகளே முற்றப் பெறச்செய்து முடிக்குமளவும் அவ்வொழுக்கத்திற்கு இல்வாழ்வான் பரிசோய் குளிர் முதலானவற்றுல் இடையூறுவாராது உண்டியும் மருந்தும் உறையுளு முதலியவற்றையுதவி அவரவரை அவ்வவ்வொழுக்கவழிகளில் தப்பாமல் நடத்துகையினுல்'நல்லாற்றினின்ற துணை' என்றார்.

(க-து). இல்லறத்தில்வாழ்பவன் பிரமசாரி வானப்பிரஸ்தன் சந்நியாசி யென்னும் மூவர்க்குந் தக்கதுணையாவானென்பது.

1. He will be called a (true) householder, who is a firm support to the virtuous of the three orders (of Bramachari, Vanaprastan, Sanyasi) in their good path.

¶ இல்லறத்துறவறமென விருவகை நிலையாகவுரைத்துக்கொண்டாசாரியர் மற்றைப் பிரமசரியநிலையினையும் வானப்பிரஸ்த நிலையினையும் "உடன்படல்" என்னும் மதம்பற்றி மேற்கொண்டு 'மூவர்க்கும்' எனக்கூறினமைபற்றி 'பிறர்மதமேற்கொண்டு கூறினர்' என்று கூறப்பட்டது.

$ உண்டியும் மருந்தும் உறையுளும்-பசிநீர உணவும், நோய்நீர மருந்தும், வசிக்க இடமும், முதலிய என்றதனுல் ஆடை, புத்தகமுதலியனவுங் கொள்க.

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்குமிறந்தார்க்கு
இல்வாழ்வா னென்பான் றுணை.

பரி:—(இன்). சுற்றமுடையோரால் முறைப்பட்டார்க்கும் தன்கூடித் தார்க்கும் ஒருவகு கிழித் தன்பாலின்றி நிறந்தார்க்கும் இல்வாழ்வா னென்று சொல்லப்படுவோன் துணை, (எ-று).

துறந்தார்க்கும் பாவம் ஒழிய † அவர்க்குச் சுற்றமுள்ளின்று வேண்டுவன செய்தலானும், தவ்வாதவர்க் குணவுமுதலிய கொடுத்தலானும், இறந்தார்க்கு § நீர்க்கடன் முதலிய செய்த வல்லுலகின்கட் செல்லுத்தலானும் 'துணை' என்றார். இவை யிரண்டோட்டானும் இன்னிலை எல்லா வுபகாரத்திற்கும் உரித்தாதல் கூறப்பட்டது.

தேவி:—(இ-ள்). துறந்தார்க்கும் - (ஆசாரமானவரால்) விடப்பட்டவர்க்கும், தவ்வாதவர்க்கும் - வறுமையுடையவர்க்கும், இறந்தார்க்கும்- (ஒருவரு மில்லாமல் தன்னிடத்து வந்து) இறந்தவர்க்கும், இல்வாழ்வா னென்பான்-இல்வாழ்வா னென்று சொல்லப்படுவோன், துணை - துணை யாவான், (எ-று).

ஆசாரமானவரால் விடப்பட்டவர்க்குப் பாவமொழிய அவர்க்கு ஆதாரம் மின்ற வேண்டுவனவற்றை செய்தலானும், வறுமையுடையவர்க்கு உண்டி முதலியவற்றைக் கொடுத்தலானும், இறந்தவர்க்கு நீர்க்கடன் முதலியவற்றைச் செய்த வல்லுலகத்தின் (சுவர்க்கத்தின்) கண் (அவரை) அனுப்புதலானும் 'துணை' என்றார். இவையிரண்டோட்டானும் இல்வாழ்க்கை எல்லா வுபகாரங்களுக்கும் உரித்தாதல் சொல்லப்பட்டது.

(க-து). ஆசாரமற்றவர்க்கும் வறியவர்க்கும் இறந்தவர்க்கும் இல்வாழ்வான் துணையா'மென்பது.

2. He will be said to flourish in domestic virtue who aids the forsaken, the poor and the dead.

கூ. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்றாங்
வைம்புலத்தா ரோம்ப தறம்.

பரி:—(இ-ள்). பிதிர் தேவர் விருந்தினர் என்றத்தாற் தானென்று சொல்லப்பட்டவைந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம், (எ-று).

---

† அவர் (இல்வாழ்வார்) என்றும் பாடமுண்டு.

§ நீர்க்கடன் - நிலதருப்பணம்; நிலம்-எள்.

* பிதிராவர் படைப்புக்காலத் தெழுந்த பண்டைக்கப்பட்டோர் சட்வுட்சாதி அவர்க்கிடங் தென்திசை யாகலின் 'தென்புலத்தார்' என்றார். தெய்வமென்பது சாதிபொருமை. விருந்தென்பது புதுமை. அஃதின் டாருபெயராய்ப் புதியராய் வந்தார்மேனின்றது. அவர் இருவகையர்: பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், † அஃதின்மையிற் குறியாது வந்தாருமென. ஒக்கல் - சுற்றத்தார். எல்லா வறங்களும் தானுளனாய் நின்ற செய்யவேண்டுதலின் தன்னே போம்பலும் அறனுமிற்ற. § என்ற என்பது விகாரமாயிற்று. ஆங்கு - அசை. ஐவகையும் அறஞ்செய்தற் கிடனாகலின் 'ஐம்புலம்' என்றார். அரசனுக் ¶ நைப்பொருள் ஆறி னொன்று யிற்று; இல்வைம்புலத்திற்கும் ஐந்து கூறவேண்டுதலானென்பதறிக.

தெளி:—(இ-ள்). தென்புலத்தார் - பிதிரரும், தெய்வம் - தேவரும், விருந்து - அதிதியரும், ஒக்கல் - சுற்றத்தாரும், தான் - தானும், என்ற-என்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து - ஐந்திடத்தும் (செய்யும்), ஆறு-(அற) வழியை, ஓம்பல் - வழுவாமற் செய்தல், தலை - (இல்வாழ்வானுக்குச்) சிறப்புடைய வறமாம், (எ-று)

பிதிராவர் சிருஷ்டிகாலத்திற் பிரமனுற் சிருட்டிக்கப்பட்டோர் தேவசாதியர்; அவர்க்கு இடம் தென்திசையாதலின் 'தென்புலத்தார்' என்றார். தெய்வமென்பது சாதிபொருமைப்பெயர். விருந்து - புதுமை. அஃது இங்குப் பண்பாகுபெயராய்ப் புதியவராய் வந்தவரை உணர்த்திற்று. விருது - பண்புப்பெயர். அவ்விருந்தினர் முன்னறிதிருக்கின்றமை பற்றிக் குறித்து வந்தாரும் அஃதில்லாமை பற்றிக் குறியாது வந்தாருமென் றிருதிறத்தாவர். எல்லா வறங்களையும் தான் செவ்வையா விருந்துகொண்டு செய்யவேண்டுதலின் தன்னைக் காப்பாற்றுதலும் அற

---

* இறந்த போனவரது புத்திரர் முதலியோர் செய்யுங் கருமங்களினால் நிருப்தியடைந்த இறந்தவர்க்கும் அவரினத்தவர்க்கும் சேர்ந்த தர்க்கதியை நீக்கவும் சற்கதியை யளிக்கவும் வல்ல வொருவகையான தேவசாதியார் பிதிர்க்களெனப்படுவர்; இவர்கள் இயற்கைத் தேவாகளி லொருவகையினரா யிருத்தல்பற்றி 'பிதிராவர் படைப்புக்காலத்தப(பிரம)னுற்படைக்கப்பட்டோர் சட்வுட்சாதி' என்ற கூறப்பட்டது [இயற்கைத் தேவர்களல்லாதாரு கருமதேவர்க ளெனப்படுவர். அவர்கள் புண்ணியத்திற் கேற்பச் சுவர்க்காதிகளிற்போகுங்காலையனுபவித்துப் புண்ணியக்கழிந்த வுடனே அங்கிடத்தினின்றும் கீழ்விழுபவர்கள்].

† அஃதின்மையின்-முன்னறிதிராமைபற்றி. முன்னறிதல் - முன்னறிமுகமா யிருத்தல்.

§ என்றலுங் (என்ற-லும்) என்பதிலுள்ள என்ற எச்சத்தில் அகரம் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது.

இதைப்பொருள் - வரிப்பணம்.

பயிற்று' என்ற வடமொழி முறை தொகுத்து கின்றது. சூத்ர - அசை. தென்புலத்தார் முதலிய வகுப்புகளையும் தருமஞ்செய்தற்கு இடங்களாயவை 'ஐம்புலம்' என்றார். இவ்வைந்திடங்களுக்கும் ஐந்து பங்கு வேண்டுமல்லவா? அரசனுக்குப் பஞ்சிப்பொருள் ஆறிலொரு பங்காயிற்று.

(க-து). பிதிரர்க்கும் தெய்வத்திற்கும் விருந்தினர்க்கும் இனத்தார்க்கும் தனக்கும் வழுவாது தருமஞ்செய்தல் இல்லறத்தாளுக்குத் தலையாயான தருமமா மென்பது.

3. The chief duty of the householder is to preserve the fivefold rule of conduct towards the manes, the Gods, his guests, his relations and himself.

ச. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

பரி:—(இ-ள்). பொருள் செய்யுங்காற் பாவத்திற் கஞ்சி மீட்டி அப்பொருளே யியல்புடைய முவர் முதலாயினர்க்கும் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தானுண்டலே ஒருவ னில்வாழ்க்கையுடைத்தாயின் அவன்வழி யுலகத் தெஞ்ஞான்றும் நிற்றல் அல்லது இறத்தலில்லை, (எ-று).

பாவத்தான் வந்த பிறன்பொருளைப் பகுத்துண்ணின், அறம் பொருளுடையான் மேலும் பாவந் தன்மேலுமாய் நின்ற வழியெஞ்சுமாகலின 'பழியஞ்சி' என்றார். ‡ வாழ்வான தடைமை வாழ்க்கைமே லேற்றப் பட்டது.

தெளி:—(இ-ள்). (பொருள் சம்பாதிக்கும்போது) பழி - பாவத்திற்கு, அஞ்சி - பயப்பட்டுச் (சம்பாதித்து), பாத்து-(அப்பொருளே இயல்புடையமூவர் முதலிய † பதின்மர்களுக்கும்) பங்கிட்டு,ணுண்-(தான்) உண்ணுதலே, வாழ்க்கை - (ஒருவனது) இவ்வாழ்க்கையானது. உடைத்தாயின் - உடையதானால், வழி - (அவனது) சந்ததியானது (உலகத்தில்), எஞ்ஞான்றும் - எக்காலமும் (நிற்பதல்லாமல்), எஞ்சல் - இறத்தல், இல் - இல்லை, (எ-று).

---

‡ வாழ்வான தடைமை பகுத்துண்டல். அஃதவனது வாழ்க்கை பின்மேலேற்றி 'உடைத்தாயின் வாழ்க்கை' என்று கூறப்பட்டது. இனி அது உடையானது ஒருடைமையை அவனது மற்றோருடைமையின்மேல் ஏற்றிக் கூறிய உபசாரமுமாம்.

† பிரம்சாரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி, துறந்தார், துவ்வாதவர், இதத்தார், பிதிரர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தாரென்னும் பதின்மர்.

பழியென்பது பழிப்பித் தேதுவாகிய பாவத்திற்காதலின் காரியவாகு பெயராம். பதவத்தால் வந்த பிறன்பொருளைப் பங்கிட்டுண்டான், அதுமான தபெருளுடையான் மேலும் பாவமானது தன்மேலுமாய் நின்ற சந்ததி குறையுமாதலால் 'பழியஞ்சி' என்றார். வாழ்வானது பழியஞ்சிப் பருத் தண்டலாகிய உடைமை வாழ்க்கையின்மேல் ஏற்றப்பட்டது.

(க-து). பாவத்திற்குப் பயந்து பொருளைத் தேடிப் பிரமசாரி முதலியோர்க்குப் பங்கிட்டுண்ணுகின்றவனது சந்ததி யானது குறைதலில்லை யென்பது.

4. His descendants shall never fail who, living in the domestic state, fears vice in the acquisition of property and shares his food with others.

ரு. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

பரி.—(இ-ள்). ஒருவன் இல்வாழ்க்கை தன்துணைவிமேற் செய் யத்தகும் அன்பினையும் பிறர்க்குப் பகுத்துண்ட லாகிய அறத்தினையும் உடைத்தாயின், அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம், (எ-று).

* கிரஸிதை. இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சொன்றுகாவழி இல் லறங் கடைபோகாமையின், அன்புடைமை பண்பாயிற்று அறனுடைமை பயனுயிற்று. இவை மூன்று பாட்டானும் இன்னிலேயி னின்ருன் அறஞ் செய்யுமாறு கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). இல்வாழ்க்கை - (ஒருவனது) இல்வாழ்க்கையான து, அன்பும் - (தன்மனையாளிடத்துச் செய்யத்தகும்) அன்பினையும், அற னும்- (பிறர்க்குப் பகுத்துண்ணுதலாகிய) அறத்தினையும், உடைத்தாயின்- உடையதானுல், அது - அவ்வுடைமையானது (அவ்வில் வாழ்க்கைக்கு), பண்பும் - குணமும், பயனும் - பிரயோசனமும் ஆம், (எ-று).

மனையாளுக்கும் கணவனுக்கும் மனவொருமை இல்லாதபோது இல் லறம் முடிவு பெருதாகையால், இல்வாழ்க்கைக்கு அன்புடைமை பண்பா யிற்று; அறனுடைமை பயனுயிற்று. அன்பையும் அறனையும் முன்வைத்த வெழுங்கின்படி. அவற்றோடு சம்பந்தமுள்ள பண்பையும் பயனையும் வைத்தலால் இது முறை கீர னிறையணி. அன்பு பண்பும், அறன் பயனு மாம். இதுவும் வாழ்வானது அன்பும் அறனுமாகிய உடைமையை அவ னது வாழ்க்கையின்மே லேற்றிக் கூறிய உபசாரவழக்காம். இவைமூன்று பட்டாலும் இல்வாழ்வோன் அறஞ்செய்யுமாறு சொல்லப்பட்டது.

* கிரஸிதையாவது வினையராகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்த முன்னவற்றை யம்முறையே சொல்லுதல்.

[illegible]

(பதவு). அறம், அறத்தாற்றின்; வாழ்க்கை, வாழ்க்கையை; புறத்தாற்றும்; [illegible] போகும் பயனும் மாண்பும் உடைத்து இல்வாழ்க்கை என்பது.

5. If the married life possess love and virtue, these will be both its duty and reward.

அ. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

பதி.—(இ-ள்). ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவானேயின், அவன் அதற்குப் புறமாகிய நெறியிற்போய்ப் பெறும் பயன் யாது, (எ-று).

அறத்தாறென்பது பழியஞ்சிப் பருத்தண்டலும் அன்புடைமையுமென ¶ மேற்சொல்லிய ஆறு. † புறத்தாறு - இல்லிலிட்டு வளர்த்துச் செல்லுமிடம், § அச்சிலியின் இது பயனுடைத் தென்பர் 'போஒய்ப் பெறுவதெவன்' என்றார்.

தெளி.—(இன்). (ஒருவன்) இல்வாழ்க்கை-இல்வாழ்க்கையை, அறத்தாற்றின் - தருமத்தின்வழியே, ஆற்றின் - செலுத்துவானேயின், புறத்தாற்றின் - (அவன் அவ்வில்வாழ்க்கைகருப்) புறமாகியவழியில் போய்-சென்று, பெறுவது-பெறும்பயன், எவன் - யாது, (இல்லை யென்றபடி), (எ-று).

தருமத்தின்வழி யென்பது பழியஞ்சிப் பருத்தண்டலுமும் அன்புடைமையுமென முன்சொல்லிய வழியாம். புறத்தாறு - மனையகலிட்டு வளர்த்திச்செல்லும் நிலை. அகலிலாதரும் மறுமைப்பயன் போனது இவ்வில்வாழ்க்கையில் மறுமைப்பயன் தருதலுடைய தென்பார் 'போஒய்ப் பெறுவதெவன்' என்றார்.

¶ மேற்சொல்லிய - இல்லறகாண்டின் ஈனாகாவது குரளிலும் ஐந்தாவது குரளிலும் கூறிய.

† புறத்தாறு - வானப்பிரத்தநிலை. இது "வீடாஞ்சுடரை முன்னர் தனிநின் றிலங்கு திருவுள்ளமெய்தி யிருத்தலுமே விடாதியங்கிய படர்மெல்லொண்டி லுறுப்பிழந்த பெருந்தவ வேடத்த தபோவனத்தில் வரிக்கவேண்டும்" என்பது மறைஞான சம்பந்தம்.

§ அருளுப் பிரகாசத்து மறைஞான சம்பந்தம் மாணாக்கர் "இல்லறம் கழிவிற்ற மாதவர், விரதங்களுங் காலவளவு அனுஷ்டித்துத் தன் ஏரிக்கரை விடுதலின், முன்னர் முன் அன்னவை இல்லாமையின் சேயோனுத்திற் பரமசிவத்தை யடை வன்" என்ற உரையில்.

(கு-து) ஒருவன் இல்வாழ்க்கையைத் தருமவழியாக விட்டு வாழுவின், அவன் துறவறத்திற்போய் வேறுயாவன் ஒன்றை யடை கிலே என்பது.

6. What will he who lives virtuously in the domestic state gain by going into the other ascetic state?

எ. இயல்பிணி னில்வாழ்க்கை வாழ்பவ னேன்பான்
முயல்வாரு ளேல்லாந் தலே

பரி.—(இ - ள்). இல்வாழ்க்கைக்கணின்று அதந்தரிய இயல்போடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவான் ‡ புலன்களே விட முயல்வா ரேல்லாருள்ளும் மிக்கவன், (எ-று).

முற்றத்துறந்தவர் விட்டமையின், முயல்வாரென்றது மூன்றாகிலேயி னின்றாரை. அகிலேதான பலவகைப்படுதலின் 'முயல்வாருளெல்லாம்' எனவும், முயலாதவைதப் பயனெய்துதலின் 'தலே' எனவும் கூறினர்.

தெளி.—(இ-ள்). இல்வாழ்க்கை - இல்வாழ்க்கையில் நின்று, இயல்பி னுன் - (அவ்விலவாழ்க்கைக் குரிய) இயல்போடு கூடி, வாழ்பவ னென்பா ன் - வாழ்பவனென்று சொல்லப்படுவோன், முயல்வாருளெல்லாம் - (ஐம் புலனைனேவிட) முயற்சி செயவா ரெல்லாருள்ளும், தலே - மேம்பட்டவனு வான், (எ-று).

முற்றத் துறந்தவராகிய சகியாசிகன் ஐம்புலன்களேயும் விட்டமை யால், முயல்வாரென்றது வனதிலே தவஞ்செயவோராகிய வானப்பிரன் தரை. அவ்வானப்பிரஸ்தாசிரமம் பலவகைப்பட்டிருத்தலின் 'முயல் வாரு ளெல்லாம்' எனவும், இல்வாழ்வோன் அம்முயற்சி செய்யாமலே பயனைப் பெறுதலினுல் 'தலே' எனவும் கூறினர்.

(க-து). இல்வாழ்க்கைக் குரிய தருமவியல்போடு கூடி யில் லறத்தில் வாழ்பவன் தவஞ்செய்வா ரெல்லாருள்ளுந் தலேயாவா னென்பது.

7. Among all those who perform penance for future happiness he is greatest who lives well in the household state.

அ. ஆற்றி னெழுக்கி யறனிழுக்கா வில்வாக்கை
நோற்பாரி னேன்மை யுடைத்து.

பரி.—(இ-ள்). தவஞ் செய்வானையுத் தந்த நெறியின்கண் ஒழுகப் பன்னெடுநாளுந் தன்னாற்றிற் றவறு இல்வாழ்க்கை வாழ்ந்தவன்செய் வரிய தீவினையும் பொறையுடைத்து, (எ-று).

‡ புலன்களேவிட - இந்திரிய நிக்கிரகஞ்செய்ய.

பரி முதலிய இடையூறு நீக்கலின் 'ஆற்றின் ஒழுகி' என்றார். சோற்பா சென்பதை அவர்தம்மையுற்ற நோய் இலது இல்வாழ்வார் நிலைபோற் பிறரையுற்ற நோயும் † பொறுத்தல் இன்மையின் 'சோற்பாரிலுண்மை யுடைத்து' என்றார்.

நேரி.—(இ-ள்). (தவஞ் செய்வோரையும்) ஆற்றின் - (தக்கமதி) வழியிலே, ஒழுகி - நடத்தி, அறன் - (தானுற்ற) அறத்தினின்றும், இழுக்காத-தவறாத, இல்வாழ்க்கை - இல்வாழ்க்கையானது, சோற்பாரின் - அத்தவஞ்செய்வாரது நிலையினும், சோன்மை-பொறுமையை, உடைத்து - உடையதாம். (எ-று).

(தவத்தினர்க்குப்) பரி முதலாய இடையூறைத் தீர்த்தலால் 'ஆற்றி லொழுகி' என்றார். சோற்பா சென்பது அவர்தம்நிலையை உணர்த்தலால் பொருளாகுபெயர். தவஞ்செய்வாரது நிலைக்கு அவர் தம்மையடைந்த நோயைப் பொறுத்தல் அல்லது இல்வாழ்வார் நிலைபோல் பிறரையடைந்த நோயையும் பொறுத்த லில்லாமையால் 'சோற்பாரிலுண்மை யுடைத்து' என்றார். (இடையூறு - தடை).

(க-து). தவத்தோரைத் தவவழியினடத்தித் தானுற்றவறாத வனது இல்வாழ்க்கையானது தவஞ்செய்வோரது நிலையினும் மேன்மையுடைய தென்பது.

8. The householder who, not swerving from virtue, helps the ascetic in his way, endures more than those who endure penance.

கூ. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப.தில்லாயி னன்று.

பரி,—(இ-ள்). இருவகை யறத்தினும் நூல்களின் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட நில்வாழ்க்கையே ; ஏனைத் துறவறமோ எனின், அதுவும் பிறரைப் பழிக்கப் படுவதில்லையாயின் அஃதில்வாழ்க்கையோ டொருதன்மைத்தாக நன்று, (எ-று).

"எல்லாம் பிரிக்கலக்கின் வந்தது; இதனும் பிரிக்கப்பட்டது துறவறமாயின், அதுசென்னுங் கட்டுப்பெயர் அதன்மேனின்றது. பிறின் பழிப்பி

† பொறுத்தல் - மருந்துமுதலியன சொரித்து நீக்குதல்.

கo. ¶ வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

பரி.—(இ-ள்). இல்லறத்தோடே கூடி வாழுமியல்பினுள் வையத்தின்கண் வாழ்பவன் வையத்தானே எனினும் வானின்கண் உறையும் தேவருள்ளோருளராக வைத்து நன்கு மதிக்கப்படும், (எ-று).


பின்தேவனும் அவ்வறப்பய னுகர்த லொருதலை யாகலின் 'தெய்வத்துள் வைக்கப்படும்' என்றார். இதனுள் இன்னிலையது மறமைப்பயன் கூறப்பட்டது. இம்மைப்பயன் புகழ். அதனையிறுதிக்கட் கூறுப.

தெளி.—(இ-ன்). வாழ்வாங்கு - (இல்லறத்தோடு கூடி) வாழுமியல் பினுள், வையத்துள்-மண்ணுலகத்தின், வாழ்பவன்-, (மண்ணுலகத்தானே யாயினும்), வானுறையும் - விண்ணுலகத்தில் விருக்கின்ற, தெய்வத்துள் - தேவருள், வைக்கப்படும் - (ஒருவனுக) வைத்து (கன்ருக) மதிக்கப்படுவான், (எ-று).

(வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் இறந்த)பின்பு தேவனுய்ப்பிறந்து அவ்வறப்பயனுகிய சுகத்தை அனுபவித்தல் நிச்சயமாதலின் 'தெய்வத்துள் வைக்கப்படும்' எனறார். இதனுல் இல்லறத்தின் மறமைப்பயன் சொல்லப்பட்டது. இம்மைப்பயன்புகழ். அதை இறுதியி(புகழதிகாரத்தில்)ற் கூறுவர்.

(க-து). இல்லறத்துள் வழுவாது வாழ்பவன் தெய்வத்துளொருவனுக வைத்து மதிக்கப்படுவா னென்பது.

10. He who on earth has lived in the conjugal state as he should live, will be placed among the gods who dwell in heaven.



இரண்டாம் – அதிகாரம்.

வாழ்க்கைத்துணை நலம்—*The Virtue of Wife.*

பரி.—அஃதாவது அப் பில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதிகார முறைமையும் இதனுளே விளங்கும்.

தெளி.—அஃதாவது அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவாளது மாண்மையாம். அதிகாரமுறைமையும் இதனுலேயே விளக்கும்.

¶ "இம்மையிற் சுகத்தையும், மறுமையிற் சாஸ்வதமான புண்ணிய லோகத்தையும் எவனுடைய விரும்புகின்றனே அவன் இருகன்மாசிரமத்தை முயற்சியோடே காப்பாற்றல் வேண்டும்" என்பதுமனுதரு சாஸ்திரம்.

க. மனைத்தக்க மாண்புடைய ளாசித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

ப.—(இ-ன்). மனையறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கைகளை யுடையளாயிற் தன்னைக் கொண்டவன்து வருவாய்க்குத்தக்க வாழ்க்கையை யுடையாள் அதற்குத்துணை, (எ-று).

நற்குணங்கள்வன:—துறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட் டருளுடைமையு முதலாயின. நற்செய்கைகளாவன:—வாழ்க்கைக்குவேண்டும் பொருள்களறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில் வன்மையும், * ஒப்புரவு செய்தலு முதலாயின. வருவாய்க்குத்தக்க வாழ்க்கையாவது முதலியறிந் ததற்கியைய வழித்தல். இதனுள் † இவ்விரண்டு நன்மையுஞ் சிறந்தனவென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). மனைத்தக்க - இல்லறத்திற்குத்தக்க, மாண்புடைய ளாகி - நற்குண நற்செய்கைகளை யுடையவளாகி, தற்கொண்டான் - தன்னைக்கொண்ட கணவனது, வளத்தக்காள் - வரவுக்குத் தக்க வாழ்க்கையை யுடையவள், வாழ்க்கை - அவ்வில்லற வாழ்க்கைக்கு, துணை - துணையாவாள், (எ-று).

நற்குணங்களாவன:—துறந்தவரை யுபசரித்தலும்,விருந்தினரை யுண்பித்தலும், வறியவரிடத்து அருளுடைமையும் முதலானவையாம். நற்செய்கைகளாவன:—இல்வாழ்க்கைக்குவேண்டும் பொருள்களறிந்து காப்பாற்றி வைத்தலும், உணவுகளைச் சுவைப்படச் சமைத்தற்றொழில் வல்லமையும், உபகாரஞ்செய்தலும் முதலானவையாம். வருவாய்க்குத்தக்க வாழ்க்கையாவது (பொருளின்) முதலியறிந்து அதற்குத் தக்கபடி செலவுசெய்தல். இதனுள் இவ்விரண்டு நன்மைகளும் சிறந்தனவென்பது சொல்லப்பட்டது.

(கு-து). நற்குண நற்செய்கை யுடையவளாய்த் தனது கணவனது வரவுக்குத் தக்கவாறு செலவுசெய்பவள் இல்வாழ்க்கைக்குத் துணையாவா ளென்பது.

1. She who has the excellence of home virtues, and can prudently expend the property within the means of her husband, is a help in the domestic state.

உ. மனமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனமாட்சித் தாயினு மில்.

பரி.—(இ-ள்). மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள்

* ஒப்புரவுசெய்தல் - உலகநடையையறிந்து அதற்குத்தக நடத்தல்.

† மனைத்தக்க மாண்புடையளாதல், தற்கொண்டான்வளத்தக்காளாதலென்னு மிரண்டு நன்மையும்.

ஒருவனில்லாளிடத் தில்லையாயின், அவ்வில்வாழ்க்கை செல்வத்தான் எற்றுண்ண மாட்சியையுடைத்தாயினும் அஃதுடைத்தன்று, (எ-று).

'இல்' என்றார்; பயன்படாமையின்.

தேவி.—(இ-ன்). மனைமாட்சி - இல்லறத்திற்குத் தருக்க நற்குண நற்செய்கைகள், இல்லாள்கண் - (ஒருவனது) மனைவாளிடத்தில், இல்லாயின் - இல்லையானால், வாழ்க்கை - அவ்வில்வாழ்க்கையானது, எனைமாட்சித்தாயினும் - (செல்வத்தால்) எவ்வளவு பெருமையை உடையதாயினும், இல் - (அப்பெருமையை) உடையதன்று, (எ-று)

(அவ்வாழ்க்கை அம்மனைவியால்)பயன்படுவதின்மையால்'இல்'என்றார்.

(க-து). நற்குண நற்செய்கையுடைய மனைவி இல்லாவிடத்து இல்வாழ்க்கை எவ்வளவு சிறப்புடைத்தாயினும் பயன்படுவதில்லை என்பது.

2. If the wife be without domestic excellence, whatever (other) greatness (be possessed in) the conjugal state, it is nothing.

கூ. இல்லதே னில்லவண் மாண்பானு ளுள்ளதே
னில்லவண் மாணக் கடை.

பரி.—(இ-ள்). ஒருவனுக் கில்லாள் நற்குண நற்செய்கைய ளாயினக்கால் இல்லாதது யாது? அவள் அன்ன வல்லாக்கால் உள்ளது யாது? (எ-று).

‡ மாண்பென்னுங் குணத்தின் பெயர் குணியின்மே னின்றது.

இவை யிரண்டு பாட்டானும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியே, பிறவல்ல என்பது கூறப்பட்டது.

தேவி.—(இ-ன்). (ஒருவனுக்கு) இல்லவள் - மனையாள், மாண்பானுள் - நற்குண நற்செய்கையை யுடையவளானுள், இல்லது - இல்லாதது,

---

‡ 'பண்பென்பன அவற்றின் (பண்பியின்) குணமாய்த் தோன்றித் தமக்கு வேறு குணமின்றி நிகழ்வன' என்றும், "பண்பியென்பன காட்சிப் பொருளும் கருத்துப்பொருளுமாகிய இயங்குதிணையும் நிலைத்திணையுமாம்" என்றும், குணகுணிகளிலக்கணம் தண்டியலங்காரவுரையிற் கூறப்பட்டிருக்கிறது. பண்பெனினும் குணமெனினும் ஒக்கும்; பண்பியெனினும் குணியெனினும் ஒக்கும். குணியே நிரவியமெனப்படும். ஈண்டு மாண்பெனினும் குணம் அதனையுடைய குணியை (இல்லானை) பண்பாகுபெயரா லுணர்த்துதல் பற்றி 'மாண்பென்னுங் குணத்தின்பெயர் குணியின் மேனின்றது' என்று கூறப்பட்டது. பிரபோதவிவேகாசிரியர் இக்குறளை கூறுமிடத்து "இல்லதே னில்லவண் மாண்பானுள், மாண்புடையாளானுள், இது குணங்குணியான்று" என்றனர்.

என் ? யாது? இல்லவள் - அம்மனையாள், மாணக்கடை - அக்கற்புண நற் செய்கைகளுடையவளாகா நிருந்தால், உள்ளது-இருப்பது, என்-யாது? ()

மாண்பென்னும் குணத்தின் பெயர் அதனையுடையவளுக் காயிற்று.

இவ்விரண்டோட்டாலும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது மனையாளது நற்குண நற்செய்கையே, மற்றவையல்லவென்பது சொல்லப்பட்டது.

(க-து). மனையவள் நற்குண நற்செய்கை யுடையவளாயின் இல்லாத பொருள் யாது மில்லை; அவள் அவை யில்லாதவளாயின் உள்ளபொருள் யாது மில்லை என்பது.

3. If his wife be eminent (in virtue) what does (that man) not possess? If she be without excellence what does (he) possess?



ச. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

பரி.—(இ-ள்). ஒருவனெய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்கள் யாவையுள? அவண்மாட்டுக் § கற்பென்னுங் கலங்கா நிலைமை யுண்டாகப் பெறின், (எ-று).

கற்புடையாள்போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிறவின் மையின் 'யாவுள' என்றார். இதனால் கற்புநலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

தேவி.—(இ-ன்). (ஒருவன் அடையும் பொருள்களுள்) பெண்ணின் - மனையாளிலும், பெருந்தக்க-உயர்வாகிய பொருள்கள், யா - எவை, உள - இருக்கின்றன, கற்பென்னுந்திண்மை - (அவளிடத்து) கற்பென்னும் கலங்கா நிலைமை, உண்டாகப் பெறின் - உண்டாயிருக்கப் பெற்றால், (எ-று).

கற்புடைய மனைவியைப்போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாம் பொருள்கள் வேறில்லாமையின் 'யாவுள' என்றார். இதனால் கற்புநலத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் பெறும் பொருள்களுள் கற்புடைய மனைவியினும் மேம்பட்டது ஒன்று மில்லை என்பது.

§ "கொண்டானிற் சிறந்த தெய்வம இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுக வெனவும் இருமுது குரவர்கற்பித்தலானும் அத்தணர் சிறந்தஞ் சான்றோர் தேயத்தும் ஐயர்பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகும் ஒழுக்கத்தலைமகன் கற்பித்தலானும் கற்பாயிற்று. இனித்தலைவனுங் களவின்கண் ஓரையும் காளுந் நிதென்று அதனைத் திறந்தொழுகினுந்போல ஒழுகாது ஒத்தினுங் காரணத்தினும் யாத்த நெறிப்பிலக்கணங்களைக் கற்பித்துக்கொண்டு அறவுறத்திற் செல்லுந் தலையும் இல்லற நிகழ்த்துதலிற் கற்பாயிற்று":—நச்சினார்க்கினியர்.

4. What is more excellent than a wife, if she possess the stability of chastity?

இ. தெய்வந் தொழாஅள் கொழுநற் ¶ றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

பரி.—(இ-ள்) பிறதெய்வந் தொழாது தன் தெய்வமாகிய கொழுனைத் தொழாநின்று துயிலெழுவாளாகப் பெயரென்று சொல்ல மழை பெய்யும், (எ-று).

தெய்வந் தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங்காலத் தாகலின் 'தொழுதெழுவாள்' எனறார். () தொழாதின் றென்பது தொழுதெனத் நிரிந்து நின்றது. தெய்வந்தா னேவல்செய்து மென்பதாம். இதனுட் கற்புடையவளது ஆறறல் கூறப்பட்டது.

தெ.—(இ-ள்). தெய்வம் - (பிற) தெயவத்தை, தொழாஅள் - வணங்காளாயி, கொழுநன் - (தனது தெய்வ மாகிய) கணவனே, தொழுது-வணங்கினின்று, எழுவாள் - (நித்திரைவிட்டு) எழுந்திருப்பவள், பெய்யென - பெய்யென்று சொல்ல, மழை - மழையானது, பெய்யும்—, (எ-று),

கடவுளே வணங்குவதற்கு மனந்தெளிந் திருப்பது துயிலெழுங் கால த்திலாகலின் 'தொழுதெழுவாள்' எனறார். தொழுதென்பது தொழா தின்றென்பதன் விகாரம். தெய்வமும் கற்புடையவளுக்கு ஏவல் செய்யு மென்பதாம். இதனால் கற்புடையவளது வல்லமை சொல்லப்பட்டது.

¶ 'தொழுதெழுவாள்' என்பதற்குப் பரிமேலழகர் 'தொழா தின்று துயிலெழுவாள்' எனறுரை கூறியது அசம்பாவிதமாகும்; 'எழுந்து தொழுவாள்' எனப்பொருள் பதித்தவேண்டும், தொழாதின்று துயிலெழுதல் கூடாது என்று கூறுவாருமுளர். துயில்கூடுங்காலத்து எத்தஸ்மிருந்தி (க்ஸேவ)அர்த்தகாரணத்தில் சம்ஸ்காரமா(வாசனையா)கின்றதோ அத்தஸ்மிருந்தி விழிக்கும் காலத்துச் சம்ஸ்கார வாயிலாக அவ்விழித்தலே முன்னுக்கொண்டு வெளிப்பட்டு முன்பின் என்பதின்றி நிகழுதல் பிரசித்தமாயிருத்தலின், 'தொழுதெழுவாள்' என்பதற்குப் பரிமேலழகர் அனுபவமுதிர்ச்சி காரணமாகத் 'தொழாதின்று துயிலெழுவாள்' என்றுரை கூறியதை மறுத்துக்கூறியது அசம்பாவிதமா மென்க. மேலும், திருக்கோவையாரின் "நினைவரங்காத்து" என்னுஞ் செய்யுளிலுள்ள "தொழுதெழுவார்" என்பதற்குப் பேராசிரியர் "தொழாதின்று துயிலெழுவார்" என்றும், 'தொழுதெழுவார் என்றது துயிலெழுங்காலத்தல்லது முன்னுணர் வின்மையான் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் என்றவாறு." என்றும் கூறியவாற்றானுமறிக.

() தொழாதின்றென்னும் செய்யென்னும் வாய்பாட்டு வினையெச்சம் தொழுதெனச் செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சமாகத் திரிந்து நின்றது. ஆகில் - நிகழ்காலவிடைநிலை.

(க-து). பிறதெய்வத்தைதவணங்காது கணவனைத் தெய்வமாக வணங்கி யொழுகுகின்றவளது சொல் பிழைபடுவதில்லை என்பது.

5. She who does not worship God, but who on rising worships her husband, if she say " Let it rain, " it will rain.



கூ. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

பரி.—(இ-ள்). கற்பினின்றும் வழுவாமற் றன்னைக்காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டிமுதலியவற்றாற் பேணி * இருவர்மாட்டு நன்மை யமைந்த புகழ் நீங்காமற் காத்து மேற்சொல்லிய நற்குண நற் செயல்களினும் கடைபிடி யுடையாளே பெண்ணெவாள், (எ-று).

தன்மாட்டுப் புகழாவது வாழ்நூர் கற்பாற் றன்னைப் புகழ்வது. சோர்வு - மறவி. இதனாற் றற்புகழ்தற் றெப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). தற்காத்தி - (கற்பினின்றும் வழுவாமல்) தன்னைக் காப்பாற்றி, தற்கொண்டாற்பேணி-தன்னைக்கொண்ட கணவனையும் (உண்டி முதலானவற்றால்) உபசரித்து, தகைசான்ற-(தம்மிருவரிடத்தும்) நன்மையமைந்த, சொற்காத்து-புகழை (நீங்காமற்) காப்பாற்றி, சோர்விலாள் - (முற்கூறிய நற்குண நற்செய்கைகளிலும்) உறுதியுடையவளே, பெண் - பெண்ணெவாள், (எ-று).

தன்னிடத்துப் புகழாவது (தான்)வாழும் ஊரார் தற்புடைமைபற்றித் தன்னைப் புகழுதல். சோர்வு - மறத்தல். இதனால். தன்னைப் புகழ்தலின் றெப்புச் சொல்லப்பட்டது.

(க-து). கற்பிற்றவறாது தன்னைக் காத்துத் தன்கணவனையு முபசரிக்குங் கீர்த்தியமைந்த நற்குண நற்செய்கை யுடையவளே மனையியாவாள் என்பது.

6. She is a wife who unweariedly guards herself, takes care of her husband and perserves an unsullied fame.



எ. † சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

---

* இருவர்மாட்டு நன்மை யமைந்த புகழாவது இவளைக் கொள்ளுவ தற்கு இவன் என்னதவஞ்செய்தானேனெனக் கொண்டவனையும் கற்புடை மையைக்கண்டு அவன் மனையியையும் அவர்கள் வாழும் ஊரார்புகழ்தலாம்.

† " மாதாகள் தங்களைத் தம்மேகாத்தல்வேண்டும், அதுவே அவர்களுக்குச்சிறந்த காவலாகும். சிறந்த காவலரைவைத்துப் புறத்தேபோகவிடாது வீட்டிலியே நன்றாகக் காத்தாலும் அதனாலவர்கள் காக்கப்படுவதில்லை":—மநுதருமசாஸ்திரம்.

பத.—(இ-ள்). மகளிரைத் தலைவர் சிறையாற்காத்துங் காவ லென்ன பயனைச்செய்யும்? அவர் தமது சிறையாற் காத்துங் காவலே தலையாய காவலர்து (எ-று).

‡ வை—மதிலும் வாயிற்காவலு முதலாயின. § கிறை—கெஞ்சைக் கற்புநெறியினிறுத்தல். காவல் இரண்டினும் கிறைக்காவலில்வழி யேனைக் கிறைக்காவலாற் பயனில்லை யென்பார் 'கிறைகாக்கும் காப்பதெ வ்' என்றார். எகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இதனுற் றற்காத்தற் றெப்புக் கூறப் பட்டது.

தேவி—(இ-ள்). மகளிர் - பெண்டிரை, (தலைவர்), கிறை - கிறையி னால், காக்கும் - பாது காக்கும் காப்பு - காவலானது, எவன் - என்னபிர யோசனத்தை, செய்யும்—, கிறை - (தமது) கிறையால், காக்கும் - (அவர்) பாதுகாக்கும், காப்பே - காவலே, தலை - முதன்மையான காவல், (எ-று).

கிறை - மதிற்காவல் வாயிற்காவல் முதலானவை. கிறை-மனதைக் கற்பின்வழியிலே நிறுத்தல் கிறைக்காவல் கிறைக்காவலென்று மிரண்டி னும் கிறைக்காவல் இல்லாத விடத்து மற்றைச் கிறைக் காவலால் பயன் இல்லை என்பார் 'கிறைகாக்கும் காப்பதெ வ்' என்றார். காப்பே என்னும் எகாரம் பிரிநிலை. இதனுல் தற்காத்தலினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து). பெண்கள் கற்பால் தங்களைக் காத்துக் கொள்ளுங் காவலே காவலாவதன்றி யேனையகாவல் காவலாகாது என்பது.

7. What avails the guard of a prison ? The chief guard of woman is her chastity.

அ. ¶ பேற்றுற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழு முலகு.

பரி.—(இ-ள்). பெண்டிர் தங்கை யேய்திய கணவனை வழிபடுதல் பெறுவாயின், புத்தேளிர் வாழும் உலகின்கண் அவராற் பெருத் சிறப் பினைப் பெறுவர், (எ-று).

வழிபடுதலென்பது சொல்லெச்சம். இதனுற் றற்கொண்டாற்பேணிய மனிர் புத்தேளிராற் பேணப்படுவ ரென்பது கூறப்பட்டது.

‡ வையாவது தானினைத்தவா றெழுதுதலின்றிப் பிறர் கினைத்த வாறே யெழுதும்படி காத்தல்.

§ "கிறையெனப் படுவது மறைபிற ரியாமை":—வரிற்றொகை. "காப்பான காத்தக் கடிவன கடிந்த ஒழுகும் ஒழுக்கும்":—சக்கோர்.

¶ "மாதர்சட்கு ஐம்பெருமும்வேலி,உபவாசம், விரதமுதலியன கற் றாமசவிளக்கு; கணவனுக்குப் பணிவிடை செய்வதனுலேயே சுவர்க்கத் திற் பெருமை யடைகிருர்கள்":—மதாருமசாஸ்திரம்.

க்ஏ மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல னன்மக்கட் பேறு.

பரி.—(இ-ன்). ஒருவற்கு நன்மையென்று சொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளே; அவைதமக்கு நல்ல அணிகல மென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலே, (எ-று).

அறிந்தோரென்பது எஞ்கின்றது. மற்று - அசைகிலே. இதனால் வாழ்க்கைத்துணைக் காவதோர் அணிகலங்கூறி, வருகின்ற அதிகாரத்திற் குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

தேவி.—(இ-ள்). (அறிந்தோர்) மனை - மனையாளது, மாட்சி - நற் குண நற்செய்கைகளே, மங்கலம்-(ஒருவனுக்கு) நன்மையாம், என்ப-என்று சொல்லுவர், நன்மக்கட்பேறு - நல்ல புதல்வரைப் பெறுதலே, அதன்-அக்கற்குண நற்செய்கைகளுக்கு, நன்கலன் - நல்ல ஆபரணமாம், (என்ப - என்று சொல்லுவர்), (எ-று).

அறிந்தோரென்பது குறைந்து கின்றமையின் சொல்லெச்சம். மற்று-அசை. இதனால் வாழ்க்கைத் துணைக்காவதோர் ாணிகலஞ் சொல்லி, அதனால் பின்வருவதாகிய அதிகாரத்திற்குத் தோற்றுவாய் (தொடக்கம்)செய யப்பட்டது.

(க-து). மனையாளது நற்குண நற்செய்கைகள் அவளதுகண வனுக்கு நன்மையைத் தருவனவாம்; அவள் நல்லபுத்திரரைப் பெறுதல் அவற்றிற் காபரணமாம் என்பது.

10. The excellence of a wife is the good of her husband: and good children are the jewels of that goodness.

மூன்றும் – அதிகாரம்.

புதல்வரைப் பெறுதல்—Obtaining Children.

பரி.—அஃதாவது i. இருபிறப்பாளர் முவரானும், ii. இயல்பாக இலக்கப்படுங் கடன் மூன்றனுள் iii முனிவர் கடன் தேவியானும்,

i. இருபிறப்பாளராவார் - முதற்பிறப்புத் தாயினுலும் இரண்டாம் பிறப்பு உபநயன சம்ஸ்காரத்தாலு முண்டாகப்பெற்ற அந்தண ராசர் வைசியர், உபநயன சம்ஸ்காரம் இரண்டாம் பிறப்பென்பது "திருமார் பின் மலர்மடந்தை திருக்கழுத்தின் மங்கலநா ணென்ன மூன்றும், பெரு மார்பின் வந்தொளிரப் பிறப்பிரண்டா வதுபிறந்து நிறைந்த பின்னர்" என்ற கலிங்கத்துப்பரணி கூறுவதாலுமறிக. இருபிறப்பாள ரெனினும் தவிஜரெனினு மொக்கும்.

ii. "மூன்ற கடன்கழித்த பார்ப்பானும்" என்பதுதிரிகடுகம்.

iii. முனிவர்கடன் தேவியா - (வேதாத்தியயனத்தா) லும், தேவர் கடன் வேள்வியா(யாகஞ்செய்வதா)லும்,தென்புலத்தார்கடன்புதல்வரைப்

தேவர்கடன் வேள்வியாலும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலாலும் அல்லது இறுக்கப்படாமையின், iiii அக்கடனிறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல். அதிகாரமுறைமை மேலே பேறப்பட்டது.

தெளி.—அஃதாவது இருபிறப்பாளர் மூவராலும் தருதியாகச்செலுத்தப்படும் கடன் மூன்றனுள், முனிவர்கடன் கேள்வியாலும், தேவர்கடன் வேள்வியாலும், தென்புலத்தார்கடன் புதல்வரைப்பெறுதலாலும் அல்லது செலுத்தப்படாமையால், அக்கடன் செலுத்துதற்பொருட்டு நல்லமக்களைப் பெறுதலாம். அதிகாரமுறைமை முன்னே பேறப்பட்டது.

க. பேறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

பரி.—(இ-ள்). ஒருவன் பேறும் $$ பேறுகளுள் அறியவேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதல் அல்லது பிறபேறுகளை யாமதிப்பதில்லை, (எ-று).

‡ அறிவென்பது அறிதலைச் செயவதென அத்தொழின்மேனின்றது. காரணமாகிய $ உரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தேவிடுமாதலான், அத்துணியுபற்றி 'அறிந்த' என † இறந்தகாலத்தாற் கூறினர். ‖ 'அறிவறிந்த' என்றதனுன் மக்களென்னும் பெயர் பெண்ணெழுத்தினின்றது. இதனுற் புதல்வர்ப்பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

பெறுதலாலும் அல்லது இறுக்கப்படாமையின்' என்பதன் பொருள் மனுதரும சாஸ்திரம் மூன்று மத்தியாயத்தில் "வேதாத்தி யயனத்தாலே ருஷிகளையும், ஓமத்தினுலே தேவர்களையும், சிரார்த்தத்தினுலே பிதிர்க்களையும்.....திருப்தி செய்வித்தல் வேண்டும்" என்று கூறுவதாலும் நன்கு விளங்கும்.

iiii அக்கடனிறுத்தற் பொருட்டு-தென்புலத்தார் (பிதிர்க்கள்) கடனை (சொர்த்த முதலியன செய்து) செலுத்தும் பிதித்தம்.

$$ புகழ், கல்வி, ஆற்றல், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, தினைவு, நோயின்மை, வாழ்நாளென்னும் பதினறு பேறுகளுள்.

‡ அறிவதென்றும் பாடமுண்டு. $ உரிமை - அறிவுடைமை.

† அறிதற்குரிய மக்களை 'அறிந்தமக்கள்' என இறந்தகாலத்தாற் கூறியது தினைவுபற்றி வந்த காலவழுவமைதி. தினைவு—தெளிவு.

‖ மக்களென்னும் பொதுப்பெயர் அறிவறிந்த என்னும் குறிப்பால் பெண்பாலை யொழித்த ஆண்பாலைக் காட்டியது பற்றி 'அறிவறிந்த' என்றதனுன் மக்களென்னும் பெயர் பெண்ணெழுத்தினின்றது' என்று கூறப்பட்டது. இவ்வாறு வருதல் ஒன்றெழு பொதுச்சொல் எனப்படும். ஈண்டு மக்களென்னும் பொதுப்பெயரில் பெண்ணை யொழித்து ஆணைக் கொண்டதற்கேது "தண்ணறி வுடையோர் நூலொடு பழகினும், பெண்

தெளி.—(இ-ன்). பெறமகற்றன்—(ஒருவன்) பெறும் பேறுகளுள், அறிவறிந்த - அறிவவேண்டுவனவற்றை யறிதற்குரிய, மக்கட்பேறல்ல - புதல்வரைப் பெறுதலல்லது, பிற - மற்றைப்பேறுகளே, யாம்—,அறிவ தில்லை - மதிப்பதில்லை, (எ -று).

அறிவென்னும் பண்புப்பெயர் அறிதலைச் செய்வதென அறிதலைச் செய்யு மத்தொழிலின்மேல் நின்றது. அறியவேண்டுவனவற்றை யறிதற் குக் காரணமாகிய வுரிமை காரியமாகிய அவ்வறிதலே யுண்டாக்கியே விடு மாதலின், அத்தன்மைவுபற்றி 'அறிந்த' என இறந்தகாலத்தாற் சொல்லினர். 'அறிவறிந்த' என்றதனால் மக்களென்னும் பெயர் பெண்பாலே ஒழித்த ஆண்பாலைக்காட்டி நின்றது. இதனால் புதல்வரைப் பெறுதலினது சிறப் புச் சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் பெறும் பேறுகளுள் அறிய வேண்டுவன வற்றை யறிதற்குரிய மக்கட்பேற்றின்மேம்பட்டபேறு இல்லை.

1. Among all the benefits that may be acquired, we know no greater benefit than the acquisition of intelligent children.

---

2. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

பதி.—(இ-ள்). வினையத்தாற் பிறக்கும் பிறப்பெழினுள்ளும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா, பிறராற் பழிக்கப்படாத நற்குண நற்செயலுடைய புதல்வரைப் பெறுவானெனின், (எ-று).

அவன் நீங்கா வளராத தேய்தற்குக் காரணமாகிய கல்வினைகளைச் செய்யும் புதல்வரைப்பெறுவனுயின் என்றவாருயிற்று. பிறப்பேழாவன:—* "ஊர்வ பதினென்கு மொன்பது மாடுட, நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாஞ் - சீரிய, பத்தமாச் சேதவர் பதினெ லன்படைத்த, வத்தமில் ---

ணறி வென்ப பெரும்பேதை மைத்தே" "பேதைமை யென்ப மாதர்க் கணிகலம் " என்றற் றொடக்கத்தனவாய்வரும் பிரயோகங்களாம்.

* இதன்பொருள் ஊர்ந்து செல்லும் பிராணிகளின் பிறப்பின்வகை பதினென்று; மனிதப்பிறப்பின் வகை யொன்பது; நீரில்வாழும் பிராணி கள் பறவைகள் மிருகங்களாகிய இவற்றின் பிறப்பின் வகை தனித்தனிப் பத்துப்பத்து; நிறப்புப் பொருந்திய முறைமையினையுடைய தேவப்பிறப் பின் வகை பதினைந்து; பிரமனும் படைக்கப்பட்ட முடிவில்லாத சிறப் புடைய நிலத்தினையின் பிறப்பின் வகை யிருபது என்பது. இக்குத் தொ கையாகு மெண்பத்து நான்கினையும் என்பத்து நான்கு இலட்சமெனக் கொள்க, என்னை? "நானிலநீர் வைமுட்டை நால்வகை யோனிகளர், மாறு டநீர் வாழ்பறவை மாமிருமி-ஞானமிலா, மண்பட்ட தாவரமென் றேழாய் வரும் பலவா, றெண்பத்தி ரண்டா யிரம்" என்ற கூற்பதினா னென்க.

சேர்த் தாவரா லேத்து." தக்ததாயர் நீவினே தேய்தற்பொருட் டவரை சோக்கிப் புதல்வர் செய்யுந் தானதருமங்கட் கவர் நற்குணங் காரணமாக லின், † பண்பென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மேனின்றது.

தெளி.—(இன்). எழுபிறப்பும்—(வினேவசத்தினுற் பிறக்கும்) பிறப் பெழினும், நீயவை - தன்பங்கள், நீண்டா - (சென்று ஒருவனே) அடை யாவரம், பழிபிறங்கா - (பிறரால்) பழிக்கப்படாத, பண்புடை - நற்குணங் களேயுடைய, மக்கட்பேறின் - புதல்வரைப் பெறுவாளுயின், (எ-று).

அவன் நீவினேபெருகாது குறைதற்குக் காரணமாகிய நல்வினே களேச் செய்யும் புதல்வரைப் பெறுவாளுனல் என்றவாருயிற்று. பிறப்பே தூவண:—தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவர மென்பனவாம், இவற்றின் யோனிபேதம் எண்பத்தினுன்கு நூருயிரமாம். தந்தைதாய்களது நீவினே குறைதற் பொருட்டு அவரைக் குறித்துப் புதல் வர்செய்யும் தானதருமங்களுக்கு அவரது நற்குணம் காரணமாகலின் 'பண் பென்னுங் காரணப்பெயர்தானதருமமென்னுங்காரியத்தின்மேல்நின்றது.

(க-து). பழிக்கப்படாத நற்குணமுடைய புதல்வரைப் பெறு பவன் எழுவகைப் பிறப்பினுக் துன்பமடையான் என்பது.

2. The evils of the seven births shall not touch those who obtain children of a good disposition, and free from vice.

கூ. தம்போரு ளேன்பதம் மக்க ளவர்போரு
டந்தம் வினேயான் வரும்.

பரி.—(ஓ-ள்). தம்புதல்வரைத் தம்போருளென்று சொல்லுவர் அறிந்தோர்; அப்புதல்வர் செய்த் போருள் தம்மை நோக்கி அவர் செய்யும் () நல்வினேயாலே தம்பால் வரும் ஆதலான், (எ-று).

தந்தம்வினே யென்புழித் தொக்குநின்ற ஆறும்வேற்றுமை "முருக னது குறிஞ்சிநிலம்" என்புழிப்போல, * உரிமைப் பொருட்கண் வந்தது, பொருள் செய்த மக்களேப் பொருளென † உபசரித்தார்.

இவை யிரண்டு பாட்டானும் நன்மக்கட்பெற்ருர் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது.

† நற்குணமென்னும் காரணப்பெயர் அக்குணத்தினுரியாளாய நல் வினேகளின்மேல் நின்றதுபற்றி 'பண்பென்னும் காரணப்பெயர் காரியத் தின்மேனின்றது' என்று கூறப்பட்டது.

() நல்வினே:—சொர்த்தமுதலிய சற்கருமங்கள்.

* உரிமை - சுதந்தரம். "பொருளிடங காலமிருவகை தூலனை, வுரி மையாய்த் தோன்ற லுரைக்கப் படுமே" என்பது இலக்கணக்கொத்து.

† உபசரித்தல் - உபசாரம். அஃதாவது ஒன்றன்தன்மையை மற் ருென்றன்மே லேற்றிக் கூறுவது. இது காரியம் காரணமாய வுபசார

தெளி:—(இ-ன்). தம்மக்கள் - தம்முடையபுதல்வரை, தம்பொருள் - தம்முடைய பொருள்கள் என்ப — என்றுசொல்லுவர் (அறிஞோர்), அவர்பொருள் - அப்புதல்வர் சம்பாதித்த பொருள்கள், தத்தம் வினையால் - தம்மைக்குறித்த அவர் செய்யும் நல்வினையினாலே, வரும்—(தம்மிடத்து) வரும் (ஆதலால்), (எ-து).

தத்தம்வினையென்று மிடத்தைத் தொக்குநின்ற ஆறும் வேற்றுமை யுருபு உரிமைப் பொருளது. பொருள் சம்பாதித்த புதல்வரைப் பொருளென வுபசரித்துக் கூறினர். இவை யிரண்டு பாட்டாலும் நல்ல புத்திரரைப் பெற்றோர் அடையும் மறுமைப் பயன் சொல்லப்பட்டது.

(க-து). புதல்வர் சம்பாதித்த பொருள்: அவர்செய்யும் நல்வினையாலாக மறுமையில் பயன் வடிவமாய்ப் பிதாவைச் சென்றடைதலால் அவர் அப்பிதாவிற்குப் பொருளெனப் படுகின்றனர்.

3. Men will call their sons their wealth, because it flows to them through the deeds which they (sons) perform on their behalf.

ச. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

பரி.—(இ-ள்). சுவையான் அமிழ்தத்தினு மிகவினிமை யுடைத்து; தம் மக்களது சிறுகையான் அளாவப்பட்ட சோறு, (எ-று).

சிறுகையான் அளாவலாவது § "இட்டுத் தொட்டுக் கவ்வியுந் தழுதை, செய்புடை யடிசின் மெய்பட விதிர்த்" தல்.

தெளி.—(இ-ன்). தம்மக்கள் - தம்முடைய மக்களது, சிறுகை-சிறிய கைகளால், அளாவிய - அளையப்பட்ட, கூழ் - சோறானது, அமிழ்தினும்-(சுவையினால் மிகுந்த) அமிர்தத்தினும், ஆற்ற வினிது - மிகவு மினிமை யுடையதாம் (எ-று).

வழக்கு. பொருள் - காரியம், மக்கள் - காரணம். இவ்பிரகாச சுவாமிகள் "ஆனிலையே யருமாசெனீபதுபோல வுபசாரிகம்" என்றார். காரணம் காரியமாகவும், காரியம் காரணமாகவும், குணம் குணியாகவும், குணியினை குணவினையாகவும், ஒருபொருளின் வினை மற்றொருபொருளின் வினையாகவும், இடத்தினிகழ் பொருளின்தொழில் இடத்தின்மே லாகவும், வினவினை முதல்வினையாகவும், பிறவாகவும் வரும்பொழுது உபசாரவழக்குக் கொள்ளப் படுமென்க. இஃது இலக்கணையி லடங்கும். இதன் விரிவைப் பிரயோக விவேகம் "மருளதகாரணம்" என்னும் செய்யுளி னுரையிற் காண்க.

§ புறநானூறு எஅ. இதன்பொருள் (தரையிலே) இட்டும், கூடப் பிசைந்த தோண்டியும், வாயாற் கவ்வியும், கையால் தழாவியும், செய்யவுடைய சோற்றை யுடம்பின்கண் படச் சிதறுதல் என்பது.

தெகையாலளாவலாவது - மக்கள் தாய்தந்தையரோடு உடனிருந்து உண்ணும்போது தம் கையால்சோற்றைத்தூவுதல் முதலாயினவாம்.

(க-து). *தாய் தந்தையருக்குத் தம்மக்கள் சிறுகையா லளாவிய சோறுனது அமிர்தத்தினு மிக வினியதாமென்பது.*

4. The rice in which the little hand of their children has dabbled will be far sweeter (to the parent) than ambrosia.

ரு. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

பரி.—(இ-ள்). ஒருவன் மெய்க்கின்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல்; செவிக்கின்பமாவது அவரது சொல்லைக் கேட்டல்;(எ-று).

¶ *மற்று - வினைமாற்று. மக்களது மழலைச் சொல்லே யன்றி அவர் கற்றறிவுடையராய்ச சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின், பொதுப்படச் 'சொல்' என்றார். § தீண்டல் கேட்டலென்னுங் காரணப்பெயர்கள் ஈண்டுக் காரியங்களின்மே னின்றன.*

தேளி.—(இ-ன்). உடற்கு - (ஒருவனது) உடம்பிற்கு, இன்பம் - இன்பமாவது, மக்கண் - மக்களது, மெய் - உடம்பை, தீண்டல் - தொடுதலாம், செவிக்கு - (அவனது) காதிற்கு, இன்பம் - இன்பமாவது, அவர் - அவரது, சொல் - சொற்களை, கேட்டல் - கேட்டலாம், (எ-று).

மற்று - வினைமாற்றுப் பொருளது பின்னேகளது மழலைச்சொல்லே யன்றி அவர் நூல்களைக்கற்று அறிவுடையவராய்ச சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின், அவை யிரண்டிற்கும் பொதுப்படச் 'சொல்' என்றார், தீண்டலாலாய வின்பத்தைத் தீண்டலின்பமென்றும் கேட்டலாலாய இன்பத்தைக் கேட்ட லின்பமென்றும் கூறினர். இங்குக் காரணப்பெயர்கள் காரியகளின்மேல் நின்றவாறறிக

(க-து). *மக்க ளுடலைத் தொடுதல் உடற் கின்பமும், அவர் சொற்களைக் கேட்டல் செவிக் கின்பமுமாம் என்பது.*

5. The touch of children gives pleasure to the body and the sound of their voice is pleasure to the ear.

¶ *மற்றென்பது தீண்டலென்னும் வினையையொழித்துக் கேட்ட லென்னும் வினையைக் கூறு மிடத்து வந்தமையின் வினைமாற்றுப் பொருளதாயிற்று.*

§ *தீண்டல் கேட்ட லென்னுந் தொழிற்பெயர்கள் அத்தொழில்களா லாய இன்பங்களே யீண்டுணர்த்துதல் பற்றி 'தீண்டல் கேட்ட லென்னுங் காரணப்பெயர்கள் ஈண்டுக் காரியங்களின்மே னின்றன' என்று கூறப் பட்டது. இது காரணங் காரியமாய வுபசாரவழக்காம். காரணம் - காரியத்திற்கு நியதமாய் முன்னிற்பது. காரியம் - முன்னின்மைக்கு எதிர்மறை.*

ஈ. குழலினிதி யாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.

பரி.—(இ-ன்). தழலிசை யினிது யாழிசை யினிதென்று சொல்லுவர்; தம் புதல்வருடைய தந்தலைச்சொற்களைக் கேளாதவர், (எ-று).

* குழல் யாழ் என்பன ஆகுபெயர். கேட்டவர் அவற்றினு † மழலைச் சொல் இனி தென்ப சென்பது ‡ குறிப்பெச்சம். இனிமையிருதிபற்றி மழலைச் சொல்லைப் பிறப்பு வகையானும் கூறியவாறு.

இவை மூன்று பாட்டானும் இம்மைப்பயன் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). தம்மக்கள் - தம்முடைய புதல்வரது, மழலைச் சொல் - குதலைச்சொற்களை, கேளாதவர்—, குழல்-குழலினிசை, இனிது-, யாழ் - வீணையினிசை, இனிது - , என்ப - என்று சொல்லுவர், (எ-று).

குழல் யாழ் என்பன அவற்றி னிசைக்காதலின் ஆகுபெயர்கள். கேட்டவர் அவற்றி னிசையிலும் மழலைச்சொல் இனிதென்ற சொல்லுவா ரென்பது குறிப்பெச்சம். இனிமை மிருதிபற்றி மழலைச்சொல்லைப் பிறப்பு வகையாலும் சொல்லியவாறும்.

இவை மூன்று பாட்டாலும் இம்மைப்பயன் சொல்லப்பட்டது.

(க-து). தம்மக்களது மழலைச் சொற்களைக் கேளாதவர் புள் ளாங்குழலினிசை யினிதென்றும், வீணையினிசை யினிதென்றுஞ் சொல்லுவர் என்பது.

6. " The pipe is sweet, the lute is sweet, " say those who have not heard the prattle of their own children.

எ. ¶ தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

பரி.—(இ-ன்). தந்தை புத்தல்வனுக்குச் செய்யு நன்மையாவது கற்றோரவையத்தின்கண் அவரினு மிக்கிருக்குமாறு கல்வி யுடையனாக்கு தல், (எ-று).

* குழல் (புள்ளாங்குழல்) யாழ்(வீணை)என்பன அவற்றாலாய இசைக் காதலின் கருவியாகு பெயராம்.

† மழலைச்சொல் - இனஞ்சொல். அஃதாவது சொல்வடிவம் நன்கு விளங்காதிருப்பது.

‡ குறிப்பெச்சம் - சொல்லாற்றல் பொருளாற்றல்களால் வேண்டி கிற்கும் சொற்கள் குறைத்து நிற்பது; குறிப்பா லுணரப்படுவ தெஞ்சிநிற்றல்.

குறிப்பெச்சம்:—" குறிப்பின்கட்டோன்றிய வெச்சம்" என்பர் நச்சினார்க் கினியர்; இஃதருத்தாபத்தியின்பாற்படும்.

¶ " சான்றோ னாக்குத னந்தைக்குக் கடனே" என்பது புறநானூறு.

பொருளுடைய ஒக்குதன் முதலாயின துன்பம் பயத்தலின், நன்மை யாகாவென்பது கருத்து. இதனும் தந்தை கடன் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). தந்தை - தகப்பனானவன், மகற்கு - புதல்வனுக்கு, ஆற்றும் - செய்யத்தகும், நன்றி-உபகாரமாவது அவையத்து - (கற்றவரது) சபையினிடத்து, முந்தியிருப்ப-(அவரினும்) மேம்பட்டிருக்கும்படி, செய் - (கல்வியுடையவன்) ஆக்குதலாம், (எ-று).

பொருளுடைய ஒக்குதல் முதலானவை பின்னே துன்பத்தைத் தருதலின், அவை நன்மையைத் தருவனவாகா வென்பது கருத்து. இத னால் தந்தை மைந்தனுக்குச் செய்யுமுகடன் சொல்லப்பட்டது.

(கு-து). பிதா பிள்ளைக்குச் செய்யும் உதவி கற்றோர் சபை யில் அவன் கல்வியால் மேம்பட்டிருக்கச் செய்தலாம் என்பது.

7. The benefit which a father should confer on his son is to give him precedence in the assembly of the learned.

அ. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

பரி.—(இ-ள்). தம்மக்களது அறிவுடைமை பெரியநிலத்து மன்னு நின்ற வுயிர்கட் கெல்லாந் தம்மினு மினிதாம், (எ-று).

ஈண்டறிவென்றது இயல்பாகிய அறிவோடு கூடிய கல்வி யறிவினை. மன்னுயி ரென்றது ஈண்டறி வுடையார்மேனின்றது; அறிவுடைமைகண் டின்புறுதற்குரியவர் அவராகலின். இதனைத் $ ருய் தந்தையாரினும் அவை யத்தார் உவப்பரென்பது கூறப்பட்டது.

தெளி.—(இன்). தம்மக்கள் - தம்மக்களது, அறிவுடைமை - அறிவு டைமையானது, மாநிலத்து - பெரியநிலத்தில், மன் - நிலைபெற்ற, உயிர்க் கெல்லாம்—உயிர்களுக்கெல்லாம், தம்மின் - தமக்கு இனிய தாதலினும், இனிது - இனியதாயிருக்கும், (எ-று).

இங்கு அறிவென்றது இயற்கை யறிவோடு கூடிய கல்வி யறிவை. அறிவுடைமை கண்டு மகிழ்தற் குரியவர் அறிவுடையோ ராதலால் இங்கு மன்னுயிரென்றது அறிவுடையார்மேல் நின்றது. இதனால் தாய் தந்தை யிரும் அறிவுடையார் (சபையார்) பெரிதும் மகிழ்வரென்பது சொல்லப் பட்டது.

(கு-து). மக்களது அறிவுடைமையைக் கண்டு அவரது தாய் தந்தையரினும் அறிவுடையார் பெரிதும் மகிழ்வர் என்பது.

8. That their children should possess knowledge is more pleasing to all the powerful creatures of this great earth than to themselves.

$ தந்தையினும் எனவும் பாடமுண்டு. இது பிறழ்ந்தபாடமாம்.

க. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கு நன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

பரி.—(இ-ள்). தான் பேற்றபொழுதை மிஞ்சிச்சியினு மிகமகிழும், நன்மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தானென் றறிவுடையார் சொல்லக் கேட்ட தாயும், (எ-று).

+ வளனின்கட் கண்ட பொதுவுவகையினும் சால்புடைய னெனக் கேட்ட நெய்புவகை பெரிதாகலின் 'பெரிதுவக்கும்' எனவும், பெண்ணியல்பாற் ருனுக அறியாமையின் 'கேட்டதாய்' எனவுங் கூறினுர். அறிவுடையாரென்பது வருவிக்கப்பட்டது; சான்ரோ னெனற் குரியவர் அவராகலின். தாயுவகைக் களவின்மையின், அஃதிதனும் பிரிதலுக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). தன்மகனை—,சான்ரோனென - (கல்வி கேள்விகளினுல்) நிறைந்தோனென்று (அறிவுடையார்) சொல்ல, கேட்டதாய்—, ஈன்ற பொழுதின் - (தான) பெற்றகாலத்து மிஞ்சியினும், பெரிதுவக்கும் - மிகமிஞ்சுவான், (எ-று).

(ஈன்றபோது தனது) தொடையின்மீது மகனைக் கண்ட (போது உண்டாகிய) பொதுவாயெ மிஞ்சியினும் அவன் நிறைந்த கல்வி கேள்விகளையுடையவனென் றறிவுடையார் சொல்லக் கேட்ட (போது உண்டாகிய) நெய்பாயெ மிஞ்சிநெ பெரிதாகலின் 'பெரிதுவக்கும்' எனவும், பெண்மைக் குணத்தினுல் தானுக அறிய மாட்டாமையால் 'கேட்டதாய்' எனவும் சொல்லினுர். அறிவுடையா ரென்பது வருவிக்கப்பட்டது; சான்ரோ னென்ற அதிதற் குரியவர் அவராகையால், தாய் மிஞ்சசிக்கு அளவில்லாமையால், அஃது இதனுல் பிரித்தல சொல்லப்பட்டது.

(க-து). தன் மகனைக் கல்வியறிவால் மேம்பட்டவனென் றறிஞர் சொல்லக்கேட்ட தாய் பெற்றகாலத்திலும் பெரு மிஞ்சசியடைவாள் என்பது.

9. The mother who hears her son called "a wise man" will rejoice more than she did at his birth

கo. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யேன்னோற்ருன் கோல்லெனுஞ் சோல்.

பரி.—(இ-ள்), கல்வியுடையவனுக்கிய தந்தைக்கு மகன் செய்யுங் கைம்மாறுவது தன்னறிவும் ஒழுக்கமுங் கண்டார் இவன் றந்தை இவனைப் பெறுதற் கென்னதவஞ் செய்தான்கோல்லோ என்று சொல்லுந் சோல்லே கிஞ்சித்துதவி, (எ-று).

+ வளனின் மகற்கண்டபொழுதை யுவகையினும் என்றும் பரட முண்டு. "வயவரும் வருத்தரு மீன்றகா லேலும், கனவன் மகற்கண்டு தாய்மகிழ் தாதலஞ்"னன்பது காண்க.


† *சொல்லென்பது நிகழ்த்துதலாகிய தன் காரணம் தோன்ற நின்றது. நிகழ்த்துதல் அங்ஙனஞ் சொல்ல ஒழுகுதல். இதனால் புதல்வன் கடன் கூறப்பட்டது.*

தெளி.—(இ-ன்). *தந்தைக்கு - (தன்னைக் கல்வியுடையவனாக்கிய) தகப்பனுக்கு, மகன்—, ஆற்றும்-செய்யும், உதவி-பிரதியுபகாரமாவது, (தன்னறிவையும் ஒழுக்கத்தையுங் கண்டவர்) இவன்-இவனது, தந்தை-தகப்பன், (இவனைப்பெறுதற்கு), என் - என்னதவத்தை, நோற்றான்கொல் - செய்தானோ, என்னுஞ் சொல் - என்று சொல்லுஞ் சொல்லே (உண்டாக்குதலாம்), (எ-று).*

சொல்லென்பது உண்டாக்குதலாகிய தன்காரணந்தோன்றுமாறு நின்றது. உண்டாக்குதல் - அப்படிச் சொல்ல நடத்தல். இதனால் புதல்வன் தந்தைக்குச் செய்யுங் கடன் சொல்லப்பட்டது.

(க-து). *பிள்ளை பிதாவிற்குச் செய்யு முதலி இவன் பிதா இவனைப் பெறுதற் கென்னதவஞ் செய்தானோ வென்று பிறர் சொல்ல வொழுகுதலாம்.*

10. (So to act) that it may be said "by what great penance did his father beget him," is the benefit which a son should render to his father.



நான்காம் அதிகாரம்.

அன்புடைமை—Love.

பரி.—அஃதாவது அவ்வாழ்க்கைத் துணையும் புதல்வரு முதலிய நேரடர்புடையார்கட் காத்லுடையனாதல். அதிகாரமுறைமையும் இத்னானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள் பிறத்தலும் அன்பின்பய னாகலின், இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத் துணைமேல் அன்பில்வழி இல்லறம் இனிது நடவாமை, * "அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலுந், துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னே" என்

† *சொல்லென்னுங் காரியம் தனது காரணமாகிய நிகழ்த்துதலின் மேல் நின்றது. அது மகனது அறிவும் ஒழுக்கமுமாம்.*

* *சிலப்பதிகாரம் கொலைக்களக்காதை எகு,எஉ,எக: இதன் பொருள் துறவாது விரதங்காப்பாராகிய (சாவக நோன்பிகளென்னும்) பிரமசாரிகளுக்கு அவர்கள் விரும்புவனவற்றைக் கொடுத்தலும், புலன்களிலிடமுயல் வாராய்த் துறவறத்தில் நின்ற அந்தணரென்னும் வானப்பிரஸ்தரைக்காத்தலும், சக்கியாகளே யெதிர்கொண்டு சென்றுபசரித்தலும், தொன்று தொட்டு கடைபெற்று வரும் ஒப்பற்ற சிறப்பினையுடைய அதிதிகளை யெதிர்சென்றழைத்தலுமாகிய இவற்றை யிழந்த எண்ணே என்பது.*

பதனலும், † அதன லருள் பிறத்தல், ‡ "அருளென்னு மன்பீன்குழவி" என்பதனலு மறிக.

தெளி.—அஃதாவது அல்வில்வாழ்க்கைக்குத் துணையாயிய மனைவியும் புதல்வரும் முதலாயிய சம்பந்த முடையவரிடத்து ஆசையுடையவனு யிருக்கை. அதிகார முறைமையும் இதனுலே விளங்கும். இல்லறத்தைச் செல்லையாக நடத்தலும் பிற வுயிர்களின்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனுதலால், இது வேண்டப்பட்டது. இல்வாழ்க்கைக்குத் துணையாயிய மனைவியின்மீது அன்பில்லாவிடத்து இல்லறம் செல்வையாக நடைபெறு தெனவும் அந்த அன்பினுல் அருளுண்டாகு மெனவுமறிக.

க. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

பரி.—(இ-ன்). அன்பிற்கும் பிறாதியாம லடைத்துவைக்குந் தாழுண்டோ? தம்மா லன்புசெய்யப்பட்டாரது துன்பங்கண்டெழி அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை யெல்லா நம் அறியத்தூற்றும் மூதலான், (எ-று).

உம்மை சிறப்பின்கண் வந்தது. ஆர்வலாது புன்மை கண்ணீர்மேலேற் றப்பட்டது. காட்டியனவைக் செய்தாதாயினும் § அறுமான வனவையான் வெளிப்படு மென்பதாம்.

---

† அதனு லருண்பிறத்தல் - அவ்வன்பினுல் அருளுண்டாதல். அருளாவது தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா வுயிர்களின் மேலுஞ் செல்வதாயை கருணை.

‡ நிருக்குறன் பொருள்செயல் வகை எ. அன்பென்னு மன்னையா லீனப்பட்ட அருளென்னுங்குழக்தை யென்பது.

§ குறியாராய்ச்சி அறுமானமெனப்படும். ஈண்டறுமான மாமாறு:— இராம னிலக்குவனிடத் தன்புடையான்; இலக்குவனது துன்பங் கண்டவிடத்து இராமனதகண்களி லழுகைநீர்வருதலின், என்பது. இதுபற்றி இறையனாரப் பொருள் "அன்பினைந்திணை" என்னுஞ் சூத்திரவுரையில் நக்கீரனுர் "அன்பினைந்திணை பென்றவிடத்து அன்பு அறிவே ஞயின்றே அன்பினுலை ஐந்திணையும் அறிவதெனின், அது குடத்தின் விளக்கும் கடத்தின் வாரும்போல இதகாண் அன்பென்றதற்காட்டலாகாது, அன்புடையாரானருங் கண்டவிடத்து இவையுண்மையான் இங்கு அன்புண்டென்ற அனுமித்துக் கொள்ளற்பாற்று" என்றும், தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல் "அக்கவையொருபால்" என்னுஞ் சூத்திர வுரையில் நச்சினர்க்கினியர் "அன்பென்பது அருட்கு முதலாகி மனத்தி னிகழும் கேயம்; அஃதடையார்க்குப் பிறர்கட் டோன்ற கண்ட வழிக் கண்ணீர் விழுமாகலின் அவ்வருளாரே அன்புடைமை விளங்கு மென்பது. இவையெல்லாம் தத்த மனத்தி னிகழ்ச்சியை வெளிப்படுப்பவாகலின் மெய்ப்பாடெனப் பட்டன" என்றும் கூறியவாற்ருனு மறிக.

இதனால் அன்பினதன்மை உணர்த்தப்பட்டது.

தெளி.—(இ-ன்). அன்பிற்கும் - அன்பினுக்கும், அடைக்கும் - (பிற சரியாமல்) அடைத்துவைக்கும், தாழ் - தாழும், உண்டோ - ,(தம்மால் அன்பு செய்யப்பட்டவரது துன்பங் கண்டவிடத்து), ஆர்வலர் - அன்புடையாரது, புன்கணீர் - (பொழிகின்ற) புல்லியகண்ணீரே, பூசலரும் - (உண்மையிருக்கின்ற அன்பினை எல்லாரும் அறியத்) தூற்றும் (ஆதலால்), (எ-று).

உம்மை அன்பைச் சிறப்பித்து நிற்றலின் உயர்வுசிறப்பும்மை. அன்புடையாரது புன்மை அவரது கண்ணீர்மே லேற்றப்பட்டது. அன்பு பிரத்தியட்சப் பிரமாணத்திற்கு வெளிப்படாதாயினும் அனுமானப் பிரமாணத்தால் வெளிப்படுமென்பதாம் தாழ் - தாழ்ப்பான், ஓ - எதிர்மறை. தூற்றும் - வெளிப்படுத்தும்.

இதனால் அன்பினது உண்மை உணர்த்தப்பட்டது.

(க-து). அன்பு செய்யப்பட்டவரது துன்பத்தைக் கண்டவிடத்தி அன்புடையவரது கண்ணினின்றுவரு மழுகைரீரே யுன்னிருக்கின்ற அன்பை வெளிப்படுத்து மென்பது.

1. Is there any fastening (that can shut in) love? The sorrowful tear of the affectionate will publish the love that is within.

உ. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

பரி.—(இ-ள்). அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளாலும் தமக்கே உரியர்; அன்புடையார் அவற்றனே யன்றித் தம்முடம்பாலும் பிறர்க்குரியர், (எ-று).

ஆறுருபுகளும் பிரிவிலே எகாரமும் விகாரத்தாற் ருெக்கன. ‡ என்பு - ஆருபெயர். என்புமுரியராதல் ¶ “தன்னகம் புக்க குறுநடைப் புறவின்,

‡ என் (எலும்) பென்னுஞ் சிறப்புச் சினைப்பெயர் அதன் முதலாகிய வுடம்பிற் காதலின் சினையாருபெயர். பொதுமைசினை சினையாரு பெயராய் வருதலின்று.

¶ புறநானூறு, சஉ. இதன்பொருள்: தன்னிடத்தை யடைந்த குறியாடையையுடைய புருவினது அழிவினைக் கண்டஞ்சித் (தன்னழிவித் கஞ்சாது) தாசுத் தட்டிலேறிய பிசிச்சக்கரவர்த்தி என்பது. பிசிச்சக்கரவர்த்தி (தன்னைப் பரிட்சிக்குமாறு) புருவடிவெடுத்து வந்த தன்னிடத்தி அடைக்கலம் புகுந்த அக்கினியினிமித்தம் அப்புருவைத் துரத்தி வந்த வேட வடிவங்கொண்டுள்ள இந்திரனுக்குத் தனது மாமிசத்தை யறுத்துத் தாசுத்தட்டில் வைத்து நிறுக்கும்போது, புருவினைடைக்கு

நபுதிகண் டஞ்சித்" தலைப்பட்கோன் ¶ முதலாயினுர்கட் காண்க.

தெளி.—(இ-ள்). அன்பிலார் - அன்பில்லாதவர், (பிறர்க்குப் பயன் படாமையால்), எல்லாம் - எல்லாப்பொருள்களாலும், தமக்கு - தமக்கே, உரியர்-உரியவராவர், அன்புடையார்-, (அவற்றுலே யல்லாமல்), என்பும் - (தம்) உடம்பாலும், பிறர்க்கு - , உரியர் - உரியவராவர், (எ-று).

எல்லா வற்றுலும் என்பானுமென்ற ஆனுருபுகளும் தமக்கே என்ற பிரிநிலே யேகாரமுஞ் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றன. என்பு உடம்பிற் காதலால் ஆகுபெயர். என்பு முரியராருதல் புருவிற்காகத்தலே யேறிய பெரி முதலாயினுேரிடத்துக் காண்க.

(க-து). அன்பில்லாதவர் எல்லாப் பொருளாலுந் தமக்கே யுரியவரும் அன்புடையவர் பிறர்க்குப் பொருளேயேயன்றித் தம் முடம்பையுங் கொடுக்க வுரியவருமாவர் என்பது.

2. Those who are destitute of love appropriate all they have to themselves; but those who possess love consider even their bones to belong to others.

கூ. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

பரி.—(இ-ள்). பெறுதற்கரிய மக்களுயிர்க்கு தடம்போ லேண்டா கிய தொடர்ச்சியினே அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியினே பய னென்று சொல்லுவர் அறிந்தோர், (எ-று).

பிறப்பின தருமை பிறந்த வுயிர்கண்மேல் ஏற்றப்பட்டது. * இயை

மாமிசத்தின் எடை குறைவானது கண்டு,தானே யத்தராசுத்தட்டிலேறிய சமயத்தில் அவ்விரு தேவரும் பிரதியட்சமாகி யசசக்கரவர்த்திக்கு வேண்டிய வரங்களேத் தந்து போயினுரென்பது கதை. இக்கதையின் விரிவைப் பாரதம் ஆரண்ணிய பருவத்திற் காண்க. இச்சக்கரவர்த்தியைப் பற்றி இராமாயணம் "பறவை மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாருக வழங்கின னுல்" என்றும், "புறவொன்றின் பொருட்டால் யாக்கை புண்ணுற வரிந்த புத்தேள்" என்றும் கூறுகின்றது.

¶ முதலாயினுர் என்பதனுல் தமது முதுகெலும்பை விருத்திரா சுரனே வெல்லும் பொருட்டு இந்திரனுக்குக் கொடுத்த தधीचि முனிவரே யன்றி, தனது மரணத்தைக் கருதாது தன்னுடன் பிறந்துள்ள கவச குண்டலங்களே அத்தணவடிவங் கொண்டுவந்து யாசித்த இந்திரனுக்குக் கொடுத்த கர்ணனையும் பிறரையும் கொள்க.

* அன்போடியைவுவந்த (அன்போடு பொருந்துதற்குவந்த) என்பது அன்போடியைந்த என்று வந்தமையின், இயைந்த (பொருந்திய) என்ற வாவினே அதனுடு சம்பந்தமுடைய மற்றொரு வினைக்காய உபசார

ந்த வென்ப துபசார வழக்கு. † வழக்கு - ஆகுபெயர். உடம்போ டியைத் தல்லது அன்புசெய்ய லாகாமையின், அது செய்தற் பொருட் ‡ டித் தொடர்ச்சி யுளதாயிற்றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமையென் றாயிற்று.

தெளி.—(இ-ள்). ஆருயிர்க்கு - பெறுதற்கரிய மனிதருயிர்க்கு, என் போடு - உடம்போடு, இயைந்த - உண்டாகிய, தொடர்பு - சம்பந்தத்தை, அன்போடு - , இயைந்த - பொருந்துவதற்குவந்த, வழக்கு - வழியின்பய னும், என்ப - என்று (அறிந்தோர்) சொல்லுவர், (எ-று).

(மனிதப்) பிறப்பினது அருமை பிறந்த (அப்பிறப்பினை யடைந்த) உயிர்களின்மேல் ஏற்றப்பட்டது. இஃதடைமையின் தரும முடையான் மேலாய உபசார வழக்காம். இயைந்த என்பது இயையவந்த என்பதற்காத லின் இஃது முபசார வழக்காம. வழக்கென்பது அதன் பயனுக்காதலின் ஆகுபெயர். வழக்கு - நீதி, உடம்போடு கூடி யல்லாமல் அன்பு செய்தல் கூடாமையால், அவ்வன்பு செய்தற்பொருட்டு இத்தொடர்ச்சி யுண்டாயிற் றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமையென் றாயிற்று.

(க-து). உயிருக்கு மக்களுடம்போ டுண்டாகிய சம்பந்தம் அன் போடு பொருந்துதற்கு வந்த வழியின் பயனும் என்பது.

3. They say that the union of Atma and in man is the fruit of the union of love and virtue (in a former birth).



சு. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

பரி.—(இ-ள்). ஒருவற்குத் தொடர்புடையார் மாட்டுச் செய்த அன்பு அத்தன்மையாற் பிறர்மாட்டும் விருப்ப முடைமையைத்தரும்; அவ்விருப்ப முடைமைதான் இவற்றுப் பகையும் * நோதுமலும் இல் லேயாய் யாவரு நண்பென்று சொல்லப்படும் அவாவிறந்த சிறப்பினைத் தரும் (எ-று).

உடைமை-உடையனுந் தன்மை; யாவரு நண்பாதல் எல்லாப் பொருளு மெய்துதற் கேதுவாகலின், அதனை 'நாடாச்சிறப்பு' என்றார்.

வழக்காம். அன்பினைப்பற்றிப் பிரபுலிங்கலீலை "தறவற மனைய நஞ்சீர் தாய்மைதற் கல்வி நல்லோர்,உறவொடு மகனக டான மொண்டவம் விரதம், பூசை, யறிவிவை யனைத்து மில்லை யாதர வில்லை யாயின்" என்று கூறுகின்றது.

† வழக்கினுலாய பயனை வழக்கென்றது கருவியாகுபெயர்.

‡ இத்தொடர்ச்சி - உயிர்க்கு (மக்கள்) உடம்போ டுண்டான சம்பந்தம்.

* விருப்பித்தும் வெறுப்பித்தும் விஷயமாகாதிருப்பது நோதுமலெனப்படும். இக்கே நோதுமல் பகைகாட்பில்லார்மேல் நின்றது.

தெளி.—(இ-ன்). அன்பு (ஒருவனுக்குச் சம்பந்த முடையவரிடத்துச் செய்து) அன்பானது, (அத்தன்மையினும்) ஆர்வமுடைமை - (பிறரிடத்தும்) விருப்ப முடைமையை, ஈனும் - தரும், அது - அவ்விருப்ப முடைமையானது, என்பெனும் - (இவனுக்குப் பகைவரும் சொத்தமல்லாமலில்லையாய் யாவரும்) கட்பினென்ற சொல்லப்படுமிற, நாடாச்சிறப்பு - அளவிறந்த சிறப்பை, ஈனும் - தரும், (எ-று).

ஆர்வ முடைமை - விருப்பமுடையவனுக்குத் தன்மை. யாவரும் கட்பினாதல் எல்லாப் பொருளையும் அடைதற்குக் காரணமாமாதலின், அதனை 'நாடாச் சிறப்பு' என்றார்.

(க-து). அன்பு பிறரிடத்து விருப்பத்தையும் அவ்விருப்பம் அவரது நேசத்தையும் தரும என்பது.

4. Love begets desire and that (desire) begets the immeasurable excellence of friendship.

இ. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று நெய்துஞ் சிறப்பு.

பரி.—(இ-ள்). அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர், இவ்வுலகத்து முல்வாழ்க்கைக்கணின்று இன்பநுகர்ந்து அதன்மேற் முறக்கத்துச் சென்றெய்தும் பேரின்பத்தினை, (எ-று).

வழக்கு - ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கணின்ற மனைவியோடும், மக்களோடும், ஒக்கலோடும் கூடி யின்புற்றார் தாஞ்செய்த ‡ வேள்வித்தொழிலாத்தேவராய் ஆண்டும் இனபுறுவராகலின் 'இன்புற்று செய்துஞ் சிறப்பு' என்றார். தவத்தாற் றன்புற் றெய்தக் துறக்க இன்பத்தினை ஈண்டும் இன்புற் றெய்துதல் அன்பானன்றி யில்லையென்பதாம்.

தெளி.—(இ-ன்). அன்பு - அன்பை, உற்று - உடையவராகி, அமர்ந்த - (இல்லறத்தோடு) பொருந்திய, வழக்கு - வழியின் பயனும், என்ப - என்ற (அறிந்தோர்) சொல்லுவர், வையகத்து - இவ்வுலகத்தில், இன்புற்றார் - (இல்வாழ்க்கையில் நின்ற) இன்பத்தை யனுபவித்தவராகி, எய்தும் - (அதன்பின்னே வீண்ணுலகத்திற் சென்ற) அடையும், நெறிப்பு - பேரின்பத்தினை, (எ-று).

வழக்கு அதன் பயனுக்காதலின் ஆகு பெயர். இல்வாழ்க்கையில் நின்ற மனைவியோடும், மக்களோடும், சுற்றத்தாரோடும் கூடி இன்பமுற்றவர் தாம் செய்த வேள்வித் தொழிலினுல் தேவராய்ப் பிறந்த அவ்விடத்தினும் இன்பத்தை யனுபவிப்பாராகலின் 'இன்புற்று செய்துஞ் நெறிப்பு'

‡ வேள்வி - விரும்பிச்செய்வது. சண்டிலீ ஐம்பெரும் வேள்வியையும் குறித்தலின்றது.

என்றார். தவத்தினால் தன்பமுற்று அடையும் விண்ணுலக வின்பத்தை இல்விடத்திலு மின்பமுற்றடைத லன்பாலன்றி இல்லையென்பதாம்.

(க-து). விண்ணுலகி லடையும் பேரின்பம் மண்ணுலகில் இல்வாழ்க்கையிற் பொருந்திய அன்பின் பயனும் என்பது.

5. They say that the felicity (of heaven) and the happiness (of earth) are the fruit of virtue and love (in the conjugal) state.

கூ. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

பரி.—(இ-ள). அன்பு துணையாவது அறத்திற்கே யென்று சொல் லுவர் சிலரறியார்; ஏனமறத்திற்கும் அவ்வன்பே துணையாவது, (எ-று).

ஒருவன் செய்த பகைமைபற்றி உள்ளத்து † மறங்கழ்ந்தழி அவனை நட்பாகக் கருதி அவனமே லன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்கு துணையாமென்பார் 'மறத்திற்கு மஃதே துணை' என்றார்; ‡ "தன்பத்திற் கியாரே துணையாவார்" என்புழிப்போல.

இவை ஐந்தடாட்டாலும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). அறியார் - அறியாதவர் (சிலர்), அன்பு - அன்பானது, சார்பு துணையாவது, அறத்திற்கே - தருமத்திற்கே, என்ப - என்று சொல்லுவர், மறத்திற்கும் - (மற்றைய) மறத்தை நீக்குவதற்கும், அஃதே - அவ்வன்பே, துணை - துணையாவது, (எ-று).

ஒருவன் செய்த பகைமையினால் மனத்தினிடத்து மறந்தோன்றிய விடத்து அவனை நட்பாக நினைத்து அவன்மேல் அன்புசெய்ய அவ்வன்பினால் அம்மறம் நீங்கு மாதலின், மறத்தை நீக்குதற்குந் துணையாமென்பார் 'மறத்திற்கு மஃதேதுணை' என்றார்.

இவை யைந்துபாட்டாலும் அன்பினது சிறப்புச் சொல்லப்பட்டது.

† மறம் - சினம். "கோபம் நீட்டித்து நிற்கின்றது சினம்" என்பர் கச்சினார்க்கினியர்.

‡ திருக்குறள் செஞ்சொடு புலத்தல் க. இதன்பொருள் தன்பத்தை நீக்குவதற்குத் துணையாயிருக்கின்றவர்களெவர் என்பது. மறத்திற்கும் என் பதில் நீக்குவது என்பதை நடுவே கூட்டி 'மறத்தை நீக்குவதற்கும்' என்று கொண்டது தமர்த்தம் எனப்படும். தன்பத்திற்கு என்றவிடத்து தன்பத்தை நீக்குவதற்கு எனப் பொருளுரைத் திருப்பதிலும் நீக்குவது என்பது இடையேகூட்டியிருத்தலறிக. பிரயோகவிவேகதாலார் காரகபட லம் 16-வது செய்யுளினுரையில் "பூலிற்குச் சென்றான்" 'தன்பத்திற் கியாரே துணையாவார்' 'மறத்திற்கு மஃதேதுணை' 'பிணிக்குமருந்து' என்பவற்றின்கண் பறித்தல் நீக்குதல் என நடுவேபெய்து பொருளுரைத் தல் தமர்த்தமென்பதனுங் கொள்க" என்று கூறியிருத்தலு மறிக.

(க-து). அன்பு அறத்திற்கே யன்றி மறத்தை நீக்குதற்குந் துணைபாம் என்பது.

6. The ignorant say that love is an ally to virtueouly, but it is also a help to get out of vice.

எ. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

பரி.—(இ-ள்). என்பில்லாத வுடம்பை வெயில்காய்ந்தாற்போலக் காயும், அன்பில்லாத வுயிரை அறக்கடவுள், (எ - று).

என்பில தென்றதனுள் உடம்பென்பதூஉம், அன்பில தென்றதனுள் உயிரென்பதூஉம் பெற்றும். வெறுப்பின்றியே யெங்கும் ஒரு தன்மைத் தாகிய வெயிலின்முன் * என்பில்லது தன்னியல்பாற் சென்று கெடுமாறு போல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லது தன்னியல்பாற் சென்றுகெடு மென்பதாம். † அதனைக் ‡ காயுமென வெயி லறங்களின்மே லேற்றினர்; ¶ அவற்றிற்கும் அவ்வியல் புண்மையின். இவ்வாறு § " அல்லவை செய்தார்க் கறவுகூற்றம்" எனப் பிறருங் கூறினர்.

தெளி.—(இ-ன்). என்பிலதனை - எலும்பில்லாத வுடம்பை, வெயில் போல - வெயில் காய்ந்தாற் போல, அன்பிலதனை - அன்பில்லாத வுயிரை, அறம் - அறக்கடவுள், காயும் - வருத்தும், (எ-று).

ஏ-அசைநிலை. என்பிலதென்றதனுல் உடம்பென்பதும், அன்பிலதென் றதனுல் உயிரென்பதும் பெறப்பட்டன. வெறுப்பில்லாமலே எங்கும் ஒரு தன்மையதாகிய வெயிலின்முன்னே புழு தனியல்பாற் சென்று கெடும் வகைபோல அப்படிப்பட்டதாகிய அறத்தின்முன்னே அன்பில்லாத வுயிர் தனியல்பாற் சென்று கெடுமென்பதாம். வெயிலின் முன்பும் அறத் தின் முன்பும் என்பில்லதும் அன்பில்லதும் தம்மியல்பாற் சென்று கெடுவ தனைக் காயுமென்ற வெயிலின்மேலும் அறத்தின்மேலுமேற்றிக்கூறினர்; அவ்விரண்டற்கும் அக்காயுந்தன்மை யிருத்தலினென்க. இஃதொன்றன் தருமம் மற்றொன்றற்காய வுபசார வழக்காம்.

(க-து). அன்பில்லாதவனை அறக்கடவுள் வருத்தும். ()

7. Virtue will burn up the Atma which is without love, even as the sun burns up the creature which is without bone.

---

* என்பில்லது - புழு. † அதனை—அவ்வாறு கெடுவதனை. ‡ காய்தல்—காய்ந்து கொல்லுதல்.

¶ அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின்—வெயிலுக்கும் அற (தரும) த்திற்கும் காய்தற் றன்மை யிருக்கின்றமையின்.

§ சான்மணிக்கடிகை - 85: இதன்பொருள் பாவத்தொழிலைச் செய் பவருக்குத் தருமதேவதை யமனுரும் என்பது.

அ. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை † வன்பாற்கண்
‡ வற்றன் மரந்தளிர்த் தற்று.

பரி.—(இ-ள்). மனத்தின்கண் அன்பில்லாத வுயிர் இல்லறத்தோடே கூடிவாழ்தல் வன்பாலின்கண் வற்றலாகியமரந் தளிர்த்தாற்போலும்.

கூடாதென்பதாம். வன்பால்-வன்னிலம். § வற்றலென்பது பால்வினைக்கா அஃறிணைப் படர்க்கைப்பெயர்.

தெளி.—(இ-ள்). அகத்து - மனத்தின்கண், அன்பில்லா வுயிர் - அன்பில்லாத வுயிரானது, வாழ்க்கை-(இல்லறத்தோடுகூடி) வாழ்தலானது, வன்பாற்கண் - வன்பாலென்னும் பாலை நிலத்தில், வற்றன்மரம் - உலர்ந்தாகிய மரமானது, தளிர்த்தற்று - தளிர்த்தாற் போலும், (எ-று).

பாலை நிலத்தில் வற்றல்மரம் தளிர்த்தல் கூடாதபோல அன்பின்பில்லாதவனில்லறத்தோடு கூடிவாழ்தல் கூடாதென்பதாம். வன்பால்-கடினமாகிய பூமி. வற்றலென்பது பால்பகா வஃறிணைப்பெயர்.

(கு-து). அன்பில்லாதவன் இல்லறத்தோடு கூடி வாழுதல் பயனுடையதாகாது என்பது.

8. The domestic state of that man whose mind is without love, is like the flourishing of a withered tree upon the parched desert.

கூ. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

பரி.—(இ-ள்), யாக்கை யகத்தின்கணின்று இல்லறத்திற் குறுப்பாகிய அன்புடைய ரல்லாதார்க்கு ஏனைப் புறத்தின்கணின்று உறுப்பாவனவெல்லாம் அவ்வறஞ்செயிதற்கண் என்ன வுதவியைச் செய்யும்.

* புறத்துறுப்பாவன:—இடனும் பொருளும் ஏவல்செய்வாரு மூதலாயின. தனியொடு கூடாதவழி அவற்றுற் பயனின்மையின் 'ஏவன் செய்

† வன்பார்க்கண் என்றும் பாடமுண்டு.

‡ "வற்றன் மரம்போ னிற்பேனே" என்பது திருவாசகம்.

§ வற்றல் என்பது வினைமுதற் பொருளுணர்த்தும் அல்லீற்றுத் தொழிற்பெயர். அதன்பொருள் வற்றுவ தென்பது; அதன்கண் ஒன்றன்பாலிற்குரிய விகுதியாவது பலவின்பாலிற் குரிய விகுதியாவது இல்லாமை பற்றி 'வற்றலென்பது பால்வினைக்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்' என்று கூறப்பட்டது. வற்றன் மரம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

* "இல்லாளுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற், றெல்லா மிருந்து மவற் கென்செய்யும்" என்பது நன்னெறி.

யும்' என்றார். † உறுப்புப்போதலின் உறுப்பெனப் பட்டன. § யாக்கையிற் கண் முதலிய வுறுப்புக்களெல்லாம் என்னபயனைச்செய்யும்; மனத்தின்கண் உறுப்பாயிய அன்பில்லாதார்க்கென் றுரைப்பாருமுளர். ‡ அதற்கு இல்லறத்தோ டியாது மியைபில்லாமை யறிக.

தேவி.—(இ-ன்). யாக்கையகத்து - உடம்பினகத்தில் (நின்று), உறுப்பு - (இல்லறத்திற்கு) அங்கமாகிய, அன்பிலவர்க்கு - அன்புடையராகாதவர்க்கு, புறத்து - மற்றைப்புறத்தில் (நின்று), உறுப்பெல்லாம் - அங்கமாவனவெல்லாம், எவன் - (அவ்வறஞ் செய்தலில்) என்னவுதவியை, செய்யும்—, (எ-று).

புறத்துறுப்பாவன:—இடமும் பொருளும் எவல் செய்வாரு முதலாயினவாம். அன்பாயிய தீண்மையோடு கூடாதவிடத்து அவ்விடம் பொருள் முதலியவற்றாற் பயனில்லாமையால் 'எவன் செய்யும்' என்றார். உறுப்பையொத்திருத்தலின் இடமுதலானவை உறுப்பெனப்பட்டன. அகம்-உள்.

(க-து). இல்லறத்திற் குறுப்பாய உள்ளன்பில்லா தார்க்கு இடம் பொருள் முதலிய வற்றால் யாதும் பயனின்றும் என்பது.

9. What will all the external members (of the body) avail those who are destitute of love, the internal member of the body?

க0. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

பரி.—(இ-ள்). அன்புமுதலாக அதன்வழிநின்றவுடம்பே உயிர்நிற்கு வுடம்பாவது ; அவ்வன்பில்லாதார்க் குளவான வுடம்புகள் என்பினைத் தோலாற் போர்த்தனவாம், உயிர்நின்றனவாகா, (எ-று.)

இல்லறம் பயவாமையின் * அன்னவாயின. இவை நான்குபாட்டானும் அன்பில்வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

தேவி.—(இ-ன்). அன்பின்வழியது - அன்புமுதலாக அவ்வன்பின் வழியில் நின்ற உடம்பே, உயிர்நிலை - உயிர்நின்ற உடம்பாகும், அஃதி

† உறுப்பு (அவயவம்) போன்ற இடம் பொருள் முதலியவற்றை உறுப்பு என்றது உவமை யாகுபெயர்.

§ யாக்கை - உடம்பின்கண், புறத்துறுப்பெல்லாம் - கண் முதலிய அவயவங்களெல்லாம், எவன் செய்யும் - என்னபயனைச்செய்யும், அகத்துமனத்தின்கண், உறுப்பாயி லவர்க்கு - அங்கமாகிய அன்பில்லாதவர்க்கு என்ற பொருள் கூறுவாரு முளர்.

‡ அதற்கு இல்லறத்தோடியாது மியைபில்லாமை-அவ்வறைக்கு இல்லறத்தோடு யாதொரு சம்பந்தமு மில்லா திருப்பதை.

* அன்னவாயின - எலும்பினைத்தோலால் மூடிய உடம்புளாயின.

லார்க்கு - அவ்வன்பில்லாதார்க்கு (இருப்பனவாய), உடம்பு - உடம்புகள என்பு - எலும்பை, தோல் - தோலினுல், போர்த்த - போர்த்தனவாம், (உயிர்கின்ற வுடம்பாகா), (எ-று).

இல்லறத்தின் பயனைத் தாராமையின் அப்படிப்பட்ட வுடம்புகளா யின. இவை நான்கு பாட்டாலும் அன்பில்லாதவிடத் துண்டாகுங் குற் றஞ் சொல்லப்பட்டது

(க-து). அன்புடையவரே யுயிருடையோராவர், அஃதில்லா தவர் பிணத்திற் கொப்பாவர் என்பது.

10. That body alone which is inspired with love, is the dwelling place of Atma; the body of those who are without love is merely bone covered with skin.

ஐந்தாம் - அதிகாரம்.

விருந்தோம்பல்—*On Hospitality.*

பரி.—(இ-ள்). அஃதாவது † முருவகை விருந்தினரையும் புறந்த்ரு தல். தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துண் முன்னைய விரண்டுங் கட்புல ஞகாதாரை நினைந்துசெய்வன வாகலானும்,பின்னைய விரண்டும்பிறர்க் கீத லன்மையானும், இடை நின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாம் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறகாத அன்புடையிருவர் கூடியல்லது செய்யப்படாமையின், இஃதன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—*அஃதாவது இருவகையாய விருந்தினரையு முபசரித்தல். தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்னும் ஐந் திடத்துஞ் செய்யும் அறங்களுள், முன்னுள்ள இரண்டும் கண்ணுற் காணுதவரை நினைத்துச் செய்வன வாதலாலும், பின்னுள்ள இரண்டும் பிறர்க்குக் கொடுத்த லல்லாமையாலும், நடுகின்ற விருந்தோம்பல் சிறப்பை யுடையதாகி இல்லறங்களுக்கு முதலாயிற்று. வேறுபாடில்லாத அன்பை யுடைய கணவனும் மனையாளும் கூடியல்லது விருந்தோம்பல் செய்யக் கூடாமையால், இஃது அன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.*

க. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

† *இருவகை விருந்தினர் - முன்னறிக் திருக்கின்றமை பற்றி வந்த அதிதிகளும் அஃதில்லாமைபற்றி வந்த அதிதிகளுமாவர். சமைத்துண்டு வாழாதவர் அதிதிகளெனப்படுவர். இதனை "அட்டுண்டு வாழ்வார்க் கதிதிக ளொருநான்கும், அட்டுண்ணு மாட்சி யுடையவர்" என்று அதனெதிர்* *நாங் கூறுதலானுமறிக. எனவே, அவர்கள் இல்வாழ்வோராகா ரென்பது பெற்றும்.*

பரி.—(இ-ன்). மனைவியோடே வளத்திற் செல்லாது இல்லிடத்து வந்து போதன்னோடு போற்றிவாழுஞ் செய்கையெல்லாம் விருந்தி னைப்பேணி அவர்க்குபகாரஞ் செய்தற்பொருட்டே, (எ-று).

எனவே, வேளாண்மை செய்பவழி இல்லிடத்து விருந்தோம்பு தலும் போற்றலும் காரணமாக வருந் தன்பச் செய்கைகட் கெல்லாம் பய னில்லை என்பதாம்.

தேவி.—(இ-ன்). (மனைவியோடுங் காட்டிற் செல்லாமல்) இல் - இல் லிடத்து, இருந்த - , ஓம்பி - (பொருள்களைக்) காப்பாற்றி, வாழ்வ தெல்லாம் - வாழுஞ் செய்கையெல்லாம், விருந்து - விருந்தினரை, ஓம்பி - உபசரித்து, வேளாண்மை - (அவ்விருந்தினர்க்கு) உபகாரத்தை, செய்தற் பொருட்டு - செய்தற்பொருட்டாம், (எ-று).

எனவே, உபகாரஞ் செய்யாதவிடத்து இல்லி லிருத்தலும், பொரு ளைச் சம்பாதித்துக் காப்பாற்றலும் காரணமாக உண்டாகின்ற தன்பச் செய்கைகட் கெல்லாம் பயனில்லை யென்பதாம்.

(க-து). இல்வாழ்க்கையி லிருந்து வாழ்வது விருந்தினரை யுபசரித்து உபகாரஞ்செய்தற் பொருட்டாம் என்பது.

1. The whole design of living in the domestic state and laying up (property) is(to be able) to exercise the benevolence of hospitality.

---

2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

பரி.—(இ-ன்). உண்ணப்படும் பொருள் அமிர்தமே யெனினும் தன்னை நோக்கி வந்த விருந்து தன் இல்லிடத் புறத்ததாகத் தானே யதனை யுண்டல் விரும்புதன் முறைமை யுடைத்தன்று, (எ-று).

சாவாமருந்து - சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. * விருந்தின ரிடமே ஒருகாற் முழுண்டலைச் சவாமருந்தென்பர் ருளாயினும், அதனை ஒழிவேண் டலைப்பிறரும் அமையும். இவை யிரண்டு பாட்டானும் விருந் தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது.

தேவி.—(இ-ன்). சாவா மருந்தெனினும் - (உண்ணப்படும்பொருள்) அமிர்தமேயாயினும், விருந்து-(தன்னை நோக்கிவந்த) விருந்தினர், புறத்த தாக - (தன்வீட்டின்) புறத்திருக்க, தானுண்டல் - தானே (அவரிர்

---

* தன்னைநோக்கி வந்த விருந்தினர் தன்வீட்டின் புறத்தே இருக்க அவரெல்லாம் முழுவதும் உண்ணுதற்குரிய பொருள்களைத் தானுண்ணுதலைச் சாவாமருந்து (அமிர்தம்) என்ற வுவமையி னிருப்பாராயினும் அவ்வாறு முண்ணாது பொதுவாக என்பதாம்.

தத்தை) உண்ணுதல், வேண்டற் பாற்றன்று - விரும்பும் முறைமைகளு புடையதன்மை, (எ-று).

சாவாமருந்து - இறவாதிருத்தற்குக் காரணமாகிய மருந்து. விருந்து புறத்ததாக - விருந்தின்றியே, தானுண்டல் - (ஒருகால்) தானுண்டலை, சாவாமருந்தெனினும் - சாவாமருந்தென்று கூறுவாருரையினும், வேண்டற்பாற்றன்று-அதனை யொழிக என்றுரை கூறினும் பொருந்தும். இவை யிரண்டு பாட்டாலும் விருந்தோம்பலின் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் தன்னை நோக்கி வந்த விருந்தினரை விட்டுத் தானேயுண்ணுதல் தகாது என்பது.

2. It is not fit that one should wish his guests to be outside (his house) even though he were eating the food of immortality.

கூ. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதே லின்று.

பரி.—(இ-ள்). தன்னைநோக்கி வந்த விருந்தை நாடோறும் புரந்தருவானதில்வாழ்க்கை நல்தாவான் வருந்திக் கெடுதலில்லை, (எ-று).

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனற் பொருள் தொலையாது மேன்மேற் பெருக்கு மென்பதாம்.

தெளி.—(இ-ன்). வருவிருந்து - (தன்னைநோக்கி) வந்த விருந்தினரை, வைகலும் - நான்றோறும், ஓம்புவான் - உபசரித்து வருபவனது, வாழ்க்கை - இல்வாழ்க்கையானது, பருவந்து - (வறுமையால்) வருந்தி,பாழ்படுதலின்று - கெடுதலில்லை, (எ-று).

நினந்தோறும் விருந்தினரை யுபசரித்து வருபவனுக்கு அதனற் பொருள் குறையாமல் மேலுமேலும் வளருமென்பதாம்.

(க-து). தன்னிடத்து வந்த விருந்தினரை யுபசரிப்பவனது வாழ்க்கை கேடடைவதில்லை என்பது.

3. The domestic life of the man that daily entertains the guests who come to him, shall not be laid waste by poverty.



எ. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

பரி.—(இ-ள்). திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும், முகமினிய னுயித் தக்க விருந்தினரைப் பேணுவானது இல்லின்கண், (எ-று).

மனமகிழ்தற்குக் காரணம் தன் செல்வம் நல்வழிப்படுதல். தகுதி - னான வொழுக்கங்களை னுயர்தல். இதனற் பொருள் இனைத்தற்குக் காரணங் கூறிய வாறு.

நேனி.—(இ-ன்). முனைமர்த்-முகமலர்ச்சியுடையதும், நல்விருத்-தருந்த விருந்தினரை, ஒம்புவான் - உபசரிப்பவனது, இல் - வீட்டினி டத்து, செய்யாள் - இலக்குமி, அனைமர்த்து - மனமகிழ்ந்து, உறையும் - வாழாநிற்பள், (எ-று).

இலக்குமி மனமகிழ்தற்குக் காரணம் தன்செல்வம் நல்வழியிற்பயன் படுதலாம். விருந்தினர்க்குத் தகுதியாவது ஞானத்தினாலும், ஆசாரத்தினா லும் மேம்படுதல். இதனால் பொருள் வளர்தற்குக் காரணம் சொல்லியபடி.

(க-து). விருந்தினரை உபசரிப்பவனது வீட்டில் செல்வம் நிலைபெற்றிருக்கும் என்பது.

4 Lakshmi with joyous mind shall dwell in the house of that man who with cheerful countenance entertains the good as guests.

---

9. வித்து மிடல்வேண்டேங் கோல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

பரி.—(இ-ள்). முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மிக்க தானந் தான் மிசைவானது விளைபுலத்திற்றவித்திடுதலும்வேண்டுமோ, வேண்டா, (எ-று).

கொல்லென்பது அசைநிலை. * தானே விளையுமென்பது குறிப்பெச் சம். இவை மூன்று பாட்டாலும் விருந்தோம்புவார் இம்மைக்கணெய்தும் பயன் உறப்பட்டது.

தெளி.—(இ-ள்). விருந்தோம்பி - (முன்னே) விருந்தினரையுண் பித்து (பின்), மிச்சில் - மிருந்த வுணவை, மிசைவான் - (தான்) உண்பவ னது, புலம் - விளைநிலத்திற்கு, வித்து மிடல் - விதை விதைத்தலும், வே ண்டுகொல் - வேண்டுமோ, (வேண்டுவதில்லை), (எ-று).

கொல்லென்பது அசைநிலை. (விளைநிலம் ஒருவர் வித்திட வேண்டா மலே) தானே விளையுமென்பது குறிப்பெச்சம். இவை மூன்று பாட்டா லும் விருந்தோம்புவார் இம்மையிலடையும் பயன் சொல்லப்பட்டது.

---

* (திருவாசகம்) "விச்ச நின்றியே விளைவு செய்குவாய் விண்ணு மண்ணை முழுது மியாவையும்" என்பதற்கு (சிவஞானபோதம்) "வித்திலாத சம்பிரதாய மேலுமிலே மேழு மில்லை" என்பது பற்றிப் பிறிதொரு கா ரணம் கருதப் படுவது போன்று, விளைநிலம் வித்திடுதலின்றித் 'தானே விளையும்' என்பதற்கும் பிறிதொரு காரணம் கொள்ளல் வேண்டும். அஃ தாவது விருந்தினரை முன்னே புண்பித்தற் பின்னே தானுண்ணுவா னது வினைநிலத்தில் தெய்வந்தானே வித்திட்டு விளையச் செய்யுமென் பதாம். காரணம் பிரசித்தமாய்க் காணப்படாமைபற்றித் 'தானேவிளையும்' என்று கூறப்பட்டது. காரணம் பிரசித்தமாய் யறியப்படாதனவற்றைப் பிறி தொரு காரணமிலாதிலே தாமே புண்டாயினவென் றுரைக்கும் வழக்குண் மை தமிழறிஞரும் என்பதனை மறை.

(க-து). விருந்தினரை யுபசரிப்பவனது வினைநிலம் தானே வினையும் என்பது.

5. Is it necessary to sow seed in the field of the man who having feasted his guests eats what may remain ?

சு. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

பரி.—(இ-ன்). தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக் கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ண இருப்பான் மறு பிறப்பிற் றேவனாய் வானிலுள்ளார்க்கு நல்விருந்தாம், (எ-று).

† வருவிருந்தென்பது இடவழுவமைதி. நல்விருந்து - † எய்தா விருந்து. இதனுன் மறுமைக்கணெய்தும் பயன் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). செல்விருந்து - (தன்னிடத்து)வந்த விருந்தினரை, ஓம்பி-உபசரித்து, வருவிருந்து - (பின்) வரத்தக்க விருந்தினரை, பார்த்து - எதிர்நோக்கி, இருப்பான் - (தான் அவரோடுண்ண) இருப்பவன் (மறு பிறப்பில் தேவனாய்), வானத்தவர்க்கு - வானிலுள்ள தேவருக்கு, நல்விருந் து - கல்ல விருந்தினனுவான், (எ-று).

தன்மை முன்னிலைகளுக்குரிய வருசொல் விருந்தென்னும் படர்க்கை யோடு கூடி வந்தது இடவழுவமைதியாம். நல்விருந்து - கிடைத்தற்கரிய விருந்தினர். இதனால் மறுமையிலடையும் பயன் சொல்லப்பட்டது.

(க-து). வந்த விருந்தினரை யுபசரித்து வரும் விருந்தினர்க் கெதிர்பார்த் திருப்பவன் மறுமையில் தேவர்களுக்குச் சிறந்த விருந்தினனுவன் என்பது.

6. He who, having entertained the guests that have come, looks out for others who may yet come, will be a welcome guest to the inhabitants of heaven.

† (தொல்காப்பியம்) "தருசொல் வருசொல் லாயிரு னெலியும், தன் மை முன்னிலை யாயீ ரிடத்த" என்னும் விதிப்படி தன்மை முன்னிலை யென்னு மிரண்டிடங்களுக்கு மூரிய வருசொல் விருந்தென்னும் படர்க் கையிடத்தோடு கூடிவந்தமைபற்றி 'வருவிருந்தென்பது இடவழுவமைதி' என்று கூறப்பட்டது. இலக்கணப் பிழை யுடையதாயினும் அறிவுடைய மூன்னோர் லக்கோரித் தமைக்கப்பட்டது வழுவமைதியெனப்படும்.

‡ எய்தாவிருந்து-விதுரர் வீட்டிற்குக் கண்ணபிரானும் அப்பூதியடிக னில்லத்திற்கு அப்பர்சுவாமிகளும் விருந்தாகச் சென்றுபோல்வது.

எ. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

பதி.—(இ-ன்). விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இன்ன வளவிற் றென்பதோ ரளவுடைத்தன்று; அதற்கு அவ்விருந்தின் றகுதி யனவே அளவு, (எ-று).

* ஐம்பெருவேள்வியி னென்றருகின் 'வேள்வி' என்றும், பொரு ளளவு † "தான்பெறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்பெறிதாப் போர்த்த லிடம்" ஆகலின் 'இனைத்துணைத்தென்ப தொன்றில்லை' என் றுங் கூறினர். இதனை இருமையும் பயத்தற்குக்காரணங் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்) வேள்விப்பயன் (விருந்தினரை யுபசரித்தலாகிய) வேள்வியினது பயன், இனைத்துணைதென்பது-இன்னவளவின தென்ப தாகிய, ஒன்றில்லை - ஓரளவினை யுடையதன்று, (அப்பயனுக்கு), விருந் தின் - அவ்விருந்தினரது, துணை-(தகுதி) அனவே, துணை - அளவாம், ().

பிரமயாகம், தேவயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மனிதயாகம் என் னும் ஐம்பெருவேள்வியில் மனிதயாகம் என்னும் விருந்தோம்பலும் ஒன்

* "திருகல்தன் யந்திரம் அல்லது முறம், அம்மி, தடைப்பம், உரல் உலக்கை, தணணீர்க்குட மென்னு மிவ்வைந்தினையு முபயோகப் படுத்திக் கொள்ளுவதால் அவனுக்கு நூறுகைக் கொலைப்பாவங்க ளுண்டாகின்றன". "அவ்வைந்த பாவ[illegible]யும் போக்குவதற்காக மகரிஷிகளால் நிணக் தோறும் ஐந்த மகா யஜ்ஞங்கள் விருகஸ்தனுக்குச் சிரமமாக விதிக்கப்பட் டிருக்கின்றன". "அவ்வைந்த யக்ஞங்களில் வேதமோதுதல் பிரமயக்ஞ யம். அன்னதானமாவது ஜலதருப்பணதானமாவது பிதிர்க்களைக் குறித் தத் திருப்தி செயவது பிதிர்யகயம். தேவதைகளைக்குறித்து அக்னியி லோமஞ் செய்வது தேவயக்யம். வாயச (காக்கை) பலி முதலானவை வைப்பது பூதயக்யம். அதிதிகளுக் குணவிடுவது மானுடயக்யம. ஆ மகா யக்யம் ஐந்த". "இவ்வைந்த மகாயக்ஞங்களையுந் தன் சக்திக்குத் தக்கபடி பெயன் செய்கிறானே அவன் விருகஸ்தாசிரமத்தி லிருந்தபோதிலுமே மேற் சொன்ன ஐந்த கோலைகளின் தோஷங்களையுமடைவதில்லை" என்று மனு தருமசாஸ்திரம் மூன்றாமத்தியாயத்தில் ஐம்பெரும் வேள்வி செயவதற் கேதுசொல்லப்பட் டிருக்கின்றது." ஒண்பிரம மேவேத மோதுதலோ மம்வகுத்தல், எண்டெய்வ மீதல்பலி யேபூதம் - ஒண்டோடீர், வண் ணீர்க் கடனுற்ற லேபிதிர் விருந்தோம்பல், அண்ணீர்மை மானுடயாகம் என்னும் வெண்பாவினாலும் ஐம்பெரும் வேள்வியின் தன்மையுணர்தற் பாற்றும்.

† [illegible]யார் அதன்வலி யுறுத்தல், அ[illegible]
இன்பெ[illegible]மானக்கத்திற் [illegible]யும் வேறுன் அற்மா யிரு ப்பினும் [illegible]யைத் சேர்த்தல் ஆகாயமும் அற்பம்நும்பம் மூழ் வினை (பொருளி கொடுத்தலினாலிய பயன் விருத்தியாகும்)

ருகலின் 'வேள்வி' என்றும், பொருளளவு நிறைதாயினும் சற்பாத்திரத்தித் சேர்ந்தாரின் அதன்பயன்மிகப்பெரிதாமாகலின் 'இனைத்தினைத்தென்ப தொன்றில்லே' என்றும் சொல்லினர். இதனால் இம்மைப்பயன் மறுமைப் பயனென்னு மிரண்டையுந் தருதற்குக் காரணம் சொல்லப்பட்டது.

(க-து). விருந்தினரை யுபசரிப்பதன் பயன் அவ்விருந்தினரது தகுதியினளவே யளவாம் என்பது.

7. The advantages of benevolence cannot be measured; the measure (of the virtue) of the guests (entertained) is the only measure.

அ. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

பரி.—(இ-ன்). நிலையாப்பொருளை வருந்திக் காத்துப் பின் அதனை யிழந்து இதுபோழது யாம் பற்றுக்கோடில மாயினேமென்றிரங்குவர், அப்பொருளான் விருந்தினரை யோம்பி வேள்விப்பயனை யெய்தும் பொறியிலாதார், (எ-று).

‡ *"ஈட்டிய வெண்பொருளைக்,காத்தலு மாங்கே கெடுத்தன்பம்" ஆதலின் 'பரிந்தோம்பி' என்றார்.* ‖ *வேள்வி - ஆகுபெயர்.*

தெளி.—(இ-ன்). விருந்து - விருந்தினரை, ஓம்பி - (நிலையாப்பொருளைக்கொண்டு) உபசரித்து, வேள்வி - வேள்வியினை, தலைப்படாதார்- அடையும் அறிவிலாதவர், பரிந்தோம்பி - (அந்நிலையாப்பொருளை) வருந்திக் காத்து, (பின்பு அப்பொருளை யிழந்து), பற்றற்றேம் - (இப்போது யாம்) ஆதாரமிலமாயினேம், என்பர் - என்றிரங்குவர், (எ-று).

சம்பாதித்த பொருளைக் காத்தலும் பெருந்தன்ப மாதலால் 'பரிந்தோம்பி' என்றார். வேள்வி அதன்பயனுக்காதலின் ஆகுபெயர்.

(க-து). விருந்தினரை யுபசரியாதவர் பொருளைக் காப்பாற்றி வீணே மிழல்தோ மென்றிரங்குவர் என்பது.

8. Those who have taken no part in the benevolence of hospitality shall (at length lament) saying, " we have laboured and laid up wealth and are now without support. '

‡ *வேலடியார் ஈயாமை - ம். இதன்பொருள் சம்பாதித்த நல்ல பொருளைக் காப்பாற்றுவது மப்படியே மிருக்க தன்பம் என்பது.*

‖ *வேள்வி யென்பது அதனாலாய பயனுக்காதலின் கருவியாகு பெயராம்.*

கூ. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டே.

பரி.—(இ-ன்). உடைமைக் காலத் தின்மையாவது விருந்தோம் பலே யிழக்கும் பேதைமை; * அஃதறிந்தார்மாட்டே உளதாகாது, பேதை யார் மாட்டே யுளதாம், (எ-று).

உடைமை - பொருளுடையனுந் தன்மை. பொருளாற் கொள்ளும் பயனே இழப்பித்த உடைமையை இன்மையாக்கலின், † மடமையை இன்மையாக வுபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பலே யிகழின், பொருள் கின்றவழியும் அதனாற் பயனில்லை யென்பதாம். இவையிரண்டு பாட்டாலும் விருந்தோம்பாவழிப்படுங் குற்றம் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). உடைமையுள் - (பொருள்) உடையவனுயிருக்கு காலத்து, இன்மை - வறுமையாவது, விருந்தோம்பல் - விருந்தினரை யுபசரித்தலே, ஓம்பா - (விரும்பாது) இகழும், மடமை - பேதைமையாகும், (அஃது அறிந்தாரிடத் துளதாகாது), மடவார்கண்-அறிவில்லாதவரிடத்தே, உண்டு-உளதாம், (எ-று).

மடமையானது பொருளாற் கொள்ளும் பயனே இழக்கச்செய்து உடைமையை இல்லாமையாக்கலால், அம்மடமையை இன்மையாக உபசரித்தார். பேதைமையால் விருந்தோம்புதலே இகழ்ந்தால், பொருளிருந்தவிடத்தும் அப்பொருளால் பயனில்லை யென்பதாம். இவை யிரண்டு பாட்டாலும் விருந்தோம்பாத விடத்து உண்டாகுங் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க-து). செல்வத்துள் வறுமையாவது விருந்தினரை யுபசரியாமை. அஃதறிவில்லார் விடத்துண்டு என்பது.

9. That stupidity which exercises no hospitality is poverty in the midst of wealth. It is the property of the stupid.

கூ. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

பரி.—(இ-ன்). அனிச்சப்பூ () மோந்துழி யன்றிக் குழையாது; ‡ விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர், (எ-று).

* அஃ தறிவுடையவர்மாட் டென்றும் பாடமுண்டு.

† உடைமைக் காலத்து இன்மைக் கேதுவாயே (விருந்தோம்பலேயிகழும்) பேதைமை இன்மை யென்ற (காரணத்தைக் காரியமாகக்) கூறியதைப் பற்றி 'மடமையை இன்மையாக வுபசரித்தார்' என்று கூறப்பட்டது. இது காரணம் காரியமாய வுபசாரவழக்கு. காரணம்-மடமை; காரியம்-இன்மை.

() மோந்துழியன்றிக் குழையாது-மோந்தலிடத்தல்லாமல் வாடாது.

‡ "ஓரிரா த்திரி பரியந்தம் புனிதாகவந்திருப்பவன் அதிதியெனக் கருதத்தக்கவன்; அவனோடாமல் வாராது இருக்கிறவனுக்கு அதிதி என்ற பெயர்." மனு - 3 வது அத்தியாயம்.

¶ அனிச்சம்-ஒருபெயர். § சேய்மைக்கட் கண்டுழி இன்முகமும் அது பற்றி நண்ணியவழி இன்சொல்லும், ‡ அது பற்றி உடன்பட்டவழி நன்ஞற்றலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள், முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக்கண்ணே வாடி நீங்குதலின், நீண்டியவழி அல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியரென்பதாம். இதனுள் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது.

தேவி.—(இ-ள்). அனிச்சம் - அனிச்சப்பூவானது, மோப்ப - மோந்தவிடத்து, குழையும் - வாடும், (அதுபோல), விருந்து - விருந்தினர், முகந்திரிந்து-முகம் வேறுபட்டு, நோக்க - பார்க்க, குழையும் - வாடுவர், (எ-று).

அனிச்சம்-பொருளாகுபெயர். தூரத்திற் கண்டவிடத்து முகமலர்ச்சி காட்டலும், அம்முகமலர்ச்சி பற்றிச் சமீபத்தில் வந்தவிடத்து இன்சொற் சொல்லுதலும், அவ்வின்சொற்பற்றி உடன்பட்டபோது உபசாரஞ் செய்தலும் என்று விருந்தோம்புவார்க்கு அவசியமிருக்கவேண்டிய மூன்றனுள் முதலாவதாகிய முகமலர்ச்சி யில்லாதபோது விருந்தினர் தூரத்திலிருந்தே முகம்வாடிநீங்குதலால் நீண்டிய விடத்தல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியரா யிருப்பரென்பதாம். இதனுல் விருந்தோம்புவார்க்கு முதலில் முகமலர்ச்சி வேண்டுமென்பது சொல்லப்பட்டது.

(க-து). விருந்தினர் தம்மை இல்வாழ்வார் முகம்வேறுபட்டுப் பார்த்தபோது தாமும் முகம்வேறுபட்டு நீங்கிப்போவர் என்பது.

10. As the Anicham flower fades in smelling, so fades the guest when the face is turned away.

அறம் அதிகாரம்.

இனியவைகூறல்—On Sweetness of Speech.

பரி.—அஃதாவது மனத்தினீங்கின உவகையை வெளிப்படுப்பனவாகிய இனியசொற்களைச் சொல்லுதல். இதுவும் விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின் பின் வைக்கப்பட்டது.

¶ அனிச்ச மென்பது ஒரு மரவிசேடம்; அஃதீண்டு அதன் பூவிற்காதலின் பொருளாகு பெயராம்.

§ "வத்த விருந்து மலராத வதன நோக்கு முன்குழையு
மத்த வடைவா லகத்தன்பை யலர்ந்த முகத்தான் வெளிப்படுத்திச்
சித்த மணிவா யினுற்றோன்றச் சிற்றம் வஞ்சங் கலவாமே
யுத்தஞ் சுவையின் மொழியென்று மூரைததல் வேண்டும் பயன்வே
[ண்டின்"—.விநாயகபுராணம்.

‡ அவை பற்றி என்றும் பாடமுண்டு.

தெளி.—குடிப்பிறப்பு முதலிரண்டின் பயிற்சியை வெளிப்படுத்த வேண்டிய இனிய சொற்களைச் சொல்லுதலாம். இதுவும் விருந்தோம்பு வார்க்கு அவசியம் வேண்டியதாகலின். விருந்தோம்பலின் பின் வைக்கப் பட்டது.

க. இன்சொலா லீரமு மீகைப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

பதி.—(இ-ள்). இன்சொலாவன அன்போடு கலந்து வஞ்சனை யிலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாயிற் சொற்கள், (எ-று).

† ஆல் - அசைநிலை. அன்போடு கலத்தல் - அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை - வாய்மை. மெய்யுணர்த்தார் கெஞ்சிற் செல்லுஞ் செம்மை புடைத்தாய்த் தோன்றலின், அறம் 'செம்பொருள்' எனப்பட்டது. இவனுஞ்சொல்லென இயையும். ‡ வாயென வேண்டாது கூறினர்; நீயசொற்பயிலா வென்ப தறிவித்தற்கு. இதனுள் இன் சொற் இலக்கணம் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). இன்சொல் - இனியசொற்களாவன, ஈரமனஇ-அன்போடு கலந்து, படிறிலவாம் - வஞ்சனை யில்லாதனவா யிருக்கின்ற, செம்பொருள் - அறத்தினை, கண்டார் - அறிந்தவரது, வாய்ச்சொல் - வாய்ச்சொற்களாகும், (எ-று).

ஆல் - அசை. அன்போடு கலத்தல் - அன்புடைமையை வெளிப் படுத்தல். படிறின்மை - மெய்ம்மை. மெய்யுணர்த்தவர் மனத்துக் கெல்லாம் செம்மையுடையதாய்த் தோன்றலால், அறம் 'செம்பொருள்' எனப்பட்டது. இவனுஞ் சொல்லெனக்கூட்டுக. நீயசொற்களைக் கூறுதல் என்பதறிவித்தற்கு வாய் எனவேண்டாது சொல்லினர். இதனுள் இனிய சொல்லுக்கு இலக்கணம் சொல்லப்பட்டது.

---

† ஆல் - சொலால் என்பதிலுள்ள ஆல்.

‡ கண்டார்சொல் என்பதே போதுமானதாயிருக்க அவ்வாறுகூறுது, வேண்டுதலில்லாத 'வாய்' என்பதனைக் கூட்டிக் 'கண்டார்வாய்ச்சொல்' எனக் கூறியது 'நீயசொற்பயிலா' எனத் தாம்வேண்டியதை முடித்தற் கென்க. இதனை "ஒழுக்க முடையவர்க் கொல்லாவே நீய, வழுக் கியும் வாயாற் சொலல்" என்னுங் குறளுரையில் "சொல்லெனவே அமைந்திருக்க 'வாயால்' எனவேண்டாது கூறினர்; கல்லாதவர் பயி ன்றதெனத் தாம் வேண்டியதன் றெரிப்பு முடித்தற்கு" என்றும், "தறா தாரிற் றாய்மையுடையர்" என்னுங் குறளுரையில் "வாய் எனவேண்டாது கூறினர்; நீயசொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதனிழிபு முடி த்தற்கு" என்றும் கூறுவதாலுணர்க. இவ்வாறு வேண்டாதசொல்லுஞ் சொல் விதப்புச் சொல்லெனப்படும். "விதப்புச் சொலி வேண்டியது மினைக் குக்" என்பது சூத்திரம்.

(க-து). அறத்தினே யறிந்தவரது வாய்ச் சொற்களே இனிய சொற்களாம் என்பது.

1. Sweet words are those which imbued with love and free from deceipt flow from the mouth of the virtuous.

உ. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னுகப் பெறின்.

பரி.—(இ-ன). நெஞ்சுவந்து ஒருவற்கு வேண்டிய தோருபோது மூக்கோடேத்தலினும் நன்று, கண்டபொழுதே முகமினியனுய் அதனேடு இனிய சோல்லையு முடையனுகப் பெறின், (எ-று).

† இன்முகத்தோடு கூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள்வயத் ததன்றித் தன்வயத்த தாயினும், அறநெஞ் சுடையார்க்கல்ல தியல்பாக வின்மையின், அதனினும் அரிதென்னுங் கருத்தான் 'இன்சொலனுகப் பெறின்' என்ருர்.

தெளி.—(இ-ன்). முகனமர்ந்து - (கண்ட பொழுதே) முகமலர்ச்சி யுடையவனும், இன்சொலனுக - (அதனேடு) இன்சொல்லையு முடையவ னுக, பெறின்-(ஒருவன்) பெற்ருல் (அது), அகனமர்ந்து - மனமகிழ்ந்து, ஈதலின் - (ஒருவனுக்கு வேண்டியதொரு பொருளைக்) கொடுத்தலினும், நன்று - நல்லதாம், (எ-று).

முகமலர்ச்சியோடு கூடிய இன்சொல் கொடுத்தல் போலப் பொருள் வசத்தனுகாமல் தன்வசத்தனுயிருந்தாலும், அவ்வின்சொல் தருமசிந்தை யுடையவர்க் கல்லது பிறர்க்குச் சுபாவமாக வராதாகையால், அக்கொடுத்தலினும் இன்சொற்சொல்லுதல் அரிதென்னுங்கருத்தால் 'இன்சொலனுகப்பெறின்' என்ருர்.

(க-து). ஒருவன் முகமலர்ந்தினிய சொற்களைச் சொல்லுவானுயின், அவனெருவனுக்கு மனமகிழ்ந்து பொருளைக்கொடுத்தலினுஞ்சிறந்ததாம் என்பது.

2. Sweet speech, with a cheerful countenance is better than a gift made with a joyous mind.

ஊ. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு
மின்சோ லினதே யறம்.

† "ஈகை யரிதெனினு மின்சொலினு னல்கூர்த
லோகோ தொடிது கொடிதம்மா".—நீதிநெறிவிளக்கம்.

பரி.—(இ-ன்). எவ்விடபோழுதே முகத்தான் விரும்பி யினிதாக நோக்கி, பின் தன்னியல்வழி மனத்துடனுகிய இனிய சொற்களைச் சொல்லுதலின் கண்ணதே அறம், (எ-று).

† சோக்கி யென்னும் வினையெச்சம் இன்சொலென அடையடுத்து நின்ற முதனிலைத் தொழிற்பெயர் கொண்டது. § அறம் ஈதலின் கண்ணதென்றவாறு. இவை யிரண்டு பாட்டானும் இன்முகத்தோடு கூடிய இன்சொல் முன்னரே பிணித்துக் கோடலின் விருந்தோம்புதற்கட் சிறந்ததென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). அறம் - தருமமானது, முகத்தானமர்ந்து-(கண்டபோதே) முகத்தால் விரும்பி, (முகமலர்ச்சி காட்டி), இனிதுநோக்கி-இனிதாகப் பார்த்து, (பின்சேர்ந்த விடத்து), அகத்தானும் - மனத்துடனுகிய, இன்சொலினதே-இனிய சொற்களைச் சொல்லுதலி னிடத்ததே, (எ-று).

நோக்கியென்னும் வினையெச்சம் இன் (இனிமை) என்னு மடையடுத்த நின்ற சொல்லென்னு முதனிலைத் தொழிற்பெயரைக் கொண்டது. அறமானது இன்சொல்லினிடத் தண்டாவதன்றி ஈகையினிடத்துண்டாவதன் றென்பதாம். இவை யிரண்டு பாட்டாலும் முகமலர்ச்சியோடு கூடிய இன்சொல் முன்னுகவே விருந்தினரைப் பற்றிக் கொள்ளுதலால் விருந்தோம்புதலிற் றெக்கதென்பது சொல்லப்பட்டது.

(கு-து). அறம் இன்சொல்லி னிடத்ததே யாம் என்பது.

3. Sweet speech, flowing from the heart, (uttered) with a cheerful countenance and a sweet look is true virtue.

ச. துன்பறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சோ லவர்க்கு.

பரி.—(இ-ள்). எல்லார்மாட்டும் இன்பத்தை மிதவிக்கும் இன்சொல்லி யுடையார்க்குத் துன்பத்தை மிதவிக்கும் நல்குரவு இல்லையாம், (எ-று).

ஈ முதலிய பொறிகள் கவை முதலிய புலன்களே துராதையுடைமையின் ‡ 'துவ்வாமை' என்ருர்.யார்மாட்டும் இன்புறூ உமின்சொ

---

† சோக்கி யென்னும் வினையெச்சம் இன்னென்னுமடையடுத்த நின்ற சொல்லென்னு முதனிலைத் தொழிற்பெயர் கொண்டது என்றும் பாடமுண்டு.

§ இன்சொல் வினைலனு வீதலே வித்தாக, வன்சொற் கனைகட்டு வாய்மை யெருவட்டி, யன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீனவோர், பைங்கூழ் தெளலெச்செய்.—அறநெறிச்சாரம்.

‡ திப்பு - அனுபவம், துவ்வாமை—அனுபவியாமை; எனவே, அது வறுமையாயிற் றென்க.

வர்க்குப் பகையும் கொதமலு மின்றி உள்ளது நண்பேயாம்; ஆகவே, அவர் எல்லாச் செல்வமும் மெய்தவரென்பது கருத்து.

தெளி.—(இ-ன்). யார்மாட்டும் - எல்லாரிடத்தும், இன்புறுஉம்-இன்பத்தை மிகச்செய்யும், இன்சொலவர்க்கு-இனியசொற்களை யுடையவர்க்கு, தன்புறாஉம் - தன்பதத்தை மிகச்செய்யும், தவ்வாமை - வறுமையானது, இல்லாகும் - இல்லையாம், (எ-று).

காமுதலிய இந்திரியங்கள் சுவைமுதலிய விஷயங்களை யனுபவியாமையை யுடைமையால் வறுமையைத் 'தவ்வாமை' என்றார். யாவரிடத்தும் இன்பத்தைமிகசெய்யும் இன்சொல்லையுடையவர்களுப்பகையும்கொதமலு மில்லாது இருப்பது நட்பேயாம்; ஆகவே, அவர் எல்லாச் செல்வமும் பெறுவரென்பது கருத்து.

(க-து). இன்சொல்லுடையவர்க்கு வறுமை யுண்டாவதில்லை.

4. Sorrow-increasing poverty shall not come upon those who use in all cases pleasure-increasing sweetness of speech.

சு. பணிவுடைய.னின்சொல னுதை லோருவற்
கணியல்ல மற்றுப் பிற.

பரி.—(இ-ள்). ஒருவனுக் கணியாவது தன்னுந் ‡ றழப்படவோர்கட் டாழ்ச்சியுடையனும் எல்லார்கண்ணும் இனியசொல்லையுழையனுதல்; இவை யிரண்டுமேன்றி மெய்க்கணியும் பிறவணிகள் அணியாகா, (எ-று).

இன்சொல னுதற் கினமாகலின், பணிவுடைமையும் உடன் கூறினர். மற்று - அசைநிலை. வேற்றுமையுடைமையால் 'பிற' எனவும், * இவை போலப் பேழ்கு செய்யாமையின் 'அல்ல' எனவுங் கூறினர். இவை யிரண்டு பாட்டானும் இனியவை கூறுவார்க்கு இம்மைப்பயன் கூறப்பட்டது.

தெ.—(இ-ன்). ஒருவற்கு - ஒருவனுக்கு, அணி - ஆபரணமாவது, பணிவுடையன்-(தன்னுல் வணங்கப்படும்பெரியாரிடத்து) வணக்கமுடைய வனுகி, இன்சொலனுதல் - (எல்லாரிடத்தும்) இனிய சொல்லையுமுடைய னுதலாம், பிற-(இவ்விரண்டு மல்லாமல் உடம்பில் அணியும்) மற்றை யாபரணங்கள், அல்ல - ஆபரணங்களாகாவாம், (எ-று).

ஒருவன் இன்சொல்லுடையவனுவதற்கு இனமாயிருப்பதாதலால் பணிவுடைமையும் உடன் கூறினர். மற்று-அசை. தன்னின் வேறு யிருக்கையால் அணியும் ஆபரணங்களைப்'பிற' எனவும், இவைபோலப் பேழ்கு செய்யாமையால்'அல்ல'எனவும்சொல்லினர். இவை யிரண்டு பாட்டாலும்

---

‡ தாழப்படுவோர் - அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், தம்மூன் னோர், தந்தை, தாயென்னுமிவர்.

* இவைபோல - பணிவுடைமையும் இன்சொல்லும் போல.

[illegible]சொல்லுவதற்கு வரும் இன்னாப் பயன் சொல்லப் பட்டது.

(க-து). ஒருவனுக்கு ஆபரணம் பணிவுடைமையுமின்சொல்லு மாம் என்பது.

5. Humility and sweetness of speech are the ornaments of man, all others are not (ornaments).

கு. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி னியை சொலின்.

பதி.—(இ-ள்). பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ் சொற்களை மனத்தான் ஆராய்ந்து இனியவாக ஒருவன் சொல்லுவானேல், அவனுக்குப் பாவங்கள் தேய அறம் வளரும், (எ-து).

தேய்தலாவது தன் பகையாயே அறம் வளர்தலின் தனக்கு நிகரி ன்றிமெலிதல். † "தவத்தின்முன்னில்லாதாம் பாவம்" என்பதனாலும் ‡ இப் பொருட்டு. நல்லவை நாடிச் சொல்லுஞ் சொலை கடியவாகச் சொல்லின், அதனைச் சென்பதாம். இதனுள் மறைமைப்பயன் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). நல்லவை - (பொருளாற் பிறர்க்கு) நன்மையைத் தருஞ் சொற்களை, நாடி - (மனத்தால்) ஆராய்ந்து, இனிய - இனிமையுள் ளனவாக, சொலின் - (ஒருவன்) சொல்லுவானேயின், (அவனுக்கு), அல் லவை - பாவங்கள், தேய-குறைய, அறம்-தருமமானது, பெருகும் - வள ரும், (எ-து).

பாவம் தேய்தலாவது தன்பகையாயே அறம் வளர்தலால் தனக்கு இருப்பிடமில்லாது வாதேல். நல்லசொற்களேஒருவன் மனத்தாலாராய்ந்து சொல்லுமிடத்தும் கடினமாகச் சொல்லின், அஃது அறமாகா தென்ப தாம். இதனுள் மறைமைப்பயன் சொல்லப்பட்டது.

(க-து). இன்சொற் கூறபவனுக்குப் பாவங்குறையப் புண் ணியம் வளரும் என்பது.

6. If a man while seeking to speak usefully, speaks also sweetly, his sins will diminish and his virtue increase.

எ. தயனின்று நன்றீ பயக்கும் பயனின்ற
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

பதி.—(இ-ள்). ஒருவனுக்கு இம்மைக்கு நீதியையு முண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும், பொருளாற் பிறர்க்கு நன்மையைக் கோரித்து இனிமைப்பண்பி னின்றாத சொல், (எ-து).

---

† காடியார் அறவு—ஏ. இன்பொருள் (ஒருவன்செய்த)" தவம் வினைமுயிட்டத (அவன்முன்செய்த) நிலியாயானது (அவனிடத்து) நிற்கையிட்டதே (முதியுமென்றபடி) ஞான்பது.

‡ இப்பொருட்டு - இக்கர்த்தரிதை யுடையது.

நீதி - உலகத்தோடு பொருந்துதல். § பண்பென்பது ஈண்டதினிரித் தான் இனிமைமே னின்றது. ¶ தலைப்பிரிதல் ஒருசொன்னீர்மைத்து.

தெளி.—(இ-ன்). பயனீன்று - (பொருளிஞற் பிறர்க்கு) நன்மையைக் கொடுத்து, பண்பின்-(இனிமைக்) குணத்தினின்றும், தலைப்பிரியாநீங்காத, சொல் - சொற்கள் (ஒருவனுக்கு), நயனீன்று - (இம்மைக்கு) நீதியையும் உண்டாக்கி, நன்றிபயக்கும் - (மறுமைக்கு) அறத்தையும் தரும். (எ-று).

நீதி - உலகத்தோடொட்டவொழுகுதல். பண்பென்பது இங் ஙினிய வை கூறலென்னு மதிகாரத்தால் இனிமைமேல் நின்றது. தலைப்பிரிதல் - ஒருசொல்.

(க-து). இன்சொற் கூறுபவன் இம்மைக்குரிய நீதியையும் மறுமைக்குரிய தருமத்தையும் உடையவனுவன் என்பது.

7. That speech which, while imparting benefits, ceases not to please will yield righteousness (for this world) and merit for the next world.

அ. * சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

பரி.—(இ-ள்). பொருளாற் பிறர்க்கு நோய் செய்யாத இனிய சொல் ஒருவனுக்கு இருமையினும் இன்பத்தைப் பயக்கும், (எ-று).

மறுமையின்பம் பெரிதாகலின், முற்கூறப்பட்டது. இம்மையின்ப மாவது உலகம் தன்வயத்த தாகலான் நல்லன வெய்தி இன்புறுதல்.

இவை யிரண்டொட்டானும் இருமைப்பயனும் ஒருங்கெய்துதல் வலியுறுத்தப்பட்டது.

---

§ உருவ முதலியவற்றையுணர்த்தும் பண்பென்னும் பொதுப்பெயர் இங்கு இனியவை கூறலென்னு மதிகாரத்திற்கேற்ப இனிமையென்னும் நெப்புப்பண்பி (குணத்தி)ன் மேல் நின்றது. அதிகாரத்தால் வருவித்து முடிப்பதினை வடனூலார் அதஷங்க மென்பர். இதன் விரிவை இலக்கணக் கொத்தின் " அதிகா ரத்தா லவாய்நிலே தன்னல்" என்னுஞ் சூத்திரவுரை யிற் காண்க.

¶ தலைப்பிரித லென்பது இரண்டு சொல்லாகத் தோன்றினுலும் அஃதிண்டு நீங்குதலென்னு மொருபொருளே யுணர்த்துதலின் ஒரு சொல் லின் தன்மையை யுடையதாம். ஈண்டுத் தலையென்பது பொருளுணர்த் தாது நின்ற வுபசர்க்கம்.

* நெமை - துன்பம். அது கடுஞ்சொல்லின் பயனுதலால் 'நிறுமையு ணீங்கிய வின்சொல்' [(நோய்க் கேதுவாகிய) துன்பத்தினின்றும் நீங் கிய வினியசொல்] என்று கூறப்பட்டது.

பரி.—(இ-ன்). தொடையழகின்மை(பொருளிற்குப் பிறர்க்கு) கேடு செய்யாத, இன்சொல்,- இனிமைநோக்கம் (தருவதனால்), மதுமையுமின்மையும் - மதுமையினிமையென்னுமிருமையிலும், இன்பம்-இன்பத்தை, தரும்-கொடுக்கும், (எ-து).

மதுமையினபமுமின்மையின்பத்திலும்பெரிதாமாகலின்,மூன்றுமதுமை சொல்லப்பட்டது. இம்மை இன்பமாவது உலகத்தார் தன் வசப்படுதலால் கல்லனவற்றையெல்லாமடைத்து இன்பமடைதல். இவையிரண்டு பாட்டாலும் இருமைப்பயன்களும் ஒருசேர அடைதல் உறுதி செய்யப்பட்டது.

(க-து). இன்சொற்க ளுடையவனுக் இருமையிலும் இன்ப முண்டாம் என்பது.

8. Sweet speech, free from harm to others, will give pleasure both in this world and in the next.

கூ இன்சோ லினிதீன்றல் காண்பா னெவன்கோலோ
வன்சொல் வழங்கு வது.

பரி.—(இ-ள்). பிறர் கூறிய வின்சொல் தனக்கின்பம் பயத்தலை அனுபவித்தறிகின்றவன், † அது நீங்கப பிறர்மாட்டு வன்சொல்லைச் சொல்லுவது என்னபயன் கருதி, (எ-று).

இனிதென்பது வினைக்குறிப்புப்பெயர். கடுஞ்சொல் பிறர்க்கும் இன்னாதாகலின், அது கூறலாகா தென்பது கருத்து.

தெளி.—(இ-ன்). இன்சொல்(பிறர்சொல்லிய)இனியசொற்கள், இனிதின்றல்-(தனக்கு) இன்பந்தருதலை, காண்பான்-அனுபவித்தறிகின்றவன், (அதனீங்க), வன்சொல் - கடுஞ்சொற்களை, வழங்குவது - (பிறரிடத்து) சொல்லுவது, எவன் - என்னபயனைக் குறித்து, (எ-று).

இனிதென்பது இன்ப மென்னும் பொருளில் வந்தமையின் குறிப்பு வினையாலணையும் பெயர். கடுஞ்சொல் பிறர்க்கும் இனிதன் முதை யால், அக்கடுஞ்சொல்லைச் சொல்லலாகா தென்பது கருத்து.

(க-து). பிறர் கூறிய இன்சொல் தனக்கின்பந் தருதலையறி பவன் பிறரிடத்து வன்சொல்லைச் சொல்லுவதென்னே என்பது.

9. Why does he use harsh words who sees the pleasure which sweet speech yields?

கo. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

† அது நீங்க - அவ்வின் சொற்களைப் பேசுதலொழிக்க.

பரி.—(இ-ள்). அறம் பயக்கும் இனிய சொற்களும் தனக்குவமை யிருக்க அவற்றைக் கூறாது, பாவம் பயக்கும் இன்னாத சொற்களை ஒரு வன் கூறுதல், இனிய கனிகளும் தன்கைக்கண் உளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாதகாய்களை நுகர்ந்ததனையேநோக்கும், (எ-று).

* கூறலென்பதனைத் சொற்களென்பது பெற்றாம். † பொருளை விசேடித்துநின்ற பண்புகள் உவமைக்கண்ணுஞ் சென்றன. ‡ இனியகனிக

* 'இனிய வுளவாக வின்னாதகூறல்' என்பதில் 'கூறல்' என்று கூறுவதனால் இனியவென்பது இனிய சொற்களென்றும் இன்னாதவென்பது இன்னாத (கடுஞ்) சொற்களென்றும் பெற்றாம். இக்கு இனிய இன்னாத வென்னும் பெயரெச்சங்கள் தாம் கொண்டுமுடியும் சொற்களை யவாவி நிற்றல்பற்றிச் சொற்கள் என்பன வருவிக்கப் பட்டனவென்க.

† சொற்களென்னும் பொருளை (உபமேயத்தை) விசேடித்து (பிரித்துக்காட்டி) நின்ற இனிய இன்னாத என்னும் (குறிப்புப்பெயரெச்சமாகிய) பண்புச்சொற்கள் முறையே கனியென்னும் உவமானத்தையும் காயென்னு முவமானத்தையும் விசேடித்து நின்றன என்பது. இதனால் இனியசொற்கள் இன்னாத சொற்கள் என்பனபோலக் கனி காய் என்பனவற்றையும் இனியகனி இன்னாதகாய் என்று கொள்ளவேண்டு மென்பதாயிறதென்க. உவமேய மெனினும் வர்ணியமெனினும் புகழ் பொருளெனினும், புனை வுளியெனினு மொக்கும்; உவமான மெனினும், அவர்ணியமெனினும், அல் பொருளெனினும், புனைவிலியெனினும் ஒக்கும். இதுபற்றி இலக்கணக் கொத்தின் " ஆற்றொழுக்கடிமறி " என்னுஞ் சூத்திரவுரையுள் " இனிய வுளவாக வின்னாத கூறல், கனியிருப்பக் காய்சுவர்ந் தற்று " என்புழி இனியகனி இன்னாதகாய் எனப்பின்னும் பிரித்துப் பொருத்தலே பண்பு" எனநிருத்தலையுங்காண்க.

‡ ஔவையார் அதியர்கோமான் என்னும் வள்ளலிடத்திருந்து அமிழ்தின் தன்மையையுடைய கருநெல்லிக் கனியைப் பெற்றுண்டதனால் இருநூற்று நாற்பதுவருஷம் ஜீவித்திருந்தாரென்பது கதை. இது புறநானூறு கூ-வது செய்புளில் 'தொண்டிலிலப், பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட, நெறியிலை நெல்லித் நீங்கனி முயிர, தாத னின்னகத் தடக்கிச், சாதலீங்க வெமக்கீத் தனையே''. (இதன்பொருள் - பழைய நிலைமையையுடைய பெரியமலையிடத்து விடரின்கண் அரிய உச்சிக்கட்கொள்ளப்பட்ட நெறிய இலையினையுடைய நெல்லியின் இனியபழத்தைப் பெறுதற்கு அரிதென்று கருதாது அதனைப் பெறும் பெரும்பேற்றினை எமக்குக் கூறுது மின்னுள்ளேயடக்கிச்சாதலொழிய எமக்கு அளித்தாய் என்பது) என்று ஔவையார் கூறியிருப்பதனாலும், இதையனுசரித்துச் சிறுபாணாற்றுப் படையில் "கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி,யமிழ்தவிரோ நீங்கனியெனவைக்கீத வுரவுச் சினஞ்சினவு மொளிதிகழ் நெடுவே, லாவக் கடந்ருனையதிகனும்" என்று இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாற்பாடியிருப்பதாலும் விளங்கு மென்க. அதியர்கோமானுக்கு அதிகனென்றும், அதியமான்நெடுமானஞ்சி

என்றது ஒளவையுண்ட செல்லிக்கனிபோல அமிர்தாவனவற்றை. இன்ஞாத காய்கனென்றது காஞ்சொற்காய்போல கஞ்சாவனவற்றை. கடுஞ்சொற் சொல்லுதல் முடிவிற்றனக்கே பின்னுதென்பதாம். இவை யிரண்டுபோட்டாலும் இன்ஞாத கூறலின் குற்றம் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). இனிய - (அறத்தையுண்டாகும்) இனியசொற்களும், உளவாக - (தனக்கு) உண்டாயிருக்க (அவற்றைச்சொல்லாமல்), இன்ஞாத - (பாவத்தையுண்டாக்கும்) கடுஞ்சொற்களோ, கூறல் - (ஒருவன்) சொல்லுதல், கனி -(இனிய) கனிகளும், இருப்ப - (தன்கையினிடத்து) உண்டாயிருக்க (அவற்றைத்தின்ஞமல்),காய் -(இனிமையில்லாத) காய்களோ, கவர்ந்தற்று - தின்பதனேடொக்கும், (எ-று).

கூறல் என்பதனால் (இனிய) சொற்கள் (இன்ஞாத) சொற்களென்ன பன பெறப்பட்டன. சொற்களென்று முவமேயத்தை விசேடித்து நின்ற இனிய இன்ஞாத என்னும் பண்புகள் முறையே கனி காய் என்னும் உவமானத்திலுஞ் சென்றன. இனியகனிகளென்றது ஒளவையுண்ட செல்லிக்கனிபோல் அமிர்தமாவனவற்றை. இன்ஞதகாய்களென்றது எட்டிக்காய்போல நஞ்சாவனவற்றை. கடுஞ்சொற் சொல்லுதல் முடிவில் தனக்கே இனிதாகதென்பதாம். இலையிரண்டு பாட்டாலும் கடுஞ்சொற் சொல்லுதலின் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க-து). இன்சொற்கூறாது வன்சொற் கூறுபவனுக்கு இன்பமுண்டாகாது துன்பமுண்டாம் என்பது.

10. To say disagreeable things when agreeable are at hand, is like eating unripe fruit when there is ripe.

யென்றும்,செமொனஞ்சென்றும், அஞ்சி என்றும்பெயருண்டு. இவ்வாறன்றி, காவிரிப்பூம் பட்டினத்திருந்த பத்தனென்னுமோர் வையெயியாபாரவிஷயமாகக்கடல் யாத்திரைசெய்யும்போது ஆதிசேடனது சூழ்ச்சியால்காகலோகஞ்சென்று,ஆதிசேடன்மகளே(நாக கன்னியை)மணம்புரிந்து,அங்குப் பன்னிரண்டு வருடமிருந்து, ஆதிசேடனிடத்திருந்து அளவிறந்த காகரத்தினங்களும் பூஷணங்களும்,போர்த்துக்கொள்ளின் இளமை மாறாதிருக்கத் தக்கதொருபொற்படாமு(ஆடையு)ம், உண்டால்நீடிழிகாலம்உயிர்வாழத்தக்க தொரு கருநெல்லிக்கனியும்பெற்று,காவிரிப்பூம் பட்டினம் வந்து, தான்பெற்றவற் துன்னவற்றுள் ஒன்றான கருநெல்லிக் கனியிற்பாதியை யரசனுக்குக் கொடுத்து, மற்றைப்பாதியையும் பொற்படாத்தையும் தன்மேல் நவமணிமாலையும் அத்தாதியும்பாடிய ஒளவையார்க்குக்கொடுத்து வாழ்ந்தனன் என்னுமொரு கதையுமுண்டு. பத்தனிடத்திருந்து கருநெல்லிக் கனியைப் பெற்றவரசன் அதியர்கோமானென்றும், அவ்வதியர் கோமான் பத்தனிடத்துப் பெற்ற கருநெல்லிக்கனியிற் பாதியையே ஒளவையார்க்குக் கொடுத்தானென்றும் கூறுவாருமுளர்.

ஏழாவது அதிகாரம்.

செய்ந்நன்றியறிதல்—On Gratitude.

பரி.—அஃதாவது தனக்குப் பிறர்செய்த நன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு § உய்தியில் குற்றம் செய்ந் நன்றி கோறலேயாகலின், $ அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டு, இஃதினியவை கூறலின்பின் வைக்கப்பட்டது.

தேளி.—அஃதாவது தனக்குப் பிறர்செய்த நன்றியை மறவாமை. இனிய சொற்சோச்சொல்லி இல்லறத்தின் வழுவாதவர்க்கு உய்தியில்லாத குற்றம் செய்ந்நன்றியை மறத்தலேயாதலின், அதனைப் பாதுகாத்து நீக்கு தற்பொருட்டு, இஃது இனியவைகூறலின்பின் வைக்கப்பட்டது.

க. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

பரி.—(இ-ள்). தனக்கு முன் றேருத்வியுஞ் செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்தவுதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறுகக் கொடுத்தாலும் ஒத்தலரிது, (எ-று).

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையன வாகலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்றுவாயின. செய்யாமைச் செய்த வுதவியென்று பாடமோதி ‡ மறித்துதவ மாட்டாமை யுள்ளவிடத்துச் செய்தவுதவியென் றுரைப் பாரு முளர்.

தேளி.—(இ-ள்). செய்யாமல்-(தனக்குமுன் றேருதவியும்) செய்யா திருக்க, செய்த - (ஒருவன்பிறனுக்குச்) செய்த, உதவிக்கு— உபகாரத்திற் கு, வையகமும் - மண்ணுலகத்தையும், வானகமும் - விண்ணுலகத்தையும், மாற்றல் - ஈடாகக் கொடுத்தாலும் (ஒத்தல்), அரிது - கூடாது,(எ-று).

பிரதியுபகாரங்களெல்லாம் காரணமுடையனவாதலின், காரணமில் லாத வுபகாரத்திற்கு அவை யொப்பாகாவாயின.

(க-து). தனக்குபகாரஞ் செய்யாதவனுக் கொருவன் செய்த வுபகாரத்திற் கொப்பாகத் தரத்தக்கது ஒன்றுமின்றும் என்பது.

1. (The gift of) heaven and earth is not an equivalent for a benefit which is conferred where none had been received.

---

§ உய்தியில்குற்றம் - பிராயச்சித்தத்தா லொழிதலில்லாத பாவம்.

$ அதனைப்பாதுகாத்துக் கடிதற்பொருட்டு-செய்ந்நன்றி மறத்தலைத் தம்மிடத் தணுகவொட்டாது விலக்கும் நிமித்தம்.

‡ மறித்துதவ மாட்டாமை யுள்ளவிடத்துச் செய்தவுதவி - பிரதியுப காரஞ்செய்தற்கியலாமையுள்ள (ஏழைகள்) இடத்துச் செய்தவுபகாரம்.

உ. காலத்தி னஞ்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

பரி.—(இ-ள்). ஒருவனுக் கிறுதிவந்த எல்லிக்கண் ஒருவன் செய்த உபகாரம், † தன்னை நோக்கச் சிறிதாயிருந்ததாயினும் அக்காலத்தை நோக்க நிலவுலகத்தினு மிகப்பெரி து, (எ-று).

அக்கால நோக்கு தல்லது பொருணோக்கலாகா தென்பதாம். * கால த்தினுலென்பது வேற்றுமை மயக்கம்.

தெளி.—(இ-ள்). காலத்தினுல்-(ஒருவனுக்கு ஆபத்துவந்த)அளவில், செய்த - (ஒருவன்) செய்த, கன்றி-உபகாரமானது,சிறிதெனினும்(தன்னை நோக்கச்) சிறிதாயிருந்தாயினும், (அக்காலதனை நோக்க),ஞாலத்தின்-நில வுலகத்தினும், மாணப்பெரிது - மிகப் பெரிதாம், (எ-று).

ஆபத்துவந்த அக்காலத்தை நோக்கவேண்டுவ தல்லாமல் தன்னிடத் தன்னபொருளை நோக்கலாகா தென்பதாம். காலத்தினு லென்பது காலத் தில் என வற்றுமையின் வேற்றுமைமயக்கம்.

(க-து). ஒருவன் துன்பம்வந்த காலத்திற் செய்த வுதவி சிறி தாயினு மக்காலதனை நோக்க அது நிலவுலகினும் பெரிதாம் என் பது.

2. A favour conferred in the time of need, though it be small (in itself) is (in value) much larger than the world.

ஊ. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

பரி.—(இ-ள்). இவர்க் கிதுசெய்தால் இன்னது ‡ பயப்பரென்று ஆராயுதல் இலராய்ச் செய்த வுதவியாகிய சாமுடைமையை நூ லி னி ன், அதனன்மை கடலினும் பெரிதாம், (எ-று).

இவை மூன்று பாட்டானும் முறையே காரணமின்றிச செய்ததாகும் காலத்தினுற் செய்ததாகும், பயன் றூக்காராய்ச் செய்ததாகும் அளவில வாதல் கூறப்பட்டது

---

† தன்னை நோக்க- அவன் தனனுடைய பொருளைப் பார்க்க.

* காலத்தினுல் என்பதிலுள்ள மூன்றனுருபு தனக்குரிய பொருளில் வாராது ஏழனுருபிற்குரிய இடப்பொருளில் (காலத்தில் என) வந்தமை பற்றி 'காலத்தினு லென்பது வேற்றுமை மயக்கம்' என்றுகூறப்பட்டது. வேற்றுமைமயக்க மெனினும் உருபு மயக்கமெனினு மொக்கும். அஃதா வது தன்பொருளிற் நீர்ந்து பிறிதோருருபின் பொருட்டாதல்.

‡ பயக்கு (தரு) மென்ற என்றும் பாடமுண்டு.

தேவி —(இ-ன்). பயன்- (இவர்கில்வுதவி செய்தால் அவரிங்வுதவியைச் செய்வரென்னும்)பயனே,தக்கார்-ஆராய்தலிலாராய், செய்த—,உதவி-உதவியாகிய, யேன் - அன்புடைமையை, தக்கின் - ஆராயின், நன்மை - (அவ்வுதவியின்) நன்மையானது, கடலின் - கடலினும்,பெரிது-பெரியதாம்,(எ-று).

இவை மூன்றுபாட்டாலும் முறையே காரணமில்லாமற் செய்ததும், காலத்தினுற் செய்ததும், பிரயோசனத்தை யாராயாதவராய்ச் செய்ததும் அளவில்லாதனவாதல் சொல்லப்பட்டது.

(க - து). பின்வரும் பயனைக்கருதாது செய்த வுதவியின் நன்மை கடலினும் பெரிதாம் என்பது.

3. If we weigh the excellence of a benefit which is conferred without weighing the return, it is larger than the sea.



ச. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

பரி.—(இ - ள்). தமக்குத் தினையளவிற்றய உபகாரத்தை ஒருவன் செய்தானுயினும் அதனை அவ்வளவிற்றாகக் கருதாது பனையளவிற்றாகக் கருதுவர் அக்கருத்தின் பயன் தெரிவார், (எ-று).

தினை பனையென்பன சிறுமை பெருமைகட்குக் ‖ காட்டுவன சில வளவை. அக்கருத்தின் பயனுவது அங்ஙனங்கருதுவார்க்குவரும் § பயன்.

தெளி.—(இ - ள்). தினைத்துணைநன்றி - (தமக்குத்) தினையளவினதாகிய உபகாரத்தை, செயினும் - (ஒருவன்) செய்தானுயினும், (அதனை அவ்வளவினதாக நினையாமல்), பனைத்துணையா-ப்னையளவினதாக, கொள்வர் - நினைப்பார், பயன்-(அந்நினைப்பின்) பயனே, தெரிவார்-அறிபவர், ().

தினை பனை யென்பன சிறுமை பெருமைகளுக்குக் காட்டுவனவாகிய சில அளவைகள். அந்நினைப்பின் பயனுவது அப்படி நினைப்போர்க்கு வரும் பிரயோசனம்.

(க-து). பெரியோர் சிறியவுபகாரத்தையும் பெரியவுபகாரமாகக் கொள்ளுவர் என்பது.

4. Though the benefit conferred be as small as a millet seed those who know its advantage will consider it as large as a palmyra fruit.



‖ காட்டுவனவாகிய சிலவளவை யென்றும் பாடமுண்டு. இவ்வளவை உவமான அளவையின் பாற்படும்.

§ பயன் - புகழ் புண்ணியங்கள்.

9. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

பதி.—(இ-ள்). கைம்மாறு உதவி * காரணத்தாலும் பொருளாலுங் காலத்தாலும் ஆகிய மூவகையாலும் முன் செய்த உதவி யளவிற் றன்று; அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் அமைதி யளவிற்று, (எ-று).

சால்பு எவ்வளவு பெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாமென்பர் 'சால்பின் வரைத்து' என்றார். இவை யிரண்டுபோட்டாலும் † மூன்று மல்லாத உதவி மாத்திரமும் அறிவார்க்கு ‡ செய்தவழிப் பெரிதாமென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). உதவி-எதிர்செய்யும் உதவியானது, உதவிவரைத்தன்று - (காரணமும் பொருளும் காலமுமாகிய மூவகையாலுமுண்செய்த) உதவியளவினதன்று, உதவி செயப்பட்டார்-அவ்வுதவியைச் செய்யப்பெற்றுக் கொண்டவரது, சால்பின் வரைத்து - தகுதி யளவினதாம், (எ-று).

சால்பு எவ்வளவு பெரிதாயுள்ளது உதவியும் அவ்வளவு பெரிதாமென்பார் 'சால்பின்வரைத்து' என்றார். இவை யிரண்டு பாட்டாலும் செய்யாமற் செய்தவுதவி முதலிய மூன்றுமல்லாத உதவிமாத்திரமும் அறிவோர்க்கு உதவி செய்த விடத்து அவ்வுதவி பெரிதா மென்பது சொல்லப்பட்டது.

(கு-று). உதவிசெய்யப் பெற்றுக்கொண்டவரது மகிழ்ச்சி பனவே யுதவிக் களவாம் என்பது.

---

* காரணமும் பொருளும் காலமுமாகிய மூவகையாலும் என்றும் பாடமுண்டு.

† மூன்று மல்லாத உதவி - காரணமில்லாமற் செய்த வுபகாரமும் ஆபத்து வந்த காலத்திற் செய்த வுபகாரமும் பயனே யெதிர் நோக்காது செய்த வுபகாரமுமல்லாத வுபகாரம். அஃதாவது பிறர் செய்த வுபகாரத்தை யேற்றுக் கொண்டவர் அவருக்கு அவர் செய்த வுபகாரத்தினது காரணம் பொருள் காலமென்பனவற்றிற்கேற்பப் பிரதியுபகாரஞ் செய்யாது தமது தகுதிக்கேற்றவண்ணம் பிரதி யுபகாரஞ் செய்தலாம். இதனுல் உபகாரம்: காரணமில்லாமற் செய்வதும் ஆபத்து நேர்ந்த காலத்திற் செய்வதும் பயனே யெதிர் பாராது செய்வதும் பிறர் செய்த வுதவிக் கேற்றவண்ணம் பிரதி யுபகாரஞ் செய்யாது அவர் மனங்களிக்கும்படி தமது தகுதிக்கேற்ற வாறு பிரதி யுபகாரஞ் செய்வதுமென கால்வகைத்தாயிற்றென்க. எனவே, காரணங் கருதியும்பொருள் கருதியும் காலங் கருதியும் செய்யுமுபகாரம் ஒரு பிரயோசனத்தை நோக்கிச் செய்வதாயிருத்தலின் அது தெரிந்ததாகாதென்க.

‡ செய்தவழிப் பெரிதாமென்பது—உபகாரஞ்செய்தவிடத்து அஃது இமயபாணம்போல் மிகுதியாமென்பது.

5. The benefit itself is not the measure of the benefit; the worth of those who have received it is its measure.

கூ. மறவறக மாசறுரர் கேண்மை துறவற்க
துன்பத்துட் பேப்பாயார் நட்பு.

பரி.—(இ-ள்). துன்பக்காலத்துத் தனக்குப் பற்றுக் கோடாயினாது நட்பை விடாதொழிக; அறிவொழுக்கங்களிற் குற்றமற்றாது கேண்மையை மறவாதொழிக, (எ-று).

கேண்மை - கேளாந்தன்மை. § *இம்மைக் குறளி கூறுவார் மறுமைக் குறளியும் உடன் கூறினர்.*

தெளி.—(இ-ன்). *துன்பத்தில் - துன்பமுண்டாய காலத்தில், துப்பாயார் - (தனக்கு) உதவியானவரது, நட்பு - சினேகத்தை, துறவற்க - விடாதிருக்கக் கடவன், மாசற்றார் - (அறிவொழுக்கங்களிற்) குற்றமற்றவரது, கேண்மை - கேளாந்தன்மையை, மறவற்க - மறவாதிருக்கக் கடவன், (எ-று).*

கேளாந்தன்மை - நட்பாந்தன்மை. இம்மைக் குறளிசொல்ல வந்தவர் மறுமைக் குறளியு முடன்சொல்லினர்.

(க-து). *துன்பக்காலத் துதவிசெய்தவரது சினேகத்தை விடாதும் குற்றமற்றவரது சினேகத்தை மறவாதும் இருத்தல் வேண்டும் என்பது.*

6. Forget not the benevolence of the blameless, forsake not the friendship of those who have been your staff in adversity.

எ. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

பரி.—(இ-ள்). தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்

§ *ஒன்றின முடிதலை தனனினமுடித்தலெனனு முத்தியால் இம்மைக்குறளியாகிய துன்பத்துட் பேப்பாயார் நட்பு துறவற்க என்று கூறினவர் அதனேடு மறுமைக் குறளியாகிய மாசற்றார் கேண்மையையும் மறவற்க என்று கூறினரென்க. இம்மை - இப்பிறப்பு. மறுமை - வருபிறப்பு; அஃதாவது மரணத்தின்பின் வருவில. இவ்விடத்தது சுவர்க்கமாம். மாசற்றார் கேண்மை மறுமைக்குறளி யாமென்பது " இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி, யும்மை யுயர்கதிக் குய்த்தலான் - மெய்ம்மையே, பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே, நட்டா ரெனப்படு வார்" என்றறநெறிச்சாரங் கூறுவதனாலு மறியப்படும்.*

வினை § எழுமையினு யுடைய தம்மேழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர், (எ-று).

*எழுமையென்றது * வினைப்பயன்தொடரும் எழுபிறப்பினை; †அது வினையாபதியுட் கண்டது. எழுவகைப்பிறப்பு ‡ மேலே யுரைத்தாம். ¶ விரைவுதோன்றத் 'தடைத்தவர்' என்றார். நினைத்தலாவது தன்பற் றடைத்தவன் அவர் மாட்டெதாகிய அன்பு பிறப்புதோறுந் தொடர்ந்த †† அன்புடைய ராதல். இவை யிரண்டு பாட்டானும் கன்றி செய்தாரது கட்பு விடலாகா தென்பது கூறப்பட்டது.*

தெவி.—(இ-ள்). தக்கண் - தம்மிடத்து (உண்டாகிய), விழுமம் - துன்பத்தை, தடைத்தவர்-நீக்கினவரது, நட்பு-நட்பினை, எழுமை-(வினைப் பயன்தொடரும்) எழு பிறப்பினையுடைய, எழுபிறப்பும் - (தமது) எழு வகைப் பிறப்பிலும், உள்ளுவர் - (நல்லோர்) நினைப்பார், (எ-று).

எழுவகைப் பிறப்பினை மேலே கூறினும். விரைவு தோன்றுமாறு 'தடைத்தவர்'என்று இறந்தகாலத்தாற் கூறினர். நினைத்தலாவது துன்பத் தை நீக்குதலால் அவரிடத்துண்டாகிய அன்பு பிறவிதோறுந் தொடர்

---

§ எழுமையினையுடைய தம்மெழுவகைப் பிறப்பிலும் என்பதற்கு நல்வினை தீவினைகளின பயனுகிய சுகதுக்கங்கள் தொடர்ந்து வரும் ஊர்வன முதலாகிய எழுவகைத் தோற்றமது (பிறப்பினு)ள் யாதாவதொன்றாக மாறிமாறிவரு நிலை யுடைய தமது எழுபிறப்பிலும் என்றுகொள்க. இவ்வா றன்றி எழுவகைத்தோற்றத்துள் முறையே ஒவ்வொன்றனது எழுபிறப் பிலு மென்றுங்கூறலாம்; அது பொருத்தமாயிற்கொள்க. " நூறுகோடி கற்பங்களாலும் அநுஞானியின் கனமம் போக மின்றி நாசமாவதில்லை ; ஆதலி செய்த சுபாசுபகன்மங்கள் இனறியமையா தனுபவிக்கத் தக்கன வாம்" என்பது சுருதி.

* வினைப்பயன் எழுபிறப்பு வரையிலும் தொடருமென்பது "ஒரு மையு ணாமைபோ லேந்தடக்க லாற்றி, னெழுமையு மேமாப் புடைத்து" என்றும், "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற், கெழுமையு மேமாப் புடைத்து" என்றும் மேல்வருங் குறன்களானும விளங்கும்.

† அது - வினைப்பயன் தொடரும் எழு பிறப்பு. வினையாபதி ஐம் பெருங் காப்பியங்களு ளொன்று.

‡ மேலேயுரைத்தாம் என்றது புதல்வரைப்பெறுதலதிகாரம் 2-வது பாட்டி னுரையிற் கூறிய "ஊர்வ பதினென்றும்" என்னுஞ் செய்யுளே.

¶ தடைத்திறவர் தடைப்பவரென நிகழ்காலத்தாலேனும் எதிர் காலத்தாலேனுங் கூறுது 'தடைத்தவர்' என இறந்தகாலத்தாற் கூறியது வினைவுபற்றி வந்த காலவழுவமைதியாம்.

†† 'குறட்பாவை' என்னும் திருக்கோவையார்ச் செய்யுளில் "பிறப்பா னடுப்பினும் பின்னுன் னடித்தரும் பெற்றியரே" என்றிருத்த லிங்குச் சுவனிக்கத்தக்கதாம்.

(வச) அன்புடையவராதல். இவ்விரண்டு செய்யுளாலும் உதவிசெய்தவ ரட்பினை விடலாகாதென்பது சொல்லப்பட்டது.

(க-து). நல்லோர் தமது அன்பத்தை நீக்கினவரது பினைகத் தைத் தம்மெழுவகைப் பிறப்பிலும் நினைப்பர் என்பது.

7. (The wise) will remember throughout their seven - fold births the love of those who have wiped away their affliction.

அ. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

பரி.—(இ - ள்). ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவ ற்கு அறனன்று; அவன் செய்த தீமையைச் செய்தபொழதே மறப்பது அறன், (எ-று).

இரண்டும் ஒருவனுற் செய்யப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வருத்தக் கூறியவாறு.

தெளி.—(இ - ன்). நன்றி - (ஒருவன்முன்செய்த)நன்மையை, மறப் பது—, நன்றன்று - (ஒருவனுக்கு) அறனல்ல, தன்றல்லது - (அவன்செய்த) தீமையை, அன்றே - செய்தபொழுதே, மறப்பது—, நன்று-அறமாம்,()

இதனுல் நன்மையும் தீமையும் ஒருவனுல் செய்யப்பட்ட விடத்து அவ் விரண்டனுள் மறப்பதும் மறவாததும் வருத்தச் சொல்லியவாறும்.

(க-து). ஒருவர் பிறர்செய்த நன்றியை மறவாது அவர்செய்த தீமையை மறக்கவேண்டும் என்பது.

8. It is not good to forget a benefit : it is good to forget an injury even in the moment (in which it is inflicted).

கூ. கொன்றன்ன வின்னு செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

பரி.—(இ-ள்). தமக்கு முன்னொரு நன்மை செய்தவர் பின்கொன்று லொத்த இன்னுதவற்றைச் செய்தாராயினும், அவையெல்லாம் அவர் செய்த நன்மை யொன்றனையும் நினைக்க இல்லையாம், (எ - று).

§ தினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப் படுதலின், அவ்வொ ன்றுமே அவற்றை யெல்லாங் கெடுக்கு மென்பதாம். இதனுன் நன்றல்லது அன்றே மறக்குந் திறங் கூறப்பட்டது.

§ 'தினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப்படுதலே' "தினைத் துணை நன்றி செயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன்தெரி வார்" என்னுங் குறளானறிக.

தெளி.—(இ - ன்). (தம்மை முன்னொருபகாரஞ்செய்தவர்) கொன்ற என - (பின்) கொன்றபோதும், இன்னு - வேறுகப்படவேண்டுவதை, செய்தும்-செய்தாராயினும், அவர்செய்த—, ஒன்றன்ற - ஒருகாலமாயினும், உள்ள - நினைக்க, கெடும்—(அவையெல்லாம்) இல்லையாம் (எ-று).

நினையவு மன்றி பினையவு மன்றியாகக் கொள்ளப் படுதலினால் அவ்வொன்றுமே அவ்வேறுகப்படவேண்டுவதை யெல்லாம் கெடுக்கு மென்பதாம். இதனால் கன்றல்லாதை அன்றேமறக்கும் விதம் சொல்லப்பட்டது.

(க - து). முன்னே ருபகாரத்தைச் செய்தவர் பின் பலதீமை களைச் செய்தாலும் அவை முன்செய்த வுபகாரத்தை நினைக்கக் கெடும் என்பது.

9. Though one inflict an injury great as murder, it will perish before the thought of a single benefit (formerly) conferred.

கo. எந்தன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்தன்றி கொன்ற மகற்கு.

பரி.—(இ - ன்). பெரிய வறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தி னீங்குமுவாயிலுண்டாம்; ஒருவன் செய்ததன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃதில்லை, (எ - று).

பெரிய வறங்களைச் சிதைத்தலாவது * ஆன்முலையறத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல். இதனுல் செய்ந்தன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). எந்தன்றி - எத்தவறுகளை (பெரியவறுகளை), கொன்றார்க்கும்-கொலைத்தவர்க்கும், உய்வு-பாவத்தினீங்கும்வழி, உண்டாம்—உண்டாகும், செய்ந்தன்றி - (ஒருவன்) செய்தவுபகாரத்தை, கொன்றமகற்கு - கொலைத்த மனிதனுக்கு, உய்வு-அப்பாவத்தினீங்கும்வழி, இல்லை—,(எ-று).

பெரிய அறங்களைச்சிதைத்தலாவது பசுவின்முலையையறத்தலும், மகளிர் கருவையழித்தலும், அத்தனைகள் கொல்லுதலும் முதலாகிய பாதகங்

---

* ஆன்முலையறத்தல் - ஆவின்முலையை யறுத்தல். மகளிர் கருவினைச் சிதைத்தல் - பெண்களின் கருப்பத்தை யழித்தல். பார்ப்பார்த் தபுதல் - பிராமணரைக் கொல்லுதல் கோஹத்தி (பசுவதை) கெஹத்தி (கெவதை) பிரமஹத்தி (பிராமணவதை) வென வார்காத்கொல்லவும் படாமை பற்றி ஆன்முலையறத்தல் என்றற் றொடக்கத்தனவாக மறைத்துக் கூறினர். இஃது " ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு, மானிலை மகளிர் கருவைதைத் தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொடுமை போர்க்கும், வழுவாய் மருங்கிற் கழுவாய் முனவென, நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன், செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென, வறம்பாடிற்றே யாயிழை கணவ" என்ற புறனானூறு(உச) வுறவதாது மறிதற் பாற்றும்.

வினைசெய்தல், இதனால் செய்ந்நன்றியை மறத்தலின் கொடுமை சொல்லப்பட்டது.

(க - து). பிறர்செய்த உபகாரத்தை மறந்தவர்கட்கு எவ்வகையாலும் பாவத்தில் நீங்கும்வழி யில்லை என்பது.

10. He who has killed every virtue may yet escape; there is no escape for him who has killed a benefit (by forgetting it).

எட்டாவது அதிகாரம்.

நடுவுநிலைமை—*On Equity.*

பரி.—அஃதாவது பகை நோதுமல் நண்பென்னும் முன்றுபதத்தினும் அறத்தினவழுவாது ஒப்பநிற்கு நிலைமை. ¶ இது நன்றி செய்தார்மாட்டு அந்நன்றியினை நினைத்தவழிச் சிதையுமன்றே, அவ்விடத்துஞ் சிதையலாகா தென்றற்குச் செய்ந்நன்றி யறிதலின்பின் வைக்கப்பட்டது.

தேளி.— *அஃதாவது பகைவர் அயலோர் நட்பினரென்னும் மூவகையோரிடத்தும அறதனினவழுவாமல் ஒப்பநிற்கும்நிலைமை. இது நன்றிசெய்தவரிடத்தது அந்நன்றியை நினைத்தவிடத்துக் கெடுமன்றே, அவ்விடத்தும் கெடலாகா தென்றற்குச் செய்ந்நன்றி யறிதலின்பின் வைக்கப் பட்டது.*

க. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

பரி.—(இ-ள). நடுவுநிலைமையென்று சொல்லப்படும் ஓரறமே நன்று: பகை நோதுமல் நண்பென்னும் பதந்தோறும் தன்முறைமையை விடாதொழுகப் பெறின், (எ - று).

§ *தகுதியுடையதனைத் தகுதியென்றார். † "ஊராளுநர் தேவகுலம்" என்பது போலப் பகுதியானென்புழி ஆனுருபு ‡ தொறுமென்பதன் பொருட்டாய் நின்றது. பெறினென்பது அவ்வொழுக்கத் தருமைதோன்ற நின்றது. இதனுள் நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது.*

தேளி.—(இ - ள்). *தகுதியெனவொன்றே - நடுவுநிலைமையென்று சொல்லப்படும் ஓரறமுமே, நன்று—,பகுதியால்-(பகைவர் அயலோர் கட்*

¶ *இது - நடுவுநிலைமை.*

§ *தகுதியை (யோக்கியத்தை) யுடைய நடுவுநிலைமையைத் தகுதியென்றமையின் அது பண்பாகு பெயராம்.*

† *ஊர்தோறு மொரு தேவகோயில் என்பது பொருள்.*

‡ *தொறுமென்பதன் பொருட்டாய் நின்றது - தொறும் என்பதன் பொருளதாய் நின்றது . தொறுமென்பது தன்னையேற்ற பெயர்ப் பொருளெல்லும் அப்பெயர்ப் பொருளோ டியையும் பொருளிருப்பது.*

பிளர் என்னும்) பிரிவுதோறும், பாற்பட்டு - (தன்)முறைமையையிடாது, ஒழுகப்பெறின் - நடக்கப்பெற்றால், (எ-து).

எகாரம் - பிரித்து (ஒன்று என்பதனோடு) கூட்டப்பட்டது. தகுதி-ஒருபெயர். பகுதியானென்று மூன்றனுருபு தொறுப்பொருளில் வந்தது. பெறினென்பது அவ்வொழுக்கத்தி னருமைதோன்றின்றது. இதனால் நடுவுநிலைமையது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து). மாறுபாடுதீர நடுவுநிலைமை அறங்களுள் மேம்பாடையது என்பது.

1. That equity which consists in acting with equal regard to each of (the three) divisions of men (enemies, strangers and friends) is a pre-eminent virtue.

---

2. செப்ப முடையவ ணுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

பரி.—(இ-ள்). நடுவுநிலைமையை உடையவனது செல்வம் பிறர் கேள்வம்போல் அழிவின்றி அவன் வழியினுள்ளார்க்கும் வலியாதலை யுடைத்து, (எ-று).

** விகாரத்தாற் றொக்க வெச்சவுமையான, ‡ இரக்குந் தினையும் அவன்றனக்கும் எமாப்புடைத்தென்பது பெற்றும். அறத்தோடு வருதலின், ¶ அன்னதாயிற்ற. † தான் இறந்துழி எஞ்சி நிற்பதாகலின் 'எசசம்' என்றார்.*

தெளி.—(இ-ள்). செப்பமுடையவன - நடுவுநிலைமையை யுடையவனது, ஆக்கம்-செலவமானது, சிதைவின்றி - (பிறர்செல்வம்போல்) அழிதலின்றி, எசசத்திற்கும் - (அவன்) சுற்றதினியார்க்கும், எமாப்பு - உறதியாதலை, உடைத்து - உடையதாம், (எ-று).

விகாரத்தினுறை தொக்கு நின்ற எசசவும்மையால் சாமானவும் அவனுக்கும் உறதியுடையதென்பது பெறப்படும். அறத்தோடு வருதலால் அப்

** (செப்ப முடையவனுக்கே யன்றி யவனது) எசசத்திற்கு மென்னு மிறந்தது தழீஇய வெச்சவும்மை செய்யுள்விகாரதத்தால் தொக்கு நின்றது.*

‡ நடுவுநிலைமை யுடையவனுக்கு வரும்பொருள் தருமமார்க்கத்திற்கு விரோதமின்றியதாயிருத்தலின் அதனு(பொருளா)ல் அவனேயன்றி யவன் சுற்றதினியாரும் இன்புறுதல் நிச்சயமாதல் பற்றி 'இறக்குந்தினையும் அவன்றனக்கும் எமாப்புடைத் தென்பது பெற்றும்' என்ற கூறப்பட்டது.

¶ அன்னதாயிற்ற - (செல்வம்) எச்சத்திற்கு முதலியாதலை யுடையதாயிற்ற.

† தானிறந்தபோதும் மிருந்து நிற்பது சுற்றதினியாதலின் அச்சுற்றதினீனை எச்சம் (மிருந்து நிற்பது) என்று கூறினார்.

படிப்பட்டதாயிற்று. தானிறக்தவிடத்து எஞ்சி நிற்பதுபற்றிச் சந்ததியை 'எச்சம்' என்றார்,

(க-து). நடுவுநிலைமை யுடையவனது செல்வம் அவன்சந்ததிக்கும் உறுதியாதலையுடையதாம் என்பது.

2. The wealth of the man of rectitude will not perish, but will bring happiness to his posterity.

ரு. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

பரி.—(இ-ள்).—தீங்கன்றி நன்மையே பயந்ததாயினும், நடுவு நிலை யொழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே ஒழிய விடுக, (எ-று).

நன்மைபயவாமையின் § 'நன்றேதரினும்'என்றார் இகத்தலா னென்பது இகந்தெனத் திரிந்ததின்றது. இவை யிரண்டு பட்டாலும் முறையே நடுவுநிலைமையான் வந்தசெல்வம் நன்மை பயத்தலும், ¶ ஏனைசெல்வம் தீமை பயத்தலுங் கூறப்பட்டன.

தெளி.— (இ-ள்). நன்றேதரினும் - (தீங்கன்றி) நன்மையே தந்ததாயினும், நடுவிகந்தா - நடுவுநிற்றலை நீங்குதலால், ஆக்கத்தை - செல்வத்தை, அன்றே - அப்போதே, ஒழிய—நீங்கிப்போக, விடல்-விடக்கடவன், (எ-று).

நன்மையைத் தாராமையால் 'நன்றேதரினும்' என்றார். இகந்தாலானென்னும்வினை இகந்தெனத் திரிந்ததின்றது. இஃதெச்சத் திரிவெனப்படும். இவை யிரண்டுபாட்டாலும் முறையே நடுவுநிலைமையால் வந்தசெல்வம் நனமையைத் தருதலும் மற்றைய வழியால் வந்த செல்வம் தீமையைத் தருதலுஞ் சொல்லப்பட்டன.

(க-து). நடுவுநிலைமை யில்லாது வருஞ்செல்வம் நன்மையைத்தர்ததாயினு மதனை யப்பொழுதே விடவேண்டும் என்பது.

3. Forsake even in the moment (of acquisition) that gain which though it should bring advantage is without equity.

ச. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரேச்சத்தாற் காணப் படும்.

---

§ நடுவு நிலைமையை விட்டதனு லுண்டாகின்ற செல்வமானது அப்போது நன்மையைத் தருவதுபோலக் காணப்படினும் அனுபவத்தில் தீமையைத் தருவதாகவேயிருத்தலின் 'நன்றேதரினும்' என்று கூறப்பட்டது. தரினும் என்னுமும்மை எதிர்மறைப் பொருளது.

¶ ஏனைச்செல்வம் - நடுவுநிலைமை யின்மையான் வந்தபொருள்.

பரி.—(இ-ன்). இவர் நடுவுநிலைமை யுடையர் இவர் நடுவுநிலைமை யிலரென்னும் விசேடம், அவரவருடைய நன்மக்களது உண்மையாலும் இன்மையாலும் அறியப்படும், (எ-று).

† தக்கார்க்கு எச்ச முண்டாதலும் § தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலை யாகலின், ‡ இருநிறத் தாரையும் அறிதற்கு அவை குறியாயின. இதனால் தக்காரையுந் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது.

நேவி.—(இ-ன்). தக்கார் - (இவர்) நடுவுநிலைமையை யுடையவர், தகவிலர் - (இவர்) நடுவுநிலைமையை யில்லாதவர், என்பது - எனினும் விசேஷம், அவரவர் - அவரவருடைய, எச்சத்தால் - கல்ல புதல்வரது இருப்பினாலும் இல்லாமையாலும், காணப்படும் - அறியப்படும், (எ-று).

நடுவுநிலைமையை யுடையவருக்குச் சந்ததி உண்டாதலும், அஃதில்லாதவர்க்கு அஃ தில்லாமற்போதலும் நிசயமாதலின், அவ்விருவகை யினரையும் அறிதற்கு அவை அடையாளங்களாயின. இதனால் நடுவுநிலைமை யுடையவரையும், அஃதில்லாதவரையும அறியுமவழி சொல்லப்பட்டது.

(உ-து). இவர் நடுவுநிலைமை யுள்ளவர் இவர் நடுவுநிலைமை யில்லாதவர் என்பது அவரவர்களது சந்ததியாற் காணப்படும்.

---

† தக்கார்க்கு எச்ச முண்டாதலும்-நடுவுநிலைமையுடையோர்க்கு கல்ல பின்னோக ளுண்டாதலும். § தகவிலார்க்கு இல்லையாதலும் - நடுவுநிலை மை யில்லாதவர்களுக்கு நல்லபின்னோக ளில்லையாதலும்

‡ இருநிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின - நடுவுநிலை மையுடையாரையும் அஃதில்லாதாரையும் தெரிந்து கொள்ளுவதற்கு அவ ரவர்களது கல்லபின்னோகளிருத்தலும் துஷ்டபின்னோக ளிருத்தலும் அடை யாளங்களாயின. (1) இவர்தக்கர் ; நன்மக்களை யுடையரா யிருந்தலின். (2) இவர்தகவிலர்;நன்மக்களையுடையவராயிராமையின் என்பன ஞான்டலு ஞானமும் இவ்விஷயம் மனுதரும சாஸ்திரம் மூன்ரு மதிலியாயதில் "முதியெமாய் உத்தமமான லிவாகத்தாற் பிறக்கும் பின்னோகள் சாதக்களா யிருப்பார்கள். கித்திரத்தக்க லிவாகத்தாற் பிறக்கும் பின்னோகள் துஷ்டர் களாயிருப்பார்கள்" என்றும், சான்மணிக்கடிகை "மகனுரைக்குந் தன்தை கனத்தை" "பழியின்மை மக்களீற் காண்க" என்றும் கூறவதாறு மறியப் படும். இதனுல் லித்தின் லிசேட குணத்திற்கேற்ப மூனையுண்டாவது போன்ற அவரவர்களது லிசேட குணத்திற்கேற்பப் பின்னோகளுண்டாவ ரென்பது பெறப்படுகின்றது. இது (பெருந்திரட்டு) "முக்குணத்தம்மின் மாறி முயங்கிக் தக்தைக் கப்போ, தெக்குண முதிக்கும் பின்னோக் கது குணம் லியதாமால்", (குறந்திரட்டு) " தக்தைக் கெத்தக் குணமுதிக் தும் கனிக்கும் பொழுதின் வமத்தற்கு, மதற்குணமாம் " என்று வரும் பெரியோங்களா லினிதலியலாகும். " செல்செல்லா வாய செழுமூலை மற் றெல், செல்செல்லே யாகினோலா—லல்லல், வயனிறையச் சாய்க்கும் மனை யாட்டி, மனறிவு தக்தை வழிவு" என்று காலடியார் கூறலுமறிக.

4. The worthy and the unworthy may be known by (the character of) their offspring.

ஞ. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

பரி.—(இ-ள்). தீவினையாற் கேடும் நல்வினையாற் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன; அவ்வாற்றை யறிந்து அவை காரணமாக மனத்தினின்கட் கோடாமையே அறிவான் அமைந்தார்க்கு அழகாவது, (எ-று).

† அவை காரணமாகக் கோடுதலாவது அவை இப்பொழுது வருவனவாகக் கருதிக் கேடுவாராமையைக் குறித்தும் பெருக்கம் வருதலைக்குறித்தும் ஒருதலைக்கணிற்றல். $ அவற்றிற்குக் காரணம் ‡ பழவினையே, கோடுதலன்று என உண்மை யுணர்ந்து நடுவுநிற்றல் சால்பினை அழகு செய்தலின் 'சான்றோர்க் கணி' என்றார்

தெளி.—(இ-ன்). கேடும்-(தீவினையினால் பொருள் முதலியன) கெடுதலும், பெருக்கமும் - (நல்வினையினாலவை) பெருகுதலும், இல்லல்ல - (யாவருக்கும்) இல்லாதவையல்ல, (முன்னமே அமைந்து கிடந்தனவாம்), (அவ்வழியை அறிந்து), நெஞ்சது-மனத்தினகண், கோடாமை - (அவை காரணமாக) சாய்தலில்லாமையே, சான்றோர்க்கு - (அறிவால்) நிறைதோர்க்கு, அணி - அழகாம், (எ-று).

அவை காரணமாகச் சாய்தலாவது அக்கேடும் பெருக்கமும் (பழவினையினாலே வருது கொண்டிருக்க), இப்போது (செய்யுமுயற்சியால்) வருவனவாக நினைத்துக் கேடுவாராமையைக் குறித்தும், பெருக்கம் வருதலைக் குறித்தும் ஒரு பக்கத்திற் சாய்தலாம். அவற்றிற்குக் காரணம் பழவினையே, சாய்தலல்லவென உண்மை யுணர்ந்து நடுவுநிலை யுடையவராயிருத்தல் அறிவால் நிறைந்திருத்தலை அழகு செய்தலால் 'சானறோர்க் கணி' என்றார்.

(க-து). எப்போதும் நடுவுநிலைமையினின்றும் தவறாமையே பெரியோர்க்கு அழகாம் என்பது.

5. Loss and gain come not without cause; it is the ornament of the wise to preserve evenness of mind (under both).

† அவை - கேடும் பெருக்கமும், $ அவற்றிற்கு-கேட்டிற்கும் பெருக்கத்திற்கும்.

பழவினை - மூற்பிறப்பிற் செய்த நல்வினை தீவினை. "பல்லாவு ரூய்த்து வீடினுங் குழக்கன்று, வல்லதாம் தாய்காடிக் கோடலைத் - தொல்லை லப், பழவினையு மன்ன தகைத்தே தற்செய்த, வினை நாடிக் கொளற்கு" - என்பது நாலடியார்.

க. கேவேண்பா னொன்ப தறிதன் னெஞ்ச
நவோறி யல்ல செயின்.

பரி.—(இ-ள்). ஒருவன் தன்னெஞ்சம் நவுறிற்றலை யோழித்து நவு வல்ல வஃறைச்செய்ய நினைத்தமாயின், அத்தீவினை யான் கெடக்கட வே னென்றுணரு ‡ முற்பாதமாக வழிக, (எ-று).

நினைத்தலும் செய்தலோடொக்கு மாதலின் 'செயின்' என்றார்.

தெளி.—(இ-ள்). தன்னெஞ்சம் - (ஒருவன்) தனதுமனம், நவு - நவுவு தித்தலை, ஒரீஇ - நீங்கி, அல்ல-வெஞ்சிறற லல்லாதனவற்றை (பாவ செயல்களை), செயின-செய்ய நினைக்குமாயின்(அச்சினைவை),யான் - நான், கெடுவல் - கெடக்க_ட்டேன, என் ப தை - என்றுணரு முற்பாதமாக, அதிக - அறிவக்கடவன, (எ-று).

பாதாவதெனறனை செய்ய நினைத்தலுமதனை செய்தலோடொக்கு மாதலின 'செயின்'என்றார். நினைத்தல காரணமும் செய்தல் காரியமுமாம.

(க-து). நவுவநிலைமையி னின்றாக தவறினவனுக்குத்தவறுத கேடென்டாம் என்பது.

6. Let him whose mind, departing from equity, commits sin well consider thus within himself, "I shall perish."

ஈ. கேவோக வையா துலக நவோக
நன்றிக்கட் டங்கியான் றுற்வு.

பரி.—(இ-ள்). நவோக நின்ற அறத்தினன்னே தங்கினவனது வதமையை வறமையென்ற கருதார் உயர்ந்தோர், (எ-று).

கெவென்பது * முதனிலைத் தொழிற்பெயர். செல்வமென்றகொள் ளுதலென்பது குறிப்பெசசம். * இவை மூனறுபாட்டாலும் முதலையே கேடும் பெருக்கமுங கோதலான் வாரா வென்பதூடம், கோதல் கேட் டிற் கேதுவா மென்பதூடம், கோடாதவன் தாழ்வு ‡ கேடன தென்பது டம் உறப்பட்டன.

தெளி.—(இ - ள்). உலகம் - உயர்ந்தோர், நவோக-நவு நிலைமையாக (நின்ற) நன்றிக்கண் - அறத்தின் கண்ணே, தங்கொன - தங்கினவனது, தாழ்வு வதமையை, கெவோக - வதமையென்ற, வையாத - வைய்யார் (நினையார்), (எ-து).

---

‡ உற்பாதம் - பின்வரும் நன்மை தீமைகளே முன்னறிவிக்கும் குறி.

* முதனிலைத் தொழிற்பெயராவது பகுதியே தொழிற்பெயர்ப் பொ ருளாய நிற்பது.

‡ செல்வ மென்பதூடம் என்றும் பாடமுண்டு.

கடவுளென்பது புணடபெயர்ச்சியையுணர்த்தற்றல் விருதிசெட்டியக் தது. (உயர்ந்தோர் நடவு நிலைமையுடையவனது வறுமையை) செல்வமென்றுகொள்ளுவாரென்பது குறிப்பெச்சம். இவை மூன்று பாட்டாலும் முன்றிய கேடும் பெருக்கமும் நடுவுநிலைமை தவறுதலால் வருவனவல்ல வென்பதும், நடுவு நிலைமைதவறுதல் கேட்டிற்குக் காரணமா மென்பதும், நடுவுநிலைமையிற் றவருதவனது தாழ்வு கேடாகா தென்பதும் சொல்லப் பட்டன.

(க-து). நடுவுநிலைமையோடு தருமவழியிலொழுகுகின்றவனது வறுமையைப் பெரியோர் தாழ்வாக நினையார் என்பது.

7. The great will not regard as poverty the low estate of that man who dwells in the virtue of equity.

அ. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

பரி.—(இ-ள்). முன்னே தான் சமனாக நின்று பின்தன்கண்வைத்த பாரத்தை வரையறுக்குந் தூலாம்போல, இலக்கணங்களான் அமைந்து ஒரு பக்கத்துக் கோடாமை சான்றோர்க்கு அழகாம், (எ-று).

† உவமை அடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற் கோடாமையும் உவமைக் கண்ணும் கூட்டிச, சான்றோர் சீர்தூக்கலாவது ‡ தடைவிடைகளாற் கேட்டவற்றை ¶ ஊழான் உள்ளவாறுணர்தலாகவும், ஒருபாற் கோடாமையா

† கோலை (தராசுக்கோலை)என்னும் உவமானத்தின் அடையா (விசேஷணமா)ன சமன்செய்தலேயுஞ் சீர்தூக்கலேயும் சான்றோரென்னும் உவமேயத்திற் சேர்த்துச் சமன்செய்தலேயும் சீர்தூக்குதலேயு முடைய சான்றோரென்றும், சான்றோரென்னும் உவமேயத்தி (பொருளி)ன் அடையான அமைதலேயும் ஒருபாற் கோடாமையையும், கோலென்னுமுவமேயத்திற் சேர்த்து அமைதலேயும் ஒருபாற் கோடாமையையுமுடைய கோலென்றும் கொள்ளவேண்டுமென்க எனவே சமன்செய்தலும், சீர்தூக்கலும், அமைதலும, ஒருபாற் கோடாமையு மென்னுங் கான்கும் கோலுக்கும் சான்றோர்க்கும் விசேஷணமாயின வென்பது பெற்றாம்.

‡ "தொடைவிடை யூழாத் தொடைவிடை தன்னித்,தொடைவிடை யூழிவை தோலாத்-தொடைவேட், டழிபட லாற்ற லறிமுறையென் றெட்டின், வழிபடுதல் வல்ல தவை" எனபது புறப்பொருள்வெண்பாமாலே. தடைவிடைகளாற் கேட்டவற்றை—ஆட்சேப சமாதானவாயிலாக வாதிப் பிரதிவாதிகளிடத்துக் கேட்ட விஷயங்களே. தடையென்பதற்குத் தொடையென்றும்பாடபேதமுண்டு. தொடையென்பதற்கு ஆட்சேபித்தலென்பது பொருள்.

¶ ஊழான்—அதனால் கூறிய விதிப்படி. இவ்வாறன்றி ஊழினை என்பதற்கு இயற்கை யறிவால் எனினு மொக்கும்.

வது அம் வள்ளுவத்தை மறையாத பகை கொதுமல் சுட்பென்னும் மூன்று நிறத்தார்க்கும் ஒப்பக் கூறலாகவும் உரைக்க. † இலக்கணங்களான் அமைதல் இருவழியும் எச்பனகொள்க.

நேளி.—(இ-ன்). சமன்செய்து - (முன்னேதான்) சமஞ்சமின்று சீர்தூக்கும் - (பின்னே தன்கிடத்து வைத்தபாரத்தை) அளவு செய்யும், கோல்போல் - தூலம்போல, அமைந்த - (இலக்கணங்களால்) நிறைந்த, ஒருசால் - ஒருபக்கத்தில், கோடாமை - சாயாமையான து, சான்றோர்க்கு- (அறிவால்) நிறைந்தோருக்கு, அணி - அழகாம், (எ-று).

உவமானத்தினடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் உவமேயத்தினிடத்தும் உவமேயத்தினடையாகிய அமைதலும் ஒருபாற் கோடாமையும் உவமானத்தினிடதவை கூட்டுக. சான்றோர் சீர்தூக்கலாவது (வாதிப்பிரதிவாதிகள உறம்)தடையாலும் விடையாலும் கேட்ட வற்றை முறைமையாகவுன்னபடி யறிதல். ஒருபாற் கோடாமையாவது அவ்வுன்னபடியறிதலவற்றை மறைக்காமல் பகைவர், அயலோர், நட்பனென்னும் மூவகையோருக்கும் ஒப்பச சொல்லுதல். இலக்கணங்களாலமைதல் உவமான வுவமேயமெனனுமிரண்டிடத்தும்பொருதுவனகொள்க. தூலம்-நிறைகோல்.

(க-து). நடுவு நிலைமையை விட்டு ஒருவர் பகசத்திற சார்ந்து பேசாமையே பெரியோராக கழகாம் என்பது.

8. To incline to neither side, but to rest impartial as the even fixed scale is the ornament of the wise.

கூ. சொற்கோட்ட மில்லது சேப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

பதி.—(இ-ள்). நடுவுநிலைமையாவது சொல்லிலிகட் கோதே லில்லாதநாம் ; ‡ அஃதன்னதாவது மனதிலிகட் கோட்ட மின்மையைத் தீண்மிதாகப பெறின், (எ-று).

† இலக்கணம் (அவ்வியாத்தி யதிவியாத்தி யசம்பவமென்னு முக்குற்றக்களும் நீகிய தன்மை)களால் அமைதல் (பொருந்துதல்) இருவழியும் (உவமானமான கோலினகண்ணும் உவமேயமான சான்றோர் கண்ணும்)எச்பன (எத்தத்தக்கலைகளே)கொள்க. எற்பனவாவன:—ஐயந்திரிப் பொருளே யுணர்த்தல், மிகினும் குறையினும் நில்லாதாதலாம. "தூலகோலியல்பே தூக்குங்காலே, மிகினுங குறையினு நில்லா தாகலு,மையந் தீர்த்தது நடுவு நிலைமையோ, டெய்தக் கூறுப வியல்புணர்ந் தோரே", "ஐயந் திரிப் பொருளே யுணர்த்தலு,மெய்க்கடே நிலையு மிருநிறை கோற்கே"என்னும் சூத்திரங்களும் ஈண்டறியத் தக்கனவாம.

‡ அஃதன்னதாவது சொல்லில் கோணுத லில்லாமலிருப்பது. அஃதறமாவது எனறும் பாடமுண்டு.

சொல் † ஊழான் அறத்துச்சொல்லுஞ்சொல். (இவையிரண்டுபாட்டானும்) ‡ காரணம்பற்றி ஒருபாற்கோடாத மனத்தோடு கூடுமாயின், அதற்கிடக்கவாறு சொல்லுதல் நடுவு நிலைமையாமென்னவே, அதனோடுகூடாதாயின் அவ்வாறுசொல்லுதல் நடுவு நிலைமை யன்றென்பது பெறப்பட்டது.

தெளி.—(இ-ள்). செப்பம்-நடுவு நிலைமையாவது, சொல் - சொல்லினிடத்து, கோட்டமில்லது - கோணுதலில்லாததாம் (அஃதத்தன்மையதாவது), உள் - மனத்தினிடத்து, கோட்டமின்மை-கோணுதலில்லாமையை, ஒருதலையா - உறுதியாக, பெறின் - பெற்றால், (எ-று).

சொல் - முறைமையாக வகையறுத்துச் சொல்லுஞ்சொல். (இவையிரண்டுபாட்டாலும் சபையானது) காரணம்பற்றி யொருபக்கத்திற் சாய்தலில்லாத மனத்துடன் கூடுமானால் அறங்கிடந்தபடி கூறுதல் நடுவு நிலைமையாமென்று கூறவே, அத்தன்மையதாகியமனத்தோடு கூடாதானால் அப்படி கூறுதல் நடுவுநிலைமை யல்லவென்பதுபெறப்பட்டது. (கூறப்பட்டது என்றும் பாடம்).

(க-து). மனக்கோட்ட மற்றுச் சொல்லினிடத்துக் கோணுதலில்லாமையே நடுவு நிலைமையாம் என்பது.

9. Freedom from crooked speech is rectitude if it be accompanied by steady freedom from crookedness within.

கப. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

பரி.—(இ-ள). பிறர் பொருளையும் தம்பொருளபோலப் பேணிச் செய்யின், வாணிகஞ்செய்வார்க்கு நன்றாய வாணிகமாம், (எ-று).

* பிறவுந் தமபோற் செய்தலாவது கொள்வது மிகையுங் கொடுப்பது

† ஊழான் அறத்துச் சொல்லுஞ் சொல்—அறனால் கூறிய விதிப்படி வகையறுத்துச சொல்லுந் திர்ப்பு.

‡ காரணம் பற்றி...பெறப்பட்டது என்பதன் பொருள்(நியாய)சபையார் பகைவர் சிநேகரென்னும் காரணம்பற்றி யொருபக்கத்திலுஞ் சார்தலில்லாத மனத்தோடு கூவோராயின் அவர் அறனால் விதித்தபடி தீர்ப்புச சொல்லுதல் நடுவுநிலைமையாமென்று சொல்லவே, ஒருபக்கத்திலுஞ் சார்தலில்லாத மனத்தோடு அவர் கூடாராயின் அறனால் விதித்தபடி தீர்ப்புச் சொல்லுதல் நடுவுநிலைமையல்ல வென்பது பெறப்பட்டதென்க. இதனால் அறனால் விதித்தபடி தீர்ப்புச சொன்னாலும் சொல்வாரது மனதில் பட்சபாத மிருக்குமானால் அத்தீர்ப்பு நடுவுநிலைமையாகா தென்பது பெற்றாம்.

* தமவும் பிறவு மொப்ப நாடிப், கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைபடாது, பல்பண்டம் பகர்ந்து வீசும்" என்பது பட்டினப்பாலை.

குறளாலும் இவ்வாறே செய்யுள் இயற்றுவோன் முன்னே முன்னிலை யசையாலும் முன்னிலை வினையாலும் எதிரது வருவினைகொள்ளத்தக்க அவ்வாறு நிறுத்தாலும் இவ்வகை வேறுகள்தெரித்தமையின். (இதனுள் கவி நிலைமை வகை கூறப்பட்டது).

தேவி.—(இ-ன்). பிறவும் - பிறர்பொருளையும், தமபோல் - தம்முடைய பொருளைப்போல, பேணி-பாதுகாத்து, செயின்-செய்தால். (அச்செய்கையானது) வாணிகஞ்செய்வார்க்கு - வியாபாரஞ் செய்வார்க்கு, வாணிகம் - (கல்ல) வியாபாரமாம், (எ-து).

பிறவுந்தமபோற் செய்தலாவது தாம் கொள்ளும் பொருள் தாங்கொடுக்கும் பொருட்கு மிகுதியும், தாம் கொடுக்குமபொருட தாம் வாங்கும் பொருட்குக் குறைவும் ஆகாமல் பொருந்த வாராயந்து செய்தல்.

இச்செய்யுள் மூன்றனுள், முனனுள்ள விரண்டும் சமையாரை நோக்கினவாம், மற்றது வர்த்தகரை நோக்கியதாம்; அவ்விருவகையாக்கும் கவிநிலைமையென்னுமிவ்வதம வேறுகளெனத்திருதலின். (இதனுள் கவி நிலைமையது கூறபாடு சொல்லப்பட்டது).

(க-து). பிறர்பொருளையுந் தமது பொருளைப்போலப் பாதுகாத்துச்செய்யும் வியாபாரமே சிறந்த வியாபாரமாம என்பது.

10. The true merchandise of merchants is to guard and to do by the things of others as they do by their own.

ஒன்பதாவது - அதிகாரம்

அடக்கமுடைமை—*Self - Control.*

பரி.—(இ-ன்). அஞ்தாவது மெய், மொழி, மனங்களை நீதநெறிக்கட் செல்லாது அடக்குதலுடையராதல். அஞ்ந † தெிலாதாந்தம்போற் றங் தந்தழயி காணும் நவவு நிலைமை யுடையார்க்காதலின், ‡‡ இது நவவு நிலைமையின்பின் வைக்கப்பட்டது.

‖ முன்னையிரண்டும் அசையத்தாரை நோக்கின ; 'சமன்செய்து' என்னுங் குறளும் 'சொற்சோட்டமில்லத' என்னும் குறளும் (பிறவு) சமையாரைக் குறித்த வன்றன.

§ எனவது—"வாணிகஞ்செய்வார்க்கு" என்னுமிக்குறள்.

¶ அவ்விருதிறத்தார்க்கும் இவ்வகம வேறுகள் தெரித்தமையின் - சமையார் வணிகரென்னு மிருவர்க்கும் இந்த கவிநிலைமையாகிய நாலும் வேறுகள் பிரதிருத்தலின். இதனுள் சமையோர்க்கும் வணிகர்க்கும் கவி நிலைமை வாயிலும் மிருபுயாச யி ரு த் த வென்பது நின்னை மனித்து. † பதினெடாமை. 10 - ஆது குறள்.

‡‡ இது - அடக்கமுடைமை யென்னு மிவ்வதிகாரம்.

தேளி.—அகிராவதை காயமும், வாக்கும், மனமும் நியமநிலையிற் செல்லாமல் அட்டமாதனுடையனு மிருத்தல். அவ்வடக்கம் அலாதனுஞ் தம்போலத் தமதிருத்தமும் சாணும் நவேதிலேமை புடையவருக்கு ஈரிய தாதலால் இது நவேதிலேமையின் பின் வைக்கப்பட்டது.

க. அடக்க ‖ மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

பரி.—(இ-ள்). ஒருவனை அடக்கமாகிய அமம் பின் தேவருலகத்துய்க்கும்; அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின்கட்செலுத்தும், (எ-று).

* இருளெனபது ஓர் நரகவிசேடம். ‡ “எல்லாம், பொருளிற் பிறந்து விடும்” என்றாற்போல § உய்த்துவிடுமென்பது ஒரு சொல்லாய் நின்றது.

தேளி.—(இ-ள்). அடக்கம் - (ஒருவனை) அடக்கமாகிய அறமானது, அமரருள - (பின்) தேவருலகத்தில, உய்க்கும் - கொண்டுபோய்விடும், அடங்காமை - அடங்காமையாகிய பாவமானது, ஆரிருள் - வெந்தற்கரிய நரகத்தில், உய்த்துவிடும் - செலுத்திவிடும், (எ-று).

இருளென்பது நரகவகையு ளொன்று. உய்த்துவிடுமென்ப தொரு சொல்.

(க-து). அடக்கமுடையவர் சுவர்க்கத்தையும் அஃதில்லாதவர் நரகத்தையு மடைவா என்பது.

‖ அமரர் என்பது மரணமில்லாதவ ரெனனும் பொருளது.

* இருள் என்பது அதற்குத்தானமாகிய நரகத்திற்காதலின் தானியாகு பெயராம். எஞ்ஞான்றுமிருள் செருக்கியுள்ள நரகத்திற்கு அதிதமம் என்று பெயர்.

‡ நான் மணிக்கடிகை, எ. இதன் பொருள் போகம் கீர்த்திமுதலிய யாவும் நிரயத்தினுல் பிறகரும் என்பது. பிறந்துவிடுமென்பது ஒரு சொல்.

§ உய்த்துவிடு மென்பது செலுத்தும் என்னும் ஒருமொழிப்பொருளதாயிருத்தல்பற்றி ‘ஒருசொல்லாய் நின்றது’ என்று கூறப்பட்டது. உய்த்துவிடும் என்பதில் உய்ததுவிடு என்பது பகுதி. இதில் விடு துணிவுப்பொருளுணர்த்திற்று. பாவபுண்ணியங்களிரண்டும் இம்மையிலே மனிதர்களால் செய்யப்பட்டே செயப்படு பொருள்களாக நிற்பினும், ‘மறுமையிலே அவை வினைமுதலாக நின்று தம்மைச் செய்தவர்களைச் செயப்படு பொருளாக்கி நரகசுவர்க்கங்களுக் கனுப்புதல்பற்றி ‘அடக்க மமரரு ளுய்க்கும்’ என்றும் “அடங்காமை யாரிரு ளுய்த்து விடும்” என்றும் கூறப்பட்டன வென்க.

1. Self-control will place (a man) among the Gods; the want of it will drive (him) into the thickest darkness (of hell).

உ. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு.

பரி.—(இ-ன்). உயிர்கட்கு அடக்கத்தின் மிக்க செல்வமில்லை; ஆகலான், அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாகக்கொண்டு அழியாமற்காக்க.

உயிரென்பது சாதியொருமை. அஃது ஈண்டு மக்களுயிர்மேனின்றது; அறிதடங்கிப் பயன்கொள்வது அதுவேயாகலின்.

தெளி.—(இ-ன்). அடக்கத்தை—அடக்கத்தினை, பொருளா - (உறுதிப்) பொருளாக(கொண்டு), காக்க - (அழியாமற்) காக்கக்கடவன், உயிர்க்கு-உயிர்கட்கு, அதனினூஉங்கு- அவ்வடக்கத்தின்மேற்பட்ட, ஆக்கம்-செல்வமானது, இல்லை—,(ஆதலால்), (எ-று).

உயிரென்பது சாதியொருமைப்பெயர் அஃதில்லிடத்து மக்களது உயிரின் மேல் நின்றது; (அறியத்தக்கனவற்றை) அறிந்த மன மொழி மெய்க ளடங்கிப் பயனெப்பெறுவது அவ்வுயிரேயாதலின்.

(க-து). அடக்கத்தின் மிக்க செல்வமின்மையின், அதனை யழியாவாறு காத்தல் வேண்டுமென்பது.

2. Let self-control be guarded as a treasure; there is no greater source of good for man than that.

ரு. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

பரி.—(இ-ன). அடங்குதலே நமக்கு அறிவாவதென்று அறிந்து நெறியானே ஒருவன் அடங்கப்பெறின், அவ்வடக்கம் நல்லோரான் அறியப்பட்டே அவனுக்கு விழுப்பத்தைக் கொடுக்கும், (எ-று).

இவ்வாழ்வானுக்கு அடங்குதெறியாவது மெய்ம்முதன் மூன்றும் தன்வயத்தலாதல்.

தெளி.—(இ-ன்). அறிவறிந்து - (அடங்குதலேமக்கு) அறிவாவதென்று அறிந்து, ஆற்றின் - நல்வழியானே, (ஒருவன்), அடங்கப்பெறின் - அடங்கப்பெற்றால், செறிவு - அவ்வடக்கமானது, அறிந்து - (நல்லோரால்) அறியப்பட்டு, சீர்மை - மேம்பாட்டை, பயக்கும் - (அவனுக்குத்) தரும், (எ-று).

இவ்வாழ்வானுக்கு அடங்கும் வழியாவது காயமும், வாக்கும், மனமும் தன்வசமாக வாதலாம்.

(கூ-து). ஒருவன் மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரணத்தாலும் அடங்கெடுப்பானின் அவ்வடக்கம் அவனுக்கு மேன்மையைத் தரும் என்பது.

3. If a man, knowing that self-control is knowledge, control himself, in the prescribed way such self-control, known by the wise, will bring distinction.

ச. கிலையிற் றிரியா தடங்கியான் றேற்ற
மலையினு மாணப் பெரிது.

பரி.—(இ-ள்). இல்வாழ்க்கையாகிய தன்னேறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி மலையினுயர்ச்சியினும் மிகப்பெரிது. ()

திரியாதடங்குதல் - பொறிகளாற் புலன்களே தகராகின்றே அடங்குதல். *மலை* - ஆருபெயர்.

தெளி.—(இ-ன்). *கிலையின்* - (இல்வாழ்க்கையாகிய தன்) வழியில் *திரியாது* - வேறுபடாது (நின்று), *அடங்கியான்* - அடங்கினவனது, *தோற்றம்* - உயர்ச்சியானது, *மலையினும்* - மலையினுயர்ச்சியினும், *மாணப் பெரிது* - மிகப்பெரிதாம், (எ-று).

வேறுபடாது நின்றடங்குதல்-செவி முதலிய வைந்திரியங்களாலும் சித்தமுதலிய வைம்புலன்களேயும் அனுபவித்துக் கொண்டிருந்தே அடங்குதல். *மலையென்னு முதற்பொருளின் பெயர் அதன் பண்பாகிய வுயர்ச்சிக்காதலின் பொருளாகுபெயராம்.*

(க-து). அடங்கி நடப்பவனது மேன்மை மலையினுயர்ச்சியினும் பெரிதாம் என்பது.

4. More lofty than a mountain will be the greatness of that man who without swerving from his proper (domestic) state controls himself.

ஞ. எல்லார்க்கு நன்றும் பணிதல வருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

பரி.—(இ-ள்). பெருமித மின்றி யடங்குதல் எல்லார்க்கும் ஒப்ப நன்றேயெனினும், அவ்வெல்லாருள்ளும் செல்வமுடையார்க்கே வேறு செல்வமாஞ் சிறப்பினை யுடைத்து, (எ-று).

பெருமிதத்தினைச் செய்யுங் கல்வியுங் குடிப்பிறப்பும் உடையார் அஃதின்றி † அவைதம்மானே அடங்கியவழி அவ்வடக்கம் சிறந்து காட்டாதாகலின் 'செல்வர்க்கே செல்வந் தகைத்து' என்றார் ¶ செல்வத்

† அவைதம்மானே - கல்வியினுலும் குடிப்பிறப்பினுலும்.

¶ செல்வத்தகைத்து என்பது மெலிக்கும்வழி மெலித்தலென்னும் செய்யுள் விகாரத்தால் செல்வந்தகைத்து என மெலித்து நின்றது. [தகா வோற்று நகாவோற்றன்மை விகாரம்].

தகைத் தென்பது மெலிந்து நின்றது. † பொதுவெண்பாவையும் உடன் பட்டு நின்றே நிறப்பாதல் கூறியவாறு. இவையைந்துபாட்டானும் பொது வகையான் அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

தேவ.—(இ-ன்). பணிதல் - (பெருமைப்பாடில்லாது) அடங்குதல், எல்லார்க்கும்—,ன்றும் - (ஒப்ப)ன்றாகும், (ஆயினும்), அவருள்ளும்-அவ்வெல்லாருள்ளும், செல்வர்க்கே - செல்வ முடையவர்களுக்கே, செல்வத்தகைத்து - (வேறொரு) செல்வமாய்த் தோன்றுஞ் சிறப்பினை யுடையதாம், (எ-று).

பெருமைப்பாட்டினை (செருக்கினை) யுண்டாக்கும் கல்வியும் குடிப்பிறப்பும் உடையவர் அப்பெருமைப்பாடில்லாமல் அவற்றாலே அடங்கியவிடத்து அவ்வடக்கம் சிறந்து தோன்றுதாகலின 'செல்வர்க்கே செல்வத்தகைத்து' என்றார். செல்வத் தகைத்தென்பது செல்வத்தகைத்தென மெலித்தல் விகாரமடைந்து நின்றது. அடக்கம் யார்க்கும் பொதுவான தருமமாமென்பாரையு மடக்கிச்சித்து நின்றே அது சிறப்பாதலைக் கூறியவாறும். இவை பைத்தபாட்டாலும் பொதுவகையால் அடக்கத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(கு-று). செல்வ முடையவரிடத்தே அடக்கம் சிறந்து விளங்கும் என்பது.

5. Humility is good in all ; but especially in the rich it is (the excellence of) a higher riches.

சு. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

பரி.—(இ-ள்). ஆமைபோல ஒருவன் ஒரு பிறப்பிலிருக்கும் ஐம் பொறிகளையும் அடக்கவல்லனாயின், அவ்வன்மை அவனுக்கு ஏழுபிறப் பின்கணும் அரணாதலை உடைத்து, (எ-று).

† பொதுவெண்பாவையு முடன்பட்டுநின்றே சிறப்பாதல் கூறியவாறு என்பதற்குக் கல்வியுடையார் குடிப்பிறப்புடையார் செல்வமுடையாரென்னு மூன்று திறத்தினர்க்கும் அடக்கமென்னுங்குணம் பொதுவானதாகு மென்பாரது அபிப்பிராயத்தையு மோப்புக்கொண்டே பொருளுடையார்க்கே அவ்வடக்கம் இன்றியமையாச் சிறப்பினதாகுமென்று கூறியவிதமாம். இதனால் அடக்கமானது கல்வியுடையாரிடத்தும் குடிப்பிறப்புடையாரிடத்தும் நிறைந்துவிளங்காமல்பொருளுடையாரிடத்தேநிறைந்துவிளங்குமென்பது பெறப்பட்டது. பொருளில்லாவிடத்துச் செருக்கு மிகுதற்கேதுவின்மையின் செருக்கு மிகுதற்கேதுவான பொருளுடையாரிடத்து அடக்கமிருப்பின் அவ்வடக்கம் கல்வியுடையாரது அடக்கத்திலும் குடிப்பிறப்புடையாரது அடக்கத்திலும் மேம்பட்டு விளங்குமென்பது கூறுத்து.

‡‡ *ஆமை ஐந்துறுப்பினையும் இடர்புருதாமல் அடக்குமாறுபோல இவனும் ஐம்பொறிகளையும் பாவம்புகுதாமல் அடக்கவேண்டுமென்பார் 'ஆமைபோல்' என்றார். ஒருமைக்கட்செய்த வினையின் பயன் எழுமையும் தொடருமென்பது இதனுனறிக. இதனுல் மெய்யடக்கங்கூறப்பட்டது.*

தெளி.—(இ-ள்). ஒருமையுள் - (ஒருவன்) ஒருபிறப்பினிடத்து, ஆமைபோல் - ஆமையைப்போல, ஐந்து - ஐம்பொறிகளையும், அடக்கலாற்றின் - அடக்க வல்லவனுகில், (அவ்வல்லமை அவனுக்கு), எழுமையும் - எழுபிறப்பின் கண்ணும், ஏமாப்புடைத்து - காவலாதலை யுடையதாம், ()

ஆமையானது தனது கால்கள் நான்கும், தலையொன்றுமாகிய வைக் தவயவங்களையுந்தன்பம் வாராதபடி யடக்கும் விதம்போல இவனும் மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐம்பொறிகளையும் பாவம் வாராதபடி அடக்கவேண்டு மென்பார் 'ஆமைபோல்' என்றார். ஒரு பிறப்பிற் செய்த வினைப்பயன் எழுபிறப்பிலுந் தொடருமென்பது இதனுலறிக. இதனுல் காயத்தினடக்கம் சொல்லப்பட்டது.

(க-து). *ஒருவன் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனுயின் அவனுக்கு அவ்வடக்கம் எழுபிறப்பிலுந் துணையாம் என்பது.*

6. He who throughout one birth like a tortoise keeps in his five senses, the fruit of it will prove a safeguard to him throughout the seven - fold births.

எ. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

பரி.—(இ-ள்). தம்மாற் காக்கப்படுவன எல்லாவற்றையும் காக்க மாட்டாராயினும் * நாவோரிறனையுங் காக்க; அதனைக் காவாராயின் சொற்குற்றத்தினுகட் பட்டுத் தாமே துன்புறுவர், (எ-று).

யாவென்பது அஃறிணைப்பன்மையினுப்பெயர்; அஃது ஈண்டு எஞ் சாமை உணர்கின்றது. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. சொற்குற்

‡‡ *ஆமை தன் னைந்துறுப்புக்களையும்அடக்குவதுபோல ஒருவன் ஐம் பொறிகளையு மடக்கவேண்டுமென்பதன் பயன் பகவத்கீதை சாங்கிய யோகவத்தியாயத்தில் "இவன் (துறவி) ஆமையானது (தன்) அவயவங் களை (உள்ளுக்கிழுத்துக் கொள்வது) போலச் சகலமான விஷயங்களிலிரு ந்தும் இந்திரியங்களை யெப்போது இழுத்துக்கொள்ளுகிறனே அப்போது அவனுடைய ஞானமானது நிலைத்தது" என்று கூறுவதனுலுமறிக.*

* *"ஆக்கப் படுக்கு மருந்தினவாய்ப் பெய்விக்கும், போக்கப் படுக்கும் புலைரகத் துய்ப்பிக்கும், காக்கப் படுவன விந்திரிய மைந்தினு, மாக்கல் இல்லை நனிவெல்லு மாறே" என்பது வினையாபதி.*

தம் - சொல்லின்கட்டோன்றும் குற்றம்: † அல்லாப்பர், செம்மாப்பர் என்பனபோலச் சோகாப்பரென்பது ஒரு சொல்.

நேளி.—(இ-ன்). யா - (தம்மால் காக்கப்படவேனவாயிய) எல்லாவற்றையும், காவாராயினும் - காக்கமட்டாராயினும், நா - நாவொன்றையும், காக்க - காக்கக்கடவர், காவாக்கால் - (அங்ஙனமிலாக்) காக்கமட்டாராயின், சொல்லிழுக்குப்பட்டு - சொற்குற்றத்தினிலகப்பட்டு, சோகாப்பர் - (தாமே) துன்பமடைவர், (எ-று).

யாவென்பது எவையென்னும் பொருளையுணர்த்தும் அஃறிணைப்பன்மை விளிப்பெயர். அஃறிணைக்குறையாமை யென்ப தறியுமாறு நின்றது. யாவுமென்னும் முற்றும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்குநின்றது. சொற்குற்றம் - சொல்லினிடத்துத் தோன்றுங் குற்றம். அது குன்றக் கூறல் முதலியனவாம். சோகாப்பரென்பது ஒருசொல்.

(க-து). காவடக்கமில்லார் சொற்குற்றத்தினிலகப்பட்டுத் துன்புறுவர் என்பது.

7. Though you guard nothing else, guard your tougue; as for those who do not guard it their words will be drawn into evil and they will suffer distress.

அ. ஒன்ருனுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்ருகா தாகி விடும்.

பரி.—(இ-ள்). தீயவாகிய சொற்களின் பொருள்களாற் பிறர்க்குவருந் துன்பம் ஒன்றையேனும் ஒருவன்பக்கல் உண்டாவதாயின், அவனுக்குப் பிறவறங்களான் உண்டான நன்மை நீதாய்விடும், (எ-று).

நீசசொல்லாவன : நிக்ருபயக்ரம் பொய், குறளை, கடுஞ்சொல்லென்பன. ‡ ஒருவன் நல்லவாகச்சொல்லுஞ் சொற்களின்கண்ணே ஒன்ருயி

† சோகம் என்பதன் விகாரமாகிய சோ என்னும் சொல்லும் காப்பர் என்னும் சொல்லும் ஆகிய இரண்டுசொல்லும் சேர்ந்த சோகாப்பர் என்பதின் என்பாரது கூற்றை யொப்பாது ‘அல்லாப்பர் செம்மாப்பர் என்பன போலச் சோகாப்பரென்பது ஒருசொல்’ என்ற கூறப்பட்டது. சோகாப்பர் என்பதில் துன்பமென்னும் பொருளை யுணர்த்தும் சோகம் என்னும் பண்புப்பெயரின் விகாரமாகிய சோகாப்பு என்பது பகுதி, அல்லாப்பர் செம்மாப்பர் என்பனவற்றில் அல்லாப்பு செம்மாப்பு என்பன பகுதிகள்.

‡ ‘ஒன்ருனுந்தீச்சொற் பொருட்பய னுண்டாயின்’ என்பதற்கு ஒன்ருனும் - (ஒருவன் நல்லனவாகச் சொல்லும் சொற்களிடத்தே) ஒரு சொல்லையேனும், தீச்சொற் பொருட்பயன் - தீயசொல்லாலுண்டாகும் பொருளினது பயன், உண்டாயின் - (பிறர்க்கு) உண்டாவதாயின் என்று பொருள் கூறலாகுமென்பர் என்பது.

னும் நீச்சொற்பயனும் பொருளினது பயன் பிறர்க்குண்டாவதாயின் என் றுரைப்பாருமுளர்.

தெளி.—(இ-ன்). நீச்சொல் - நீயவாகிய சொற்களின், பொருட் பயன் - பொருள்களால் (பிறர்க்குவரும் தன்பமாகிய) பயனானது, ஒன் றனும் - ஒன்றாயினும், உண்டாயின் - (ஒருவனிடத்தில்) உண்டாவதா யின், நன்ற - (அவனுக்குப் பிறவறங்களாலுண்டாகிய) நன்மையானது, ஆகாதாகிவிடும் - நிதாய்விடும், (எ-று).

நீயசொற்களாவன:—நீமையத்தரும் பொய், குறளை, கடுஞ்சொல் என்பனவாம்.

(க-து). ஒருவன் கடுஞ்சொற்களைச் சொல்லுவானாயின் அச் சொற்கள் அவனது நன்மையனைத்தையுங் கெடுக்கும் என்பது.

8. If a man's speech be productive of a single evil, all the good done by him will be turned into evil.

கூ. தீயினுஞ் சுட்டபு ணுள்ளாறு மாருதே
நாவினுஞ் சுட்ட வடு.

பரி.—(இ-ள்). ஒருவனை ஒருவன் தீயினுஞ் சுட்டபுண் மெய்க்கட் கிடப்பினும் மனத்தின்கண் அப்பொழுதே யாறும்; அவ்வாறன்றி வேவ் வுரையுடைய நாவினுஞ் சுட்டவடு அதன் கண்ணும் எஞ்ஞான்றும் ஆறாது.

ஆறிப்போதலால் தீயினுஞ்சுட்டதனைப் 'புண்' என்றும், ஆறாமை யின் நாவினுஞ்சுட்டதனை 'வடு' என்றுங் கூறினர். தீயும் வெவ் வுரையுஞ் சுடுதற்றொழிலான் ஒக்குமாயினும், ஆறுமையாற் தீயினும் வெவ்வுரை கொடிதென்பது போதரலின், இது ‡ குறிப்பான்வந்த வேற் றுமை யலங்காரம். இவை மூன்று பாட்டானும் மொழியடக்கங் கூறப் பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவனை யொருவன்), தீயினுஞ் சுட்ட—நெருப் பாற்சுட்ட, புண்-புண்ணானது,(உடம்பினிடத்திருந்தாலும்), உள்-மனத்தி னிடத்து, ஆறும்-(அப்போதே)ஆறிப்போம்,(அப்படியல்லாமல்),நாவினுஞ்-

---

‡ உவமானமான தீயு (நெருப்பு)ம் உவமேயமான கடுஞ்சொல்லும் சுடுதெ(பிறரைவருத்துதின்றதொழிலினுஞ் தம்முள் சமானமுடையனவா யிருந்தாலும் (தீயினுஞ் சுட்டபுண் உடம்பில் ஆறிப்போவதுபோலாகாது நாவினுஞ் சுட்ட வடு மனத்தின்கண் ஆறாது கிடத்தலின்) நெருப்பைப் பார்க்கிலும் கடுஞ்சொல் கொடியது என்னும் வேற்றுமை 'ஆறாதே நாவி னுஞ் சுட்டவடு'என்னுங் குறிப்பாற்பெற வைத்தமையின் இது குறிப்பான் வந்தவேற்றுமையலங்காரமாயிற்று. வேற்றுமையலங்காரமாவது வெளிப் படையாகவாவது குறிப்பாகவாவது ஒப்புடைய இருபொருளை யொரு பொருளாகவைத்து அவற்றைத் தம்முள் வேற்றுமைபடச் சொல்லுதலாம்

(நியசொற்களையுடைய) காவினால், சுட்ட—,வடு-வடுவொன்று, (அம்மனத் தினிடத்தும் எப்போதும்) ஆறாது—ஆறாதாம், (எ-று).

ஆறிப்போதலால் நீயினாற்சுட்டதனைப் 'புண்' என்றும், ஆறுதிருத் தலால் நாவினாற் சுட்டதனை 'வடு' என்றும், சொல்லினார். நீயும் கடுஞ் சொல்லும் கருதற்றொழிலால் தம்மொளொக்குமாயினும் ஆறுமையினால் நீயினும் கடுஞ்சொல் கொடியதென்பது தோன்றுதலால் இது குறிப்பால் வந்த வேற்றுமையணி. இவை மூன்றுபாட்டாலும் வாக்கின தடக்கம் சொல்லப்பட்டது.

(க-து). வருத்துந்தொழிலால் கடுஞ்சொல் தீயினுங் கொடி யது என்பது.

9. The wound which has been burnt in by fire may heal, but a wound burnt in by the tongue will never heal.

கo. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

பரி.—(இ-ள்). மனத்தினின்கண் வெகுளிதோன்றாமற் காத்துக் கல்வி யுடையவனது அடங்குதலை வல்லவனது செவ்வியை, அறக்கட வுள் பாரா நிற்கும்; அவனை யடையு நெறியின்கட் சென்று, (எ-று).

அடங்குதல்—மனம் புறத்திப் பாவாது அறத்தின் கண்ணே நிற்றல். செவ்வி—தன்குறை கூறுதற்கேற்ற மனமொழி முகங்கள் இனியனவுங் காலம். இப்பெற்றியானே அறக் தானே சென்றடையும் என்பதாம். இதனுள் ‡‡ மனவடக்கங் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). கதம் - கோபத்தை, காத்து (மனத்தினின்கண் தோன்றாமல்) பாதுகாத்து, கற்ற - கல்வியுடையவனது, அடங்குதலில் - ஆற்றுவான்-வல்லவனுயிருப்பவனது, செவ்வி-சமயத்தை, அறம்-அறக்கடவுள், பார்க்கும் - பாராநிற்கும், ஆற்றில் - (அவனைச்சேரும்) வழியில், தலைந்து - சென்று, (எ-று)

அடங்குதல்-மனம் பராமுகப்பட்டு (பாவவழியிற்) செல்லாது அறத் திலே நிற்றல். செவ்வி - தன்குறையைச் சொல்லுதற்கேற்ற மனமொழி முகங்கள் இனிமையுடையவனு யிருக்கிற காலம். இத்தன்மையுடைய வனை அறக்கடவுள் தானே சென்று அடையுமென்பதாம். இதனுல் மன த்தினடக்கம் சொல்லப்பட்டது.

‡‡ மெய்ம்முதலிய வற்றின் அடக்கத்தைப்பற்றி நீதிநெறிவிளக்கம் " பொய்குறளே வன்சொல் பயனிலவென் றிந்நான்கு மெய்தானம சொல் லின் வழுக்காது - மெய்யிற், புலனைந்தும் காத்து மனமா சகற்ற, லமை ன்றே நல்ல தெனல் " என்றும், நிரிகடுகம் " வாயி னடங்குத றப்புரவா மாசற்ற, செய்கை யடங்குத றிப்பியமாம் - பொய்யின்றி, நெஞ்ச மடங்கு தல் வீடாகும்" என்றும் கூறுமாறறிக.

(க-து). *கல்வியறிவுடையவனுய்க்கோபம்வாரா தடங்கியிரு ப்பவனிடத்து எல்லாவறங்களுநம நிலேபெறும் என்பது.*

10. Virtue, seeking for an opportunity, will come into the path of that man who, possessed of learning and self-control, guards himself against anger.



பத்தாவது அதிகாரம்.

ஒழுக்கமுடைமை—

Observance of the proprieties of life.

பரி.—அஃதாவது தத்தம் வருணத்திற்கும் நிலேக்கும் ஏதப்பட்ட ஒழுக்கத்தினே யுடையாதல். இது மெய்ம்முதலிய அடங்கினர்க் கல்லது முடியாதாகலின், அடக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—*அஃதாவது தததமது சாதிகதும் ஆசிரமத்திற்கும் சொல் லப்பட்ட ஆசாரததை புடையவராயிருத்தல். இது காயமுதலானவை யடங ஙினவாக்கல்லது முடியாதாகலின், அடகுகமுடைமையின்பின் வைக்கப் பட்டது.*

க ஒழுக்கம் விழுப்பந் தரலா னெழுக்க
முயிரினு மோம்பப் படும்.

பரி.—(இ-ள்). ஒழுக்கம் எல்லார்க்குஞ் சிறப்பினேத் தருதலால் அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும், (எ-று).

உயாநதார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பத்தருதலின், பொதுப் படக கூறினர். சுட்டி வருவிகபபட்டது. அதனுல அவ்வனம் விழுப் பந்தருவதாயது ஒழுகுகமெனபது பெறறும. † உயிர் எல்லாப்பொருளி னுஞ சிறநததாயினும ஒழுகுகம்போல விழுப்பந தாராமையின் 'உயிரினு மோம்பப்படும்' என்றார

தெளி —(இ-ள). *ஒழுகுகம - ஆசாரமானது, விழுப்பம்-சிறப்பினை, தரலான - (எல்லார்க்கும்) கொடுத்தலால, ஒழுகுகம்-அவ்வாசாரமானது, உயி ரினும் - உயிரைப்பார்க்கிலும், ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும், (எ-று).*

ஒழுகுகம் உயர்நதார்க்கும் இழிந்தார்குகும் சமமாகசசிறப்பினைத்தரு தலால் 'ஒழுகுகம் விழுப்பந் தரலான்'எனப்பொதுப்படசசொல்லினர். (அவ் வொழுக்கமென) அகரசசுட்டுவெருவிக்கபபட்டது. அசசுட்டினுல் அவ்வாறு சிறப்பினைத தருவதாயது ஒழுக்கமென்பதுபெற்றும். ஒருவனுகு உயிரா

† *ஒருவனுக்கு உயிர்போலச சிறந்தது யாதொரு பொருளுமில்லை. அவ்வாறுயினும் அவ்வுயிர் கல்வினைக்கும் தீவினைக்கும் காரணமாய்நின்று இன்பத்துன்பங்களே வருவித்துக்கொள்ளுகின்றது. ஒழுக்கமோ அவ்வாறு காமல் இன்பத்தை யுண்டாக்குவதற்கே காரணமாயிருக்கின்றது; அதனுல் ஒழுக்கம் உயிரைப்பாகுகிலுஞ் சிறந்ததா மென்க.*

மற்ற எல்லாப்பொருளினும் நெஞ்சாலினும் ஒழுக்கம்போலச் நெற்பைத் தாமையால் அஃது 'உயிரினுமோம்பப்படும்' என்றார்.

(க-து). *ஆசாரம் உயிரினும் நெற்புடையதாம் என்பது.*

1. Propriety of conduct leads to eminence, therefore should it be preserved more carefully than life.

உ. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

பதி.—(இ-ள்). ஒழுக்கத்தினை ஒன்றினும் அழிவுபடாமற் பேணி வருதியுங் காக்க,‡ அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து அவற்றுள் ஒருமைக்குத் துணையாவது யாதென்று மனத்தை ஒருக்கித் தேர்ந்தாலும் துணையாய் முடிவது அவ்வொழுக்கமே யாகலான், (எ-று).

† *பரிந்தென்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது. இவையிரண்டோடும் ஒழுக்கத்தது நெற்புக் கூறப்பட்டது.*

தெளி.—(இ-ன்). *ஒழுக்கம் - ஆசாரத்தை, ஓம்பி - (ஒன்றினும் அழிவுபடாமல்) பாதுகாத்து, பரிந்து-வருந்தியும், காக்க-காக்கக்கடவன், தெரிந்து (அறங்கள்பலவற்றையும்) ஆராய்ந்து, (அவற்றுள் இம்மை மறுமையென்னும் இருமைக்குந் துணையாவதெவ்வறமென்று), ஓம்பி - (மனத்தை) அடக்கி, தேரினும்-தெளிந்தறிந்தாலும், துணை - துணையாய்முடிவது, அஃதே - அவ் வாசாரமே, (ஆதலால்), (எ-று).*

பரிந்து மென்னும் உம்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது. இவை இரண்டு பட்டாலும் ஒழுக்கத்தினது நெற்புச் சொல்லப்பட்டது.

(க-து). *அறங்களுள் சிறந்த துணையாயிருப்பது ஆசாரமாதலின் அதனைப்பழுதுபடாமல் காத்தல்வேண்டும் என்பது.*

2. Let propriety of conduct be laboriously preserved and guarded; though one know and practise and exell in many virtues, that will be an eminent aid.

உ. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

---

‡ *அறங்கள்பலவாவன; ஆதலால்க்குச்சாலே, ஒதவார்க்குணவு, அறமயத்தார்க்குண்டி, பகலிற்குளியுறை, நைசோறு, ஐயம், நின்பண்டாலில்கல், அறவைச்சோறு, மகப்பெறலித்தல், மகவுவளர்த்தல், மகப்பால்வார்த்தல், அறவைப்பிணங்குதல், அறவைத்தாரியம், கோய்மருத்து, பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, எறும்பீத்தல், வீலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம் என்றற் றொடக்கத்தன.*

† *இவ்வும்மை இழிவு நெற்பும் எதிரதழீயதுமாம்.*

பதி.—(இ-ள்). எல்லார்க்குந் தந்தம் வருணத்திற் கேற்ற ஒழுக்க முடைமை தலையுடைமையாம்; அவ்வொழுக்கத்திற் றவறுதல் அவ்வருணத் திற் றாழ்ந்த வருணமாய்விடும், (எ-று).

‡ பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தாராயினும் ஒழுக்கம் உடைய ராக உயர்குலத்தாரவராகலின் 'குடிமை'யா மென்றும், உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறத் தாழ்ந்த வருணத்தராவராகலின் 'இழி ந்தபிறப்பாய் விடும்' என்றும் கூறினர். உள்வழிப்படுங் குணத்தினும் இல் வழிப்படுங் குற்றம் பெரிதென்றவாறு. § பயன் இடையீடின்றி எய்துதலி ன், அவ்விரைவுபற்றி அவ்வேதுவாகிய வினைகளே பயனுகவோதப்பட்டன.

தெளி.—(இ-ள்). (எல்லார்க்கும்) ஒழுக்கமுடைமை-(தத்தமதுவருணத் திற்குப்பொருந்திய) ஆசார முடைமையான தி, குடிமை - குலமுடைமை யாம், இழுக்கம் - (அவ்வாசாரத்தினின்றுந்) தவறுதல், இழிந்த பிறப்பாய் விடும்-(அவ்வருணத்தில்) தாழ்ந்த வருணமாய் விடும், (எ-று).

பிறந்த சாதியுள் இழிந்த குலத்தவராளுலும் ஆசாரமுடையவராகவுயர்ந்த குலத்தினராவ ராதலின்: 'குடிமை' ஆம் என்றும், உயர்ந்தசாதியிற்பிறந்தவ ராளுலும்ஆசாரத்திற்றவறத் தாழ்ந்தசாதியாராவராதலின் 'இழிந்தபிறப்பாய் விடும்' என்றுஞ்சொல்லினர். ஆசாரமுள்ளவிடத் தண்டாகுங் குணத்தி லும் அவ்வாசாரமில்லாவிடத் தண்டாகுங் குற்றம் பெரிதாமென்பதாம். (ஒழுக்கம் இழுக்கம் என்பவற்றின்) பயன் தடையில்லாம லடைதலால், அவ்விரைவுபற்றி அப்பயனுக்குக் காரணமாகிய வினைகளே பயனுகச் சொல்லப்பட்டன. வருணம் - சாதி. குலம் - குடிச்சிறப்பு.

(க-து). ஆசாரமுடையவர் உயர்ந்தகுலத்தாரும் அஃதில்லாத வர் இழிந்த சாதியாருமாவர் என்பது.

3. Propriety of conduct is true greatness of birth; impropriety will sink into a mean birth.

‡ "நல்லகுலமென்றுந் தீய குலமென்றுஞ், சொல்லள வல்லாற் பொரு ளில்லைத் - தொல்சிறப்பி, லெண்பொரு ளொன்றே தவங்கல்வி யாள் வினை, யென்றிவற்று ளுஞ்சு குலம்" என்பது நாலடியார்.

ஒருவர் பிறந்தசாதியுள் தாழ்ந்த குலத்தவராளுலும் ஒழுக்கமுடைய வராயிருந்தால் அவர் உயர்ந்த குலத்தாராவர் என்றும், ஒருவர் உயர்ந்த சாதியுள் பிறந்தவராளுலும் அவர் ஒழுக்கத்தினின்றும் தவறினுல் தாழ்ந்த சாதியராய் விடுவாரென்று மறிக.

§ குலனுடைமையும் தாழ்ந்த வருணமுமாகிய பயன் (பிரயோஜ னம்) இடையீடின்றி (காலதாமத மின்றி) யெய்துதலின் (உண்டாத லினுல்) அவ்விரைவுபற்றி (அத்தவிரைவு நோக்கி) அவ்வேதுவாகிய வினை களே (குலனுடைமையும் தாழ்ந்தவருணமுமுண்டாவதற்குக் காரணமாகிய ஒழுக்கமுடைமையும் இழுக்கமுமாகிய வினைகளே) பயனுக (குலனு டைமை இழிந்தபிறப்பு என்னும் பிரயோஜனமாக) ஓதப்பட்டன. இது காரணம் காரியமாக வந்த வுபசார வழக்கு.

ச. மறப்பினு ‡ மோத்துக் கொளலாகும் § பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

பரி.—(இ-ன்). கற்ற வேதத்தினை மறந்தானெயினும் அவ்வருணங் கெடாமையிற் பின்னும் அஃதோதிக் கொளலாம், அந்தணன்று உயர்ந்த வருணம் தன்னொழுக்கங் குன்றக் கெடும், (எ-று).

மறந்தவழி இழிகுலத்தனுமாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தான் 'மறப்பினும்' என்றார். † சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைவருணங்கட்குங் கொள்ளப்படும்.

தெளி.—(இ-ன்). ஒத்த - (கற்ற) வேதத்தினை, மறப்பினும்-மறந்தானெயினும், கொளலாகும் - (அவ்வருணங் கெடாமையிற் பின்னும் அதனை) ஓதிக்கொள்ளலாம், பார்ப்பான் - பிராமணனது, பிறப்பு - உயர்ந்தவருணமானது, ஒழுக்கங்குன்ற - (தனது) ஆசாரக்குறைய, கெடும்—அழியும், ()

கற்றவேதத்தினை மறந்தவிடத்து இழிகுலத்தானுவனதலால், அதனை மறக்கலாகாதென்னுங்கருத்தால் 'மறப்பினும்' என்றார். மறப்பினுமென்ற உம்மை எதிர்மறைப்பொருளது.சிறப்புடைய முதல் வருணத்திற்குச் சொல்லுதலினால்,இவ்வொழுக்கம் மற்றைய வருணங்களுக்குங்கொள்ளப்படும்.

(க-து). ஒருவனிடத்து ஆசாரங் குறைந்தால் அவனது சாதி கெடும் என்பது.

4. A Brahmin though he should forget the Veda may recover it by reading ; but if he fail in propriety of conduct even his high birth will be destroyed.

ரு. அழுக்கா றுடையான்க ணில்லாகும்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

பரி.—(இ-ன்). அழுக்கா றுடையான்மாட்டு ஆக்கமில்லாதாற் போல ஒழுக்கமில்லாதவன் மாட்டும் உயர்ச்சி யில்லை, (எ-று).

‡ தொன்றுதொட்டு ஒருவர்க் கொருவரால் ஒதப்பட்டுவருங் காரணத்தினுல் வேதத்திற்கு ஒத்த என்னும் பெயர் வழங்கப்படுகின்றது.

§ பிராமணர் வேதத்தின் பொருளையே பிரதானமாகக் கொண்டு பார்ப்பதுபற்றி அவர் பார்ப்பார் என்ற சொல்லப்படுகின்றார். கலித்தொகையுரையில் நச்சினர்க் கினியர் "வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார்" என்ற கூறியதும் ஈண்டறியத்தக்கதாம்.

† சிறப்புடைய வருணத்தவராகிய பிராமணருக்கு ஆசாரக்குறையச் சாதிகெடும் என்ற சொல்லினமையின்,ஆசாரக்குறையச்சாதிகெடுமென்னுமிவ்விஷயம் மற்றைய சாதியாருக்கும் கொள்ளப்படு மென்ற கூறியது உபலட்சணமாம்.

§ உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சி யில்லை யென்பது பெற்றும் ; என்னை ? ‡ "கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற" மும் நல்கூர்தலின். உயர்வு - உயர்குலமாதல்.

தெளி.—(இ-ள்). அழுக்காறுடையான்கண் - பொறாமையுடையவனிடத்து, ஆக்கம்போன்று - செல்வமில்லாமைபோன்று, ஒழுக்கமிலான் கண் - ஆசாரமில்லாதவனிடத்தும், உயர்வு - உயர்ச்சியானது, இல்லை—,()

கொடுப்ப தழுக்கறுப்பானது சுற்றத்தாரும் வறுமையடைதலின், உவமானத்தினால் ஒழுக்கமில்லாதவனது சுற்றத்தாருக்கும் உயர்ச்சியில்லை யென்பது பெறப்பட்டது. உயர்வு - உயர்குலமாதல்.

(க-து). ஆசாரமில்லாதவனுக்கு மேன்மை யில்லை என்பது.

5. Even as the envious man will be without wealth, so will the man destitute of propriety of conduct be without greatness.

சு. ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபோக் கறிந்து.

பரி.—(இ-ள்). செய்தற்கருமைநோக்கி ஒழுக்கத்திற் சுருங்கார் மனவலியுடையார் ; அவ்விழுக்கத்தால் தமக் கிழிகுலமாகிய குற்றமுண்டாமாற்றை யறிந்து, (எ-று).

† ஒழுக்கத்திற்சுருக்கம் அதனையுடையார்மே லேற்றப்பட்டது. கொண்ட * விரதம் விடாமைபற்றி 'உரவோர்' என்றார்.

தெளி.—(இ-ள்). உரவோர் - மனவலிமையை யுடையார், (செய்தற் கருமைநோக்கி), ஒழுக்கத்தின் - ஆசாரத்தினின்றும், ஒல்கார் - சுருங்கார், இழுக்கத்தின் - அத்தவறுதலால், ஏதம் - (தமக்கிழிகுலமாகிய) குற்றம், படுபோக்கு - உண்டாகும்வழியை, அறிந்து - தெரிந்து, (எ-று).

§ 'அழுக்காறுடையான்கணுக்கம் போன்று' என்னுமுவமானத்தினால் ஒழுக்க மில்லாதவனது சுற்றத்தாருக்கும் மேன்மையில்லை யென்பது பெற்றும். (ஏனெனின், ஒருவன் பிறர்க்குக் கொடுக்கும் பொருளைக் குறித்துப்பொறாமையடைகின்றவனது சுற்றத்தாரும் தரித்திரத்தை அடைவதாலென்க). இவ்வுவமையின் கருத்து ஒருவன் பிறர்க்குக் கொடுக்கும் பொருளைக் குறித்துப் பொறாமை யடைகின்றவனுக்கேயன்றி அவன் சுற்றத்தாருக்கும் செல்வமில்லாமை போன்று, ஒழுக்கமில்லாதவனுக்கேயன்றி அவன் சுற்றத்தாருக்கும் உயர்ச்சி (மேன்மை) யில்லை என்பதாம். ‡ அழுக்காறுமை—சு.

† ஒல்காமை - ஒழுக்கத்தின்றாழாமம் ; அதனையுடையவர் - ஒல்கார்.

* இன்னதருமஞ் செய்வனெனவும் இன்னபாவ மொழிவனெனவும் தமது சக்திக்குப் பொருந்தும்படி யேற்படுத்திக் கொள்வன விரதமாம்.

ஒழுக்கத்தினது கருக்கத்தை அதனை உடையார்மே லேற்றி 'ஒல்கார்' என்றதுபட்டது. இஃது உடைமையின் தன்மை உடையார்மேலாய உபசார வழக்கு. மேற்கொண்டவிதம் விடாமைபற்றி 'உவோர்' என்றார்.

(க-து). ஆசாரம் குறைதலால் வருங்குற்றத்தை பறிந்தோர் அவ்வாசாரத்திற் றவறார் என்பது.

6. Those firm in mind will not slacken in their observance of the proprieties of life, knowing the misery that flows from the transgression from them.

எ. ஒழுக்கத்தி னேய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னேய்துவ ரெய்தாப் பழி.

பத.—(இ-ள்). எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டை யெய்துவர்; அதனினின் றிழுக்குதலானே தாம் எய்துதற்குரித்தல்லாத † பழியை யெய்துவர், (எ-று).

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம் அடுக்குமென்ற கொள்ளுமாகலின், எய்தாப்பழியெய்துவர் என்றார். இவை யைதே பாட்டானும் ஒழுக்கம் உள்வழிப்பயிற் குணமும் இல்வழிப் பயிற் குற்றமும் கூறப்பட்டன.

தேவி.—(இ-ன்) (எல்லாரும்) ஒழுக்கத்தின்-ஆசாரத்தினாலே, மென்மை - மேம்பாட்டை, எய்துவர் - அடைவர், இழுக்கத்தின் - (அவ்வாசாரத்தினின்றும்) தவறுதலாலே, எய்தாப்பழி-(தாம்) அடைதற்கு உரியதல்லாதபழியை, எய்துவர் - அடைவர், (எ-று).

(ஒழுக்கத்தினின்றுந்தவறியவன்மீது ஒருவன்)பகைமையால்அடாத பழியைச்சொல்லிய விடத்து அதனையும் தவறுபற்றி உலகத்தார் அடுக்குமென்ற கொள்ளுவாசாலின் எய்தாப்பழி யெய்துவர் என்றார். இவை ஐந்தபாட்டாலும் ஆசாரமுள்ளவிடத்து உண்டாகும்குணமும் அஃதில்லாவிடத்து உண்டாகுங்குற்றமும் சொல்லப்பட்டன.

(க-து). ஆசாரத்தினதுபயர்வும் அஃதில்லாமையினது கீழிவு முண்டாம் என்பது.

7. From propriety of conduct men obtain greatness; from impropriety comes insufferable disgrace.

அ. கன்றிக்கு வித்தாகு கல்லொழுக்கக் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

† பழியை - பழியையும் என்றும் பாடமுண்டு.

பரி:—(இ-ள்). ஒருவனுக்கு நல்லவொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்; தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினுந் துன்பம் பயக்கும், (எ-று).


* 'நன்றிக்கு வித்தாகும்' என்றதனால் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், † 'இம்பைதரும்' என்றதனால் நல்லொழுக்கம் இனபந் தருதலும்பெற்றும் ; ‡ ஒன்றுகின்றே எனையதை முடிக்குமாகலின். இதனால் $ பின்வினைவு கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). நல்லொழுக்கம் - (ஒருவனுக்கு)நல்லவாசாரமானது, நன்றிக்கு - அறத்திற்கு, வித்தாகும் - காரணமாகும, (காரணமாயிருமையிலும் இன்பந்தரும்), தீயொழுக்கம்-தீயவாசாரமானது, என்றும்-எப்போதும் (பாவத்திற்குக் காரணமாயிருமையிலும்), இம்மைப - துன்பத்தை, தரும் - கொடுக்கும், (எ-று)

நல்லொழுக்கம் அறத்திற்குக்காரணமாமென்றதனால் தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், தீயவொழுக்கம் இருமையிலும் துன்பம் தருமென்றதனால் நல்லொழுக்கம் இருமையிலும் இன்பம் தருதலும்பெறப்படும்; ஒன்றுகின்றே மற்றதை முடிக்குமாதலின். இதனால் பின்வினைவது சொல்லப்பட்டது.

(க-து). நல்லொழுக்கம் இன்பத்தைத்தரும் தருமத்திற்கும் தீயொழுக்கம் துன்பத்தைத்தரும் பாவத்திற்கும் காரணமாம்.

8. Propriety of conduct is the seed of virtue; impropriety will ever cause sorrow.



கூ. ஒழுக்க முடையவர்க் கோல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சோலல்.

---

* நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் எனவும் பாடமுண்டு.

† தீயொழுக்க மிம்பைதரும் எனவும் பாடமுண்டு.

‡ ஒன்றுகின்றே-நன்றிக்குவித்தாகு நல்லொழுக்கமென்னுமொன்றுகின்றே, எனையதைமுடிக்குமாகலின்-தீயொழுக்கம் பாவத்திற்குக்காரணமாகுமென்னு மற்றதை முடிக்குமாகலான் என்றும், ஒன்றுகின்றே-தீயொழுக்கமென்னு மிம்பைதருமென்னு மொன்றுகின்றே,எனையதை முடிக்குமாகலின் - நல்லொழுக்கம் என்றும் இன்பந்தருமென்னு மற்றதை முடிக்குமாகலான் என்றுங்கொள்க [ஒன்றுகின்றே எனையதை முடிக்குமாகலின் என்பது மூறைப்பட வருத்திக்கூறப்பட்டது].

$ பின்வினைவு - நல்லொழுக்கத்திலும் தீயொழுக்கத்தினுலும்பின் மறுமையில் (முறையே) உண்டாகும் இன்பதுன்பங்கள்.

பரி.—(இ-ன்). † மறந்தும் நீயசொற்களைத் தம்வாயாற் சொல்லுந் தொழில்கள் ஒழுக்கமுடையவர்க்கு முடியா, (எ-று).

நீயசொற்களாவன:-பிறர்க்குத் தீங்குபயக்கும் பொய்ம்மொழிகளும், வருணத்திற் குரியவல்லாவு மாம். அவற்றை பன்மையாற் சொல்லுதற் றொழில் பலவாயின. சொல்-சாதியொருமை. 'சொலல்' எனவே அமைந் திருக்க'வாயால்' எனவேண்டாது கூறினார்;ல்லசொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன் தெரிப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் தாற்பரிய மென்ப.

தெளி.—(இ-ன்). வழுக்கியும்-மறந்தும், நீய-நீயசொற்களை, வாயாற் சொலல் (தமது) வாயினாற் சொல்லுந்தொழில்கள், ஒழுக்கமுடையவர் க்கு-ஆசாரமுடையவர்களுக்கு, ஒல்லா - முடியாவாம், (எ-று).

நீயசொற்களாவன.—பிறர்க்குத் தீமைசெயத்தரும் பொய்சொல்லுதல் முதலானவையும், வருணத்திற்கு உரியன வல்லாத சொற்களுமாம். அச சொற்களது பன்மையால் சொல்லுதலாகியதொழில பலவாயின. சொலல்-சாதியொருமைப்பெயர். 'சொலல்'எனவே(வாயென்பதுதானே) அமைந்தி ருக்க 'வாயால்' என்றுவேண்டாது சொல்லினார்; (அவ்வாய) சற்சொற்க ளைப் பேசிப்பழகியதென்று தாம்வேண்டியதன தெரிப்பை முடித்தற்பொ ருட்டு. இவ்வாறு கூறுவதனை வடநூலார் தாற்பரியமென்பர். தாற்பரியம்-அவ்வப்பொருளுணர்ச்சி விருப்பால் உசசரிகைப்படுத்தன்மை.

(க-து). நல்லொழுக்க முள்ளவர்கள் மறந்தும் நீய சொற் களைச் சொல்லுதலில்லை என்பது

9. Those who study propriety of conduct will not sepak evi even forgetfully.

கo. §உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

பரி.—(இ-ள்). உலகத்தோடு பொருந்த வொழுகுதலைக்கல்லாதா பலநூல்களையுங் கற்றாராயினும் அறிவிலாதார், (எ-று).

உலகத்தோடு பொருந்தவொழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒ பெ வாற்றான் ஒழுகுதல். அதனால் சொல்லியவற்றான் ‡ இக்காலத்திற்

† ஒழுக்கமுடையவர் மறந்து சொல்லினும் பிறர்க்கு ஈன்மைை புண்டாக்குஞ் சொற்களையே சொல்லுவரென்பது பெறப்பமொழிந்தது.

§ "எவ்வ தறைவ தலக முலகத்தோ, டவ்வ தறைவ தறிவு" எ னுங் குற லிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

‡ "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகை னானே" என்னும் ன்னூற் சூத்திரமும் இங்குக் கவனிக்கத்தக்கதாம்.

எலாதன சொழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான் அவையும் அடங்க 'உலகத்தோ டொட்ட' என்றும், கல்விக்குப்பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் ஆதலின் அவ்வொழுகுதலைக் கல்லாதார் பலகற்றும் அறிவிலாதார் என்றுங் கூறினர். † ஒழுகுதலைக்கற்றலாவது ‡ அடிப்படுதல். இவையிரண்டு பாட்டானும் சொல்லானுஞ் செயலானும்வரும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவாற்றுற் றொகுத்துக் கூறப்பட்டன.

தெளி.—உலகத்தோடு - உயர்ந்தாரோடு, ஒட்ட - பொருந்த, ஒழுகல் - நடத்தலை, கல்லார் - கல்லாதவர், பல - பலநூல்களையும், கற்றும் - கற்றாராயினும், அறிவிலாதார் - அறிவில்லாதவராவர் (எ - து).

உயர்ந்தாரோடு பொருந்த நடத்தலாவது உயர்ந்தார்பலரும்நடந்தவழியாக நடத்தல். தருமசாஸ்திரம் கூறியவற்றுள், இக்காலத்திற்குப்பொருந்தாதனவற்றை விட்டு, கூறுதனவற்றுள் பொருந்துவனவற்றைக் கொண்டு வருதலால் அவையும் அடங்குதற்கு 'உலகத்தோடொட்ட' என்றும், கல்விக்குப்பயன் அறிவும் அறிவிற்குப்பயன் ஒழுக்கமும் ஆதலின் அவ்வொழுக்கத்தைக் கல்லாதார் பலகற்றும் அறிவிலாதார் என்றும் சொல்லினர். ஒழுகுதலைகற்றலாவது பின் பற்றி நடத்தல். இவையிரண்டு பாட்டானும் சொல்லாலும் செயலாலும் வரும ஒழுக்கங்களெல்லாம் ஒருவிதத்தினுல் தொகுத்துச் சொல்லப்பட்டன

(க - து). உலகத்தோடு பொருந்த நடத்தலைக் கல்லாதவர்களது கல்வியறிவு பயனுடைய தாகாது என்பது.

10. Those who know not how to act agreeably to the world, though they have learnt many things, are still ignorant

---

பதினேன்றாவது அதிகாரம்.

பிறனில் விழையாமை—

Against desiring the wife of another.

பரி.—அஃதாவது காம மயக்கத்தாற் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இஃது ஒழுக்கமுடையார் மாட்டே நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது காம மயக்கத்தினுல் பிறனதமனையாளை விரும்பாமை. இப்பிறனில்விழையாமை ஒழுக்கமுடையவரிடத்தே உண்டாவதாலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

---

† ஒழுகுதலைக் கற்றல்-பெரியோர் நடந்தடடி நடக்கத் தொடங்குதல்.

‡ அடிப்படுதல் - அப்பெரியோ ரொழுக்கத்தை மேற்கொண் டாசரித்து வருதல்.

உ பிறனொருவனுட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறனொருவன் கண்டாங்கே யில்.

பரி.—(இ - ன்). பிறனுக்குப் பொருளாற் தன்னையொப்புடையானைக் காதலித்தொழுகுகின்ற அறியாமை ஞாலத்தின்கண்ணதனாலும் பொருளு மாயே வீரண்டையும் ஆராய்ந்தறிந்தார்மாட் டில்லை, (இ-து).

பிறன்பொருள் - உ பிறனுடைமை. † அறம் பொருளென்பன ஆகு பெயர். ‡ செல்வென்னின் ரெகை விகாரத்தாற்ரெக்குகின்றது. இன் பம் ஒன்றையே சேர்க்கும் ¶ இன்பதானுடையார் இத்தீவொழுக்கத்தையும் § பரமேயென்ற உறவாரைகளின் 'அறம்பொருள் கண்டார்களில்' என்றார்; எனவே, அப்பேதைமையுடையார் மாட்டே அறமும் பொருளும் இல்லை யென்பது பெறப்பட்டது.

தெளி.—(இ - ள்). பிறன் - பிறனுக்கு, பொருளான் - உடைமை யாத்தன்மையையுடையவனை, பெட்டு-இச்சித்து, ஒழுகும்-நடக்கின்ற, பே தைமை-அறியாமையானது, ஞாலத்த - பூமியின்கண், அறம்-அறனும், பொருள் - பொருளானும் (ஆகிய வீரண்டையும்), கண்டார்கண் - ஆரா ய்ந்தறிந்தவரிடத்து, இல் - இல்லை, (எ - று).

அறமும் பொருளும் அவற்றையுணர்த்தும் நூல்களுக்காதலின் காரிய வாகுபெயர்கள். அறம் பொருளிரண்டும் என்னும்பெயர்ச்செவ்வெண்ணின

---

* பிறனுடைமை - அன்னியனுக்குரிமையா (சொந்தமா) யிருப்பது.

† அறம் பொருள் என்னும் காரியங்களின்பெயர் அவற்றை (அறத் தையும் பொருளையும்) உணர்த்துதற்குக் கருவியாயிய நூல்களுக்கு (தரும சாஸ்திரத்திற்கும் அருத்தசாஸ்திரத்திற்கும்) ஆதலால் காரியவாகுபெயர்.

‡ அறமும் பொருளுமென உம்மையைத்தொண்ணை அறம் பொரு ளென எண்ணியது ரண்டே செவ்வெண்ணும். இச்செவ்வெண் (அறம் பொருளிரண்டும் எனத்)தொகைபெற்றே வரல்வேண்டும். அத்தொகை (இரண்டுமென்னுந்தொகை) இங்குச்செயுள் விகாரத்தால் தொக்கு நின ரையின் 'செல்வென்னின் ரெகை விகாரத்தாற்ரெக்குகின்றது' என்று உரைப்பட்டது. செல்வென்னுவது என்னிலைச் சொற்கள் தொக்குநிற்ப வருவது. உம்மைத்தொகைக்கும் செல்வென்னிற்கும் வேறுபாடு " பல மொழிகளையுந்தொட்டு. பொருபிண்டமாகக் கூறியவழி உம்மைத்தொகை யாகவும்,பின்னுடைக்கூறியவழிச்செல்வென்னுகவும் கொள்ளப்படுமென்க" என்று நன்னூல் விருத்தியுரை கூறுகின்றது.

¶ இன்பதான் - காமதான். அது கொக்கோக முதலியனவும்.

§ பரமேயம்-அன்னியருக்குரியது,இதன்முரண்மொழி சுவமேயம்(தனக் குரியது). பரமே யென்பதற்குப் பிரதியாகப் பரதிகம் என்றும் பாட முண்டு. (அதன் பொருள் பிறனது மனையாளைக்கூடிக்களித்தலென்பது).

தொகை செய்யுள்விகார்த்தால் தொக்கு நின்றது. இன்பமொன்றையே கருதுங் காமநூலுடையார் (பிறனுக்குரியவளே விரும்பி நடத்தலாகிய) இப்பொல்லாத வொழுக்கத்தையும் பரகியமென்று கூறுவாராதலால்'அறம் பொருள் கண்டார்க ணில்' என்றார். எனவே அவ்வறிவில்லாதவரிடத்து அறமும்பொருளும் இல்லையென்பது பெறப்பட்டது.

(க - து). பிறன் மனைவியை விரும்பி யொழுகுதல் அறநூலையும் பொருள் நூலையும் ஆராய்ந்தறிந்தவரிடத்தில்லை என்பது.

1. The folly of desiring her who is the property of another will not be found in those who know (the attributes of)virtue and (the rights of) property.

2. அறன்கடை நின்றாரு ளேல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

பரி.—(இ - ள்). காமங் காரணமாகப் பாவத்தினிடம் நின்றாரெல்லாருள்ளும் பிறனில்லாளைக் காதலித்து அவன் வாயிற்கடசென்று நின்றாரிற்போலப் பேதையாரில்லை, (எ - து).

‡ அறத்தினீக்கப்பட்டமையின் 'அறன்கடை' என்றார். அறன்கடை நின்ற ¶ பெண்வழிச்செல்வாரையும், † வரைவின் மகளிரோடும் $ இழிகுலமகளிரோடுங்கூடியின்ப நுகர்வாரையுமபோல, அறமும் பொருளும் இழத்தலே யன்றிப் § பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாங்கருதிய வின்பமும் இழக்கின்ற ராகலின் 'பேதையாரில்' என்றார்; எனவே இன்பமுமில்லையென்பது பெறப்பட்டது.

---

‡ அற (தரும)த்தி னின்று நீக்கப்பட்டு அவ்வறத்தின் பின்னே (கடையிலே) நிற்பது பாவமாதலால் அஃது 'அறன்கடை' என்று சொல்லப்பட்டது.

¶ பெண்வழிச்செல்லார் - தமதுவழியில் நடத்தற்கு உரிய மனைவியது வழியே நடப்பவர்.

† வரைவின்மகளிர் - விலைகொடுப்பார் யாவருக்கும் தம் நலத்தை விற்பதே யன்றி அந்நலத்தை யனுபவித்தற்கு இன்னாரானவர் இன்னாராதா ரென்னும் வரம்பில்லாத வேசியர். வரம்பு - எல்லை.

$ இழிகுலமகளிர் - தாழ்ந்த குலத்திற் பிறந்த பெண்கள்.

§ பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாங்கருதிய வின்பமுமிழக்கின்றா ரென்பது ''புக்க விடத்தச்சம் போதரும் போதசசங், துய்க்கு மிடத்தச்சந் தோன்றுமற் காப்பச்ச, மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ, வுட்காண் பிறனில் புகல்'' என்று நாலடியார் கூறுவதாலு மறியப்படும்.

(தெளி.—(இ - ன்). அறன்கடை - (காமம்காரணமாக) பாவத்தின் கண், நின்றருசெல்லாம் - நின்றவரெல்லாருள்ளும், பிறன்கடை - (பிறனது மனையாளே விரும்பி) அப்பிறனதுவாயிலிடத்து (சென்று), நின்றுகின்-நின்றவர்போல, பேதையார்-மூடர், இல் - இல்லை, (எ - று).

அறத்தினின்றும் நீக்கப்பட்டமையின் பாவத்தை 'அறன்கடை' என்றார். பாவச்செயலில் நின்ற பெண்வழிநடப்பவரையும், பரத்தையரோடும் இழிகுலமகளிரோடும் கூடி இன்பமனுபவிப்பவரையும்போல, அறத்தையும் பொருளையும் இழந்துபோவதேயல்லாமல் பிறனது மனையாளிடத்துச் செல்வார் அச்சத்தினால் தாமெண்ணிய இன்பத்தையும் இழந்துவிடுகின்றாதலால், 'பேதையாரில்' என்றார்; எனவே, (அவர்க்கு) இன்பமுமில்லை யென்பது பெறப்பட்டது.

(க - து). பிறன் மனைவியை விரும்பி நடப்பவர் அறம்பொருளின்பங்களே யிழந்தலின் பெருமூடராவர் என்பது.

2. Among all those who stand on the outside of virtue there are no greater fools than those who stand outside their neighbour's door.

கூ. விளிந்தாரின் வேறல்லர் * மன்ற தெளிந்தாரிற்
நீமை புரிந்தொழுகு வார்.

பரி.—(இ-ள்). தம்மை ஐயுறதார் இல்லாள்கண்ணே பாவத்தேய்தலே விரும்பி ஒழுகுவார் உயிருடையரேனும் இறந்தாரேயாவர், (எ-று).

அறம் பொருளின்பங்களாகிய பயன் உயிர்செய்தாமையின் 'விளிந்தாரின் வேறல்லர்' என்றும், அவர் நீமை புரிந்தொழுகுவது இல்லுடையவரது தெளிவுபற்றியாகலின் 'தெளிந்தாரில்' என்றும் கூறினார்.

தெளி.—(இ-ன்). மன்ற - நிச்சயமாக, தெளிந்தார் - (தம்மைநல்லவரென்று) தெளிந்தவரது, இல் - மனையாளிடத்தே, நீமை - பாவஞ் செய்தலை, (கூடுதலை), புரிந்து - விரும்பி, ஒழுகுவார் - நடப்பவர், (உயிருடையவராயிருந்தாலும்), மன்ற-நிச்சயமாக, விளிந்தாரின் - செத்தவரினும், வேறல்லர் - வேறுகார், (இறந்தவரேயாவர்), (எ-று).

அறம் பொருளின்பங்களாகிய பயன்களை உயிர் அடையாமையால் 'விளிந்தாரின் வேறல்லர்' என்றும், அவர் பாவஞ்செய்தலை விரும்பி நடப்பது மனையாளுடையவரது தெளிவுபற்றியாதலால் 'தெளிந்தாரில்' என்றும் சொல்லினார்.

---

* மன்ற என்பது நிச்சயமென்னும் பொருளுணர்த்தும் இடைச்சொல். "மன்றவென் னெஞ்சே தேற்றஞ் செய்யும்" என்பது தொல்காப்பியம். மன்றவென்பதனை விளிந்தாரின் வேறல்லர் என்பதனோடுங்கூட்டுக.

(க-து). தம்மிடத்துச் சந்தேகமில்லாதவரது மனையாளிடத்துக் களவிற் புணருதலே விரும்பிக்கடப்பவர் இறந்தவரே யாவர்.

3. Certainly they are no better than dead men who desire evil towards the wife of those who undoubtingly confide in them.

ச. எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

பரி.—(இ-ள்). எத்துணைப்பெருமை யுடையாயினும் ஒருவர்க்கு யாதாம் முடியும், காமமயக்கத்தாற் றினையளவுந் தம்பிழையை யோராது பிறனுடைய இல்லின்கட்புகுதல், (எ-று).

† இந்திரன்போல எல்லாப்பெருமையு மிழந்து சிறுமையெய்தல் நோக்கி 'என்னும்'என்றார். ‡ "என்னீ ரறியாதீர் போல விவைகூறி, னீன்னீர வல்ல நெடுந்தகாய்"என்புழிப்போல. § உயர்த்தற்கட் பன்மை யொருமை மயங்கிற்று. * தேரான் பிறனென்பதனைத் தம்மை ஐயுறுத பிறனென் றுரைப்பாருமுளர்.

---

† கௌதமமுனிவரது மனைவியாகிய அகலிகையை விரும்பிப்புணர்ந்த இந்திரன் அத்தீச்செய்கையினால் தனதுபெருமைகெட்டு இழிவையடைந்தாற்போன்று பிறன்மனையாளை விரும்பிப்புணர்வோர் மிக்க மேம்பாட்டையுடையோராயினும் அத்தீச்செய்கையினால் அம்மேம்பாடு கெட்டு இழிவை யடைதலேக்குறித்து "என்னும்" எனறார். என்னும் என்பது பெருங்கெடுதியாய் முடியுமென்பதை யுணர்த்திநின்றது.

‡ கலித்தொகை - பாலை, நி. இதன்பொருள் (உண்ணப்பிரிந்தால்) யானுயிர்தாங்கி யிருத்தலாற்றாது இறந்துபடுதலை அறியாதிருந்தீர்போல உடன்சேற (செல்லுதல்)லை மறுத்த இம்மொழிகளைக் கூறுதலால் பெற்றது என் ? பெருமைக்குணமுள்ளவனே, இக்கூற்று-(இவ்வார்த்தை) உனக்கு உரியதன்றுயிய நீர்மைகளையுடைய வல்ல என்பது.

§ கலித்தொகைப்பாட்டில் அறியாதீர் என்றுயர்த்திச்சொல்லுதற் பொருட்டுவந்த பன்மைப்பால் நின்னென்னும் ஒருமைப்பாலோடு மயங்கிநின்றாற் போன்று, இக்குறளில் எனைத்துணையர் என்றுயர்த்திச் சொல்லுதற்பொருட்டுவந்த பன்மைப்பால் தேரான் என்னும் ஒருமைப்பாலோடு மயங்கிநின்ற தென்க. இவ்வாறுவருவது பால் வழுவமைதி யெனப்படும். நன்னூல் விருத்தியுரைகாரர் "எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையுந், தேரான் பிறனில் புகல்" என்பது செறலின் (கோபத்தினால்) பலர்பால் ஒருமைப்பாலாயிற்று" என்பர்.

* தேரான்பிறன் என்பதற்கு தேரான் - (தம்மிடத்தில்) சந்தேகமடையாத, பிறன் - பிறனது என்று பொருள் கூறுவாருமுளர்.

தெளி.—(இ-ன்). நினைத்தனையும் - (காமமயக்கத்தினால்) நினையவும், [சிறிதாயினுமென்றபடி], தோன்-(தமது பிழையை) கருதாது, பிறரில் - பிறனுடைய மனையாளிடத்து, புகல் - செல்லுதல், எனைத்தனைய சாயினும் - எவ்வளவு பெருமையை யுடையவரா யிருப்பினும், என்னும் - (ஒருவர்க்கு) பாதாய்முடியும், (எ-று).

இக்திரன் போல எல்லாப்பெருமைகளையும் இழந்து சிறுமையை அடைதலைக்குறித்து 'என்னும்' என்றார். உயர்த்துதற்கண் வந்த எனைத்தனையென்னும் பன்மை தோனென்னும் ஒருமையோடு மயங்கிற்று.

(க-து). பிறனது மனையாகைக் கரவிற்சென்று கூடுகின்றவன் எவ்வளவு பெருமையையுடையவனாயிருப்பினும் அவன் அப்பெருமையையிழந்து சிறுமையை யடைவான் என்பது.

4. However great one may be what does it avail if without at all considering his guilt he goes unto the wife of another.

நே. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

பரி.—(இ-ள்). எய்துதல் எளிதென்று கருதிப் * பின்விளைவு கருதாது பிறனில்லின்கண் நிறப்பான், மாய்தலின்றி எஞ்ஞான்றும் நிலைநிற்கும் † குடிப்பழியினை யெய்தும், (எ-று).

இல்லின்கண் நிறத்தல் - இல்லாள்கண் நெறிகடந்து சேறல்.

தெளி.—(இ - ள்). எளிதென - (இவனைச்சேருதல்) எளிதென்று (நினைத்து), (பின்விளைவதையினையாமல்), இல்-(பிறனது) மனையினிடத்து, இறப்பான் - செல்லுவோன், வியாதது - அழிதலின்றி, எஞ்ஞான்றும் - எக்காலமும், நிற்கும் - நிலைநிற்பதாகிய, பழி - (குடிப்) பழியை, எய்தும் - அடைவான், (எ - று).

இல்லிறத்தல் - (பிறனது) மனையாளிடத்து நீங்கிதவறிச் செல்லுதல்.

(க - து). அஞ்சாது பிறனது மனையாளிடத்திற் செல்பவன் நீங்காத குடிப்பழியை யடைவான் என்பது.

5. He who thinks lightly of going unto the wife of another acquires guilt that will abide with him imperishably and for ever.

* பின்விளைவு - பின்னருண்டாகும் பகை, பாவம், அச்சம், பழி.

† "காணிற்குடிப்பழியாம்" என்பது காலடியார்.

சு. ‡ பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

பரி.—(இ-ள்). பிறன் இல்லாள்கண் நெறிகடந்து செல்வானிடத்துப் பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியு மென்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம், (எ - று).


எனவே, இருமையும் இழத்தல் பெற்றும். இவை யாறு பாட்டானும் பிறனில் விழைவான்கட் குற்றங கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்). இல் - (பிறனது) மனையாளிடத்து, இறப்பான் கண் - நீதிதவறிச் செல்லுவோனிடத்து, பகை பாவ மச்சம் பழி யென நான்கும்-பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியும் என்னும் இந்நான்கு குற்றங்களும், இகவாவாம் - (ஒருபோதும்) நீங்காதனவாம், (எ - று).

'இகவாவாம்' எனவே, அவன் இருமைப்பயன்களையும் இழப்பானென் பது பெறப்பட்டது. இவை ஆறு பாட்டாலும் பிறனதுமனையாளே விரும்பு வோனிடத்துக் குற்றம் சொல்லப்பட்டது.

(க-து). பிறன் மனைவாளைச் சேர்பவனிடத்துப் பகை பாவம் அச்சம் பழி யென்னுமிந்நான்கு குற்றங்களும் விட்டு நீங்காவாம்.

6. Hatred, sin, fear, disgrace; these four will never leave him who goes unto his neighbour's wife.



எ. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

பரி.—(இ-ள்). அறனுகிய வியல்போடுகூடி இவ்வாழ்வானென்று சொல்லப்படுவான், பிறனுக்குரிமை பூண்டு அவனுடைய இயல்பின் கண்ணே நிற்பாளது பெண்டன்மையை விரும்பாதவன், (எ-று).

$ ஆனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண்வந்தது. இல்லறஞ் செய்வா னெனப்படுவா னவனே யென்பதாம்.

தெளி.—(இ-ள்). பிறனியலாள் (பிறனுக்குஉரிமை பூண்டுஅப்) பிற னுடைய வியல்பிலே நிற்பவளது.பெண்மை-பெண்தன்மையை, நயவாதவ ன் - விரும்பாதவன், அறனியலான்-அறமாகிய வியல்போடு(கூடி), இல்வா ழ்வா னென்பான் - இல்வாழ்வானென்று சொல்லப்படுவான், (எ-று).

‡ "பிறன்ஞாம், நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென், றச்சத்தோ டிந்நாற் பொருள்" என்பது நாலடியார்.

$ அறனியலான் என்பதன்கணுள்ள (மூன்றனுருபாகிய) ஆனுருபு. பெண்மைநயவாதவனது விளையாகிய வாழ்தற்றொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாகவுடையது அறவியலாதலால், அஃது உடனிகழ்ச்சிப் பொருளதாயிற்று

அறனியலான் என்னும் மூன்றனுருபு இங்கு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. இல்லறஞ்செய்வானெனப்படுவான்(பிறனியலாள் பெண்மை நயவாத) அவனே யாவன் என்பதாம்.

(க-து). பிறனது மனைவியை விரும்பாதவன் அறவியல்போடு கூடி யில்வாழ்வானென்றுசொல்லப்படுவான் என்பது.

7. He who desires not the womanhood of her who should walk according to the will of another will be praised as a virtuous householder.

அ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனெனன்றே வான்ற வொழுக்கு.

பரி.—(இ-ள்). பிறன்மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை சான்றுடையார்க்கு அறனுமாம், நிரம்பிய வொழுக்கமுமாம், (எ-று).

புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் * உட்பகையாகிய காமம் அடக்குதற்கருமையின், அதனை யடக்கிய ஆண்மையைப் 'பேராண்மை' என்றார். † ஒன்றேயென்பது எண்ணிடைச்சொல். செய்தற்கரிய அறனும் ஒழுக்கமும் ‡ இதனைச் செய்யாமையே பயக்குமென்பதாம்.

தெளி.—(இ-ள்). பிறன்மனை - பிறனது மனையாளை, நோக்காத - உட்கொள்ளாத, பேராண்மை - பெரிய ஆண்தன்மையானது, சான்றோர்க்கு - (பலகுணங்களாலும்)நிறைந்தோர்க்கு, அறனென்றே—அறமுமாம், ஆன்ற வொழுக்கு - நிறைந்த வொழுக்கமுமாம், (எ-று).

புறப்பகையாகிய சத்துருக்களை அடக்கும் ஆண்மையுடையோர்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குவதற்கு அருமையாகவிருத்தலால், அவ்வுட்பகையாகிய காமத்தை அடக்கிய ஆண்மைமையைப் 'பேராண்மை' என்றார். ஒன்றே என்பது எண்ணுப்பொருளில் வந்த இடைச்சொல். செய்தற்கரிய அறமும்ஒழுக்கமும் (பிறமனை நோக்கலென்னும்) இதனைச் செய்யாமையே தருமென்பதாம்.

* உட்பகையாகிய காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம்(லோபம்), மானம், உவகை,மதமெனப் பட்டவாறனுள் காமமே மற்றவற்றிற்குக் காரணமாயொழித்தற் கரிதா யிருப்பதுபற்றி 'உட்பகையாகிய காமம் அடக்குதற் கருமையின்' என்று கூறப்பட்டது.

† ஒன்றே என்பது ஒழுக்கத்தோடுங்கூடி அறனுமாம் ஒழுக்கமுமாமென எண்ணுப் பொருள்பட்டுவந்தமையின் எண்ணிடைச்சொல்லாயிற்று.

‡ இதனை - பிறன்மனையாளைக் கூடக் கருதாதலை.

(க-து). *பிறனது மனைவியை விரும்பாதபேராண்மையே பெரியோர்க்குத் தருமமும் ஒழுக்கமுமாம் என்பது.*

8. That noble manliness which looks not at the wife of another is the virtue and dignity of the great.

கூ. நலக்குரியார் யாரெனி னெஞ்ஞான்றும் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

பரி.—(இ-ள்). அச்சந் தருங் கடலாற் சூழப்பட்ட உலகத்து எல்லா நன்மைகளும் எய்துதற்குரியார் யாவரெனின், பிறரெருவருக்கு உரிமையாகியாளுடைய தோளைச் சேராதார், (க-று).

அசலம், அழகு, † பொருளுடைமை முதலியவற்றால் அளவிடப்படாமையின் 'காமநீர்' என்றார். ‡ உரிச்சொல் நீண்டுநின்றது. ¶ நலத்திற்கென்பது நலக்கென் குறைத்து நின்றது. இருமையிலும் நன்மை யெய்துவ ரென்பதாம்.

தெளி —(இ-ள்). காமநீர் - மச்சந்தருங் கடலால் (சூழப்பட்ட), வைப்பில் - பூவுலகத்தின்கண், நலக்கு - (எல்லா) நன்மைகளையும் பெறுதற்கு, உரியார்யாரெனின் - உரியவர் யாவரென்றால், பிறற்கு - பிறரெருவருக்கு, உரியாள் - உரிமைபாலையானது, தோள்-தோள்களை, சேராதார்-சேராதவர், (எ-று).

அசலம், அழகு, பொருளுடைமை முதலியவற்றால் அளவிடப்படாமைபற்றிக் கடலே 'காமநீர்' என்றார். காம் என்றுமுரிச்சொல் காம எனத் தொழுதிரித்து நின்றது. நலத்திற்கென்பது நலக்கெனவிகாரப்பட்டுநின்ற (பிறற்குரியாள்தோள்தோயாதார்) இருமையிலும் நன்மை யடைவரென்பதாம்.

(க-து). *நன்மைகொல்லாவின்மையு மடைதற் குரியவர்பிறன் மனைவியைச் சேராதாராவர் என்பது.*

9. Is it asked, "who are those who shall obtain good in this world surrounded by the terror-producing sea?" Those who touch not the shoulder of her who belongs to another.

† பொருள் - சங்கு, பவளம், முத்து, உப்பு முதலியன.

‡ அச்சப் பொருளுணர்த்தும் காம் என்றும் உரிச்சொல் காம எனத் தொழுதிரித்து நின்றது. "பேரா முருமென வரூஉங் கிளவி, யாழுறை மூன்று மச்சப் பொருள" என்பது தொல்காப்பியம்.

¶ நலத்திற்கு என்பது அத்துச்சாரியையும் இன்சாரியையும் செய்யுள் விகாரத்தால் தொக்குநிற்க நலக்கு என வந்தது.

கo அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

பரி.—(இ-ள்). ஒருவன் அறத்தைத் தனக்குரித்தாகச் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும், அவனுக்குப் பிறனெல்லைக்கண் நிற்பானது பெண்மையை விரும்பாமை யுண்டாயின், அதுநன்று, (எ-று).


இக்குணமே மேற்பட்டுத் தோன்று மென்பதாம். இவைநான்கு பாட்டாலும் பிறனில் விழையாதான்கட் குணங்கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). (ஒருவன்) அறம் - அறத்தை, வரையான் - (தனக்குரியதாகச்) செய்யாமல், அல்ல - பாவங்களை, செயினும் - செய்வானாயினும் (அவனுக்கு), பிறன்வரையாள் - பிறனெல்லையில் நிற்பவளது, பெண்மை - பெண்தன்மையை, நயவாமை - விரும்பாமை (உண்டானால்), நன்று - (அது) நல்லது, (எ-று).

(அறத்தைத் தனக்குரியதாகச் செய்யாது பாவங்களைச் செய்யுங்குற்றங்களிலும் பிறன்மனையாளை விரும்பாமையாகிய) இக்குணமே சிறந்துவிளங்கு மென்பதாம். இவை நான்கு பாட்டாலும் பிறன்மனையாளை விரும்பாதவனிடத்துக் குணம் சொல்லப்பட்டது.

(க-து). தருமத்தைச் செய்யாது பாவத்தைச்செய்பவனிடத்துப் பிறனது மனைவியை விரும்பாமை யுண்டாயிருக்குமாயின், அஃது அவனிடத்திற் சிறந்து விளங்கும் என்பது.

10. Though a man perform no virtuous deeds and commit (every) vice, it will be well if he desire not the womanhood of her who is within the limit (of the house) of another.



பன்னிரண்டாவது அதிகாரம்.

பொறையுடைமை.—Patience.

பரி.—அஃதாவது காரணம் பற்றியாதல் மடமையானாதல் ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவன்கட்செய்யாது பொறுத்தலேயுடையராதல். *நெறியினீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டு மென்றற்கு, இது பிறவில் விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது காரணம் பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தமக்குத் தீங்குசெய்தவிடத்துத் தாமும்அத்தீங்கினை அவனிடத்துச் செய்யாது பொறுத்தலே யுடையராதலாம். நெறியில் நீங்கியவற்றைச்

---

* நெறியினீங்கிய செய்தாரையும் - கல்லொழுக்கத்தினின்றும் நீங்கிப் பிறன்மனையாளை விரும்புதல் முதலிய தீயகாரியங்களைச் செய்தவர்களையும். "நெறியி னீங்கியோர் நீரல கூறினு, மறியா மையென் றறிதல் வேண்டும்" என்பது செப்பதிகாரம்.

செய்தாரையும் பொறுக்கவேண்டு மென்பதற்கு (பொறையுடைமை என்னும்) இது பிறனில்விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

க. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

பரி.—(இ-ன்). † தன்னை யகழ்வாரை வீழாமற்றாங்கும் நிலம் போலத், தம்மை யவமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய வறம்,(எ-று)

இகழ்தல்—மிகையாயின செய்தலும் சொல்லுதலும்.

தெளி.—(இ-ன்). அகழ்வாரை-(தன்னைத்)தோண்டுபவரை, தாங்கும்-(வீழாமற்) சுமக்கும், நிலம்போல-நிலத்தைப்போல, தம்மை இகழ்வார்-தம்மையவமதிப்பவரை, பொறுத்தல்—,தலை - முதன்மையான அறமாம்.

இகழ்தல் - தீமையாயினவற்றைச் செய்தலும் சொல்லலுமாம்.

(க-து). பிறர் தம்மை யவமதிப்பதைப் பொறுத்துக் கொள்ளுதலே ஒருவர்க்குத் தலைமையான அறமமாம் என்பது.

1. To bear with those who revile us, even as the earth bears up those who dig it, is the first of virtues.

உ. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

பரி.—(இ-ள). பொறை நன்றுகலால், தாமொறுத்தற்கு இயன்ற காலத்தும் பிறர்செய்த மிகையைப் பொறுக்க; அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின், ‡ அப்பொறையினும் நன்று, (எ-று)

மிகையென்றது மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள்ளப் படுதலின், மறத்தலே 'அதனினு நன்று' என்றார்.

தெளி.—(இ-ன்). இறப்பினை (பொறுமை கடலினும் பெரிதாகலால்) (பிறர்செய்த)தீமையை, என்றும்-(தாம்) தண்டித்தற்குத்தக்க காலத்திலும் பொறுத்தல் - பொறுக்கக்கடவர், அதனைமறத்தல்-அத்தீமையை நினையாமல்-(அப்பொழுதே) மறத்தலே (பெற்றால்), அதனினும் - (அம்மறத்தல்) அப்பொறுமையிலும், நன்று - மிகநல்லது, (எ-று).

தீமையென்றது முன்சொல்லிய தீமையாயினவற்றைச் செய்தலும் சொல்லலுமாகியவிரண்டு குற்றங்களையும். அத்தீமையைப் பொறுக்கும் போதும் அது நினைக்கப்படுதலால் மறத்தலே 'அதனினு நன்று' என்றார்.

(க-து). பிறர்செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொண்டு அக்குற்றத்தை யப்பொழுதே மறக்கவிடல் வேண்டும் என்பது

† 'தன்னை யகழ்வாரை வீழாமற் றாங்கும் நிலம்போல' என்று கூறினமையின் தம்மைக் கொலைசெய்வதை யொத்த குற்றஞ் செய்தாலையும், பொறுப்பதும் பொறுத்திருந்தே யவர்களைக் காப்பதும் சிறந்த தருமமா, மென்பது பெறப்பட்டதென்க.

‡ அப்பொறையினும் - அஃதப்பொறையினும் என்றும் பாடமுண்டு.

2. Bear with reproach even when you can retaliate; but to forget it will be still better than that.

கூ. § இன்மையு ளின்மை விருந்தோரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

பதி.—(இ-ள்). ஒருவனுக்கு வறுமையுள் * வைத்து வறுமையாவது விருந்தினரை யேற்றுக்கோள்ளாது நீக்குதல்; அதுபோல, வன்மையுள் *வைத்துவன்மையாவது † அறிவின்மையான் மிகைசெய்தாரைப் பொறுத்தல், (எ-று).

இஃது § எடுத்துக்காட்டுவமை. † அறனல்லாத விருப் × தோரால் பொருளுடைமை யாகாத வாறுபோல, மடவார்ப்பொறையும் மென்மை யாகாதே வன்மையாமென்பது கருத்து.

§ "உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா, மடமை" என்று விருந்தோம்பலிற் கூறப்பட் டிருத்தலறிக.

* வைத்து என்பது உம்மைப்பொருளது

† அறிவார்மாட்டுக் குற்றகேற்றுழி அருற்றத்தைப் பொறுத்தல் என்றும் பாடமுண்டு.

§ எடுத்துக்காட்டுவமையைப்பற்றி 'அசைமுதல்' என்னுங் குறளின் குறிப்புரையில் எழுதி யிருத்தலைக் கண்டுணர்க

இச்செய்யுளில் 'இன்மையு ளின்மை விருந்தோரால்' என்னும் வாக்கியமும் 'வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை' என்னும்வாக்கியமும்வந்திருத்தலையும் இடையில் அதுபோல என்னுஞ்சொல் தொக்கிருப்பதையும் காண்க.

† ஐம்பெரும் வேள்வியிலொன்றாகிய விருந்தோம்பலை யெய்வாது பொருள்அறனல்லாத (தருமஞ் செய்தற் குரியதாகாத) பொருளாயிருத்தலின் அறனல்லாத என்னும் எதிர்மறைக்குறிப்புப் பெயரெச்சத்தை விருந்தென்பதனோடு முடியக்காது பொருளென்பதனோடு முடித்துக்கொள்க.

× தழுவல் என்பது தழாலென்றாயது போன்ற ஒருவல் என்பது ஓரால் என்றாயிற்று. ஓரால் - கீழ்தல்.

விருந்தினரை யெதிர்வாங்குதல் பொருள் தருமத்திற்கு உரிமை யாகாத பொருளாயிருத்தலின், அது போகின்றி நின்றவழியும் அதனால் பொருளுடையவன் பயன் கொள்ளாதிருக்கிறார்; இருக்கவே, அவர் பொருளுடையவரா யிருத்தும் ("வைத்துப் பொருளைத் தானுகான் வழங்கானிருத்துஞ் செத்தானே, செத்த பின்னை ரென்செயலாம் தீயார் கொள்ளச் சீட்டேனும், மெத்தும் வருத்த மேயன்றி வேறொன்றில்லே" "எனதென தென்றிருக்கு மேழை பொருளே, யெனதென தென்றிருப்பன் யானும் - தனதாயின், ருறு மதனே வழங்கான் பயன்துய்க்கான், யாதுமதனே யது" என்றன்னபடி) பொருளில்லாதவராகவே யிருத்தல் போன்று அறி

தெளி.—(இ-ன்). (ஒருவனுக்கு) இன்மையுளின்மை - வறுமையுள்ளும் வறுமையாவது, விருந்தொரால் - விருந்தினரை (எற்றக்கொள்ளாமல்) நீக்குதலாம், (அதுபோல), வன்மையுள்வன்மை - வலிமையுள்ளும் வலிமையாவது, மடவார் - அறிவில்லாமையினால் நீமை செய்தவரை, பொறை - பொறுத்தல், (எ - று).

இக்குறள் எடுத்துக்காட்டுவமையணி. விருந்தினரை நீக்குதற்கேதுவாகிய பொருள் அறத்திற்குரிய பொருளாகாதவாறு போன்று அறிவிலார் செய்த நீமையைப் பொறுத்தலும் எளிமையாகாதே வலிமையாமென்பது கருத்து.

(க-து). வல்லமை பலவற்றுள்ளும் வல்லமையாவது அறிவிலார்செய்த குற்றத்தைப் பொறுத்தலாம் என்பது.

3 To neglect hospitality is poverty of poverty. To bear with the ignorant is might of might.

க. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப் படும்.

பத.—(இ-ள்). ஒருவன் † சால்புடைமை தன்கணின்று நீங்காமை வேண்டுவனாயின், அவனுற் பொறையுடைமை தன்கண் அழியாமற் காத்தோழுகப்படும், (எ-று).

பொறையுடையாற் கல்லது சால்பில்லே யென்பதாயிற்று. இவை காண்கு பாட்டானும் பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவன்) நிறையுடைமை-சால்புடையனாவது, நீங்காமை - (தன்னிடத்தினின்றும்) நீங்காமை, வேண்டின் - வேண்டுவீரார் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுதல் மென்மை (எளிமை) யாளுலும் அது மென்மையாகாது வன்மை (வலிமை) யாயே யிருக்கின்ற தென்பது கருத்தாமென்க.

இதனுல் விருந்து விலக்கலின் மேற்பட்ட தரித்திரமும் பிறர் செய்த குற்றத்தைப் பொறுத்தலின் மேற்பட்ட வல்லமையும் இல்லே யென்றுயிற்று. ஆகவே, விருந்தினரை யோம்புகின்றவன் பொருளில்லாதவனுயிருந்தாலும் பொருளுடையவனுகவே கருதப்படுவா னென்பதும் பிறரியற்றிய குற்றத்தைப் பொறுத்துக் கொள்பவன் இந்திரிய நிக்கிரகஞ் செய்யும் வல்லமை யில்லாதவனுயிருந்தாலும் அவ்வல்லமை யுடையவனுகவே கருதப்படுவானென்பதும் பெற்றும்; பெறவே, இந்திரிய நிக்கிரகஞ்செய்யும் வலிமையினும் பிறர் செய்த குற்றத்தைப் பொறுக்கும் வலிமை மேன்மையுடைய தாயிற்றென்க.

† சால்புடைமை - மேற்குணங்களெல்லாம் ஒன்றனுங் குறைவின்றி பூரணமாயிருத்தல்.

வானுயின், (அவனுல்), பொறையுடைமை - பொறுமையுடைமையானது, போற்றி-(தன்னிடத்தழியாமற்) பாதுகாத்து, ஒழுகப்படும்-நடக்கப்படும்.

பொறுமையுடையவனுக்கல்லாமல் மற்றவருக்கு நிறையுடைமையில்லை யென்பதாயிற்று. இவை கான்குபாட்டானும் பொறையுடைமையின் சிறப்புச்சொல்லப்பட்டது.

(க-து). நிறையுடைமையை விரும்புகின்றவன் பொறையுடைமையைத் தன்னிடத்து அழியாமற் காக்கக் கடவன் என்பது.

4. If you desire that greatness should never leave you, preserve in your conduct the exercise of patience.

ஒறுத்தாரை யொன்றுக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

பரி.—(இ-ள்). பிறன் தமக்குத் தீங்குசெயதவழிப் பொறது அவனை ஒறுத்தாரை அறிவுடையார் ஒரு பொருளாக மனத்துக் கோள்ளார்; அதனைப் பொறுத்தாரைப் பொன்போற் பொதித்து கோள்வர்(எ-று).

ஒறுத்தவர் தாமும் அத்தீங்கு செய்தவனே டொத்தலின் 'ஒன்றுக வையார்' என்றார். பொதிந்து வைத்தல் - சால்புடைமைபற்றி † இடை விடாது கினைத்தல்.

தெளி.—(இ-ன்). (பிறன் தமக்குத் தீமை செய்த விடத்து) ஒறுத்தாரை - (பொறுக்காமல் அவனை) தண்டித்தவரை, (அறிவுடையார்), ஒன்றுக - ஒருபொருளாக, வையார் - மனத்துட்கொள்ளார், பொறுத்தாரை - (அத்தீமையைப்) பொறுத்தவரை, பொன் போல் - பொன்னைப் போல, பொதிந்து - முடிந்து, வைப்பர் - மனத்துட்கொள்வர் (எ-று).

தண்டித்தவரும் அத்தீமை செய்தவனேடொத்தலால்'ஒன்றுகவையார்' என்றார். பொதிந்துவைத்தல் - நிறையுடைமைகாரணமாக இடைவிடாது கினைத்தல்.

(க-து). அறிவுடையவர் பொறுமையில்லாதவரை யொருபொருளாக மதியாது அரிதுடையவரைப் பொன்னைப்போல மதிப்பர்.

5. The wise will not at all esteem the resentful. They will esteem the patient even as the gold which they lay up with care.

† இடைவிடாது கினைத்தலாவது தம்மைத் தண்டித்தவரைத் தண்டியாது பொறுத்துக்கொண்டவரது பொறுமையைப் பொன்னே முடிந்து வைத்துக்கொண்டிருப்பவன் அப்பொன்னைக் காப்பதுபோன் றறிவுடையா ரென்னுமிருத்தல்.

கூ. ஒறுத்தார்க் கொருநாளே யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

பரி.—(இ-ள்). தமக்குத் தீங்கு செய்தவனை ஒறுத்தார்க்கு உண்டாவது அவ் வொருநாளே யின்பமே, அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியுமளவும் புகழுண்டாம், (எ-று).

ஒருநாளேயின்பம்—அந்நாளொன்றிலும் கருதியது முடித்தே மெனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். † ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின், ஏற்புடை உலகமென்னுஞ் சொல் வருவித் துரைக்கப்பட்டது.

தேவி.—(இள்) ஒறுத்தார்க்கு-(தமக்குத் தீமை செய்தவனைத்) தண்டித்தவர்க்கு (உண்டாவது), ஒருநாளே யின்பம்-அவ்வொருநாளே யின்பமே, பொறுத்தார்க்கு - (அத்தீமையைப்) பொறுத்தவர்க்கு பொன்றுந்துணையும்-(உலகம்) அழியுமளவும், புகழ் - கீர்த்தி (உண்டாம்), (எ-று).

ஒருநாளேயின்பம்-அந்நாளொன்றிலும் கினைத்தது முடித்தோ மென்று செருக்கி யிருக்கும் பொய்யின்பமாம். தனக்காதாரமாகிய உலகம் அழியப் புகழும் அழியுமாதலின், பொருத்த முடைய உலகமென்னுஞ் சொல் வருவித்துக் கூறப்பட்டது. செருக்கு-கர்வம்,

(க-து). தமக்குத் தீமைசெய்தவனைத் தண்டித்தவருக் கொருநாளே யின்பமும், அத்தீமையைப் பொறுத்தவருக் குலக மழியுமளவும் புகழுமுண்டாம் என்பது.

6. The pleasure of the resentful continues for a day. The praise of the patient will continue until the world passes away.

எ. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநோக்
தறனல்ல செய்யாமை நன்று.

பரி.—(இ-ள்). செய்யத் தகாத கொடியவற்றைத் தன்கட்பிறர் செய்தாராயினும், அவர்க்கு அதனால் வருந்துன்பத்திற்கு நொந்து தான் அறனல்லாத செயல்களைச்செய்யாதிருத்தல் ஒருவனுக்குநன்று,(எ-று).

† ஆதாரமாகிய வுலகம் பொன்ற (கெட) ஆதேயமாகிய புகழும் பொன்று (கெடு) மாகலின் ஏற்புடை (தகுதியுடைய) உலகமென்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. இங்ஙனங கூறியதினால் ஆதாரமாகிய வுலக முள்ளவரைக்கும் ஆதேயமாகிய புகழிருக்குமென்பது பெறப்பட்டது. இஃது "ஒன்று வுலகத் தியற்கை புகழல்லாற், பொன்றுக பிற்பதொன் றில்"எனப் புகழதிகாரத்திற்கூறுவதனாலும் விளங்கும்.

உம்மை நிறைப்பும்மை. துன்பத்திற்கு சேதலாவது ‡ "உம்மை வெரிநொய் நெடுத்த வீழ்வர்கொல்" என்ற பரிதல்.

தெளி.—(இ-ள்). நினைல - செய்யத்தகாத தீயசெயல்களை, தன் - தன்னிடத்து, பிறர் - அவரர், செய்யினும் - செய்தாராயினும், நோ - (அவருக்கு அதனால் வரும்) துன்பத்திற்காக, நொந்து - வருந்தி, அறனல்ல - (தான்) அறமல்லாத செயல்களை, செய்யாமை-செய்யாதிருத்தல், கன்ற - (ஒருவனுக்கு) கல்லதாம், (எ-து).

செய்யினுமென்றவும்மை இழிவுதெரிப்பும்மை. துன்பத்திற்காக வருந்துதலாவது இப்பாவத்தினால் இவர் மறுமையில் எரிவாய் நரகத்தில் வீழ்வரேயென் றிரக்கங்கொள்ளுதல்.

(க-து). செய்யத்தகாத கொடியசெயல்களைத் தன்னிடத்து செய்தவருக்குப் பின்வரும் நிகழ்ச்சிகளைத் தருமமல்லாத செயல்களை அவரிடத்துச் செய்யாதிருத்தல் ஒருவனுக்குச் சிறப்புடைய வறமாம் என்பது.

7. Though others inflict injuries on you, yet compassionating the sorrow that will come upon them it will be well not to do to them any thing contrary to virtue

அ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

பரி.—(இ-ள்). மனச்சேருக்கால் நங்கட் டீயவற்றைச் செய்தாரைத் தாம் தம்முடைய பொறையான் வென்று விடுக, (எ-று).

தாமும் அவர்கட் டீயவற்றைச் செய்தல் தோலாது பொறையான் அவரின் மேம்பட்டு † வெல்க வென்பதாம். இவை கான்கு பாட்டாலும் பிறர் செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது.

தெளி.—(இ-ள்). மிகுதியால் - மனச்சேருக்கினால் (தம்மிடத்தி), மிக்கவை - தீயசெயல்களை, செய்தாரை - செய்தவர்களை, தாம் - தாங்கள், தக்குதியால் - தமது பொறுமையினால், வென்றுவிடல் - வெனறு விடக் கடவர், (எ-து).

தாமும் அவரிடத்துத் தீயசெயல்களைச்செய்து தோல்வியடையாது பொறுமையால் அவரிலும்மேம்பட்டு வெல்லுகவென்பதாம். இவை கான்கு பாட்டாலும் பிறர்செய்த குற்றங்களைப் பொறுத்தல் சொல்லப்பட்டது.

---

‡ காடியர், தறவு, அ. இதன்பொருள் மறுமையி லெரிகின்ற வாயையுடைய நரகத்திலே வீழ்வர்களே என்பது.

†† "வெல்லுது வேண்டின் வெகுளி விடல்" என்பது நான்மணிக் கடிகை.

(க-ள்). நீமைசெய்தவரைப் பொறுமையால் வெல்லவேண்டும் என்பது.

8. Let a man by patience overcome those who through pride commit excesses

கூ. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னுச்சோ னேற்கிற் பவர்

பரி.—(இ - ள்). இல்வாழ்க்கைக்க ணின்றேயும் துறந்தாரைப் போலத் தூய்மையுடையார், நெறியைக்கடந்தார்வா யின்னுத சொல்லைப் பொறுப்பவர், (எ - று).

தூய்மை - ¶ மனமாசின்மை. வாயென வேண்டாது கூறினர்; தீய சொற்கள் பயின்றதெனத் தாம்வேண்டியதன் இழிபு முடித்தற்கு.

தெளி.—(இ-ள்). இறந்தார் (நல்வழியைக்) கடந்தவரது, வாய்-வாயினின்றுண்டாகும், இன்னுச்சொல்-வெறுக்கப்படுஞ் சொற்களை, நோற்பவர்-பொறுப்பவர்,(இல்வாழ்க்கையிலேயிருந்தாலும்), துறந்தாரின்-துறந்தவரைப்போல, தூய்மை - பரிசுத்தகுணத்தை, உடையர்-உடையவர்களாவர்.

தூய்மை - மனவழுக்கில்லாமை. வாயென்று வேண்டாது சொல்லினர்; (அவ்வாய்) தீயசொற்களைப்பேசிப்பழகியதெனத் தாம்வேண்டியதன் இழிபு தோன்றுதற்கென்க.

(க - று) தீயவழியில் நடப்பவரது கொடுஞ் சொற்களைப் பொறுப்பவர் துறவிகள் போலப் பரிசுத்தகுண முடையவராவர்.

9 Those who bear with the uncourteous speech of the insolent are purer than ascetics.

கo. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னுச்சோ னேற்பாரிற் பின்.

பரி.—(இ - ள்). விரதங்களான வுணாநத்தவிர்ந்து உற்ற நோயைப் பொறுப்பார் எல்லாரினும்பெரியர்; அவர் பெரியராவது தம்மைப்பிறர் சொல்லும் இன்னுதசொல்லைப் பொறுப்பாரிற்பின், (எ - று).

பிறர் - அறிவிலாதார். * சோலாமைக் கேதுவாகிய இருவகைப் பற்

¶ மனமாசின்மை-மனத்தின்கண்காமம்வெகுளி மயக்கங்களில்லாமை.

* சோலாமைக் கேதுவாகிய இருவகைப்பற்று - வீரதங்களினுல் உணவைவிட்டுத் தம்மையடைந்த பிறோய் முதலியவற்றைப் பொறாத்திக்கொள்ளாமைக்குத் தானமான யானெனதென்னுஞ் செருக்கு. (தானல்லாத வுடம்பையா[illegible]ன்று கருதி யதனிடத்தில் வைக்குமபிமானம் யானென்னுஞ்செருக்கு. இஃது அகங்காரமெனபபடும்.தன்னேசெம்பத்த


ரூடு சின்றே † சோற்றலின் 'இன்னுச்சொ னேற்பாரிற் பின்' என்றார். இவை யிரண்டுபோட்டாலும் பிறர் மிகைக்கச்சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது.

தெளி.—(இ - ன்). உண்ணாது - (விரதக்களினால்) உணவைவிட்டு, நோற்பார் - (தம்மை யடைந்த நோயைப்) பொறுப்பவர், பெரியர் - (எல் லாரினும்) பெரியவராவார், (அவர்பெரியவராவது),பிறர் - அயலார், சொல் லும் - (தம்மைப்பற்றிச்) சொல்லும், இன்னுச்சொல் - வெறுக்கப்படுஞ் சொற்களை, நோற்பாரின் - பொறுப்பவரின், பின் - பின்னும்,(எ - று).

பி ற ர் - அறிவில்லாதவர். தவஞ்செய்பவமைக்குக் காரணமாகிய யா னெனதென்னும் இருவகைப்பற்றுக்களோ டிருந்தே பொறுத்தலால் 'இன்னுச்சொ னேற்பாரிற் பின்' என்றார். (பிறர்சொல்லும் வெறுக்கப் படுஞ் சொற்களைப் பொறுப்பவர் தவஞ் செய்வாரினும் பெரியாரென்பது சொல்லலாயிற்று). இவை இரண்டுபோட்டாலும் பிறர் வருத்தமுண்டாகச் சொல்லியவற்றைப் பொறுத்தல் சொல்லப்பட்டது.

(க - து). பிறர் கூறுங் கொடுஞ் சொற்களைப் பொறுப்ப வருக்கு உணவைவிட்டுத் தம்மையடைந்த நோயைப் பொறுத் துக் கொள்ளுந் தபசிகள் பிற்பட்டவராவர் என்பது.

10. Those who endure abstinence from food are great, next to those who endure the uncourteous speech of others.



பதின்மூன்றுவது அதிகாரம்.

அழுக்காறுமை—Against Envy.

பரி.—இதனுள் $ அழுக்காறென்பது ஒருசொல், * அதற்குப்

மில்லாத பொருளை யெனதெனக்கருதி அதனிடத்துவைக்கு மபிமானம் என தென்னுஞ் சொற்கு. இதமாகா மெனப்படும்). இதனால்பொறுத் தற்கொள்ளுதற்குக் காரணம் யாவென தென்னுஞ் சொல்லில்லாமை யென் குயிற்றென்க

† சோற்றலின் - அறிவில்லாதார் சொல்லுகின்ற வெறுக்கப்படுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதலினால்.

$ அழுக்காறு என்பதை அழுக்கு ஆறு என இரண்டு சொல்லாகக் கொள்ளாது ஒரு சொல்லாகவே கொண்டு 'அழுக்காறென்பது ஒருசொல்' என்றார். அழுக்காறுதல் என்னுந் தொழிற்பெயர் விருதிகெட்டு மூதனிலை நிரிந்த அழுக்காறு என வந்தது. இவ்வாறு வருவது முதனிலை நிரிந்த தொழிற்பெயரெனப்படும். அழுக்காறு என்பது சொல்லால் உடன்பாடா யிருப்பினும் பொருளால் எதிர்மறையை யுணர்த்திற்று. இக்காரணக் கொத்தில் "விதிச்சொன் மறைப்பொரு ளாகி வருவும்" என்பதற்கு இஃதே உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

பொருள் * மேலே யுரைத்தாம். † அச்சொற் பின் அழுக்காற்றைச்செய் யாமை யென்னும் பொருள்பட எதிர்மறை ஆகாரமும் மகாஜகாவிதுதி யும் பெற்று § அழுக்காறுமையென நின்றது. இப்பொறுமையும் பொ றைக்கு மனுதலியாகலின், இதனை விலக்குதற்கு இது பொறையுடை மையின்பின் வைக்கப்பட்டது.

தே.—அஃதாவது பிறரிடத்துச் செல்வ முதலியனவற்றைக் கண்ட விடத்துப் பொறுமைப்படாமை. இப்பொறுமையும்பொறுமைக்கு எதிரிய தாகலின், இப்பொறுமையை விலக்குதற்கு இவ்வழுக்காறுமை பொறை யுடைமையின்பின் வைக்கப்பட்டது.

க. ஒழுக்காருக் கோள்க வோருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

பரி.—(இ - ன்). ஒருவன் தன்னெஞ்சத்தின்கண் அழுக்காறென் னுங் குற்றமில்லாத இயல்பினைத் ¶ தனக்கோதிய ஒழுக்கநெறியாகக் கோள்க, (எ - று).

இயல்பு - அறிவோடுகூடிய தன்மை. ‖ அத்தன்மையும் ஈன்மை பயத்தலின், ஒழுக்கநெறிபோல உயிரினுமோம்புக என்பதாம்.

தெளி:—(இ - ன்). ஒருவன்—தன்னெஞ்சத்து - தனது மனதின் கண், அழுக்காறு - பொறுமையென்னுங் குற்றம், இலாத - இல்லாத, இயல்பு - இயல்பினை, ஒழுக்கு - (தனக்குச் சொல்லிய) ஒழுக்கத்தினது, ஆறாக - வழியாக, கொள்க - கொள்ளக்கடவன், (எ - று).

இயல்பு - அறிவோடுகூடிய தன்மை. அவ்வறிவோடு கூடிய தன்மை யும் ஈன்மையைத் தருதலால், அழுக்காறிலாத வியல்பினை ஒழுக்கவழி போல உயிரினும் தெய்தாதாகக் காப்பாற்றுக என்பதாம்.

* மேலே யுரைத்தாம்—அதன்வலியுறுத்தலின் 5 - வது குறளினு ரையில் 'பிறராக்கம்பொறாமை' என்றுகூறினும்.

† அச்சொல் - (அழுக்காறென்னுஞ் சொல்) அழுக்காற்றை (பொரு மைப்படுதலைச்) செய்யாமை யென்னும் பொருள் தோன்ற எதிர்மறை ஆகாரமும் மகாரைவகார (மை) விகுதியும் பெற்று அழுக்காறுமை (பொரு மைப் படுதலைச் செய்யாமை) யெனின்றது.

§ அழுக்காறுமை யென்பது சொல்லால் எதிர்மறையா யிருப்பி னும் பொருளால் உடன்பாட்டை யுணர்த்திற்று. இலக்கணக்கொத்தில் "மறைச்சொல் லிதிப்பொரு ளாக வருஉவும்" என்பதற்கு இஃதே யுதா ரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது. அழுக்காறுமை யென்பதற்குப் பொரு மைப்படாமை அஃதாவது பொறுத்தலென்பது பொருள்.

¶ தனக்கோதிய-ஒழுக்கமுடைமையதிகாரத்தில் "ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கு, முயிரினு மோம்பப் படும்" என்று தனக்குச் சொன்ன.

‖ அத்தன்மையும்-னெஞ்சத் தழுக்காறிலாத வியல்பும்.

(க - து). ஒருவன் பொருமை யில்லாதிருத்தலைத் தனக் கோதிய ஒழுக்க வழியாகக் கொள்ளக்கடவன் என்பது

1. Let a man esteem that disposition which is free from envy in the same manner as propriety of conduct.

உ. விழுப்பேற்றி னஃதோப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

பரி.—(இ - ள்). யாவர்மாட்டும் அழுக்காற்றினின்று நீங்குதலே ஒருவன் பெறுமாயின், * மற்றவன் பெறுத் தீய † பேறுகளுள் அப் பேற்றினை யோப்பதில்லை, (எ - று).

அழுக்காறு பகைவர் மாட்டும் ஒழிதற்பாற் றென்பார் 'யார்மாட்டும்' என்றார். அன்மை - வேறுதல். இவை யிரண்டு பாட்டாலும் அழுக்கா றின்மையது குணம் கூறப்பட்டது.

தேவி.—(இ - ள்). யார்மாட்டும் - யாவரிடத்தும், அழுக்காற்றின் - பொருமையினின்றும், அன்மை - நீங்குதலை, பெறின் - (ஒருவன்) பெற வாஞ்சின், விழுப்பேற்றின் - (மற்றவன் பெறும்) மேலான பேறுகளுள், அஃது - அப்பேற்றினை, ஒப்பது - ஒத்திருப்பது, இல்லை—, (எ - று).

பொருமைப்படுதல் பகைவரிடத்தும் ஒழிதல்வேண்டுமென்பார் 'யார் மாட்டும்' என்றார். அன்மை - வேறுருதல், இவையிரண்டு பாட்டாலும் பொருமை யில்லாமையினது குணம் சொல்லப்பட்டது.

(க - து). ஒருவன் யாவரிடத்தும் பொருமை யில்லாதிருப் பானாயின், அவனுக்கு அதைவிடச் சிறந்த பேறு இல்லை என்பது.

2. Amongst all attainable excellencies there is none equal to that of being free from envy towards every one.

ஈ. அறனுக்கம் வேண்டாதா னேன்பான் பிறனுக்கம்
பேணு தழுக்கறப் பான்.

பரி.—(இ - ள்). மனுமைக்கும் இம்மைக்கும் அறமுந் ‡ கேல்வழும் ஆகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதானென்று சொல்லப்படு வான் பிறன் செல்வங் கண்டவழி அதற்று உவவாது அழுக்காற்றைச் செய்வான், (எ - று).

அழுக்கறுத்த லெனினும் அழுக்கா றெனினும் ஒக்கும். ‡ அழுக்கா றை செய்யின் தனக்கே எதமாமென்பதாம்.

---

* மற்ற-பின்பு. † பேறு - பெறப்படுவது. அது புகழ் முதலியனவாம்.

‡ புகழும் என்றும் பாடமுண்டு. † அழுக்காற்றைச் செய்யின் என்றும் பாடமுண்டு.

தேளீ.—(இ - ன்). அறன் - (மறுமைக்கு) அறமும், ஆக்கம் - (இம்மைக்குச்) செல்வமும் (ஆகிய வறுப்புகளை), வேண்டாதானென்பான்-(தனக்கு) வேண்டாதவனென்று சொல்லப்படுவோன், பிறன் - பிறனது, ஆக்கம்-செல்வத்தை, பேணுதி- (கண்டவிடத்து அதற்காக) மிழாமல், அழுக்கறுப்பான் - பொருமைப்படுதலைச் செய்வான், (எ - று).

பொருமைப் படின் தனக்கே துன்பமாம் என்பதாம்.

(க - து). பொருமை யுடையவனுக்கு மறுமைக்குரிய அறமும் இம்மைக்குரிய பொருளுமில்லை என்பது.

3. Of him who instead of rejoicing in the wealth of others envies it, it will be said"he neither desires virtue nor wealth."

ச. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

பரி—(இ - ள்). அழுக்காறு ஏதுவாக அறனல்லவற்றைச் செய்யார் அறிவுடையார்; அத்தீநெறியால் தமக் $ கிருமையினுந் துன்பம் வருதலை யறிந்து, (எ - று).

அறனல்லவையாவன - செல்வம், கல்வி ‡ முதலியன உடையார்கட் டீங்கு நினைத்தலும் சொல்லுதலும் செயதலுமாம்.

தேளீ.—(இ - ன்). (அறிவுடையோர்) அழுக்காற்றின் - பொருமை காரணமாக, அல்லவை - அறமல்லாதவைகளை, செய்யார்—, இழுக்காற்றின்-(பொருமைப் படுதலென்னும்) அத்தீயவழியால், ஏதம்-துன்பமானது, படுபாக்கு-(தமக்கு இருமையிலும்) உண்டாதலை, அறிந்து - தெரிந்து, (எ-று).

அறமல்லாதவையாவன-செல்வம் கல்வி முதலியன வற்றை யுடையரியாடத்துத் தீமையாயினவற்றை நினைத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம்.

(க-து.). அறிவுடையவர் பொருமை காரணமாகப் பிறர்க்குத் தீங்கானத்தான் தீமைசெய்யார் என்பது.

4. The wise knowing the misery that comes from transgression will not through envy commit unrighteous deeds.

ஞ. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னுர்
வழுக்கியுங் கேடென் பது.

$ இருமையிலுந் துன்பம் வருதலாவது இம்மையில் வறுமைத் துன்பமும் மறுமையில் நரகத்துன்பமு முண்டாதல். ‡ முதலியன என்றதனால் சொற்செலவு, நிலக்கிழமை, ஆண்மை, அதிகார முதலிய வற்றையுங் கொள்க.

பரி.—(இ-ள்.) அழுக்காறு பகைவரை ஒழித்தும் கேடு பயப்பது ஒன் * றலின், அவ்வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடு பயத்தந்த அதுதானே அமையும், (எ-று).

அதுவே யென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற் றொக்கது.

தேவி.—(இ-ள்.) அழுக்காறு - பொருமையானது, ஒன்னார் - பகைவரை, வழுக்கியும்-ஒழிந்திருந்தும், கேடின்பது-கேட்டைத் தருவதொன்று, (ஆதலால்), உடையார்க்கு-(அப்பொருமையை)உடையவர்க்கு (கேட்டைத் தருதற்குப் பகைவர் வேண்டாம்), அது - அப்பொருமையே, சாலும் - போதும், (எ-று).

அதுவே யென்னும் பிரிநிலையேகாரம் செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

(க - து.) பொறுமையே ஒருவனுக்குக் கேட்டைத்தரும் பெரும் பகையாம் என்பது.

5. To those who cherish envy that is enough. Though enemies fail in their attempts, that will bring destruction.

கூ. † கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடிப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கேடும்.

பரி.—(இ - ள்) ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காறு தைச் செய்வானது சுற்றம் உடைக்கப்படுவதும் உண்ணப்படுவது மின்றிக்கேடும், (எ-று).

கொடுப்பதன்கண் அழுக்கறுத்தலாவது கொடுக்கப்படும் பொருள் களைப்பற்றிப்பொருமைசெய்தல். சுற்றங்கெடுமென்றே, அவன்கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர் பேறு பொருமை தன் பேற்றையெயன்றித் தன்சுற்றத்தின் பேற்றினையும் இழப்பிக்கு மென்பதாம்.

தேவி.—(இ-ள்.) கொடுப்ப - (ஒருவனுக் பிறர்க்கு) கொடுக்கப்படும் பொருள்களைப்பற்றி, அழுக்கறுப்பான் - பொருமைப் படுவானது, சுற்றம்-உறவினர், உடுப்பதூஉம் - உடுக்கப்படுவதும், உண்பதூஉம் - உண்ணப்படுவதும், இன்றி-இல்லாமல், கேடும்-அழிவும், (எ-று.)

---

* தலின் என்பது ஏதுப் பொருளே புணர்த்து நின்றசொல்.

† "ஒத்தொருவருக்கொருவர் சினத்தின் முன்னே, தப்பாத வினைத் தொழுதலின் வென்றி, கொடுப்பது விலக்குதொடி, மெய்ப்பாடு சுற்றம், உடுப்பதூஉ முண்பதூஉ மின்றியே யென்றும்" என்பது இராமாயணம்.

சுற்றத்தார் கெடுவரென்றே, அவன் கெடுதல் சொல்லாமலே பெறப் பட்டது. பிறர் செல்வத்தைக் கண்டு பொருமைப்படுதல் தன் செல்வத் தையே யல்லாமல் தன் சுற்றத்தாரது செல்வங்களையும் இழக்கச் செய்யு மென்பதாம்.

(க-து) ஒருவர் மற்றொருவருக் கொன்று கொடுப்பதைக்குறித் துப் பொறுமைப் படுவோனது சுற்றத்தாரும் உடுக்கவாடையு முண்ணச்சோறு மில்லாமற் கெடுவர் என்பது.

6. He who is envious at a gift made to another will with his relations utterly perish destitute of clothing and food.

எ. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

பரி.—(@ - ள்). பிறராக்கங் கண்ட வழிப் பொறுமை உடையா னைத் திருமக டானும் பொறாது தன்றவ்வைக்குக் காட்டி நீங்கும்,(எ-ஙா).

* தவ்வை - மூத்தவள். தவ்வையைக் காட்டியென்பது † "அறிவுடை யந்தண னவனைக்காட் டென்றலே" என்பதுபோல ‡ உருபுமயக்கம்.

---

* தேவாசுரர் திருப்பாற்கடலைக் கடைந்தபோது அக்கடலினின்று மூதேவி முன்னும் இலக்குமி பின்னும் பிறந்தமையாலே மூதேவிக்கு மூத் தவள் என்னும் பெயருண்டாயிற்று. "சீதேவி யாருடனே துய்யதிருப் பாற்கடலின், மூதேவி யேன்பிறந்தாள் முன் " என்பது தனிப்பாடல்.

† கலித்தொகை, மருதம், எ. இதன்பொருள் அறிவினையுடைய பிரா மணன் அவளுக்குக் காட்டென்று சொன்னலே என்பது. 'அறிவுடை' என்னுமிவ் வடிக்கு நச்சினார்க்கினியர் " அறிவில்லாத அந்தணன் அவ னைக் காணப்பண்ணென்று சொன்னலே" என்றுரைகூறி "அறிவுடை யந்தணன் இகழ்ச்சி, அவட்கு என உருபுமயக்கமுமாம்" என்று விசேட வுரை வகுத்திருக்கின்றனர்.

‡ தவ்வையை யென்பதன்கணுள்ள ஐயென்னு மிரண்டனுருபு தனக் குரிய செயப்படுபொருளே விட்டுக் கு வென்னும் நான்கனுருபிற் குரிய கோடற் பொருளில் (அவளே யென்பது அவளுக்கு என வந்தாற்போலத் தவ்வையை யென்பது தவ்வைக்கு என) வந்தமையின், உருபு மயக்கமா யிற்று. "உருபின் மயக்கமோ ருருபின் பொருளொடு, தன்பொருள் விடுத் தந்நிலைமயங் குதலே" என்பது இலக்கண விளக்கம். இவ்வாறன்றி ஒரு வேற்றுமையின் பல வுருபுகளில் ஒருருபு குறிக்கவேண்டிய பொருளை அவ் வேற்றுமையின் மற்றொருருபு குறிப்பது உருபு மயக்கமென்பாரு முண்டு

§ மனத்தைக் கோவிலித்த அழுக்காறுடையனுயினுனே யென்றனைப் பாருமூனர்.

தெளி;—(இ - ன்). அழுக்காறுடையானை - (பிறர்செல்வங் கண்ட விடத்துப்)பொருமைப் படுகின்றவனை; செய்யவன்-திருமகள், அவ்வித்தம்-(தானும்) பொருமைப்பட்டு, தவ்வையை-(தனது)தமக்கைக்கு, காட்டி - காண்பித்து, விடும் - நீங்குவாள், (எ - று)

தவ்வையை யென்பது தவ்வைக்கு என்னும் பொருளில்வந்தமையின், உருபு மயக்கமாம் தவ்வை - மூதேவி. திருமகள் - இலக்குமி.

(க - து). பொறுமை யுடையவனை மூதேவியடைவாள் என்பது.

7. Lakshmi envying (the prosperity) of the envious man will depart and introduce her sister to him.

அ அழுக்கா றெனவோரு பாவி திருச்செற்றுத்
தீயழி யுய்த்து விடும்.

பரி.—(இ - ன்). அழுக்காறென்று சொல்லப்பட்ட வோப்பில்லாத பாவி தன்னை யுடையானை இம்மைக்கட் செல்வத்தைக் கெடுத்து, மறுமைக்கண் நாகத்திற் செலுத்திவிடும், (எ - று).

× பண்பிற்குப் பண்பில்லையேனும், தன்னையாக்கினனை இருமை யும் கெடுத்தற் கொமைபற்றி, அழுக்காற்றினைப் 'பாவி' என்றார்;

---

§ ஒளிய மென்பது மனக்கோட்டத்திற்கும் பெயராதலின், அவ் வித்தழுக்கு றுடையானை என்பதற்கு மனதைக் கோவிலித்த (கோ னப்பண்ணி) அழுக்காறுடையனுயினுனே (பொருமை யுடைத்தா யிருக் கின்றவனை) யென்றனை கூறவாருமூனர். இவ்வுரையினுல் பொருமை யுடையனுனது மனத்தைத் திருமகளே கோணப்பண்ணுகிறு னென்பது பெறப்படும்.

× அழுக்காறு என்பது தீச்குணங்களிலொன்று. குணமெனினும் பண்பெனினுமொக்கும். "பொருள்மைச்சரி யுடையமையாதல் குணமு டையமையாதல் பொருட்லெக்கணம்" "பண்பிற்குப் பண்பு கோடல் பொருத் தமையின்" என்று தருக்கதால் கூறுகின்றமையின், பண்பிலில் (குணி யில்) பண்பிருக்கு மென்னும், பண்பு மற்றெரு பண்பையேற்றுப் பண்பி யாதலின்றென்னும் பெறப்படுகின்றன. படவே அழுக்காறென்பது குண மா மிருத்தலால் அது பண்பியாகா தென்றுயிற்று; ஆகவே, அதனை ப் பாவமென்னை (குணமாகக்) கூறுது பாவி யென்னை (குணியாகக்) கூறு வது வழுவாம். வழுவாதல் பற்றிப் 'பண்பிற்குப் பண்பில்லையேனும், (அழுக்காறென்னும் குணத்திற்கு மற்றெரு குணத்தை யேற்றுக்

‖ கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின். இவை யாறுபாட்டாலும் அழுக்காறுடைமையது குற்றம் கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்). அழுக்கா றெனவொரு பாவி-பொருமையென்று சொல்லப்பட்ட வொப்பில்லாத பாவியானவன் (தன்னேயுடையவனே), இருச்செற்று - (இம்மையில்) செல்வத்தைக் கெடுத்து, நீயுழி யுய்த்துவிடும் - (மறுமையில்) நரகத்தினிடத்துச் செலுத்திவிவோன், (எ - று).

அழுக்காறென்னுங் குணத்திற்குக் குணமின்மையினும், தன்னே யுண்டாக்கினவனே இருமையிலும் கெடுக்கின்றதொடுமைபற்றி அதனைப் 'பாவி' என்றார்;தொடுத்தொழிலுடையானைப் பாவியென்னும் வழக்கமிருத்தலின். இவை யாறுபாட்டாலும் பொருமை யுடைமையினது குற்றம் சொல்லப் பட்டது.

(க - து). பொருமையானது தன்னே யுடையவனைக் கெடுத்து நரகத்திற்றள்ளும் என்பது.

8. The sinner's envy will destroy a man's wealth in this world and drive him into the pit of fire in the next world.

கூ. அவ்விய நெஞ்சத்தா னுக்கமுஞ் சேவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

பரி.—(இ - ள்). கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனது ஆக்கமும் ஏனைச் செம்மையுடையவனது கேடும் உளவாயின், அவை ஆராயப்படும், (எ - று).

கோட்டம் - ஈண்டு அழுக்காறு. உளவாயினென்பது எஞ்சினின்றது. ¶ ஆக்கக் கேடென் கோட்டமுஞ் செம்மையும் எதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையார்ல் $ இதற்கேதுவாகிய பழவினையாதென்று ஆரா

குணியாகுத்தன்மை யின்மையினும்) தன்னேயாக்கினனே (அழுக்காறென்னுந் தன்னேயுண்டு பண்ணினவனே) இருமையுங் கெடுத்தற் கொடுமை (இம்மை மறுமை யென்று மிரண்டினும் கெடுக்குந் தீமை) பற்றி, அழுக்காற்றினே(பாவமெனக் குணமாகக் கூறுது) (குணியாகப்) பாவி யென்னூர்' என்று கூறப்பட்டது. அழுக்காறுகிய குணத்தைப் பாவமெனக்கூறுது 'இருச் செற்றுத் தீயுழி யுய்த்து விடும்' என எது காட்டிப் பாவி யெனக்கூறியது எது வுருவகவணியாம்.

‖ கொடியானைப் பாவி யென்னும் வழக்குண்மையின்-தீயகாரியங்களைச் செய்கின்றவனைப் பாவியென்று பேசும் வியவகாமிருக்கிற படியினல். இது கொடியகாரியங்களைச் செய்த துரியோதனனைப் பாவித் துரியோதனன் என்று கூறுவதாலு மறிதற் பாற்றும்.

¶ ஆக்கக்கேடென் கோட்டமுஞ் செம்மையும் எதுவாக - செல்வமும் தரித்திரமும் பொருமையும் ஒவ்வாமையும் காரணமாக.

$ இவற்றிற் (ஆக்கக்கேடுகட்) கேதுவாகிய என்றும் பாடமுண்டு.

பப்பதினின் 'தினைக்கப்படும்' என்றார். § "இம்மைச் செய்தன யாறறி கல்வினை, யும்மைப் பயன்கொ டொருதனி யுழந்திர், திருத்தரு மாமணிக் கொழுந்துடன் போந்தது" என தினைக்கப்பட்ட வாதரிக.

நெளி.—(இ-ள்.) அல்லிய நெஞ்சத்தான் - கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனது, ஆக்கமும் - செல்வமும், செல்லியான்-மற்றைச்செம்மையை யுடையவனது, கேடும் - வறுமையும், (உண்டாயின்), தினைக்கப்படும் - (அவை) ஆராயப்படும், (எ-று).

கோட்டம் - இருப்பொருமையென்னும் பொருளது. உண்டாயின் என்பது குறைத்து நின்றது. பொருமையினும் செல்வமும், கடிவுதிலமை யினும் கேடும் உண்டாகுதல் கூடாமையால், அறிவுடையவரால் இச்செல்வமும் வறுமையும் உண்டாதற்குக் காரணமாகிய பழவினையாதென்று ஆராயப்படுதலால் 'தினைக்கப்படும்' என்றார். செம்மை - கடிவுதிலமை.

(க - து). அறிவுடையோர் பொருமையுள்ளவனது செல்வத்தையும் கடிவுதிலமையுடையவனது வறுமையையும் பழவினையின் பயனென் றெண்ணுவர் என்பது.

9. The wealth of a man of envious mind and the poverty of an upright man will be pondered.

கo. ‡ அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

பரி.—(இ - ன்); அழுக்காற்றைச் சேய்து பெரிய ராயினாரும் இல்லை; * அச்செயலிலாதார் பெருக்கத்தி னின்றீங்நாரும் இல்லை, (எ-று).

---

§ லெப்பதிகாரம், அடைக்கலக்காதை. கக, கஉ, கக, இதன்பொருள் யாதறிய இப்பிறப்பிற் செய்தன வெல்லாம் எய்தினையாகவும் இம்முழு மாணிக்கக் கொழுந்து போன்ற மனைவியுடன் நீ வந்த ஒரு தினையுமின் றித் தனியே யுலர்ந்த முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயன் தானே என்பது. பட்டினத்தடிகள் "என்செயலாவது" என்னுஞ் செய்யுளில் "இந்த வூனெடுத்த, பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு, முன்செய்த தீவினை போயின்ற னோல்லு மூண்டதுவே" என்ற கூறியது மிங்கறியத் தக்கதாம்.

‡ அழுக்காறு என்னும் பண்புப்பெயர் தொழிற்பெய ராக்கால் அழுக்கறல் எனநிற்கும். இங்கு அழுக்கற்ற என்பது செய்த என்னும் வாய்பாட்டினத்தால் வினையெச்சம்.

* அச்செய லிலாதார்க்கு என்றும் பாடமுண்டு.


இவை யிரண்டொட்டானும் ‡ கேடும் ஆக்கமும் வருதற் கேது ஒருங்கு கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). அழுக்கற்று - பொறுமைப் படுதலைச்செய்து, அகன்றாரும் - பெரியவரானவரும், இல்லை—, அஃதில்லார் - அச்செயலில்லாதவருள், பெருக்கத்தின் - பெருக்கத்திலிருந்து, தீர்ந்தாரும் - நீங்கினவரும், இல்-இல்லை, (எ - று).

பெருக்கம் - செல்வம். இவை யிரண்டு பாட்டானும் அழிவும் ஆக்கமும் வருதற்குக் காரணஞ் சேர்த்தச சொல்லப்பட்டது.

(க - து) பொறுமையிற் பட்டுச் செல்வ முற்றாரும் அஃதின்றி வறுமையுற்றாருட் இல்லை என்பது.

10. Never have the envious become great; never have those who are free from envy been without greatness.



பதினொன்காவது அதிகாரம்.

வெஃகாமை—*Against Covetousness.*

பரி.—அஃதாவது பிறர்க்குரிய பொருளை வெளவக் கருதாமை. பிறருடைமை கவர்வழிப் பொறாமையே யன்றி யதனைத் தான் வௌவக்கருதுதலுந்தீயதென்றற்கு, இது அதிகார மையின்பின் வைக்கப் பட்டது.

தெளி.—அஃதாவது பிறர்க்குரிமையா யுள்ள பொருளை யபகரித்தற்கு நினையாமையாம். பிறருடைமையைக் கண்டவிடத்துப் பொருமை யடைதலே யல்லாமல் அதனைத் தான அபகரித்தற்கு நினைத்தலும் குற்றமென்பதற்கு, இஃது (வெஃகாமை) அழுக்காறாமையின் பின்னே வைக்கப்பட்டது.

க. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

பரி.—(இ - ள்). பிறர்க்குரியன கோடல் நமக்கு அறன் அன்றென்னும் நடுவுநிலைமை இன்றி அவர் நன்பொருளை ஒருவன் வெஃகுமாயின், அவ்வெஃகுதல் அவன்குடியைக் கேடச்செய்து, பலகுற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும், (எ - று).

‡ கேடுவருதற்கேது அழுக்காற்றைச் செய்தலும், ஆக்கம் வருதற் கேது அழுக்காற்றைச் செய்யாமையு மாமெனக் கூறப்பட்டது.

அழுக்காற்றைச்செய்து பெரியராயினாருமில்லை என்றதனால் அதனைச் செய்யாதார் பெரியவராவா ரென்பதும், அச்செயலிலாதார் பெருக்கத்தினின்று நீருமில்லை என்றதனால், அச்செயலுடையார் பெருக்கத்தினின்றுவா ரென்பதும் பெறப்படுமாறறிக.

குடியை வளரச்செய்து பலநன்மையும்பயக்கும் இயல்புடற்றிப் பொருள் வெஃகினென்பார் 'நன்பொருள் வெஃகின்' என்றார். பொன்றவென்பது § பொன்றியெனத் திரிந்து நின்றது. செய்தென்பது சொல்லெச்சம்.

தேளி.—(இ - ன்). நடுவின்றி - (பிறர்க்குரிய பொருள்களைக் கொள்ளுதல் தமக்கு அறமல்ல வென்னும்)நடுவுநிலைமை யில்லாமல், நன்பொருள் - (அவரது) நல்லபொருளை, வெஃகின் - (ஒருவனபகரித்தற்கு) விரும்புவானெனின் (அஃதிருப்பு), குடிபொன்றி - (அவன்) குடியைக்கெடச் (செய்து), குற்றமும் - பல குற்றங்களையும், ஆங்கே - அப்போதே, தரும் - (அவனுக்கு) கொடுக்கும், (உ-து).

குடியை வளரச்செய்து பல நன்மைகளையும் உண்டாக்குந் தன்மை பற்றிப் பொருள் வெஃகின் என்பார் 'நன்பொருள் வெஃகின்' என்றார். பொன்ற வென்பது பொன்றியெனத் திரிந்து நின்றது. செய்து என்பது குறைத்து நின்றமையின் சொல்லெச்சமாம்.

(க-து). ஒருவன் நடுவுநிலைமை யில்லாமல் பிறர்பொருளை யபகரிக்க விச்சித்தால் அவ்வினவனது குடியைக் கெடுத்து அவனுக்குப் பல குற்றத்தையும் நாடிக்கும் என்பது.

1. If a man departing from equity covet the property of others at that very time will his family be destroyed and guilt be incurred.

2. படுபயன் வெஃகிப் பழிப்படிவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

பரி —(இ - ன்). பிறர்பொருளை வெளவிநுகர்தல் தமக்கு வரும்பயனை விரும்பி, அது வெளவுதற்குப் பழியின்கண்ணே படுஞ் செயல்களைச் செயயார், நடுவுநிலைமையன்மையை அஞ்சுபவர், (எ - று).

படிவ - ஒருவன் பொருட்குப் பிறன் உரியன் அல்ல னென்னும் * நடுவ

தேளி.—(இ - ன்.) நடுவன்மை - (ஒருவன் பொருளுக்குப் பிறன் உரியவனல்லனென்னும்) நடுவுநிலைமையல்லாமைக்கு, நாணுபவர்-அஞ்சுவோர், (பிறர்பொருளை யபகரித்தலினுல்), படுபயன் - (தமக்கு) வரும் பயனை, வெஃகி - விரும்பி, பழிப்படிவ - (அப்பொருளை யபகரித்தற்கு) பழியினிடத்தே பொருந்துஞ் செயல்களை, செய்யார்—, (எ - று).

§ பொன்றியென்பது - பொன்றுவித்து என்பதன் விகாரமென்பாரு முண்டு.

* நடுவ - நீதி

(க - து) நடுவுநிலைமை யுடையோர் பிறர்பொருளை யபகரித்த லால் தமக்கு வருஞ் பயனை விரும்பித் தீயசெயல்களைச்செய்யார்.

2. Those who blush at the want of equity will not commit disgraceful acts through desire of the profit that may be gained.

கூ. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

பரி.—(இ-ள்). பிறர்பால் வேண்டிய பொருளால் தாம் எய்தும் † நிலையில்லாத இன்பத்தை விரும்பி அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார், அறத்தான் வரும் ‡ நிலையுடைய இன்பத்தைக் காதலிப்பவர், (எ-று).

பாவத்தான் வருதலின் அப்பொழுதே அழியுமென்பார் 'சிற்றின்பம்' என்றார். § மற்றையின்பமென்பது மற்றின்பமென நின்றது.

† நிலையில்லாத இன்பம் - வினைக்கழியும் இன்பம்.

‡ நிலையுடைய இன்பம் - பாவத்தால்வரும் பொருளாலுண்டாகும் இன்பம் வினைத்து அழிவதுபோலன்றித் தாமுள்ளவரைக்கு மனுபவித்தும் (இம்மை) இன்பமும், "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந், தெய்வத்துள் வைக்கப் படும்" என்று இல்வாழ்வானுக்குக் கூறியுள்ள மறுமைப் பயனிய சுவர்க்க இன்பமுமாமென்க. இதனுலிங்குக் கூறியுள்ள இன்பம் "ஆரா வியற்கையவா" நீக்குதலால் வெளிப்படும் எஞ்ஞான்றும் ஒரு நிலையாகவுள்ள (மோட்ச) வின்பமன்றென்றுரையிற்று; எனென்னில், இல்வாழ்வானுக்கு அவா (ஆசை) நீங்குத வில்லாமையினு லென்க. எனவே, துறவறவியல் அவாவறுத்த லதிகாரத்தில் "அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்" "இன்ப மிடையறு நீண்டி மவாவென்னுந்துன்பத்துட் டின்பங் கெடின்" என்று கூறியிருத்தலினுல் துறவிகளுக்கே மோட்ச இன்ப முண்டாகு மென்பது தேற்றமாயிற்று.

தருமமார்க்கத்தால் வரும் பொருளோ டொண்டனுபவிக்கு மின்பமும் சுவர்க்க வின்பமும் நிலையில்லாதனவா யிருக்க அவற்றை நிலையுடைய வின்பமென்று கூறுதல் எவ்வாறு பொருத்துமெனின், நீண்டகாலிருந்து மரணமடையுந் தேவர்களை அமரர்கள் (மரணமில்லாதவர்கள்) என்றும், பிறப்புடைய பிரமனை அஜன் (பிறப்பில்லாதவன்) என்றும் கூறுவதுபோல உபசாரமாக அவ்வின்பங்கள் நிலையுடையனவென்று கூறப்பட்டனவே யன்றிப் பிறிதன்றென்க.

§ மற்றென்னு மிடைச்சொல் சிற்றின்பமென்று குறிக்கப்பட்டதை யொழித்து அதற்கு (அச்சிற்றின்பத்திற்கு) இனமாகிய பேரின்பத்தைக் குறித்து நின்றமைபற்றி 'மற்றை யின்பமென்பது மற்றின்பமெனநின்றது' என்றுகூறப்பட்டது. படவே, மற்றையென்னு மிடைச்சொல் குறிக்கப்பட்

தெளி.—(இ - ன்). மற்றின்பம் - (அறத்தின்பயனாக வரும்) நிலையுடையவின்பத்தை, வேண்டுபவர் - விரும்புவோர், சிற்றின்பம் - (பிறரிடத்து அபகரித்த பொருளினால்தாம் அடையும்) நிலையில்லாதவின்பத்தை, வெஃகி - விரும்பி, அறனல்ல - அறமல்லாத செயல்களை, செய்யார்-(அவரிடத்து) செய்யார், (எ - று).

பாடத்தின்பயனாகவருதலால் அப்பொழுதேஅழியுமென்பார் 'சிற்றின்பம்' என்றார். மற்றையின்பமென்பது மற்றின்பமெனக் குறைத்து நின்றது.

(க - து). பேரின்பத்தை யிச்சிப்பவர் சிற்றின்பத்தை யிச்சித்துத் தருமமல்லாதவற்றைச் செய்பார் என்பது.

3. Those who desire the higher pleasures of heaven will not act unjustly through desire of the trifling joy of this life.

அ. இலமென்று வேஎ்குதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

பரி.—(ஐ - ள்). யாம் பரிய மென்று கருதி அது தீர்த்தற் பொருட்டு பிறர் பொருளை விரும்புதல் செயயார், ஐம்புலன்களையும் வென்ற தூய்மையில்லாத காட்சியினையுடையார், (எ - று)

டனதையொழித்து அதற்கினாயதைக்குறித்து ற்ற மென்ருயிற் றொன்றொல்காப்பியர் இடையியல்மற்றை தென்னுங் கிளவி தானே சுட்டாகிலொழிய வினயுகுறித் தன்றே" என்றதனுற் சூத்திரத்தின் விசேடவுரையில் "சேனுவரையர்" "ஆடை கொணர்ந்தவழி யல்வாடை வேண்டாதான் மற்றையது கொணு வென்றும் அதை அச்சுட்டிய ஆடை யொழித்து அதற்கினமாகிய பிறவாடை குறித்து நின்றவாறு கண்டுகொள்க" என்று கூறியதனாலும் இது கொண்டு யினங்குமென்க. (இங்குச் சிற்றின்பம் பேரின்பம் என்று கூறப்பட்டனவற்றின்கணுள்ள சிறமை பெருமை என்னும் விசேஷணங்கள் (அடைகள்) முறையே நிலையில்லாமையையும் நிலையுடைமையையும் முணர்த்தி நின்றன). இதனுல் மற்ற என்னு மிடைச்சொல்லும் மற்றை என்னு மிடைச்சொல்லும் வெவ்வேறென்பது பெற்றாம். கன்னூல் விருத்தியுரைகாரர் "மன் - மண்ணே, கொன் - கொன்னே யென நின்றும் போல மற்று மற்றையென இறுதிவிகாரமாய் நின்றதன்றி இதற்கென வேறுபொருளின்மையானும்" என்று கூறுவர்; இராமாநுஜ கவிராயர் தமது கன்னூல் விருத்தியுரையில் இதனை மறுத்திருக்கின்றனர்.

ஐம்புலன்கள் - செவிமுதலிய வைந்திந்திரியங்கள். புலன்கள் இந்திரியங்களை யுணர்த்துதல் "ஆதலாற் புலன்க ளோத்து மடக்கரிது" என்றும் "வென்றாரே புலன்க ளோத்தார்" என்றும், "கம்பித்த வந்த புலனோர்த்துக் கலக்க மாற" என்றும் வரும் பிரயோகங்களாலு முணரப்படுமென்க.

வெல்லுதல் ‡‡ பாவநெறிக்கட் செல்ல விடாமை. புலம்வென்றபுன்மையில் காட்சியவர்க்கு வறுமையின்மையின், வெஃகுதலும்இல்லையாயிற்று. புன்மையில் காட்சி - பொருள்களைத் § திரிபின்றி யுணர்தல்.

தேளி.—(இ - ள்) புலம்வென்ற - ஐம்புலன்களையும் வென்ற, புன்மையில் - குற்றமில்லாத, காட்சியவர் - அறிவினையுடையவர், இலமென்னும் - (யாம்) வறியேமென்று (கினைத்து), வெஃகுதல்செய்யார் - (அவ்வறுமை நீங்குதற் பொருட்டுப் பிறர்பொருளை) விரும்புதல் செய்யார்,—(எ - று).

ஐம்புலன்களையும் வெல்லுதல்—அவற்றைப் பாவவழியிற் செல்ல விடாமை. புலம்வென்ற புன்மையில் காட்சியவர்க்குத் தரித்திரமில்லாமையால், அவர் பிறர்பொருளை விரும்புதலும் இல்லையாயிற்று. புன்மையில் காட்சி - நித்திய வஸ்துவியப் பொருள்களை (இது நித்தியப்பொருள் இஃதநித்தியப் பொருளென) பிறழ்வில்லா தறிதல்.

(க - து). ஐம்புலன்களையும் வென்ற அறிவுடையவர் யாம் வறியேமென் றெண்ணிப் பிறர் பொருளை விரும்பார் என்பது.

4. The wise who have conquered their senses and are free from crime will not covet the things of others, saying "we are destitute."

அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

பரி.—(இ - ள்). நுண்ணிதாய் எல்லா நூல்களினுஞ் சென்ற தம்மறிவு என்ன பயத்ததாம், பொருளை விரும்பி யாவர் மாட்டும் அறிவோடு படாத செயல்களை அறிவுடையார் செய்வராயின், (எ - று).

யார்மாட்டும் * வெறிய செய்தலாவது தக்கார்மாட்டும் தகாதார்மாட்டும் இழிந்தனவும் கடியனவும் † முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமையாகலின் ' அறிவென்னும்' என்றார்.

தேளி.—(இ - ள்). அஃகி - நுட்பமானதாகி, அகன்ற - (எல்லாநூல்களிலும்) சென்ற, அறிவு-(தம்)அறிவானது, என்னும்-என்னபயனையுடையதாம், வெஃகி - (பொருளை) விரும்பி, யார்மாட்டும் - யாவரிடத்தும், வெறிய - அறிவோடு பொருந்தாத செயல்களை, செயின் - (அறிவுடையார்) செய்வாராயின், (எ - று).

‡‡ பாவநெறிக்கட் செல்லவிடாமை - அறமார்க்கத்திற்கு விரோதமாகச் சப்தாதி விஷயங்களில் செவியாதி யிந்திரியங்களைச் செலுத்தாமை.

§ திரிபின்றி யுணர்தல் - மாறுபாடின்றி யுள்ளவாறே யறிதல்.

* வெறிய - மயக்கத்தோடு கூடிய செயல்கள்.

† முதலியன என்றமையின், அரசதண்டனைக் குரிய செயல்கள் முதலியனவுங் கொள்க.

யாவரிடத்தும் அறிவோடு பொருந்தாத செயல்களைச் செய்தலாவது மேன்மக்களிடத்தும் கீழ்மக்களிடத்தும், இழிந்த செயல்களும் கொடிய செயல்களும் முதலாயினவற்றைச் செய்தல். அறிவித்தற்குப்பயன் அவ்விழிக்க செயல்கள் முதலாயின வற்றைச்செய்யாமையாதலின் 'அறிவென்னும்' என்றார்.

(க - து). நுண்ணிய கல்வி யறிவுடையவர் யாவரிடத்தும் பொருளே விரும்பி மயக்கத்தால் கொடுந் தொழில்களைச் செய்வாராயின் அவர் கல்வியறிவு பயனுடையதன்றும் என்பது.

5. What is the advantage of extensive and accurate knowledge if a man through covetousness act senselessly towards all.

---

5. அருள்வேஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வேஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

பரி.—(இ - ள்). ‡ அருளாகிய அறத்தைவிரும்பி அதற்கு வழியாகிய இல்லறத்தின்கண் நிற்பவன் பிறர்பொருளை அவாவி அதனை வருவிக்குங் குற்றநெறிகளை எண்ணக்கெடும், (எ - று).

இல்லறநெறியால் அறிவு முழுதும் தெளியல்லது துறக்கப்படாமையின், அதனைத் + துறவறத்திற்கு ஆறு என்றார். கெடுதல் § இரண்டற முஞ் சேரவிழித்தல். சூழ்ந்த தினையாயினு கெடுமென்றவே, செய்தாற் கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது.

தெளி.—(இ - ம்). அருள் வெஃகி - அருளாகிய அறத்தைவிரும்பி, ஆற்றின்கண்-(அவ்வறத்திற்கு) வழியாகிய இல்லறத்தின்கண், நின்றான்-நிற்பவன், பொருள்வெஃகி - (பிறர்) பொருளை விரும்பி, பொல்லாத - (அப்பொருளை வருவிக்கும்) குற்றவழிகளை, சூழ - எண்ண, கெடும் - கெடுவான், (எ - று).

‡ இல்லறத்திற்கு அன்புடைமை சிறந்திருத்தல் போன்று துறவறத்திற்கு அருளுடைமை சிறந்திருத்தல்பற்றித் துறவறத்தை 'அருளாகிய அறத்தை' என்று கூறினார்.

+ துறவறத்தை யடைதற்கு இல்லறம் வழியாயுள்ள தென்பது ஞானசங்கிதை பிரமாதக்கிரம முகூர்த்த வத்தியாயத்தில் "மித்தியகை மித்தியகண் மங்களணிட்கா மியமாகப், பத்தியுறச் செய்வதனும் பாவமெலா நாச முற, மொத்தியன்மத் ததனாலே யொழியாம லுறுகித்த,சுத்தியுள தாமென்று சொல்லுமான் மறையுணர்த்தும்." "பின்னருருத் திபதேவன் பிறங்குபிர சாதத்தா, லுன்னரிய சமுசாரத் துள்ளதோ டுந்தெரிந்து, மன்னவயி ராக்கியமு மருலியுமு கருமங்க, டன்னமும மிலாதாய சன்னியா சங்கிடைக்கும்." என்றுகூறி யிருப்பதனாலும் நன்கு விளங்கும்.

§ இரண்டறமும் - இல்லறமும் துறவறமும்

இல்லறவழியால் அறிவு முதிர்ந்த விடத்தல்லது துறத்தல் கூடாதா யையால், அவ்வில்லறத்தினைத் துறவறத்திற்கு ஆறு என்றார். கெடுதல் - இரண்டறங்களையும் ஒருமிக்க விழத்தல். பொல்லாதவற்றை எண்ணியவள வாலே கெடுமெனவே, செய்தாற் கெடுதல் சொல்லாமலே பெறப்பட்டது.

(க - து). அருளே விரும்பி இல்லறத்தில் நின்றவன் பிறர் பொருளே விரும்பிக் குற்றவழியை நினைக்கக் கெடுவான் என்பது

6. He who through desire of the favour of God abides in the path in which it may be obtained, if he covet the property of others and think of evil methods to obtain it he will perish.

எ. வேண்டற்க வெஃகியா மாக்கம் வினாவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

பரி.—(இ - ள்). பிறர்பொருளை அவாவிக்கொண்டு அதனை லாகின் றஆக்கத்தை விரும்பாதொழிக, பின் அனுபவிக்குங்கால் அவ்வாக்கத் தின் பயன் நன்றாகலில்லை யாகலான், (எ - று).

* வினாவென்பது முதனிலைத் தொழிற் பெயர். இவை யேழுபாட் டானும் வெஃகுதலின் குற்றங் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). வெஃகி - (பிறர்பொருளை) விரும்பிக் கொண்டு, ஆம் - (அப்பொருளால்) உண்டாகின்ற, ஆக்கம் - பெருக்கத்தை, வேண் டற்க - வேண்டாதிருக்கக்கடவன், வினாவயின் - (பின்) அனுபவிக்கும் போது,பயன் - (அப்பெருக்கத்தின்) பயன், மாண்டற்கரிதாம் - நன்றாகுத லில்லை (ஆதலால்)—(எ - று).

வினா - முதனிலைத்தொழிற்பெயர். பெருக்கம் - மேன்மேலுயருதல். இவ்வேழு பாட்டாலும் பிறர்பொருளை விரும்புதலின் குற்றஞ் சொல்லப் பட்டது.

(க - து). பிறர்பொருளை யபகரித் தனுபவிக்கின்றவர்கட்கு நீடுவாழ்வுண்டாவ தில்லை என்பது.

வினைப்பகுதியை முதனிலைத்தொழிற்பெயராகக்கொள்ளும் மரபுபற்றி 'வினையென்பது முதனிலை (பகுதி)த் தொழிற் பெயர்' என்று கூறப்பட்ட தெ, வினைப்பகுதியை முதனிலைத் தொழிற்பெயரென்று கொள்ளுதல் பிர யோகவிவேகம் "முன்னிலையேவல்" என்னுஞ் செய்யுளியலுரையில் "கட வாமழி, என்ற நன்னூலிற்கூறிய முதனிலைத் தொழிற் பெயர்கள் தாது வெனவும் பிரகிருதி எனவும் பெயர்பெறும்" என்று கூறியவாற்றானுமறிக. இலக்கணக் கொத்து தூலார் வினைப்பகுதியை முதனிலைத்தனிவினைப் பெயரென்பர். வினைப்பெயரெனினும் தொழிற் பெயரெனினு மொக்கும். வினாவயின் என்பது எதிர்கால வினைத்தொகையிலைத் தொடர்மொழி.

7. Desire not the gain of covetousness. In the enjoyment of its fruits there is no glory.

அ. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

பரி.—(இ-ள்). சுருங்கன் மாலுத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக் காரணம் யாதென்று ஒருவன் ஆராயின், அது பிறன்வேண்டுங் கைப்பொருளைத் தான்வேண்டாமையாம், (எ-று).

‡ அஃகாமை-ஆகுபெயர். $ வெஃகாதான் செல்வம் அஃகாதென்பதாயிற்று.

தெளி.— (இ-ள்). செல்வத்திற்கு - (குறைத்துபோக்தன்மையுடையதாகிய) செல்வத்திற்கு, அஃகாமை - குறைபாதிருத்தற் காரணம், யாதெனின் - எதுவென்று (ஒருவன்) ஆராயின் (அக்காரணம்), பிறன் —, வேண்டும் - விரும்புகின்ற, கைப்பொருள் - கைப்பொருளை, வெஃகாமை-(தான்) வேண்டாமையாம், (எ-று).

அஃகாமை அஃகாமையின் காரணத்தை யுணர்த்துதலால் ஆகுபெயர். பிறன் பொருளை விரும்பாதவனது செல்வம் குறைபாதென்பதாயிற்று.

(க - து). செல்வங் குறைபாமைக்குங் காரணம் பிறன்பொருளை விரும்பா திருத்தலாம் என்பது.

8. Do you ask "what is the indestructibility of wealth?" It is to be free from coveting the possessions of others.

கூ அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு.

பரி.—(இ-ள்). இது அறனென்றறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமகள் தான் அடைதற்காங் கூற்றினை அறிந்து அக் கூற்றுனே சென்றடையும், (எ-று).

அடைதற்காங்கூறு - காலமும், இடனும், ‖ செவ்வி முதலாயின. இவையிரண்டு பாட்டானும் வெஃகாமையின் குணங் கூறப்பட்டது.

தெளி —(இ-ள்). அறனறிந்து - (இஃது) அறமென்றறிந்து, வெஃகா (பிறர் பொருளை) விரும்பாத, அறிவுடையார் - அறிவுடையவரை,

‡ அஃகாமையென்னு மெதிர்மறைத் தொழிற்பெயர் அஃகாமை (சுருங்காமை)க்குக் காரணத்தை யுணர்த்துதலால் காரியவாகு பெயராம்.

$ வெஃகாதான் - வினையாலணையும்பெயர்.

‖ செவ்வி - அக (மன) மகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் இனிய சொல்லு முடையவரா யிருக்குஞ் சமயம்.

திரு - திருமகள், திறனறிந்து - (தான்சேர்தற்காந்) திறத்தை யறிந்து, ஆங்கே - அத்திறத்தினுலே, சேரும்-சென்றடைவாள், (எ-து).

அடைதற்காந்திறம் - காலமும், இடனும், சமயமும் முதலாயின. திருமகளென்றதீண்டுப் பெருஞ்செல்வத்தை. இவையிரண்டு பாட்டாலும் பிறன் பொருளை விரும்பாமையின் குணஞ் சொல்லப்பட்டது.

(க-து). பிறன்பொருளை விருபபாத அறிவுடையாரை இலக்குமி தானே சென்றடைவாள் என்பது.

9. Lakshmi knowing the manner in which she may approach will immediately come to those wise men who knowing that it is virtue,covet not the property of others.

க०. இறலீனு மெண்ணுது வேஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

பரி.—(இ-ள்). பின் விளைவதறியாது ஒருவன்பிறன்பொருளை வௌவக்கருதினை, அக்கருத்து அவனுக்கு இறுதியைப்பயக்கும்: அப்பொருளை வேண்டாமையென்னுஞ் செல்வம் வெற்றியைப் பயக்கும், (எ - று).

பகையும் பாவமும் பெருக்கலின் 'இறலீனும்' என்றும்,அப்பொருளை வேண்டி யுழல்வோர் யாவரையுங் கீழ்ப்படித்தலின் 'விறலீனும்' என்றுங் கூறினர். * செருக்கு - ஆகுபெயர். இதனுல் ‡ அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

தெளி.—(இ-ள்). (ஒருவன்) எண்ணுது - (பின்விளைவதை) அறியாமல், வெஃகின் - (பிறன்பொருளை) அபகரிக்கக் கருதுவானுயின், (அக்கருத்து), இறல் - அழிவை, ஈனும் - (அவனுக்குத்)தரும், வேண்டாமை யென்னுஞ்செருக்கு - (அப்பொருளை) விரும்பாமையென்னுஞ் செல்வமானது, விறல் - வெற்றியை, ஈனும் - தரும், (எ-று).

(பிறன் பொருளைவிரும்புதல்) பகையையும் பாவத்தையும் பெருகச் செய்தலால் 'இறலீனும்' என்றும், (வேண்டாமை யென்னுஞ்செருக்கு) அப்பொருளை விரும்பி யலேவோர்கள் யாவரையுங் கீழாகச் செய்தலால் 'விறலீனும்' என்றுஞ்சொல்லினர். செருக்கு - செருக்கின் காரணமாய செல்வத்தை யுணர்த்துதலால் ஆகுபெயர். இதனுல் அக் குற்றமும் குணமுஞ்சேர்த்துச் சொல்லப்பட்டன.


(க-து). பிறன்பொருளை விரும்புகின்றவனுக் கழிவும் விரும்பாதவனுக்கு வெற்றியு முண்டாம் என்பது.

---

* *செருக்கென்னுங் காரியப் பெயர் செருக்கை (கர்வத்தை) யுண்டாக்குவதற்குக் காரணமாய செல்வத்தையுணர்த்துதலால் காரியவாகு பெயராம்.*

‡ *அவ்விருமையும் ஒருங்குகூறப்பட்டன—வெஃகுதலின் குற்றமும் வெஃகாமையின் குணமும் ஒருமிக்கச் சொல்லப்பட்டன.*

10. Without regard of consequences to covet the wealth of another will bring destruction. That greatness of mind which covets not will give victory.



பதினேந்தாவது அதிகாரம்.

புறங்கூறுமை.—*Against Backbiting.*

பரி.—அஃதாவது காணுதவிடப் பிறரை யிகழ்ந்துரையாமை. மொழிக்குற்றம் மனக்குற்றம் அடியாகவருதலான், இஃது அழுக்காறுமை வெஃகாமைகளின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது காணுதவிடத்துப் பிறரை இகழ்ந்துபேசாமை யாம். வாக்கின்குற்றம் மனக்குற்றத்தின் வழியாகவருதலால் இஃது (புறங்கூறுமை) அழுக்காறுமை வெஃகாமைகளின்பின் வைக்கப்பட்டது.

க. அறங்கூறு னல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற லினிது.

பரி.—ஒருவன் அறனென்று சொல்லுவதுஞ் செய்யாது பாவங்களைச் செயயுமாயினும், பிறனைப் புறங்கூறனென் றுலகத்தாராற் சொல்லப்படுதல் நன்று, (எ-று).

புறங்கூறுமை S அக்குற்றங்களான் இழிக்கப்படாது ¶ மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இதனுல் அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). ஒருவன்—அறங்கூறன் - அறமென்று சொல்லுவதுஞ் செய்யாது, அல்ல-பாவங்களே, செயினும் - செய்வானாலும், புறங்கூறன் - (பிறனைக்) காணுவிடத்து இகழ்ந்துபேசான், என்றல் - என்று (உலகத்தாரால்) சொல்லப்படுதல், இனிது - நல்லது, (எ-று).

புறங்கூறுமை அக்குற்றங்களா லிழித்துக் கூறப்படாமல் மேற்பட்டு விளங்குமென்பதாம். இதனுல் (புறங்கூறுமையென்னும்) அவ்வறத்தினது நன்மை சொல்லப்பட்டது.

(கூ-து). ஒருவன் தருமமல்லாதவற்றைச் செய்தாலும் புறங்கூறுதல் இலனாயின் அதனாலவன் மேம்பட்டு விளங்குவான் என்பது.

S அக்குற்றங்கள் - அற (தரும) மென்பதை (வாயினுற்) சொல்லுவது மின்றிச்செய்த தீவினைகளாலுண்டாகிய குற்றங்கள்.

¶ புறங்கூறுதவன் உலகத்தவரால் பிறகுற்றங்களா லிழித்துக்கூறப் படாது மேம்பட்டுவிளங்குவானென்பதாம்.

1. Though one do not even speak of virtue and live in sin, it will be well if it be said of him "he does not backbite."

உ. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

பரி.—(இ-ள்). அறனெனினபதொன்றில்லையெனஅழித்துச்சொல்லி அதன்மேற் பாவங்களைச் செய்தலினும் தீமையுடைத்து; ஒருவனைக்காணுதவழி இகழ்ந்துரையால் அழித்துச்சொல்லிக் கண்டவழி அவனெதி† பொய்த்து நகுதலும், (எ-று).

‡ உறழ்ச்சி நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல் $ ஒளியைக் கோறல்.

தேளி.—(இ-ள்). அறனழீஇ-அறமென்பது ஒன்றில்லையென் றழித்துச்சொல்லி, அல்லவை செய்தலின் - (அதன்மேற்) பாவங்களைச் செய்தலினும், தீதே - தீமையுடையதாம், புறனழீஇ - ஒருவனைக்காணுதவிடத்துப் பழிச்சொற்களால் குறைவாகப்பேசி, பொய்த்துநகை - (கண்டவிடத்து அவனெதி) பொய்யாகமுகமலர்ந்து பேசுதல், (எ-று).

அறத்தை யழித்தலினும் புறங்கூறுதலும், அல்லவற்றைச் செய்தலினும் பொய்த்து நகுதலும் தீயனவாமென் றறிக. புறனழித்தல்-புறங்கூறி ஒளியைக் கெடுத்தல்.

(உ-து). ஒருவன் பிறனைக்காணுதவிடத்திகழ்ந்துபேசிக் கண்டவிடத்திப் புகழ்ந்து பேசுதல் தருமத்தையழித்து அதருமத்தைச் செய்தலினுந் தீயதாம் என்பது.

2. Deceitfully to smile in another's presence after having reviled him to his destruction behind his back is a greater evil than the commission of every other sin and the destruction of every virtue.

† பொய்த்துநகுதல் - பொய்யாக முகைத்து வெளியன்பு பாராட்டுதல்.

‡ அறனென்ப தொன்றில்லை யென்றழித்துச் சொல்லுதலினும் ஒருவனைக் காணுதவழி யிகழ்ந்துரையால் அழித்துச் சொல்லல் தீது எனவும் அதன்மேற் பாவங்களைச்செய்தலினும் கண்டவழி யவனெதி பொய்த்துநகுதல் தீதுஎனவும் கொள்க. செய்தலின் என்பதன்கணுள்ள இன்னுருபு காட்டிலும் என்னும் உறழ்ச்சிப்பொருளில் வந்தது. அறனழித்தலினும் புறனழித்தல் தீது அல்லவை செய்தலினும் பொய்த்துநகுதல் தீது என்று வந்தமையின் இச்செய்யுள் முறைநிரனிறைப் பொருள்கோள்.

$ ஒளியைக்கோறல் - மிக்குத்தோன்றும் மதிப்பைக் கெடுத்தல். ஒளியென்பதற்குப் பொருள் "ஒளியொருவற் குள்ள வெறுக்கை" என்னுங் குறளின் வீசேடவுரையில் "ஒளி தானுளனுயகாலத்து மிக்குத்தோன்றுத லடைமை" என்றெழுதப்பட்டிருக்கின்றமை காண்க.

கூ. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

பரி.—(இ-ள்). பிறனைக் காணுதவழி இகழ்ந்துரைத்துக் கண்டவழி அவற்கினியனைப் போய்த்து ஒருவன் உயிர்வாழ்தலின், அதுசெய்யாது சாதல் அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும், (எ-று).

†† பின் புறங்கூறிப் பொய்த்தலொழிதலின், 'சாதல்' 'ஆக்கந்தரும்' என்றார். ஆக்கம் ¶ அஃதொழிந்தார் மறுமைக்கண் எய்தும் பயன். 0 அறம் - ஆகுபெயர். () தருமென்பது இடவழுவமைதி.

தெளி.—(இ-ள்). புறங்கூறி - பிறனைக்காணுத விடத்து இகழ்ந்து பேசி, பொய்த்து - (கண்டவிடத்து அவனுக்கினியவனைப்) பொய்யாகச் பேசி, உயிர்வாழ்தலின் - (ஒருவன்) உயிர் வாழ்தலினும், சாதல் - (அது செய்யாமல்) உயிர்விடுதல், (அவனுக்கு), அறங்கூறும்-தரும சாஸ்திரங்கள் சொல்லும், ஆக்கம்-பயனை, தரும்-கொடுக்கும், (எ-று).

உயிர்விட்டபின் புறங்கூறிப் பொய்த்தலாகிய பாவம் நீங்கலால், 'சாதல்' 'ஆக்கந்தரும்' என்றார். ஆக்கம்-புறங் கூறுதலாகிய அப்பாவஞ் செய்யாதொழிந்தவர் மறுமையில் அடையும் பயன். அறம்- அறத்தைக்கூறும் நூலெயுணர்த்துதலால் ஆகுபெயர். தருமென்பது படர்க்கையோடியைந்து வந்தமையி னிடவழுவமைதிபாம்.

(க-து). ஒருவன் பிறனைக் காணுதவிடத்திலிகழ்ந்தும் கண்ட விடத்திற் புகழ்ந்தும் பேசி யுயிர் வாழ்தலினும் இறத்தலே அவனுக்கு நன்மையைத்தருவதாம் என்பது.

3. Death rather than life will confer upon the deceitful backbiter the profit which the treatises on virtue point out.



கூ. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

†† பின் புறங்கூறிப் பொய்த்த லொழிதலின்-மரணமடைந்த பின்னர்ப் புறங்கூறிக் கபடமா யொழுகுதல் நீங்குதலால்.

¶ அஃதொழிந்தார் - புறங்கூறுதலே விட்டவர்.

0 அறமென்னும் காரியப்பெயர் அதனே யுணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்காதலின் காரியவாகுபெயராம்.

() தன்மை முன்னிலே யிடத்திற்குரிய தருமென்னுஞ் சொல் சாதல் என்னும் படர்க்கைச்சொல்லோ டியைந்திவர்தமையின் இடவழுவமைதி யாயிற்று.

பரி.—(இ - ள்). ஒருவன் எதிரே நின்று கண்ணோட்டமறச் சொன்னாயினும், அவனெதிர் இன்றிப் பின்வருங் குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லாதொழிக, (எ-று).

* பின் - ஆகுபெயர். † சொல்வான் தொழில் சொன்மே லேற்றப் பட்டது. இவை மூன்றுபாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப் பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவன்) கண்நின்று - எதிரே நின்று, கண்ணறு-கண்ணோட்டமற, சொல்லினும் - சொன்னாயினும், முன் இன்று - (அவன்) எதிரில்லாமல், பின்னோக்காச் சொல் - பின்வருங் குற்றத்தை நோக்காத சொல்லை, சொல்லற்க - சொல்லாதிருக்கக் கடவன், (எ-று).

பின் என்பது பின்வருங் குற்றத்தை யுணர்த்துதலால் ஆகுபெயர். சொல்வானது நோக்காத தொழிலைச் சொல்லின்மேலேற்றி 'நோக்காச் சொல்' என்று கூறப்பட்டது. கண்ணோட்டம்-தாட்சணியம். நோக்காமை சிந்தித்துணராமை. இவை மூன்றுபாட்டாலும் புறங்கூறுதலின்கொடுமை சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் மற்றொருவனை முன்னிகழினும் பின்னிகழாதிருக்கக்கடவன் என்பது.

4. Though you speak without kindness before another's face, speak not behind his back words which regard not the subsequent guilt.

கி. † அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

பரி:—(இ-ள்). புறஞ்சொல்லுவானெருவன் அறனை நன்றென்று சொல்லினும், அது தன் மனத்தானையிச் சொல்லுகின்றனல்ல னென்

---

* பின் என்னும் காலப்பெயர் பிற்காலத்தில் வரும் குற்றத்தை யுணர்த்துதலால் காலவாகு பெயராம்.

† பின்வருங் குற்றத்தை நோக்காது புறங்கூறுவானது நோக்காத தொழிலை அவனது புறங்கூற்றுச் சொல்லின்மே லேற்றி 'பின்னோக்காச் சொல்' என்றார். [பின்வருங் குற்றத்தை நோக்காதவனது சொல் பின்னோக்காச்சொல் என்றுரைக்கப்பட்ட தென்பது]. முன்னின்று பின்னோக்காச்சொல் என்பதனைப் பிரயோகவிவேகனூலார் "ஒன்றொரு பொருளின் வினை மற்றோர் பொருளின் வினையானது" என்று இலக்கணை கூறுமிடத்துக் கூறினர்.

† அறஞ்சொல்லு நெஞ்சத்தான் என்பதைப் பிரயோக விவேக நூலார் நெஞ்சோடறஞ் சொல்லுவானென விகுதி பிரித்துக் கூட்டுவர்.

பது அவன் புறஞ் சொல்லுதற்குக் காரணமான ‡ மனப்புன்மையானே அறியப்படும், (எ-று).

¶ மனந்தீதாகலின், அச்சொல் கொள்ளப்படா தென்பதாம்.

தெளி:—(இ - ள்). (புறங்கூறுவா னொருவன் அறத்தை யல்ல தென்று சொன்னாலும்) அறம் - (அந்த) அறத்தை, நெஞ்சத்தான் - (தன்) மனத்தின் வழியனாய்,சொல்லும்-கூறுகிறான்,அன்மை(யன்)-அல்லனென் பது, புதஞ்சொல்லும் - (அவன்) புறங்கூறுதற்குக் காரணமாகிய, புன்மை யால் - (மனப்) புன்மையாலே, காணப்படும் - (அறிவுடையோரால்) அறி யப்படும், (எ - று).

மனம் தீதாயிருக்கையால், (அறம் நன்றென்று சொல்லுதி) அச் சொல் அங்கீகரிக்கப்படா தென்பதாம்.

(க - து). தருமத்தை நன்றென்று கூறுபவனது மனத்தி னிடத்துத் தருமமில்லாமை அவன் புறங்கூறுதலா லறியப்படும்.

5. The emptiness of that man's mind who merely praises virtue will be seen from the meanness of reviling another behind his back.

கூ. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
தி்றன்றெரிந்து கூறப் படும்.

பரி.—(இ-ள்). பிறனொருவன் பழியை அவன்புறத்துக் கூறுமவன் தன்பழி பலவற்றுள்ளும் உளையுந்திற முடையவற்றைத் தெரிந்து அவனும் கூறப்படும், (எ-று).

§ புறத்தென்பது அதிகாரத்தாற் பெற்றாம். இது வருகின்றவற்றி ற்கு மொக்கும். () திறன் - ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்

‡ மனப்புன்மை- மனக்குற்றம்.

¶ புறங்கூறுவான் அற (தரும)ம் கூறினாலும் அவன்மனம் புன்மை யையுடையதாயிருத்தலின், அவன் கூறுஞ் சொல்லே அறிவுடையவர் ஏற்றுக் கொள்ளுதலில்லை யென்பது.

§ புறத்த என்பது புறங்கூறுமை யென்னு மதிகாரத்தால் வருவிக் கப்பட்டது. அதிகாரத்தால் வருவித்து முடிப்பதனை வடநூலார் அநு வந்த மென்பர்.

() திறன் என்னும் பண்புப்பெயர் திறத்தை(வலியை)யுடைய பழிச் சொற்களை யுணர்த்துதலால் பண்பாகு பெயராம்.

டான் அக்கூறியாற்கு அவ்வளவன்றி ¶ அவனிறந்தபட் டேனுங் கிற த்தனவாகிய பழிகளே நாடி எதிரே கூறுமாகலின் ' கிறன்றெரிந்து கூறப் படும்' என்றார்.

தேளி:—(இ - ன்). பிறன்பழி - பிற (ஞெருவ) னது பழியை, கூறு வான் - (அவனைக்காணுதலிடத்துச்) சொல்லுவோன், தன்பழியுள்ளும் - தனது பழி (பல) வற்றுள்ளும், கிறன் - (வருந்தும்) விதமுடையவற்றை, தெரிந்து - ஆராய்ந்து, கூறப்படும் - (அவனுல்) சொல்லப்படுவான்,(எ-று).

காணுதலிடத்தென்பது அதிகாரத்தாற் பெறப்பட்டது. இது பின் வருகின்றனவற்றிற்கும் பொருந்தும். கிறன்-கிறமுடையவற்றையுணர்த்து தலால் ஆகுபெயர். தன்னைக் காணுதலிடத்துப் பிறன்பழித்துச் சொன்ன விதத்தைக்கேட்டவன் அப்பழியைச் சொன்னவனுக்கு(அவன் கூறிய)அவ் வளவல்லாமல் அவன் மிகவுந்தக்கமடைந்து வருந்தும் வகையனவாகிய பழிகளே ஆராய்ந்து எதிரே சொல்லுவானுதலால் ' கிறன்றெரிந்து கூறப் படும்' என்றார்.

(க - து). பிறனது பழியைக்காணுதலிடத்துச்சொல்லுவோ னது பழி சொல்லப் பட்டவனுல் சொன்னவன் வருந்துமாறு எதிரே நின்று விரித்துச்சொல்லப்படும் என்பது.

6. The character of the faults of that man who publishes abroad the faults of others will be sought out and published.

எ. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்ற தவர்.

பரி.—(இ - ள்). தம்மை விட்டு நீங்குமாற்றுற் புகழ்கூறித் தங்கே ளிரையும் பிரியப்பண்ணுவர்; கூடி மகிழுமாறு இனியசொற்களைச் சொல்லி அயலாரோடு நட்பாடலே யறியாதார், (எ - று).

நிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. கேளிரையும் பிரிப்ப † தென்ற கருத்தான், அயலாரோடு மென்பது வருவித்துரைக்கப்பட்டது. அறிதல் ‡ தமக்குறுதியென் றறிதல். § "கடியு மிடங்தேற்றுள் சோர்ந்த

¶ அவனிறந்தபட்டேனுங்கிறத்தனவாகிய பழிகளே என்பதற்கு,அவன் மிகுதியு மடைந்து வருந்தும் வகையனவான பழிச்சொற்களே என்று கொள்க. அவனிறந்தபட் டென்பதற்குப்பிரதியாக அவன் றிறத்துப்பட்டு எனவும் அவனிறத்துப்(மார்பில்)பட்டு எனவும் பாடபேத முண்டு.

† என்றகருத்தான் என்பதற்கு! என்னுங்கருத்தான் என்றும் பாட முண்டு.

‡ தமக்குறுதியென் றறிதல் - தமக்கு நன்மையைத் தருவதென் றுணர்தல்.

§ கலித்தொகை மருதக்கலி, உ.ஏ. இதன்பொருள் (ஒருத்தி வண்டு களே) ஓட்டுமிட மறியாதவளாகிக் கைசோர்ந்தாள் என்பது,

னல்லை" என்புழிப்போலத் ¶ தேற்றுமை தன்வினையாய் நின்றது. புறங் கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து.

தேளி:—(இ - ன்). கசச்சொல்லி - (கூடி) மகிழும்படி (இனியசொற் களைச்) சொல்லி, கட்பாடல் - (அயலாரோடு) சிநேகஞ்செய்தலை, தேற்ற தவர் - (தமக்குறுதியென்னு) அறியாதவர், பகச்சொல்லி - (தம்மை விட்டு) நீங்கும் வழியாகப் புறங்கூறி, கேளிர் - (தமது) சுற்றத்தாரையும், பிரிப்பர் - பிரியப்பண்ணுவர், (எ - று).

கேளிரும் என்ற உயர்வு சிறப்பும்மை செய்யுள்விகாரத்தால்தொக்கது. கேளிரையும் பிரிப்பரென்றகருத்தால் அயலாரோடுமென்பது வருவித்துச் சொல்லப்பட்டது. தேற்றுமையென்பது தன்வினைப்பொருளில் வந்தது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து.

(க-து). பிறர்தம்மோடுகூடிமகிழும்படி யின்சொற்களைச்சொல்லியவரோடு சிநேகஞ்செய்தலை யறியாதவர்கள் புறங்கூறியுறவினரையும் பிரிப்பர் என்பது.

7. Those who know not with laughter-producing speech to live in friendship will estrange even their relatvies, by backbiting.

அ. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினு
ரென்னைகொ லேதிலார்மாட்டு.

பரி:—(இ - ன்). தம்மோடு செறிந்தாரது குற்றத்தையும் அவர் புறத்துத் தூற்றும் இயல்பினையுடையார், அயலார்மாட்டுச் செய்வது யாது கொல்லோ, (எ - று).

தூற்றுதல் - பலரும் அறியப் பரப்புதல். அதனிற் கொடியது பிறி தொன்று காணுமையின் 'என்னைகொல்' என்றார். செய்வதென்பது சொல்லெச்சம். என்னர் கொலென்று பாடமோதி, எவ்வியல்பினராவரென் றுரைப்பாருமுளர்.

¶ தேற்றுதவர் என்பதன்கணுள்ள தன்வினை பிறவினை யிரண்டிற் கும்பொதுவான தேற்றுமை யென்னும் எதிர்மறை வினையாதது இங்கே தன்வினையாய்நின்றது. "தன்வினை பிறவினை யிவ்விரு வினைப்பொது" என் னுமடிக்கு உதாரணமாக இலக்கணக் கொத்துநூலார் "பிரிவர், ஆடுவர்; பிரிப்பர், ஆட்டுவர் இவை தன்வினை பிறவினை. 'தேற்றுவொழுக்க மொருவன் கணுண்டாயின்,' 'நட்பாடதேற்றுதவர்,' எ-ம், அவனைத்தேற்றிக் கெடுத் தான்; அவளைத்தேற்றிப் பிரிந்தான். எ-ம் இவை சொல்லொன்றே தன் வினையும் பிறவினையுமாயின. 'தொல்காப்பியனெனத் தன்பெயர்தோற்றி;' 'பொருண்முதலாறினுந்தோற்றி;' 'தொடர்ந்து தொழிலல காலந்தோற்று;' இவன் வெளுத்தான் இவை போல்வனவுமது" என்று கூறினர்.

தெளி:—(இ - ன்). தன்னியார் - (தம்மோடு) நெருங்கினவரது, குற்றமும் - குற்றத்தையும், தூற்றும் - (அவரைக்காணுதவிடத்தத்) தூற்றும், மரபினர் - இயல்பினை யுடையவர், எதிலார்மாட்டு - அயலாரிடத்துச் (செய்வது), என்னேகொல் - யாதோ, (எ - று).

தூற்றுதல் - பலரும் அறிய விரித்துச் சொல்லுதல். அத்தூற்றுதலினுங் கொடிய தீசயல் வேறெருன்று காணுமையால் 'என்னேகொல்' என்றார். செய்வதென்பது குறைந்துநின்றமையின் சொல்லெச்சமாம். என்னேகொல் என்பதற்குப் பிரதியாக என்னர்கொல்எனப்பாடங்கூறி அதற்குப்பொருள் எத்தன்மையினை யுடையவராவர் என்று கூறுவாருமுண்டு.

(க - து). உறவினரது குற்றத்தையுந் தூற்றுமியல்பினை யுடையார் அயலாரது குற்றத்தைத் தூற்றுதிரார் என்பது.

8. What will those not do to strangers whose nature leads them to publish abroad the faults of their intimate friends ?

கூ. அறனேக்கி யாற்றுங்கோல் வையம் புறனேக்கிப்
புன்சோ லுரைப்பான் பொறை.

பரி:—(இ - ள்). பிறர் நீங்கினவளவு பார்த்து அவர் பழிப்புரையை உரைப்பானது உடற்பாரத்தை, நிலம் † இக்கொடியது போலுத் தலே எனக்கறமாவதெனக் கருதிப் பொறுக்கின்றதுபோலும், (எ-று).

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற்கரிதென்னுங் கருத்தால் 'அறனேக்கியாற்றுங்கோல்' என்றார். இவையைந்து பாட்டானும் புறங்கூறுவார்க் கெய்துங் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). புறன்நோக்கி - பிறர்நீங்கினவளவு பார்த்து, புன்சொல் - (அவரது) பழிப்புச்சொல்லே, உரைப்பான் - சொல்லுவோனது, பொறை - (உடற்) பாரத்தை, வையம் - பூமியானது, அறன்நோக்கி- (இக்கொடியதைச் சுமத்தலே எனக்கு) அறமாவதென்றுநினைத்து, ஆற்றுங்கொல் - சுமக்கின்றது போலும், (எ - று).

(பூமிக்கு மலே, கடல், ஆறு முதலிய) எல்லாவற்றையும் சுமத்தல் சுபாவமாயினும் இது (புறங்கூறுவானது உடற்பாரம்) சுமத்தற்கருமையானதென்னுங் கருத்தால்(வையம்) 'அறனேக்கி யாற்றுங்கொல்' என்றார். இவை யைந்துபாட்டாலும் புறங்கூறுவாருக் குண்டாகுங் குற்றம் சொல்லப் பட்டது.

(க - து). பூமி புறங் கூறுவோனது உடற் பாரத்தைத் தருமத்திற் கஞ்சிச் சுமக்கின்றதுபோலும் என்பது.

9. The world through charity supports the weight of those who, observing that others are absent, speak reproachful words.

† மிகக் கொடியது என்றும் பாடமுண்டு.

கo. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

பரி:—(இ - ள்). ஏதிலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர்தற்றங் காணுமாறுபோலப் புறங்கூறலாகிய தங்குற்றத்தையுங் காணவல்லாயின், அவர் நீலேபேறுடைய வுயிர்க்கு வருவதொரு துன்பமுண்டோ.


கடுவுன்று ஒப்பக்காண்ட வருமைநோக்கில் 'காண்கிற்பின்' என்றும், கண்டவழி யொழிதலிற் பாவம் இன்றும்; ஆகவே, வரும் பிறவிகளினுந் துன்பம் இல்லே யென்பது நோக்கி 'உயிர்க்குத் தீதுண்டோ' என்றுங் கூறினர். இதனுற் புறங்கூற்றொழிதற்குபாயங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). (அயலாரைப் புறங்கூறுவோர் அதுசெய்தற்கு) ஏதிலார்குற்றம்போல் - (அந்த) அயலாரது குற்றத்தைக்காணுமாறுபோல, தங்குற்றம் - (புறங்கூறுதலாகிய) தமது குற்றத்தையும், காண்கிற்பின் - காணவல்லவராயின், மன்னுமுயிர்க்கு - (அவரது) நிலேபெறுதலுடைய உயிர்க்கு, தீது - (வருவது ஒரு) துன்பம், உண்டோ - உண்டாகுமோ, (உண்டாகாதென்றபடி) (எ - று).

(ஏதிலார் குற்றம்போலத் தமது குற்றத்தையும்) கடுவுன்றலேமையாக வி ருத்தி ஒப்பக் காணுதலாகிய அருமைநோக்கி 'காண்கிற்பின்' என்றும், (அவ் வாறு) கண்டவிடத்துப் புறங்கூறுத லொழிதலின் பாவமில்லேயாம்; இல் லேயாகவே, வரும் பிறவிகளிலும் துன்பமில்லே என்பதுகுறித்து உயிர்க் குத் தீதுண்டோ என்றும் சொல்லினர். இதனுல் புறங்கூறுதலே விலே தற்கு உபாயம் சொல்லப்பட்டது.

(க - து). அயலார் குற்றத்தைப் பார்ப்பதுபோலத் தமது குற்றத்தையும் பார்ப்பவர்க்குக் கெடுதியுண்டாகாது என்பது.

10. If they observed their own faults as they observe the faults of others, would this evil of backbiting still exist among men?



பதினேழும் அதிகாரம்.

பயனில சொல்லாமை—

Against Profitless Conversation.

அரிதாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொரு ளின்பமாகிய பயன்க ளுள், ஒன்றும் பயவாதசொற்களேச் சொல்லாமை. பொய், குறளே, கடுஞ் சொல், பயனில்சொல் லென § வாக்கின்கணிகழும் பாவ நான்களுள்

---

§ "கடுஞ்சொல், பொய், புறங்கூறல் பயனிலசொல் என்னுமிக்கான் கும் வாக்கின் அசுபகருமங்கள்". "வாக்கினுல் பெரும்பான்மையும் அசுப கருமத்தைச்செய்தால் பதனை அல்லது மிருகமாகப்பிறக்கின்றன்" என்பது மனுதர்மசாஸ்திரம் பன்னிரண்டாவதத்தியாயம். "படிறும் பயனிலவும் பட்டி யுரையும், வசையும் புறனு முரையாரே யென்று, மசையாத வுன்னத் தவர்" என்பது ஆசாரக்கோவை.

* பொய் துறந்தார்க் கல்லது ஒருதலையாகக் கடியலாகாமையின், † அஃ தொழித்து இல்வாழ்வாராற் கடியப்படும் ‡ ஏனை மூன்றனுள், கடுஞ்சொல் $ இனியவைகூறலானும், குறளை ¶ புறங்கூறுமையானும் விலக்கி நின்ற பயனில்சொல் இதனுள் விலக்குகின்ற ராகலின், இது புறங்கூறுமை யின்பின் வைக்கப்பட்டது.

தேவி.—அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொரு ளின்பங்க ளாகிய பிரயோஜனங்களுள், ஒன்றையும் தாராத சொற்களைச் சொல்லா லமையாம். பொய்,குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்று வாக்கினிடத் தண்டாகும் பாவம் நான்கனுள், பொய் துறந்தவர்க் கல்லாமல் மற்றவர்க்கு நிச்சயமாக நீக்குதல் கூடாமையால், அதனை யொழித்து இல்வாழ்வாரால் நீக்கப்படுவனவாகிய மற்றைய மூன்றனுள், கடுஞ்சொல்லை இனியவை கூறலானும், குறளையைப் புறங் கூறுமையாலும் விலக்கி, (விலக்காது) நின்றபயனில் சொல்லை இதனால் (இவ்வதிகாரத்தால்) விலக்குகின்ற ராக லால் இது (பயனில சொல்லாமை) புறங்கூறுமையின்பின் வைக்கப் பட்டது.

க. ‖ பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மேள்ளப் படும்.

பரி.—(இ - ள்). அறிவுடையார் பலருங் கேட்டு வெறுப்பப் பய னில வாகிய சொற்களைச் செல்லுவான் எல்லாரானும் இகழப்படுவன்.

அறிவுடையார் பலருங்கேட்டு வெறுப்பவே § ஒழிந்தாரானும் இக ழப்படுதலின் 'எல்லாரு மேள்ளப்படும்' என்றார். மூன்றனுருபு விகாரத் தாற் றொக்கது.

தேவி.—(இ - ள்). பல்லார் - (அறிவுடையார்) பலரும், முனிய - (கேட்டு) வெறுக்க, பயனில - பயனிலவாகிய சொற்களை, சொல்லுவான், -

---

* பெரும்பான்மையும் காமமும் பொருளும்பற்றி யுண்டாவதாகிய பொய்யைத் துறவறத்தார்க் கல்லாது, இல்லறத்தார்க்கு முற்றும் பற்றற வொழித்தல் கூடாமையின், பொய் துறந்தார்க் கல்லது, ஒருதலையா (நிச் சயமா) கக் கடியலாகாமையின்' என்று கூறப்பட்டது.

† அஃதொழித்து - பொய் பேசுத லொழித்து.

‡ ஏனை மூன்றனுள் - மற்றைய குறளை (புறங்கூறல்), கடுஞ்சொல், பயனில்சொல் என்னு மூன்றனுள்.

$ இனியவைகூறலானும்-இனியவைகூறலென்னு மதிகாரத்தாலும்.

¶ புறங்கூறுமையானும்-புறங்கூறுமை யென்னு மதிகாரத்தாலும்.

‖ பயனை யாராய்தற்குரியவர் அறிவுடையவ ராகலின், இங்கே பல்லார் என்பது அறிவுடையார்மேல் நின்றது.

§ ஒழிந்தாரென்றது அறிவிலிகளை.

சொல்லுகின்றவன், எல்லாரும் - எல்லாராலும், எள்ளப்படும் - இகழப்படுவான், (எ - று).

அறிவுடையார் பலருங்கேட்டு வெறுக்கவே ஒழிந்தவராலும் (பயனிலசொல்லுவான்) இகழப் படுதலால் 'எல்லாரு மெள்ளப்படும்' என்றார். எல்லாரானும் என்ற மூன்றும் வேற்றுமையுருபு செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

(க - து). பயனில்லாத சொற்களைச் சொல்பவன் யாவராலு மிகழப்படுவான் என்பது.

1. He who to the disgust of many speaks uselesss things will be despised by all.

உ. பயனில பல்லார்முற் ‡ சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

பரி.—(இ - ள்). பயனிலவாகிய சொற்களை அறிவுடையார் பலரு முன்பே ஒருவன் சொல்லுதல் விருப்பமிலவாகிய செயல்களைத் தன் னட்டார் மாட்டுச் செய்தலினும் தீது, (எ - று).

விருப்பமில - வெறுப்பன. †† இச்சொல் அச்செயலினும் மிக விக ழற் பாடு பயக்கு மென்பதாம்.

தெளி.—(இ - ள்). பல்லார்முன் - (அறிவுடையார்) பலர்முன்னே, பயனில - பயனில வாகிய சொற்களை, சொல்லல்-(ஒருவன்) சொல்லுதல், நட்டார்கண்-(தன்) சிநேகிதரிடத்து, நயனில - விருப்ப மிலவாகிய செயல் களை, செய்தலின் - செய்தலினும், தீது - தீயதாம், (எ - று).

விருப்பமிலவாகிய செயல்கள் - வெறுக்கப்படுஞ் செயல்கள். இச் சொல் அச்செயலைக் காட்டிலும் மிகவும் இகழப்படுதலையுண்டாக்கு மென் பதாம்.

(க - து). பயன்படாத சொற்களைச் சொல்லுதல் சிநேகித ரிடத்து வெறுக்கப்படுஞ்செயல்களைச் செய்தலினுங்கொடியதாம்.

2. To speak useless things in the presence of many is a greater evil than to do unkind things towards friends.

‡ சொல்லல் என்பதனால் பயனிலவென்பது பயனிலவாகிய சொற்க ளென்றும், செய்தல் என்பதனால் நயனிலவென்பது விருப்பமிலவாகிய செயல்கள் என்றும் பெறப்பட்டன வென்க.

†† இச்சொல் அச்செயலினும் - பயனிலவாகிய சொல் விருப்பமில வாகிய செயலைப் பார்க்கிலும்.

கூ. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

பரி.—(இ - ள்). பயனிலவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்க முறைதானே இவன் நீதியில னென்பதனை ¶ உரைக்கும்,(எ-று).


§ உரையால் இவன் நயனிலனென்ப தறியலாமென்பார், அதனை உரைமே லேற்றி உரைசொல்லும் என்றார்.

தெளி.—(இ - ள்). பயனில - பயனிலவாகிய பொருள்களை, (ஒருவன்), பாரித்து - விரித்து, உரைக்கு முரை - சொல்லுஞ் சொல்லே,நயனிலனென்பது - (இவன்) நீதியில்லாதவ னென்பதனை, சொல்லும் - அறிவிக்கும், (எ - று).

பயனிலவாகிய வுரையால் இவன் நீதியில்லாதவ னென்பதை அறியலா மென்பார் அவ்வறிதலை உரையின் மீதேற்றி உரைசொல்லும் என்றார்.

(க-து). ஒருவன் பயனில்லாத சொல்லை விரித்துக் கூறினால், அஃது இவன் நீதியில்லாதவ னென்பதை யறிவிக்கும்.

3. That conversation in which a man utters forth useless things will say of him "he is without virtue."



சு. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

பரி.—(இ - ள்). பயனெடுபடாத பண்பில் சொற்களை ஒருவன் பலரிடைச் சொல்லுமாயின், அவை அவர்மாட்டு நீதியோடு படாவாய், அவனை நற்குணங்களி னீக்கும், (எ - று).

பண்பு—இனிமையும் மெய்ம்மையும் * முதலாய ‡‡ சொற்குணங்கள். சொல்லுமாயி னென்பதும், அவர்மாட்டென்பதும் எச்சமாக வருவிக்கப் பட்டன.

தெளி.—(இ - ள்). பயன்சாரா - பயனெடு பொருந்தாத, பண்பில் சொல் - குணமில்லாத சொற்களை, (ஒருவன்),பல்லாரகத்து - பலரிடத்து,

¶ உணர்த்தும் என்றும் பாடமுண்டு.

§ அறிதலாகிய சேதனதருமத்தை யுரைமே லேற்றி உரைசொல்லும் என்றமையின், இஃதொரு பொருளின் தருமம் மற்றொரு பொருளின்மேலாய வுபசார வழக்காம்.

* முதலாய என்பதனால் கெடுதிவிளைவியாமை, கேட்டாரைத் தன்வசப்படுத்தல் முதலியவற்றையுங் கொள்க.

‡‡ சொல்லின் குணங்கள் கேட்டார்க்கினிமை யுடைமை, உண்மை யுடைமை, நீமை விளைவியாமை முதலியனவாம்.

(சொல்லுவானுயின் அவை அவரிடத்து), நயன்சாரா - நீதியோடு பொருந்தாதன வாயி, நன்மையின்-நற்குணங்களினின்றும்,நீக்கும் (அவனை) நீங்கச் செய்யும், (எ - று).

பண்பு - இனிமையும் மெய்ம்மையும் முதலாகிய சொற்குணங்கள். சொல்லுவானுயின், அவரிடத்து என்பன குறைத்து நின்றமையின், அவை வருவித் தரைக்கப்பட்டன. இவை வீசையெச்சங்களாம்.

(க - து). குணமில்லாத சொற்களே யொருவன் சொல்லுவானுயின், அவை அவனை நற்குணங்களினின்றும் நீக்கும்.

4. The words devoid of profit or pleasure which a man speaks with many persons will, being inconsistent with virtue, remove him from goodness.

ரு. சீர்மை சிறப்போடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

பரி.—(இ-ள்). பயனிலவாகியசொற்களை இவிய நீர்மையுடையார் சொல்லுவாயின், அவரது † விழுப்பமும் அதனல் வரும் நன்கு மதிக்கற்பாடும் உடனே நீங்கும், (எ-று).

‡ நீர்மை - நீரின்றன்மை. சொலினென்பது சொல்லாமையை விளக்கிற்று.

தெளி.—(இ - ள்). பயனில-பயனிலவாகிய சொற்களை, நீர்மையுடையார் - நற்குணத்தை யுடையவர், சொலின் - சொல்லுவாராயின், சீர்மை-(அவரது) மேம்பாடும், சிறப்போடு - (அம் மேம்பாட்டினுல் வரும்) நன்கு மதிக்கப்படுதலும் (உடனே), நீங்கும்-(அவரிடத்திருந்து) நீங்கும், (எ-று).

நீர்மை - நற்குணத்தின்றன்மை. சொலினென்பது நீர்மை யுடையார் பயனிலவற்றைச் சொல்லாமையை விளக்கி நின்றது.

(க - து). நற்குணமுடையோர் பயனில்லாத சொற்களைச் சொல்லுவாராயின் அதனல் அவரது மேன்மையும் நன்கு மதிப்பும் ஒழியும் என்பது.

5. If the good speak vain words their eminence and excellence will leave them.

சு. பயனில்சொற் பாராட்டு வானே மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

---

† விழுப்பம் அதனல் வரும் நன்கு மதிக்கற்பாடெனே நீங்கும் என்றும் பாடமுண்டு.

‡ நீர்மை - குணம். நீரின்றன்மை - (நற்) குணத்தின் தன்மை.

பரி.—(இ-ள்). பயனில்லாத சொற்களைப் பலகாலுஞ் சொல்லு வானை மகனென்று சொல்லற்க; மக்களுட் பதரென்று சொல்லுக.

* அல் விகுதி வியங்கோள்; முன் எதிர்மறையினும், பின் உடம்பாட் டினும் வந்தது. † அறிவென்னும் உள்ளீடின்மையின் 'மக்கட்பதடி' என் றார். இவை யாறுபட்டானும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). பயனில்சொல் - பயனில்லாத சொற்களை, பாராட்டு வானை-பலதரமுஞ்சொல்லுகின்றவனை,மகனெனல்-மனிதனென்று சொல் லற்க, மக்கட் பதடியெனல் - மக்களுள் பதரென்று சொல்லுக, (எ - று).

எனல், எனல் என்னும் அல் ஈற்று வியங்கோள் முற்றுக்கள்;இரண்ட னுள், முன்னது எதிர் மறையிலும் பின்னது உடன்பாட்டிலும் வந்தன. பதருக்கு அரிசியாகிய உள்ளீடில்லாமைபோலப் பயனில் சொற் பாராட்டு வானுக்கு அறிவாகிய உள்ளீடில்லாமையால் 'மக்கட்பதடி' என்றார். இவை யாறு பாட்டாலும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றம் சொல்லப்பட்டது. உள்ளீடு-உள்ளிருப்பது. பதர்-அரிசியில்லாத நெல்.

(க - து). பயன்படாத சொற்களைச் சொல்லுகின்றவன் மக் களுள் பதராவான் என்பது.

6. Call not him a man who parades forth his empty words, call him the chaff of men.

* மகனெனல் என்பதன்கணுள்ள எனலும் மக்கட் பதடியெனல் என் பதன்கணுள்ள எனலும் அல்லீற்று வியங்கோள் வினை முற்றுக்கள். இவற் றுள் முன்னது (என்று சொல்லற்க என்று பொருள் படுதலால்) எதிர் மறையிலும், பின்னது (என்று சொல்லுக என்று பொருள் படுதலால்) உடன்பாட்டிலும் வந்தன. "கயவொடுசெல்வொற்று" என்னுஞ் சூத்திரத்தி னுரையில் இலக்கண விளக்கனாரும் "பயனில்சொற் பாராட்டு வானை மக னெனல், மக்கட் பதடி யெனல், என அல்லீறு விதித்தற்கண் மறையும் உடம்பாடுமாய் வருதலு முணர்க" என்றனர்.

பொருளின் புடைபெயர்ச்சி யிருந்தால் வினை (தொழில்) நிகழுத லின் எங்கே பொருளின் புடைபெயர்ச்சி யிருக்கின்றதோ அங்கே வினை நிகழுமென்றும், எங்கே பொருளின் புடைபெயர்ச்சி யில்லையோ அங்கே வினை நிகழாதென்று மறிக. இலக்கணனாரும் வினை நிகழுதலே யுடன் பாடென்றும் அது நிகழாமையை யெதிர் மறையென்றும் கூறுவர். வட நூலார் உடன் பாட்டை அந்வயமென்றும் எதிர்மறையை வியதிரேகி யென்றும் கூறுவர்.

† அறிவிற் இலக்கணம் கலித்தொகை நெய்தற்கலி யகவ-ல், "அறிவெ னப் படுவது பேதையார்சொன் னேன்றல்" என்று கூறப்பட்டிருக்கின்

எ. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

பரி.—(இ-ள்) ¶ நீதியோடு படாதசொற்களைச் சான்றோர் சொன்னாயினும், சொல்லுக, அஃதமையும்; அவர் பயனிலவற்றைச் சொல்லாமை பெறின், $ அது நன்று, (எ-று).

‖ சொல்லினு மெனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றினும் பயனில தீயவென்பதாம்.

தெளி.—(இ-ள்). சான்றோர் - (பல குணங்களாலும் நிறைந்த) அறிவுடையவர், நயனில - நீதியோடு பொருந்தாத சொற்களை, சொல்லினும் - சொன்னாயினும், சொல்லுக - சொல்லக்கடவர், (அது பொருந்தும்), பயனில - (அவர்) பயனில்லாத சொற்களை, சொல்லாமை - சொல்லாதிருத்தலே (பெற்றால்), நன்று-(அது) நல்லது, (எ-று).

சொல்லினும் எனவே, சான்றோர் நயனில சொல்லாமை பெறப்பட்டது. நயனில்லாத சொற்களினும் பயனில்லாத சொற்கள் கொடியனவென்பதாம்.

(க - து). சான்றோர் நீதியோடு பொருந்தாத சொற்களைச் சொன்னாயினும் பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருக்கக் கடவர் என்பது.

7. If you will speak things without excellence speak them; it will be well for the wise not to speek useless things.

அ. அரும்பய னுயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

பரி.—(இ-ள்). அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல *அறிவினையுடையார் மிக்க பயனுடைய வல்லாத சொற்களைச் சொல்லார்.

அறிதற்கரிய பயன்களாவன * வீடுபேறும், † மேற்கதிச்செலவும் ‡ முதலாயின. பெரும் பயனில்லாத வெனவே, பயன் சிறிதுடையனவும் ஒழிக்கப்பட்டன.

றது. அறிவினிலக்கணத்தை விரிவாக அறிவுடைமை யென்னு மதிகாரத்திற் காண்க.

¶ நீதி - உலகத்தோடு பொருந்துதல். $ அது-பயனிலசொல்லாமை.

‖ சொல்லினும் என்பதன்கணுள்ள உம்மைஎதிர்மறைப் பொருளது.

* வீடு பேறு - முத்தி பெறுதல்.

† மேற்கதிச்செலவு - சுவர்க்க முதலாயின வற்றின்கட் செல்லுதல்.

‡ முதலாயினஎன்பதனுல் நிஷ்காமியகருமம், ஈசுவரத்தியானம், பிராணயாமம், சாதன சதுஷ்டயம், சற்குரு சேவை, சிரவண மாந நிதித்தியாசனம், தத்துவஞான முதலியவற்றையுங் கொள்க.

தேவி.—(இ - ன்). அரும்பயன் - அறிதற்கரிய பயன்களே, ஆயும் - ஆராயவல்ல, அறிவினர் - அறிவினை யுடையார், பெரும்பய னில்லாத சொல் - மிகுந்த பயனில்லாத சொற்களே, சொல்லார் - சொல்லமாட்டார்.

அறிதற்கரிய பயன்களாவன முத்திப்பேறும், மேற்கதியடைதலும் முதலானவை. பெரும்பயனில்லாத சொற்களெனவே சிறிது பயனுடைய சொற்களும் தள்ளப்பட்டன. சிறிது பயனுடைய சொற்கள் - இம்மைப்பய னெனறையே தரும்சொற்கள்.

(க-து). அறிதற்கரிய பயன்களை யாராயும் அறிவினையுடை யார் பயன்படாத சொற்களைச் சொல்லார் என்பது.

8. The wise who seek for great advantage will not speak words that have not much weight.

கூ. பொருடேர்ந்த போச்சார்துஞ் சொல்லார் மருடேர்ந்த
மாசறு காட்சி யவர்.

பரி:—(இ - ள்). பயனினீங்கிய சொற்களை மதித்துஞ் சொல்லார், மயக்கத்தினீங்கிய தூய அறிவினையுடையார், (எ - று).

தூயவறிவு ¶ மெய்யறிவு. ¶ மருடேர்ந்தவென்னும் பெயரெச்சம் காட்சியவரென்னுங் குறிப்புப்பெயர கொண்டது. இவை மூன்றுபாட்டானும் பயனிலசொல்லாமையின் குணங்கூறப்பட்டது.

தேவி:—(இ - ள்). மருடேர்ந்த - மயக்கத்தினின்றும் நீங்கிய, மாசறு - மாசற்ற [பரிசுத்தமாகிய], காட்சியவர் - அறிவினையுடையார், பொருடேர்ந்த - பயனினின்றும் நீங்கியசொற்களை, பொசசார்தும் - மதந்தும், சொல்லார் - சொல்லமாட்டார், (எ - று).

பரிசுத்தமாகிய வறிவு - யதார்த்தஞானம். மருடேர்ந்த என்னும் பெயரெச்சம் காட்சியவரென்னுங்குறிப்பு வினையாலணையும் பெயரைக்கொண்டு முடிந்தது. இவை மூன்றுபாட்டானும் பயனிலவாகிய சொற்களைச சொல்லாமையின் குணம் சொல்லப்பட்டது.

(க - து). குற்றமற்ற அறிவினை யுடையோர் பயனில்லாத சொற்களை மறந்தும் சொல்லார் என்பது.

9. Those wise men who are without faults and are freed from ignorance will not even forgetfully speak things that cannot profit.

§ மெய்யறிவாவது பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் ஐயந்திரிபின்றி யுள்ளவாறறிவது. இது தத்துவஞான மெனப்படும்.

¶ மருள் - மெய்ப்பொருளல்லாதவற்றை மெய்ப்பொரு ளென் றறியும் விபரீத (மாறுபாடான) ஞானம்.

க0. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

பரி.—(இ - ள்). சொற்களிற் பயனுடைய சொற்களைச் சொல்லுக; சொற்களிற் பயனில்லாத சொற்களைச் சொல்லா தொழிக.

‖ சொல்லினென்பது இருவழியும் மிகையாயினும், () சொற்பொருட்பின் வருநிலை யென்னும் அணியோக்கி வந்தது. * "வைகலும் வைகல் வரக்கண்டும்" என்பது போல. இதனுற் சொல்லப்படுவனவும் படாதனவும் நியமிக்கப்பட்டன.

தெளி.—(இ - ள்). சொல்லில் - சொற்களில், பயனுடைய - பிரயோசன முடையசொற்களை, சொல்லுக - சொல்லக்கடவர், சொல்லில் - சொற்களில், பயனிலாச்சொல் - பிரயோசன மில்லாத சொற்களை, சொல்லற்க - சொல்லா திருக்கக்கடவர், (எ - று).

சொல்லினென்பது இரண்டு வாக்கியத்தினும் (வந்தது) மிகையாயிருப்பினும். அது சொற் பொருட்பின் வருநிலை யென்னு மலங்கார நோக்கி வந்தது. இதனுல் சொல்லத்தக்கசொற்கள் பயனுடைய சொற்கள் எனவும் சொலலத்தகாத சொற்கள் பயனிலாதசொற்கள் எனவும் நியமிக்கப் (நிச்சயிக்கப்) பட்டன.

(க-து.) பயனில்லாத சொற்களைச் சொல்லாது பயனுடைய சொற்களைச் சொல்லக்கடவர் என்பது.

10. If you speak, speak what is useful, and speak not useless words.

பதினேழாவது அதிகாரம்.

தீவினையச்சம்.—*On the fear of sin.*

பரி.—அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனுன் மெய்யின்கண் நிகழும் பாவங்களெல்லாந் தொகுத்து விலக்குதலின் றராகலின், இது பயனிலசொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.

‖ சொல்லினென்பது இருவழியும் மிகையாயினும் - பயனுடைய சொல்லுக பயனிலாச்சொல் சொல்லற்க என்னும் இரண்டு வாக்கியத்திலும் சொல்லின் என்பது அவியமினறி யதிகமாயிருப்பினும், ஒரு வாக்கியத்தில் மாத்திரம் சொல்லின் என்பதிருப்பினமையு மென்பதகருத்து.

() சொற்பொருட்பின் வருநிலை யென்னும் அணியாவது முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பலவிடத்தும் வருவது.

* காலடியார் தமன்வலியுறுத்தல், 9. இதன்பொருள் நாள்தோறும் நாட்செல்லுதல் வரப்பார்த்தும் என்பது. "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதணரார், வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல், வைகலை வைத்தணரா தார்" என்னுமிந்நாலடிச்செய்யுளில் வைகல் என்னுஞ்சொல் பொருள் வேற்றுமை யின்றிப் பலமுறை வந்திருத்தலைக்காண்க.

தெளி.—*அஃதாவது பாவத்தைத் தருவதற்கேதுவாயுள்ள தீவினைகளைச் செய்வதற்கு அஞ்சுதலாம். இதனால் காயத்தினிடத்து விளைகின்ற பாவச்செயல்களையெல்லாம் தொகுத்து விலக்குகின்றார்கலின், இது (தீவினையச்சம்) பயனிலசொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.*

கக. தீவினையார ரஞ்சார் விழுமியார ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

பரி.—(இ-ள்). தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை முன் செய்த தீவினையுடையார் அஞ்சார்; அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர்.

* தீவினையென்னுஞ் செருக்கெனக் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது. † மேற்றொட்டுச் செய்து கைவந்தமையான் 'அஞ்சார்' என்றும், செய்தறியாமையான் 'அஞ்சுவர்' என்றுங் கூறினார்.

தெளி.—(இ - ள்). தீவினையென்னுஞ் செருக்கு - தீவினையென்று சொல்லப்படும் மயக்கத்தை, தீவினையார் - (முற்பிறப்பிற்செய்த) தீவினையுடையார், அஞ்சார் - பயப்படார், விழுமியார் (அஃதில்லாதவராகிய) மேலோர், அஞ்சுவர் - பயப்படுவர், (எ-று).

தீவினைக்கேதுவாகிய செருக்கு தீவினையென்னுஞ்செருக்கெனக்காரியம் காரணமாக வுபசரித்துக்கூறப்பட்டது. தீவினைகாரியம்; அதன்காரணம் செருக்கு. முன்னரேதொடங்கிச்செய்து பழகிவந்தமையால் 'அஞ்சார்' என்றும், செய்தறியாமையால் 'அஞ்சுவர்' என்றும் சொல்லினார்.

(க-து). *தீயகாரியங்களைச் செய்தற்கு முற்பிறப்பில் செய்த தீவினையுடையார் பயப்படார்; மற்றவர் பயப்படுவர் என்பது.*

---

* தீவினை செய்தற்குக் காரணமான செருக்கை (மயக்கத்தை - அவிசையை) 'தீவினையென்னுஞ்செருக்கு' என (தீவினையென்னுங்காரியத்தைச் செருக்கு என்னுங்காரணமாக)க்கூறியது பற்றித் 'தீவினையென்னுஞ் செருக்கெனக் காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது' என்று கூறப்பட்டது. இதனால் செருக்கினால் தீவினை நிகழுமென்றும் செருக்கில்லாவிட்டால் தீவினைநிகழாதென்றும் பெற்றாம். பிரயோகவிவேகநூலார் "மதுளதுகாரணம்" என்னுஞ்செய்யுளினுரையில் "தீவினை என்னுஞ் செருக்கு, தீவினையால்வருஞ் செருக்கு. இது காரணம் காரியமானது" என்றார். பரிமேலழகர் தீவினையைக் காரியமாகவும் செருக்கைக் காரணமாகவும் கொண்டாற்போன்றுகொள்ளாது பிரயோகவிவேகநூலார் தீவினையைக் காரணமாகவும் செருக்கைக் காரியமாகவுங் கொண்டார் என்பது ஈண்டறியத்தக்கதா மென்க.

† மேற்றொட்டுச்செய்து கைவந்தமையான்-தீவினைகளைக்கீழ்ப்போன பிறப்புக்களில் விடாதாரம்பித்துச் செய்து பழகிவந்தமையினால், (அத்தீவினையின்சம்ஸ்காரம் அந்தக்காரணத்தில் அறற்பூதமாகத் தங்கியிருக்கின்றது; அதனால்).

1. Those who have experience of evil deeds will not fear but the excellent will fear the pride of sin.

உ. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

பரி.—(இ-ள்). தனக்கிடும்பம் பயத்தலைக் கருதிச் செய்யுந் தீவினைகள் பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலான், அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனுற் றீயினு மஞ்சப்படும், (எ-று).

* பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம்பினுஞ் சென்று சுடுதல் நீக்கின்மையின், † தீயினுமஞ்சப்படுவ தாயிற்று.

தெளி —(இ-ன்). தீயவை - (தனக்கு இன்பந்தருதலைக் குறித்துச் செய்யுந்) தீவினைகள், (பின்பு அவ்வின்பத்தை யொழித்து), தீய-துன்பத்தையே, பயத்தலால் - தருதலால், தீயவை - (அவ்வியல்பினை யுடையனவாகிய) தீவினைகள், தீயினும் - தெருப்பினும் (அதிகமாக), அஞ்சப்படும்- (ஒருவனுல்) அஞ்சப்படும், (எ - று).

வேறொரு காலத்திலும் வேறோரிடத்திலும் வேறோ ருடம்பிலும் போய்ச்சுடுதல் தீவினைக்கியல்லாமல் தெருப்பிற்கில்லாமையால்(தீயவை) 'தீயினு மஞ்சப்படும்' என்றார்.

(க - து). தீவினைகள் விடாதுவந்து எங்கும் வருத்துவனவாயிருத்தலின், அவை தெருப்பைப் பார்க்கினும் கொடியனவாம்.

2. Because evil produces evil, it should therefore be feared more than fire.

ஊ. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

பரி.—(இ - ன்). தமக்குறுதி நாடும் அறிவுக ளெல்லாவற்றுள்ளுந் தலையாய அறிவென்று சொல்லுவர் நல்லோர், தம்மைச் செறுவார் மாட்டுந் தீவினைகளைச் செய்யாது விடுதலை, (எ - று).

* தெருப்பானது எக்காலத்தில் எத்தேசத்தில் எவ்வுடம்பிற்பட்டதோ அக்காலத்தில் அத்தேசத்தில் அவ்வுடம்பிற் சுடுவதன்றி வேறுகாலத்தில் வேறு தேசத்தில் வேறுடம்பிற் சென்று சுடுவதில்லையாம்; தீவினையோ வெனின், அங்ஙனமன்றி எக்காலத்தில் எத்தேசத்தில் எந்த உடம்பாற் செய்யப்பட்டதோ அந்த வுடம்பிலுள்ள வுயிரை வருத்துவதன்றி, அவ்வுயிரைவிடாது பற்றிச்சென்று மற்றொரு காலத்திலும் மற்றொரு தேசத்திலும் மற்றோருடம்பிலும் வருத்துவது பற்றி அது 'தீயினு மஞ்சப்படுவதாயிற்று' என்க.

† தீயினு மஞ்சப் படும் என்றார் என்றும் பாடமுண்டு.

‡ விடுதற்குக் காரணமாகிய அறிவை 'விடல்' என்றும் § செயத்தக் குழியுஞ் செய்யாதொழியவே தமக்குத் துன்பம் வாராதென ¶ உய்த் துணர்தலின், அதனை 'அறிவினு ளெல்லாந் தலை' என்றுங் கூறினர். () செய்யாத என்பது கடைக் குறைத்து நின்றது. இவை மூன்றுபாட் டானும் தீவினைக்கஞ்ச வேண்டுமென்பது கூறப்பட்டது.

தெளி.—(இ - ன்). செறுவாக்கும்-(தம்மை) வருத்துவோரிடத்தும், தீய - தீவினைகளை, செய்யாவிடல் - செய்யாது விடுதலை, அறிவினுளெல் லாம் - (தமக்கு நன்மையை விரும்பும்) அறிவுக ளெல்லாவற்றிலும், தலை - தலைமையாய வறிவாகும், என்ப-என்று (நல்லோர்) சொல்லுவர், (எ-று).

தீவினைகளை விடுதற்குக் காரணமாகிய அறிவை 'விடல்' என்றும் செய்யத்தக்கவிடத்தும் செய்யாதொழியவே தமக்குத் துன்பம் வாராதென் றுராய்ந் தறிதலால், அதனை 'அறிவினுளெல்லாந் தலை' என்றும், சொல் லினர். செய்யாதென்பது செய்யாதென்பதன் விகாரம். இவைமூன்று பாட் டாலும் தீவினைக்கு அஞ்சவேண்டுமென்பது சொல்லப்பட்டது.

(க - து). தம்மை வருத்துவோரிடத்துந் தீவினைகளைச் செய் யாமல் விடுமறிவு எல்லாவறிவினுள்ளுந் தலைமையாய வறிவாம்.

3. To do no evil even to enemies will be called the chief of all the virtues.

ச. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

பரி.—(இ-ள்). ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந் தும் எண்ணுதொழிக; எண்ணுவனெனின், * தனக்குக் கேடுபயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும், (எ-று).

---

‡ விடுதற்குக் காரணமாகிய அறிவை—தம்மை வருத்துவோரிடத் துந் தீவினைகளைச் செய்யாமல் விட்டவிடுதற்கு ஏதுவாகிய அறிவை. விட லென்னுங் காரியத்தின்பெயர் அதனை யுணர்த்துதற்குக் காரணமான அறி விற்காதலின் காரியவாகுபெயராம்.

§ செயத்தக்குழியுஞ் செய்யாதொழியவே—தீவினைகளைச் செய்வதற் குத்தக்க காரணம் சேர்ந்த விடத்தும் அவற்றைச் செய்யாம லொழியவே.

¶ "ஒறுவரையே யாயினுஞ் செய்தான் றல்லா, லுறுபயனே வில்லை யுயிர்க்கு" என்றறிதலின்.

() செய்யாத என்னும் எதிர்மறை வினையெச்சம் கடைக்குறைத்து (அவ்விகுதி செய்யுள் விகாரத்தாற் கெட்டுச்) செய்யா எனநின்றது.

* தனக்கு - பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை யெண்ணினவனுக்கு.

† கேடென்பன ஆருபெயர். ‡ சூழ்கின்றபொழுதே தானும் உடன் சூழ்தலின், § இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது பெறப் பட்டது. (|) அறக்கடவு ளெண்ணுதலாவது அவன் கெடத் தான் நீங்க வினைத்தல். நீவினை எண்ணலும் ஆகாதென்பதாம்.

தெளி.—(இ - ள்). (ஒருவன்) பிறன்-பிறனுக்கு, கேடு-கேட்டைத் தரும் வினையை, மறந்தும் - மறந்தாயினும், சூழற்க - எண்ணுதிருக்கக் கடவன், சூழின் - எண்ணுவானாயின், சூழ்ந்தவன் - அவ்வெண்ணினவனுக்கு, கேடு - கேட்டைத்தரும்வினையை, அறம்-அறக்கடவுள், சூழும் - எண்ணுவான், (எ-று).

கேடிரண்டும் கேட்டைத்தரும் வினைகளோடுணர்த்துதலால் ஆகுபெயர். கச் எண்ணுகின்றபொழுதே தானும் உடனே எண்ணுதலால், இவன் பிற் பட்டாலும் அறக்கடவுள் (பிற்படாது) முற்படுவானென்பது பெறப்பட்ட தது. அறக்கடவு ளெண்ணுதலாவது அவன் கெடத் தான் நீங்க வினைத்தல். நீவினையை (செய்தலெயன்றிச் செய்ய) எண்ணுதலு மாகா தென்பதாம்.

(க - து). பிறனுக்குக் கேட்டைத் தரும் வினையைச்செய்ய நினைப்பவனுக்குத் தருமக் கடவுள் தானுங்கேட்டைத்தரும் வினையைச் செய்ய நினைக்கும் என்பது.

4. Even through forgetfulness meditate not the ruin of another. Virtue will meditate the ruin of him who thus meditates.

ரு இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனெது மற்றும் பெயர்த்து

பரி.—(இ - ள்). யான் வறியனென்று கருதி அது தீர்த்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யாதொழிக; செய்வனாயின் பெயர்த்தும் வறியனாம், (எ - று).

† கேடு என்பவை யிரண்டும் கேட்டைத்தரும் நீவினைகளை யுணர்த்து தலால் காரியவாகு பெயர்களாம்.

‡ சூழ்கின்றபொழுதே தானும் உடன் சூழ்தலின் - ஒருவன் மற் றொருவனுக்குக் கேட்டைத்தரும் வினையைச்செய்ய வெண்ணுகின்ற கால த்தே தானும் (அறக்கடவுளும் - தருமதேவதையும்) உடனே அவனுக்குக் கேட்டைத் தரும் வினையைச்செய்ய வெண்ணுதலால்.

§ இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது—பிறனுக்குக் கேட்டைத் தரும் வினையைச் செய்ய எண்ணின இவன் பிறனுக்குத் தீவினையைச் செய்வது இடையூற்றின் மிகுதிப்பாட்டால் நிறைவேறாது போயினும் அல்லது நிறைவேறக் காலஞ் செல்லுமாயினும் தரும தேவ தை யவனுக்குக் கேட்டைத்தரும் வினையைச் செய்வது தவறாது உட னே நிறைவேறு மென்பதாம்.

(|) பிறனுக்குத் தீமைசெய்ய நினைப்பவனிடத்து மறம் வளர் அறம் வையப் பையக் குறையுமென்பதாம்.

§ அத்தீவினையாற் பிறவிதோறும் இலனுமென்பதாம். () அன் விகு தி முன் தனித்தன்மையினும், பின் படர்க்கை யொருமையினும் வந்தது. தனித்தன்மை 1 "உளனுவென் னுயிரை யுண்டி" என்பதனுணுமறிக. 2 மற்று - தூசை ஈலே. 3 இடபென்று டாட மோதவாரு முளர். 4 பொரு

§ அத்தீவினையாற் பிறவிதோறும் இலனும் - ஒருவன் தனக்குள்ள வறுமை நீங்குகிமித்தம் அன்னியருக்குச் செய்யுந் தீவினையினுல்ஒவ்வொரு பிறப்பினும் தரித்திரனுவான்.

() முதலடியிலுள்ள இலன் என்பதன் அன்விகுதி தனித்தன்மை (தன்மை யொருமை) யிலும், இரண்டாமடியிலுள்ள இலன் என்பதன் அன்விகுதி படர்க்கை யொருமையிலும் வந்தனவென்க. அன் விகுதி தன்மை யொருமைக்கு வருதலைப்பற்றி நனனூல் விருத்தியுரைகாரர் "அன் ஆன்" என்னுஞ் சூத்திரத்தினுரையில் "அன்னென்னும் தன்மை யொருமை விகுதி தொன்று தொட்டதன்றி யிலக்கியங் கண்டமையின் எதிரது போற்றலென்னு முத்தியால் தழீஇக் கொண்டதாதலின் அதனை வலியுறுத்திப் பின்னும் அன்னெனவிதந்தும்" என்று கூறினுரென்க.

1 கலித்தொகை, குறிஞ்சி உக. இதன் பொருள் (யான்கிறிது)உயிரு டனே யிருக்கும்படி என்னுயிரை வாங்கிக்கொண்டி என்பது. 'உளனு வென்னுயிரையுண்டி' என்பதன்கணுள்ள உளன் என்பதன் அன்விகுதி தன்மை யொருமையில் வந்தது. யாப்பருங்கலச் காரிகையில் "பத்த மடி தொடை பாவினங் கூறுவன்" என்று அன் விகுதி தன்மை யொருமை யில் வந்திருத்தலையுங் காண்க.

2 மற்றும் என்பதன்கணுள்ளஉம்மை பெயர்த்து என்பதனோடுபிரித் துக் கூட்டப்பட்டது; அப்பெயர்த்தும் என்பது பின்னும் என்னும் பொ ருளோ யுணர்த்தலின், மற்று என்பது அசை நிலையாயிற்று. பெயர்சொல் லையும் வினைச்சொல்லையுஞ் சார்ந்து ஒரு பொருளையு முணர்த்தாது வரு வது அசைகிலே யெனப்படும்.

3 முதலடியிலும் இரண்டாமடியிலுமுள்ள இலன் இலன் என்பன வற்றை இலம் இலம் என்றுபாடங்கூறுவாரு முண்டு. இப்பாடத்தின்படி முன்னுள்ள இலம் என்பதற்கு யாம் பொருளில்லோம் என்றும் பின்னு ள்ள இலம் என்பதற்கு வறுமை என்றும் பொருள் கொள்க. (இலமா கும் என்பதற்கு - வறுமையுண்டாகு மென்பது பொருள்.) வறுமை யென் னும் பொருளையுணர்த்தும் இ ல ம் என்னுஞ்சொல் உரிச்சொல்லாம். இஃது "இலம்பா டொற்க மாயிரண்டும் வறுமை" என்னும் (தொல்காப் பியச்)சூத்திரத்தின் விசேடவுரையில் சேனுவரையர் "இலமென்னு முரிச் சொல், பெரும்பான்மையும் பாடென்னுந் தொழிற்பற்றியல்லது வாரா மையின் இலம் பாடென்றுரை" என்று கூறியதனுலு முணரப்படு மென்க.

4 இலனென்று - (யான் பொருளினுல்) தரித்திரனென் றெண்ணி, தியவை செய்யற்க - தீவினைகளைச் செய்யாதொழிக, செய்யின் - செய்தால், இலனுகும் - (அப்பொருளாலே யல்லாமல் நற்குண நற்செய்கைகளாலும்,) தரித்திரனுவான், பெயர்த்தும் - பின்னும், என்று 'இலன்' என்னு மிக் குறளுக்கு வேறு பொருள் கூறுவாரு முண்டி.

ஞான் வறியனெனக் கருதித் தீயவை செய்யற்க; செய்யின், அப்பொரு ளானே யன்றி கற்குண நற்செய்கைகளாலும் வறியனுமென் றுரைப்பாரு முளர்.

தெளி.—(இ - ள்). *இலனென்று - (யான்) வறுமை யுடையேனென்று கினைதது, (அவ்வறுமை நீங்கு கிமித்தம்), தியவை - தீவினைகளை, செய்யற்க - (ஒருவன் பிறர்க்குச்) செய்யாதிருக்கக்கடவன், செய்யின்-செய்வானுனல், பெயர்த்தும் - பின்னும், இலனகும் - வறுமையை யுடையவனுவான், (எ - று)*

மற்று - அசைகிலை. அத்தீவினையினுற் பிறவிதோறும் வறியவனுவனென்பதாம் இளனிலனென்னுமிரண்டனுள், முன்னது தன்மை யொருமை யெதிர்மன்றச் சூறிப்பு லிங்முற்றும் பின்னது உயர்திணையாண்பால் படர்க்கை யெதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுமாம்.

(க-து). வறுமை நீங்குகற் பொருட்டுப் பிறர்க்குத் தீமைசெய்கின்றவன் மீண்டும் வறுமையை யுடையவனுவான் என்பது.

5. Commit not evil, saying, "I am poor". if you do you will become poorer still.

சு தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

பரி.—(இ - ள்). துன்பஞ்செய்யுங் * கூற்றவாகிய பாவங்கள் தன்னைப் பின் வந்து வருத்துதலை வேண்டாதவன், † தீமைக் கூற்றவாகிய வினைகளைத் தான் பிறர்மாட்டுச் செய்யாதொழிக, (எ-று).

‡ செயின், அப்பாவங்கள் அடுதல் ஒருதலை யென்பதாம்.

தெளி.—(இ - ள்). *நோய்ப்பால-துன்பஞ்செய்யுங் கூறுபாடுடையனவாகிய பாவங்கள், தன்னை—, அடல் வேண்டாதான் - (பின் வந்து) வருத்துதலை வேண்டாதவன், தீப்பால - தீமைக் கூறுபாடுடையன வாகிய வினைகளை, தான்—, பிறர் கண - பிறரிடத்து, செயயற்க - செய்யாதிருக்கக் கடவன், (எ - று).*

செய்வானுயின், அப்பாவங்கள் அவனை வருத்துதல் நிச்சயமென்பதாம்.

(க - து). பாவங்கள் தன்னைப் பின்பற்றிவந்து வருத்துதலை விரும்பாதவன் தீவினைகளைப் பிறரிடத்துச் செய்யாதிருக்கக் கடவன் என்பது.

6. Let him not do evil to others who desires not that sorrows should pursue him.

---

* கூற்ற - பகுதியுடையன. † தீமைக் கூற்ற - தீமையென்னும் பகுதியிற் பட்டவை. ‡ செய்யின் - பிறரிடத்துத் தீவினைகளைச் செய்தால்.

எ. எனைப்பகை யுற்றரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

பரி.—(இ - ள்). எத்துணைப் பெரிய பகையுடையாரும் அதனை ஒரு வாற்றற் றப்புவர் : அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது 1 புக்குழிப் புக்குக் கொல்லும், (எ-று).

2 "வீயா-தடம்பொடி கின்ற வுயிரு மில்லை" 3 என்புழியும் 4. வீயாமை நீங்காமைக்கண் வந்தது.

தெளி.—(இ-ன்). எனைப்பகையுற்றரும்-எவ்வகையு பெரிய பகையையுடையவரும், உய்வர் (அப்பெரிய பகையை ஒருவழியால்) தப்பிப்போவர். (அப்படியல்லாமல்), வினைப்பகை - தீவினையாகிய பகையானது, வீயாது - நீங்காமல், பின்சென்று - சென்றவிடத்திற்சென்று, அடும் - கொல்லும்.

வீயாது என்பதிங்கு நீங்காது என்னும் பொருளில் வந்தது.

(க - து). மிகப்பெரிய பகைக்குத் தப்பிலுலும் தீவினையாகிய பகைக்குத் தப்புதல் முடியாது என்பது.

7. However great be the enmity men have incurred they may still live. The enmity of sin will incessantly pursue and kill.

ஏ தீயவை செய்தார் கெடுத லிழவன்னை
வீயா தடியுறைந் தற்று.

பரி.—(இ - ள்). பிறர்க்குத் தீவினைகளைச் செய்தார் தாங்கெடுதல் எத்தன்மைத்தேனின், ஒருவனிழலை நெடிதாகப் போயும் அவன்றன்னை விடாது வந்து அடியின்கண் தங்கிய தன்மைத்து, (எ - று).

5 இவ்வுலமையைத் தன்காலம் வருந்தினையும் புலனுசாது உயிரைப் பற்றி கின்று, அது வந்தழி உருப்பதாய தீவினையைச் செய்தார் பின் அதனுற் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாருமுளர். அஃதுரையன்றென்

1. புக்குழிப் புக்குக்கொல்லும் - (தாம்வேறுசரீரத்தில்) புக்க (பிரவேசித்த) விடத்து (தானும் உடனே) வந்து (பிறவிதோறும்) வருத்தும்.

2. புறநானூறு, 363. இதன்பொருள் நீங்காமலுடலோடு கூடி நின்ற வுயிர்களுமில்லை யென்பது. 3. என்புழியும் - என்றவிடத்தும்.

4. வீயாமை யென்பது நீங்காமையென்னும் பொருளில் வந்தது.

5. நிழனன்னை, வீயா தடியுறைந் தற்று' என்னும் இவ்வுவமானத்தை (பயனைக் கொடுத்தற்குரிய) தன்னுடைய காலம்வருமளவும் வெளிப்படாது. [தீவினையாகிய தன்னைச்செய்த] உயிரைப்பற்றி (உயிரினது அந்தக் காரணத்தில் சம்ஸ்காரவடிவாய்) நின்று அது (தன்னுடைய பயனைக்

பதற்கு அடியுறைந்த நிழல் தன்னே வீக்தற் றென்னுது 'வீயாதடியுறைந் தற்று'என்றபாடமே சரியாயிற்று. மேல் 'வீயாது பின்சென்றடும்'என்ரூர், ஈண்டு அதனே உவமையான் விளக்கினர்.

தெளி:—(இ - ள்). தீயவை - தீவினைகளே, செய்தார் - (பிறர்க்குச்) செய்தவர், கெடுதல் - (தாம்) கெடுதல், (எத்தன்மையதென்ரூல்), நிழல் - (ஒருவனது) நிழலானது, (நெடுந்தூரம்போயினும்), தன்னே-அவன்றன்னே, வீயாது - விடாதவண்ணம், அடி - (அவனது) அடியினிடத்து, உறைந்தற்று - தங்கிய தன்மையதாம், (எ - று).

மூற்செய்யுளில்'வினேப்பகை, வீயாது பின்சென் றடும்'என்றுகூறிய வர், இங்கு அதனே 'நிழறன்னே,வீயா தடியுறைந் தற்று' என்னும்உவமானத் தினுல் விளக்கினர். (அடி-பாதம்).

(க - து). தீவினேயானது நிழல்போலத் தன்னேச் செய்த வனேயே பற்றி நின்று வருத்தும் என்பது.

8. Destruction will dwell at the heels of those who commit evil even as their shadow that leaves them not.

கொடுத்தற்குரிய காலம்) வந்தபோது வெளிப்படுவதாகிய தீவினேயைச் செய்தவர் பின்னர் அத்தீவினேயால் கெடுதற்கு உவமானமாக்கிச் சொல்லு வாருண்டு. இதன் கருத்தாவது ஒருபொருளின் நிழலானது (விளக் கொளி முதலியன மின்றிய இருளில்) ஒளிவருமளவும் வெளிப்படாது அப்பொருளேப்பற்றி யிருந்து, ஒளிவந்தபோது வெளிப்பட்டுத் தோன்று தல்போன்று, ஒருவன் செய்த தீவினேயானது தனதுபயனே அவன் அனு பவித்தற்குரிய காலம் வருமளவும் வெளிப்படாது அவனது அந்தக்கர ணத்தில் சம்ஸ்கார வடிவாய் நின்று தனது பயனே யனுபவித்தற்குரிய காலம் வந்தபோது வெளிப்பட்டு அவனே வருத்தும் என்பது. இவ்வுரை ஒருவனது நிழலானது நெடுந்தூரம் போனலும் அவனே விடாது வந்து அவனடியில் தங்கும் தன்மையைப் போன்று ஒருவன்செய்த தீவினேயா னது (பயனேக்கொடுக்குங் காலம் வாராமை காரணமாக) லிலயிதுபோலக் காணப்பட்டாலும் அவனேவிடாது வந்து வருத்தும் என்னும் பரிமேலழக ரது அபிப்பிராயத்திற்கு மாறுபட்டதா மென்க. [இவ்வுரை 'அடியுறைந்த நிழல்தன்னே வீந்தற்று' என்று பாடமிருந்தால் ஒக்கும், அவ்வாறின்றி 'வீயா தடியுறைந்தற்று' என்று பாடமிருப்பதால் ஒவ்வாது என்று பரிமே லழகர் அதனே மறுத்தனர்]. அஃதுரையாகா தென்பதற்கு அடியுறைந்த நிழல் தன்னே வீந்தற்று (தன்னேவீந்தற்று—தான் மறைந்திருந்ததை வெளிப்படுத்திய தன்மைத்து.) என்று கூறுது வீயர் தடியுறைந்தற்று என்ற பாடமே சரி (சாட்சி) யாயிற்றென்பது. மேல் (வினேப்பகையுற்ருரு மும்வர் வினேப்பகை, வீயாது பின்சென் றடும். என்னுங்குறளில்)'வீயாது பின்சென்றடும்' என்றவர், ஈண்டு (தீயவை செய்தார் என்னுமிக்குறளில்) அதனே (வீயாது பின்சென் றடும் என்பதனே) உவமானத்தினுல் விளங் கச் சொன்னரென்பது.

கூ. தன்னைத்தான் காதல ஞயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

பரி.—(இ-ள்). ஒருவன், தன்னைத்தான் காதல் செய்தல் உடைய ஞயின், தீவினையாகிய பகுதி * எத்துணையுஞ் சிறிதொன்றாயினும் பிறர் மாட்டுச் செய்யா தொழிக, (எ - று)

$ நல்வினை, தீவினையென வினைப்பகுதி இரண்டாகலின் 'தீவினைப் பால்' என்றார். பிறர்மாட்டுச்செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம் பயத்தலே விளக்கினராகலின் 'தன்னைத்தான் காதலஞயின்' என்றார். இவை யாறுபாட்டாலும் பிறர்க்குத் தீவினைசெய்யிற் றங்கெடுவரென்பது கூறப் பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவன்) தன்னை—, தான்—, காதலஞயின்-விரும்புதல் செய்தலுடையவனாயிருந்தால், தீவினைப்பால் - தீவினையாகிய பகுதி,எனைத்தொன்றும்—எவ்வளவுஞ்சிறிய தொன்றானும்,துன்னற்க-(பிறரிடத்து) செய்யாதிருக்கக் கடவன், (எ - று).

நல்வினை தீவினை என்று வினையின்பகுதி இரண்டாகலின் 'தீவினைப் பால்' என்றார். பிறரிடத்துச்செய்த தீவினை தன்னிடத்துத் துன்பந் தருதலே விளக்கினராதலால் 'தன்னைத்தான் காதலஞயின்' என்றார். இவை ஆறுபாட்டாலும் பிறர்க்குத் தீவினைசெய்தால் தாம் கெடுவரென்பது சொல்லப்பட்டது. (பகுதி-பாகம்).

(க - து). ஒருவன் தன்னைப்பாதுகாக்க விரும்பினால் பிறர்க்குத் தீமைசெய்யாதிருக்கக் கடவன் என்பது.

9. If a man love himself let him not commit any sin however small.

கo. ‡ அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

* எத்துணைச் சிறிதொன்றாயினும் என்றும் பாடமுண்டு.

$ இலக்கணக்கொத்து "அவைதா - மனமொழி" என்னுஞ் சூத்திரத்தினுரையில் 'பட்டணத்துப் பிள்ளையார் வினைகளே வரம்பு (எல்லை) செய்யுமிடத்து 'செய்தன வெலவே செய்வன வெலவே, செய்யா நிற்பன வெலவே யவற்றிடை, நன்றென்ப வெலவே தீதென்ப வெலவே, யொன்றினும் படாதன வெலவே' என மூவினை கொண்டார்" என்று கூறுகின்றது.

‡ பிரயோக விவேகனூலார் "ஆக்கிய சொற்க டருதி" என்னுஞ் செய்யுளினுரையில் அருங்கேடன் என்பதனைக் கேடரியன் என விருதி பிரித்துக் கூட்டுவர்.

பரி.—(இ - ள்). ஒருவன் சேந்நெறிக்கட் செல்லாது கொடுநெறிக் கட் சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச்செய்யானெயின், அவனை, அரி தாகிய கேட்டையுடைய னென்பதறிக (எ - று).

* அருமை - இன்மை. அருங்கேடனென்பதனை † ''சென்றுசேர் கல் லாப் புள்ள புள்ளி லென்றூழ் வியன்குளம்'' என்பது போலக்கொள்க. ஒடி என்னும் வினையெச்சம் செய்யானென்னும் எதிர்மறைவினையுட் ‡ செய்தலோடு முடிந்தது. இதனுற் றீவினைசெய்யாதவன் கேடிலனென் பது கூறப்பட்டது.

* அருமை - அருங்கேடன் என்பதன் அருமையென்னும்பகுதி. இஃது இல்லாமை யென்னும் பொருளே யிங்கேயுணர்த்திற்று ''தனக்கு வமை யில்லாதான் முன்சேர்ந்தார்க் கல்லான், மனக்கவலை மாற்ற லரிது'' என்னுங் குறளின் விசேடவுரையில் ''உறற்பால தீண்டா விடுதலரிது'' என்றுற்போல வண்மை யருமை யின்மைமே னின்றது'' என்றுகூறியிருத் தலுங்கருதத்தக்கதாம்.

கேடரியன் என்பதை அருங்கேடன்என்றதை வடமொழிப்புணர்ச்சி. ' இக்கான் கியல்பு மியம்புவர் மொழிக்கும்'' என்னுஞ்சூத்திரத்தினுரையில், ''இனிச் சொற்கள் இங்ஙனந் தமிழ்மொழி வியால் நிலைமாறுதலுமன்றி, வடமொழி வியால் நிலைமாறுதலுமுள. உ-ம் செய்தவேள்வியர்; எய்திய செல்வத்தர்; கழிந்தவுண்டியர்; வேண்டாவுயிரர்; அருங்கேடன்; கொண்ட கூட்டத்தான்; கூப்பியகையினர்; வெறுத்தவாசையர்; பொறுத்த சுடையினர்; கெட்டவறுமையர்; லீட்டவவாலினர்; வேர்த்த வெருவார்; கொழுநற் றொழுதெழுவாள்; வாய்பிளந்தறைந்தனன்; குறட்டைலிட் டிறங்கினன், எனவரும்.

இனிச் தமிழ்மொழிவியால் நிலைமாறுதற்கும், வடமொழிவியால் நிலைமாறுதற்கும் வேறுபாடென்னெனின், நிலைமொழியும் வருமொழியுந் திரியாது தம்முள் நிலைமாறுதல்; திரிந்து தம்முள் நிலைமாறுதலென்க. உ-ம்; வைக்குந் தண்ணுலையெரித்து; பருகுவன்யைதேனு யெல்லாங்கெட, எ-ம், வாய்பிளந்தறைந்தனன்; குறட்டைலிட்டிறங்கினன்; எ-ம்,முறையேகா ண்க'' என்று இலக்கணக் கொத்துக் கூறிற்று.

† அகநானூறு 42. இதன்பொருள் சென்று சேருதலேயறியாத பற வைகளேயும் அப்பறவைகளேப்போல (சென்று சேருதலேபறியாத) வெயி லேயுமுடைய பெரியகுளம் என்பது;பறவைகளுஞ்சூரியகிரணமுஞ் சோராத குளமெனபதாம். சென்று சேர்கல்லாப்புள்ளலியன் குளம் என்பது வட மொழிப் புணர்ச்சி. என்றூழ் என்பதற்கு மிங்ஙனமே கொள்க.


‡ பகுதியைத்தொழிற்பெயராகக் கொள்ளுதலே(செய்யென்னும் பகு தியைச் செய்தலென்னும் தொழிற்பெயராகக்கொள்ளுதலே) 'எரினுழாஅர்' என்னுங் குறளில் உழார் என்பதற்கு 'உழுதலேச்செய்யார்'என்றுரை கூறி யிருப்பதாலு மறிக.

தேளி.—(இ - ன்). (ஒருவன் செவ்வையான வழியிற் செல்லாது) *மருங்கோடி* - கொடியவழியிற்சென்று, *தீவினை* - தீவினைகளை, *செய்யானெனின்* - (பிறரிடத்து) செய்யானெயின், *அருங்கேடனென்பது*-(அவன்) கேடில்லாதவனென்பதை, *அறிக* - அறியக்கடவர், (எ-று).

அருங்கேடன் - கேடரியன், அருமை - இன்மைப்பொருளது. ஒடியெண்ணும் வினையெச்சம் செய்யானென்னுமெதிர்மறை வினையின் செய் (செய்தல்) என்னும் பகுதிகொண்டு முடிந்தது. இதனால் தீவினை செய்யாதவன் கேடில்லாதவனுவனென்பது சொல்லப்பட்டது. (மருங்கு-பக்கம்).

(க - து). தீவினை செய்யாதவனுக்குக் கேடுண்டாகாது.

10. Know ye that he is freed from destruction who commits no evil, going to neither side of the right path.



பதினெட்டாவது அத்தியாயம்.

ஒப்புரவறிதல்:—On Benevolence.

பரி.—அஃதாவது உலகநடையினை யறிந்துசெய்தல். 1 உலகநடை 2 வேதநடைபோல 3 அறநூல்களுட் கூறபடுவதன்றித் தாமே அறிந்து

"இனியொரு பொருளின் புடைபெயர்ச்சியே வினையென்பது எல்லார்க்கு மொப்பமுடிந்தது; அவ்வினையைக் கொள்ளுதலால் வினையெச்சமென்பதும் அங்ஙனமுடிந்தது. அவ்வினையெச்சம் வினையைக்கொள்ளுதலன்றி வினையின்மையைக் கொள்ளாது என்பதும் அங்ஙன முடிந்தது. ஆகவே, உண்டுகடந்தான என்பது பொருந்தும். உண்டுகடவான் என்பது பொருந்தாது. இலக்கணவழுவேயாம். ஆகையால் அம்மறைச்சொல்லினுள் முதனிலையைப்பிரித்து ஒருபொருளின் புடைபெயர்ச்சியாகிய புடைபெயர்ந்த கடத்தலென்னுந் தொழிற்பெயராக்கி, வினையெச்சத்தை வினை கொண்டுமுடித்துப் பின்புசெய்யானென்னு மறையைவருவித்து உண்டு கடத்தலைச் செய்யானென்று முடிப்பர். இக்கருத்துப் பரிமேலழகர்க்கும் உரையாசிரியர்க்கும் நியமம். இது மறைச்சொல்லின் முதனிலை விதிப்பொருள் பெற்றது" என்று இலக்கணக்கொத்து நூலாசிரியர் "விதிச்சொன் மறைப்பொருளாகி வருகவும்" என்னுஞ் சூத்திரத்தினுரையிலெழுதியிருப்பது மிங்கறியத்தக்கதாம்.

$ ஒப்புரவறிதற்குப்பயன் இம்மையிற்புகழ். இஃது ஈகை யதிகாரத்தின் அவதாரிகையில் "இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது" என்றும், இவ்வதிகாரத்தின் பத்தாஞ்செய்யுளின் விசேடவுரையில் "புகழ்பயத்தல்நோக்கி" என்றும், கூறியிருத்தலினுலும் விளங்கும்.

1 உலகநடை - லௌகிகப் பிரக்கிரியை. 2 வேதநடை - வைதிகப் பிரக்கிரியை. (நடை - ஒழுக்கம்). 3 அறநூல்கள் - மனுமுதலிய தரும சாஸ்திரங்கள்.

செய்யுந் தன்மைத்தாகலின் 'ஒப்புரவறிதல்' என்றார். † மேல் மன மொழி மெய்களால் 5 தவிரத்தகுவன கூறினார். இஃசீசெய்யத் தகுவன வற்றுள் 6 எஞ்சினின்றன கூறுகின்றராகலின், இது நீவினை யச்சத்தின் பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது உலகுகடையைஅறிந்து(உபகாரஞ்)செய்தலாம். லெனிகெழுக்கமானது வைதிக வொழுக்கம்போலத் தருமசாஸ்திரங்களுள் சொல்லப்படுவதல்லாமல் தாமே அறிந்துசெய்யுந் தன்மையதாதலால் 'ஒப்புரவறிதல்' என்றார். மூன்னர் மனோவாக்குக் காயங்களாற் செய்யத்தகாதனவற்றைச் சொல்லினர். இனிச் செய்யத்தகுவனவற்றுள் (மூன் சொல்லப்பட்டனவற்றுள்) அடங்காதனவற்றைச் சொல்லுகின்றாராகையால், இது (ஒப்புரவறிதல்)நீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

க. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்ஞற்றுங் கோல்லோ வுலகு.

பரி.—(இ - ள்). தமக்கு நீர் உதவுகின்ற மேகங்களினிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்யாதின்றன, ஆகலான், அம்மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவனல்ல.

என்ஞற்றும் என்ற வினையாதும் ஆற்று என்பது தோன்ற நிற்றலின் § அது வருவித்துரைக்கப்படும். ‖ தவிருந்தன்மையவல்ல வென்பது கடப்பாடென்னும் பெயராலே பெறப்பட்டது. ¶ செய்வாரது வேண்டாமையைச் செய்யப் படுவனமே லேற்றினர்.

தெளி.—(இ - ள்). உலகு - உயிர்கள், மாரிமாட்டு—(தமக்குநீருதவுகின்ற)மேகங்களினிடத்து, என்-என்ன பிரதியுபகாரத்தை, ஆற்றும்-செய்கின்றன, [ஒன்றும் செய்கின்றனவில்லை.] (ஆதலால்), கடப்பாடு - (அம் மேகங்கள் போல்வார் செய்யும்) உபகாரங்களும், கைம்மாறு-பிரதியுபகாரங்களை, வேண்டா - வேண்டுவனவல்ல, (எ - று).

கொல், ஓ, அசை. (உலகு) 'என்ஞற்றும்' என்னுங்கேள்வி (உலகு) யாதும் ஆற்று (செய்யா) என்பது தோன்றநிற்றலால், அது வருவித்துச் சொல்லப்பட்டது. கடப்பாடென்னும் பெயரிஞலேயே(உபகாரங்கள்) அவையுஞ் செயத்தக்கனவென்பது பெறப்பட்டது. கடப்பாடு-முறையறிந்து

---

† மேல் - முன்னே. அஃதாவது பிறனில் விழையாமை, அழுக்காறுமை, வெஃகாமை, புறங்கூறுமை, பயனில சொல்லாமை, நீவினையச்சம் என்னும் அதிகாரங்களில். 5 தவிரத்தகுவன-ஒழிக்கத்தக்கவை. 6 எஞ்சினின்றன - மிருத்துசின்றவை.

§ அது - யாதும் ஆற்று என்பது.

‖ தவிருந்தன்மையவல்ல - ஒழிக்குந்தன்மையன அல்ல.

¶ இது வினைமுதலினது பண்பு செயப்படுபொருண்மேலாய வுபசார வழக்கு.

செய்யுமுபகாரம். உபகாரஞ்செய்வாரது வேண்டாமையை அவரால் செய்யப்படும் உபகாரத்தின்மேலேற்றிக் கடப்பாடு கைம்மாறுவேண்டாஎன்று கூறினர்.

(க - து). அறிவுடையார் பிறர்க்குக் கைம்மாறுகருதாது உபகாரங்கள் செய்வர் என்பது.

1. Benevolence seeks not a retrun. What does the world give back to the clouds?

உ. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டே.

பரி.—(இ - ள்). * தகுதி யுடையார்க் † காயின் முயறலேச் செய்து ஈட்டிய பொருள் முழுதும் ஒப்புரவு ‡ செயற்தற் பயத்தவாம்.

$ பிறர்க்குதவாதார் பொருள் போலத் தாமே உண்டற்பொருட்டும் வைத்திழத்தற் பொருட்டும் அன்றென்ப தாயிற்று.

தெளி.—(இ - ள்). தக்கார்க்கு - தகுதியுடையவர்க்கு (ஆயின்), தாளாற்றி - முயற்சிசெய்து, தந்த - சம்பாதித்த, பொருளெல்லாம்-பொருளனைத்தும், வேளாண்மை - உபகாரத்தை, செய்தற்பொருட்டு - செய்தற் பயனுடையனவாம், (எ - று).

(தக்கார் முயற்சிசெய்து சம்பாதித்தபொருள்) பிறர்க்கு உதவி செய்யாதவரது பொருள்போலத் தாமே அனுபவித்தற் பொருட்டும், (சேர்த்து) வைத்து இழத்தற்பொருட்டும் அன்றுமென்பதாயிற்று.

(க - து). தக்கார் முயற்சிசெய்து பொருளீட்சம்பாதிப்பது பிறர்க்கு உபகாரஞ்செய்தற் பொருட்டாம் என்பது.

2. To exercise benevolence towards the worthy is the whole design of labouring and acquiring property.

கூ. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

* தகுதி-கல்வி கேள்வியறிவு ஒழுக்கங்களா லுண்டாகிய யோக்கியம்.

† ஆயின் (ஆனல்) என்பது செய்யுளில் குறைந்து நின்றது.

‡ செய்தற் பயத்தவாம் - செய்தலாகிய பிரயோஜனமுடையனவாம்.

$ இதனுல் சம்பாதித்த பொருளைத் தக்கார்க் குதவித் தாமுமனுபவித்து வரவேண்டு மென்பது பெறப்படுமாறறிக.

பரி:—(இ - ள்). தேவருலகத்தும் இவ்வுலகத்தும் ஒப்புரவுபோல நல்லன பிறசெயல்களைப் பெறுதலரிது, (எ - று).

§ ஈவாரும் எற்றாருமின்றியே யெல்லாரும் ஒருதன்மையராதலின், புத்தேளுலகத்து அரிதாயிற்று ; யாவர்க்கும் + ஒப்பது இதுபோற் பிறி தொன்றின்மையின், இவ்வுலகத்து அரிதாயிற்று. † பெறற்கரிதென்று பாடமோதிப் பெறுதற்குக் காரண மரிதென்றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). புத்தேளுலகத்தும்-தேவருலகத்திலும், ஈண்டும் - இவ்வுலகத்திலும், ஒப்புரவின் - உபகாரம்போல, நல்ல - கல்லனவாகிய, பிற-வேறுசெயல்களோ, பெறல் - பெறுதல், அரிது - அரிதாம், (எ-று).

கொடுப்பாரும் கொள்வாரும் இல்லாமலே எல்லாரும் ஒருதன்மையராயிருத்தலால், தேவருலகத்தில் ஒப்புரவுசெய்தல் அரிதாயிற்று; யாவருக்கும் ஒப்பது இவ்வொப்புரவு போல் வேறொன்றில்லாமையால், இவ்வுலகத்தில் அரிதாயிற்று. இவை மூன்று பாட்டாலும் ஒப்புரவினது சிறப்புச்சொல்லப்பட்டது.

(க-து). விண்ணுலகத்தும் மண்ணுலகத்தும் உபகாரத்திற்கு மேற்பட்டது வேறொன்றில்லை என்பது.

3. It is difficult to obtain another good equal to benevolence either in the world of the gods or in this world.

ச. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் ‖ மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

பரி.—(இ-ள்). உயிரோடுகூடி வாழ்வானுவான் உலக நடையினை யறிந்து செய்வான், அஃதறிந்து செய்யாதவன் உயிருடையவனே யாயினும் செத்தாருள் ஒருவனெகக் கருதப்படும், (எ-று).

§ பொருளைக் கொடுப்பாரும் அதனைப் பெறுவாரும் இல்லாமல் தேவர்க ளெல்லாரும் ஒருதன்மையராயிருக்கின்றன ரென்பது "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்கணவர்" என்றுவரும் பிரயோகத்தானு மறிதற்பாற்றும்.

+ ஒப்பது-ஒப்பத்தக்கதா யிருப்பது.

† பெறலரிதென்பதற்குப் பிரதியாகப் பெறற்கரிதென்று பாடங்கூறி (ஒப்புரவு) பெறுதற்குக்காரணமரிதாமென்றுபொருள் கூறுவாருமுண்டு.

‖ மற்றை யென்பது சுட்டியதற்கினமாய் நின்றது.


உயிரின் அறிவுஞ் செயலுங் காணுமையின் 'செத்தாருள் வைக்கபடும், என்றார். இதனால் † உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறன் உடைத்தன் றென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்). ஒத்ததறிவான் - உலகநடையினை யறிந்துசெய்பவன், உயிர்வாழ்வான் - உயிரோடுகூடிவாழ்பவனுவான், மற்றையான் - அவ்வுலக நடையினை யறிந்து செய்யாதவன், (உயிருடையவனே யானும்), செத்தாருள் - இறந்தவர்களுள், வைக்கப்படும் - (ஒருவனுக) வைக்கப்படுவான் (கினைக்கப்படுவான), (எ - று).

உயிருக்குரிய அறிவையும் செயலையும் மற்றையானிடத்துக் காணுமையால், அவன் 'செத்தாருள் வைக்கப்படும்'என்றார். இதனால் உலகநடையிற் றவறுதல் வேதநடையிற் றவறுதல்போலத் திரும் வழியை யுடைய தன்றென்பது சொல்லப்பட்டது.

(க - து). உலக நடையை யறிந் தொழுகாதவன் பிணத்திற் கொப்பாக கினைக்கப்படுவான் என்பது.

4. He truly lives who knows and discharges the proper duties of benevolence. He who knows them not will be reckoned among the dead.



கூ. * ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

பரி.—(இ-ள்). உலகநடையை விரும்பிச் செய்யும் பெரிய வறிவினையுடையவனது செல்வம், ஊரின் வாழ்வார் தண்ணீருண்ணுங் குளம் நீர் நிறைந்தாற் போலும், (எ-று).

† உலகநடையை யறிந்து செய்தலி னின்றுந் தவறுதல் வேதநடையான வைதிக வொழுக்கத்தி னின்றுந் தவறினுர்க்குக் கழுவாய் (பிராயச்சித்தம்) இருப்பதுபோலத் தீர்திறன் (தீரும்வகை-பிராயச்சித்தம்) உடைய தன் றென்பது சொல்லப்பட்ட தென்பது. இதனுல் வேத நடையினின்றுந் தவறினுர்க்கு அத்தவறுதலி னின்று முய்யும்வகை யுண்டென்றும், உலகநடையினின்றுந் தவறினுர்க்குஅத்தவறுதலினின்று முய்யும்வகையின் றென்றும் பெற்றும்; பெறவே, உலகநடையி னின்றுந் தவறியதாலுண்டாகிய பழி (துரியோதனன் துச்சாதனன் முதலியவர்களது பழிகளைப் போல) உலகமுள்ளளவும் (பழியைச் செய்தவன் சன்மாந்தர வீசேடத்தால் மோட்சமடைந்தாலும் தான் ஒழியாமல்) நிற்குமென்பது நிண்ணமாயிற் றென்க.

* ஊராராலுண்ணப்படுவது என்னும் பொருளதாகிய ஊருணியென்னும் செயப்படுபொருள் இங்கு வினைமுதலாக நின்றது.

† நிறைதலென்னும் இடத்தினிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேலேற்றப்பட்டது. ‡ பாழ்போகாது நெடிதினின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவு மென்பதாம்.

தேளி:—(இ - ன்). உலகு - உலகுகடையை, அவாம் - விரும்பிச்செய்யும், பேரறிவாளன் - பெரியவறிவினை யுடையவனது, திரு - செல்வம், ஊருணி - ஊரில்வாழ்வார் நீருண்ணுங் குளமானது, நீர்நிறைத்தற்று - நீர் நிறைத்தாற்போலும், (எ - று).

நிறைதலென்னும் நீரின் தொழிலை நீருக்கிடமாகிய குளத்தின்மேலேற்றி 'ஊருணி நீர்நிறைந தற்றே' என்று கூறப்பட்டது. அச்செல்வம் பாழ்படாமல் நெடுங்காலமிருந்து எல்லாருக்கும் வேண்டுவனவற்றைத் தவறாது உதவுமென்பதாம்.

(க - து). பேரறிவாளனது செல்வம் ஊராருண்ணுங் குளத்திலே நீர் நிறைந்தாற் போன்று யாவருக்கும் பயன்படுவதாம்.

5. The wealth of that man of eminent knowledge who desires (to exercise the benevolence approved of in) the world is like the full waters of a city tank.

கூ. பயன்மர § முள்ளூர்ப்பழுத்தற்றுற் செல்வ
நயனுடை யாண்கட் படின்.

பரி:—(இ - ள்). செல்வம் ¶ ஒப்புரவுசெய்வான் கண்ணே படுமாயின், அது பயன்படுமரம் ஊர்நடுவே பழுத்தாற்போலும், (எ - று).

0 உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே 'நயன்' என்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுக்கு மென்பதாம்.

---

† நிறைதலென்னும் இடத்து (குளத்து) நிகழ்பொருளாகிய நீரின் (ஜலத்தின்) தொழிலை அதற்கு இடமாகிய குளத்தின்மேலேற்றி 'ஊருணி நீர்நிறைந் தற்றே' என்று சொல்லப்பட்டது. இஃதிடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேலாய வுபசாரவழக்கு.

‡ உலகுகடையை விரும்பிச்செய்யும் பேரறிவாளனது செல்வமானது ஊருணி நீர்போல் பாழ்போகாது நெடுங்காலம் நின்று யாவர்க்கும் அவர் விரும்புவனவற்றைத் தப்பாது உதவுமென்பதாம்.

§ உள்ளூர் என்பது ஊருள் என்பதன் இலக்கணப்போலி; முன்பின் னுகரத் தொக்க குறும் வேற்றுமைத் தொகையுமாம்.

¶ ஒப்புரவு செய்வான் செல்வம் ஊர்நடுவே பயன்படுமரம் பழுத்தாற் போன்றதென்பது "நடுவூருள் வேலிலை சுற்றுக்கோட் புக்க, படுவே யன்னர் பலர்ச்ச வாழ்வார்" என்று நாலடியார் கூறியவற்றைத் தழுவுகின்ற வாறறிக.

0 உலகநீதி பலவாவன - ஒருவரையும் பொல்லாங்கு சொல்லாமை, வஞ்சனைகள் செய்வாரோ டிணங்காமை, மனம்போன போக்கெல்லாம் போகாமை முதலியனவாம்.

தெளி:—(இ - ள்). செல்வம் - செல்வமானது, யெனுடையான்கண் - உபகாரஞ் செய்பவனிடத்தே, படின் - உண்டாகுமாயின், (அல்வண்டா தல்), உள்ளூர் - ஊர்க்குமேயே, பயன்மரம் - (யாவர்க்கும்) பிரயோஜனப்படு கின்ற மரமானது, பழுத்தற்று - (பழம்) பழுத்தாற்போலும், (எ - று).

ஆல் - அசை. உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையால், அவ் வொப்புரவையே 'நயன்' என்றார். அவ்வொப்புரவுடையான் அம்மரம்போல யாவர்க்கும் எளிதிலே பயன்றருபவனுவா னென்பதாம்.

(க - து). உபகாரஞ் செய்பவனிடத்திற் செல்வமுண்டாதல் நடுவூரிலே பயன்படுமரம் பழுத்தாற்போன்று பயனுடையதாம்.

6. The wealth of a man (possessed of the virtue) of benevolence is like the ripening of a fruitful tree in the midst of a town.

எ. மருந்தாகித் தப்பா மரத்தற்றுச் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

பரி:—(இ - ள்). செல்வம் ஒப்புரவுசெய்யும் பெரியதகைமையை யுடையான்கண்ணே படுமாயின், அஃது எல்லாவுறுப்பும் பிணிகட்கு மருந்தாயிற் \$ தப்பாத மரத்தை யோக்கும், (எ - று).

தப்புதலாவது 1 கோடற்கரிய விடங்களி னின்றுதல், 2 மறைந்து நின்றுதல், 3 காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை. 4 தன்குறை

\$ தப்பாத - பயன்படுதலிற் றவறுத.

1 ஒருவன் சென்று கொள்ளுவதற் கருமையான செங்குத்தான மலை முதலிய வீடத்திலிருத்தல்.

2 ஒருவன் சென்று கொள்ளுவதற்கு அருமை யில்லாத புழைக்கடை முதலிய விடத்திலிருந்தும் வேறு பொருள்கள் மறைக்க மறைந்து நிற்றல்.

3. ஒருகாலத்திலிருந்து மற்றொரு காலத்தினாமை.

4. மருந்தாகித் தப்பாத (வேம்பு முதலிய) மரம் யாதொரு மாறுபாடு மில்லாமல் வெளிப்பட்டு நின்று தன்னுடைய நிழல் தளிர் முதலியவற்றை மூறித்தும் பறித்தும் செதுக்கியும் பிறர் செய்யும் தன்னுடைய குறைவை நோக்காது (தன்னுறுப்புக்களே யுபயோகப்படுத்திக் கொள்ளும்) எல்லாரது வருத்தத்தையும் ஒழிப்பது போன்று, பெருந்தகையானனது செல்வமும் யாதொரு மாறுபாடு மில்லாமல் வெளிப்பட்டு நின்று தன்னே யுடைய வன் பிறர்க்குக் கொடுத்தலினுற் குறையும் தன்னுடைய குறைவை நோக்காது எல்லாரது வருத்தத்தையுந் தப்பாம லொழிக்குமென்பதாம். "தங்குறைநீர் வுள்ளார் தனர்ந்து பிறர்க்குதவும், வெங்குறைநீர்க் கிற்பார் வீழுமியோர், நிங்கள், கறையிருளோ நீக்கக் கருதா திலகி, னிறையிருளே நீக்குமே னின்று" என்பது நன்னெறி.

கோக்காது எல்லார் வருத்தமும் தீர்க்குமென்பதாம். இவை மூன்று பாட்டானும் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்). செல்வம்-செல்வமானது, பெருந்தகையான்கண்-(உபகாரஞ்செய்யும்) பெரிய தகைமையை யுடையவனிடத்தே, படின்-உண்டாகுமானால், (அச்செல்வமானது), மருந்தாகி - (எல்லாவுறுப்புக்களும் பிணிகளுக்கு) மருந்தாய், தப்பா - தப்பாத, மரத்தற்று - மரத்தை ஒக்கும்.

ஆல் - அசை. எல்லாவுறுப்புக்களுமென்றது மரத்திற்கு-இலை, பூ, காய், கனி முதலியவற்றை; செல்வத்திற்கு - அனுபவித்தற்குரிய பலபொருள்களை. தப்புதலாவது கொள்ளுதற்கரிய விடங்களிலே நின்றுவது, மறைந்து நின்றுவது, காலத்தால் வேறுபட்டாவது பயன்படாமை. மருந்தாகித் தப்பாத மரமானது தன் குறைவை நோக்காது எல்லார்வருத்தமும் தீர்க்குமாறுபோலப் பெருந்தகையானது செல்வமும் தன்குறைவை நோக்காது எல்லார் வருத்தமும் தீர்க்குமென்பதாம். இவை மூன்று பாட்டாலும் உபகாரஞ் செய்பவனது பொருள் பயன்படுமாறு சொல்லப்பட்டது.

(க - து). பெருந்தகைமையை யுடையவனிடத் துண்டாகுஞ் செல்வம் மருந்தாகித் தப்பாத மரம் போன்று பயனுடையதாம்.

7. Wealth is like a tree which as a medicine is an infallible cure for disease, if it be in the possesion of a man who has the great excellence (of benevolence).

அ. இடனில் பருவத்து மொப்புரவிற் கோல்கார்
கடனறி காட்சி யவர்.

பரி:—(இ - ள்). செல்வஞ் சுருங்கிய காலத்தும் ஒப்புரவுசெய்தலுந் தந்தனராரீ, தாஞ்செய்யுந் தகுவனவற்றை யறிந்த வியப்பை யறிவுடையார், (எ - று).

† பிறவெல்லாம் ஒழியினும், இஃதொழியாதென்பதாம்.

தெளி:—(இ - ன்). கடனறி - (தாம்) செய்யத்தகுங் காரியங்களையறிந்த, காட்சியவர் - இயற்கையறிவுடையவர், இடனில் பருவத்தும்-செல்வஞ் சுருங்கிய காலத்திலும், ஒப்புரவிற்கு - உபகாரஞ்செய்வதற்கு, ஒல்கார் - தளரார், (எ - று).

(கடனறி காட்சியவர் இடம்பொருளேவல் முதலிய) மற்றைய வெல்லா மொழித்தாலும், இவ் வொப்புரவு செய்தலே யொழியா தென்பதாம்.

(க - து). அறிவுடையோர் வறுமை நேர்ந்த காலத்திலும் பிறர்க்குதவி செய்வதிற் குறையார் என்பது.

† "வழங்குவ தள்ளீழ்ந்தக் கண்ணும் பழங்குடி, பண்பிற் றலைப்பிரிதலின்று" என்னுங் குறள் ஈண்டுக் கவனிக்கத் தக்கதாம்.

8. The wise who know what is *duty* will not diminish their benevolence even when they are without wealth.

கூ. நயனுடையா னல்கூர்ந்தா னதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

பரி.—(இ - ள்). ஒப்புரவு செய்த்லையுடையான் நல்கூர்ந்தானதலாவது, தவிராது செய்யும் நீர்மையையுடைய அவ்வோப்புரவுகளைச் செய்யப்பெறாது வருந்துகின்ற வியல்பாம், (எ - று).

தான் நுகர்வன நுகரப்பெருமை அன்றென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் வறுமையான் ஒப்புர வொழிதற்பாற் றன்றென்பது கூறப் பட்டது.

தெளி.—(இ-ள்). நயனுடையான் - உபகாரஞ்செய்த லையுடையவன், நல்கூர்ந்தானுதல் - வறுமையுடையவ னுதலாவது, செயும் - (ஒழியாமற்) செய்யும், நீர - குணத்தையுடைய அவ்வுபகாரங்களை, செய்யாது-செய்யப் பெறாமல், அமைகலாவாறு - வருந்துகின்றவியல்பாம், (எ-று).

தான் அனுபவிக்கும் பொருள்களை யனுபவிக்கப்பெறாமை நயனுடையானுக்கு வறுமையன்றென்பதாம். இவை யிரண்டு பாட்டாலும் வறுமையால் உபகாரம் செய்யாது விடத்தக்கதன்றென்பது சொல்லப்பட்டது.

(க - து). உபகாரி தரித்திரனுவது தான் பிறர்க்குச் செய்யு முதவியைச செய்ய முடியாமையால் வருந்துதலேயாம் என்பது.

9. To be in sorrow through inability to perform the benefits which should be performed is the poverty of a benevolent man.

கo. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக் * கோட் டக்க துடைத்து.

பரி:—(இ-ள்). ஒப்புரவுசெய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பாருளராயின், அக்கேடு (ஒருவன்) தன்னை விற்றுயினுங் கோள் ளுந் தகுதியை யுடைத்து, (எ-று).

† தன்னை விற்றுக்கொள்ளப் படுவதொருபொருள் இல்லையன்றே? இஃதாயின், அதுவுஞ் செய்யப்படுமென்றது; புகழ் பயத்தல் நோக்கி. இதனால் ஒப்புரவினுற் கெடுவது கேடன்றென்பது கூறப்பட்டது.

---

* கொள்ளத் தக்க துடைத்து என்பது செய்யுள் விகாரத்தால் கோட் டக்க துடைத்து என்றுயிற்று.


† ஒருவன் தன்னைப் (பிறர்க்கு) விற்று (விக்கிரயஞ் செய்து) கொள்ளப்படுவதொரு பொருள் (வாங்கப்படும் வஸ்து) இல்லையன்றே? (இன்றுயினும்) இஃதாயின் (ஒப்புரவு செய்தலால் பொருட் கேடுவருமாஞல்)

தெளி.—(இன்). ஒப்புரவினால் - உபகாரஞ் செய்தலால், வருங்கே டெனின் - (ஒருவனுக்குப்பொருட்) கேடு வருமென்பா ரிருப்பாயின், அஃது - அக்கேடானது, ஒருவன்—, விற்ற - (தன்னை) விற்றலினும், கோட்டக்கதுடைத்து - வாங்குக் தருதியை யுடையதாகும், (எ-து).

ஒருவன் தன்னைப்பிறரிடத்து விற்றுத் தான் வாங்கிக்கொள்ளப்படுவ தொரு பொருள் இல்லையல்லவா? ஒப்புரவினால் கேடுவருவதுண்டாயின், அது புகழுண்டாக்குதலைக் கருதி அக்கேட்டின் பொருட்டு அதுவும் (தன்னைவிற்றலும்) செய்யப்படுமென்பதாம். இதனால் ஒப்புரவினால் கெடுவது கேடன்றென்பது சொல்லப்பட்டது.

(க - து). உதவிசெய்தலாற் பொருட்கேடு வருமென்றாலும், அக்கேட்டினை யொருவன் தன்னை விற்றாயினுங்கொள்ளக்கடவன்.

10. If it be said that loss will result from benevolence such loss is worth being procured by the sale of one's self.



பத்தோன்பதாவது அதிகாரம்.

† ஈகை.—*On Alms—deeds.*

பரி.—அஃதாவது $ வறியார் யேற்றார்க்கு * மாற்றுங் கோடுத்தல். ¶ இது மறுமை நோக்கியதாகலின், () இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது வறியராய் இரந்தவர்க்கு இல்லையென்னாது கொடுத்தலாம். இது (ஈகை) மறுமையைக் குறித்ததாகலின், இம்மையைக் குறித்த ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

(அக்கேட்டின்பொருட்டு) அதுவுஞ் செய்யப்படுமென்றது (தன்னை விற்றலும் செய்யப்படும் என்று கூறியது);புகழ்பயத்தலே(கீர்த்தியுண்டாக்கலே) கோடி (என்க). "கெடுவாக வையா துலகங் கடுவாக, நன்றிக்கட் டங்கி யான் ரூழ்வு" என்னுங்குறள் ஈண்டுக் கவனிக்கத் தக்கதாம்.

‡ ஈகை - ஈதல். அஃதாவது உயர்ந்தோன் இழிந்தோனுக்கு அவன் வேண்டியதொன்றைக் கொடுத்தல். ஈதலேப் பெறுவோன் இழிந்தோனென்பது "ஈயென் னெவி யிழிந்தோன் கூற்றே"என்னும் (தொல்காப்பியச்) சூத்திரத்தாலு மினிது விளங்கும்.

$ வறியார் யேற்றார்க்கு - தரித்திரராய் வந்து யாசித்தவர்களுக்கு.

* மாற்றமை - ஒன்றற்கொடுத்துப் பிறிதொன்றை வாங்காமை. பிரதியுபகாரங் கருதாமை யென்றபடி.

¶ இது மறுமை நோக்கியதாகலின் - ஈகையானது மறுமை (மரணத்தின்பின் வரும் பயனைக்) குறித்ததாகலின்.

() இம்மை நோக்கிய - இம்மையைப் (இப்பிறப்பின்) பயனுகிய புகழைக் குறித்த.

க. ‖ வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

பரி.—(இ - ள்). ஒரு பொருளு மில்லாதார்க்கு அவர் வேண்டிய தொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது; அஃதொழிந்த எல்லாக்கொடையும் †† குறியெதிர்ப்பை கொடுக்கும் நீர்மையை யுடைத்து, (எ-று).

† ஒழிந்த கொடைகளாவன ‡ வறிய ரல்லாதார்க்கு ஒரு பயனெதிர் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது அளவுகுறித்து வாங்கி அவ்வாங்கிய வாறே எதிர் கொடுப்பது. ¶ நீரது என்புழி அதுவென்பது பகுதிப் பொருள் விகுதி. $ பின்னுந் தன்பால் வருதலின், 'குறியெதிர்ப்பை நீரதுடைத்து' என்றார். இதனுள் * ஈகைய திலக்கணங் கூறப்பட்டது.

தேவி.—(இ - ள்.) வறியார்க்கு - ஒரு பொருளு மில்லாதவர்க்கு, ஒன்று - (அவர்வேண்டியது) ஒன்றை, ஈவதே - கொடுப்பதே, ஈகை - (பிறர்க்குக்) கொடுத்தலாம், மற்றெல்லாம் - அவ்வறியார்க்குக் கொடுப்ப தொழிந்த எல்லாக் கொடையும், குறியெதிர்ப்பை - குறிக்கப்பட்ட பின் வரும் பயனை (க் கொடுக்கும்), நீரது - குணத்தை, உடைத்து-உடையதாம்.

ஒழிந்த கொடைகளாவன வறியவரல்லாதவர்க்கு ஒரு பயனே நோக்கிக் கொடுப்பனவாம். குறி யெதிர்ப்பையாவது பிறரிடத்து ஓளவு குறித்துப் பொருளே வாங்கி அவ்வாங்கியபடியே அவர்க்கு மீண்டும் எதிராய்க்

‖ இக்குறளின் கருத்தை "ஏற்றகை மாற்றுமை யென்னுஞ் தாம் வரையா, தாற்றுதார்க் கீவதா மான்கட-னுற்றின், மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் தேல், பொலிகட னென்னும் பெயர்த்து" என்னும் காலடிச் செய்யுளானு மறிக.

†† குறியெதிர்ப்பை என்பதில் ஐகாரம் சாரியை. குறியெதிர்ப்பு என்பது இறக்தகால வினைத்தொகை; அஃது (எதிர்காலத்திற் பெறும்படியாகக்) குறித்த எதிர்ப்பு எனவிரியும். இதனது நிரண்டபொருள் எதிர் காலத்திற் பெறும்படியாக வெண்ணி நிகழ்காலத்தில் ஒன்றை யொத்தார்க்கும் மிக்கார்க்குங் கொடுப்பதென்பது.

† ஒழிந்த - வறியவர்களுக்குக் கொடுத்த லொழிந்த.

‡ வறிய ரல்லாதார்க்கு - தரித்திர ரல்லாதவர்களுக்கு; அஃதாவது ஒத்தார்க்கும் உயர்ந்தார்க்கும்.

¶ நீரது என்பதன் அது என்பது நீர்மை யென்னும் பண்பின் விகாரமாகிய நீரென்னும் பகுதியின் பொருளே யுணர்த்தித் தனக்கெனப் பொருளின்றி யிருத்தல்பற்றிப் பகுதிப்பொருள் விகுதியாயிற் றென்க.

$ பின்னுந் தன்பால் வருதலின்—ஒத்தார்க்கும் மிக்கார்க்குங் கொடுத்தலை மறுபடியுந் தம்மிடத்தில் வருதலினால்,

* ஈதற்குரியவர் ஒன்பதின்மரென்றும், ஈதற்குரிய ரல்லாதார் ஒன்பதின்மரென்றும் காகொண்டம் கூறுகின்றது. அதுவருமாறு:—

கொடுப்பது. கீழது என்னுமிடத்து அது பருகுப்பொருள் விகுதி. (அவ் வாறு கொடுத்த பொருள்) பின்னுக் தன்னிடத்து வருதலால் 'குறியெதி ர்ப்பை நீரதுடைத்து' என்றார். இதனால் ஈகையினது இலக்கணம் சொல் லப்பட்டது.

(க - து). தரித்திரருக் கீதலே யீகையாவதன்றி யேனையோர்க் கீதல் ஈகையாகா தென்பது.

1. To give to the destitute is true charity. All other gifts have the nature of (what is done for) a measured return.

2. நல்லா ரெனினுங் கொளனீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

பரி —(இ - ள்). ஏற்றல் வீட்டிலகிந்து நல்லநெறி யேன்பார் உள ராயினும் * அது நீது; ஈத்தார்க்கு அவ்வுல கேய்துது லில்லையென்பா ருளராயினும் ஈதலே நன்று, (எ - று).

† எனினுமென்பது இருவழியும் அங்ஙனங் கூறுவார் இன்மை விளக்கி நின்றது. ‡ பிரிகிலை எகாரத்தால் பிறவறங்களின் ஈதல் சிறந்த தென்பது பெற்றும். § நல்லது கூறுவார் நீயதும உடன் கூறினர்.

"மாண்புடை யாளர் கேண்மையர் தத்தம் வழிமுறை யொழுக்கினி லமர்ந்தோர், சேண்படு கிரப்பி னெயதினோர் புரப்போர் தீர்த்தவர் தக்தை தாய் குரவர், காண்டகு முதவி புரிந்தனோ ரினையோ ரொன்பதின் மரு மூளவ் களிப்ப, வேண்டுறு கிதிய மளிப்பின்மற் றொன்றே கோடியா மெனமறை விளம்பும்."

"மூகனெதி ரொன்றும் பிரியின்மற் றொன்று மொழிபவர் விழை வுற தூத, ரகன்றகேள் வியிலா ரருமருந்த துவர்க ளரும்பொருள் கவருநர் தார்த்தர், புகலருந் நீமை புரிபவர் மல்லர் செருக்கினர் புனறொழிற் றீ யோ, ரிகழ்தரு மினையோ ரொன்பது பெயர்க்கு மீக்கிடல் பழுதென விசைப்பார்."

* அது - ஏற்றல் (யாசித்தற் பிறரீதலேப்பெறுதல்). யாசித்தல் நீதா தலே இரவச்சமென்னு மதிகாரத்திற் காண்க.

† நல்லாரெனினுங் கொளனீது,மேலுலக மில்லெனினு மீதலே நன் று' என்னு மிரண்டு வாக்கியத்திலு முள்ள எனினும் என்பது கொளல் நல்லாறு, ஈதலுக்குப் பயனுக மேலுலக மில்லை என்று அப்படி சொல்லு வாரில்லாமையை விளக்கி நின்றது.

‡ பிரிகிலையாவது பலவற்றினின்று மொன்றைப் பிரித்துக் காட்டி நிற்றல்.

§ நீயதை விளக்கினுலல்லது நல்லது விளங்காமையினுலே 'ஈதலே நன்று' என நல்லது சொல்லவந்தவர் 'கொளனீது' எனத் நீயது முடன் கூறினர். இது ஒன்றினை முடித்தல் தன்னினை முடித்தலென்னு முத்தி. 'மறவற்க மாசற்றார் கேண்மை' என்னுங் குறளின் விசேடவுரையில் "இம்மைக்குறுதி கூறுவார் மறுமைக்குதவியு முடன்கூறினர்", என்று கூறியிருத்தலும் ஈண்டுக் கவனிக்கத்தக்கதாம்.

தெவி.—(இ - ன்). கொளல் - (பிறர் கொடுத்தலே வாங்கிக்) கொள்ளுதல், நல்லதெனினும்-(முத்தியுலகத்தை யடைதற்கு) நல்லவழியெண்பவர் இருப்பாராயினும், (அது), நீத-குற்றமாம்,(கொடுத்தவர்க்கு), மேலுலகம்-(அந்த) முத்தி யுலகத்தையடைதல், இல்லெனினும் - இல்லே யெண்பவர் இருப்பாராயினும், ஈதலே - கொடுத்தலே, நன்று - நல்லது, (எ - று).

எனினுமென்பது இரண்டிடத்தும் அவ்வாறு சொல்லுவாரில்லாமையைக் காட்டிநின்றது. ஈதலே யென்னும் பிரிநிலே ஏகாரத்தால் பிறவறங்களில் ஈதல் சிறந்ததென்பது பெறப்பட்டது. நல்லது சொல்லுவத்தவர் நியதியும் உடன்சொல்லினர்.

(க - து). யாசித்தல் முத்தியடைதற்கு நல்லவழி யென்றாலும் அது செய்தலாகாது. ஈதலால் முத்தியடைதலில்லே யென்றாலும் அது செய்தல் நல்லது என்பது.

2. To beg is evil, even though it were said that it is a good path (to heaven). To give is good, even though it were said that those who do so cannot obtain heaven.

கூ. இலனென்னு மேவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

பரி:—(இ - ள்). யானே வறியனென்று இரப்பான் சொல்லும் இவ்வாஷைவத் தான் பிறர்கட்சொல்லாமையும், † அதனைத் தன்கட் சொன்னர்க்கு மாற்றது ஈதலும் இவை யிரண்டும் உலவாவான குடிப பிறந்தான் கண்ணே, (எ - று).

மேற்றீதென்றது ஒழிதற்கும், நன்றென்றது செய்தற்கும் உரிய வினே யுணர்த்தியவாறு. $ இனி 'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்' என்பதற்கு 1 அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தலெனவும், 2 அதனேப்பின்னும் பிறனெருவன்பாற்சென்று அவனுரையா வகையாற் கொடுத்த லெனவும், 3 யான்

† அதனை - அவ்விளிவரவை (தனபந்தருமொழியை).

$ 'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்' என்பதற்கு (பரிமேலழகர் பிறர் கூறிய மூன்றுரையை யெடுத்தெழுதிக் காட்டினர். அவை வருமாறு:—)

1. இலனென்னுமெவ்வம் - அத்தன்பந்தருமொழியை, (யாசிப்பானெருவன் தனக்கு), உரையாமை - சொல்லுவதற்கு (முன்னே அவன் குறிப்பை யுணர்த்த), ஈதல் - (பொருளைக்) கொடுத்த லென்றும், 2. இலனென்னு மெவ்வம் - அத்தன்பந்தரு மொழியை, உரையாமை - (மறுபடியும் பிறனெருவனிடத்திற் போயவன்) சொல்லாத வண்ணம், ஈதல் - (பொருளைக்) கொடுத்தலென்றும், 3 இலனென்னு மெவ்வம் - (யானிப்போது பொருளுடையேன்) அல்லே னென்று (உலோப குணத்தினுலே

இதுபொழுது பொருளுடையே னல்லே னெண்ணி* ரப்பார் சொல்லும் இனியவரவைச் சொல்லாது கொடுத்தலெனவும் உரைப்பாருருளர். அவர் ஈதலென்பதனைப் பொருட்பன்மைபற்றி வந்த பன்மையாக வுரைப்பர்.

தெளி.—(இ - ன்). இலனென்னும்-(யான்) வறியேனென்று (இரப் பவன்) சொல்லும், எவ்வம் - துன்பந்தருமொழியை, உரையாமை - (தான் பிறரிடத்துச்)சொல்லாமையும், (அதனைத்தன்னிடத்துச்சொன்னவர்க்கு), ஈதல் - (இல்லையென்னாது) கொடுத்தலும், (ஆகிய விவ்விரண்டும்), குல னுடையான் கண்ணே - நற்குடியிற் பிறந்தவனிடத்தே, உள - உண்டா யிருக்கும், (எ - று).

முற்செய்புளில் கொளல்நீது என்றதைச் செய்யாது நீக்குவதற்கும், ஈதலே நன்றென்றதைச் செய்தற்கும் உரியவனை அறிவித்த வாறும்.எவ் வ(துன்ப) மென்பது எவ்வந்தருமொழிக் காதலின் காரியவாகுபெயராம்.

(க :-து).யாசகர் கூறியதைப் பிறரிடத்துச் சொல்லாமை யும் அவர்க்கில்லை யென்னுமல் பொருளைக் கொடுப்பதும் நற்குடி யிற் பிறந்தவரிடத்துண்டாம் என்பது.

3. (Even in a low state) not to adopt the mean expedient of saying "I have nothing," but to give is the characteristic of the man of noble birth.

ச இன்னு தீரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு.

பரி.—(இ - ள்). இரந்தலேயன்றி இரக்கப்படுதலும் இனிதன்று, ஒருபொருளை யிரந்தவர் அது பெற்றதலுல் இனிதாகிய அவர் முகங் காணுமளவும், (எ - று).

* எச்சவும்மையும் முற்றும்மையும் வீகாரத்தாற்றொக்கன. இரக்கப்

தம்மிடத்திலுள்ள பொருளை யாசகர்க்கு) (மறைப்பவர்)சொல்லுந்தன்பந் தருமொழியை, உரையாமை - சொல்லாது, ஈதல் - (பொருளைக்) கொடுத் தலென்னும் பொருள் கூறுவாரு முண்டு. அவர் (அம்மூவகை யுரைகார ரும்) ஈதலென்பதனை ஈயப்படும்பொருள் பன்மை (பலவா யிருத்தல்) பற் றி வந்த பன்மையாக (ஈதல்கள் எனச்) சொல்லுவாரென்க. [ஈயப்படும் பொருள் பலவாதலை முப்பத்திரண்டாறங் கூறுமிடத்துக்காண்க]. "அருத் தியி னிலனென் னுமு னளித்தலு மிலனென் றப்பா, லுரைத்தில ஞசச் சால வுதவலு மேற்கின் முனும், வருத்தற விலனென் னுமை வழங்கிட வரைவில் செல்வம், பொருத்தலு மொன்றி னொன்று புகழ்மிக விளங்கி நிற்கும்" என்று விநாயகபுராணம் இம் மூன்றரையையுமடக்கிக் கூறிற்று.

* இரந்தது தழீஇய வெச்சவும்மை. இரக்கப் படுதலும் என்பது இரந்தலே யன்றி யென்பதனைத்தழுவி யிருப்பதறிக.

பதெல் - இரப்பார்க்கு ஈவலென்றிருத்தல். † அதனை 'இன்னது' என்றது ‡"எல்லா மிரப்பார்க்கொன் றீயாமை" கூடுங்கொல்லோ என்னும் ¶ அச்ச நோக்கி. எனவே, எல்லாப்பொருளும் ஈதல் வேண்டுமென்பது பெறப் பட்டது.

தெளி.—(இ - ள்). (யாசித்தலே யல்லாமல்) இரக்கப்படுதல் - யாசிக் கப்படுதலும், இன்னாது - இன்பஞ்செய்வதன்று, இரந்தவர்-(ஒருபொருளை) யாசித்தவர், (அப்பொருளைப் பெற்றதனால்), இன்முகம் - இனிதாகிய (அவர்) முகத்தை, காணுமளவு - பார்க்குமளவும், (எ - று).

இரக்கப்படுதலு மென்னும் எச்சவும்மையும் அளவும் என்னு முற் றும்மையும் செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றன. இரக்கப்படுதல்-யாசிப் பவர்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பேனென் றிருத்தல். யாசிப் பவர்க்கு அவர் வேண்டியன வெல்லாங் கொடுக்கக் கூடாமை நேரிடுமோ வென்னும் அச்சத்தைக்குறித்து அதனை 'இன்னது' என்றார். எனவே, யாசிப்பவர்க்கு எல்லாப் பொருளும் கொடுத்தல் வேண்டு மென்பது பெ றப்பட்டது.

(க - து). ஈதலுடையார் இரப்பவரது இனிய முகத்தைக் காணுமளவும் வருந்துவர்.

4. To see men begging from us is disagreeable, until we see the pleasant countenance of those who beg.

ரு. $ ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

† அதனை - இரக்கப்படுதலை.

‡ நாலடியார் குடிப்பிறப்பு. 5. இதன்பொருள் பொருந்திய எல்லாப் பொருளையும் யாசிப்பவர்க்குக் கொடுக்கக்கூடாமை என்பது. ¶ "எல்லாம், இரப்பார்க்கொன் றீயாமை யச்சம்" என்பது நாலடியார்.

$ "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத், திறந்தாரை யெண் ணிக்கொண் டற்று" என்றும், "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றும், "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்" என்றும், துறவறத்தாரையுயர்த்திக் கூறி "துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொண், மற்றை யவர்க டவம்" என்று இல்லறத்தாரை யிழித்துக்கூறிய நாயனார் இக்குறளில் இல் லறத்தாரை யுயர்த்திக் கூறியதென்னெனின், 'எறடார்த்தி வின்முருக்கி யெவ்வுலகுங் கைக்கொண்டு, மாறடர்த்த வாழி வலவனைக்-காரெழுதற், கெஞ்சினு ரில்லெனினு மாயனிகனெமேமால்,வஞ்சியா னீர்காட்டார் மன்" என்னுஞ்செய்யுளில் ஒருவனைக்குணம்பற்றிச் சோழனைத் திருமாலுக்கு மேம்பட்டவனென்று சொன்னலும், அச்சோழன் எங்ஙனம் காவற்கடவு ளாய திருமாலுக்குஉயர்ந்தவனுகானே அங்ஙனமே பிறரது பணியைப்போக் குகிமித்தம் பற்றி இல்லறத்தாரைத் துறவறத்தார்க்கு மேம்பட்டவரென்று

பரி.—(இ-ள்). தவத்தான் வலியார்க்கு வலியாவது, தம்மையடைந்த பசியைப் பொறுத்தல்; அவ்வலிதான் அவ்வினம் பொறுத்தற்கரிய பசியை ஈகையான் ஒழிப்பாரது வலிக்குப்பின், (எ-று).

தானும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதார் ஆற்றலின் தானும் பசியாது பிறரையும் அது தீர்ப்பார் ஆற்றல் உன்னென்பதாம்.

தேவி.—(இ-ள்). ஆற்றவார் - (தவத்தால்) வல்லமையுடையவருக்கு, ஆற்றல்-வல்லமையாவது, பயாற்றல்-(தம்மை யடைந்த) பசியைப் பொறுத்தலாகும், (அவ்வல்லமைதான்), அப்பசியை - அப்படி பொறுத்தற்கரிய பசியை, மாற்றவர் - (ஈதலினால்) நீக்குவோரது, ஆற்றலிற்பின் - வல்லமைக்குப் பிற்பட்டதாம், (எ-று).

தானும் பசித்துப் பிறரையும் அப்பசி தீர்க்கமாட்டாத தவத்தினரது வல்லமையிலும் தானும் பசியாது பிறரையும் அப்பசி தீர்ப்பவராகிய இல்லறத்தாரது வல்லமை நல்ல தென்பதாம்.

(க - து). தம்மையடைந்த பசியைப் பொறுக்கும் தவத்தினரது வல்லமையிலும் அப்பசியை யொழிக்கும் இல்லறத்தாரது வல்லமை மேம்பாடுடையதாம் என்பது.

5 The power of those who perform penance is the power of enduring hunger. It is inferior to the power of those who remove the hunger (of others).

சு. அற்ரு ரழிபசி ‡ தீர்த்த லஃதோருவன்
பேற்ரு ன் போருள்வைப் புழி.

பரி.—(இ-ள்). வறியாது மிக்க பசியை அறனேக்கித் தீர்க்க, பொருள்பேற்ற றெருவன் அதனைத் தனக்குதவ வைக்கும் இடம் அவ்வறமாகலான், (எ-று).

§ எல்லா நன்மைகளும் அழிய வருதலின் 'அழிபசி' என்ரூர். அறனெஞ்சிலென்பது எஞ்சின்றது. அற்ரூரழிபசி தீர்த்த பொருள் பின்ற

சொன்னலும், அவர் ஒன்ரூர்தெறலும் உவந்தாரையாக்கலும், வேண்டிய வேண்டியாங் கெய்தலும், தன்னுயிர் தானறப்பெறலும், கூற்றங்குதித்தது முடைய துறவறத்தார்க்கு மேம்பட்டவராதாரென்க.

‡ தீர்த்தல் - தல்சுற்ற வியங்கோள்வினைமுற்று.

§ பசியால் எல்லா நன்மைகளு மழியுமென்பது "மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை, தானந் தவமுயர்ச்சி தாளாண்மை - தேனின், இவ்வந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசியுள் நிடப்புறுத்த போம்" என்னும் வெண்பாவினுலு மறிக.

னக்கே வந்து † உதவு மென்பதாம்.

நேளி.—(இ-ன்) அற்றூர் - வறியவரது, அழிபசி - மிகுந்தபசியை, தீர்த்தல் - (அறஞெஞ்சித்) தீர்க்கக்கடவன், அஃது - அவ்வறம், பொருள் பெற்று ஞெருவன் - பொருளைப்பெற்றவஞெருவன், வைப்புழி - (அப் பொருளைத் தனக்குதவு) வைக்குமிடம் (ஆதலால்), (எ-று).

எல்லா நன்மைகளுங்கெட வருதலால் 'அழிபசி'என்றார். அறஞெஞ்சி யென்பது குறைந்து நின்றது; இஃதிசையெச்சமாம். அற்றூழி பசி தீர்த்த பொருள் பின் பயன்வடிவாகத் தனக்கே வந்து உதவுமென்பதாம்.

(க - து). பொருளைப் பெற்றவன் அதனைத் தனக்குதவு வைக்குமிடம் வறியவர் பசியைத் தீர்க்கும் அறமாம் என்பது.

6. The removal of the killing hunger of the poor is the place for one to lay up his wealth.

எ. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

பரி.—(இ-ள்). எஞ்ஞான்றும் * பகுத்துண்டல் பயின்றவனைப் பசி யென்று சொல்லப்படுந் தீயநோய் தீண்டுதல் இல்லை, (எ-று).

¶ இவ்வுடம்பினின்று ஞானவொழுக்கங்களை யழித்து,அதனுல்வரும் உடம்புகட்குந் தன்பஞ்செய்தலின் 'தீப்பிணி' எனப்பட்டது. ‡ தனக்கு மருத்துவன் ருஞகலின், பசிப்பிணி நணுகாதென்பதாம் இவையாறு பாட்டானும் ஈதலின் சிறப்புக் கூறப்பட்டது.

† உதவுதலாவது தோட் கோட்பாய் (தோளில்கோக்கப்படும் கட்ட முதபோன்றதாய்)ப் பயன்வடிவாக வந்து இம்மை மறுமைகளில் சுகபோக த்தைத் தருதல். நாலடியார் " ஆட்பார்த் தழலு மருளில்கூற் றுண்மை யால், தோட்கோட்புக் காலத்தாற் கொண்மின்' என்று கூறுவதையு மறிக.

பகுத்துண்டல் - வறியவர் முதலியோர்க்குப் பங்கிட்டுண்ணுதல்.

¶ பசியானது இவ்வுடம்பிலிருந்து, (தத்துவ) ஞானத்தையும் அதனை யடைதற்குச் சாதனமான அருளுடைமை புலால் மறுத்தல் முதலிய வொ ழுக்கங்களையு மழித்து, அவ்வாறழித்த நேதுவாக இனிவரும் உடம்புகளுக் குந் துன்பத்தைச் செய்தலினுல் அது (பசி)'தீப்பிணி'என்று கூறப்பட்ட தென்க. இதனுல் பசிப்பிணி எப்பிணியினும் கொடியதென்பதுபெற்றும்.

‡ தனக்கு மருத்துவன் (மருந்தின் தன்மையை யறிந்து கொடுப்ப வன்) தான் என்பது 'எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித், தமக்குத் துணையாவார் தாந்தெரிதல் வேண்டா, பிறர்க்குப் பிறர்செய்வ தண்டோமற் றில்லை, தமக்கு மருத்துவர் தாம்' என்ற பழமொழி கூறுவ தாலு மறிதற்பாற்றும்.

தெளி.—(இ-ன்). பாத்த - (எல்லாரும்) பகுத்த, ஊண் - உண்ணு தல், மீ இயலினை - பழியினவனை, பசியென்னும் - பசியென்று கூறப்படும், நீப்பிணி - நீடுகோய், நீண்டலரிது - நீண்டதெலில்லை, (எ-று).

பசி இவ்வுடம்பின்கணின்று ஞானத்தையும் ஆசாரத்தையுங் கெடுத்து, அவ்வாறு கெடுத்தலால் பின்வரும் உடம்புகளுக்குந் தன்பஞ்செய்தலால் 'நீப்பிணி' என்று கூறப்பட்டது. தனக்கு வைத்தியன் தானேயாகை யால், பசிப்பிணி சேராதென்பதாம். இவை ஆறுபாட்டாலும் ஈதலின் சிறப் புச் சொல்லப்பட்டது.

(க - து). பிறர்க்கிட் டுண்போனுக்குப் பசிநோயில்லையாம்.

7. The fiery disease of hunger shall never touch him who habitually distributes his food to others.

அ. ஈத்துவக்கு மின்ப மறியார்கோ ரூழுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

பரி.—(இ-ள்). தாழடைய பொருளை யீயாதுவைத்துப் பின்னிழ நீதுபோம் அருளிலாதார், வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர் உவத்தலான் அருளுடையாரேயும் இன்பத்தினைக் கண்டறியார் கொல்லோ, (எ-று).

¶ உவக்கு மென்பது காரணத்தின்கண்வந்த பெயரெச்சம்; அஃது இன்பமென்னுங் காரியப்பெயர் கொண்டது. § அறிந்தாராயின், தாழும் அவ்வின்பத்தை யெய்துவதல்லது வைத்திழவாரென்பது கருத்து.

தெளி.—(இ - ள்). தாழுடைமை-தாழுடையபொருளை, வைத்து - (கொடாது) வைத்து, (பின்னே), இழக்கும் - இழந்துவிடும், வன்கணவர்-அருளிலாதவர், ஈத்து (வறியவர்க்கு அவர் வேண்டியபொருள்களைக்) கொடு த்து, உவக்கும் - (அவ்வறியவர்) மகிழுதலால் (அருளுடையார்)அடையும், இன்பம்-மகிழ்ச்சியை, அறியார்கொல்-கண்டறியாரோ, (எ-று).

காரணப்பொருளில் வந்த உவக்குமென்னும் பெயரெச்சம் இன்பமெ ன்னுங் காரியப்பெயர் கொண்டது. வன்கணவர் அறிந்தாராயின், தாழும்

¶ புல்லினவின்பம் என்பது போல யாசகர் உவத்தல் (மகிழ்தல்) காரணமாகவும் (அதனால்) அருளுடையா ரடையும் இன்பம் காரியமாகவும் இருத்தலினால், காரணப் பொருளில் வந்த உவக்கும் என்னும் பெயரெச்சம் இன்ப மென்னுங் காரியப்பெயர்கொண்டு முடிந்ததாயிற்று.

§ தம்முடைய பொருளைப் பிறருக்குக்கொடாது சேர்த்து வைத்துப் பின்னர் (கள்வர்முதலியோர் கொள்ளுதலால்) இழந்துபோகும் வன்கண் ணர் (கொடியோர்) அருளுடையார் ஏழைகளுக்கு அவர்வேண்டிய பொரு ளைக் கொடித்து அவ்வேழைகள் மகிழுதலால் அவ்வருளுடையாரடையும் இன்பத்தை யறிந்தால், அவ்வன்கண்ணரும் அவ்வின்பத்தை யடைவதல் லாமல் பொருளைச் சேர்த்துவைத் திழவாரென்பது கருத்தாமென்க.

அவ்வின்பத்தை யடைவதல்லாமல் பொருளைச் சேர்த்துவைத் திழவாரென் பது கருத்து. (தாமுடைய - தம்முடைய).

(க - து). வறியவர்க்கியாது பொருளைச் சேர்த்துவைத் திழப் பவர் வறியவருக்குப் பொருளைக் கொடுத்து அது காரணமாக அருளுடையாரடையு மின்பத்தை யறியார் என்பது.

8. Do the hard-eyed who lay up and lose their possessions not know the happiness which springs from the pleasure of giving?

கூ. இரத்தலி னின்னது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

பரி:—(இ - ள்). பொருட்குறை நிரப்பவேண்டி வறியார்க்கு ஈயாது தாமே தனித்துண்டல், ஒருவர்க்குப் பிறர்பாற்சென்று இரத்தலினும் இன்னாது ஒருதலையாக, (எ - று).

பொருட்குறை நிரப்பலாவது ஒரோ ரெண்களைக்குறித்து அத்தினை ஈட்டுதலென ஈட்டத்தையே மேற்கொண்டு * இவறிக்கூட்டுதல். தனித் தல் - பிறரையொழித்தல். இரத்தற்குள்ளது அப்பொழுதை யிளிவரவே, பின் நல்குரவில்லை; தமியருண்டற்கு அவை † யிரண்டு முளவாமாகலின் 'இரத்தலி னின்னது' என்றார். ‡ நிரப்பிய வென்பதற்குத் தேடிய வுணவு களே யென்றுரைப்பாரு முளர்.

தெளி:—(இ - ன்). நிரப்பிய - (பொருளின்குறைவை) நிறைக்க வேண்டி, (வறியவர்க்குக் கொடாமல்), தாமே தமியர் - தாமே தனித்தவ ராகி, உணல் - உண்ணுதல், (ஒருவர்க்கு), மன்ற - நிச்சயமாக, இரத்த லின் - (பிறரிடத்திற் சென்று) யாசித்தலினும், இன்னாது - துன்பஞ் செய்வதாம், (எ - று).

பொருளின் குறைவை நிறைத்தலாவது ஒவ்வொரு தொகையைக் குறித்து அவ்வளவு சம்பாதிப்போமென்று சம்பாதித்தலேயே மேற் கொண்டு உலோபஞ் செய்து சேர்த்தல். தனித்தல் - பிறரைச் சேரா வண்ண மொழித்தல். யாசித்தலுக்கு உள்ளது அப்போதை யிழிவே, பின்னே வறுமையில்லை; தனித்தவரா யுண்ணுதலுக்கு அவ்விரண்டு முண் டாமாதலால் 'இரத்தலினின்னது' என்றார்.

---

* இவறுதல்-உலோபஞ்செய்தல். உலோபமாவது தர்மவிரோதமாகப் பிறரது பொருளை விரும்புதல். மெய்ஞ்ஞானவிளக்கம் உலோபத்திற்குவடி வம் "உற்றபொருள் பற்றி யுதவாமை" என்று கூறுகின்றது.

† இரண்டும் - இளிவரவும் (இழிவும்) நல்குரவும் (தரித்திரமும்).

‡ நிரப்பிய என்பதனைச் செய்யிய என்னும் வினையெச்சமாகக் கொள் ளாது அன்சாரியை குறைந்த வினையாலணையும் பெயராக்கி அதற்குத் தே டிய வுணவுகளை யென்றுரை கூறுவாரு முண்டு.

(க - து). மேன்மேலும் சேர்க்க வேண்டித் தம்முடைய பொருளை வறியவர்கட்குக் கொடாது தாமே அனுபவிப்பவர்க்குப் பிறரிடஞ் சென்றுண்ணல் எவ்விதத்திலும் பெருந்துன்பமாம் என்பது. (கூ)

9. Solitary and unshared eating for the sake of filling up one's own riches is certainly much more unpleasant than begging.

கo. சாதலி னின்னாத தில்லை யினீதாஞ்
மீத லியையாக் கடை.

பதி.—(இ-ள்). ஒருவர்க்குச் சாதல்போல இன்னாததொன்றில்லை, அத்தன்மைத்தாகிய சாதலும், வறியார்க்கொன்றீதல் முடியாதவழி இனிது, (எ - து).

§ பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீக்குதலான் 'இனிது' எனச் சுர். இவை மூன்று பாட்டானும் ஈயாமையின் குற்றங் கூறப்பட்டது

தெளி.—(இ - ன்). (ஒருவனுக்கு) சாதலின் - இறத்தல் போல, இன்னாதது - துன்பஞ்செய்வதொன்று, இல்லை—, அதனினும் - அத்தன்மையதாகிய இறத்தலும், ஈதல் - (வறியார்க்கு ஒன்றைக்,) கொடுத்தல், இயையாக்கடை - முடியாத விடத்து, இனிது - இன்பஞ் செய்வதாம், (எ - து).

பிறர்க்குப் பயன் படுவதில்லாத உடற்சுமை நீக்குதலால் 'இனிது' என்குர். இவை மூன்று பட்டாலும் ஈயாமையின் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து). வறியவர்க்கொன்றைக கொடுக்க முடியாத காலத்து இறத்தலே ஒருவற் கின்பந்தருவதாம் என்பது

10. Nothing is more joyless than death, yet even that is joyful where charity cannot be exercised.

---

§ பிறர்க்குப் பயன்படுதலில்லாத வுடற்சுமையினால் உயிர்க்கு யாதும் பிரயோசன மில்லாமையின், அஃதொழிதலே(பூமிக்குப்பார மொழிதலோ டு) அதற்கு இனிதா மென்பது. இதனால் தரித்திரர்களுக்கு அவர் வேண்டிய வற்றைக்கொடாமை மரணவேதனையினும் மிகக்கொடியதாமென்பது பெற்றாம். "வைத்துப் பொருளோ டானுகான் வம்பர் வினாவுஞ் செத்தானே, செத்த பின்னை சென்செய்வான் தீயார் சொல்ல நீட்டலான், மெத்தவருந்தீ மேயன்றி வேறெருவ் தில்லை" என்ற விராடபுராணக் கூறுவதும் இங்குச் சுவனிக்கத்தக்கதா மென்க.

இருபதாவது அதிகாரம்.

புகழ்.—Praise.

பரி.—அஃதாவது ¶ இல்வாழ்க்கைமுதல் ஈகையீறாகச் சொல்லப் பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனுகி இவ்வுலகின் கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. இது பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

தேவி—அஃதாவது இல்வாழ்க்கை முதல் ஈகை ஈறாகச் சொல்லப் பட்ட இல்லறத்தில் நிலைபெறுதொழுகுபவர்க்கு இம்மைப்பயனுகி இவ்வுல கத்தில் விளங்கி யழியாது நிற்குங் கீர்த்தியாம். இது (புகழ்) பெரும்பான் மையும் ஈகைபற்றி வருதலால், அவ்வீகையின பின வைக்கப்பட்டது.

க. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

பரி.—(இ-ள்). வறியார்க்கீக; அதனும் புகழ்ம்பாக வாழ்க, அப்பு கழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதோன்றில்லை ஆகலான், (எ-று).

இசைபட வாழ்தற்குக் கல்வி, ஆண்மை முதலிய பிற காரணங்களு மூளவேனும், ‡ "உணவின் பிண்ட முண்டி முதற்று" ஆகலின், ஈதல்

¶ இல்வாழ்க்கை யென்னும் அதிகாரமுதல் ஈகையெனனும் அதி காரம் ஈறுக-(கடையாக) (உள்ளலிப் பதினொன்பது அதிகாரங்களில்) சொல்லப்பட்ட (பிரமசாரி முதலிய பதினருக்கும் பங்கிட் டுண்டல், மைந்தரைச் சபையில் முந்தியிருக்கச் செய்தல், சுற்றத்தாரிடத்து அன்பா யிருத்தல், விருந்தோம்பல், செயந்நன்றியறிதல் முதலிய) இல்வாழ்க்கைக் குரிய தருமங்களில் தப்பாது நடந்தவர்களுக்கு இப்பிறப்பின் பிரயோஜன மாகி யிவ்வுலகின்கண் (கர்ணன் முதலியோர்களது கீர்த்தியைப்போன்று) விளங்கிக் கெடாது நிற்கும் புகழாமென்க.

‡ புறநானூறு 18.இதன்பொருள் உணவாலுளதாகிய வுடம்புணவை முதலாகவுடையது என்பது. புறநானூற்றின் மூலத்தில் "உண்டி முதற் றே யுணவின் பிண்டம்" என்றும், அதன் விசேடவுரையில்"உணவின்பிண் டம் உண்டிமுதற்றுதலான்" என்று மிருக்கின்றன. பரிமேலழகர் மூலத் தின்படி 'உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" என்று கூறுது அன்வயத் தின்படி 'உணவின் பிண்ட முண்டி முதற்று'என்று கூறினுரென்க. உடல் நிலைத்திருப்பதற்குக் காரணங்கள் பலவிருப்பினும் அவற்றுள் (காற்றுமுத லியவற்றுள்),சோறும் நீரும் நெற்பாயிருத்தல்(''உண்டிகொடுத்தோ ருயிர் கொடுத் தோரே" "உணவெனப்படுவது நிலத்தொடுநீரே''என்று புறநானூ று 18 வது செய்யுளில்கூறுவது மிங்கறியத் தக்கதாம்) போன்று, புகழுண் டாக வாழ்வதற்குக் கல்வி முதலிய பலகாரணங்களிருப்பினும் அவற்றுள், வறியார்க்கொன்று கொடுத்தலே நெற்பாயிருக்கின்றதென் றுணர்க. கலித் தொகை"ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்"என்றுகூறுதலும்,

நெய்த தென்பதற்கு ‡ ஞாபகமாக 'ஈதல்' என்றார். ¶ உயிர்க்கென்பது, பொதுப்படக் கூறினுரேனும், விலங்குயிர்கட் கேலாமையின், மக்களுயிர் மேனின்றது.

தேளி:—(இ-ன்.) ஈதல்- (வறியவர்க்குக்) கொடுக்கக்கடவர், இசைபட (அவ்வாறு கொடுத்தலால்) புகழுண்டாக, வாழ்தல் - வாழக்கடவர், அதுவல்லது - அப்புகழல்லாமல், உயிர்க்கு - (மக்கள்) உயிர்க்கு, ஊதியம் - பயன், இல்லை - (வேருென்று) இல்லை, (ஆதலால்), (எ-று).

புகழுண்டாக வாழ்வதற்குக் கல்வி, ஆண்மை, நற்குடிப்பிறப்பு, நல் லொழுக்கம், செல்வம், நீவினைக்கஞ்சுதல், நுகர்வுகிலைமைமுதலிய வேறுகார ணங்களும் இருப்பனவாயினும், அவற்றுள், ஈகை சிறந்ததென்பதற்கு ஞா பகமாக 'ஈதல்' என்றார். உயிர்க்கெனப் பொதுப்படச் சொல்லினராயி னும், ஈதலா லிசைபட வாழ்தல் பசுபட்சி முதலிய அஃறிணையுயிர்கட்குப் பொருந்தாமையின், அஃறிதலா லிசைப்பட வாழும் மக்களுயிரை யுணர்த்தி நின்றது.

(க-து.) வறியவர்க் கொன்றைக் கொடுத்தலாலுண்டாகும் புகழைப்பார்க்கிலும் மக்களுயிர்க்கு வேறுபயனில்லை என்பது.

1. By giving (to the poor) live with praise. There is no greater profit to man than that.

உ. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கோன்
றீவார்மே னிற்கும் புகழ்.

புறநானூற "செல்வத்துப் பயனே யீதல்" என்ற கூற்றையு மிங்கே யறிய த்தக்கனவாம்.

‡ (உணவாலுளவாகிய வுடம்பிற்கு உண்டிமுதலா யிருக்கின்றது) ஆதலால், ஈகை நெற்புடைய தென்பதற்கு ஞாபகமாக (அறிவிப்பதாக) 'ஈதல்' என்று கூறினுரென்பது.

இம்மலே நீயுடைத்தி, புகையுடைமையால், அக்கலேப்போல என் புழித்நீயுடைமையைப் புகையுடைமை யறிவிப்பதுபோல, இசைபடவாழ் தலே ஈதலுடைமை யறிவிக்கின்ற தென்பது. ஈண்டனுமான மாமாறு:— இவன் இசைபடவாழ்பவன்; ஈதலுடைமையால்; கர்ணனேப்போல என் புது. இசைபடவாழ்வதற்கு ஈதல் ஞாபகமாக விருத்தலின், இது "காதலன் மே லூடல் கரையிதத்தல் காட்டுமொல், மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப- மீதூர, மருங்குவளே வின்முரிய வாணிதக் நீண்ட, கருங்குவளே சேர்த கரு த்து" என்பதுபோன்று ஞாபகவேது வணியாம்.

¶ உயிர்க்கு ஈதலிசைபட வாழ்தல் என்புழி உயிரென்னும் பொதுப் பெயரும் வாழ்தலென்னும் பொதுவினையும் ஈதலிசைபட வென்னுஞ் சிறப்பால் அஃறிணையுயிரை யொழித்து உயர்திணையுயிரையுணர்த்தி நின் றன.

பரி:—(இ-ள்.) உலகத்து ஒன்றுரைப்பார் உரைப்பனவெல்லாம் வறுமையான் இரப்பார்க்கு அவர் வேண்டியதொன்றை ஈவார்கண் நீர்த்தும் புகழாம், (எ-று).

† புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும். அவற்றுள், 'உரைப்பாருரைப்படவை' என எல்லார்க்கும் உரிய வழக்கினையே எடுத்தாராயினும், ‡ இனம்பற்றிப் புலவர்க்கே யுரியசெய்யுளுங் கொள்ளப்படும்; படவே, பாடுவார் பாடுவனவெல்லாம் புகழாமென்பதனுமெ பெற்றும். § ஈதற் காரணஞ் சிறந்தமை இதனுள்ளுங்காண்க. ¶ இதனைப் பிறர்மேலும் நிற்கு மென்பார் தாமெல்லாஞ் சொல்லுக; புகழ் ஈவார்மே னிற்குமென்றுரைப் பாருமுளர். அது புகழது சிறப்பு நோக்காமை யறிக.

தெளி:—(இ-ள்.) உரைப்பார் - (உலகத்தி லொன்றைக்) கூறுபவர், உரைப்பவை யெல்லாம் - கூறுவன வெல்லாம், இரப்பார்க்கு - (வறுமை யால்) யாசிப்பவர்க்கு, ஒன்று - (அவர்வேண்டியது) ஒன்றை, ஈவார்மேல்-கொடுப்பவரிடத்து, நிற்கும் - நிற்கின்ற, புகழ் - கீர்த்தியாம், (எ-று).

புகழ்தான் உரையும் பாட்டும் என்றிருவகைப்படும், அவற்றுள், 'உரைப்பாருரைப்படவை' என்று எல்லார்க்கும் உரிய (உலக) வழக்கையே எடுத்துக் கூறினுராயினும், இனம்பற்றிப் புலவர்க்கே உரியபாட்டும் கொள்ளப் படும்; படவே, பாடுவார் பாடுவனவெல்லாம் இரப்பார்க்கொன் றீவார்மே னிற்கும் புகழாம் என்பதும் பெற்றும். புகழின் காரணங்களுள், ஈதலா லிய காரணம் சிறந்தமை இக்குறளுள்ளுங் காண்க. புலவர்-வித்துவான்கள்.

† புகழ் உரையும்பாட்டுமென விருவகைப்படுதல் "வேற்றுமை யில்லா வீழுத்தினைப் பிறந்து, வீற்றிருந் தோரை யெண்ணுக் காலை, யுரையும் பாட்டு மூடையோர் சிலரே, மரையிலே போல மாய்ந்தினெர் பலரே" என்று புறநானூறு கூறுவதாலு முணரப்படும்.

‡ இனம்பற்றி- சம்பந்தம்பற்றி. (இனமென்பதிங் குபலட்சணமாம்).

§ ஈதற் காரணஞ் சிறந்தமை யிதனுள்ளுங்காண்க - புகழுண்டாக வாழுவதாகிய காரியத்திற்கு வறியவர்க்கு அவர்வேண்டிய தொன்றை யீதலாகிய காரணம் வேறு காரணங்களிலுஞ் சிறந்திருத்தலே யிப்பாட்டினிடத்துங் காண்க.

¶ இத்திருக்குறளை உரைப்பாருரைப்பவையெல்லாம்(உரைக்க), புகழ் இரப்பார்க்கொன்றீவார்மேல் நிற்கும் என இரண்டு முடிபாக்கி, இதனை(புகழை) வல்லியாண்மை முதலியவற்றையுடையபிறரிடத்தும் (புகழ்) நிற்குமென்பார் தாமெல்லாஞ் சொல்லட்டும்; புகழ்(வறியவர்க்கொன்று) கொடுப்பாரிடத்து நிற்குமென்றுரை கூறுவாருமுண்டு. அவ்வாறு கூறுதல் பேசுவார் பேசுவனவும் பாடுவார் பாடுவனவும் வறியார்க்குக் கொடுப்பாரது கீர்த்தியாமென்பது போலப் புகழின்சிறப்பைக் குறிக்காமை காண்க. பிறர் கூறியவுரை அதிகாரத்திற் கேற்ப ஈவார்மேல் நிற்கும்புகழின் சிறப்பையே குறிக்கொது பிறரது புகழின் சிறப்பையும் குறித்தல் பற்றி மறுக்கப் பட்டதென்க.

(க-து.) கீர்த்திக்குரியார் ஈகையாளரே என்பது.

2. Whatsoever is spoken in the world will abide as praise upon that man who gives one alms to the poor.

ரூ. ¶ ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
போன்ரு நிற்பதோன் றில்.

பரி:— (இ-ள்.) தனக்கு இணையின்றக வோங்கிய புகழல்லது உலகத்து இறவாதுநிற்பது பிறிதோன்றில்லே, (எ-று).

இணையின்றக வோங்குதலாவது கொடுத்தற் கரிய ‡ உயிர் உறப்புப் பொருள்களைக் கொடுத்தமைபற்றிவருதலால் தன்னெடொப்பதின்றித் தானே உயர்தல். * அத்தன்மைத்தாகிய புகழே செய்யப்படுவ தென்பதாம். இனி ஒன்ரு வென்பதற்கு ஒரு வார்த்தையாகச் சொல்லினெனவும், † ஒரு தலேயாகப் பொன்ரு நிற்பதெனவும் உரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது.

தேவி.—(இ - ன்). ஒன்ரு - (தனக்கு) ஒப்பில்லேயாக, உயர்ந்த - ஓங்கிய, புகழல்லால் - கீர்த்தியல்லாமல், உலகத்து - உலகத்தில், பொன்ரு து - அழியாமல், நிற்பது - நிலேபெறுவது, ஒன்று - வேரொன்று, இல் - இல்லே.

(புகழ்) தனக்கு ஒப்பில்லேயாக வோங்குதலாவது கொடுத்தற்கரிய உயிரையும், உறப்பையும், பொருளேயும் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னேடு ஒப்பது இல்லாமல் தானே உயர்தல். அத்தன்மையதாகிய புகழையே மக்கள் சம்பாதிக்க வேண்டுமென்பதாம். இவை மூன்று பட்டாலும் புகழது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து). உலகத்திலழியாது நிற்பது புகழேயாம் என்பது.()

¶ "இகிலத்து, மன்னுதல் வேண்டி னிசைநடே":—நாண்மணிக்கடிகை.

‡ பிறர்க்குதவியாமாறு உயிரைக் கொடுத்தவர் தலேசி முனிவர்; உறுப்பை (சதை முதலிய அவயவங்களே)க் கொடுத்தவர் சிபிச் சக்கரவர்த்தி; கவச குண்டல முதலிய பொருளேக் கொடுத்தவன் கர்ணனென்க.

* அத்தன்மைத்தாகிய புகழ் - தனக்கு ஒப்பில்லேயாக வோங்கிய கீர்த்தி; அஃதாவது தனக்காதாரமாகிய வுலகமுள்ளவளவும் உயிரும் உறப்பும் பொருளும் கொடுத்தலா லுண்டாகி யழியாது ஆதேயமாய் நிற்ப தாகிய கீர்த்தியாம்.

இதனுல் ஆதாரமாகிய உலகமுள்ளவளவும் ஆதேயமாகிய புகழ்நிற்கு மென்பதாயிற் றென்க. இது "சாதல்வந் தடுத்த காலுந் தனக்கொரு சாதலின்றிப், பூதல மிறக்குங் காலும் புகழுடம் பிருக்கும்" என்று வீரசோழியபுராணம் கூறுவதாலு மறியப்படும்.

† ஒன்ரும் பொன்ரு து நிற்பதுநிச்சயமாகவழியாது நிலேபெறுவது.

3. There is nothing that stands forth in the world imperishable, except fame, exalted in solitary greatness.

ச. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றுது புத்தே ளுலகு.

பரி.—(இ-ள்). ஒருவன் நிலவெல்லைக்கண்ணே பொன்றுது நிற்கும் புகழைச் செய்யுமாயின், புத்தேளுலகம் அவனையல்லது தன்னை செய்திநின்ற ‡ ஞானிகளைப் பேணுது, (எ-று).

§ புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே யெய்தாமையின் 'புலவரைப்போற்றுது' என்றார். ¶ அவன் இரண்டுலகும் ஒருங்கெய்துதல் † "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வல வனேவா வான வூர்தி, யெய்துப வெண்பதஞ் செய்வினை முடித்து" எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது.

தெளி.—(இ-ன்). (ஒருவன்) நிலவரை-பூமியினெல்லையிலே, நீள் புகழ்-அழியாது நிற்கும்புகழை, ஆற்றின்-செய்வானுயின், புத்தேளுலகுசுவர்க்கலோகமானது, (அவனை யல்லாமல்), புலவரை-(தன்னை யடைந்திருக்கிற) ஞானிகளை, போற்றுது-விரும்பாது, (எ-று).

(புகழைச்செய்பவன் புகழுடம்பால் இவ்வுலகத்தையும் தேவவுடம்பால் அவ்வுலகத்தையும் ஒருமிக்க அடைதல் போல) ஞானிகள் புகழுடம்பால்

‡ ஞானிகளென்றது ஞானயோகங் கைவரப்பெறுது அப்பியாசகலேயிலிருந்து மறுமையில் (சுவர்க்கத்தில்) (கரும) தேவரானவர்களை. "(யோகஞ் செய்தும் பூரணமாய்ச் செய்யாதுவிட்டவனுகிய) யோகப்பிரஷ்டன் புண்ணியஞ் செய்தவர்களது உலகங்களையடைந்து வெகுகாலஞ் சுகமாயிருந்து, சதாசாரமுள்ள ஐசுவரியவான்களுடைய வீட்டிற் பிறக்கிறன்" என்பது பகவத்கீதை ஆறுவதத்தியாயம்.

§ திறவறத்திற்சென்று தத்துவஞானம் பெறுது இறந்தவர்கள் மறுமையில் தேவவுடம்பையன்றியிடமையில்புகழுடம்பைப்பெறுமையால்(இயற்கைத்) தேவர்கள் அவர்களைப் புகழுடம்பில்லாமை பற்றி விரும்பாது, பூதவுடம்பைக்கொண்டு இம்மையில் ஈகையால் புகழுடம்பையும் மறுமையில் தேவவுடம்பையும் பெற்றவனையே விரும்பிப் போற்றுவாரென்றறிக.

¶ அவன் இரண்டுலகும் ஒருங்கெய்துதல்-புகழுடையான் புகழுடம்பால் இவ்வுலகத்தையும் தேவவுடம்பால் விண்ணுலகத்தையும் ஒருசேர அடைதல்.

† புறநானூறு, உஎ. இதன்பொருள்:—புலவரால் பாடப்படும் புகழையுடையோர் ஆகாயத்தின்கண் பாகனுற் செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவாரென்று சொல்லுவா ரறிவுடையோர் தாஞ்செய்யும் நல்வினையை முடித்த என்பது. புலவர்பாடும் என்னுஞ் செய்யுளைப் புலவர் பாடும் புகழுடையோர் தஞ்செய்வினை முடித்து விசும்பின் வலவ னேவா வான வூர்தி யெய்துப வெண்ப என்றர்வயித்துக் கொள்க.

இவ்வுலகத்தையும், தேவவுடம்பால் அவ்வுலகத்தையும் ஒருமிக்க அடையாமையால், புத்தேளுலகு 'புலவரைப் போற்றாது' என்றார்.

(க - து). தேவர்கள் தம்மையடைந்துள்ள புலவரை விரும்பாது புகழுடையாரையே விரும்புவார்கள் என்பது.

4. If one has acquired extensive fame within the limits of the earth, the world of the Gods will no longer praise the yogis who have attained that world.

இ. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

பரி.—(இ - ள்). புகழுடம்பிற்கு ஆக்கமாதுங் கேடும் புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடும் சதுரப்பாடுடையார்க் கல்லது இல்லை, (எ - று).

‡ நற்றென்னுஞ் தொழிற்பெயர் விகாரத்தான் நத்தென்றாய், பின் அம் என்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று, நத்தமென்றாயிற்று. † போல் வென்பதனின் உரையசை. § ஆகு மென்பதனை முன்னுங்கூட்டி, அரி தென்பதனைத் தனித்தனி கூட்டியுரைக்க. ஆக்கமாகுங் கேடாவது ¶ புக

‡ பொருந்தல் என்னுந் தொழிற்பெயர் பொருத்தம் என்றாற்போன்ற நத்தலென்னுந் தொழிற்பெயர் நத்தம் என்றாயிற்று என்று கொள்ளினுங் குற்றமாகாது.

† போல் என்பது இங்கு உவம வுருபாகாது உரையசையாய் நின்றது. நிறுத்த பொருளுணர்த்தி வாக்கியத்தை யலங்கரித்து நிற்பது உரையசை யெனப்படும். உவம வுருபு உவமவுரு பாகாது வருமிடத்து அஃது ஒப்பில் போலியென்று சொல்லப்படுகின்றது. ஒப்பில்போலி - ஒப்புமை யுணர்த்தாத போலி. ஒப்பில்போலியாய் வரும் உரையசைச் சொல்லைப்பற்றிப் பிரபோதசந்திரோதய நூலார் "ஆக்கும் பிரதி பதத்துடன்" என்னுஞ் செய்யுளினாலையில் விரித்துக் கூறியிருக்கின்றனர். அங்ஙு ஒப்பில் போலி வாக்கியாலங்காரத்தில் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

§ உளதாகு மென்பதன்கணுள்ள ஆகும் என்பதனை நத்தமென்பதனோடுகூட்டி நத்தமாகுங் கேடு என்றும், அரிது என்பதனைக் கேடு என்பதனோடும் சாக்காடு என்பதனோடும் கூட்டி நத்தமாகுங் கேடரிது உளதாகுஞ் சாக்காடரிது என்றுங்கொள்க. இங்ஙுக்காட்டிய அன்னுவயத்தின்படி வித்தகர்க்கு (அறிவுடையவர்க்கு) அல்லாமல் மற்றவர்க்கு (மூடர்களுக்கு) நத்தமாகுங் கேடும் உளதாகுஞ் சாக்காடுமில்லை யென்றாயிற்று; ஆகவே, வித்தகர்க்கு நத்தமாகுங்கேடும் உளதாகுஞ்சாக்காடு முண்டாமென்பது பெற்றாம்.

¶ புகழுடம்பு (கீர்த்தியாகியவுடல்) விருத்தியடைய அதற்குச் சாரணமாகிய பூதவுடம்பு (பிருதிவிமுதலிய பூதங்களாலாயவுடல்) தரித்திருத்தையடைதல். அஃதாவது புகழுடம்பு விருத்தியடையவடையப் பூதவுடம்பிற்குக் குறித்த நாட்கள் குறைந்து கொண்டே வருதலென்பது.

மூடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகுஞ் சரக்காவது § புகழுடம்புநிற்கப் பூதவுடம்பு இறத்தல். ‡ நிலையாதனவற்றுள் நிலையின வெய்துவார் வித்தகராகலின் ‘வித்தகர்க்கல்லாலரிது’ என்றார். இவை யிரண்டு பாட்டானும் புகழுடையாரெய்து மேன்மை கூறப்பட்டது.

தெளி.—(இ - ன்). வித்தகர்க்கல்லார் - அறிவுடையவர்க் கல்லாமல், (மற்றவர்க்கு), நத்தம் (ஆகும்)-(புகழுடம்பிற்குப்) பெருக்கமாகும், கேடும்-வறுமையும், அரிது - இல்லை, உளதாகும் - (புகழுடம்பு) நிலைபெறுவதாகும், சாக்காடும் - மரணமும், (அரிது - இல்லை), (எ - று).

நத்து என்னு முதனிலைத் தொழிற்பெயர் புணர்ச்சிவிகாரத்தால் நத்தி என்றாய்.பின் அம்மென்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று நத்தம் என்றாயிற்று. போல் என்பதிங்குஉரையசை. ஆகும் என்பதனை முன்னுங் கூட்டி, அரிது என்பதனைத் தனித்தனி கூட்டியுரைத்துக் கொள்க. பெருக்கமாகுங் கேடாவது புகழுடம்பு செல்வத்தை யடையப் பூதவுடம்பு வறுமை யடைதல். நிலைபெறுவதாகு மரணமாவது புகழுடம்பு நிலைபெறப் பூதவுடம்பு இறத்தல். நிலையில்லாத உயிருடல் முதலியவற்றுள் நிலைபெற்றதிற்றிகளை யடைபவர் வித்தகராதலின் ‘வித்தகர்க் கல்லாலரிது’ என்றார். இவ் விரண்டு பாட்டாலும் புகழுடையாரடையும் மேன்மை சொல்லப்பட்டது.

(க - து). அறிவுடையார் பூதவுடம் பிறக்தாலும் புகழுடம் போ லுலகமுள்ள வளவு மிருப்பர் என்பது.

5. Prosperous desruction and living death will abide with none but the illustrious.

சு. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

பரி.—(இ - ள்). மக்களாயிப் பிறக்கின் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க; அக்குணம் இல்லாதார் மக்களாயிப் பிறத்தலின் வீலங்காயிப் பிறந்தல் நன்று, (எ - று).

* புகழ்—ஈண்டு ஆருபெயர். † ‘அஃதிலார்’ என்றமையின் மக்களா யென்பதூஉம், மக்களாய்ப் ¶ பிறவாமையென்ற அருத்தாபத்தியான்

§ புகழுடம்பு இனிவளருதலில்லாமல் ஒரு வரையறைப்பட்டு நிற்கப் பூதவுடம் பழிதல். கர்ணன்முதலியோர்க் குண்டாயபுகழ் அவர்களிறந்த பிறகு வளர்ச்சியின்றி யோளவாலிருப்பது மீண்டறியத் தக்கதாமென்க.

‡ நிலைபெறுத லுயிர் முதலியவற்றைக் கொடுத்தலால் நிலைபெற்ற கிர்த்திகளை யடைத்தவர் தன்னி முனிவர் முதலியோர்.

* புகழென்னும் காரியப் பெயர் அதனை (புகழை) யுண்டாக்குவதற்குக் காரணமாய நற்குணத்தை யுணர்த்திதலால் காரியவாகு பெயராம்.

† அஃதிலார் - புகழிற்குக் காரணமான குணமில்லாதவர்.

¶ தோன்றுமை யென்ற அருத்தா பத்தியான் என்றும் பாடமுண்டு.

‡ விலங்காய்ப் பிறத்தலென்பதாகும் பெற்றும். § இகழ்வார் இன்மையின் 'நன்று' என்றார்.

தேளி.—(இ - ள்). தோன்றின் - (மனிதராய்ப்) பிறத்தால், புக ழொடு - புகழிற்குக் காரணமாகிய குணத்தோடு, தோன்றுக - பிறக்கக் கடவர், அஃதிலார் - அக்குணமில்லாதவர், தோன்றலின் - (மனிதராய்ப்) பிறத்தலினும், தோன்றுமை-பிறவாமையானது, [மிருகமாய்ப் பிறத்தல்], நன்று - நல்லது, (எ - று).

புகழிற்குக் காரணமாய குணத்தைப் புகழென்றமையின், அஃதிங்காகு பெயராம். 'அஃதிலார்'என்றதனால் மனிதராயென்பதும், மனிதராய்ப் பிற வாமையென்ற அருத்தாபத்தியினால் மிருகமாய்ப் பிறத்தலென்பதும் பெ றப்பட்டன. இகழ்வாரில்லாமையால், தோன்றுமை 'நனறு' என்றார்.

(க - து). புகழிற்குக் காரணமாகிய குணமில்லாதவர் பிறப் பின்பயனை யடைவதில்லை என்பது.

6. If you are born (in this world) be born with qualities conducive to fame. For those who are destitute of them it will be better not to be born.

எ. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

பரி.—(இ - ள்). தமக்குப் புகழுண்டாக வாழமாட்டாதார் ¶ அது

‡ [கீர்த்திக் கேதுவான குணமில்லாதவர் மக்களாய்ப் பிறத்தலைக் கா ட்டிலும் மக்களாய்ப் பிறவாமை நல்லது என்று கூறியதில்] மக்களாய்ப் பிறவாமை என்ற அருத்தாபத்தியினால் மிருகமாய்ப்பிறத்தல் என்பது பெ றப்படுகின்றது. இங்ஙனமன்றியின் இது கூடாது என்றுணருவது அருத் தாபத்தி யெனப்படும். அஃதாமாறு:— மக்களாய்ப்பிறவாமை கூடாதா யின்விலங்காய்ப்பிறத்தல் கூடாதலென்பது. விலங்காய்ப் பிறத்தல் கூடுமா யின் மக்களாய்ப் பிறத்தல் கூடாது என்பது சருத்து. விலங்காய்ப் பிறத்த லென்பது பறவை முதலியனவாகப் பிறத்தற்கு முபலட்சணமாம். தொல் காப்பியனார் அருத்தாபத்திக் லிலக்கணம் சொல்லுகாரம் இளவியாக்கத் தில்"எடுத்த மொழியினுஞ் செப்பலு முரித்தே" என்று கூறினார். அதன் பொருள் இனமாகிய பலபொருட்கண் ஒன்றனைவாங்கிக் கூறியவழி அச் சொல் தன் பொருட்கினமாகிய பிறபொருளைக் குறிப்பான் உணர்த்தலு முரித்து என்பது.

§ புகழிற் கேதுவான குணமில்லாதவரைப் பிறர் அருளில்லாதவ ரென் றும், அன்பில்லாதவரென்றும், தாட்சண்ணிய மில்லாதவரென்று மிகழு தல் போன்ற மிருகங்களே யிகழுவா ரில்லாமையினால் புகழிற் கேதுவான குணமில்லாதவர் மக்களாய்ப் பிறத்தலினும் மிருகமாய்ப் பிறத்தல் நல்லது என்று கூறப்பட்டதென்க. ¶ அதுபற்றி - புகழுண்டாக வாழாமைபற்றி.

பற்றிப் பிறர் இகழ்நீதவழி இவ்விகழ்ச்சி * நம் மாட்டாமையான் வந்த தென்று தம்மை நோவாதே தம்மை யிகழ்வாரை நோவது என் கருதி.

புகழ்பட வாழலாயிருக்க, அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறரிகழ்தல் ஒருதலையாகலின் 'இகழ்வாரை' என்றார்.

தெளி.—(இ - ன்). புகழ்பட - (தமக்குப்) புகழுண்டாக, வாழாதார் - வாழமாட்டாதவர், (அதுபற்றிப் பிறரிகழ்ந்தவிடத்தி), தற்நோவார் - (இவ் விகழ்ச்சி நமது மாட்டமையால் வந்ததென்று) தம்மை நோவாதவராகியே, தம்மை யிகழ்வாரை - தம்மையிகழ்ந்து பேசுபவரை, நோவது-வெறுப்பது, எவன் - என்னகினைத்து, (எ - று)

புகழுண்டாக வாழுதலாயிருக்க, அவ்வாறு வாழமாட்டாத குற்றம்பற்றிப் பிறர் இகழ்வது நிச்சயமாகலால் 'இகழ்வாரை நோவ தெவன்' என்றார்.

(க-து). புகழுண்டாக வாழவறியாதவர் அதுபற்றித் தம்மைப் பிறரிகழ்வது நோக்கி வெறுப்பதிற் பயனில்லை என்பது.

7. Why do those who live without praise grieve those who despise them, though they do not grieve themselves.



அ. வசையேன்ப வையத்தார்க் கெல்லா மிசையேன்னு
மேச்சம் பெறுஅ விடின்.

பரி.—(இ - ன்). புகழென்னும் எச்சம் பெறலாயிருக்க அது பெறு தோழிவாராயின், வையகத்தோர்க் கெல்லாம் † அதுத்தானே வசை யென்று சொல்லுவர் நல்லோர், (எ - று).

§ 'எச்சம்' என்றார்; செய்தவரிறந்துபோகத் தான் இறவாது நிற்ற லின். ¶ இகழப்படுதற்குப் பிறிதொரு குற்றம் வேண்டாவென்பது கரு த்தி.

* நம் மாட்டாமையான் - (புகழுண்டாக வாழாத)நமது மடமையால்.

† அதுதானே - புகழென்னு மெச்சத்தைப் பெறுதொழிதலே.

§ புகழானது தன்னே யுண்டாக்கினவர் இறந்து போகத் தான் இற வாமல் உலகமுள்ளவளவும் எஞ்சி (மிகுந்து)நிற்றல்பற்றிப் புகழ் எச்சமாயி ற்று. புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தலென்பதாம்.

¶ புகழில்லாதல னிகழப்படுதற்குப் புகழில்லாமையே காரணமாயிருத் தலின் அவனுக்கு நிந்தையுண்டாவதற் கேதுவான ,வேறொரு குற்றம் வேண்டாமென்பது கருத்தாமென்க. ஒருவன் புகழைப் பெறுவிட்டாலும் இகழைப் பெறுமலிருக்கக் கூடாதோ வெனின், நிண்மையின் அபாவமே என்மையாய் முடிவது போன்று புகழில்லாமையே இகழாய் முடிதலின் அது கூடாதென்க.

தெளி.—(இ - ன்). இசையென்னுமெச்சம் - புகழென்னும் எச்சத்தை, (பெறவதாயிருக்க), பெரு அ விடின் - (அப்புகழென்னு மெச்சத்தைப்) பெரு தி வி வொராயின், வையத்தார்க்கெல்லாம் - பூமியிலுள்ளார்க் கெல்லாம், வசை - (அதிதானே) வசையாகும், என்ப - என்பு சொல்லுவர், (கல்லோர்).

செய்தவர் இறந்துபோகத் தான் இறவாமல் நிற்றலால் புகழை 'எச்சம்' என்றார். பிறரால் இகழப்படுதற்கு மற்றொரு குற்றம் வேண்டா மென்பது கருத்து. வசை - இகழ்ச்சி.

(க - து) கீர்த்திபெறுதலவருக்கு அது பெறுமையே வசையாம் என்பது.

8. Not to beget fame will be esteemed a disgrace by all who are in this world.

கூ. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
S யாக்கை பொறுத்த நிலம்.

பரி.—(இ - ள்). புகழில்லாத வுடம்பைச் சுமந்த நிலம் பழிப்பில் லாத வளப்பத்தையுடைய வினையுள் குன்றும், (எ - று).

† உயிருண்டாயினும் அதனும் பயன் கொள்ளாமையின் 'யாக்கை' எனவும், அது நிலத்திற்குப் பொறையாகலின் 'பொறுத்த' எனவுங் கூறினார். ‡ வினையுள் குன்றுதற்கேது பாலயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. 0 குன்றுமென இடத்துக்கழ் பொருளின் தொழில் இடத்தின்மேனின்றது. இவை ஈரன்று பாட்டானும் புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது.

§ யாக்கை - கைவிருத்திபெற்ற தொழிற்பெயர். அதன்பொருள் கட்டலென்பது. அஃதிங்குத் தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீரென்னும் எழுவகைத் தாதுக்களால் கட்டப்பட்ட வுடம்பினை யுணர்த்துதலால் தொழிலாகு பெயராம்.

† புகழில்லாது வாழும் இல்வாழ்வோன் உயிருடையவனு யிருந்தாலும் அவன் அந்த வுயிரினுல் இம்மைப்பயனுகிய புகழை யுண்டாக்கிக் கொள்ளாமையின் அவனை யென்னுது 'யாக்கை' எனவும், 'சோற்றிற்குக்கேடு பூமிக்குப்பாரம்' என்னும் பழமொழிப்படி புகழில்லாதவன் பூமிக்குப் பாரமாயிருத்தல் பற்றிப் 'பொறுத்த' எனவும் கூறினரென்பது.

‡ வினையுள் - நெல் முதலியவற்றின் வினைவு. வினையுள் என்பது உள்ளீற்றுத் தொழிற் பெயர்.

0 புகழில்லாத வுடம்பைச் சுமக்கின்ற விடத்தில் நிகழுகின்ற நெல் முதலியவற்றின் வினைவு குறைதலே யந்த விடத்தின்மேலேற்றி நிலம் வண்பயன் குன்றும் என்று கூறப்பட்ட தென்பது. இவ்வாறு வருவது இடவாகு பெயராம்; உபசார வழக்குமாம்.

தேளி.— (இ - ள்). இசையிலா - புகழில்லாத, யாக்கை - உடம்பை, பொறுத்த - சுமந்த, நிலம் - விளைநிலமானது, வசையிலா - பழிப்பில்லாத, வண்பயன் - வளப்பத்தையுடைய விளைவு, குன்றும் - குறையும். (எ - று).

(இசையிலாத வுடம்பிற்கு) உயிருண்டாயினும் அவ்வுயிரால் (அது) பயன்கொள்ளாமையால் 'யாக்கை' என்றும், அந்த யாக்கை நிலத்திற்குப் பாரமாதலின் 'பொறுத்த' என்றும் சொல்லினர். விளைவு குறைதற்குக்காரணம் பாவசரீரத்தைச் சுமக்கின்ற வெறுப்பு. இடத்து நிகழ் பொருளாகிய நெல்முதலிய பொருளின் தொழில் குன்றுமென இடத்தின் மேல் நின்றது. இவை நான்குபாட்டாலும் புகழில்லாதவரது தாழ்வு சொல்லப்பட்டது.

(க - து) கீர்த்தியில்லாத வுடம்பைச் சுமக்கின்ற விளைநிலம் பயன்படும் விளைவைத் தருவதில்லை என்பது.

9. The ground which supports a body without fame will diminish the reproachless riches of its produce.

೮. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

பரி.—(இ - ள்). தம்மாட்டே வசையுண்டாகாமல் வாழ்வாரே உயிர் வாழ்வா ராவார்; புகழுண்டாகாமல் வாழ்வாரே இறந்தாராவார்; (எ-று).

† வசை யொழிதலாவது 'இசையென்னு மெச்சம்' பெறுதலாயினமையின், இசை யொழிதலாவது வசைபெறுதலாயிற்று; ‡ மேல் 'இசையிலா யாக்கை' என்றதனை விளக்கியவாறு. இதனுல் ¶ இவ்விரண்டும் உடன் கூறப்பட்டன. மறுமைப்பயன் $ 'வானுறையுள், தெய்வத்துள் வைக்கப் படும்' என மேலேகூறப் பட்டது; படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும் தேவருலகிற் போகமும் பயனென்பது பெற்றாம்.

† வசை (நிக்தை) நீங்குதல் இசை (புகழ்) யென்னு மெச்சத்தைப் பெறுவதா யிருத்தலால் வசை நீங்குதல் இசை யடைவதாயிற்றென்க. இதனுல் இசை யிருந்தால் வசை வாராதென்றும் வசை யிருந்தால் இசை வாராதென்றும் பெற்றாம். இசைதோன்ற, வசைதோன்ற என்று சொல்லவந்தவர் அவ்வாறு கூறுதி அருத்தா பத்தியால் வசை யொழிய இசை யொழிய என்று கூறினரென்க.

‡ மேல் ('வசையிலா வண்பயன்' என்று மேலே யுள்ள குறளில்) இசையிலா யாக்கை என்றதனை யிங்குவிளக்கிய விதமா மென்க. இதனுல் இசை (புகழ்) இல்லாதவர் உற்றறிபுல ஞென்று மில்லாத சடப்பொருளோடொப்ப தென்ப தாயிற்று.

¶ இவ்விரண்டும் - வசையொழிய வாழ்வாருயர்வும், இசையொழிய வாழ்வா ரிழிவும்.

$ திருக்குறன், இல்வாழ்க்கை, ೮೦.

இனி † மனுமுதலிய அறநூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே யடங்கும். அஃதறிந்தடக்கிக் கொள்க; யாமுரைப்பிற் பெருகும்.

இல்லறவியல் முற்றுப் பெற்றது.

தெளி:—(இ - ன்.) வசையொழிய - (தம்மிடத்து) வசையுண்டாகாமல், (புகழுண்டாக),வாழ்வாரே - வாழுகின்றவர்களே, வாழ்வார் - (உயிர்), வாழுவாராவர், இசையொழிய - புகழுண்டாகாமல், (வசையுண்டாக), வாழ்வாரே - வாழுகின்றவர்களே, வாழாதவர் - இறந்தோராவார், (எ - று).


வசை யொழிதல் (இசையென்னு மெசசமாகிய) புகழ் பெறுதலாதலால், இசையொழிதல் வசை பெறுதலாயிற்று. முற்செய்யுளில் 'இசையிலா யாக்கை' என்று கூறியதனை விளக்கியவாறும். இதனுல் உயர்வுந் தாழ்வுமாகிய விவ்விரண்டும் உடன் சொல்லப்பட்டன. மறுமைப் பயன் " வானுறையுங், தெய்வத்துள் வைக்கப் படும்' என்று முன்னே சொல்லப் பட்டமையால், இல்லறத்திற்கு இவ்வுலகத்திற் புகழும் தேவருலகத்திற் போகமும் பயனென்பது பெறப்பட்டது.

இனி மனுமுதலிய தரும சாஸ்திரங்களால் பொதுவாகையாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக் கூறிய இவ்விருப தநிகாரத்துள்ளே அடங்கும், அஃதறிந்து அடக்கிக் கொள்க; யாம் உரைப்பிற் பெருகும்.

(க - து.) கீர்த்தியோடு வாழ்பவரே உயிர் வாழ்வா ராவார்; மற்றையவ ரிறந்தோராவர் என்பது.

10. Those live who live without disgrace. Those who live without fame live not.


இல்லறவியல் முற்றுப் பெற்றது.



† மனுதரும சாஸ்திரத்தின் 3, 4, 5, அத்தியாயங்களில் நாயகஞ் இல்லறத்திற் குரியதாகக் கூறிய பொதுத்தருமங்கள் தெறிக் கிடத்தலே யுய்த்துணர்ந்து கொள்க.

3. துறவறவியல்

On Ascetic Virtue.



பரி.—இனி முறையானே துறவறங்கூறிய தோடங்கினார். துறவற மாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி யறிவுடையராயிப் பிறப்பினை யஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க் குரித்தாய அறம். அதுதான்: வினைமாசுதீர்ந்து அந்தக்காணங்கள் தூயவாதற் பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றன் அவை தூய வாயவழி யுதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும்.

விரதம்.

† *அவற்றுள், விரதங்களாவன:* இன்ன வறஞ் செய்வலெனவும், இன்னபாவ மொழிவலெனவும் தம்மாற்றலுக் கேற்ப வகைந்து கொள்வன. ‡ *அவை தாம் வரம்பிலவாகலிற் பெருகுமென்றஞ்சி, அவை தம்முள்ளே பலவற்றையும் அகப்படுத்து நிற்குஞ் சிறப்புடையன சிலவற்றை ஈண்டுக் கூறுவான் றொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.*

தெளி.—இனி முறையாகத் துறவறத்தைச்சொல்லத் தொடங்கினார். துறவறமாவது மேற்கூறிய இல்லறத்திற்றவறு நடந்து அறிவுடையவராய்ப் பிறப்பிற்குப் பயந்து முத்தி பெறுதற் பொருட்டுத் துறந்தவர்கட்கு உரியதாகிய அறமாம். அத்துறவறந்தான்: இருவினைகளா லுண்டாகுங் குற்றம் நீங்கி (மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னும்) அந்தக்காணங்கள் பரிசுத்தமாகு நிமித்தம் அத்துறந்தவரால் பாதுகாக்கப்படும் விரதங்களும், அவ்விரதங்களால் அவ்வந்தக்கரணங்கள் பரிசுத்தமானவிடத் தண்டாவ தாகிய ஞானமுமென் றிருவகைப்படும்.

அவற்றுள், விரதங்களாவன: இன்ன அறங்களைச் செய்வேனென்றும், இன்னபாவங்களைச் செய்யாது விடுவேனென்றும் தமது வல்லமைக்கேற்ற வாறு மேற்கொள்வனவாம். அவ்விரதங்கள் அளவில்லாதனவா யிருத்தலால் விரியுமென்றஞ்சி, அவ்விரதங்களுள்ளே பலவற்றையும் தம்முள்ளடக்கி நிற்குஞ் சிறப்புடையனவாகிய சிலவற்றை இங்குச் சொல்லத் தொடங்கி, முதலில் அருளுடைமையை யருளிச்செய்கின்றார்.

---

† *அவற்றுள் - விரதம், ஞானமென்னு மிரண்டனுள்.*

‡ *விரதங்கள் பலவாதலை மனுதரும சாஸ்திரத்திலும், சூதசங்கிதை ஞானயோக காண்டம் கழுவாயுரைத்த வத்தியாயத்திலும், பிறவற்றிலுங் காண்க.*

முதலாவது அதிகாரம்.

அருளுடைமை.—*Kindness.*

பரி.—அஃதாவது * தொடர்பு பற்றாது இயல்பாக எல்லாவுயிர் கண்மேலுஞ் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்று அன்புடைமை போல இது துறவத்திற்குச் சிறந்தமையின் முற்கூறப்பட்டது.

தெளி.—அஃதாவது சம்பந்தங்கருதாது இயல்பாக எல்லா வுயிர்களின் மீதுஞ் செல்வதாகிய கருணையாம். இல்லறத்திற்கு அன்புடைமை சிறந் திருத்தல் போல, இவ்வருளுடைமை துறவறத்திற்குச் சிறந்திருத்தலால் முற்படச் சொல்லப்பட்டது.

க. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

பரி.—(இ - ள்). செல்வங்கள பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப் பட்ட செல்வமாவது அருளான் வருஞ் செல்வம், அஃதொழிந்த ‡ பொரு ளான் வருஞ் செல்வங்கள் ஒழிந்தார் கண்ணும் உளவாம் ஆகலான்.

அருளான் வருஞ் செல்வமாவது உயிர்களேயோம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயிர்தார் கண்ணே யல்லதில்லாத அருட்செல்வமே சிறப் புடைய செல்வம், ஏனை நீசர்கண்ணு முளவாம் பொருட்செல்வங்கள் சிறப் பில வென்பதாம்.

தெளி.—(இ - ள்). பொருட்செல்வம்-பொருளால்வருஞ் செல்வங்கள், பூரியார்கண்ணும் - இழிந்தவரிடத்தும், உள - இருக்கின்றன, (ஆதலால்), செல்வத்துட் செல்வம் - செல்வங்களு பலவற்றுள்ளும் (ஆராய்ந்து எடுக்கப் பட்ட) செல்வமாவது, அருட்செல்வம் - அருளால் வருஞ்செல்வமாம்.

அருளால் வருஞ்செல்வமாவது உயிர்களோப் பாதுகாத்து (பாதுகாக் கும்) அவ்வறத்தால் மேம்படுதலாம். உயர்ந்தோரிடத் திருப்பதேயல்லாமல் (இழிந்தோரிடத்து) இல்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம், (உயர்ந்தோரிடத் திருப்பதே யல்லாமல்) மற்றைய இழிந்தோரிடத்தும் உளவாகும் பொருட் செல்வங்கள் சிறப்புடையன வல்ல வென்பதாம்.

(க - து). பொருளால்வருஞ் செல்வத்தினும் அருளால்வருஞ் செல்வமே சிறப்புடைய தென்பதாம்.

1. The wealth of kindness is twe of wealth, in as much as the wealth of property is possessed even by the basest of men.

---

* தொடர்பு - மனைவி, மக்கள், பந்து, மித்திரர் முதலியவரைப் பற்றி வருஞ் சம்பந்தம்.

‡ பொருளான் வரும் செல்வம்—உண்டி, உடை, உறையுள், வீரை கிலம், ஏவல் முதலியன.

உ. நல்லாற்று ஞடி யருளாள்க பல்லாற்றுந்
நேரினு மஃதே துணை.

பரி.—(இ - ள்). அளவைகளானும் பொருந்து மாற்றனும் நன்றன நெறியிலே நின்று, நமக்குத் துணையாம் அறம் யாதென்றராய்ந்து, அருளுடையராக; † ஒன்றையோன் நெவ்வாத சமயநெறிகள் எல்லாவந் நனும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே, பிறிதில்லை, (எ - று).

* அளவைகளாவன ‡ பொறிகளாற் காணுங்காட்சியும், ¶ குறிகளான் உய்த்துணரும் அனுமானமும், § கருத்தா மொழியாகிய ஆகம

† ஒன்றையோன் நெவ்வாத சமயநெறிகள் என்பது மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் "உவலைச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாஞ், சுவலைக் கடலுள ஞய்க்கிடந்து தியமாறுங், கவலைக் கெடுத்துக் கழலிணை கடந்தருளுஞ், செவலைப் பரிவாற் றெள்ளேணங் கொட்டாமோ" என்று கூறுவதனுடு மறியப்படும்.

* அளவை - பிரமாணம்; உண்மை யனுபவ வறிவிற்குக் கருவியா யுள்ளது பிரமாண மெனப்படும்.

‡ பொறிகளாற் காணுங்காட்சி - செவிமுதலிய விந்திரியங்களால் சப்தமுதலிய விஷயங்களே யறியும் அறிவு. "பிரத்தியட்சப் பிரமைக்குக் காரணம் பிரத்தியட்சப் பிரமாணமாம்; எங்ஙனம் இது கடமென்றற்றெரட க்கத்துப் பிரத்தியட்சப் பிரமைக்குக் காரணம் கண் முதலிய விந்திரியங் களா யிருத்தலின், கண் முதலிய விந்திரியங்களே பிரத்தியட்சப் பிரமா ணமாம். (பிரமை - உண்மை யனுபவ வறிவு):—நியாயப் பிரகாசம்.

¶ குறிகளான் உய்த்துணரும் அனுமானம் - புகை முதலிய குறி களால் மலை முதலிய விடங்களில் நெருப்பு முதலியன வுண்டென்றராய்ந் தறிகின்ற அனுமானம். (குறி, இலிங்கம், சாதனம், ஏது என்பன ஒரு பொருட் சொற்கள்). அனுமான மெனினும் ஊகமெனினு மொக்கும். "அனுமிதிப் பிரமையின் காரணம் அனுமானப் பிரமாணமாம்; எங்ஙனம் இம்மலை வன்னி (தீ)யுடைத்து என்னும் அனுமிதி ஞானத்திற்குப் புகை வன்னியின் வியாப்தி யுடையதா மென்னும் வியாப்தி ஞானம் காரண மாயிருத்தலின், அவ் வியாப்தி ஞானம் அனுமானப் பிரமாணமாம். (வியா ப்தி-யாண்டுப் புகை ஆண்டுத்தீயென நியதமானவுடனிகழ்ச்சி):—நியாயப் பிரகாசம்.

§ கருத்தா மொழியாகிய ஆகமம் - பரமேசுவரன் திருவ்டியினுரம் பத்தில் சீவர்களுய்யுமாறு எடுத்துச் சொல்லியவேதம். ஒன்றைச் செய்கிற வன் கர்த்தா வெனப்படுவன். செய்யத்தக்கது கர்த்தவ்விய மெனப்படும். ஆகம மெனினும் உரையெனினு மொக்கும். காண்டம், (பிரத்தியட்சம்), கருதல், உரையென்னு மூன்றும் முறையே அனுபவம், யுக்தி, சுருதி யென்றும் சொல்லப்படும். "சத்தப்பிரமாணம் ஆத்தன் வாக்கியம்..... ஆத்தனுவான் உண்மைப் பொருளைக் கூறுவான்":— தருக்க சங்கிரகம்.

மும் என மூன்று. † ஒப்புப்பற்றி யுணரும் உவமையும், ‡ இங்ஙன மன்றுயின் இது கூடா தென்றுணரும் அருத்தாபத்தியும், ¶ உண்மைக்கு மாறுய இன்மையும் என இவற்றையுங் கூட்டி ஆறென்பாரு முளர். $ இவையும் ஒருவாற்றுன் அவற்றுள்ளே யடங்குதலின், மூன்றென் றதிலே கருத்து. பொருத்தமாறுவது இது கூடும்; இது கூடா தெனத் தன்கண்ணே தோன்றுவது. இதனே வடநூலார் யுத்தி என்ப.

† ஒப்புப்பற்றி யுணரும் உவமை - ஒன்றற் கொன்றுள்ள சாதாரண தருமம் (பொதுமை) பற்றி யறிகின்ற வுவமானம். உவமான மெனினும் உவம மெனினும் ஒப்பெனினு மொக்கும். "உவமானம் உவமிதியறிவிற் குக் காரணம், உவமிதி பெயர்க்கும் பெயர்ப்பொருட்கு முள்ள சம்பந்த மறியு மறிவு; அதற்குக் காரணம் ஒப்புமையறிவு":—தருக்க சங்கிரகம்.

‡ இங்ஙனமன்றுயின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தி - பகலும்இரவும்புணர்த்தலின்றுயின் உடம்புபருத்திருத்தல்கூடாதென்றெதிர் மறை முகத்தாலறிகின்ற அருத்தாபத்தி. அருத்தாபத்தி யெனினும் பொருட்பே றெனினுமொக்கும். "உபபாதகஞ்ஞானம் அர்த்தாபத்திப் பிரமாணமாம்; உபபாதகஞ்ஞானம் அர்த்தாபத்திப் பிரமேயமாம்"—விருத்திரத்நாவலி.

¶ உண்மைக்கு மாறுய இன்மை-விளங்குதலுண்மைக்கு மாறுபட்ட வினங்குதலில்லாமை; இஃது அனுபலத்திப் பிரமாணமெனப்படும். அபாவப்பிரமாணமெனினும் அனுபலத்திப் பிரமாணமெனினுமொக்கும். இது வெஞானத்தினின் "அனலை காண்டல் கருதலுரையபாவம் பொருளொப் பாதென்பர்" என்னும் பாட்டினுரையில் ஞானப்பிரகாசர் அபாவம் என்ப தற்கு அனுபலத்தி யென்று பொருள்கூறி யிருத்தலு மிங்கு அறியத்தக்க தாம். "அபாவப் பிரமையின் அசாதாரணகாரணம் அனுபலத்திப் பிர மாணமாம்":— விருத்திரத்நாவலி. காண்டல், கருதல், உரை, ஒப்பு, பொருட்பேறு, அனுபலத்தியென்னு மனவைகளே யன்றிப் பரிசேடம், சம்பவம், ஐதிகம், இயல்பு என்னும் வேறனவைகளுங் கூறுவாரு முண்டு. அவையெல்லாம் மேற்கூறிய ஆறனுளடக்குவது பற்றி விதந்து கூறுது விட்டார்.

$ இவையும் ஒருவாற்றுன் அவற்றுள்ளே யடங்குதலின் மூன்றென் றதிலே கருத்து - உவமை, அருத்தாபத்தி, அனுபலத்தியென்னு மிம்மூன் று பிரமாணங்களும் ஒருவாற்றுன் (ஒருவகையினுல்) காண்டல் கருதல் உரையென்னும் மூன்றனுள்ளே அடங்குதலால், பிரமாணம் (காண்டல் கருதல் உரை யென்னும்) மூன்றென்று கூறுதலே கருத்தாமென்க. பிரத் தியட்ச முதல் அனுபலத்தி யீருயுள்ளவற்றைப் பிரமாணமாகக்கொண்ட வர்கள் உவமையும் அருத்தாபத்தியும் அனுபலத்தியும் காண்டல்முதலிய அனவைகளுள் அடங்காவென்று பிரபலகாரணங்காட்டியிருத்தல்பற்றி ச், காண்டல் கருதல் உரையென்னு மூன்றையும் பிரமாணமாகக்கொண்ட சாங்கியர் முதலியோர் கூறியபடி யொருவகையால் உவமைமுதலியன காண்டல் முதலியவற்றுள் அடங்குதலே மேற்கொண்டு பரிமேலழகர்

† ஆற்றுனென்பது வேற்றுமை மயக்கம். ஒன்றையொன் றொவ்வாமை யாவது மதவேறுபாட்டான் ‡ அளவைகளும் பொருள்களும் தம்முள் மாறுகோடல்; அண்ணல் [illegible]னும் அருள் தூணை யென்றற்கண் ஒக்குமென் பதாம். உயிரை விட்டீங்கா திருமையினும் உதலலின் 'தூணை' என் ரூர். இவையிரண்டு பாட்டானும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்). கல்வாற்றுன் - (பிரமாணங்களாலும் யுத்தியாலும்) கன்றுனவழியிலே,(நின்று), நாடி-(நமக்குத் துணையாகும்அறம்யாதென்று)

'இவையும் ஒருவாற்றுன் அவற்றுள்ளே யடங்குதலின்' என்று கூறினு ரென்க. சாங்கியர்முதலியோர் உவமையும் அருத்தாபத்தியும் அனுமானப் பிரமாணத்திலும், அனுபவத்தி பிரத்தியட்சப்பிரமாணத்திலும் அந்தர்க்கத (அடக்க)மா மென்பர். (பிரத்தியட்சப் பிரமாணத்தால் அபாவதை யறி யும்போதற்குச் சககாரியாக அனுபலத்தியைக கொண்டனர் தார்க்கிகர் முதலியோர்).

† ஆற்றுன் என்பதன் மூன்றனுருபு தனக்குரிய பொருளைவிட்டு ஆற்றினென (நெறியினென) ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளில் வந்தமையின் வேற்றுமை மயக்கமாயிற்று.

‡ அளவைகள் தம்முள் மாறுகொள்ளுதலே மேலே கூறினும்; ஆண் டுக் காணுக. அளவையா லளக்கப்படும் பொருள்கள் தம்முள் மாறுகொள் ளுதலாவது லோகாயதன் உலகமேயுள்ளதென்றும், வேதாந்தி பிரமமே பாரமார்த்திகமாக வுள்ளதென்றும், சைவர்முதலியோர் கடவுள் சேர்கள் மாயை என்னுமூன்றும் என்றும் உள்ளனவென்றும், தார்க்கிகர் பிருதிவி முதலியவற்றின் பரமாணுக்களும், ஆகாயம் காலம் திக்கு ஆத்மா மனமென் னுமைந்தும், சமவாயமும், சாமாங்கியமும், பிறவும் என்றும் உள்ளனவென் றும், சமணர்கள் காலம், சீவன், தன்மாத்திகாயம், அதனமாதிகாயம், புண்ணியம், பாவம், ஆகாயம், புற்கலம், பந்தம், வீடு என்னும் பத்தும் அநாதியென்றும் பிறவும் (அவ்வம் மதவாதிகள்) கூறித் தம்முள் மாறு கொள்ளுதலாமென்க.

பிரமாண நிரூபணம்.

பிரமையின் காரணம்-பிரமாணமாம். பிரமையென்பது யதார்த்தானுப வமாம். வியாபாரமுடைய அசாதாரண காரணம் கரணமாம். வியாபாரத் தின் வேறுய அசாதாரண காரணமே கரணமென்பதும் பிரமாணத்திற் கிலக்கணமாம். காரணத்திற் ரூன்றிக் காரியத்தைத் தோற்றுவிப்பது வியாபாரமாம்.

பிரமாணமெனினும் அளவையெனினு மொக்கும். இதனை மதவாதி கள் தத்தஞ் கொள்கைக்குச் சாதனமாகப் பலவாருக வகுத்தோதித்திருக்கின்ற னர். அவற்றுள்:—

(1) சார்வாக மதத்தர் பிரத்தியகூப்பிரமாண மொன்றனையே யங்கீ கரித் திருக்கின்றனர்.

ஆராய்ந்து, அருளான்க-அருளுடைய ராகக்கடவர், பல்லாற்றான்-(ஒன்றை யொன் றொத்திராத) சமயவழிகளெல்லாவற்றாலும், தேரினும்-ஆராய்ந்தாலும், தகுதி - தகுதியாவது, அஃதே - அவ்வ[illegible], (வேறொன்றில்லை).

(2) கணாத, பௌத்த மதத்தர் அனுமானமென்னு மிரண்டாவது பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் பிரத்தியகூப் பிரமாணமொன்றையே யங்கீகரிக்கு மிடத்தித் திருப்தியை லிரும்புகின்ற புருஷனுக்குப்போஜனத்திற் பிரவிர்த்தியுண்டாதல் கூடாது. சாப்பிடாத பதார்த்தத்தில் திருப்தியுண்டாகு மென்பதற்குப் பிரத்தியகூப் பிரமாணத்தினுல் யாதொரு பிரட்தியகஞானமுமில்லே. சாப்பிட்ட போஜனத்திலுண்டான திருப்தியினுபவம் சாப்பிடாத போஜனத்திலும் அனுமானத்தினு லுண்டாகுமெனவறிந்து, திருப்தியின்பொருட்டுப் போஜனத்திற் பிரவிர்த்தி யுண்டாகின்ற தென்பர்.

(3) சாங்கியர்முதலியோர் சத்தமென்னு மூன்றாவது பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் பிரத்தியகூம், அனுமானமென்னு மிரண்டு பிரமாணங்களேமாத்திரமங்கீகரிக்குமிடத்தித்,தேசாந்தரத்திலுள்ளதகப்பனிறந்துபோனனென்ற பிறர் சொல்லக் கேட்டவனுக்குத் தன்தகப்பனிறந்து விட்டானென்னும் நிச்சயமுண்டாதல் கூடாது. தேசாந்தரத்தில் தன்தகப்பனிறந்துவிட்டானென்னும் ஞானம்,அவனுக்குப் பிரத்தியகூம், அனுமானம் என்னுமிவ்விரண்டு பிரமாணங்களாலு முண்டாகவில்லே; ஆகையால், மூன்றாவதான சத்தப் பிரமாணமும் வேண்டுமென்பர்.

(4) நியாயமதத்தர் உவமானமென்னும் நான்காவது பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்[illegible]னர். அவர்கள் பிரத்தியட்சமுதலிய மூன்று பிரமானங்களே மாத்திர மங்கீகரிக்குமிடத்தி ஒருவன் கவயமென்னு மிருகத்தைக் கண்டதில்லே; ஆனுல் கவயம் அலேதாடியின்றிய ஆபசு) போன்ற தென்று காட்டுமனிதன் சொல்லக்கேட் டிருக்கிறான். அவன் காட்டிற்குப் போன காலத்தி அலேதாடியின்றிய ஆவையொத்த பிண்டத்தைப் பார்த்தபோது காட்டுமனிதன் சொன்னதை ஸ்மரித்து இது கவயத்தின் சொற்பொருளென் றறிகிறான். உவமானப் பிரமாணத்தை யங்கீகரியா தொழியின், இந்த ஞான முண்டாதல் கூடாதென்பர்.

(5) பட்டர் சிஷ்யான பிரபாகர மதானுசாரிகள் அருத்தாபத்தியென்னு மைந்தாவது பிரமாணத்தையு மங்கீகரித் திருக்கின்றனர். அவர்கள் பகலுண்ணுதவன் பருத்திருத்தலைக் கண்டவனுக்கு இவனிரவில்மறைத்துண்பா னென்னும் ஞானமுண்டாகின்றது; அது பிரத்தியகூ முதலிய நான்கு பிரமாணங்களாலு முண்டாவதில்லே; ஆகையால், பருத்திருத்தலுக்குக் காரண மிராப்போஜனமென்பது அருத்தாபத்திப் பிரமாணத்தால் பெறப்படுகின்றதென்பர்.

(6) பட்டர் மதத்தர் அனுபலப்திபென்னும் ஆறாவது பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்றனர். அவர்கள் வீடுமுதலிய விடத்துக் கடமுதலியனவில்லே யென்னும் ஞானமுண்டாகிறது. அப்போது எது தருகியாக

பிரமாணங்களாவன இந்திரியங்களாற் காணுங் காட்சியும், புகைமுதலிய குறிகளால் ஆராய்ந்தறியும் அனுமானமும், கருத்தா (ஈசனது) மொழியாகிய ஆகமமும் என மூன்றுவகைப்படும். ஒப்புமைபற்றி யறியும் விளங்கவில்லையோ அதன் அபாவஞ்ஞானமுண்டாகின்றது. இந்த அபாவத்தின் நிச்சயம் பிரத்தியகூமுதலிய ஐந்து பிரமாணங்களாலு முண்டாவதில்லை; அனுபலத்திப் பிரமாணத்தா லுண்டாகின்றது; ஆதலால் ஆறுவதான அனுபலப்திப் பிரமாணமும் அத்தியாவசியகமா மென்பர்.

இவ்வாறு பிரமாணங்களுள், நையாயிகர் அருத்தாபத்திப் பிரமாணத்தை வியதிரேகியனுமானத்திலும், அனுபலப்திப் பிரமாணத்தைப் பிரத்தியகூப் பிரமாணத்திலு மடக்கிப் பிரமாணங்கள் நான்கே யென்பர்.

கணாத மதானுசாரிகளான வைசேடிகரும்,பௌத்தரும், பிரத்தியகூம், அனுமானம்,உவமானம், சத்தம் என நையாயிகரங்கீகரித்துள்ள நான்கனுள் சத்தத்தையும்,உவமானத்தையும் அனுமானப் பிரமாணத்தினுளடக்கிப்,பிரமாணங்களிரண்டேயென்பர். சாங்கியர்முதலியோர் உவமானத்தை யனுமானத்தி லடக்கியும் வேறுபிறவாகவும் கூறுவர்.

மேற்குறித்த ஆறுபிரமாணங்களன்றி ஐதிகம், சம்பவம் முதலிய வேறு பிரமாணங்களு முண்டு; அவையனைத்தும் அவ்வாறனுளடங்கும்.

சட்பிரமாண நிரூபண சங்கிரகம்.

1. பிரத்தியகூப் பிரமாணம்.

பிரத்தியகூம் - காண்டல். பிரமாணம் - அளவை.

பிரத்தியட்சப்பிரமாணமெனினும் காண்டலளவையெனினுமொக்கும்.

காண்டலளவையும் கரணபேதத்தா லறுவகைப்படும். (கரணம்-கருவி). அக்கரணமாவன:—

1. சுரோத்திரம், 2. துவக்கு, 3. சட்சு, 4. சிங்குவை, 5. கிராணம், 6. மனம் என்பனவாம், இவற்றுள்:—

(1) சுரோத்திரம் என்பது செவி(செவியிலுளிருக்கு மிந்திரியம்);இதன்தொழில் சப்தத்தை யறிதல். சுரோத்திரத்திற்கும் சப்தத்திற்கும் சம்பந்தமுண்டாகும்போது சுரோத்திரத்தினுற் சப்தப்பிரத்தியட்ச முண்டாகுதல். சப்தமென்பது சப்தத் தன்மை முதலியன வற்றிற்கு முபலட்சணமாம்.

(2) துவக்கு என்பது சரீரம் (சரீர முற்றும் வியாபித்திருக்கு மிந்திரியம்); இதன் தொழில் பரிசத்தையறிதல். தொக்கிற்கும் பரிசத்திற்கும் சம்பந்த முண்டாகும்போது துவக்கினுற் பரிசத்தின் பிரத்தியட்ச முண்டாகுதல். பரிசமென்பது திரவியம் திரவியத்தன்மை முதலியவற்றிற்கு முபலட்சணமாம்.

(3) சட்சு என்பது கண்(கண்ணுறை கருமணியிலிருக்குமிந்திரியம்); இதன் தொழில் ரூபத்தையறிதல். சட்சுவிற்கும் உருவத்திற்கும் சம்பந்த

உவமானமும், இங்ஙனமன்றியின் இது கூடாதென் றறியும் அருத்தாபத்தியும், உண்மைக்கு எதிராகிய இல்லாமையும் எனவிவற்றையுங்கூட்டிப் பிரமாணம் ஆறென்பாரும் உண்டு. இவையும் ஒருவகையால் பிரத்தி

முண்டாகும்போது சட்சுவினுல் உருவத்தின் பிரத்தியட்ச முண்டாகிறது. உருவமென்பது உருவமுடைய திரவிய முதலியவற்றிற்கு முபலட்சணமாம்.

(4) சிங்குவை என்பது நாக்கு. (நாக்கினுனியி லிருக்கு மிந்திரியம்); இதன் தொழில் இரசத்தை யறிதல். சிங்குவைக்கும் இரசத்திற்கும் சம்பந்த முண்டாகும்போது சிங்குவையால் இரசத்தின் பிரத்தியட்ச முண்டாகிறது. இரசமென்பது இரசத்தன்மை முதலியவற்றிற்கு முபலட்சணமாம்.

(5) கிராணம் என்பது மூக்கு.(மூக்குநுனியிலிருக்குமிந்திரியம்);இதன் தொழில் கந்தத்தை யறிதல். கிராணத்திற்கும் கந்தத்திற்கும் சம்பந்தமுண்டாகும்போது கிராணத்தாற் கந்தப்பிரத்தியக்ஷ முண்டாகிறது. கந்தமென்பது கந்தத்தன்மை முதலிய வற்றிற்கு முபலட்சணமாம்.

(6) மனமென்பதுநெஞ்சு(நெஞ்சிலுளிருக்கு மிந்திரியம்);இதன் தொழில் சுகமுதலியவற்றை யறிதல், மனத்திற்குக் கண் முதலிய இந்திரியங்களின் வாயிலாகவாவது வேறுவகையாலாவது பதார்த்தங்களின் சம்பந்த முண்டாகும்போது மனத்தாற் சுகதுக்க முதலியவற்றின் பிரத்தியக்ஷ முண்டாகிறது. மனம் இந்திரிய மன்றென்பாரு முண்டு.

மீண்டும் பிரத்யக்ஷம், சவிகற்பம், நிருவிகற்பம் என்னும் பேதத்தாலிருவகைத்தாம். விகற்பத்துடன் கூடியது சவிகற்பமாம். விகற்பமாவது பொருள், ஜாதி, குணம், கிரியை முதலியனவாம்; இவற்றோடு கூடிய ஞானம் சவிகற்ப ஞானமாம்.

ஜாதி, குணம், கிரியை, பொருள் முதலியவற்றின் ரேற்றமின்றி, இஃதொன் றென்று வஸ்துவின் சத்தாவமாத்திரத்தாலுண்டாகும் ஞானம் நிருவிகற்ப ஞானமாம்.

2. அனுமானப் பிரமாணம்.

அனுமிதிப் பிரமையின் காரணம் அனுமானப் பிரமாணமாம். அனுமிதிப்பிரமைபட்சத்திற்சாத்திய முண்டென் றுணரும் ஞானமாம். அனுமானம் வியாத்தியினலுபலம். வியாத்தி எது (புகை) சாத்தியங் (நீர்) களின் நியதமான வுடனிகழ்ச்சி.

அடுக்களை முதலியவிடங்களில் நினைந்தோறும் புகையிருக்கக் காணும் புருஷனுக்குப், புகையுள்ள விடங்களிலெல்லாம் அக்கினி யிருக்குமென்னு மோ ரனுபவ முண்டாகிறது. இது வியாத்தியனுபவ மெனப்படும்.

இவ்வனுபவ முடையவன் பர்வதமுதலிய இடங்களுக்குப் போகுங்கால், புகையின் பிரத்தியக்ஷ முண்டாகு மிடத்தி, அவனுக்குப் புகைக்கும் அக்கினிக்குமுள்ள உடனிகழ்ச்சியின் ஞாப முண்டாகின்றது, இதனுல்

யட்சம் அனுமானம் ஆகமமென்னும் அம்மூன்றனுள்ளே அடங்குதலால்; பிரமாணம் மூன்றென்றலே கருத்தாம். யுத்தியாவது இதுகூடும் இது கூடாது எனத் தன்னிடத்தே தோன்றுவது. ஆற்றுன் என்பது ஆற்றில் மலே முதலிய விடங்களில் வன்னியுண்டென்னும் ஞான முண்டாகிறது. இதுவே அனுமிதி யெனப்படும்.

ஈண்டுப் புகை எது அல்லது இலிங்கமெனப்படும்.

எது அல்லது இலிங்கத்தாலறியப்பட்ட வன்னி (தீ) சாத்தியமெனப் படும்.

எது, சாத்திய மிரண்டிற்கும் ஆசிரயமாயிருக்கும் பர்வதம் முதலியன பக்ஷமாம். எவ்வதிகரண (இட) த்திற் சாத்தியத்தை யறியும் விருப்பமுண்டாய்ச், சாத்தியத்தின் அனுமிதிவடிவ நிச்சய முண்டாகின்றதோ அது புட்சமெனப்படும்.

தூமமுள்ள விடத்து மில்லாவிடத்தும் வன்னியிருப்பதால் தூமத்தினும் வன்னி யதிகவிடத்திருப்பதாம்; ஆகையால் வன்னி வியாபகமாம்.

வன்னியுள்ள விடத்தெல்லாம் தூமமில்லாமையால் தூமம் வியாப்பியமாம். (சொற்பவிடத் திருப்பதாம்).

அனுமிதிஞானத்தில் எது சாத்தியங்களின் வியாப்தியனுபவம் காரணமாம். இந்த வியாப்தி ஞானத்தின் ஸ்மிருதி (ஞாபகம்) வியாபாரமாம். அனுமிதியறிவு பயனும். உடனிகழ்ச்சி ஞானமெனினும் வியாப்திஞான மெனினு மொக்கும். சிலர் வியாப்தி ஞானத்தையும் சிலர், வியாப்திஸ்மிருதியினையும், சிலர் எது ஞானத்தையும், சிலர் ஞானவதுவினையும் காரணமென்பர்.

அவ்வனுமானம் † கேவலாந்துவயி ‡ கேவலவியதிரேகி § அந்துவய வியதிரேகியென மூவகைத்தாம். அந்துவயம் - உடன்பாடு, வியதிரேகம், எதிர்மறை.

அவற்றுள்:—(1) கேவலாந்துவயியாவது அந்துவயத்தில் மாத்திரம் வியாத்தி யுடையது. அது குடம் அபிதேயம் (பெயரிட்டு வழங்கற்பாலது); பிரமேயத் தன்மையால் என்பது போலவாம். ஈண்டுக்குடம் பட்சம்; அதன் அபிதேயத்தன்மை சாத்தியம்; பிரமேயத்தன்மையால் என்பது ஏது. ஈண்டு, யாண்டு யாண்டுப் பிரமேயத்துவம் ஆண்டு ஆண்டு அபிதேயத்துவம் படம்போல என அந்துவயவியாப்தி மாத்திரமுளது; யாண்டுச்சாத்திய மில்லே, ஆண்டு ஏதுவில்லே என வியதிரேக வியாத்தியின்மையா (அபிதேயத்துவமும், பிரமேயத்துவமு மெங்குமிருத்தலா) லென்க.

(2) கேவல வியதிரேகியாவது வியதிரேகத்தில் மாத்திரம் வியாத்தியுடையது. அது பிருதிவி வேனையவற்றின் வேறு; கந்தமுடைமையால்; யாது வேனையவற்றின் வேறன்று அது கந்தமுடையதன்று அப்புப்போல என்பது போலவாம். இங்கு யாதுகந்தமுடைத்தி அஃது வேனையவற்றின் வேறு

எனப் பொருள்பட்டமையின் வேற்றுமை மயக்கமாம். ஒன்றை யொன் றொத்திராமையாவது மதவேறு பாட்டால் பிராமாணங்களும் (அவற்றாலறி யப்படும்) பொருள்களும் தம்முள்ளே மாறுகொள்ளுதலாம்; அப்படி யிருந் தாலும் அருள் தானென்று சொல்லுமிடத்து (அது தம்முள் வேறுபட் டுள்ள சமயிகட்கெல்லாஞ்) சம்மதமா மென்பதாம். உயிரைவிட்டு நீங்காமல்

இதுபோல என அந்துவயத்தில் திருட்டாந்தமில்லை; பிருதிவிமுழுதும் பட்சமே யாகலினென்க.

(3) அந்துவயவியதிரேகியாவது அந்துவயத்திலும், வியதிரேகத்திலும் வியாப்தியுடையது. வன்னியைச் சாதிக்குங்கால் புகையுடைமை அந் துவயவியதிரேகியாம்; யாண்டுப்புகை ஆண்டுத்தீ அடுக்களைபோல என அந்துவயத்திலும், யாண்டுத்தீயில்லை ஆண்டுப் புகையில்லை மடுப்போல என வியதிரேகத்திலும் வியாப்தி யுடைமையினென்க.

மீண்டும் அவ்வனுமானம் சுவார்த்தானுமானம் (தன் பொருட்டனுமா னம்) பரார்த்தானுமானம் (பிறர்பொருட்டனுமானம்) என்னும் வேறுபாட் டாலிருவகைத்து.

(1) தன்பொருட்டனுமானமாவது தனக்கனுமிதிஞானம் விளங்குதற் குக் காரணமாம்; வாக்கியப் பிரயோகமின்றி வியாத்திஞானமுதலியவற்றால் அவ்வனுமிதி யுண்டாகின்றதோ அது சுவார்த்தானுமிதியாம்.

(2) பிறர் பொருட்டனுமானமாவது தானேபுகையால்வன்னியைஅனு மித்துப் பிறருணர்தற்பொருட்டு ஐவகை யுறுப்புடன் கூடிய வாக்கியத் தைக் கூறுவது.

ஐவகையுறுப்பாவன:—1. பிரதிஞ்ஞை (மலைவன்னியுடைத்து) 2-ஏது (புகையுடைமையால்), 3. திருஷ்டாந்தம் - (யாது யாது யுகையுடையது அது அது வன்னியுடையது அடுக்களைப்போல), 4. உபநயம் - (இதுவு மங்ஙனம்), 5. நிகமனம் - (ஆதலினிங்ஙனம்), (ஆதலால் மலைவன்னியுடை த்து) என்பனவாம்.

பிரதிஞ்ஞையாவது பட்சத்தைத் தணிபொருளுடையதாகக் கூறல்.

ஏதுவாவது இன் ஆன் உருபீறாக இலிங்கத்தை யெடுத்துக் காட்டு வது.

திருட்டாந்தமாவது ஏதுசாத்தியங்களின் உடனிகழ்ச்சியை யெடுத் துக்காட்டுவது. வாதிப் பிரதிவாதிகளுக்கு யாண்டுவிவாதமில்லையோ யாண் டு இருவராலும் நிச்சயிக்கப்பட்ட அருத்தமுளதோ அது திருஷ்டாந்த மெ னப்படும்.

உபநயமாவது பட்சதருமத்தன்மை யுணர்தற்பொருட்டுத் திருட்டாந் தத்தைச் சார்த்திக் கூறுவது.

நிகமனமாவது முடிந்ததை முடித்தல்; மறுதலையின்மைகாட்டல் முதலி யன நிகமனத்திற்குப்பயனும்.

இம்மை மறுமை யென்னும் இருமையிலும் உதவுதலால் அருளே 'துணை' என்றார். இவையிரண்டு பாட்டாலும் அருளினது சிறப்புச் சொல்லப் பட்டது.

(க-து). சமயங்கள் பலவும் அருளுடைமையைக் கொண்டா தலின், அதனையொருவன் நன்னெறிக்கண்நின்றுபெறக்கடவன்.

2. (Stand) in the goodpath, consider and be kind; although you may perfectly study the rules of many different (sects), kindness will be your best aid in the acquisiton of heavenly bliss.

3. சத்தப்பிரமாணம்.

மீமாம்சமதத்தில் சத்தம் நிரவியமாம்; மற்றவர் மதத்தில் சத்தம் குண மாம்; நியாயமதத்திலோ ஆகாயத்தின் குணமே சத்தமாம். இந்தச் சத்தம் 1. தொனிவடிவம், (2) வர்ண (எழுத்து) வடிவம் என்னும் பேதத்தால் இருவகைத்து.

பொருளுடைய வர்ணம் (எழுத்து). அல்லது வர்ணசமுதாயம்பதமாம்; பதசமுதாயம் வாக்கியமாம். ஒவ்வற்றொன்று சம்பந்தமுடைய சகல பதார்த்தங்களின் ஞானம், அல்லது சகலபதார்த்தங்களின் சம்பந்தவடிவ ஞானம் வாக்கியார்த்த ஞானமாம்.

வாக்கியார்த்த கோசர யதார்த்தஞானம் சாப்திப் பிரமையாம், சாப்தி ப்பிரமையின் கரணம் சத்தப்பிரமாணமாம்.

பதத்திற்கும் (அதனுலறியப்படும்) பொருளுக்குமுள்ள சம்பந்தம்விரு த்தி யெனப்படும். இந்த விருத்தி சக்தி விருத்தி, இலட்சணை விருத்தி யென்னும் பேதத்தா லிருவகைத்து.

சக்தியாவது பதத்தைக்கேட்பதனல் பதப்பொருணர்ச்சியுண்டாகு மாறு செய்யும் பதத்திலுள்ள சாமர்த்தியமே பதசக்தியாம். கடபதத்தைக் கேட்பதனல் கடவடிவப்பொருளின் ஞான முண்டாகிறது; இதுவே கட பதத்தின் சத்தியாம். பதத்திற்கும் அர்த்தத்திற்குமுள்ள சாட்சாத் (நேர்) சம்பந்தம் சக்திவிருத்தியாம்.

பதத்தின் சக்திவிருத்தியாலறியப்படும்பொருள் சக்தியமெனப்படும். சக்தியசம்பந்தம் இலக்ஷணையாம்; அல்லது பதத்திற்கு அர்த்தத்தோடுள்ள பரம்பரைச் சம்பந்தம் லட்சணையாம்; அதனலறியப்படும் பொருள் இலட்சி யமாம்.

கங்கையென்னும்பதத்தின் சக்தியமாகிய பிரவாகத்திற்குக் கரையோ டுள்ள சம்பந்தம் கங்கையென்னும் பதத்தின் இலட்சணையாம்; அதனலறி யப்படுங் கங்கையின்கரை இலட்சியமாம்.

"அர்த்தவாசகம் பதம். அது முக்கியம் கௌணமென்னும் வேறு பாட்டாலிருவகைத்து. (1) எது சக்திவிருத்தியா லெப்பொருளே யறிவிக் கின்றதோ அஃதப் பொருளில் முக்கியமாம்; அது குதிரை குட முதலிய

பொருள்களை யறிவீப்பது குறிதை குட முதலிய பரமாதல் போல்வதாம். (2) எது இலட்சணை விருத்தியா லெப்பொருளை யறிவிக்கின்றதோ அஃ தப்பொருளில் கௌணமாகிய இலாக்ஷணிகமாம். அது கங்கையி லிடைச் சேரி யென்புழிக் கங்கை யென்னும் பதம் கரையை யறிவிப்பதாதல்போல் வதாம்." என்பது தருக்க கௌமுதி.

இச்சாப்த போதத்திற்கு அவாய்நிலை, தகுதி, சாற்பரியம், அண்மை என்னும் நான்கும் சகாரிகளாம். அவற்றுள்:—

அவாய்நிலையாவது ஒரு பதார்த்தத்திற்கு வேறுபதார்த்தத்தோடு கொண்டுகூட்டு நேர் வின்மையாம்.

தகுதியாவது ஒரு பதார்த்தத்திற்கு வேறு பதார்த்தத்தோடுள்ள சம்பந்தமாம்.

சாற்பரியமாவது கேட்பவனுக்கு இப்பதத்தால் இப்பொருளின் ஞான முண்டாகவேண்டுமென் றப்பதத்தைக் கூறுலோனது இச்சையாம்.

அண்மையாவது யோக்கிய பதங்களின் விருத்திரூப சம்பந்தத்தா லுண்டாகும் மறைப்பின்றிய பதார்த்தஞகளின் ஸ்மிருதியாம்.

இச்சத்தம் விதி, நிஷேதம், அர்த்தவாதம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்தி.

அவற்றுள், விதிவாக்கியமாவது இதனைச்செய்க என்றுபுருஷனைப்பிர வர்த்திக்குமாறு செய்யும் வாக்கியமாம். ஜோதிஷ்டோமத்தால் ஸ்வர்க்ககாமன் யஜிக்க என்பது விதிவாக்கியமாம். ஜோதிஷ்டோம மென்னும் யாகம் ஸ்வர்க்கரூப இஷ்டசாதனமாமென்பது பொருள். யஜிக்க என்னும் விதியால் இஷ்டசாதனத் தன்மை யடையப் படுதலாம்.

நிஷேதவாக்கியமாவது நிவர்த்திபரமான வாக்கியமாம். அது மதுபான செய்யற்க என்பதாம். மதுபானம் இஷ்டவிசேஷசாதன மன்மையா லென்க. இஷ்டவிசேஷமும் பாபத்தை யுண்பெண்ணுமையேயாம்.

விதிநிஷேதங்களுக்கு வேறுய வாக்கியம் அர்த்தவாதவாக்கியமெனப் படும். அதுவும் பூதார்த்தவாதம் (வச்சிரஹஸ்தன் புரந்தரன்), குணார்த்தவா தம் (யக்கியகம்பம் ஆதித்தன்), அனுவாதார்த்தவாதம் (அக்கினி பனிக்கு மருந்து) என மூவகைத்தாம்.

இச்சத்தம் இலௌகிகம் வைதிகமென்னும் வேறுபாட்டா லிருவகைத்து. இலௌகிகவாக்கியங்களுள், ஆப்தனுற் சொல்லப்பட்டவிலவே பிரமாணமாம்; வைதிகவாக்கியமோ பரமாப்தனுகிய பகவானுற் சொல்லப்பட்ட உமையின் முற்றும் பிரமாணமேயாம்.

4. உவமானப் பிரமாணம்.

உவமிதியறிவித்குக் காரணம் உவமானப்பிரமாணமாம்.
உவமானமாவது சாதிருசிய (ஒப்புமை) ஞானவடிவினதாம்.

சாதிருசியமாவது பேதத்தோகூடிய சமானதர்மமாம். மூற்றுஞ் சமா னதர்மமுள்ளவிடத்து உவமானம் சித்திப்பதின்று.

விளக்கம்:—கவயத்தையறியாத ஒரு ஈகரவாசி காட்டு வாயினிடத் தில் கவயம்(காட்டுப்பசு) அலைதாடியின்றிய ஆ (பசு) போன்றிருக்குமென் னும் வாக்கியத்தைக்கேட்டு, அவ்வாக்கியார்த்தத்தை யனுபவித்து, காட் டிற்குச் சென்றபோது, அலைதாடியின்றிய ஆவையொத்த பிண்டத்தைக் கண்டு, அக்காட்டுவாசியினுடையவாக்கியார்த்தத்தைஸ்மரித்து அப்பிண்டத் தில் கவயபதத்தின் வாச்சியத்தன்மையை யறிகிறான். ஈண்டுக் கவயபதத் தின் வாச்சியத்தன்மையின் ஞானம் உவமிதியாம்; காட்டுவாசியின துவாக்கி யார்த்தானுபவம் காரணமாம்; வாக்கியார்த்தத்தின் ஸ்மிருதி வியாபாரமாம்.

சாதிருசிய ஞானத்தால் உவமிதியறிவுண்டாதல்போன்று விதர்ம ஞா னத்தாலும்உவமிதியறிவுண்டாம்எங்ஙனம்:—காண்டாமிருகத்தையறியாத ஒருவன் காட்டுவாசியினிடத்து ஒட்டையின் விலக்ஷண (வேறுபாடான) தர்முடைய கொம்போகூடிய மூக்கினையுடையது காண்டாமிருகமென் னும் வாக்கியத்தைக் கேட்டு, அவ்வாக்கியார்த்தத்தை யனுபவித்துக் காட் டிற்குச் சென்ற காலத்து ஒட்டையின் விலக்ஷண தர்முடைய கொம் போகூடிய மூக்கினையுடைய பிண்டத்தைக் கண்டு, அக்காட்டுவாசியினு டைய வாக்கியார்த்தத்தை ஸ்மரித்து (நினைத்து), அப்பிண்டத்தில் காண் டாமிருக பதத்தின் வாச்சியத் தன்மையையறிகிறான். ஈண்டுக் காட்டுவாசி யினுடைய வாக்கியார்த்தானுபவம் காரணம்; வாக்கியார்த்தத்தின் ஸ்மரணம் வியாபாரம்; காண்டாமிருகபதத்தின் வாச்சியத்தன்மையின் ஞானம் உவ மிதியாகிய பயனும்.

5. அருத்தாபத்திப்பிரமாணம்.

அருத்தாபத்திப் பிரமையின் காரணம் அருத்தாபத்திப் பிரமாணமாம், உபபாதக (இராப்போஜனத்தின்) கற்பனைக் கேதுவாகிய உபபாத்திய(பரு மைத்தன்மையின்)ஞானம் அருத்தாபத்திப் பிரமாணமாம்; உபபாதக(இரா ப்போஜனத்தின்) ஞானம் அருத்தாபத்திப் பிரமையாம்.

அருத்தமாவது - (உபபாதக) வஸ்து. ஆபத்தியாவது - கற்பனையாம். ஆகவே, அருத்தாபத்தி யென்பத னவயவப்பொருள் வஸ்து கற்பனையென் பதாம்.

எங்ஙனம்:—பருத்திருக்குந் தேவதத்தன் பகலுண்ணுனென்ற காணு மிடத்தாவது, கேட்குமிடத்தாவது, எவன் பகலி லுண்ணவில்லையோ அவ னிரவிலு முண்ணுவிடத்துப் பருமை சம்பவியாதென்றுணர்ந்த பின்னர்ப் பருமைக்குக் காரணம் இராப்போஜனமென்ற கற்பிக்கப்படுகிறது. இந்த இராப் போஜனத்தின் கற்பனை அருத்தாபத்திப் பிரமையாம்; இந்த இராப்போஜனத்தின் ஞானத்துக்கு வதுவாகிய பருமையின் ஞானம் அரு த்தாபத்திப் பிரமாணமாம்.

இது திருஷ்ட (காண்டல்) அருத்தாபத்தி, சுருத (கேட்டல்) அருத் தாபத்தியுள் நிலுவைகத்தாம்

(1) பகலுண்ணுதலன்று பருமையைக் காண்டலாலுண்டாகும் இராப் போஜனத்தின் ஞானம் நிருஷ்டாருத்தாபத்தியாம்.

(2) வீட்டிலில்லாத தேவதத்தன் ஜீவித்திருக்கிறானென்று கேட்குமிடத்து, வீட்டிற்குவெளியே தேவதத்தனது இருப்பின்றி வீட்டிலில்லாத தேவதத்தனது ஜீவனம் பொருந்தாதாகலின், வீட்டிற்கு வெளியே தேவதத்தனது இருப்புக் கற்பிக்கப்படுகிறது. வீட்டிலில்லாத தேவதத்தனது ஜீவனம் நிருஷ்டமன்று; ஆனால் சுருதமாம். ஆகலின், இது சுருதாருத்தாபத்தியாம்.

6. அனுபலப்திப்பிரமாணம்.

உபலப்தி அல்லது உபலம்பம் என்பதற்கு ஞானம், அல்லது விளக்கம் என்பது பொருளாம்; ஆகவே, அனுபலப்திக்கு ஞானமின்மை, அல்லது விளக்கமின்மை யென்பது பொருளாம்.

அபாவப் பிரமையின் காரணம் அனுபலத்திப் பிரமாணமாம். அனுபலத்திப் பிரமாணத்தாலுண்டாகும் ஞானம் அபாவப்பிரமையாம். எங்ஙனம்:—வீடிமுதலியவிடத்தைக் கடமுதலியன இல்லை யென்னும் ஞானமுண்டாகிறது. கடமில்லாதவிடத்தைக் கடத்தின் தகுதியான விளக்கமின்மையால் அதன் அபாவஞானமுண்டாகின்றது. அதுவே, அபாவப் பிரமையாம். கடத்தின் ஞானமில்லாத புருஷனுக்குக் கடத்தினபாவ ஞானமுண்டாகாதாகலின், பிரதியோகி யுணர்ச்சியின்றி யபாவ வுணர்ச்சியுண்டாகாதென்பதியமமாம். பிரதியோகியென்பது எதிர்மறையாம். கடத்தினபாவத்திற்கெதிர்மறை கடமாம். அக்கடமே பிரதியோகியாம். இவ்வாற்றால் விசேஷ்ய (விலக்கு) முகஞானத்திற்கு விஷயமாவது, அல்லது சம்பந்த சாதுரியங்கட்கு வேறுய பிரதியோகியினபேட்சையோடுகூடிய ஞானத்திற்கு விஷயமாவது அபாவத்தினிலக்கணமாம். விடி முதலிய விடத்துக் கடாபாவத்தை (கடத்தினில்லாமையை) யறியுமிடத்து, ஆண்டுக் கடத்தின் யோக்கியானுபலப்தி (தகுதியாயவிளக்கமின்மை) அனுபலத்திப் பிரமாணமெனவும், அதனுலுண்டாகுங் கடாபாவஞானம் அபாவப்பிரமை யெனவுமறிக.

இந்த அபாவம் சம்சர்க்காபாவம். அந்நியோந்தியாபாவமென இருவகைத்தாம். அந்நியோந்தியாபாவம் ஒன்றேபாம். சம்சர்க்காபாவம்: பிராகபாவம், பிரத்வம்சாபாவம், சாமயிகாபாவம், அத்தியந்தாபாவமென நால்வகைத்தாம்.

(1) பிராகபாவம்-உற்பத்தியின்றி, காரமுடையஅபாவமாம். எங்ஙனம்:-கடத்தின் பிராகபாவம், கடவுற்பத்திக்குமுன் கடத்தினுபாதான காரணமாய கபாலத்திலிருக்கின்றது; கபாலத்தினுற்பத்திக்கு முன்னும் கபாலத்தினுபாதான (மூதல்) காரணத்திலிருக்கிறது. இவ்வாற்றால், கடத்தினுற்பத்திக்குமுன் கடத்திற்குக் காரணமாய பரமாணுசமூதாயத்தில் கடத்தின் பிராகபாவ மிருக்கின்றது. பரமாணு கடக்களுக்கு இடையிலுள்ள துவி

யணுகமுதல் கபாலமீருயுள்ள சகல அவயவிகளின் பிராகபாவமும் அவற் றினுற்பத்திக்குமுன் பரமாணுவின்க ணிருக்கின்றது. இவ்வாற்ருல் அஃ தற்பத்தி யில்லாததாம். அது நாசமுடையதுமாம்; ஏனெனின், கடம் உற்பத்தியானதிம் அதன் பிராகபாவ மிருப்பதின்று;கடவுற்பத்தியே பிரா கபாவத்தி னுசமாம்.

(2) *பிரத்துவம்சாபாவம் - உற்பத்தியுடையதாய், நாச மில்லாததான அபாவமாம்.தண்டத்தால் கடநாசமுண்டாகும்போது அதன் பிரத்துவம்சா பாவ முற்பத்தியாகிறது. அஃது அநந்தமா(நாசமில்லாததா)ம். ஏனெனின், ஒன்றன் துவம்சத்தின் துவம்சம் உண்டாதலில்லே. கடத்தின் துவம்சம் யாவருக்கும் அனுபவசித்தமாம். கடத்தின் துவம்சத்தின் துவம்சம் (அஃ தாவது அழிந்த கடத்தின் புனருற்பத்தி) ஒருவரனுபவத்துமில்லே. ஆத லால் பிரத்துவம்சாபாவம் உற்பத்தியுடையதாய், நாசமில்லாததாம்.*

(3) *சாமயிகாபாவம்-உற்பத்தியுடையதும் நாசமுடையதுமாயுள்ள அபா வமாம். எங்ஙனம்:—ஓரிடத்துள்ள கடம், மற்ருேரிடத்திற்குக் கொண் டுபோன போது அவ்விடத்தில் அக்கடத்தின் அபாவ முண்டாகின்றது. மீண்டுமவ்விடத்தி லக்கடத்தைக்கொண்டு வந்து வைத்தபோது அது நாச மாய் விடுகின்றது. இத்தன்மைய வபாவமே சாமயிகாபாவமாம்.*

(4) *அத்தியந்தாபாவம்—அநாதியநந்தவபாவமாம். வாயுவிலுருவ மின் றென்பது அத்தியந்தாபாவத்திற்குதாரணமாம். ஒருகாலத்திருந்து ஒரு காலத்திராத பதார்த்தத்திற்குற்பத்தி நாசங்கள் அமையும். என்று மில்லாத பதார்த்தத்திற்கு உற்பத்தி நாசம் சொல்வது கூடாது. அத்தன்மைபே அத்தியந்தாபாவமாம். அநாதி - உற்பத்தியின்மை; அநந்தம்-நாசமின்மை.*

அத்தியந்தாபாவத்திற்கு வேறும் உற்பத்தி நாசமில்லாத அபாவம் அந் நியோந்நியா பாவமாம். இது பேதமென்றும், பின்னத்தன்மை யென்றும், அதிரிக்தத்தன்மை யென்றும் சொல்லப்படும். எங்ஙனம்:-கடம்படமன்று என்னு மிடத்தில் கடத்தில் படத்தினது அபேதம் நிஷேதிக்கப்படுகின் றது. கடத்தின் வேறுயதுபடமென்பது வாக்கியத்தின் பொருளாம். இவ் வாற்ருல், அபேதத்தை நிஷேதிக்கும் அபாவம் அந்நியோந்நியாபாவமாம்.

அபாவங்களின் இலக்கணம் நியாயசித்தாந்தப்படி கூறப்பட்டது. இதற்கு மறுப்பு முண்டு.

பரிமேலழகர் காட்சி முதலிய அளவைகளேச் சுருக்கமாகக் கூறினமை யின், அவ்வளவைகளே விளங்குமாறு ஒருவகையாக விரித்துக்கூறினும்.

ரு. அருள்சேர்ந்த நெஞ்சினுர்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்ன வுலகம் புகல்.

பரி.—(இ - ள்). இருள் செறிந்த துன்பவுலகத்துட் சென்று புகுதல் அருள்செறிந்த நெஞ்சினை யுடையார்க்கில்லை, (எ - று).

இருள்செறிந்த துன்பவுலக மென்றது இணிந்த வீருளை யுடைத ஞாய்த் தன்கட்புகுர்க்குத் துன்பஞ் செய்வதோர் நரகத்தை. அது மேழுல கத்துள் ஒரிடமாகலின் 'உலகம்' எனப்பட்டது.

தெளி.—(இ - ன்). இருள்சேர்ந்த—இருள் மிகுந்த, இன்னுவுலகம் - துன்பவுலகத்தில், புகல் - (போய்ப்) புகுதல், அருள்சேர்ந்த — அருள் மிகுந்த, நெஞ்சினுர்க்கு - மனதினையுடையவர்க்கு, இல்லை—, (எ - று).

இருள்சேர்ந்த வின்ன வுலகமென்றது கெருவகிய வீருளையுடைய நாய்த் தன்னிடத் தடைந்தவர்க்குத் துன்பஞ் செய்வதொரு தமப்பிரமை யென்னும் நரகத்தை. அதுமேழுலகத்துள் ஒரிடமாகலின் 'உலகம்' என்று கூறப்பட்டது.

(க - து) அருளுடையார் நரகமடையார் என்பது. (ரு)

3. They will never enter the world of darkness and wretchedness, whose minds are the abode of kindness

ரு. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லேன்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

பரி.—(இ - ள்) நீலபேறுடைய உயிர்களோப்பேணி அவற்றின் கண் அருளுடைய வொருவனுக்குத் தன்னுயிர் அஞ்சுதற்கேதுவாகிய தீவினைகள் உளவாகா வென்று சொல்லுவர் அறிந்தோர், (எ - று).

* உயிர்களெல்லாம் † நிதத.மாகலின் 'மன்னுயிர்' என்றார். அஞ்சுதல்-

* உயிர்களெல்லாம் நித்தாயிருத்தல் பற்றி 'நித்தமாகலின்' என்று கூறினர். இது கந்தபுராணம் சூரசங்கார நித்தியவத்து விசாரமுமாதத வத்தியாயத்தில் "ஒத்தசட மசித்தியமல் லாதுசித்துக் கனித்தியம்வர்தது தலின்றே" என்றும், பாகவத புராணம் 11-வதஸ்கந்தத்தில் "அறிவினி லாக்கை மூன்று மசத்திய மென்று நீக்கி, நிறைவுறு மறிவு தானே நித்திய மென்று தோவோர், பிறவிவெங் கடலை யொன்றுர்" என்றும், கூறு வதைஞ்சும் கண்குணரப்படும்

உயிர்களெல்லாம் நித்தியம், நித்தாயிருத்தலின், யாது நித்த அது நித்தியம் ஈசுவரன்போல; யாது நித்தியமன்று அது நித்தன்று கடம்போல என்பதில் கனுமானமாம். இஃ தன்வய வியதிரேகி யனுமானமாம்.

† நித்தியம்-தலசம்சாபாவ அப்பிரதியோகி (முன்னின்மைக் கெதிர் மறையாகாமை); அஃதாவது நாசமின்றி யிருப்பது.


¶ தீவினைநாக்கியஞ்சுதல் - * அன்னவறத்தினோன் கொலைமுதலிய பாவங்கள் செய்யானெனவே, மறுமைக்கண் நரகம் புகாமைக் கேதுகூறியவாறாயிற்று.

தெளி:—(இ - ன்). மன்னுயிர் - நிலைபேறுடைய உயிர்களே, ஓம்பி - பாதுகாத்து, அருளான்வாற்கு (அவ்வுயிர்களிடத்து) அருளுடையவனுயிருப் பவனுக்கு, தன்னுயிர்—தனது உயிர், அஞ்சும்-அஞ்சுதற்குக் காரணமாகிய, வினை - தீவினைகள், இல் - உண்டாகா, என்ப - என்று (அறிஞோர்) சொல்லுவர், (எ - று).

உயிர்களெல்லாம் (நித்தமாயிருப்பதுபற்றி) நித்தியமாதலின் 'மன்னுயிர்' என்றார். அஞ்சுதல்-துன்பநோக்கிப் பயப்படுதல். அப்படிப்பட்ட அறமுடையவன் கொலைமுதலிய பாவங்களைச செய்யானெனவே, மறுமையிலவன் நரகமடையாமைக்குக் காரணம் சொல்லியவாறுமாயிற்று.

(க - து). உயிர்களிடத்துக் கருணையுடையவன் தீவினைகளைச் செய்வதில்லை என்பது.

4. The wise say that the evils, which his soul would dread, will never come upon the man who exercises kindness and protects the life of other creatures.



இ. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

பரி:—(இ - ள்). அருளுடையார்க்கு இம்மையினும் ஒரு துன்பமில்லையாகாது; ‡ அதற்குக் காற்றியங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று, (எ - று).

† சான்றுவார் - தாங்கண்டு தேறிய பொருளைக் காணுதார்க்குத் தேற்றுதற்குரியவர். அருளாள்வார்க் கல்லலுண்டாக ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒருவரும் கண்டறிவா ரின்மையின், ‡ இன்மை முகத்தான்

¶ தீவினையாலுண்டாகுந் துன்பத்தைக் கருதி அது செய்யப் பயப்படுதல்.

* அன்னவறத்தினோன் - மன்னுயிரோம்பி யருளாளுமவ்வறத்தினையுடையவன்.

‡ அதற்கு - இம்மையிலும் ஒருதுன்பம் உண்டாகாதென்பதற்கு.

† "பாவ்பரம் வழக்கிடு மிருவரினும் வேருய், அவ்விருவரது வழக்கைச் சாட்சாத்தாக (நேராக) வறிந் ததாளை (பட்சபாத மற்றவனை) யிருப்பவன் சாட்சியெனப் படுவான்" என்பது தத்வார்தசந்தானம்.

‡ அருளுடையவர்களுக்குத் துன்பமுண்டாக ஒருகாலத்திலு மோரிடத்திலுங் கண்டறிந்தாரொருவருமில்லை யென்பதனை யேதுவாகக்கொண்டு [illegible] சாட்சியாகக் கொண்டாரென்க.

ஞாலத்தார் யாவரும் சான்றென்பார் § 'வளிவழங்கு மல்லன்மா ஞாலங்கரி' என்றார். ¶ எனவே, இம்மைக்கணென்பது பெற்றாம். ஞாலம் - ஆகு பெயர். இவை மூன்று பாட்டானும் || அத்திணையுடையார்க்கு இருமை யினும் துன்பமில்லாமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). அருளாள்வார்க்கு - அருளுடையவருக்கு, (மறு மையிலேயன்றி இம்மையிலும்), அல்லல் - ஒருதுன்பம், இல்லை - உண்டா காது, (அதற்கு), வளிவழங்கும் - காற்றுலாவுகின்ற, மல்லல் - வளப்பத்தை யுடைய, மா - பெரிய, ஞாலம் - பூமியில் வாழ்வோர், கரி - சாட்சியாவார்.

சாட்சியாவார் - தாம்கண்டு தெளிந்தபொருளைக்காணுதவர்க்குத் தெளி வித்தற்கு உரியவர். அருளாள்வார்க்குத் துன்பமுண்டாக ஒருகாலத்திலும் ஓரிடத்திலும் ஒருவரும் கண்டறிவா ரில்லாமையால், இல்லாமை காரண மாக உலகத்தாரனைவரும் சாட்சியாவாரென்பார் 'வளிவழங்கு மல்லன்மா ஞாலங்கரி' என்றார். எனவே, (சாட்சிபாதல்) இம்மையிலென்பது பெறப் பட்டது. ஞாலத்தாரை ஞாலமெனலால் அஃறிண வாகுபெயராம் இவை மூன்று பாட்டாலும் அவ்வருளாகிய தினையை யுடையவர்க்கு இம்மை மறுமை யென்னும் இருமையிலுந் துன்பமில்லாமை சொல்லப்பட்டது.

(க - து). அருளுடையார்க்கு இம்மையிலும் மறுமையிலும் துன்ப முண்டாவதில்லை என்பது.

5. This great rich earth, over which the wind blows, is a witness that sorrow never comes upon the kind-hearted.

கூ. பொருணீங்கிப் போச்சாந்தா ரேன்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

பரி:—(இ-ள்). உயிர்கண்மாட்டுச் செய்யப்படும் அருளைத்தவிர்த்து, தவிரப்படுங்கொடுமைகளைச் செய்தொழுகுவாரை முன்னும் உறுதிப்

§ வளி (காற்று) வழங்காத விடத்து மக்கள் வாழுதலின்மையின், 'வளிவழங்கு மல்லன்மாஞாலம்' என்று கூறப்பட்டது. காற்றில்லாத விட த்து ஒருவரும் ஜீவித்திருத்தல் முடியாதென்பது "ஆதிரா யகனே கேட்டி யமார்கோன் குலிசத் தாலே, காதல ஞய மைந்தன் காலன்வாய் வீழக் கண்டு, வாதரா யன்கோ பிக்க வயிறகள் பெருஞ்சா லென்னப், பூதம தென்ன வீங்கிப் புரண்டனர் புவனத் துள்ளோர்" என்று இராமாயணம் உத்தராகாண்டத்துள் கூறுவதாலு மறியப்படும். வளிவழங்கு ஞாலத்தை இவ்வுலகமென்றது பிரசித்தமாயிருப்பது நோக்கியாம்.

¶ எனவே - வளிவழங்கு ஞாலமெனவே.

|| காத பரிவிராஜகோப நிஷத்து ஐந்தாம் உபதேசத்தில் "சர்வ பூதங்களும் பயப்படுதற் கேதுவாகாது சஞ்சரிக்கின்ற முனிக்குச் சர்வபூத ங்களும் ஒருபோதும் பயமுண்டாவ தில்லை" என்று கூறுகின்றது.

போருளோச்செய்யாது தாம் துன்புறுகின்றமையை மறந்தவரென்று சொல்லுவர் நல்லோர், (எ - று).

உறுதிப்பொருள் - அறம். தன்புறுதல் - பிறவித்துன்ப மூன்றினையும் அனுபவித்தல் † மறந்திலராயின், அவ்வாறெழுகா ரென்பது கருத்து.

தேவி:—(இ - ள்). அருணீங்கி - (உயிர்களிடத்துச் செய்யப்படும்) அருளே யொழித்து, அல்லவை - ஒழிக்கப்படுங் கொடுமைகளை, செய்தொழுகுவார் - செய்து நடப்பவரை, பொருணீங்கி - (மூற்பிறப்பிலேயும்) உறுதிப்பொருளாகிய அறத்தைச்செய்யாது, பொச்சாந்தார் - (தாம் தின்ப மடைகின்றமையை) மறந்தவர், என்பர் - என்று (நல்லோர்) சொல்லுவர்.

தின்பமடைதல் - தன்னைப் பற்றிவருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமாகிய பிறவித்துன்ப மூன்றையும் அனுபவித்தலாம். மறவாதிருந்தாராயின், அப்படி நடவாரென்பது கருத்து.

(க - து). *உயிர்களிடத்தருளின்றித் தீங்கிழைப்பவர் தீவினையின்பயனை மறந்தவராவர் என்பது.*

6. The wise say that, those, who neglect kindness and practice cruelties, neglected virtue in their former birth, and forgot the sorrows which they must suffer.

ஈ. அருளில்லார்க் கவ்வுலக மில்லைப் பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

பரி:—(இ - ள்) உயிர்கண்மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பம் இல்லை, பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லையாயினும்போல, (எ - று).

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத் தின்பங்கட்குப் பொருள் காரணமானும்போல, அவ்வுலகத்தின்பங்கட்கு அருள் காரணமென்பதாயிற்று.

தேவி:—(இ - ள்). பொருளில்லார்க்கு - பொருளில்லாதவர்க்கு, இவ்வுலகம்-இவ்வுலகத்தின்பம், இல்லாகியாங்கு - இல்லையாயினும்போல, அருளில்லார்க்கு - (உயிர்களின்மேல்) அருளில்லாதவர்க்கு, அவ்வுலகம் - மூத்தியுலகத்தின்பம், இல்லை இல்லையாம், (எ - று).

அவ்வுலகம் இவ்வுலகமென்பன ஆண்டுள்ள இன்பங்களுக் காதலின், இடவாகுபெயர்களாம். இவ்வுலக வின்பத்தை யடைதற்குப் பொருள் காரண

† *தாம் பிறவித்துன்பங்களால் வருந்துகின்றதை மறவாதவராயின், உயிர்களிடத்துச் செய்யப்படும் அருளே யொழித்து, பற்றற வொழிக்கப்படுவனவாகிய கொடுமைகளைச்செய்து நடக்காரென்பது கருத்தாமென்க.*

யாஞ்சியோன்று. அந்த வுலக வின்பத்தை யடைதற்கு அருள் காரணமா மென்பதாயிற்று.

(கு - று). பொருளில்லாதவர்க்கு இவ்வுலகத்தின்பமும் அருளில்லாதவர்க்கு முத்தி யுலகத்தின்பமுமில்லை என்பது.

7. As this world is not for those who are without wealth, so, that world is not for those who are without kindness.

அ. பொருளற்றூர் பூப்ப ரோருகா லருளற்று
ரற்றூர்மற் ருதல ரீது.

பரி:—(இ - ள்). † ஊழான் வறியராயினூர் அது நீங்கிப் பின் ஞெருகாலத்துச் செல்வத்தாற் பொலிவர்; ‡ அவ்வாறன்றி, அருளிலாதார் பாவம் அறமையின் அழிந்தாரே, பின்ஞெருகாலத்தும் ¶ ஆதலில்லை. (எ - று).

§ மற்று - வினைமாற்றின்கண்வந்தது. * மேற் பொருளின்மையோடு ஒருவாற்றான் ஒப்புமை கூறினராகலின், அது மறுத்துப் பிறவாற்றான் அதனினுங் கொடிதென்பது கூறியவாறு.

தெளி:—(இ - ன்). பொருளற்றூர் - (போகூழினால்) வறுமை யடைந்தவர், (அவ்வறுமைநீங்கி), ஒருகால் - (பின்) ஒருகாலத்தில், (ஆகூழினால்), பூப்பர்-(செல்வத்தினால்) வினங்குவார். (அப்படியல்லாமல்), அருளற்

† ஊழ் - நல்வினையின் பயனுகிய இன்பமும் தீவினையின் பயனுகிய துன்பமும் அவ்வினைகளைச செய்தவனையே சென்று அடைவதற்குக்காரணமாகிய தியதி.

‡ அவ்வாறன்றி - ஊழினுலே தரித்திராயினூர் அத்தரித்திரம் நீங்கிப் பின்பொருகாலத்தில் செல்வமுடையவராவதுபோ லல்லாமல்.

¶ பாவம்நீங்கி யருட்செல்வ முடையவ ராகுத லில்லை.

§ அற்றூர் என்னும் வினையை மாற்றி அருமையின் என்னும் பொருளோடு அத்தமையின் மற்ற வினைமாற்றுயிற்று.

* மேல்(அருளில்லார்க் கவ்வுலக மில்லைப் பொருளில்லார்க், இவ்வுலக மில்லாயினுங் என்னும் குறளில்) பொருளில்லாமையோடு அருளில்லாமையை பொருவுகையால் உவமை கூறினராதலால் (இக்குறளில்) அது மறுத்து (பொருளில்லாமையோடு அருளில்லாமையை யொப்புக் கூறி வகைமாறுத்து) பிறவாற்றான் (வேறொருவழியினுல் அஃதாவது ஊழினுல் தரித்திராயினூர் அத்தரித்திரம் நீங்கிப் பின்பொரு காலத்தில் செல்வமுடையவராவர்; அருளில்லாதவர் பாவம் ஒழியாவையின் அழிந்தவரே; பின்ஞெருகாலத்தும் வீருத்தி யடையரில்லை யென்பதனுல்) பொருளில்லாமையினும் அருளில்லாமை கொடியதென்றுகூறியவிதமாமென்க.

ஈர் - அருளில்லாதவர், (பாவம்நீங்காமையால்), அற்ஈர் - அழிந்தவரே, மற்று - பின்னொரு காலத்திலும், ஆதலரிது - (அருட்செல்வ முடையவர்) ஆதலில்லை, (எ - று).

மற்று - வினைமாற்றுப் பொருளது. முன்னுள்ள குறளில் பொருளில் லாமையோடு அருளில்லாமையை ஒருவித்தால் ஒப்பாக்கிச் சொன்னாத லால், அதனை மறுத்து இக்குறளில் மற்றொரு விதத்தினால் அப்பொரு ளில்லாமையினும் அருளில்லாமை கொடிய தென்பது சொல்லிய வாறும்.

(க - து). அருளில்லாதவர் எக்காலத்தும் மேம்பா டுறுவ தில்லை என்பது.

8. Those who are without wealth may, at some future time, become prosperous; those who are destitute of kindness; are utterly destitute; for them there is no change.

கூ. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றுற் றேரி
னருளாதான் செய்யு மறம்.

பரி.—*(இ - ள்). உயிர்கண்மாட்டு அருள் செய்யாதவன் செய்யும் அறத்தை ஆராயின், ஞானமில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை யுணர்ந்தாற் போலும், (எ - று).*

மெய்ப்பொருள் - மெய்ந்நூலிற் சொல்லும் பொருள். † நிலைபெற்ற ஞானமில்லாதவன் இடையே மெய்ப்பொருளை உணர்ந்தால், அதனைத் தன் ஞானம் இன்மையாற் றானே அழித்துவிடும். அதுபோல, அருளா தான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன்னருளாமையாற் றானே அழித்து விடுமென்பதாயிற்று; ஆகவே, பிறவறங்கட் கெல்லாம் அரு ளுடைமை மூலமென்பது பெற்றாம். இவை நான்குபாட்டானும் அத் தினையில்லாதார்க்கு வருங்குற்றங் கூறப்பட்டது.

தெளி:—*(இ - ள்). அருளாதான் - (உயிர்களிடத்து) அருள்செய் யாதவன், செய்யும் - செய்கின்ற, அறம் - அறத்தை, தேரின் - ஆராயின், தெருளாதான் - ஞானமில்லாதவன், மெய்ப்பொருள் - மெய்ந்நூலிற் சொ ல்லும் பொருளை, கண்டற்று - (ஒருகால்) அறிந்தாற்போலும், (எ - று).*

ஆல் - அசை. நிலைபெற்ற ஞானமில்லாதவன் நடுவே மெய்ப்பொரு ளறிந்தால், அதனைத் தன்னிடத்து ஞானமில்லாமையால் தானே அழித்து விடுவான்; அதுபோல அருளில்லாதவன் நடுவே அறஞ்செய்தால் அதனைத் தன்னிடத் தருளில்லாமையால் தானே அழித்துவிடுவா னென்பதாயிற்று; ஆகவே, மற்றெல்லா வறங்களுக்கும் அருளுடைமை காரணமென்பது பெறப்பட்டது. இவை நான்குபாட்டாலும் அவ்வருளாகிய தினையில்லாத வர்க்கு வரும் குற்றஞ் சொல்லப்பட்டது.

† *நிலைபெற்ற ஞானம் - சற்குரு மூர்த்தியினிடத்துப் பலமுறை தத் துவ விசாரஞ் செய்ததனு லுண்டாகிய ஐயந் திரிபின்மிய ஞானம்.*

(க - து). அருளில்லாதவன் செய்யும் அறம் அறமாவதில்லை.

9. If you consider the virtue of him who is without kindness it is like the perception of the true being by him who is without wisdom.

கo. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

பரி:—(இ - ள்). தன்னின்வலியார் தன்னை நலிய வரும்போழது அவர்முன் தானஞ்சிநிற்கும் நிலையினை நினைக்க; அருளில்லாதவன் தன்னின் எளியார்மேல் தான் நலியச் செல்லும் பொழது, (எ - று).

மெலியா ரெனச் சிறப்புடைய உயர்திணைமேற் கூறினராயினும், ஏனை யஃறிணையுங் () கொள்ளப்படும். † அதனை நினைக்கவே, ‡ இவ் வுயிர்க்கும் அவ்வாறே அச்சமாமென்றறிந்து, அதன்மேல் அருளுடை யனு மென்பது கருத்து. இதனால் அருள் பிறத்தற் குபாயங் கூறப்பட் டது.

தெளி:—(இ - ள்). (அருளில்லாதவன்) தன்னின் மெலியார்மேல் - தன்னிலுமெளியாரிடத்து, தான் —, செல்லுமிடத்து - (வருத்துவதற்குச்) செல்லும்பொழுது, வலியார் - (தன்னிலும்) வலியவர், (தன்னைவருத்துவ தற்கு வரும்போது), முன் - (அவர்) முன், தன்னை - (அஞ்சிநிற்கும்) தனதுநிலையை, நினைக்க - நினைக்கக்கடவன் (எ - று).

மெலியாரென்று சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினா ராலுலும், ஏனைய அஃறிணையுயிர்களுங் கொள்ளப்படும். அதனை நினைக்க வே, இக்வுயிருக்கும் அப்படியே அச்சமுண்டாகு மென்றறிந்து, அவ்வுயி ரின்மீது அருளுடையவனுவா னெனபது கருத்து. இதனால் அருள்பிறப் பதற்கு உபாயஞ் சொல்லப்பட்டது.

(க - து). தன்னிலும் வலியவர் தன்னைவருத்த வரும்போது தானிருக்கும் நிலைமையை யெண்ணுகின்றவன் தன்னிலும் மெலி யவரை வருத்துதல் செய்யான் என்பது.

---


* ஏனை யஃறிணை யென்பன, இப்பி, சங்கு, கறையான், எறும்பு, தும்பி, வண்டு, பறவை, ஆடு, மாடு முதலியனவாம்.

() இவ்வாறு கொள்ளுதல் உபலட்சணமாம்.

† அதனை நினைக்கவே - தன்னைப் பார்க்கிலும் வலியவர் தன்னை வரு த்த வரும்போது அவ்வலியவர் முன்பு தான்பயந்து நிற்கும் நிலைமையை நினைக்கவே.

‡ இவ்வுயிர்க்கும் அவ்வாறே யச்சமாமென் றறிந்து - காம் வருத்தப் புகு மிப்பிராணிக்கும் மேம்பிலும் வலியவர் முன்னர் காம் பயந்ததுபோலப் பயமுண்டாகு மென்று தெரிந்து.

10. When a man is about to rush upon those who are weaker than himself, let him remember how he has stood (trembling) before those who are stronger than himself.



இரண்டாவது அதிகாரம்.

புலான்மறுத்தல்:—*Abstinence from flesh.*

பரி:—அஃதாவது ஊனுண்டலே யொழிதல். ¶ கோலப்பாவத் தைப்பின்னும் உளதாக்கலின் அதற்குக் காரணமாதலேயும், முன்னும் அதனுன் வருதலின் அதன்காரியமாதலேயும் ஒருங்குடைத்தாய ஊனுண் டல் அருளுடையார்க் கியைவதன்றுகலின்: அதனை விலக்குதற்கு, இஃ தருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது ஊனுண்ணுதலே யொழித்தலாம். கொலைப் பாவத்தைப் பின்னும் உண்டாக்கலால் அக்கொலைப் பாவத்திற்குக் காரண மாதலேயும், முன்னும் அக்கொலைப்பாவத்தால் வருவதால் அக்கொலைப் பாவத்தின் காரியமாதலேயும் ஒரு சேர வுடையதாகிய ஊனுண்ணுதல் அருளுடையார்க்குப் பொருந்துவது அன்றுகலின், அதனை விலக்குவதற்கு, இப்புலான்மறுத்தல் அருளுடைமையின் பின் வைக்கப்பட்டது.

க. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

பரி:—(இ - ள்). தன்னுடம்பை வீக்குதற் பொருட்டுத் தான் பிறி தோருயிரின் உடம்பைத். தின்பவன் எவ்வகையான் நடத்தும் அருளினை.

‡ பயனிலாத ஊண் பெருக்கலைப் பயனெனக்கருதி இக்கொடுமை

¶ பிராணிகளைக் கொல்லுவதா லுண்டாகும் பாவத்தை (மாமிசமுண் டல்) பின்னும் உண்டாக்குவதனால் அக்கொலைப் பாவதிற்குக் காரண மாயிருத்தலேயும், முன்னும் (மாமிசமுண்டல்) பிராணிகளைக் கொல்லுவதா லுண்டாதலால் அக்கொலையின் காரியமாயிருத்தலேயும் ஒருமித்துடை யதாயிருக்கின்ற மாமிசம் புசித்தல் அருளுடையவர்களுக்குப் பொருத்துவ தல்லாமையானால், அம்மாமிசம் புசித்தலை நீக்குவதற்கு இப்புலான் மறுத்த லென்னு மதிகாரம் அருளுடைமையென்னு மதிகாரத்தின் பின் வைக்கப் பட்டதென்க. இவ்வதாரிகையால் ஒருவன் மாமிசம் புசித்தல் பல பிராணிகளைக் கொல்லுவதற்குக் காரணமாயும், பலபிராணிகளைக் கொன்ற தன் காரியமாயு மிருக்கின்றதென்பது நன்கு விளக்கமாயிற்று.

‡ பயன்படுதலில்லாத உடலைப் பெருகச்செய்தலைப் பயன் (பிரயோ ஜனம்) என்றெண்ணி மாமிசம் புசித்தலாகிய இக்கொடிய காரியத்தைச் செய்வோனே அறிவில்லாத துஷ்டனென்றுயிற்று. இதனால் துறவறத்தான் மோட்சமடைதற்கு நேர்சாதனமான ஞானத்தைப் பெறுவதற்கு வேறு

செய்வானே அறிவிலாத கொடியோ னென்றவா ரறிற்று. † 'எங்ஙன மாளுமருள்' என்பது ஆளானென்பது பயப்பின்ற இகழ்ச்சிக் குறிப்பு.

தெளி:—(இ - ள்). தன்னூன் - தன்னுடம்பை, பெருக்கற்கு - வளர்த்தற்பொருட்டு, தான்—, பிறிதூன் - மற்றொரு பிராணியினுடம்பை, உண்பான் - தின்பவன், எங்ஙனம் - எவ்வகையால், அருள் - அருளோ, ஆளும் - ஆளுவான் (எ - று).

பயனில்லாத உடலே வளர்த்தலைப் பயனென்று நினைத்து (பிறிதூனுண்ணும்) இக்கொடுமையைச் செய்வோனே அறிவில்லாத கொடியோனென்றவாறாயிற்று. 'எங்ஙனமாளுமருள்' என்பது, அதனை ஆளானென்பது தன்கின்ற இகழ்ச்சிக்குறிப்புச் சொல்.

(க - து). புலாலுண்பவன் அருளுடையவனாகான் என்பது.

1. How can he be possessed of kindness, who to increase his own flesh, eats the flesh of other (creatures).

உ. பொருளாட்சி போற்றுதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

பரி.—(இ-ள்). பொருளாற்பயனீர் கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கில்லை, அதுபோல, அருளாற்பயன்கோடல் ஊன்றின்பவர்க்கில்லை, (எ-று).

வா யுள்ள விரதங்களை யனுஷ்டித்தலே விட்டு உடல்பெருகுமாறு மாமிசம் புசித்தல் பயனில்லாத காரியமாமென்பது பெற்றாம். தூறவறத் தான் உடல் பெருகச் செய்யலாகாதென்பது மநுதர்மசாஸ்திரம் 6 ம் அத்தியாயத்தில் " (வானப்பிரஸ்தன்) காய்கிழங்கு முதலியன வகப்படாவிட்டால் வானப்பிரஸ்த பிராமணர்களிடத்திலும் அவர்களில்லாவிட்டால் வனவாசஞ் செய்கின்ற இருஷ்டர்களிடத்திலும் தன்பிராணதாரத்திற்கு உபயோகமான வளவு பிட்சையெடுத்துக் கொள்ளல் வேண்டும் " என்று கூறுவதாலுமுணரப்படும். மேலும், ஷே தருமசாஸ்திரம் ஐந்தாவது அத்தியாயத்தில் "எவன் * * மற்றொன்றன் மாமிசத்தினாலே தன்மாமிசத்தைவிர்த்திசெய்ய நினைக்கிறானே அவனிலும் பாவி யிந்த வுலகத்திலொருவருமில்லை" என்று கூறுவதும், "ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே" என்றுன்றோர் கூறுவது மிகுகறியத்தக்கனவாம்.

† 'எங்ஙனமாளுமருள்' என்பதில் எங்ஙன மென்னும்வினை எதிர்மறைக்கண் நின்றமையின், ஆளும் என்பது ஆளான் என்னும் பொருளுணர்த்திநின்று. உணர்த்தவே, ஊன் உண்பான் அருள் ஆளும் என்பது "பல்சான் றீரே பல்சான் றீரே, கயன்முள் ளன்ன நரைமுதிர் நிரைசுவட், பயனின் மூப்பிற் பல்சான் றீரே" என்று புறநானூறு கூறுவது போல இகழ்சிக் குறிப்பாமென்க.

பொருட்பயன் இழத்தற்குக் காரணம் காவாமை போல, அருட்பயன் இழத்தற்கு ஊன்தினல் காரணமென்ப தாயிற்று. ‡ ஊன் தின்றாயினும் உயிர்கட்கு ஒரு தீங்கு நினையாதார்க்கு அருளாடம் ஒழுக்கில்லை யென்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவை யிரண்டுபாட்டானும் கூறப்பட்டது.

தெளி.—(இ - ள்). பொருளாட்சி - பொருளினைப் பயன் கொள்ளுதல், போற்றுதார்க்கு - (அப்பொருளைக்) காப்பாற்றுதவருக்கு, இல்லை—, அங்கு—அதுபோல, அருளாட்சி - அருளினைப் பயன் கொள்ளுதல், ஊன் றின்பவர்க்கு - மாமிசம் புசிப்பவருக்கு, இல்லை—,(எ - று).

பொருட்பயனை இழத்தற்குக்காரணம் அப்பொருளைக் காப்பாற்றுமை போல அருட்பயனை இழத்தற்கு மாமிசம் புசித்தல் காரணமாமென்பதாயிற்று. மாமிசம் புசித்தாராயினும் உயிர்களுக்கு ஒரு தீங்கு நினையாதவர்க்கு அருளை யாளுதற்குக்குறைவில்லை யென்பாரை மறுத்தற்கு, அக்குறை யுண்டென்பது இவை இரண்டு பாட்டானும் சொல்லப்பட்டது.

(க - து). அருளாலாம் பயனை ஊனுண்பவரடையார்களன்பது.

2. As those possess no property who do not take care of it, so those possess no kindness who feed on flesh.

கூ. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றாக்கா தோன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

பரி.—(இ - ள்). கோலைக்கருவியைத் தங்கையில் கொண்டவர் மனம் அதனாற்செய்யுங் கொலையையே நோக்குவதல்லது அருளை நோக் காதவாறுபோல, † பிறிதோருயிரின் உடலைச் சுவைபட வுண்டவர் மனம் அவ்வூனையே நோக்குவதல்லது அருளை நோக்காது, (எ - று.)

சுவைபடவுண்டல் - ¶ காயங்களான் இனியசுவைத்தாக்கி யுண்டல்.

‡ மாமிசம் புசித்தாராலுலும் பிராணிகளுக்கு ஒருகெடுதி யெண்ணுதவர்களுக்குஅருளையாளுதற்குக் குறைவில்லையென்று கூறும் புத்தர் முதலியோரை மறுத்து மாமிசம் புசிப்போர்க்கு (பிராணிகளைக் காப்பதாகிய அருளான நில்லாமையினால்) பிராணிகளுக்குத் தீங்கெண்ணுவதாகிய குற்றமுண்டென்பதாம். "அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி, யிம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்ற, ரம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும், பொய்ம்மா னிரயமென்றுற் புசித்தவர்க்கென் சொல்லுவதே" என்பது சிவஞானவள்ளலார்.

† (ஆடு முதலிய) பிராணிகளின் மாமிசத்தை யுண்டவரது மனத்தின்கண் தாமதகுணவிருத்தி யதிகரித்தலின், அம்மனதானது சத்துவ குண விருத்தியின்பருகியதான அருளை நோக்குதல் கூடாதாயிற்று.

¶ மாமிசத்தை மிளகு, உப்பு, வெங்காய முதலிய பொருள்களால் நல்ல உருசி யுண்டாகச் சமைத்துண்ணுதல்.

இதனுன் ஊன் தின்றூர் மனம் நிற்கு மினைத்தல் உவம வணவையாற் சாதி த்து மேலது வலியுறுத்தப்பட்டது.

தெளி.—(இ - ள்.) ஒன்றன் - பிறிதோருயிரினது, உடல் - உடலை, சுவையுண்டார் - சுவைபடவுண்டவரது, மனம் - மனமானது, படை கொண்டார் - கொலைக்கருவியை (தம்கையில்) கொண்டவரது, நெஞ்சம் போல் - மனம் (அக்கருவியாற் செய்யுங் கொலைதொழிலையே நோக்குவ தல்லாமல் அருளை நோக்காதவாறு) போல, நண்ணூக்காது - (அவ்வுணவே நோக்குவதல்லாமல்) அருளைநோக்காது, (எ - று).

சுவைபடவுண்டல் - பிறிதோருயிரினுடலைக் காயங்களால் இனியசு வையுடையதாகச் சமைத்து உண்டல். படை - வாள்முதலானவை. இத னுல் ஊன்றின்றவரது மனம் நிகுகினைத்தலே 'படைகொண்டார் நெஞ்சம் போல்' என்னும் உவமானப் பிரமாணத்தினுல் சாதித்து முற்செய்யுளிற் சொல்லியது உறுதி செய்யப்பட்டது.

(கு-து). புலால் புசிப்பவரதுமனம் அருளை நாடுவதில்லை.

3. Like the (murderous) mind of him who carries a weapon in his hand, the mind of him who feasts with pleasure on the body of another creature, has no regard for goodness.

ச. † அருளல்ல தியாதெனிற் கோல்லாமை கோறல் பொருளல்ல தவ்வூன் றினல்.

பரி.—(இ - ள்). அருள் யாதெனிற் கொல்லாமை; அருளல்ல தியாதெனிற் கோறல்; ஆகலான், அக்கோறலான் வந்த ஊனைத்தின் கைபாவம், (எ - று).

‡ உபசாரவழக்காற் கொல்லாமை, கோறலாகிய காரியங்களே அருள் அல்லதெனக் காரணங்களாக்கியும், ஊன் தின்கையாகிய காரணத்தைப்

† 'அருளல்ல தியாதெனிற் கொல்லாமைகோறல்' என்பதி முறை நிரனிறைப் பொருள்கோளாய் அருள் கொல்லாமை அல்லது கோறல் என்றியைந்து நின்றது. யாதெனின் என்னும்வினு கடைநிலைத்தீவகமாய் நின்று அருளென்பதனேடுஞ் சென்றியைந்துநின்றது.

‡ ஒன்றன் நன்மையை மற்றொன்மே லேற்றிக் கூறுவதாகிய உப சாரவழக்கால் அருள்காரணமாக உண்டாரும் கொல்லாமையாகிய காரியத் தையும் அருளில்லாமை காரணமாக உண்டாரும் கொல்லுதலாகிய காரி யத்தையும் கொல்லாமை அருள் கோறல் அருளல்லது (அருளில்லாமை) என்று காரணங்களாக்கியும், (பாவமாகிய காரியமுண்டாவதற்கு உரியதா யுள்ள) மாமிசம் புசித்தலாகிய காரணத்தை ஊன்றினல் பொருளல்லது என்று காரியமாக்கியும் சொன்னுரென்க. இங்குக் கூறிய விரண்டனுள், முன்னது காரியம் காரணமாக வந்த வுபசாரவழக்கு; பின்னது காரணங் காரியமாகவந்த வுபசாரவழக்கு

† மொருளல்லதெனக் காரியமாக்கியுங் கூறினர். அருளல்லது கொடுமை, சிறப்புப்பற்றி § அறமும் பொருளெனப்படுதலின், பாவம் பொருளல்ல தெனப்பட்டது. ¶ கோறலென முன்னின்றமையின் 'அவ்வூன்' என் றார். § இனி யிதனை யிவ்வாறன்றி 'அருளல்லது' என்பதனை ஒன்றாக்கி, கொல்லாமை கோறலென்பதற்குக் கொல்லாமை யென்னும் விரதத்தை யழித்தலென் றுரைப்பாருமுளர்.

தெளி:—(இ - ள்.) அருள்-அருளென்பது, யாதெனின்-எதுவென் றால், கொல்லாமை - கொலைசெய்யாமையாம், (அருள்) அல்லது - அரு ளல்லாததென்பது, யாதெனின் - எதுவென்றால், கோறல் - கொல்லுத லாம், (ஆதலால்), அவ்வூன் - அக்கொல்லுதலால்வந்த மாமிசத்தை, தினல் - தின்னுதல், பொருளல்லது - அறனல்லாததாம் [பாலமாம்], (எ - று).

உபசாரவழக்குப்பற்றிக் கொல்லாமையாகிய காரியத்தை அருளென் றும், கொல்லுதலாகிய காரியத்தை அல்லதென்றும் காரணங்களாக்கியும், ஊன் தின்னுதலாகிய காரணத்தைப் பொருளல்லதெனக் காரியமாக்கியும், கூறினர். அருளல்லது—கொடுஞ்செயல், சிறப்புப்பற்றி அறமும் பொரு ளெனப் படுதலால், பாவம் பொருளல்லது என்று கூறப்பட்டது. கோற லெனமுன்னிருக்கின்றமையின் (கொல்லுதலால் வந்த)'அவ்வூன்'என்றார்.

(க-து). மாமிச முண்ணுதல் பாவ வேதுவா யிருத்தலின், அதனை யருளுடைமையா லொழித்தல் வேண்டு மென்பது.

4. Is it asked what is kindness and its opposite? It is the preservation of life, and its destruction. Therefore it is not right to eat that flesh, from which life has been taken away.

† பாவமென என்றும் பாடமுண்டு.

§ அறம் (தருமம்) என்பது குணமாயிருக்க, அதனைப் பொருளென் று கூறுதல் ஆகாது இம்மைப்பயன் மறுமைப்பயன் வீடு என்னும் மூன்றையுந் தரும் சிறப்புப்பற்றியாம். வைசேடிகர் குணமுதலிய வற்றை யும் பொருளென்பர். அருளுடைமையின் ஆறாவது குறளில் அறத்தைப் பொருளென்று கூறியது மிங்கறியத் தக்கதாம்.

¶ கோறல் என்று முன்னடியில் நின்றமையின், அதனை அகரச் சுட்டால் குறிப்பித்து 'அவ்வூன்' என்று கூறினரென்க.

§ இனி இக்குறளை யிப்படியல்லாமல் 'அருளல்லது' என்பதனை யொன்றாகக் கொண்டு கொல்லாமை கோறல் என்பதற்குக் கொல்லாமை யென்னும்விரதத்தை யழித்தலென்று பொருள் கூறுவாருமுளரென்பது. (அஃதாவது அருளில்லாமையாவது கொல்லாமை யென்னும் விரதத்தை யழித்தலென்பதாம்). இலக்கணக்கொத்தின் "செய்யா விருவினை செய்வி னை யாயி" என்பதனுரையில் "விலக்கின வற்றைச் செய்யாமையே நல்வி னைசெய்தல்" என்பதற்கு "அறவினை யாதெனிற் கொல்லாமை" என்று கூறியது மிங்கறியத்தக்கதாம். (அருளல்லது என்பதன் பொருள் கருணைப் பண்பில்லாதது என்பது)

குரு. * உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணுத்தல் செய்யா தளறு.

பரி.—(இ - ள்). † ஒருசாருயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊனு ணுண்மையென்கின்ற அறத்தின்கண்ணது; ஆகலான், $ அந்நிலை தலைய ஒருவன் அதனையுண்ணுமாயின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ் தற்கு அங்காவா தாம், (எ - று).

உண்ணப்படும் விலங்குகள் அதனற் றேய்ந்து சிலவாக ஏனைய பல வாய் வருதலின 'உண்ணுமை யுள்ள துயிர் நிலை' எனறார், உண்ணினெண் பது உண்ணவெனத் திரிந்துநின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான் தெடுங்காலம் நிரயத்தின் அழுந்த மெனபதாம். ¶ கொலைப்பாவம் கொன் றார் மேல் நிற்றலின், பின் ஊனுண்பார்க்குப்பாவமில்லை யென்பாரை மறு த்தி, அஃதுண்டென்பது இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி.—(இ - ன்). உயிர் - (சிலவகை) உயிர்கள், நிலை - (உடம்பினி டத்தே) நிற்றல், ஊன் - மாமிசத்தை, உண்ணுமையுள்ளது-உண்ணுமை யென்கின்ற அறத்தினிடத்தது, (ஆதலால்), உணண - (அந்நிலையுலைய ஒரு வன் அம்மாமிசத்தை) உண்பானுயின், அளறு - (அவனை விழுங்கிய) நர கமானது, அண்ணுத்தல் செய்யாது - (பின் உமிழ்தற்கு) வாய்நிறவாது. ()

* இக்குறள் நண்ணூல் விருத்தி யுரையில் தாப்பிசைப் பொருள் கோளிற்கு உதாரணமாக டெகைப்பட்டிருக்கிறது. தாப்பிசைப்பொருள் கோளாவது இடைநின்ற மொழி இயையாய முன்னும் பின்னுமின்ற மொழிகளோடு கூடுதலாம் 'உண்ணுமை' எனனு மிக்குறளில் இடை நின்றமொழி ஊன் என்பது அஃது உண்ணுமை யென்பதனேடும் உண் ண என்பதனேடுங் கூடி வருவ தாண்க.

† ஒருசாருயிர் - தினபதற் குரியவாகாத பிராணிகள்.

$ அந்நிலையுலைய - உயிர் உடம்பினிடத்து நிற்கும் நிலையான தகெட

¶ "தின்னுமது குற்றமிலை செத்ததெனும் புத்தா தின்னையெனக் கொனறுணசுத நீற்றினர்க்குப் பாவ, மன்றுவதுன் காரணத்தாற் றின் னுதார்க்கு வதைந்தொன்றை பிடாமையினுல் வதைத தவர்க்கே பாவ, மெ ன்னிலுனே யூட்டினர்க்குப் பாவஞ்சே வென்னதவம் புரிகின்ரூய புலால் கடவுட் கிடாயோ, வுன்னுடல மகுகியென நாணி வேரே ருடலுன்னி யகுகி யெனவுணர்கநிலேகா னீயே" என்று சிவஞானசித்தி கூறுவதும், மனுதரும சாஸ்திரம் ஐந்தாவது அத்தியாயத்தில் "பிராணிகளே வதை செய்யக் கட்டளே யிடுகிறவன், அதைசசெய்கிறவன், மாமிசத்தை யறுத் தெடுக்கிறவன், அதைவிற்கிறவன், அதை வாங்குகிறவன், அதைச சமைக் கிறவன், பரிமாறுகிறவன், புசிக்கிறவன், ஆகிய வீவர்களுமே வரும் காதகா களென்று சொல்லப்படுகிறார்கள்" என்று கூறுவதும், நான்மணிக்கடிகை "அலேப்பான் பிறிதுயிரை யாக்கலுல் குற்றம், வினேப்பாலிற் கொண்டே மிசைதலுல குற்றம்" என்று கூறுவது மிங்கே அறியத் தக்கனவாம்.

உண்ணப்படுகிற விலங்குகள் உண்ணும் அதனைக் குறைந்து செல்வதாக மற்றையவிலங்குகள் பலவாக விருத்தியடைந்துவருதலால் 'உண்ணுமையுள்ளதுயிர்கிலே' என்றார். உண்ண என்பது உண்ணினென்பதன் விகாரம். மாமிசமுண்டவன் மாமிசமுண்ணும் அப்பாவத்தினால் நெடுங்காலம் நரகத்தில் அழுந்திவாளென்பதாம். கொலைப்பாவம் கொன்றவர்மேல் நிற்றலால், பின் மாமிசமுண்பவர்க்குப் பாவமில்லை யென்பாரைமறுத்தி, அப்பாவம் உண்டென்பது இவையிரண்டு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து). மாமிசம் புசிப்பவன் நீளாதநரகத்தை யடைவான்,

5. Not to eat flesh contributes to the continuance of life; therefore if a man eat flesh, hell will not open its mouth to let him escape out,after he has once fallen in.

சு. ‡ தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

பரி.—(இ - ள்). பேதைமை காரணமாக அல்லது ஊன் தின்கை காரணமாக உலகங் கொல்லாதாயின், பொருள்காரணமாக ஊன் விற்பார் யாவரும் இல்லை, (எ - று).

உலகென்பது ஈண்டு உயிர்ப்பன்மை மேனின்றது. † பின்நிகழுந்

தினற்பொருட்டாற் கொள்ளா துலகெனின் என்றும் பாடமுணை.

† பின்னே யுண்டாகும் மாமிசம் புசித்தல் முன்னேயுண்டாகும் கொலைக்குக் காரணமாகாமையின், மாமிசம் புசிப்பார்க்குக் கொல்லுதலாகியகாரணத்தினால் வரும்பாவமில்லை யென்ற வாதியைப் பார்த்து இங்ஙனமன்றோ யின் இது கூடாதது என்னும் அருத்தாபத்திப் பிரமாணத்தினால் புலாலுண்ணல் கொலைக்குக் காரணமாதல் சாதிக்கப்பட்டதென்க.

இங்கு அருத்தாபத்தியாவது:— (அறியாமை காரணமாக, அல்லது) மாமிசம் புசித்தல் காரணமாக உலகத்தார் பிராணிகளைக் கொல்லாராயின் [இஃது இங்ஙனமன்றோயின் என்னும் அருத்தாபத்தியின் முத லவயவத்தின் பொருள்.] விலைப்பொருட்டாக மாமிசம்விற்பார் யாவருமில்லை (இஃது இது கூடாதென்னும் அருத்தாபத்தியின் இரண்டா மவயவத்தின் பொருள்.) என்பதாம்.

இன்னும் பொருட்டுப் பிராணிகளைக் கொல்லுவாரில்லை யாயின், மாமிசத்தை விற்பவர் யாவருமில்லை யென்பது இதன் திரண்டபொருளாம்.

இங்கு மாமிசம் உண்ணுதற் பொருட்டுப் பிராணிகளைக் கொல்லுவாருண்டாயின் அம்மாமிசத்தை விலையின நிமித்தம் விற்பாருமுண்டு என்பது அன்வயம் (உடன்பாடு).

மாமிசம் உண்ணுதற் பொருட்டுப் பிராணிகளைக் கொல்லுவாரில்லையாயின், அம்மாமிசத்தை விலையின் நிமித்தம் விற்பாரொருவருமில்லை யென்பது வியதிரேகம் (எதிர்மறை).

தின்கை முன்நிகழும் கொலைக்குக் காரண மாகாமையின், தின்பார்க்குக் காரணத்தான் வரும் பாவமில்லை யென்ற வாதியை நோக்கி, அருத்தாபத்தி யளவையாற் காரணமாதல் சாதித்தலின், இதனுள் § மேலது வலியுறுத் தப்பட்டது.

தெளி.—(இ - ள்). தினற்பொருட்டால் - (அறியாமை காரணமாக, அல்லது) மாமிசம் புசித்தல் காரணமாக, உலகு - உலகத்தார், கொல்லாதெ னின் - (பிராணிகளைக்) கொல்லாராயின், விலைப்பொருட்டால் - விலைப் பொருள் காரணமாக, ஊன் தருவார்-மாமிசத்தை விற்பவர், யாரும் - எவரும், இல் - இல்லை, (எ - று).

உலகென்பதிங்கு உயிர்ப்பன்மை (எண்ணிறந்த வுயிர்கள்) மேல் நின் றது. பின் புண்டாகும் மாமிசம்புசித்தல் அதற்கு முன்னே உண்டாகும் கொலைக்குக் காரணமாகாமையால், மாமிசம்புசிப்பவர்க்குக் கொலை செய்யுங் காரணத்தால் வரும் பாவம் இல்லை யென்ற வாதியை நோக்கி, அருத்தா பத்திப் பிரமாணத்தினால் மாமிசம்புசித்தல் கொலை செய்தற்குக் காரண மாதலைச் சாதித்தலின், இதனால் முற்கூறியது உறுதி செய்யப்பட்டது.

(க - து). ஆடுமுதலிய பிராணிகளைக் கொன்று, அவற்றின் மாமிசத்தையுண்பாரிலராயின், அதனை விற்பாருமிலராவர்என்பது.

6. If you say that the world does not destroy life for the purpose of eating, then no one would sell flesh for the sake of money.

எ. உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதோன்றன்
புண்ணு துணர்வார்ப் பெறின்.

பரி.—(இ - ன்). புலாலாவது பிறிதோருடம்பின் புண்; அதுதூய்து அன்மை அறிவாரைப் பெறின், அதனை உண்ணுதொழியல் வேண்டும்.

*அஃதென்னல் வேண்டும் ஆய்தம் விகாரத்தாற் றொக்கதது.

§ மேலது என்பது இவ்வதிகாரத்தின் 4 வது குறளும் 5 வது குற ளுமாம்.

* சுட்டடியாகப் பிறந்த ஆய்தத்தொடர் குற்றியலுகரமொழி நிலை மொழியாக நின்று வருமொழியோடு புணருமிடத்து வருமொழி முதலில் உயிரிருந்தால் ஆய்தங்கெடாது தென்னும், வருமொழி முதலில் மெய்யிருந் தால் ஆய்தங் கெட்டு முற்றியலுகரமாமென்று முள்ளவிதி [தொல்காப்பி யம் குற்றியலுகரப் புணரியலில் "முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி, மன்னல் வேண்டு மல்வழி யான" (முன்னென்றதனால் வேற்றுமைக் கண்ணு மிவ்விதிகொள்க என்று விசேடவுரையிலெழுதப்பட்டிருக்கின்றது) என் றும், "வேமுன் வரினே தானிலை யின்றே" என்று முள்ளவிதி] யின்படி புண்ணதுணர்வார் என்பதன்கணுள்ள அதுணர்வார்என்பது அஃதுணர்வார் என்றிருத்தல் வேண்டும். இங்கு அவ்வாறின்றிச் செய்யுள் விகாரத்தால்

† அம்மெய்ம்மை யுணராமையின், அதனை உண்கின்ற தென்பதாம். ‡ பொருந்துமாற்றானும் புலாலுண்டல் இழிந்ததென்பது இதனாற் கூறப் பட்டது.

தெளி.—(இ - ள்). புலாஅல் - புலாலாவது, பிறிதொன்றன் - வே றோருடம்பினது, புண் - புண்ணும், அஃது - அப்புலால், (அசுத்தமாயி ருத்தலே), உணர்வார் - அறிபவரை, பெறின் - பெற்றால், உண்ணமை வேண்டும் - (அப்புலாலை) உண்ணுதொழியல் வேண்டும், (எ - று).

அஃது என்பது செய்யுள் விகாரத்தால் ஆய்தங்தொக்கு அதுவென்று வந்தது. புலால் வேறோருடம்பினது புண்ணுமென்னும் அந்த மெய்ம்மை யையறியாமையால், அந்தப்புலாலை உண்கின்றதென்பதாம். இதனால் யுத் தியினாலும் மாமிசம் புசித்தல் இழிந்ததென்பது சொல்லப்பட்டது.

(க - து). மாமிசம் வேறோருடம்பினது புண்ணுமென் றறிந் தவர் அதனை யுண்ணார் என்பது.

7. Since the wise consider flesh as the unclean ulcer of a body, let it not be eaten.

அ. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

ஆய்தங்கெட்டு அதுணர்வார் என்றிருத்தல்பற்றி 'அஃதென்னல் வேண்டும் ஆய்தம் விகாரத்தாற் றொக்கது' என்று கூறப்பட்டது.

† மாமிசமானது மற்றோருடம்பின் புண்ணுமென்னு முண்மையை யறியாமையினால் அம்மாமிசத்தை யுண்ணுகின்றார் அறிவிலாரென்பதாம். புலாலுண்டலி னிழிவைப் பற்றிச் சான்றோர்கள் ''புலையென்னும் புலைநீரப் புனலென்னும் புனன்மூழ்கி, யுலகின்ற முழுமூட ரறிவென்ன வறி வென்ன, புலையன்றன் மலமுண்ணு மெமையுண்ணும் புலையர்க்குக், குல மென்ன நலமென்ன கூகூவென் றனகோழி'' என்றும், ''தகருன தெதிரே சிந்தத் தாந்தெரித் திட்ட கோழை, புகலுமுன் மீதிற் றூக்கப் பொருதுளங் குலைந்துற் றுயால், பகர்தரு மவற்றி னூனைப் பற்றிய மூளை யோடு, மகமகிழ்ந் தயின்ற வாறென் னைறைகுலி யறிவி லாதோய்'' என்றும், பிறவுங் கூறியிருத்தலிங்கு நன்குணர்தற் பாலதாம் (தகர்-ஆடு, சிந்தல்-திம்மல்).

‡ பொருந்துமாறு - இதுகூடும் இதுகூடாதெனத் தன்னிடத்தே தோன்றுமுக்தியாம்; இங்கு யுக்தியாவது மாமிசம் சுத்தமா யிருத்தால் அதனை யுண்ணுதல் கூடும்; (அங்ஙனமன்றி) அது புண் வடிவ அசுத்தமா யிருத்தலால் அதனை யுண்ணுதல் கூடாதென்பது. புண்ணானது அரு வருக்கத்தக்கதா யிருக்கின்றது; மாமிசமும் புண்வடிவமா யிருத்தலால் அஃது மருவருக்கத் தக்கதாம்; அருவருக்கத் தக்கதாகவே, புண்வடிவ மென்றறிந்தும் மாமிசத்தை யுண்ணுதல் அறியாமையிலு மறியாமையா மென்க.

பரி.:-(இ - ள்). மயக்கமாகிய குற்றத்தினீங்கிய அறிவினையுடையார் ஒருயிரி னீங்கிவந்த ஊனை உண்ணார், (எ - று).

§ தலைப்பிரி வென்பது ஒரு சொல். ¶ பிணமென ஊனின் மெய்ம்மை தாமே உணர்தலின் 'உண்ணார்' என்றார்.

தேளி:-(இ - ள்). செயிரின் - (மயக்கமாகிய) குற்றத்தினின்றும், தலைப்பிரித்த - நீங்கிய, காட்சியார் - அறிவினையுடையவர், உயிரின் - ஒருயிரினின்றும், தலைப்பிரித்த - நீங்கிவந்த, ஊன் - ஊனை, உண்ணார்.

தலைப்பிரி வென்பது ஒருசொல். பிணமென்று மாமிசத்தின் மெய்ம்மையைத் தாமே யறிதலால் 'உண்ணார்' என்றார்.

(க - து). அறிவுடையார் மாமிசமுண்ணார் என்பது

8. The wise, who have freed themselves from mental delusion, will not eat the flesh which has been severed from an animal.

கூ. அவிசோரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணுமை நன்று.

பரி.—(இ - ள). தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சோரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும், ஒரு விலங்கின் உயிரைப்போக்கி அது நின்ற ஊனை உண்ணுமை நன்று, (எ - று).

* அவ்வேள்விகளான் வரும் பயனினும், இவ்விரதத்தான் வரும் பயனே பெரிதென்பதாம்.

§ தலைப்பிரித்த என்பதில் தலையென்பது பொருளுணர்த்தாத உபசர்க்கமாய் வந்தமைபற்றி, 'தலைப்பிரிவென்பது ஒருசொல்' என்று கூறப்பட்டது.

¶ ஒருயிரினின்றும் நீங்கிவந்த மாமிசத்தை (உயிர்நீங்கிய உடலை)ப் பிணமென்று தாமே உள்ளவாறு அறிதலால் பிணவடிவ மாமிசத்தை மயக்கம் நீங்கிய அறிவினையுடையவர் உண்ணார் என்பதாம். எனவே, மாமிசம் புசிப்பவர் மாமிசத்தைப் பிணவடிவமென் றறியாமையினு லதனை யுண்ணுகின்ற ரென்பதாயிற்று; ஆகவே, பிணத்தைத் தொட்டதனால் தீட்டுண்டாயிற்றென் றதற்காகப் பரிகாரந் தேடுவோர் பிணவடிவ மாமிசத்தைப் புசித்தல் அறியாமையினும் அறியாமையாம். இதனால் மாமிசம் புசிப்போர் பிணம் புசிப்போரென்றுமியற்றென்க. "பிணங்கிடக்க நாலு கூரே னென்றுநீ பேசுங், குணங்கிடக்க வேண்டியதென் கூறும் - பிணத்தைக், கலத்திலே யிட்டுக் கவர்த்துநா வாரப், புலத்தினுற் றின்றல் புகல்" என்னுமிச் செய்யுளும் ஈண்டறியத்தக்கதாம்.

* மனுதரும சாஸ்திரம் ஐந்தாமத்தியாயத்தில் "எவன் நூறு வருஷ பரியந்தம் வருஷந்தோறும் அஸ்வமேதயாகஞ் செய்கின்றானே, எவன் மாமிசத்தைச் சாமளவும் நீக்குகிறானே இவரிருவருக்கும் புண்ணிய பலன்

தெளி:—(இ - ள்). அவி - (செய்முதலிய) அவிகளை, சொரிந்து - (தீயினிடத்து) பெய்து, ஆயிரம்வேட்டலின் - ஆயிரம்யாகஞ் செய்தலினும், ஒன்றன் - ஒருவிலங்கினது, உயிர் - உயிரை, செகுத்து - போக்கி, உண்ணுமை - (அவ்வுயிர் நின்ற மாமிசத்தை) உண்ணுதிருத்தல், நன்று - நல்லது, (எ - று).

அந்த யாகங்களால் வரும் பயனிலும், புலால்மறுத்தலென்னும் இந்த விரதத்தால் வரும் பயனே பெரிதென்பதாம் அவி - தேவர்க்கிடுமுணவு.

(க - து). அளவிறந்த வேள்வி புரிதலா லுண்டாகும் பயனிலும், புலா லுண்ணுது மறுத்தலா லுண்டாகும் பயன் சிறப்புடைய தென்பதாம்.

9. Not to kill and eat the flesh of an animal, is better than the pouring forth of ghee in a thousand sacrifices.

கo. கொல்லான் புலாலே மறுத்தானைக் † கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

சரிதான்" "மாமிசத்தை நீக்குகிறவன் எந்தப்பலனை யடைகிறானே அந்தப் பலனைப் பழம் பிழங்கு சாலியன்ன மென்னு மிவற்றால் ஸ்ரீலிக்கின்றமுனிய மடையமாட்டான்" என்று கூறுவது நினைக்கறியத்தக்கதாம். தீயின்கண் தேவருணவாகிய செய்முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் (ஆயிரமென்றது இங்குக் கணக்கிறந்தன வற்றை யுணர்த்தி நின்றது) யாகங் (ஈற்றுருபி யாகம் எனப்படும்)களைச் செய்வதால் மறுமையிலுண்டாகும் சுவர்க்க முதலியவற்றின்பயனிலும், மாமிசத்தை யுண்ணுகின்றவொருவன் அதனிழிவையறிந்து மாமிசமுண்ணுமையாகிய விரதத்தை மேற்கொள்ளுவானு யின் அவனுக்குப் பெரும்பயனுண்டாகு மென்பதாம். எனவே, வேள்வியிங்கு இழித்துக் கூறப்பட்ட தன்றென்றுமிற்கறன்க. இஃதறியாது ("வேத வேள்வியை நிந்தனை செய்தீர், வாதமில்லி யமணெதிரரை" என்று திருஞான சம்பந்த சுவாமிகள்கூறியவாறு) வேதவேள்வியை நிந்தனை செய்பவராகிய சமணருக்கு 'அவிசொரிந்து' என்னுமிக்குறள் சாதகமா மென்று கூறுவாருமுளர். அவர்"அவிசொரிந் தாயிரம் வேட்டலின்" என்னும் பிரயோகத்தை நன்குகவனித்திலர் போலும். இராமனைப்பார்க்கிலும் இலக்குமணன் நல்லவன் என்புழி இராமன் தீயவனுகாவாறு போன்று வேள்வி செய்வதினும்புலால்புசியாமை நன்றென்புழியும்வேள்வி தீயதாகா தென்க. வேட்டலின் என்பதன்இன்னுருபுஉறழ்பொருளின்கண் வந்தது. மேலும்,நாயனர் புலாலுண்ணுமையைச்சிறப்பிக்கவேண்டி வேள்விசெய்தலினும் புலால் புசியாமை நன்றென்று கூறினரெனினு மொக்கும்;யாகஞ் செய்கிறவனுக்கும் புலால் மறுத்தவனுக்கும் பலன் சமமாகத் தருமசாஸ்திரங்கள் கூறுதலாலென்க.

†கைகூப்பித் தொழுதல் உயிர்நிலைக்கன்றி, அஃதிலைக்கின்மையின், 'எல்லாவுயிரும்' என்பதிங் குயர்திணையுயிராம்.

பரி:—(இ - ள்). ஒருயிரையுங் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணாதவனே † எல்லாவுயிருங் கைதுவித்துத் தொழும், (எ - று).

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது $ ஒன்றே யுடையார்க்கு அதனாற் பயனில்லையாதலின், கொல்லாமையும் உடன்கூறினர். ¶ இப்பேருருள் உடையான் மறுமைக்கண் தேவரின் மிக்கானெனை 0அப்பயனது பெருமை கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் ஊணுண்ணாமையது உயர்ச்சி கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்). கொல்லான் - (ஒருயிரையுங்) கொல்லாதவனுமாய், புலாலை மறுத்தானை - புலாலையுமுண்ணாதவனை, எல்லாவுயிரும் - சர்வப்பிராணிகளும், கைகூப்பி-கைகுவித்து, தொழும்-வணங்கும், (எ-று),

கொல்லாமையும் புலாலை மறுத்தலுமாகிய இவ் விரண்டறங்களையும் ஒருமிக்க வுடையவர்க்கல்லாமல் (அவற்றுள்,) ஒன்றுமாத்திரம் உடையவர்க்கு அதனாற் பயனில்லையாகலின் புலால் மறுத்தலுடன் கொல்லாமை யையும் சொல்லினர். இப்பேருருளுடையவன் மறுமையில் தேவரினும் உயர்ந்தவனென்று அப்பயனது பெருமை சொல்லியவாறும்.. இவை மூன்று பாட்டாலும் ஊணுண்ணாமையினது உயர்ச்சி சொல்லப்பட்டது.

(க - து). ஒருயிரையுங் கொல்லாது புலாலுண்ணாதிருப்பவனை யெல்லாவுயிரும் வணங்கும். என்பது.

10. All creatures will join their hands together, and worship him who has never taken away life, nor eaten flesh.

† ஒருயிரையுங் கொல்லாமலும் புலாலுண்ணாமலு மிருக்கும் பேரருளுடையான் இம்மையில் மனிதவர்க்கங்களும் மறுமையில் தேவவர்க்கங்களும் கைகூப்பித் தொழுமியல்புடையவனாய், அவர்களுள் மேம்பட்டு விளங்குவா னென்பதாம். மனுதர்மசாஸ்திரம் ஐந்தாவ தத்தியாயத்தில் "எவன் ஜந்துக்களைக் கட்டாமலும் கொல்லாமலும் வருத்தப்படுத்தாமலு மிருக்கிறானே அவன் சர்வ ஜனமித்ரனுகச் சகல சுகத்தையுமனுபவிக் கிறான்" என்றும், ஆரண்யகாண்டத்தியாயத்தில் "எந்தத்துவிஜனிடத்திலிருந்து ஒருபிராணிக்குஞ் சிறிதும் பயமுண்டாகவில்லையோ, அவனுக்கு இறந்த பின் ஒருவரிடத்திலும் பயமுண்டாவதில்லை" என்றும் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

$ தானே யொன்றைக்கொன்று புசித்தல், பிறர்கொன்ற வொன்றைத் தான் புசித்தல், ஒன்றைக்கொன்று தானுண்ணுதி பிறர்க்கு உண்ணக் கொடுத்தல் என்னுமூன்றும் கூடாவென்பது இதனால் நன்குவிளங்குமென்க.

¶ இப் பேரருளுடையான்-கொல்லான் புலாலை மறுத்தானுகிய இப் பெருங் கருணையாளன்.

0 அப்பயனது - மறுமைக்கண் தேவரின் மிக்கானெனும் அப் பயனது.

மூன்றாவது அதிகாரம்

‖ தவம்—*On Austerities.*

பரி:—அஃதாவது மனம் பொறிவழி போகாது, நிற்றற்பொருட்டு விரதங்களான் † உண்டிசுருக்கலும் ¶ கோடைக்கண் வெயிலில்நிலை நிற்றலும், 0 மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும், ‖ முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றால் நமதுயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களை யோம்புதல். புலான் மறுத்து உயிர்கண்மேல் அருள் முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது புலான்மறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—*அஃதாவது மனம் இந்திரியங்களின் வழியிற் போகாது நிற்றற் பொருட்டு விரதங்களினால்உணவைச்சுருக்குதலும்வெயிற் காலத்தில் வெயிலில் நிற்றலும் மழைக்காலத்திலும் பனிக்காலத்திலும் நீரில் நிற்றலும், முதலான செயல்களை மேற்கொண்டு, அவ்வுணவைச் சுருக்குதல் முதலியவற்றால் தம்முயிர்க்குவரும் துன்பங்களைப் பொறுத்து, பிற வுயிர்களைப் பாதுகாப்பதாம். புலாலுண்டலை மறுத்து உயிர்களின்மேல் அருள் முதிர்ந்தவிடத்தில்தான் தவம் செய்யப்படுவதாகலின், இது (தவம்) புலான்மறுத்தலின் பின் வைக்கப்பட்டது.*

க உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

பரி.—(இ-ள்). தவத்தின்வழிவ உண்டிசுருங்கல் முதலியவற்றால் தம்முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையுமாகிய வல்லாவிற்றே, (எ-று)-

‖ *மன வின்திரியங்களின் ஏகாக்கிரமே (ஒருமையே) தபசு என்று விவேக சிந்தா மணி கூறுகின்றது.*

† உண்டிசுருக்கல் - *உணவைக் குறைத்தல்.* ¶ *கோடைக்கண்வெயில் நிலை நிற்றல்-சித்திரைமாத முதல் ஆடிமாத மீறுயுள்ள வெயிற்காலத்தில் வெயில் படுமிடத்தில் நின்றுகொண் டிருத்தல். வெயில் நிலைநிற்றல் என்பதனால் (ஞாற்புறமும் தீச்சூழ மேலே சூரியகிரணம் படுவதான) பஞ்சாக்கினி மத்தியில் நிற்றலுங்கொள்க.*

0 *ஆவணிமாத முதல் கார்த்திகைமாத மீறுயுள்ள மழைக்காலத்திலும் மார்கழிமாதமுதல் பங்குனிமாத மீறுயுள்ள பனிக்காலத்திலும் நீர் நிலையில் (ஏரி ஆறு மடுமுதலியவற்றில்) நின்றுகொண் டிருத்தல்.*

‖ *முதலிய என்றதனால் ஈரத்துணியைப் போர்த்துக்கொள்ளலும், பட்சோபவாசம் மாதோபவாச மிருத்தலும், மரத்தின்கீழ் வசித்தலும், பிறவுங்கொள்க.*

* மற்றுள்ளன வெல்லாமிவற்றுள்ளே யடங்குதலின், அற்றேனைத் தேற்றேனாரங் கொடுத்தார். † தவத்திற்குரு அற்றே என்பது யானை யது கோடு கூரிதென்பதனே யானைக்குக்கோடு கூரிது என்றுற்போல ஆறுவதன் பொருட்கண் நான்காவது வந்த மயக்கம். இதனால் தவத்தது இலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). தவத்திற்கு - தவத்தினது, உரு - வடிவம், உற்றநோய் - (உணவைச் சுருக்குதல் முதலியவற்றால் தம்மியிர்க்கு) வருந் தன்பங்களே, நோன்றல் - பொறுத்தலும், (தாம்), உயிர்க்கு - (பிற) உயிர்களுக்கு, உறுகண் செய்யாமை - துன்பஞ் செய்யாமையும் (ஆகிய), அற்றே - அவ்வளவினதேயாம், (எ - று).

மற்றைய விரதங்களெல்லாம் உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை யென்னும் இவ்விரண்டிலே அடங்குதலான், அற்றே எனத் தேற்றேகாரங் கொடுத்தார். தவத்திற்கு என்னும் நான்கனுருபு தவத்தின தென ஆறாம் வேற்றுமைப்பொருளில் வந்தது. இதனால் தவத்தினது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து). தவத்தின் வடிவம் விரதங்களால் வருந்துன்பத் தைப் பொறுத்தலும் பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யாமையு மாம் என்பது.

1. The nature of religious discipline consists, in the endurance by the ascetic of the sufferings which it brings on himself, and in abstaining from giving pain to others.

* திரிகாலஸ்நானம், தேவரிஷிபிதிர்களுக்குத் தர்ப்பணஞ் செய்தல், சுவப்பிரயோசனத்தில் விருப்பமில்லாமை, புணர்ச்சியில்லாமை முதலியன வெல்லாம் உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை யென்னு மிவ்விரண்டனுள்ளே அடங்குதலால், (தவத்தினது வடிவம் உற்றநோய் நோன்றலும் உயிர்க் குறுகண் செய்யாமையுமாகிய) அற்றே (அவ்வள வினதே) யெனத்தேற்றேகாரங் கொடுத்தாரென்க. அற்றே என்பதன் ஏகார விடைச்சொல் தணிவுப்பொருளே யுணர்த்தியதுபற்றித் தேற்றே காரமாயிற்று.

† தவத்தினது உரு அற்றே என்பது தவத்திற்கு உரு அற்றே யென்று வந்தது யானையது கோடுகூரித்து (தந்தம் கூர்மையுடையது) என் பதனையானைக்குக்கோடுகூரிது என்று கூறுவதுபோல ஆறனுருபின் கிழ மைப் பொருட்கண் நான்கனுருபு வந்தவேற்றுமை மயக்கமாம் (தவத்திற்கு என்பதன் நான்கனுருபு தனக்குரிய பொருளே விட்டு ஆறனுருபின் உறுப் புத் தற்கிழமைப்பொருளில் வந்தது இங்கு மயக்கமாம்).

உ. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

பரி.—(இ-ள்). † பயனேயன்றித் தவந்தானும் உண்டாவது † முற்றவ முடையார்க்கே; ஆகலான், அத்தவத்தை அம்முற்றவமில்லாதார் முயல்வது பயனின் முயற்சியாம், (எ - று).

பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவு போக்கலின் 'தவமுடையார்க் காகும்' என்றும், ‡ அஃதிலார்க்கு அவையின்மையின் முடிவு போகாமையின் அவமாம் என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ள்). தவமும் - (பயனேயல்லாமல்) தவமும் (உண்டாவது), தவமுடையார்க்கு - (முன்னைத்) தவத்தை யுடையார்க்கே, (ஆகலால்), அதனை - அத்தவத்தை, அஃதிலார்-அம்முன்னைத் தவமில்லாதவர், மேற்கொள்வது - செய்யத்தொடங்குவது, அவம் ஆகும்-வீண்முயற்சியாம்.

(தவத்தை முற்பிறப்பிற் செய்துள்ள) பழக்கத்தால் (இப்பிறப்பில்) அறிவும் வல்லமையும் உடையராய்த் தவத்தைச செய்து முடித்தலால் 'தவமுடையார்க் காகும்' என்றும், அப்பழக்கமில்லாதவர்க்கு அவ்வறிவும் வல்லமையு மில்லாமையினல் தவம் முடிவு பெறுமையால் அவம் ஆகும் என்றும் கூறினர்.

(க - து). முற்பிறப்பிற் றவஞ்செய்து பழகினவருக் கன்றி மற்றையோர்க்குந் தவத்தைச்செய்து முடித்தல்கூடாது என்பது.

2. Austerities can only be borne, and their benefits enjoyed, by those who have practised them in a former birth; it will be useless for those who have not done so, to attempt to practise them now.

கூ. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.

பரி.—(இ - ள). இல்லறத்தையே பற்றி நிற்பார் துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலே விரும்பித் தாந் தவஞ்செய்தலே மறந்தார் போலும், (எ - று).

† பயனேயன்றி - முற்பிறப்பிற் செய்த தவத்தினல் இப்பிறப்பி லுண்டாகும் செல்வம் தண்ணறிவுமுதலிய பிரயோஜனங்களே யல்லாமல். "மேலைத் தவத்தனவே யாகுமாற் றான்பெற்ற செல்வம்" என்பது மிங்கதியத் தன்.

‡ அஃதிலார்க்கு அவையின்மையின் முடிவுபோகாமையின்—முற்பிறப்பில் தவஞ்செய்த பழக்கமில்லாதவர்களுக்குத் தவத்தைச்செய்து முடித்தற்குரிய அறிவும் ஆற்றலுமில்லாமையினல் தவம் இடையூறின்றி நிறைவேறுமையினல்.

*தப்புரவு - * அனுபவிக்கப்படுவன. † 'வேண்டிய வேண்டியாங் கெய்தற்' பயத்ததாகலின், ‡ யாவராலுஞ் செய்யப்படுவதாய தவத்தைத் தாஞ் செய்யுந் தானத்தின்மேல் விருப்பமிகுதியான் மறந்தார்போலு மெனவே, தானத்திற் றவம் மிக்கதென்பது பெற்றாம்.*

** அனுபவிக்கப்படுவன - செவிமுதலிய இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் சப்தமுதலிய விஷயங்கள்.*

† வேண்டிய வேண்டியாங் கெய்தல் என்பது இவ்வதிகாரத்தின் ஐந்தாங் குறளினுள்ளது.


‡ பொதுவகையாக 12 வருஷம் பிரஹ்மசரிய விரதத்தையும், 25 வருஷம் கிருகஸ்தாசிரமத்தையும் அதற்குள்ள நியமப்படி நிறைவேற்றி, அறிவுடையராய்ப் பிறப்பிற்குப்பயந்து, மோட்சமடைதற் பொருட்டு யானெனதென்னும் இருவகைப்பற்றையும் துறந்தவரியாவராலும் (மனம் இந்திரியங்களின் வழியே போகாமல் நிற்றற் பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கல் கோடைக்கண் வெயில்நிலை நிற்றல் முதலியனவாகச்) செய்யப்படுவதாகிய தவத்தை இல்லறத்தார் "குடும்பபாரத்தலைக் கொண்டவர்க் கல்லல் விடும்பரிசு" இன்மையைத் தமதனுபவத்தாலறிந்து சம்சாரத்தில் வைராக்கியமடைந்து அதைவிட்டு "சிறந்தது பயிற்ற வீறந்ததன் பயனே"(இதன்பொருள் அறம் பொருளின்பத்திற்சிறந்த வீட்டின்பம் பெறுதற்கு ஏமஞ்சான்றவற்றை (வானப்பிரத்தத்தையும் சந்நியாசத்தையும்) அடிப்படுதல் யான் முற்கூறிய இல்லறத்தின் பயன் என்பது)என்று தொல்காப்பியம் "காமஞ்சான்ற" என்னுஞ் சூத்திரத்திற் கூறியவாறு துறவறத்தை மேற்கொண்டு செய்யாது, தாம் செய்யும் (தருமவழியால் வந்த பொருளைத் தக்கோர்க்குச் சுத்தோஷத்தோடு கொடுத்தலாகிய)தானத்தின் மேலுள்ளவிருப்ப மிகுதியால் மறந்தார்போலு மென்பது. இவ்வாறு கூறிய தனால் இல்லறத்தார்க்கு தவத்தாலடையப் படுவதாகிய வீடு கிட்டாதென்பது திண்ணமாயிற்று. இது "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற்றல்லா, ரவஞ்செய்வா ராசையுட் பட்டு" என்னுங் குறளானும் நன்கு விளங்கும். இங்கு "ஒழுக்கத்து நீத்தார்" என்னுங் குறளின் விசேட வுரையும் கவனிக்கத் தக்கதாம். மேலும், 'தவத்தை (இல்லறத்தார்) தாஞ் செய்யும் தானத்தின்மேல் விருப்பமிகுதியால் மறந்தாற் போலும்' என்று கூறியதனால் இல்லறத்தார் தவத்தை மறந்ததனால் பிறப்பிறப்பிற் காளாயினரென்பது நன்கு விளங்கிற்று. இல்லறத்தார் மோட்சம் பெற்ரோரென நூல்கள் கூறுகின்றனவே யெனின், அவர்கள் (ஜனகன் முதலியோர்) "அறத்தானியற்று மவனினுங் கோடி யதிகமில்லவ், துறத்தானவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்" என்றுள்ளவாறு மனத்துறவு பூண்டிருந்தாராகலின், அது கூடுமென்க. மனுதருமசாஸ்திரம் ஆறுவதத்தியாயத்தில், பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசியென்னும் நால்வருக்கும் சந்தோஷம், தமக்கொருவ னபகாரஞ்செய்தாலும் தாம் பிரதியபகாரஞ் செய்யாமை, மநோநிக்கிரகம், அஸ்யாயமாய்ப் பொருள் தேடாமை, நல்லொழுக்கம், இந்திரிய நிக்கிரகம், சாஸ்திரஞானம்,

தெளி:—(இ - ன்). மற்றையவர்கள் - இல்லறத்தையே பற்றி நிற்பவர்கள், துறந்தார்க்கு - துறவறத்தை மேற்கொண்டவர்க்கு, துப்புரவு - உண்டியும் மருந்தும் இருப்பிடமும், வேண்டி - (உதவுதலே) விரும்பி, தவம் - (தாம்) செஞ்செய்தலே, மறந்தார்கொல் - மறந்தார்போலும்,(எ-று).

துப்புரவு - அனுபவிக்கப்படும் பொருள்கள். தவமானது வேண்டியவற்றை வேண்டியபடியே யடைதலாகிய பயனையுடையதாதலால், யாவராலும் செய்யத்தகுவதாகிய அத்தவத்தைத் தாம் செய்யுந் தானத்தின் மேலுள்ள வீருப்பமிகுதியால் மறந்தார்போலு மெனவே, தானத்திலும் தவம் உயர்ந்தது என்பது பெற்றாம்.

(க - து). இல்வாழ்வோர் துறவிகளுக்கு உதவி செய்தலே விரும்பித் தாந் தவஞ்செய்தலே மறந்தார் போலும் என்பது.

3. Is it to provide food for the ascetics who have abandoned the desire of earthly possessions that other persons have forgotten to practise austerity?



க. ஒன்னுர்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மேண்ணிற் றவத்தான் வரும்.

பரி.—(இ - ள்). தம்மறத்திற்குப் பகையாய் அழிவுசெய்தாரைக் கெடுத்தலும் அதனை உவந்தாரை உயர்த்தலுமாகிய இவ்விரண்டையும் தவஞ்செய்வார் நினைப்பாராயின், அவர் தவவலியான் அவை அவர்க்கு கூடுவனவாம், (எ - று).

‖ மூற்றத்துறந்தார்க்கு ஒன்னுரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், 0 தவத்திற்கேற்றி யுரைக்கப்பட்டது. 'எண்ணின்' என்றதனுன், அவர்க்கு அவையெண்ணுமை இயல்பென்பது பெற்றாம். () ஒன்னுர்

பிரஹ்மஞானம், உண்மை, கோபமில்லாமை யென்னுமிப்பத்தும் பொதுவான தருமங்களாமென்று கூறிப் பின்பு "இப்பத்துவகையான தருமங்களேயு மெவர்களறிந்து அந்தப்படி நடக்கிறார்களோ அவர்கள் மேலான மோட்சத்தை யடைகிறார்கள்" என்று கூறியது மிங்கறியத்தக்கதாம்.

‖ மூற்றத் துறந்தார் - யானெனதென்னு மபிமானத்தை வாசனு மாத்திரமாயு மில்லாவாறொழித்தவர்.

0 ஒன்னுரைத் தெறலும் உவந்தாரை யாக்கலுமாகிய சாபானுக்கிரகம் தவத்திற் குண்டென்பது விசிட்டரும் விசுவாமித்திரரும் திரிசங்குவை முறையே நீசனுகவும் விண்ணுலகிலொருவனுகவும் செய்திருக்கும் கதையாலும் பிறவாற்றாலு முணரப்படும்.

() ஒன்னுர் (பகைவர்) தவத்தாலன்றி வேறுவகையால் கௌசிகராசனைப்போல் பெரியவராயினும், உவந்தார் திரிசிகமுனிவரின் இரண்டாவது புத்திரனைப்போல மிகவற்பராயினும், அவர்களுக்குக் கௌசிகராஜனுக்கு வசிட்டராலும் திரிசி புத்திரனுக்கு விசுவாமித்திராலும் முறையே கேடும் பெருக்கமு முண்டாயினமை போல, தாழ்வும் உயர்வும் தவமுடையார் நினைத்த வளவாலே வந்து நிற்குமென்பதாம்.

பெரியராயினும், உவந்தார் சிறியராயினும் கேடும் ஆக்கமும் நினைத்ததனை யானே வந்து நிற்குமெனத் தவஞ் செய்வார்மேலிட்டுத் தவத்தினது ஆற்றல் கூறியவாறு.

தெளி:—(இ - ள்). ஒன்னர்-(தமது துறவறவொழுக்கத்திற்குப்பகையாய் நின்று) கெடுதி செய்தவரை, தெறலும் - கெடச்செய்தலும், உவந்தாரை - (அவ்வறவொழுக்கத்தினை) விரும்பினவரை, ஆக்கலும் - உயரச்செய்தலும், (ஆகிய இரண்டையும்), எண்ணின் - (தவஞ்செய்வார்) நினைப்பாராயின், தவத்தான் - (அவரது) தவவலிமையினால், வரும் - (அவ்விரண்டும் அவருக்கு) உண்டாகும் (எ - று).

முழுதும் துறந்தவருக்கு ஒன்னரும் உவந்தாரும் இருப்பது கூடாமையால், ஒன்னர்த் தெறலு முவந்தாரை யாக்குதலுமாகிய சாபாதக்கிரகம் தவத்தின்மீதேற்றிச் சொல்லப்பட்டது 'எண்ணின்' என்றதனால் அவர்க்கு அவற்றை எண்ணுமை இயல்பென்பது பெற்றும். ஒன்னர் பெரியராயினும் அவருக்குக்கேடும், உவந்தார் சிறியராயினும் அவருக்கு உயர்வும் நினைத்தவனவாலேவந்து நிற்குமெனத் தவஞ் செய்வார்மேல் வைத்துத் தவத்தினது வல்லமை சொல்லியவாறும்.

(க - து). சத்துருக்களைக் கெடுத்தலும் மித்துருக்களைக் காத்தலுந் தவவலிமையால் வரும் என்பது.

4. If the ascetic desire the destruction of his enemies, or the aggrandizement of his friends, it will be effected by the power of his austerities.

நி. வேண்டிய வேண்டியாங்கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

பரி.—(இ - ள்.) * முயன்றுள் மறுமைக்கண்ணே தாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம்; ஆதலால், செயியப் படுவதாகிய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படுமே, (எ-று.)

| 'ஈண்டு' என்பதனால் மறுமைக்கணென்பது பெற்றும். ‖ மேற்கதி ¶ வீடுபேறுகள் ‡ தவத்தானன்றி எய்தப்படா வென்பதாம். இவை நான்குபாட்டாலும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது.

---

* முயன்றுள் - தவத்தை யாரம்பித்துச் செய்தால்.

| தவஞ்செய்தல் ஈண்டு (இம்மைக்கண்) என்று கூறினமையின், வேண்டிய வேண்டியாங் கெய்தல் மறுமைக்கண் என்பது பெற்றும்

‖ மேற்கதி - இந்திரன் முதலிய இறையவர் பதங்கள்.

¶ வீடு - உயிர் காமம் வெகுளி மயக்கங்களினின்றும் நீங்குதல்.

‡ மேற்கதியும் வீடும்பேறும், தவத்தாலன்றி யடையப்படாவென்பது மனுதரும சாஸ்திரம் 11-வது அத்தியாயத்தில் "ஜனனதம், கோயில் லாமை, பிரஹ்மவித்தை, கருமானுஷ்டானம், சுவர்க்கமுதலிய பற்பல புண்

தெளி:—(இ-ன்.) வேண்டிய (மூபன்றூல் மறுமையில் தாம்) விரும்பிய பயன்களே, வேண்டியாங்கு - விரும்பியபடியே, எய்தலால் - பெறலாம் ஆதலால், செய்தலும்-செய்யத்தகுவதாகிய தவமானது,ஈண்டு-இம்மையில், முயலப்படும் - (அறிவுடையோரால்) முயன்றுசெய்யப்படும் (எ-று).

'ஈண்டு' என்பதனால் மறுமையில் என்பது பெறப்பட்டது.மேற்கதியும் மோக்ஷமும், தவத்தாலல்லாமல் பிறிதொன்றால் அடைதல் கூடாதென்பதாம். இவை நான்கு பாட்டாலும் தவத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து). மறுமையில் தாம் விரும்பிய பயன்களே யடைதற் பொருட்டு இம்மையில் தவமானது அறிவுடையோரால் செய்யப்படும் என்பது.

5. Religious discipline is practised in this world, because it secures the attainment of whaever one may wish to enjoy in the next world.

கூ * தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

பரி.—(இ-ள்) தங்கருமஞ் செய்வாராவார் துறந்து தவத்தைச்செய்வார்; † அவரையொழித்த பொருளின்பங்களைச் செய்வார் அவற்றின் கண் ஆசையாகிய வலையுட்பட்டுத் ‡ தமக்குக் கேடுசெய்வார்,(எ - று).

அகித்தமாய் | மூவகைத் தின்பத்ததாய் உயிரின்வேறுய உடற்கு

ணியலோக வாசமென்னு மிவை யெல்லாம் தவத்தினுலேயே சித்திக்கின்றன; எனெனின், அவற்றிற்குத் தவமே காரணமல்லவா" என்று கூறுவதாலும் விளங்குமென்க.

தவம் காமியத்தவம், நிஷ்காமியத்தவமென்றிருவகைத்தாம்; காமியத்தவம் சாபாநுக்கிரகத்திற் கேதுவும், நிஷ்காமியத் தவம் தத்துவ ஞானத்திற் கேதுவுமாம். நிஷ்காமியத்தவம் தத்துவ ஞானவாயிலாக மோக்ஷ வேதுவாமென்பதில் குணாத்தக்கது.

* "நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித், தலையாயார் தங்கருமஞ் செய்வார்" என்பது நாலடி.

† அவரை - தவஞ்செய்வாரை.

‡ தமக்குக் கேடுசெய்வார் - தமக்கு மருத்துவர் (வைத்தியர்) தாமென் றறியாது தங்களுக்குத் தாங்களே கெடுதிசெய்துகொள்ளு மவிவேகிகள்.

| மூவகைத் தின்பத்ததாய் - அத்தியாத்மதுக்கம், அதிபூததுக்கம், அதிதைவ துக்கமென்னு மூவகைப் பிறவித்துன்பங்களே யுடையதாய்.

(1) ரோகம் தாகம் பசிமுதலியவற்ரு லுண்டாகுந் துக்கம் அத்தியாத்மிக துக்கமாம். ஆத்மாவை யாசரயித்திருக்கும் ஸ்தூல சூட்சுமசரீரம் அத்யாத்மி மெனப்படும்; அதனு லுண்டாகும் துக்கம் அத்தியாத்ம

வருத்தம் வருமென் றெழியாது தவத்தினைச்செய்ய, பிறப்புப் † பிணி () மூப்பிறப்புக்களான் ‡ அநாதியாகத் தன்பமெய்திவருகின்ற உயிர் ஞானம் பிறந்த வீடுபெறு மாகலின், தவஞ்செய்வாரைத் 'தங்கருமஞ் செய்வார்' என்றும், கணத்துள் அழிவதாய சிற்றின்பத்தின் பொருட்டுப் பல பிறவியுந் தன்புறத்தக்க பாவஞ்செய்து கோடலின், $ அல்லாதாரை 'அவஞ்செய்வார்' என்றும் கூறினார். * மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

தேளி.—(இ-ன்.) தங்கருமஞ் செய்வார் - தமதிகருமத்தைச் செய்பவராவார், தவஞ்செய்வார் - (துறந்து) தவத்தைச் செய்வார், மற்றல்லார் - அவரை யொழிந்த பொருளின்பங்களைச் செய்வார், ஆசையுட்பட்டு - (அப்பொருளின்பங்களிடத்து) ஆசையாகிய வலையிலகப்பட்டு, அவஞ்செய்வார், (தமக்குக்) கேடுசெய்பவராவார், (எ-று).

அரித்தியமாய்த் தன்னைப்பற்றி வருவன முதலிய மூவகைத் தின்பத்தை யுடையதாய் உயிரின் வேறுபுள்ள உடம்பிற்கு வருத்தம் வருமென்று விடாமல் தவத்தைச்செய்யப், பிறப்பு, பிணி, மூப்பு, இறப்புக்களால் அநாதியாகத் தன்பமடைந்து வருகிறவுயிரானது ஞானம் உண்டாகப்பெற்று மோக்ஷமடையும் ஆதலால், தவஞ்செய்வாரைத் 'தங்கருமஞ்செய்வார்' என்றும், கணப்போதில் அழிவதாகிய சிற்றின்பத்தின் பொருட்டுப் பல பிறவிகளிலும் தன்பமடையத்தக்க பாவஞ் செய்து கொளலாலால், அல்லாதாரை 'அவஞ்செய்வார்' என்றும் சொல்லினார். மற்று-வினைமாற்றுப் பொருளது.

(க - து). துறவறத்தை மேற்கொண்டு தவஞ்செய்பவர் தங்கருமஞ்செய்பருமம் ஏனையோர் அவஞ்செய்பவரு மாவர்.

6. Those discharge their duty who perform austerities; all others accomplish their own destruction, through the entanglement of the desire of riches and sensual pleasure.

துக்கமெனப்படும் (2) திருடர் புலி சர்ப்பம் முதலியவற்றா லுண்டாகுந் துக்கம் அதிபூத துக்கமாம். சரீரத்திற்கு வேறாயும் கண்ணிற்கினியத்திற்கு விஷயமாயு மிருப்பது அதிபூதமெனப்படும்; அதனாலுண்டாகும் துக்கம் அதிபூததுக்க மெனப்படும். (3) யட்ச ராட்சதப் பிரேதக் கிரகாதிகளாலும் சீதவாத (காற்று) ஆதபங் (வெயில்) களாலு முண்டாகும் துக்கம் அதிதைவதுக்கமாம். சரீரத்திற்கு வேறாயும் கண்ணிற்கினியத்திற்கு விஷயமாகாமலு மிருப்பது அதிதைவமெனப்படும்; அதனாலுண்டாகுந் துக்கம் அதிதைவ துக்க மெனப்படும்.

† தன்னை யுடையவரைத் தனது வல்லமைக்கேற்ப வேறுகாரியத்தில் பிரவேசிக்காவாறு பிணித்தலின் (கட்டலின்) நோய் பிணியென்று சொல்லப்பட்டது.

() மூப்பு - முதிமை (கிழத்தனம்) ‡ அநாதி - தொடக்கமில்லாதது.

$ அல்லாதாரை - தவஞ்செய்யாதவரை.

* தவஞ்செய்தலென்னும் வினையை மாற்றித் தவஞ்செய்யாமையென்னும் வினையைத் தந்தமையின், மற்று வினைமாற்றுமாயிற்று.

எ. 0 சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

பரி.—(இ - ள்). தீயின்க ‖ ணேடும் பொன்னுக்கு ‡ அது சுடச் சுடத் தன்னெடுகலந்த குற்ற நீங்கி ஒளிமிகுமாறுபோல, தவஞ்செய்ய வல்லார்க்கு அதனுன் வருந்துன்பம் வருத்த வருத்தத் தம்மோடு கலந்த பாவநீங்கி ஞானமிகும், (எ - று).

0 'சுடச்சுடரும் பொன்போல்'என்ற ராயினும்,கருத்துகோக்கி, இவ் வா றுரைக்கப்பட்டது. ஒளிபோலப் பொருள்களே விளக்கலின் 'ஒளி' எனப்பட்டது.

தெளி:—(இ - ள்). சுட-(புடத்தீயானது) சுடச்சுட, பொன் சுடரும் போல் - (அப்புடத்தீயில் உருகியோடும்) பொன்னுக்கு (தன்னேடுகலந்த மாசுநீங்கி) ஒளிமிகுகின்ற (விதம்) போல, நோற்கிற்பவர்க்கு-தவஞ்செய்ய வல்லவர்க்கு, துன்பம் - (அத்தவத்தால் வருகிற) துன்பம்,சுடச்சுட-வருத்த வருத்த, ஒளிவிடும் - (தம்மோடுகலந்த பாவமொழிந்து) ஞானமிகும்,(எ-று).

ஒளி - பொன்னுக்குக் காந்தியும், தவஞ்செய்வோர்க்கு ஞானமுமாம். காந்தி மிகுந்தோறும் பொன்னுக்கு மாசு நீங்குதல்போல ஞானமிகுந்தோறும் தவத்தினர்க்குப் பாவம் நீங்குமென்க. விளக்கு முதலிய ஒளிபோலப் பொருள்களே விளக்கலால், ஞானம் 'ஒளி' என்று கூறப்பட்டது.

(க - து). தவத்தை மிகுதியாகச் செய்கின்றவருக்குப் பாவம் நீங்கித் தத்துவ ஞானமுண்டாம் என்பது.

---

0 இக்குறள் மனுதரும சாஸ்திரம் ஆறுவதத்தியாயத்தில். " எப்படி சுவர்ண முதலியனவற்றி னழுக்கு நெருப்பிற் காய்ச்சினுல் போய்விடுமோ, அப்படியே தேகத்தைக் சார்ந்த இந்திரிய தோஷங்களெல்லாம் பிராணுயாமத்தால் (இரேசக பூரக கும்பகஞ் செய்தலால்) போய்விடுகின்றன" என்று கூறுவதற் கொத்திருத்த லறிக.

‖ ஓடும் - உருகியோடுகின்ற. ‡ அது - புடத்தீ.

0 'சுடச்சுடரும் பொன்போல்' என்று கூறினு ராயினும் புடத்தீ தபிக்கத் தபிக்கப் பொன்னுனது மாசுநீங்கி (மாற்றுயர்ந்து) ஒளிமிகுவது போல, தவம் அதிகப்பட அதிகப்படத் தபோதனர்கள் மனமாசொழிந்து (சாபாநுக்கிரகமாகிய பெருமைமிக்கு) ஞானம்விளங்கப் பெறுவரென்னும கருத்து கோக்கி, சுடச்சுட நோற்கிற்பவர்க்கு என்று உவமேயத்திலுள்ள சுடச்சுட என்னும் அடுக்கிற் கியையச் சுடச்சுடரும் பொன்போல் என்னும் உவமானத்திலும் சுடச்சுடச் சுடருமெனச் சுடவென்ப தொன்றைக் கூட்டி யிவ்வாறு (தீயின்கணேடும் பொன்னுக்கு அது சுடச்சுடத் தன்னெடு கலந்த குற்றநீங்கி ஒளிமிகுமாறுபோலஎன்று) சொல்லப்பட்டது. அடுக்குகள் - தொழிற் பயில்வுப் பொருளில் வந்தன.

7. Bright as gold which has been purified in the fire will those shine, who have endured the burning of pain in frequent austerities.

அ. † தன்னுயிர் தானறப் பெற்றனை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

பரி.—(இ - ள்). தன்னுயிரைத் தான் தனக்குரித்தாகப் பெற்றவனை அது பெறுதனவாகிய மன்னுயிர்களெல்லாந் தொழும், (எ - று).

தனக்குரித்தாதல் - தவமாகிய தன்கருமஞ் செய்தல். ‡ அதனினாங்குப் பெறுதற்கரியது இன்மையின் 'பெற்றனை' என்றார். ¶ அது பெறுதனவென்றது $ ஆசையுட்பட்டு o அவஞ்செய்யு முயிர்களை. * சாபமும் அருளுமாகிய விரண்டாற்றலு முடைமையின் 'தொழும்' என்றார்.

தெளி.—(இ - ள்). தன்னுயிர் - தனது உயிரை, தானற - (தான்) தனக்கு உரியதாக, பெற்றனை - பெற்றவனை, ஏனைய - அது பெறுதனவாகிய, மன்னுயிரெல்லாம்-நிலைபேறுடைய உயிர்களெல்லாம், தொழும் - வணங்கும், (எ - று).

தனக்குரியதாதல் - தவமாகிய தன்கருமஞ் செய்தல். அத்தவஞ்செய்தலைக்காட்டிலும் பெறுதற் கருமையானது பிறிதொன் றில்லாமையால் 'பெற்றனை' என்றார். அது பெறுதனவென்றது ஆசையாகியவலையிலகப்பட்டுத்தமக்குக் கேடுசெய்யு முயிர்களை. சாபானுக்கிரகமென்னு மிரண்டு வல்லமையும் பெற்றிருத்தலின் 'தொழும்' என்றார்.

---

† இளமை கழியாகின்றது; மூப்புப்பிணியோடு வாராகின்றது என்று கருதிப் பேரறிவுடையராய்த் தங்கருமமாகிய தவத்தைச் செய்பவர்கள் இந்திரியங்களின் வயமாகாது இந்திரியங்களைத் தம்வயப்படுத்தி யிருத்தலின், அவர்கள் '' இம்மைக்கு மும்மைக்குந் தம்மையுடைமை தலை '' என்று பழமொழி கூறியவாறு தம்மைத் தமக்கேயுரிமையாகப் பெற்றிருக்கின்றார்க ளென்பதைத் ' தன்னுயிர் தானறப் பெற்றனை ' என்பது குறிப்பிக்கின்ற வாறுகாண்க. அறப்பெறுதல் - முற்றுந் தனக்கே உரியதாகப் பெறுதல்.

‡ அதனினாங்கு - தவமாகிய தன்கருமஞ் செய்தலைக்காட்டிலும்.

¶ அது - தவமாகிய தன்கருமஞ் செய்தல். $ ஆசை - பொருளின் பங்களின் மேலுள்ள விருப்பம். o அவம்—கேடு.

* தவஞ்செய்வான் (ஒன்னுர்த் தெறலுமாகிய) சாபமும் (உவந்தாரை யாக்கலுமாகிய) அருளு (அனுக்கிரகமு) மாகிய இரண்டு வல்லமையு மூடைத்தா யிருத்தல்பற்றி, அவனைத் தவஞ்செய்யு முரிமைபெறுதி தமக்குக் கேடுண்டாக்கும் வினையைச் செய்யும் மாக்கள் (தம்முயிரைத் தமக்கு உரிமையாகப் பெறுமை காரணமாக) வணங்குகின்றனரென்க.

(க-து). தன்னுயிரைத் தனக்குரியதாகப் பெற்றவனே யெல்லா வுயிரும் வணங்கும் என்பது.

8. All other creatures will worship him who has attained the control of his own soul.

கூ. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னூற்ற றலைப்பட் டவர்க்கு.

பரி.—(இ - ள்). * கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம், தவத் தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு, (எ - று).

சிறப்புமை: —† அது கூடாமை விளக்கிற்று; மன்னுயிரெல்லாந் தொழுதலேயன்றி இதுவுங் கைகூடுமென ‖ எச்சவும்மையாக வுரைப் பினும் அமையும். ஆற்றல் - சாபவரங்கள். இவை நான்குபாட்டானும் தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.

தேளி. —(இ-ள்). கூற்றம் - யமனை, குதித்தலும் - கடத்தலும், கை கூடும்-உண்டாவதாம், நோற்றலின் - தவஞ்செய்வதால் (வரும்), ஆற்றல்-வல்லமையை, தலைப்பட்டவர்க்கு-உடையவர்க்கு, (எ-று).

குதித்தலுமென்னும உயர்வு சிறப்புமை அது கூடாமையை விளக் கியது; மன்னுயிரெல்லாந் தொழுதலே யல்லாமல் யமனைக்கடத்தலாகிய இதுவும் சித்திக்குமென்றிறந்ததுதழீ இய எச்சவும்மையாகக் கூறினும் பொருந்தும். ஆற்றல் - சாபாநுக்கிரகம். இவை நான்கு பாட்டாலும் தவஞ் செய்வாரது உயர்ச்சி சொல்லப்பட்டது.

(க — து). தவவலிமையுடையோர் யமனையும் வெல்லுவர்.

9. Those who have attained the power which religious discipline confers, will be able also to pass the limit of Yaman, the God of death.

க0. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

* தவத்திற் சிறந்தவர் யமனை வெல்லுதலும் கூடு மென்பது "உலையா முயற்சி களைகளை யூழின், வலிசெந்தம் வன்மையு முண்டே-புல கறியப், பான்மூளை தின்று மறலி யுயிர்குடித்த, கான்முளையே (மார்க்கண் டனே) சாலுங் கரி" என்று நீதிநெறிவிளக்கங் கூறுவதாலும், கூர்ம புராணத்தில் வுள்ள சுவேதன் சரித்திரத்தாலு மறிதற் பாற்றும்.

† அது கூடாமை - யமனினின்றுந் தப்புதல் முடியாமையை.

‖ எச்சவும்மையாவது சொல்லப்படாது குறைந்து நின்றபொருளை புணர்த்தும் உம் என்னும் இடைச்சொல்லாம்.

பரி.—(இ-ள்.) உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பல ராதற்குக் காரணம் யாதெனின், அது தவஞ்செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல், (எ-று).

செல்வம் நல்குரவென்பன ஈண்டு † அறிவினது உண்மை யின்மை களேயுஞ் குறித்து நின்றன; என்னே? ‡ "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை,பண்ணப் பிணித்த பெருஞ்செல்வம்" என்றாகலின்.நோற் பார் சிலரெனக் காரணங் கூறினமையான், காரியம் வருவித்துரைக்கப் பட்டது. ¶ தவஞ்செய்யாதவர்க்கு இம்மையின்பமும் இல்லையென இது ணல் அவாது தாழ்வு கூறப்பட்டது.

தேளி.—(இ-ள்.) (உலகத்திற் செல்வர்கள் சிலராக) இலர்-தரித்திரர், பலராகிய காரணம்- பலராதற்குக் காரணம், (யாதென்றால், அக்காரணம்), நோற்பார் - தவஞ்செய்வார், சிலர் - சிலராக, நோலாதவர் - அத்தவஞ்செய் யாதவர், பலர்- பலராதல், (எ-று).

இங்குச் செல்வம் நுண்ணறிவையும், தரித்திரம் அந்நுண்ணறிவில் லாமையையுங் குறித்து நின்றன. நோற்பார் சிலரெனக் காரணத்தைக் கூறினமையின் அதன் காரியமாகிய செல்வர்கள் சிலராகவென்பதுவருவித் துச்சொல்லப்பட்டது. இதனால் தவஞ்செய்யாதவர்க்கு இம்மை யின்பமும் இல்லையென்று அவாது தாழ்வு சொல்லப்பட்டது.

(க-து). செல்வர் சிலரும் தரித்திரர் பலருமாக இருத்தற்குக் காரணம் தவஞ்செய்வார் சிலரும் அது செய்யாதார் பலருமாக இருத்தலேயாம் என்பது.

10. Because there are few who practise austerity and many who do not, there are many destitute and few rich men in the world.

† அறிவினது உண்மையின்மைகளேயும்-அறிவுடைமையறிவில்லாமை களேயும்.

‡ நாலடியார் அறிவின்மை. க இதன் பொருள். நூட்பமாகியவறிவில் லாமை தரித்திரமாம்; அவ்வறிவுடைமை மிகவும் வளர்ந்த பெரியசெல்வ மாம் என்பது.

¶ தவஞ்செய்யாதவர்க்கு மறுமை யின்பமேயன்றி இம்மையின்பமு மில்லை யென்று கூறியதனால் தவஞ்செய்தவர்களுக்கே இம்மையின்பமும் மறுமையின்பமும் உண்டாமென்பது பெற்றாம். பெறவே, தவத்திற்கு மறுமையின்பமேயன்றி யிம்மையின்பமும் தருந் தன்மை யுண்டென்பது தேற்றமாயிற்று. 'இலர்பலர்' என்னுமிக் குறளினால் தவஞ்செய்யாதார் பல ராயிருத்தலால் தரித்திரர் பலராயிருக்கிறாரென்றும், தவஞ்செய்வார் சிலரா யிருத்தலால் செல்வர் சிலராயிருக்கிறாரென்றும் பெறப்படுதலினால், செல்வ முடைமைக்கும் அஃதில்லாமைக்கும் காரணம் முறையேதவமும் அஃதின்

நான்காம் அதிகாரம்

கூடாவொழுக்கம்.—On Inconsistent Conduct.

பரி.—அஃதாவது தாம் விட்ட † காமவின்பத்தை உரவின்மையிற் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்றுதவத்தோடு பொருந்தாத்தாய தீயவொழுக்கம். ‡ அது விலக்குதற்கு, இது தவத்தின் பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது தாம் வெறுத்து விட்ட காமவின்பத்தை ஸ்திர புத்தி யில்லாமையினல் பின்னும் விரும்பும்வழி தோன்ற அவ்வழியே கைக்கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாகிய தீயவொழுக்கம். அதனை விலக்குதற்கு இக்கூடாவொழுக்கம் தவத்தின்பின் வைக்கப்பட்டது.

க. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் $ பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

பரி.—(இ-ள்). வஞ்சம் பொருந்திய மனத்தை யுடையவனது மறைந்த வொழுக்கத்தை, உடம்பாய் அவற்றோடு கலந்து நிற்கின்ற பூத மைகனும் நீதுங் கண்டு, தம்முள்ளே நகும், (எ-று).

காமம் தன் கண்ணே தோன்றி நலியாகிற்கவும் அதனது இன் மைகூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் 'வஞ்சமனம்' என்றும், அங்ஙலிவு பொறுக்க மாட்டாதொழுகுங் களவொழுக்கத்தைப் ' படிற்றொழுக்கம்' என்றும். * உலகத்துக் களவுடையார் பிறராறியாமற் செய்வனவற்றிற்கு

மையுமா மென்பது பெற்றும். "செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை கொக் தக்கால், எய்த வருமோ விருநிதியம்" என்பது நல்வழி.

† காமவின்பம்-ஒருகாலத் தொருபொருளால் ஐம்புலன்களும் அனு பவித்தற் சிறப்புடையதாய (மகளிரது புணர்ச்சியால் வரும்) சிற்றின்பம்.

‡ அது விலக்குதற்கு-தவத்தோடு பொருந்தாததாகிய தீயவொழுக் கத்தை நீக்கும் பொருட்டு.

$ நாலடியார் "தியத்துக்கழியான்" என்னுஞ் செய்யுளில் "வைத்த, பொருளு மவனை நகுமே யுலகத், தருளு மவனை நகும்" என்று கூறுகின் றது. இது செய்யாதது செய்ததுபோற் கூறும் இலக்கணையாம்.

* உலகத்துக்களவுடையார் பிறரறியாமற் செய்வனவற்றிற்கு ஐம் பெரும் பூதங்கள் சான்றாகலின் என்பது "வஞ்சித் தொழுகு மறிவிலிகாள் யாவரையும், வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த, வெங்கு முள னொருவன் காணுங்கொ லென்றஞ்சி, யங்கங் குலைவ தறிவு" என்று நீதி நெறிவிளக்கங் கூறுவதாலு மறிதற்பாற்றும்.


† ஐம்பெரும் பூதங்கள் சான்றாகலின், அவ்வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்ற வாற்றையுமறிந்து, அவனறியாமற் றம்முள்ளே நகுதலின் 'அகத்தேநகும்' என்றுங் கூறினர். ‡ செய்தகுற்றம் மறையாதாகலின், அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து.

தெளி.—(இன்). வஞ்சமனத்தான் - வஞ்சனைபொருந்திய மனத்தை யுடையவனது, படிற்றொழுக்கம் - மறைந்த ஒழுக்கத்தை, பூதங்களைந்தும்- (உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற) பஞ்சபூதங்களும் (கண்டு), அகத் தே—(தம்) உள்ளே, நகும்- சிரிக்கும், (எ - று).

காமம் தன்மனத்தினிடத்தே தோன்றி வருத்திக் கொண்டிருக்கவும் அக்காமத்தினில்லாமையைச் சொல்லிப் புறத்தாரை வஞ்சித்தலால் 'வஞ்ச மனம்' என்றும், அவ்வருத்தம் பொறக்கமாட்டாது செய்யுங் கள்ளச்செய லைப் 'படிற்றொழுக்கம்' என்றும், உலகத்திற்களவுடையவர் பிறர் அறி யாமற்செய்யும் காரியங்களுக்கு ஐம்பெரும் பூதங்கள் சாட்சியாமாகலின், அச்செயலையும் அவன் மறைக்கின்ற வித்தத்தையும் அறிந்து, அவன் அறி யாமல் தம்முள்ளே சிரித்தலால் 'அகத்தேநகும்' என்றும் சொல்லினர். செய் தகுற்றம் மறையாதாகலின், தவஞ்செய்வானுக்கு அவ்வொழுக்கம் ஆகா தென்பது கருத்து.

(க - து). வஞ்சனைபொருந்திய மனமுடைய திறமியின் கள வொழுக்கத்தைக் கண்டு அவனது உடல் மயமாயுள்ள ஐம்பெரும் பூதங்கள் தம்முள்ளே சிரிக்கும் என்பது.

1. The five elements of his body will laugh within him, at the feigned conduct of the deceitful-minded man.



2. வானுபர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

† ஐம்பெரும் பூதங்கள் (பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம்) சடமா (தம்மையும் பிறவற்றையும் அறியாமலிருப்பதா) கலின், அவைசான்று (சாட்சியா)தல் கூடாது; கூடாமையின், அவற்றின் அதிதேவதைகளைக் கொள்க " ஐம்பூதம் பார்ப்பார் பசுத்திங்க ளுயிறு, தம்பூத மெண்ணு திக ழ்வானேற் றன்மெய்க்க, ணேம்பூத மன்றே கெடும்" என்றுள்ள ஆசாரக் கோவையின்செய்யுளினுரையில் 'ஐம்பூத மன்றே கெடும்'என்பதற்கு "ஐந்து பூதத்தையுமுடைய தெய்வங்கள் அன்றே கெட்டகன்று போம்" என்று பொருள்கூறப்பட்டிருப்பதுமிங் கறியத்தக்கதாம். பிருதிவிக்குப் பிரம னும், அப்புலிற்கு அரியும், தேயுவிற்கு அரனும், வாயுவிற்கு மகேசனும், ஆகாயத்திற்குச் சதாசிவனும் அதி தேவதைகளாமென்க.

செய்த குற்றம்மறையாது என்பது "மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்,பறையறைதாய் கோடிப் பரக்குங் கழிமுடைப்,புன்புலா ஞற்றம் புறம்பொதிந்து மூடினுஞ், சென்றுதைக்குஞ் சேயார் முகத்தி" என்ற நீதிநெறிவிளக்கம் கூறுவதாலு மறிதற்பாற்றும்.

பரி.—(இ-ள்). ஒருவனுக்கு வான்போ லுயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும், தான் குற்றமென் றறிந்த அதன் கண்ணே தன் னெஞ்சு தாழுமாயின், (எ - று).

† வானுயர் தோற்றமென்பது ‡ "வான்றோய்குடி" என்றாற்போல இலக்கணைவழக்கு. ¶ அறியாது செய்தகுற்றமல்லது அறிந்து வைத்துச் செய்தகுற்றங் கழுவப்படாமையின், நெஞ்சுகுற்றத்தாயேவிடும்;விடவே, நின்றவேட மாத்திரத்திற்குப் புறத்தாரை வெருட்டுதலே யல்லது வேறு பயனில்லை யென்பதாம்.

தெளி:—(இ - ள்). தான் அறி-தான் (குற்றமென்று) அறிந்த, குற் றம் - (அக்) குற்றத்திலே, தன் னெஞ்சம் - தனது மனம், படின் - தங்கு மாயின், (ஒருவனுக்கு), வானுயர் - வான்போலுயர்ந்த, தோற்றம் - தவ வேடமானது, எவன் - என்னபயனை, செய்யும்—, (எ - று).

கம்பீரமாய் விளங்கும் தவவேடத்தை வானுயர் தோற்றமென்பது இலக்கணை வழக்காம். அறியாது செய்த குற்றத்திற் கல்லாமல் அறிந்து செய்த குற்றத்திற்குப் பிராயச்சித்தம் இல்லாமையால்,நெஞ்சு குற்றமுடை யதாயே விடும்; விடவே, நின்ற தவவேடமாத்திரத்திற்குப் புறத்தாரை அஞ்சச்செய்தலே யல்லாமல் வேறு பிரயோஜனம் இல்லை யென்பதாம்.

(க–து). தான்குற்ற மென்றறிந்த விஷயத்திற் செல்லும் மன முடையவனது தவவேடமானது அவனுக்கு யாதுபயனைச் செய்யும் என்பது.

2. What avails an appearance of sanctity high as heaven, if the mind suffer the indulgence of conscious sin?

க. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

† வானுயர் தோற்றமென்றது - மிகப்பொலிவுள்ள தவவேடத்தை. ‡ புகழ்மிகும்பிய குடியை வான்றோய்குடி (உயர்ச்சியால் வானிற்றோய்ந் தகுடி) என்றாற்போல இலக்கணை வழக்காமென்க. இலக்கணையாவது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொருபொருட்குத்தந்தாரைப்பது. இங்குவானின் உயர்வைத் தவவேடத்திற்குத்தந்து, வான்போலுயர்ந்த தவவேடம் என்று கூறப்பட்டது. வழக்கு - சொல் நடை, அஃதாவது லியவகாரத்தில் வழங்கப்படுவது. (காலடி-குடிப்பிறப்பு-2.)

¶ அறியாது செய்த குற்றமல்லது அறிந்து வைத்துச்செய்த குற்றங் கழுவப்படாமையின் - அறியாமற் செய்த குற்றம் பிராயச்சித்தத்தால் நீக் கப்படுவதல்லாமல் அறிந்து செய்தகுற்றம் பிராயச்சித்தத்தால் நீக்கப்படா மையால். மனுதர்மசாஸ்திரம் பதினொன்றாவ தத்தியாயத்தில் "அறியாமை யினால் பிராமணவதை செய்ததற்குப் பிராயச்சித்தம் சொல்லப்பட்டது.

பரி.—(இ - ள்). மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலியில்லாத இயல்பினை யுடையான் வலியுடையார் வேடத்தைக்கொண்டு தான் அதன்வழிப்படுதல் பசு காவலர் கடியாமல் புலியின் தோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற் போலும் (எ - று).

‡ இவ்பொருபொருளுவமை. ¶ வலியினிலைமையானென்ற அடையானும், மேய்ந்தற்றென்னுந் தொழிலுவமையானும், வல்லுருவத்தோடு மனவழிப் படுதலென்பது பெற்றும். காவலர் கடியாமை - புலி புல்தின்னு தென்பதனாலும், அச்சத்தானுமாம்; ஆகவே, வல்லுருவங்கோடற்குப் பயன் †அன்னகாரணங்களான் உலகத்தார் அயிராமையாயிற்று. இவ்வாறு தன க்குரிய இல்லாளையுந் துறந்து வலியுமின்றிப் பிறரயிராத வல்லுருவமுங் கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது தன் மனமோடிய வழியே ஓடிமறைந்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாறுதல், பெற்

அடத்தினால் வேண்டுமென்று செய்த பிரமஹத்திக்குப் பிராயச் சித்தமே விதிக்கப்படவில்லை'' என்று கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

‡ இல்பொரு ளுவமையாவது எக்காலத்து மில்லாத பொருளை யுவ மானமாக வெடுத்துரைப்பது. இல்பொருளுவமை யெனினும் அபூதவுவ மை யெனினு மொக்கும். இலக்கணவிளக்கம் ''அவனியி லில்லா வண்ண தோர் பொருளை,யுவமைசெய்துரைக்கு மபூத வுவமையும்''என்று கூறிற்று. இங்குப் பசு புலியின் தோலைப்போர்த்துப் பயிரை மேய்த லெக்கா லத்து மில்லாமையின் 'பெற்றம், புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று' என்பது (வன்பாற்கண், வற்றன் மரக்களிர்த் தற்று' என்பதுபோல) இல் பொருளுவமை யாயிற்று.

¶ வலியினிலைமையானென்ற அடையானும் (இங்கு வலியில் என் பது அடை. அடையெனினும் விசேடண மெனினும் ஒக்கும்), மேய்ந்தற் றென்னுந்தொழிலுவமையானும் (இதில்மேய்தல் என்னுந் தொழில் உவ மானமாகவந்தது. தொழிலுவமானமாக வருவது தொழிலுவமையாம்.) வல்லுருவத்தோடு (மனத்தைத் தம்வழிப்படுத்தும் வல்லமை யுடையவரது தவவேடத்தோடு) மனவழிப்படுதல் (மனஞ்சென்றவழியே மநோநிக்கிரக மூடையவரதுதவவேடத்தைக்கொண்டிருப்பவன்செல்லுத)லென்பதுபெற் றும். அஃதாவது மநோநிக்கிரக மில்லாமை யென்னும் விசேடணத்தாலும் பசு புலியின் தோலைப்போர்த்து மேய்ந்தாற் போலும் என்னுந் தொழிலு வமையாலும் மநோநிக்கிரக மில்லாதவன் தவவேடத்தோடு நின்று மனஞ் சென்றவழியே செல்லுகிறுனென்பது. ''வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்'' என்புள்ள பிரயோகமு மிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

† அன்னகாரணங்களான் உலகத்தார் அயிராமை யாயிற்று - புலி புல்தின்னுதென்பதனாலும் நெருங்கிச் சென்றால் கொல்லுமே யென்னும் அச்சத்தாலும் பசுவைக் காவற்காரர் தூரத்தாமை போன்று தவத்தினர் காம வின்ப மனுபவியாரென்பதனாலும் நெருங்கிச்சென்று விசாரித்தால் சாபம் நேருமே யென்னும் பயத்தாலும் உலகத்தார் சந்தேகியாமை யாயிற்று.

நம் தனக்குரிய புல்லே விட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற் போலுமென்ற உவமையானறிக.

தெளி.—(இ-ள்). வலி - (மனத்தைத் தன்வயப்படித்தியடக்கும்)வல்லமை, இல் - இல்லாத, நிலைமையான் - இயல்பினையுடையவன், வல்லுருவம் - (மனத்தைத் தம் வயப்படித்தி யடக்கிய) வல்லமையை யுடையவரது தவவேடத்தை, (கொண்டு தான் அம்மனம்போன வழியே போதல்), பெற்றம் - பசுவானது. (காவற்காரர் தூரத்தாதிருக்கும்படி),புலியின்றோல் - புலியினது தோலே, போர்த்து - போர்த்துக்கொண்டு, மேய்ந்தற்று - (பயிரை) மேய்ந்தாற் போலும், (எ - று).

புலியின் தோலைப் போர்த்துப் பயிரை மேயும் பசு என்று மின்மையின், 'பெற்றம் தற்று' என்பது இல்பொருளுவமையணி. 'வலியில்' என்னு மடையாலும், 'மேய்ந்தற்று' என்னுந் தொழிலுவமையாலும் (வலியில் நிலைமையான்) வல்லுருவத்தோடு மனம் போன வழியே போதலென்பது பெறப்பட்டது. காவலர் தூரத்தாமை - புலி பசித்தாற் புல்லைத் தின்ஞதென்பதனாலும், (நெருங்கிச் சென்றுற் கொல்லுமே யெனினும்) பயத்தாலுமாம்; ஆகவே, வல்லுருவங் கொள்ளுவதற்குப் பயன் அத்தன்மைய வாயகாரணங்களால் உலகத்தார் சந்தேகங் கொள்ளாமை யாயிற்று. இப் பசு தனக்குரிமையாயுள்ள மனவியையுந் தூறந்து (மனத்தைத் தன்வயப் படித்தும்) வல்லமையுமில்லாது பிறர் சந்தேகங் கொள்ளாத வல்லுருவமுங் கொண்டு நின்றவன் (கூடா வொழுக்கத்தான் (மனவழிப்படுதலாவது தன் மனஞ்சென்றவழியே சென்று (தவவேடத்தில்) மறைந்து நின்று பிறர்க்குரிமையாயுள்ள பெண்களை யிரும்புதலாம். அத்தன்மையதாதலைப் பசு தனக்குரிமையாயுள்ள புல்லை (மேய்தலை) விட்டுப் பிறர்க் குரிமையாயுள்ள பயிரை மேய்ந்தாற் போலு மென்ற வுவமானத்தினுலறிக.

(கு-து). மநோநிக்கிரகஞ்செய்யும் வலிமை யில்லாதவன் தவவேடம் பூண்டு தீவினை புரிதல் பசு புலியின் தோலைப் போர்த்துப் பயிரை மேய்ந்தாற்போலும் என்பது.

3. The assumed appearance of power, by a man who has no power to restrain his senses and perform austerity, is like a cow feeding on grass covered with a tiger's skin.

4. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

பரி.—(இ - ள்.) * அவ்வலியினிலைமையான் தவவேடத்தினின்கண் ணே மறைந்து நின்று தவமல்லவற்றைச் செய்தல் வேட்டுவன்புதலின் கண்ணே மறைந்து நின்று புட்களைப் பிணித்தாற்போலும், (எ-று.)

---

* அவ்வலியினிலைமையான் என்றது மேற்குறளிற் கூறிய வலியினிலைமையானே.

† தவம் - ஆகுபெயர். தவமல்லவற்றைச் செய்தலாவது பிறர்க்குரிய மகளிரைத்தன்வயத்தாக்குதல். ‡ இதுவும் இதொழிலுவமையாணரிக.

தெளி.—(இ-ன்.) (அவ்வல்லமையில்லாத நிலைமையான்) தவம் - தவ வேடத்திலே, மறைத்து - மறைத்துநின்று, அல்லவை-தவமல்லாதவற்றை, செய்தல்—,வேட்டென் - வேடன், புதல்-புதலிலே, மறைந்து - மறைத்து நின்று, புள்-பறவைகளை, சிமிழ்த்தற்று - பிடித்தாற்போலும், (எ-று).

தவமென்பது தவவேடத்திற்காதலின் ஆகுபெயராம். தவமல்லவற்றைச்செய்தலாவது பிறர்க்கு உரிய மகளிரைத் தனக்கு வசமாகும்படிசெய்தல். இப்படி செயதலெனபதும் இத்தொழி லுவமையினு லறிக.

(க—து). ஒருவன் தவவேடத்தில் மறைத்து நின்று பாவகாரியங்களைச செய்தல் வேடன் புதலில் மறைந்து நின்று பறவைகளைப் பிடிப்பதுபோலுமாம் என்பது.

4. He who hides himself under the mask of an ascetic and commits sins, is like a sportsman who conceals himself in the thicket to catch birds.

பி. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மேற்றேன் றேதம் பலவுந் தரும்.

உரை:—(இ - ள்) தம்மைப் பிறர் நன்கு மதித்தற்பொருட்டு யாம் பற்றற்றே மென்று சொல்வாரது மறைந்தவொழுக்கம் அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமாயினும், பின் என்செய்தேம் என்செய்தே மென்று தாமேயிரங்கும்வகை, அவர்க்குப் பலதுன்பங்களையுங்கொடுக்கும்,(எ - று.)

சொல்லளவல்லது பற்றறுமையின் 'பற்றற்றே மென்பார்' என்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பதின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்காலம் நிற்பதாய பாவதையை செய்வார் $ அதன்வினைவின்கண் அந்தோவினையேயென்றழுங்குவராகலின்'எற்றென்று' என்றுங் கூறினர். இவையைந்து பாட்டானும் கூடாவொழுக்கத்தின் இழுக்கங் கூறப்பட்டது.

---

† தவமென்னும் முதலின்பெயர் அதனுறுப்பாகிய வேடத்திற்காதலால் முதலாகுபெயராம்.

‡ இதுவும் (தவமறைத்தல்லவை செய்தலும்) இத்தொழிலுவமையான் (புதன்மறைந்து வேட்டுவன்புட்சிமிழ்த் தற்று என்னும் தொழிலுவமையால்) அறிக. இங்குப் புட்சிமிழ்த்த லென்னுந்தொழில் உவமானமும், அல்லவை செய்தல் உவமேயமுமாம்.

$ அதன்வினைவின்கண்-அப்பாவத்தின்பயனாகிய துன்பத்தையனுபவிக்கும்போது.

மதள.—(இ-ன்). (*பிறர் தம்மை நன்குமதித்தற் பொருட்டு*) *பற்றற்றேமென்பார்*-(*வாம்*) *பற்றற்றேமென்றசொல்லுவாதது, படிற்றொழுக்கம்-மறைச்சவொழுக்கமானது, (அப்பொழுது இனிதுபோலத்தோன்றுமாயினும்), எற்றென்றென்று - (பின்) என்செய்தோம் என்செய்தோமென்று, (தாமே இரங்கும்படி), எதம்பலவும் - (அவர்க்குப்) பல தன்பங்களையும், தரும் - கொடுக்கும், (எ-று).*

சொல்லன வில்லாமல் பற்றுநீங்காமையால் ' பற்றற்றேமென்பார் ' என்றும், நெியதாய்க் கணப்பொழுதுள்ளே அழிவதாகிய (காம) இன்பத்தின் பொருட்டுப் பெரியதாய் நெடுங்காலம நிற்பதாகிய பாவத்தைச்செய்வோர் அப்பாவத்தின் பயனுகிய தன்பத்தை யனுபவிக்கும்போதுஐயோ நீவினையே யென்றமுவா ராதலின் ' எற்றென்று ' என்றும் சொல்லினர். இவைஐந்துபாட்டாலும் கூடாவொழுக்கத்தினதுகுற்றம்சொல்லப்பட்டது.

(க-து). இருவகைப்பற்றையும் விட்டோமென்று கூறித் தீச்செயல்களைச் செய்பவருக்கு அவரிரங்கும்வகை அவற்றால் பல தீங்குண்டாமென்பது.

5. The false conduct of those who say they have renounced all desire, will one day bring them sorrows that will make them cry out, "oh, what have we done, what have we done."

சு. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கண ரில்.

பரி.—(இ-ள்). நெஞ்சாற் † பற்றறதுவைத்துப்பற்றற்றார்போன்று தானஞ்செய்வாரை வஞ்சித்து வாழமவர்போல வன்கண்மையை யுடையார் உலகத்தில்லை, (எ-று).

*தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுமைக்கண் தேவராதற் பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்னது ஈதமென்றறியாது ஈந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினராக்குதல். அவர் இழிபிறப்பினராதல் *"'அடங்*

† *பற்றறுது வைத்து* - இருவகைப்பற்று மொழியாதிருந்தும்.

* *சிவகசிந்தாமணி முத்தியிலம்பகம் 244. இதன்பொருள் சிங்கத்தின் கோபம் போன்ற கோபத்தையும் வல்லமையையும் பெருமை பொருந்திய வேற்படையையுமுடைய அரசர்களுக்கு ஆண்சிங்கம்போன்ற சிவகனே! ஒலிக்கின்ற ஆற்றுநீர் ஊற்றுநீர் வேற்றுநீர் என்னு மூன்று நீரினையுமுடைய விசாலமான சமுத்திரத்தின் மேலிலே பல தீவுகளிருக்கின்றன, அத்தீவுகளிலே இந்திரிய நிக்கிரகஞ் செய்யாதவர்களுக்குக் கொடுத்த தானத்தின் பயனுலே (தானங்கொடுத்தவர்கள்) உடம்பு மக்களுடம்பும் முகம் யிலங்கின் முகமுமாய் வேறுபாடுடையவர்களாகத் தோன்றி யுதிர்கின்ற கனியை யுண்டுவாழ்வார்களென்பது. இதனுல் கொடியவர்க்குக் கொடுத்த தானம் நீலமலை யுண்டாக்குமென்பது பெறப்பட்டதென்க.*

கலர்க் கீக்த தானப் பயத்தினு லலமு மூங்நீர்த், தடங்கட னடுவுட் டீவு பல வுள வவற்றட் டோன்றி, யுடம்போடு மூங்க னொவ்வா ரூழ்கனி மாந்தி வாழ்வர், மடங்கலஞ் சீற்றத் துப்பின் மானவேன் மன்ன ரேறே." என்ப தனு னறிக. தமக்கு () ஆவன செய்தார்க்கு ஆகாதன வினைத்தலின் 'வன் கணரில்' என்றார்.

தெளி.—(இ-ள்). நெஞ்சின்-மனத்தினுல், துறவார் - (பற்றுக்களைத்) துறவாதிருத்தம், துறந்தார்போல்-பற்றற்றார்போன்று,வஞ்சித்த-(தானஞ் செய்வாரை) வஞ்சனைசெய்த, வாழ்வாரின்-வாழுமவர்போல, வன்கணர் - இரக்கமில்லாமையையுடையவர், இல்-(உலகத்திலொருவரும்) இல்லை, ()

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுபிறப்பில் தேவராகும் நிமித்தம் இந்த அரிய தவதரோர்க்கு இன்னபொருளைக் கொடுப்போமென்று அறியாமற் கொடுத்தவரை அப்பொருளைப் பெற்றுக்கொண்டு தாழ்ந்த பிறப்பினராக்குதலாம். தமக்கு ஆவனவற்றைச் செய்தவர்க்கு ஆகாதனவற்றை யுண்டாக்குதலால் 'வன்கணரில்' என்றார்.

(க-து). அகத்துறவின்றிப் புறத்துறவுபூண்டு பிறரைவஞ்சிப்பவர் மிகவும் கொடியவராவா என்பது.

6. Amongst living men there are none so hard - hearted as those, who without forsaking desire in their heart, falsely take the appearance of those who have forsaken it.

எ. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

பரி.—(இ-ள்). † குன்றிமணியின் புறத்தைக் கண்டாற் போல வேடத்தாற் செம்மையுடையாராயினும் அதன்முகத்துப்போல மனம் இருண்டிருப்பாரை உடைத்து உலகம், (எ-று).

‡ குன்றி-ஆகுபெயர். $ செமமை கருமையென்பன பொருளின்கண் நிறத்தைவிட்டுச் செப்பத்தினும் அறியாமையினுஞ் சென்றனவாயினும்,

() ஆவன - உண்டி மருந்து உறையுள் முதலிய உபகாரங்கள்.

† குன்றியின் புறம்போல என்றும் பாடமுண்டு.

‡ குன்றிமணியின் சிவப்பு நிறத்தைக் குன்றி யென்றது பொருளாகு பெயராம்.

$ உவமான மான குன்றிமணிக்கணுள்ள செம்மை கருமை (சிவப்பு நிறம் கறுப்புநிறம்) என்பன பொருளின்கண் (உவமேயத்தில் - அஃதாவது கூடாவொழுக்கமுடைய தவவேடமுடையாரிடத்து)செம்மை,கருமை என்னும் நிறத்தைவிட்டுச் செப்பத்தினும் (வேடப்பொலிவினும்) அறியாமையினும் சென்றவாயினும், பண்பால் ஒத்தலின் (செப்பம் அறியாமையென்பன குன்றிமணியின் சிவப்புக் கறுப்பென்னுங் குணத்தினு லொத்திருத்

பண்பால் ஒத்தலின், இவைபண்புவமை. *"கூழின் மலிமனம் போன்றிரு ளாகின்ற கோவிலமே" என்பதுமது.

தெளி.—(இ-ன்). குன்றிப்புறம்-குன்றிமணியின் மேற்பாகத்தை. கண் டணைசேரும்-கண்டார்ற்போல வேடத்தால் செம்மை யுடையவராயினும், அகம்-மனம், குன்றிமூக்கின் - அக்குன்றிமணியின் மூக்குப்போல, காரி யார்-இருண்டிருப்பவரை, உடைத்து-(உலகமானது) உடையதாயிருக்கின் றது, (எ-று).

குன்றியென்பது அதன் நிறத்திற்காதலின் ஆகுபெயராம். உவமான த்திலுள்ள செப்பு கறுப்பென்பன உவமேயத்தில் நிறத்தைவிட்டுச்செம் மையான வேடத்திலும் அறியாமையிலும் சென்றனவாஞலும், (செம்மை யானவேடம் அறியாமை யென்பன) பண்பால் சிகப்பு கறுப்பு என்பவற் றோடு ஒத்திருத்தலால், செம்மைகறுமையென்பன பண்புவமையாம். அஃ தாவது உவமானத்திலேயுள்ள செம்மை கருமைகள் முறையே உபமேயத் திலேயுள்ள செம்மையான வேடத்தையும் அறிவில்லாமையையு முணர் த்தி நின்றனவென்பது. கண்டென்பது கண்டாரென்பதன் திரிபு.

(க-து). உலகமானது அகத்தே அறியாமையையும் புறத்தே தவவேடத்தையும் உடையாரையும் உடையதாயிருக்கின்றது.

7. The world contains persons whose outside appears as fair as the red berry of the Abrus, but whose inside is as black as the nose of that berry.

அ. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

பரி.—(இ-ள்). மாசு தம்மனத்தின் கண்ணதாகப் பிறர்க்குத் தவத்தான்மாட்சிமையுடையராய் நீரின்மூழ்கிக்காட்டி, தாம் அதன்கண் ணே மறைந்துசெல்லும் மாந்தர் உலகத்துப்பலர், (எ-று).

மாசு - காம வெகுளி மயக்கங்கள். அவை போகற்கன்றி மாண்டா ரென்று பிறர் கருதுதற்கு நீராடுதலான், † அச்சொழிலே அவர் மறை

தலால்) இவை (செம்மை கருமை யென்பன) பண்புவமையாமென்க. பண் புவமையாவது பண்பை யுவமான மாகக் கூறுவது. இங்குக் குன்றிமணி யின் செம்மைகருமைகள் உவமானமாயும் கூடாவொழுக்கத்தினாது வேட ப்பொலிவும் மனக்கனங்கமும் உபமேயமாயும் நின்றனவென்க.

* திருக்கோவையார் கூஉ, இதன்பொருள் (சிவபெருமானது சிற் றம்பலத்தை விரும்பாத)உணவாற்செருக்கு மண்ம்போல ஒருகாலேக்கொரு கால் (கரு) நிறம்பெற் றிருளாநின்ற குயில்கள் என்பது. இங்கு உணவாற் செருக்குமனம் கருமை (அறியாமை)யுடையதாகலேக் கூறியவாறுணர்க.

† உள்ளத்தி னுள்ளே யுணர்வெனுந் தீர்த்தநீர், மெள்ளக் குடைந்து மின் னூடார் வினைகெடப், பள்ளமும் மேடும் பறந்து திரிவாரிக், கள்ள மன மூடைக் காளினி யோரே என்பது திருமந்திரம்.

தம் இடனுக்கினுர். இனி ‡மாண்டார் நீராடி யென்பதற்கு மாட்சிமைப் பட்டாரது நீர்மையையுடையாரையென வுரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் அவ்வொழுக்க முடையாரதி குற்றமும் அவரையறிந்து நீக்கல் வேண்டு மென்பதுங் கூறப்பட்டன.

தெளி.—(இ-ள்) மாசு - அழுக்கானது, மனத்ததாக - (தம்) மனத்தி லுள்ளதாக, மாண்டார் - (பிறர்க்குத் தவத்தால்) மாட்சிமையுடையவராய், நீராடி - நீரில்முழுகிக், (காட்டி), மறைந்து - (தாம் அம்மூழ்குதலினிடத் தே) மறைந்து, ஒழுகும் - நடக்கும், மாந்தர் - மனிதர், பலர் - (உலகத் திற்) பலர், (எ - று).

மாசு-காம வெகுளி மயக்கங்கள். அக்காம வெகுளி மயக்கங்களினது தற்காக வல்லாமல் மாட்சிமையுடையவரென்று பிறர் வினைத்தற்காக தலால், அநீராடித்தொழிலை அவர் மறைதற்கு இடமாக்கினர். இவை மூன்றுபாட்டாலும் அக்கூடாவொழுக்கமுடையவரதி குற்றமும், அவரை அறிந்து நீக்குதல்வேண்டுமென்பதும் சொல்லப்பட்டன

(க-து). துறவறத்தாருட்பலர் உள்ளத்தைச சுத்தமாக்க முய லாது உடலைச் சுத்திசெய் தொழுகு கின்றனர் என்பது.

8. There are many men of masked conduct, who perform their ablutions, and make a show of greatness, while their mind is defiled with guilt

கூ. தூணைகோடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கோளல்.

பரி.—(இ - ள்.) அம்பு வடிவாற் செவ்விதாயினும், செயலாற் கோடியது; யாழ் $ கோட்டால் வளைந்ததாயினும், செயலாற் செவ் வீது; அவ்வகையே தவத்தீசெய்வாரையுங் கொடியர் செவ்வியரென் பது வடிவாற் கொள்ளாது அவர் செயல்பட்ட கூற்றனே அறிந்து கோள்க, (எ-று).

கணைக்குச்செயல் - கொலை. யாழுக்குசெயல் - இசையாலின்பம்பய த்தல். அவ்வகையே செயல் † பாவமாயிற் கொடியரெனவும், அறமாயிற் செவ்வியரெனவுங் கொள்க வென்பதாம். இதனுன் அவரை யறியுமாறு கூறப்பட்டது.

‡ மாண்டார் நீராடியென்பதற்கு மாட்சிமைப்பட்டவருடைய குண மூடையாரையென்று பொருள் கூறுவாருமுண்டு.

$ கோடு - யாழின் (வீணையின்) தண்டு, கோட்டால் - தண்டால்.

† பாவத்திற் கேதுவாயிருப்பின் தானென்றும் அறத்திற்கேதுவா யிருப்பின் தக்கவனென்றும் அவரைக் கொள்ளவேண்டு மென்பதாம்.

தேவி.—(இ-ன்). கணை - அம்பானது, (வடிவினைத் செவ்வியதாயிருப் பினும்), கொடிது - (செயலினால்) கொடியதாயிருக்கின்றது, யாழ்-வீணை யானது, கோடு-கோட்டினால், (வளைந்ததாயிருப்பினும்), செவ்வி-து- (செய லினால்) செவ்வியதா யிருக்கின்றது, ஆங்கன்ன - அவ்வகையே, (தவஞ் செய்வாரையும் கொடியர் செவ்வியரென்பது வடிவினைக் கொள்ளாமல்), வினைபயாலால் - (அவரது) செயல்பட்ட பகுப்பினாலே, கொளல் - அறி ந்துகொள்ளக் கடவர், (எ-று).

அம்புக்குச்செயல் - கொல்லுதல். வீணைக்குச் செயல்—இசையினால் இன்பத்தைத்தருதல். அவ்வகையே தவத்தினரதுசெயல் பாவமாயின் கொடியரென்றும், அறமாயின் செவ்வியரென்றும் அவரையறிந்து கொள் ளல்வேண்டுமென்பதாம். இதனால் அவரை அறியும்வழி சொல்லப்பட்டது.

(க-து). இவர் கூடாவொழுக்க முடையார், இவர் நல்லொழு க்கமுடையார் என்பது அவரவரது செய்கையா லறியப்படும்.

9. As, in its use, the arrow is crooked and the curved lute straight, so by their deeds, and not by their appearance let the uprightness or crookedness of men be estimated.

க०. * மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

பரி.—(இ - ள்). தவஞ்செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா, உயர்ந்தோர் தவத்தில் காகா தென்று குற்றங் கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின், (எ - று).

† பறித்தலும் ‡ மழித்தலுள் அடங்கும். மழித்தலென்பதே தலைமயி

* நாரத பரிவிராஜகோபநிஷத்தது ஐந்தாவது உபதேசத்தில் "தண் டத்தைப் பிடித்திருத்தலினாலாவது மொட்டையடித்திருத்தலினாலாவது வேஷத்தினாலாவது இடம்பாசாரத்தினாலாவது முத்தி சித்திப்பதில்லை. எவனுடைய ஞான தண்டம் பிடிக்கப்பட்டிருக்கின்றதோ அவன்தான் யதி தண்டி" என்றும், மனுதருமசாஸ்திரம் ஆறாவதத்தியாயத்தில் "ஒருவன் ஒரா சிரமத்திலிருந்து அந்த ஆசிரமத்திற்குத்தக்க தண்ட கமண்டலமுதலிய அடையாளங்களில்லாமலிருந்தாலும், எலலாப் பிராணிகளிடத்திலும் சம புத்தியுடையவனாய்த்தருமஞ் செயயவேண்டுமே யன்றிக் காஷாயாதரித்தல் முதலிய வேடமாத்திரம் தருமத்திற்குக் காரணமாக மாட்டாது" என்றும், கூறுவதற்கு இக்குற ளினங்கியிருத்தலைக் காண்க.

† பறித்தல் - தலைமயிரை பொவ்வொன்றாகப் பிடுகுதல். இவ்வாறு செய்வது சமணமதசம்பிரதாயம். இது சிவஞானசிந்தாமணி முத்தியிலம்பகம் விஜயமாதேவியார் தூதில் "மணியியல் சீப்பிடச சிவக்கும் வாணுத, லணியிருங் கூந்தலே யெளவை மார்கடாம், பணிவிலர் பறித்தனர் பாமன் சொன்னனாற், றுணிபொருள் சிந்தியாத் தூதத்தன் மேயினர்" என்றுகூறு வதனாலு மறிதற் பாற்றும். ‡ மழித்தல் - மொட்டையடித்தல்.

வரை யுணர்த்தலின், அது கூறாயினுர். இதனும் கூடாவொழுக்க மில்லா தார்க்கு வேடமும் வேண்டாவென அவரது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ - ன்). (தவஞ்செய்வார்க்கு) மழித்தலும்-(தலேமயிரை) நீத்தலும், நீட்டலும் - (அதனைச்) சடையாக்கலும், (ஆகியவேஷமும்), வேண்டா - வேண்டுவனவல்ல, உலகம் - உயர்ந்தோர், பழித்தது - (தவத் திற்கு ஆகாதென்று) குற்றங்கூறிய ஒழுக்கத்தை, ஒழித்து விடின் - நீக்கி விடுவாராயின், (எ - று).

தலேமயிரைப் பறித்தலும் மழித்தலில் அடங்கும். மழித்தலென்பதே தலேமயிரைத் தெரிவித்தலால், அதைக்கூறுதலிட்டார். இதனுல் கூடா வொழுக்கமின்றித் தவஞ்செயவார்க்கு வேஷமும் வேண்டாமென்ற அவ தது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து). உயர்ந்தோர் குற்றமென்று கூறுவனவற்றைவிட் டொழுகுதலே தவத்தோர்க்குச் சிறப்பாவதன்றி வேடஞ்சிறப்பா காதென்பது.

10. There is no need of a shaven crown, nor of tangled hair, if a man abstain from those deeds which the wise have condemned.

ஐந்தாம் அதிகாரம்.

கள்ளாமை:—*Against Fraud.*

பரி.—அஃதாவது பிறருடைமையா யிருப்ப தியாதொருபொருளே யும் அவரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாமை. கருதுதலும் செயிதலோ டொத்தலின் 'கள்ளாமை' என்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு வினையாட்டு வகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைநீத் பொருள்க்களே அங்ஙனங் கொள்ளினும் அமையும்; துறந்தார்க்காயின், அதனைக் கருதியவழியும் பெரியதோ ரிழக்காம் ஆகலின், $ இது துற

$ இது-கள்ளாமை. கள்ளுதல்(திருடுதல்) ஒரோவிடத்து நன்மேமென் பது இறையனாரகப்பொருள் "அன்பினைந்திணை" என்னுஞ் சூத்திரவுரை யில் நக்கீரனுர் "கனவெனுஞ்சொற்கேட்டுக் களவு நீதென்பதூஉம் காமமெ னுஞ்சொற்கேட்டுக் காமந் நிதென்பதூஉமன்று; மற்றவை நல்லவாமாறு மூண்டு; என்னே? ஒரு பெண்டாட்டி தமரொடுகலாய்த்து (பகைத்து) நஞ் சுண்டு சாவலென்னு முன்னுத்தாளாய் நஞ்சுகூட்டிவைத்து விலக்குவா ரில் லாத போழ்து உண்பலென்று நின்றவிடத்து, அருளுடையாளொருவன் அதனைக்கண்டு இவள் இதனே யுண்சாவாமைக் கொண்டுபோய் உருப்ப வென்று அவளைக்காணுமே கொண்டுபோய் உருத்திட்டான்; அவளுஞ்சன கீக்கத்தக்கண் நஞ்சுண்டு சாவாள் சென்றுள்; அதுகாணுளாய்ச்சாக்காடு (மரண்ம்) நீங்கினுள். அவன் அக்களவினுன் அவளையுயக்கொண்டமையான்

வறமாயிற்று. ஒ புறத்துப் போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கம்பாலதாய அவர்மனம் அஃதொழிந்து புறத்தேபோந்து பஃறலைப்பட்டு உடம்பின் பொருட்டுப்பொருளே நோக்குதலேயன்றி, அது தன்னையும் வஞ்சித்துக்கொள்ளக் கருதுதல் அவர்க்குப் பெரியதோ ரிழுக்காதலறிக. இவ்வாறு வாய்மை முதற்கோல்லாமையிறய நான்கதிகாரத்திற்கு மோக்கும். பொருள்பற்றி நிகழுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது காமம்பற்றி நிகழ்வதாய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது பிறருடைமையாயுள்ளபொருள்களுள், யாதொரு பொருளேயும் அவரை வஞ்சித்துக்கொள்ள நினையாமையாம். நினைத்தலும் செய்ததற்குச் சமானமாதலால் 'கள்ளாமை' என்றார். இவ்வாழ்வார்க்காளல் சுற்றத்தார் முதலியோரிடத்து விளையாட்டு வகையாலாவது அவரை வஞ்சனைசெய்து கொள்ளுதற்குத் தக்க பொருள்களே அவ்வாறு கொண்டாலும் பொருந்தும்; துறந்தவர்க்காளல் அப்பொருளே யகரிக்க நினைத்தலிடத்தும் பெரியதொரு குற்றமாகலின், இது துறவறத்திற் குரியதாயிற்று. புறத்திற் போகாமல் மடங்கி ஒருமுகப்பட்டு உயிரையே நோக்கவேண்டியதாகிய அவரது மனம் அவ்வுயிரையே நோக்குதொழிந்து புறத்திலே போய்ப் பலவகையாக விரிந்து, அதகூலமான விஷயங்களி லழுந்தி உடம்பின்பொருட்டுப் பொருளே நோக்குதலேயல்லாமல், அப் பொருளேயும் வஞ்சித்துக்கொள்ள நினைத்தல்அத்துறவறத்தார்க்குப் பெரிய தொரு குற்றமாதல் அறிக. இவ்விதம் வாய்மைமுதற் கொல்லாமை முடிவாயுள்ள நான்கதிகாரத்திற்கும் ஒக்கும். பொருளேப்பற்றி யுண்டாகுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இக்கள்ளாமை காமம் பற்றி யுண்டாவதாகிய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

க. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

கல்லுழிச்செல்லுமென்பது. மற்றும் இதுபோல்வன களவாகா; நன்மை பயக்குமென்பது" என்று கூறியதனால் காண்க. நாயனுரெடுத்துக்கொண்ட களவு இத்தகைய தன்றென்பது இவ்வதிகாரத்தால் நன்கு விளங்கும்,

ஒ பிறப்பையொழிக்கத் துறவறம் பூண்டார்க்குப் பிறப்பையொழித்தற்குரிய செயல் மனத்தை விஷயங்களிற் செல்லாவா றடக்கி யொருமுகப்படுத்தி யுயிரையேநோக்க வைத்தலாயிருத்தல்பற்றிப் "புறத்துப்போகாது மடங்கி யொருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர்மனம்" என்று கூறப்பட்டது. (மனம் விஷயங்களிற் செல்லா தடங்கி யொருமுகப்பட்டு உயிரையே நோக்கி யிருத்தல் சொரூபத்தியானமென்றுகூறப்படும்.) இது திருமந்திரம் "சாத்திர மோதுஞ் சதுர்களே விட்டுநீர், மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின், மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்கினுல், ஆர்த்த பிறவி யகலவிட் டோடுமே" என்று கூறுவதாலு மறிதற் பாற்றும்.

பரி.—(இ-ள்). விட்டிஹனிகழாது விரும்புவான் இவனென்று தவ
ந்தோரான் நன்கு மதிக்கப்படுவான் யாதொரு பொருளையும் பிறரை
வஞ்சித்துக்கொள்ளக் கருதாவகை தன்னெஞ்சினைக்காக்க, (எ-று).

*என்னாதென்னும் எதிர்மறை வினையெச்சம் எள்ளாமையெனத்
திரிந்தநின்றது. வீட்டினை யெழுதலாவது காட்சியே அளவையாவதென்
றும், நிலம், நீர், தீ, வளியெனப் பூதம் நான்கேயென்றும், அவற்றது
புணர்ச்சி விசேடத்தாற் ரோன்றிப் பிரிவான் மாய்வதாய () உடம்பின்கண்
ணே அறிவு மதவின் கட் ‡ களிப்புப்போல வெளிப்பட் டழியுமென்றும்,
இறந்தவுயிர் பின்பிறவாதென்றும், ¶ இன்பமும் பொருளும் ஒருவனுற்
செய்யப் படுவதென்றுஞ் சொல்லும் உலோகாயத ‡ முதலிய மயக்கதூல்
களைத் தெளித்து, அவற்றிற்கேற்ப ஒழுகுதல். ஞானத்திற்கேதுவாயமெய்க்
ணூற் பொருளேயெனும் ஆசிரியரே வழிபட்டன்றி அவரை வஞ்சித்துக்
கொள்ளின், அதுவுங் களவா மாகலின் 'எனைத்தொன்றும்' என்றார்.
நெஞ்சு கள்ளாமை காக்க எனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளு
தல் கள்ளக்கருதுதலென்பது பெற்றாம்.*

() அந்தமி லுருக்கள்பல வாமுறு புணர்ப்பின்
மைந்துறு கடாதிபல மண்ணில்வரு மாபோற்
புந்திகுணம் வண்பொறி புலன்களு மவற்றி
னுந்தியெழும் வாரியி னுறுங்குமிழி யொத்தே:—என்பது பிரபோத
சந்திரோதயம்.

‡ களிப்பு - மயக்கம்.

¶ உலோகாயதர்கள் புருஷார்த்தங்கள் நான்கெனக் கொள்ளாது
(அறம் பொரு ளின்பம் வீடு என்னும் நான்கையும் புருஷார்த்தமாகக்
கொள்ளாது வீடு என்பதொன்றின்மையின் அதுகுறித்து அறஞ்செயல்
பயனற்றசெயல் என்றுகொண்டு அவ்விரண்டையு மொழித்து) இன்பமும்
பொருளுமே புருஷார்த்த (புருஷார்களின் இச்சைக்கு விஷயமாவது புரு
ஷார்த்தமெனப்படும்) மெனக்கொண்டு, அவ்விரண்டும் முற்பிறப்பிற் செய்
த வினைகளுக்கியையவருகின்றன வென்று கொள்ளாது அவனவனது முய
ற்சிக் கியைய வருகின்றனவென்று கூறுவர். அவர்களின் சித்தாந்தச் சுருக்
கம் "பூதமொரு நான்கேதத் தலைவன் இன்பம் பொருளிரண்டே புரு
டார்த்தம் புலன்க ளாறே, எதமிலார் கண்டபிர மாணம்தோற்று மிவ்
வுடலே யான்மாவாம் இறப்பே முத்தி" என்பதனுலறிக.

‡ முதலிய என்றமையின், (சேதன சகித) தேகமே ஆத்மா என்று
கூறும் உலோகாயத மதமேயன்றி இந்திரியாத்மவாதி முதலிய மதங்களை
யுங்கொண்க. அம்மதங்களின் தன்மையை யொருவாருரைக் சுருக்கி யுரைக்
கின்றும். வருமாறு:—

(1) தேகாத்மவாதி:—நான் என்னும் புத்திக்கு விஷயமாயிருப்
பது ஆத்மா. நான் மனிதன், பார்ப்பான், பருத்தேன், இளைத்தேன்
என்றற் றொடக்கத்தனவாய அனுபவத்தினுல் தேகத்திலேயே நான்

தெளி.—(இ - ள்). கள்ளாமை - (தவத்தோரால் முத்தியை) இகழாமல், வேண்டுவோ னென்பான் - விரும்புவான் இவனென்றுணர்ந்து மதிக்கப்படுவான்; எனைத்தொன்றும் - யாதொரு பொருளையும், கள்ளாமை - (பிறரை) வஞ்சித்துக்கொள்ள நினையாதபடி, தன்னெஞ்சு - தனது மனத்தை, காக்க-காக்கக்கடவன், (எ - று).

எள்ளாது என்னு மெதிர்மறைத் தெரிநிலைவினையெச்சம் எள்ளாமை யெனத்திரிந்து நின்றது. முத்தியையிகழ்தலாவது பிரத்தியட்சப் பிரமாணமே பிரமாண மாவதென்றும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு எனப்பூதங்கள் நான்கேயென்றும், அப்பூதங்களின் கூடுதற் சிறப்பினால் தோன்றிப்பிரிவினால் அழிவுதாகிய உடம்பினிடத்தே அறிவு மதுவினிடத்துக் களிப்புப்போல

என்னும் புத்தியுண்டாவதால் தேகமே ஆத்மா. ஆபத்து நேர்ந்தபோது தேகத்திலேயே பிரியமுண்டாவதால் தேகத்திலும் பிரியமான பொருள் வேறொன்றுமில்லை. தேகத்திலுள்ள விருப்பத்தின் பொருட்டே பிறரிடத்து விருப்ப முண்டாகின்றது; ஆகவே, இதனைக்காப்பாற்றல் அலங்கரித்தல் முதலியனவே புருஷார்த்தங்களாம். ஆகாயம், கடவுள், ஊழ், ஐன்மாந்தரம் முதலியனவில்லை. பூதங்களின் சையோக விசேடத்தாலுடம்பாம்; இதன் மரணமே மோட்சமாம்; பிரத்தியட்சமே பிரமாணமாம் என்பன்.

(2) இந்திரியாத்மவாதி:—காணப்படுமித்தேகம் இந்திரிய மிருத்தால் ஜீவித்திருக்கின்றது; இல்லாவிட்டால் மரித்துப்போகின்றது. இவ்விந்திரியம் தேகத்திற்கு வேறாயிருக்கின்றது. உடல் பிழைத்திருப்பதும் மரிப்பதும் இந்திரியத்தின் வசமா யிருப்பதாலும், கேட்டேன் கண்டேன் பரிசித்தேன் என்றற்றொடக்கத்தனவற்றுள் நான் என்னும் புத்தி இந்திரித்தி லிருப்பதாலும் இந்திரியமே ஆத்மா என்பன்.

(3) பிராணாத்மவாதி:—பிராணவாயு இருத்தால் இத்தேகம் ஜீவித்திருக்கின்றது; அது நீங்கிப்போஞல் அழிந்துபோகின்றது. தேகம் நிலைத்திருப்பதற் கேது பிராணனாயிருத்தலால் பிராணனே ஆத்மா என்பன்.

(4) மனவாத்மவாதி:—பிராணன் உணர்ச்சிவடிவமன்றுதலாலும், இந்திரியங்கள் மனத்தின் சையோகத்தினால் விஷயங்களை யறிவதாயிருப்பதாலும், யாதொருவியவகாரமும் மனமின்றி நிகழாமையாலும் மனமே ஆத்மா என்பன்.

(5) புத்தியாத்மவாதி:—மனம் புத்தியின் வசமாயிருக்கின்றது; புத்தியின் ஆகாரமேமனமாம். புத்தியோ அடிக்கடி மாறிக்கொண்டிருக்கின்றது. எவ்வியவகாரமும் அடிக்கடி மாறு மியல்புடைய இப்புத்தியின் வசத்தால் பிரகாசிக்கின்றது. ஆதலால்புத்தியே ஆத்மா வென்பன்.

(6) பட்டர்மதத்தினர் ஆத்மா நிச்சடவடிவ மென்றும், மாத்யமிகர் ஆத்மா அசத்து (முற்ற மில்லாதது) என்றும், பிரபாகரையாயிகர்கள் ஆத்மா சுபாவத்தில் சடமென்றும், சமணர்கள் ஆத்மாதேகத்திற்கேற்ப வளர்தல் குறைதலே யுடையதென்றும், பிறவும் கூறுவர். இவற்றின் விரிவு னைச் சர்வதரிசன சங்கிரகம், பெருந்திரட்டு முதலிய நூற்களிற்காண்க.

வெளிப்பட்டு அழியுமென்றும், இறந்தவுயிர் பின்னே பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனது முயற்சியால் வருவதென்றும் சொல்லும் உலோகாயத முதலிய மயக்க நூல்களைத் தெளிந்து தெளிவதற்கிற்குப் பொருத்த நடத்தலாம். தத்துவஞான மூண்டாவதற்குக் காரணமான உண்மை நூற் பொருளையாயினும் ஆசாரியனை ¶ ஆப்தம், அங்கம், ஸ்தானம், சற்பாவ மென்னுஞ் சதுர்விதச் சேவைசெய்யாமல் அவனை வஞ்சித்துக் கொள்ளின், அதுவும் களவாமாகலின் 'எனைத்தொன்றும்' என்றார். நெஞ்சு கள்ளாமை காக்க என்று கூறவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதலாவது களவுசெய்ய நினைத்தலென்பது பெறப்பட்டது.

(க - து). முத்தியை விரும்பு கின்றவன் பிறர் பொருளை வஞ்சித்துக் கொள்ள நினையா திருக்கக்கடவன் என்பது.

1. Let him, who desires not to be despised, keep his mind from the desire of defrauding another of the smallest thing.

உ. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்போருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

பரி.—(இ - ள்). குற்றங்களைத் தந்நெஞ்சாற் கருதுதலும் துறந்தார்க்குப் பாவம்; ஆதலால், பிறனெருவன் பொருளை அவன் அறியா வகையால் வஞ்சித்துக்கோள்வேமென்று கருதற்க, (எ - று).

'உள்ளத்தால்' என வேண்டாது கூறினார்; அவருள்ளம் ஏனையாருள்ளம் போலாது சிறப்புடைத்தென்பது முடித்தற்கு. உள்ளலுமென்பது இழிவு சிறப்பும்மை. † அல் விகுதி வியங்கோளை திர்மறைக்கண் வந்தது. இவை யிரண்டுபொட்டானும் ‡ இக்கடைக்குக் களவாவது $ இஃதென்ப தூஉம் () அது கடியப்படுவ தென்பதூஉங் கூறப்பட்டன.

தேளி—(இ - ள்.) உள்ளத்தால் (குற்றங்களைத் தமது) மனதினுல், உள்ளலும் - நினைத்தலும், தீதே - (துறந்தார்க்குப்) பாவமேயாம், (ஆதலால்), பிறன் பொருளை-பிறனெருவனது பொருளை, கள்ளத்தால்(அவன்) அறியாத வகையினுல், கள்வேம் - வஞ்சித்துக் கொள்ளுவோம், எனல்-என்று நினையாதிருக்கக்கடவர், (எ - று).

அத்துறந்தாரது மனம் மற்றவரது மனம்போல் குற்றமுடைய தாகாமல் மெய்புணர்வு அவாவின்மை முதலிய சற்குணங்களால் சிறப்புடையதாயிருக்கின்ற தென்பதை முடித்தற்கு 'உள்ளத்தால்' என்று வேண்டாது

¶ "ஆத்தமுடனங்கமே" என்னும் வேதாக்த சூளாமணிக் செய்யுளில் சூளாத்தக்கதாம்.

† 'பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்' என்னுங் குறளினுள்ள எனல் என்பதற்குக் குறிப்புரையி லெழுதியுள்ளதை யிங்கமைத்துக்கொள்க. ‡ இக்கடைக்கு-இத் துறவற மொழுக்கத்திற்கு.

$ இஃதென்பதூஉம் - பிறன்பொருளைக் களவுசெய்ய நினைத்தலென்பதும். () அது-பிறன்பொருளைக் களவுசெய்ய நினைத்தல்.

சொல்லினர். உள்ளலு மென்றவும்மை இழிவு சிறப்பும்மை. எனல் என்பது அல்லீற்றுவினைமுற்று. இவை யிரண்டோட்டாலும்(துறந்தவரது) இவ்வொழுக்கத்திற்குக் களவாவது இஃதென்பதும், அது நீக்கப்படுவ தென்பதுஞ் சொல்லப்பட்டன.

(க - கி). தீயன வற்றைச் செய்ய வெண்ணுதலும் தீமை தருவதா யிருத்தலின், அதனை யொழித்தல் வேண்டுமி என்பது.

2. Even the thought of sin is sin; think not then of craftily stealing the property of another.

கூ. களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

பரி:—(இ - ள்). களவினுலுளதாகிய பொருள் வளர்வதுபோலத் தோன்றித் தன்னேலீலையைக் கடந்துகெடும், (எ - று).

† ஆக்கத்திற் கேதுவாகலின், ஆக்கமெனப்பட்டது. எல்லையைக்கடந்து கெடுதலாவது ‡ தான் போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்திச், செய்த அறத்தையும் உடன்கொண்டு போதல். ¶ அளவறிந்தென்று பாடமோதி, அவர்பயன்கொள்ளு மளவறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடுமென் றுரைப்பாரு முளர்.

தெளி.—(இ - ள்). களவினல் - களவுசெய்தலினல், ஆகிய - உண்டாகிய, ஆக்கம - பொருளானது, ஆவதுபோல - வளர்வதுபோல,(தோன்றி), அளவிறந்து - (தனது) எல்லையைக் கடந்து, கெடும் - அழியும், (எ - று).

பொருள் ஆக்கத்திற்கு ஏதுவாகலால், அஃது ஆக்கமென்றுகூறப்பட்டது. (பொருள் தனது) எல்லையைக் கடந்து கெடுதலாவது (தன்னேயுடையவனுக்குத்)தான் போகுங்காலத்தில் பாவத்தையும் பழியையும் நிலை பெறச்செய்து, (அவன்)செய்த தருமத்தையும் உடன்கொண்டு போகுதல்.

(க - து). களவு செய்தலா லுண்டாகிய செல்வம் விருத்தியடைவதுபோற் றோன்றிப் பாவத்தையும் பழியையும் நிறுத்தி விரைந்துகெடும் என்பது.

3. The property, which is acquired by fraud, will pass all bounds and perish, even while it seems to increase.

† ஆக்கம் - மேல் மேலுயர்தல்; ஆக்கத்திற்குக் காரணமான பொருளே யாக்கமென்றது காரியவாகுபெயராம்.

‡ தான் போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்தி - பொருளழியும்போது மறுமைக்குப் பாவத்தையும் இம்மைக்குப் பழியையும் வைத்து.

¶ அளவிறந்து என்பதை அளவறிந்து என்று பாடமோதி, அதற்குப் பொருளானது தன்னேக் களவாற்கொண்டவர் தன்பயனை யனுபவிக்குங் கால வளவினையறிந்து, (கெடும் -)அவ்வனுபவ காலத்திற்கு உதவாமல் அழியுமென்று பொருள் கூறுவாருமுண்டு.

ச. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

பரி.—(இ - ள்). பிறர்பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை அப்பொழுது இனிதுபோலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும்பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும்,(எ-று).

† கன்றுதலான் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து ‡ அதனற் பாவமும் பழியும் பயந்தே விடுதலின் 'வீயாவிழுமந்தரும்' என்றார். இவையிரண்டு பாட்டானும் § அது கடியப்படுதற்குக் காரணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). களவின்கண் - (பிறர்பொருளை) வளைத்துக் கொள்ளுதலிலே, கன்றிய - மிகுந்த, காதல் - ஆசையானது, (அப்போது இனிதுபோலத் தோன்றி), விளைவின்கண் - (தான்) பயனைக் கொடுக்கும் போது, வீயாவிழுமம் - தொலையாத துன்பத்தை, தரும் - கொடுக்கும்.

கன்றியகாதல் (மிகுந்த வாசை) எக்காலும் அக்களவையே பழகச் செய்து அதனால் பாவமும் பழியும் கொடுத்தே விடுதலால் 'வீயா விழுமந் தரும்' என்றார். இவையிரண்டு பாட்டாலும் அது நீக்கப்படுவதற்குக் காரணஞ் சொல்லப்பட்டது.

• (க-து). களவுசெய்தலில் மிகுந்த ஆசையானது முன்னரினிதுபோலத் தோன்றினும் பின்னர்ப் பெருந்துன்பத்தைத் தரும்.

4. The eager desire of defrauding others, when it has brought forth its fruit, will produce undying sorrow.

ரு. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
போச்சாப்புட் பார்ப்பார்க ணில்.

பரி.—(இ - ள்). அருளினது உயர்ச்சியையறிந்து அதன்மேல் அன்புடையராய் ஒழுகுதல் பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருதி அவரது சோர்வு பார்ப்பார்மாட் டுண்டாகாது (எ - று).

தமக்குரிய பொருளையும் அதனது ¶ குற்றம் நோக்கித் துறந்து போந்தவர் பின் பிறர்க்குரிய பொருளை நன்குமதித்து, அதனை வஞ்சித்

† கன்றுதலான் - காதல் மிகுதலால். கன்றுதலான் என்பதற்குப் பிரியாகக் கன்றியகாதல் என்றும் பாடமுண்டு. இதுவேநேர்; உய்த்துணர்க.

‡ அதனால் (மிக்கவேட்கை திருடுதலையே) பழகச்செய்தலினால்.

§ அது - பிறன்பொருளைக் கவருஞ்செய்கை.

¶ குற்றம் நோக்கலாவது "கிறைசெல்வம், நீரிற்சுருட்டு நெடுந்தேர்கள்" போல்வது என்றும், பொருளைச் சம்பாதிப்பதும், அதனைக்கள்வர் முதலியோர். அபகரியாவாறு காப்பதும், செலவழிப்பது முதலியன பெருந்துன்பத்திற் கேதுவாமென்று முணர்தலாம்.

தக் கோடற்கு அவாது சோர்வுபார்க்கும் மருட்சியரானல், அவர்மாட்டு, உயிர்கண்மே லருள்செய்தல் நமக்குறுதியென் றறிந்து, அவ்வருளின் வழு வாதொழுகுக் தெருட்சி கூடாதென்பதாம்.

தெளி:—(இ-ன்). அருள்-அருளினது (உயிர்ச்சியை), கருதி-அறிந்து, அன்புடைய ராதல் - (அவ்வருளின்மேல்) அன்புடையராய் நடத்தல், பொருள் - (பிறரது) பொருளை, கருதி - (வஞ்சித்துக்கொள்ள) நினைத்து, பொச்சாப்பு - (அவரது) சோர்வை, பார்ப்பார்கண் - பார்ப்போரிடத்து, இல் - உண்டாகாது, (எ - று).

தமக்குரிய பொருளையும் அதனது குற்றத்தைப் பார்த்து (இது நீ தென்று வெறுத்துத்) திறந்துவந்தவர் பின்னர்ப் பிறர்க்குரிய பொருளை நன்மை தருவதென்றுகருதி, அப்பொருளை வஞ்சித்துக்கொள்ளுதற்கு அவ ரது சோர்வைப் பார்க்கும் மயக்க முடையவராஞல், அவரிடத்து, உயிர்களி ன் மீது அருள் செய்தல் நமக்கு உறுதி தருவதாகுமென்றறிந்து, அவ்வரு ளில் தவறுது நடக்குந் தெளிவு கூடாதென்பதாம்.

(க-து). பிறர்பொருளை விரும்புவோர் அருளுடைய ராகார்.

5. The study of kindness, and the attainment of love to it, is not with those who, watch for another's forgetfulness, through desire of his property.

கூ. அளவின்க ணின்றுழுக லாற்றூர் களவின்கட்
கன்றிய காத லவர்.

பரி:—(இ - ள்). உயிர் முதலியவற்றை அளத்தலாகிய நேறியினின்று அதற்கேற்ப வொழுகமாட்டார் களவின்கண்ணே மிக்கவேட்கை யை யுடையார் (எ - று).

உயிர்முதலியவற்றை ¶ அளத்தலாவது காட்சி முதலாகச் சொல் லப்பட்ட அளவைகளான் உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வரு

¶ அளத்தல் - பிரத்தியட்ச முதலிய பிரமாணங்களால் உயிர்முதலிய வற்றை வரையறைசெய்துள்ளவாறறிதல். அளவை-பிரமாணம்; (அதனால்) அளக்கப்படு (அறியப்படு) வது பிரமேயம்; அளத்தல் - பிரமை (உள்ளவா றறிதல்).

(1) I. மனத்திற்கு உயிரோடு சையோக முண்டாம்போது யானுள னென்னும் ஞானமுண்டாதலின், ஆண்டு உயிர் அகவிந்திரிய மென்னும் மனவடிவப் பிரத்தியகஞப் பிரமாணத்தால் அறியப்படுகின்றமை காண்க.

பிறவிக்கஞ்சித் தன்னேயடுத்த சுத்தாத்தக்கரணமுடைய சீடனே நோக் கிச் சற்குரு சுருதியுத்தி யனுபவ வாயிலாக நீ உடம்பு முதலியவற்றினும் வேறுய அறிவுருவென்றுகூற, அதனால் அவனுக்கு நான் உடம்பு முதலிய வற்றினும் வேறுய அறிவுரு வென்னும் பிரத்தியட்ச ஞானமுண்டாதலுங் கொள்க. ஈண்டுச் சற்குருவாக்கியம் பிரத்தியட்சப் பிரமாணமும், (அத

ஞல்) உயிர்க்கும் மனத்திற்குமுண்டாய சம்பந்தம் சகாரிகாணமும், நான் அறிவுருவென்னும் ஞானம் பயனுமாம்.

II. ஜீவித்துள்ள வுடல் உயிரோடு கூடியது; பிராணவாயுமுதலியவற்றை யுடைமையான்; யாது உயிரோடு கூடியதன்று, அது பிராணவாயு முதலியவற்றை யுடையதன்று கடம்போல என்னும் அனுமானப் பிரமாணத்தாலும் உயிர் உடம்பினும் வேறென்றறியப் படுகின்றமை காண்க.

III. "ஒருபெரிய மீனுனது இருகரைக்குள் அங்குமிங்குஞ் சஞ்சரிப்பதுபோல,இந்தப் புருஷனும் நனவு கனவு உறக்கமென்னு மவத்தைகளில் மாறிமாறிச் செல்லுகின்றனன்". "எவன் விஞ்ஞான மயனே அவன் பிராணன் முதலிய வற்றினும் வேறானவன்" எனறற் றொடக்கத்துச் சப்த (சுருதி)ப் பிரமாணத்தாலும் உயிர் உடம்பினும் வேறென் றறியப் படுகின்றமை காண்க.

(2) I. தருமபுத்திரன் தருமம் (நல்வினை) உடையான்; சிஷ்டாசார (ஆன்ரோரொழுக்க)முடையவனுயிருத்தலின்;யாவன் தருமமுடையானல்லன் அவன் சிஷ்டாசாரமுடையானல்லன் துரியோதனன்போல.துரியோதனன் அதர்மம்(தீவினை)உடையான்; சிஷ்டாசார மின்றியவனு யிருத்தலின்;யாவன் அதர்ம முடையானல்லன் அவன் சிஷ்டாசார மினறியவனல்லன். தரும புத்திரன்போல என்னு மதமானப் பிரமாணங்களால் நல்வினை தீவினைக ளுண்டென்பது பெறப்படுகின்றமை காண்க.

II. "மூவகை யெனுந்தளை சூழ்ந்து யுற்றிடு, மாவிக ளுலப்பில வாகியுள்ளன,தீவினை நல்வினைத் திறத்தின் வன்மையா, லோவற முறைமுறை யுதித்தி மாயுமே" என்னுஞ் சப்தப் பிரமாணத்தால் (என்றுரைத்த புராணம் கூறுவதால்) உயிர்கள் இருவினையால் நால்வகைக் கதியுட் பிறந்திறந்து சுழல வதியப்படுகின்றமை காண்க.

(3) I. பிறந்திறந்து வருதற் கேதுவாய இருவினைகளைக் கெடுத்தற்குபாய (சாதன)மா யிருப்பன யோகஞானங்களென்பதும், அவற்றுல் உயிர்கள் முத்தியடையு மென்பதும் கீழ்வரும் பிரமாணங்களால் செவ்விதின் விளங்கும். வருமாறு:—

"காழ்த்தவைம் புலனுஞ் செற்றுக் காரணங்க ளடக்கி நாளு, மூழ்த்த மென் சருகு மாந்தி யோகினி லுறங்கு கின்றேரர், ...வாழ்த்துதற் கரிய முத்தி வீட்டின்ப மருவி வாழ்வார்:—கூர்மபுராணம்.

"தரதிசோக மாத்மவித் - ஆத்மஞானி சோகத்தைக் கடக்கின்றன":—சுருதி.

"மட்டு வார்வன மார்ப சருமம்போற், றொட்டு வானைச் சுருட்டுவ ருண்டெனிற், பெட்டு ஞானம் பெறுதுபே ரின்பமே, யொட்டு முத்தி யுறுகரு முண்டோ":—ஞானசங்கிதை.

II. யோகஞான மென்புழி யோகமும், அதனுல் வரும் ஞானமுமென்றுகொள்க. "யோகியர்க்கே ஞான மொழுங்காம்"என்று பெரியார் பணித் திருத்தலு மறிக.

என்ற † நல்வினை தீவினைக்குற்ற வினைவுகளையும், அவற்றுள் அது ‡ காற்கதியுட் பிறந்திறந்து வருதலையும், அதுசெய்யாமல் அவற்றைக் கெடுத்தற் குபாயமாகிய யோக ஞானங்களையும், அவற்றுள் அஃதெய்தும் வீட்டினையும் அளந்து, உள்ளவாறறிதல். இதனை ஆருகதர் தருமத்தியான மென்ப. அதற்கேற்ப ஒழுகுதலாவது அவ் வளக்கப்பட் டனவற்றுள், ¶ தியனவற்றினீங்கி $ நல்லனவற்றின்வழி நிற்றல்.

தெளி.(இ-ன்). களவின்கண்- களவுசெய்தலிலே, கன்றிய- மிகுந்த, காதலவர்- ஆசையையுடையவர், அளவின்கண் - (உயிர்முதலியவற்றை) அளவு செய்தலாகியவழியில், கின்று-நிலைத்து, ஒழுகலாற்றார் - (அவ்வழியில் நி லைத்திருப்பதற்கு ஏற்ப) நடக்கமாட்டார், (எ - று).

உயிர்முதலியவற்றை யளவு செய்தலாவது பிரத்தியட்ச முதலாகச் சொல்லப்பட்ட பிரமாணங்களால் உயிர்ப்பொருளையும், அவ்வுயிர்ப் பொருட்கு அநாதியாய்வருகின்ற நல்வினை தீவினைகளுக்கேற்பவுண்டாம்சுகதுக்க முதலிய வினைவுகளையும், அந்நல்வினை தீவினைகளால் அவ்வுயிர் நால்வகைக் கதிகளில் பிறந்திறந்து வருதலையும், அவ்வாறு பிறந்திறந்து வருவது செய்யாமல் அந் நல்வினை தீவினைகளை யொழித்தற்கு உபாயமான யோக ஞானங்களையும், அந்த யோக ஞானங்களால் அவ்வுயிர் அடையும் முத்தியையும் அளவுசெய்து, உள்ளவாறறிதல். இவ்வாறறிவதைச் சமணர் தருமத்தியான மென்பர். அவ்வா றறிந்ததற்குப் பொருந்த நடத்தலாவது அவ் வளக்கப் பட்டனவற்றுள், தியவைகளினீறும் நீங்கி நல்லவைகளின் வழியில் நிற்றலாம்.

(க - து). களவுசெய்தலில் மிகுந்த ஆசையையுடையவர் உண்மை யறிந்தொழுகார் என்பது.

6. They cannot walk steadfastly, according to rule, who eagerly desire to defraud others.

எ. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

பரி.—(இ-ள்). களவென்று சொல்லப்படுகின்ற இருண்ட அறிவினையுடையராதல் உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினர்கண் இல்லை, (எ - று).

---

† நல்வினை தீவினைக் குற்ற வினைவுகளையும் - நல்வினை தீவினைகளின் குற்றத்தைத் தரும் வினைவுகளையும் (என்பது பொருள்கூறினுமமையும்).

‡ காற்கதி - மக்கள், தேவர், நாகர், விலங்கு என்னும் நால்வகைப் பிறப்பு.

¶ தியனவற்றி னீங்குதல் - பிறப்பிற் கேதுவான வினைகளைச்செய்வதி னின்று மொழிதல்.

$ நல்லன வற்றின்வழி நிற்றல் - பிறப்பைக்கெடுத்தற் கேதுவான யோகஞானங்களின் வழியி லொழுகுதல்.

இருள் - மயக்கம். † காரியத்தைக் காரணமாக வுபசரித்துக் 'களவென்னுங் காரறி வாண்மை' என்றும், காரணத்தைக் ¶ காரியமாக வுபசரித்து 'அளவென்னு மாற்றல்' என்றுங் கூறினர். களவுந்தானும் இருளு மொளியும் போலத் தம்முண் மாறுகலின், ஒருங்கு நில்லா வென்பது இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). களவென்னும்-களவென்று சொல்லப்படுகின்ற, கார் - மயங்கிய, அறிவாண்மை - அறிவினையுடையராதல், அளவென்னும்-(உயிர் முதலியவற்றை) அளத்தலென்னும், ஆற்றல் - பெருமையை, புரிந்தார்கண் - விரும்பினவரிடத்து, இல் - இல்லை, (எ - று).

'களவென்னுங் காறிவாண்மை'எனக் காரியத்தைக் காரணமாக வுபசரித்தும், 'அளவென்னுமாற்றல்' எனக் காரணத்தைக்காரியமாக வுபசரித்தும் கூறினர். களவுந்தானும் இருளும்ஒளியும்போன்றுதம்முள்(ஒன்றற்கொன்று) பகையா யிருப்பதாகலின், (அவை ஒரிடத்து) ஒருமித்துக் கூடிநிற்பனவல்லவென்பது இவை மூன்றுபாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து). களவை விரும்பு மறிவு உண்மையை யறிய விரும்பி னிடத்துண்டாகா தென்பது.

7. That black knowledge which is called fraud, is not in those who desire that greatness which is called rectitude.

அ. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

பரி:—(இ - ள்). அவ்வளத்தலேயே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலேபெற்றற்போல நிலேபெறும்; களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனே, (எ - று).

உயிர் முதலியவற்றை அளந்தறிந்தார்க்குத் தீறவறஞ்சலியாது நிற்கு மென்பது இவ்வுவமையாற் பெற்றாம். களவொடு மாறின்றி நிற்பது இதனுற் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்). களவறிந்தார்-களவையே பழகியறிந்தவரது, நெஞ்சில்-மனத்தில், கரவு - வஞ்சனேயானது, அளவறிந்தார்-அவ்வளத்தலேயே

† 'களவென்னுங் காற்றிவு' என்பதில் காறிவு காரணம் களவு காரியம் என்றும், 'அளவென்னுமாற்றல்' என்பதில் அளவு காரணம் ஆற்றல் காரியமென்று மறிக; என்னே? காரறிவினுல் களவும், அளத்தலால் ஆற்றலுமுண்டாகின்றமையினென்க. களவிற்குக்காரணமான காரறிவைக் 'களவென்னுங்காரறிவு' என்றும், அளலின் காரியமான ஆற்றலே 'அளவென்னுமாற்றல்' என்றுங் கூறியது உபசார வழக்கமாம். ஈண்டுக் கூறிய உபசார வழக்கிரண்டனுள், முன்னது காரியம் காரணமாய வுபசாரவழக்காம்; பின்னது காரணம் காரியமாய வுபசாரவழக்காம்.

¶ காரியமாக்கி என்றும் பாடமுண்டி.

பழகி யறிந்தவரது, நெஞ்சத்து - மனத்தில், அறம்போல - அறம் (நிலை பெற்றுத்) போல, நிற்கும் - நிலைபெறும், (எ - து).

உயிர் முதலியவற்றை அளவைகளால் அளக் தறிந்தவர்களுக்குத் துறவறம் அசையாது நிற்குமென்பது (அளவறிந்தார் நெஞ்சத் தறம் போல என்னும்) இவ் வுவமானத்தினால் பெறப்பட்டது. களவோடு மாறுபாடின்றி நிற்பது வஞ்சனை யென்பதினாலும் சொல்லப்பட்டது.

(க - து). உண்மையறிந்தார் நெஞ்சத்து அறம் நிலைபெற் றிருப்பதுபோலக் களவறிந்தார்நெஞ்சத்து வஞ்சனை நிலைபெறும்.

8. Deceit dwells in the mind of those who are conversant with fraud, even as virtue in the minds of those who are conversant with rectitude.

கூ. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ற தவர்.

பரி:—(இ - ள்). அவ்வளவல்லாத தீய நினைவுகளை † நினைத்து அப்பொழுதே கெடுவர், களவல்லாத பிறவற்றை யறியாதவர். (எ-று).

தீய நினைவுகளாவன-பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ் சனையால் அது கொள்ளுமாறும், கொண்டவதனால் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின. ¶ நினைத்தலுஞ் செய்தலோ டொக்குமாகலின் 'செய்து' என்றும், அஃது உள்ள வறங்களைப் போக்கிக் கரந்த சொற் செயல்களைப் புகுவித்து அப்பொழுதே கெடுக்குமாகலின் 'ஆங்கே வீவர்' என்றுங்கூறினர். மற்றையவாவன—துறந்தார்க்கு உணவாகவோதப்பட்ட காய் கனி இழங்கு சருகு முதலாயினவும், இல் வாழ்வார் செய்யுந் தானங் களுமாம். தேற்றமை ‡ அவற்றையே நுகர்ந்து அவ்வளவால் நிறைந் திருத்தலை யறியாமை. இதனாற் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). களவல்ல - களவுசெய்த லல்லாத, மற்றைய - பிறவற்றை, தேற்றாதவர் - அறியாதவர்(களவுசெய்த லொன்றையே அறிந் தவர்), அளவல்ல - அவ்வளவல்லாத தீய நினைவுகளை, செய்து-நினைத்து, ஆங்கே-அப்போதே, வீவர் - கெடுவார், (எ - று).

தீய நினைவுகளாவன - பொருளுடையவரை வஞ்சிக்கும் விதமும், அவ்வஞ்சனையால் அப்பொருளைக் கொள்ளும் விதமும், கொண்ட அப்

† நினைத்தபொழுதே என்றும் பாடமுண்டு.

¶ "நினைத்தலுஞ் செய்தலோ டொக்குமாகலின், 'செயின்'என்றார்". என்பது "செகெவல்யா னென்ப தறிக" என்னுங் குறளின் விசேடவுரை.

‡ அவற்றையே - காய் கனி இழங்கு சருகு முதலாயினவற்றையே.

பொருளால் தாம் சப்தாதிவிஷயங்களை யனுபவிக்கும் விதமும் முதலா யினவாம். (பிறர்பொருளை யபகரிக்க) கினைத்தலும் செய்தற்குச் சமானமா மாகலின் 'செய்து' என்றும், அங்கினைப்பு உள்ள அறங்களைப்போக்கி மறைப் பான சொல்லையும் செயலையும் புருஷார்தஞ்செய்து அப்போதே கெடுக்குமாத லால் 'ஆங்கே வீவர்' என்றும் சொல்லினர். மற்றையவாவன-தூறுக் தார்க்கு உணவாகச் சொல்லப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலான வையும், இல்லறத்தில் வாழ்வார் செய்யும் தானங்களுமாம். தேற்றுமை யாவது அவற்றையே உண்டி அவ்வண்டவளவால் போதுமென் றிருத்தலே யறியாமையாம். இதனால் கனவுசெய்வார் கெடும்வகை சொல்லப்பட்டது.

(க - து). களவொன்றையே யறிந்தவர் விரைந்து கெடுவர்.

9. Those, who are acquainted with nothing but fraud, will perish in the very commission of transgression.



கo. கள்வார்க்குத் தள்ளு முயிர்கிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

பரி.—(இ-ள்). * களவினைப் பயிலுவார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்பும் தவறும்; அது செய்யாதார்க்கு நெடுந் தேவராதற்கு புத்தே ளுலகுந் தவறாது, (எ-று).

உயிர் நிற்றற்கிடனாகலின் 'உயிர்கிலை' எனப்பட்டது. சிறப்பும்மை சன் † இரண்டும் பிரகாரத்தாற்றொக்கன. இம்மையினும் அரசனுல் ஒறுக் கப்படுதலின் உயிர்கிலையுங் தருமம் என்றும், மறுமையினுந் தேவராதல் கூடுதலின் புத்தே ளுலகுந் தள்ளாது என்றுங் கூறினர். ‡ "மற்றது, தள் ளினுந் தள்ளாமை நீர்த்து" ¶ என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதல றிக. இதற்குப் பிறவாறுரைப்பாருமுளர். இதனால் இருவர்பயனும் ஒரு ங்கு கூறப்பட்டது.

நேளி.—(இ - ள்). கள்வார்க்கு - களவினைப் பழகுவார்க்கு, உயிர் கிலை - (தம்மின்வேறல்லாத) உடம்பும், தள்ளும் - தவறும், கள்ளார்க்கு -

* களவினைப்பயிலும் முறைமைகளுக்கு யோகருானங்க ளில்லாமையின், உயிர் உடலுக்கு வேறென்று முணர்வின்றென் றுணர்த்தவர் 'களவினை ப்பயில் வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்பும்' என்று கூறினர்.

† இவ்விரண்டனுள் முன்னது இழிவுசிறப்பு; பின்னது உயர்வு சிறப்பு.

‡ திருக்குறள் ஊக்கமுடைமை, 6. இதன்பொருள் அவ்வுயர்ச்சியா னது (ஊழ்வகையினால்) சவறினும் (உயர்ச்சியையடைய வேண்டுமென் னுமெண்ணம்) தவமுமைத் தன்மையுடையது என்பது.


¶ என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதலறிக—என்ற விடத்தும் தள்ளுதலென்பது தவறுதலென்னு மிப்பொருளுடைய தாதலையறிக.

அக்களவினைச் செய்யாதவர்க்கு, புத்தேளுலகு - (கெடுத்தூரத்ததாகிய) தேவருலகமும், தன்னாது - தவறுதி, (எ-று).

உயிர் தங்குவதற்கிடமா யிருத்தலால் உடம்பு 'உயிர்நிலை' என்று சொல்லப்பட்டது. உயிர்நிலையும் புத்தேளுலகும் என்னும் சிறப்பும்மை யிரண்டும் செய்யுள் விகாரத்தாற் றொக்கு நின்றன. (கள்வார் மறுமையிலே யமனுல் தண்டிக்கப் படுதலன்றி) இம்மையிலும் அரசனுல் தண்டிக்கப்படுதலால் உயிர்நிலையும் தன்னும் என்றும், (களவார் இம்மையிலே புகழும் புண்ணியமு முடையவ ராதலன்றி) மறுமையிலும் தேவராதல் கூடுமாதலால் புத்தேளுலகும் தன்னாது என்றும் கூறினர். இதனுல் கள்வார் (திருடுவார்) கள்ளார் (திருடாதவர்) என்னும் இருவர் பயனும் சேர்த்துச் சொல்லப்பட்டது.

(க-து). களவு செய்பவ நிருமையிழ்வர்; களவு செய்யாதவ நிருமையிலு மின்புறுவர் என்பது.

10. Even their body will fail the fraudulent; but even the world of the gods will not fail those who are free from fraud.



அறுவது அதிகாரம்

வாய்மை—On Truthfulness.

பரி.—அஃதாவது மெய்யினது தன்மை. † பெரும்பான்மையும் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கங் கள்ளாமைகளின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது மெய்யினது தன்மையாம். பெருபபான்மையும் காமமும் பொருளும் பற்றியுண்டாவதாகிய பொய்ம்மையை விலக்குதலால், இது (வாய்மையென்னு மதிகாரம்) கூடா வொழுக்கம் கள்ளாமைகளின் பின் வைக்கப்பட்டது.

க. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

பரி.—(இ-ள்). மெய்ம்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின், அது பிறிதோருயிர்க்குந் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதலே, (எ-று).

† கூடாவொழுக்கம் காமத்தாலும் களவு பொருளாசையாலு முண்டாம்; பொய்பேசுதல் பெரும்பான்மையாகக் காமத்தாலன்றி பொருளாசையாலாவது உண்டாமென்க.


தீமை யாதொன்றும் இலாதவென இயையும் † எனப்பவெதென்பது † "ஊரெனப்படுவதுறையூர்" என்றுற்போல நின்றது. இதனுன் நிகழ்ந்தது கூறலென்பது நீக்கப்பட்டது. அதனானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையாமென்பது கருத்து.

தெளி.—(இ-ன்). வாய்மையெனப்படுவது - மெய்ம்மையென்று பிறப்பித்துச் சொல்லப்படுவது, யாதெனின் - யாதென்று வினவினுல், (*அது பிறிதோ ருயிர்க்கு*), தீமை-தீங்கு, யாதொன்றும்-சிறிதாயினும், இலாத - தாகத சொற்களே, சொல்-சொல்லுதலாம், (எ-று)

தீமை யாதொன்று மிலாத என்றன்வயமாம். எனப் பலவுதென்பது செயப்பாட்டு வினைப்பெயர். இதனுல் நடந்ததைச் சொல்லுதல் என்பது நீக்கப்பட்டது. அந்நடந்ததைச் சொல்லுதலும், தீங்கைத்தாரா திருக்குமாயின் மெய்ம்மையாம்; தீங்கைத் தருமாயின் பொய்ம்மையாமென்பது கருத்து.

(க-து). *பிறிதோருயிர்க் கொருசிறிதுந் துன்பத்தை யுண்டுபண்ணுதசொல்லே மெய்ம்மைச்சொல்லாம் என்பது.*

1. Is it asked what is truth? It is the speaking of such words as are without the least degree of evil to others.



2. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

பரி.—(இ-ள்). பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின், பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் பாலவாம்.

*குற்றந்தீர்ந்த நன்மை-அறம்; அதனேப்பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோருயிர் * அச்சொற்களின் பொய்ம்மையானே † அதனினீங்கி யின்புறுதல். நிகழாதது கூறலும், நன்மை பயவாதாயின்*

---

* *தீமையென்பதனே யாதொன்றும் என்பதற்கு முன்னர்க்கூட்டித் தீமையாதொன்றும் இலாத என்றன்வயிக்கப்பட்டது.*

† *மூன்றும் வேற்றுமைக் கருத்தாவின் செயப்படு பொருளான வாய்மையெனப்படுவது என்பது ஊரெனப்படுவதுறையூர் என்றுற்போலப படுசொல்லேனைத்து வந்தது.*

‡ *இதன்பொருள் ஊரென்று சொல்லப்படுவது உறையூர் என்பது.*

* *அச்சொற்களின்—(ஒன்றை மற்றொன்றாக மறைத்துச்சொல்லும்) பொய்ம்மைச் சொற்களது.*

† *அதனினீங்கி - கேட்டினின்றுவது மரணத்தினின்றுவது நீங்கி.*

பொய்ம்மையாம்; ‡ பயப்பின் மெய்ம்மையாமென்பது கருத்து. இவை யிரண்டு பாட்டானுந் தீங்குபயவாதசிகழ்ந்தது கூறலும் நன்மைபயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மையெனவும், நன்மைபயவாத நிகழாதது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்ததுகூறலும் பொய்ம்மையெனவும், அவற்றது இலக்கணங்கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). பொய்ம்மையும் - பொய்ம்மைச்சொற்களும், புரை தீர்ந்தகுற்றத்தினின்று நீங்கிய, நன்மைநன்மையை, பயக்குமெனின் - (பிறர்க்குத்) தருமாயின், வாய்மையிடத்த - மெய்ம்மைச்சொற்களினிடத் தனவாம், (எ-று).

குற்றத்தினின்று நீங்கிய நன்மை - அறம்; அவ்வறத்தினைத்தருதலா வது கேட்டையாவது மரணத்தையாவது அடைய நின்றதோருயிர் அச் சொற்களின் பொய்ம்மையினுலே அதனின் நீங்கி இன்பமடைதல். கடவாததைச் சொல்லுதலும் நன்மையைத்தாராதாயின் பொய்ம்மையாம்; நன்மையைத் தருமாயின் மெய்ம்மையாமென்பது கருத்து. இலையிரண்டு பாட்டாலும் தீமையைத்தாராத நடந்ததைச் சொல்லுதலும் நன்மை யைத்தரும் நடவாததைச் சொல்லுதலும் மெய்ம்மையாம் எனவும், நன் மையைத் தாராத நடவாததைச் சொல்லுதலும் தீமையைத்தரும் நடந்த தைச் சொல்லுதலும் பொய்ம்மையாம எனவும், அவற்றது (மெய், பொய்ச் சொற்களது) இலக்கணம் சொல்லப்பட்டது. குற்றம் - பழிபாவம்

(க-து). பொய்மேசுதலும் நன்மையைத் தருமாயின், அதுவும் மெய்ம்மைச்சொல்லாம் என்பது.

2. Even falsehood has the nature of truth, if it confer a benefit that is free from fault.

கூ. * தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

‡ நடவாததைக் கூறுதலும் நன்மையைத் தருமாயின் மெய்ம்மையா மென்பது "உம்மையின் மறுமை தன்னி லுறுபய னிரண்டும் பார்க் கின், இம்மையில் வினங்கும் யார்க்கு மவரவ ரியற்கை யாலே, மெய்ம்மை யே யொருவர்க் குற்ற விபத்தினை மீட்கு மாயிற், பொய்ம்மையு மெய்மமை போலப் புண்ணியம் பயக்கு மாதோ" என்று பாரதங்கூறுவதனுலுமறிதற் பாற்றும்." பொய்யுரை புகலிற் றீமையா மென்னப் புகன்றனர் புலமைசான் குணர்ந்தோர், ஐயறண் மருங்குற் செயயவாய் மகளிர் புலவியி லுதணராவி, உய்யுமென் புழியி லாவினை யளிக்கு மிடத்தினி லோடரி நெடுங்கண், தையலார் மணத்திற் பொய்ம்மையு மெய்ம்மை தன்னினும் விழுமி தா மன்றே" என்று காசிகாண்டங் கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

* "நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்" என்பது உலகநீதி.

பரி.—(இ-ன்). ஒருவன் தன்னெஞ்சறிவ தொன்றனைப் பிறர் அறி நீதிலரென்று † பொய்யாதொழிக, ‡ பொய்த்தானுயினின், ¶ அதனை அறி நீத தன்னெஞ்சே அப்பாவத்தினிற்குக் காரியாய் நின்று, தன்னை அதன் பய னிய துன்பத்தையெய்துவிக்கும், (எ-று).

நெஞ்சு § காரியாதல் * "கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார், தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு, நெஞ்சறிந்த கொடி யவை மறைப்பவு மறையாவா, நெஞ்சத்திற் குறுகிய காரியில்லி யாகலின்" என்பதனுனு மறிக. பொய் மறையாமையின், அது கூறலாகாதென்பது இதனுற் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). (ஒருவன்) தன்னெஞ்சு-தானது மனமானது, அறி வது-அறிவதாகிய வொன்றை, பொய்யற்க - (பிறர் அறிந்திலரென்று) பொ ய்யாதொழியக்கடவன், பொய்த்தபின் - பொய்த்தானுயின், தன்னெஞ்சே- (அப்பொய்த்தலே அறிந்த) தனது மனமே, (அப்பாவத்தக்குச் சாட்சியாய் நின்று) தன்னை -, சுடும், சுடாநிற்கும், (அப்பாவத்தின் பயனுகிய துன்பத் தையடைவிக்கும்), (எ-று).

பொய் மறையாதாதலால், அப்பொய்யினைச் சொல்லலாகாதென்பது இதனுல் சொல்லப்பட்டது.

(க-து). ஒருவன் தன் மனமறியப் பொய்மேபினுல், அம்ம னமே அவனை வருத்தும் என்பது.

---

† பொய்யா தொழிக - மறைத்துப்பேசா தொழியக்கடவன்.


‡ பொய்த்தானுயின் - மறைத்துப் பேசுவானுனுல்.

¶ அதனை - அம்மறைத்துப் பேசுதலை.

§ நெஞ்சு காரியாதல் - ஒவ்வொருவருக்குந் தத்தம் மனமே சாட்சியா தல்.

* கலித்தொகை, நெய்தற்கலி, அ. இதன்பொருள் - அறியாதவர்கள் (தம்மனம் இது செயலாகாதென்று) மீளாதே (வேறு) விலக்குவாருமின்றி உலகத்திற் கண்டவர்களு மில்லையென்று (கருதித்) தாஞ்செய்யுந்தீவினைக ளுன் தாம் நெஞ்சறியவே செய்த கொடிய தீவினைகளைப் (பிறபு பிறரறி யாமல்) மறைத்தார்களாயினும் (அவை) மறையமாட்டாவாம்; நெஞ்சைக் காட்டிலும் அணுகியசாட்சி (வேறு) இல்லை யாகையால் என்பது. உண ராதார் தங்காது தகைவின்றி யுலகத்துள் கண்டவரில்லெனத் தாஞ்செய் யும் வினைகளுள் நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவும் மறையாவாம் நெ ஞ்சத்திற் குறுகிய காரியில்லையாகலின் என்பதுஅவ்வயமாம்,இங்ஙன்மறை ப்பவு மறையாவா மென்பதற்கு நச்சினர்க்கினியர் 'மறைப்பினு மறிபவர்' என்று பாடங்கொண்டு 'பிறரறியாமல் மறைத்தார்களாயினும் தாஞ்செய்த மையை அறிந்திருக்கின்றவர்கள்' என்றுரை கூறியிருக்கின்றனர். 'தன்னை த்தா னெஞ்சங் காரியாகத் தாண்டலங்கின், பின்னைத்தா னெய்தாப் பயனில் லே' என்று அறநெறிச்சாரம் கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

3. Let not a man knowingly tell a lie; for after he has told the lie, his mind will burn him with the memory of his guilt.



ச. † உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

பரி.—(இ - ள்). ஒருவன் தன்னுள்ளத்திற்கேற்பப் பொய்கூறாது ஒழுகுவனாயின், அவன் உயர்ந்தோருள்ளத்தின்க ணெல்லாம் உளனும்,()


‡ உள்ளத்தாலென்பது வேற்றுமை மயக்கம். பொய்கூறு தொழுகு தலாவது மெய் கூறியொழுகுதல். ‡ அவனது அறத்தின தருமைநோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பரென்பதாம். இதனால் 6 இம்மைப்பயன் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). (ஒருவன்) உள்ளத்தால்-(தன்) மனத்திற்கு(ஏற்ப), பொய்யாது-பொய்பேசாமல், ஒழுகின் - நடப்பானாயின், (அவன்), உலகத்தார் - உயர்ந்தோரது, உள்ளத்துள்ளெல்லாம் - மனங்களிலெல்லாம், உளன்-இருப்பவனவன், (ஓ-று).

உள்ளத்தாலென்பது உள்ளத்திற்கு என்னும் பொருளில் வந்தமையின் வேற்றுமை மயக்கமாம். பொய்பேசாமல் நடத்தலாவது மெய்பேசி நடத்தல். மெய்பேசி நடக்கும் அவனது அறச்செயலது அருமையை நோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பாரென்பதாம். இதனால் பொய்பேசாதொழுபவனுக்கு வரும் ¶ இம்மைப்பயன் சொல்லப்பட்டது.

(க-து). தன் மனமறியப் பொய்பேசா தொழுகுகின்றவனை யறிவுடையாரியாவரும் போற்றுவர் என்பது.

4. He, who in his conduct preserves a mind free from deceit will dwell in the minds of all men.



ஙு. மனத்தோடு வாய்மை மொழியிற் றவத்தோடு
தானஞ்செய் வாரிற் றலை.

† 'உள்ளத்தாற் பொய்யா தொழுகின்' என்றமையின், துறவறத்தார்க்கு வாய்மை பொய்சொல்லக் கருதாமையென்பது பெறப்பட்டவாறறிக.

‡ உள்ளத்தால் என்பதன் மூன்றனுருபு தனக்குரிய பொருளை விட்டு நான்கனுருபிற் குரிய பொருளில் வந்தமையின், வேற்றுமை மயக்கமாயிற்று.

‡ அவன் றவத்தின தருமை நோக்கி என்றும் பாடமுண்டு.

¶ இம்மைப்பயன் - இம்மையில் (இப்பிறப்பில்) அடையும் பயன், அஃதிங்கு உலகத்தா ருள்ளத்து ளெல்லா முளனுதல்.

பரி.—(இ-ள்). ஒருவன் தன்மனத்தோடு பொருந்த வாய்மையைச் சொல்வானெயின், அவன் † தவமுந் தானமும் ஒருங்கு செய்வாரினுஞ் சிறப்புடையன், (எ-று).

மனத்தொடு பொருந்துதல்-மனத்திற் கேறுதல். புறமாகிய மெய்யாற் செய்யு மவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யு மது ‡ பயனுடைத் தென்பதாம்.

தெளி.—(இ-ன்). (ஒருவன்) மனத்தொடு-(தன்) மனத்தோடு, (பொருந்த), வாய்மை-உண்மையை, மொழியின்-சொல்லுவானெயின், (அவன்), தவத்தொடு-தவமும், தானம்-தானமும், செய்வாரின-(ஒருமித்துச்) செய்வாரினும், தலை-சிறப்புடையனெனவான், (எ-று).

மனத்தோடு பொருந்துதல் - மனத்திற் கொத்திருத்தல். (துறவறத் தாற்கு) புறமாகியவுடம்பாற் செய்யும் அத்தவத்தினுந் தானத்தினும் அகமாகிய மனம் வாக்குகளாற் செய்யும் அது (மெய்பேசுதல்) பயனுடைய தென்பதாம். புறம் - வெளி. அசம் - உள்.

(க-து). மனமும் வாக்கும் ஒத்திருக்க மெய்பேசுகின்றவன் தவத்தையுந் தானத்தையுமொருமித்துச் செய்கின்றவர்களினும் சிறப்புடையவனெவான் என்பது.

5. He, who speaks truth with all his heart, is superior to those who make gifts and practise austerities.



கூ. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

பரி.—(இ-ள்). ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையை ஒத்த புகழ்க்காரணமில்லை, மறுமைக்கு மெய் வருந்தாமல் அவனுக்கு எல்லா அறங்களையுந் தானே கொடுக்கும், (எ-று).

---

† தவமுந்தொடு தானமும் என்றும் பாடமுண்டு.

தவமாவது மனம் இந்திரியங்களின் வழியே செல்லாது நிற்கும் பொருட்டு விரதங்களால் உணவைச் சுருக்குதல் முதலாயினவாம். 'மனம் பொறிகட் கொருமையே தவமாம்' என்பது வேதாந்த சூளாமணி. இது துறவறத்திற்குச் சிறப்பாக வுரியதாம்.

தானமாவது தருமவழியால் வந்தபொருளை யோக்கியர்களுக்குச் சந்தோஷத்தோடு கொடுத்தல். இஃதில்லறத் திற்குச் சிறப்பாகவுரியதாம்.

‡ மனத்தொடு வாய்மை, மொழிபவன் துறவறத்திற் சிறந்து விளங்குந் தவத்தின் பயனிலும் இல்லறத்திற் சிறந்துவிளங்குந் தானத்தின் பயனிலும் மேலான பயனையடைவா னென்பதாம்.

† புகழ்ஈண்டு ஆருபெயர். இல்லறத்திற்குப் பொருள்ஈட்டல் முதலியவற்றிற்கும், துறவறத்திற்கு உண்ணுமை முதலியவற்றிற்கும் வருத்தல் வேண்டுமென்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல் ‡ அவ்விருவகைப் பயனையுந் தானே தருமென்பார் "எய்யாமை யெல்லா வறமுந் தரும்" என்றார்.

தெளி:—(இ - ன்). பொய்யாமையன்ன - (ஒருவனுக்கு) பொய்பேசாமையை யொத்த, புகழ் - புகழ்க்காரணம், இல்லை - (இம்மைக்கு) இன்றும், (அப்பொய்பேசாமை) (அவனுக்கு), எய்யாமை-(உடம்பு)வருந்தாமல், எல்லாவறமும் - எல்லாவறங்களையும், தரும - (மறுமைக்குத்தானே) கொடுக்கும், (எ - து).

புகழென்பதிற்கு அதன் காரணத்தையுணர்த்ததலின், ஆருபெயராம். இல்லறத்திற்குப் பொருள் சம்பாதித்தல் முதலியவற்றிலும் துறவறத்திற்கு உண்டி சுருக்குதல் முதலிய வற்றிலும்உடம்பு வருந்துதல் வேண்டுமெல்லா, அவ்வருத்தங்கள் அடையாமல் அவ்விருவகை அறங்களும் கொடுக்கும் பயன்களையும் பொய்யாமைதானே கொடுக்குமென்பார் 'எய்யாமை யெல்லாவறமுந் தரும்' என்றார்.

(க - து). பொய்பேசாமையானது எளிதாக இம்மைக்குரிய புகழையும் மறுமைக்குரிய அறத்தையும் தரும் என்பது.

6. There is no praise like the praise of never uttering a falsehood; without giving any suffering, it will lead to every virtue.

எ. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

பரி.—(இ - ன்). ஒருவன் பொய்யாமையையே பொய்யாமையையே செய்யவல்லனாயின், அவன் பிறவறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று, (எ - று).

அடுக்கிரண்டனுள் முதலது இடைவிடாமை மேற்று; எனையது * மேற்று. ‡ பலவறங்களையும் மேற்கொண்டு செய்தற் கருமை

புகழ் என்னும் காரியப்பெயர் தன் காரணமாகிய பொய் பேசாமை யுணர்த்ததலின் காரியவாகு பெயராம்.

‡ அவ்விருவகைப் பயனையும் தானே தரும்-இல்லறம் துறவறமென்னும் இருவகையறங்கள் கொடுக்கும் பயனையும் மெய்பேசுதலே கொடுக்கும்.

* மேற்று - மேலது.

‡ பலவறங்கள் - சாந்திராயணம், திருச்சிர முதலிய விரதங்கள்.

யால் ‡ நிலதவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின் பயனையுந் தானே தரவற்றாய இதனையே மேற்கொண்டு தவறாமற் செய்தல் நன்றென்பார் 'செய்யாமை செய்யாமை நன்று' என்றார். § இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற் செய்யிற் பிறவறஞ்செய்கை நன்றெனப் பொழிப்பாக்கி, பொய்கூறிற் பிறவறஞ்செய்கை நன்றாகாதென்பது அதனுற்போந்த பொருளாக்கி உரைப்பாருமுளர். பிறவறங்களெல்லாந் தரும் பயனைத் ¶ தானே தரும் ஆற்றலுடைத்தென மறுமைப்பயனது மிகுதி இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்). பொய்யாமை பொய்யாமை-(ஒருவன்) பொய்பேசாமையையே பொய்பேசாமையையே, ஆற்றின் - செய்ய வல்லவனுயின், (அவன்), அறம்பிற - பிறவறங்களை, செய்யாமை செய்யாமை - செய்யாமையே செய்யாமையே, நன்று - நல்லது, (எ-று).

பொய்யாமை பொய்யாமை, செய்யாமை செய்யாமை யென்னும் அடுக்கிரண்டனுள், பொய்யாமை பொய்யாமை என்னும் முதலாவதடுக்கு இடைவிடாமைப் பொருளது; செய்யாமை செய்யாமை என்னும் மற்றவருக்குத் துணிவுப்பொருளது. பல வறங்களையும் மேற்கொண்டு செய்தற்கு அருமை யாகலால் நிலதவறினுல் குற்றப்படுதலின், அவ்வெல்லா வறங்களின் பயன்களையும் தானே தரவல்லதாகிய இப்பொய் பேசாமையொன்றையே மேற்கொண்டு தவறாமற் செய்தல் நல்லதென்பார் 'செய்யாமை செய்யாமை நன்று' என்றார். பிறவறங்களெல்லாம் மறுமையில் தரும் பயனைத் தானே கொடுக்கும் வல்லமை யுடையதென மறுமைப் பயனது மிகுதி இவை மூன்று பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து). பொய் பேசாதவன் வேறு அறங்களைச் செய்தல் வேண்டுவதில்லை ; அஃதவனுக்குப் பிறவறங்களின் பயனை யெல்லாந் தரும் என்பது.

‡ நிலதவறிற் குற்றப் படுதலின் - சாந்திராயண முதலிய விரதங்களை யனுட்டிக்கும்போது, அவற்றிற்கு விதித்துள்ள விதிகளில் சில கால தேசங்களித்தங்களால் தவறிப்போனுல் அவ்விரதங்கள் முடிவின்மை யடைதலின்.

§ இக்குறளை இவ்வாறல்லாமல், பொய்யாமை பொய்யாமை யாற்றின்-பொய்யாமையை (பொய் பேசாமையை) பொய்யாமல் (தப்பாது) செய்யின் (அனுஷ்டித்தால்), அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று-பிறவறஞ் செய்கை (வேறு தர்மங்களைச் செய்தல்) நன்று என்று பொழிப்பாக்கி (பொழிப்புரையாக்கி), பொய் கூறிற் பிறவறஞ் செய்கை நன்றாகாதென்பது அதனுற் போந்த (கிடைத்த) பொருளாக்கி யுரைப்பாரு முளர். ஈண்டுச் செய்யாமை செய்யாமை யென்னுமிரண்டெதிர்மறைத் தொழிற் பெயரும் செய்தலென்னும் ஒரு பொருளனவாம்.

¶ தானே - பொய் பேசாமையே.

7. If a man has the power to abstain from falsehood, though he practise no other virtue, it will be well with him.

அ. * புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

பரி:—(இ - ள்). ஒருவனுக்கு உடம்பு தூய்தாந்தன்மை நீராலே யுண்டாம்; அதுபோல மனந்தூய்தாந்தன்மை வாய்மையாலுண்டாம், ()

† காணப்படுவது உள்ளதாகலின், உண்டாமென் றுரைக்கப்பட்டது. உடம்பு தூய்தாதல் - வாலாமை நீங்குதல். மனந்தூய்தாதல் - மெய்யுணர் தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணமில்லாதாற்போல, அகந்தூய்மை க்கு வாய்மையல்லது காரணமில்லை யென்றவாறுமாயிற்று. இதனாலே துறவி களுக்கு ‡ இரண்டு தூய்மையும் வேண்டுமென்பதூஉம் பெற்றாம்.

தெளி:—(இ - ள்). புறம் (ஒருவனுக்கு) - உடம்பு, தூய்மை - பரி சுத்தமாந்தன்மை- நீரான் - நீரினாலே. அமையும் - உண்டாகும், (அதி போல்), அகம் - மனம், தூய்மை - பரிசுத்தமாந்தன்மை, வாய்மையான் - மெய்பேசுதலால், காணப்படும் - உண்டாகும், (எ - று).

காணப்படும் பதார்த்தம் உள்ளதாமாகலின், காணப்படு மென்பதற்கு உண்டாமென்று பொருள் கூறப்பட்டது. உடம்பு பரிசுத்தமாதல்- அழுக்கு நீங்குதல். மனம் பரிசுத்தமாதல்-மெய்யுணர்தல். உடம்பு பரிசுத்தமாதற்கு நீரையன்றிவேறு காரணம் இல்லாமையால் ஒருதலைப்பான்மை, மனம் பரிசுத்தமாத லுக்கு மெய்பேசுதலன்றி வேறு காரணமில்லை என்றவாறுமாயிற்று. இதனாலே துறவிகளுக்கு இரண்டு தூய்மையும் வேண்டுமென்பதும் பெறப்பட்டது.

(க - து). உடற் சுத்தி நீராலாவது மென்றும் மனச்சுத்தி மெய்பேசுதலாலாம் என்பது.

---

* அரிச்சந்திரபுராணம் "சேய்மை யண்மையி லுயிர்க்கொரு தினை யெனச் சிறந்த, வாயமை யாலகந் தூய்மையா மற்றிலேப் புறத்தைத், தூய்மை செய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ" என்று கூறுகின்றது.

† பாவபதார்த்தம் அபாவபதார்த்தமென்னு மிரண்டனுள், ஒவ்வென் றும் அதற்குரிய பிரமாணங்களால் ஈண்டிக் கடமுண்டி, ஆண்டிப் பட முண்டு; ஈண்டிக்கடாபாவமுண்டி, ஆண்டிப் படாபாவ முண்டென் றறி யப்படுதின்மைபற்றி, 'காண (அறிய)ப் படுவது உள்ளதாகலின், (காணப் படுமென்பதற்கு) உண்டாமென்றுரைக்கப்பட்டது' என்று கூறப்பட்டது. அவ்விருவகைப் பதார்த்தங்களுள், யாதேனுமொன்று உள்ளதாகாவிடத்து அது காணப்படுவதாகாதென்பது ஈண்டெனர்தற் பாற்றும். "உலகினுள், இல் லதற் கில்லே பெயர்" என்று பழமொழி கூறுவது மறிக.

‡ இரண்டு தூய்மையும் - புறந்தூய்மையும் அகந்தூய்மையும்.

8. Purity of body is produced by water; purity of mind comes from truthfulness.

கூ. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

பரி.—(இ - ள்). புறத்திருள்கடியும் உலகத்தார் விளக்குகள் எல்லாம் விளக்காகா; துறவான் அமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே (எ - று).

உலகத்தார் விளக்காவன:—ஞாயிறு, திங்கள், நியென்பன. இவற்றிற்குப் போகாத இருள போகலின் 'பொய்யா விளக்கே விளக்கு' என்றார். அவ்விருளாவது அறியாமை. † பொய்யாத விளக்கென்பது குறைந்து நின்றது; பொய்கூறுமையாகிய விளகென்றவாற ‡ இனி இதற்குக் கல்வி முதலிய வற்றுன வரும் விளகமெல்லாம் விளக்கமல்ல; அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும விளக்கமே யென் றுரைப்பாரு மூளர்.

தெளி:—(இ - ன்). சான்றோர்க்கு - (திறவினுல்) நிறைந்தோர்க்கு, எல்லாவிளக்கும் - (புறத்திருளே நீக்குகின்ற உலகத்தாரது) விளக்குகளெல்லாம், விளக்கல்ல - விளக்குகளாவன வலல, பொய்யாவிளக்கே - (மனத்திருளே நீக்குகின்ற) பொய்யாமையாகிய விளக்கே, விளக்கு - விளக்காவதாம். (எ - று).

உலகத்தாரது விளக்குகளாவன:—சூரியன, சந்திரன, அக்கினி யென்பனவாம். இவ்விளக்குகளுக்கு நீங்காத அகத்திருள் (பொய்பேசாமையால்) நீங்குதலின 'பொய்யா விளக்கே விளக்கு' என்றார். அவ்வகத

† பொய்யாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் செய்யுள் விகாரத்தால் ஈறு குறைந்து பொய்யா என (ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச சமாய்) நின்றது

பெயரெசசத்தைப் பண்புத் தொகையாகக கோடல் வடநூல் வழக்கு அவ்வழக்குப் பற்றிப் பொய்யா விளக்கென்பது 'பொய் கூறுமையாகிய விளக்கு' எனவிரிக்கப்பட்டது.

"சிலபெய ரெசசமுஞ் சிலவினைத் தொகையும், இருவகை யுணமையும் வண்ணச் சினைசொலும், பண்புத தொகையெனப் பகரும் வடநூல்" என்பது இலக்கணக்கொத்து.

‡ இனி இக்குறளுக்கு, எல்லா விளக்கும் - கல்வியறிவு ஒழுக்கங்களால் வரும் விளக்க மெல்லாம், விளக்கல்ல - விளக்கம் அல்ல; சான்றோர்க்கு - அமைந்தார்க்கு, விளக்கு-விளக்கமாவது, பொய்யா விளக்கே - பொய்பேசாமையா லுண்டாகும் விளக்கமே யென்றாரை கூறுவாரு மூண்டென்பது.

திருவாலவாய 0 (தன்னே) அறியாமை. பொய்யாத என்பது ஈறு குறைத்து 'பொய்யா' என நின்றது. புறம் - வெளி.

(க - து). சான்றோர்க்கு விளக்குப் பொய்பேசாமையேயாம்.

9. All lamps are not lamps; the lamp of truth is the lamp of the wise.

கo யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

பரி:—(@ - ள்). யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள் யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்களில்லை (எ - று).

¶ மெய்யுணர்த்துவனவற்றை 'மெய்' என்றார். அவையாவன:—தங்கண் மயக்கம் இன்மையின் பொருள்களே யுள்ளவா றுணர வல்லராய்க் காம வெகுளிக ளின்மையின் $ அவற்றை யுணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய † இறைவர் அருளான் உலகத்தார் உறுதி யெய்துதற்பொருட்டுக் கூறிய ‡ ஆகமங்கள். அவை யெல்லாவற்றினும் ¶ இஃதொப்ப முடித்தென்பதாம். இவை மூன்றபாட்டானும் இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). யாம் - நாம், மெய்யா - மெய்ந்நூல்களாக, கண்டவற்றுள் - அறிந்த நூல்களுள், எனைத்தொன்றும்-யாதொரு தன்மையாலும், வாய்மையின் - மெய்பேசுதலினும், நல்ல-சிறந்தனவாகச் சொல்லப்பட்ட, பிற-பிறவறங்கள், இல்லை - (எ-று).

---

0 "தன்னே யறியத் தனக்கொரு கேடில்லை, தன்னே யறியாமற் றானே கெடுகின்றான்" என்பது திருமந்திரம்.

¶ மெய்யையுணர்த்துவதற்குக் காரணமாய் நின்ற நூல்களே மெய்யென்றது காரியவாகு பெயராம்.

$ நீத்தார்பெருமை யவதாரிகையில் "அவ்வறமுதற் பொருள்களே யுலகிற்கு உள்ளவா றுணர்த்துவா ரவாகலின் (நீத்தாராதலால்)" என்று கூறியிருப்பது மிக்கறியத் தக்கதாம்.

† இறைவர் - தத்துவஞானிகள்.


‡ ஆகமங்கள் - வினையினீங்கி விளங்கிய வறிவினையுடைய மூனேவன் (சுடவுள்) திருட்டியி ஞரம்பத்தில் மக்களுய்யுமாறு எடுத்துச்சொல்லிய முதனூலே அடியொற்றிச் செய்த மனு முதலிய நூல்கள்.

¶ இஃது - எல்லாத்தருமங்களிலும் பொய்பேசாமை யென்னுந்தரு மமே உயர்ந்தது என்னும் அபிப்பிராயம்.

மெய்யை யறிவிக்கின்ற நூல்களே ஆகுபெயரால் 'மெய்'என்றார். அம் மெய்ந்நூல்களாவன:—தம்மிடத்து மயக்கம்இல்லாமையினுல்பொருள்களே யுள்ளபடி யறியவல்லவராய்க் காமக்குரோதங்க ளில்லாமையினுல்அப்பொருள்களே யறிந்தபடியே சொல்லவும் வல்லவராய மேலோர் இருபையினுல் உலகத்தார் கண்மையையடையும் நிமித்தஞ் சொல்லிய ஆகமங்கள். அவ்வாகமங்களெல்லா வற்றிலும் இஃது ஒப்பமுடிந்த தென்பதாம். இவை மூன்று பாட்டாலும் பொய் பேசாமையென்னும் இவ்வறத்தினது உயர்வு சொல்லப்பட்டது.

(கு-து). மெய்பேசுவதற்கு மேம்பட்ட அறமொன்றுமில்லை.

10. Amidst all that we have seen described as real excellence, there is nothing so good as truthfulness.



ஏழாவது அதிகாரம்.

வெகுளாமை—*Against Anger.*

பரி.—அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன்மாட்டேதாயவிடத்தும் அதனைச் செய்யாமை. இது பொய்ம்மைபற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

தேளி. — அஃதாவது கோபஞ்செய்வதற்குக் காரணம் ஒருவனிடத்துண்டாகிய விடத்தும் அக்கோபத்தைச்செய்யாமையாம். இது (வெகுளாமை) பொய் பேசுவதுபற்றி யுண்டாவதாய கோபத்தைவிலக்கலால், வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

க. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினேன் காவாக்கா லென்.

பரி.—(இ-ள்). தன் சினம் பலிக்குமிடத்து அதனை யெழாமற் றடுப்பானே அருளாற் றடுப்பானுவான்; ஏனப்பலியாதவிடத்து அதனைத் தடுத்தாலென்? தடாதொழிந்தாலென்? (எ-று).

செல்லிடம் அல்லிடமென்றது தவத்தாற் றன்னின் மெலியாரையும் வலியாரையும், வலியார்மேற் * காவாவழியும் † அதனுல் ‡ அவர்க்கு வருவ

---

* காவாவழியும் - (சினத்தைக்) காவா (தடுக்கா) த விடத்தும்.

† அதனுல் - காவாமையினுல்.

‡ "வலியவனிடத்து மொத்தான் மாட்டினும் வெகுளி காத்தல், பெலிவுகெ யறம தென்னப் பொருத்துறு தனேயர் தம்பால், கலிவுறு வெகுளி தூண்டா தாதலா னலிய லாற்றூ, மெலியவ னிடத்திற் கர்க்கும் வெகுளிகெ யறம தென்பர்" என்பது பிரபுலிங்கலீலை.

தோர் தீங்கின்மையிற் காத்தவழியும் அறனில்லை யென்பார் 'காக்கினென் காவாக்கா லென்' என்றார். இதனுள் வெகுளாமைக் கிடம் கூறப்பட்டது.

தெளி.— (இ-ன்). சினம்- (தன்) கோபம், செல்லிடத்து - பலிக்குமிடத்து, காப்பான் - (அக்கோபத்தை எழாவாறு) தடுப்பவனே, காப்பான்- (அருளினால்) தடுப்பவனுவான், அல்லிடத்து - மற்றைப்பலியாதவிடத்து, காக்கினென்- (அக்கோபத்தினைத்) தடுத்தால் என்ன ? காவாக்காலென்- தடுக்காவிட்டால் என்ன? (எ-று)

செல்லிட மென்றது தவத்தால் தன்னின் மெலியவரையும், அல்லிடமென்றது தவத்தால் தன்னின் வலியவரையுமாம். வலியவர்மேல் கோபஞ்செய்தலைத் தடுக்காதவிடத்தும் அதனால் அவர்க்கு வருந்தோர் தீங்கு இல்லாமையால் தடுத்த விடத்தும் அறம் இல்லை யென்பார் 'காக்கினென் காவாக்கா லென்' என்றார். இதனுள் கோபஞ்செய்யாமைக்கு இடம் சொல்லப்பட்டது.

(க - து). தன்னினும் மெலியாரைக் கோபியாதவனே சினத்தை வென்றவனுவன் என்பது.

1. He restrains his anger who restrains it when it can injure; when it cannot injure, what does it matter whether he restrain it, or not ?

உ. செல்லா லிடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற.

பரி.—(இ-ள்). ஒருவன் வெகுளி தன்னின் வலியார்மே லெழின் $ தனக்கே தீதாம்;மற்றை யெளியார்மே லெழினும் அதனிற் றீயன பிற இல்லை, (எ-று).

¶ செல்லாவிடத்துச் சினம்பயப்பது இம்மைக்கண் அவரான் வரும் ஏதமே; o ஏனைய இம்மைக்கட்பழியும் மறுமைக்கட்பாவமும்பயத்தலின் ‖ 'இல்லதனிற் றீய பிற' என்றார். () ஒரிடத்தும் ஆகாதென்பதாம்.

$ அது தனக்கே என்றும் பாடமுண்டு.

¶ செல்லாவிடம் - தன்னுடையகோபம் செல்லுவதற்கு உரியதாகாத விடம்.

o ஏனையது - தன்னுடையகோபம் செல்லுவதற்கு உரியதானவிடம்.

‖ அதனிற் றீய பிறவில்லை என்றும் பாடமுண்டு.

() ஒரிடத்தும் - செல்லிடம், அல்லிடமென்னு மிரண்டனுள், ஒரிடத்திலும். "பெரியவர் தம்கைக் காய்ந்தான் பிறங்கல்கல் லியகோ னைப்பான், புரிவன புரியப் பட்டுப் புலம்புவ னெஞ்தார்க் காய்ந்தான், எரிசர கத

தேளி:—(இ : க). சினம் - (ஒருவன்) கோபமான்தை, செல்லா விடத்து - தன்னின் வலியவர்மேல், (உண்டாயின்), தீது-(தனக்கே) தீதாம், செல்லிடத்தும்-தன்னினெளியவர்மேல், (உண்டாயினும்), அதனின் - அக்கோபத்தினும், தீயபிற - தீமையுடையவை வேறு, இல் - இல்லை, (எ - று).

வலியவர்மேற் செய்யுங் கோபத்தால் உண்டாவது இம்மையில் அவரால் வருந்துன்பமொன்றே; எளியவர்மேற் செய்யுங் கோபம் இம்மையிற் பழியையும் மறுமையிற் பாவத்தையும் தருதலால் 'இல்லதனிற்றீயபிற' என்றார். வலியவர், எளியவர் என்னும் யாரிடத்தும் கோபஞ்செய்தல் ஆகாதென்பதாம்.

(க - து). வலியவர்மீது செய்யுங் கோபம் இம்மையிற் றீமையையும், மெலியவர்மீது செய்யுங் கோபம் இருமையிலுந் தீமையையுந் தரும் என்பது.

2. Anger is bad, even when it cannot injure; when it can injure, there is no greater evil.

க. மறத்தல் வேகுளியை யாமாட்டுந் தீய
பிறத்த லதனுன் வரும்.

பதி:—(இ - ன்). யாவர்மாட்டும் வேதுளியை ஒழிக; ஒருவர்க்குந் தீயனவெல்லா முளவாதல் அதனுன் வரும் ஆகலான், (எ - று).

வலியார், ஒப்பார், எளியாரென்னும் மூவர் மாட்டும் ஆகாமையின் 'யார்மாட்டும்' என்றும், § மனத்தாற் றுறந்தார்க்கு ஆகாதன வாகிய தீச்செய்தகைனெல்லாவற்றையும் பிறப்பித்தலின் 'தீய பிறத்த லதனுன் வரும்' என்றுங்கூறினர்.

னில் வீழ்வ னிழிந்தவர்க் காய்ந்தா னென்றல், ஒருவர்தம் மிடத்துஞ் சீற்றமுமுமையே கன்ற மாதோ" என்பது பிரபுலிங்கலீலை.

§ மனத்தினுல் யானெனதென்னும் இருவகைப்பற்றையும் விட்டவர்க்கு ஆகாதனவாய கொடிய வெண்ணங்க ளெல்லாவற்றையும் கோபம் உண்டாக்குதலின், தீயபிறத்தலதனுன்வரும்' என்று கூறப்பட்டது. தீய வெண்ணங்களாவன பழிபாவங்களுக் கஞ்சாமை, கருணையில்லாமை, ஞானமில்லா தொழிதல், மேற்கொண்டுள்ள விரதததைவிட்டுவிடல் முதலியனவாம். ஸ்ரீமட்டர்மக்களே விசுவாமித்திரர் வேடர்களாகும்படி சபித்தமையும், கபிலர் சகரரைச் சபித்தமையும், இந்திரன் விசுவரூபனென்னுமிருருவின் தலையை வெட்டினமையும், பிறவும் இங்கு அறியத்தக்கனவாம். "கோபமெய்க் கொடியன்யா னெய்திலார் குலவுரூர், தீபமென்ற தொவிர் தபோ தனர்களுஞ் சினமெனும், பாவமுற் றயலோர் பதையதைத் தயிரிறஞ், சாபமிட் டனேயர்தம் தவமுமிவிட் டிடுவரே" என்பது பிரபோத சந்திரோதயம்.

தெளி:—(இ - ன்). யார்மாட்டும் - யாவரிடத்திலும், வெகுளியை - கோபஞ்செய்தலை, மறத்தல் - மறந்தொழியக்கடவர், (ஒருவருக்கு), தீய - மையென்பனவெல்லாம், பிறத்தல்-உண்டாகுதல், அதனான்-அக்கோபத்தினால்,வரும்-வாராதிற்கும், (ஆதலால்), (எ - து).

வலியவர், ஒப்பார், எளியவர் என்னு மூவரிடத்தும், (கோபஞ்செய்தல்) ஆகாமையால் 'யார்மாட்டும்' என்றும், மனத்தினுல் துறந்தவர்க்கு ஆகாதனவாகிய தீயசிந்தைக ளெல்லாயுற்றையும் உண்டாக்கலால் 'தீயபிறத்த லதனான் வரும்'என்றும் சொல்லினர்.

(கு-து). கோபத்தால்வருங் கெடுதிகள் பலவாதலின், அதனை யாவரிடத்தும் ஒழித்தல் வேண்டுமெ னபதாம்.

3. Forget anger,towards every one, as fountains of evil come from it.

-:=||=:-

சு. 0 நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

பரி:—(இ - ள்). துறந்தார்க்கு அருளாலுவவாய முகத்தினிகணைகையையும் மனத்தினிகணுவகையையுங்கொன்று கொண்டெழுகின்ற † சினமே அல்லது அதனிற் பிறவாய பகைகளும் உளவோ (இல்லை), (எ - று).

துறவார் * புறப்பகை யிலாயினும் உட்பகையாய் நின்று அருண்முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித்துன்பமும் எய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின்பிக்க பகையில்லையாமிறது. இவை மூன்றுபாட்டாலும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). (துறந்தார்க்கு அருளினுலுண்டாகிய) நகையும் - (முகத்தினிடத்து) மலர்ச்சியையும், உவகையும் - (மனத்தினிடத்து) மகிழ்ச்சியையும், கொல்லும் - அழித்துக்கொண் டெழுகின்ற, சினத்தின்-கோபத்தைப் பார்க்கிலும், பிற - வேறுகிய, பகையும் - பகைகளும், உளவோ - உண்டோ, (இலவே), (எ - று).

0 "மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கில முதலற முடிக்குமா போலத், தாங்குருஞ் சினத்தீ தன்னுளே பிறந்து தன்னுறு கிளையெலாம் தகிக்கும், ஆங்கதன் வெம்மை யறிந்தவர் கமையா லதனையுள் ளடக்கவ மடவகை, தாங்கிய கோபத் தீயினை யொக்கு முட்பகை யுலகில்வே றுண்டோ" என்பது இராமாயணம்

† சினமே யல்லது அதனில் - கோபமேயல்லாமல், அக்கோபத்தைப் பார்க்கிலும்.

* புறப்பகை - புறத்தி (வெளியி)ற் பகைவராக விருப்பவர்.

(துறந்தவர்) துறவால் (தவவேடத்தினுந்) புறப்பகை இல்லாராயினும் உட்பகையாய் நின்று (அவர்க்குரிய) அருள்முதலாகிய ஈட்பினையும் நீக்கிப் பிறவித்துன்பத்தையும் அடைவித்தலால், அவர்க்குச் கோபத்தின் மிகுந்த பகை இல்லையாயிற்று. இவை மூன்றுபாட்டாலும் கோபத்தினது தீங்கு சொல்லப்பட்டது.

(கு-து) முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையுங் கெடுக்க வல்ல கோபத்திற்கு மேற்பட்ட பகை வேறில்லை என்பது.

4. Is there a geater enemy than anger, which kills both laughter and joy ?

ரு. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

பரி.—(இ-ள்) * தன்னைத்தான் துன்பமெய்தாமற் காக்க நினைத் தானையின், தன் மனத்துச் சினம் வாராமற் காக்க; காவானையின், அச் சினந் தன்னையே கெடுக்குங் கடுந்துன்பங்களை யெய்துவிக்கும், (எ-று).

† 'வேண்டிய வேண்டியாங் கெய்தற்' பயத்ததாய தவத்தைப்பிறர் மேற் சாபம் விடுதற்காக ‡ இழந்த ¶ அத்தவத் தின்பத்தோடு பழைய $ பிறவித் துன்பங்களும் ஒருங்கெய்துதலின் 'தன்னையே கொல்லும்' என்றார். () "கொல்லச் சுரப்பதாங்கிழ்" * என்புழிப்போலக் கொலைச்சொல் ஈண்டுத்துன்பமிகுதி யுணர்த்தி நின்றது.

தெளி.—(இ-ள்). தன்னை (ஒருவன்) தன்னை, தான் காக்கின் - தான் (துன்பம் அடையாமல்) காக்க நினைத்தானையின், சினம் (தன் மனதில்) கோபம், (வராமல்), காக்க - காக்கக்கடவன், காவாக்கால் - காவானையின், சினம் - அக்கோபமானது. தன்னையே—, கொல்லும்—கெடுக்குங் கடுந் துன்பங்களை யடைவிக்கும், (எ - று.)

* "உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக், கொள்ளுங் குணமே குணமென்க" என்பது நன்னெறி.

† திருக்குறள் தவம் 5. இதன்பொருள் வேண்டிய பயன்களை வேண்டியபடியே யடைதல் என்பது.

‡ இழந்தவத்தின்பத்தோடு என்றும் பாடமுண்டு.

¶ உண்டிசுருக்கல், கோடைக்கண்வெயினிலை நிற்றல் முதலியவற்றால் வருந்துன்பம்.

$ தன்னைப்பற்றியும் பிறவுயிர்களைப்பற்றியும் தெய்வத்தைப்பற்றியும் வரும் பிறவித்துன்பங்கள்.

() காலடியார் ஈயாமை-9. இதன்பொருள் மிகவும் வருத்தக் கீழ்மகன் (பிறர்க்குப் பொருளைக்) கொடுப்பான் என்பது. * என்னுமிடத்திற்போல.

வேண்டிய பயன்களை வேண்டியபடியே யடைபத்தருவதாகிய தவத்தைப் பிதர்மீது சாப மிடுதற்காக இழந்து அத்தவத் தின்பத்தோடு பழைய பிறவித் துன்பங்களும் ஒருமிக்க அடைதலால்(னெம்) 'தன்னையே கொல்லும்'என்றார். கொல்லும் என்னுஞ்சொல் இங்குத் துன்பத்தின் மிகுதியை யறிவித்து நின்றது.

(க - து). தன்னைத்தான் காக்க விரும்புகின்றவன் கோபத்திற் கிடந்தராதிருக்கக் கடவன் ; தந்தானையின், அஃதவனுக்குப் பெருந்துன்பத்தைத்தரும் என்பது.

5. If a man would guard himself, let him guard against anger; if he does not guard it, anger will kill him.

சு. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு மேமப் புணையைச் சுடும்.

பரி.—(இ - ள்). சினமென்னும் தெருப்புத் தனக்கு * இடமான வரையே யன்றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையுஞ் சுடும், (எ-று).

'சேர்ந்தாரைக் கொல்லி' என்பது ! ஏதிப்பெயர்; தான் சேர்ந்த விடத்தைக் கொல்லுந் தொழிலது என்றவாறு. 'சேர்ந்தாரை' என உயர்திணைப்பன்மைமேல் வைத்து ஏனைநான்கு பாலும் தங்கருத்தி தாகூடிய ‡ பொருளாற்றலாற் கொண்டார். ஈண்டு உருவகஞ்செய்கின்றது அறம்

* இடமானவர் - (கோபமிருத்தற்கு) இடமானவர்.

† வது (காரண)ப் பெயர் - உறுப்பாற்றலால் பொருளோ யுணர்த்தி வரும்பெயர். சேர்ந்தாரைக்கொல்லி யென்பதன்கண் சேர்ந்தாரையென்னும் உறுப்பும் கொல்லி யென்னும் உறுப்பும் இருத்தலேயும் அவை ஆற்றலால் சேர்ந்தவிடத்தைக் கொல்லுந் தொழிலது என்னும் பொருளே யுணர்த்துதலேயும் அறிக. பிரயோக விவேகநூலார் "ஆற்றலாவது வீரலென்னுஞ் சொல் உவிரை யுணர்த்தாது வீரலையே யுணர்த்தி நிற்றலாம். அதுபோலச்சொல்லியற்கையாய் நிற்றலென்பது" என்றனர்.

‡ பொருளாற்றல் - பொருளின்கணுள்ள சாமர்த்தியம். இங்குச் சேர்ந்தாரை யென்னும் பலர்பால் மற்றை நான்கு பால்களுக்கும் உபலட்சணமாம். ஒருபொழி ஒழிந்திகின்ற தன்னினத்தைக் கொள்ளுதற்குரியதாய் வருவது உபலட்சண மெனப்படும். "செய்பவன் கருவி" என்னும் நன்னூற் சூத்திரவுரையில் சங்கரநமச்சிவாயப் புலவர் "செய்பவன்எனஒருபான்மேல் வைத்தோதினுமேனும் 'ஒருமொழி யொழிதன் னினங்கொளற்குரித்தே' என்பதனுள் ஐம்பாலுங் கொள்க." என்பவரைக் திருத்தலிங்குக் கவனித்தற் பாலதாம். "சிலவினைத்து வென்றார், சிலையாலாலயஞ் செய்தான் என்னுந் தொடரினுள் முறையே கல் வில் என்னுஞ்சொல் வில் கல்

தார் னெத்தை ய யாகலின், னெமென்னு நொருப்பென்ற ¶ விதப்பு, உல கத்து நொருப்புச் சுடுவது தான் சேர்ந்த விடத்தையே; இங்நொருப்புச் சேரா த விடத்தையுஞ் சுடுமென்னும் மேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டு இனமென்றது மூற்றத் துறந்து தவஞாலங்களாற் பெரியராய்க் கேட்டார் க்கு உறுதி பயக்கு மொழிகளை இனியவாகச் சொல்லுவாரை. உருவகோக் கிச் சுடுமென்னுந் தொழில் கொடுத்தாராயினும், * அகற்றுமென்பது பொருளாகக்கொள்க.வமப்புணை † வமத்தையுபதேசிக்கும்புணை. ‡ இனமெ ன்னு மேமப்புணையென்ற வகதேசவருவகத்தாற் பிறவிக்கடலுள் அழுந்தா மல் வீடென்னுங் கரையேற்றுகின்றவென வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. ¶ தன்னையும் வீழ்த்து மெப்பாரையும் அகற்றுமெ ன்பதாம்.

தேளி:—(இ - ள்). னெமென்னும் - கோபமென்னும், சேர்ந்தாரைக் கொல்லிநொருப்பானது, (தனக்கு இடமானவரையே யல்லாமல்), இன மென்னும் - (அவருக்கு) இனமாகிய, வமம்-வமமாயுள்ள, புணையை - மரக் கலத்தையும், சுடும் —சுடாகிற்கும், (எ-று).

என்றுணர்த்தலே பொருளாற்றல்" என்றனர் இலக்கணக்கொத்து நூலார். "சொல்லாற்றலாற்றோன்றுவதாகிய பொருளாற்றலாற்றோன்றுவதும்அது மான மூதலியவற்றுள் வேறோராற்றாற் பெறப்படுவது" என்று திருக்க ச்சிராகதிபிகையுரை கூறுகின்றது.

¶ வேண்டியதொன்றை முடித்தற்கு வேண்டாத தொன்றைக் கூற தல் விதப்பு எனப்படும். னெமென்று கூறுது னெமெனவுஞ் சேர்ந்தா ரைக்கொல்லியெனச் (சேர்ந்தாரைக்கொல்லி யென்பதை) அதிகமாகக்கூறின மையின், சேர்ந்தவிடத்தைச் சுடும் நெருப்புப்போலாகாது கோபாக் னினி சேராத வீடத்தையுஞ் சுடும் என்னும் வேண்டியது முடித்தல்பெறப் பட்டவாறறிக.

* அகற்றும்-தனக்கிடமானவரைவிட்டு நீங்கச் செய்யும்.

† வமப்புணை - இரட்சகத்தோணி.

‡ இனத்தை யேமப்புணையென் றுருவகப்படுத்தினதற் கியைய ப் பிறவியைக் கடலாகவும் முத்தியைக் கரையாகவும் உருவகப்படுத்திக் கூறு தலால் 'இனமென்னுமேமப்புணை'என வகதேசமாயுருவகப்படுத்தினமை யின், இஃது வகதேசவுருவகமாயிற்று. வகதேசவுருவகமாவது(இணமுள்ள வற்றுள்)ஒரு பாகத்தையுருவகப்படுத்தி மற்றொரு பாகத்தை யுருவகப்படுத் தாது விடுவது.

¶ கோபமானது தன்னையுடையவனையும் பிறவிக்கடலில் வீழச்செ ய்து, (தத்துவ உபதேசத்தால்) அவனை யெய்க்கவரும் தத்துவஞானியரை யும் நீக்குமென்பதாம்.

'சேர்ந்தாரைக்கொல்லி' என்பது காரணப்பெயர்; தான் (செருப்பு) சேர்ந்தவிடத்தைக் கொல்லும் (அழிக்கும்) தொழிலுடையதென்பது அதன்பொருள். 'சேர்ந்தாரை' என்று உயர்திணைப் பலர்பால்மேல் வைத்து மற்றைய ஆண் பெண் ஒன்று பல என்னும் நான்கு பாலிலும் தமது கருத்தோடு கூடிய பொருளாற்றலாற்கொண்டார். இங்ஙனஞ் சேர்ந்தாரைக்கொல்லி என்று உருவகஞ் செய்கின்றது நீத்தாரது கோபத்தையே யாதலால், சினமென்னும் செருப்பென்ற விதப்பு, உலகத்து செருப்புச் சுமப்பது தான் சேர்ந்தவிடத்தை மாத்திரம்; இக்கோபமாகிய செருப்புத் தான்(சேர்ந்த விடத்தையேயன்றி)சேராதவிடத்தையும் சுடுமென்னும் வேறுபாடுதோன்றின்றது. இங்ஙனினமென்றது யாதினனதென்னும்இரு வகைப்பற்றுக்களையும்பற்றறவிட்டுத்தவத்தினாலும் தத்துவஞானத்தினாலும் பெரியவராய்ப்(பிறப்பிற்குஞ்சித் தம்மை யடைத்துவீடையும் வழியைக்) கேட்டவர்களுக்கு உறுதிதரும் மொழிகளை இனிமையாகச்சொல்லுகின்றவரை. 'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி' என்று கூறிய உருவகத்தைக் கோக்கிச் சுடும் என்னுந்தொழில அச்சினமென்னுஞ் சேர்ந்தாரைக்கொல்லிக்குச் கொடுத்தாராலும், அச்சுடும் என்பதற்கு அதற்றும் (நீக்கும் அல்லதுவிலக்கும்) என்பது பொருளாகக் கொள்க. ஏமப்புணை-இனிமையாகிய மொழிகளை யுபதேசிக்குந்தோணி. 'இனமென்னுமேமப்புணை' என்று கூறிய ஏகதேச உருவகத்தால்பிறவிக்கடலிலழுந்தாவாறு முத்தியென்னுங் கரையிலேறச் செய்கின்றவென வருவித்து அப்புணைக்கு முன்கூட்டுக. புணையையுமென்னும் இறந்தது தழீஇய எச்சவும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.கோபம் தன்னையும் பிறவிக்கடலில் வீழ்வித்து எடுப்பாரையும் நீக்குமென்பதாம். செருப்பிற்குச் சேராதவிடத்தையும் சுடுதலையும், மரக்கலத்திற்கு நிற்தாபதேசஞ் செய்தலையும் அதிகமாகச் சொல்லுதலால் இது மிகையொற்றுமை யுருவகவணியாம்.

(க-து). கோபாக்கினியானது தன்னை யுடையவனைக்கெடுத்து அவனுக்குத் துணையாவாரையும் நீக்கும் என்பது.

6. The fire of anger will burn up even the pleasant raft of friendship.

எ. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

பரி.—(இ-ள்). சினத்தைத் தன்னுற்றல் உணர்த்துவதோர் குணமென்று தன்கட்கொண்டவன் அவ்வாற்றிலிழத்தல், நிலத்தின்கண்அறைந்தவன்கை அந்நிலத்தை யுறுதல் தப்பாதவாறு போலத் தப்பாது. ()

* வைசேடிகர் † பொருள், ‡ பண்பு, ¶ தொழில், § சாதி, † விசேடம் ‡ இயைபு என்பனவற்றை அவ்வகைப்பொரு ளென்றுற்போல, ஈண்டே குணம் பொருளெனப்பட்டது. பிழையாததற்றென்பது குறைத்து நின்றது. இவை மூன்றுபாட்டானும் வெருண்டார்க்கு வருங் கிலேசு கூறப்பட்டது.

தேளி.—(இ - ன்). எனத்தை - கோபத்தை, பொருளென்று-(தனது வல்லமையைத் தெரிவிப்பதாகிய ஒரு)குணமென்று, கொண்டவன் - (தன்னிடத்தை)கொண்டவன், கேடு - அவவல்லமையை யிழத்தல், நிலத்து-பூமியினிடத்து, அறைந்தான் - அஸ்றத்துவனது, கை - கையானது, பிழையாதற்று - (அந்நிலத்தை யடைதல்) தப்பாதவிதம்போலத் தப்பாது,(எ - று).

தார்க்கிகரும் ஒருபகுதியாராகிய வைசேடிகர் திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாய மென்பனவற்றை அறுவகைப்பொரு

* கௌதமரது நியாயமதத்தை யனுசரித்தவர்கள் நையாயிகரென்றும் கணாதரது நியாயமதத்தை யனுசரித்தவர்கள் வைசேடிகரென்றும் சொல்லப்படுவர். [விசேஷம் என்னும் பதார்த்தத்தை யங்கீகரித்தவர் வைசேடிகரெனப்படுவர்.] தருக்க சங்கிரகம் "விசேடம் நித்தப் பொருள்களில் இருப்பனவாய், அவை வெவ்வேறாய் நிற்றலைத் தெரிப்பனவாம்" என்று கூறுகின்றது. வைசேடிகர் குணமுதலிய வற்றையும் பொருள் என்று கூறிஞற்போல காலடியாரும் பிறர் மனோபவாமை 2-வது செய்யுளில் 'பகை பழிபாவமென், றச்சத்தோ டிந்நாற்பொருள்' (பகைபழிபாவ அச்சங்களைப் பொருள்) என்று கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

† பொருண்மைச் சாமானியமுடைய தாதல், குணமுடையதாதல் பொருளெனப்படும். பிருதிவி, அப்பு முதலியன பொருளாம்.

‡ குணத்தன்மைச் சாமானியமுடையதாதல், திரவியம் (பொருள்) கர்மம் என்னும் இரண்டிற்கும் வேறுப்பொதுவியல் புடையதாதல பண்பு (குணம்) எனப்படும். உருவம், இரசம் முதலியன குணமாம்.

¶ கருமத்தன்மைப் பொதுவியல் புடையதாதல், அசைவு வடிவினதாதல் தொழில் (கர்மம்) எனப்படும். எழுதல், விழுதல் முதலியனதொழிலாம்.

§ நித்தியமாயொன்றுய்ப் பலவற்றிற் சமவேதித்து (ஒற்றிற்று) நிற்பது ஜாதி (சாமானியம்) எனப்படும்.

† இஃது இதனினும் வேறு என்று வேறு பிரித்தறியும் புத்தி மாத்திரத்திற்கு ஏது விசேடம் (தெறிப்பு) எனப்படும்.

‡ நிமித்தமுடையோர், குணகுணிக்கும், ஜாதியியக்கிக்கும், கிரியை கிரியாவானுக்கும், விசேடம் நித்தியப் பொருளுக்கு முள்ள சம்பந்தம் இயைபு எனப்படும். இயைபு எனினும், ஒற்றுமைச் சம்பந்தமெனினும், சமவாய மெனினும் ஒக்கும். (ஜாதியுடையது-வியக்தி)

சென்று கூறினற்போன்று இன்னா (சினமென்னுங்) குணம் பொருளென்று கூறப்பட்டது. பிழையாததற்று என்பது செய்யுள் விகாரத்தால் பிழையாதற்றுஎனக் குறைந்தநின்றது. இவை மூன்று பாட்டாலும் கோபஞ்செய்தார்க்குவரும் நிந்து சொல்லப்பட்டது.

(க - து). கோபத்தைப் பொருளாகக் கொண்டவன் தவறுது கெடுவான் என்பது.

7. Destruction will come upon him who regards anger as a good thing, as surely as the hand of him who strikes the ground will not fail.

அ. இணரேரி தோய்வன்ன வின்ஞ செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

பரி.—(இ - ள்). பலசுடரை உடைத்தாய பேரெரிவந்து தோய்ந்தால் ஒத்த இன்னாதவற்றை ஒருவன் செய்தானெயினும், அவனே வேது னாமை ஒருவற்குக் கூடுமாயின் அது நன்று, (எ - று).

இன்ஞமையின் மிகுதிதோன்ற 'இணரெரி' என்றும், அதனே மேன் மேலுஞ் செய்தல் தோன்ற 'இன்ஞ' என்றும், அச்செயல் முனிவரையும் வெகுள்விக்குமென்பது தோன்றப் 'புணரின்' என்றுங் கூறினர். இத ஞன் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்). இணர் - பலசுடர்களையுடையதாய, எரி - பெரு நெருப்பான து, தோய்வன்ன - (வந்து) (தன்மீது) படிந்தாற்போன்ற, இன் ஞ - தன்பந் தருவனவற்றை, செயினும்-(ஒருவன்) செய்தானுயினும், வெ குளாமை-(அவனை) கோபியாமை, புணரின் - (ஒருவனுக்கு) கூடுமாயின், நன்று - (அது) நல்லது, (எ - று)

தன்பந்தருவனவற்றின் மிகுதிதோன்ற, 'இணரெரி' என்றும், அத் தன்பந்தருவனவற்றை மேலுமேலுஞ் செய்தல் தோன்ற 'இன்ஞ' என் றும், அச்செய்கை முனிவரையும் கோபிக்கச்செய்யுமென்பது தோன்றப் 'புணரின்' என்றும் சொல்லினர். இதனுல் கோபஞ்செய்யாமையின து நன்மை சொல்லப்பட்டது.

(க-து). பொறுத்தற்கரிய தன்பஞ் செய்தவனியும் கோபியா திருக்கும்வல்லமையே துறவறத்தானுக்குச் சிறந்தவல்லமையாம்.

8. Though one commit things against you as painful to bear as if a bundle of fire had been thrust upon you, it will be well, to refrain, if possible, from anger.

கூ. உன்னிய வெல்லா முடனேய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

பரி.—(இ-ன்). தவஞ்செய்பவன், தன் மனத்தால் நினைத்தவை எதுவாயினும் நினையுமுயின், தான் கருதியபேறெல்லாம் ஒருங்கே பெறும்.

† 'உள்ளத்தால்' என வேண்டாது கூறியதனால், தருளுடை உள்ள மென்பது முடித்தது. அதனால் உள்ளாமையாவது அவ்வருளாகிய பகை யை வளர்த்து அவ்வருள் மூற்றக் கடிதல். இம்மை மறுமை வீடென்ப வேறு வேறு நிறத்தனவாயினும், அவையெல்லாம் இவ்வொன்றுளே யெய்து மென்பார் 'உளளிய வெல்லா முடனெய்தும்' என்றார், இதனால் கொலாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்). உள்ளத்தால் - (தவஞ்செய்பவன் தன்) மனத் தால், வெகுளி - கோபதாபத்தை, உள்ளாவெனினால் - (ஒருபோதும்) நினையா னாயின், உள்ளிய வெல்லாம் - (தான்) நினைத்த பேறெல்லாம், உடன - ஒருமிக்க, எய்தும் - பெறுவான், (எ - று).

அருளுடைய வுள்ள மென்பது தோன்றுமாறு 'உள்ளத்தால்' என்பது அதிகமாகச் சொல்லப்பட்டது. அவ்வருளுடைய வுள்ளத்தால் நினையாமை யாவது அவ்வருளாகிய பகையை வளர்த்து அப்பகையினால் கோபமுழு தையும் நீகவிடுதல். இம்மை மறுமை வீடி என்பன வெவ்வேறு வகைப் பட்டன வானாலும், அவை யெல்லாம் கோபதாபத நினையாமையாகிய விவ் வொன்றனுளேயேயிடைக்கும் என்பார் 'உள்ளிய வெல்லா முடனெய்தும்' என்றார். இதனால் கோபஞ்செய்யாதார்க்கு வரும் நன்மை சொல்லப்பட் டது.

(க - து). கோபஞ் செய்தலை மறந்தவன் எண்ணிய பயன்க ளனைத்தையுந் தவறாது பெறுவான் என்பது.

9. If a man never indulges anger in his heart, he will at once obtain what ever he has thought of.

க0. இறந்தா நிறந்தா ரினையர் சினத்தைத்
துறந்தார் * துறந்தார் துணை.

பரி.—(இ-ன்). சினத்தின் கண்ணே மிக்கார், உயிருடையாயினும்,

† உள்ளான் என்ற கூறியதனுலேயே உள்ளத்தால் என்பது பெறப் பட்டிருத்தலின், உள்ளத்தால் என்றுகூறியது வேண்டாதுகூறியதாயிற்று. வேண்டாத தொன்றைக்கூறுதல் வேண்டியதொன்றை முடித்தற் காதலி ன், உள்ளத்தால் என்று மிகையாகக் கூறியது அருளுடைய உள்ளமென் றதைக்குறிப்பித்து நின்றதென்க. நீத்தாரது மனம் அருளுடையது என பது "அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழு கலான்" என்னும் குறளாலுமதியப்படும்.

* திறந்தார்-வீடெய்தினோர். வீடெய்துதலாவது இருவகைப் பற்றையும் பற்றற ஒழித்தல்.

சேத்தாரோ டொப்பர்; சினத்தைத் * துறந்தார், சாதற்றன்மையாயி னும், † அதனே யொழிந்தா ரவினர், (எ-று).

மிக்க ‡ சினத்தை உடையார்க்கு ஞானமெய்துதற் குரிய உயிர் நின்ற தாயினும் கலக்கத்தான் அஃதெய்தாமை ஒருதலையாகலின், அவரை 'இற ந்தாரனேயர்' என்றும், சினத்தை விட்டார்க்குச் சாக்காடெய்துதற்குரிய யாக்கை நின்றதாயினும், ஞானத்தான் வீடு பெறுதல் ஒருதலையாகலின் அவரை ¶ 'துறந்தார் துணே' என்றுங் கூறினர். § துறந்தார் துணே பன் மை யொருமை மயக்கம். இதனுள் (1) அவ்விருவர் பயனும் ஒருங்கு கூறப் பட்டது.

தெளி.—(இ-ன). இறந்தார் - (கோபத்திலே) மிகுந்தவர், (உயிரு டையவரா யிருப்பினும்), இறந்தாரனேயர் - செத்தாரோ டொப்பாவார், சினத்தை—கோபத்தை, துறந்தார் - விட்டவர், (சாதற்றன்மையையுடைய வரா யிருப்பினும்), துறந்தார் துணே - அசாதற்றன்மையை யொழிந்தா ரோடு ஒப்பாவா, (எ-று).

* கடிந்தா என்றும் பாடமுண்டு.

† அதனை யொழிந்தார் - சாதற்றன்மையை யொழிக்க சிவன் முத்தர். சிவன் முத்தர்க்கும் பிறப்பில்லாமையின் அவர்க்கு மரணமு மில்லாமையா யிற்று; ஆகலே, சிவன முத்தர் பிறப்பிறப்பினறி யொருசன்மைய ராய் வீளங்குவரென்பது பெற்றும். சினத்தைத்துறந்தார் முத்தராவரென் பது "(ஒருவன்) இந்திரிய நிக்கிரகத்தாலும், இராகத்துவேஷம் (காமம், வெகு ளி) இல்லாமையாலும், ஜீவ ஹிம்சை செய்யாமையாலும் மோட்சமடைத் தற்கு யோக்கியனவான்" என்று மனுதருமசாஸ்திரம் ஆறாமத்தியாயத்திற் கூறுவதாலுமறிந்தற்பாற்றும்.

‡ சினமானது மனதினிடத்தெழும்விருப்பத்திற்குத் தடையுண்டாய போதுண்டாவதாம். சினம் தமோகுணவியாபாரமாமாதலின், அதுசத்துவ குணமுடையாராகவிருக்கும் நீத்தார்க்குஆகாதாயிற்று; ஆகலே, மிக்கசினத்தை யுடையார் கலக்க நின்றிய சத்துவ குணமுடையாராயிருத்தல் கூடாதென்க. "சாற்றமுள் ளுறவிருப் பகற்றப் படிலெழுஞ் சீற்றமே யுருவமா மெனே யுமெண் சிந்தையோய், மாற்றமோர் கொலேயெனு மாதையுங் கலகனு, மாற் றல்சேர் மகனேயு மார்கொல்வெல் வார்களே" என்று பிரபோதசந்திரோத யம் கூறுவதும் இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

¶ வீடுபெற்றாரோ டொப்பர் என்றும பாடமுண்டு.

§ துறந்தாரெனனும் பன்மை வினையாலணையும் பெயரோடு துணே யெனனும் ஒருமைப்பெயர் மயங்கி வந்தமையின், அத்தொடர் இரண்டுகண் ணுஞ் சிவந்தது என்பதுபோலப் பன்மை யொருமைமயக்கமாயிறதென்க.

(1) அவ்விருவர் - கோபித்தவர், கோபியாதவர்.

அதிக்கோபமுடையார்க்கு ஞானம் பெறுதற்கு உரிய உயிர் இருப்பதாயினும் (அவர்) மனக்கலக்கத்தினால் அந்த ஞானத்தை யடையாமை நிச்சயமாதலால், அவரை 'இறந்தாரனையர்' என்றும், கோபத்தைவிட்டவர்க்கு மரணமடைதற்குரிய வுடம்பு இருந்ததாயினும், (அவர்) ஞானத்தினால் முத்தியை யடைவதுநிச்சயமாதலால், அவரை 'துறந்தார்துணை' என்றும்சொல்லினர். துறந்தார் துணை என்பது பன்மையிலொருமை வந்த வழுவமைதி. இதனால் அல்வீருவர் பயனும் ஒருமித்துச் சொல்லப்பட்டது. சாதற்றன்மையொழிதல்-இனிப்பிறந்து சாதல்நீங்குதல், அஃதாவது முத்திபெறுதல்.

(க - து). அளவிறந்த கோபத்தை யுடையவர் செத்தாரோடொப்பர்; அதனை யொழித்தவர் முத்திபெற்றாரோடொப்பர். ()

10. Those, who give way to excessive anger, are no better than dead men; but those, who are freed from it, are equal to those who are freed (from death).

எட்டாவது அதிகாரம்.

இன்னாசெய்யாமை—*Against inflicting suffering.*

பரி.—அஃதாவது தனக்கு ஒருபய நேக்கியாதல், செற்றம்பற்றியாதல், * சோர்வாதல் ஒருயிர்க்கு இன்னாததவற்றைச் செய்யாமை. இன்னாசெய்தல் † வேகுளியொழியவும் நிகழுமென்பது அறிவித்தற்கு, இது வேகுளாமையின்பின் வைக்கப்பட்டது.

தெளி.—அஃதாவது தனக்கு ஒருபயனேக்குறித்தாவது வைரம்பற்றியாவது, சோர்வினாலாவது ஒருயிர்க்குத் தின்பந்தருவனவற்றைச் செய்யாமையாம். இன்னாசெய்தல் வெகுளி ஒழியவும் உண்டாமென்பதையறிவித்தற்கு, இது (இன்னாசெய்யாமை) வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது. வைரம் - தீராக்கோபம்.

க. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

பரி.—(இ-ள்). ‡ யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய

* சோர்வு - மறதி. † வெகுளி - கோபம்.

‡ "வாயுவீரண் டேந்தடுத்துப் புலனெருக்கி யிலக்கின்மனம் வைத்தாதார, தேயமுணர்ந் தசைபைகொடத் தெய்வதங்க ளிபமுகமாய்த் திரும்பச் செய்து, போயதன்பின் பிரமபெலத் திந்துலமு திடைத்திறைத்துப் பொருவில் சோதி, யாயதைப்டாவித்தல்" யோகமெனப்படும். சோகத்தால் எப்பேறுமுண்டாமென்பது "எப்பிணியு மகன்றிடுமெல் லிவையுமற ஞ் சித்தியெல்லா மெய்தி மோங்குமுப்புவனத் தினும்பெறுதற் கரியபொரு ளொன்றுமிலை முடிக்க வேண்டி, லப்பிரமா தியர்செயலு மகைக்கணத்தின் முடித்திடலா மாத லாலே, யெப்பரிய யோகமதி தபோலப் பிறி தோர்மத முண்டோ வென்றான்" என்னுஞ் செய்யுளிலுமறியப்படும்.

செல்வங்களைப் பிறர்க் கின்னுசெய்து பெறலாமாயினும், அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறியவாற்றுன் † மனந்தூயாரது துணிவு, ()

‡ உம்மை பெருமைமேற்று. சிறப்புடையதனைச் ¶ 'சிறப்பு'என்றும், அதன் பயிற்சியான் § வாயுவை வென்றெய்தப்படுதலின் * ஏட்டுச் சித்தி களையும் 'சிறப்பீனுஞ் செல்வம்' என்றும், காமம், வெகுளி, மயக்கமென் னுங் குற்றங்கள் அற்றமையான் 'மாசற்றூர்' என்றுங் கூறினர். இதனுல் தமக்கொரு பயனேக்கிச் செய்தல் விலக்கப்பட்டது.

தெளி:—சிறப்பு - யோகமாகிய சிறப்பு, ஈனும் - தருவனவாகிய, செல்வம் - (அணிமா முதலிய) செல்வங்களை, பிறர்க்கின்னு - பிறர்க்குத் துன்பந் தருவனவற்றைச் (செய்து), பெறினும் - பெறலாமாயினும், (அத் துன்பந் தருவனவற்றை), செய்யாமை - செய்யாதிருத்தல், மாசற்றூர்- (ஆகமங்கள் சொல்லிய வழியால்) மனந்தூய்மை யானவர்களது, கோள் - துணிவாம், (எ - று).

பெறினும் என்னும் உம்மை எதிர்மறைப்பொருளது. சிறப்புடைய யோகத்தைச் 'சிறப்பு' என்றும், அந்த யோகாப்பியாசத்தால் வாயு வையடக்கி யடையப்படுதலால் அணிமாமுதலிய எட்டுச்சித்திகளையும் 'சிறப்பீனுஞ் செல்வம்' என்றும், காமம் வெகுளி, மயக்கமென்னுமுக்குற் றங்களும் நீங்கினமையினுல் 'மாசற்றூர்' என்றுங் கூறினர். இதனுல் தமக் கொரு பிரயோசனத்தைக் குறித்துப் பிறர்க்குத் துன்பந் தருவனவற் றைச் செய்தல் விலக்கப்பட்டது.

(க - து). எவ்வகைத்தாய பயனைப் பெறுவதா யிருப்பினும், பிறர்க்குத்தீமை செய்யாமையே பெரியோர்களது கொள்கையாம்.

1. It is the determination of the spotless not to cause sorrow to others, although they could (by so causing) obtain the wealth which confers greatness.

† மாசற்றூர் யாவர்க்கும் என்றும் பாடமுண்டு.

‡ யோகாப்பியாசத்தால் பெறப்படும் அணிமாமுதலிய ஐசுவரியங் களைப் பிறர்க்குத் தீமைசெய்து பெறுதல் முடியாததுபற்றி (பெறினும் என்னும்)உம்மை பெருமை மேற்று (மேலது) என்று கூறப்பட்டது.

¶ சிறப்பென்னும்பெயர் அதனையுடைய யோகத்திற் காயது ஆகு பெயராம்; இது விடாத லிலக்கணையாம்.

§ வாயுவை வெல்லுதல் - பிராணவாயுவை இரேசக பூரக கும்பகஞ் செய்தல். இது பிராணயாம மெனப்படும். இரேசகம் - பிராணவாயுவை மூக்கின் வலது துவாரவாயிலா வீடுதல்; பூரகம் - பிராணவாயுவை மூக்கின் இடது துவாரவாயிலாக வள்ளுக்கிழுத்தல். கும்பகம்-பிராணவாயுவை யுள் னேயடக்குதல்.

* அணிமாமுதலிய (எட்டுச்) சித்திகளினிலக்கணங்களைக் கடவுள் வாழ்த்து ஒன்பதாவது செய்யுளின் குறிப்பிற் காண்க.

உ. கறுத்தின்ஞ செய்தவக் கண்ணு மறுத்தின்ஞ
செய்யாமை மாசற்றூர் கோள்.

பரி:—(இ - ள்). தம்மேற் சேற்றங்கொண்டு ஒருவன் இன்ஞதவற்றைச் செய்தவிடத்தும், மீண்டு தாம் அவனுக்கின்ஞதவற்றைச் செய்யாமையும் அவரது துணிவு, (எ - று).

† இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அவ்வின்ஞதவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பாலதென பதாம்.

தெளி:—(இ - ள்). கறுத்து - (ஒருவன் தன்மீது) வைரங்கொண்டு, இன்ஞ - துன்பந்தருவனவற்றை, செய்தவக்கண்ணும் - செய்தவிடத்திலும், மறுத்து - மீண்டு, இன்ஞ - (தாம் அவனுக்குத்) துன்பந் தருவனவற்றை, செய்யாமை - செய்யாமையும், மாசற்றூர் - அக்குற்றமற்றவரது, கோள் - துணிவு, (எ - று).

செய்யாமையு மென்னும் இறந்ததுதழீஇயவெச்சவும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. அத்துன்பந் தருவனவற்றை மனதிற் கொள்ளாமல் விடுவது செய்யத்தக்க தென்பதாம்.

(க - து). பெரியோர் தமக்குத் தின்பஞ் செய்தவர்களுக்குந் துன்பஞ் செய்யார் என்பது.

2 It is the determination of the spotless not to do evil even in return to those who have cherished enmity and done them evil.

ரூ. செய்யாமற் சேற்றூர்க்கு மின்ஞத செய்தபி
னுய்யா விழுமந் தரும்.

பரி:—(இ - ள்). தானே முன்போரின்ஞமை செய்யாதிருக்கந் † தன்மேற் சேற்றங் கொண்டவர்க்கும் இன்ஞதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின், அச்செயல் அவனுக்குக் கடக்கமுடியாத இடும்பையைக் கொடுக்கும், (எ - று).

அவ்விடும்பையாவது தவமிழந்து பழியும் பாவமும் எய்துதல்.

தெளி:—(இ - ள்). செய்யாமல்-(தான் முன்புதுன்பந் தருவ தொன்றைச்) செய்யாதிருக்க, செற்றூர்க்கும் (தன்மீது) வைரங்கொண்டவர்க்கும், இன்ஞத - துன்பந் தருவனவற்றை, செய்தபின் - (துறந்தவன்) செய்வானாயின், (அச்செயலானது), உய்யா - கடக்கமுடியாத, விழுமம் - இடும்பையை, தரும் - (அவனுக்குக்) கொடுக்கும், (எ-று).

† செய்யாமையும் என்றவும்மை 'பிறக்கின்ஞ செய்யாமையேயன்றி ன்பதைத் தழுவிநிற்றலின், இறந்தது தழீஇய வெச்சவும்மைய யிற்று.

† தன்னேச்செற்றூர்க்கும் என்றும் பாடமுண்டு.

அவ்விடும்பையாவது தவத்தையிழந்து பழியையும் பாவத்தையும் அடைதல்.

(க - து). காரணமின்றித் துன்பஞ் செய்தார்க்குந் துன்பஞ் செய்தல் கூடாது; செய்தால், அது பெருந்துன்பத்தைத் தரும் என்பது.

3. If an ascetic inflict suffering even on those who hate him, when he has not done them any evil, it will afterwards give him irretrievable sorrow.

ச. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

பரி.—(இ-ள்). தமக்கீன்னாதவற்றைச் செய்தாரைத் துறந்தேயாவது ஒறுத்தலாவது அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய வுபகாரஞ் செய்து * அவ்விரண்டனையும் மறத்தல், (எ-று).

† மறவாவழிப் பின்னும்வந்து கிலேக்குமாகலின், மறக்கற் பாலவாயின.
‡ அவரை வெல்லுமுபாயங் கூறியவாறு. இவை மூன்றுபாட்டானுஞ் செற்றம் பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது.

* அவ்விரண்டனையும்- பிறர் தமக்குச் செய்ததீமைகள், தாம் அவர்க்குச் செய்த இனியவுபகாரங்கள் (சந்தோஷத்திற் கேதுவான வுபசாரங்கள்) ஆகிய இரண்டையும்.

† பிறர் தமக்குச்செய்த தீமைகளேயும் தாம் அவர்க்கு (அவர் வெட்கப் படும்படி) செய்த இனியவுபகாரங்களேயும் துறந்தார் மறக்காதவிடத்து அவை பின்னும் ஞாபகத்திற்கு வருதலோன்றுமாகலின், மறக்கத் தக்க வையாயின வென்க. இங்கே மறத்தலென்றது அச்செய்கைகள் சம்ஸ்காரவாயிலாக ஞாபகத்திற்குவாராதொழிதலே. அனுபவத்தின் காரியமாய் எண்ணத்திற் கேதுவாயிருப்பது சம்ஸ்காரமெனப்படும். கள்ளாமையதிகாரத்தின் அவதாரிகையில் ''புறத்திப் போகாதிமடங்கி ஒருதலேப்பட்டு உயிரையேதோக்கற்பாலதாய அவர் (துறவிகள்) மனம்'' என்றுகூறியிருத்தலினுல் நீத்தார்க்கு ஆத்மஜிக்தனேயன்றி வேறுஜிந்தனே யிருத்தல்கூடாதென்பது நன்குவிளங்கும்; விளங்கவே, நீத்தார்க்கு வேறுஜிந்தனே ஆத்மஜிக்த னேக்குத் தடையாகுமென்க. பிறர் தமக்குச் செய்ததீமைகளை யெண்ணும் போது னெழிகுத்து உயிரையே நோக்கியமைதலாயிருக்கும் மனமானது அமைதிகெட்டுக் கலக்கத்தை யடைதலினுலும், தமக்குக்கெடுதிசெய்தவர்களுக்குத் தாம்செய்த இனியவுபகாரகளே யெண்ணும்போது தமது மேன்மைகாணப்பட்டு அதனுல் அகங்கரிப்புண்டாகிக் கலக்கத்தை யடைதலினுலும், கலக்கம் மனம் ஒருமுகப்படாமைக்குக் காரணமாயிருத்தலினுலும், மனம் ஒருமுகப்படாதபோது ஆத்மஜிக்தனே யுண்டாகாதிருத்தலினுலும் அவ்விரண்டும் மறக்கத் தக்கவையாயின வென்க.

‡ அவரை—தமக்குத் தீமை செய்தவரை,

தெளி.—(இ-ன்). (தமக்கு) இன்னு - தின்பந்தருவனவற்றை, செய்தாரை-செய்தவர்களே, ஒறுத்தல் (தண்டித்தோர்) தண்டித்தலாவது, அவர் நாண- அவர் (தாமே) நாணும்படி, (அவருக்கு), நன்னயம்- இனிமையான மெய்ச்சிகிலே, செய்து—, விடல்-(அவ்வினாண்டையும்)மறத்தலாம், (எ-று).

மறவாதவிடத்துப் பின்னும் வந்து தோன்றுமாதலின், அவை மறக்கத்தக்கனவாயின. அவைவெல்லுமுபாயஞ்சொல்லியபடி. இவை மூன்று பாட்டாலும் வைரம்பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது.

(க-து). தின்பஞ் செய்தார்க்கு இன்பஞ் செய்தால் அதுவே அவர்க்குத் தண்டனையாம் என்பது. (ஏ)

4. The (proper) punishment to those who have done evil (to you), is to put them to shame by showing them kindness, in return and to forget both the evil and the good done on both sides.

நி. அறிவினு ணுகுவ துண்டோ பிறிதினெய்
தந்நோய்போற் போற்றக் கடை

பரி.—(இ-ள்.) துறந்தார்க்கு $ உயிர்முதலியவற்றை உள்ளவாறு அறிந்த் அறிவினன் ஆவதொரு பயனுண்டோ? § பிறிதோருயிர்க்கு வரும் இன்னுதவற்றைத் தம்முயிர்க்கு வந்தாலொக்கக் குறிக்கொண்டு காவாவிடத்து, (எ-று).

‖ குறிக்கொண்டு காத்தலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் ¶ முதலிய தந்தொழில்களானும், 0 பிறவாற்றானும், உயிர்

$ உயிர்முதலியவற்றை யுள்ளவா றறிதலேபற்றிக் கள்ளாமை யதிகாரத்தின் ஆருவது செய்யுளின் விசேடவுரையிற் காண்க.

§ பிறிதோருயிர்க்கு வரும் இன்னுதவற்றைத் தம்முயிர்க்கு வந்தனபோலக் குறிக்கொண்டு காக்கவேண்டுமென்பது "பிறரிடையின்னுயிற்றிடந் தமக்குப் பிழைப்பற வெய்துமென் பதனை, அறிகுறாறிஞ ராதலாலுயிர்க ணனைத்தையுந் தம்முயிர் போல, நெறியினிற் கருதல் வினையவ மைந்து புலனெய நெறியலா வழியிற், பொறியினிற் செலுத்தா தடக்குணன் குணர்ந்த புலமையோ ரொழுக்கெனப் புகல்வார்" என்று காஞ்சிகாண்டம் கூறுவதாலு மறியப்படும்.

‖ குறிக்கொண்டு-கவனம்வைத்து.

¶ முதலிய என்றதனால் தண்ணீர் கவர்தல், காறியுமிழ்தல், நெருப்பு மூட்டல் முதலியவற்றையுங் கொள்க.

0 பிறவாற்றானும் (வேறுவழிகளாலும்). அவையாவன. "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்கு மெனின்" என்று ஓதி யிருப்பதனால் அசத்தியங் கூறி யுயிரைக்காத்தல், தமது ஆற்றற் கேற்றவாறு ஒரு பிராணியை மற்றொரு பிராணி கொல்லா வண்ணஞ்செய்தல் முதலியனவா மென்க.

களுறுவனவற்றை முன்னேயறிந்த உருமற் காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நண்ணிய வுடம்புடையவற்றைப்பற்றி வருதலின் பொதுப்படப் 'பிறிதினெஞ்' என்றும், மறப்பான் அது தன்புறினும் நமக் கின்னு செய்தலாமென்றறிந்த காத்தல்வேண்டு மாகலின், () அது செய்யா வழி ‡† 'அறிவினு ளுருவ தண்டோ' என்றுங் கூறினார். இதனும் சோர் வாற் செய்தல் விலக்கப்பட்டது.

தெளி.—(இ-ள்). பிறிதின்-வேறுருயிருக்கு(வரும்), நோய்-துன்பந் தருவனவற்றை, தந்நோய்போல் - தம் முயிர்க்குவந்த துன்பங்கள்போல, போற்றுக்கடை- (குறிக்கொண்டு) காப்பாற்றுத வீடத்து, அறிவினுள்- (துறக்தார்க்கு வுயிர்மூதலியவற்றை உள்ளவாறு அறிந்த) அறிவினுல், ஒருவது - ஒருவொருபயன், உண்டோ-உளதோ, (இல்லை), (எ-று).

குறிக்கொண்டு காப்பாற்றலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நீற் றல், உண்டல் முதலாகிய தமதுதொழில்களாலும், மற்றையவற்றாலும் உயிர்களடையும் துன்பங்களே முன்னே அறிந்து அவை வாராமற்காத்தல். இத்துன்பம் பெரும்பான்மையும் அஃறிணையில் எறும்புமுதலாய சிறியவு டம்புடைய பிராணிகளேப்பற்றி வருதலால் பொதுப்படப் 'பிறிதினெஞ்' என்றும், மறப்பினுல் அப்பிராணிகள் துன்பத்தை யடையினும் நமக்குத் துன்பஞ்செய்தலாமென்று அறிந்து காத்தல்வேண்டு மாகலின், அதுசெய் யாத விடத்து 'அறிவினு ளுருவ தண்டோ' என்றும் சொல்லினர். இத னுல் சோர்வினுல் துன்பந் தருவனவற்றைச் செய்தல் விலக்கப்பட்டது.

(க - து). அறிவினது பயன் பிறிதோருயிர்க்கு வருந் துன்பத் தைத் தனக்கு வந்தது போலக் கொள்ளுதலாம் என்பது.

5. What benefit has he derived from his knowledge, who does not endeavour to keep off pain from another as much as for himself?

சு. இன்னு வெனத்தா னுணர்ந்தவை துன்னுமை
வேண்டும் பிறன்கட் செயல்.

பரி.—(இ-ள்). மிக்கிடத்து இன்னுதனவென அனுமானத்தால் தான றிந்தவற்றைப் பிறன்மாட்டுச் செய்தலே மேலாமை துறந்தவனுக்கு வே ண்டும், (எ - று).

‡ இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை காட்சியளவை

() அது - காத்தல். † அறிவாற்பயனில்லை என்றும் பாடமுண்டு.

‡ உயிர்க்குணமான இன்பத்துன்பங்கள் பிரத்தியட்சப் பிரமாணத்தி னுல் அறியப்படாவாகலின், அவை அனுமானப் பிரமாணத்தினு லறியப் படவென்றும் மேலே முதலிய விடத்துப் புகையைக்கண்டு இங்கு நெருப்பு ண்டென்று ஊகித்தறிவது போலப் பிறரது முகவிலாசத்தையும் அஃறில் லாலுமையுங்கண்டு, அவரது உள்ளத்தில் சுகமும் துக்கமுமுண்டென்று ஊகித்தறிதல் வேண்டுமென்க. ஒருயிரின் சுகதுக்கம் பிறிதோருயிர்க்குப் பிரத்தியட்சமாகாதென்பது கருத்து.

யான் அறியப்படாமை யறிக. $ அறமும் பாவமும் உளவாவது மன மூல ஞயவழியாகலான் 'உணர்ந்தவை' என்றார்.

தெளி:—(இ - ள்). இன்ஞவென - (மனிதருக் நந்) துன்பந்தருவன வென்று, தானுணர்ந்தவை - (அனுமானப் பிரமாணத்தினால்) தான் அறிந்தவற்றை, பிறன்கண் - பிறனிடத்து, செயல்-செய்தலை, தன்ஞமை-பொருந்தாமை, வேண்டும்-(துறந்தவனுக்கு) வேண்டும், (எ - று).

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை பிரத்தியட்சப் பிரமாணத்தினால் அறியப்படாமையறிக. அறமும் பாவமும் உண்டாவது மனமூளனயவிடத்தாகலின் 'உணர்ந்தவை' என்றார்.

(க - து). தான் துன்பமென் றறிந்தவற்றைப் பிறனிடத்துச் செய்யாதிருத்தல் வேண்டும் என்பது.

6. Let not a man consent to do those things to another which he knows will cause sorrow.

எ. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்கீகு மனத்தானு
மாணுசெய் யாமை நலை.

பரி.—(இ - ள்). மனத்தோடு உளவாகின்ற இன்னுத செயல்களை எக்காலத்தும் யாவர்கீதுஞ் சிறிதாயினுஞ் செயயாமை தலையாய அறம், (எ-று).

ஈண்டு மனத்தா ஞகாதவழிப் பாவமில்லையென்பது பெற்றும். ஆற்றலுண்டாய காலத்தும் ஆகாமையின் 'எஞ்ஞான்றும்' என்றும், எளியார்க்கும் ஆகாமையின் ' யார்க்கும்' என்றும், செயல் சிறிதாயினும், பாவம் பெரிதாகலின் 'எனைத்தானும்' என்றும் கூறினர்.

தெளி:—(இ - ன்). மனத்தானும்-மனத்தோடு உண்டாகின்ற, மாணுதன்பந் தருஞ்செயல்களை, எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், யார்க்கும்-

ஈண்டனுமானமாமாறு:—1 இராமன் இன்பமுடையான்; முகக்கினர்ச்சியுடையவனுயிருத்தலின்; யாவன் இன்பமுடையானல்லன் அவன் முகக் கினர்ச்சியுடையானல்லன், (இந்திரஜித்தையிழந்து வருந்தும்) இராவணன் போல.

2 இராவணன் துன்பமுடையான்; அவன் முகக்கினர்ச்சியின்றிய வனுயிருத்தலின்; யாவன் துன்பமுடையானல்லன் அவன் முகக்கினர்ச்சி யின்றியவனல்லன்' இராமன்போல.

$ ஒருவனுக்கு அற(தரும)மும் பாவமும் உண்டாவது அவன் மனமூள்ளவனுன விடத்தேயாதலால் 'உணர்ந்தவை' என்றார். இதன் தாற் பரியமாவது பாவமும் புண்ணியமும் புத்தி பூர்வகமாய்த் தீச்செயலையும் நற்செயலையும் புரிவதானுண்டாருமேயன்றி அபுத்தி பூர்வகமாய்அவற்றைச் செய்வதனுலுண்டாகா என்பது.

யாவர்க்கும், எனைத்தானும் - சிறிதாயினும், செய்யாமை - செய்யாதிருத்தல், தலை - முதன்மையான அறம், [எ-று].

* *இங்குத் தன்பக்தருஞ்செயலே மனமறியாது செய்தவிடத்து அதனால் பாவமுண்டாவதில்லை என்பதுபெற்றும். வல்லமையுண்டான காலத்திலுந் தன்பக்தருஞ்செயலைச் செய்தல் நன்மை யாகாமையால் 'எஞ்ஞான்றும்' என்றும், வீரியார்க்கும் அதனைச்செய்தல் நன்மையாகாமையால் 'யார்க்கும்' என்றும், செயல் சிறிதாஞலும் பாவம் பெரிதாகலால் 'எனைத்தானும்' என்றும் சொல்லினர்.*

(க - து). எந்தக் காலத்திலும் எத்தன்மையோர்க்கும் தீமை செய்யாதிருத்தலே முதன்மையான தருமமாகும் என்பது.

7. It is the chief of all virtues not knowingly to do any person evil, even in the lowest degree and at any time.

அ. † தன்னுயிர்க் கின்ஞமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்ஞ செயல்.

பரி.—(இ - ள்). பிறர்செய்யும் இன்ஞதன தன்னுயிர்க்கு இன்ஞ வாந் தன்மையை அனுபவித் தறிகின்றவன் நிலேபேறுடைய பிறவுயிர் கட்குந் தானவற்றைச் செய்தல் என்னகாரணத்தான், (எ - று).

---

*"(பிரஹ்ம ஹத்திமுதலிய) இந்த மஹாபாதகங்களைக் குணமுள்ள பிராமணன் (மனம்) அறியாது செய்தால், அவன் பிராயச்சித்தஞ் செய்துகொண்டபின் அவனுக்கு அரசன் 500 பணம் தண்டம்விதிக்க"; "பிராமணனெழிந்த மற்றக்குணமுள்ள மூன்று வருணத்தாரும் மஹாபாதகங்களே (மனம்) அறியாது செய்தால் அவர்களின் பொருளெல்லாவற்றையுங் கவருதலைத் தண்டமாக விதிக்க" என்று மனுதர்மசாஸ்திரம் ஒன்பதாவ தத்தியாயத்திற் கூறுவதும்,

"செய்தியிர்கட் கினிமை" என்னுங் கொலை மறுத்தல் செய்யுளிலுரையில் திருப்போரூர்—சிதம்பர சுவாமிகள் "கொல்லாவிரதியாய் நடந்து வருங்காலத்து உண்மையறியாமல் வந்த கொலைதோஷமானது வேறொரு விதத்தால் நாசத்தையடையும்; அஃதெத்தாலென்னில், சற்குருவினது திருப்பாதத்தை நியமமாக வழிபட்டுச் செய்யும் அவனது எவரின் வலியாலெனக்கொள்க" என்று கூறுவதும் இங்கு நன்கு கவனித்தற் பாலனவாம்.

† "இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ, வன்சொல் வழங்கு வது" என்னுங் குறளு மிங்கறியத் தக்கதாம்.

† இவ்வாறே இவை பிறவுயிர்க்கும் இன்னுவென்பது ‡ அறுமாண்டத் தானறிந்தவைத்தச் செய்கின்ற 0 பாவங் கழுவப்படாமையின், இன்னு தனையான்வருந்தப் பின்னே வந்து வருத்தியென்பது ஆகமத்தானு மறிந்து ஒழியற்பாலனென்பது தோன்றத் 'தான்' என்றும், அத்தன்மையான் ஒழியாமைக்குக் காரணம் மயக்கமென்பது தோன்ற 'என்கொலோ' என்றுங் கூறினர். ‡ இவை மூன்று பாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது.

தெளி.—(இ-ள்). தன்னுயிர்க்கு-(பிறர்செய்யும் தின்பந்தருஞ்செயல்கள்) தனதுயிர்க்கு, இன்னுமை - தன்பந்தருவனவாந் தன்மையை, அறிவான் - (அனுபவித்து) அறிகின்றவன், மன்னுயிர்க்கு - நிலைபெறுதலை யுடைய பிறவுயிர்களுக்கு, இன்னு - அத்தின்பந்தருஞ்செயல்களை, தான் செயல் - தான்செய்வது, என்கொலோ-என்னகாரணத்தால், (எ - று).

† பிறர் செய்யுந் தீமைகள் தன்னுயிர்க்குத் தின்பந்தருந்தன்மையை யனுபவித்தறிகின்றவன் இவ்வாறே (பிறர் செய்த தீமையால் நான் வருந்துவதுபோல) இவை (நான்செய்யும் தீமைகள்) பிறவுயிர்க்கும் இன்னு (தின்பந் தருவனவாகும்) என்பது அனுமானத்தால் அறிந்து வைத்து (அறிந்திருந்தும்)செய்கின்ற பாவம் கழுவப்படாமையின் (பிராயச்சித்தத்தால் நீக்கப்படுதலில்லாமையால்) இன்னதை (பிறவுயிர்களுக்குத்தின்பமூண்டாகுமாறு யான் செய்ததீமைகள்) யான் வருந்தப்பின்னே (மறுமையில்) வந்து வருத்தமென்பது ஆகமப் (தூல்) பிரமாணத்தாலும் (இரும்பார்க்குங் காலரா யேதிலார்க் காளாய்க்,கரும்பார் கழணியுட் சேர்வர்-சுரும்பார்க்குங், காட்டோய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங், கூட்டோய்க் கொண்டுவைப் பார். அக்கேபோ லங்கை யொழிய விலமுழுதித், தக்கத் தொழுகோ யெழுபவே - அக்கால், அலவனைக் காதலித்துக் கான்மூரித்தத்தின்ற, பழவினை வந்தடைந்தக் கால் என்று) அறிந்து (பிறவுயிர்களுக்குத் தீமைசெய்தலே) ஒழியற்பாலன் (ஒழியக்கடவன்) என்பதேதோன்ற (வினுங்) த் 'தான்' என்றும்; அத்தன்மையான்(இம்மையில் பிறவுயிர்களுக்குச் செய்த தீச்செயல்கள் மறுமையில் வந்து தம்மைச் செய்தவினை வருத்துமென்பதை நூற்பிரமாணத்தினு லறிந்தவன்) (பிறவுயிர்களுக்குத் தீங்கு செய்தலே) ஒழியாமைக்குக் காரணம் மயக்கம் (அஞ்ஞானம்) என்பது தோன்ற 'என்கொலோ' என்றும் கூறினரென்க.

‡ ஈண்டனுமானமாமாறு:—இப்பிராணி தின்புற்று வருத்தினின்றதிர் நாம் அடித்தல் முதலியகொடுஞ்செயல்களைச் செய்தமையின்; பிறர் செய்த கொடுஞ்செயலால் நாம் தின்புற்றுவருந்தியதுபோல என்பது.

0 இப்பாவம் என்றும் பாடமுண்டு.

‡ ''இன்னுவென'' ''எனைத்தானும்'' ''தன்னுயிர்க்கின்னுமை'' என்னுமுதலினையுடைய இம்மூன்று குறளாலும் பயனெஞ்சிச் செய்தல், செற்றம் பற்றிச்செய்தல், சோர்வாற் செய்தல் என்னு மூன்றிற்கும் பொதுவாமாறு இன்னுசெயல் விலக்கப்பட்டதென்க.

இப்படியே இச்செயல்கள் பிறவுயிர்க்கும் துன்பந்தருவனவென்பதை அனுமானத்தால் அறிந்திருந்தும் செய்கின்ற பாவம் பரிகரிக்கப் படாமையால், துன்பந்தருமவைகள் யான் வருத்தத்தையடைய பின்னே வந்து தன்னே வருத்து மென்பதை (அனுமானத்தாலே யன்றி) ஆகமத்தாலும் அறிந்து அவற்றை விடக்கடவனென்பது தோன்றத் 'தான்' என்றும், அத்தன்மையான் (துன்பந்தருஞ் செயல்களே) ஒழியாமைக்குக் காரணம் மயக்கமென்பதுதோன்ற 'என்கொலோ' என்றும் சொல்லினர், இவை மூன்று பாட்டாலும் பொதுவாகையால் இன்னுசெயல் விலக்கப் பட்டது.

(க - து). பிறர்செய்யும் தீமை தனதுயிர்க்குத் துன்பந்தருவதாயிருத்தலே யனுபவித்தறிகின்றவன் பிறவுயிர்க்குத் தீமை செய்தல் அறியாமையேயாம் என்பது.

8. Why does a man inflict upon other creatures those sufferings, which he has found by experience are sufferings to himself?

கூ. $ பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு பிற்பகற் ருமே வரும்.

பரி.—(இ - ள்). துறந்தவர் பிறர்க்கின்றனவற்றை ஒருபகலது முற்கூற்றின்கட் செய்வராயின், தமக்கின்றன அதன் பிற்கூற்றின்கண் அவர்செய்யாமற் றுமேவரும், (எ - று).

¶ முற்பகல் பிற்பக லென்பன முன் பின்னுகத் தொக்க ஆரும் வேற்றுமைத்தொகை. ‡ தவமழிதலின், அங்ஙனங் கழிதினும் எளிதி

$ "நெடியது காண்கலாய் நீயளியை நெஞ்சே, கொடியது கூறினுய் மன்ற - அடியுனே - முற்பகற் கண்டான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் கண்டு விடும்" என்பது பழமொழி.

¶ பகல்முன் பகல்பின் என்பன முற்பகல் பிற்பகல் எனமாறி நின்ற ஆரும் வேற்றுமைத்தொகைச்சொற்கள். இவை பகலின தருமுன், பகலினது பின் எனவிரியும். இங்ஙனம் மாறி நிற்பது இலக்கணப் போலியெனப் படும். "நிலைமொழி வருமொழிகள் முன்பின்னுக மாறி நிற்பன இலக்கணப்போலி" என்பது நன்னூல்விருத்தியுரை. "தற்புருடத்தொகை" என்னுஞ் செய்யுளி னுரையில் பிரயோக விவேக நூலார் "பரிமேலழகர் முற்பகல் பிற்பகல் என்பனவற்றை முன்பின்னுகத்தொக்க ஆரும் வேற்றுமைத்தொகையென்பர். வடநூலார் முன்னின்ற மொழிபிரதமையாகலின், பிரதமா தற்புருடனென்பர்" என்று கூறுவர்.

‡ துறந்தவர் பிறர்க்குத்துன்பந் தருவனவற்றைச் சினங்காரணமாகச்செய்தலால் அவரது தவமானதழித்து விடுகின்றது; அழிந்தது விடுதலுஞ்

ணும் வரும்; அதனால் அவைசெய்யற்கென்பதாம். † இனித் தானே வரு மென்பது பாடமாயின், அச்செயல்தானே தமக்கின்னுதனவாய் வருமென உபசாரவழக்காகி, ஆக்கம் வருவித்துரைக்க.

தெளி.—(இ-ன்). (துறந்தவர்) பிறர்க்கு—அன்னியர்க்கு, இன்னு-தின்பந் தருவனவற்றை, மூற்பகல்-ஒரு முகூர்த்தத்தினது மூற்பாகத்தில், செய்யின் - செய்வாராயின், தமக்கு—,இன்னு-தின்பந்தருமவைகள், பிற்ப கல்-அம்முகூர்த்தத்தினது பிற்பாகத்தில்,(அவர்செய்யாமல்) தாமேவரும்-.

பகல்முன் பகல்பின் என்பன முன்பின்னுகமாறி (ஆறனுருபு தொக் கு) மூற்பகல் பிற்பகல் எனவந்தன. (பிறர்க்குத்துறந்தவர் தன்பங்கள் தரு வனவற்றைச செய்தலால் தமது) தவமழிந்து போதலின், அவ்வாறு (தன் பங்கள்) விரைவிலும எளிதிலும் வரும்; அதனால் துறவிகள் அத்தின்பந்

அல்லனம் (அப்படி அஃதாவது மூற்பகலில் பிறர்க்குத் தன்பஞ் செய்தால் பிற்பகலில் அதுகாரணமாகத் தன்பஞ்செய்தவர்க்குத் தன்பம்)விரைவாக வும் எளிதாகவும் வருமு; அதனால் (மூற்பகலில் பிறர்க்குத் தீமையைச் செய் தால் பிற்பகலில் அது வாயிலாகத் தீமை செய்தவர்க்குத் தீமை விரைவாக வும் எளிதாகவும் வருவதாக விருத்தலால்) அவை (பிறர்க்கின்னுதன வற் றைச) செய்ய வேண்டாம் என்பதாம், "தபோதனர்களுஞ் சினமெனும், பாவமூற் றயலோர் பதைபதைத் துபிரிச், சாபமிட் டனையர்தந்தவமும் விட் டிவிடுமே" என்று மெய்ஞ்ஞானவிளக்கங்கூறுவதும், "கோபத்தினு லுண்டானஎட்டுத்தக்கங்களாவன: புறங்கூறுதல், தணிவு, துரோகம்,பொ ருண்மை,பிறர் குணத்தைச் சகியாமை, பிறாபொருளை யபகரித்தல், காரண மின்றியடிதலதல், நிட்டித லெனவெட்டாம்" என்று மனுதருமசஸ் திரம் 7 - வது அத்தியாயத தற்கூறுவதும், இங்கறியத் தக்கனவாம். இதனால் பிறர்க்குத் தீமையை யளவுகடந்து செய்தவருக்கு இம்மையி லேயே விரைவாகவும் எளிதாகவும் தன்ப முண்டாகுமென்பது பெறப்படு கின்றதென்க.

† தாமேவரும் என்னுது தானேவரும் என்று பாடங் கூறுவாரு மிரு த்தல் பற்றித் 'தானே வருமென்பது பாடமாயின்' என்று பாடபேதங்கூறி அதற்குப்பொருள் (துறந்தவர் பிறர்க்குத் தன்பந்தருஞ் செயலே யொரு பகலது முன்பாகத்தினகண் செய்வாராயின) அச்செயல்தானே (அப்பக லது பின்பாகத்தின்கண்) தமக்குத் தன்பதருவனவாய்வரும் என்று உப சாரவழக்கால் இன்பாக்கம் வருவித்துரைத்துக்கொள்க என்றுகூறினுரென்க. அச்செயலால் தமக்கு இன்னுதன வருமென்று (பிறர்க்குத்தீமைசெய்த லேக் காரணமாகவும் அதனால் தமக்கு இன்னுதன் வருதலேக் காரியமாகவும்) கூறுது, அச்செயல் தானே தமக்கு இன்னுதனவாய் வரும் என்று கூறி யது உபசாரவழக்காமென்க. அச்செயலால் வரும் இன்னுதனவற்றை அச்செயலே இன்னு என்று கூறினமையின், இது காரணங் காரியமாய் உபசாரவழக்காம். தமக்கு இன்னுதனவாய் என்பதன்கணுள்ள ஆய் என் பது ஆக்கச்சொல்லாம்.

தருஞ்செயல்களைப் பிறர்க்குச் செய்யாதிருக்கக் கடவரென்பதாம். முகூர்த்தம்-இரண்டுநாழிகை.

(க - து). பிறர்க்குத் தீமை செய்பவர்க்கு அத்தீமையின் பயனை துன்பம் விரைவாகவும் எளிதாகவும் வருமென்பது.

9 If a man inflict sorrow upon others in the morning, it will come upon him unsought in the very evening.

கo. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

பரி.—(இ-ள்). இன்னுதனவெல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னுதன செய்தார் மேலவாம்; அதனால், தம்முயிர்க்கு இன்னுதன வேண்டாதார் பிறிதோருயிர்க்கு இன்னுதன செய்யார், (எ-று).

* உவர்நிலத்து விளைவித்திட்டார்க்கு வீளைவும் அதுவேயாகலின்

* உவர் (உப்பு) நிலத்து விளைவித்திட்டார்க்கு (விளைவதற்குத் தகுதியான விதையை விதைத்தவர்களுக்கு) வீளைவும் அதுவேயாகலின் (விளைதலும் அந்நிலத்தின் தன்மையாகவே யிருத்தலினால்).

உவர்நிலத்தில் விளைபயன் கொள்ளும்படி கீரைவிதை முதலியவற்றை விதைத்தவர்களுக்கு அவ்விதை காரணமாக வுண்டாகும் வீளைவும் அவ்வுவர்நிலத்தின் தன்மையதாகவே யிருத்தல்போன்று, பிறிதோருயிர்க்குத் துன்பந்தருஞ் செயல்களைச் செய்தவர்க்கு அது காரணமாக வரும் பயனும் துன்பமேயாகும் என்பது கருத்தாமென்க. (உவர்நிலம் என்பது பிறிதோருயிர்க்குத் தீமை செய்யப்படிய வுள்ள மென்றும், விளைவித்திடுதல் என்பது பின் தீமையை புண்டுபெண்ணும் தீவினையை அவ்வுள்ளத்தில் சம்ஸ்கார மாக்குதலென்றும், வீளையும் அதுவே யாதல் என்பது அச்சம்ஸ்கார வாயிலாகவரும் தீமையும் அவ்வுள்ளத்தின், தன்மையதாகவேயிருக்குமென்றுங்கொள்ளவேண்டுமென்க) திருக்கோவையாரின் "நினைவித்து" என்னுஞ் செய்யுளிலுள்ள "வினைவித்திக் காத்து வீளைவுண்ட தாகி விளைந்ததுவே" என்பதும், தினையைவிதைத்தவன்தினையை யறுப்பான், வினையை விதைத்தவன்வினையை யறுப்பான் என்னும் பழமொழியும், இங்குக் கவனிக்கத்தக்கனவாம்.

உவர்நிலத்து என்பதற்குப் பிரதியாக உயிர்நிலத்து என்றும் பாடமுண்டு. அப்பாடத்திற்குப் பொருள் உயிராகிய நிலத்தில் வீளைவித்திட்டார்க்கு - (சுகதுக்கங்களை யுண்டுபெண்ணும் நல்வினை தீவினைகளின் சம்ஸ்காரத்தையுண்டுபெண்ணினவர்களுக்கு) வீளைவும் அதுவே யாகலின் (பின் வரும் பயனுகிய சுகதுக்கங்களும் அச்சம்ஸ்காரத்திற்கேற்ற வண்ணமே யுண்டாகுமாதலால்) என்பதாம்.


'நோயெல்லா நோய்செய்தார் மேலவாம்' என்றார். இது * சொற்பொருட் பின்வருநிலை. இவை யிரண்டுபோட்டாலும் † அது செய்தார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

தேவி—(இ-ள்). நோயெல்லாம் - துன்பந்தருவனவெல்லாம், நோய் செய்தார் மேலவாம்- (பிறிதோருயிர்க்குத்) துன்பந்தருவனவற்றைச் செய்தவர் மேலனவாம், (அதனால்), நோயின்மை வேண்டுபவர் - (தம்முயிர்க்குத்) துன்பந்தருவனவற்றை விரும்பாதவர், நோய் - (பிறிதோருயிர்க்குத்) துன்பந்தருவனவற்றை, செய்யார் - செய்யமாட்டார், (எ-று).

உவர்நிலத்தில் விதைவிதைத்திட்டார்க்கு விளைவும் அதுவேயாகலால் 'நோயெல்லா நோய்செய்தார் மேலவாம்' என்றார். இது சொற்பொருட் பின் வருநிலை யணி. இவை யிரண்டு பாட்டாலும் அது செய்தவர்க்கு வரும் தீங்கு சொல்லப்பட்டது.

(க - து). தாம் துன்பமடையாதிருத்தலே விரும்புவார் பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யார் என்பது.

10. Sorrow will come upon those who cause pain to others; therefore, those who desire to be free from sorrow, give no pain to others.



ஒன்பதாவது அதிகாரம்.

கொல்லாமை—*Against destroying Life.*

பரி—அஃதாவது ‡ ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன

சிவக சிந்தாமணி முத்தியிலம்பகம் நாககித்துன்பத்தில் "வெவ்வினை செய்யு மாந்த ருயிரெனு நிலத்து வித்தி, யவ்வினை வினையு ளுண்ணு மவ்விடத் தவர்க டென்பம்" என்று கூறுகின்றது. அதற்குப்பொருள் நச்சினர்க்கினியர் "தீவினையைச் செய்யுமாந்தர் தமது உயிரென்னு நிலத்தே யத தீவினையை விதைத்து அத்தீவினையின் பயனே நுகரும்அந்நாகத்திடத்தே அந்நாகர் படுந்துன்பம்" என்று கூறியிருக்கின்றார்.

* நோய் என்னுஞ்சொல் பலமுறைவருவதும் பொருள்வேற்றுமை யின்றி யிருத்தலால், இக்குறள் சொற்பொருட்பின் வருநிலையணி யாம். சொற்பொருட்பின் வருநிலையணியாவது முன்னர் வந்த சொல்லும்பொருளும் பின்னர்ப்பலவிடத்தும் வருவதாம்.

† அது - பிறிதோருயிர்க்குத் தீமை.

‡ ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையன ஈறுள வுயிர்கள் - ஐயறிவும், நாலறிவும், மூவறிவும், ஈரறிவும் ஒருறிவுமுறையே யுடைய பிராணி

எறும் உயிர்க்கூச் சோர்ந்துங் கொல்லுதலைச் செய்யாமை. † இது ‡ மேற்கூறிய அறங்களெல்லா வற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் ¶ கூறுத வற்றிலுமெயும் அகப்படுத்தி நிற்றலின், இறுதிக்கண் வைக்கப்பட்டது.

கள். சப்த பரிச ரூப ரச கந்தங்களையறிவது ஐயறிவுயிரென்றும், பரிச ரூப ரச கந்தங்களை யறிவது நாலறிவுயிரென்றும், ரூப ரச கந்தங்களை யறிவது மூவறி வுயிரென்றும், ரச கந்தங்களை யறிவது ஈரறிவுயிரென்றும், பரிசுமாத்திரமறிவது ஓரறிவுயிரென்றும் அறிக. சப்தம் செவியாலும், பரிசம் தவக்காலும், ரூபம் கண்ணாலும், ரசம் நாக்காலும், கந்தம் மூக்காலும் அறியப்படுவனவாம்.

''புன் (புல்) மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்''
''மூரணர்த் தாதிநா வறிவொடு ரறிவுயிர்''·(மூரண்-இப்பிரசுத்தி-சங்கு).
''சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்''(சிதல்-கறையான்).
''தும்பிவண் டாதிகண் ணறிவினு லறிவுயிர்''.

"வானவர் (தேவர்) மக்கள் (மனிதர்) நரகர் (நரகத்திலிருப்போர்) விலங்கு (திருகம்) புள் (பறவை), ஆதி செவியறிவோ டையறி வுயிரே" என்று நன்னூல் கூறுகின்றது.

நன்னூல் விருத்தியுரைகாரர், ''ஆசிரியர் தொல்காப்பியர்'மக்க டாமே யாறறி வுயிரே' எனக் கூறியிருக்க, மக்கள் முதலியோரை ஐயறிவுயிரெனக் கூறல் மாறுகொளக் கூறலாம் பிறவெனின், மக்கள் முதலியோர் மனவறி வோடு ஆறறி வுயிரென்பது நோக்கியன்றே முன்னர் 'மக்க டேவர் நரக ருயர்திணை' எனக்கூறிப் போந்ததூஉ மாதலின், இங்ஙனம் ஐம்புலன் மாத்திரையே நுகரும் அறிவுடைய மக்கள் முதலியோரை விலங்கு முத லியவற்றோடு எண்ணி ஐயறிவுயிரெனக் கூறினரென உய்த்துணர்ந்து கொள்க.'' என்று கூறியிருக்கிறார். ''மாவு மாக்களு மையறி வினவே'' என்னும் (தொல்காப்பியச்) சூத்திரவுரையில் 'மாக்களெனப் படுவார் மன வுணர்ச்சி யில்லாதார்'' என்றும், 'மக்க டாமே யாறறி வுயிரே' என்னும் (தொல்காப்பியச்) சூத்திரவுரையில் ''மக்களெனப்படுவார் ஐம்பொறியுணர் வேயன்றி மனமென்பதோ ரறிவுமுடையர்'' என்றும், மாக்களுக்கும் மக் களுக்கும் வேற்றுமை நச்சினார்க்கினியர் கூறியிருக்கின்றனர். மனவுணர்வு பரலோகபுத்தி. மிருக முதலியவற்றிற்கு இகலோக இச்சையேயன்றிப் பர லோக இச்சையில்லாமையினால், இகலோக இச்சையும் பரலோக இச்சையு முடைய மனிதர் அவற்றினும் சிறந்தவராயினரென்க.

† இது - கொல்லாமையென்னு மில்வதிகாரம்.

‡ மேற்கூறிய அறங்கள்—முன்னர்க் கூறியுள்ள அருளுடைமை முதலியன.

¶ கூறுத அறங்கள்—சாந்திராயண விரத முதலானவை.

தெளி.—அஃதாவது ஐயறிவுடையவை முதல் ஓரறிவுடையவை யீறாகவுடைய உயிர்களே மதர்த்தம் கொல்லுதலைச் செய்யாமையாம். இது முற்கூறிய அறங்களெல்லாவற்றினும் சிறப்புடையதாய்ச் சொல்லாதொழிந்த அறங்களையும் தன்னுள் அடக்கி நிற்கையால், விரதங்களின் முடிவில் வைக்கப்பட்டது.

க. அறவினை யாதெனிற் கோல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

பரி.—(இ-ள்) அறங்களெல்லாமாகிய செய்கை யாதென்று வினவின், அஃது ஒருயிரையுங் கோல்லாமையாம், அவற்றைக் கோல்லுதல் பாவச்செய்கைகள் எல்லாவற்றையுந் தானே தரும் ஆதலான்.

§ அறம் - சாதியொருமை. § விலக்கியது ஒழிதலும் அறஞ்செய்தலா மாகலின், கொல்லாமையை 'அறவினை' என்றார், ஈண்டுப் பிறவினையென்றது † அவற்றின் விளைவை, கொலைப்பாவம் விளைக்குந்தன்மை ‡ ஏனைப்பாவங்களெல்லாங் கூடியும் விளைக்கமாட்டா என்றவாறு. $ கொல்லாமைதானே பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந் தருமென்ற § மேற்கோள்கூறி, அதற்கேது எதிர்மறைமுகத்தாற் கூறியவாருயிற்று.

$ அறம்-ஈறுதோன்றாத சாதியொருமை. ஒருமைப் பன்மையீறாக மேல் வந்து முடிக்கும் சொல்வின்றிததானே பன்மைப்பொருளை யுணர்த்துஞ்சொல் சாதியொருமையெனப்படும்.

§ "அறவினை யாதெனிற்கொல்லாமை; தோன்பென் பதுவே கொன்றதின் ஞமை; அழுக்காறாமை, வெகுளாமை, பெரியாரைப் பிழையாமை முதலாக விலக்கினவற்றைச் செய்யாமையே நல்வினைசெய்தல்" என்பது இலக்கணக்கொத்து.

† அவற்றின் விளைவு—பாவசெயல்களாலுண்டாகுந்தன்பங்களே.

‡ ஏனைப்பாவம்—பிறர்மனைவியை விரும்புதல், கட்டுடைத்தல், பிறர் பொருளைத் திருடுதல், சூதாடல் முதலிய செய்கைகளாலுண்டாகிய பாவங்கள்.

* § "ஆனை யடியு ளடங்கா வடியில்லா தானதுபோ னிற்கின்ற தன்மை தானுணியிரைக், கொல்லா வறத்தின் கொழுநிழற்கே யுள்ளடங்கு, மெல்லா வறமு மிளைத்து" என்பது பெருந்தேவனார் பாரதம்.

§ மேற்கோளெனினும் பிரதிஞ்ஞையெனினுமொக்கும். மேற்கோளாவது பக்கத்தைத் துணிபொருளுடையதாகக் கூறுவது அறவினை யாதெனிற் கொல்லாமை என்பது மேற்கோள் இங்குக் கொல்லாமை (கொலாமை தானே) என்பது பட்சம். அறவினை (பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந்தரும்) என்பது துணிபொருள்.

தெளி.—(இ-ள்.) அறவினை-அறங்களெல்லா மாயசெய்கை, யாதெனின் - யாதென்று வினவினால், (அது),கொல்லாமை-(ஒருயிரையும்)கொல்லாமையாம், கோறல்-(அவற்றைத்) கொல்லுதல், பிறவினையெல்லாம்-பாவச் செய்கை யெல்லாவற்றையும்,தரும்-(தானே) தரும், (ஆதலால்),(எ-று.)

அறம்- சாதியொருமைப் பெயர். விலக்கியதைச் செய்யாமையும் அறஞ்செய்தலாம்; ஆதலால், கொல்லாமையை 'அறவினை'என்றார். இங்குப் பிறவினையென்றது அவ்வினைகளின் விளைவை. கொலைப்பாவம் வினைக்குந்தன்பத்தை மற்றைப் பாவங்களெல்லாம் கூடியும் வினைக்கமாட்டாவென்பதாம். கொல்லாமை தானே எனையவறங்க ளெல்லாவற்றின் பயனையுந் தருமென்று மேற்கோள் சொல்லி, அதற்குக் காரணம் (கோறல் பிறவினையெல்லாந் தரும் என) எதிர்மறை முகத்தாற் சொல்லியவாறுயிற்று.

(க-து.) பிராணிகளைக் கொலைசெய்வதால் வரும் பாவம் மிகக் கொடியதா யிருத்தலால், அதனைச் செய்யாமையே சிறந்த அறச் செய்கையாம் என்பது.

1. Never to destroy life is the sum of all virtuous conduct. The destruction of life leads to every evil.

உ. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத லூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

பரி.—(இ-ள்). உண்பதனைப் பகிர்த்தவுயிர்கட்குப் பகுத்துக்கொடுத்துண்டு * ஐவகை யுயிர்களையும் ஓம்புதல் அறநூலுடையார் துறந்தார்க்குந் தொகுத்த அறங்களெல்லாவற்றினுந் தலையாய அறம், (எ-று.)

பல்லுயிரும் என்னும் முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. ஓம்புதல் † சோர்ந்துகொலை வாராமற் குறிக்கொண்டு காத்தல்.

'கொல்லாமை தானே பிறவறங்க ளெல்லாவற்றின் பயனையுந் தரும் என்பதற்கு ஏது (காரணம்) கோறல் பிறவினையெல்லார் தரும் (தருதலால்)என்று எதிர்மறையாகக் கூறியவாறும். கொல்லாமைக்கு எதிர்மறை கோறலாகலின் இங்குக்கோறல் எதிர்மறையாயிற்று.

கொல்லாமை தானே பிறவறங்களெல்லா வற்றின் பயனையுந் தரும் என்பது பிரதிஞ்ஞை; கோறல் பிறவினையெல்லார் தருதலால் என்பது எதிர்மறை ஏது.

* ஐவகையுயிர்—இவ்வதிகாரத்தி னவதாரிகையிற் கூறிய ஐவகைப் பிராணிகள்.

† மறத்தும் கொலைவாராதபடி கவனங்கொண்டு ஐவகைப்பிராணிகளையுங் காப்பாற்றுதல். துறவிகளுக்குச் சொல்லாவிரதம் அவசியமென்பது மனுதர்மசாஸ்திரம் ஆருவதத்தியாயத்தில் "இரவிலும் பகலிலும் நனை

† அதற்கு ப பகுத்துண்டல் இன்றியமையா வறுப்பாகலின், அச்சிறப்புத் தோன்ற $ அதனை இறந்தகால வினையெச்சத்தாற்கூறினர். ¶ எல்லாநூல் களிலும்நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க் கியல் பாகலின், ஈண்டும் பொதுப்பட 'நூலோர்' என்றும், அவரெல்லார்க்கும் ஒப்பமுடிதலான், இது ‖ 'தலை' என்றுங் கூறினர்.

தெளி:—(இ - ன்). பகுத்து - (உண்பதனைப் பகிர்ந்த உயிர்களுக்குப்) பங்கிட்டுக்கொடுத்து, உண்டு-, பல்லுயிர் - ஐவகையுயிர்களையும், ஓம்புதல்— காப்பாற்றுதல், நூலோர்-அறநூலுடையார், தொகுத்த வற்றுளெல்லாம்— (அறந்தவர்க்குத்) தொகுத்துள்ள அறங்களெல்லாவற்றினும், தலை-முதன் மையான அறமாம், (எ-று).

பல்லுயிரும் என்னும் முற்றும்மை செய்யுள்விகாரத்தாற்றொக்குநின் றது. ஓம்புதல்-மறந்தும் கொலைவாராமற் குறிக்கொண்டு காத்தல். அத றற்குப் பகுத்துண்ணுதல் அவசியம் இருக்கவேண்டிய அங்கமாதலால், அச்சிறப்புத் தோன்ற அதனைப் 'பகுத்துண்டு' என்று இறந்தகால வினை யெச்சத்தினாற் கூறினர். எல்லா நூல்களிலும் நல்லவைகளை யெல்லா மெடுத்து எல்லாருக்கும் பொதுப்படச் சொல்லுதல் இந்நூலாசிரியருக்கு இயல்பாதலால், இங்கும் பொதுப்பட 'நூலோர்' என்றும், அவரெல்லாரு க்கும் ஒப்ப முடிதலால், பகுத்துண்டு பல்லுயி ரோம்புதலென்னு மிதனைத் 'தலை' என்றும் சொல்லினர்.

(க - து). உண்பவற்றைப் பகிர்ந்த வுயிர்களுக்குப் பங்கிட்டுண் டு பலவகை யுயிர்களையுங் காப்பாற்றுதலே அறங்களெல்லாவற்றி னும் மேலாய அறமாம்.

குத் தெரியாமையால் யாதாவதொரு பிராணி இறந்துபோவதனாலுண்டா கும் பாவம்போவதற்காக ஸ்நானஞ்செய்தவுடனே ஸந்தியாதி ஆறுபிராண யாமஞ்செய்தல் வேண்டும்" என்று கூறுவதனாலும் உண்டாகுவிளங்கும். "கொ ல்லாவிரதம் குவலயமெல்லாமோங்க, எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச் ஞை பராபரமே" என்று தாயுமானவர் கூறுவது மிங்கறியத்தக்கது.

† அதற்கு—சோர்ந்தும் கொலைவாராமற் குறிக்கொண்டு காத்தற்கு.

0 உண்ணுந் தொழிற்கு நீராடுந் தொழில் அங்கமாதல்போன்று பல்லு யிர் ஓம்புந்தொழிற்குப் பகுத்துண்ணுந் தொழில் அங்கமா மென்க.

$ அதனை யிறந்தகால வினையெச்சத்தாற் கூறினர்—பகுத்துண்டலைப் பகுத்துண்டு என்று இறந்தகால வினையெச்சத்தாற் கூறினர்.

¶ "ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின், அன்றென்ப வாது சமயத்தார்- கன்றென, வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார், முப் பஞ்ஞ் மொழிந்த மொழி" :—திருவள்ளுவமாலை.

¶ தலையாய் அறம் என்றுங் கூறினர் என்றும் பாடமுண்டு.

2. The chief of all (the virtues) which authors have summed up, is the *partaking* of food that has heen shared with others, and the preservation of the manifold life of other creatures.

கூ. ஒன்றுக நல்லது கோல்லாமை மற்றதன்
பின்சாரப் போய்யாமை நன்று.

பரி.—(இ-ள்). நூலோர் தொகுத்த அறங்களுள் † தன்னே டிணேப்பதின்றித் தானேயாக நல்லது கோல்லாமை. அஃதொழிந்தால், போய்யாமை அதன்பின்னேநிற்க நன்று, (எ-று).

நூலோர் தொகுத்த அறங்களென்பது ‡ அதிகாரத்தான் வந்தது. அதிகாரங் கோல்லாமையாயினும், $ மேற் 'பொய்யாமை பொய்யாமை யாற்றின்' எனவும், 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லே' எனவுங் கூறினுராக லின், இரண்டறத்துள்ளும் யாது சிறந்ததென்று ஐய நிகழுமன்றே, அது நிகழாமைப்பொருட்டு, ஈண்டு 'அதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்ருர்; மூற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின். †† அதனேப்

† தன்னே டிணேயொப்ப தின்றி என்றும் பாடமுண்டு. இதற்குத் தன்னேடு ஒப்பதும் மிக்கதுமிலலாம லென்று பொருள் கொள்க. இணே என்பது ஒப்பது என்னும் பொருளே யுணர்த்தலால், ஒப்பது என்பதற்கு மிக்கது என்று பொருள் கொள்ளப்பட்டது.

‡ கோல்லாமையென்னு மிவ்வதிகாரத்திற் கியையவந்ததென்பது. இவ்வதிகாரத்தி னிரண்டாங்குறளில் 'நூலோர் தொகுத்தவற்று ளெல்லாந் தலே' என்றுள்ளதும் இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

$ வாய்மை யதிகாரத்தில் 'பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம் பிற, செய்யாமை செயயாமை நனறு' என்றும், 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லே யெனேத்தொன்றும், வாய்மையி னல்ல பிற' என்றும் பொய்பேசாமையே எல்லாவறஙகளிலும் சிறந்ததாக கூறினுராதலால், பொய்யாமை கொல்லாமையென்னும் இரண்டறஙகளுள்ளும் யாது சிறப்புடையதென்று சந்தேகமுண்டாகுமல்லவா, அச்சந்தேக முண்டாகாதபடி யிகுது 'ஒன்றுக நல்லது கோல்லாமை' என்று கோல்லாவிரதத்தை யெடுத்துக்கூறி, (அதற் கடுத்தது பொய்யாமையாகிய விரதம் என்று விளக்க) 'அதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்று கூறினுர்; (முன் னுண்டாய காதினும் பின் னுண்டாய கொம்பு உறுதியுடைதா யிருத்தல் போன்று) முன்னுர்க் கூறிய பொய்யாமையாகிய விரதத்தைப் பார்க்கினும் பின்னர்க்கூறிய கோல்லாமையாகிய விரதம் உறுதியுடைதா யிருத்தலினென்க. இதனுல் ஒன்றைப்பற்றி முற்கூறும் விதியினும் பிற்கூறும்விதி யுறுதி யுடையதா மென்பது பெற்ரும். இவ்வாறு வருதலே மனுமுதலிய நூல்களில்காண்க.

†† அதனே(பொய்யாமையைப்)பின்சார நன்று என்றது(யார்து பற்றி யெனின்) நன்மையுண்டாக்கு மிடத்துப் பொய் பேசுதலும் மெய்பேசாத

பின்சார ரன்றென்றது, நன்மை பயக்கும் வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும் வழி மெய்யும் பொய்யாயும், † திரிந்துவருதலா னென வுணர்க. இவை மூன்று பாட்டானும் இவ்வதத்தினது சிறப்புக் கூறப் பட்டது.

தேளி.—(இ-ன்). (தூலோர் தொகுத்துள்ள அறங்களுள்) ஒன்றை-(தன்னே டொப்பதில்லாமல்) தானேயாக, கொல்லாமை—, எல்லது - நன்றும், (அது நீங்கினால்), பொய்யாமை - பொய்பேசாமையானது, அதன் பின்சார - அதன் பின்னேநிற்க, நன்று-நல்லது (எ-று).

தூலோர் தொகுத்துள்ள அறங்கள் என்பது கொல்லாமை யென்னும் அதிகாரத்தால் வந்தது. அதிகாரம் கொல்லாமையாயினும் மூன் 'பொய் யாமை பொய்யாமை யாற்றின்' என்றும், 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லே' என்றும், சொன்னதாதலால், பொய்யாமை கொல்லாமை யென்னு மிரண் டதங்களுள்ளும், எது நிற்கத்தது என்று சந்தேகம் உண்டாகின்றே, அச்சந் தேகம் உண்டாகாமற் பொருட்டு, இங்கு 'அதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்றார்; முன்சொன்னதினும் பின்சொன்னது உறுதியுடையதாக லால். அதனேப் பின்சார நன்று என்றது நன்மையை யுண்டாக்குமிடத்துப் பொய்பேசுதலும் மெய்பேசுதலாயும், தீமையை யுண்டாக்குமிடத்து மெய் பேசுதலும் பொய் பேசுதலாயும் மாறுபட்டு வருதலா லென்றறிக. இவை மூன்று பாட்டாலும் இக்கொல்லாவதத்தினது சிறப்புச் சொல்லப்பட் டது. மற்ற - அசைநிலே.

(க - து). பொய்பேசாமை கொல்லாமையென்னு மிரண்டறங் களுள் கொல்லாமையென்னும் அறமே சிறப்புடையதாம்.

3. Not to destroy life is an incomparably (great good); next to it in goodness ranks freedom from falsehood.

ச. கல்லா றெனப்படவே தியாதெனின் யாதோன்றுங்
கோல்லாமை சூழ் நேறி.

லாகவும் தீமையை யுண்டாக்குமிடத்து மெய்பேசுதலும் பொய்பேசுதலாக வும்மாறுபட்டு வருதலாலென்றறிக.பொய்பேசாமை கொலேயையுண்டாக்கி னால் பொய்பேசுதலாகவும் பொய்பேசுதல்கொலேயை யொழித்தால் மெய் பேசுதலாகவுமிருத்தலால், பொய்யாமை கொல்லாமைக்குப் பிற்பட்டதாயிற் றென்க. "கொல்லா லலத்தது கோன்மை பிறர்தீமை, கொல்லா லலத்தது சால்பு' என்ற சான்றுண்மை யதிகாரத்திற்கூறுதலு மிக்கறியத்தக்கதாம்.

† *இதனேப்பற்ற அது திரிந்து வருதலான் என்றும் பாடமுண்டு.*

அதற்கு, இதனேப்பற்ற—கொல்லாமையாயினுமிரண்டதத்தை மேற்கொ ண்டோழுக, அது - பொய்பேசாமை, திரிந்துவருவதால் - மாறுபட்டுவருத லால் என்று பொருள்கொள்க.

பரி.—(இ-ள்). * மேற்கதி விடு பேறுகட்கு நல்ல நேறியென்று சோல்லப்படுவது யாதென்று வினவின், † அஞ்சு யாதோருயிரையுங் கோல்லாமையாகிய அறத்தினைக்காக்கக் கருதும் நேறி, (எ-று).

'யாதொன்றும்' என்றது, ஓரறிவுயிரையும் அசப்படுத்தற்கு. காத்தல்-வழுவாமற்காத்தல். இதனால் இவ்வறத்தினை யுடையதே நன்னெறி யென்பது கூறப்பட்டது.

தேளி:—(இ-ள்). நல்லாறெனப்படுவது (மேற்கதியும் முத்தியும் பெறுதற்கு) நல்லவழியென்று சொல்லப்படுவது, யாதெனின்-யாதென்ற வினாவினால், (அது), யாதொன்றும் - யாதோருயிரையும், கொல்லாமை - கொல்லாமையாகிய அறத்தினை, சூழும்-(காக்க) வினைக்கும், நெறி-வழியாம், (எ-று).

'யாதொன்றும்' என்று கூறியது, புல்மரமுதலாகிய ஓரறிவுயிரையும் உள்ளாக்குவதற்காம். காத்தல் - யாதோருயிரையுங் கொல்லாமையாகிய வறத்தினைத் தவறுமற் பாதுகாத்தல். இதனால் கொல்லாமையாகிய இவ்வறத்தினையுடையதே நல்லவழியென்பது சொல்லப்பட்டது.

(க - து). யாதோருயிரையுங் கொல்லாமையாகியவறத்தைக்காப்பதே சுவர்க்கமுதலியவற்றை யடைவதற்கு நல்லவழியாகும் என்பது.

4. Good path is that which considers how it may avoid killing any creature.



கூ. நிலையஞ்சி நீத்தாரு ளேல்லாங் கோலையஞ்சிக்
கோல்லாமை சூழ்வான் றலை.

பரி.—(இ-ள்). பிறப்புநின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப்பொருட்டு மனைவாழ்க்கையைத் துறந்தா ரெல்லாருள்ளும் கோலப்பாவத்தை அஞ்சிக் கோல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன், ()

பிறப்பு நின்ற நிலையாவது ‡ இயங்குவ ¶ நிற்பவென்னும் § இரு வகைப்பிறப்பினும் இன்பமென்ப தொன்றின்றி உள்ளன வெல்லாந் தன்

* மேற்கதி - இந்திரன் முதலிய தேவர்களின் பதவிகள். † அஃதாவது-நல்லநெறி. ‡ இயங்குவ-நடப்பன (அசைவன). ¶ நிற்ப-நிற்பன (அசையாதன).

§ "ஒரி னுள்ளமே பாரின்மா னுடர்முத லுளவற பிறப்பூடுஞ், சேரு மின்பமொன் றில்லையென் பதுபிரித் நியக்கமா நீவல்லாய், போர்க ளாதி தன் பிழையவ ரடைவதும் புலனது நுணர்ந் தாயே, கோரி லாவரன் கழல னன் மிகுக நிலைபிறி நிலையன்றே" என்பது வைராக்கியசதகம்.

மே யாய நிலைமை. * துறவு ஒன்றேயாயினும், சமய வேறுபாட்டாற் பல வாம் ஆகலின் 'நீத்தாருனெல்லாம்' என்றார். இதனுல் இவ்வறம் மறவாத வன் உயர்ச்சி கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்). நிலை-(பிறப்புநின்ற) நிலையை, அஞ்சி—,(பிறவா ஆமைப் பொருட்டு), நீத்தாருனெல்லாம் - (மனவாழ்க்கையைத்) துறந்தவ ரெல்லாருள்ளும், கொலையஞ்சி - கொலைப்பாவத்தையஞ்சி; கொல்லாமை - கொல்லாமையாகிய அறத்தை, சூழ்வான் - மறவாதவன், தலை - உயர்ந் தவனுவன், (எ-று).

பிறப்பு நின்ற நிலையாவது மனிதர் முதலாகிய சராமும், மராமுதலாகிய அசராமும் ஆகிய இருவகைப் பிறப்பிலும் இன்பமென்ப தொன்றில்லா மல் உள்ளனவெல்லாம் துன்பமே யாகிய நிலைமை. துறவு ஒன்றேயாயி னும், சமயவேறுபட்டால் அது பலவாமாதலால் 'நீத்தாருனெல்லாம்' என் றார். இதனுல் கொல்லாமையாகிய விவ்வறத்தை மறவாதவனது உயர்ச்சி சொல்லப்பட்டது.

(க - து) பிறப்பிற்கஞ்சித் துறவறம் பூண்டவர்களுள், கொ லைப் பாவத்திற்குப் பயந்தவனே சிறந்தவனுவான் என்பது.

5. Of all those who, fearing the permanence of earthly births, have abondoned desire, he is the chief who, fearing the guilt of murder, considers how he may avoid the destruction of life.

கூ. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்
செல்லா துயிருண்ணுங் கூற்று. [மேற்

பரி:—(இ-ள்). கொல்லாமையை விரதமாக மேற்கொண் டொழு குவானது வாழ்நாளின்மேல் உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது,(எ-று).

† மிகப்பெரிய அறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் மூறையானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின்பயன் அனுபவிப்பதொன்

* காரத பரிவிராஜகோபநிஷத்தி 5-வது உபதேசத்தில் "வாஸ்தவ மாகச் சக்கியாசம் ஒன்றேயாம்; அஃதஞ்ஞானத்தினுலேயும்,அசத்தியினு லேயும், கருமலோபத்தினுலேயும் மூன்றுவிதமாய் (பிறகு) வைராக் கியசந்கியாசம், ஞான சக்கியாசம், ஞானவைராக்கிய சந்கியாசம், கரும சக்கி யாசம் என நான்குவித மாயிற்று" என்று கூறுவது மிங்கே யறியத்தக்க தாம்.

† "மிகமேவிய புண்ணிய பாவமெனும் வினையின்பயன் மேலொரு காலமுறு, நிகமேவரு மென்பத னுளனோ யெல்லாமிவ ணிச்செற வெய் தினலே" என்று சிவஞ்ணபோதம் கூறுவதும்,

"மனதாற்செய்த அறம் பாவங்களின் பயனே இப்பிறப்பிலாவது மறு பிறப்பிலாவது மனதாலேயே அனுபவிக்கின்றன; இவ்வனமே, வாயாற்

லும் அறனாற் முணிபுபற்றி, () இப்போறஞ் செய்தான்ருனுல் கொல்லப் படான்; படாஞகவே, அடியிற் கட்டிய வாழ்நாள் இடையூறின்றி யெய்து மென்பார் வாழ்நாண்மேற் கூற்றஞ்செல்லாது என்ருர். செல்லாதாகவே, காலநீட்டிக்கும்; நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறு மென்பது கருத்தி. இதனுல் அவர்க்கு வரு நன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்). உயிருண்ணுங் கூற்று - உயிரைக்கொண்டுபோம் யமனுனவன், கொல்லாமை-கொலைசெய்யாமையை, மேற்கொண்டு-(விரத மாக) மேற்கொண்டு, ஒழுகுவான் - நடப்பவனது, வாழ்நாண்மேல் - ஆயுளின்மேல், செல்லாது - செல்லான் (எ-று).

மிகப் பெரிய அறஞ்செய்தவரும் மிகப் பெரிய பாவஞ் செய்தவரும் (அறம் பாவங்களைச் செய்தவர் மறுமையிலே சுகதுக்கங்களை யனுபவிப்பா சென்னும்) முறையினுலல்லாமல் இம்மையில்தானே அவ்வறம்பாவங்க ளின் பயன்களாகிய சுகதுக்கங்களை அனுபவிப்பாரென்னும் அறநூலின தி தணிவுபற்றி, இப்பெரிய அறஞ்செய்தவனும் கொல்லப் படான்; கொல்லப் படாதவனுகவே, அவன் கருவுறும்போது நியமிக்கப்பட்ட ஆயுட் காலத்தை யாதொரு தடையுமின்றி யடைவானென்பார் வாழ்நாண்மேல் கூற்றஞ்செல்லாது என்ருர் கூற்றஞ் செல்லாதாகவே, (அவனுக்குக்)காலம் நீடித்திருக்கும்; காலம் நீடித்திருந்தால் தத்துவஞானமுண்டாகி (அவன்) உயிர் மோட்சத்தைப்பெறும் என்பது கருத்தி. இதனுல் கொல்லாவிரதத் தோர்க்குவரும் நன்மை சொல்லப்பட்டது.

(க - து). கொல்லா விரதமுடையவன் மிகுகாலமிருப்பான்.

6. Yama the destroyer of life, will not attack the life of him, who acts under the determination of never destroying of life.

எ. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

பரி:—(இ-ள்). * அது செய்யாவழித் தன்னுயிர் உடம்பினின்றுங்கிப் போமாயினும், தான் பிறிதோ ரின்னுயிரை அதனுடம்பி னின்றுந் தொழி லாகச் செய்யற்க, (எ-று).

தன்னை † அது கொல்லினும் தான் அதனைக் கொல்லற்க வென்றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி.

செய்த அறம் பாவங்களின்பயனை வாயாலும், காயத்தாற்செய்த அறம்பாவங் களின் பயனைக் காயத்தாலும் அனுபவிக்கின்ருன் என்று மனுதர்மசாஸ்தி ரம்12-வது அத்தியாயத்திற் கூறுவதும் இங்கறியத்தக்கனவாம்.

() கொல்லாமை மேற்கொண் டொழுகுவானும்.

* அது செய்யாதவழி - பிறிதொரு பிராணியைக் கொல்லுதல் செய்யாவிட்டால், † அது-பிறிதொருபிராணி.

இனிச் ‡ தன்னுயிர் நீப்பினுமென்பதற்குச் சாக்கியாகச் செய்யாதவழித் தன்னுயிர் போமாயினுமென் றுரைப்பாருமுளர்; பிறர் செய்தலு மாகாமையின், அஃதுரையன்மை யறிக.

தெளி.—(இ-ள்). தான்—,பிறிது- வேறொன்றனை; இன்னுயிர்-இனிதாகிய வுயிரை, நீக்கும்- (அதனுடம்பிலிருந்து) நீக்குதலாகிய, வினை-தொழிலை, (செய்யாவிடத்து), தன்னுயிர்-தனது உயிரானது, நீப்பினும்-(உடம்பிலிருந்து) நீங்கிப்போமாயினும், செய்யற்க-செய்யாதிருக்கக் கடவன், ()

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க (தனையொன்று கொன்றலும் தானதனைக் கொல்லலகாது) என்றது பாவம் (தான் ஒன்றால்) கொலையுண்ட விடத்துக் குறைதலும்(தான் அதனைக்) கொன்ற விடத்து வளர்தலும் நோக்கியாம்.

(கு-து.) தன்னை ஒன்று கொல்வதா யிருந்தாலும் தானதனைக் கொல்லலாகாதென்பது. எ

7. Let no one do that which would destroy the life of another, although he should by so doing, lose his own life.

‡ தன்னுயிர் நீப்பினுமென்பதற்குச் சாக்கியாக (தோஷநிவாரணமாக)ச் செய்யாதவழி (பிறிதொரு பிராணியைப் பிறரைக்கொண்டு கொலைசெய்வித்தல் முடியாதவிடத்து)த் தன்னுயிர் போகுமாலுலும் என்றுரை கூறவாறு முண்டு. பிறர் (தன்னிமித்தம் பிறிதொன்றைக்கொலை) செய்தலும் (அறவிக்கு) ஆகாமையால் அஃது உரையல்லவெனறறிக.

மிருகமுதலியவற்றைத்தான் கொன்றால் பாவமேயன்றித் தன்னிமித்தம் பிறர்கொன்றால் தனக்குப் பாவமில்லை. ஆதலால் அவற்றைப் பிறரால் கொல்விக்கலாம். அவ்வாறு செய்தல் முடியாத விடத்துத் தன்னுயிர் போகுமாலுலும் பிறிதொரு பிராணியைக் கொல்லலாகாது என்பதுபிறருரையின் தாற்பரியம். அதனைப் பரிமேலழகர் தன் பொருட்டுப் பிறர்செய்யும் கொலைப்பாவம் தனக்கே வருவதாயிருத்தலால், அவ்வுரை பொருந்தாது என்று மறுத்தாரென்க.

உயிர்ச்சார்பு, உடற்சார்பு, பொருட்சார்புகளை விட்டிருக்கவேண்டியதலை உடலைக்காத்தல் ஈசனது கடமையெனத் திடவைராக்கியங் கொள்ளாது உடற்சார்புகொண்டு பிறிதொரு பிராணியைப் பிறரைக்கொண்டு கொல்வித்தல் அவனுக்குப் பெருங்குற்றமாமென்க.

"தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய்,வானைக் காவல் கொண்டு நின்ற ரறியா தெறியானே,யானைக் காவி லரனே பரனே யண்ண லிலையானே, வானைக் காவல் கைவிட் டின்னே யுகப்பா ருளர் வரே" என்றதேவாரம் கூறவது மிங்கறியத்தக்கதாம்.

அ. நன்றுகு மாக்கம் பெரிதேனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றுகு மாக்கங் கடை.

பரி.—(இ-ன்). தேவர் பொருட்டு வேள்விக்கட் கொன்றல் இன்பமி குஞ்சேல்வம் பெரிதாமென்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும், துறவானமைந்தார்க்கு*ஒருயிரைக்கொல்லவருஞ்சேல்வங்கடை, (எ-று).

இன்பமிகுஞ் செல்வமாவது † தாமுச்தேவராய்த் துறக்கத்துச் சென் றெய்துஞ் செல்வம். ‡ அது நிறைதாகலானும்,பின்னும் பிறத்தற்கேதுவாக லானும், § ஈடாகிய ஈறிலின்பம் எய்துவார்க்குக் 'கடை' எனப்பட் டது. துறக்கமெய்துவார்க் காமாயினும் வீடெய்துவார்க்காகா தென்றமை யின், ¶ விதி விலக்குகள் தம்முள் மலையாமை விளக்கியவாருயிற்று.

* ஒருயிரைக் கொல்லவரும்-என்பதற்குப்பிரதியாக ஒருயிரைக்கொ ல்ல அதனால் வரும் என்றும் பாடமுண்டு.

† தாமும் என்றது - வேள்வியிற் கொன்ற பசுவேயன்றி வேள்வி செய்த தாமும்.

‡ அது (சுவர்க்கவின்பம்) நிறைதாகலானும் பின்னும் பிறத்தற்கேதுவா கலானும் என்பதன் பொருள் சுவர்க்கவின்பம் மோட்சவின்பத்தை நோக்க அற்பமாயிருத்தலானும் சுவர்க்கவின்பத்தை யனுபவித்தற்குரிய புண்ணிய மொழிந்தவுடனே மீண்டும் பிறப்பதற்குக் காரணமாயிருப்பதாலும் என்ப தாம். சூதசங்கிதை முத்திநிலை யுரைத்த அத்தியாயம் 26-வது செய்யுளில் "பாடிற வுரைத்த வின்பப் பதமுத்தி முறையிற் சார்வோர், ஊடிறு போகத் தெய்ப்ப ரொன்றற்கொன் றதிகமாக" என்றும், 27-வது செய்யுளில்"புண் ணியந் தீர்ந்த பின்பு பூமியின் விரைத்து மேண்மை, நண்ணிய குலத்துத் தோற்ற நண்ணுவ ரதனு லென்றும், கண்ணிய பிறப்பிறப்புக் கழிதலி ன்று" என்றும் கூறியிருப்பது மிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

§ யாணைதென்னும் இருவகைப்பற்றினையும் விடுதலாகிய (விடுதலால் விளங்குவதாகிய) மூடிவில்லாத வின்பத்தை யடைவார்க்கு "நிய வசுரர் பகையுண்டு செற்ற மார்பு பிகவுண்டு, நோயுண் டனங்க ளுருண்டு கோய் கட் கெல்லாந் தாயான, காய முண்டு கைதொழவேண் டினரு முண்டு கற் பத்தே, மாயுந் தன்மை யுண்டாதலால் வானோர்க் கென்னே வளனுண்டே" என்று கூறியுள்ளவாறு சுவர்க்க வின்பம் உண்மையாகப் பார்க்குமிடத்துத் துன்பமய மாகவே யிருத்தலின, அது (சுவர்க்கவின்பம்) கடையாயிற் றென்க.

¶ வேள்வியினிடத்தொன்றனைக்கொல்லுதல் இல்லறத்தார்க்கு விதியா யும் துறவறத்தார்க்கு விலக்காயுமிருத்தலின்,விதிவிலக்குகளுக்குத் தம்முள்மாறுப டவில்லையென்க. ஒரு காரியத்தில் பிரவிருத்தியை யுண்டுபண்ணும்வாக்கி யம் விதியெனப்படும். அது சுவர்க்கத்தில் விருப்பமுடையான் சோதிஷ் டோமஞ் செய்யக்கடவன் என்றாற்போல்வது. ஒரு காரியத்தில் நிவர்த்

† இஃது இல்லறம் அஃடைக்குக் காரணம் இவை யிரண்டுபோட்டானுங் கொலையதுகுற்றங் கூறப்பட்டது.

தேளி.—(இ-ன்). (தேவர்பொருட்டு யாகத்தி லொன்றைக் கொன் றால்) நன்றாகும் - இன்பமிகும், ஆக்கம் - செல்வமானது, பொரித-பெரி தாகும், எனினும்-என்று (இல்வாழ்பவர்க்குச்) சொல்லப்பட்டதாயினும், சான்றோர்க்கு-(அறவினால்) நிறைந்தோர்க்கு, கொன்று - (ஒருயிரைக்) கொல்ல, ஆகும் - (அதனால்) வரும், ஆக்கம் - செல்வமானது, கடை-இழி வுடையதாம், (எ-று).

இன்பமிகுஞ் செல்வமாவது (யாகஞ்செய்த) தாரும் தேவராய்ச் சுவர் க்கத்திற்சென்று அடையுஞ் செல்வம், அச்செல்வம் சிறிதாகையாலும்,பின் னும்பிறத்தற்குக் காரணமாகலாலும், மோட்சமாகிய முடிவில்லாதசுகத்தை யடைபவர்க்குச் ' கடை ' எனப்பட்டது. (யாகத்தில் தேவர் பொருட்டு ஒன்றனைக் கொல்லுதல்) சுவர்க்க போகத்தையடைய விரும்பிய இல்லறத்தார்க்கு ஆகுமாயினும் மோட்சமடைய முயற்சிக்குந் துறவறத்தார் க்கு ஆகாதென்றதனால், விதிவிலக்குகள் தம்மூள் மாறுபடாமை விளக் கியை யுண்டுபண்ணும் வாக்கியம் விலக்கெனப்படும். அது கள்ளுண்டல் கூடாது என்றாற்போல்வது. இங்கு இல்லறத்தான் வேள்வி புரியக்கடவன் என்பது விதி; துறவறத்தான் வேள்வி புரியாதிருக்கக்கடவன் என்பது விலக்கு. இல்லறத்தார்க்கு வேள்விபுரிதல் சிறப்பாயும் துறவறத்தார்க்கு அது செய்யாதொழிதல் சிறப்பாயும் இருக்கின்றனவென்க. மனுதர்ம சாஸ் திரம் சங்கியாச தருமத்தைக் கூறுமிடத்து "தேவர், இருஷி, பிதிர்க்களிட த்தில் மூன்று கடனுடன் மனிதன் பிறக்கிறான். அவற்றுள், யக்கியத்தால் தேவர்களுக்கும், பிள்ளைபெறுவதால் பிதிர்க்களுக்கும், வேதமோதுவதால் இருஷிகளுக்கும் கடனைதீர்த்துச், சோதிட்டோம முதலிய யாகங்களே ச் சக்திக்குத் தக்கவாறு செய்து பின்பு மோட்சத்திற்குபயோகமான சந் நியாசத்தில் மனம்வைத்தல் வேண்டும்" என்றும், "ஹிம்சை செய்யாமை யாலும், இந்திரியங்களுக்கு விஷயப்பற்றில்லாமையாலும், நித்திய கர்மா னுஷ்டானஞ் செய்வதாலும், சாந்தாயணாதி தவஞ்செய்வதாலும் பெரி யோர்க ளில்வுலகத்தில் மோட்சத்தைச் சாதிக்கிறார்கள்" என்றும் கூறு வதுமிகுந் நன்குசிந்திக்கத்தக்கதாம். இம்முறையறியாது 'நன்றாகும்' என்னுமிக்குறன்சமணமதத்திற்குச் சார்பாயுள்ளதென்று கூறுவாருமுளர்.

† இஃது(கொன்றாகும் கடையாதல்) இல்லறமல்லாமைக்குக்கா ரணமாமென்க. எனவே; அது துறவறத்திற்குக் காரணமாயிற்று, எங்ஙன மெனின், வேள்வியாற் சித்திக்கும்சுவர்க்கலின்பத்தைக் கடையாகக்கொண் டவன் தலையாயவின்பம் யாதென விசாரித்து, அதனால் தலையாயவின்ப த் பத்தைப் பெறுதற்பொருட்டு, அதற்குச் சாதனமான துறவறத்தை மேற் கொள்ளுதலினென்க. இம்மையின்பத்தையேன்றிச் சுவர்க்க வின்பத்தை யும் கடையாகக்கொள்ளுதலே இகபரபோகவிராக மென்பர் சான்றோர்.

கியவாறுயிற்று. இஃது இல்லறமல்லாமைக்குக் காரணம். இவை பிரண்டு பாட்டாலும் கொலையினது குற்றஞ்சொல்லப்பட்டது.

(க-து). சான்றோர் கொலைசெய்வதா லுண்டாகுஞ் செல்வத்தைக் கடையாகக்கொள்ளுவர் என்பது.

8. The advantage which might flow from destroying life in sacrifice, is dishonourable to the wise who renounced the world, even though it should be said to be productive of a great good.

கூ. கொலைவினைய ராகிய ‡ மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

பரி.—(இ-ள்). கொலைத்தொழிலை யுடையராகிய மாந்தர், அத்தொழிலின் கீழ்மையை அறியுநெஞ்சத்த ரல்லாயினும், $ அக்கீழ்மையை அறிவார் நெஞ்சத்துப் புலைத்தொழிலினர், (எ-று).

'கொலைவினையர்' என்றதனால், † வேள்விக்கட் கொலையன்மை

‡ 'மாக்களெனப்படுவார் மனவுணர்ச்சியில்லாதார்' என்பர்நச்சினார்க்கினியர்.

$ அக்கொலைத்தொழிலின் கீழ்மையை யறிவார்.

† வேள்வியிற்செய்யும் கொலை கொலையன் றென்பதுபற்றித் தருக்க கௌமுதி சாத்தியத்தில் வியாபித்துச் சாதனத்தில் வியாபியாமையாகிய உபாதி கூறுமிடத்து "யாகத்திற்செய்யும் பசுக்கொலை அதர்மசாதனமாம்; கொலைமையான்; யாகத்திற்குப் புறம்பான கொலையைப்போல என்புழி நிஷித்தத்தன்மை உபாதி. அவ்வதர்ம சாதனமாகிய சாத்தியத்தின் வியாபகமுண்டாகிறது; யாண்டு யாண்டு அதர்மசாதனத்திலம் ஆண்டாண்டு நிஷித்தத்துவமென்றிருத்தலான். சாதனத்தன்மையாகிய கொலைமையின் அவ்வியாபகமு முண்டாகின்றது; யாண்டு யாண்டுக் கொலைமை ஆண்டாண்டு நிஷித்தத்துவமென்பதின்மையின், பட்சமாக்கப்பட்டகொலையிற் கொலைமையிருக்கினும் நிஷேதிக்கப்படுக் தன்மையின்மையான்." என்றும், மனுதருமசாஸ்திரம் ஐந்தாவதத்தியாயத்தில் "யக்ஞியத்திற்காகவேபசுக்கள் பிரமனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அந்தயக்ஞியஞ்செய்தால் உலகமெல்லாம் க்ஷேமத்தை யடைகின்றன; ஆகையால், யக்ஞியத்திற் செய்யும் பசுஹிம்சை ஹிம்சையன்று" என்றும், "கொடிகள், பசுக்கள், விருக்ஷங்கள், மிருகங்கள், பட்சிகள் என்னுமிவற்றை யக்ஞியத்திற்கு உபயோகப்படுத்தின் பின்பு அவை உயர்ந்தகதியை யடைகின்றன" என்றும், "சராசரவிக்ஷயத்தில் வேதங்கூறிய ஹிம்சையை ஹிம்சையென்ற நினைத்தல்கூடாது. வேதத்தினின்றே தருமம் விளங்குகிறதல்லவா. ஆதலால் அந்த வேதம் ஹிம்சையைச் சொன்னபோதிலும் புண்ணியமாகவே யிருக்கும்" என்றும் கூறுகின்றன.

யறிக. புலவினையரென்றது ‡ தொழிலாற் புலையரென்றவாறு. இம்மைக் கட் கீழ்மை யெய்துவ ரென்பதாம்

தெளி.—(இ-ன்), கொலைவினையராகிய - கொலைத்தொழிலே யுடைய வராகிய, மாக்கள்-மனிசர், (அக்கொலைத்தொழிலினது இழிவை யறியும் மனத்தினரல்ல ராயினும்), புன்மைதெரிவாகத்து-அவ்விழிவை யறிவா ரது மனத்தினிடத்து, புலைவினையர்-புலைத்தொழிலினராய்த் தோன்றுவர்.

'கொலைவினையர்' என்று கூறியதினால், வேள்விக்கண் செய்யுங் கொலை கொலையாகாமையறிக. புலைவினையரென்றது தொழிலினால்புலைய ரென்றவாறும். அப்புலைவினையர் இம்மையில்தாழ்வையடைவரென்பதாம்.

(க - து). கொலைத்தொழிலி னிழிவையறிந்தவர் கொலைசெய் வாரைச் சண்டாளர்களாக மதிப்பார் என்பது.

9. Men who destroy life are base men, in the estimation of those who know the nature of such meanness.

க0. உயிருடம்பி னீக்கியா ரேன்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

பரி.—(இ-ள்). ¶ நோக்கலாகா நோயுடம்புடனே வறுமைகூரீந்த இழிதொழில் வாழ்க்கையினையுடையாரை இவர் முற்பிறப்பினீங்கண் உயிரீகலை அவை நின்றவுடம்பினின்று நீக்கினவரென்றுசொல்லுவர் வினை வினைவுகளை யறிந்தோர், (எ - று.)

† செல்லாவாழ்க்கை தீவாழ்க்கை யெனக்கூட்டுக.

‡ தொழிலாற் புலையர் - சாதியாலன்றிக் கருமத்தால் சண்டாளரானவர்.

¶ காண்டற்கியலாத நோயோடு தரித்திரமுடையவராய் இழிதொழில் செய்திருப்பவரை வல்வினை தீவினைகளினது விளைவாகிய சுகதுக்கங்களை யறிந்தவர் இவர் முற்பிறப்பில் கொலைப்பாவஞ் செய்தவ ராவாரென்று கூறுவது உரை யனுமான மெனப்படும். ''நீதியான்முற் கன்மபல நிகழ்வதிற்போ தித்செய்தி, யாதியாக வரும்பயனென் றறிந்த லுரையா லனுமானம்'' என்பது வெளாளசித்தி.

† தீ என்பதனை வீசேடணமாகவுடைய வாழ்க்கையென்னும் வீசேஷியத்தைச் செல்லா என்பதனோடுங்கூட்டிச் செல்லாவாழ்க்கை யென்றும் கொள்க. கொள்ளவே, செல்லாவாழ்க்கை யென்றும் தீ வாழ்க்கை யென்றும் கொள்ளவேண்டுமென்பதாயிற்று. செல்லாவாழ்க்கை—வறுமை மிகுந்த வாழ்க்கை; தீ வாழ்க்கை - இழிதொழிலேயுடையவாழ்க்கை. செல்லாவென்பது இவ்வு வறுமையை யுணர்த்திநிற்கு. செல்லாமை தரித்திரத்தையும் செல்லல் செல்வத்தையு முணர்த்துதலே காலடியார் சூடிப்பிறப்பில்

‡ செயிருடம்பினாதல் ¶ "அக்கேபோ லங்கை யொழிய வீரலழுகித், தக்கத் தொழுதோ யெழுபவே" என்பதனானு மறிக. மறமைக்கண் இவையு மெய்துவ ரென்பதாம். இவை இரண்டு பாட்டானுங் கொல்வார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

அருளுடைமை முதல் கொல்லாமையீறாகச் சொல்லப்பட்ட இவற் றுள்ளே சொல்லப்படாத விரதங்களும் அடங்கும்; அஃதறிந்தடக்கிக் கொள்க. ஈண்டுரைப்பிற் பெருகும்.

தெளி.—(இ - ள்). செயிருடம்பின் - பார்க்கக் கூடாத கோயுடம்புட னே, செல்லாத தீவாழ்க்கையவர்-வறுமை மிகுந்த இழிதொழில் (செய்யும்) வாழ்க்கையினையுடையாரை, (இவர் முற்பிறப்பில்), உயிர் - உயிர்களே, உடம்பின் - (அவை நின்ற) உடம்புகளிலிருந்து, நீக்கியார் - நீக்கினவர், என்ப - என்று (வினைவிளைவுகளே அறிந்தோர்) சொல்லுவார், (எ - று).

வாழ்க்கை என்பதனைச் செல்லா என்பதனோடுங் கூட்டிச் செல்லா வாழ்க்கை தீவாழ்க்கை. யெனக்கொள்க. செயி ருடம்பின ராதல்-பெருவி யாதி கொண்ட வுடம்பினை யுடையராதல். மறுபிறப்பில் இவையும் (செயி ருடம்பினையும் செல்லாத் தீவாழ்க்கையையும்) அடைவரென்பதாம். இவை இரண்டுபோட்டாலும் கொலைசெய்வார்க்குவருந் தீமை சொல்லப் பட்டது.

அருளுடைமை முதல் கொல்லாமை இறுதியாகச்சொல்லப்பட்ட இ வற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களும் அடங்கும்; அஃது அறிந்து அடக்கிக்கொள்க. இங்குச் சொன்னூல் விரியும்.

"செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன, செல்லிடத்துஞ் செய்யார் கிறியவர்" என்று கூறுவதனாலுமறிக.

‡ செயி ருடம்பினாதல் - காணுதற்கியையாத பெருவியாதி பொரு ந்திய வுடம்பினை யுடையராதல்.

செயிர் என்பது இங்குக் கண்டு சகித்தற்குக்கூடாத பெருவியாதியை யுணர்த்தி நின்றது.

¶ காலடியார் நீவினையச்சம் 3, இதன் பொருள் [அலவனை (கண்டை)க் கால் முறித்துத்தின்ற பழவினை வந்தடைத்தக்கால்] (அத்தினையை யுடை யார்) சங்குமணிபோல உள்ளங்கையொழிய வீரல்களழுகி (வீழத்) தக் கமடைந்து தொழுதோ (பெருவியாதி) யோடு திரிவார்கள் என்பது.

"இக்கோய் கமக்குண்டென் றெண்ணுதே யெவ்வுயிரு, முன்னுவக் கொன்றுண்ணு மூர்க்கர்தா - மெங்கோவும், பண்ணப் படுகேதித் பாவிகளிற் பாவிகளென், றெண்ணப் படுவா ரிகைந்து" என்றுபெருந்தேவனுர்பார தங்கூறுவது மிங்குணர்தற்பாற்றும்.

(க - து).கொலைத்தொழில் புரிவோர் மறுமையில் தரித்திரத்தையும் கொடிய பிணியையு மடைவார் என்பது.

10. The wise will say that men of diseased bodies who live in degradation and in poverty, are those who separated the life from the body of animals in a former birth.

ஞானம்.

பரி.—இனி † அவற்றின் பயனுகிய ஞானங்கூறிய தோடங்கினர். ‡ ஞானமாவது ¶ வீடுபயக்குமுணர்வு; அது நிலையாமை முதல் அவாவறுத்தலிறுதியாக நான்கதிகாரத்து வடக்கப்பட்டது.

தெளி.—இனி அவ்விரதங்களின் பிரயோசனமாகிய ஞானம் சொல்லத்தொடங்கினர். ஞானமாவது மோட்சத்தைத்தரும் அறிவு; அது நிலையாமைமுதல்அவாவறுத்தல்இறுதியாக நான்கதிகாரத்துள் அடக்கப்பட்டது.

பத்தாவது அதிகாரம்.

நிலையாமை—*Instability.*

பரி:—§ அவற்றுள், நிலையாமையாவது தோற்ற முடையனயாவும் நிலையுதலிலவாநீதன்மை. () மயங்கியவழிப்பேய்த்தேரிற்புனல்போலத்

† விரதங்களினுல் அந்தக்கரணம் பரிசுத்தமாக அது வாயிலாக ஞான முண்டாதல் பற்றி 'அவற்றின் (விரதங்களின்) பயனுகிய ஞானங் கூறிய தொடங்கினர்' என்று கூறப்பட்டது.

‡ பாலென்பது வேறுபாலே யுணர்த்தாது பசுவின்பாலேயே யுணர்த்துவதுபோல இங்கு ஞானமென்பது கட ஞானம் படஞான முதலியவற்றை யுணர்த்தாது வீடு பயக்கு முணர்வையே யுணர்த்திற்றென்க.

¶ வீட்டைத்தருவது ஞானமே யென்பது "ஞான மலது கதிகூடுமோ" என்று தாயுமானவரும், "ஞானத்தின் மிக்க வறகெறி காட்டில்லே" என்று திருமூலரும், இவ்வாறு பிறரும் கூறியவாற்றுனு மறிதற்பாற்றும்; எனவே, ஞானமின்றி வீடெண்டாகாதென்பது தேற்றமாயிற்றென்க.

§ அவற்றுள்- நிலையாமை முதலாகவுள்ள அங்நான்கனுள்.

() மயங்கியவிடத்துக் காணலில் நீர்தோன்றுவதுபோலச் சச்சிதானந்த வடிவப் பிரஹ்மத்தில் திரிபுடி (காண்பான் காட்சி காணப்படும்பொருள்) தோன்றி நிருவிகற்பசமாதி வாயிலாகத் தெளிந்தவிடத்துக் கயிற்றரவு போலக்கெடுமென்பவர்கள் அத்துவித சித்தாந்திகள். இவர்கள்; இம்மயக்கம் சிவர்களிடத்து அநாதியாயுள தென்றும், இச்சிவர்கள் சொப்பன

தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுதலிற் பொய்யென்பாரும், † நிலைவேறுபட்டு வருதலாற் கணந்தோறும் பிறந் திறக்கு மென்பாரும், ‡ ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறு படாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கேயு டைய வென்பாருமெனப் பொருட் பெற்றி கூறுவார் பலதிறத்தாவர்; அவரேல்லார்க்கும் ¶ அவற்றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃதுணர்ந்துழியல்லது பொருள்களிற் பற்று விடாதாகலின், இது முன் வைக்கப்பட்டது.

தெளி:—அவற்றுள், நிலையாமையாவது தோற்றமுடையன வெல் லாம் நிலைத்திருத்த லில்லாதனவாந் தன்மை. மயங்கியவிடத்துக் கான லிற்சலம் போலத்தோன்றி மெய்யுணர்ந்தவிடத்துப் பழுதையிற்பாம்பு போலக்கெடுதலாற் பொய்யென்பாரும், நிலைவேறுபட்டு வருவதாற் கணந்தோறும் பிறந்திருக்குமென்பாரும், ஒருவிதத்தால் வேறுபடுத

வுலக சீவர்கள்போலப் பிரஹமத்தில் கற்பிதமாயுள்ளவர்களென்றும், கூறு வர்.

† நிலைவேறுபட்டு வருதலால் கணந்தோறும் பொருள்கள் பிறந்திற க்கு மென்பவர்கள் பௌத்தசித்தாந்திகள். இவர்கள் க்ஷணிக விஞ்ஞான வாதிகளெனப்படுவர். தாமரையிதழைப்பலவாக அடுக்கி உளியைத்தடித்தால் அவ்விதழ்களில் எட்டிதழ் அறுபடுங்காலவளவு கணமெனப்படும். இம்மதத் தர் க்ஷணிக விஞ்ஞான வடிவ புத்தியே ஆன்மா; இப்புத்தி பிரகாச வடி வினையுடையது; சகல பதார்த்தங்களும் இத ஞாகாமாயிருக்கின்றன; ஒவ் வொரு க்ஷணத்திலும் விஞ்ஞான முண்டாகி நாசமடைகின்றது; முந்திய விஞ்ஞானத்திற்குச் சமானமாக வேறு விஞ்ஞான முண்டாவதால் முந்திய விஞ்ஞானம் நாசமடைகின்றது; இவ்வாறு தோன்றித் தோன்றி யழிந்து அழிந்து கியின் பிரவாகம்போல விஞ்ஞான்தாரை (ஒழுங்கு) தொடர்ந்து கொண்டே இருக்கின்றது; இந்தவிஞ்ஞானதாரை ஆலய விஞ்ஞானதாரா பிரவிர்த்தி விஞ்ஞானதாரை யென்றிருவகையாம்; நான்கான் என்னும் விஞ்ஞானதாரை ஆலய விஞ்ஞானதாரையாம்; இது கடம் இது படம் என் னும் விஞ்ஞானதாரை பிரவிர்த்தி விஞ்ஞானதாரையாம்; ஆலய விஞ்ஞான தாரையினின்றும் பிரவிர்த்தி விஞ்ஞானதாரை யுண்டாகின்றது என்று கூறுவர்.

‡ ஒருவகையால் வேறுபடுதலும் ஒருவகையால் வேறுபடாமையுமா ய்ப் பொருள்களிருக்கின்றமையின் பொருள்கள் நிலையுதலும் நிலையாமை யுமாய் ஒருங்கேயுடையன வென்பவர்கள் உலகஞ்சத்திய மென்னும் மற் றைச் சமயவாதிகள். இவர்கள் வேறுபடுதலேக் காரியத்திலும் வேறுபடா மையைக் காரணத்திலும் கொள்வர். எம்மதவாதமும் இம்மூன்றனுளடங்கி நிற்றலை யுய்த்துணர்ந்துகொள்க.

¶ அவற்றது - தோற்றமுடையனவற்றின்.

லும் ஒருவிதத்தால் வேறுபடாமையுமுடையனவாயிருத்தலின் நிலைத்தலும் நிலையாமையும் ஒருமித்துடையன வென்பாரும் என்றுபொருளின் றன்மை கூறுவார் பலவகைப்பட்டவராவர்; அவரெல்லார்க்கும் அவற்றினது நிலையாமையுடம்படாதலால், இங்கு அந்நிலையாமையையே கூறுகின்றார். இந்நிலையாமையை யறிந்த விடத்தல்லது, உலகப்பொருள்களிலேயுள்ள மனப் பற்று விடாதாகலின், இது (நிலையாமை) முன்வைக்கப்பட்டது.

க. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

பரி.—(இ-ள்). நிலையுதல் இலவாகிய பொருள்களை நிலையுதலுடையவென்று கருதுகின்ற புலையிய வறிவினை யுடையராதல் துறந்தார்க்கிழிவு, (எ-று).

† தோற்றமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறிவால் அவற்றின்மேற் பற்றுச்செய்தல் பிறவித் துன்பத்திற் கேதுவாகலின், அது வீடெய்துவார்க் கிழுக்கென்பது இதனுற் கூறப்பட்டது. இனிப் புல்லறிவானர் பெரும்பான்மையும் பற்றுச்செய்வது சிற்றின்பத்திற் கேதுவாகிய செல்வத்தின் கண்ணும் அதனை யனுபவிக்கும் யாக்கையின் கண்ணும் ஆகலின், வருகின்ற பாட்டுக்களான் ‡ அவற்றது நிலையாமையை விதந்து கூறுப.

தேவி.—(இ-ள்). நில்லாதவற்றை - நிலைத்திருத்தலில்லாதனவாகிய பொருள்களை, நிலையினவென்று-நிலைத்திருத்தலுடையனவென்றுஉணரும்-நினைக்கின்ற, புல்லறிவாண்மை - அற்பபுத்தியை யுடையவராதல், கடை-(துறந்தார்க்கு) இழிவாம், (எ-று).


தோற்றமுடைய பொருள்களை நாசமில்லாதனவென்று நினைக்கும் அற்பபுத்தியால் அப்பொருள்களின்மீது பற்றுசெய்தல் பிறவித்துன்பத்திற்குக்காரணமாமாகலால், அப்பற்று மோட்சத்தை யடைவார்க்குத் தவருமென்பது இதனுற் சொல்லப்பட்டது. இனிப் புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச்செய்வது சிற்றின்பத்திற்குக் காரணமாகிய செல்வத்தினிடத்தும் அதனை அனுபவிக்கும் உடம்பினிடத்தும் ஆகலின், வருகிறபாட்டுக்களால் அவ்விரண்டன் நிலைமையை வேறெடுத்துச் சொல்லுவார்.

† தோற்றமுடையனவெல்லாம் நாசமுடையன வாயிருத்தலைக்காண்டல் கருத லுரை வாயிலாக வறியாது தோற்றமுடையன வற்றை அழிதலில்லாதனவு மென்று எண்ணும் மந்தபுத்தி யுடையவரை நோக்கி மனத்தை மூன்னிட்டுப் பட்டினத்தடிகள் ‘‘பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும், தோன்றின மறையு மறைந்தன தோன்றும், பெருத்தன சிறக்கும் சிறுத்தன பெருக்கும், உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும், புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்’’ என்று கூறியிருத்தலிங்கு நன்குணர்தற்பாற்றும்.

‡ அவற்றது - செல்வம் உடல்களது.

(க - து.) நிலையில்லாத பொருள்களை நிலையுள்ளன வென்று கருதுதல் மதியீனமாம் என்பது.

1. That ignorance which considers those things to be stable which are not so, is dishonourable to the wise.



2. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

பரி.—(இ - ள்.) ஒருவன் மாட்டுப் பெரியசெல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கட் காண்போர்தொழாம் வரிதாற்போலும்; அதனது போகலும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக்குழாம் போயினாற் போலும், (எ - று).

'பெருஞ்செல்வம்'எனவே, துறக்கச்செல்வமும் அடங்கிற்று. போக்கு மென்ற எச்சவும்மையான் வருதலென்பது பெற்றாம். அக்குழாக்கூத்தாட்டுக்காரணமாக அரங்கின்கட் பலரிறத்தாற் றானேவந்து அக்காரணம் போயவழித் தானும் போமாறுபோலச் † செல்வமும் ஒருவனல்வினைகாரணமாகவந்து பலரிறத்தாற் றானேவந்து ‡ அக்காரணம் போயவழித் $ தானும் போமென்ற தாயிற்று.

தெளி.—(இ - ள்.) (ஒருவனிடத்தி) பெருஞ்செல்வம் - பெரியசெல்வம் (வருதல்), கூத்தாட்டு - கூத்தாடுதல்(செய்கின்ற), அவை - சபையினிடத்தி, குழாத்தற்று - (காண்போர்) கூட்டம் வந்தாற்போலும், போக்கும்- (அச்செல்வம்) போகுதலும், அது - அக்கூட்டமானது, விளிந்தற்று - (அக்கூத்தாடுதல் முடிந்தவிடத்தி) போயினாற் போலும், (எ - று).

'பெருஞ் செல்வம்'என்றுகூறவே, சுவர்க்கச் செல்வமும் அடங்கிற்று. போக்குமென்ற இறந்ததுதழுவியவெச்சவும்மையால்வருதலென்பதுபெறப்பட்டது. அக்கூட்டமானது கூத்தாடுதல் காரணமாகச் சபையினிடத்துப் பலரிதத்தால் தானேவந்து அக்கூத்தாட்டுக் காரணம் போனவிடத்துத் தானும்போகும் வகைபோலச் செல்வமும் ஒருவனது நல்வினை காரணமாக அவனிடத்துப் பலரிதத்தால் தானேவந்து அந்நல்வினையாகிய காரணம் போனவிடத்துத் தானும் போமென்றதாயிற்று.

---

† "மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல, வருவ முயர்குலமு மெல்லாங் - கிருமடந்தை, ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து,போம் போ தவளோடும் போம்" என்பதுமிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

‡ தாமரைமுகை மலர்தற்குச் சூரியனும்,அது குவிதற்குச் சந்திரனும் நிமித்த காரணமாயிருத்தல்போல, செல்வம் வருதற்குநல்வினையும் அது போதற்குந் தீவினையும் நிமித்த காரணமாயிருக்கின்றன வென்பதாம்.

$ தானும் - செல்வமும்.

(க-து.) செல்வம் நிலைபெறுதலுடையதன்று என்பது. (உ)

2. The acquisition of wealth is like the gathering together of an assembly for a theatre; its expenditure is like the breaking up of that assembly.

*

கூ. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபேற்ற்
* லற்குப வாங்கே செயல்.

பரி.—(இ - ள்.) நிலையாத இயல்பினை யுடைத்துச் செல்வம்; அது ஊப்பேற்றுல், அதனைப் செய்யப்படும் அறங்களை அப்பேற்றபொழதே செய்க, (எ - று).

† அல்கா வென்பது நிரிந்து நின்றது. ‡ ஊழுள்வழியல்லது திறந் தாராற் பெறப்படாமையின் 'அதுபெற்றுல்' என்றும், § அஃதில்வழி நில்லாமையின் 'ஆங்கே' என்றுங் கூறினர். அதனைற் செய்யப்படும் அறங் களாவன: ¶ பயனெக்காது செய்யுங் கடவுட்பூசையும், தானமும் †† முத லாயின. () அவை ஞானவேதவாய் வீடுபயத்தலின், அவற்றை 'அற்குப' என்றும், ‡‡ 'செயல்' என்றுங் கூறினர். இவையிரண்டு பாட்டானும் செல்வ நிலையாமை கூறப்பட்டது.

* அற்குப என்பது வினையாலணையும் பெயர். அதன் பொருள் நிலைப்பன என்பது.

† நிலைத்தலென்னும் பொருளதாகிய அல்குதல் என்னும் தொழிற்பெ யரின் பகுதியாகிய அல்கு என்பது செய்யுள்விகாரத்தால் அற்கு எனத்தி ரிந்துநின்றது; அல்கா என்பதன் ஆகாரவிகுதி எதிர்மறைப் பொருளது.

‡ திறந்தவிடத்துப் பொருள் சம்பாதித்தற் பொருட்டன்ற முயற்சியில்லா மைபற்றி ஊழுள்வழியல்லது திறந்தாராற் பெறப்படாமையின், அதுபெற் றுல்என்றும்' என்றுகூறப்பட்டது. படவே, திறந்தவர் பொருளைப் பெ றுதற்குக் காரணம் அவரது ஊழேயென்றும் அவரது முயற்சி யன்றென் றும் பெற்றுமென்க.

§ அஃதில்வழி நில்லாமையின் - அவ்வூழ் (நல்வினை) இல்லாதவிட த்துச் செல்வம் நிலைபெற்றிராமையின்.

¶ "ஆற்றும் பயன்வேண் டாக்கருமம் அற்றக்காண சுத்திதரும்" என் றமெய்ஞ்ஞான விளக்கம் கூறுகின்றது. பயனெக்காது செய்யும்கருமம் நிஷ்காமிய கருமமெனப்படும்.

†† முதலியன என்றமையின் தண்ணீர்ப்பந்தர் வைத்தல், பெரியோர் தக்க மடங்கட்டுதல், விலைகொடுத்துயிர் காத்தல், கல்விச்சாலை யேற்படுத் துதல், அன்ன சத்திர மேற்படுத்துதல் முதலியவற்றையுங் கொள்க.

() அவைகடவுட் பூசை முதலியன. ‡‡ செய்க என்றும் பாடமுண்டு.

தெளி.—(இ-ன்.) செல்வம் - செல்வமானது, அற்கா - நிலைபெறுதலில்லாத, இயல்பிற்று - இயல்பினையுடையதாம், அதுபெற்றால் - அச் செல்வத்தைப் பெற்றால், அற்குப - (அச்செல்வத்தினால் செய்யப்படும்) அறங்களை, ஆங்கே - அப்பெற்றபொழுதே,செயல்-செய்யக்கடவன்,(எ-று).

அல்காவென்பது அற்கா எனத்திரிந்துநின்றது. (செல்வம் நல்) ஊழ்உள்ளவிடத்தல்லது துறந்தவரால்பெறப்படாமையால் 'அதுபெற்றால்' என்றும், அவ்வூழ் இல்லாதவிடத்து நில்லாமையால்'ஆங்கே'என்றும் சொல்லினர். அச்செல்வத்தினால் செய்யப்படும் அறங்களாவன:பயனைக் குறியாது செய்யும் கடவுட்பூசையும், தானமும் முதலானவை. அவைஞானத்திற்குக் காரணமாய் மோட்சத்தைத் தருதலால், அவ்வறங்களை 'அற்குப' என்றும், 'செயல்' என்றும் சொல்லினர். இவை இரண்டு பாட்டாலும் செல்வத்தின் நிலையாமை சொல்லப்பட்டது.

(க-து.) செல்வம் நிலைபெறுவதாயிருத்தலின், அச்செல் வத்தைப் பெற்றவன் அதுகொண்டு விரைந்து அறஞ்செய்ய வேண் டும் என்பது. (கூ)

3. Wealth is perishable; let those who obtain it immediately practise those virtues which are imperishable.

ச. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

பரி.—(இ-ள்.) நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறை போலத் தன்னைக்காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயதுவுயிர், அஃதுணர்வாரைப்பெறின், (எ-று).

* காலமென்னும் அருவப்பொருள் உலகியல் நடத்தற் பொருட்டு ஆதித்தன் முதலிய அளவைகளாற் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானுங்கூறுபடாமையின் 'நாளென வொன்றுபோல்' என்றும், அது தன்னை வாளென்று உணராமாட்டாதார் நமக்குப்பொழுது போகாநின்ற தென்று இன்புறுமாறு நாளாய் மயக்கலின் 'காட்டி' என்றும், இடைவி டாது ஈர்தலான் † 'வாளது' என்றும், அஃதீர்கின்றமையை உணர் வார் அரிபராகலின் 'உணர்வார்ப்பெறின், என்றுங்கூறினர். ‡ உயிரென்

* கழிந்தது கழிகின்றது கழிவது என்னும் வியவகாரத்திற்குக் கா ரணமாயிருப்பதாலமெனப்படும். அது பிருதிவி முதலிய வற்றைப்போல உருவமுடையதாக வீராமையின் 'காலமென்னும் அருவப்பொருள்' என்று கூறப்பட்டது. † வாளின்வாயது என்றும் பாடமுண்டு.

‡ உயிரானது நித்தமாயிருத்தலால், அது வாளால் அறுக்கப்படுவதாகா தென்க. இது பகவற்கீதை சாங்கியயோகத்தில் "ஆயுதங்கள் இவனை (ஆத்மா வை) வெட்டுவதில்லை; நெருப்பானது இவனைச் சுடுவதில்லை; நீரான திவ

னுஞ் சாதியொருமைப்பெயர் ஈண்டு உடம்பின்மேனின்றது; ஈரப்படுவது அதுவேயாகலின். வாளென்பது ஆருபெயர். * இனி இதனை னை நினைப்பதில்லை; வாயுவான திவனை உலர்த்துவதில்லை.'' என்று கூறுவதானு மறிதற் பாற்றும்.

உயிரானது தன்னையறுத்துச் செல்கின்ற காலமாகிய வாளினது வாயினிடத்தது என்று கூறப்படினும் அறுக்கப்படுவது உயிர்க்கு நிலைக்களமாகிய உடம்பன்றி உயிரல்லாமையின் 'உயிரென்னும் சாதியொருமைப் பெயர் ஈண்டு(இங்கு)உடம்பின் மேனின்றது; ஈரப்படுவது (காலமென்னும் வாளினுல் அறுக்கப்படுவது) அதுவே (உடம்பே)யாகலின்'என்று கூறப்பட்டதென்க. உயிருக் கிருப்பிடமான உடம்பை உயிரென்றது தானியாகுபெயராம்.

மைத்திராயண்ணியுபநிடதம் ஆருவது பிரபாடகம் 15-ல் ''சூரியனுதிப்பித்தி அதுகாலமாயிற்று; எனெனின், கலைமுதலியவற்றோடு கூடியிருப்பதினுற்றன்.....வருஷத்தினுல் பிராணிகளுண்டாகிறார்கள்; அப்படி யுண்டானவர்கள் வருஷத்தினுலேயே விருத்தியடைகிறார்கள்; வருஷத்திலேயே லயமடைகிறார்கள்'' என்று கூறுகின்றது. காலடியார் செல்வநிலையாமையில் ''தோற்றஞ்சான் ஞாயிறு காழிபா வைகலும், கூற்ற மளக்குநாட் காளுண்ணும்'' என்றும், அறன்வலி யுறுத்தலில் ''வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும் வைகலை வைருமென் றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்நாள்மேல் வைகுதல், வைகலை வைத்துணராதார்'' என்றும் கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

* இனி இதனை (இக்குறளுக்கு) நாளென வொன்றுபோற் காட்டி-நாளென்பது ஒருபொருள்போலத்தோன்றி, உயிரீருமவாள்-உயிரை யீர்வ தொரு (அறுப்பதாகிய வொரு) வாளாமென் றுரைகூறுவாருமுளர். என வென்பது பெயர்க்கொல்லாகாது இடைச்சொல்லாகியிருத்தலாலும், ஒன்று போற்காட்டி யென்பதற்கு ஒருபொருட் சிறப்பு இல்லாமையாலும், அது என்பது குற்றியலுகர மல்லாமையாலும் அஃது உரையல்ல வென்றறிக.

இம்மறுப்பின் விபரம் வருமாறு:—என என்னும் இடைச்சொல் (என்று சொல்லப்படுவது என்னும் பொருளதாகிய) என்பது என்னும் (வினையாலணையும்)பெயராகாமையாலும், 'ஒன்றுபோற்காட்டி' என்பதற்கு (அறுக்கப்படுவதொரு காலவரையறை போலத்தன்னை உலகினர்க்குக்) காட்டி யென்றுரை கூறுதல்)குணங்கொழிற்முதலியனவாக விராது பொருளாயிருக்கும் நாளை யொருவிசேடமுங் கற்பிக்காது ஒருபொருள் போலத் தோன்றி என்றுரைகூறியதில் யாதொரு சிறப்புங் காணப்படாமையாலும், 'வாளதுணர்வார்' என்பதை வாளது உணர்வார் என்று பிரிக்காது வாள் அது உணர்வார் என்று பிரிக்குமிடத்து அஃறிணை முதலிய ஆய்தத்தொடர் குற்றியலுகரமொழிகள் நிலைமொழியாக நிற்குமிடத்து ''முன்னியிர் வருமிடத் தாய்தப் புள்ளி, மன்னல் வேண்டு மல்வழி யான'' என்னும் (தொல்காப்பிய) விதிப்படி அஃதுணர்வார் என்றிருத்தல்வேண்டும்;


நானென்பதொரு பொருள் போலத்தோன்றி உயிரை மீர்வதொரு வானா மென்றுரைப்பாருமுளர். என என்பது பெயரன்றி இடைச்செல்லாகலா னும்,'ஒன்று போற்காட்டி' என்பதற்கு ஓர் பொருட்பிறப் பின்மையானும், அது வென்பது குற்றிய லுகர மன்மையானும், அஃதரையன்மையறிக.

தெளி.—(இ-ன்) உயிர் - உயிரானது, நாளென - நாளென்ற அளவு செய்யப்படுவதாகிய, ஒன்றுபோல் - ஒருகாலவளவுபோல, காட்டி - (தன் னைக்) காட்டி, ஈரும் - அறுத்துச்செல்லுகின்ற, வாளது - வாளினது வாயி னிடத்தது, உணர்வார்ப்பெறின் - (அதனை) அறிவாரைப்பெற்றால்,(எ-று).

காலமென்னும் அருவப்பொருள் உலகியலை நடத்துதற் பொருட்டுச் சூரியன் முதலாகிய அளவுசெய்யுங் கருவிகளால் இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனக் கூறுபட்டதாக வழங்கப்படுதல்லாமல் தானுக்குக் கூறுபடாமை யால் 'நாளெனவொன்றுபோல்' என்றும், அக்காலம் தன்னை வாளென்று அறியமாட்டாதவர் நமக்குப்பொழுது போகாகின்றதென்றுமகிழும்படி(அவ ரை)நாளாய்மயக்கலால் 'காட்டி' என்றும், இடைவிடாமல் அறுத்தலால், 'வாளது' என்றும், அக்காலம் அறுக்கின்றதை அறியவல்லவர் அரியவரா யிருத்தலால்'உணர்வார்ப்பெறின்' என்றுஞ்சொல்லினர். அறுக்கப்படுவது உடம்பேயாகலால்உயிரென்னுஞ் சாதிபொருமைப்பெயர் தானியாகு பெய ராய் நிற்கு உடம்பையுணர்த்தி நின்றது. வாளினதுவாயை வாளென்றமை யின்,இது பொருளாகுபெயராம். இதனுல் உடம்புகளுக்கு அளவுசெய்யப் பட்ட நாள் கழிகிறவிதம் சொல்லப்பட்டது.

(க-து.) உடம்பானது நாளாகத் தன்னைக் காட்டி மக்களைமயக் கி வருகின்ற காலதத்துவமென்னும் வாளினது வாயில் அறுபட்டு வருகின்றது என்பது.

4. Time, which shows itself to the ignorant as it were something real, is in the estimation of the wise only a saw which cuts down life.



இ. நாச்சேற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

பரி.—(இ-ள்.) உரையாடாவண்ணம் நாவையடக்கி விக்குள் எழுவ தற்கு முன்னே வீட்டிற்கேதுவாகிய அறம் விரைந்து செய்யப்படுமே.

அவ்வாறின்றி அதனைவார் என்ப (அது இது முதலிய முற்றியலுகர மொழி நிலைமொழியாக நிற்க உயிரை முதலாகவுடைய வருமொழிவந்து) புணருமென்பதற்கு விதியில்லாமையாலும் அவ்வுரை பொருந்தாதென்று பரிமேலழகர் மறுத்தாரென்க.

† மேலுஞ்செய்வதால் ஒருதலையாகலானும் வக்கணிச்செய்தலே யன்றிச் சொல்லுமாகாமையானும் "வாராமுன்" என்றும், அதுதான் இன்னபொழுது வருமென்ப தின்மையின் 'மேற்சென்று' என்றுங் கூறினார். மேற்சேறல்-மண்டுதல். கல்வினை செய்யுமாற்றின்மேல்வைத்து நிலையாமை கூறியவாறு.

தெளி.—(இ-ன்.) காச்செற்று - (பேசாதிருக்கும்படி) காவை யடக்கி, விக்குள்-விக்கலான து, மேல்வாராமுன்-எழுவதற்கு முன்னே, கல்வினை - (மோட்சத்திற் கேதுவாகிய) அதமான து, மேற்சென்று-விரைந்து, செய்யப்படும்-செய்யத்தக்கதாம், (எ-று).

விக்கலான தமேல்நோக்கி வருதல் நிச்சயமாதலானும், அவ்விக்கல் வந்தவிடத்து வீட்டிற்குக் காரணமான அறத்தைச் செய்தலே யல்லாமல் சொல்லுதலுங் கூடாமையாலும் "வாராமுன்" என்றும், அவ்விக்கல்தான் இன்னகாலத்தில் வருமென்பதில்லாமையால் 'மேற்சென்று' என்றுங்கூறினார். மேற்செல்லல்-தரிதப்படுதல். கல்வினைசெய்யும் வழியின்மேல் வைத்து நிலையாமை சொல்லியவாறும். இதனால் அந்த நாள்கழிந்தாலுண்டாகும் நிலையாமை சொல்லப்பட்டது.

(கு-து.) காவை யடக்கி விக்குள் எழுவதற்கு முன்பே விரைந்து வீட்டிற் கேதுவாயவறத்தைச செய்யவேண்டும் என்பது.

5. Let virtuous deeds be done quickly, before the hiccup comes, making the tongue silent.

சு. ‡ நேருங வுளனெருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

பரி.—(இ-ள்.) ஒருவன் நேருநலுளனெனின் அவனே இன்றில்லையாயினு னென்றுசொல்லும் நிலையாமை மிதனியுடைத்து இவ்வுலகம்.

ஈண்டு உண்மை பிறத்தலையும், இன்மை இறத்தலையும் உணர்த்தின்றன. அவை பெண்பாற்கும் உரியவாயினும் * சிறப்புப்பற்றி ஆண்பாற்கே கூறினார். இந்நிலையாமையே உலகின் மிக்கதென்பதாம்.

† "புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி, இன்னினியே செய்க வறவினை" என்று நாலடியாரும், "காலைசெய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச், சாலச்செய் வாரே தலைப்படுவார்" என்று அநெறிச்சாமுங் கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

‡ "மின்னி னிலையில மன்னுயி ராக்கைகள்" என்றனர் சடகோபர்.

* அறிவு ஆற்றல் முதலியவற்றில் பெரும்பான்மையாகப் பெண்பாலும் ஆண்பால் சிறந்திருப்பதுபற்றி ஈண்டு 'உளன்' என்று ஆண்பாலாகக் கூறப்பட்டது. ஈண்டு ஆண்பால் மற்றைப்பாலுக்கு முபலட்சணமாம்.

தெளி.—(இ-ன்.) இவ்வுலகு - இவ்வுலகமானது, ஒருகன்-ஒருகால்-நேற்றைக்கு, உளன் - உளனுயினன் (பிறந்தவனுயினன்), (அவனே), இன்று - இன்றைக்கு, இல்லை - இலனுயினன் (இறந்தானுயினன்), என்னும் பெருமை- என்ற சொல்லும் (நிலையாமையின்) மிகுதியை, உடைத்து-உடையதாயிருக்கின்றது, (எ-று).

இங்கு உளன் என்பதன் பகுதியாகிய உண்மை பிறத்தலையும், இல்லை யென்பதன் முதலிலுள்ள இன்மை இறத்தலையும் அறிவித்து நின்றன. பிறத்தலும் இறத்தலும் பெண்பாலுக்கும் உரியனவாயினும், சிறப்புப்பற்றி ஆண்பாலுக்கே சொல்லினர், இந்த நிலையாமையே உலகத்தினிடத்து மிகுந்திருக்கின்றதென்பதாம். இதனுல் அவ்வுடம்புகள் ஒரோவிடத்துப் பிறந்தவளவிலே இறத்தல் சொல்லப்பட்டது.

(க-து.) இவ்வுலகமானது நேற்றுப் பிறந்தவன் இன்றைக் இறந்தா னென்னும் நிலையாமையின் மிகுதியை யுடைத்தா யிருக்கின்றது என்பது.

6. This world possesses the greatness that one who yesterday was is not to-day.

எ. * ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

பரி.—(இ-ள்.) ஒருபொழுதளவும் தம்முடம்பும் உயிரும் இயைந் திருத்தலைத் தெளியமாட்டார், மாட்டாதுவைத்தும், கோடியளவுமன்றி அதனினும் பலவாய நினைவுகளை நினையாநிற்பர் அறிவிலாதார், (எ-று).

இழிவுசிறப்பும்மையாற் பொழுதென்பது ஈண்டுக் கணத்தின்மே னின்றது. † காரணமாகிய வினையினளவே வாழ்தற்கும் அளவாகலின், அஃதறியப்படாத தாயிற்று. பலவாய நினைவுகளாவன: ‡ பொறிகளான் நுகரப்படும் இன்பங்கள் தமக்குரிய வாமாறும், $ அதற்குப் ¶ பொருள்

* "உண்பது நாழி யுடுப்பது மான்குழுழம், எண்பது கோடினினைந் தெண்ணுவன—கண்புதைந்த, மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச், சாந்துணையுஞ் சஞ்சலமே தான்" என்றனர் ஒளவையார்.

† "வினைப்போக மேயொரு தேகக்கண் டாய்வினை தானெழுந்தால், தினைப்போ தளவுநில் லாதுகண்டாய்" என்றனர் பட்டினத்தடிகள்.

‡ செவிமுதலிய இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் சப்த முதலிய இன்ப விஷயங்கள்.

$ அதற்கு-பொறிகளால் அனுபவிக்கப்படும் இன்ப விஷயங்கள் தமக் குரியனவாதற்கு.

¶ இன்பங்களை யநுபவித்தற்குப்பொருள் தினைக்காணமாதலை கால

தினைக்காரணமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றை த்தா முயலுமாறும், † அவற்றிற்கு வரு மிடையூறுகளும், அவற்றை நீக்கு மாறும், நீக்கி அப்பொருள் கூடைக்கூட்டுமாறும், அதனைப் பிரிந்தொன் ளாமற் காக்குமாறும், அதனுன் ட்டாரை யாக்குமாறும், கள்ளாதை யழிக்குமாறும், தாம அவ்வின்பக்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலா தது இயல்பின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு. இனிக் ¶ கருதுப வென்பதனை அஃறிணைப் பன்மைப் பெயராக்கி யுரைப்பாருமுளர்.

தேளி.—(இ-ன்.) ஒருபொழுதும் - (அறிவில்லாதவர்) ஒருபொழுதள வும், வாழ்வதை—(தம்முடம்பும் உயிருங்கூடி) இருத்தலே, அறியார்-அறிய மாட்டார், (மாட்டாதிருந்தும்), கோடியுமல்ல-கோடியளவுமன்றி, பல-அக் கோடியிலும் பலவாகிய வினைவகளே, கருதுப-வினையாகிற்பர், (எ - று).

ஒருபொழுதும் என்ற இழிவுசிறப்பு உம்மையால் இங்குப் பொழுதெ ன்பது கணப்பொழுதளவை யுணர்த்திநின்றது. நிமித்தகாரணமாகிய பிரா ரத்த வினையினளவே உடம்பும் உயிரும்கூடி வாழ்வதற்கும் அளவாகலால், அவ் வளவு அறியப்படாததாயிற்று. பலவாகிய வினைவகளாவன: இந்திரியங்க னால் அனுபவிக்கப்படும் இன்பங்கள் தமக்குரியவை யாகும்விதமும், அதற் குப் பொருள் துணைக்காரணமாகும் விதமும், அப்பொருள் தம்முயற்சி னால் வரும் விதமும், அம்முயற்சிகளைத் தாம் செய்யும் விதமும், அம் முயற்சிகளுக்கு வரு மிடையூறுகளும், அவ் விடையூறுகளை நீக்கும் வித மும், நீக்கி அப்பொருளைச் சோக்கும் விதமும், அப் பொருளைப் பிறர் கொண்டுபோகாமற் காப்பாற்றும் விதமும், அப்பொருளால் நேரிதரை ஆக்கும் விதமும், பகைவரை அழிக்கும் விதமும். தாம் அவ்வின்பங்களை

டியார் மெய்ம்மையிவ் "வகலிலா வையத்து மன்னிய மூன்றில் (அறம் பொருளின்பங்களில்), நடுவண(பொருளான) தெய்த விருதலையு (அறமும இன்பமு) மெய்தும்" என்று கூறுவதாலுமறிக.

முதற்கருவிக் (முதற்காரணத்திற்) குச் துணையாய் அது காரியப்பி னவுமிருப்பது துணைக்காரண (கருவி) மெனப்படும். இங்கு இன்பத்தை யனுபவிப்போனது மனத்திலுள்ள நல்வினையின் அதிர்ஷ்டம் இன்பத்திற் கு நிமித்தகாரணமாம்; அம்மனத்தி னின்றும் அவ்வின்ப முண்டாவதற்குப் பொருள் துணைக்காரணமாம், மனம் முதற்காரணமாம்.

† "இன்னல் தரும்பொருளை ஈட்டுதலுந் தின்பமே, பின்னதனைப் பேணுதலுந் தின்பமே—யன்ன, தழித்தலுந் தின்பமே யந்தோ பிறர்பா லிழத்தலுந் தின்பமே யாம்" என்பது நீதிவெண்பா.

¶ கருதுப என்பதனைப் பகாவீற்றுப் பலர்பால் வினைமுற்றாகக் கொள் ளாது அகரவீற்று அஃறிணைப் பன்மைப் பெயராக்கி (வினைக்கும் விஷயங் கள் என்று) சொல்லுவாரு முண்டென்பது. இங்குக் கருதுப என்பதி . வினையாலணையும் பெயர். இதற்குப் பயனிலை பல (எண்ணிறந் தனவாம்) என்பது.

யனுபவிக்கும் விதமும் முதலாயினவாம். அறிவில்லாதவரது இயல்பின் மேல் வைத்த நிலையாமைசொல்லிவபடியாம். இதனால் அவ்வடம்புதன் ஒரு கணமாயினும் நிற்குமென்பது கம்ப்பட்டமை சொல்லப்பட்டது.

(க-து.) ஒரு பொழுதளவும் தாம் வாழ்வதை யறியாதவர் கோடிக்கு மேலான வெண்ணங்களோ யெண்ணுகின்றனர்.

7. Innumerable are the thoughts which occupy the mind of the unwise, who know not that they shall live another moment.

அ. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

பரி.—(இ - ள்.) முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனு ளிருந்த புள்ளூப் பருவம் வந்துழிப்பறந்துபோய தன்மைத்து,உடம்பிற் கும் உயிர்க்கு ளுளதாய நட்பு, (எ-று).

'தனித்தொழிய' என்றதனுன், முன் தனியாமை பெற்றும், ‡ அஃதாவது கருவுந்தானும் ஒன்றுப்பப் பிறந்து வேறுந்தினையும் அதற்கு $ ஆதாரமாய் நிற்றல். அதனுல் அஃது உடம்பிற் குவமையாயிற்று; அத னுன் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமற்போகலின், புள் உயிர்க் குவமையாயிற்று. முட்டையுட் பிறப்பன பிறவுமுளவேனும், புள்ளையே கூறினுர்; ¶ பறந்துபோதற் றெழிலான் உயிரோ டொப்புமை யெய்து வது அதுவேயாகலின். 0 நட்பென்றது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட் பின்றிப்போத லுணர்த்தினின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயி ரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முண் மாறுக

‡ அஃதாவது - தனியாமை (பிரியாமை) யாவது.

$ யாதாவதொன்று தன்னிடத்திருக்குமா றிடங் கொடுப்பது ஆதார மெனப்படும். கருவுந்தானும் (முட்டையும்) ஒன்றுப்பப் பிறந்தும், அக்கரு வுருப்பட்டு வேறுருமனவும் அக்கருவுக்கு முட்டை ஆதாரமா யிருக்கின்ற தென்க.

¶ ஜீவன் பறக்கின்றது; துடிக்கின்றது என்று முலகவழக்கும் மிங் குணர்த்தக்கதாம்.

0 உயிருக்கும் உடலுக்கும் நட்பில்லா திருத்தலே நட்பு என்று கூறி யது அரக்கரைப் புண்ணியசனம் என்பது போன்ற எதிர்மறை யிலக்கணை யாம்.குறிப்பு மொழியாவது கூறவேண்டியபொருளை வெளிப்படையாகக் கூறுது ஆசாய்ச்சொல் வினங்கும்படி சொல்லுதலாம். இதன் தன்மையை "ஒன்றெழி பொதச்சொல்" என்னும் நன்னூற் சூத்திரத்தின் விருத்தி யுரையில் விரிவாய்க் காணலாம்.

லின், வினைவயத்தாற் கூடியதல்லது நட்பிலவென்ப தறிக. † இனிக் குடம்பை யென்பதற்குக் கூடென்ற உரைப்பாருமூனர். அது புள்ளுடன் தோன்றுமையானும், அதன்கண் அது மீண்டு புகுதலுடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை யறிக.

தேனி:—(இ-ள்.) உடம்போடு-உடம்பிற்கும், உயிரிடை - உயிர்க்கும், (உண்டாகிய), நட்பு-நிகேமானது, குடம்பை -(முன்னே தனியாயிருந்த) முட்டையானது, தனித்தொழிய-தனித்துக்கிடக்க, புள்-(அதனுளிருந்த) பறவை, பறந்தற்று-(பருவம்வந்தவிடத்து) பறந்துபோனதன்மையதாம், (எ-று).

'குடம்பைதனித்தொழிய' என்றதனால் முன்னர்த் தனியாமை (பிரிந்திராமை) பெற்றும். அஃதாவது கருவுந்தானும் (முட்டையும்) ஒன்றுய்ப் பிறந்து அக்கரு வேறுருமனவும் அதற்கு ஆதாரமாக நிற்றலாம். அதனால் அம்முட்டை உடம்பிற்கு உவமானமாயிற்று; அம்முட்டையினிடத்து வேற்றுமையில்லாது நின்றே பின்பு நுழையாமற் போவதினால், புள் (பறவை) உயிருக்கு உவமானமாயிற்று. முட்டையினிடத்துப் பிறப்பனவாகிய பாம்புமுதலிய பிறவும் இருப்பினும்,பறந்துபோதலாகிய தொழிலால் உயிரோடொப்புமையாயிருப்பது புள்ளேயாதலால் அப்புள்ளையே உவமானமாகக்கூறினர். நட்பென்றது இங்குக் கற்கறித்த ஒன்கட்டாய் என்பது போலக்குறிப்புச்சொல்லாய் (உயிருடம்பினிடத்து) நட்பில்லாது போதலே யறிவித்து நின்றது. அறிவாயும் அருவாயும் சித்தமாயுமுள்ள உயிரும், அசேதன(ஜட)மாயும் உருவாயும் அசித்தமாயுமுள்ள உடம்பும் தம்முன்னே மாறுபட்டிருத்தலால், அவை வினைவசத்தால் கூடியதல்லாமல், அவற்றிற்கு நட்பில்லையென்பதறிக. இதனால் அவ்வுடம்புகள் உயிர்நீங்கியவிடத்துக் கிடக்குமாறு சொல்லப்பட்டது.

† இனிக் குடம்பை யென்பதற்குக் கூடு என்றபொருள் கூறுவாருமுண்டு. அக்கூடு பறவையுடன் தோன்றி நிருத்தலாலும், அக்கூட்டில் அப்பறவை மறுபடியும் வந்து நுழைவ தின்டாகையாலும், உடலுக்குக் கூடு உவமான மாகாதென்க. அஃதாவது ஓர் உடம்பினின்றும் நீங்கிய உயிர்மறுபடியும் (வேறு உடம்பிற் புகுவதன்றி) அவ்வுடம்பில் புகுவதில்லாமையால், குடம்பை யென்பதற்குக் கூடு என்று பொருள் கூறுதல் பொருத்தாதென்று மறுக்கப்பட்டது. "கறந்தபான் மூலப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா, துடைத்த சங்கு ஞெரையு மூபீர்களு முடற்புகா" என்றறிவுவாக்கியங்கூறுவதிங் குய்த்திணைத்தக்கதாம். நாலடியார் யாக்கை நிலையாமையில் "கேளாதே வந்து நினைவா யிற்றேன்றி, வாளாதே போவான் மாற்றார்கள் - வாளாதே, சேக்கை (கூடு) மர ஞெழியச் சேணீங்கு புட்போல, யாக்கை தமர்க்கொழிய நீத்து" என்புள்ள செய்யுள் குடம்பைக்குக் கூடு என்று பொருள்கூறுவதற்குச் சாதனமாய் நின்றதென்க.

(க-து.) உயிர்க்கும் உடம்பிற்கும் சிறிதஞ் சிநேகமில்லை.

8. The love of the soul to the body is like the love of a bird to its egg which it flies away from and leaves empty.

கூ. † உறங்குவது போலுஞ் சாக்கா றேங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

பரி:—(இ-ள்.) ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோ டொக்கும்; அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோ டொக்கும், (எ-று).

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருகின்றாற்போலச் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவாறு அறிவித்தற்குப் பிறப்பும் உடன்கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) சாக்காடு-(ஒருவனுக்கு) மரணம், (வருதல்), உறங்குவதுபோலும்-தூக்கம் (வருதல்) போலும், பிறப்பு - (அம்மரணத்தின் பின்னே) பிறப்பு, (வருதல்), உறங்கிவிழிப்பதுபோலும் - தூங்கிவிழித்தல் (வருதல்) போலும், (எ-று).

உயிர்களுக்கு உறங்குதலும் விழித்தலும் இயல்பாய் விரைவாக மாறி மாறி வருதல்போல இறத்தலும் பிறத்தலும் இயல்பாய் விரைவாக மாறி மாறி வருமென்பது கருத்து. இறத்தலாகிய நிலையாமையே நிலைபெற்ற விதத்தை அறிவித்தற்குப் பிறப்பும் உடன் சொல்லப்பட்டது. இதனால் அவ்வுடம்புகளுக்கு இறப்பும் பிறப்பும் மாறி மாறி வருமாறு சொல்லப்பட்டது. உறக்கம்—சுழுத்தி.

(க-து.) *சாதலும் பிறத்தலும் உறங்குவதும் விழிப்பதும் போன்றனவாம் என்பது.*

9. Death is like sleep; birth is like awaking from it.

கo. புக்கி லமைந்தின்று கோல்லோ வுடம்பினுட்
டேச்சி லிருந்த வுயிர்க்கு.

† *"பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலும், உறங்கலும் விழித்தலும் போன்ற தன்மையின்" என்பது மணிமேகலை.*

பரி:—(இ-ள்.) * ஆதலுதசரியவற்றின் இல்லாய உடம்புகளுள் ஒருக் கிருந்தே போந்த உயிர்க்கு எத்தான்றும் இருப்பதோரில் இதுகாறும் அமைத்ததில்லேபோலும், (எ-று).

† அக்கோய்கள் இருக்க அமைந்த ஞான்று இருந்தும், வெகுண்ட ஞான்றபோயும், ஒருடம்பினும் நிலைபெறுது வருதலால் 'தங்கிலிருந்த' என்றார். பின் புறப்படாது புக்கேவிடியில் அமைந்ததாயின், ‡ பிறிதிக ஞன் ஒதக்கொதென்பதாம்; ஆகவே, § உயிரோடு கூடிநிற்பதொருடம்பும் இல்லையென்பது பெறப்பட்டது. இவை யேழு பாட்டானும், முறையே ¶ யாக்கைக்கு வகைந்த நான் கழிகின்றவாறும், கழிந்தால் 0 உனதாம்நிலை

* "இம்மைக் கிம்மைப யியலுடம்பி தன்றே,இம்மைபொய்யை மெய் யென் றிராதே", "எல்லாப் படியாலு மெண்ணினு லிவ்வுடம்பு,பொல்லாப் புழுமலிசோய்ப் புன்குரம்பை" என்பது நல்வழி.

† வாத பித்த சிலேத்தும மென்னும் நோய்கள்(உயிராகிய தான் உட லில் தங்கி) இருக்க மேம்படாது அடங்கியிருக்கும் காலத்தில் (உடலில் தங்கி) இருந்தும், (அந்நோய்கள்) வெகுண்டஞான்று(கோபித்த காலத்தில் அஃதாவது மேம்பட்டு வருத்தியகாலத்தில்) (அவ்வுடலே விட்டுப்) போயும் ஒருடம்பிலும் நிலைத்திருத்தலே யடையாது உயிர் சுழன்றுகொண்டிருக்கு மென்றறிக.

‡ பிறரென்றது வாதமுதலிய நோய்களை.

§ புறகாறும "இருக்கடலுடுத்த"என்னுஞ் செய்யுளில்'உடம்பொடு நின்ற வுயிரு மில்லை" என்று கூறுகின்றது.

¶ (1) 'காளென வொன்று போற்காட்டி' என்னுங் குறளால் உடல் களுக்கு ஏற்படுத்திய நான்கழிகின்றவகையும், (2) "நாச்செற்று' என்னுங் குறளால் அந்நான் கழிந்தால் உண்டாகும் நிலைமையும், (3) 'தெருளா ஞெருவன்' என்னுங் குறளால் அவ்வுடல்கள் ஒவ்வோரிடத்துப் பிறந்த போதேசாதலும், (4) 'ஒருபொழுதும்' என்னுங் குறளால் அவ்வுடல்கள் ஒருகணப்போதாவது நிலைத்திருக்குமென்பது தெளிந்தறியப்படாமையும், (5) 'குடம்பை தனித்தொழிய' என்னுங் குறளால் உயிர்நீங்கியவிடத்து உடல்கள் கிடக்கும்வகையும், (6) 'உறங்குவது போலும்' என்னுங் குற ளால் உடல்களுக்கு இறத்தலும் பிறத்தலும் மாறிமாறி வரும் வகையும்,, (7) 'புக்கில மைந்தின்று' என்னுமிக்குறளால் மாறிமாறிப் பிறந்திறக்கும் உடல்கள் உயிருக்கு உரியனவல்ல வென்பதும் என்ற இவ்வகையால் உடம்பு நிலைத்திராமையைப்பற்றிக் கூறியவகையைக் கண்டுகொள்க என்ப தாம். "சூப்பு,தக்கம், சோய் என்னுமிவை வசிப்பதாயும், பசி,தாகம்,குளிர், கனலென்னு மிவற்றுல் பயத்தை யுண்டு பண்ணுவதாயும், பெரும்பான் மையும் இரஜோகுண மூன்றதாயும் பஞ்சபூதாங்களுக் கிருப்பிடமாயும்,நிலை யற்றதாயுமிருக்கிற இத்தச்சரீரமாகியவீட்டை இவனுக்மா மறுபடியு மடை யாளமாறு செய்யவேண்டும்" என்ற மனுதருமசாஸ்திரம் ஆறுவதத்தியாயத் திற் கூறியதையுங் கவனிக்கத்தக்கதாம்.

0 'உனதாயநிலையானமையும்' என்றும் பாடமுண்டு.


மையும், அவை ஒசோவழிப் பிறர்த வல்லிலே இறத்தலும், ஒருணைமாயி னும் நிற்கு மென்பது தெளியப்படாமையும், உயிர்கிலையழிக் டெக்கு மாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறி மாறி வருமாறும், அவைதாம் உயிர்க்குரிய அன்மையுமென்று, இவ்வாற்றால் யாக்கை நிலையாமை கூறிய வாறு கண்டுகொள்க.

தெளி:—(இ-ன்.) உடம்பினுள் - (வாதமுதலாகிய நோய்களின் வீடே னாகிய) உடம்புகளுள், தச்சிலிருந்த-ஒதக்குக்குடியிருந்தே வந்த, உயிர் க்கு-உயிருக்கு, புக்கில்-என்றைக்கும் இருப்பதாகிய ஒரு வீடானது, அமை ந்தின்றகொல்-(இதுவரையில்) அமைந்ததில்லைபோலும், (எ-று).

உயிரானது அவ்வாதமுதலாகிய நோய்களடங்கியிருக்க அமைக்தகா லத்தில் உடம்பில் இருந்தும், அவை, கோபித்த காலததில் அவ்வுடம்பை விட்டுப்போயும், ஒருடம்பிலும் நிலைபெறுமல் வருதலால் 'தச்சிலிருந்த' என்றார். பின்னே புறப்படாமல் புகுந்தேவிடுகிற வீடு அமைந்ததாயின், பிறர் வீடுகளில் ஒதக்குக்குடி இராதென்பதாம். ஆகலே, உயிரோடுகூடி கிற்பதாகியவோருடம்பும் இல்லையென்பத பெறப்பட்டது. இதனால், அவ் வுடம்புகள் உயிருக்கு உரியவை அல்லவென்பது சொல்லப்பட்டது. 'கோ னென' என்பது முதலாகிய எழுகுறள்களாலும் யாக்கை நிலையாமை சொல்லப்பட்ட தென்றறிக. வீடு-உடம்பு.

(க-து.) உயிருக்கு நிலையாயிருப்பதோருடம்பு என்றுமில்லை.

10. It seems as if the soul, which takes a temporary shelter in a body, had not attained a home.



பதினென்றுவது அதிகாரம்.

துறவு:—Renunciation.

பரி.—அஃதாவது † புறமாகிய செல்வத்தின்கண்ணும் ‡ அகமா கிய யாக்கையின் கண்ணும் உளதாய $ பற்றினை, ¶ அவற்றது நிலையா மை நோக்கி விடுதல். அதிகார முறைமையும் இதனுனேவினங்கும்.

தெளி:—அஃதாவது புறமாகிய செல்வத்திலும் அகமாகிய உடம்பி லும் உண்டாகியபற்றை, அவற்றினது நிலையாமையைப் பார்த்து விடுத லாம். அதிகாரம் வைத்தமுறைமையும் இதனுலே விளங்கும்.

க. 0 யாதனின் யாதனி னீங்கியா னெந்த
லதனி னதனி னிலன்.

† புறம்-வெளி. ‡ அகம்-உள். $ பற்று-அபிமானம். ¶ அவற்றது-புறமாகியசெல்வம் அகமாகிய உடம்பு என்னும் இரண்டனது.

0 "யாதினியா தொருவ னீங்கியா னேதா லதனினு லதனினா னிலனென் றேதனை யினைத்தும் நினைத்தருளெனுமித் துயர்தரும் பொருளினைக் காட்டும் நீதிவேர் குரவனொருவ னெனையே தேமால்" என்பதனைராய்கிபரிம்

பரி:—(இ.ள்.) ஒருவன் யாதொருபொருளின்யாதொருபொருளின் நீங்கினான், அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்பமெய்துதல் இலன், (எ-று).

அதிக்குகள் பன்மை குறித்து நின்றன. நீங்குதல்-துறத்தல். ஈண்டுத் துன்பமென்றது இம்மைக்கண் ‡ அவற்றைத்தேடுதலானும், காத்தலானும், இழத்தலானும் வருவனவும், மறுமைக்கண் பாவத்தான் வருவனவும் ஆய இருவகைத் துன்பங்களையுமாம். எல்லாப்பொருளையும் ஒருங்கே விடுதல் தலைமை; அஃதன்றி ஒரோவொன்றுகவிடினும் அவற்றான் வரும் துன்பம் இலனு மென்பது கருத்து.

தெளி:—(இ-ள்.) (ஒருவன்) யாதனின் யாதனின்-யாதொருபொருளி னின்றும் யாதொருபொருளினின்றும், நீங்கியான்-நீங்கினனோ, (அவன்), அதனினதனின்-அப்பொருளினால் அப்பொருளினால், நோதல்-துன்பமடை தல், இலன்-உடையவனாகான், (எ-று).

யாதனின் யாதனின், அதனின் அதனின் என்னும் அதிக்குகள் பன்மை (மிகுதி)ப் பொருளில் வந்தன. நீங்குதல்-விட்டொழிதல் இங்குத் துன்பமென்றது இப்பிறப்பின்கண் அப்பொருள்களைத் தேடுதலாலும், காப்பாற்றுதலாலும், இழந்துவிடுதலாலும் வருவனவும், மறுபிறப்பின் கண் பாவத்தால் வருவனவும் ஆகிய இருவகைத் துன்பங்களையுமாம். எல்லாப் பொருள்களையும் ஒருமிக்கவிடுதல் தலைமையான துறவாகும்; அப் படியல்லாமல் அப்பொருள்களை ஒவ்வொன்றாக விட்டாலும் விட்ட அப் பொருள்களால் வருந்துன்பம் அவனுக்கு இல்லையா மென்பது கருத்து.

(க-து). எவ்வெப்பொருள் ஒருவனால் விடப்படுகின்றதோ அவ்வப்பொருளால் அவன் துன்பத்தை யடைவதில்லை.

1. Whatever thing a man has renounced, by that thing he cannot suffer pain.



உ. † வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

‡ "ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக், காத்தலு மாங் கே டுடைத்துன்பங்-காத்தல், குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக், குறைபதி மற்றைப் பொருள்" என்பது காலடியார்.

† "வேண்டினுண் டாகத் துறக்கவென் றமையால் வீடுதானுய்க் கருத்தழிக்திருவும், காண்டல்செய் விழிபஞ் சடைந்துட னடுங்கு காலம் வந் தடைவதன் முன்னர்,மாண்டகற் பதனுற் சாலியைப் போலு மனிலியா நியசமா தியினுற், நீண்மோ க்தம் பலவடைக் திதேற் கென்னிதீத் நிடு வர்புண் ணியரே" என்பது வைராக்கிய நிபம்.

பரி:—(இ-ன்.) எல்லாப்பொருள்களையுந் துறத்தலால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல; அவ்வினீன்பங்களை வேண்டின், ‡ அவற்றைக் காலம் பெறத் துறக்க.

அவ்வின்பங்களாவன: அப்பொருள்கள் காரணமாக மனமொழிமெய்கள் அலையாது நிற்றலானும், அவை தன்னெறிக்கட் சேறலானும் வருவன, ¶ இளமைக்கண் துறந்தான் அவற்றை நெடுங்காலம் எய்துமாகலின் 'உண்டாகத் துறக்க' என்றார். இன்பங்களென்பதும்காலமென்பதும் வருவிக்கப்பட்டன. இம்மைக்கண் தன்பங்கள் இலவாதலேயன்றி இன்பங்கள் உளவாதலும் உண்டென்பதாம்.

தெளி:—(இ-ன்). துறந்தபின் - (எல்லாப்பொருள்களையும்) துறத்தலால், (ஒருவனுக்கு), ஈண்டு-இப்பிறப்பிலே, இயற்பால-உண்டாகுமுறைமையையுடைய இன்பங்கள், பல-பலவாம், வேண்டின்-(அவ்வின்பங்களை) வீரும்பினால், உண்டாக-(காலம்) உண்டாக, துறக்க - (அப்பொருள்களைத்) துறக்கக்கடவன், (எ-று).

அவ்வின்பங்களாவன: துறந்த அப்பொருள்கள் காரணமாக மனமும் வாக்கும் காயமும் அலையாது நிற்றலாலும், அம்மனம் வாக்குக்காயங்கள் நல்வழியிற் செல்லுதலாலும் வருவன. இளமைப்பருவத்திற் றுறந்தவன் அவ்வின்பங்களை நெடுங்கால மடையாளுதலால் 'உண்டாகத் துறக்க' என்றார். இன்பங்களென்பதும் காலமென்பதும் வருவிக்கப்பட்டன. இப்பிறப்பின்கண் தன்பங்கள் இல்லாமற் போதலே யல்லாமல் இன்பங்கள் உண்டாதலும் உண்டென்பதாம்.

(க-து.) இன்பங்களை விரும்பினவன் எல்லாப்பொருள்களையுந் துறக்கக்கடவன் என்பது.

2. After a man has renounced all things, there will still be many things in this world which he may enjoy if he should desire them; let him, while it is time, abandon the world.

கூ. † அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

‡ அவற்றைக் காலம் பெறத் துறக்க-எல்லாப்பொருளையும் (தேகத்தோடு கூடியிருக்கும்) காலம் (துறவறத்தில்நீடித்து) இருக்க விட்டுவிடக் கடவன்.

¶ "வரைவருமென் றெண்ணி நல்லறி வாளர், குழவி யிடத்தே துறந்தார்" என்பது காலடியார்.

† "ஐம்புல னடக்வேண் டும்விடல் வேண்டும் மொருங்குவேண் டியவினைத் தையுமென், றும்பரும் பரவு மொருதமிழ் வேத முரைத்தலா னீரு வகையா, நம்புறச் சார்பை வெறுத்தலா லறத்தைம் புலனெழித் தொ

பரி:—(இ-ன்.) விடேய்துவார்க்குச் செலீழ்தலிய ஐம்பொறிகட்கு முரியவாய ஓசைமுதலிய ஐம்புலன்களேயுங் கெடுத்தல்வேண்டும்; கெடுக்துங்கால், ‡ அவற்றை நுகர்தற்பொருட்டே நாம் படைத்த பொருள் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும், (எ-று).

¶ புலமென்றது அவற்றை நுகர்தலே. 0 அது மனத்தைத் தன்பத் தானும் பாவத்தானும் அன்றி வாராத பொருள்கண்மேல் அல்லது வீட்டு நெறியாயியோகஞானங்களிற் செலுத்தாமையின்,()அதனை 'அடல்வேண் டும்' என்றும், * அரிது அப்பொருள்கண் மேற்செல்லின், அத்துகர்ச்சி விறகுபெற்ற தழல்போல் முற்றுகுதல்லது அடப்படாவாமையின் வேண்டிய வெல்லா மொருங்குவிடல்வேண்டும் என்றல் கூறினர்.

தெளி:—(இ-ன்.) (முத்தியை யடைவோர்க்கு) ஐக்தன்-செவிமுதலா யை ஐம்பொறிகளுக்கு (உரியவாய),புலதை-(ஓசைமுதலாயை ஐம்) புலன் களையும் (அனுபவித்தலே), அடல்வேண்டும்-கெடுத்தல்வேண்டும், (கெடுக் கும்போது), வேண்டியவெல்லாம்-(ஓசைமுதலாயை அப்புலன்களே யனு பவித்தற்பொருட்டே)தாம்படைத்த பொருள்களே யெல்லாம்,ஒருங்கு-ஒரு மிக்க, விடல்வேண்டும் - விடுதல்வேண்டும், (எ-று).

'புலம்'என்றது சப்தமுதலிய விஷயங்களைச் செவிமுதலிய விந்திரி யங்கள் அனுபவித்தலே. அவ்வனுபவிப்பு மனத்தைத் தன்பத்தினாலும் பாவத்தினாலும் தேடப்பட்டவெறும பொருள்களின்மேல் அல்லாமல் முத்திவழியாகிய யோகஞானங்களிற் செலுத்தாமையால் அதனை 'அடல் வேண்டும்' என்றும், அம்மனம் அப்பொருள்மேல் சென்றால் அவ்வனுப விப்பு விறகிட்ட நெருப்பைப்போல வளர்வதல்லது கெடுக்கப்படாமையால் வேண்டிய வெல்லா மொருங்குவிடல் வேண்டும் என்றும், சொல்லினர்.

முன்னினு டருமச், செம்பொருள் காண்ப தறிவறி யாமை தைத்தல்வீ டெனத்திகழ் தருமால்" என்பதை வைத்கிய நீபம.

‡ அவற்றை-சத்த பரிச ரூப ரச கந்த மென்னும் ஐம்புலன் (விஷ யங்)களை.

¶ புலமென்றது இங்கே அவற்றை (சப்தாதி விஷயங்களை) (செவி யாதி யிந்திரியங்கள்) அனுபவித்தலே யுணர்த்தி நின்றது.

0 அது (நுகர்தல்) மனத்தினைப் பிறரைத் தன்பப்படுத்தலானும் பாவஞ்செய்கையாலு மல்லாமல் வாராத (வரும்) பொருள்களின்மே லல்லா மல் முத்திபெறற்கு வழியான யோகத்திலும் ஞானத்திலும் செலுத்தாமை யின் () அதனை (அற்றகர்தலே) 'அடல்வேண்டும்' என்று கூறினர்; அன்றி வாராத என்னுமிண் டெதிர்மறை வினைச்சொற்களும் வரும் என்னும் பொருளை யுணர்த்தி நின்றன.

* எரிதிறைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும் என்பதுபோல ஒருவன் தமக்குள்ள பொருள்க ளனைத்தையுங் துறந்தால் அவர்க்கு விஷயா னுபவம் குறையுமென்பது பெறப்படுகின்ற தென்க.

(க-து.) முத்தியடைய விரும்புவோர் இந்திரிய நிக்ரகஞ் செய்வதோடு எல்லாப்பொருள்களையும் பற்றறத் துறக்கவேண்டும்.

3. Let the five senses be destroyed ; and at the same time, let every thing be abandoned that the ascetic has formerly desired.

ச. இயல்பாகு நோன்பிற்கோன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து

பரி:—(இ-ள்.) பற்றப்படவே தொரு பொருளும் இல்லாமை தவஞ் செய்வார்க்கு இயல்பாம்; அஃதன்றி, ஒன்றையேனும் உடைமை அத்தவத் தைப் போக்குதலான், மீண்டும் மயங்குதற் கேதுவாம், (எ-று).

இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. † நோன்பென்பதூஉம் மயலென்பதூஉம் ஆகுபெயர். ‡ பெயர்த்தலான் என்பதிலிருந்து றின்றது; நோன்பைப் பெயர்த்தலா னென வேற்றுமைப் படுத்துக் கூட்டுக. ¶எல்லாப்பொருள்களையும் விட்டு ஒரு பொருளே விடாத வழியும் அதுசார்பாக விட்டனவெல்லாம் மீண்டுவருதல் தவத்திற் கிடையூறாய் மனக்கலக்கஞ் செய்யுமென்பது கருத்து. இவை நான்கு பாட்டானும் எனதென்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது.

தெளி.—(இ-ள்.) நோன்பிற்கு-தவஞ்செய்வார்க்கு, ஒன்று-(பற்றப் படுவது) ஒருபொருளும், இன்மை-இல்லாதிருக்கை, இயல்பாகும்-இயல் பாம், உடைமை - (பற்றப்படுவதான ஒருபொருளு மில்லாதிருத்தலன்றி ஒன்றையினும்) உடைத்தா யிருக்கை, பெயர்த்தி - (அத்தவத்தைப்)போக்கு தலால், மற்றும் - மீண்டும், மயலாகும் - மயங்குதற்குக் காரணமாகும், எ - று.

† நோன்பு எனனும் பண்புப்பெயர் அதனையுடையவர்க்காதலால் பண்பாகுபெயராம்; மயலென்னும் காரியப்பெயர் அதற்குக் காரண மான பொருளுடைமைக் காதலால் காரியவாகு பெயராம்.

‡ பெயர்த்தலான் என்பதனை நோன்பிற்கு என்பதனோடுகூட்டவேண் டியிருத்தலால், 'நோன்பைப் பெயர்த்தலானென வேற்றுமைப்படுத்துக்கூட் டுக' எனரூர். இங்கு நோன் பென்பதனோடு இரண்டனுருபு புணர்த்தப் பட்டது. வேற்றுமைப் படுத்தல் - வேற்றுமை யுருபேற்றதாகச் செய்தல். நோன்பிற்கு என்பது பெயர்த்தலான் என்பதனோடு புணரும்போது ஞ்ஞ் வருபுகெட்டு நோன்புஎன நின்ற தென்க.

¶ ''பரமஹம்சரு யுள்ள யதி இரண்டு கௌபீனங்களையும், ஒரு கந்தல் தினையையும், ஒரு தண்டத்தையும் ஸ்வீகரிக்கலாம்; இவற்றைவிட அதிகம் விதிக்கப்படவில்லை; ஆகையினல் இவற்றைவிட அதிகமாய்ச் சுவீ கரித்தால் சௌவாரகத்தையடைத்து பசு பட்சிமுதலிய யோனியில் பிறக் கிருன்'' என்று நாரதபரிவிராஜகோபநிஷத்தில் மூன்றாவது உபதேசத் தில் கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

ஒன்றும் என்னும் இழிவுசிறப்பும்மை செய்புள் விகாரத்தால் தொக்கு நின்றது. கோற்பவரை கோன்பென்றும் மயலுக்கு ஏதுவை மயலென்றுங் கூறினமையின், அவைஆருபெயர்களாம். பெயர்த்தலான் என்பதுபெயர்த்து எனத்திரிந்து நின்றது; நோன்பைப் பெயர்த்தலால் என்று வேற்றுமை விரித்துக் கூட்டிக்கொள்க. எல்லாப் பொருள்களையும் விடுத்து ஒருபொருளே விடாத விடத்தும், அப்பொருள் சார்பாக விட்ட பொருள்க ளெல்லாம் திரும்பி வந்து தவத்திற்கு விரோதமாய் மனக்கலக்கம் செய்யு மென்பது கருத்து. இவை நான்கு பாட்டாலும் என தென்னும் புறப்பற்று விடுதல் சொல்லப்பட்டது.

(க - து.) தவஞ் செய்வார்க்கு யாதொருபற்றுங் கூடாது.

4. To be altogether destitute is the proper condition of those who perform austerities; if they possess anything, it will change their resolution and bring them back to their confused state.

ரு. * மற்றுந் தொடர்ப்பா டெவன்கோல் பிறப்பறுக்க
ஐற்றூர்க் குடம்பு மிகை.

பரி.—(இ - ள்.) பிறப்பறுத்தலே மேற் கொண்டார்க்கு † அதற்குக் ‡ கருவியாகிய உடம்பும் மிகையாம்; ஆனபின், அதற்கு மேலே இயைபில்லனவுஞ் சில தொடர்ப்பா டெவனதல் என்னும், எ - று.

உடம்பென்ற பொதுமையான், ¶ உருவுடம்பும், அருவுடம்புங் கொள்ளப்படும். அவற்றுள், அருவுடம் பாவது § பத்தவகை இந்திரிய வுணர்

* நாரதபரிவிராஜகோபநிஷத்தி சு-வதுபதேசத்தில்"சந்நியவாக்குள்ளவனுயும், ஞானவவாக்கியங்களோடு கூடினவனுயும், தேகமாத்திர மிச்சமாயுள்ளவனுயும் (சந்நியாசி) வசிக்கவேண்டும்"என்று கூறுவதும், மனுதரு மசாஸ்திரம் ஆருவதத்தியாயத்தில் "வேலைக்காரன் தனக்கு யஜமானன் சம்பளம் கொடுக்கும் நாளை யெதிர்பார்ப்பதுபோலத் தன்தேகநாச காலததை (சந்நியாசி) யெதிர்பார்த்திருக்கவேண்டும்" எனறுகூறுவது மிங்குக் கவனிக்கத்தக்கனவாம்.

† அதற்கு-பிறப்பறுத்தலுக்கு.

‡ உடம்பில்லாது மாயையில் லயப்பட்டிருக்கும் பிரளய காலத்தில் சீவர்கள் பிறப்பையொழித்துக் கொள்ளுதல்முடியாமையால், அவர்களுக்கு உடம்பு பிறப்பை யொழித்தற்குக் கருவியா (காரணமா) யிற்றென்க"உயிர்க்குறுதி யெல்லா மூடம்பின் பயனே, அயிர்ப்பின்றி யாதியை நாடு" என்று ஔவை குறள் கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

¶ உருவுடம்பு - ஸ்தூலசரீரம். அருவுடம்பு-சூக்குமசரீரம்.

§ பத்த வகை இந்திரிய வுணர்வு-மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் ஐவகை ஞானேந்திரியங்களாலும், வாக்குப் பாதம் பாணி பாயுரு

வோடும் * ஐவகை வாயுக்களோடும் † காம வினை விளைவுகளோடுங் கூடிய மனம்; இது ‡ தண்ணுடம் பெனவும் படும். இதன்கட்பற்று நிலையாமை உணர்ந்ததனையான் விடாமையின், விடுதற் குபாயம் ¶ முன்னர்க்கூறுப. இவ்வுடம்புகளால் துன்பம் இடையறாது வருதலை யுணர்ந்து, இவற்றுள் ஆய § கட்டினை () இறைப்பொழுதும் பொருதுவீட்டின்கண்ணே விரைத

உபத்த மெ ன் னு ம் ஐவகைக் கருமேந்திரியங்களாலும் உண்டாகும் ஞானம்.

* ஐவகைவாயு—பிராணன், அபானன், வியாணன், உதானன், சமானன் என்னும் ஐந்திவகை வாயுக்கள். தருக்கசங்கிரகம் "சரீரத்தினகத்துச் சஞ்சரிக்கும் வாயுப் பிராண னெனப்படும்; அஃதொன்றாயினும் உபாதி வேறு பாட்டால், பிராணன் அபானன் முதலிய பெயர்பெறும்" என்று கூறுகின்றது.

† காமவினை விளைவு-பொருள்களை விரும்புவதாகிய ஆசையு (காமமும், நல்வினை தீவினைகளின் சம்ஸ்காரவாயிலாக வரும் சுகதுக்கங்களுமாம். விசாரசாகரம் புத்தியின் தன்மையைச் சொல்லுமிடத்து "காமகருமங்களுடன் கூடியபுத்தி" என்று கூறிபிருத்தலு மிங்கறியத் தக்கதாம்.

‡ சாரீர கோபதிஷத்து "ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் (பத்து), பிராணன் ஐந்து, மனம் புத்தி இந்தப்பதினேழுடன் கூடினது சூட்சும தேகம் அல்லது லிங்கதேகம் என்று சொல்லப்படுகின்றது" என்று கூறுகின்றது. தண்ணுடம் பெனினும் சூக்குமவுடம்பெனினும் ஒக்கும்.

"சூக்கும சரீரமே அவித்தை, காமம், கர்மமென்னு மிம்மூன்றுடன் கூடிப் புரியஷ்டக மென்று கூறப்படுகின்றது. அஷ்டபுரியின் கூட்டத்திற்குப் புரியஷ்டகமென்று பெயராம். அவ்வஷ்டபுரியாவன:-(1) ஞானேந்திரிய பஞ்சகம், (2) கர்மேந்திரிய பஞ்சகம், (3)அந்தக்கரண சதுஷ்டயம், (4) பிராண பஞ்சகம், (5) பூதபஞ்சகம், (6) அவித்தை, (7) காமம், (8) கர்மம் என்பனவாம். * * * * இஃதெனக்குக் கிடைக்க வேண்டுமென்னு மந்தக் காரணத்தின் விர்த்தி விசேஷமும் ராகமாம். அதுவே காமமெனப்படும். கர்மமோ சஞ்சிதம், ஆகாமியம், பிராரப்தமென மூவகைத்தாம்" என்று தத்வாநுசந்தானங் கூறுகின்றது.

¶ முன்னர்க்கூறுப என்றது இவ்வதிகாரத்தின் பத்தாவதாகிய "பற்றுக பற்றற்றான்' என்னுங் குறளை; இக்குறளின் விசேடவுரையில் "அப்பற்றுவிடுதற்கு உபாயம் இதனுல் கூறப்பட்டது" என்று கூறியிருத்தலு மிங்கறியத்தக்கதாம்.

§ கட்டாவது முத்திநெறியிற் புகவொட்டாது தடுத்து மனவிமுதலியவரிடத்து நேசமிகச்செய்து அது காரணமாகப் பராதீனமாக்குதல்.

() பிறப்பறுத்தலை மேற்கொண்டார் உடம்பினுலாயகட்டினை இறைப் பொழுதும்பொருது வீட்டின்கண்ணே விரைதலின் என்பது "இவனதி

லின் 'உடம்புமிசை' என்றார். இன்பதுன்பங்களான் உயிரோடு * ஒற்றுமை யெய்துதலின், இவ்வுடம்புகளும் யானெனப்படும். இதனுன் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது.

தெளி:—(இன்.) பிறப்பறுக்கலுற்றார்க்கு - பிறவியை நீக்குமுயற் சியை மேற்கொண்டவருக்கு, உடம்பும்-(அப்பிறப்பை நீக்குதற்கு உதவி யாகிய) உடம்பும், மிகை-அதிகமாம், (ஆனபின்), மற்றும்-அதற்குமேலே, தொடர்ப்பாடு-(சம்பந்தமில்லாத பொருள்களும் சில) சம்பந்த முடையன வாதல், எலன்-என்னுகும், (எ-று)

கொல்-அசை. பொதுப்பட உடம்புஎன்றதால் உருவுடம்பும், அருவு டம்பும் கொள்ளப்படும். அவ்விருவகை யுடம்புகளுள், அருவுடம்பாவது பத்தினவகை இந்திரிய வுணர்வுகளோடும் ஐவகை வாயுக்களோடும் காம கர்ம லீலாவுகளோடும் கூடியமனம்; இது சூட்சுமசரீர மெனவும்படும். இவ்வுடம்பினிடத்தில் அபிமானம் நிலையாமையையறிந்த மாத்திரத்தால் விடாமையினுல், விடுவதற்கு உபாயம் மேலே கூறுவார். உருவுடம்பு அருவுடம்பென்னு மிவ்விருவகை யுடம்புகளால் துன்பம் இடைவிடாமல் வருதலையறிந்து, இவ்வுடம்புகளா லாகிய பந்தத்தினைக் கணப்பொழுதும் பொறக்காமல் முத்தியினிடத்து விரைந்து செல்வதனுல் 'உடம்புமிசை' என்றார். (யான்சுமி, யான்தக்கென்று) இன்பதுன்பங்களே யனுபவித்தலி னுல், உயிரோடு ஒற்றுமை யடைந்திருத்தலால் இவ்விருவகை யுடம்பு களும் யானென்று சொல்லப்படும். இதனுல் யானென்னும் அகப்பற்று விடுதல் சொல்லப்பட்டது.

(க-து.) பிறப்பை யொழிக்க முயல்வார்க்குடம்புப் பாரமாம்.

5. What means the addition of other things to those who are attempting to cut off future births, when even their body is too much for them.

காரி யானே னிந்திரி யங்க ளாலும், புவனதெய் வங்க ளாலும் பூதபௌ திகங்க ளாலும், தவனமூன் றடைந்து வெய்யிற் சவித்திடாப் புழுப் போல் வெம்பிப், பவமறு ஞான நீர்த்தம் படிந்திடப் பதறி னானே'' என்று கைவல்லிய நவநீதம் கூறுவதால் நன்கு விளங்கும்.

* இன்பதுன்பங்களே யனுபவித்தலினுல், உயிரோடு உடம்புஒற்றுமை யடைந்திருத்தலாம். அஃதாவது இன்பதுன்பங்களே யனுபவிப்பது இன் னதுதானென்று அறியாமலிருத்தலாம். உயிர்க்கு உடம்பு வேறுபட்ட தென்பது யோகஞானங்களாலன்றி வேறுவகையால் பிரத்தியட்சமாகக் காண்டல் முடியாமையின், யோகஞானமில்லாதவர்களுக்கு உயிரும்உடம்பும் ஒற்றுமை யுடையனவாகவே விளங்குமென்க. ''ஒற்றுமை கத்தி னென்னெனத் தோன்றினும், வேற்றுமை கத்தின் வேறே யுடலுயிர்'' என்பது நன்னூல்.

கூ. * யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

பரி:—(இ.ள்.) தானல்லாத உடம்பையானென்றும் தன்னுடையை பில்லாத பொருளை எனதென்றுங்கருதி, † அவற்றின்கட் பற்றுச்செய் தற் கேதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான் வானோர்க்கும் எய்தற் கரிய விட்டுலகத்தை யெய்துமே, (எ-று).

மயக்கம்-அறியாமை. அதனைக் கெடுத்தலாவது தேசிகர்பாற் பெற்ற ‡ உறுதிமொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யானெனது அன் மை தெளிந்து, ¶ அவற்றின்கட் பற்றைவிடுதல். சிறப்புமை விகாரத்தாற் றொக்கது. இதனுள் இவ்விருவகைப்பற்றினையும் விட்டார்க்கே வீடு தென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) யானெனதென்னும் - (தானல்லாத உடம்பை) யானென்றும் (தன்னுடு சம்பந்தமில்லாத பொருளை)எனதென்றும் நினை த்து,(அவற்றினிடத்தப்)பற்றுச்செய்வதற்குக்காரணமாகிய,செருக்கு-மயக் கத்தை, அறுப்பான்-கெடுப்பவன், வானோர்க்கு-தேவர்க்கும்,உயர்ந்த-அடை தற்கரிதாகிய, உலகம்-முத்தியுலகத்தை, புகும்-அடைவான், (எ-று).

மயக்கம்-அஞ்ஞானம். அவ்வஞ்ஞானத்தைக் கெடுத்தலாவது ஞானு சாரிய ரிடத்தப் பெற்ற உபதேசங்களாலும் யோகாப்பியாசத்தாலும் (யானெனதென்னும்) அப்பொருள்கள் யான் என்பதும் எனது என்ப தும் அல்லவென்று தெளித்து, அவற்றினிடத்துப் பற்றைவிடுதல். வானோர்க்கு மென்னுமுயர்வு சிறப்புமை செய்யுள் விகாரத்தால்தொக்கு நின்றது. இதனுல் யானெனதென்னும் இருவகைப்பற்றையும் விட்ட வர்க்கே மோட்சமுண்டென்பது சொல்லப்பட்டது. பற்று-அபிமானம்.

(க-து). யானென தென்னுமபிமானத்தினை யொழித்தவனே முத்தியடைவான் என்பது.

6. He who destroys the pride which says "I," "mine," will enter a world which is difficult even to the Gods to attain

எ. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

* திருவாய்மொழி "நீர்நுமதென்றிவை, வேர்முதன் மாய்த்திறை, சேர்மி னுயிர்க்கதன், சேர்திறை யீதே"என்றும்,பிரபுலிங்கலீலை "யானென தெனுப திருந்திடு காறு, ஞானமுருண்" என்றும் கூறுகின்றன.

† அவற்றின்கண்-யானெனதென்பதனிடத்து.

‡ உறுதிமொழி-உறுதி (உண்மை)யைத் தரத்தக்கவார்த்தை.

¶ அவற்றின்கண் - யானென தென்பதன்கண்.

பரி:—(இ-ள்.) இருவகைப்பற்றினையும் இறுகப் பற்றி விடாதாரைப் பிறவித் துன்பங்கள் இறுகப்பற்றி விடா, (எ-று).

இறுகப்பற்றுதல் - காதல்கூர்தல். † விடாதவர்க் கென்பது வேற்றுமை மயக்கம். இதனால் இவை விடாதார்க்கு வீடில்லையென்பது கூறப் பட்டது.

தெளி:—(இ-ன்.) *பற்றினை-(யாவையெனின் இருவகைப்) பற்றுக்களையும், பற்றி-இறுகப்பற்றி, விடாதவர்க்கு - விடாதவரை, இடும்பைகள்-பிறவித்துன்பங்கள், பற்றி-இறுகப்பற்றி, விடா-விட்டு நீங்காவாம்.*

இறுகப்பற்றுதல்-(யாவையெனின் ஆசையிருத்தல். விடாதவர்க்கென்பது விடாதவரை யென்னும் பொருளில் வந்தமையின் வேற்றுமைமயக்கமாம். இதனால் இருவகைப் பற்றுக்களையும் விடாதவர்க்கு மோட்சம் இல்லையென்பது சொல்லப்பட்டது.

(கு-து.) *யாவையெனின் இருவகைப்பற்றுக்களையும் விடாதவர்க்குப் பிறவித்துன்பங்கள் நீங்கா வென்பது.*

7. Sorrows will never let go their hold of those who give not up their hold of desire.

அ. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

பரி:—(இ-ள்.) முற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார், அங்ஙனந் துறவாதார் மயங்கிப் ‡ பிறப்பாகிய வலையுட்பட்டார், (எ-று).

*முற்றத்துறத்தலாவது பொருள்களையும், * இருவகை யுடம்புகளையும் உவர்த்துப் §பற்றறவிடுதல். அவ்வண்ணந் துறவாமையாவது அவற்றுள் யாதானுமொன்றன்கட் சிறிதாயினும் பற்றுச்செய்தல். தணிவுபற்றித் ¶ 'தலைப்*

† *விடாதவர்க்கு என்பதன் கான்கனுருபு தனக்குரிய பொருளை விட்டு (விடாதவரையென) இரண்டனுருபின் பொருளில் வந்தமையால் வேற்றுமை மயக்கமாயிற்று.*

‡ *உயிரை வேறு (முத்தி) மார்க்கத்தில் செல்லாவண்ணம் பற்றிப்பது பற்றிப் பிறப்பு என்று கூறுதல 'பிறப்பாகிய வலை' என்று கூறப்பட்டது.*

* *இருவகை உடம்பு-உருவுடம்பு, அருவுடம்பு.*

§ *பற்றறவிடுதல்-அபிமானமொழிய நீங்குதல்; பொருளைத்துறத்தல்-பொருளின்கண் அபிமான மின்மை;உடம்பைத் துறத்தல்-உடம்பின்கணபிமான மின்மை.*

¶ *(நீரத்துறந்தார்) தலைப்படுவோர்என்று எதிர் காலத்தாற்கூறுதலைப் பட்டாரென்று இறந்தகாலத்தாற் கூறியது துணிவு (தெளிவு) பற்றிவந்த காலவழுவமைதி.*

பட்டார்' என்றும், $ பொய்ந்நெறிகண்டே பிதப்புவகையு ளகப்படுதலின் 'மயங்கி' என்றுங் கூறினர்.

தெளி:—(இ-ன்.) நீரத்துறந்தார்-முழுதுந்துறந்தவர், தலைப்பட்டார்-(முத்தியை) அடைந்தவராவார், மற்றையவர்-அப்படித்துறவாதவர், மயங்கி-மருண்டு, வலைப்பட்டார்-(பிறப்பாகிய) வலையிலகப்பட்டவராவார், (எ-று).

முழுதுந்துறத்தலாவது பொருள்களையும், இருவகை யுடம்புகளையும் வெறுத்துப்பற்றறவிடுதல். அப்படி துறவாமையாவது அப்பொருள் முதலியவற்றில் யாதாவது ஒன்றனிடத்துச் சிறிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றித் 'தலைப்பட்டார்' என்றும், பொய்வழிகண்டே பிறப்பாகிய வலையிலகப்படுதலால் "மயங்கி" என்றும் சொல்லினர்.

(க-து.) யாணெனதென்னும் இருவகைப் பற்றையும் பற்றறத் துறந்தவர்க் கல்லாமல் மற்றவர்க்கு வீடுண்டாகா தென்பது.

8. Those who have entirely renounced all things and all desire have obtained absorption into God; all others wander in confusion entangled in the net of many births

கூ. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

பரி:—(இ-ள்.) ஒருவன் இருவகைப்பற்றும் அற்றபோழதே, அப்பற்றறுதி அவன் பிறப்பையறுக்கும்; அவையறுதபோழது அவற்றுள் பிறந்திறந்து வருகின்ற நிலையாமை காணப்படும், (எ-று).

* காரணமற்ற பொழுதே காரியமும் அற்றதா முறைமை பற்றி

$ பொய்ந்நெறிகண்டிருத்தும் என்றும் பாடமுண்டு.

பொய்ந்நெறி காண்டலாவது அறிவுநூல் கூறும் வழியிற்செல்லாது உலகநூல் கூறும் வழியிற்செல்லுதல். அஃதாவது பிறவிக்குக் காரணமாயுள்ள பொய்ந்நெறி (வழி) யை மோட்சமடைதற்குக் காரணமான மெய்ந்நெறியென்றுகண்டோடத்தலாம். (பொய்ந்நெறி-தப்புவழி). தப்புவழியிற்சென்றோர் தாங்கருதிய வீடத்தினிற்குப் போகமுடியாமைபோல, உலகநூலே அறிவு நூலென்று நம்பி அதிற் கூறியபடி ஒழுகுவோர் தாமடைய வெண்ணிய வீட்டை யடையாரென்பது இரண்டாங் கருத்தாம்.

* காரணமாகிய மண்ணும் நெருப்பும் ஒழிந்தபோதே அவற்றின் காரியமாகிய குடமும் புகையும் ஒழிதல்போன்று, காரணமாகிய யாணெனதென்னும் இருவகைப்பற்று மொழிந்தபோதே அவற்றின் காரியமாகிய பிறப்புமொழிந்து போமென்பதாம். இதனால் காரணமற்றபோது காரியமிலா தென்பது பெறப்பட்டது. இங்குக் காரணமென்றது முதற் காரணத்தை. எது காரியத்தின் சொரூபத்தில் பிரவேசிக்கின்றதோ, எது இல்லாமல் காரியஞ் தெற்றிப்பதில்லையோ அது முதற்காரணமாம்.

'பற்றற்ற கண்ணே' என்றார். † "அற்றது பற்றெனி லுற்றது வீடு" என்பதனாலும் ‡ அது பற்றி வந்தது. இவை யிரண்டு பாட்டானும் ¶ அவ் விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

தெளி:—(இ-ன்.) (ஒருவன்) பற்றற்ற கண்ணே - (இருவகைப்) பற்றுக்களும் அற்றபொழுதே, (அப்பற் றறுதியானது),பிறப்பு - (அவனது) பிறவியை, அறுக்கும் - ஒழிக்கும், மற்று - அவ் விருவகைப்பற்று அறுத பொழுது, நிலையாமை காணப்படும்—(அவ்விருவகைப் பற்றால் பிறந்து இறந்து வருகிற) நிலையாமையானது அறியப்படும், (எ-று).

காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதாகு முறைமைபற்றி 'பற்றற்ற கண்ணே' என்றார். இவை இரண்டு பாட்டாலும் அவ்விரண்டும் சேர்த்துச் சொல்லப்பட்டன அறுதல்-நீங்குதல்.

(க-து.) யானெனதென்னும்இருவகைப்பற்றும்நீங்காத விடத்துப் பிறப்பொழிதல் இன்மைபால் நிலையாமையே அறியப்படும்.

9. At the moment in which desire has been abandoned, other births will be cut off; when that has not been done, instability will be seen.

க0. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

*பரி:—(இ-ள்.) * எல்லாப் பொருளையும் பற்றி நின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவேநன்னெறி யென்று மனத்துக் கொள்க; கொண்டு, () அதன்கண் உபாயத்தை அம்மனத்தாற் செய்க, விடாது-வந்த பற்று விடுதற்கு,(எ - று).*

$ கடவுள் வாழ்த்திற்கேற்ப ஈண்டும் பொதுவகையாற 'பற்றற்றான்'

† திருவாய்மொழி 2-ம்பதிகம், 5. இதன் பொருள் (யானெனதென னும் இருவகைப்) பற்று நீங்கியதாயின் (சீவன்) முத்தி யுண்டாயிற்று என்பது. பற்றற்றதெனின் வீடுற்றது என்றன்வயிக்கப்பட்டது.

‡ அது - காரணமற்ற பொழுதே காரியமு மற்றதாகு முறைமை.

¶ அவ்விருமையும்—நீரத் துறந்தார்க்கு வீடுண்டென்பதும், அவ் வாறு துறவாதவர்க்குப் பிறப்புண்டென்பதும்.

** "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற சுடரே" என்பது இராமாயணம். ஆகாயம் வாயு முதலிய பூதங்களையும் அவற்றின் காரியங் களையும் பற்றி நின்றே பற்றற்றிருத்தல் போன்று, இறைவன் எல்லாப் பொருள்களையும் பற்றிநின்றே பற்றற்றிருக்கின்றான் என்பதாம்.*

() அதன்கண்-அந் நன்னெறியி னிடத்து.

$ கடவுள் வாழ்த்திற்கேற்ப—கடவுள்வாழ்த்தென்னும் முதலதிகாரத் திற்குப் பொருத்த.

என்ரார். ¶ பற்றற்ருன் பற்றென்புழி ஆருவது செய்யுட் டிழமைக்கண் வந்தது. ஈண்டுப் பற்றென்றது 0 பற்றப்படுவதனே. அதன்கண் உபாய மென்றது § தியான [] சமாதிகளே. விடாது வந்த பற்றென்றது அநாதியாய் வரும் உடம்பிற் பற்றினே. அப்பற்று விடுதற்கு உபாயம் இதனுற் கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) பற்றற்ருன் - (எல்லாப் பொருள்களேயும் பற்றி நின்றே) பற்றில்லாத கடவுள், (அருளிச் செய்த), பற்றினே - முத்திவழியை, பற்றுக - (இதுவே நல்லவழியென்று) மனத்திற் கொள்ளக் கடவர், (கொண்டு), அப்பற்றை - அதனிடத்து உபாயத்தை,பற்றுக-(அம்மனத்தினுற்) செய்யக் கடவர், பற்று-(விடாது வந்த) பற்று, விடற்கு-ஒழிதற்கு.

கடவுள் வாழ்த்துக்கேற்ப இங்கும் பொதுவகையினுல் 'பற்றற்ருன்' என்ரார். பற்றற்ருன் பற்று என்றவிடத்துப் பற்றற்ருனது என்னும் ஆரும்வேற்றுமையுருபு செய்யுட்டிழமைப்பொருளில் வந்தது. அங்ருப்பற்றென்றது பற்றப்படும் முத்திநெறியை. அம்முத்திநெறியினிடத்து உபாயமென்றது தியானசமாதிகளே. விடாதுவந்த பற்றென்றது அநாதியாகவருந் தேகாபிமானத்தினே. இதனுல் அத்தேகாபிமானம் விடுதற்கு உபாயம் சொல்லப்பட்டது.

(க-து.) தியானசமாதிகளேச் செய்தால்யாவனென்னும் பற்றொழியும் என்பது.

10. Desire the desire of Him who is without desire; in order to renounce desire, desire *that* desire.

¶ பற்றற்ருன்பற்று என்பது ஆரும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்.

0 பற்றப்படுவதனே-(மோட்சவிருப்பமுன்னோன்) பற்றப்படுவதாகிய முத்திவழியை. முத்திவழியென்றது முத்திவழியைக் கூறும் ஞானசாஸ்திரத்தினே. முத்திவழி, முத்திவழியை யுணர்த்தும் நூலுக்காதலின் காரியவாகு பெயராம்.

§ கடவுளிடத்து விட்டுவிட்டுச் செல்லும் அந்தக்கரணத்தின் பிரவாகம் தியானமெனப்படும்.

[] உண்டாயிருக்கும் சம்ஸ்காரங் (வாசனே)களின் ஒழிவும் அடங்கியிருக்கும் சம்ஸ்காரங்களின் வெளிப்பாடு முண்டாய் அந்தக்கரணமொருமுகமாய்ப் பரிணமித்திருத்தல் சமாதியெனப்படும். "நீ மெய்ஞ்ஞானந்னிட்டை சாருதல்" என்னும் வைராக்கிய சதகச்செய்யுளினுரையில் "மனமாதி முக்கரணங்களும் அசையாது நின்றவிடம் மெய்ஞ்ஞானநிட்டையென்பதும், அவையசைத்து செய்யுந் தியானசமாதிகள் அந்நிட்டை வருவதற்கு ஏது வென்பது மறிக" என்று தெம்பரசுவாமிகள் கூறியிருக்கின்ரனர்.

பன்னிரண்டாவது அதிகாரம்.

மெய்யுணர்தல்—*True Knowledge.*

பரி:—அஃதாவது † பிறப்பு வீடுகளையும், ‡ அவற்றின் காரணங்களையும், §விபரீத ¶ ஐயங்களான் அன்றி உண்மையா னுணர்தல். இதனை வடநூலார் தத்துவஞானமென்ப. () இதுவும் பற்றற்றான் பற்றினைப் பற்றியவழி உளதாவதாகலின், அக்காரணவொற்றுமைபற்றித் துறவின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது பிறப்பு வீடுகளையும், அவற்றின் காரணங்களையும், விபரீத சந்தேகங்களால் அல்லாமல் உண்மையாக வறிதல். இம்மெய்யுணர்தலை வடநூலார் தத்துவஞான மென்பர். இம்மெய்யுணர்தலும் பற்றற்றான் பற்றினைப் பற்றிய விடத்து உண்டாவதாகையால், அக்காரண வொற்றுமைபற்றித் துறவின்பின் வைக்கப்பட்டது.

க. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணப் பிறப்பு.

ப:—(இ-ள்.) மெய்ப்பொரு ளல்லவற்றை மெய்ப்பொருளென் றுணரும் விபரீத வுணர்வானேயுதாம் இன்பமில்லாத பிறப்பு, (எ-று).

† *பிறப்பில் துன்பக் கூறுபாடும், வீட்டில் (முத்தியில்) இன்பக்கூறுபாடு முளவென்க.*

‡ *அவற்றின் காரணங்கள்—பிறப்பு வீடுகளின் காரணங்களாகிய அஞ்ஞானமும் ஞானமும்.*

§ *விபரீதம்-திரிவு. "திரிவு மித்தையினுலாகிய வுணர்வு, அது இப்பியை வெள்ளி யென்பது" என்று தருக்க சங்கிரகம் கூறுகின்றது. அஃதாவது ஒன்றை (கயிற்றை) மற்றொன்றுக (பாம்பாக) வறிதலாம்.*

¶ *ஒன்றை (கயிற்றை) அதுவோ இதுவோ (கயிறே பாம்போ) என்றறிதல் ஐயம். ஐயம்-சந்தேகம். தருக்க சங்கிரகம் "ஐயமாவது ஒருதருமியின் மாறுபட்ட பல தருமங்களான் விசேடிக்கப்பட்ட வுணர்வு. தருமமெனினும் தன்மையெனினும் ஒக்கும், அது சுற்றியோமகனே என்பது" என்று கூறுகின்றது.*

() *இதுவும் (மெய்யுணர்தலும்) பற்றற்றான் பற்றிய முத்திவழியைப் பற்றியபோது உண்டாவதா யிருத்தலால், அக்காரண வொற்றுமை பற்றி (மெய்யுணர்தலுக்குப் பற்றற்றான் பற்றினைப்பற்றுதல் காரணமா யிருக்கும் ஒற்றுமைபற்றி),த் துறவின் பின் வைக்கப்பட்டது.*

இங்ஙுக் காரணமென்பது நிமித்தகாரணம். எது சொலுபத்தில் பிரவேசிக்கின்றதில்லையோ, ஆனுல் காரியத்திற்கு வேறுக இருந்துகொண்டு காரியத்தைச் செய்கின்றதோ, எதன் ரசத்தினுல் காரியம் ரசமடைகின்றதில்லையோ அது நிமித்த காரணமெனப்படும்.

அவ்விபரீத உணர்வாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளும் இல்லையெனவும், மற்றும் † இத்தன்மையவஞ் சொல்லும் மயக்கநூல் வழக்குகளே மெய்ந்நூல் வழக்கெனத் துணிதல். ‡ குற்றியைமகனென்றும், $ இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றுகத் துணிதலும் அது. மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை யென்பன ஒரு பொருட்கிளவி. ஈகார், வீலங்கு, மக்கள், தேவரென்னும் நால்வகைப் பிறப்பினு முள்ளது துன்பமேயாகலின் 'மாணுப்பிறப்பு' என்றார். இதனுற் பிறப்புத் துன்பமென்பதூஉம், அதற்கு முதற்காரணம் அவிச்சையென் பதூஉம் கூறப்பட்டன.

தெளி:—(இ-ள்.) பொருளல்லவற்றை-மெய்ப்பொருள்க ளல்லாதன வற்றை, பொருளென்று-மெய்ப்பொருள்க ளென்று, உணரும்-அறிகின்ற, மருளான்-விபரீத ஞானத்தினுலே, மாணுப்பிறப்பு - மாட்சிமையில்லாத பிறப்பு (இன்பமில்லாத பிறப்பு), ஆம்-உண்டாகும், (எ-று).

பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் விபரீதஞானமாவது மறு பிறப்பும், இருவினைப் பயன்களும், கடவுளும் இல்லையென்றும், மற்றும் இப்படிப்பட்டவைகளேயும் சொல்லுகிற மயக்கநூல் வழக்குகளே மெய்ந்நூல் வழக்கென்று நிச்சயித்தல். கட்டையைக் கள்ளனென்றும், இளிஞ்சிலை வெள்ளியென்றும் இவ்வகையே ஒருபொருளே மற்றொருபொருளாக நிச்சயித்தலும் அது (விபரீதமாம்). மருள், மயக்கம், விபரீதஞானம், அஞ்ஞானம் என்பன ஒருபொருட் சொற்கள். ஈகார், வீலங்கு, மக்கள், தேவர் என்கிற நால்வகைப்பிறப்புக்களிலும் உள்ளது துன்பமேயாதலால் 'மாணுப்பிறப்பு' என்றார். இதனுல் பிறப்புத் துன்பமென்பதும், அப்பிறப்பிற்கு முதற்காரணம் அஞ்ஞானமென்பதும் சொல்லப்பட்டன.

(க-து.) மெய்ப்பொருளல்லாதவற்றை மெய்ப்பொருளென்றறியும் விபரீத ஞானத்தினுல் பிறப்புண்டாகின்றது என்பது.

1. Inglorious births are produced by the confusion of mind which considers those things to be real which are not real.

உ. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

† இத்தன்மையவும்என்றதனுல்,ஆகாயமென்பதொன்றில்லை யெனவும், பூதங்களின் கூட்டுறவால் உயிரென்பதொன்று தோன்றி அவற்றின் பிரிவால் அழியுமெனவும், காண்டலளவை யன்றி வேறு அளவைகளில்லை யெனவும், பிறவும் கூறுதலுங் கொள்க.

‡ குற்றி-மரக்கட்டை. $ இப்பி-முத்துச்சிப்பி.

பரி:—(இ-ள்.) † அவிச்சையினின்றும் மெய்யுணர்வினை யுடையராயினும் ‡க்கு அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி விட்டினைக்கொடுக்கும், (எ-று).

‡ இருள்-நரகம்; அஃதாகுபெயராய்க் காரணத்தின் மேனின்றது. ¶ நீங்கியெனத் தொடைநோக்கி மெலிந்து நின்றது; நீங்கவென்பதன் திரிபெனினும் அமையும். மருணீங்கியெண்ணும் வினையெச்சம் காட்சியென்னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது. மாசறுகாட்சியென்றது 0 கேவலவுணர்வினை. இதனால் வீடாவது $ நிரதிசய இன்பமென்பதூஉம், அதற்கு நிமித்தகாரணம் * கேவலப்பொருளுணர்வென்பதூஉம் கூறப்பட்டன.

† கடவுள்வாழ்த்து "இருள்சேர் நிருவினையும்" என்னும் குறளின் விசேடவுரையில் "இன்ன தன்மைத்தென ஒருவராலுங்கூறப்படாமையின் அவிச்சையை இருள் என்றும்" என்று கூறியிருத்தலால், இன்னதன்மைத்தென்று ஒருவராலும் கூறப்படாமை அவிச்சைக்கு இலக்கணமாயிற்றென்க.

‡ இருள் நரகம் என்பது அடக்கமுடைமை யதிகாரம் முதற்குறளின் விசேட வுரையில் "இருள் என்பது ஓர் நரகவிசேடம்" என்று கூறுவதாலு மறிக. இருள் என்னுங் காரியப் பெயர் அவ்விருளே (நரகத்தை) யடைவதற்குக்காரணமான பிறப்பினை யுணர்த்தலால் காரியவாகு பெயராம். ஒருவன் நரகத்தையடைதல் பிறப்பினாலாதலின் நரகத்தையடைதற்குக் காரணம்பிறப்பாயிற்றென்க. இதனால் ஞானத்தாலடைவது மோட்சமென்றும், பிறப்பினாலடைவது நரகமென்றும் பெறப்பட்டனவென்க. இருள்-அவிச்சை. அஃது ஆகுபெயராய்க் காரியத்தின் மேனின்றது என்றும் பாடமுண்டு. இப்பாடத்தின்படி அவிச்சை யென்னும் கருவியின் (முதற்காரணத்தின்) பெயர் அதன்காரியமாகிய பிறப்பிற்காதலால்(முதற்)கருவியாகு பெயராம். இருள் என்பது அவிச்சையை யுணர்த்துதல் "இருள்சேர் நிருவினையுஞ் சேரா" என்னுங் குறளாலறிக.

¶ இருணீங்கி யென்பதற்கேற்ப மருணீங்கியென வந்தது எதுகைத் தொடையாம். இஃது ஓரடியுள் சீர்களினெழுத்தொன்றிவந்த எதுகைத் தொடையாம். பல வடிகளிலேனும் பல சீர்களிலேனும் எழுத்தக்கலொன்றிவருவது தொடையெனப்படும். தொடைக் லெக்கணம் இலக்கணவிளக்கம் "அடியிரண்டி, தொடுத்தமன் சேறலிற் றொடையே" என்று கூறுகின்றது.

0 கேவலவுணர்வு—பிரமஞானம் அல்லது சிவஞானம். "உரைசெயிற் பிரம ஞான மொன்றுமே முத்திக் கேது" என்பது பிரபுலிங்கலீலை.

$ நிரதிசயவின்பம்—பேரின்பம். அஃதாவது அதிசயமற்ற வின்பம். அதிசயம்-பேதம், "பேதமில்லதோர் கற்பனித்தபெருந்துறைப்பெரு வெள்ளமே" என்பது திருவாசகம்.

* கேவலப் பொருளென்றும் பாடமுண்டு. பற்றற்றான் பற்றினைப் பற்றுதல் வாயிலாக வீடடைவதன்றி நேரே பற்றற்றான் (கடவுள்) வாயிலாக வீடடைதலின்று மென்ப நீண்மொழித்தற்பொருட்டும்.

தெளி:—(இ-ன்.) மருள் நீக்கி-அஞ்ஞானத்தினின்றும் நீங்கி, மாசறு-குற்றமற்ற, காட்சியவர்க்கு - (மெய்) அறிவினையுடையா ராயினோர்க்கு, (அம்மெய்யறிவானது), இருள்-பிறப்பினை, நீங்கி-நீக்கச்செய்து, இன்பம்-முத்தியை, பயக்கும்-கொடுக்கும், (எ-று).

இருள்-காரகம்; அஃதாகு பெயராய்த் தன் காரணமாகிய பிறப்பின் மேல் நின்றது. இருணீக்கியென்பது மருணீங்கியென்னுந் தொடைகோக்கி இருணீக்கியென்று மெலித்தல் விகாரம் பெற்று நின்றது; நீங்கியென்பது நீக்கவென்பதன் திரிபென்றுலும் ஒக்கும். மருணீங்கி யென்னும் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் காட்சியவரென்னுங் குறிப்பு வினையாலணையும் பெயரைக்கொண்டு முடிந்தது. மாசறுகாட்சி - கேவல ஞானம். இதனால் வீடாவது அதிசயமற்ற இன்பமென்பதும், அவ்வின்பத்தினைப்பெறுதற்கு நிமித்த காரணம் கேவலப்பொருளாகிய பிரமஞான மென்பதும் சொல்லப்பட்டன.

(க-து.) மெய்ஞ்ஞானம் பெற்றார்க்குமுத்தியுண்டாம்என்பது.

2. A clear undimmed vision of things will deliver its possessors from the darkness of future births, and confer the felicity of Heaven.

கூ. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

பரி:—(இ-ள்.) ஐயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு எய்தி நின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் நணித்தாதலுடைத்து, (எ-று).

ஐயமாவது பல தலையாயவுணர்வு. அஃதாவது மறுபிறப்பும், இருவினைப்பயனும் கடவுளும், உளவோ இலவோவென ஒன்றிற்றுணிவு பிறவாது நிற்றல்; பேய்த்தேரோ புனலோ, கயிறோ அரவோவெனத்துணியாது நிற்பதும் அது. ஒருவாற்றாற் பிறர்மதங் கூறுக்து தம்மத ¶ நிறுத்தல் எல்லாச் சமயதூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது மெய்யென நிகழும் ஐயத்தினை யோகமுதிர்ச்சியுடையார் தம்மனுபவத்தானீக்கி மெய்யுணர்வராகலின், அவரை 'ஐயத்தினீங்கித் தெளிந்தார்' என்றும், அவர்க்கு அவ்வனுபவ வுணர்வு 0 அடிப்பட்டு வரவரப் பண்டை உலகியலுணர்வு † தூர்ந்துவருமாகலின், ‡ அதனைப் பயன்மேலிட்டு 'வையத்தின் வான நணிய துடைத்து' எனறுங் கூறினார்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது.

¶ நிறுத்தல்-ஸ்தாபித்தல். 0 அடிப்பட்டு-பழகி. † தூர்த்து-குறைந்து.


‡ அதனைப் பயன்மேலிட்டு-(உலகியலுணர்வு) தூர்த்து (குறைந்து) வருதலே மெய்யுணர்வின் பயனிய வீட்டுலகின்மேல் வைத்து. (மெய்யுணர்வால் உலகியலுணர்வு குறையக்குறைய வீட்டுலகம் சமீபித்துக்கொண்டே வருமென்பது கருத்தாம்).

தெளி:—(இ-ன்.)ஐயத்தின் நீங்கி-சந்தேகத்தினின்றும் நீங்கி,தெளிந் தார்க்கு-மெய்யுணர்ந்தவர்க்கு, வையத்தின்-(அடைத்திருன்ற)நிலவுலகத்தி லும், வானம்-(அடையக் கடவதாகிய) முத்தியுலகம், ணியது-சமீபித்திரு த்தலே, உடைத்து-உடையதாம், (எ-று).

ஐயமாவது பலவகையாய அறிவு. அவ்வையமாவது மறுபிறப்பும், இருவினைப் பயன்களும், கடவுளும் உண்டோ இல்லையோ என்று ஒன் றில் நிச்சயம் பிறவாமல் நிற்றல்; காலமோ நீரோ, பழுதையோ பாம்போ என்று ஒன்றிலும் நிச்சயம் உண்டாகாது நிற்பதும் அது (ஐயமேபாம்). ஒருவித தத்தினுல் பிறர் மதத்தை நிராகரித்துத் தமது மதத்தை நிறுத்துதல் எல்லாச் சமயநூல்களுக்கும் இயல்பாகலால், அந்நூல்கள் சொல்லுகின்ற பொருள்களில் எது உண்மையென்று உண்டாகுஞ் சந்தேகத்தை யோகாப் பியாசத்தில் முதிர்ச்சியுடையார் தமது அனுபவஞானத்தினுல் நீக்கி உண் மையை அறிவாராகலால், அவரை 'ஐயத்தினீங்கித் தெளிந்தார்' என்றும், அவ்வியோகமுதிர்ச்சியுடையவர்க்கு அவ்வனுபவஞாணம் தொடர்ந்தமேலி ருந்தோறும் மேலிருந்தோறும் பழைய லோகாசாரஞானம் மறந்து வருமா தலால், அதனைப் பயனுகிய வீட்டிலகின்மேல் வைத்து'வையத்தின் வான ணியது துடைத்தி' என்றும் சொல்லினர்; சொல்லவே சந்தேக ஞானமும் பிறவிக்குக் காரணமாதல் சொல்லப்பட்டது,

(க-து.) சந்தேகத்தினின்றும் நீங்கி மெய்யுணர்ந்தவர் தவ முது முத்தியடைவர் என்பது.

3. Heaven is nearer than earth to those men of purified minds who are freed from doubt.



சு. ¶ ஐயுணர் வெய்தியக் கண்ணும்.பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

பரி:—(இ-ள்.) $ செல்லப்படுகின்ற புலன்களிலேறுபாட்டான் ஐந் தாகிய வுணர்வு அவற்றைவிட்டுத் தம்வயத்ததாய வழியும் †அதனுற் பய னில்லையேயாம்; மெய்யினை யுணர்தலில்லாதார்க்கு, (எ-று).

¶ "ஐயறி வறிந்தவை யடங்கினவ ரேனு, மெய்யறி விலாதவர்கள் வீடது பெறுரே" என்பது சிவார்ணபோதம்.

$ செல்லப்படுகின்ற புலன்கள்—மனம் செவி முதலிய விந்திரியங் கள் வாயிலாகச் சென்று அனுபவிக்கின்ற சப்த முதலிய விஷயங்கள். செல்லப்படுகின்ற என்பதற்குப் பிரதியாகச் சொல்லப்படுகின்ற என்றும் பாடமுண்டு.

† அதனுல்-(ஐந்தாகிய வுணர்வு-மனம்) தம்வயத்ததாவதினுல்.


‡ ஐந்தாகிய வுணர்வு-மனம். அஃதெய்துதலாவது மடங்கி ஒருமுகப் பட்டுத் ¶ தாரணைக்கண் நிற்றல். அங்ஙனநின்றவழியும் வீடு பயவாமையின் 'பயமின்று' என்றார். நிறப்பும்மை எய்துதற்கருமை விளக்கிநின்றது. இவை யிரண்டு பாட்டானும் 0 மெய்யுணர் வுடையார்க்கே வீடெனத மெய்யு ணர்வின் சிறப்புக் கூறப்பட்டது.

தேளி:—(இ-ன்.) ஐயுணர்வு-(ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் என் னும் ஐந்துபுலன்களிலும் செல்லுதலின் வேறுபாட்டால்) ஐந்தாகிய உண ர்வு, எய்தியக்கண்ணும்-(அப்புலன்களை விட்டுத்) தமக்கு வசப்பட்டதாய விடத்தும், (அதனால்), பயன்-பிரயோஜனம், இன்று - இல்லையேயாம், மெய்யுணர் வில்லாதவர்க்கு—மெய்யினை யறிதலில்லா தவர்களுக்கு, (எ-று).

ஐந்தாகிய உணர்வு-மனம். அம்மனம் வசப்படுதலாவது மடங்கியொரு முகப்பட்டுத்தாரணையில் நிற்றல். மனம் அப்படி நின்றவிடத்தும் அது முத் தியைத்தாராமையால் 'பயமின்று' என்றார். ஐயுணர் வெய்தியக்கண்ணும் என்றதனால் சிறப்பும்மை மனம் தம்வயத்தாதற்கு அருமையா மென் பதை விளக்கி நின்றது. இவையிரண்டு பாட்டாலும் மெய்யை யுணர்ந்தவ ர்க்கே முத்தி உண்டென்று மெய்யுணர்வின் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து.) மெய்யுணர் வில்லாதவர் மனவடக்கம் பெற்றாலும் அதனாலவர்க்கு முத்தியுண்டாவதில்லை என்பது.

4. Even those who have all the knowledge which can be attained by the five senses, will derive no benefit from it if they are without a knowledge of the true nature of things.



ஞ. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பரி:—(இ-ள்.) யாதொரு பொருள் யாதோ ரியல்பிற்றாயத் தோன் றினும், அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கணி ன்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது, (எ-று).

பொருடோறும் உலகத்தார் † கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற

‡ செவியாதி யிந்திரியங்களின் வாயிலாகச் சப்தாதி (ஐந்து) விஷய ஞானங்களை யுடைத்தாயிருப்பது மனமாதலால் 'ஐந்தாகிய வுணர்வு மனம்' என்று கூறப்பட்டது.

¶ தலதாரை போன்று இடைவிடாது அந்தக்கரணம் ஒருவகைப்பட் டிருத்தல் தாரணையெனப்படும். இது யோகாங்கங்களுள் ஒன்று.

0 மனமடக்கல் யோகமாயும் மயக்கறுத்தல் ஞானமாயு மிருத்தலால், மயக்கறுக்கும் ஞானமின்றி மனமடக்கும் யோகத்தால் முத்தியுண்டாகா தென்பதாம்.

† கற்பித்துக்கொண்டு-ஏற்படுத்திக்கொண்டு.

‡ கற்பனைகளைக் கழித்து, நின்றவுண்மையைக் காண்பதென்றவாறுயிற்று. ¶ அஃதாவது 0 கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சொலிரும் பொறை என்றவழி அரசனென்பதோர் சாதியும், சேரமானென்பதொரு குடியும், வேழமோக்கினை யுடையா னென்பதோர் வடிவும், சேஎயென்ப தோ ரியற்பெயரும், மாந்தரஞ்சொ லிரும்பொறை யென்பதோர் சிறப்புப் பெயரும் ஒரு பொருளின்கட் கற்பனையாகலின், † அவ்வாறுணராது § நிலமுதல்உயிரீறுமிய தத்துவங்களின் தொகுதியெனவுணர்த்தி, ¶ அவற் றை நிலமுதலாகத் தத்தங்காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றுற்

---

‡ கற்பனை-உண்மையாகாதது.

¶ அஃதாவது - காண்பதாவது. 0 கோச்சேரமான் யானைக் கட்சே எய் மாந்தரஞ்சொ லிரும்பொறை என்பவன் சேரர்குலத்தரசன். இவ்வர சன் புறநானூற்றில் புலவர்களால் பாடப்பட்டுள்ள அரசர்களிலொருவன். அப்பெயருள் கோ-(இராஜன்)என்பது கூத்திரிய ஜாதியையும், சேரமான் என்பது குடிப்பெயரையும்[குடிப்பெயர் ஒருகுலத்திற்கு வழங்கும் பெயர்], யானைக்கண் என்பது (அவனுக்குள்ள) கண்ணின் வடிவத்தையும் (யானைக் கண்போல் அவன் கண்ணிருந்தமை பற்றி யானைக்கண் என்று சொல்லப் பட்டது),சேஎய் என்பது (அவனது) இயற்பெயரையும் (இயற்பெயர்தாய் தந்தைகளா லிடப்பட்ட பெயர்), மாந்தரஞ்சொ லிரும்பொறை யென் பது (அவனுக்குள்ள) சிறப்புப் பெயரையும் (சிறப்புப்பெயர் ஒருகாரணம் பற்றிப் பின்வரும்பெயர்), உணர்த்தினவென்க. மாந்தரஞ்சேரலிரும் பொ றை என்றும்பாடமுண்டு. மாந்தரஞ்சொலிரும்பொறை என்பதற்கு மக்க ளெனத்தக் கூறும் அழகிய புகழாகிய பெரியசுமையை யுடையவனென் பது பொருள். மாந்தரஞ் சேரலிரும்பொறை என்பதற்கு மனிதர்களுக் குள்ளே மிகுந்த பொறுமையுடைய அழகிய சேரன் என்பது பொருள்.

† அல்வாறுணராது - (மெய்யென்று) அப்படியே யறியாமல்.

§ நிலமுதல் உயிரீறுமியதத்துவங்கள் - பிருதிவிமுதலிய பூதங்கள் 5, செவிமுதலிய ஞாநேந்திரியங்கள் 5, வாக்குமுதலிய கர்மேந்திரியங்கள் 5, பிராணன் முதலிய வாயுக்கள் 5, மனமுதலிய அந்தக்கரணங்கள் 4, உயிர் 1 ஆக 25-ஆம்.

¶ அவற்றை (அத்தத்துவங்களே) நிலமுதலாகத் தத்தம் (தமது தமது) காரணங்களு ளொடுக்குதலாவது பிருதிவியை அப்பிலும், அப்பு வைத் தேயுவிலும், தேயு(நீ) வை வாயுவிலும், வாயுவை ஆகாயத்திலும், ஆ காயத்தை அவிச்சையிலு மொடுக்குதலாம். ஞாநேந்திரிய பஞ்சகம், கர் மேந்திரியபஞ்சகம், பிராணாதி பஞ்சகம், அந்தக்காண சதுஷ்டயமாகிய இப்பத்தொன்பது தத்துவங்களும் பிருதிவிமுதலிய பூதங்களின் காரியவ களாயிருத்தலால், பூதங்களின் ஒடுக்கஞ் சொன்னபோதே இவற்றி னொ டுக்கமுஞ் சொல்லப்பட்டதாயிற்றென்க.

"எழுதரு முழுது மவளியி லழிய வெழுபுலி புனலிடை யழிய, முழு துறு புனலு மனலிடை யழிய மூவெரி வளியினி லழிய, விழிவற

† காரணகாரியங்கள் இரண்டுமின்றி ‡ முடிவாய்நிற்பதனை யுணர்தலாம். 'எப்பொருள்' என்ற பொதுமையான் இயங்குதிணையும்நிலைத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறேயுணரப்படும். இதனுள் மெய்யுணர்வினது இலக்கணங் கூறப்பட்டது.

தேளி:—(இ-ன்.) எப்பொருள் - யாதொருபொருள், எத்தன்மைத்தாயினும்-யாதோரியல்பினதாய்த் தோன்றினாலும், (அத்தோன்றியவிதத்தைக் கண்டுவிடாமல்), அப்பொருள் - (தோன்றிய) அப்பொருளிலிருந்து, மெய்ப்பொருள்-மெய்யாகிய பொருளை, காண்பது-காண்பதே, அறிவு-மெய்யுணர்வு, (எ-று).

மெயயுணர்வாவது ஒவ்வொரு பொருளிலும் உலகத்தார் கற்பிதங்கொண்டுவழங்குகின்ற கற்பனைகளை யொழித்து ஒழியாமல் நின்ற உண்மையைக் காணுதலென்றவாறாயிற்று. அஃதாவது கோச்சேரமான யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சொலிரும்பொறை என்ற விடத்து அரசனென்பதொருசாதியும், சேரமானென்பதொரு குடிப்பெயரும், வேழகோக்கினை (யானைக்கண்ணை) யுடையனென்ப தொருவடிவும், சேஎயனென்பதோரியற் பெயரும், மாந்தரஞ்சொலிரும்பொறை யென்பதொரு சிறப்புப்பெயரும் ஒரு பொருளினிடத்துக் கற்பனையாதலால், அவ்வாறறியாது மண் முதலிய்ர்முடிவாகிய தத்துவங்களின் கூட்டமென்றறிந்து, அத் தத்துவக்கூட்டங்களை மண்முதலாகத் சத்தத் காரணங்களி லொடுக்கிக்கொண்டுபோனால்

வலிய தடைவளி கதன மதிலிற வீருளினி லதுவும், அழிதரு வீருளு மறிவினி லழிய வழிவறு நிலையறி வதுவாம்'' என்று பெருந்திரட்டுக் கூறுவது மிங்குணர்தற் பாலதாம்.

† மண்ணுதிகடத்தை நோக்கக் காரணமாயும் அணுவை நோக்கக் காரியமாயு மிருத்தலால் காரியம் காரணமாயும் காரணம் காரியமாயும் வருமென்பது பெறப்படுகின்றது; படவே, காரியமும் காரணமு முற்பத்திரசமுடையனவாமென்பதாயிற்று. சடப்பொருளெல்லாம் ஒன்றை நோக்கக் காரணமாயும் மற்றொன்றை நோக்கக் காரியமாயும் இருத்தலால் அநித்தமாம். விசாரிக்குமிடத்து, உயிர் ஆன்மாவது-ஆத்மா எவ்வகையாலும் ஒன்றற்குக் காரணமாகாமலும் மற்றொன்றற்குக் காரியமாகாமலும் நித்தமாயிருத்தலின், அதனை யுணர்தல் 'காரண காரியங்களிரண்டு மின்றி முடிவாய்நிற்பதனையுணர்தலாம்' என்று கூறப்பட்டது ''தரதிசோகம் ஆத்மவித்-ஆத்மாவையறிந்தவன் சோகத்தைக் கடக்கின்றான்'' என்று சுருதிகூறுவதும், ''அவனுக் (பிரஹ்மத்திற்)குக் காரியமுங் காரணமுமில்லை'' என்று சுவேதாசுவதரோபநிடதம் கூறுவதும்,''அறிவிற் கழிவில்லை யாக்கமு மில்லை'', ''காரிய காரணங் கற்பனை சொற்பதப், பாரமும் பாழில் பராபரத் தானே'', ''காரிய காரண வாதனைப் பற்றறப், பாரண வும்முப சாந்தப்பரிதே'' என்று திருமந்திரங் கூறுவதும் இங்கூன்றி யுணர்தற் பாலனவாம்.

‡ முடிவாய் நிற்பது—ஆத்மா.

காரணகாரியங்களிரண்டும் மில்லாமல் முடிவாய் நிற்பதனை யறிதலாம். 'எப் பொருள்' என்ற பொதுமையிலுள் சாரும் அசரமுமாகிய பொருள்களெல் லாம் இப்படியே பகுபடும். இதனுள் மெய்யுணர்வினது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க-து.) விசாரவாயிலாக மெய்ப்பொருளை யுணர்வதே மெய் யுணர்வாம் என்பது.

5. True knowledge is the perception concerning every thing of whatever kind that *that* thing is the true thing.

சு. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

பரி:—(இ-ள்.) இம்மக்கட் பிறப்பின்கண்ணே உபதேச மொழி களை அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு அதனுள் மெய்ப்பொருளை யுணர்ந்தவர் மீண்டு இப்பிறப்பின்கண் வாராதநெறியை யெய்துவர்.

'கற்று' என்றதனால் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், 'ஈண்டு' என்றதனால் வீடுபேற்றிற்குரிய * மக்கட்பிறப்பினது பெறுதற்கருமை யும் பெற்றும். ஈண்டுவாராநெறி-வீட்டுநெறி. † வீட்டிற்கு நிமித்தகாரண மாய முதற்பொருளை யுணர்தற்கு உபாயம் மூன்று:—அவை ‡ கேள்வி, வீமாரிசம், பாவனையென்பன. அவற்றுள்கேள்வி இதனுள் கூறப்பட்டது.

---

* 'பெறவரிது மக்கட் பிறவிபெற் றாலு, மறிவுதா னாய்த லரிதே-யதினும், திறவுடைய ஞான லரிதே யதின்மெய், யறிவுடைய ஞான லரிது'' என்பது அமிர்தசாரம்.

† முதற்பொருளை (தலைமைப்பொருளை அஃதாவது எப்பொருளுக் கும் முதற் பொருளாய்த் தனக்கொரு முதற்பொருளை யில்லாதிருக்கும் பரப்பிரமத்தை) ஐயந்திரிபின்றியறிதல் சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகி, எஞ்ஞான்று மொருதன்மைத்தாயிருக்கும் வீடுகூடுவதற்கு நிமித்தகாரணமாயிருத்தலின், 'வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொரு ளை' என்று கூறப்பட்டது.

‡ கேள்வி, வீமாரிசம், பாவனையென்பன முறையே, சிரவணம்(கேட் டல்), மனனம் (சிந்தித்தல்) நிதித்தியாசனம் (தெளிதல்)என்று சொல்லப் படும். சிரவணத்தினுல் அஞ்ஞானமும், மனனத்தினுல் சம்சேதமும், நிதித் தியாசனத்தினுல் விபரீதமும் மொழிதலால் முதற்பொருளை யுணர்தற்குச் சிரவண முதலியன உபாயமாயினவென்க.

[முதற்பொருளை யடைதற்குரிய வழியை ஞானாசாரியனிடத்தில்கேட்டல் சி ரவணம்; ஞானாசாரியனிடத்தில்கேட்டவிஷயத்தை புத்தியினுற்சிந்தித்தறி தல் மனனம்; சிரவணத்தினுலும் மனனத்தினுலும் தெளிந்தபொருளில் மனம் அசைவறநிலைத்தல் நிதித்தியாசனமாம்.]

தெளி:—(இ-ள்.) ஈண்டு-இம்மக்கட் பிறப்பினிடத்தே, கற்று - (உப தேசமொழிகளே அனுபவமுடைய ஞானசாரியரிடத்தில்) கேட்டு, (அதனால்), மெய்ப்பொருள்-உண்மைப்பொருளை, கண்டார் - உணர்ந்தவர், மற் றீண்டு-திரும்பி இப்பிறப்பினிடத்து, வாராநெறி-வாராதவழியை, தலைப் படுவர்-அடைவர், (எ-று).

'கற்று' என்றதனால் (ஞானசிரியர்) பலரிடத்தும் பலதரமும் பழகுத லும், 'ஈண்டு' என்றதனால் முத்தி பெறுவதற்குரிய மனிதப்பிறப்பினை பெறுதற்கு அருமையும் பெறப்பட்டன. ஈண்டுவாராநெறி-முத்திவழி. முத் திக்கு நிமித்தகாரணமாகிய முதற்பொருளை யறிவதற்குச்சாதனம் மூன்று:- அவை கேட்டல்,நெறிதல், தெளிதல் எனபன. அவற்றுள், கேட்டல் இத னால் சொல்லப்பட்டது.

(க-து.) ஞானசாரியனிடத்து உபதேசங்கேட்டுண்மைபொ ருளையறிந்தவர்க்குப் பிறப்புண்டாவதில்லை யென்பது.

6. They, who in this birth have learned to know the True Being, enter the road which returns not into this world.

எ. ஓர்த்துள்ள முள்ள துணரி னுருதலையாப்
போர்த்துள்ள வேண்டா பிறப்பு.

பரி:—(இ-ள்.) அங்ஙனங்கேட்ட உபதேச மொழிப்பொருளை ஒருவ னுள்ளம் அளவைகளானும் பொருந்துமாற்றானுந் தெளிய ஆராய்ந்து அதனின் முதற்பொருளை யுணருமாயின், அவனுக்கு மாறிப் பிறப்புளதாக நினைக்கவேண்டா, (எ-று).

† ஒருதலையாவோர்த்தென இயையும். அளவைகளும் பொருந்து மாறும் ‡ மேலே உரைத்தாம். இதனுள் விபரிசங் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) (அப்படிக் கேட்ட உபதேசமொழிப்பொருளை)உள் ளம்-(ஒருவனது) உள்ளமானது, ஒருதலையாக - தெளிவுண்டாக, ஓர்த்து-(பிரமாணங்களாலும் யுத்தியினாலும்) ஆராய்ந்து,(அதனால்),உள்ளது-முதற் பொருளை,உணரின்-அறிவானெயின், பிறப்பு(அவனுக்குப்) பிறப்பு, (உள்ள தாக), போர்த்த—மாறி, உள்ளவேண்டா-நினைக்கவேண்டாவில்லை, (எ-று).

ஒருதலையா ஓர்த்தென்றன்னுவயமாம். பிரமாணங்களும் யுத்தியும் மேலே கூறினும், இதனுள் தெரித்தல் சொல்லப்பட்டது.

---

† முதலடியினிற்றிலுள்ள ஒருதலையா என்பது அவ்வடியின் முதலி லுள்ள ஓர்த்து என்பதன்முன் கூட்டப்பட்டது.

‡ மேலே என்றது அருளுடைமை யதிகாரத்தின் இரண்டாம் குற ளின் விசேடவுரையை.

(க-து.) குருவினிடத்துக் கேட்ட வுண்மைப்பொருளைச் சந் தேகமின்றி யறிந்தவனுக்குப் பிறப்புண்டாவதில்லை என்பது.

7. Let it not be thought that there is another birth for him whose mind having thoroughly considered all it has been taught has known the True Being (God).

அ. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்ப தறிவு.

பரி:—(இ-ள்.) பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சை கெட வீட் டிற்கு நிமித்தகாரணமாய செவ்வியபொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது, (எ-று).

* பிறப்பென்னும் பேதைமையெனவும், சிறப்பென்னுஞ் செம்பொரு ளெனவும் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். † ஐவகைக் குற்றங் ளுள், அவிச்சை ஏனைய நான்கிற்கும் காரணமாத லுடைமையின், அச் சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக் கூறினர். எல்லாப் பொருளிலுஞ் சிறந்ததாகலான் வீடு சிறப்பு எனப்பட்டது. தோற்றக் கேடுகளின் மையின் நித்தமாய், ‡ தோன்மையாற் றன்னையொன்றுங் கலத் தலின்மையின் தூய்தாய்த், தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்றமுதற் பொருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி, அதனைச் 'செம்பொருள்' என்றார். § மேல் 'மெய்ப்பொருள்' எனவும், 'உள்ளது' எனவும் கூறியதூஉம் இதுபற்றி யெனவுணர்க. அதனைக்காண்கையாவது உயிர்

* பிறப்பிற்கு முதற்காரணமாகிய அவிச்சையைப் 'பிறப்பென்னும் பேதைமை' என்றும், சிறப்பிற்கு (முத்திக்கு) நிமித்தகாரணமாய செம் பொருளைச் 'சிறப்பென்னும் செம்பொருள்' என்றும் கூறினமையின், இவை காரியங்காரணமாயவுபசாரவழக்காம். (காரியங்காரணமாவது காரியத் தைக் காரணமாகக்கூறுவது). பிரயோகவிவேக நூலார் " மருளறுகார ணம் " என்னுஞ்செய்யுளினுரையில் " பிறப்பென்னும் பேதைமை-பிறப்பிற்கேதுவாகிய பேதைமை; இதுகாரியங்காரணமானது" என்று கூறியிருக்கின்றனர்.

† ஐவகைக்குற்றங்கள்-அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, கோபம்.

‡ தன்னினும் பெருமையுடைய பொருள் தன்னில் கலத்தலில்லா திருத்தல் பற்றி 'தோன்மையாற்றன்னை யொன்றும் கலத்த லின்மையின்' என்றகூறப்பட்டது. தோன்மையாற் றன்னையொன்றுங் கலத்தலில்லா தது நிராபேட்சை வியாபக மெனப்படும்.

§ மேல் என்றது இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறளையும் ஏழாவது குறளையும்.

தன்னவிச்சைகெட்டு அதனுலே ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல். இதனைச் † சமாதியெனவுஞ் ‡ சுக்திலத்தியானமெனவுங்கூறுப. உயிர் உடம்பினீங்குங் காலத்து அதனுல் ¶ யாதொன்று பாவிக்கப்பட்டதி, அஃதே அதி வாய்த்தோன்று மென்பது எல்லா வாகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பித்தேதுவாய பாவனை வேறு தற்பொருட்டுக் $ கேவலப்பொருளேயே பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே பயிறலாய இதனின் மிக்கவுபாயமில்லை யென்பதறிக. இதனுற் பாவனை கூறப்பட்டது.

தேனி:—(இ-ள்.) பிறப்பென்னும் - பிறப்பிற்கு முதற்காரணமான, பேதைமை-அஞ்ஞானமானது, நீங்க-கெட்டொழிய, பிறப்பென்னும்-முதற்கு நிமித்தகாரணமான, செம்பொருள்-செவ்வியபொருளே, காண்பது - காண்பதே, அறிவு-(ஒருவனுக்கு) மெய்யுணர்வாம், (எ-று).

பிறப்பென்னும் பேதைமையென்னும், சிறப்பென்னுஞ் செம்பொருளென்னும் காரியங்களைக் காரணங்களாக உபசரித்துக் கூறினர். அஞ்ஞான முதலிய ஐவகைக்குற்றங்களுள் அஞ்ஞானம் மற்றைய நான்கனுக்கும் காரணமாதலுடைமையால், (காரணமாகும்) அச்சிறப்புப்பற்றி அவ்வஞ் ஞானத்தையே பிறப்பிற்குக் காரணமாக்கிச் சொல்லினர். எல்லாப்பொருளிலும் சிறந்ததாகலால் முத்தி சிறப்பு என்றுகூறப்பட்டது. உற்பத்தி காரணங்களில்லாமையினுல் நித்தியமாய்ப், பெருமையால் தன்னே யொன்

† தியானிப்பவன் தியானமென்னு மிரண்டையும் விடுவதனுல், தியானிக்கப்படும் வஸ்து வொன்றனேயேவிஷயஞ்செய்யும் காற்றில்லாததீபம் போன்றுள்ள சித்தம் சமாதியாம். இது தர்மமேகமென்று சொல்லப்படும். தருமமாகிய மழையை(ஆத்மசாட்சாத்காரத்தை - பிரத்தியகாத்ம அபின்ன பிரஹ்மதரிசனத்தை)ப் பெய்யும் (உண்டாக்கும்) மேகம் (கிருவிகற்பசமாதி) தருமமேகமாம். (பிரத்தியக்-உள், அபின்னம்-வேற்றுமைப்படாதது). யோகசூத்திரம் 4-வது பாதம் 28-வது சூத்திர மிங்குணரத்தக்கதாம்.

‡ "இணரெரி முழுக்க மன்ன சுக்திலத் தியான மென்னும், கணையெறிந் தணைப்ப வீழ்ந்து காற்படை சுருட்டப்பட்டார்" என்பது சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் 4823.

¶ "இந்தவுடலம் விடும்பொழுதில் யாவனியாதொன் றினைகினைந்தா, னந்தவனவே யந்தப்பா வனையா லதனே யடையுமால்" என்று பகவற்கீதை கூறுவதும், தாயுமானவர் எந்நுகிறைகின்றபொருள் மூன்றுவது செய்யுளில் "யாதொன்று பாவிக்கான், அதுவாத லாதுன்னே யாகென்று பாவிக்கின் அத்துவித மார்க்க முதலால், எதுபா வித்திடினு மதுவாகி வந்தருள் செயென்தைநீ குறையு முண்டோ" என்று கூறுவதும் இங்குக்கவனிக்கத் தக்கனவாம்.

$ கேவலப்பொருள்-தனிமைப்பொருள் [யாதொரு சம்பந்தமுமின்றி வீடடைதல் பற்றிப் பரப்பிரஹ்மம் கேவலப் பொருளெனப்பட்டது.]

முன் காலத்திலில்லாமையினும் பரிசுத்தமாய், எல்லாப்பொருளையும் தான் காலத்து நிற்கின்ற மூதற்பொருளானது விகாரமில்லாமல் எக்காலத்தும் ஒரு தன்மையதாயிருத்தல்பற்றி, அம்மூதற்பொருளைச் 'செம்பொருள்' என்றார். மூன்றே 'மெய்ப்பொருள்' எனவும் 'உள்ளது' என்றும் சொல்லியதும் இது பற்றி யென்றறிக. அச்செம்பொருளைக் காணுதலாவது உயிர் தனது அஞ்ஞானங்கெட்டு அச்செம்பொருளோடு ஒற்றுமையுண்டாக (சிவோஹம் அல்லது அஹம்ப்ரஹ்மாஸ்மி அல்லது ப்ரஹ்மைவாஹம் என்று) இடைவிடாதபாவித்தல். இப்பாவனையைச் சமாதியென்றுஞ் சுவிலத்தியானமென்றுங் கூறுவர். உயிர் உடம்பை விட்டு நீங்குகாலத்தில் அவ்வுயிரால் யாதொன்று பாவிக்கப்பட்டது, அவ்வுயிர் அப்பாவிக்கப் பட்டதாய்ப் பிறக்குமென்பது எல்லாச்சாத்திரங்களுக்கும் நிச்சயமாதலால், முத்தியடைவார்க்கு உயிர் உடம்பை விட்டுப் போகுங்காலத்தில் பிறப்பிற்குக் காரணமானபாவனை கெடுதற்பொருட்டே கேவலப்பொருளையே பாவித்தல் வேண்டுதலால், அக்கேவலப்பொருளை முன்னே பாவிதத்துப் பழகுதலாகிய இதனிலும் மேலாய சாதனமில்லை யென்பதணாக. இதனால் பாவனை சொலலபபட்டது.

(க-து.) பிறவிக்குக காரணமான அஞ்ஞானங்கெடஉண்மைப் பொருளை யுணர்வதே மெய்பறிவாம் எனபது.

8. True knowledge consists in the removal of ignorance which is the cause of births, and the perception of the True Being (God) who is the bestower of heaven.

க. $ சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

பரி:—(இ-ள்) ஒருவன் எல்லாப்பொருட்குஞ் சார்பாய அச்செம் பொருளை யுணர்ந்து இருவகைப்பற்றும் அற ஒழுகவல்லனாயின், அவனை * முன் சாரக்கிடவனவாய் நின்ற துன்பங்கள் † அவ்வுணர் வொழுக்கங்களை அழித்துப் பின்சாரமாட்டா, (எ-று).

‡ ஆதுபெயராற் சாருமிடத்தையும் சார்வனவற்றையும் 'சார்பு' என்றார். ஈண்டொழுக்கமென்றது யோகநெறி யொழுகுதலே. அஃதி

§ 'சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றமையால், சார்புணர்வு தானேயாமுமாம்-சார்பு, கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப், படவருவ தில்லையினைப் பற்று'' என்பது திருக்கலிற்றுப்பாடியார்.

* முன்-இனி, † அவ்வுணர்வொழுக்கம் - மெய்பொருளையுணர்தலும் இருவகைப்பற்று மறவொழுகுதலுமாம்.

‡ சார்பு என்றுசிறப்புடனுள் முன்னது எல்லாப்பொருட்கும் சார்பாய செம்பொருளை (பரப்பிரஹ்மத்தை)யும், பின்னது உயிரைச்சார்தலை

* இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மன வொருக்கம், தாரணை, தியானம், சமாதி யென எண்வகைப்படும். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும்; யோகநூல்களுட்காண்க. மற்றச்சார்தாரணை இயையும். சாதக்கடவனவாய் நின்ற தன்பங்களாவன: பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அனவின்றி † மீட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இதந்த உடம்புகளான் அனுபவித்தனவும், பிறந்தவுடம்பான் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னுமனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன. ‡ அவை வினைக் நின்முன்னிருன்போல ஞானயோகங்களின் முன்னர்க்கெடுதலான் ' அழித்தச் சார்தரா ' என்றார். இதனை ஆருகதர் உவர்ப்பென்ப. § பிறப்பித்

யுடைய இருவகைப்பற்றையுமுணர்த்தினமையின், தொழிலாகுபெயராம். சார்பு - புல்லிருந்தி பெற்றதொழிற்பெயர்.

* இயமம்—பொய்கொலை களவே காமம் பொருணசை, யிவ்வகையைந்து மடக்கிய நியமம்.

நியமம்.—பெற்றதற் குவத்தல் பிழம்புளி யுலர்த்தல், கற்பன கற்றல் கழிகேள் தூய்மை, பூசனைப் பெரும்பய மாசாற் களிததலொடு, நயனுடை மரபி னியம மைந்தே.

ஆசனம்.—நிற்ற லிருத்தல் கிடத்தல் டேத்தலென், றெறுத்த நான்கி னெல்லா நிலைமையோ, டின்பம் பயக்குஞ் சமய முதலிய,வந்தமில் சிறப்பி னாசன மாகும்.

பிராணயாமம்.—உள்ளியொடு புணர்ந்த விருவகை வளியுள், சந்தமிய க்கந் தடுப்பது வளிநிலை.

பிரத்தியாகாரம்.—பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாம, லொருவழிப் படுப்பது தொகைநிலைப் புறனே.

தாரணை.—மனத்தினை யொருவழி நிறுப்பது பொறையே.

தியானம்.—நிறுத்திய வம்மன நிலைநிரி யாமற்,குறித்தபொருளொடு கொளுத்த னிலையே.

சமாதி.—ஆன்வனம் குறித்த வம்மூதற் பொருளொடு,தான்பிறனுகர்த் தகையது சமாதி.

இவை தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் " அறுவகைப்பட்ட " என்னுஞ் சூத்திரத்தினுரையில் சேனாவரையர் காட்டிய வுரைச் சூத்திரங்கள்.

† சம்பாதிக்கப்பட்ட வினைப்பயனுக்குச் சஞ்சிதமென்றும், அனுபவிக்கும் வினைப்பயனுக்குப் பிராரத்தமென்றும், சம்பாதிக்கும் வினைப் பயனுக்கு ஆகாமியமென்றும் பெயராம்.

‡ அவை - அத்தன்பங்கள்.

§ கடவுள் வாழ்த்து மென்ற சூத்திரவுரையில் " கல்வினையும், பிறத்தற் கேதுவானான்" என்று கூறப்பட்டிருத்தலு மிங்கறியத்தக்கதாம்.

குக் காரணமாகலான், நல்வினைப் பயனும் 'நோய்' எனப்பட்டது. மேல் * மூன்றுபாயத்தானும் பரம்பொருளே யுணரப் பிறப்பறும் என்றார். அஃது அறம் வழிக்கிடந்த தன்பங்களெல்லாம் என்செய்யுமென்னுங் கடாவை யாகஞ்சித்தது. அவை ஞானயோகங்களின் முதிர்ச்சி யுடைய வுயிரைச் சாரமாட்டாமையானும் வேறு சார்பின்மையானுஞ் செட்டுவிடுமென்பது இதனாற் கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்) (ஒருவன்) சார்பு-(எல்லாப் பொருள்களுக்கும்) சார்பாகிய அச்சம்பொருளே, உணர்ந்து - அறிந்து, சார்பு - (யானெனதென்னும்) இருவகைப் பற்றுக்களும், கெட-முற்றுங்கெடும்படி, ஒழுகின்-நடக்க வல்லவனுயின், சார்தரும் - (மூன் அவனை) அடைதற் குரியனவாய் நின்ற, நோய்-துன்பங்கள், அழித்து-(அவ்வுணர்வையும் ஒழுக்கத்தையும்) அழித்து, மற்றுச்சார்தரா - பின் அடையமாட்டாவாம், (எ-று).

சாருமிடத்தையும் சார்வனவற்றையும் ஆகுபெயரால் 'சார்பு' என்று கூறினர். இங்கு ஒழுக்கமென்றது யோகவழிநடத்தலே. அஃதி இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என வெண்வகைப்படும்; அவற்றின் விரிவெல்லாம் இங்குக்கூறினால் பெருகும்; அவற்றை யோகநூல்களுள் கண்டு கொள்க. மற்று என்பது சார்தரா என்பதனோடு தொடர்ந்து நின்றது. அடையக்கடவனவாய் நின்ற துன்பங்களாவன: பிறவி அநாதியாய் வருதலால் உயிரினால் அளவில்லாமல் சம்பாதிக்கப் பட்டுள்ள இருவகை வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளால் அனுபவித்தனவும், பிறந்தவுடம்பால் மொண்டு நின்றனவும், நீங்கப் பின்னும் (இனிவரும் உடம்புகளால்) அனுபவிக்கக்கடவனவாய்க் கிடந்தனவாம். அவை வினைகின்முன் இருள்கெடுதல்போல ஞானயோகங்களின் முன்னே கெடுதலால் 'அழித்தச்சார்தரா' என்றார். இச்சார்புகெடவொழுகுதலைச் சமணர் உவர்ப்பு என்பர். பிறவிக்குக்காரணமாதலால் நல்வினைப்பயனும் 'நோய்' எனப்பட்டது. மூன் மூன்று சாதனங்களாலும் பரம்பொருளே அறியப் பிறப்பறும் என்றார். அப்பிறப்பு அறுமிடத்துப் பின்வரக்கிடந்த தன்பங்களெல்லாம் யாதுசெய்யு மென்னும் வினாவை யெழுப்பிக்கொண்டு அத்துன்பங்களெல்லாம் ஞானயோகங்களின் முதிர்ச்சியையுடைய உயிரைச் சாரமாட்டாமையாலும் வேறுசாருமிடமில்லாமையாலும் கெட்டுவிடுமென்பது இதனால் சொல்லப்பட்டது.

(க-து.)உண்மைப்பொருளே யறிந்து பற்றறவொழுகுபவனைத் துன்பங்கள் சாராவாம் என்பது.

9. He,who so lives as to know Him who is the support of all things and abandon all desire, will be freed from the evils which would otherwise cleave to him and destroy his efforts after absorption (by entangling him again in the net of desire).

கo. காமம் வெகுளி மயக்க ‡ மீவைமூன்ற
ஞமங் கேடக்கேடு நோய்.

பரி:—(இ-ள்.) ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு, வெறுப்பு, அவிச்சையென்னும் இக்குற்றங்கண் மூன்றனுடையபெயருங் கூடக் கெடுதலான், அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உளவாகா, (எ-று).

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிது வேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட்செல்லும் ஆசையும், $ அதுபற்றி அதன் மறுதலைக்கட்செல்லுங் கோபமுமென வடநூலார் † குற்றமைந்தென்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும், அவாவதல் ஆசைக்கண்ணு மடங்குதலான் மூன்று என்றார். ¶ இடையாருரை ஞானயோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றுங் காட்டத்தீமுன்னர்ப் பஞ்சுத்தழ்போலு மாகலின், அம்மிகுதி தோன்ற 'இவை மூன்ற ஞமன்கெட' என்றார். இழிவு நெறும்மை விகாரத்தாற் றொக்கது. கெடவென்பது எச்சத்திரிவு. நோயெ

‡ காமம் வெகுளி மயக்கங்களேயன்றி, அவற்றின் பெயரும் கோம்க்கேதுவாதல்பற்றி, 'இவை மூன்ற ஞம (மு) ங் கெடக்கெடு நோய்' என்றார். காமம் வெகுளி மயக்கமென்னு மெண்ணும் நோய்க் கேதுவாமென்பது கருத்து. "நினைவே பந்த நினைவொழியி னிலைமை யான முத்தியுமாம்" என்று குமாரதேவர் கூறுவதீண்டு ன்குணர்தற் பாலதாம்.

$ அப்பொருளை யடைவதற்கு விரோதமாயிருப்பவர்மீ தண்டாகும் கோபமும்.

† இக்குற்றமைந்தும் பஞ்சக்கிலேசமெனப்படும். அவை அவித்தை, அஸ்மிதை, இராகம், தவேஷம், அபினிவேசம் என்பனவாம். (1)அது வல்லாததன் கண் (ஆத்மாவல்லாத வுடம்பினிடத்து) அது (ஆத்மா) வென்னும் ஞானம் அவித்தை; (2) சத்தவகுணம் ஆத்மா என்னுமிவ்விரண்டிலும் நானென்னும் ஒருமையபிமானம் அஸ்மிதை; (3) சுகத்தை யறிந்தவனுக்குச் சுகஸ்மரண பூர்வகமாகச் சுகசாதனங்களிலுண்டாகும் இச்சை இராகம்; (4) துக்கத்தை யறிந்தவனுக்குத் துக்கஸ்மரண பூர்வகமாக அதன் சாதனங்களின் மிக்தை துவேஷம்; (5) பூர்வஜன்மத்தில் அநுபவித்த மரண துக்கங்களின் வாசனைநிடத்திலுல் நிருமி முதல் வித்தான வரையிலுமுள்ள சர்வப்பிராணிகட்கும் ஒவ்வொருநாளும் சரீராதிகட்கும் எனக்கும் வியோகம் (பிரிவு) வேண்டாமெனக்காரணமின்றி தான் இருப்பதே, இல்லாமற் போவதே என்றுண்டாகின்ற இருவகைத்தாயவிலேசம் அபினிவேசம் என்றைவகைக்கிலேசங்களுக் கிலக்கணம் சர்வதரிசனசங்கிரகத்தின் பதஞ்சலிதரிசனம் கூறுகின்றது.

¶ "எறியாவெரி வருகானிடை யெரியாதன வெவைதாம், அறியாவறி வுடையோர்களு மறிவாது மிதுபோல், குறியாலுரு குணனூனமெ

என்பது சாதியொருமை. தரணமய I குற்றத்தினைக் கெடுத்தார் காரிய மாய வினைகளைச் செய்தாமையின், ¶ அவர்க்கு யாதானும் துன்பங்களு மில்லையென்பது இதனுள் உரைப்பட்டது. ‡ மூன்றென்ற † துன்பங்களும் நெஞ்சாற்சுடல துன்பங்களும் இவையதன் மெய்யுணர்வின் பயனுதலின், இனை யிரண்டினையுமே இவ்வதிகாரத்த வாயின. இவ்வாற்றானே மெய் யுணர்த்தற்கு மிறப்ப எடுத்த வுடம்பும் அதனொண்ட வினைப்பயன்க ளுமே யென்பது பெற்றாம்.

நேஎர்:—(இ-ள்.) (ஞான யோகங்களின் மூழ்ச்சி யுண்டாயவர்க்கு) காமம் வெகுளி மயக்கம்-விருப்பு வெறப்பு அஞ்ஞானம் என்னும், இவை மூன்றன்-இக்குற்றங்கள் மூன்றனது, காமம்-பெயரும் (கூட), கெட - கெடுதலால், சோய்-(அக்காமவெகுளிமயக்கங்களின் காரியங்களாகிய) வினைப்பயன்கள், கெடும்-உண்டாதலில்லை, (எ-று).

அரதியான அஞ்ஞானமும், அவ்வஞ்ஞானம்பற்றி உடம்பை யானெனமதிக்கும் அகங்காரமும், அவ்வகங்காரம்பற்றினனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும், அவ்வவாபற்றி அப்பொருளினிடத்துச் செல்லும் ஆசையும், அவ்வாசைபற்றி அதனை மறுதலையிடத்துச் செல்லும் கோபமும் என வடநூலார் குற்றம் ஐந்தென்றார். இவர்(ராயஞர்) அவ்வைந்தனுள், அகங்காரம் அஞ்ஞானத்தினும் அவாவுதல் ஆசையினும் அடங்குதலால்(காமவெகுளிமயக்கமென)மூன்றுஎன்றார். இடையறுதஞானயோகங்களின் மூன்றே இக்குற்றங்கள் மூன்றும் காட்டுத்தி முன்னே பஞ்சின் தொடர்தனி கெடுவதுபோலக் கெடுவதாகலின், அம் மிருதிதோன்ற' இவை மூன்றனுமக்கெடு' என்றார். காமமும் என்னு மிழிவுறைப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது.கெடுதலால் என்னும்(செயினென்னும் வாய்பாட்டு)வினை யெச்சம் கெட என்னும் (செயவென்னும் வாய்பாட்டு) வினையெச்ச மாகத் திரிந்து நின்றது. (வருமொழி நோக்காத பண்மைப்பொருளுணர்த்தலின்) நோய் என்பது சாதியொருமைப் பெயர். காரணமாகிய (காமம் வெகுளி

யனலெனைய விடுமேல்,பொறியால்வரு வினையானவை பொடியாமிதோர் பொருளே'' என்பது பகவத்கீதை.

‡ அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய விருவினைகளை என்றும் பாடமுண்டு.

¶ ''வினைப்பயனை வெல்வதற்கு வேறு மூதலா, மனைத்தாய நூலகத்தி மில்லை - தினைப்புனைதேனைத், தன்னுறவு தான்வாழ் கவைபடே னெஞ்சே மெய், வின்னுறவாச்சில்லை வீறி'' என்பது சல்வழி.


§ ''பஞ்சினை மூழித் திப்பொழ் பலசன்ம வினைத்தாய், சஞ்சித மென்னை சூளாச் சுடுமட்டி னெளிவாரு முருகும், பிஞ்சினை பிரசத் தத்தின் வினையறு பவித தத் திரும்'' என்பது மேலவ்வி சுவரித்தம்.

† துன்பங்கள் - துன்பத்திற்குக் காரணமாகிய வினை.

மயக்கமென்னும்) குற்றங்களைக் கெடுத்தார் (அவற்றின்) காரியமாகிய (கள்வினை தீவினையென்னும்) வினைகளைச் செய்வானேயால் அவர்க்கு வாய்ட வனவாகிய துன்பங்களும் இல்லையென்பது இதனுல் சொல்லப்பட்டது. முன்கிடந்த முன்பங்களும் மேல்வரக் கடவனவாகிய துன்பங்களும் இல் லாமற்போதல் மெய்யுணர்வின் பயனுதலால், இவ்விரண்டு குறளும் இவ் வதிகாரத்தில் சொல்லப்பட்டன. இவ்விதத்தாலே மெய்யுணர்ந்தார்க்கு (மிஞ்சி) நிற்பன எடுத்த உடம்பும் அவ்வுடம்பு கொண்ட வினைப்பயன்களு மே யென்பது பெற்றும்.

(க - து.) மெய்யுணர்ந்தார்க்கு முக்குற்றங்களும் ஒழிதலின், அவற்றால் வரும் துன்பங்களில்லை என்பது.

10. If the very names of these three things, desire anger, and confusion of mind, be destroyed, then will also perish the evils which flow from them.



பதின்மூன்றுவது அதிகாரம்.

† அவாவறுத்தல்—*The destruction of desire.*

பரி:—அஃதாவது ‡ முன்னும் பின்னும் ¶ வினைத்தொடர் பறுத் தார்க்கு நவேநின்ற உடம்பும் அதுகொண்ட § வினைப்பயன்களும் நின்றமையின், * வேதனைபற்றி ஓரோவழித் துறக்கப்பட்ட புலன்கள் மேற் பழையபயிற்சி வயத்தான் நிகழ்வு செல்லுமன்றே, அந்நிகழ்வும்

† எனக்கிது வேண்டுமென்னும் விருப்பம் அவா எனப்படும்.

‡ முன்னும் பின்னுமாகிய வினைத்தொடர்பு - சஞ்சித ஆகாமியம். சென்ற சரீரத்திற் செய்யப்பட்டுப் பயனுக்கு வாராதுள்ள வினை சஞ்சித மாம்; எதிர்காலத்து(வர்த்தமான சரீரத்திற் செய்யப்படும்)வினை ஆகாமிய மாம்.

¶ நிடனூனியர் அநிடனூனியர் என்னும் இருவரும் இவர் அநிட னூனியராவர். பாதமாகாமூர தழ தாகரிமையைத் தந்த காடுசென்ற கடோவஞ்செய்து, ஞானயோகமுடையவராக வொழுகி, இறக்குங் காலத் தில், தம் வளர்த்துவந்த மகனென்னுமபற்றி வருந்தமுற்று, இனி மீத னோர் பிறப்பற்றவர் யாவரென்னுஞ் சிந்தனையே டிருந்தமையால் மாஞ்ய்ப் பிறந்தானென்ற விருத்தாந்தம் முதலியன உறவதும் பிறவு மிங்கு ஈன் னுணர்தற் பாலனவாம்.

§ வினைப்பயன்கள்—பிராரத்த வினையின் பயனுகிய சுகதுக்கங்கள். சென்ற சரீரத்திற் செய்யப்பட்டு வர்த்தமான (நிகழ்கால) சரீரத்திற் பெற்றவினை வினை நோசசிலை.

* வேதனை பசி - தண்மை, உவட்டு, உறையுள் முதலியன தக்கன வாகச் சேட்டிப்பதுமையா னுண்டாகுந் துன்பத்தினுல்.

அவிசைபெனப் பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாத மெய்ப்பொருணூர்வான் அறுத்தல். † அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

நேரி:—அஃதாவது முன்னும் பின்னும் வினைத்தொடர்பு அறத் தார்க்கு எதிர்ந்த உடம்பும் அவ்வுடம்புகொண்ட வினைப்பயன்களும் நின்ற மையால், வருத்தம் பற்றி ஒரோவிடத்துத் துறக்கப்பட்ட சப்த முதலிய விஷயங்களின் மீது பழைய பழக்க வசத்தினால் நினைவு செல்லுமல்லவா, அச்சினையும் அஞ்ஞானம் போலப் பிறவிக்குக்காரணமாகலால், அச்சினைவை இடைவிடாத மெய்ப்பொருணூர்வால் அறத்தலாம். அதிகாரமுறைமை யும் இதனாலே விளக்கும்.

க. அவாவேன்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

பரி:—(இ - ள்.) எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைக்கும் வித்து அவாவென்று சொல்லுவர் நூலோர், (எ - று).

‡ உடம்பு நீங்கிப்போங்காலத்து அதற்த வினையும், ¶ அது காட்டுங்

† மெய்யுணர்தல் அவாவறுத்தற்குக் காரணமாகலின் அக்காரணகாரிய விலைபு சோல்லி, மெய்யுணர்தற்குப் பின் அவாவறுத்தல் வைக்கப்பட்டது.

‡ உடம்பு நீங்கிப்போங் காலத்து (மரணமடையுங் தருணத்தில்) அதற்த வினையும் (மேல்வரும் பிறவிக்கு அதற்தாயுள்ள வினையும்), அது காட்டுங் கதி மிசித்தங்களும் (அவ்வினையானது உயிர் சென்றடையும்படி அவ்வுயிர்க்குத் காண்பிக்கின்ற மக்கட்பிறப்பு முதலியனவும், அம்மக்கட்பிற ப்பு முதலியவற்றை படைவதற்குரிய காரணமும்), அக்கதிக்கண் அவாவும் (அம்மக்கட் பிறப்பு முதலியவற்றில் வீருப்பமும்) உயிரின் கண் முறை வே வக்தநிற்ப (உயிரினிடத்தில்லிமமாக ஒன்றன்பின் ஒன்றுகலந்த தோன்ற அஃதாவது முன்னே அதற்த வினையும் அதன்பின் அதைகாட்டுங் கதிமித்தங்களும், அப்பால் அக்கதிக்கண் அவாவும் வக்துண்டாக), அறி வை மோகம் மறைப்ப (தெளிவுண்டாகா வண்ணம் அறிவை மோக மென் னும் விபரீத புத்தி நடக்க), அவ்வுயிரை (மோகத்தால் நடக்கப்பட்ட வுயிரை) அவ்வவை அக்கதிக்கட்கொண்டே செல்லுமாலொன் (அவ்விருப்பமானது அப் பிறப்பினிமுத்தக் கொண்டுபோகு மாதலினால்), அதனை(அவாவை) 'பிறப் பீனும்வித்து'என்ற சொல்லினார். "ஆமு னிச்சையே மேலுமே னும்பிறப் பனிக்குமித் தெனவெஞ்சே" என்னும் வையாபிய எதசச் செய்யுளி னாலில் நெம்பாலுமின் "உடல்விட்டே உயிர் நீங்குகால் யாதோர் அவாத்தொன்றிற்ற; அவ்வாவின் வழித்தாய்ச் சென்ற உயிர் பிறந்த லின், அவா பிறப்பித்குவித்தெனப்பட்டது" என்ற உரியிருந்தது மிக்கறி யத் தக்கதாம்.

¶ அது காட்டுங்கதி மிசித்தங்களும் என்பதற்குப்பிரியாக அது காட் டுங் கதியும் என்றும் பாடமுண்டு.

கதி சிமித்தங்களும், அக்கதிக்கண் அவாவும் 'உயிரின்கண் முறையே வந்து திப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட் கொண்டு செல்லுமாகலான், அதனைப் 'பிறப்பீனும் வித்து'என்றும், † கதி வயத்தாலுனதாய அவ்வுயிர் வேறுபாட்டினும் ‡ அவை தன்மை திரியும் ¶ உற்சர்ப்பிணி § அவசர்ப்பிணி யென்னுங் கால வேறுபாட்டினும், அது வித்தாதல் வேறுபடாமையின் 'எல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும்' என்றும், § இஃதெல்லாச் சமயங்கட்கும் ஒத்தலான் 'என்ப'என்றுங் கூறினர். இதனுற் பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) எல்லாவுயிர்க்கும் - உயிர்களெல்லாவற்றிற்கும், எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், தவாஅ -கெடாது வருகின்ற, பிறப்பு - பிறவியை, ஈனும், - உண்டாக்கும், வித்து—காரணம், அவா-அவாவாகும், என்ப-என்று (நூலோர்) சொல்லுவர், (எ - று).

உடம்பு நீங்கிப் போங்காலத்தில் அதித்தலினையும், அவ்வினை காட்டுங் கதிசிமித்தங்களும், அக்கதியிலவாவும் உயிரினிடத்து முறையே வந்து தோன்ற, அறிவை மோகமானது மறைக்க, அவ்வுயிரை அவ்வவாவானது அக்கதியினிடத்தக்கொண்டு செல்லுமாதலால், அவ்வவாவைப்'பிறப்பீனும் வித்து' என்றும், கதிவசத்தால் உளதாகிய அவ்வுயிரின் வேறுபாட்டினும், அக்கதிகளின் தன்மை மாறுபடும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி யென்னுங்காலவேறுபாட்டினும், அவ்வவா காரணமாதல் வேறுபடாமையால்'எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும்' எனறும், இஃது எல்லாச்சமயங்களுக்கும் ஒத்தலால் 'என்ப' என்றும் கூறினர். இதனால் பிறப்பிற்கு அவா காரணமாதல் சொல்லப்பட்டது.

(க - து.) பிறப்பிற்குக் காரணம் அவாவாம் என்பது.

1. The wise say that the seed, which produces unceasing births, at all times, to all creatures, is desire

உ. வெண்டேங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

† ஒரு தன்மைத்தாயிருக்கும் உயிர் பிறப்பின் வேறுபாட்டினால் மக்கள் முதலியனவாகச் சொல்லப்படுதல் பற்றிக் 'கதி(பிறப்பு) வயத்தா (வசத்தா) னுனதாய அவ்வுயிர் வேறுபாட்டினும்' என்ற கூறப்பட்டது.

‡ அவை தன்மைதிரியும்-அக்கதி (பிறப்புக்)களி னியல்புவேறுபடும்.

¶ உலகம் வாழ்தான் போக முதலியவற்றால் வளர் பிறைபோலப் பெருகுங்காலம் உற்சர்ப்பிணி எனப்படும்.

§ உலகம் வாழ்தான் போக முதலியவற்றால் தேய்பிறைபோலச் சுருங்குங் காலம் அவசர்ப்பிணி எனப்படும்.

§ இஃது - அவா பிறப்பிற்கு வித்தாதல்.

பரி:—(இ-ன்.) பிறப்புத் துன்பமாதல் அறிந்தவன் ஒன்றையேனும் பிறவாமையை வேண்டும்; அப்பிறவாமை தான் ஒருபொருளையும் அவாவாமையை வேண்ட அவனுக்குத் தானேயுண்டாம், (எ - று).

† அறநிலைத் தான் பிறப்புப் பினி ‡ மூப்பு இறப்புக்களாற்றன்ப மூற்ற வருகின்றமையை உணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின் கண்ணே யாவின் பிறவாமை வேண்டும் என்றும், ஈண்டைச் செற்றின்பக்கருதி ஒருபொருளை அவின் அது பிறப்பீனும் விச்சாப் பின்னும் முடிவில் லாத துன்பமே விளைத்தலின், 'அது வேண்டாமை வேண்டவரும்' என் றான் உரிஞர். பிறவாமையின் தெப்புக் கூறிப் பின் அது வருவழி கூறத் தொடங்குகின்றமையின் ¶ மற்ற வினைமாற்றின் கண் வந்தது.

தேளி:—(இ - ன்.) (பிறப்புத் துன்பமயமாயிருத்தலை யறிந்தவன்) வேண்டுங்கால் - (ஒன்றை) வேண்டினால், பிறவாமை - பிறவாதிருத்தலை, வேண்டும்—விரும்புவான், அது - அப்பிறவாமையானது, வேண்டாமை - (தான் ஒருபொருளையும்) விரும்பாமையை, வேண்ட—விரும்ப, வரும் - (அவனுக்குத் தானே) உண்டாம், (எ - று).

அறநிலைத் தான் பிறப்புப் பினிமூப்பு இறப்புக்களால்துன்பமடை த்த வருகின்றமையை அறிந்தவனுக்கு ஆசை இன்பத்திலே யாதலால் பிற வாமை வேண்டும் என்றும், இவ்வுலகத்தைச் செற்றின்பத்தைக்குறித்த ஒருபொருளைவிரும்பினால் அவ்விருப்பம்பிறவியைத்தருகாரணமாய்ப்பின் னும் முடிவில்லாத துன்பத்தையே உண்டாக்குதலால் 'அது வேண்டாமை வேண்டவரும்' என்றும் சொல்லினுர். பிறவாமையின் தெப்பத்தைச்சொல் லிப் பின்னர் அப்பிறவாமை வரும் வழியைச்சொல்ல வாரம்பித்தலால் மற்ற வினைமாற்றப்பொருளில் வந்தது.

(க - து.) பிறப்புத் துன்பந்தருவதென் றறிந்தவன், அதனைப் பெறாமைக்குரிய காரணத்தை விரும்பவேண்டும்.

2. If any thing be desired, freedom from births should be desired;that freedom from births will be attained by desiring to be without desire.

---

† "துன்பம் தொன்றி யெவரும் தளர்தின் கே னாய்த்தனிர்சே, யின்பம் தேட வியற்கை" என்பது மகாபுராணம்.

‡ மூப்பு - நரைத்தனம்.

¶ மற்றென்று விடைச்சொல் பிறவாமையென்னும் வினையைப் பிற த்தல் (உண்டாதல்) என்னும் வினையாக மாற்றினமையின், வினைமாற்றப் பொருளையுற்றது. பிறவாமை பிறத்தல்- பிறவாதிருத்தல்.

... கூ. † வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

பரி:—(இ - ள்.) ஒருபொருளையும் அவாவாமையை ஒக்கும்விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின் கண் இல்லை; இனி அவ்வளவே அன்று; கேட்கப்படுகின்ற துறக்கத்தின் கண்ணும் ‡ அதனை ஒப்ப தில்லை, (எ - று).

¶ மக்கள் செல்வமும், தேவர் செல்வமும் மேன்மேல் நோக்கக் கீழ்க் கீழாதலுடைமையின், தனக்கு மேலில்லாத வேண்டாமையை 'விழுச்செல்வம்' என்றும், அதற்கு § இரண்டிலெதனுமொப்பதின்மையின் 'அஃதொப்பதில்' என்றுங்கூறினர். ஆகம வளவைபோலாதகாட்சியளவையான் எல்லாரானுந் தெளியப்படுதலின், மக்கள் செல்வம்வருத்தி முற்கூறப்பட்டது. பிறவாமைக்கு வழியாமெனவும், விழுச்செல்வமாமெனவும், வேண்டாமையின் சிறப்பு இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி:— (இ - ன்.) வேண்டாமையன்ன - (ஒரு பொருளையும்) விரும்பாமையைபொத்திருக்கும், விழுச்செல்வம்-மேலாகியசெல்வமானது, ஈண்டு-(காணப்படுகிற)இவ்வுலகத்தில், இல்லை—,(இனி அவ்வளவேயல்ல), ஆண்டும் - (கேட்கப்படுகிற) சுவர்க்கத்திலும், அஃதொப்பது - அச்செல்வத்தைபொத்திருப்பது, இல் - இல்லை, (எ - று).

மக்களது செல்வமும் தேவரது செல்வமும் மேல்மேல் நோக்கக் கீழ்க் கீழாதலுடைமையால், தனக்குமேலில்லாத வேண்டாமையை 'விழுச்செல்வம்' என்றும், அச்செல்வத்திற்கு இரண்டுலகத்தினிலும்ஒப்பதில்லாமையின் 'அஃதொப்பதில்' என்றும் சொல்லினார். ஆகமப்பிரமாணத்தாலறியப்படுவதுபோலாதலால் பிரத்தியட்சப்பிரமாணத்தால் எல்லாராலும் தெளிந்தறியப்பட்டிருத்தலால், 'விழுச்செல்வ மீண்டில்லை' என மக்களது செல்வம் பிரித்து முன்னே சொல்லப்பட்டது. இவ்விரண்டு பாட்டாலும் வேண்டாமை பிறவாமைக்கு வழியாமெனவும், மேலாகிய செல்வமாமெனவும், அவ் வேண்டாமையின் சிறப்புச் சொல்லப்பட்டது.

(கூ - று.) அவாவறுத்தலுக் கொப்பாய செல்வம் எவ்வுலகத்தும் இல்லை என்பது.

---

† "ஆசை யறுமின்க ளாசை யறுமின்க, ளீசனே டாயினு மாசை யறுமின்க, ளாசை படப்பட வாகும் பெருந்திய, ராசை விடவிட வாகர்த் மாமே" என்பது திருமந்திரம்.

‡ அதனை-வேண்டாமை யென்னுஞ்செல்வத்தை.

¶ மக்களுக்கே அரசனது செல்வத்தை நோக்கக் குடிகளது செல்வம் கீழாதலும், தேவர்களுக்கே பிரமனது செல்வத்தை நோக்க இந்திரனது செல்வம் கீழாதலும் பிறவு மிருப்பத்தாரக.

§ இரண்டெனு - மண்ணுலகு விண்ணுலகு.

3. There is in this world no excellence equal to freedom from desire; and even in that world, there is nothing like it.

ச. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

பரி:—(இ-ள்.) ஒருவர்க்கு விடேன்று சொல்லப்படுவது அவாவில்லாமை; அவ்வவா வில்லாமைதான் மெய்ம்மையை வேண்டத் தானே உண்டாம், (எ-று).

† வீடாவது உயிர் அவிச்சை முதலிய மாசு நீங்குதலாகலின், அதனைத் 'தூஉய்மை' என்றும், ‡ காரியத்தைக் காரணமாக உபசரித்துத் 'தூஉய்மை யென்ப தவாவின்மை' என்றும், வாய்மையையுடைய பரத்தை ஆதபெயரான் 'வாஅய்மை' என்றல் கூறினர். ¶ மற்ற மேலையதி

† வீடாவது உயிரானது அவிச்சை முதலிய குற்றங்களினின்றும் நீங்குதலால், அவ்வீட்டைத் தூய்மையென்று கூறினர். தூய்மையுடைய முத்தியைத் தூய்மை யென்றது பண்பாகு பெயராம்.

‡ வீடு காரியமாயும் அவாவறுத்தல் காரணமாயு மிருத்தலால் (வீடாகிய) காரியத்தை (அவாவறுத்தலாகிய) காரணமாக வுபசரித்துத் 'தூஉய்மை யென்ப தவாவின்மை' என்ற கூறப்பட்டது.

பிறப்பிற்கேதுவாகிய பேதைமையைப் 'பிறப்பென்னும் பேதைமை' என்றற்போலத் தூய்மைக்கு (வீட்டிற்கு) ஏதுவாகிய அவாவின்மையைத் 'தூஉய்மை யென்ப தவாவின்மை' என்ற கூறினமையின், இது காரியகாரணமாக வுபசார வழக்காம்.

'காரணத்தைக் காரியமாக வுபசரித்துத் தூஉய்மையென்ப தவாவின்மையென்றும்' என்றும்,பாடமுண்டு. அப்பாடத்தின்படி தூய்மை(முத்தி) காரணமாயும் அவாவின்மை காரியமாயு மிருத்தல் வேண்டும். [அஃதாவது வீட்டினுல் அவாவின்மை யுண்டாதல்வேண்டு மென்பது.] அவ்வாறில்லை யென்பது 'அவாவறுத்தல் வீட்டிற்குப் பரம்பரையானன்றி நேரே யேது வென்பதாகும்' என்ற மேல பரிமேலழகர் கூறியிருத்தலினுலும் உணர்தலினாலும்; விளக்கமே, அது பாடமன்றென்க.

¶ மற்றென்னு மிடைச்சொல் அவாவின்மை யென்னும் வினையை (அவாவில்லாமை யென்னும் குறிப்புத் தொழிற்பெயரை) (அவாவின்மை) உண்மை யென்னும் வினையாக மாற்றினமையின், வினைமாற்றப்பொருளாயிற்று. அவாவின்மை யுண்மை - அவாவின்மை யுண்டாதல்.

'தூஉய்மையென்ப தவாவின்மை (முத்திக்குக் காரணம் அவாவின்மை)' என்ற அதன் நெறியை முன்னர்க்கூறிப் பின்னர் 'அது ஞாஅய்மை வேண்டுவரும்(அவாவின்மை பரம்பொருளே இடைவிடாதபாவிக்கவரும்)' என்ற அவ்வாவின்மை வரும் வழியைக் கூறத்தொடங்குகின்றமையின்,

போல வினைமாற்றின்கண் வந்தது. வேண்டுதல் —இடைவிடாது பாவித்தல். அவாவறுத்தல் வீட்டிற்குப் † பரம்பரையானன்றி நேரே யேது வென்பதாகும், ‡ அது வரும்வழியும் இதனுற் கூறப்பட்டன.

தெளி:—(இ-ன்.) தூஉய்மையென்பது - (ஒருவர்க்கு) முத்தியென்ற சொல்லப்படுவது, அவாவின்மை - ஆசையில்லாமையாம், அது-அவ்வாசை யில்லாமை, (தான்), வாஅய்மை-மெய்ம்மையை, வேண்ட-விரும்ப, வரும்-(தானே) உண்டாம், (எ-று).

முத்தியாவது உயிர் அஞ்ஞானம் அகங்காரம் அவா ஆசை கோபம் என்னும் ஐவகை மாசுக்களி (குற்றக்களி) னின்றும் நீங்குவதாகலால், அம்முத்தியைத் 'தூஉய்மை' என்றும், முத்தியென்னுங் காரியத்தை அவா வின்மையென்னுங்காரணமாக உபசரித்துத் 'தூஉய்மை யெண்பதவாவின் மை' என்றும், வாய்மையையுடைய பரம்பொருளைப் பண்பாகுபெயரால் 'வாஅய்மை'என்றும் சொல்லினர். மற்று மேற்கூறியதுபோல வினைமாற் றுப்பொருளில் வந்தது.வேண்டுதல்-பரம்பொருளையொற்றுமையுற இடை விடாது பாவித்தல். அவாவறுத்தல் முத்திக்கு ஒன்றன் வாயிலாக வல்லா மல் நேரே காரணமென்பதும், அவ்வவாவறுத்தல் வரும் வழியும் இதனுல் சொல்லப்பட்டன. வாய்மை-மெய்ம்மை.

(க-து.) முத்தியைத்தரும் அவாவின்மையானது பரம்பொ ருளை யொற்றுமையுற இடைவிடாது பாவித்தலா லுண்டாகும்.

மற்றென்னு மிடைச்சொல் மேலேயதுபோல (வேண்டுங்கால் வேண்டும் என்னும் இவ்வதிகாரத்தின் 2-வது குறளிலுள்ள மற்றென்னு மிடைச் சொல்போல) வினைமாற்றின்கண் வந்தது என்பதாம்.

† பரம்பரை - ஒன்றைப் பின்பற்றி யிருப்பது.

‡ அது வரும்வழியும் - (முத்தியுறுதற்கு நேர்சாதனமாய) அவாவின் மை யுண்டாகும்வழி பரம்பொருளை யொற்றுமையுற இடைவிடாது பாவி த்தலென்பதும்.

சிவலோகம்அல்லது அகம்பிரஹ்மாஸ்மி அல்லது பிரமலோகமென்ற பரம்பொருளை யுபேதமாக நிச்சயாப்பியாசஞ் செய்தலால் மனம் பலமு கப்பட் டோடாதபூரணமாக ஒருமுகமாம்; அஃதொருமுகமாய விடத்து, சத்துவகுணத்தால் வைராக்கிய மயமான சாந்தியிருந்தியுண்டாம் ; அஃது உண்டாயபோது சிவலோகம் அல்லது பிரஹ்மலோகம் பூரணமாகவினங்கும்; அது வினங்கியபோது சப்தாதி வாயிலாக வவ்வப்போதுண்டாகும் ஆசாபாசம் மிருவற்பமாகத் தோன்றும் ; அது தோன்றச் சப்தாதி விஷயங்களிலுள்ள அவாவறும்; அஃதறவே, வீடு உள்ளங்கைநெல்லிக்கனிபோல் வினங்கும் என்பது ஈண்டோர்ந்தபாற்றும்.

"அசத்தி லெம்மட்டே டம்மட்டும் பாமுக மாதினு லம்மட்டும் நிச த்தி லுள்ளிப் பார்வையா யிப்படி நிச்சயப் பழக்கத்தால், வசத்தி லுள் ளன வின்றதென் மத்திர வடிவமா யீடின்மைத்தா, சசத்த தேசத்தி லிருக் கினு மாசுக்கட் கடல்வடி வாவரே" என்பது கைவல்லிய ரவதீதம்.

4. Purity of mind consists in freedom from desire; and that freedom from desire is the fruit of the love of truth.

இ. அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றக வற்ற திலர்.

பரி:—(இ-ள்.) பிறவி அற்றவரென்று சொல்லப்படுவோர் அதற்கு நேரே யேதுவாகிய அவா அற்றவர்கள் † பிற ஏதுக்களற்று அஃதொன்றும் அறதவர்கள், ‡ அவற்றால் சிலதுண்பங்க ளற்றதல்லது, § அவர் போற் பிறவி அற்றிலர், (எ-று).

இதனால் அவாவறத்தாரது பெறப்பு ¶ விதிமுகத்தானும் எதிர்மறை முகத்தானுங் கூறப்பட்டது,

தெளி:—(இ-ன்.) அற்றவரென்பார்-(பிறவி) அற்றவரென்ற சொல்லப்படுவோர், அவாவற்றார் - (அப்பிறவி யற்றதற்குநேரே ஏதுவாகிய) அவா அற்றவர்கள், மற்றையார் - பிறவேதுக்கள் அற்ற அவ்வவா வொன்றும்

† பிற ஏதுக்களற்ற அஃதொன்றும் அற்றவர்கள்-பிறவியுண்டாவதற்குப் பரம்பரைக் காரணமாயுள்ள உயிர்களிடத்தருளில்லாமை, மாமிசம் புசித்தல், தவஞ்செய்யாமை, கூடாவொழுக்கம், கண்மையத்தாத பொய்பேசுதல், திருடுதல், சோபங்கொள்ளுதல், பிறர்க்குத் தீமை புரிதல், பிராணிகளைக் கொல்லுதல் முதலிய வேற காரணங்க ளொழியப்பெற்ற அவ்வவாவொன்றும் ஒழியப் பெற்றவர்கள்.

‡ அவற்றாலென்பங்க ளற்றதல்லது - பிறவிக்குப் பரம்பரைக் காரணங்க ளொழியப்பெற்றமையால் லெதன்பங்க ளொழிந்த தல்லாமல்.

§ அவர்போல் - அவா அற்றவர்கள்போல்.

¶ அவா பிறவிக்கு நேரேயேதுவும், அவாவறுதல் பிறவியறுதற்கு நேரே யேதுவுமாமென்க.

'அற்றவரென்பா ரவாவற்றார்' எனவிதி முகத்தானும் (உடம்பாட்டானும்)'மற்றையா ரற்றக வற்றிலர்'என எதிர்மறை முகத்தானும்-ஆசை யற்றவரது மகிமை சொல்லப்பட்டது. இதனால் ஆசையற்றவர்க்குப் பிறப்பில்லையென்றும் ஆசையருதவர்க்குப் பிறப்புண்டென்றும்பெறப்பட்டன, (இக்கு அற்றார் என்னும் உடம்பாட்டிலிலை விதிமுகமாம்; இலர் என்னும் எதிர்மறையினை மறைமுகமாம்.) பிரபுலிங்கலீலை, "ஆசை யறதல் வீட்டின்ப நேரே படைபக் காரணமாம், ஆசை யறுத லலதில்லைப் பலதா னோத்த மாய்ந்திடினும், ஆசை யறவோன் வெனுத நீண்ண மெனான் றறிந்திருத்தம், ஆசை யுறுத லென்கொண்டோ பர்தோ மனித ரறியோ மே" என்ற கூறலதும், திருமந்திரம் "ஆசையு மன்பு மறுமி னறுத்த பின், ஈச னிருந்த விடமெனி தாமே" என்ற கூறலதுமிற்குக் லெனிக் கத்தக்கனவாம்.

அருதவர்கள், (அவ்வேதுக்க ளற்றமையால் லெதன்பங்கள் அற்றதல்லா மல்), அற்றுகவற்றதிலர் - அவர்போற் பிறவியற்றிலர், (எ - று).

இதனுல் அவாவறுத்தவரது நிறப்பு உடம்பாட்டினுலும் எதிர்மறையி னுலும் சொல்லப்பட்டது.

(க-து.) ஆசையற்றவர்க்குப் பிறவியறும்; மற்றவர்க்கஃதறாது.

5. They are said to be free who are freed from desire; all others who, whatever else they may be free from, are not freed from desire.

கூ. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

பரி:—(இ - ள்.) † மெய்யுணர்தல் ஈறகிய காரணங்க ளெல்லாம் எய்தி ‡ அவற்றன் வீடெய்தற்பாலனய ஒருவனை § மறவிவழியாற் புகு ந்து பிள்ளும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்கவல்லது அவா ; ஆகலான் அவ்வவாவை அஞ்சிக்காப்பதே துறவறமாவது, (எ - று).

ஒருமென்பன அசைநிலே. அகாதியாய்ப் போந்த அவா ஒரோவழி ¶ வாய்மை வேண்டலே யொழிந்து () பராக்காற்காவாளுயின், †† அஃதிட மாக அவனறியாமற் புகுந்து,பழைய இயற்கையாய்நின்று பிறப்பினை யுண் டாக்குதலான். அதனை 'வஞ்சிப்பது' என்றார். * காத்தலாவது வாய் மை வேண்டலே இடைவிடாது பயின்று அது செய்யாமற் பரிகரித்தல். இதனுல் அவாவின் குற்றமும் அதனைக்காப்பதே அறமென்பதூஉம் கூறப் பட்டன.

தேனி:—(இ - ள்.) ஒருவனை - (நிலையாமை முதல் மெய்யுணர்தல் முடிவாயுள்ள காரணங்களெல்லாம் பெற்று அக்காரணங்களால் முத்தியை

† நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தலென்பன வீட டை.தற்குக் காரணங்களாம் ; இவற்றுள் அவாவறுத்தல் நேர்காரணமாம் ; மற்றவை பரம்பரைக் காரணமாம்.

‡ அவற்றுள் - நிலையாமை முதலிய காரணங்களால். § மறவி - சோர்வு.

¶ வாய்மைவேண்டலே யொழிந்து - பரம்பொருளை யொற்றுமையுற விடைவிடாது பாவித்தலே விட்டு.

() பராக்காற் காவாளுயின் - அஜாக்கிரதையினுல் (ஆசையைப்) பாது காவாளுனுல். (பாதுகாத்தல் - ஒழித்தல்).

†† அஃதிடமாக அவனறியாமற் புகுந்து-(அவ்வாசையானது) பாது காவாமை வாயிலாக அவன் தெரிந்துகொள்ளாதபடி பிரவேசித்து.

* காத்தலாவது பரம்பொருளைஒற்றுமையுறப்பாவித்தலே யிடைவி டாது அப்பியசித்து வஞ்சித்தல் செய்யாதபடி அவாவை ஒழித்தலாம்.

டைதற்குரியவருமிய) ஒருவனே, வஞ்சிப்பது - (மதிவிழியினுல்தழை த்து பின்னும் பிறப்பினேதன்னில்) கெடுக்கவல்லது, அவா - அவாவாம், (ஆதலால்), அஞ்சுவது - (அவ்வவாவை) அஞ்சிக்காப்பதே, அறன் - தற வதமாம், (எ - து).

ஒரு மிகன்மே - தலைவன், அரசியாய் வந்துள்ள அவா ஒரோவிட த்து வாய்மை வேண்டுமே பொழிந்த பாழுகத்தால் காவாதவனுனல், அக்காலமை இடமாக அவன் அறியாமல்புகுந்து பழைய வியற்கையாய் கின்ற பிறப்பினே உண்டாக்குதலால், அவ்வாவை 'வஞ்சிப்பது' என்றார். காத்தலாவது வாய்மை வேண்டுமே இடைவிடாமற் பழகி அவ்வஞ்சித்தலேச் செய்யாதபடி பொழித்தல். இதனல் அவாவின் குற்றமும் அவ்வாவைக் காப்பதே (ஒழிப்பதே) அறமெனபதும் சொல்லப்பட்டன.

(க - து.) வஞ்சித்துக் கெடுக்கவல்லது ஆசை யாதலின், அதனே அஞ்சி பொழிப்பதே அறமாம் என்பது.

6. It is the chief duty of an ascetic to watch against desire with jealous fear; for it has power to deceive and destroy him.

எ. அவாவினே யாற்ற வுறப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்ருன் வரும்.

பதி:—(இ-ள்.) ஒருவன் அவாவினே யஞ்சித் துவாக் கெடுக்க வல்ல ஞயின், அவனுக்குக் கேடமைக்கேதுவாகிய வினை தான் விரும்புற வாகே உண்டாம், (எ - து).

கேடமை - பிறவித்துன்பக்களன் அழியாமை. † அதற்கேதுவாகிய வினேயென்றது மேற்சொல்லிய ‡ தறவறத்தினே. வினே - சாதியொருமை தான்விரும்புதெறி - () மெய்வருத்தகெறி. அவாவினே முற்ற வறத்தாற்

† அதற்கேதுவாகிய—கேடமைக்குக் காரணமான. ‡ தறவறத்தினை —விரதமும் ஞானமும்.

() 'வருத்தமென் றின்றிச் சாலவும் பிரமென்றயன் வருத்தல் தை பினு, கோத்த தெற்றினுக்கா வெனிற்பர ஞான முணர்பவர்க் குன்ரு தனைத்த, னினைத்தில் தொழில்க ளொன்றுமேன் டாத நீத்தவா வாவி ருத் தலினு, வருத்தமற் றதனுற் கோத்தது தெளிந்த ஞானி தணிக்தனே போலும்' என்பது வராகியே நீபம். "தூன்ம வறிவு மறிவெலாங் கை விட் டறிவினுற் கதிரோய் ந்த, பேதமில் பிரடி யொன்றுமே யறிவான பேதமே நின்பமாம் பிறத்தல், சாதலத் நிருகு மதனேயோர் வருத்த மின நியே சாரா விருக்க, வாதரித் தறியா வஞ்மே விரும்பி யனர்தக் கத் தினே பலவால்" என்பது பிரமோத்தை.

க்கு வேறறஞ் செய்யவேண்டா,¶ செய்தனவெல்லாம் அறமாமென்பதாகுத்த. இதனால் அவாவறுத்தற் றெப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) அவாவினை - ஆசையை, ஆற்றவறுப் பின் - (அஞ்சி) முழுதும் ஒழித்தால் (வஞ்சித்தும் வாராமற் கெடுக்கவல்ல வ்ஞனுல்), (அவனுக்கு), தவாவினை - கெடாமைக்கு ஏதுவாகிய செயல், தான்வேண்டுமாற்றுல் - தான்விரும்பும் வழியினலே, வரும் - உண்டாகும், (எ - று).

கெடாமை - பிறவித் துன்பங்களால் அழியாமை. அதற்குக் காரண மாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறங்களே. வினை - சாதியொ ருமைப்பெயர். தான் விரும்பும்வழி - உடல் வருந்தாதவழி. அவாவை முழு தும் ஒழித்தவனுக்கு வேறு அறஞ்செய்ய வேண்டுவதில்லை, அவன் செய் தகருமங்களெல்லாம் அறமாமென்பது கருத்து. இதனுல் அவாவறுத்தலி ன்து றெப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) ஆசையை பொழித்தவனுக்குக் கெடாமைக் கேது வாகிய துறவறந் தானே யுண்டாகும் என்பது.

7. If a man thoroughly cut off all desire, the deeds which confer immortality, will come to him, in the path in which he seeks them.

அ. அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்
றவாவது மேன்மேல் வரும்.

பரி:—(இ - ள்.) அவாவில்லாதார்க்கு வாக்கடவதோரு துன்பமும் இல்லை; ஒருவந்துப் †பிறகாரணங்களெல்லாம் இன்றி அஃதோன் றும் உண்டாயின், அதனுனே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடை விடாமல் வரும், (எ - று).

உடம்பு ‡ மூக்குதின்ற துன்பம் முன்பே செய்துகொண்டதாகலின், ஈண்டுத்துன்ப மென்றது இதுபொழுது அவாவாற் செய்து கொள்வன வற்றை. 'தவாவது மேன்மேல் வரும்' என்றதனுன் மூவுலகத் துன்பங்களு மென்பது பெற்றும். இதனுல் அவாவே துன்பத்திற்குக் காரணமென்பது கூறப்பட்டது.

¶ "இட்டரு மார்க்கர் நுலிற் றவக்குணப் பெரிய ராகிச், சிட்டராய்த் தீராதெஞ் ஞானு ரானுர், கட்டமாம் பிறவி நீரைக் காதலால் வே தஞ் செய்ஞர், பட்டதே செய்யா நிற்பர் பரமமாம் பதத்தை யுன்னி" என்பது பிரமசேதை.

† பிறகாரணங்கள்—(துன்பத்திற் கேதுவாகிய) அவாவொழித்தமற் றைக் காரணங்கள். அவை அருளாமை, பொய்பேசுதல் முதலியன.

‡ மூக்குதின்ற - (உயிர்) அனுபவிப்பதாகக் கொண்டின்ற.

தெளி:—(இ - ன்.) அகாலில்லார்க்கு - ஆசை யில்லாதவர்க்கு, துன்பம் - (வாக்கடவதாகிய) ஒருதுன்பமும், இல்லாகும் - இல்லையாம், (ஒருவனுக்குப் பிறகாரணங்க ளெல்லாம் இல்லாது), அஃதுண்டேல்- அவ்வாசை யொன்று மாத்திரம் உண்டாயின், (அவ்வாசையினாலே எல்லாத் துன்பங்களும்), தவாஅது - முடிவில்லாமல், மேன்மேல் - மேலுமேலும் (இடைவிடாமல்), வரும், உண்டாகும், (எ - று).

உடம்பு மொண்டு கொண்டின்ற துன்பம் முன்பே (கீழ்ப்போன பிறவிகளில் கல்லன நீயன) செய்து கொண்டதாகலின், இவருந் துன்ப மென்றது, இப்போது ஆசையினால் செய்துகொள்ளுந் துன்பங்களோ, 'தவாஅது மேன்மேல் வரும்' என்றதனால் தன்னைப்பற்றி வருவதும், பிற வுயிரைப்பற்றி வருவதும், தெய்வத்தைப்பற்றி வருவதும் ஆகிய மூவகைத் துன்பங்களு மென்பது பெற்றாம். இதனால் ஆசையே துன்பத்திற்குக் காரணமாமென்பது சொல்லப்பட்டது.

(க - து.) ஆசையின்மையினால்இன்பமும் அஃதுண்மையினால் துன்பமும் உண்டாகின்றன என்பது.

8. There is no sorrow to those who are without desire but where that is, sorrow will incessantly come more and more.

—:—

கூ. † இன்ப மிடையறு தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

பதி:—(இ - ள்.) அவாவென்று சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கேமமாயின், அவன் விடு பெற்றவழியே அன்றி உடம்போடு நின்றவழியும் இன்பம் இடையறாது, (எ - று).

துன்பத்துட்டுன்பம் - ‡ எனைத்துன்பங்களெல்லாம் இன்பமாக வரும் துன்பம். வினைவின் கண்ணே அன்றித் தோற்றத்தின்கண்ணுந் துன்ப மாகலின், இவ்வாறு கூறப்பட்டது. ¶ காரணத்தைக் காரியமாக உபசரித்து 'அவாவென்னுந் துன்பத்துட்டுன்பம்' என்றும், அது கெட்டார்க்கு மனந்தமோரு தீரம்பி நிற்றலான் ஈண்டுமின்ப மிடையறாது என்றும் கூறினர். இனி ஈண்டும் என்பதற்குப் § பெருகுமென்னாரப் பாருமுளர்.

† "இன்பத்து ளின்பம் பயக்கு மிலனென்னுந், துன்பத்துட் டுன்பங் கெடின்" என்னுங் குறளுமீண்டோர்ந்தற்பாலதாம்.

‡ எனைத்துன்பங்க ளென்றது குட்டம், குன்மம், சூலை முதலிய வற்றாலாதுன்பங்களை.

¶ அவாவினால்வரும் துன்பத்தை 'அவாவென்னுந் துன்பத்துட் டுன்பம்' என்ற ஒற்றுமைபற்றிக் கூறினமையின், இது காரணங்காரியமாய உபசார வழக்காம். § பெருகும்—(இன்பமிடையறாது) அதிகரிக்கும்.


இதனால் அவாவறுத்தார் வீட்டின்பம் உடம்போடு நின்றே எய்துவரென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) அவாவென்னும் - ஆசையென்று சொல்லப்படுகிற, துன்பத்துட்டின்பம் - (துன்பங்களுள்ளே) மிகுந்ததுன்பமானது, செடின் - (ஒருவனுக்குக்) கெடுமாயின், (அவன் முத்திபெற்ற விடத்தேயல்லாமல்), ஈண்டும் - உடம்போடுகூடி நின்றவிடத்தும், இன்பம் - பேரின்பமானது, இடையறாது - கடுவே நீங்காது, (எ - று).

துன்பத்துட்டின்பம்-மற்றைத் துன்பங்களெல்லாம் இன்பங்களாய்த் தோன்றும்படி வருங் கொடிய துன்பமாம். ஆசையானது பயனைக் கொடுக்கும்போதே யல்லாமல் தோன்றும்போதும் துன்பந்தருவதாகலால், 'அவாவென்னுந் துன்பத்துட்டின்பம்' என்றிவ்வாறு சொல்லப்பட்டது. அவாவென்னுஞ் சாரணத்தைத் துன்பத்துள் துன்பம் என்னுங்காரியமாக உபசரித்து 'அவாவென்னுந் துன்பத்துட்டின்பம்'என்றும்,அவ்வவா கெட்டவர்க்கு மனந் தமோகுணத்தினின்றி (பிரஹ்மாவந்தத்தினுள்) நிரம்பி நிற்குமாகையால் ஈண்டும் இன்பம் இடையறாது என்றும் சொல்லினர். இதனால் அவாவறுத்தவர் முத்தியின்பத்தை உடம்போடு கூடி நின்றே யடைவாரென்பது சொல்லப்பட்டது.

(க - து.) ஆசையற்றவர்க்குப் பூரணாந்த முண்டாமென்பது.

9. Even while in this body, joy will never depart from the mind in which desire has been destroyed.



கo. † ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

பதி:—(இ - ள்.) ஒருகாலும் ‡ நிரம்பாத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குதமாயின், அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒரு நிலைமையனும் இயல்பைக் கொடுக்கும், (எ - று).

நிரம்பாமையாவது § தானேயன்றித் தம்பயனும் நிலையாமையின்,

† மனுதரும சாஸ்திரம் ஆருவதத்தியாயத்தில் "எப்போது பிரமத்தியானத்தினுல் தோஷத்தையே யுண்பண்ணுவதாய எல்லா விஷயங்களிலும் ஆசையை நீக்குகிறானே அப்போது இம்மையிலும் மறுமையிலும் அழிவற்ற சுகத்தை யடைகிறான்" என்ற கூறுவதும், திருமந்திரம் "வேதாந்தக் கேட்க லிரும்பிய வேதியர், வேதாந்தக் கேட்டிலர் வேட்கை யொழிந்தின்ர், வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம், வேதாந்தக் கேட்டவர் வேட்கையிட் டாரே" என்ற கூறுவதுமிங்கியத் தக்கனவாம்.

‡ நிரம்பாத - திருப்தியடையாத.

§ தானேயன்றித் தம் பயனும் - பொருள்களே யல்லாமல் அப்பொருள்களால்வரும் (பிற்பின்பப்) பயன்களும்.

வேண்டாதனவாய பொருள்களே வேண்டி முனைமலை வளர்தல். ‡ அந்த வளர்ச்சிக்கு அளவின்மையின், தீத்தலே தக்கதென்பது கருத்து. † களிப்புக் கவற்கெனும் பிறப்புப் பிணி மூப்பு இறப்புகளுமுதலாயினவின்றி மீயிர் சிறிசாய் வீடபத்தராய் சித்தலின், வீட்டினைப் 'பேரானந்தக்கை' என்றும், அந்த அவா தீர்தலழிப் பெறுதல் ஒருதலையாகலின், அச்சிலையே தரும் என்றும் கூறினர். ¶ "என்றும் ஞானம் கடந்தபோய் கல்லிதிரிய மெல்

‡ அல்லவர்ச்சிக்கு அளவின்மையின்-ஆசையின் பெருக்கத்திற்கு அளவில்லாமையால். ஆசையின் பெருக்கத்திற்கு அளவில்லை யென்பது ஆசைக்கோ ரளவில்லை யதிலமெல் லாக்கட்டி யாளினும் கடன்மீதிலே யாணைசெல வேயிலவரளகே னிராக வடபொனமிக வைத்தபேரும், கேடித்த ராவாத வித்தைக் கலைந்திவர் பெரொ னிருந்த பேரும் நிலையாக வேயினும் காயகற் பந்தேடி நெஞ்சுபுண் ணுவர்' என்ற தாயுமானவர் கூற்றானுமறியப்படும்.

† "களிப்புக்கவற்வு மற்றப் பிறப்புப் பிணிமூப் பிறப்பற், றெளிக் கொண்ட சோதியுமா யுடன்கூவே தென்றகோவே" என்பது திருவாய் மொழி.

¶ திருவாய்மொழி, 78 - பதிகம் 6-வது செய்யுள். இதன்பொருள் (ஒருவன்) என்றும் - என்றாகு, ஞானம் - சற்தாதி விஷய ஞானங்களை, கடந்தபோய்-ஒழித்தச்சென்று, தலைத்திரிய மெல்லாம்-(சம்மைத் தலைமை யாகவுடையவனைச் சற்தாதிவிஷய வாயிலாகச் செய்யப்பற்) றெற்றெனெ யுறி பிரிரியக்கனெ யெல்லாம், ஏத்த-(சற்தாதி விஷயங்களிற்செல்லா வண்ணம்) க்கொண்டு, ஒன்றுயக்கிடந்த-(உயிரோடி அரதியே)பொருந்திக்கிடந்த. அரும் - (மெய்புணர் வுடையவர்க்கன்றி வேறெவராலும்) கடத்தற்கரிய, பெரும் - (மகத்தத்துவமுதலிய தத்துவங்களை சேர்க்க) வியாபகமான, உலப்பில் - (மெய்புணர்வாலன்றி வேறெதனாலும்)செய்தலில்லாத, பாழதனை - பிரபிருதியை, உணர்ந்த உணர்ந்த - (கேட்டல் செய்தல்களால் சற்தாக விபரீதமில்லாமல் செய்கும் வகையை) என்றுமறிந்து, ஆங்குச்சென்ற - (எல்லையோலும் பிரபிருதிக்கு வேறு பட்டுள்ள) ஆத்மாவையிற்சென்று, இன்பதன்பல்கள் - இன்பதன்பல்களுக்குக் காரணமான நல்லாதநல்வங்களை, செற்றக்கொந்த - (பின்னும் பிறப்பை யுண்டாக்காதபடி) பற்றறவொழித்து, பரை - (வீடாப்பட்ட சற்தாதி விஷயங்களில் பழையபழக்க மிருதியால் வருத்தம்பற்றி யுண்டாகும்) ஆசையை, அற்றல் - (பரம்பொருளே யெற்றவையுற இடைவிடாத பாவித்தலால்) ஒழித்தல், அன்றே - (அவ்வாறை யொழித்த) அச்சணிலேயே, அப்போதே - அம்முகூர்த்தத்திலேயே, வீடும் - சமம் வெருளி மயக்கங்கள் நீங்கும், வீடதுவே - சமம் வெருளி மயக்கங்கள் நீங்குமதுவே வீடாம் - (அவனுக்கு) மோட்சமாம், என்பது. வெளுவாபோதச் நிற்றனையில் "ருளியாவது உள்ளதன்று, இல்லது மன்று, இரண்டேயுமன்று, வேறுமன்றெனப்படும் பாழ்" என்று கூறப்பட்டிருத்தலால், பாழின் தன்மையுணரப்படும்.

மாமிசத், தொன்றுய்க் கிடக்க வரும்பெரும்பா முலப்பி லதனை யுணர்ந் தணர்ந்து, சென்றுங் கின்ப துன்பங்கள் செற்றக் களைந்து பசையற்று, லன்றே யப்போ தேவீடு மதுவே வீடாமே" என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது. இந்நிலைமையுடையவனை வடநூலார் † சிவன் முத்தனென்ப. இதனால் வீடாவது ‡ இதுவென்பதூஉம், அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே உளதாமென்பதூஉங் கூறப்பட்டன.

கேள்வி:—(இ - ன்.) ஆவியற்கை - (ஒருபோதும்) நிரம்பாதவியல் பினையுடைய, அவா-அவாவை, நீப்பின்-(ஒருவன்) ஒழிப்பானாயின், (அவ் வொழித்தல் அவனுக்கு), அந்நிலையே-அப்போதே, போவியற்கை-எப் போதும் ஒரு நிலைமையனுந்தன்மையை, தரும் - கொடுக்கும், (எ-று).

அவா நிரம்பாமையாவது தானேயல்லாமல் தம்பயனும் நிலையாமை யால்வேண்டத்தகாதனவாய பொருள்களே வேண்டிமேலுமேலும்வர்தல், அவ்வவாவின் வளர்ச்சிக்கு அளவில்லாமையால், அதனை யொழித்தலேதக்க தென்பது கருத்து. களிப்புக் கவலைகளும், பிறப்புப் பிணி மூப்பு இறப் புக்களும் முதலாயின வில்லாமல் உயிர் பேரின்பத்தை யுடையதாய் நிற்றலால் வீட்டினைப் 'போவியற்கை' என்றும், அவ்வீடு அவாவை யொழித்த விடத்துப் பெறுதல் நிச்சயமாதலால் அந்நிலையே தரும் என்றும் சொல்லினர். இந்நிலையையுடையவனை வடநூலார் சிவன்முத்தனென் பர். இதனால் வீடாவது இதுவென்பதும், அவ்வீடு அவாவை யொழித்த வர்க்கு அப்போதே உண்டாமென்பதும் சொல்லப்பட்டன.

(க - து.) ஒருவன் அவாவை யொழிப்பானாயின், அஃது அவனுக்குச் சிவன் முத்திபைத் தரும் என்பது.

10. The removal of desire, whose nature it is never to be satisfied, will immediately confer a nature that can never be changed.

துறவறவியல் முற்றிற்று.

பரி:—இவ்வாற்றான் இம்மை, மறுமை, வீடென்னு மூன்றனையும் பயத்தற் சிறப்புடைத்தாய அறங்கூறினார்; இனிப்பொருளும் இன்பமுங் கூறுவார், ¶ அவற்றின் முதற்காரணமாகிய ஊழினலி கூறுகின்றார்.

† சிவன்முத்தன்—சிவத்துவம் விடப்பட்டவன்.

‡ இது-போவியற்கை (எஞ்ஞான்றும் ஒருநிலைமையனுகு மியல்பு).

¶ "வழ்வுக ளாலென் மறைநெறி ஞான மதனுலென், கேள்விக ளாலென் னின்மனு வாலென் னினையாலென், வேள்விக ளாலென் விண்ணவ ராலென் வினைவெல்லாம், ஊழ்வினை தானே தருதலி னூழே யிறையென் றான்" என்பது பெருக் நிரட்டு.

'அவற்றின் (பொருளின்பங்களின்) முதற்காரணமாகிய ஊழின் வலி கூறுகின்றார்' என்றமையின், ஊழ் பொருளுக்கும் இன்பத்திற்குமி

தேவி:—இவ்விதத்தால் இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றை யுந் தருதற் றெப்புடையதாகிய அறத்தை அருளிச்செய்தார்; இனிப்பொருளும், இன்பமும் அருளிச்செய்யத் தொடங்கியவர், அப்பொருளின்பங்களின் முதற்காரணமாகிய ஊழினுவலியைச் சொல்லுகின்றார்.

ஊழ்—Fate.

பரி:—அரசாவது * இருவினைப்பயன் செய்தவினையே சென்றடைதற்கேதுவாகிய † நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், முதற்காரணமாமென்பது வெளிப்படையாம். "இயற்றலு மீட்டலும்" என்னுங்குறளின் விசேட வுரையில், "பொருள்களாவன—மணி, பொன், நெல் முதலியன" என்றும், காமத்துப்பாலின் தொடக்கத்தில் "ஈண்டின்பமென்றது ஒருகாலத் தொருபொருளான் இம்புல னுகர்தற் றெப்புடைத்தாய காமவின்பத்தினை" என்றும் பரிமேலழகரே கூறியிருத்தலால், ஊழ் பொருளின்பங்களுக்கு முதற்காரணமாகவென்பது தெளிந்தின் விளங்கும். "முதற்காரணமாவது காரியத்தோ டொற்றுமை யுடையது" என்ற சேஞ்ஞர்க்கினியர் கூற்றலால், மண் தனது காரியமாகிய கடத்தில் ஒற்றுமையுடையதாயிருத்தல் போல ஊழ் பொருளிலும் இன்பத்திலும் ஒற்றுமை யுடையதாயிருத்தல் வேண்டும்? மேலும், காரியத்திலெதுகை அதனது முதற்காரணத்திலென்பது வெளிப்படையாமாகலின், பொருளும் இன்பமும் ஊழினுண் ஒடுங்கல்வேண்டும். மணி, பொன், நெல் முதலியன தமது முதற் காரணமான பிருதிவியிலும், இன்பம் தனது முதற்காரணமான மனம் அல்லது உயிர் என்னும் இரண்டிலுள் யாதாவதொன்றிலும் ஒடுங்குவனவாயிருத்தலின், அவற்றிற்கு ஊழ் முதற்காரணமென்பது பொருந்தாது. முதற்காரணம் யாண்டும் நிரதியமாயிருத்தல் வேண்டுமென்பது நியமமாதலின், உருவமுதலிய குணங்களுள் ஒன்றாய ஊழ் - (அநிருஷ்டம் - தருமாதருமம்) வக்காரியத்திற்கும் முதற்காரணமாதல் ஒருவாற்றானும் அமையாது. அவ்வாறுயின், பரிமேலழகர் கூறியதனுண்மை யெனின், கூறுதும்:-ஒருவனிடத்துப் பொருளின்பங்கள் வருவதற்கு ஊழ் காலம் நிற்கு நாயமுதலியனபோலச் சாதாரண காரணமாயி, ஈ அசாதாரண காரணமாய் பிருதிவியென்ற சென்ப தனைச்சார்ந்தற் பொருட்டு, பொருளின்பங்கட்கு ஊழை முதற்காரணமென் றுகூறினர். முதற்காரணமென்பதற்குச் சமவைகாரணம் அல்லது அசாதாரண காரணமென்பதனைச் சேர்த்தல்வேண்டும். ஊழ் பொருளின்பங்கள் வருதற்கு நியதி காரணமாம். ஒன்றன் உற்பத்தி மாத்திரத்தின் நெற்காரணம் நியதி காரணமாம்.

* "தீருவசனம் அல்லது தீருத்தி என்பதாவது ஊழ்: இருவினைப்பயன செய்தவினையே சென்றடைதற்கேதுவாகிய நியதி என ஒருசொற்று வகையிற்சொடராகப் பொருளுணர்த்தல தென்க." என்பது பிரபோதவிவேகவுரை.

† "பல்லவ ரூற்ற வீடினு முழக்கின்று, வல்லதாம் நாய்காடிச் சோடுசேர் - தொல்லைப், பழவினையு மன்ன தலைத்தோற்றற் செய்த, பிழைவ னடிச் சொன்று" என்பது நாலடியார்,

நியதி, விதியென்பன ஒருபொருட் கிளவி. இது பொருளின்பங்கள் இரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற் கூறிய † அறத்தோ டியையுடைமையானும், ‡ அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது கல்வினையின்பயனுகிய இன்பமும், தீவினையின் பயனுகிய துன்பமும், அவ்வவ்வினையைச் செய்தவனையே சென்றடைவதற்குக் காரணமாகிய நியதியாம். ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பவை ஒருபொருட் சொற்கள். இவ்வூழ் பொருளின்பங்களிரண்டிற்கும் பொதுவாய் ஒன்றனுள்வைக்கப் படாமையானும், முன் சொல்லிய அறத்தோடு சம்பந்தமுடைமையானும், அதனிறுதியில் வைக்கப்பட்டது.

க. ஆகூழாற் ரேன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் ரேன்று மடி.

பரி:—(இ - ள்.) ஒருவற்குக் $ கைப்பொரு ளாதற்குக் காரணமாகிய ஊழான் முயற்சி உண்டாம்; அஃதழிதற்குக் காரணமாகிய ஊழான் மடி உண்டாம், (எ - று).

¶ ஆகூழ் போகூழென்னும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப்பொருளவாய் நின்றன. அசைவு—மடி † பொ

† இல்லறத்தின் பயனும் துறவறத்தின் பயனும் ஊழின் பயனுபிருத்தலின் 'அறத் தோடியையுடைமையானும்' என்று கூறப்பட்டது.

‡ அதனது இறுதிக்கண்—அறத்துப்பாலின் ஈற்றில் (முடிவில்).

$ கைப்பொருளாதற்கு-கையிற்பொருளுண்டாகிவிருத்தியடைதற்கு.

¶ கைப்பொருள் ஆதற்குக்காரணம் நல்லூழாயும் அப்பொருள் அழிதற்குக்காரணம் தீயூழாயுமிருத்தலால்ஆகூழ் என்பதும் போகூழ் என்பதும் காரணப்பொருளில் வந்த எதிர்கால வினைத்தொகைகளாயின; ஆகூழ்-ஆதற்குக் காரணமாகிய ஊழ் என்றும், போகூழ் - போதற்குக் காரணமாகிய ஊழ் என்றும் விரியும். வினைச்சொல்லின்பகுதியும் பெயர்ச்சொல்லும் புணர்ந்து வருவது வினைத்தொகை யெனப்படும். இங்கு ஆகுபோகு என்னும் வினைச்சொற்பகுதிகள் ஊழ் என்பதனோடு புணர்ந்து வினைத்தொகைகளாய் நின்றவாறறிக. இலக்கணக்கொத்து "வினைச்சொலிலக்கணம்" என்னுஞ் சூத்திரத்தினுரையில் "ஈச்சினூர்க்கினியார் கண்ணூலார் முதலாயினோர் இயற்றி முதனிலை ஆபோ என்றே இருக்குமென்றார். திருவள்ளுவர் பரிமேலழகர் முதலாயினோர் இயற்கை முதனிலை ஆகு போகு என்றே இருக்குமென்றார்" என்று கூறியிருத்தலும் இங்கு நினையத்தக்கதாம்.

† பொருளின் ஆக்கத்திற்குத் துணைக்காரணம் முயற்சியென்றும், அதனழிவிற்குத் துணைக்காரணம் மடி (சோம்பல்) என்றும் கொள்க.

குளின் ஆக்க வழிவகட்குத் துணைக்காரணமாய முயற்சி மடிகளோயுந் தானே தோற்றவிக்கு மென்பது கருத்து.

தெளி:—(இ-ன்.) (ஒருவனுக்கு) கைப்பொருள்—, ஆகூழால் - ஆவதற்குக் காரணமாகிய ஊழினால், அசைவின்மை - முயற்சியானது, தோன்றும் - உண்டாகும், போகூழால் (அப்பொருள்) அழிதற்குக் காரணமாகிய ஊழினால், மடி - சோம்பலானது, தோன்றும் - உண்டாகும், (எ - று).

ஆகூழ் போகூழ் என்பன காரணப்பொருளில்வந்த எதிர்கால வினைத் தொகைகள். அசைவு—சோம்பல். ஊழானது பொருளினது ஆக்கவழிவகளுக்குத் துணைக்காரணமாகிய முயற்சி சோம்பல்களோயுந் தானே தோன்றச்செய்யு மென்பது கருத்து.

(க-து.) ஆகூழினால் முயற்சியும் போகூழினால் சோம்பலும் உண்டாம் என்பது.

1. Perseverance comes from a prosperous fate and idleness from an adverse fate.

உ. பேதைப் படுக்கு மிழவு ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை.

பதி:—(இ - ன்.) ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவாயினும் கைப்பொருளிழத்தற்குக் காரணமாகிய ஊழ் வந்துற்ற விடத்து, * அஃது அதனைப் பேதையாக்கும்; இனி அவனறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற் காரணமாகிய ஊழ் வந்துற்ற விடத்து † அஃது ‡ அதனை விரிக்கும், (எ - று).

¶ கைப்பொருளென்பது அதிகாரத்தான் வந்தது. § இழவூழ் ஆகூழென்பன இரண்டும் வேற்றுமைத்தொகை. உற்றக்கடையென்பதனுள் ஞ் கூட்டப்பட்டது. இயற்கையாகிய அறிவையும் வேறுபடுக்கு மென்பதாம்.

தெளி:—(இ - ன்.) (ஒருவனுக்கு) அறிவு - எல்லாவறிவும், (உண்டாயிருக்தாலும்), இழவு - (கைப்பொருளை) இழத்தற்குக் காரணமாகிய, பழ்ஊழானது, (வந்து), உற்றக்கடை-பொருந்திய விடத்து, (அவ்வூழானது),

* அஃது - கைப்பொருளிழத்தற்குக் காரணமாகிய ஊழ்.

† அஃது-கைப்பொருள் விருத்தியாதற்குக் காரணமாகிய ஊழ்.

‡ அதனை - அச்சுருங்கியவறிவை.

¶ "ஆகூழாற்றோன்றும்" என்னும் குறளினுள்ள கைப்பொருள் என்பது ஊழென்னு மதிகாரத்தினால் இக்குறளினும் வந்தது.

§ இழவூழ் ஆகூழ் என்ற மிரண்டும் இழத்தற்குக் காரணமாகிய ஊழ் என்னும் முறையே விரியும்.

பேதைப்படுக்கும் - (அவ்வறிவினை) அறியாமையாக்கும்,(இனி அவனறிவு சுருங்கியிருந்தாலும்), ஆகல் - (கைப்பொருள்) ஆவதற்குக் காரணமாகிய, ஊழ்-ஊழானது, (வந்து), உற்றக்கடை - பொருந்திய விடத்து, அகற்றும் - (அவ்வூழ்வறிவினை) பெருகச் செய்யும், (எ - று).

கைப்பொருளென்பது ஈண்டும் அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. இழவூழ் ஆகலூழ் என்பன நான்காம் வேற்றுமை யுருபும் பயனு முடன்றொக்க தொகைகள். உற்றக்கடையென்பது இழவூழ் என்பதனே டுங் கூட்டப்பட்டது. ஊழ் இயற்கையாலாகிய அறிவையும் வேறுபடுத்தி மென்பதாம்.

(க - து.) ஒருவன் அறிவிலியா யிருக்கதற்கும் அறிவுடைய னா யிருக்கதற்கும் காரணம் ஊழேயா மென்பது.

2. An adverse fate produces folly and a prosperous fate produces enlarged knowledge.

கூ. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

பரி:—(இ - ள்.) பேதைப்படுக்கும் ஊழுடையான் ஒருவன் நுண்ணிய பொருள்களோ உணர்த்தும் நூல் பலவற்றையுங் கற்றாயினும், அவனுக்குப் பின்னும் தன் னூழாலுகிய பேதைமை யுணர்வே மேற்படும், (எ - று).

† பொருளின் நுண்மை நூலின்மே லேற்றப்பட்டது. மேற்படுதல் - கல்வியறிவைப் பின்னிராகுதற்காகிச் செயலுக்குத் தான் முற்படுதல். ‡ "காதன் மிக்குழிக் கற்றவுங் கைகொடா; வாதல் கண்ணைகை தஞ்சனம் போலுமால்" என்பதுமது. செயற்கையாலுய அறிவையுங் கீழ்ப்படுத்து மென்பதாம்.

† பொருளினது நுட்பத்தை நூலின்மேலேற்றி 'நுண்ணியநூல்' என்று கூறப்பட்டது. நூலினது பொருண்நுட்பத்தை நூலின்மே லேற்றிக் கூறியது இடத்து நிகழ்பொருளின் குணம் இடத்தின் மேலாய உபசார வழக்காம்.

‡ சீவகசிந்தாமணி கனகமாலையா ரிலம்பகம் எசு. இதன்பொருள் காதல் (ஆசை) மிக்கவிடத்து (துன்பத்திற்குத் தீணையென்று) கற்றகல்வியும் (பிறர் குற்றம் நீக்குதற்கு உதவுதலன்றி என்குற்றம் நீக்குதற்கு) உதவா தொழிதல் கண்ணிலுட் பிடித்த அஞ்சனத்தை (மையை) யொக்குமா யிருந்தது என்பது. இதனது விசேட வுரையில் நச்சினர்க்கினியர் "கண்ணிலுட்பிடித்த அஞ்சனம் அதற்குப்பயன் கொடாதது போலக்கல்வி நெஞ்சிற்பிடித்தும் பயன் தந்ததில்லை என்றவாறு" என்று கூறியிருக்கின்றனர்.

தெளி:—(இ - ள்.) (அறியாமையை யுண்டாக்குவதாகிய ஊழுடையானெருவன்) நுண்ணிய-நுட்பமாய பொருள்களை (அறிவிக்கும்), நூல் பல-நூல்பலவற்றையும், கற்பினும்-கற்முனும், (அவனுக்கு), மற்றும்-பின்னும், தன்னுண்மை - தனது ஊழினாலாகிய, அறிவே - பேதைமையறிவே, மிகும் - மேற்படும், (எ - று).

* பொருளினது நுண்மை நூலின்மேல் ஏற்றப்பட்டது. பேதைமையறிவு மேற்படுதல் - கல்வியறிவைப் பின்பு கினைத்து இதை யேன் செய்தோ மென்று மனமிரங்கித் துன்பப்படுவதற் காக்கிச் செயலுக்குத் தான் முற்படுதல். ஊழ் செயற்கையாலாகிய அறிவையும் கீழ்ப்படித்து மென்பதாம்.

(க - து.) நுட்பமான பொருள்களை நூல்வாயிலாக அறிந்திருப்பவனுக்கும் ஊழினாலாகிய அறிவே மேற்பட்டிருக்கும்.

3. Although a man may study the most polished treatises, the knowledge which fate has decreed to him will still prevail.

ச. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

பரி:—(இ-ள்.) உலகத்து ஊழினாலாகிய வியற்கை இரண்டுகூறு; ஆகலான், செல்வமுடைய ராதலும் வேறு, அறிவுடைய ராதலும் வேறு, (எ - று).

செல்வத்தினைப் படைத்தலும், காத்தலும், பயன்கோடலும் அறிவுடையார்க் கல்லது இயலா அன்றே, அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவுங் காண்டலான், அறிவுடையாரதற்காகும் ஊழ் செல்வ முடையாரதற் காகாது, செல்வமுடையாராதற் காகும் ஊழ் அறிவுடைய ராதற் காகா தென்றதாயிற்று. ஆகவே, செல்வஞ் செப்புங்கால் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டா வென்பது பெற்றாம்.

தெளி:—(இ - ள்). உலகத்து - உலகத்தில், இயற்கை - (ஊழினாலாகிய) இயற்கையானது, இருவேறு - இரண்டு கூறுபிரிக்கின்றது, (ஆல்லால்), திரு - செல்வமுடையவ ராதலும், வேறு - வேறும், தெள்ளியராதலும் - அறிவுடைய ராதலும், வேறு - வேறும், (எ - று).

செல்வத்தைச்சம்பாதித்தலும், காப்பாற்றலும், பயன் கொள்ளுதலும், அறிவுடையவர்க் கல்லாமல் (ஏனையோர்க்கு) கூடாவன்றே, அவ்விதமல்லாமல்அறிவுடையவர் தரித்திரராகவும் மற்றவர் செல்வராகவும் காணுதலால், அறிவுடைய ராதற்குக் காரணமாகும் ஊழ் செல்வமுடைய ராதற்குக் காரணம் ஆகாது, செல்வமுடைய ராதற்குக் காரணமாகும் ஊழ் அறிவுடையராதற்குக் காரணமாகாதென்ற தாயிற்று. ஆகவே, செல்வத்தைத் தேடும் போது அறிவாகிய துணைக்காரணமும் வேண்டாமென்பது பெற்றாம்.

(க - து.) ஊழின் காரிய மிருவகையாயிருத்தலால் அறிவிலார் செல்வராயும் அறிவுடையார் தரித்திரராயு மிருக்கின்றனர்.

4. There are through fate two different natures in the world; hence the difference observable in men in their acquisition of wealth, and in their attainment of knowledge.

நி. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

பரி:—(இ - ள்.) செல்வத்தை ஆக்குதற்கு நல்லவை யெல்லாந் தீயவாய் அழிக்கும்; அதுவேயன்றித் தியவைதாமும் நல்லவாய் ஆக்கும்; ஊழ்வயத்தான், (எ - று).

கல்லவை தீயவை யென்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும் † முதலாயவற்றை. ‡ ஊழ்வயத்தா னென்பது அதிகாரத்தாற் பெற்றும் * அழிக்கும் ஊழுற்றவழிக்காலமுதலிய நல்லவாயினும் அழியும்; ஆக்கும் ஊழுற்றவழி அவை தீயவாயினும் ஆகு மென்பதாயிற்று. ஆகவே, காலமுதலிய துணைக்காரணங்களையும் வேறுபடுக்கு மென்பது பெற்றும்.

தெளி:—(இ - ள்.) செல்வம்-செல்வத்தை, செயற்கு-சம்பாதித்தற்கு, நல்லவை யெல்லாம் - கண்டையா யுள்ளவை யெல்லாம், தீயவாம் - தீய வையாய் அழிக்கும், (அதுமாத்திரமல்லாமல்), தீயவும்-தீயவைதாமும், நல்லவாம்-நல்லவையாய் ஆக்கும், (ஊழ்வசத்தால்), (எ-று).

நல்லவை தீயவை என்பன காலமும், இடமும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. ஊழ்வசத்தாலென்பது ஊழென்னும் அதிகாரம் பற்றி வருவிக்கப்பட்டது. அழிக்குமூழ் உற்றவிடத்து காலமுதலாயின நல்லன வாயிருந்தாலும் செல்வம் அழியும், ஆக்கும் ஊழ் உற்றவிடத்து அக்கால முதலாயின தீயனவா யிருந்தாலும் செல்வம் ஆகுமென்பதாயிற்று. ஆகவே, ஊழ் காலமுதலிய துணைக் காரணங்களையும் வேறுபடித்து மென்பது பெற்றும். அழிக்குமூழ் - தீவினை, ஆக்குமூழ் - நல்வினை.

(க - து.) ஊழ்வசத்தால் நல்லவை கெட்டவையாயும் கெட்டவை நல்லவையாயும் மாறுமா மென்பதி.

5. In the acquisition of property, everything favourable becomes unfavourable, and on the otherhand every thing unfavourable becomes favourable, through the power of fate.

† முதலாய என்றதனால் மெய்வருத்தம்பாராமை, பகிர்கோக்காமை, தித்திரை செய்யாமை, அமைதிப்பைக்கருதாமை முதலியனவுங் கொள்க.

‡ ஊழான் என்னும் பாடமுண்டு.

* தீவினை வந்தபோது பொன்னும் மண்ணும்; நல்வினை வந்தபோது மண்ணும் பொன்னு மென்க.

சுக. பரியினு மாகாவாம் பாலல்ல வும்த்துச்
சோரியினும் போகா தமம்.

பரி:—(இ - ள்.) தமக்கு ஊழல்லாத பொருள்கள் வருந்திக்காப் பினும், தம்மிடத்து நில்லாவாம்; ஊழால் தமவாயபொருள்கள், புறத் தே கொண்டுபோய்ச் சோரிந்தாலும், தம்மைவிட்டுப் போகா, (எ - று).

* பொருள்களின் நிலையும் போக்கும் ஊழினுன் ஆவதல்லது † காப் பிசழ்ச்சென்ான் ஆகா வென்பதாம். இவை ஆறுபாட்டானும் பொருட்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்) பால்-ஊழினுல், அல்ல - (தமக் குரியவை) ஆகாத பொருள்கள், பரியினும்-வருந்திக் காப்பாறினுலும், ஆகாவாம்-(தம்மிடத் தி)ல்லாமற்போகும் தம-(ஊழினுல்) தம்முடையனவாகிய பொருள்கள், உயத்தி-(புறத்தே) கொண்டுபோய், சோரியினும் - பெய்து விட்டாலும், போகா - (தம்மைவிட்டுப்) போகாவாம், (எ - று).

பொருள்களது நிலையும் போக்கும் ஊழினுல் ஆவதல்லாமல் காப்பினு லும் இகழ்ச்சியினுலும் ஆகாவென்பதாம். இவை ஆறுபட்டாலும் பொரு ளுக்குக் காரணமாகிய ஊழினவலி சொல்லப்பட்டது.

(க - து.) வருந்திகாகாகும பொருள் நில்லாம லொழிவதற் கும் அவ்வாறு காவாத பொருள் ஒழியாது நிற்பதற்கும் கார ணம் ஊழேயாம் என்பது.

* 6. Whatever is not conferred by fate cannot be preserved, although it be guarded with most painful care; and that, which fate has made his, cannot be lost although one should even take it and throw it away.

எ. ‡ வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

பரி:—(இ - ள்.) § ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள் ¶ கோடியை முயன்று தொகுத்தார்க்கும் தெய்வம் வகுத்தவகையான் அல்லது நுகர்தலுண்டாகாது, (எ - று).

† காப்பிசழ்ச்சி - (பொருள்களை) காத்தல் காவாதிகழ்தல்.

‡ இலக்கணக்கொத்து "அவைதா - மனமொழி" என்னுஞ்சூத்திரத் தினுரையில் "பரிமேலழகர் பயன்வினைவேறுவினையென இரண்டுகொண்டு பயன்வினையைப் பலவிடத்தினும் பலவாகவிரித்து வேறுவினையை 'வகுத் தான் வகுத்த வகையல்லாற்கோடி' என்பதனுட் கொண்டார்" என்று கூறுன்றது.

§ ஐம்பொறிகள் - செவி முதலிய இந்திரியங்கள்.

¶ கோடியென்பது - (அனுபவிக்கப்படும் பொருள்கள்) புனர்த்தி நின்றது.

ஒருயிர் செய்த வினையின்பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வயிர்க்கே † வகுத்தலின் 'வகுத்தான்' என்றார்; * "இசைத்தலு முரிய வேறிடத் தான" என்பதனுன் உயர்திணையாயிற்று. ‡ தொகாதார்க்கே யன்றித்தொகுத்தார்க்கும் என்றமையான், உம்மை எச்ச உம்மை. ¶ வேறு முயற்சிகளாற் பொருள்களைப் படைத்தல்லது காத்தலாகாது, அதற்கு ஊழ் வேண்டுமென்பதாயிற்று.

தெளி:—(இ - ன்.) கோடி - (பஞ்சேந்திரியங்களால் அனுபவிக்கப் படும் பொருள்கள்) கோடியை, தொகுத்தார்க்கும்-முயற்சிசெய்து சேர்த்த வர்களுக்கும், வகுத்தான்-தெய்வம், வகுத்தவகை யல்லால்-வகுத்தவகையா லல்லாமல், துய்த்தல் - அனுபவித்தல், அரிது - உண்டாகாது, (எ - று).

தெய்வம் ஒருயிர் செய்த வினையின்பயனை மற்றோருயிரி னிடத்துச் செல்லாதபடி அந்த வுயிர்க்கே வகுத்தலால் அதனை 'வகுத்தான்' என்றார்; உயிர் திணைப்பொருளை யுணர்த்திய தெயவமென்னும் அஃறிணைச்சொல் "இசைத்தலு முரிய வேறிடத் தான" என்னும் சூத்திரத்தினுல் வகுத் தான் என உயர்திணையாயிற்று. (இந்திரியங்களால் அனுபவிக்கப்படும் பொருள்கள் பலவற்றைத்) தொகாதாக்கே யல்லாமல் தொகுத்தார்க்கும் என்றதனுல் (தொகுத்தார்க்கும் என்னும்) உம்மை இறந்ததழீஇய எச்சவும்மையாம். வேறு முயற்சிகளால பொருள்களைச் சேர்க்கலாமே யல் லாமல் அனுபவித்தல் முடியாது, அதற்கு ஊழ்வேண்டு மென்பதாயிற்று.

(க - து.) அனுபவிக்கும் பொருள்கள் பலவற்றைச் சேர்த்து வைத்திருப்பவர்க்கும் ஊழ் வகுத்ததற்குமேல் அனுபவித்தல் முடியாது என்பது.

7. Even those who gather together millions will only enjoy them, as it has been determined by the disposer of all things.

அ. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்.

பரி:—(இ - ள்.) வறுமையான் நுகர்ச்சியில்லாதார் துறக்குங் கரு த்துடையாராவர், ஊழ்கள் உறுதற்பாலவாய துன்பங்களை உறுவியா தெழியுமாயின், (எ - று).

† வகுத்தலின்-விதித்தலால்.

* தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளவியாக்கம் - நூக. இதன் பொருள் காலமுதலாகியசொல் உயர்திணையா யிசைத்தலுமுரிய; ஈறு திரி [illegible]ாடு வேறுபட்டவழி என்பது.

‡ படையாதார்க்கேயன்றிப் படைத்தார்க்கு மென்றவுமையின் என் [illegible]முண்டு. ¶ வெறு என்றும் பாடமுண்டு.

துறப்பாரென்பது ஆரீற்றெதிர்கால முற்றுச்சொல். தம்மால் * விடப்படுவன தாமே விடப்பெற்று வைத்தங் † கருத்து வேறுபாட்டாற் றுன்பமுறுகின்றது ஊழின் வலியானென்பது எஞ்சிநிற்றலின், ‡ மன் ஒழியிசைக்கண் வந்தது.

தேளி:—(இ - ள்.) துப்புரவில்லார் - (வறுமையால்) அனுபவித்தலில்லாதவர், துறப்பார் - (இல்வாழ்க்கையைத்) துறக்குங் கருத்தடையவராவர், (ஊழ்கள்), உறற்பால - அடையுந் தன்மையனவாய தன்பங்களே, ஊட்டா - அடைவிக்காமல், கழியுமெனின் - நீங்குமாயின், (எ - று).

துறப்பார் என்பது ஆர்விருந்திபெற்ற எதிர்கால வினைமுற்றுச்சொல். (துப்புரவில்லார்) தம்மால் விடப்படுவன வெல்லாம் தாமே விடப்பெற்றிருந்தும், கருத்துவேறுபாட்டால் துன்பமடைகின்றது ஊழினது வலியாலென்பது குறைந்து நிற்றலால், மன என்னுமிடைசொல் ஒழியிசைப் பொருளில் வந்தது.

(க - து.) தரித்திரர் துறவறத்தை மேற்கொள்ளாது வருந்துவதற்குக் காரணம் ஊழேயாம் என்பது.

8. The destitute will renounce desire and become ascetics, if fate do not make them suffer the hindrances to which they are liable and they pass away.

கூ. நன்றுங்கா னல்லவாக் காண்பவ ரன்றுங்கா
லல்லற் படுவ தெவன்.

பரி:—(இ-ள்.) நல்வினை விளையுங்கால் அதன் விளைவாய இன்பங்களைத் துடைத்தந்திறன் நாடாது இவை நல்லவென்று இயைந்தனுபவிப்பார் ஏனைத்தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களையும் அவ்வா றனுபவியாது துடைக்குந் திறன் நாடி அல்லலுழப்பது என் கருதி, (எ-று).

தாமே முன்செய்து கொண்டமையானும், ஊட்டாதி கழியாமையானும் ¶ இரண்டும் இயைதனுபவிக்கற்பால; அவற்றுள் $ ஒன்றற்கு

* விடப்படுவன - விடப்படும் பொருள்கள்

† கருத்து வேறுபாட்டால் - விடாதனவாக எண்ணிக்கொண்டிருத்தலால்;

‡ மன்என்னு மிடைசொல் எசசமாய்த 'தம்மால்..... துன்பமுறுகின்றது ஊழின் வலியான்' என்னும் ஒழிந்து நின்ற சொற் பொருளே யுணர்த்துதலால் ஒழியிசைப் பொருளதாயிற்று.

¶ இரண்டும்-நல்வினையின் பயனை யின்பமும், தீவினையின்பயனை துன்பமும்.

$ ஒன்றற்கு - நல்வினையின் பயனை இன்பத்திற்கு.

இயைந்தனுபவித்தல்* எனையதற்கு அது செய்யாது வருந்துதல் அறிவன் றென்பதாம். இவை மூன்றுபாட்டானும் இன்ப துன்பங்கட்குக் காரண மாய ஊழின் வலி கூறப்பட்டது.

தெளி:—(இ.ன்.) நன்று-நல்வினை, ஆங்கால்-பயன்தரும்போது, (அக் கல்வினையின் பயனை இன்பங்களே நீக்கும் வகையைத்தேடாது), நல்லவா-(இவ்வின்பங்கள்) நல்லவை யென்றியைந்து, காண்பவர் - அனுபவிப்பவர், அன்று - மற்றைத் தீவினை, ஆங்கால் - பயன் தரும்போது, (அத்தீவினை யின் பயனை துன்பங்களேயும் அப்படி யனுபவியாமல்), அல்லற்படுவது - (நீக்கும் வகையைத்தேடித்) துன்பப்படுவது, எவன்-யாது கினைத்தி, (எ-று).

(நல்வினை தீவினைகளை மக்கள்) தாமே முன்புசெய்துகொண் டமையா லும், (அவை) பயனைக் கொடாமல் கழியாமையாலும் இரண்டும் இயைந்து அனுபவித்தற்கு உரியவையாம்; அவ்விரண்டனுள் ஒன்றற்கு இயைந்து அனுபவித்தது மற்றதற்கு அது செய்யாமல் வருந்துதல் அறிவு அன்று என் பதாம். இவை மூன்று பாட்டாலும் இன்ப துன்பங்களுக்குக் காரணமாகிய ஊழின்வலி சொல்லப்பட்டது. இயைந்து - உடன்பட்டு.

(க - து.) நல்வினையின் வினைவை யியைந்தனுபவிப்பவர் தீவி னையின் வினைவை நீக்க முயலுதல் அறிவன்றென்பது.

9. How is it that those, who are pleased with good fortune, trouble themselves when evil comes, since both are equally the decree of fate?

க0. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

பரி:—(இ - ள்.) † தன்னை விலக்குதற்பொருட்டுத் தனக்கு மறு தலையாவதோ ருபாயத்தைச் சூழினும், தான் அவ்வுபாயமேயானும் பிறிதொன்றனும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும்; அத னால் ஊழ்போல மிக்கவலியுடையன யாவையுள, (எ-று).

‡ பெருவலி - ஆகுபெயர். சூழ்தல் - பலருடனும் பழுதற எண்ணு தல். செய்தற்கே அன்றிச் சூழ்தற்கும் அஃதி கொடா தென்றமையின் உம்மை எச்ச உம்மை. எல்லாம் வழியாக வருதலுடைமையின், ஊழே வலியதென்பதாம். இதனை ¶ அவ்விருவகை ஊழின் வலியும் பொதுவா கக் கூறப்பட்டது.

---

* எனையதற்கு அது செய்யாது-தீவினையின் பயனை துன்பத்திற்கு இசைக்தனுபவித்தல் செய்யாமல். † தன்னை - ஊழை.

‡ பெருவலி யென்பது மிக்கவலியையுடைய பொருள்களே யுணர்த்த லால் அடையடுத்த பண்பாகு பெயராம். பெருவலி என்பதில் பெருமை மையின் விகாரமாகிய பெரு என்பது அடை; வலி என்பது பண்பு.

¶ அவ்விருவகை ஊழ்வலியும் - பொருட்குக் காரணமாய ஊழின்வலி யும் இன்ப துன்பங்கட்குக் காரணமாய ஊழின் வலியும். இவ்வதிகாரத்

தெளி;—(இ - ன்.) மற்றொன்று-(தன்னை விலக்குதற் பொருட்டித் தனக்குப்)பகையாவதோருபாயத்தை, சூழினும்-ஆராய்ந்தாலும்,தான்-, முந்துறும்-(அவ்வுபாயத்தையாவது மற்றொன்றையாவது வழியாகக் கொண்டு வந்து அவ்வாராய்ச்சியின்) முற்பட்டு நிற்கும், (அதனால்), ஊழின் - ஊழ் போல, பெருவலி - மிகுந்த வலிமையுடைய பொருள்கள், யா-எவை, உள-இருக்கின்றன, (எ - று).

பெருவலி-அடையடுத்த பண்பாகு பெயர் சூழ்தல்(உயர்ந்தார்)பலருடனும் (ஐயந்திரிபென்னுங்) குற்றமொழிய யோசித்தல். ஊழானது தன்னை விலக்குதற்பொருட்டித்தனக்குப்பகையாவதோருபாயத்தைச்செய்வதற்கே யல்லாமல் ஆராய்வதற்கும் சமயங்கொடாதென்றமையால் சூழினுமென்ற உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. எல்லாம் ஊழ் வழியாக வருதலுடைமையால், ஊழே வலிமை யுடையதென்பதாம். இதனால் அவ்விருவகை ஊழினது வல்லமையும் பொதுவாகச் சொல்லப்பட்டது.


(க - து.) உயிர்களுக்கு வருவதெல்லாம் ஊழ்வழியாக வருதலின், அவ்வூழினும் வலிமையுடைய பிறபொருள்கள் வேறுமுளவோ வில்லை யென்பது.

1o. What is stronger than fate? If we think of an expedient to avert it, it will itself be with us before the thought.

அறத்துப்பால் முற்றிற்று.

அறத்துப்பாலினதிகாரத்தொகை 38; அவற்றுள், பாயிரம் 4. இலவறம் 20; துறவறம் 13; ஊழ் 1 ஆம்.

"பாயிர நான்கில் பகருமிருபான் பன்மூன்றிற்
றூய துறவறமொன் பானூழ்க - வாய
வறத்துப்பா லெல்லைகளா வாய்ந்தவைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவஞ்சேர்ந்து" என்பது திருவள்ளுவமாலை.



இன் ஆறுவது குறளின் விசேடவுரையில் "இவை யாறுபாட்டாறும் பொருட்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது" என்றும், ஒன்பதாவது குறளின் விசேடவுரையில் "இவை மூன்று பாட்டாலும் இன்பதன்பகுதிக்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது" என்றும் கூறியிருத்தல்பற்றி இருவகை ஊழ் என்பதற்கு ஆகூழ் போகூழ் என்று கூறிவிட்டாம்.

2. பொருட்பால்—ON PROPERTY.

1—அரசியல்—The duties of the King.

பரி:—இனி * இல்லறத்தின்வழிப் படுவனவாய பொருளின்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவானெடுத்துக் கொண்டார். அது தன் துணைக்காரணமாய அரசநீதி கூறவே அடங்கும். அரசநீதியாவது () காவலை நடாத்து முறைமை, அஃதே † அரசியல், ‡ அங்கவியல், § ஒழிபியலென மூவகைப்படுத்து, மலர்தலை யுலகிற் ¶ குயிரோர் பிறந்த அரசனதியல்பு இருபத்தைத் ததிகாரத்தாற் கூறுவான் தொடங்கி, முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

தெளி:—இனி இல்லறத்தின் வழியிற் பொருளுவனவாகிய பொருளின்பங்களில் இம்மைப்பயனும் மறுமைப்பயனும் தருவதாகிய பொருளைச் சொல்லவெடுத்துக் கொண்டார். அப்பொருள் தனக்குத் துணைக் காரணமாயுள்ள அரசரிற் சொல்லலே அடங்கும். அரசநீதியாவது காவலே முதலிய முறைமையாம். அம்முறைமையை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்று மூவகை பிரிவாக்கி, பரந்த விடத்தையுடைய வுலகத்திற் குயிர்போற் சிறந்துள்ள அரசனதி தன்மையை இருபத்தைந் ததிகாரத்தாற் சொல்லத்தொடங்கி, முதலில் இறைமாட்சி சொல்லுகின்றார். அரசநீதி - ராஜதருமம்.

* பொருளும் இன்பமும் துறவறத்திற் குரியவல்லவாகலின் 'இல்லறத்தின்வழிப் படுவனவாய பொருளின்பங்கள்' என்று கூறப்பட்டது.

() காவலே - குடிகளை யிரட்சித்தலே.

† அரசியல் - அரசனது தன்மையைச சொல்லும் பிரிவு.

‡ அங்கவியல் - அரசனுக்கு அங்கமாயுள்ள மந்திரி முதலியவர்களது தன்மையைச் சொல்லும் பிரிவு.

§ ஒழிபியல் - அரசியலிலும் அங்கவியலிலும் அடங்காதவற்றைச் சொல்லும் பிரிவு.

¶ அரசன் உலகிற் குயிர் போன்றவனென்பது புறநானூறு "நெல்லு முயி ரன்றே நீரு முயி ரன்றே, மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்" என்றும், இராமாயணம் "தன்னுயி ராமென வுலகிற் றந்திய, மன்னுயி ரனைத்தையும் புரக்கு மாட்சியான்" என்றும், பெரியபுராணம் "மண்ணில் வாழ்தரு மன்னுயிர் காட்கெலாங், கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்" என்றும் கூறுவதனாலு மறிதற்பாற்றும்.

முதல் அதிகாரம்.

இறைமாட்சி:—*Kingly Excellence.*

பரி:—அஃதாவது அவன்றன் நற்குண நற்செய்கைகள். * உலக பாலர் உருவாய் நின்று உலகங்காத்தலின் 'இறை' என்றார். ¶¶ "திரு வுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்று ‡ பெரியாரும் பணித்தார்.

தெளி:—அஃதாவது அவ்வரசனது நற்குண நற்செய்கைகள். (அரசன்) உலகபாலர் வடிவாய் நின்று உலகத்தைக் காத்தலால் (அவனை)'இறை' என்று கூறினர். திருமாலினம்சமே அரசர்க ளென்று பெரியாரும் கூறியிருக்கின்றனர். இறை - கடவுள்.

க. படைகுடி கூழமைச்சு நட்பர ணுறு
முடையா னரசரு ளேறு.

பரி:—(இ - ள்.) படையுங் குடியுங் கூழும் அமைச்சும் நட்பும் அரணுமென்று சொல்லப்பட்ட ஆறங்கங்களையும் உடையவன் அரசருள் ஏறுபோல்வான், (எ-று).

ஈண்டுக் குடியென்றது அதனையுடைய நாட்டினை. § கூழென்றது அதற்கேதுவாய பொருளை. ¶ அமைச்சு, நாடு, () அரண், பொருள், [] படை, நட்பென்பதே † முறையாயினும், ஈண்டிசை செய்யுள் நோக்கிப் பிறழவைத்தார். 'ஆறமுடையான்' என்றதனால், அவற்றுள் ஒன்று இல்வழியும் அரசனீதி செல்லாதென்பது பெற்றாம். வடநூலார் இவற்றிற்கு அங்கமெனப்

* உலகபாலர் உருவாய் நின்று உலகங்காத்தலின் - உலகத்தைக் காப்பவராய இந்திரன் முதலிய விமையவர்களின் அம்சமாய்நின்று உலகத்தைப் பாதுகாத்தலால், இது மனுதர்மசாஸ்திரம் ஏழாவதத்தியாயம் அரசன் சிறப்பில் "இந்திரன், வாயு, யமன், சூரியன், அக்னி, வருணன், சந்திரன், குபேரனென்னு மிவர்களினம்சங்களினுலேயே அரசனுண்டாக்கப்பட்டான்" "இப்படிப்பட்ட தேவர்களினம்சமாகையால் அரசன் மக்களியாவரினும் அதிக காந்தியுள்ளவனுகவும் அனைவரையும் ஆளத்தக்க வீரியமுள்ளவனுகவு மிருக்கிறான்" என்று கூறுவதாலு மறிதற் பாற்றும்.

¶¶ திருவாய் மொழி 34-ம் பதிகம் 8-வது செய்யுள். இதன்பொருள் (இப்பெண்) திருவையுடைய அரசரைக் கண்டால் திருமகள் மணாளனென விஷ்ணுவைக் கண்டே னென்று கூறுவாள் என்பது. திரு என்பது கண்டாரால் விரும்பப் படுதன்மை.

‡ பெரியார் - நம்மாழ்வார். § கூழ் - உணவு. ¶ அமைச்சு - மந்திரி.

() அரண்-நாட்டிற்குக் காவலான மதில்முதலியன. [] படை-சேனை.

† அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பென்பதே முறையாமென்பது அங்கவியலில் 1-வது அதிகாரம் அமைச்சாகவும், 11-வது அதிகாரம் நாடாகவும், 12-வது அதிகாரம் அரணாகவும், 13-வது அதிகாரம்

பெயர் கொடுத்ததூஉம் அது நோக்கி. ஏதென்பது உபசாரவழக்கு. இதனால் அரசர்க்கங்கமாவன † இவை யென்பதூஉம் இவைமுற்றும் உடைமையே அவன் வெற்றிக் கேது வென்பதூஉங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) படை - படையும், குடி - குடியும், கூழ் - கூழும், அமைச்சு - அமைச்சும், நட்பு - நட்பும், அரண் - அரணும், (என்று சொல்லப்பட்ட), ஆறும் - ஆறங்கங்களேயும், உடையான் - உடையவன், அரசருளேறு - மன்னருள் ஆண்சிங்கம் போல்வானவன், (எ - று).

இவ்வுரை குடியென்றதை அக்குடியை யுடைய நாட்டினை. கூழ் என்றதை அக்கூழிற்குக் காரணமான பொருளை. அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்று சொல்லுவதே இரமமாயினும், இங்குச் செய்யுள் நோக்கி 'படைகுடி கூழமைச்சு நட்பரண்' என் றம்முறை தவறவைத்தார். 'ஆறுமுடையான்' என்ற கூறியதினால், அவ்வாறனுள் ஒன்றில்லாதவிடத்தும் அரச னீதி நடவாதென்பது பெறப்பட்டது. வடநூலார் இவ்வாறனுக்கும் அங்கமெனப் பெயர் கொடுத்ததும் அவ்வாறனுள் ஒன்றில்லாதவிடத்தும் அரசனீதி சொல்லாதென்பது நோக்கி யென்க. எறு போன்ற வராசனை எறு என்று கூறியது உபசார வழக்காம். இதனால் அரசனுக்கு அங்கமாவன இவை யென்பதும், இவை முழுதுமுடைத்தா

பொருள் செயல் வகையாகவும், 14-வது அதிகாரம் படைமாட்சியாகவும், 16-வது அதிகாரம் நட்பாகவும் இருத்தலினாலும், 1 - வது அதிகாரத்தின் அவதாரிகையில் "அவையாறனுள்ளும் 'காவற்சாகாவிகைத்தற்' கண் அவ்வராசற்கினியாய அமைச்சனியல்பு பத்தாதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி முதற்கண் அமைச்சு கூறுகின்றார்" என்றும், 11-வது அதிகாரத்தின் அவதாரிகையில் "இனி யவ்வராசனாலும் அமைச்சனாலும் கொண்டுய்க்கப்படுவதாய் வேனயாண முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றாய நாடு ஒராதிகாரத்தாற் கூறுகின்றார்" என்றும், 12-வது அதிகாரத்தின் அவதாரிகையில் "இனி யநாட்டிற்குறுப்பா யடங்குமாயினும் பகைவராற் றொலைவுவத்துழி அது தனக்கும் அரசன்றனக்கும் எமமாதற் சிறப்புப்பற்றிப் பிறிதோரங்கமாக வோதப்பட்ட அரண் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்" என்றும், 13-வது அதிகாரத்தின் அவதாரிகையில் "இனிப் பெரும்பாண்மையும் நாட்டானும் அரணனும் ஆக்கவும் காக்கவும் படுவதாய பொருளைச் செய்தலின்றிறம் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்" என்றும், 14-வது அதிகாரத்தின் அவதாரிகையில் "இனியப்பொருளினுவதாய் வெல்வதாயபடை இரண்டதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி முதற்கண் படைமாட்சி கூறுகின்றார்" என்றும், 16-வது அதிகாரத்தின் அவதாரிகையில் "இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்ததவுவதாய நட்பினை .....கூறுகின்றார்" என்றும் பரிமேலழகர் கூறுதலினாலும் நன்குவினங்கு மென்க.

† இவை - அமைச்சு முதலிய அங்கங்கள்.

யிருத்தலே அவ்வரசனது வெற்றிக்குக் காரண மென்பதும் சொல்லப் பட்டன. குடி - குடிச்சனங்கள்.

(க - து.) அமைச்சு முதலிய ஆறங்கங்களுங் குறைவின்றி யிருப்பவனே அரசருட் சிறந்தவனென்று கூறியது.

1. He who possesses these six things, an army, a people, wealth, ministers, friends and fortress is a lion among kings.

உ. அஞ்சாமை யீகை யறிவுக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

பரி:—[இ - ள்.) அரசனுக்கியல்பாவது * நிண்மையும் கொடையும் அறிவும் ஊக்கமுமென்னும் இந்நான்கு குணமும் மிடைவிடாது நிற்றல், (எ - று).

ஊக்கம் - வினை செய்தற்கண் மனவெழுச்சி. † இவற்றுள், அறிவு ஆறங்கத்திற்கும் உரித்து; ஈகை படைக்குரித்து; ஏனைய வினைக்குரிய. ‡ உயிர்க்குணங்களுள் ¶ ஒன்றுதோன்ற வேனைய அடங்கிவரும்; அவற்றுள், $ இவையடங்கின், அரசற்குக் கெடுவென பலவாமாகலின், இவை எப்பொழுதுந் தோன்றி நிற்றல் இயல்பாக வேண்டுமென்பார் 'வஞ்சாமை வேந்தற்கியல்பு' என்றார்.

தெளி:—(இ - ள்.) வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயல்பாவது, அஞ்சாமை - இண்மையும், ஈகை - கொடையும், அறிவு - விவேகமும், ஊக்கம் - மனவெழுச்சியும், இந்நான்கும் - (என்னும்) இந்த நான்கு குணங்களும், எஞ்சாமை - மிடைவு நீங்காது நிற்றலாம், (எ - று).

ஊக்கம் - மேற்கொண்ட காரியத்தைச் செய்து முடிப்பதில் மனவெழுச்சி. இவற்றுள், அறிவு அமைச்சு முதலிய ஆறங்கங்களுக்கும் உரியது; ஈகை படைக்கு உரியது; மற்றையனவாய அஞ்சாமையும் ஊக்கமும் (போர் முதலிய) தொழிலுக்குரியன. உயிர்க்குணங்களுள் ஒன்று தோன்ற மற்றவை அடங்கிவரும்; அவற்றுள், இக்குணங்கள் அடங்கினால், அரசனுக்குக் கெடுவென பலவாம் ஆதலால், இவை எப்பொழுதும் தோன்றி நிற்றல் இயல்பாக வேண்டுமென்பார் 'எஞ்சாமை வேந்தற்கியல்பு' என்றார்.

* இண்மை—கலங்காமை. † இவற்றுள் - அஞ்சாமை முதலிய நான்கனுள்.

‡ "அது (உயிர்) சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தனம், தர்மம், அதர்மம், (பாவனை யென்னும்) சம்ஸ்காரம் என்னும் பதினைந்து குணங்களுடையதாம்" என்பது தருக்க சௌமுதி.

¶ சுகந் தோன்றியபோது துக்க முதலியனவும், துக்கந் தோன்றிய போது சுகமுதலியனவுந் தோன்றாது நிற்றலுணர்த்துதற்பாற்றும்.

$ இவை - அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கமென்பன.

தெளி:—(இ-ன்.) நிலனுள்பவற்கு - பூமியையாளுந் திருவினையுடை வனுக்கு, தூங்காமை (உடைமை) - (அக்காரியங்களில்) விரைவுடைமை யும், கல்வி (உடைமை) - (அக்காரியங்களே அறிதற்கேற்ற) கல்வியுடை மையும், தாணி வுடைமை - ஆண்மையுடைமையும், (ஆகிய), இம்மூன்றும்- இம்மூன்று குணங்களும், நீங்கா - (ஒருபோதும்) நீங்காவாம், (எ-று).

கல்வியது கூறுபாடு மேலே சொல்லப்படும். ஆண்மையாவது ஒன்றை யும் பாராமல் விரைவாகத் தணிந்து செய்வதாகலால், உலோத இங்கு உப சார வழக்குப்பற்றித் 'தணிவு'என்று கூறப்பட்டது மூன்று மென்ற வும் மை இறந்தது தழுவிய வெச்ச வும்மை, இம்மூன்றனுள், கல்வி ஆறங்கத் திற்கும் உரியது ; மற்றவை தொழிலுக்குரியன. நீங்காவென்பதற்கு முன் னர் எஞ்சாமை யென்பதற்கு உரைத்தபடி உரைத்துக் கொள்க.

(க - து.) தூங்காமை முதலிய மூன்றும் அரசனுக்கு நீங்கா திருக்கத்தக்க குணங்களாம் என்பது.

3, Vigilance, learning and bravery, these three things, should never be wanting in the ruler of a country.

ச. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

பரி:—(இ - ள்.) * தனக்கோதிய அறத்தினின் வழுவாதொழுகி அறனி அல்லவை தன்னெட்டின்கணொன்றும் நிகழாமற் கடிந்து வீரத்தின் வழுவாத தாழ்வினிமையினை யுடையான் அரசன், (எ - று).

அவ்வறமாவது † ஓதல், வேட்டல், ஈதலென்னும் பொதுத்தொழிலி னும், ‡ படைக்கலம் பயிறல் பல்லியிசோம்பல், பகைத்திறந்தெறுதலென் னுஞ் சிறப்புத் தொழிலினும் வழுவாது நிற்றல். ¶ "மாண்டா—அறநெறி முதற்றே யரசின் கொற்றம்" என்பதனால் () இவ்வறம பொருட்குக்காரண மாதலறிக. அல்லவை-கொலை, களவு [] முதலாயின. ¶¶ குற்றமாய மான

* தனக்கோதிய—அரசனுகிய தனக்குச்சொன்ன.

† ஓதல், வேட்டல், ஈதலென்னு மூன்று தொழிலும் பிராமணர்முத லியவர்க்கும் உரியனவாக விருத்தல்பற்றி 'ஓதல், வேட்டல்,ஈதல் என்னும் பொதுத் தொழிலினும்' என்று கூறப்பட்டது.

‡ "தலைமையுங் கொடையொடு தறுக ணண்மையும், நிலைமையுங் கீழ்ப்படா நெஞ்சி னீட்டமுங், கொலைபயில் போர்களிற் புறங்கொ டாமை யுஞ், சிலைமலி தோளினு யரசர் செய்கையே" என்பது பகவதகீதை.

¶ புறநானூறு - ஒரு. இதன்பொருள், மாட்சிமைபபட்ட அறநெறி (தருமவழி)யை முதலாகவுடைத்தி, வேந்தரது வெற்றி என்பது.

() இவ்வறம் - அரசற்குரிய தருமம்

[] முதலாயின என்றதனால் சூதாடல், வியபிசாரஞ் செய்தல், மது பானஞ் செய்தல் முதலியவற்றையுங் கொள்க.

¶¶ குற்றமாயமானம்-"அந்தணர் சான்றோ ரருந்தவத்தோர் தம்முன்

*தந்தி னீக்குதற்கு 'மறனிழுக்கா * மானம்'என்றார் ; அஃதாவது † "வீறின் மையின் விலங்காமென மதவேழமு மெறியா, னேறுண்டவர் கிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான், மாறண்மையின் மறம்வாடுமென் றிலையா ரையு மெறியா, ஞறண்மையின் மூதியாரையு மெறியாயி லுழவன்" எனவும் ‡ "அழியுகர் புறக்கொடை யயில்வே லோச்சான்" எனவுஞ் சொல்லப்படுவது. ¶ அரசு - அரசனது தன்மை ; அஃது உபசாரவழக்கால் அவன்றன்மே னின்றது.*

தெளி:—(இ - ள்.) அறன் - (தனக்குக்கூறிய) அறத்தில், இழுக்காது - தவறுது (தடந்து), அல்லவை - அறமல்லாதவற்றை, நீக்கி-(தனது நாட்டிடத்தும் உண்டாகாமல்) ஒழித்து, மறன் - வீரத்திலிருந்து, இழுக்கா - தவறுத, மானம் - மானத்தை (தாழுதலில்லாமையை), உடையது - உடையவன், அரசு - அரசனுவான், (எ - று).

அவ்வறமாவது வேதமோதல், வேள்வி செய்தல், ஈதல் என்னும் பொதுத் தொழில்களிலும், படைக்கலம் பயிலல், பல்லுயிரோம்பல், பகைத்திற மழித்தல் என்னுஞ் சிறப்புத் தொழில்களிலும் தவறுது நிற்றல். இவ்வறம் பொருளுக்குக் காரணமாதலறிக. அல்லவை கொலை களவு முதலான வை. குற்றமாகிய மானத்தினின்று நீக்குதற்கு 'மறனிழுக்கா மானம்' என்றார். அரசு - அரசனது தன்மை ; அஃது உபசாரவழக்கால் அவ்வரசன் மேல் நின்றது.

னேஞர் தந்தைதா யென்றிவரை வணங்காமையும், முடிக்கப்படா தாயினும் கருதியது முடித்தே விடுதலு முதலாயின". இது "இவறலு மாண்பிறந்த மானமும்" என்னும் குறளின் விசேட வுரையிலுள்ளது.

** மானதநிற் கிலக்கணம் மானமென்னு மதிகாரத்தின் அவதாரிகையில் 'அஃதாவது எஞ்ஞான்றும் தாழ்வெயிற் றுழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிரவாழாமையுமாம்" என்று கூறப்பட் டிருக்கின்றது.*

† சீவகசிந்தாமணி மண்மகளிலம்பகம் காண்க. இதன்பொருள் "(தனக் கெதிர்ப்பாரின்மையின்) வேலுழவன் மதவேழத்தை யெறிந்தாலும் விலங்கை யெறிந்தா னெனப்பொன்று கின்றதி, அதனுலே வெற்றியின்மையின் வேழத்தையும் வெட்டானுய், முன்பு வெட்டினவர் தனக்கு ஒப்பாராயினும் பிறர்படை தின்றின எச்சிலென்று அவரையும் வெட்டானுய்த், தனக்கிளையாரையும் கிகரன்மையின் மறம்வாடுமென்று வெட்டானுய், அறமன்மையிற் றன்னின் மூத்தோரையும் வெட்டானுய் நின்றுனென்க என்பதா. [இது நச்சினர்க் கினியருரை].

‡ புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சிப்படலம் உம - வது வெண்பாவின் கொளு (கருத்து). இதன்பொருள் (தனக்குச்) கெட்டோடுவாரது முதுகினிடத்தில் கூரியவாலே யெறியாதவீரன் என்பது.

¶ அரசனது தன்மையை அரசனென்று கூறுதல் குணம் குணியாய உபசார வழக்கு. தன்மை - குணம். அரசன் - குணி; பண்பாகு பெயருமாம்.

(க - து.) தனக்கோதிய தருமத்திற் றவறுதொழுகித் தீயன வற்றை யொழித்து வீரத்திற் குறையாது மானத்தோ டிருப்பன் அரசனுவான் என்பது.

4. He is a king who, with manly modesty, swerves not from virtue, and refrains from vice.

ரு. * இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

பரி:—(இ - ள்.) தனக்குப் பொருளுகள் வரும்வழிகளே மேன்மே லுளவாக்கலும், அங்ஙனம் வந்தவற்றை ஒருவழித் தொகுத்தலும், தொகுத்தவற்றைப் பிறர் கொள்ளாமற் காத்தலும், காத்தவற்றைஅறம் பொரு ளின்பங்களின் பொருட்டு விடுத்தலும் . வல்லவனே அரசன்.

ஈட்டல், காத்தல், வகுத்தலென்றவற்றிற் கேற்ப 'இயற்றல்' எனப தற்குச் செய்யப்படு பொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன: மணி, பொன், நெல் முதலாயின. அவைவரும் வழிகளாவன: பகைவரை யழித்த லும், † திறைகோடலும், தன்னுடு தலையளித்தலும் முதலாயின. பிறரென்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினுளை. கடவுளர், அந்தணர், வறியோரென் றிவர்க்கும் புகழிற்குங்கொடுத்தலே அறப் பொருட்டாகவும், யானை குதிரை படை காடு அரணென் றிவற்றிற்கும் பகையொடு கூடலிற் பிரிக்கப்படுவார்க்கும் தன்னிற் பிரிதலிற் கூட்டப் படுவார்க்குங் கொடுத்தலைப் பொருட் பொருட்டாகவும், மண்டபம் ‡ வாவி § செய்குன்று ¶ இளமரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களான் நுகர்வனவற்றிற்குங் கொடுத்தலே இன்பப் பொருட்டாகவுங் கொள்க. இயற்றன் முதலிய தவறுமற் செய்தல் அரிதாகலின் 'வல்லது' என்றார். இவை நான்குபாட்டானும் மாட்சியே கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இயற்றலும் - (தனக்குப் பொருள்கள் வரும்வழி களே மேலுமேலும்) உண்டாக்கலும், ஈட்டலும் - (அவ்வாறுவந்த பொருள் களே ஓரிடத்தில்) சேர்த்துவைத்தலும், காத்தலும் - (சேர்த்துவைத்த பொ ருள்களைப் பிறர் கொள்ளாமல்) காத்தலும், காத்த-காத்துள்ளபொருள்களே, வகுத்தலும் - (அறம் பொருளின்பங்களின் பொருட்டுச்) செலவு செய்த லும், வல்லது - வல்லவனே, அரசு - அரசனுவன், (எ - று).

* "அரசன் அடையப்படாத பொருளைச் சம்பாதிக்க விரும்பவேண் டும்; சம்பாதித்த பொருளை முயற்சியோடு காப்பாற்ற வேண்டும்; காப்பா ற்றியபொருளை விருத்திசெய்ய வேண்டும்; விருத்திசெய்த பொருளைச் சற் பாத்திரத்தில் செலவு செய்யவேண்டும்" என்பது மநுதர்ம சாஸ்திரம், ஏழாவதத்தியாயம். † திறை - வரி. ‡ வாவி - குளம்.

§ செய்குன்று - செயற்கை மலை. (மலைபோல் கட்டப்பட்டது).

¶ இளமரக்கா - இளமையாய மரங்களை யுடைய சோலை (உத்தவனம்).

ஈட்டல், காத்தல், வகுத்தல் என்பவற்றிற்குப் பொருந்த 'இயற்றல்' என்பதற்குப் பொருள்கள் வரும் வழிகளே என்னும் செய்ப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன: மணி, பொன், நெல் முதலான வை. அப்பொருள்கள்வரும் வழிகளாவன: பகைவரை யழித்தலும், இறை கொள்ளலும், தன்னுட்டைக்காத்தலும் முதலானவை. பிறரென்றதுபகை வர், கள்வர், சுற்றத்தார், தொழில்செய்வோர் முதலானவரை. கடவுளர் அந் தணர் வறியோர் என்கிற இவர்க்கும் புகழிற்கும் கொடுத்தலே அறத்தின் பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் என்கிற இவற்றிற் கும் பகைவரோடு கூடுதலினின்றும் பிரிக்கப்படுவார்க்கும் தன்னை விட்டுப் பிரிதலினின்றும் கூட்டப்படுவார்களும் கொடுத்தலைப் பொருளின் பொ ருட்டாகவும், மண்டபம் வாவி செய்குன்று இளமரக்கா முதலாயினவற் றைச்செய்தற்கும் ஓம்பொறிகளால் அனுபவிப்படனவற்றிற்கும் கொடுத் தலே இன்பத்தின் பொருட்டாகவும் கொள்க. இயற்றுதல் முதலாயின வற்றைத தவறுமந் செய்தல் அரிதாகலால் 'வல்லது' என்றார். இவை நான் கு பாட்டாலும் அரசனது நற்குண நற்செய்கைகளாகிய மாட்சியே சொல் லப்பட்டது.

(க - து.) இயற்றல் முதலியவற்றுள், திறமையுள்ளவன் அரசனென்பது.

5. He is a king who is able to acquire wealth, to lay it up, to guard and to distribute it.

க. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

பரி:—(இ - ள்.) முறைவேண்டினோர்க்குங் குறை வேண்டினோர்க்குங் காண்டற்கெளியனாய் யாவர் மாட்டுங் கடுஞ்சொல்ல னல்லனுமாயின், அம்மன்னனது நிலத்தை எல்லா நிலங்களினும் உயர்த்துக்கூறும் உல கம், (எ - று).

முறைவேண்டினர்-* வலியரான்கலிவெய்தினர். குறைவேண்டினர்-யாமையுற்றிரந்தார். காண்டற் கெளிமையாவது பேரத்தானிக்கண் அந் தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியுடையனாயிருத்தல். கடுஞ் சொல் - † கேள்வியினும், ‡ வினையினுங் கடியவாய சொல். § நிலம் மீக்

* வலியரான்கலிவெய்தினர்-தம்மின் வலியவரால் வருத்தமடைந்து வந்தவர்.

† கேள்வியினும் வினையினும் கடியவாயசொல் என்பதில் கேள்வியிற் கடியவாயசொல்—கேட்பதற்குப் பிரியமாகாத சொல் எனவும், வினையிற் கடியவாய சொல்—தொழிலில் தீமையைத் தருவதாயசொல் எனவும் கொள்க.

‡ வினையினும் என்றும் பாடமுண்டு.

§ நிலத்தை யென்றும் பாடமுண்டு.

கூறும் எனவே, மன்னனே மீக்கூறுதல் சொல்லவேண்டாவாயிற்று. மீக் கூறுதல் இவன் காக்கின்ற நாடு பசி, பிணி, பகை முதலிய வினறி யாவர்க்கும் பேரின்பந் தருதலின் தேவருலகினும் நன்றென்றல். உலகமென்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது.

தெளி:—(இ - ள்.) காட்சிக்கெளியன்- (அரசன் முறைவேண்டினர்க்கும் குறைவேண்டினர்க்கும்) காணுதற்கு எளியவனும், கடுஞ்சொல்லனல்லனேல் - (யாவரிடத்தும்) கடுஞ்சொல்கூறுபவனல்லாதவனுமாயிருந்தால், நிலம் (அவ்வரசனது) நிலத்தை, (உலகம்), மீக்கூறும் (எல்லா வுலகங்களிலும்) உயர்த்திச்சொல்லும், (எ - று).

முறைவேண்டினர்.—வலியரால் தன்பமடைந்தவர். குறைவேண்டினர்.— தரித்திரமடைந்து யாசித்தவர். காணுதற்கெளியையாவது(முறை வேண்டினருங் குறைவேண்டினருங் காணபதற்குப்) பெரிய அரசாட்சி மண்டபத்தில் அந்தணர் சான்றோர் முதலாயினோடு சமயமுடையவனுயிருத்தல். கடுஞ்சொல் - கேள்வியிலும் தொழிலிலும் கடுமையாகிய சொல். நிலமீக்கூறும் (நிலத்தை உயாத்திச சொல்லும்) எனவே, மன்னனே மீக்கூறுதல (உயாத்திச்சொல்லுதல்) சொலல வேண்டுவதில்லையாயிற்று. உலக மீக்கூறுதல் (உயர்ந்தோர் உயர்த்திச சொல்லுதல்) இவன் காக்கின்ற நாடு பசி, பிணி, பகை முதலாயின வில்லாமல் யாவர்க்கும் மிகுத வின்பந்தருதலால் சுவர்க்கத்திலும் சிறந்ததென்று சொல்லுதல். மீக்கூறும் என்னும் பயனிலைக்கேற்ப உலகம் என்னும் எழுவாய் வருவிக்கப் பட்டது.

(க - து.) காணுதற் கெளியனும் இன்சொற் சொல்பவனுமுள்ள அரசன் உயர்ந்தோராற் புகழப் படுவான் என்பது

6. The whole world will exalt the country of the king who is easy of access, and whose words are free from harshness.

எ. ‡ இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றன்கண் டனைத்திவ் வுலகு.

பரி:—(இ - ள்.) இனியசொல்லுடனே ஈதலைச்செய்து அளிக்க வல்ல அரசனுக்கு இவ்வுலகந் தன் புகழோடு மேவித் தான் கருதிய அளவிற்றும், (எ - று).

‡ இன்சொலால் தன்செலால் என்பவைற்றின் ஆல் உருபு "அறத்தான் வருவதே இன்பம்" என்றதுபோல உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது.

இன்சொல் - * கேள்வியினும் † வினையினும் இனியவாய சொல். ஈதல் - வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுத்தல், அளித்தல் - தன்பரிவாரத்தானும் பகைவராலும் கலிவுபடாமற்காத்தல். இவை அரியவாகலின் 'வல்லாற்கு' என்றும், அவன் மண்முழுதிம் ஆளுமாகலின் 'இவ்வுலகு' என்றுங் கூறினர். கருதிய அளவிற்ருதல் - கருதிய பொருளெல்லாஞ் ‡ சுரத்தல்.

தெளி:—(இ - ன்.) இன்சொலால் - இனிய சொல்லுடனே, ஈத்து-ஈதலைச் செய்து, அளிக்க—, வல்லாற்கு - வல்ல அரசனுக்கு, இவ்வுலகு - இந்தவுலகமானது, தன்சொலால் - தன்புகழோடு, (பொருந்தி), தான்கண்டனைத்து - தான் கினைத்த அளவினதாகும், (எ - று).

இன்சொல் - கேள்வியிலும் தொழிலிலும் இனிமையாகிய சொல். ஈதல் - வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றைக் கொடுத்தல். அளித்தல் - (குடிகளை) தன் பரிஜனத்தாலும் பகைவராலும் வருத்தமடையாவாறு காத்தல் (இன்சொல்லுடனே ஈதலுமளித்தலுமாகிய) இவைசெய்தல் அரியனவாகலால் 'வல்லாற்கு' என்றும், அவன் பூமி முழுதும் ஆளுவானாகலால் 'இவ்வுலகு' என்றும் சொல்லினர். கினைந்த வளவினதாதல் - கினைத்த பொருளெல்லாங் கிடைக்கப்பெறுதல்.

(க - து) இனிய சொல்லுடன் ஈதலைச் செய்து குடிகளைக் காத்தளிக்கவல்ல அரசனுக்கு கினைத்தனவெல்லா முண்டாகும்.

7. The world will praise and submit itself to the mind of the king who is able to give with affability, and to protect all who come to him.

அ. § முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

பரி:—(இ - ள்.) தான் முறைசெய்து பிறரை நலியாமற் காத்தலை யுஞ் செய்யும் அரசன் பிறப்பான் மகனேயாயினும், செயலான் மக்கட்குக் கடவுளென்று வேறு வைக்கப்படும், (எ - று).

முறை - ¶ அறநூலும் நீதிநூலுஞ் சொல்லும் நெறி. பிறரென்றது

* கேள்வியினும் வினையினும் இனியவாய சொல் என்பதில் கேள்வியி னினியவாய சொல்—கேட்பதற்குப் பிரியமான சொல் எனவும், வினைபி னினியவாய சொல்—தொழிலில் நன்மையைத் தருவதாயசொல் எனவும் கொள்க.

† வினையினும் என்றும் பாடமுண்டு. ‡ சுரத்தல் - மேன்மேலுண்டாதல்.

§ நீதிநெறிவிளக்கம் (உ எ - வது செய்யுள்) "அனைவோர்க்குந் தெய்வம், இலேமைப் பைம்பூ ணிறை" என்று கூறுகின்றது.

¶ அறநூல் - மனு தரும சாஸ்திர முதலியன ; நீதிநூல் - சுக்கிரநீதி முதலியன.

* மேற்சொல்லியாரை. வேறுவைத்தல் - மக்களிற்பிரித்து உயர்த்து வைத்தல்.

தேவி:—(இ - ன்) முறைசெய்து - (தான்) முறைசெய்து, காப்பாற் றும் - (பிறர் வருத்தாமற்) காத்தலேயுஞ் செய்யும், மன்னவன் - அரசன், (பிறப்பினால் மனிதனேயாயினும்), மக்கட்கு - மனிதர்களுக்கு, இறையெ ன்று-(செயலினால்) கடவுளென்று, வைக்கப்படும் - (வேறு) வைக்கப்படு வான், (எ - று).

முறை - அறநூலும் நீதிநூலும் சொல்லும் வழி. பிறரென்று கூறி யது முன்னர்க்கூறியவரை. வேறு வைத்தல் - (முறைசெய்து காப்பாற்று மன்னவனை) மனிதரிற் பிரித்து உயர்த்தி வைத்தல்.

(க - து.) முறைப்படி குடிகளைக்காக்கும் அரசன் அக்குடி களுக்குத் தெய்வமென் றுரைக்கப்படுவான் என்பது.

8. That king will be esteemed a God among men, who performs his own duties and protects his subjects.

கூ. † செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

பரி.—(இ - ள்.) ‡ இடிக்குந் துணையாயினர் சொற்களைத் தன் செவி பொறுதாகவும் விளைவு நோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது குடைநிழற்கண்ணே தங்கும் உலகம், (எ - று).

செவிகைப்ப என்றதற்கேற்ப § இடிக்குந்துணையாயினர் என்பது வருவிக்கப்பட்டது. ¶ காவின் புலத்தைச் செவிமேலேற்றிக் 'கைப்ப' என்

* மேற்சொல்லியாரை என்றது இவ்வதிகாரத்தின் எ - வது குற ளின் விசேட வரையில் "தன் பரிவாரத்தானும் பகைவரானும்" என்று கூறப்பட்டவர்களை.

† செவிவெறுப்ப என்னுது செவிகைப்ப என்றது பண்பு புலன்மா றிய உபசார வழக்காம். "மருளுமகாரணம்" என்னுஞ் செய்யுளிலுரையில் பிரயோக விவேக நூலார் "இன்சொல், வன்சொல், மதாகவி, செவிகைப் பச் சொற்பொறுக்கும் என்னும் உபசாரங்களெல்லாம் பண்பு புலன்மாறி வந்தன" என்றனர்.

‡ இடிக்குந்துணையாயினர் - பாவங்களும் நீதியல்லனவுமாய செயல் களைக் கண்டவிடத்து நெருங்கிக்கண்டித்துப் புத்தி சொல்லும் துணையாக தன்மையா யிருப்பவர்.

§ இடிக்குந்துணை என்றும் பாடமுண்டு.

¶ காவின்புலத்தைச் செவிமேலேற்றிக் 'கைப்ப' என்றார் - காவிக் கிரியத்திற்கு விஷயமான கைப்பினை (கசப்பை)ச் செவியிந்திரியத்தின் மீதேற்றிச் 'செவிகைப்ப' என்றார் என்பது. இங்கு காவின் விஷயம்

ரூர். பண்புடைமை—விசேடவுணர்வினனுதல். † அறநூல்களிற் றவருமை யின் மண்முழுதுந் தானேயாளு மென்பதாம்.

தேளி:—(இ - ன்.) சொல் - (கண்டித்துப் புத்திசொல்லுந் துணை யாயினவர்) சொற்களை, செவிகைப்ப - (தன்) செவி பொறுக்காகவும், பொறுக்கும் - (அச்சொற்களின் பயனேதோக்கிப்) பொறுக்கும், பண்புடை - நற்குணமுடையை, வேந்தன் - அரசனது, கவிகைக்கீழ் - குடையின் நிழ லிலே (அரசாட்சியின் கீழே), உலகு - உலகமானது, தங்கும்-நிலைபெறும்.

செவிகைப்ப என்பதற்குப்பொருந்தக் கண்டித்துப் புத்திசொல்லுந் துணையாயினவர் என்பது வருவிக்கப்பட்டது. நாவின் விஷயமான கைப் பைச் செவியின்மே லேற்றிச் 'செவிகைப்ப' என்றார். பண்புடைமை - சிறப்பறிவுடையவனுதல். அறநூல் நீதிநூல் கூறியவழியில் தவரு தொழு குதலால், பூமிமுழுதும் தானே ஆளுவானென்பதாம்.

(க - து.) அமைச்சர் முதலாயினோர் கண்டித்துச் சொல்லும் புத்தியைக் கேட்குமரசன் உலகமுழுதும் ஆளுவான் என்பது.

9. The whole world will dwell under the umbrella of the king who can bear words that embitter the ear.

கo. கொடையளி செங்கோல் குடியோம்ப னுன்கு
முடையானும் வேந்தர்க் கொளி.

பரி:—(இ - ள்.) வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுத்தலும் * யாவர் மாட்டுந் தலையளி செய்தலும், முறைசெய்தலும், தளர்ந்த குடிகளைப் பேணலுமாகிய இந்நான்கு செயலையும் உடையவன் வேந்தர் தர்க்கேல்லாம் விளக்காம், (எ - று).

தலையளி - முகமலர்ந்தினிய கூறல். ‡ செவ்வியகோல்போறலின் 'செங்கோல்' எனப்பட்டது. குடியோம்பலென எடுத்துக் கூறினமையால்

செவியின் விஷயமாகச் சொல்லப்பட்டது. ஓரிந்திரியத்தின் விஷயத்தை மற்றோரிந்திரியத்தின் விஷயமாகக்கூறுதல் ''கண்ணிற் சொலிச்செவியி னுக்கு மிறைமாட்சி'' ''நாற்றங் கேட்டலுந் தின்ன மயப்பது'' என்று வரும் பிரயோகங்களாலு மறிதற் பாற்றும்.

† அறநூல்களிற் றவருமையானும் இடிக்குந்துணையாயினர் துணை யுடைமையானும் என்றும் பாடமுண்டு.

** யாவர்க்கும் என்றும் பாடமுண்டு.*

‡ செவ்வியகோல் போறலின்—கோணுதலில்லாத கோல் போன் றிருத்தலால். செவ்வியகோல்போன்ற முறை(நீதி)யைச் செங்கோலென் றது உவமையாகு பெயராம்.

தளர்ச்சி பெற்றும். () அஃதாவது † ஆறிலொன்றாய பொருடன்னையும் ‡ வறுமை நீங்கியவழிக் கொள்ளல் வேண்டின் அவ்வாறு கோடலும் ¶ இழத்தல் வேண்டின் இழத்தலுமாம். $ சாதிமுழுதும் விளக்கலின் * 'விளக்கு' என்றார். [] ஒளி—ஆகுபெயர். இவையத்து பாட்டானும் (†) மாட்சியும்பயனும் உடன் கூறப்பட்டன.

தேவி:—(இ - ன்.) கொடை - (வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றைக்) கொடுத்தலும், அளி - (யாவரிடத்தும்) முகமலர்ந்து இன்சொற் சொல்லுதலும், செங்கோல் - முறைசெய்தலும், குடியோம்பல் -(தளர்ந்த) குடிகளைப் பாதுகாத்தலும், (ஆகிய), நான்கும் - இந்நான்கு செயல்களையும், உடையான் - உடையவன், வேந்தர்க்கு - அரசர்க்கெல்லாம், ஒளியாம் - விளக்காம், (எ - று).

செவ்வியகோல் போலுதலால் முறை செய்தல் 'செங்கோல்' என்று கூறப்பட்டது. குடியோம்பல் என்று எடுத்துச் சொல்லியதால் குடிகளின் தளர்ச்சி பெறப்பட்டது. அஃதாவது குடிகளிடத்து ஆறிலொன்றாயபொருளையும் வறுமை நீங்கிய விடத்து வாங்கவேண்டினால் அப்படி வாங்கலும் விட்டுவிட வேண்டினால் விட்டு விடுதலுமாம். தன்னரசாதி முழுதும் விளக்கலால் 'விளக்கு' என்றார். ஒளி - பண்பாகு பெயர். இவை ஐந்து பாட்டாலும் அவ்வரசனது மாட்சியும் பயனும் உடன் சொல்லப்பட்டன.

() குடியோம்பலாவது.

† குடிகளுக்குக் கிடைக்கும் பொருள்களுள், ஆறிலொரு பாகமே அரசனுக்குரிய பொருளாமென்பது இல்வாழ்க்கை அதிகாரம் 3-வது குறளின் விசேடவுரையில் (தென்புலத்தார் செய்வம், விருந்து, ஒக்கல், தான் என்னும்)"ஐவகையும் அறஞ்செய்தற்கிடனாகலின் 'ஐம்புலம்' என்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று ; இவ்வைம் புலத்திற்கும் ஐந்து கூறுவேண்டுதலா னென்பதறிக " என்று கூறியிருத்தலா லறிதற் பாற்றுமென்க.

‡ விகாயகபுராணம் 'குடிதளர் வுற்றசாலைக் கொன்பொரு ளாறிலொன்றும் விடுவது செய்து" என்று கூறுவதும் இங்கியைத் தக்கதாட்.

¶ வறுமை நீங்காவழி இழத்தல் வேண்டின என்றும் பாடமுண்டு.

$ பலவற்றினுந் தொடர்ந்து ஒன்றாய்த் தோன்றுந் தன்மையது சாதியெனப்படும். இங்குச்சாதி அதனையுடைய பொருளுக்கு இலக்கணமாலார் கொள்கைப்படி பண்பாகு பெயராம்.

* 'ஒளி' என்றார் என்றும் பாடமுண்டு.

[] ஒளியென்னும் பண்புப்பெயர் அதனையுடைய வினைக்கிற் காதலால் பண்பாகு பெயராம்.

(†) காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனுதல், இன்சொலா லீத்தளித்தல், முறைசெய்து காப்பாற்றல், செவிகைப்பச் சொற்பொறுத்தல், கொடையளி செங்கோல் குடியோம்பல் என்பன மாட்சியாம்; மீக்கூறுதல், தான்கண் டனைத்தில் வுலகு, மக்கட் கிறைபென்று வைக்கப்படும், கவிகைக்கீழ்த் தங்குமுலகு, வேந்தர்க் கொளியா மென்பன பயனும்.

(க - து.) கொடைமுதலிய நான்கு செயல்களையு முடைய வரசன் அரசர்க்குள் விளக்குப்போன்று விளங்குவான் என்பது.

10. He is the light of kings who has these four things, beneficence, benevolence, rectitude, and care for his people.



இரண்டாம் அதிகாரம்.

கல்வி—On Learning.

பரி:—அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன † அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், ‡ படைக்கல மெனீரியற்றி நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடைய னயக்கால் தன்னுயிர்க்கேயன்றி [] மன்னுயிர்க்கும் பயன்படுதலுங்கூறி, இஃதரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையிற்பொதுப்படக் கூறுகின்றார். மேல் ¶ "தூங்காமை கல்வி" எனத்தேற்றமாய் செய்ய மாட்டியை விரித்துக்கூறுகின்றமை யின், இஃதிதை மாட்டியிற்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அந்நூல்களாவன அறநூலும் நீதிநூலும், யானை குதிரை தேர் படைக்கலம் எனப்பட்ட இயற்றி நூல்களும் முதலானவையாம். அரசன் அறிவுடையவனாயிருக்கால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் குறித்தது, இக்கல்வி அரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் கண் ணைபோன்றருவதாகிய சிறப்புடைமையினால் (அதனை)பொதுப்படச் சொல் லினார். முன்னதிகாரத்தில் "தூங்காமை கல்வி" என்று தொடங்கஞ் செய்த மாட்டியை விரித்துச் சொல்லுதலால், இஃது (கல்வி) இறைமாட் சியின்பின் வைக்கப்பட்டது.

க. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

பரி:—(இ - ள்.) ஒருவன் கற்கப்படு நூல்களைப் பழுதறக் கற்க; அங்ஙனங்கற்றல் அக்கல்வித்தத்தக அவை சொல்லுகின்ற நெறிக்கண் ணோ நிற்க, (எ - று).

† "தவமுயன் றரிதிற் பெற்ற தனிமாக் தரு ஞாலம், சிவமுயன் றடையுங் தெய்வக் கலைபல திருந்த வோதித், கவலைமாம் புரவி யானே தேர் படைத் தொழில்கள் கற்றுப், பவமுயன் றதனும் பேறே பெறவரும் பண்பின் மிக்கான்" என்று பெரிய புராணம், திருவாரூர்ச் சிறப்பில் மனு நீதிகண்ட சோழனது மகன் ஔியது பற்றியும் கறவைபற்றியும் கூறி யிருப்பதிற்கு நன்குணர்தம்பாலதாம்.

‡ படைக்கலம் - ஆயுதம். [] தன்னரசாட்சியின் கீழ்வாழுமியிர்க்கும்.

¶ இறைமாட்சி கூ.

'கற்பவை' என்றதனுள், † அறம் பொருள் இன்பம் வீடென்னும் ‡ உறுதிப்பொரு ளுணர்த்துவன வன்றிப் $ பிறபொரு ளுணர்த்துவன கின்னுட் பல்பிணிச் சிற்றறிவினார்க் காகாவென்பது பெற்றும். கசடறக் கற்றலாவது விபரீத ஐயங்களே நீக்கி மெய்ப்பொருளே நல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல். கிற்றலாவது இல்வாழ்வுழிக் ¶ ''கருமமு மூன்ப டாப் போகமுங் தல்வாத், தருமமுந் தக்கார்க்கே செய்'' தலினும், தீறந் தழித் தவத்தான் மெய்யுணர்தது அவாவறுத்தலினும் வழுவாமை. () சிறப் புடை மகற்காயிற் கற்றல்வேண்டு மென்பதூஉம், அவனுற் [] கற்கப்படு நூல்களும், அவற்றைக் †† கற்குமாறும், கற்றதனுற் ‡‡ பயனும் இதனுற் கூறப்பட்டன.

தேளி:—(இ - ள்.) (ஒருவன்) கற்பவை - கற்பதற்குரிய நூல்களே, கசடற - குற்றமொழிய, கறக - கற்றக்கடவன், கற்றபின - (அவ்வாறு) கற் றூல், அதற்கு - அக்கல்விக்கு, தக - தகுதியாக, நிறக - (அந்நூல்கள சொல்லுகின்ற வழியிலே) நிற்கக்கடவன், (எ - று).

† ''கல்வி கரையில கற்பவர் நாள்சில, மெல்ல நினைக்கிற் பிணிபல- தெள்ளிதி, னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப், பாலுண் குருகிற் றெரிந்து'', ''அலகுசால் கற்பி னறிவு நூல்கல்லா, தலகதூ லோதிவ தெல்லாம் - கலகல, கூஉக் குரலேயல்லாற் கொண்டு தகுமாற்றம், போஒக் குரலேயறிவா ரில்'' என்பு நாலடியார் கூறுவதாலும் 'அறம் பொருளின்பம் வீடென்னு முறுதிப பொருளுணர்த்துவன வன்றிப் பிறபொருளுணர்த்துவன கின்னுட் பல்பிணிச் சிற்றறிவினாக் காகா என்பது பெற்றும்' என்பது நனகு விளங்கும்.

‡ உறுதிப்பொருள-புருஷார்த்தங்கள். புருஷர்களினிசைசைக்கு விஷயமாவது புருஷார்த்தமாம்.

$ பிறபொரு ளுணர்த்துவன - களவுநூல் காமநூல் முதலாயின.

¶ நாலடியார் அறிவுடைமை - ம். இதன் பொருள் (அறம் பொருள் களுக்குக் காரணமான) முயற்சிகளேயும உடன்பட்சே செயது, (அவ்வறம் பொருளகளா லுண்டாகும்) இன்பத்தையு மனுபவித்து, (ஞான முதலாய) வறங்களேக் (கல்வியறிவு ஒழுக்கங்களால்) தகுதி யுடையவரா யிருப்பாரகளுக்கே செய்து என்பது.

() சிறப்புடை மகற்காயின் - முத்தியடைதற் குரிமை யுடைய மகனுக்காஞல்.

[] கற்கப்படு நூல்கள் - அறம் பொரு ளின்பம் வீடென்னும் உறுதிப் பொருள்களே யுணர்த்தும் நூல்கள்.

†† கற்குமாறும் - பழுதறக் கற்கும்வகையும்.

‡‡ பயனும் - அறமுதலிய வுறுதிப் பொருளே யுணர்த்தும் நூல்கள் கூறும் வழியிலே நிற்றலும்.

'கற்பவை' என்றதனால் அறம் பொருள் இன்பம் வீடு என்கிற உறுதிப் பொருள்களே உணர்த்தும் நூல்களல்லாமல் வேறு பொருளுணர்த்தும் நூல்கள் சில வாழ்நாளையும் பல தோணியையும் சிற்றறிவையு முடைய மக்களுக்கு ஆகா என்பது பெறப்பட்டது. சகடறக் கற்றலாவது விபரீத சந்தேகங்களே நீக்கி மெய்ப்பொருளே கல்லோர் பலரோடும் பலதாமும் பழகுதல். நிற்றலாவது இல்வாழ்க்கையிலே நின்று கருமங்களைச் செய்து இன்பத்தையனுபவித்து போக்கியருக்குத் தருமஞ்செய்தலிலும் துறவறத்தை மேற்கொண்டவிடத்தும் தவத்தால் மெய்யுணர்ந்து அவாவறுதலிலும் தவருமை. இதனால் சிறப்புடைய புருஷனுக்கானால் கற்கவேண்டு மென்பதும், அவனால் கற்கப்படும் நூல்களும், அந்நூல்களைக் கற்கும் விதமும், கற்றதனாற் பயனும் சொல்லப்பட்டன.

(க - து.) ஒருவன் கற்கவேண்டிய நூல்களைக் குற்றமறக் கற்றுப் பின் அகலல்லியறிவுக்குத் தக்கவாறு, அவை கூறும் வழியில் நிற்கக்கடவன்.

1. Let a man learn thoroughly whatever he may learn, and let his conduct be worthy of his learning.

உ. † எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழ முயிர்க்கு.

பரி:—(இ - ள்.) அறியாதார் எண்ணென்று சொல்லுவனவும் மற்றையெழுத்தென்று சொல்லுவனவுமாகிய விரண்டனையும் அறிந்தார் சிறப்புடைய வுயிர்கட்குந் கண்ணென்று சொல்லுவர், (எ - று).

‡ எண்ணென்பது கணிதம் ; அது ¶ கருவியுஞ் செய்கையுமென

† ஔவையார் ஆதிசூடியில் "எணெழுத் திகழேல்" என்றும், கொன்றை வேந்தனில "எண்ணு மெழுத்தும் கண்ணெனத தகும்" என்றும் அருளியிருத்தலும் இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

எண் என்பது கணிதமும் அதனோடொற்றுமையுடைய தருக்கமுமாம். எழுத்தென்பது எழுத்தும் அதனோடொற்றுமையுடைய சொல்லுமாம்.

‡ "சர்வசாஸ்திரத்தின் பொருளையு மறிதற்குத் தர்க்கமும்இலக்கணமும் மிகு உபகாரமா யிருக்கின்றன" என்றும், "தருக்கமும் இலக்கணமுமே மக்களுக் கிருகண்ணுகும்" என்றும் சொல்லப்பட் டிருப்பினும், பரிமேலழகர் தருகத்தைக் கணிதத்தி லடக்கி (எண் என்பது தருக்கமென்றுகூறுதி) எண் ணென்பது கணிதம் என்று கூறினு ரென்க. தருக்க சாஸ்திரம் கணித சாஸ்திரத்தினே ருறுப்பா யடங்குவது உய்த்துணர்வார்க்கு நன்கு விளங்கும். எண் என்பது தருக்கதை யுணர்த்துதல் "காண்ட லனுமானங் கதையருத்தா பத்தியிவை, மீண்டிசைத்த வெண்ணெனவே யெண்" என்பதனு லறிக.

¶ கருவியும் செய்கையும் - காரணமும் காரியமும். தொல்காப்பியச்

விருவகைப்படும். அவை ஏரம்ப முதலிய நூல்களுட்காண்க. எழுத்தென வே, அதனேனு டொற்றுமை யுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விருதிற மும் அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின் 'கண்' எனப்

சூத்திர விருத்தி " இப்படலத்துள் விதிக்கப் படுவனவெல்லாம் கரு வியும் செய்கையுமென விருவகைப்படும். அவற்றுள், கருவி நூன்மரபு முதலிய நான்கோத்தானும், செய்கை தொகை மரபு முதலிய வைந்தோத் தானும் கூறப்படும்" என்று கூறுவதனாலும் கருவியும் செய்கையும் இன்ன வென நன்கு புலப்படும்.

கருவியுஞ் செய்கையும் வருமாறு:—

1. (1) புவியென்னுஞ் சொல்லுண்டாவதற்கு, பு - வி - என்னு மெழுத்துக்கள் கருவியாக விருத்தலின், பு - வி - என்னுமெழுத்துக்கள் கருவி யாம்; புவியென்னுஞ் சொல் செய்கையாம். "சொல்லென்றது எழுத் தினு லுக்கப்பட்டு இருதிணைப் பொருட்டன்மையும் ஒருவரறுணர்தற்குக் கருவியா மோசையாகிய பெயர், வினை, இடை, உரி யென்னு நால்வகைச் சொல்லும் பிறவுமாம்" என்று சங்கரமச்சிவாயப்புலவர் நன்னூல் விருத்தி யுரையிற்கூறியிருப்ப தீண்டுணர்தற் பாலதாம்.

(2) யான் அச்சுதனைத் தொழுதேன் என்னும் வாக்கிய முண்டாவ தற்கு, யான் - அச்சுதன்-ஐ-தொழுதேன் என்னுஞ் சொற்கள் கருவியாக விருத்தலின், யான் - அச்சுதன் - ஐ - தொழுதேன் என்னுஞ் சொற்கள் கருவியாம்; யான் அச்சுதனைத் தொழுதேன் என்னும் வாக்கியம் செய் கையாம்.

2. (1) பத்து முதலிய பேரெண்கள் ஞண்டாவதற்கு, ஒன்று முதலிய சிற்றெண்கள் கருவியாக விருத்தலின், ஒன்று முதலிய சிற்றெண்கள் கருவியாம்; பத்து முதலிய பேரெண்கள் செய்கையாம். ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், அயுதம், இலக்கம், நியுதம், கோடி, அர்ப்புதம், விருந்தம், கருவம், நிகருவம், சங்கம், பதுமம், சமுத்திரம், அந்தியம், மத்தியம், பரா ர்த்தமென எண்களின் ஸ்தானம் பதினெட்டாம்; மூப்பத்தாறென்று கூட தலுமுண்டு. பத்து ஒன்றுலுறழ்ந்தது பத்தி, பத்துப் பத்தாலுறழ்ந்தது நூறு என்றற் றொடக்கத்தனவாக வுணர்தல் வேண்டும். பின்பின் உள்ள எண்கள் பேரெண்ணே; முன்முன் உள்ள எண்கள் சிற்றெண்ணும். இரண்டு மூன்று முதலிய வெண்கள் அதேக வொருமை யெண்களின் அபேட்சா புத்தியாற் றோன்றி, அதன் ஸாசத்தாற் கெடுவனவாமென் றிங்குணர்தல் வேண்டும்.

(2) மேல முதலிய விடங்களில் புகையைக் கண்டவிடத்து இம்மலே நீயுடையதென்னும் அநுமிதி ஞானமுண்டாவதற்கு, யாண்டுப்புகை ஆண் டுத் தீ யென்னும் நியதமான வுடனிசழ்ச்சிப் பிரத்தியட்ச ஞானம் கருவி யாக விருத்தலின், யாண்டுப்புகை ஆண்டுத் தீ யென்னும் நியதமானவுட னிகழ்ச்சிப் பிரத்தியட்ச ஞானம் கருவியாம்; இம்மலேநீயுடையதென்னும் அநுமிதி ஞானம் செய்கையாம். இவ்வாறே பிறவற்றையு மூப்த்தணர்க.

பட்டன. † அவை கருவியாதல் ‡ "ஆதி முதலொழிய வல்லா தனவெண் ணீ, னீதி வழுவா நிலைமையவான்-மாதே,யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின், நிறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு", ¶ "எழுத்தறியத் தீரு மிழித்தகைமை தீர்ந்தான், மொழித்திறத்தின் முட்டறுப்பா ஞகு-மொழித் திறத்தின், முட்டறுத்த நல்லோன் முதலூற் பொருளுணர்ந்து, கட்டறு த்து வீடெ பெறும்" இவற்றுறுறிக. என்ப என்பவற்றுள், முன்னைய இர ண்டும் அஃறிணைப் பன்மைப் பெயர்; பின்னையது உயர்திணைப் பன்மை வினை. அறியாதார் அறிந்தா ரென்ன வருவிக்கப்பட்டன. சிறப்புடையுயி ரென்றது மக்களுயிருள்ளும் உணர்வு மிகுதி யுடையதனை. இதனுற் கற்

† அவை - எண்ணுப் எழுத்தும்.

‡ (இதன்பொருள்) மாதே - பெண்ணே, ஆதி-இருட்டியினுரம்பத் தில், (சிவர்களுய்யுமாறு கடவுளால் எடுத்துச் சொல்லப்பட்ட), முதலொ ழிய - (தருமார்த்த காமமோட்சங்களே ஐயத்திரிபற வுணர்த்தும்) முதல் நூலாகிய வேதம் தவிர, அல்லாதன - (வேதத்திற்கு மாறுபட்ட) மற்ற நூல்கள், எண்ணின் ஆராய்ந்து பார்த்தால், நீதி வழுவாம் நிலைமைய - (தருமார்த்த காமமோட்சங்களே யுணர்த்தவதில்) முறைமைதவறிய நிலை மையினையுடையனவாம், எண்ணிறந்தால் - (முதல் நூற்பொருளே) கணித நூலோடுமாறுபட அறிந்தால், அறமார் பொருளின்பம் வீடென்றிவற்றின் நிறம் - தருமார்த்த காமமோட்சமென்று சொல்லப்படும் இவற்றின் பாகு பாடு, ஆமோ - (ஒருவனுக்கு) சித்திக்குமோ (சித்திக்காதென்றபடி), செப்பு - (நீ) சொல்லு, (எ - று). ஆல் - அசை.

¶ (இதன்பொருள்). (ஒருவன்) எழுத்தறிய - இயற்கை பிழை யறிந் தால், இழிதகைமை தீரும் - (அதனு லவனுக்கு) பேதைமையான தது ஒழி யும், தீர்ந்தால் - (அப்பேதைமையான தது) ஒழிந்தால், மொழித்திறத்தின் முட்டு - (அவன்) சொற்பகுப்பிற்றேன்றும் மாறுபாட்டை, அறப்பாஞ கும் - ஒழிக்குந்தன்மையை யுடையவனுவான், மொழித்திறத்தின் முட் டறுத்த நல்லோன் - சொற்பகுப்பிற் றேன்றும் மாறுபாட்டை யொழித்த நல்லறிவுடையவன், முதலூற் பொருளுணர்ந்து - முதல்நூலின்பொருளே (ஐயதிரிபற) அறிந்து, கட்டறுத்து - பந்தத்தை யொழித்து, வீடெபெறும்- மோட்சத்தை யடைவான்.(எ - று).

[கண்ணுல் சிறப்புப் பாயிரத்தினுரையில் "எழுத்தென்றது இயற்றமி ழை. அது 'எண்ணென்பவேனை யெழுத்தென்ப' என்பதனுலு முணர்க இசைத்தமிழும் நாடகத்தமிழும் இவ்வியற்றமிழ்போல முதல்நூற் பொரு ளுணர்தற்குக் கருவியன்மையின் இயற்றமிழ் ஒன்றுமே கூறினுர்" என்று சங்கர நமச்சிவாயப்புலவர் கூறியிருக்கின்றனர்].

"கற்பக் கழிமட மஃகு மடமஃப், புற்கற்கீர்ச் சிவ்வுலகிற் கோளு ணரும் கோளுணர்ந்தால், தத்துவ மாய தெறிபடரு மக்கெறி, இப்பா லுல கத் திசைசிறீ இயப்பால், உயர்ந்த வுலகம் புகும்" என்று நான் மணிக்கடி ஙை கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

கப்படி நூல்கட்குக் கருவியாவனவும் அவற்றது இன்றியமையாமையுங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) (அறியாதவர்) எண்ணென்ப - எண்ணென்று சொல்லுவனவும், எனை யெழுத்தென்ப-மற்றையெழுத்தென்று சொல்லுவனவும், இவ்விரண்டும் - (ஆகிய) இக்கலைகளிரண்டையும், (அறிந்தார்) வாழுயிர்க்கு - வாழ்தற்குரிய (சிறப்புடைய) மனிதர்க்கு, கண் - கண்களாகும், என்ப - என்று சொல்லுவர், (எ - று).

எண் என்பது கணிதம்; அக்கணிதம் கருவியும் செய்கையுமென்றிருவகையாம். அக்கருவி செய்கைகளின் தன்மையை எரம்ப முதலிய நூல்களிற் காண்க. எழுத்தெனவே அவ்வெழுதோடி ஒருமைப்பா டுடைய (எழுத்தாலாகிய) சொல்லும் அடங்கிற்று. இவ்விருவகையான எண்ணும் எழுத்தும் தருமார்த்த காம மோட்சமென்னும் நால்வகைப் பொருளையும் ஐயந்திரிபில்லாது கண்டுணர்தற்குக் காரணமா யிருத்தலால் 'கண்' என்று சொல்லப்பட்டன. இக்குறளிலுள்ள என்ப என்னும் மூன்றனுள், முன்னுள்ள இரண்டும் அஃறிணைப் பன்மையினையாலணையும் பெயர்; மற்றது உயர்திணைப்பன்மை யெதிர்கால வினைமுற்று. இவைபு நோக்கி அறியாதவர் அறிந்தார் என்பன வருவித்துச் சொல்லப்பட்டன. சிறப்புடைய உயிரென்று கூறியது மனிதருயிரிலும் அறிவு மிகுந்திருப்பதனை. இதனால் கற்கப்படி நூல்களுக்குக் காரணமாவனவும் அவற்றினது அவசியமும் சொல்லப்பட்டன கலைகள்.- நூல்கள்.

(க - து.) மக்களுக்குக் கண்போன்றிருப்பன எண்ணு மெழுத்துமாம் என்பது.

2. Numbers and Letters are the two eyes of man.

கூ. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

பரி:—(இ - ள்.) கண்ணுடையரென்று உயர்த்துச் சொல்லப்படுவார் கற்றவரே; மற்றைக் கல்லாதவர் முகத்தின் கண் இரண்டு புண்ணுடையர், கண்ணிலர் (எ - று).

† தேய மிடையிட்ட வற்றையும் ‡ கால மிடையிட்ட வற்றையும் காணும் ஞானக்கண்ணுடைமையின், கற்றாரைக் 'கண்ணுடையர்' என்றும், அஃதின்றி நோய் முதலியவற்றுன் துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணே

† தேயமிடையிட்டவற்றையும் - தாமிருக்கும் தேசத்தன்றி வேறு தேசத்திருப்பனவற்றையும்.

‡ காலமிடையிட்ட வற்றையும் - நிகழ்காலத்தன்றி யிறந்தகாலத்திலிருந்தனவற்றையும் எதிர்காலத்தில் இருப்பனவற்றையும்.

உடைமையிற் கல்லாதவரைப் 'புண்ணுடையர்' என்றுங் கூறினர். † மேற் கண்ணின்மை யுணரகின்ற ஊனக்கண்ணின் மெய்ம்மை கூறியவாற்றான், $ பொருணூல்களேயுங் ‡ கருவிநூல்களேயுங் கற்றாரது உயர்வும் கல்லாதாரது இழிவும் இதனுற் பொருத்தங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) கண்ணுடைய ரென்பவர் - கண்ணுடையவரென்று உயர்த்திச் சொல்லப்படுவார், கற்றிலர் - கற்றவரே, கல்லாதவர் - மற்றைக் கற்றிலாதவர், முகத்து - முகத்தினிடத்து, இரண்டு புண்ணுடையர் - இரண்டு புண்களுடையர், (கண்ணிலார்), (எ - று).

எல்லா இடங்களிலும் எல்லாக்காலங்களிலும் உள்ளவற்றைக்காணும் ஞானக்கண்ணுடைமைபற் கற்றோரைக் 'கண்ணுடையர்' என்றும், அந்த ஞானக்கண் இல்லாமல் மிகாய் முதலாய வற்றுள் தூண்பற்செய்யும் ஊன (மாமிச)க் கண்ணே யுடைமையால் கல்லாதவரைப் 'புண்ணுடையர்' என்றும் சொல்லினர். முற்கூறிய குறளில் கண்ணில்லாமை அறியுமாறிருந்த ஊனக்கண்ணினது மெய்ம்மையாகிய சொரூபத்தைச் சொல்லிய விதத்தினுல், பொருள்நூல்களேயுங் கருவிநூல்களேயுங் கற்றாரது உயர்வும் கல்லாதவர்களது இழிவும் இதனுல் தொகுத்துச் சொல்லப்பட்டன.

(க - து.) கற்றவர் கண்ணுடையவரும் மற்றவர் புருடரூபமாவ ரென்பது.

3. The learned are said to have eyes, but the unlearned have merely two sores in their face.

ச. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

பரி:—(இ - ம்.) யாவரையும் அவர் உவக்குமாறு தலைப்பெய்து இனி இவரை யாம் எவ்வாறு கூடுதுமென நினையுமாறு நீங்குதலாகிய அந்தன்மைத்து கற்றறிந்தாரது தொழில், (எ - று).

* தாம் கல்வழியொழுகல் பிறர்க்குரைத்து கூறலென்பன இரண்டுந் தொழிலென ஒன்று படத்தலின் 'அனைத்து' என்றார். அத்தன்மை - அப்பயனைத் தருந்தன்மை, கல்லாதழுக்கங் காண்டலானும், தமக்கு மதர

† மேற்கண்ணின்மை யுணர கின்ற-'எண்ணென்ப' என்றுமேலுள்ள குறளில் எண்ணுமெழுத்து மறிபாதவரது கண்கள் கண்களல்லவென்று அறியுமாறிருந்த.

$ பொருள்நூல்கள் - தருமார்த்த காமமோட்சங்களே யுணர்த்து நூல்கள்.

‡ கருவிநூல்கள்-கணிதமும் இலக்கணமும். * தாம் என்றது கற்றறிந்தாரை.

மும் உறுதியுமாய கூற்றக்கள் நிகழ் வெதிர்வுகளின் இன்பம் பயத்தலா னும், கற்றூர்மாட்டு எல்லாரும் அன்புடையராவ ரென்பதாம். இதனாற் கற்றூரது உயர்வு வகுத்துக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) புலவர் - கற்றறிந்தவரது, தொழில் - தொழி லாவது, உவப்ப - (யாவரையும் அவர்) மகிழும்படி, தலைக்கூடி - சேர்ந்து, உள்ள - (இனி இவரை நாம் எவ்வாறு கூடுவோமென்று) நினைக்கும்படி, பிரிதல் - நீங்குதலாகிய, அனைத்து - அத்தன்மையதாம், (எ - று).

தாம் சன்மார்க்கத்திற் செல்லுதல் பிறர்க்கு உறுதிதருவனவற்றைக் கூறுதலென்னு மிரண்டும் தொழிலென ஒன்றாயடங்குதலால் 'அனைத்து' என்று ஒருமையை ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றாகக் கூறினார். அத் தன்மை - உவப்பத்தலைக்கூடி யுள்ளப்பிரிதலாகிய அப்பயனைத்தரும் தன் மை. சன்மார்க்கத்திலொழுகுதலைக் காண்பதனலும், தங்களுக்கு இனி மையும் உறுதியுமான சொற்கள் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் இன் பத்தைத் தருதலினலும், கற்றூரிடத்து யாவரும் அன்புடையராவ ரென்ப தாம். இதனால் கற்றவரது உயர்வு பிரித்துக் கூறப்பட்டது.

(க - து.) தமது சேர்கையால் மகிழ்ச்சியுற்ற யாவரும் இவரை யினியெவ்வாறு காண்போமென்று நினையுமாறு அவரைப் பிரிதலே கற்றறிந்தாரது செய்கையாம் என்பது.

4. It is the part of the learned to give joy to those whom they meet, and on leaving, to make them think Oh! when shall we meet them again.

ரு. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றூர்
கடையரே கல்லா தவர்.

பரி:—(இ - ள்.) ‡ "பிறிற்றை நிலை முணியாது கற்றல் நன்" றதலா ன், செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோலத் தாழும் ஆசிரியர் முன் எக்கற்று நின்றுங் § கற்றூர் தலையாயினூர்; அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றும் இழிந்தாரேயாவர், (எ - று).

உடையார் இல்லாரென்பன உலகவழக்கு. எக்கறுதல் - ஆசையாற்றூ ழ்தல். 'கடையர்' என்றதனுன் அதன் † மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது.

---

‡ புறநானூறு ஈஅக. இதன்பொருள் வழிபாட்டு நிலைமையை வெறுது (வெறுக்காது) கற்றல் ஒருவற்கு அழகிது என்பது.

§ கற்றூர் தலையாயினூர் என்பது காலடியார் "கடைகிலத்தோ ராயி னுங் கற்றுணர்ந் தோரைத், தலைநிலத்து வைக்கப்படும்" என்றும், புறநா னூறு "வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும், கீழ்ப்பா லொருவன் கற் பின், மேற்பா லொருவனு மவன்கட் படுமே" என்றும் கூறுவதாலு முண ரப்படும். † கடையர்க்கு மறுதலைப் பெயர் தலையாயினரென்பது.

பொய்யாய மான நோக்கி மெய்யாய கல்வியிழந்தார் பின்னெரு ஞான்றும் அறிவுடைய ராகாமையின் 'கடையரே' என்றார். இதனுற் கற்றாரது உயர்வும் கல்லாதாரது இழிவும் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) உடையார்முன் (வழிபடுதலே வெறுக்காது கற்றல் கல்லதாகலால்) செல்வர்முன்னே, இல்லார்போல் - வறியவர் (சித்தும் வித்தம்) போல, ஒக்கற்றும் - (தாமும் ஆசிரியர்முன்) (படிக்கவேண்டும் என்னும்) ஆசையினுல் தாழ்ந்து நின்றும், கற்றார் - கற்றவர், (உயர்ந்தவராவர்), கல்லாதவர் - (அவ்வழிபடுதலுக்கு வெட்கமுற்றுக்) கல்லாதவர், கடையரே-(எப்போதும்) இழிந்தவரே யாவர், (எ - று).

பொருளுடையாரை உடையாரென்பதும் பொருளில்லாதாரை இல்லாரென்பதும் உலகவழக்காம். ஒக்கறுதல் - ஆசையினுல் தாழ்தல். கடையர் என்றதனுல் அதன் மறுதலைப் பெயராகிய உயர்ந்தவ ரென்பது வருவிக்கப்பட்டது. பொய்யாகிய மானத்தைநோக்கி மெய்யாகிய கல்வியை இழந்தவர் பின்னெருநாளும் அறிவுடையவ ராகாமையால் 'கடையரே' என்றார். இதனுல் கற்றவர்களது உயர்வும் கல்லாதவரது இழிவும் சொல்லப்பட்டன. மறுதலை - எதிர்.

(க - து.) ஆசிரியர்முன் தாழ்ந்து நின்று கற்றோர் உயர்ந்தவராவர்; மற்றவர் தாழ்ந்தவராவர் என்பது.

5. The unlearned are inferior to the learned, before whom they stand begging, as the destitute before the wealthy.

ரு. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

பரி:—(இ - ள்.) மணலின்கட் * கேணி தோண்டிய அளவிற்றாக ஊறும்; அதுபோல மக்கட் கறிவு † கற்ற அளவிற்றாக ‡ ஊறும், (எ-று).

ஈண்டுக் கேணி யென்றது அதன்கண் நீரை. அளவிற்றாக என்றது $ அதனளவுஞ்செல்ல என்றவாறு. சிறிதுகற்ற திணையான் அமையாது மேன்மேற் கற்றல்வேண்டு மென்பதாம். ¶ இஃது ஊழ் மாறுகொள்ளா வழி யாகலின், மேல் 'உண்மையறிவே மிகும்' என்றதனோடு மலையாமை யறிக.

* கேணி - சிறுகுளம். இது நிரைச்சொல். கேணி யென்பது, அதன்க ணுள்ள நீருக்காதலால் இடவாகு பெயராம்.

† "தாங்கற்ற, நூலளவே யாகுமா நுண்ணறிவு" என்பது மூதுரை.

‡ ஊறும் - உண்டாகும் $ அதனளவும் - நீர் வெளிப்படு மளவும்.


¶ இஃது (மாந்தர்க்குக் கற்றனைத்தூறு மறிவு என்பது) ஊழ்மாறு கொள்ளாவழி (ஊழ்வினோதப் படாத விடத்து) ஆகலின்மேல் (ஊழினோ

தெளிவு:—(இ - ள்.) மணல் - மணலினிடத்து, கேணி - கேணியானது, தொட்ட அனைத்து - தோண்டிய அளவினதாக, ஊறும் - சுரக்கும், (அதுபோல), மாந்தர்க்கறிவு - மனிதருக்கு அறிவானது, கற்ற அனைத்து - கற்ற அளவினதாக, ஊறும் - சுரக்கும், (எ - று).

இங்குக் கேணி யென்றது அக்கேணியிலுள்ள நீரை. அளவினதாக என்றது அக்கேணியில் நீர் வெளிப்படுமளவும் தோண்டிக் கொண்டுபோக என்றபடியாம். சிறிது கற்றவளவினுல் கற்றது போதுமென்று விடாமல் மேலும் மேலும் கற்றல்வேண்டு மென்பதாம். இக்கல்வியறிவு மிகுதல் ஊழ் மாறுகொள்ளாவிடத் தாகலால், முன்னர் 'உண்மையறிவேமிகும்' என்றதனுலே விரோதப்படாமை யறிக.

(க - து.) மனிதர்க்கு ஆயிர ஆயிரங்கற்ற கல்வியினளவாக வுண்டாம் ஞானம்.

6. Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug, and knowledge will flow from a man in proportion to his learning.



எ. † யாதானு நாடாமா லூராமா லென்னுருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

பரி:—(இ - ள்.) கற்றவனுக்குந் தன்னுடைத் தன்றாருமேயன்றி யாதானு மோருநாடும் நாடாம், யாதானுமோருரும் ஊராம்; இங்ஙனமாயினு, ஒருவன்தானிறக்குமளவுங் கல்லாது கழிகின்றது என்கருதி, (எ-று).

உயிரோடு சேறலிற் 'சாந்துணையும்' என்றார். பிறர்நாடுகளும் ஊர்களுந் தமபோலே உற்றுப் பொருட் கொடையும் பூசையும் உவந்து செய்தற் கேதுவாகலின், கல்வியோலச் சிறந்தது பிறிதில்லை; அதனையே எப்பொழுதுஞ் செய்க வென்பதாம்.

ரத்தின் மூன்றுவது குறளில்)'உண்மை யறிவே மிகும்'(ஊழாலுய பேதைமை யுணர்வே மேற்படும்)என்றதனுலே மலையாளம (மாறுபடாமை) யறிக.

இதனுல் ஊழ் (விதி) விரோதப்படாதவிடத்துக் கற்ற அளவினதாக அறிவுண்டாகு மென்றும், அது விரோதப்பட்ட விடத்துக் கற்ற வளவினதாக அறிவுண்டாகாதென்றும் பெற்று மென்க. மாறுகொள்ளா ஊழ் - கல்வினை என்றும், மாறுகொண்ட ஊழ்-தீவினை என்றும் கொள்க.

† மூதுரை "மன்னனுக்குத், தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச், சென்றவிட மெல்லாஞ் சிறப்பு" என்று கூறுவதும், பழமொழி "ஆற்றவுங் கற்ற றிவுடையா ரஃதிடையார், சாற்றிசையுஞ் செல்லாத காடில்லை - யக்காடு, வேற்றுநா டாகா தமவேயா மாயினுல், ஆற்றுணை வேண்டுவ தில்" என்று கூறுவதும் மிகுதியுத்தக்கனவாம்.

தெளி:—(இ - ள்.) (கற்றவனுக்குத் தன்னூரும் தன்னூருமேயல்லாமல்) யாதானும்-யாதாயினு மொருநாடும், நாடாம்-நாடாகும், (யாதானும்-யாதாயினுமோரூரும்), ஊராம்-ஊராகும், (இப்படியானால்), ஒருவன் சாந்துணையும்-ஒருவன்தான் இறக்குமளவும், கல்லாதவாறு - கல்லாமற் கழிகின்றது, என் - என்னகினைத்து, (எ - று).

ஆல் - அசைகள். இறந்த பிறகும் கல்வி உயிரோடுசெல்லுதலால் 'சாந்துணையும்' எனறார். பிறர்காகிலும் ஊர்களும் தம்நாடும் தம்மூரும் போலவிருந்து பொருள் கொடுத்தலும் பூசையும் மகிழ்ந்து செய்வதற்குக் காரணமாகலால், கல்விபோல* சிறந்தது வேறொன்று இல்லை, அக்கல்வியையே எப்போதும் கற்கவேண்டு மென்பதாம்.

(க - து.) எவ்விடத்துஞ் சிறப்பைத்தருவது கல்வியாயிருத்தலின், அதனையொருவன் சாகுமளவும் சுற்காமலிருப்பது பெரு மடைமையாம் என்பது.

7. How is it that anyone can remain without learning even until his death, when to the learned man every country, is his own country, and every town his own town.

அ. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

பரி:—(இ - ள்.) ஒருவனுக்குத் தானொரு பிறப்பின்கட் கற்ற கல்வி எழுபிறப்பினுந் சென்று உதவுதலை யுடைத்து, (எ - று).

† வினைகள்போல உயிரின்கட்கிடந்து அதுபுக்குழிப் புருமாகலின் 'எழுமையு மேமாப் புடைத்து' என்றார். ‡ எழுமை மேலே கூறப்பட்டது. உதவுதல் - தன்னெறிக்கண் உய்த்தல்.

தெளி:—(இ - ள்.) ஒருவற்கு-ஒருவனுக்கு, தான்—, ஒருமைக்கண்-ஒரு பிறப்பினிடத்து, கற்றகல்வி - கற்ற கல்வியானது, எழுமையும்-எழு பிறப்பிலும், எமாப்பு - (போய்) உதவுதலே, உடைத்து - உடையதாம்.

கல்வியானது இருவினைகள்போல உயிரினிடத்துப்பொருந்தி அவ்வுயிர் சென்றவிடத்துச் செல்லுமாகலால் 'எழுமையுமேமாப்புடைத்து' என்

† கல்வினை தீவினைகளின் காரியமாகிய தருமாதருமங்கள் உயிரினிடத்து (உயிர்க்குத் தடையாயுள்ள அந்தக் கரணத்திடத்து) அதற்பூதமாய் (வெளிப்பாடின்றி) இருப்பது போலக் கல்வியறிவின் சம்ஸ்காரமும் உயிரினிடத்திருக்குமென்பதிங் குணரத்தக்கதாம்.

‡ எழுமைமேலே கூறப்பட்டது - எழுபிறப்பின்வகை செய்ற்கன்றி யறிதலதிகாரம் எ-வது குறளினுரையிற் சொல்லப்பட்டது என்பதி. எழுவகைப் பிறப்பு-தேவர், மனிசர், விலங்கு (மிருகம்), பறவை, ஊர்வன (தவழ்வன),நீர்வாழ்வன, தாவரம் (மரமுதலியன) என்பனவாம்.

குர். எழுபிறப்பின்வகை முன்னே சொல்லப்பட்டது. (தான் கற்ற கல்வி) உதவுதல் - கல்வழியிற் சேர்த்தல்.

(க - து.) ஒருவன் ஒருபிறப்பிற் கற்ற கல்வி அவனுக்கு எழுபிறப்பினு முதவியாம் என்பது.

8. The learning, which a man has acquired in one birth, will yield him pleasure during seven births.

கூ. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

பரி:—(இ - ள்.) தாமின்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகமின் புறுதலால், அச்சிறப்பு நோக்கிக் கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர், (எ - று).

* தாம் இன்புறுதலாவது † நிகழ்வின்கட் () சொற்பொருளின் சுவை நுகர்வானும், புகழ் பொருள் பூசை பெறுதலானும், $ எதிர்வின்கண் அறம் வீடு பயத்தலானும், ‡ அதனுன் இடையுறுத இன்பமெய்துதல். உலகின் புறுதலாவது இம்மிக்காரோடு தலைப்பெய்து ¶ அறியாதன வெல்லாம் அறியப்பெற்றே மென்றும், [] யாண்டு பலவாக நரையில மாயினே மென்

---

* தாம் என்றது - கற்றறிந்தாரை. † கற்கும்போது.

()(1) சொல்லில் தொடைமுதலியவற்றி னமைப்புப்பற்றி வருமின்ப ம் சொற்சுவையாம். (2) பொருளில் தன்மை உவமை முதலியவற்றி னமைப்புப்பற்றிவருமின்பம் பொருட்சுவையாம். $ கற்றபிறகு.

‡ அதனுன் - துகர்தல் பெறுதல் பயத்தலென்னுங் காரணத்தினுல்.

¶ அறியாதன வெல்லாம் அறியப்பெற்றேம்—அறிதற் கருமையான யோகாப்பியாச முதலிய விஷயங்களேயெல்லாம் தெரியப்பெற்றேம்.

[]யாண்டு பலவாக நரையில மாயினேம் - (யோகாப்பியாசத்தை யப் பியசிக்கும் வகையை நன்கு தெரிந்துகொண்டதனுல் மகக்கு) வருஷம் பல வாகவும் (நரைத்தற்குரிய வயதுவந்தும்) நரைத்தலில்லாம லிருக்கிறோம். விசாரசாகரம் 5-வது தாரங்கத்தில் "பிந்து எவரிடத் திதிகமாகவுண்டோ அவரது சரீரத்தில் அழகுங் காந்தியுமுண்டாம். பிந்துவே சரீரத்தில் விளக் கமானது. பிந்து நஷித்தால் சரீரமும் மனமும் நஷிக்கின்றன. எவனுக்குப் பிந்து ஒருபோதும் நாசமடைவதில்லையோ அவனது சரீரம் நரையின்றி விளங்கும்" என்று கூறுவதும், திருமந்திரம் "அஞ்ஞனம் போன்முட லே யறு மந்தியில், வஞ்சக வாத மறுமத்தியானத்திற், செஞ்சிறு காலியிற் செய் திடிற் பித்தறும், நஞ்சறச் சொன்னேம் நரைதிரை நாசமே", "கரையருகே நின்ற காண லுவரி, வரைவரை யென்பர் மதியிலாமாக்தர், நரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு, நரைதிரை மாறு மமனுமந் தில்லையே" என்று கூறுவது மிங்குணர்தற்பாலனவாம். புறநானூறு "யாண்டு பலவாக நரை

றும் உவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தலென்றிவற்றுற் றுன்புறுதலும், பலரையும் பகையாக்கலும் உடைத்தென அறிந்து அத னைக் காமுறுமையிற் 'கற்றறிந்தார்' என்றும், கரும்பு அயிறற்குக் கூலி போலத் தாமின்புறுதற்கு உலகின்புறுதல் பிறவாற்றுன் இன்மையின் அதனையே 'காமுறுவர்' என்றுங் கூறினர்.

தெளி:—(இ-ள்.) தாம்—, இன்புறுவது - இன்பமடைவதற்குக் கார ணமாகிய கல்விக்கு, உலகு - உலகமானது, இன்புற - இன்பமடைதலால், கண்டு-(அச்சிறப்பு) நோக்கி, கற்றறிந்தார் - கற்றறிந்தவர்கள், காமுறுவர் - (பின்னும் அக்கல்வியையே) விரும்புவர், (எ - று).

தாம் இன்புறுதலாவது (கல்வியால்) நிகழ்காலத்தில் சொற்பொருள்க ளின சுவையை யனுபவித்தலாலும், புகழும் பொருளும் பூசையும் பெறு தலாலும், எதிர்காலத்தில் (கல்வி) அறத்தையும் வீட்டையுந் தருதலாலும், அதனுல் இடையறாத இன்பத்தை அடைதல். உலகு இன்புறுவதாவது இப் பெரியவரோடுகூடி அறியாதவற்றை யெல்லாம் அறியப்பெற்றே மென் றும், வருஷங்கள் பலவாக நரையில்லாம லாயினேமென்றும் மகிழ்தல். செல்வமானுல், (அச்செல்வத்தை) சம்பாதித்தல் காப்பாற்றல் இழத்தல் என்கின்ற இவற்றுல் துன்பமடைதலும், (செல்வம்) பலரையும் பகையாக் கலும் உடையது எனத்தெரிந்து அச்செல்வத்தைவிரும்பாமையின் 'கற் றறிந்தார்' என்றும், கரும்பு தின்பதற்குக் கூலி பெறுவதுபோலத் தாம் இன்பமடைதற்கு உலகின்பமடைவது மற்றொரு வழியால் இல்லாமை யால் அக்கல்வியையே 'காமுறுவர்' என்றும் சொல்லினர்.

(க - து.) கற்றவர் தாங்களின்பமடையுங் கல்விக்கு உலகத் தாரின்பமடைதலைக் கண்டு அதனையே மேலுமேலும் விரும்புவர்.

9, The learned will long for more learning, when they see that while it gives pleasure to themselves, the world also derives pleasure from it.

கஉ. † கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

யிலவாகுதல், யாங்கா லியரென வினவுதி ராயின், மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர், யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும், அல்லவை செய்யான் காக்கு மதன்றலை, யான்றவிர் தடங்கிய கொள்கைச், சான்றோர் பலர்யான் வாழு மூரே" என்று கூறுவது மிங்குறி யத்தக்கதாம்.

† இலக்கணக்கொத்த "சூத்திரஞ் சிலசில நோக்குதற் கரிதேல்" என் னும் சூத்திரவுரையில் " கலித்தொகையின் ஓர்காரணநோக்கி நிதிப் பொருளைக் கேடில்விழுச் செல்வம் என்றார். இவ்வடை (கேடில் விழு என் னும் அடை) கல்விக்குரித்தன்றிப் பிறவற்றிற்கு முரித்தோவென்பாரை

பரி:—(இ - ள்.) ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி; அஃதொழிந்தமணியும் பொன்னுமுதலாயின செல்வமல்ல, ()


அழிவின்மையாவது * தாயத்தார், கள்வர், வலியர், அரசசென் றிவ ராற் கொள்ளப்படாமையும், § வழிபட்டார்க்குக் கொடுத்தழிக் குறையா மையுமாம். சீர்மை - தக்கார்கண்ணே நிற்றல். மணி பொன் முதலியவற் றிற்கு ‡ இவ்விரண்டும் இன்மையின், அவற்றை 'மாடல்ல' என்றார். இவையைந்து பாட்டானுங் கல்வியது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, கேடில் - அழிவில்லாத, வீழு - தெறந்த, செல்வம் - செல்வமாவது, கல்வி - வித்தையாம், மற்றைய வை - அதிநீங்கலாகிய மணியும் பொன்னும் முதலானவை, மாடல்ல-செல் வமல்ல, (எ - று).

(கல்விச்செல்வத்திற்கு) அழிவில்லாமையாவது பங்காளிகள், கள்வர், வலியவர், அரசர் என்ற சொல்லப்படும் இவர்களால் கொள்ளப்படாமை யும், வழிபட்டவர்க்குக்கொடுத்தலிடத்திற் குறையாமையுமாம். சிறப்பு - யோக்கியரிடத்தே நிற்றல். மணி பொன் முதலாயினவற்றிற்கு இவ்விரண் டும் இல்லாமையால் அவற்றை 'மாடல்ல' என்றார். இவை ஐந்து பாட்டா லும் கல்வியது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து) ஒருவனுக் கழிபாத செல்வம் கல்வியன்றி மற்றை யனவல்ல என்பது.

10. Learning is the true imperishable riches; all other things are not riches.



மூன்றும் அதிகாரம்.

கல்லாமை—*On the neglect of learning.*

பரி:—அஃதாவது கற்றலைச் செய்யாமை; என்றது, அதனினீங்க இழிபினை. கல்விச்சிறப்பு † மேல் விதிமுகத்தாற் கூறியதனையான் முற்றுப்பெறுமை நோக்கி, எதிர்மறை முகத்தானும் கூறுகின்றதாகலின், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

நோக்கி, வழு வமைத்தார் நச்சினார்க்கினியார்" என்று கூறுகின்றது. இதனால் கேடில்வீழு என்னும் விசேஷணம் கல்விக்கன்றிப் பிறவற்றிற் கின் றென்பது பெற்றாம்.

* நாலடியார் "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை, மிக்க சிறப்பினரசர் செறின்வவ்வார்" என்று கூறுகின்றது. § கற்கு மாறு வழிபாடு செய்கின்றவர்க்கு.

‡ இவ்விரண்டும் - தாயத்தார் முதலியவர்களால் கொள்ளப்படாமை யும் கொடுத்தழிக் குறையாமையும்.

† மேல் - கல்வியதிகாரத்தில்.

தெளி:—அஃதாவது சற்றலைச் செய்யாமை; கற்றலைச் செய்யாமை யென்றது. அக்கற்றலைச் செய்யாமையினுலாகிய இழிவை. கல்வியது சிறப்பை முன்னர் உடன்பாட்டி வாயிலாகச் சொல்லியவளவால் முடிவு பெருமையை நோக்கி (கல்லாமையென) எதிர்மறை வாயிலாகவுஞ் சொல்லுகின்றதாகலால், இது (கல்லாமை) கல்வியின் பின் வைக்கப்பட்டது.

க. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

பரி:—(இ - ள்.) அரங்கினை யிழையாது வட்டாடினும் போலும், தானே நிரம்புதற் கேதுவாகிய நூல்களைக்கல்லாது ஒருவன் அவையின் கண் ஒன்றனைச் சொல்லுதல், (எ - று).

அரங்கு - * வகுத்த தானம். வட்டாடல் - † உண்டை யுருட்டல். ‡ இவை §"கட்டீ யண்ண வட்டரங் கிழைத்துக்,கல்லாச் சிறு அர் கெல்லி வட்டாடும்" என்பதனுனறிக. நிரம்புதல் - அறியவேண்டுவனவெல்லாமறிதல். § கோட்டி யென்பது ஈண்டாருபெயர்; ¶"புல்லா வெழுத்திற் பொருளில் வறங்கோட்டி" என்புழிப்போல. சொல்லும் பொருளும் தெரிப்படாவென்பதாம்.

தெளி:—(இ - ள்.) நிரம்பிய—(தான்) நிரம்புதற்கு ஏதுவாகிய,நூல்-நூல்களை, இன்றி - கற்றலின்றி, (ஒருவன்), கோட்டி கொளல் - சபையினிடத்து (ஒன்றைச்) சொல்லுதல், அரங்கு - வகுப்பிடத்தை, இன்றி - ஏற்படுத்தாது, வட்டாடியற்று - உண்டையுருட்டினற் போலும், (எ - று).

* வகுத்ததானம் - சூதாடுதற்கு வகுத்த அறை (வீடு).

† உண்டை - சூதாடு கருவி.

‡ இவை - அரங்கு (வகுத்த தானம்), வட்டாடல் (உண்டை யுருட்டல்).

§ நற்றிணை ங இதன்பொருள்: அரசனது கட்டளை தவறுமை போல (உருட்டிய)உண்டை (சென்று நிற்றற்குரிய) வகுப்பிடத்தை யேற்படுத்திப் படியாத சிறுபிள்ளைகள் நெல்லிக்காயை (சூதாடுதற்குரிய) உண்டையாகக்கொண்டு விளையாடும் என்பது. இச்செய்யுளில் அரங்கு என்பது வகுத்ததானம் (இடம்) என்றும், வட்டு என்பது உண்டை யென்றும் பொருள் பட்டவாறறிக.

§ கோட்டி-அவை (சபை), அஃது அங்கு நிகழும் சொல்லியுணர்த்தலின் இடவாகு பெயராம்.

¶ காலடியார் மேன்மக்கள், (5) இதன்பொருள்: இலக்கணத்தினமைவு பொருந்தாதபொருள் விசேடமில்லாத பயனற்றசபை என்பது. புல்லாத கோட்டி, பொருளில்கோட்டி என்றியைத்துக்கொள்க. இங்குக் கோட்டி (சபை) என்பது அவ்விடத்து நிகழும் சொல்லியுணர்த்தியதலறிக.

கிரம்புதல் - அறியவேண்டுவனவற்றை யெல்லாம் அறிதல். கோட்டி யென்பதின் காருபெயர். கிரம்பிய தூலறிவில்லான் சபையில்ஒன்றைச்சொ வின், அது சொல்லும் பொருளும் ஒரு வழிப்படாமற் போமென்பதாம்.

(க - து.) கல்வியறிவில்லாதவன் சபையிற் பேசுதல் ஒழுங் கில்லாதொழியும் என்பது.

1. To speak in an assembly of the learned without fullness of knowledge, is like playing at chess on a board without squares.

உ. * கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

பரி:—(இ - ள்.) கல்வியில்லாத நெருவன் அவையின்கயீ ஒன்று சொல்லுதலை அவாவுதல் இயல்பாகவே முலையிரண்டும் இல்லாதா னொருத்தி பெண்மையை அவாவினாற் போலும், (எ - று).

† *இனைத்தென அறிந்தசினையாகி..., தொகையொடு முற்றும்மை கொடுத்தார். சிறிதும் இல்லாதா னென்பதாம்.* ‡ *அவாவியவழிக் கடை போகாது, போனினும் கைவிளக்கு மென்பதாயிற்று.*

தெளி:—(இ - ள்.) கல்லாதான் - கல்வியில்லாதவனெருவன், சொல் - (சபையினிடத்து ஒன்று) சொல்லுதலை, காமுறுதல் - விரும்புதல், முலை யிரண்டும் - (இயல்பாகவே) இரண்டு முலைகளும், இல்லாதான் - இல்லா தவனொருத்தி, பெண் - பெண்மையை, காமுற்றற்று - விரும்பினற்போ லும், (எ - று).

---

* "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானு மதுவாகப் பாவித் தித் - தானுந்தன், பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே, கல்லா தான் கற்ற கவி" என்பது மிங்கறியத் தக்கதாம்

† முலை யென்பது இவ்வளவினது (இரண்டு) என்று அறிந்த சினைப் பொருளாதலால், இரண்டென்னும் தொகையுடன முற்றும்மைகொடுத்து 'முலை யிரண்டும்' என்று கூறப்பட்டது. "கண்ணிரண்டுங் குருடு" "காலி ரண்டும் நொண்டி" என்றற் றொடக்கத்தனவாக வரும்பிரயோகத்தாலுமிது நன்கு விளங்கும். "இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்குவினைப்பற் தொகுதியு மும்மை வேண்டும்" என்பது தொல்காப்பியம், சொல்லதி காரம், இளவியாக்கம்.

‡ முலையிரண்டும் சிறிதுமில்லாத பேடி பெண்தன்மையை விரும்பிய விடத்து அது முடிவுபெறுதல் போம், முடிவுபெற்றாலும் அஃது இறுதி யில் சிரிப்பையுண்டாக்கும்; அதுபோல, கல்வி யறிவு சிறிதுமில்லாதவன் சபையில் ஒன்றைச் சொல்லியவிடத்து அது முடிவுபெறுதல்போம், முடிவு பெற்றாலும் அஃது இறுதியில் சிரிப்பை யுண்டாக்கு மென்பதாம்.

மூலையிரண்டும் என்றவும்மை இனைத்தென் றறிபொருளில் வந்தமுற் றும்மை. மூலையிரண்டு மில்லாதான் - மூலை சிறிது மில்லாதவனென்பதாம். (கல்லாதான் சபையில் ஒன்றைச் சொல்லுதலை) விரும்பிய விடத்து(அது) முடிவுபெறாது, முடிவுபெற்றாலும் நகையை யுண்டாக்கு மென்பதாம்.

(க - து.) கல்வி யறிவில்லாதவன் சபையி லொன்றைச்சொல் லின் அஃது அவனுக்கு சுவமானத்தை யுண்டாக்கும் என்பது.

2. The desire of the unlearned to speak in an assembly, is like a woman without breasts desiring the enjoyment of womanhood.

கூ. கல்லா தவரு ணனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

பரி:—(இ - ள்.) † கல்லாதாரும் மிக நல்லவராவர் தாமே தம்மை யறிந்து கற்றோர் அவையின்கண் ஒன்றனையுஞ் சொல்லாதிருத்தல் கூடு மாயின், (எ - று)

உம்மை இழிவ சிறப்பும்மை. ‡ தம்மைத்தாம் அறியாமையின் $ அது கூடாதென்பார் * 'பெறின்' என்றும், ¶ கூடின் ஆண்டுத் தம்மை வெளிப் படுத்தாமையானும், பின்கல்வியை விரும்புவராகலானும் 'ணனிநல்லர்' என் றும் கூறினர். இவை மூன்றுபாட்டாலும் கல்லாதார் அவைக்கட் சொல்லு தற் குரியர் அன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கல்லாதவரும் - படிக்காதவர்களும், ணனிநல்லர் - மிகவும் நலலவராவர், (தாமே தம்மையறிந்து), கற்றோர்முன் - கற்றோர் சபையிடத்து, சொல்லாதிருக்கப் பெறின்—(ஒன்றையும்) சொல்லாம லிருத்தல் கூடுமாஞல், (எ - று).

கல்லாதவரும் என்ற உம்மை இழிவு சிறப்பும்மை. (கல்லாதவர்) தம் மைத்தா மறியாமையால் அப்படியிருத்தல் கூடாதென்பார் 'பெறின்' என் றும், கூடுமாஞல் அங்ஙனந் தம்மை வெளிப்படுத்தாமையாலும், பின்பு கல் வியை விரும்புவராகலாலும் 'ணனிநல்லர்' என்றும் சொல்லினர். இவை மூன்றுபாட்டாலும் கல்லாதவர் சபையினிடத்துப் பேசுதற்கு உரியவரல்ல ரென்பது சொல்லப்பட்டது.

† "கல்லாது முணர்ந்தவன் கண்ணில்லா தெஞ்சம்போற்
புல்லிருள் பரத்தருஉம் புலம்புகொண் மருண்மாலை" என்று கலித் தொகை கூறுவதினுங் ணன்குணர்தற் பாலதாம்.

‡ தம்மைத்தாம் அறியாமையின் - கல்லாதவர் தமக்குக் கல்வியறிவில் லாமையைத் தாம் அறியாதிருத்தலால்.

$ அது - சபையில் ஒன்றையுஞ் சொல்லாதிருத்தல்.

* பெறின் என்பது பெறுதலின் அருமையை யுணர்த்தி நின்றது.

¶ கூடின் - சபையில் ஒன்றையுஞ் சொல்லாதிருத்தல் கூடுமாஞல்.

(க - து.) *கற்றோரது சபையில் யாதொன்றையும் பேசா தடங்கியிருக்குங் கல்வியறிவில்லாதவர் மிகவும் நல்லவராவர் என்பது.*

3. The unlearned also are very excellent men; if they know how to keep silence before the learned.

ச. கல்லாதா னெட்பங் கழியநன் ருயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

பரி:—(இ - ள்.) கல்லாதவனது ஒண்மை ஓரோவழி மிக நன்றாயிருப்பினும் அறிவுடையார் *அதனை ஒண்மையாகக் கொள்ளார், (எ-று).

ஒண்மை - அறிவுடைமை. அது நன்றாகாது; ஆயிற்றாயினும் † எரலெழுத்துப் போல்வதோர் விழுக்காடாகலின், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியாரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) கல்லாதான் - கல்லாதவனது, ஒட்பம் - அறிவுடைமையானது, கழியநன்றாயினும் - (ஓரோவிடத்து) மிக நன்றாயிருப்பினும், அறிவுடையார் - விவேகமுடையவர், கொள்ளார் - (அதனை அறிவுடைமையாகக்) கொண்டமாட்டார், (எ - று).

கல்லாதவனது அறிவுடைமை நன்றாகாது; நன்றாயிற்றாயினும் (அது) எரலெழுத்துப்போல்வ தொருவகையுடையதாகலால், நிலைபெற்ற நூலறிவினையுடையவர் அவ்வறிவுடைமையை மதியாரென்பதாம்.

(க - து.) *கல்விபயிலில்லாதவனது அறிவுடைமை ஓரோவிடத்து நன்றாக விருப்பினும், அதனைக் கல்வியறிவுடையார் மதியார்.*

4. Although the knowledge of an unlearned man may be very good at times, the wise will not accept it for true knowledge.

ரு. ‡ கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

---

* *அதனை - ஒண்மையென்னும் அறிவுடைமையை.*

† *எரல்-நத்தை. எரலெழுத்தாவது நத்தை மணலிற்செல்லும்போது தற்செயலாகத் தோன்று மெழுத்தாம். எரலெழுத்துப் போல்வதென்பதனை வடநூலார் குணுட்சரநியாயமென்பர். கல்லாதானொட்பம் எரலெழுத்துப்போல்வதாகலின், அதனை அறிவுடையார் கொள்ளாரென்பதாம்.*

"நீர்மேலெழுத்துப் போல்வதோர்" என்றும் பாடமுண்டு. இப்பாடத்திற்குக் கல்லாதான் ஒட்பம் நீர்மேலெழுதிய எழுத்துப்போல மிக விரைந்தழியுமென்று பொருளாம். "ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம், நீர்மே லெழுத்திற்கு நேர்" என்று ஔவைப் பிராட்டியார் மூதுரையிலருளியிருப்பது மிங் குணர்தற் பாலதாம்.

‡ *"எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும், எழுத்தறிவார் காணினிலையாம்" என்பது நன்னெறி.*

பரி:—(இ - ள்.) நூல்களைக் கல்லாதவொருவன் யான் அறிவுடையேனெனத் தன்னை மதிக்கும் மதிப்பு $ அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடக்கெடும், (எ - று).

கற்றவனென்பது வருவிக்கப்பட்டது. யாதானுமோர் வார்த்தை சொல்லுக்தினையுமே நிற்பது, சொல்லியவழி வழுப்படுதலின், அழிந்து விடுமென்பதாம். இவையிரண்டு பாட்டானும் கல்லாதாரது இயற்கையறிவின் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) *கல்லாவொருவன் - (நூல்களைக்) கல்லாதவொருவன், தகைமை - (யான் அறிவுடையேனென்று தன்னை மதிக்கும்) மதிப்பானது, தலைப்பெய்து - (அவற்றைக்கற்றவன்) கண்டு, சொல்லாடப்பெ, சோர்வுபடும் - கெடும், (எ - று).*

'சொல்லாட' என்பதற்கேற்பக் கற்றவனென்பது வருவிக்கப்பட்டது. (கல்லாத வொருவன் யானறிவுடையேனென்று தன்னை மதிக்கும்மதிப்பானது அவன்) யாதாயினும் ஒருவார்த்தை சொல்லுமட்டுமே நிற்பது, சொல்லியவிடத்துக் குற்றப்படுதலால், அழிந்துவிடுமென்பதாம். இவை இரண்டு பாட்டாலுங் கல்லாதவரது இயற்கை யறிவின் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) கல்லாதவன் தன்னைக் கற்றவனென்று மதிக்கும் மதிப்பானது அவன் கற்றவன்முன் பேசக்கெடும் என்பது.

5. The self - conceit of an unlearned man will fade away, as soon as he speaks in an assembly of the learned.

கூ. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

பரி:—(இ - ள்.) கல்லாதவர் காணப்படுதலான் இலரல்லர் உளரென்று சிலர்சொல்லு மவையினாதல் அன்றித் தமக்கும் பிறர்க்கும் பயன் படாமையால் விளையாத † களர் நிலத்தோ டொப்பர், (எ - று).

களர் தானும் பேணற்பாடழிந்து உயிர்க்கட்கும் உணவு முதலிய உதவாதது போலத் தாமும் கன்கு மதிக்கற்பாடழிந்து பிறர்க்கும் அறிவு முதலிய உதவா ரென்பதாம். இதனுற் கல்லாதாரது பயன்படாமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) *கல்லாதவர் - கல்லாதவர்கள், (காணப்படுதலால்), உளரென்னுமாத்திரையரல்லால் - (இல்லாதவரல்லர்) உளரென்று (சிலர்)*

$ *அவற்றை - நூல்களை.*

† *களர்நிலம் - நெல்முதலியன விளைதற் குரியதாகாத நிலம்.*

சொல்லும் அளவினாதலன்றி, (தமக்கும்பிறர்க்கும் பயன்படாமையால்), பயவாக்களாரனையர் - விளையாத களர்நிலத்தோ டொப்பாவார், (எ - று).

களர்நிலம் தானும் விரும்பப்படுவதழிந்து உயிர்களுக்கும் உணவு முதலியவற்றை உதவாததுபோன்று கல்லாதவர் தாமும் நன்குமதிக்கப்படுவதழிந்து பிறர்க்கும் அறிவுமுதலியவற்றை உதவாரென்பதாம். இதனால் கல்லாதவரதி பயன்படாமை சொல்லப்பட்டது.

(க - து.) கல்லாதவர் களர் நிலம்போலத் தமக்கும் பிறர்க்கும் பயன்படுவதிலர் என்பது.

6. The unlearned are like worthless barren land : all that can be said of them is, that they exist.

எ. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.

ப:—(இ - ள்.) நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பலநூல்களினுஞ் சென்ற அறிவிலாதவனுடைய †எழுச்சியும் அழகும் சுதையான் மாட்சிமைப்படப் புனைந்தபாவையுடைய எழுச்சியும் அழகும்போலும்,(எ-று).

அறிவிற்கு மாட்சிமையாவது பொருள்களைக் கடிதிற்காண்டலும் மறவாமையும் ‡ முதலாயின. பாவை ஆகுபெயர். § "உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிது" ஆகலான் எழினலங்களும் ஓர்பயனேயெனினும், நூலறிவில்வழிச் சிறப்பிலவென்பதாம். இதனால் அவர் வடிவழகாற் பயனின்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) நுண் - நுட்பமுடையதாய், மாண் - மாட்சிமைப்பட்டு, நுழை - (பலநூல்களிலும்) சென்ற, புலம் - அறிவு, இல்லான் - இல்லாதவனது, எழில் - எழுச்சியும், நலம் - அழகும், மண் - சுண்ணச்சாந்தினால், மாண் - மாட்சிமைப்பட, புனை - அலங்கரித்த, பாவையற்று - பாவையினது எழுச்சியும் அழகும்போலும், (எ - று).

† "ஒப்புமுருவும்" என்னும் தொல்காப்பியச் சூத்திரவுரையில் "எராவது எழுச்சி; அஃது எழுகின்ற நிலைமையென நிகழ்காலமே குறித்து நிற்கும். எழிலாவது அங்ஙனம்வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்தமாறியதன்றி இன்னும் வளருமென்பது போன்று காட்டுதல்" என்றனர் நச்சினார்க்கினியர். " இல்ல மிளமை எழில்வனப்பு " என்று நாலடியார் கூறுவது மிங்குணர்தக்கது.

‡ முதலாயின என்றதனால் பிறர்க்குப்போதித்தல் பயன்படுந்தூல்களியற்றுதல் முதலியவற்றையுங் கொள்க.

§ சீவக சிந்தாமணி முத்தியிலம்பகம், (154) இதன்பொருள் (கல்வியினின் கட்டளையாலே) உருவான் மிக்கதோ ருடம்பை (அம்மக்கள் யாக்கையைப்) பெறுதலுமரிது என்பது.

அறிவிற்கு மாட்சிமையாவது நூல்களின் பொருள்களே விரைவாகவுணர்தலும் மறவாமையும் முதலானவை. பாவை யென்பது அதன் எழுச்சியழகுகளேயுணர்த்துதலால் பொருளாகுபெயராம். உருவினுல்மிகுந்ததோ ருடம்பைப் பெறுதலும் அரிது ஆகலால் எழில் கலங்களும் ஒருபயனையானலும், அவை நூலறிவில்லாதவிடத்துச் சிறப்பில்லனவா மென்பதாம். இதனுல் நூலறிவில்லாதவரது வடிவழகினுல் பயனில்லாமைசொல்லப்பட்டது.

(க - து.) நூலறிவில்லாதவனது எழுச்சியும் அழகும் சிறப்புடையவாகா என்பது.

7. The beauty and goodness of one who is destitute of knowledge, gained by the study of great and exquisite works, is like the beauty and goodness of a painted earthen doll.

ச. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு

பரி:—(இ - ள்.) கற்றோர்மாட்டுநின்ற வறுமையினும் இன்னாது கல்லாதார்மாட்டு நின்ற செல்வம், (எ - று).

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. * தத்தங்கிலையின் அன்றி மாறி நிற்றலான தா † மிடுக்கட்படுதலும் ‡ உலகிற்குத் தன்பஞ் செய்த

* தத்தங்கிலையின் அன்றி - (செல்வமும் தரித்திரமும் முறையேகற்றோரிடத்தும் கல்லாதாரிடத்தும் நிற்றலில்லாது), மாறிநிற்றலான் - (செல்வம் கல்லாதாரிடத்தும் தரித்திரம் கற்றோரிடத்திலும்) மாறுபட்டு நிற்றலால், தாமிடுக்கண்படுதலும்-(செல்வமும் தரித்திரமும் துன்பப்படுதலும்), உலகிற்குத் துன்பஞ்செய்தலும்-இரண்டற்கும்- (செல்வத்திற்கும் தரித்திரத்திற்கும்), ஒக்குமாயினும் என்பது.

† அடுக்கண்படுதலாவது - செல்வங் கல்லாதாரிடத் திருந்து பிறர்க்குபகாரஞ் செய்தற்குரியதாகாது போதலும், தரித்திரம் கற்றோரிடத்திருந்து அவரை வருத்துவதுமா மென்க.

‡ உலகிற்குத்துன்பஞ் செய்தலாவது கல்லாதவர் செல்வமுடையவரானுல் அவர் அச்செல்வத்தைக்கொண்டு கியாய அநியாயமறியாது பிறர்க்குத் தீமைசெய்வாரென்பதும், கற்றவர் தரித்திரமுடையவரானுல் அவர் அத்தரித்திரத்தினுல் உலகிற்குபகாரஞ் செய்தற்குரியவராகாது போவரென்பதுமா மென்க.

"எனைத்தானை யேனு மிலம்பாட்டார் கல்வி, தினைத்தானையுஞ் சீர்ப் பாடிலவாம்" என்றும், "வள்ளன்மை யில்லாதான செல்வத்தின் மற்றை யோன், கல்குரவே போலும் கனிக்கல்வி" என்றும் நீதிநெறி விளக்கம் கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

லும் இரண்டற்கும் ஒக்குமாயினும், திருக் கல்லாரைக்கெடுக்க வறுமை நல்லாரைக் கெடாது நிற்றலான், () வறுமையினும் திரு இன்னாது என்றார். இதனால் அவர் திருவின் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) கல்லார்கண் - கல்லாதவரிடத்து, பட்ட - நின்ற, திரு - செல்வமானது, கல்லார்கண் - கற்றவரிடத்து, பட்ட - நின்ற, வறுமையின் - வறுமையினும், இன்னாது - துன்பஞ் செய்வதாம், (எ - று).

வறுமையினும் என்ற இழிவு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. செல்வம் தனக்குரிய கற்றவரையும், வறுமை தனக்குரிய கல்லாதவரையும் விட்டு மாறி நிற்றலால் தாம் இடுக்கண்படுதலும் உலகிற்குத் துன்பஞ்செய்தலும் (செல்வம் வறுமை யென்னும்) இரண்டற்கும் ஒக்குமாயினும், செல்வம் கல்லாதவரைக்கெடுக்க, வறுமை கற்றாரைக் கெடுக்காது நிற்றலால் வறுமையினும் திரு இன்னாது என்றார். இதனால் கல்லாதவரது செல்வத்தின் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) கல்லாதவரிடத்துண்டாகிய செல்வம் கற்றவரிடத்துண்டாகிய தரித்திரத்தினும் மிகக் கொடியதாம் என்பது.

8. Wealth, gained by the unlearned, will give more sorrow than the poverty which may come upon the learned.

கூ. $ மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்ற ரனைத்திலர் பாடு.

பரி:—(இ - ள்.) கல்லாதார் உயர்ந்த சாதிக்கட் பிறந்தார் ஆயினும் தாழ்ந்த சாதிக்கட் பிறந்துவைத்துங் கற்றாரது பெருமை அளவிற்றிய பெருமை யிலர், (எ - று).

† உடலோடொழியுஞ் ¶ சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லும்

() வறுமையின் என்றும் பாடமுண்டு.

$ "ஆக்கு மறிவா னலது பிறப்பிலுல், மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க" என்று கன்னெறிகூறுவதும், "ஏற்பாற் குலத்தின் மேற்பா லொருவன், கற்றில னாயிற் கீழிருப் பவனே, எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும், அக்குடிக் கற்றோரை மேல்வருகென்பர், அறிவுடை யொருவனே யரசனும் விரும்பும்" என்று வெற்றிவேற்கை கூறுவது மிக்கறியத்தக்கனவாம்.

† உடம்பின்கண் கற்பிக்கப்பட்டசாதி யுடம்பொழிந்த போது தான் சொல்லாமலே ஒழிதலால் 'உடலோடொழியுஞ்சாதி'என்று கூறப்பட்டது.

¶ நச்சினர்க்கினியார் தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல் "பொருண்மை சுட்டல்" என்னுஞ் சூத்திரத்தின் விசேடவுரையில் "பொருடன்மையாவது அப்பொருள்களின் சாதித்தன்மை. ஆ - (பசு) வென்னும் பொருள் கெட்டதேனும் அவ்வாவினது சாதித்தன்மை எக்காலத்தும்

† கல்வியுயர்ச்சி சிறப்புடைத் தென்பதாம். இதனால் அவர் சாதியுயர்ச்சி யாற் பயனின்மை கூறப்பட்டது.

தேளி:—(இ - ன்.) கல்லாதார் - கல்வியில்லாதவர், மேற்பிறந்தாராயினும் - உயர்ந்தசாதியில் பிறந்தாராயினும், கீழ்ப்பிறந்தும் - தாழ்ந்தசாதியில் பிறந்திருந்தும், கற்றாரனைத்து - கற்றவரது பெருமையளவினதாகிய, பாடு - பெருமை, இலர் - இல்லாதவராவர், (எ - று).

உடம்போடு ஒழியும் சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லும் கல்வியுயர்ச்சி சிறப்புடையதென்பதாம். இதனால் கல்லாதவரது சாதியுயர்ச்சியால் பயனில்லாமை சொல்லப்பட்டது.

(க - து.) கற்றவர் தாழ்ந்தசாதியாராயினும், அவர் யாவரினும் மேம்பட்டவராவர் என்பது.

9. The unlearned, though born in a high caste, are not equal in dignity to the learned, though they may have been born in a low caste.

கூ. ‡ விலங்கோடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

பரி:—(இ - ள்.) ¶ விலங்கோடு நோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர் அத்துணைத்தீமையுடையர் விளங்கிய நூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர், (எ - று).

இலங்கு நூலென்பது சாதியொருமைப்பெயர். விளங்குதல் - மேம்படுதல். விலங்கின் மக்கட் கேற்றமாய உணர்வுமிகுதி காணப்படுவது கற்கெடாது நிற்கு மென்பது உணர்த்துதற்கு ஆவுண்டு என்றார்" என்றனர். பொருள் கெட்டாலுஞ் சாதி கெடாதிருக்குமென்பது தார்க்கீகரது கொள்கை. தருக்சங்கிரகம் சாதிக்கிலக்கணம் " சாமாளியமாவது நித்தமாய், ஒன்றாய், பலவற்றின் ஒருங்குசேறலே யுடையசாதி" என்று கூறுகின்றது.

† கல்வி யுயிரோடு செல்வதென்பது "ஒருமைக்கட் டான்கற்ற கல்வியொருவற், கெழுமையு மேமாப் புடைத்து" என்னுங்குறளாலறிக.

‡ விலங்கோடு மக்க ளனையர் என்ற விடத்து ஒப்பலாத விலங்கு (மிருகம்) ஒப்பாகச் சொல்லப்படுதலால் விலங்கு ஒப்பலொப்புப் பொருளதாயிற்று. இலக்கணக்கொத்து நூலார் "கருவிகருத்தா" என்னுஞ் சூத்திரவுரையில் "விலங்கோடு மக்க ளனையர் ஒப்பலொப்பு" என்றனர்.

¶ விலங்கைநோக்க மக்கள் நன்மையுடையவராயும் அவ்விலங்குதீமையுடையதாயிருத்தல் போன்று, கல்லாதவரை நோக்கக் கற்றவர் நன்மையுடையவராயும் அக்கல்லாதவர் தீமையுடையவராயு மிருக்கின்றாரென்பதாம். "தக்க வின்ன தகாதன வின்னவென், றெருக்க வுலை ராயி னுயர்ந்தனை, மக்களும் விலங்கே" என்பது இராமாயணம்.

ரூர் கண்ணே யாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்தபிறப்பினரல்லரென்ப தாம். ¶ மயக்கிரணிறை. இதனுல் அவர் மக்கட் பிறப்பாற் பயனெய்தா மை கூறப்பட்டது.

தேளி:—(இ - ள்.) இலங்குதூல் - விளங்கிய நூலே, கற்றோடு - கற்றவரோடு, (ஒப்பிட்டு) (நோக்க), வினையவர் - கல்லாதவர், விலங்கொடு-மிருகங்களோடு, (ஒப்பிட்டு) (நோக்க), மக்களனேயர் - மனிதர் எவ்வளவு நன்மையுடையவர் அவ்வளவு தீமையுடையவராவர், (எ - று).

இலங்குநூலென்பது (வருமொழி நோக்காது பன்மைப்பொரு ளுண ர்த்துதலின்)சாதி பொருமைப்பெயர். விளங்குதல்-மேம்பட்டிதோன்றுத ல். விலங்கைப்பார்க்கிலும் மனிதர்க்குமேலான அறிவுமிருகி காணப்படுவது கற்றவரிடத்தே யாதலால்,கல்லாதவரும் அக்கற்றவரும் சமானமான பிறப் பினரல்லரென்பதாம். இஃது எதிர் நிரனிறைப் பொருள்கோள். இதனுல் கல்லாதவர் மனிதப்பிறப்பினுல் பயனடையாமை சொல்லப்பட்டது.

(க-து.) கற்றவர் மக்களாவர்; கல்லாதவர் மிருகங்களாவர்.

10. As beasts by the side of men, so are other men by the side of those who are learned in celebrated works.

நான்காம் அதிகாரம்.

கேள்வி:—*On Hearing (Instruction).*

பரி:—அஃதாவது கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந் தார் கூறக்கேட்டல், கற்றவழி அதனின் ஆய அறிவை வலியுறுத்தலானு மீ, கல்லாதவழியும் அதனை உண்டாக்குதலானும் இது கல்வி கல்லா மைகளின்பின் வைக்கப்பட்டது.

தேளி:—அஃதாவது கேட்கப்படும்நூலின் பொருள்களைக்கற்றறிந்த வர் சொல்லக்கேட்டல். கற்றவிடத்து அக்கல்வியினுலாகிய அறிவை

¶ வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ள வற்றை யம்முறையே சொல்லுதல் நிரனிறையாம். அதில் மாறிவருவது மயக்க நிரனிறையாம். மயக்கிரணிறையெனினும் எதிர் நிரனிறை யெனி னும் ஒக்கும்.

விலங்கு வினையவர் (கல்லாதவர்),மக்கள் கற்றூர் எனமுறையேவையா து விலங்கு கற்றூர், மக்கள் வினையவர் எனமாறிவைத்தமையின், இது மய க்க நிரனிறையாயிற்று. கற்றூர் மக்களாவர், வினையவர் விலங்காவர் என்று கொள்க. "களிமகற் கண்டும் போல, களிகடற் கூம்புங் கலனும் தோ ன்றும், தோன்றன் மறந்தார் துறைகெழு நாட்டே" என்னுங் கொல்லிரு த்தியுரையில் எதிர்நிரனிறைக்குக்காட்டிய செய்யுளும் இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

உறுதிப்படுத்தலாலும், கல்லாதவிடத்தும் அக்கல்வியறிவை உண்டாக்குதலாலும் இது (கேள்வி) கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது.

க. † செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளில்லாஞ் தலை.

பரி:—(இ-ள்.) ஒருவற்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான் வருஞ்செல்வம்; அச்செல்வம் பிறசெல்வங்களெல்லாவற்றினுந் தலையாகலான், (எ-று).

செவியான் வருஞ்செல்வம் - கேள்வியான் எல்லாப்பொருளையு மறிதல். ‡ பிறசெல்வங்கள் பொருளான் வருவன; ¶ அவை நிலையா வாகலானும், தின்பவினைவின வாகலானும் இது தலையாயிற்று. $ அவற்றை ஒழித்து இதனையே செய்கவென்பது * குறிப்பெச்சம்.

தேளி:—(இ - ள்.) (ஒருவனுக்கு) செல்வத்துட் செல்வம் - செல்வங்களுள் (சிறப்புடைய) செல்வமாவது, செவிச்செல்வம்-செவியால்வருஞ் செல்வமாம், அச்செல்வம் - அச்செல்வமானது, செல்வத்திலெல்லாம்-பிற செல்வங்களெல்லாவற்றினும், தலை-தலைமையாயதாம், (ஆதலால்), (எ-று).

செவியால்வருஞ் செல்வம்-கேள்வியினால் நூற்பொருளெல்லாவற்றையும்அறிதல். பிறசெல்வங்கள் பொருளால் வருவன; அவை நிலையில்லாதனவாகலாலும், தின்பதருவன வாகலாலும் இக்கேள்விச்செல்வம் தலையாயிற்று. அவற்றைவிட்டு இக்கேள்விச்செல்வத்தையே சம்பாதிக்கவேண்டுமென்பது குறிப்பெச்சம்.

(க-து.)செல்வங்களுள் சிறந்த செல்வம் கேள்விச்செல்வமாம்.

† செல்வத்துட் செல்வம் - மற்றைச் செல்வங்களெல்லாம் வறுமையாமாறுவருஞ் செல்வம். "இன்ப மிடையறு தீண்டு மவாவென்னுக், தின்பத்துட் டின்பங் கெடின்" எனனுங் குறளின் விசேடவுரையில் "தின்பத்துட் டின்பம் எனைத்தின்பங்களெல்லாம் இன்பமாகவருந் தின்பம்" என்று கூறியிருத்தலு மிங்கறிதற்பாற்றும்.

‡ பிறசெல்வங்கள் - உண்டி உடைமுதலியன. ¶ அவை-பிறசெல்வங்கள்.

$ அவற்றையொழித்து இதனையே செய்க-பிறசெல்வங்களையொழித்துக் கேள்வியால் வருஞ்செல்வத்தையே சம்பாதிக்கக்கடவர்.

* குறிப்பாலுணரப்படுவது குறைந்து நிற்பது குறிப்பெச்சமெனப்படும். "தத்தங் குறிப்பி னெச்சஞ் செப்பும்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தின் விசேடவுரையில் "கற்கறிக்க நன்கட்டான் என்னுழி நீக்கட்டா னென்னுங் குறிப்புத் தோன்றிய எஞ்சு பொருளினைத்தானே கூறினின்றது" என்று நச்சினார்க்கினியார் கூறியது மிங்கறியத்தக்கதாம்.

1. Wealth gained by the ear is wealth of wealth; that wealth is the chief of all wealth.

உ. செவிக்குணவில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

பரி:—(இ - ள்.) செவிக்குணவாகிய கேள்வியில்லாத பொழுது வயிற்றுக்குஞ் சிறிதுணவு இடப்படும், (எ - று).

சுவை மிகுதியும் பிற்பயத்தலும் உடைய கேள்வி யுள்ளபொழுது வெறுக்கப்படுதலான் 'இல்லாத போழ்து' என்றும், ¶ பெரிதாயவழித் தேடற்றுன்பமே யன்றி கோயுங் காமமும் பெருகுதலாற் 'சிறிது' என்றும், அதுதானும் பின்னிருந்து கேட்டற்பொருட்டாகலான் 'ஈயப்படும்' என்றுங் கூறினர். ‡ ஈதல் வயிற்றது இழிவுதோன்ற நின்றது. இவையிரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) செவிக்கு - காதுக்கு, உணவு - உணவாகிய கேள்வி, இல்லாதபோழ்து - இல்லாதகாலத்து வயிற்றிற்கும் - வயிற்றினுக்கும், சிறிது - சிறிதுணவு, ஈயப்படும் - இடப்படும், (எ - று).

மிகுந்தசுவையையும் பின்னே பயன் தருதலேபுமுடைய கேள்வி உள்ள போது வயிற்றுணவு வெறுக்கப்படுதலால் 'இல்லாதபோழ்து' என்றும், உணவு அதிகமானவிடத்து அவ்வுணவைச் சம்பாதிக்கும் துன்பமேயல்லாமல் (அவ்வுணவால்) கோயும் காமமும் அதிகரித்தலால் 'சிறிது' என்றும், அச்சிறிதுணவு கொடுத்தலும் பின்னே பிழைத்திருந்து (தூற்பொருளைத் தக்காரிடத்துக்) கேட்டற்பொருட்டாகலால் 'ஈயப்படும்' என்றும், சொல்

¶ பெரிதாயவழி (வயிற்றிற்கு உணவு அதிகமான விடத்து) தேடற்றுன்பமே யன்றி (உணவிற்காகப் பொருளைத்தேடித் துன்பமேயல்லாமல்) கோயும் காமமும் (அவ்வுணவால் வியாதியும் மாதர்பால் வீருப்பமும்) பெருகுதலால் (அதிகரித்தலால்) என்பது. அதிகமாகவுண்ணுதலால் கோயும் காமமும் பெருகுமென்பது "இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும், கழிபே ரிரையான்க ணோய்" என்று திருக்குறளும் "துயிற்சுவையுந் தூங்கலார் தோட்சுவையு மெல்லா, மயிற்சுவையி னூதுவ" என்று நீதி நெறி விளக்கமும் கூறுவதாலுமறிதற்பாற்றும்.

‡ ஈதல் இழிந்தோனுக்கல்லாமல் ஒப்போனுக்கும் மிக்கோனுக்குமின் மையின் 'வயிற்றுக்கு மீயப்படும்' என்பதனக்ணுள்ள ஈதல் வயிற்றினதுஇழிவு தோன்றுமாது நின்றது. வயிறு இழிவுள்ளதென்பது "ஒருநா ளுணவை யொழியென்ரு லொழியா, யிருநாளைக் கேலென்ரு லேலாய் - ஒருநாளும், என்னே வறியா யிடும்பையூ ரென்னபீறே, உன்னோடு வாழ்த லரிது" என்று நல்வழி கூறுவதாலுமறிதற் பாற்றும். ஈதல் இழிந்தோனுக்கென்பது "ஈயென் கினவி யிழிந்தோன் கூற்றே" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தா லறிக.

லினர், 'ஈயப்படும்'என்றது வயிற்றினது இழிவுதோன்ற நின்றது. இவை இரண்டுபோட்டாலும் கேள்வியது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து.) கேள்வியுணவு வயிற்றுணவினும் சிறந்தது என்பது.

2. When there is no food for the ear, give a little also to the stomach.

கூ. ¶ செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி னுண்ணூரோ டொப்பர் நிலத்து.

பரி:—(இ - ள்.) செவியுணவாகிய கேள்வியினையுடையார் நிலத்தி னீங்கண்ணராயினும், $ அவியுணவினையுடைய தேவரோ டொப்பர்.

செவியுணவு - செவியாலுண்ணும் முணவு. ‖ அல்வழிக்கண்வந்த இன் சாரியையது னகரம் வலிகுறின்றது. † அவியுணவு-தேவர்க்கு வேள்வித் தீயிற் கொடுப்பன. அறிவான் மிகைந்தமையான் 'ஆன்றார்' என்றும், தன் பமறியாமையான் ‡ 'ஆன்றோரோ டொப்பர்' என்றுங் கூறினர். இதனால் அதனை யுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) செவியுணவின் - செவியுணவாகிய, கேள்வி - கேள்வியினை, உடையார்-உடையவர், நிலத்து - பூவுலகத்து, (இருப்பவராயினும்), அவியுணவின் - அவியாகிய வுணவினையுடைய, ஆன்றோரொடு-தேவரோடு, ஒப்பர் - ஒப்பாவார், (எ - று).

செவியுணவு - செவியாலுண்ணும் (கேட்கும்) உணவு (கற்கேள்வி). செவியுணவின் என்பதன்கண் அல்வழிப் பொருளில் வந்த இன்சாரியையி

¶ நாக்கிந்திரியத்திற்குரிய வுணவைக் காதிந்திரியத்தின்மீதேற்றிச் 'செவியுணவு' என்று கூறப்பட்டது. இஃது ஓரிந்திரியத்திற்குரிய விஷயத்தை மற்றோரிந்திரியத்தின்மீ தேற்றிக்கூறிய உபசாரவழக்காம். தொல்காப்பியம், பொருளதிகாரம் பொருளியலில் "உண்டற் குரிய வல்லாப் பொருளோ, யுண்டன போலக் கூறலு மமைபே" என்று கூறுதலு மிங் கறிதற்பாற்றும்.

$ அவி - நெய், பொரி, சமித்து முதலியன.

‖ உணவிற்கேள்வி என்பது சாரைப்பாம்பு என்பதுபோல இருபெய ரொட்டுப் பண்புத்தொகையா யிருத்தலால் இன் என்பது அல்வழிக் கண்வந்த சாரியையாயிற்று. அஃது உணவாகிய கேள்வியெனவிரியும். இன் என்னும் சாரியையிடைச்சொல்லி னீற்றுனகரம் றகரமாகத் திரிதற்கு வீதியில்லாமையால் னகரம் றகரமாகத்திரிந்து வந்தது செய்யுள் விகார மாமென்க.

† அவியாகிய வுணவு என்றும் பாடமுண்டு.

‡ தேவரோ டொப்பர் என்றும் பாடமுண்டு.

னது னகரம் றகரமாக வலித்தல் விகாரம் பெற்று நின்றது. அவி யுணவு-தேவர்களுக்கு யாகாக்கினியிற் கொடுக்கும் நெய் முதலியன, அறிவால் நிறைந்தமையால் 'ஆன்றார்' என்றும், துன்பமறியாமையால் 'ஆன்றோர் டொப்பர்' என்றும் சொல்லினர். இதனால் கேள்வியையுடையவரது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) கேள்வியறிவுடையவர் தேவருக்கொப்பாவர்.

3 Those who in this world enjoy instruction which is the food of the ear, are equal to the Gods, who enjoy the food of the sacrifice.

ச. * கற்றில னெயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றுந் துணை.

பரி:—(இ - ள்.) † உறுதி நூல்களைத் தான் கற்றில னாயினும், அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்க; அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சிவந்துழிப் பற்றுக் கோட்டாந் துணையாகலான், (எ-று).

‡ உம்மை கற்கவேண்டுமென்பதுபட நின்றது. தளர்ச்சி-வறுமையானுதல் அறிவின்மையானுதல் ¶ இடுக்கட்பட்டுழி மனத்தளர்தல். அதனைக் கேள்வியின் ஆய அறிவு நீக்குமாகலின், 'ஊற்றுக் துணை' என்றார். § ஊன்றென்னு மாகுபெயரின் னகரம் றகரமாய் நின்றது.

* "உணற்கினிய" எனனுஞ் செய்யுளில் பழமொழி "கற்றலிற் கேட்டலே நன்று" என்று கூறுகின்றது.

† உறுதி நூல்கள் - புருஷார்த்தங்களைக் கூறும் சாஸ்திரங்கள்.

‡ கற்றில னாயினும் என்றவும்மை "மறப்பினும்" என்பதன் உம்மையைப் போன்று எதிர்மறைப் பொருளதாய் நின்றது. "மறப்பினு மோத்துக் கொளலாகும்" என்னுங் குறளின் விசேடவுரையில் "மறந்தவழி இழிகுலத்தனு மாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தான் மறப்பினும் என்றார்" என்று கூறியிருத்தலு மிங்கறியத்தக்கதாம்.

¶ "ஆங்கவையொருபால்" என்னுந் தொல்காப்பியச் சூத்திர விசேடவுரையில் "இடுக்கண் என்பது மலர்ந்த நோக்கமின்றி மையல்நோக்கம்பட வரும் இரக்கம்" என்றனர் நச்சினார்க்கினியார்.

§ ஊன்று என்னும் முதனிலைத் தொழிலாகு பெயரின் னகரம் புணர்ச்சி விகாரத்தால் றகரமாகத் திரிந்து ஊற்று என நின்றது.

ஊன்றுத (நாட்டுத) லென்னும் பொருளை யுணர்த்தும் ஊற்று என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர் அதனையுடைய கோலை உணர்த்தி தலால் முதனிலை திரிந்ததொழிலாகு பெயராம்.

தேளி:—(இ - ன்.) கற்றிலனாயினும் - (உறுதி பயக்கும் நூல்களைத் தான்) கல்லாதவனாயினும், கேட்க - (அந்நூல்களின் 'பொருள்களைக் கற்றறிந்தவர்சொல்லக்) கேட்கக்கடவன், அஃது - அக்கேள்வியானது, ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒற்குத்தின் - தளர்ச்சிவந்தவிடத்து, ஊற்றுத்துணை - பற்றுக்கோடாந்துணையாம், (ஆதலால்), (எ - று).

'கற்றிலனாயினும்' என்ற உம்மை கற்கவேண்டுமென்பது தோன்ற நின்றது. தளர்ச்சி-வறுமையாலாவது அறிவில்லாமையாலாவது தன்பமடைந்த விடத்து மனத்தினர்தல். அத்தளர்ச்சியைக் கேள்வியாலாகிய அறிவு நீக்கு மாதலால் 'ஊற்றுத்துணை' என்றார். ஊன்று என்பது ஊற்று எனத்திரிந்து ஆகுபெயராய் நின்றது.

(க - து.) ஒருவன் கல்லாதவனாயிருப்பினும், அவன் உறுதிப் பொருள்களைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்கவேண்டும்; அக் கேள்வி அவனுக்குத் தன்பமேர்ந்தவிடத்துப் பேருதவிசெய்யும்.

4. Although a man be without learning, let him listen to the teaching of the learned; that will be to him a staff in adversity.

ரு. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

பரி:—(இ-ள்.) வழுக்குதலை யுடைய சேற்று நிலத்து இயங்குவார்க்கு ஊன்றுகோல்போலுதவும்; ‡ காவற்சாகாடு உகைப்பார்க்கு ஒழுக்க முடையார் வாயிற் சொற்கள், (எ-று).

¶ அவாய் நிலையான் வந்த உவமையடையாற் பொருளடை வருவிக்

‡ "காவற் சாகா டுகைப்போன் மாணின், ஊறின் முடி யாறினிது படுமே" என்பது புறநானூறு.

¶ ஒருபதம் தன்னை முடிப்பதொருபதம் இல்லாத விடத்து முடிவு பெறுதற்றலென்னும் அவாய் நிலையால் 'இழுக்கலுடையுழி யூற்றுக்கோல்' என்பதில் வந்த இயங்குவார்க்கு என்னும் உவமை யடையினால் 'ஒழுக்க முடையார்வாய்ச் சொல்' என்பதில் காவற்சாகாடு உகைப்பார்க்கு என்னும் பொருளடை வருவிக்கப்பட்டது.

உவமான மெனினும் உவமையெனினும்ஒக்கும் உவமேய மெனினும் பொருளெனினும் ஒக்கும். 'இழுக்கலுடையுழி யூற்றுக்கோல்' என்னும்உவமானத்திற்கு இயங்குவார்க்கு என்பது அடை (விசேஷணம்) என்றும், 'ஒழுக்க முடையார்வாய்ச் சொல்'என்னும் உவமேயத்திற்குக் காவற்சாகாடு உகைப்பார்க்கு என்பது அடை யென்று மறிக.

கப்பட்டது. * ஊற்றுக்கோல்போ லூதவுதல்-† தளர்ந்தழி அதனை நீக்குதல். ‡ கல்வியுடையரேனும் ஒழுக்க மில்லாதார் அறிவிலராகலின், அவர் வாய்ச்சொற் கேட்கப்படாதென்பது தோன்ற 'ஒழுக்க முடையார்வாய்ச் சொல்' என்றார். வாயென்பது நீச்சொ லறியாமையாகிய சிறப்புணர் நின்றது. ¶ அவற்றைக் கேட்கவென்பது குறிப்பெச்சம்.

தெளி:—(இ-ன்.) இழுக்கலுடையுழி-வழுக்குதலையுடையசேற்று நிலத்தில், ஊற்றுக்கோலற்று - (நடப்பவர்க்கு) ஊன்றுகோல்போ லூதவிசெய்யும், ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் - (ஆக்கினை சக்கரத்தைச் செலுத்திய அரசருக்கு) ஒழுக்கமுடையவரது வாயிற் பிறக்குஞ்சொற்கள், (எ-று).

அவர் நிலையால் வந்த நடப்பவர்க்கு என்னும் உவமானஅடையினால் ஆக்கினைசக்காத்தைச் செலுத்திய அரசருக்கு என்னும் உவமேயஅடை வருவிக்கப்பட்டது. ஊன்றுகோல்போ லூதவுதல் - தளர்ந்தவிடத்து அத் தளர்ச்சியை நீக்குதல். கல்வியுடையவராயினும் ஒழுக்கமில்லாதவர் அறிவில்லாராகலால், அவர் வாய்சொல் கேட்கப்படாதென்பது தோன்ற 'ஒழுக்க முடையார்வாய்ச் சொல்' என்றார். வாய் என்பது நீயசொல் அறியாமையாகிய சிறப்பு அறியுமாறு நின்றது. அச்சொற்களைக் கேட்கக்கடவ ரென்பது குறிப்பெச்சம். வழுக்குதல் - சறுக்குதல்.

(க-து). நல்லொழுக்க முடையவரது சொல் ஆபத்தண்டானபோது ஊன்றுகோல்போ லூதவிசெய்யும் என்பது.

5. The words of the good are like a staff in a slippery place.

சு. எணைத்தானு நல்லவை கேட்க வினைத்தானு
மான்ற பேருமை தரும்.

* ஒழுக்கமுடையாரது வாய்ச்சொல் ஊன்று கோல்போ லூதவிசெய்தல்.

† தளர்ந்தழி அதனை நீக்குதல்—வறுமையினாலாவது அறிவில்லாமையினாலாவது துன்பம் நேர்ந்தவிடத்து மனந் தளர்ந்தபோது அத்தளர்ச்சியை யொழித்தல்.

‡ "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும், கல்லா ரறிவிலா தார்" என்னுங் குறளின் விசேட வுரையில் "கல்விக்குப்பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமு மாகலின் அவ்வொழுகுதலைக் கல்லாதார் பலகற்று மறிவிலாதார் என்றுங் கூறினார்" என்று கூறியிருத்தலு மிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

¶ அவற்றை - ஒழுக்கமுடையாரது சொற்களை.

பரி:—(இ - ள்.) ஒருவன் சிறிதாயினும் உறுதிப் பொருள்களைக் கேட்க, அக்கேள்வி அத்துணையாயினும் நிறைந்த பெருமையைத் தரும் ஆகலான், (எ - று).

† எனைத்து அனைத்து என்பன கேட்கும் பொருண்மேலுங் காலத்தின்மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளிபோல வந்தீண்டி எல்லா அறிவுகளையும் உளவாக்கலின், சிறிதென்ற இழுக்கவெண்பதாம்.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) எனைத்தானும் - எவ்வளவு சிறிதானும், நல்லவை - உறுதிபயக்கும் பொருள்களை, கேட்க-கேட்கக்கடவன், (அக்கேள்வியானது), அனைத்தானும்-அவ்வளவானாலும், ஆன்றபெருமை-நிறைந்த பெருமையை, தரும் - கொடுக்கும், (ஆதலால்) (எ - று).

எனைத்து என்பது கேட்கும்பொருள்மேலும் அனைத்து என்பது கேட்குங் காலத்தின்மேலும் நின்றன. அச்சிறிய கேள்வி மழைத்துளி போல வந்து உள்ளே நிறைந்து எல்லாவறிவுகளையும் உண்டாக்கலால், (அக்கேள்வியைச்) சிறிதென்ற இகழ்ச்சிசெய்யாதொழிக என்பதாம்.

(க - து.) ஒருவன் சிறிதாயினும்உறுதிப்பொருள்களைக் கேட்கக்கடவன்; அஃதவனுக்கு நிறைந்த பெருமையைக் கொடுக்கும்.

6. Let a man listen, never so little, to good instruction even that will bring him great dignity.



எ. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா பிழைத்துணர்ந் தீண்டிய கேள்வி யவர்.

பரி:—(இ - ள்.) பிறழ வுணர்ந்த வழியும், தமக்குப் பேதைமை பயக்குஞ் சொற்களைச் சொல்லார், பொருள்களைத் தாமும் நுண்ணிதாக ஆராய்ந்தறிந்து அதன்மேலும் ஈண்டிய கேள்வியினை யுடையார்.

பிழைப்பவென்பது திரிந்தகின்றது. பேதைமை-ஆகுபெயர். ஈண்டுதல் - ‡ பலவாற்றான் வந்து நிறைதல். பொருள்களின் மெய்ம்மையைத்

† எனைத்து என்பது கேட்கும் உறுதிப்பொருண்மேலும் அனைத்து என்பது உறுதிப்பொருளைக் கேட்கும் காலத்தின்மேலும் நின்றன.

‡ பலவாற்றான் வந்து நிறைதலாவது—தன்னுசிரியனோடு பழகுதலாலும், தன்னே யொத்தவரோடு பழகுதலாலும், வேறு ஆசிரியர்களோடு பழகுதலாலும் வந்து கேள்வியறிவு நிறைதலாமென்க. "ஒருகுறி கேட்போனிருகாற் கேட்பிற், பெருக நூலிற் பிழைபா டிலனே" "மூக்காற் கேட்பின் முழையறிக் துரைக்கும்" "ஆசா னுரைத்த தமைவரக் கொளினும், காற்கூ றல்லது பற்றல ஞகும்" "அவ்வினே யாளரொடு பயில்வகை யொருகாற், செல்லிடை னுரைப்ப வவ்வீரு காலும், மையற புலமை மரண்புடைத் தாகும்" என்றுள்ள நன்னூற் சூத்திரங்களும் இக்கறியத் தக்கனவாம்.

தாமும் அறிந்து அறிந்தாரோடு ஒப்பிப்பதிஞ் செய்தார் † தாமதகுணத் தான் மயங்கினராயினும், ‡ அவ்வாறல்லது சொல்லாரென்பதாம். இவை நான்கு பாட்டாலுங் கேட்டார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இழைத்திணர்ந்து - (பொருள்களைத் தாமும்) நுட்பமாக ஆராய்ந்தறிந்து, ஈண்டிய - (அதன்மேலும்) நிறைந்த, கேள்வியவர்-கேள்வியினையுடையார், பிழைத்திணர்ந்தும்-(நூற்பொருள்களைத் தாம்) மாறுபாடாக அறிந்தவிடத்தும், பேதைமை - (தமக்குப்) பேதைமையை உண்டாக்குஞ் சொற்களை, சொல்லார்-சொல்லமாட்டார். (எ - று).

பிழைப்பவென்பது பிழைத்து எனத்திரிந்து நின்றது. பேதைமை யென்பது பேதைமையையுண்டாக்குஞ் சொல்லையுணர்த்துதலால் காரிய வாகுபெயராம். ஈண்டுதல்-(கேள்வி யறிவு) பலவழிகளால்வந்து நிறைதல். நூற் பொருள்களின் மெய்ம்மையைத் தாமும் அறிந்து அறிந்தவருடன் கூடி அவர் சொல்லக்கேட்டு ஒப்புப்பார்த்தும் இருப்பவர் தமோகுணத்தால் மயங்கினராயினும், அவ்வாறல்லது சொல்லாரென்பதாம். இவை நான்கு பாட்டாலும் கேள்வியுடையவர்க்கு வரும் நன்மை சொல்லப்பட்டது.

(க - து.) கேள்வியறிவினையுடையார் அறிவீனமான சொற் களைச் சொல்லார் என்பது.

7. Not even when they have imperfectly understood a matter, will those men speak foolishly, who have profound - ly studied, and diligently listened to instruction.

அ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோற்கப் படாத செவி.

பரி:—(இ - ள்.) தம்புலமாய ஓசைமாத்திரத்தைக் கேட்குமாயி னுஞ் செவிடாந் தன்மையவேயாம், கேள்வியால் துளைக்கப்படாத செவிகள், (எ - று).

ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஓசைமாத்திரத்தான் உறுதியெய் தாமையிற் 'கேளாத் தகைய' என்றும், மனத்தின்கண் நூற்பொருள் தழைத்தற்கு ¶ வழியாக்கலிற் கேள்வியைக் கருவியாக்கியுங் கூறினர். பழைய துளை துளை அன்றென்பதாம்.

† மந்தமாய், உண்மத்தமாய், மத்திமமாயிருப்பது தாமதகுண மெனப் படும், ஈசுவரகீதை "தமம் அஞ்ஞானமாம்" என்று கூறுகின்றது.

‡ அவ்வாறல்லது சொல்லாரென்பதாம் (தாமதகுணத்தால்) அப்படி மயங்கியதேயல்லாமல் (தமக்குப் பேதைமையைத்தருஞ் சொற்களை)சொல் லாரென்பதாம். "இம்மூ வுலகி னிருள்கடியு மாய்கதிர்போல், அம்மூன்று மூற்ற வறிதலால் - தமமின், உறழா மயங்கி யுறழினு மென்றும், பிறழா பெரியோர்வாய்ச் சொல்" என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.


¶ வழியாக்கலின் - காதில் வழியை யுண்டுபண்ணுகின்றமையின்.

தேளி:—(இ - ன்.) கேள்வியால் - கேள்வியினால், தோட்கப்படாத - தூளாக்கப்படாத, செவி - காதுகள், கேட்பினும் - (தமக்கு விஷயமான ஓசைமாத்திரத்தைத்) கேட்குமாயினும்; கேளாத்தகையவே - செவிடாந் தன்மை யுடையனவேயாம், (எ - று).

தகையவே என்னும் ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது. (செவிகள்) ஓசைமாத்திரத்தால் நன்மையை யடையாமையால் 'கேளாத்தகைய' என்றும், மனத்தில் நூற்பொருள் நுழைதற்கு வழியாக்கலால் கேள்வியைக் 'கேள்வியால்' எனக் காரணமாக்கியும் சொல்லினர். காதினது பழைய தூள தூகாயன்றென்பதாம்.

(கு-து.) கேள்வியால் தூளாக்கப்படாத காதுகள் செவிடே யாம் என்பது.

8. The ear which has not been bored by instruction, although it hears, is deaf.



கூ. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

பரி:—(இ - ள்.) நுண்ணிதாகிய கேள்வியுடைய ரல்லாதார் பணிந்த மொழியினையுடையராதல் கூடாது, (எ - று).

† கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை கேள்வியே லேற்றப் பட்டது. வாய் ஆகுபெயர். பணிந்தமொழி ‡ பணிவைப் புலப்படுத்திய மொழி. ¶ கேளாதார் உணர்வின்மையாற் றம்மை வியந்து கூறுவரென்ப தாம். [] அல்லாரென்பதூஉம் பாடம்.

தேளி:—(இ - ள்.) நுணங்கிய-நுட்பமானதாகிய, கேள்வியரல்லார்-கேள்வியை யுடையவரல்லாதவர், வணங்கிய - வணக்கத்தைக் காட்டுகிற, வாயினராதல் - சொல்லையுடையவராதல், அரிது - கூடாது, (எ - று).

† கேட்கப்படுகின்ற பொருளினது நுட்பத்தைக் கேள்வியின்மே லேற்றி 'நுணங்கிய கேள்வி' என்று கூறினமையின், இஃது இடத்து கிகழ்பொருளின் குணம் இடத்தின் மேலாய உபசார வழக்காம்.
‡ பணிவைப்புலப்படுத்தியமொழி-அடக்கத்தை வெளிப்படுத்தியசொல்.

¶ நுட்பமாகிய பொருள்களே யறிவுடையோ ரிடத்துக் கேட்டறியாத வர் "உண்கினிய வின்னீர் பிறிதுழியில் லென்னும், கிணற்றகத்துத் தேரைபோல்" (இதுபழமொழி) அறிவில்லாமையினுல் தம்மைத்தாமே வியந்து சொல்லுவாரென்பதாம். இதனுல் தம்மைத்தாமே வியந்து கொ ள்பவர் கேள்வி யறிவில்லாதவ ராவரென்பது பெறப்பட்டது.

[] இப்பாடத்திற்கு நுணங்கிய கேள்வியரல்லாமல் ஏனையோர் வண ங்கிய வாயினராத லரிது என்று பொருளாம்.

கேட்கப்படுகின்ற பொருளினது நுட்பம் கேள்வியின் மேல் ஏற்றப் பட்டது. வாய் - வாயிலுண்டாகுஞ் சொல்லே யுணர்த்துதலால் கருவியாகு பெயராம். கேளாதார் அறிவில்லாமையால் தம்மைத்தாமே வியந்து சொல் லுவாரென்பதாம்.

(க - து.) கேள்வியறி வில்லாதார் வணக்கமான சொற்களைச் சொல்லார் என்பது.

9. It is a rare thing to find modesty of speech, with those who have not received choice instruction.

க0. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் † மாக்க
ளவியினும் வாழினு மேன்.

பரி:—(இ - ள்.) செவியான் நுகரப் படுஞ் சுவைகளை யுணராத வாயுணர்வினையுடைய மாந்தர் சாவினும் வாழினும் உலகிற்கு வருவ தென்னை? (எ - று).

செவியான் நுகரப்படுஞ் சுவைகளாவன:—‡ சொற்சுவையும், ¶ பொ ருட்சுவையும். அவற்றுள் சொற்சுவை () குணம், [] அலங்காரமென இருவ

† மாக்கள் - மனவுணர்ச்சி யில்லாதார்.

‡ சொற்சுவை - சொல்லின்கண் தோன்று மின்பம்.

¶ பொருட்சுவை - பொருளின்கண் தோன்று மின்பம்.

() குணம் - தொடைகளைப்பற்றி நின்று காப்பியத்திற்கழகு செய்வ தாம். (பல வடிகளிலேனும் பல சீர்களிலேனும் எழுத்துக்களொன்றி வரு வது தொடை.)

அக்குணம் செறிவு, தெளிவு, சமதிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில்பொருண்மை, காந்தம், வலி, சமாதி எனப்பத்து வகையாம். (இக்குணங்களில்லாதது கைகால் முதலிய உறுப்புக்களிருந்தும் பதிமை உயிரின்மையால் மனிதனெனக் கொள்ளப்படாததுபோலச் செய்யுளென் றே கொள்ளப்படாதாம்.)

[] அலங்காரம் - சொல்லையும் பொருளையும் பற்றி நின்று அழகுசெய் வதாம்.

சொல்லலங்காரம் - மடக்கு, கோமூத்திரி, கூட சதுர்த்தம் முதலிய னவாகப் பலவகையாம்.

பொருளலங்காரம் - தன்மை, உவமை, உருவகம் முதலியனவாகப் பலவகையாம்.

குணங்கள் இளமை முதலியன போல ஒற்றுமை நயத்தினின்று அழகு செய்வன; அலங்காரம் - கடககுண்டலாதிகளைப்போல வேற்றுமை நயத்தினின்று அழகு செய்வன என்றும், காப்பியத்திற் கழகு செய் வனகுணங்கள்; அதற்கு அதிசயத்தைச் செய்வன அலங்காரங்கள் என்றும், கூறுவர்.

கைத்து. பொருட்சுவை † காமம், ‡ நகை, $ கருணை, ¶வீரம் * உருத்திரம், () அச்சம், [] இழிப்பு, †† வியப்பு, ‡‡ சாந்தமென ஒன்பது வகைத்து. $$அவை யெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். வாயுணர்வென்பது,இடைப்பதங்கள் ¶¶ தொக்கு நின்ற மூன்றும் வேற்றுமைத்தொகை அதுவாயான்றுகரப்படுஞ் சுவைகளையுணரும் உணர்வெனவிரியும் சுவை-கைப்பு,

† காமம் - புணர்ச்சிபற்றிய விருப்பமாம். உவகை யெனினும், காதலெனினும், சிங்காரமெனினும் ஒக்கும்.

‡ நகை - அங்கவிகார முதலிய வற்றால் தோன்றுவதொரு களிப்பு.

$ கருணை-இஷ்ட ஜனமரண முதலிய வற்றாலுண்டாகும் அழுகை.

¶ வீரம் - செய்வினையில் மனத்துணிவு. பெருமிதம் எனினும், உற்சாகமெனினும், வீரமெனினும் ஒக்கும்.

* உருத்திரம் - பிறர் செய்யும் நீங்கினலாகும் மனக்கொதிப்பு. குரோதமெனினும், உருத்திரமெனினும், வெகுளியெனினும் ஒக்கும்.

() அச்சம் - தெப்பம், விலங்கு, கள்வர் முதலானவர்களா லுண்டாகும் பயம்.

[] இழிப்பு-மூப்பு, பிணி, வருத்தம் முதலாயினவற்றை யறிதலாலுண்டாகும் அருவருப்பு. இளிவரல் எனினும், இழிப்பெனினும், இழிபெனினும், அருவருப் பெனினும் ஒக்கும்.

†† வியப்பு - புதியனவும், மிகப் பெரியனவும், மிகச் சிறியனவும் ஆகியவற்றை யறிதலாலுண்டாகும் மனப்பரப்பு. அற்புதமெனினும், வியப்பெனினும், மருட்கை யெனினும் ஒக்கும்.

‡‡ சாந்தம் - யான் என தென்னும் பற்றற்றிருக்கும் நிலை, சமநிலையெனினும், சமமெனினும், சாந்தமெனினும் ஒக்கும். "நகையே யழுகை" என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையில் நச்சினர்க்கினியார் " அதற்கு (சமநிலைக்கு) ஓர் விகாரமின்மையின், ஈண்டுக்கூறியதிலனென்பது; அதற்கு விகாரமுண்டெனின் முன்னிய வெட்டனுள்ளுஞ் சார்த்திக்கொள்ளப்படும். அஃதல்லதூஉம், அஃதலகியல் நீங்கினர்பெற்றியாகலின், ஈண்டு உலகவழக்கினுட் சொல்லியதிலனென்பது" என்று கூறியிருப்பதிற் குணர்தற் பாலதாம்.

$$ அவையெல்லாம் (சொற் சுவை பொருட் சுவைகளே யெல்லாம்) இங்குச் சொன்னல் விரியும். சொற்சுவை பொருட்சுவைகளின் பரப்பைத் தண்டியலங்கார சாரம், தண்டியலங்காரம், தொல்காப்பியம் முதலிய நூல்களிற் காண்க.

¶¶ தொக்கு நின்ற இடைப்பதங்கள்—நுகரப்படுஞ் சுவைகளே யுணரும் என்பன.

இடைப்பதங்கள் தொக்கு நிற்பதனைப் பிரயோக விவேக நூலார் மத்தியபதலோபன் என்பர்.


காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பென ஆறும். * செத்தாலி ழப்பதும் வாழ்க்தாற் பெறுவதும் இன்மையின், இரண்டும் ஒக்குமென்பதா ம். () வாயுணவின் என்பு பாடமோது வாருமுளர். இவை மூன்றுபாட்டா னும் கேளாதவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

நேளி:—(இ - ள்.) செவியிற்சுவை-காதுகளால் அனுபவிக்கப்படுஞ் சுவைகளே, உணரா-அறியாத, வாயுணர்வின்-வாயால் உண்ணப்படும் சுவை களே அறியும் அறிவினையுடைய, மாக்கள் - மனிதர், அவியினும் - இறக்தா லும், வாழினும் - வாழ்ந்தாலும், என் - (உலகத்திற்கு வருவது) யாது,

காதுகளால் அனுபவிக்கப் படுஞ் சுவைகளாவன:—சொற்சுவையும், பொருட்சுவையும்ஆம். அவற்றுள், சொற்சுவை குணம் அலங்காரமென்றிரு வகையாம். பொருட்சுவை காமம் முதலாக ஒன்பது வகையாம். அவற்றை யெல்லாம் இங்குச் சொன்னால் விரியும்; அதுபற்றி அவை சொல்லாமல் விடப்பட்டன. வாயுணர்வென்பது இடையிலே பதங்கள் தொக்கு கின்ற மூன்றும் வேற்றுமைத் தொகை. இம்மூ-றும் பொருளும் உடன் தொ க்கதொகை யெனப்படும். வாய்ச்சுவைகள் கைப்பு முதல் அறுவகையாம். செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் செத்தால் இழப்பதும், வா ழ்ந்தால் பெறுவதும் இல்லாமையால் அவர்க்கு (சாவது வாழ்வ தென்னும்) இரண்டும் சமமென்பதாம்.) இவை மூன்று பாட்டாலும் கேளாதவிடத்து உண்டாகுங் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) சொற்சுவை பொருட்சுவைகளே யறியுக் திறமில் லாதவர் செத்தாலும் இருந்தாலும் பயனில்லை என்பது.

10. What does it matter whether those men live or die, who can judge of tastes by the mouth, and not by the ear.



ஐந்தாம் அதிகாரம்.

† அறிவுடைமை—On Wisdom.

பரி:—அஃதாவது கல்வி கேள்விகளின் பய அறிவோடு உண்மை அறிவுடையதுதல். ‡ அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

* செவியால் சொற்சுவை பொருட்சுவைகளே யுணராது மிருகமொத் து உண்பதொன்றையே கருதியிருப்பவர் செத்தாலிழப்பதும் வாழ்ந்தாற் பெறுவதுமின்றி யொழிவரென்பதாம். () வாயுணவின்மாக்கள் என்னும் பாடத்திற்கு வாயினுணவை யுண்ணும் மாந்தர் என்று பொருளாம்.

† "ஒப்புமுருவும்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தின்விசே டவுரையில் "அறிவாவது கல்லதனலும் தீயதன் றீமையும் உள்ளவாறு ணர்தல்" என்றனர் கச்சினார்க்கினியார்.

‡ அதிகார முறையும். கேள்வி யென்னு மதிகாரத்தின்பின் அறிவு டைமையென்னு மதிகாரம் வைத்த முறையும்.

தேனி:—அஃதாவது கல்வி கேள்விகளிலுளாகிய அறிவோ டுண்மை யறிவுடையவனுதல். அதிகாரமுறைமையும் இதனுலே விளங்கும்.

க. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

பரி:—(இ - ள்.) அரசர்க்கு அறிவேன்பது இறுதிவராமும் காக்குங் கருவியாம்; அதுவேயும் அன்றிப் பகைவர்க்கு அழிக்கலாகாத உள் ளாணுமாம், (எ - று).

காத்தல் - † முன்னறிந்து பரிகரித்தல். உள்ளரண் - உள்ளாய அரண்; ‡ உள்புக்கழிக்கலாகா § அரணென்றுமாம். இதனுல் அறிவினது சிறப்புக் கூறப்பட்டது.

தேனி:—(இ - ன்.) அறிவு - (அரசர்க்கு) அறிவென்பது, அற்றம் - முடிவு, (வராமல்), காக்கும்—பாதுகாக்கும், கருவி - படையாம், (அதுவே யும் அல்லாமல்) செறுவார்க்கு - பகைவர்க்கு, அழிக்கலாகா —அழிக்க முடி யாத, உள்அரண் - உள் அரணுமாம், (எ - று).

(அற்றத்தைக்) காத்தல் - (அதனை) முன்பறிந்து நீக்குதல்.உள்ளரண் - உள்ளாகிய அரண்; உள்ளேபிரவேசித்தழிக்க முடியாத அரணென்றுமாம். இதனுல் அறிவினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) பகைவரையடங்கி அரசர்க்கு முடிவுவராமற்காக்கும் கருவி அறிவேயாம் என்பது.

1. Wisdom is a weapon to ward off destruction; it is an inner fortress which enemies cannot destroy.

உ. சென்ற விடத்தாற் செலவிடா தீதோரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

பரி:—(இ - ள்.) மனத்தை அது சென்ற புலத்தின்கட் செல்ல விடாது அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனினீக்கி நல்லதன்கட் செலுத்துவது அறிவு, (எ - று).

வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ¶ ஓசை,ஊறு, ஒளி, சுவை, காற்றமெனப் புலம் ஐந்தாயினும், ஒருகாலத்து ஒன்றின்

† முன்னறிந்து பரிகரித்தல் - அற்றத்தை (சோர்வினுல்வருங் கெடு தியை) முன்னறிந் தொழித்தல்.

‡ (பகைவர்) உள்ளே பிரவேசித்து அழிக்க முடியாத அரண் (கோட் டை) என்றும் உள்ளழிக்கலாகாவரண் என்பதற்குப் பொருள் கொள்ளலா மென்பது.

§ அரண் (காவல்)—மலையரண், காட்டரண், மதிலரண், கடலரண் என நால்வகைப்படும்.

¶ மனம் ஒரு காலத்தில் ஒரு விஷயத்தில் செல்லுவதன்றிப் பல விஷயங்களில் செல்லாதென்பது கருத்து.

கண் அல்லது செல்லாமையின் 'இடத்தால்' என்றார். † விடாது என்பது கடைக்குறைந்து நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதவன் போல ‡ வேறுக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது 'அறிவு' என்றார்; அஃது உயிர்க்குணமாகலின்.

தேஎர்:—(இ - ள்.) (மனத்தை) சென்றவிடத்தால் - (அது) போன விஷயத்தில், செலவிடா-போகவிடாமல், (அவ்விஷயத்தின் நன்மைதீமைகளை ஆராய்ந்து), தீது - நீயதிலிருந்து, ஒரீஇ - நீக்கி, நன்மின்பால் - நல்ல தனிடத்து, உய்ப்பது - போகவிடுவது, அறிவு - அறிவாம், (எ - று).

செலவிடாது என்னும் வினைக்கு ஏற்க மனத்தையென்னும் செயப்படுபொருள் வருவித்துரைக்கப்பட்டது. சப்த பரிச ரூப ரச கந்தமென விஷயங்கள் ஐந்தாயிருந்தாலும், மனமானது ஒரு காலத்தில் ஒரு விஷயத்தில் செல்லுவதல்லாமல் ஏனைய விஷங்களில் செல்லாமையினால் (இடங்கனாலெனப்பன்மையாற் கூறுது) 'இடத்தால்' என ஒருமையாகக் கூறினார். விடாது என்பது கடைக்குறைந்து விடாஎன நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் பாகன்போல வேறுக்கி மனத்தை விஷயமறிந்து செலுத்துவது 'அறிவு' என்றார்; அஃது (அறிவு) உயிர்க்குணமாகலால். இடமென்றது (சப்தமுதலிய) விஷயத்தை.

(க - து.) மனத்தை அது போனவழியே போகவிடாது வேறுபடுத்தி நல்வழியிற் செலுத்துவதே அறிவாம் என்பது.

2. Not to permit the mind to go where it lists, to keep it from evil, and to employ it in good, this is wisdom.

-•≡|≡•-

ங. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

பரி:—(இ - ள்.) யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும் அப்பொருளின் மெய்யாய பயனைக் காணவல்லது அறிவு.

§ குணங்கள் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்கும் உண்மையின், உயர்ந்தபொருள் இழிந்தார்வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார்

† விடாது என்பது செய்யுள் விகாரத்தால் கடைக் (குவ்விகுதி) குறைத்து விடா என நின்றது.

‡ வேறுக்கி - தன்னிஷ்டப்படி போகாவண்ணம் வேறுபடித்தி

§ குணங்கள் மூன்று - சாத்வீகம், இராசதம், தாமதம் என்பனவாம். அடக்கம், அன்பு, அருள், ஞானம் முதலியவற்றில் நாட்டங் கொண்டிருப்பது சாத்வீகம்; அகங்கார முதலியவற்றில் நாடடங்கொண்டிருப்பது இராசதம்; மந்தமாயிருத்தல் முதலியவற்றில் நாட்டங்கொண்டிருப்பது தாமதம். "சத்துவம் ஞானமாம் தமமஞ் ஞானமாம் மத்திமம் (இராசதம்) கலப்பதாம்" என்று ஈசுவரகீதை கூறுகின்றது.

வாயினும், உறுதிப்பொருள் பகைவர்வாயினும், கெடுபொருள் நட்டார் வாயினும் ஒரோவழிக் கேட்கப் படுதலான் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' என்றார், அதிக்குப் பண்மைபற்றி வந்தது. வாயென்பது ‡ அவர் அப்பொருளின்கட் பயிலாமை † யுணர்த்திநின்றது. மெய்யாதல் - நிலைபெறுதல். சொல்லுவாரது இயல்பு நோக்காது அப்பொருளின் பய னேக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்வதறி வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) எப்பொருள் - யாதொரு பொருளை, யார்யார் வாய் - யாவர்யாவர் சொல்ல, கேட்பினும் - கேட்டாலும், அப்பொருள் - அப்பொருளினது, மெய்ப்பொருள் - மெய்யாகிய பயனை, காண்பது - காணவல்லது, அறிவு - அறிவாம் (எ - று).

சத்துவம் ரசசு தமசு என்னு மூக்குணங்களும் மாறிமாறி வருதல் யாவர்க்கு மிருத்தலால், உயர்ந்த பொருளே இழிந்தார் வாயிலும், இழிந்த பொருளை உயர்ந்தார் வாயிலும், உறுதிப் பொருளைப் பகைவர்வாயிலும், கெடுபொருளைச் சிநேகர்வாயிலும் ஒரோவிடத்துக் கேட்கப் படுதலால் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' என்றார், யார்யார் என்னும் அதிக்குப் பண்மைப்பொருளில் வந்தது. வாய் என்பது அவர் அப்பொரு ளினிடத்துப் பழகாமையையறிவித்து நின்றது. மெய்யாதல் - நிலைத்தி ருத்தல். சொல்லுவாரது இயல்பு நோக்காமல் அப்பொருளின் பயனே நோ க்கி நல்லதைக் கொள்ளுவதையும் தீயதை விடுவதையுஞ் செய்வது அறி வென்பதாம். ஒரோவிடம் - சிலவிடம்.

(க - து.) பிறர்சொல்லுவதில் உண்மைப் பொருளையறிவதே அறிவாம் என்பது.

3. To discern the truth in everything, by whomsoever spoken, this is wisdom.

ச. எண்ணப்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்ணப்பொருள் காண்ப தறிவு.

பரி:—(இ - ள்.) தான் சொல்லுஞ் சொற்களை $ அரிய பொருள

‡ அவர் (இழிந்தார் உயர்ந்தார் பகைவர் நட்டார் என்னுமவர்கள்) அப்பொருளின்கண் (உயர்ந்தபொருள் இழிந்தபொருள் உறுதிப்பொருள் கெடுபொருள்களி னிடத்துப்) பயிலாமை (அப்பியசித்திராமையை) யுண ர்த்தி (அறிவித்து) நின்றதென்பது. இழிந்தார்வாய் உயர்ந்த பொருளை யும், உயர்ந்தார்வாய் இழிந்தபொருளையும், பகைவர்வாய் உறுதிப்பொருளை யும், நட்டார்வாய் கெடுபொருளையும் பழகி யிராவென்பது கருத்து.

† உணரநின்றது என்றும் பாடமுண்டு.

$ அரிய பொருளவாயினும்—அறிந்து கொள்ளுதற்கு அருமையான விஷயங்களை யுடையனவா யிருந்தாலும்.

வாயினும் கேட்பார்க்கு எளிய பொருளவாமாறு † மனங்கொளச்சொல்லிப் பிறர் வாயிற்கேட்குஞ் சொற்களின் நுண்ணியபொருள் காணவறிதாயினும் ‡ அதனைக் காணவல்லது அறிவு, (எ - று).

§ உடையவன் தொழில் அறிவின்மே லேற்றப்பட்டது. சொல்லுவன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுகவென்பார் சொன்மேல் வைத்தும், கேட்பன வழுவினும் இனிது விளங்காவாயினும் பயனைக் கொண்டொழிக வென்பார் பொருண்மேல் வைத்துங் கூறினர்.

தெளி:—(இ - ள்.) (தான் சொல்லுஞ் சொற்களை அரியபொருளனவா யிருந்தாலும்) எண்பொருளவாக - (கேட்பவர்க்கு) எளியபொருளன வாம்படி, செல - (மனங்) கொள்ள, சொல்லி - கூறி, தான் —, பிறர் வாய்-பிறர் துவாயில் (கேட்குஞ் சொற்களின்), நுண்பொருள்-நுட்பமாகிய பொருளை, காண்பது - (காண்பதற்கு அருமையாயிருந்தாலும் அதனைக்) காணவல்லது, அறிவு - அறிவாம், (எ-று).

அறிவுடையவனது (சொல்லிக் காண்பதாகிய) தொழிலை அறிவின் மேல் ஏற்றிச் சொல்லிக்காண்பது அறிவு என்று கூறினர். தான் சொல்லுவனவற்றை வழுவில்லாமல் கன்றாவிளங்கச் சொல்லவேண்டு மென்பார் (எண் பொருளவாகச் செலச்) சொல்லி எனச் சொல்லின்மேல் வைத்தும், பிறர்சொல்லைக் கேட்பன வழுவாபிருப்பினும் கன்றாக விளங்காமலிருப்பினும் அவற்றின் பயனைக்கொண்டு விடவேண்டு மென்பார் (பிறர்வாய்) 'நுண்பொருள் காண்பது' எனப் பொருளின்மேல்வைத்துஞ் சொல்லினர்.

(க - து.) பிறர்க்குத்தான் சொல்லும் விஷயம் அருமையாக இருப்பினும்அதனை யெளிதாகச் சொல்லியும்,பிறர் சொல்லும் விஷயம் வழுவாகவேனும், விளங்காதாகவேனு மிருப்பினுமே அதனை யறியவல்லதே ஒருவனுக்கறிவுடைமையாம் என்பது.

4. To speak so as that the meaning may easily enter the mind of the hearer; and to discern the subtlest thought which may lie hidden in the words of others; this is wisdom.

நு. உலகந் தழீஇய தோட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

† மனங்கொள - மனத்திலமையுமாறு. ‡ அதனை—நுட்பமான பொருளை.

§ அறிவுடையவனது (சொல்லுதல் காணுதல் ஆகிய) தொழிலை அவனது அறிவின்மேலேற்றிச் சொல்லிக் காண்பது அறிவு என்று கூறினர். அறிவுடையவனது தொழிலை அறிவின்மேலேற்றிக் கூறினமையின், இது குணி (அறிவுடையவன்) வினை குண (அறிவு) வினையாய உபசாரவழக்காம்.

பரி:—(இ - ள்.) உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம்; அந்நட்பின்கண் முன்மலர்தலும் பின் கூம்புதலுமின்றி † ஒரு நிலைய னவது அறிவாம், (எ - று.)

‡ தழீஇயது இல்லது என்பன அவ்வத் தொழின்மேனின்றன. $ உலகமென்றது ஈண்டையோர்த்தோரை. அவரோடு ¶ கயப்பூப்போல வேறு படாது கோட்பெப்பூப்போல ஒரு நிலையே நட்பாயினுன் எல்லா இன்பமும் எய்துமாகலின், * அதனை 'அறிவு' என்றார். () காரியங்கள் காரணங்க ளாக உபசரிக்கப்பட்டன. o இதனைச் செல்வத்தின் மலர்தலும் கல்குவிற் கூம்பலு மில்லதென்று உரைப்பாருமுளர்.

தெளி:—(இ-ள்.) (ஒருவனுக்கு) உலகம் - உயர்ந்தோரை, தழீஇயது- நட்பாக்குவது, ஒட்பம்-அறிவுடைமையாம், மலர்தலும் - (முன்னே) விரிதலும், கூம்பலும்-(பின்னே) குவிதலும், இல்லது-(அந்நட்பினிடத்து) இல்லாது ஒருதன்மையனவது, அறிவு-அறிவாம், (எ-று).

தழீஇயது இல்லது என்னும் முற்றுக்கள் தழுவுதல் இல்லா திருத்த லென அவ்வத் தொழிற்பெயர்ப் பொருளனவாய் நின்றன. உலகம்என்பது

† ஒரு நிலையனவது—எப்பொழுதும் ஒரு தன்மையையுடையவனுயி ருத்தலாம்.

‡ தழீஇயது இல்லது என்பன அவ்வத்தொழில்மேல் நின்றன-தழீஇ யது என்பது (தனது தொழிலான) தழுவுதல்மேலும் இல்லது என்பது (தனது தொழிலான) இல்லாதிருத்தல் மேலும் நின்றன வென்பது. தழீஇயது என்னுந் தெரிநிலை வினைமுற்றும் இல்லது என்னுங் குறிப்பு வினை முற்றும் தொழிற்பெயர்ப் பொருளில் வந்தனவென்பது கருத்து.

$ "அவனி திசையா காய முயர்ந்தோர், சூலமிவை யுலகெனக் கூற லாகும்" என்று (பிங்கலநிகண்டு) சூத்திரமிருத்தல்பற்றி 'உலகமென்றது ஈண்டையோர்த்தோரை' என்று கூறப்பட்டது.

¶ "கோட்பெப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது, வேட்டதே வேட் டதா நட்பாகி—தோட்ட, கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை, கயப்பாரு நட்பாரு மில்" என்பது நாலடியார்.

* அதனை - மலர்தலுங் கூம்பலு மில்லாததை.

() உலகத்தைத்தழுவுதற்குக் காரணமான அறிவை 'உலகந்தழீஇய தொட்பம்' என்றும், மலர்தலும் கூம்பலுமில்லாதிருத்தற்குக் காரணமான அறிவை 'மலர்தலுங், கூம்பலு மில்ல தறிவு' என்றும், கூறினமையின், 'காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன' என்று கூறப்பட்டது.

தழீஇயது காரியம், ஒட்பம் காரணம்; மலர்தலுங் கூம்பலு மில்லாமை காரியம், அறிவு காரணம்.

o இதனை (மலர்தலும் கூம்பலுமில்லது, என்பதற்கு) செல்வம் வந்தவிடத்து மகிழ்ந்திருத்தலும் தரித்திரம் வந்தவிடத்து வருந்தியிருத் தலு மில்லாததென்று சொல்லுவாரு முண்டென்பது.

இக்கு உயர்ந்தோரை யுணர்த்திற்று; அவ் வுயர்ந்தோரோடு நீர்ப்பூப்போல வேறுபடாமல் கோட்டுப்பூப்போல ஒரு நிலையே கட்பாயினுன் எல்லா வின்பமுமடைவானுதலால், அதனே 'அறிவு' என்றார். தழுவுதல் என்னும் காரியமும் மலர்தலும் கூம்பலு மில்லாமை என்னும் காரியமும் ஒப்பம் அறிவு என்னுங் காரணமாக வுபசரிக்கப்பட்டன. நீர்ப்பூ-நீர் நிலையிலுள்ள பூ; அது தாமரைமலர் முதலாயினவாம். கோட்டுப்பூ-நிலப்பூ; அது புன்னைமலர் முதலாயினவாம்.

(க - து.) முன்னே விரிதலும் பின்னே குவிதலு மின்றி என்றும் ஒருதன்மையதாக யுயர்ந்தோரை நேசிப்பதே அறிவாம்.

5. To secure the friendship of the great is true wisdom; it is also wisdom to keep that friendship unchanged and not opening and closing like the lotus-flower.

சூ. † எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

பரி:—(இ - ள்.) உலகம் யாதொருவாற்றுன் ஒழுகுவதாயிற்று அவ் வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றுலொழுகுவது அரசனுக்கறிவு.

உலகத்தையெல்லாம் யான் ‡ நியமித்தலான் என்னே நியமிப்பாரில்லே யெனக் கருதித் தானினைத்தவாறே ஒழுகிற் பாவமும் பழியுமாமாகலான், அவ்வாருெழுகுதல் அறிவன்றென விலக்கியவாருயிற்று. இவையைந்து பாட்டானும் அதனது இலக்கணங் கூறப்பட்டது.

தேளி:—(இ - ள்.) உலகம்-உலகமானது, எவ்வது-எவ்விதத்தினுல், உறைவது-நடப்பதா யிருக்கின்றது, உலகத்தோடு - அவ்வுலகத்துடன், (பொருந்தித்தானும்), அவ்வது-அவ்விதத்தால், உறைவது-நடப்பது, அறிவு-(அரசனுக்கு) அறிவாம், (எ - று).

உலகத்தை யெல்லாம் யான் நியமித்தலால் என்னே நியமிப்பவர் (ஒருவரும்) இல்லையென்று நினைத்துத் தான் நினைத்தபடியே நடந்தால் பாவமும் பழியுமா மாதலால், அப்படி நடத்தல் அரசனுக்கு அறிவன்றென்று விலக்கியபடியாயிற்று. இவை ஐந்துபாட்டாலும் அறிவுடைமையி னிலக்கணம் சொல்லப்பட்டது.

(க-து.) உலகத்தோ டொத்தொழுகுதலே அரசனுக் கறிவாம் என்பது.

6. To live as the world lives, this is wisdom.

† "உலகத்தோ டொட்ட வொழுகல்" என்னுங் குறளும் அதனுரையும் இங்குக் கவனிக்கத்தக்கனவாம்.

‡ நியமித்தலான்-ஒழுங்குபடுத்தியாளுதலால்.

எ. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

பரி:—(இ - ள்.) அறிவுடையராவார் வரக்கடவதனை முன்னறிய வல்லார்; அறிவிலராவார் அதனை முன்னறியமாட்டாதார், (எ - று).

முன்னறிதலாவது முன்னேயெண்ணியறிதல். அஃதறிகல்லாமை யாவது வந்தாலறிதல். இனி ஆவதறிவாரென்பதற்குத் தமக்கு நன்மை யறிவாரென் றுரைப்பாருமுளர்.

தெளி:—(இ - ள்.) ஆவத-வரக்கடவதனை, அறிவார் - (முன்னே) அறியவல்லவர், அறிவுடையார் - அறிவுடையவராவர், அஃது - அவ்வரக் கடவதனை, அறிகல்லாதவர்-(முன்னே) அறியமாட்டாதவர், அறிவிலார்- அறிவில்லாதவராவார், (எ-று).

முன்னறிதலாவது வரக்கடவதனை முன்னே யாலோசித்தறிதல். அஃ தறிகல்லாமையாவது வரக்கடவதனை முன்னே யாலோசித்தறியாது அது வந்தாலறிதல்.

(க-து.) வரக்கடவதனை முன்னே யறியவல்லவர் அறிவுடை யாராவர்; அறியாதவரறிவிலரா வரென்பது.

7. The wise are those who know beforehand what will happen ; those who do not know this are the unwise.

அ. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

பரி:—(இ - ள்.) அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம்; அவ்வஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம், (எ - று).

பாவமும் பழியுங் கேடு முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், † சாதி யொருமைபற்றி 'அஞ்சுவது' என்றார். அஞ்சாமை-எண்ணுது செய்துகிற் றல். அஞ்சுதல்-எண்ணித்தவிர்தல். அது காரியமன்றென்று இகழப்படா தென்பார் 'அறிவார் தொழில்' என்றார். ‡ அஞ்சாமை இறைமாட்சியாகச்

† இலக்கணக்கொத்து "உயர்திணையியற் பெயர்" என்னுஞ் சூத்திரத்தி னுரையில் "தூலனைப்படுவது துவலுங்காலே 'அஞ்சுவ தஞ்சாமை பேதை மை யஞ்சுவ,தஞ்ச லறிவார் தொழில்'.....இவை வருமொழியை நோக் காமலே தனக்குரிய ஒருமைப்பாலே விட்டுப் பன்மைப்பாலையே வினைக் குதலால் அஃறிணைச்சாதி யொருமையாயிற்று" என்று கூறுகின்றதை.

‡ இறைமாட்சி யதிகாரத்தில் "அஞ்சாமை யீகை யறிவுக்க மிக்கான் கு,மெஞ்சாமை வேந்தற் கியல்பு" என்னுங் குறளில் அஞ்சாமையையும் அரசருக்குச் சிறந்தகுணமாகச் சொல்லியிருக்கின்றமையின், இங்கு அவ்வர சர் (அஞ்சப்படுவதனை) அஞ்சவேண்டும் இடம் சொல்லியபடியாமென்பது.

சொல்லப்பட்டமையின், ஈண்டஞ்சவேண்டுமிடங் கூறியவாறு. இவை யிரண்டு பாட்டானும் அதனையுடையாரது இலக்கணம் கூறப்பட்டது.

நேளி:—(இ - ள்.) அஞ்சவது-அஞ்சப்படுவதனை, அஞ்சாமை-அஞ்சாதிருத்தல், பேதைமை-அறியாமையாம், அஞ்சுவது-அவ்வஞ்சப்படுவதனை, அஞ்சல்-அஞ்சுதல், அறிவார் தொழில் - அறிவுடையவரது தொழிலாம்.

பாவமும் பழியும் கேடுமுதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதியொருமைபற்றி 'அஞ்சுவது' என்று கூறினார். அஞ்சாமை-(அஞ்சப்படுவதனை) ஆலோசியாது செய்து நிற்றல். அஞ்சுதல் (அதனை) ஆலோசித்துச் செய்யாது விடுதல். அவ்வஞ்சுதல் காரியமல்லவென்று இகழ்ச்சி செய்யப்படாதென்பார் 'அறிவார் தொழில்' என்றார். அஞ்சாமை இறைமாட்சியாக முன்னே சொல்லப்பட்டமையின், இங்கு அஞ்சவேண்டுமிடம் சொல்லிய படியாம். இவை இரண்டு பாட்டாலும் அவ்வதிகாரியுடையவரது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க-து.) அஞ்சப்படுவதற் கஞ்சாமை யறியாமையாம்; அதற் கஞ்சுதல் அறிவுடைமையாம்.

8. Not to fear what ought to be feared is folly; it is the work of the wise to fear what should be feared.

கூ. எதிரதாக் காக்கு மறிவினர்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

பரி:—(இ - ள்.) வாக்கிடவதாகிய † அதனை முன்னறிந்து காக்க வல்ல அறிவினையுடையார்க்கு அவர் நடுங்க வருவதொரு துன்பமுமில்லை.

† நோயென வருகின்றமையின், வாளா 'எதிரதா' என்றார். இதனைற் காக்கலாங் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல்-அதன்காரணத்தை விலக்குதல். ¶ அவர்க்குத் தின்பமின்மை இதனாற் கூறப்பட்டது.

இதனால் பாவமுதலியவற்றைத் தாராதகாரியங்களே அரசர் அஞ்சாது செய்யவேண்டுமென்றும், அவற்றைத் தருங்காரியங்களைச் செய்வதற்கு அஞ்சவேண்டுமென்றும் பெறப்பட்டன வென்க.

† அதனை - நோயை (தின்பத்தை).

‡ பின்னே 'அதிரவருவதோர் நோய்' என வருகின்றமையின் முன்னேயாதொரு விசேஷணமுந் தாராது வாளா (சும்மா) 'எதிரதா' என்று கூறினார். பின்னே நோய் என்பது வாராதிருந்தால் முன்னே நோய் எதிரதா என்று வரவேண்டுமென்க.

¶ அவர்க்கு-(நோயையெதிரதாக் காக்கும்) அறிவுடையவர்க்கு.

தெளி:—(இ-ன்.) (வரக்கடவதாகிய துன்பத்தை) எதிரதாக்காக்கும்-முன்னே அறிந்து காக்கவல்ல, அறிவினுர்க்கு - அறிவினையுடையார்க்கு, அதிர—(அவர்) நடுங்கும்படி, வருவதோர் கேம்-வருவதாகிய ஒரு துன்பமும், இல்லை—, (எ-று).

பின்னே கோயெனவருகின்றமையின், வாளா 'எதிரதா' என்றார். இதனால் வரக்கடவதாகிய துன்பத்தைக் காத்தற்குரிய காலம் அறிவிக்கப்பட்டது. காத்தல்-அத்துன்பத்தின் காரணத்தை விலக்குதல். அவ்வறிவுடையவர்க்குத் துன்பமில்லாமை இதனால் சொல்லப்பட்டது.

(க-து.) வரக்கடவதாய துன்பத்தை முன்னறிந்து நீக்கும் அறிவுடையவர்க்குத் துன்பமுண்டாகாது என்பது.

9. No terrifying calamity will happen to the wise who foresee and guard across against coming evils.

கo. ‖ அறிவுடையா ரேல்லா முடையா ரறிவிலா
ரேன்னுடைய ரேனு மிலர்.

பரி:—(இ - ள்.) அறிவுடையார் † பிறிதொன்றும் இலராயினும் எல்லா முடையராவர்; அறிவிலாதார் எல்லாமுடையராயினும் ஒன்றும் இலராவர், (எ-று).

செல்வங்களெல்லாம் அறிவாற்படைக்கவுங் காக்கவும்படுதலின், அஃ தடையாரை 'எல்லாமுடையார்' என்றும், அவையெல்லாம் முனேயெமைந்து கிடப்பினும் அழியாமற் காத்தற்கும் † தெய்வத்தானழிதுழிப்படைத்தற்கும் கருவியுடைய ரன்மையின், அஃதில்லாதாரை 'என்னுடையரேனுமிலர்' என்றுகூறினர். ¶ என்னுமென்புழி உம்மை விகாரத்தாற்றொக்கது. இதனுன் அவரது உடைமையும் எனையாரது இன்மையுங் கூறப்பட்டன.

தெளி:—(இ-ன்.) அறிவுடையார்-அறிவினையுடையார், எல்லாமுடையார்-(வேறெருன்றும் இல்லாதவராயிருந்தாலும்) எல்லாமுடையராவர், அறிவிலார்-அறிவில்லாதவர், என்னுடையரேனும்-எல்லாமுடையவராயிருந்தாலும், இலர்-(ஒன்றும்) இல்லாதவராவர், (எ-று).

‡ "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்பது நாலடியார்.

† பிறிதொன்றும் இலராயினும்-அறிவொழிய வேறெருன்று மில்லாதவரா யிருந்தாலும்.

† தெய்வத்தான் - நீவினையால்.

¶ எல்லாம் என்னும் பொருளை யுணர்த்திவந்த (எவன் என்னும் வினுவிடைச்சொல்லின் விகாரமாகிய) என்னும் என்ற உம்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

செல்வங்களெல்லாம் அறிவினால் சம்பாதிக்கவும் காக்கவும்படுதலால், அவ்வறிவினையுடையவரை 'எல்லாமுடையார்' என்றும். அச்செல்வமெல்லாம் முன்னரே அமைந்திடினும் (அவற்றை) அழியாமற் காத்தற்கும் ஊழால் அழிந்தவிடத்துச்சம்பாதித்தற்கும் கருவியாகிய அறிவில்லாதவரா தலால், அவ்வறிவில்லாதவரை 'என்னுடையதோ டொன்றுமிலர்' என்றும் சொல்லினர். என்னும் என்பது உம்மை தொக்கு என் என வந்தது. இதனால் அறிவுடையவரது உடைமையும், மற்றவரது இல்லாமையும் சொல்லப்பட்டன.

(க - து.) அறிவுடையார் எல்லாமுடையராவர்; அறிவிலார் ஒன்றுமிலராவர் என்பது.

10. Those who possess wisdom, possess everything; those who have not wisdom, whatever they may possess, have nothing.



ஆறும் அதிகாரம்.

குற்றங்கடிதல்.—On The Correction of Faults.

பரி:—அஃதாவது () காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப்பட்ட தும்மைங்களாறனையும் அரசனீ தகன்ணி நிகழா

() (1) சிறுமை (காமம்), (2) சினம் (வெகுளி), (3) இவறல் (கடும் பற்றுள்ளம்), (4) மாண்பிறந்த மானம் (மானம்), (5) மாணுவுவகை (உவகை), (6) செருக்கு (மதம்) என்பன அரிவர்க்கமாம். இவற்றை இவ்வதி காரத்தின் முதலிரண்டி குறளாலுமுணர்க. "கூறிடுங் கொடிய காமங் குரோதமே யுலோப மோகம், பாறிய மதங்க ளேமாற் சரியுமுட் பகையா றென்ப" என்பது நிகண்டு.

1 காமம்-புத்திர (பிள்ளை) மித்திர (சிநேகர்) களத்திர (மனைவி) இரு கக் (வீடு) ஐராம கேஷத்திர தனதான்யாதிகள் மேலும் மேலு மூண்டாக வேண்டுமென்று விகற்பித்தெழுகின்ற சித்தவிருத்தி.

2 வெகுளி - தனக்குவேண்டிய காரியங்களே ஒருவன் விக்கினஞ் (தடை) செய்தால் அவனிடத்தில் ஆக்கிரகமாக விகற்பித்தெழுகின்ற சித்த விருத்தி.

3 கடும்பற்றுள்ளம் (லோபம்) - தான் சம்பாதித்த பொருள்களில் ஒருவருக்கும் ஒருகாலவும் செலவு பண்ணலாகாதென்று விகற்பித்தெழு கின்ற சித்த விருத்தி.

4 மானம் (மற்சரம்) - அன்னியர் சுகமாயிருந்தா லவர்களைப்பார்த்துச் சகியாமல் விகற்பித்தெழுகின்ற சித்தவிருத்தி.

5 உவகை (மோகம்) - தான் சம்பாதித்த பொருள்களின் மேல் பிரிய மோதப் பிரமோதமாய் விகற்பித்தெழுகின்ற சித்தவிருத்தி.

(இஷ்ட விஷயத்தைக் காண்டலா லுண்டாவது பிரியம்; அதனை யடைதலாலுண்டாவது மோதம்; அதனை யநுபவித்தலாலுண்டாவது பிர மோதம்.)

6 மதம் - ஐசுவரியத்தின் பெருக்கத்தினால் கருவங்கொண்டு செய் காரியம் தவிர் காரியமறியாமல் விகற்பித் தெழுகின்ற சித்தவிருத்தி. என்று சப்தப் பிரகரணங் கூறுகின்றது.

1 காமத்திற் கிலக்கணம் "தாதவிழ்பூங் குழற்கனிவாய்த் தத்தை மொழி முத்தநகைத்தையலார்மேல்,காதலுறப் புரிசெயலே யென்வடிவு" என்றும், 2 வெகுளிக்கிலக்கணம் "சாற்றுமுள் ளுறும்விருப் பத்தடைப் படிலெழுஞ், சீற்றமே யுருவமாம்" என்றும், 3 உலோபத்திற்கிலக்கணம் "உற்றபொருள் பற்றியுத வாமையுருவாம்" என்றும், 4 மானத்திற் கிலக் கணம், "வணங்குவதெத் தகைமேலார்க்கு மாற்றுவதே யொருவடிவு" என்றும், 5 மதத்திற் கிலக்கணம் "செடியசெல்வ முடைமை கண்டு செஞ் சிடைக் களிப்பதே,வடிவமாகும்" என்றும் பிரபோத சந்திரோதயங் கூறு கின்றது.

"தோஷம்: இராகம், துவேஷம், மோகமென மூவகைத்து. அவற்றுள், [1] இராகம், காமம் (மைதுன விச்சை), மற்சரம் (தன் பயனே விசாரியா மலே பிறன் விரும்பியதைத் தடுக்க விரும்புதல்), ஸ்புருகை (தர்மவிரோத மின்றிய பொருளையடைய விரும்புதல்), திருஷ்ணை (இம்மைதென்னுடை யதை ஒருகாளுங் கெடலாகா தென்னும் விருப்பம்), உலோபம் (தர்மவிரோ தமாகப் பிறர்பொருளையடைய விரும்புதல்), மாயை (பிறரை வஞ்சிக்க விரும்புதல்), இடம்பம் (உள்ளே தர்மமுடைமை யில்லாதிருந்தும் வெளியில் தர்மமுடையவனைத்தனது மேன்மையை யறிவிக்கவிரும்புதல்) என ஏழாம். [2] துவேஷம், துரோதம்(கண்டுவித்தல் முதலியவற்றிற்குக் கா ரணமாகிய துவேஷ விசேஷம்), ஈர்ஷ்யை (ஒரு சாதாரண வஸ்துவில் பிற னுடைமையாக அவ்வஸ்துவைக் கிரஹிக்கும் புருஷனிடத் தண்டாவது), அசூயை (அந்நியபுருஷர்களது வித்தை முதலிய குணங்களிலுண்டாவது), துரோகம் (அந்நியரைக் கெடுக்கும்பொருட் டுண்டாவது), அமர்ஷம் (குற் றஞ்செய்வோனைத்தண்டிப்பதற்குச்சாமர்த்தியமின்றிய புருடனுக்குண்டா வது), அபிமானம் (அபகாரஞ் செய்தவனுக்கு அற்பமும் தன்பத்தைச்செ ய்யச்சாமர்த்திய மில்லாதவனுக்குத் தனது ஆக்ரோவிடத் தண்டாகும் தி வேஷம்) என ஆறும். [3] மோகம், விபரியயம் (மித்தையாலாய வுணர்வு), சம்சயம் (ஒரு தர்மியின் மாறுபட்ட பல தருமங்களால் விசேடிக் கப்பட்ட வுணர்வு), தருக்கம் (வியாப்பியத்தை யாரோபித்தலால் வியா பகத்தை யாரோபிப்பது), மானம் (தன்னிடத்து இல்லாத குணங்களை யாரோபித்துக்கொண்டு உயர்வாகக் கருதும் புத்தி), பிரமாதம் (மூன் கர்த் தவ்வியஅகர்த்தவ்வியங்களாக நிச்சயித்தவற்றி லுண்டாகும் அகர்த்தவ்விய கர்த்தவ்வியத்தன்மையாகிய வுணர்வு), பயம்(அநிஷ்டஞ் செய்பவன் யாதே னும் ஒரு காரணம் வாய்த்தகாலத்து அதனை விடுதற்குத் தகுதியில்லாமை யை யறிதல்), சோகம் (இஷ்டவஸ்து பிரிக்தகாலத்து அது மீண்டும் கிடைத்தற்குரிய தாகாமையை யுணர்தல்) என ஏழாம்" என்று நியாயப் பிரகாசம் முதற்பரிச்சேதத்திற் கூறுகின்றது.

மற் கடிதல். இவற்றைவடநூலார் * அரிவர்க்கமென்ப. இவற்றைக் குற்ற மென்றறிதலும் கடிதலும் அறிவுடையார்க் கல்லது கூடாமையின் † அதன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது காமம், குரோதம், உலோபம், மானம், உவகை, மதம் என்னப்பட்ட ஆறு குற்றங்களையும் அரசன் தன்னிடத்துத் தோன்றுமல் ஒழித்தல். இவ்வாறையும் வடநூலார் அரிவர்க்க மென்பர். இவற்றைக் குற்றமென்றறிதலும் ஒழித்தலும் அறிவுடையார்க்கல்லது மற்றவர்க்குக் கூடாமையால், இது (குற்றங்கடிதல்) அதன்பின் வைக்கப்பட்டது. அரி-பகை; வர்க்கம்-கூட்டம்.

க. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

பரி:—(இ - ள்.) மதமும் வெகுளியுங் காமமுமாகிய குற்றங்களில் லாத அரசரது செல்வம் ‡ மேம்பாட்டு நீர்மையினையுடைத்து, (எ-று).

() மதம் - செல்வக்களிப்பு. § சிறியோர்செயலாகலின், ¶ அளவிறந்த காமஞ் 'சிறுமை' எனப்பட்டது. இவை நீதியல்லன செய்வித்தலான், ‖ இவற்றைக் கடிந்தார்செல்வம் கல்வழிப்பாடும் நிலைபேறும் உடைமையின், மதிப்புடைத் தென்பதாம். 0 மிகுதிபற்றி இவை முற்கூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) செருக்கும் - மதமும், சினமும் - குரோதமும், சிறுமையும் - காமமும், (ஆகிய குற்றங்களை) இல்லார் - இல்லாத அரசரது, பெருக்கம் - செல்வமானது, பெருமிதநீர்த்து-மேம்பாட்டுத் தன்மையினையுடையதாம், (எ - று).

* பகைவர்க்கமென்ப என்றும் பாடமுண்டு.

† அதன்பின் - அவ்வறிவுடைமையின்பின்,

‡ மேம்பாட்டு நீர்மை - கம்பீரமான தன்மை.

() குலமதம், சிலமதம், தனமதம், அழகுமதம், யௌவனமதம், கல்வி மதம், தவமதம், இராஜ்யமத மென மதம் எட்டுவகையாம். குலமதம்-குலத்தாலுண்டாகுங்களிப்பு. ஏனையவற்றிற்கு மிங்ஙனமே பொருள்கொள்க.

§ சிறியோர் - கல்வி கேள்வி யறிவு ஒழுக்கங்களில்லாதவர்.

¶ அளவிறந்தகாமம் - அளவுகடந்த ஆசை (கொள்ளுதல்).

‖ இவற்றை - மதம், வெகுளி, காமங்களை.

0 காமம், வெகுளி, உலோபம், மானம், உவகை, மதமெனப்படும் ஆறு குற்றங்களுள், ஒருவனைக் கெடுத்தற்கு மிகுதியும் மூற்பட்டுள்ள குற்றங்கள் மதமும் வெகுளியும் காமமுமாதலால், அம்மிகுதிபற்றி மதம் வெகுளி காமங்கள் முன்னே சொல்லப்பட்டன வென்பது.

மதம் - செல்வத்தாலுண்டாகுங் களிப்பு ; இது தனமதமெனப்படும். அளவுகடந்த காமங்கொள்ளுதல் சிறியவாதசெயலாதலால், அது 'சிறுமை' என்று கூறப்பட்டது. மதம் வெகுளி காமமென்னு மிக்குற்றங்கள் அரசிற்கு ஊச்செய்வித்தலால், இக்குற்றங்களோ நீக்கினவரது செல்வம் கல்வழிப்படுதலும் நிலை பெறுததலுமுடைமையால், மதிப்புடையதாகுமென்பதாம். மிகுதி பற்றி இக்குற்றங்கள் முன்னே சொல்லப்பட்டன. மதிப்பு-கௌரவம்.

(க-து.) மதமும் கோபமும் காமமு மில்லாத அரசரது செல்வம் மதிப்புடையதாகு மென்பது.

1. Truly great is the excellence of those kings who are free from pride, anger and lust.

உ. இவறலு மாண்பிறந்த மானமு மாணு
வுவகையு மேத மிறைக்கு.

பரி:—(இ-ள்.) வேண்டியவழிப் பொருள்கெடாமையும் நன்மையிலிங்கிய மானமும் அளவிறந்த வுவகையும் அரசனுக்குக் குற்றம், (எ-று).

† மாட்சியான மானத்தினீக்குதற்கு 'மாண்பிறந்தமானம்' என்றார். அஃதாவது ‡ அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாய் என்றிவரை $ வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தேவிடுதலும் முதலாயின. அளவிறந்தவுவகையாவது கழிகண்ணோட்டம். பிறருஞ் ¶ "சினனே காமங் கழிகண் ணோட்டம்" என்றிவற்றை * "அறந்தரு நிலைக்கு வழியடையாகுந், நீதி" என்றார். இவையிரண்டு பாட்டானுங் குற்றங்களாவன இவையென்பது கூறப்பட்டது.

† மாட்சியான மானம் - எஞ்ஞான்றும் தக்கிலேயிற் றாழாமையும், செய்வதாற் றாழ்வுவந்துழி உயிர் வாழாமையுமாம்.

‡ "அந்தணர் சான்றோ ரருந்தவத்தோர் தம்முன்னோர், தந்தையா யென்றிவர்க்குத் தாரேவேந்தே - முந்தை, வழிகின்று பின்னே வயங்குநீர் வேலி, மொழிகின்று கேட்டன் முறை" என்பது புறப்பொருள் வெண்பா மாலை.

$ "அரச னுவாத்தியான் றாய்தந்தை தம்முன், நிகரில் குரவ னிவ னிவரைத், தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே, யாகுரு கண்ட நெறி" என்று ஆசாரக்கோவை கூறுவதனால் வணங்கவேண்டியவர்க ளின்னாரென்பது நன்கு விளங்குமென்க.

¶ பதிற்றுப்பத்து, 22 - இதன்பொருள். கோபமும் காமமும் மிகுந்த தாட்சண்ணியமும் என்பது.

* இதன்பொருள். தருமத்தை யுண்டாக்கும் ஆக்கினை சக்கரத்திற்கு (அது சொல்லும்) வழியைத் தடுப்பதான குற்றம் என்பது. "சினனே காமங் கழிகண் ணோட்டம், அச்சம் பொய்ச்சொ லன்புமிக வுடைமை, தெறல்கடு மையோடு பிறவுமிவ் வுலகத், தறந்தரு நிலைக்கு வழியடை யாகும், நீதி" என்பது பதிற்றுப்பத்தி.

தெளி:—(இ-ள்.) இவறலும்-வேண்டியவிடத்துப் பொருள்கொடாமையும், மாண்பிறந்தமானமும்-உண்மையினீங்கிய மானமும், மாணுவுவகையும்-அளவிறந்தவுவகையும், இறைக்கு - அரசனுக்கு, குற்றம் - குற்றங்களாம்.

மாட்சி (பெருமை) யான மானத்தினின்று நீக்குதற்கு 'மாண்பிறந்த மானம்' என்றார். அம்மாண்பிறந்த மானமாவது அந்தணர் சான்றோர் அருந்தவர் தமதுமுன்னோர் தந்தைதாய்என்ற இவரைவணங்காமையும், (செய்து) முடிக்கத்தகாததாயினும் நினைத்ததை (செய்து) முடித்தே விடுதலும், முதலானவை. அளவிறந்த வுவகையாவது மிகுந்த தாட்சண்யம். இவை இரண்டு பாட்டாலும் குற்றங்களாவன (காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமென்னும்) இவை யென்பது சொல்லப்பட்டது.

(க-து.) அரசனுக்குக் குற்றமாயுள்ளவை உலோபமும், கன்மையினீங்கியமானமும், அளவுகடந்த உவகையுமாமென்பது.

2. Avarice, undignified pride, and low pleasures, are faults in a king.

கூ. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் பழிநாணு வார்.

பரி:—(இ-ள்.) பழியை யஞ்சுவார் தங்கணி தினையினளவாங் குற்றம் வந்ததாயினும் * அதனை அவ்வளவாக வன்றிப் பனையினளவாகக் கோள்வர், (எ - று).

† குற்றம்—சாதியொருமைப்பெயர், தமக்கேலாமையிற் சிறிதென்று ‡ பொருர்; பெரிதாகக்கொண்டு வருத்திப் பின்னும் அதுவராமற் காப்ப தென்பதாம்.

தெளி:—(இ-ள்.) பழிநாணுவார் - பழிக்கு அஞ்சுவோர், தினைத் துணையாங் குற்றம்-தினையினளவான (சிறிய) குற்றமானது, வரினும்-(தம்மிடத்து) வந்ததாயினும், (அக்குற்றத்தை அவ்வளவாக வல்லாமல்) பனைத் துணையா-பனையினளவாக, (பெரிதாக), கொள்வர்-கொள்ளுவார், (எ-று).

குற்றம் ஈறுதோன்றுத சாதியொருமைப்பெயர். சிறியகுற்றமும் தமக்கு ஏற்காமையால் அதனைச் சிறிதென்று பொறுக்கார்; பொறுக்காது பெரிதாகக்கொண்டு வருத்திப் பின்னும் அக்குற்றம் (தம்மிடத்து) வராமல் காப்பர் (அக்குற்றத்தை யொழிப்பர்) என்பதாம்.

(க-து.) பழிக்கஞ்சுபவர் தமக்குத் தினையளவு குற்றம் வந்தாலும் அதனைப்பனையளவு குற்றமாகக் கருதுவரென்பது.

* அதனை அவ்வளவாக வன்றி - அத்தினையளவாங்குற்றத்தை அத்தினையளவு குற்றமாகக் கொள்ளாமல்.

† குற்றம்-காமம் வெகுளி முதலியன.

‡ தேறுர் (தெளியார்) என்றும் பாடமுண்டு.

3. Those who fear guilt, if they commit a fault small as a millet seed, will consider it to be as large as a palmyra tree.

ச. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தருஉம் பகை.

பரி:—(இ - ள்.) தனக்கிறுதி பயக்கும் பகை குற்றமே, ஆகலான், அக்குற்றம் தன்கண்வாராமையே பயனுகக்கொண்டு காக்கவேண்டும்.

இவைபற்றியல்லது பகைவர் அற்றந்தாராமையின் இவையே பகையாவனவென்னும் வடநூலார் மதம் பற்றிக் 'குற்றமே யற்றந் தருஉம் பகை' என்றும், இவற்றது இன்மையே குணங்களது உண்மையாகக் கொண்டென்பார் 'பொருளாக' என்றும் கூறினர். குற்றமேகாக்கவெனபது * "அரும்பண்பி னுற்றீமை காக்க" என்பதுபோல நின்றது.

தெளி:—(இ-ள்.) அற்றம்-மூடிவை, தருஉம்பகை - (தனக்குத்) தரும் பகை, குற்றமே-குற்றமேயாம், (ஆதலால்), குற்றமே-அக்குற்றம் (தன்னிடத்து வாராமையையே), பொருளாக - பயனுக, (கொண்டு), காக்க-காக்கவேண்டும், (எ-று).

காமம் வெகுளி முதலிய தீக்குணங்களைப்பற்றி யல்லாமல் பகைவர் தமக்கு மூடிவைச செய்யாமையின் இக்குற்றங்களே பகைபாவன என்று கூறும் வடநூலாரது கொள்கை பற்றிக் 'குற்றமே யற்றந்தருஉம்பகை' என்றும், இத்தீக்குணங்களது இல்லாமையே நற்குணங்களினது இருப்பாகக் கொள்ளவேண்டுமென்று சொல்லவந்தவர் 'பொருளாக' என்றும் கூறினர். காதற்ஜெழிதல்.

(க-து.) ஒருவனுக்கு மூடிவைத்தரும் பகை குற்றமாகலின், அதனை யவன் தன்னிடத்து வாராமற் காக்கக் கடவன் என்பது.

4. Guard against faults as a matter of great consequence; for faults are a deadly enemy.

ஞ. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

பரி:—(இ - ள்.) குற்றம் வாராகடவதாகின்ற முற்காலத்திலே † அதனைக் காவாத அரசன் வாழ்க்கை ‡ அது வந்தால் ¶ எரிமுகத்துநின்ற வைக்கூவைபோல அழிந்துவிடும், (எ-று).

* இதன்பொருள். (ஒருவன்) விட்டுதற்கரிய நற்குணங்களைச் சம்பாதிப்பதனால் (தன்னிடத்தில்) தீமை (வாராதபடி அத்தீமையைக்) காக்கக் கடவன் என்பது.

† அதனைக்காவாத - குற்றத்தைத்தடுக்காத. ‡ அது - குற்றம்.

¶ எரிமுகத்துநின்ற - நீமுன்பட்ட.

குற்றமென்பது அதிகாரத்தான் வந்தது. முன்னென்றதனீற்றது பகுதிப்பொருள்விகுதி. வருமென்னும் பெயரெச்சம் * முன்னென்னுங் காலப்பெயர்கொண்டது; † அதனாற் காக்கலாங் காலம் பெறப்பட்டது. குற்றஞ் சிறிதாயினும் அதனாற் பெரிய செல்வம் அழிந்தேவிடுமென்பது ‡ உவமையாற் பெற்றாம்.

தேவி:—(இ-ள்.) வருமுன்னர் - (குற்றம்) வருவதன்முன்னே, காவாதான் (அக்குற்றத்தை) காவாத அரசனது, வாழ்க்கை - வாழ்க்கையானது, (அது வந்தால்), எரிமுன்னர் - தீமுகத்து, (கின்ற), வைத்தூறுபோல-வைக்கோலின் கூட்டம்போல, கெடும் - அழிந்துவிடும், (எ - று).

குற்றமென்பது குற்றங் கடிதலென்னும் அதிகாரநோக்கி வருவிக்கப்பட்டது. முன்னரென்பதன் ஈற்றிலுள்ள அர்எனபது பகுதிப்பொருளே யுணர்த்தியவிகுதி. வரும் என்னும் எதிர்காலப் பெயரெச்சம முன்னர் என்னும் காலப்பெயரைக்கொண்டு முடிந்தது. முன்னரென்றதனால் (குற்றத்தை)காத்தலாங் காலம் பெறப்பட்டது. குற்றம் சிறியதாயிருந்தாலும் அதனால் பெரிய செல்வம் அழிந்தே விடுமென்பது 'எரிமுன்னர் வைத்தூறு போல' என்னும் உவமானத்தினால் பெறப்பட்டது.

(க-து.) குற்றம் வருமுன்னே அதனைக் காத்துக்கொள்ளாதவனது வாழ்வு அது வந்தபோது ஒருமிக்கக் கெடும் என்பது.

5. The prosperity, of him who does not timely guard against faults, will perish like straw before fire.

கூ. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னேன்குற்ற மாகு மிறைக்கு.

பரி:—(இ - ள்.) முன்னர்த் தன்குற்றத்தைக்காண்டு கடிந்து பின்னர்ப் பிறர்குற்றங் காணவல்லனாயின் அர்சனுக்கு ஆகக்கடவதுற்றம்யாது?

அரசனுக்குத் தன்குற்றங் கடியாவழியே பிறர் குற்றங்கடிதல் குற்றமாம்; அதுகடிந்தவழி முறை செய்தலாமென்பார் 'என் குற்றமாகும்' என்றார். எனவே, தன்குற்றங் கடிந்தவனே முறைசெய்தற் குரியனெனப

* காலப்பொருளையும் இடப்பொருளையு மூணர்த்தும் முன் என்னும் இடைச்சொல் இங்குக் காலப்பொருளே யுணர்த்திப் பெயர்த்தன்மைப்பட்டு நின்றது.

† அதனாற் காக்கலாங்காலம் பெறப்பட்டது-முன்னர் என்னுமதனால் குற்றம் வாராமல் காக்கும் காலம்பெறப்பட்ட தென்பது. [குற்றம் வருவதற்கு முன்னே அதுவாராமல் முயலவேண்டுமென்பது கருத்து.]

‡ கொடுப்புச் சிறிதாயிருந்தாலும் அதனாற் பெரிய வைக்கோற்போர் அழிந்து விடுவதுபோன்ற குற்றம் சிறிதாயிருந்தாலும் அதனாற் பெரிய செல்வமும் அழிந்துவிடுமென்பதாம்.

தாயிற்று. இவை நான்குபாட்டாலும் * அவற்றது கடிதற்பாடு பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப.

தெளி:—(இ - ள்.) தன்குற்றம்-(முன்னே) தனதுகுற்றத்தை, நீக்கி-(கண்டு) ஒழித்து, பிறர்குற்றம்-(பின்னே) பிறரதுகுற்றத்தை, காண்கிற் பின் - காண வல்லவனுல், இறைக்கு - அரசனுக்கு, ஆகும்-ஆக்கடவ தாகிய, குற்றம்—,என் - யாது, (ஒன்றுமில்லை), (எ - று).

அரசனுக்குத் தன்குற்றத்தை யொழிக்காத விடத்தே பிறரதுகுற்றத் தை யொழித்தல் குற்றமாகும்; அக்குற்றத்தை யொழித்தவிடத்து முறை செய்தலாகு மென்பார் 'என் குற்றமாகும்' என்றார். எனவே, தன் குற்றத் தை யொழித்தவனே முறைசெய்தற்கு உரியனெனபதாயிற்று. இவை நான்கு பாட்டாலும் அக்குற்றங்களே யொழித்தலின் தன்மை பொதுவகை யினுல் சொல்லப்பட்டது. இனிச்சிறப்புவகையாற் கூறுவார். முறை-நீதி.

(க - து.) தனது குற்றத்தைக் கண்டொழித்துப்பிறரது குற்றத்தைப் பார்ப்பவனுக்கு யாதொரு குற்றமு முண்டாகாது.

6. What fault will remain, in the king who has put away his own evils, and looksafter the evils of others.

எ. செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்.

பரி:—(இ - ள்.) பொருளாற் றனக்குச் செய்துகொள்ளப்படு மவற்றைச் செய்துகொள்ளாது அதன்கட் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம் பின் உளதாம் பான்மைத்தன்றி வறிதே கெடும், (எ - று).

செயற்பாலவாவன :- அறம் பொருளின்பங்கள். பொருளாற்பொருள் செய்தலாவது பெருக்குதல்; அது † "பொன்னினுகும் பொருபடையப் படை, தன்னினுகுந் தாணிதாணியிற், பின்னே யாகும் பெரும்பொருளப்பொரு, டன்னுங் காலத்தின் னுதன வில்லையே" என்பதனுனறிக.

* அவற்றது - காமம் வெகுளி முதலிய குறறங்களது, கடிதற்பாடு-நீக்குதலின் தன்மை.

† சிவஞானசுவாமி விமலையாரிலம்பகம், 35. இதன்பொருள். பொருளினுல் போர் செய்தற்குரிய சேனை விருத்தியாகும்; அச்சேனையினுல் இராஜ்ஜியம் விருத்தியாகும்; அவ்விராஜ்ஜியத்தினுல் பிறரு மிகு பொருள் விருத்தியாகும்; அப்பொருள் கைகூடுமளவில் அடையாதன வையகத்தில் லை என்பது. "மூவிரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியுமென" என்று திருக்கோவையார் கூறுவதாலும், பொருளே அறமுதலிய வெல்லாவற்றிற்குங் காரணமா யிருக்கின்றதென்பது இளிதுவினங்கும். முதலிபெறுவதற்குப் பொருளே விதையது மொருகாரணமா மென்பதிற் கூசித்திணர்ந்தற் பாலது.

* அறஞ் செய்யாமையானும் பொருள் பெருக்காமையானும் 'உயற்பால தன்றி' என்றும், இன்பப்பயன் கொள்ளாமையாற் 'கெடும்' என்றும் கூறினார். † உயற்பாலதின்றியென்று பாடமோதுவாரு முளர்.

தெளிவு:—(இ-ள்.) செயற்பால - (பொருளால் தனக்குச்) செய்து கொள்ளப்படுவனவற்றை, செய்யாது - செய்துகொள்ளாமல், இறுகியான்- (அப்பொருளினிடத்தி) லோபஞ் செய்தவனது, செல்வம்-செல்வமானது, உயற்பாலதன்றி-(பின்) உள்ளதாகும் பகுப்பினதன்றி, கெடும் - (வீணுகக்) கெடும், (எ-று).

செய்துகொள்ளப்படுவன:- அறம் பொருளின்பங்கள். பொருளால் பொருள் செய்தலாவது பொருளே விருத்தியாக்குதல். செல்வமானது அறத்தைச் செய்யாமையாலும் பொருளே விருத்தி செய்யாமையாலும் 'உயற்பாலதன்றி' என்றும், இன்பப்பயனே யநுபவியாமையால் 'கெடும்' என்றும், சொல்லினார்.

(க-து) தனக்குச் செய்துகொள்ளப்படுவனவற்றைச் செய்யாது உலோபஞ்செய்தவனது செல்வம் விரைவிலழியும் என்பது.

7. The wealth of the avaricious man, who does not expend it for the purposes for which he ought to expend it, will waste away and not continue.

அ. பற்றுள்ள மென்னு மிவறன்மை யேற்றுள்ளு
மேண்ணப் படுவதோன் றன்று.

பரி:—(இ- ள்.) பொருளே விடந்தகுமிடந்து விடாது பற்றுதலே செயியு முள்ளமாகிய உலோபத்தினது தன்மை தற்றத்தன்மைக ளெல்லாவற்றுள்ளும் வைத்து எண்ணப்படுவதொன்றன்று, மிக்கது,(எ-று).

* (செல்வம்) அறஞ்செய்யாமையாலும் (இம்மைப்பயன் மறுமைப் பயன் வீடு என்னும் மூன்றையுந் தரும் தருமத்தைப பொருளாக்கொண்டு செய்யாமையாலும்) பொருள் பெருக்காமையாலும் (பொருள் சம்பாதித்தற்குரிய முயற்சிசெய்து பொருளே விருத்திசெய்யாமையாலும்) 'உயற்பாலதன்றி' (பின்னுளதாகும் பான்மையதல்லாமல்) என்றும், இன்பப் பயன் கொள்ளாமையால் (பொருளால் இவ்வுலகத்திற்குரிய இன்பமாகிய பயனே யனுபவியாமையால்)(வீணே) 'கெடும்' என்றும் கூறினாரென்பது. அறஞ்செய்யாதவர்களது பொருள் பின்னுளதாகாது பலவழியாலும் ஒழிவதாயிருத்தல் பற்றி 'அறஞ்செய்யாமையானும்' என்றும் கூறப்பட்டது. இதனால் பொருளினால் தனக்கு அறம் பொருளின்பங்களைச்செய்துகொள்ளாதவனுக்கு யாதொரு புருஷார்த்தமும் இல்லையென்பது பெற்றாமென்க.

† உயற்பாலதன்றி என்பதற்குப் பிரதியாக உயற்பாலதின்றி என்றும் பாடமுண்டு; அதற்குப் பொருள், பின்னுளதாகும்பான்மைய தில்லாமல் என்பது.

இவறலது தன்மையாவது குணங்களெல்லாம் ஒருங்குளவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்திதத் தான் மேற்படவல்ல வியல்பு. † ஒழிந்தன அது மாட்டாமையின் 'எற்றுள்ளு மெண்ணப் படுவதொன் றன்று' என்றார். ‡ எவற்றுள்ளு மென்பது இடைக்குறைத்து நின்றது. இவை யிரண்டு பாட்டானும் உலோபத்தின் தீமை கூறப்பட்டது.

தேவி:—(இ-ள்.) பற்றுள்ளமென்னும்-(பொருளே விடத்தகுமிடத்து விடாது) பற்றுதலேச்செய்யும் உள்ளமாகிய, இவறன்மை-உலோபத்தினது தன்மையாவது, எற்றுள்ளும்-குற்றத்தன்மைக ளெல்லாவற்றுள்ளும், எண்ணப்படுவது - (வைத்து) எண்ணப்படுவது, ஒன்றன்று-ஒன்றல்ல, (மிகுந்த தாம்), (எ-று).

உலோபத்தின் தன்மையாவது நற்குணங்களெல்லாம் ஒருமித்திருப் பனவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்தித் தான்மேற்படவல்ல வியல்பு. ஒழிந்த தீக்குணங்கள் அது செய்யமாட்டாமையால் 'எற்றுள்ளு மெண்ணப் படுவதொன் றன்று' என்றார் எவற்றுள்ளு மென்பது எற்றுள்ளும் என்றாயது இடைக்குறை விகாரம். இவை யிரண்டுபாட்டாலும் உலோபத்தினது தீமை சொல்லப்பட்டது.

(கு-து.) தீக்குணங்களிற் சிறந்தது உலோபமாம் என்பது.

8. Griping avarice is not to be reckoned as one among other faults; it stands alone—greater than all.

கூ. ¶ வியவற்க வெஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

பரி:—(இ-ள்.) தான் இறப்பவு மியாதொருஞான்றும் மதித்தாற் றன்னை நன்குமதியாதொழிக; தனக்கு நன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாதொழிக, (எ - று).

தன்னைவியந்தொழி லிடமுங் காலமும் வலியும் அறியப்படாமையாலும், அறனும் பொருளும் இகழப்படுதலாலும், எஞ்ஞான்றும் வியவற்க என்றும், கருதியது முடித்தேவிடுவலென்று அறம் பொருளின்பங்கள்

† ஒழிந்தன அது மாட்டாமையின் - காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப்படுபட்ட தீக்குணங்களாதலுன், உலோபம் ஒழிந்த மற்றைய குணங்கள் நற்குண மெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தித் தாம் மேற்படும் தன்மையைச் செய்யமாட்டாமையுனல்.

‡ எவற்றுள்ளும் என்பது எற்றுள்ளும் என இடையிலே வகரங் குறைந்து நின்றது.

¶ "தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த தீச்சுடர், தன்னீர் சொரிந்து வளர்த்தற்றற்-றன்னை, வியவாமை யன்றே வியப்பாவ தின்பம், நயவாமை யன்றே நலம்" என்பது நீதிநெறிவிளக்கம்.

பயவாவினைகளே நயப்பின் அவற்றுற் பாவமும் பழியுங் கேடும் வருமாகலின், அவற்றை 'நயவற்க' என்றுங் கூறினர். இதனுள் † மதமானங்களின் தீமை கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், (தான் மிகவும் உயர்ந்த காலத்திலும்), தன்னை வியவற்க - (மதத்தினால்) தன்னை நன்கு மதியாதிருக்கக் கடவன், நன்றி-(தனக்கு) நன்மையை, பயவாவினை-தராத தொழில்களை, நயவற்க (மானத்தினால்) விரும்பாதிருக்கக் கடவன், (எ-று).

தன்னை நன்கு மதித்தவிடத்து இடமும் காலமும் வலியும் அறியப் படாமையாலும், அறமும் பொருளும் இகழப்படுதலாலும், எஞ்ஞான்றும் வியவற்க என்றும், நினைத்தகாரியத்தை முடித்தீச விதிவேனென்ற அறம் பொருளின் பக்கலைத் தராததொழில்களை விரும்பினால் அத்தொழில்களால் பாவமும் பழியும் கேடும் வருமாகலால், அத்தொழில்களை 'நயவற்க' என்றும் சொல்லினர். இதனால் மதமானங்களினது தீமை சொல்லப்பட்டது.

(கு-து.) தன்னை நன்கு மதித்தலையும் நன்மையைத் தராத தொழில்களைச் செய்தலையும் ஒழிக்கவேண்டும் என்பது.

9 Let no king praise himself at any time; let him not desire to do useless things.

கo காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

பரி:—(இ - ள.) தான் காதலித்த பொருள்களை ‡ அவர் அக்காதல் அறியாமல் அனுபவிக்க வல்லனாயின், பகைவர் தன்னை வசீகரித்துக் கொண்டு எண்ணம் பழுதாம், (எ-று).

அறிந்தவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாமலுய்த்தால் வாயிலின்மையின் $ வஞ்சிக்கப்படாரென்பதாம். ¶ காமம்

† தன்னைவியத்தல் மதமாம்; நன்றிபயவாவினையை நயத்தல் மானமாம். ‡ அவர் - பகைவர்.

$ தான்விரும்பிய பொருள்களை யரசன் பகைவரறியாமல் அனுபவிப்பானுனல் அவ்வரசன் அப்பகைவரால் வஞ்சிக்கப்படானென்பது.

¶ காமம் வெகுளி உவகை யென்பன அரசருக்கு முழுது மொழிக்கத் தக்க குற்றங்க ளல்லாமையால் இக்குறளால் அவர் பெரும்பான்மையாகிய காமத்தைப் பகைவரறியாம லனுபவிக்கும் வகையைக் கூறி மற்றைச் சிறுபான்மையாகிய வெகுளி உவகைகளுக்குத் 'தினைத்துணையாய் குற்றம் வரினும்' என்னும் குறள் முதல் 'தன்குற்ற நீங்கி' என்னும் குறள் பரியந்தங் கூறியபொதுவகை விலக்கினையே மேற்கொண்டு விட்டாரென்பதாம். இதனால் அரசன் பெரும்பான்மையும் காமத்தைப் பகைவ ரறியாம லனுபவிக்கவேண்டு மென்பதும், வெகுளி உவகைகளைப் பெரும்பான்மையும் ஒழிக்கவேண்டு மென்பதும் பெறப்படுகின்றன வென்க.


வெகுளி உவகை யென்பன முற்றக்கடியும் குற்றம் அன்மையின், இதனைற் பெரும்பான்மைத் தாகிய காமம் துகருமாறு கூறி, ஏனைச் சிறுபான்மை யவற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிந்தார்.

தெளி:—(இ-ள்.) காதல - (தான்) விரும்பியபொருள்களை, காதல் - (அவர்) அவ்விருப்பத்தை, அறியாமை-அறியாமல், உய்க்கற்பின் - அனுபவிக்கவல்லவனாயின், எதிலார்-பகைவர், நூல்-(தன்னை வஞ்சிதத்தற்கு எண்ணும்) எண்ணமானது, எதில-பழுதாம், (எ-று).

பகைவர் தான்விரும்பிய பொருள்களை அறிந்த விடத்து அவ்விரும்பிய பொருள்கள் வழியாகப் பிரவேசித்து (தன்னை) வஞ்சிப்பாராதலால், (அவர்) அப்பொருள்களை அறியாம லனுபவித்தால் அப்பகைவர் பிரவேசிப்பதற்கு வழி யில்லாமையிஞல் அரசன் அவரால் வஞ்சிக்கப்படாணெண்பதாம். காமம் வெகுளி உவகை என்பன முழுதுமொழிக்குங் குற்றமல்லாமையினால், இதனுல் பெரும்பான்மையதாகிய காமத்தை யனுபவிக்கும் வகையைச் சொல்லி, மற்றைச் சிறுபான்மையாகிய வெகுளி உவகைகளுக்குப் பொதுவகையாகக் கூறிய விலக்கினையே மேற்கொண் டொழிந்தார். வஞ்சித்தல்-கெடுத்தல்.

(க-து) தான் விரும்பிய வற்றைப் பகைவரறியாம லனுபவிக்குமரசன் அப்பகைவரால் வஞ்சிக்கப்படான் என்பது.

10. If a king enjoys privately the things which he desires, the designs of his enemies will be useless



ஏழாம் அதிகாரம்.

பெரியாரைத் துணைக்கோடல்.

On Procuring the Aid of Great Men.

பரி:—அஃதாவது முவிருதுற்றுழும் முறைமையிற் கடிதலிற் காவற் காகாடு உகைத்தற்தரியவாறு அரசன் கீநெறிவிலக்கி நன்னெறிச்செலுத் தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக்கோடல். † அதிகார முறைமையும் இதனுனே விளங்கும் பேரறிவுடையாராவார் அரசர்க்கும் ‡ அங்கங்கட்கும் ¶ மானுடத்தெய்வக் தற்றங்கள் வாராமற் காத்தற்

† அதிகார முறையும்-குற்றங்கடிதலின் பின் பெரியாரைத் துணைக் கோட லென்னும் அதிகாரம் வைதத முறையும்.

‡ அங்கங்கள் - அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பென் பன.

¶ தெய்வமானுடக் குற்றங்கள் என்றும் பாடமுண்டு. தெய்வத்தாலும் மானுடாலும் வருங் குற்றங்களை இவ்வதிகாரத்தின் இரண்டாவது குறளி னுரையிற் காண்க.

தூய † அமைச்சர், ‡ புரோகிதர்.

தெளி:—அரசாவது காமம் வெகுளி கடும்பற்றுள்ளம் மானம் உவகை மதமெனப்படும் மூலிரு (அறுவகைக்) குற்றங்களையும் முறைமைப்படி யொழித்தலால் ஆக்கினை சக்கரத்தைச் செலுத்துதற் குரியவனை அரசன் தன்னைத் தீயவழியிற்செல்லாவாறு விலக்கி நல்வழியிற் செலுத்தும் பேரறிவுடையவரைத்தனக்குத் துணையாகக் கொள்ளுதல். அதிகாரமுறைமையும் இதனுலேவிளங்கும். பேரறிவுடையவராவார் அரசருக்கும் அங்கங்களுக்கும் மாநாடாலும் தெய்வத்தாலும் குற்றங்கள் வாராமல் காத்தற்குரிய அமைச்சர், புரோகிதர். முறை-நீதிநூல்.

க. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

பரி:—(இ - ள்.) அறத்தினது நுண்மையை அறிந்து தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை அரசன் அதனது அருமையை ஓர்ந்து கொள்ளுந் திறமறிந்து கொள்க, (எ - று).

அறநுண்மை நூலானேயன்றி உய்த்துணர்வானும் அறியவேண்டுதலின் 'அறனறிந்து' என்றார். மூத்தல் - அறிவானும் சீலத்தானும் காலத்தானும் முதிர்தல். அறிவுடையார் - நீதியையும் உலகியலையும் அறிதலையுடையார். திறனறிதலாவது நன்குமதித்தல், உயரச்செய்தல் - ¶ அவர் வயிரற்றலென்பன $ முதலாக () அவர் பிணிப்புண்ணுந் திறனறிந்து செய்தல்.

தெளி:—(இ - ள்.) அறனறிந்து - அறத்தினது நுட்பத்தையறிந்து, மூத்த - (தன்னின்) மூத்த, அறிவுடையார் - அறிவுடையாரது, கேண்மை - நட்பை, தேர்ந்து - (அரசன் அந்நட்பினது அருமையை) ஆராய்ந்தறிந்து, திறனறிந்து - (கொள்ளுந்) திறத்தையறிந்து, கொளல் - கொள்ளக்கடவன்.

தருமத்தினது நுட்பத்தை சாஸ்திரங்களின் வாயிலாக வறிதலேயல்லாமல் உலகநடையை யாராய்ந்தறிதலாலும் அறியவேண்டுதலால் 'அறனறி

† அமைச்சர் - மந்திரிகள்.

‡ புரோகிதர் - பின்வருவன வற்றை முன்னறிந்து சொல் பவரும் இருத்தியஞ் செய்விப்பவருமாகிய பிராமணர்கள். "மந்திரியர் புரோகிதர் சேனை பதியர், தந்திரத் தூதர் சாரண ரென்றிவர், அந்தமி லரசர்க் கைம்பெருங் குழுவே" என்பது பிங்கலந்தை.

¶ அவர்வயிரற்றல் - அறிவுடையார் கூறிய எல்லையில் இருத்தல்.

$ முதலாக என்றதனுல் தவறியபோது அவரால் கண்டிக்கப்படுதலே யேற்றுக்கொள்ளுதல், என்றும் வணக்கமுடையவனுயிருத்தல் முதலிய வற்றையும் கொள்க.

() அவர் பிணிப்புண்ணுந் திறனறிந்து செய்தல் - அறிவுடையார் தனக்குக் கட்டுப்படும் வகையைத் தெரிந்து செய்தல். [பிணிப்புண்டல் - அன்பினுல் நீங்காமலிருத்தல்.]

ந்து' என்றார். மூத்தல் - அறிவாலும் சில (ஆசார)த்தாலும் காலத்தாலும் முதிர்தல். அறிவுடையார் - நீதியையும் உலகியலையும் அறிதலையுடையவர். திறனறிதலாவது (அரசன் அவரை) நன்கு மதித்தல், உயரச்செய்தல், அவர் சொல்வழி நடத்தல் என்பன முதலாக வுள்ளவற்றை அவர் தனக்கு வசமாகுந்திறத்தையறிந்து செய்தல்.

(க-து.) அரசன் அறத்தினும் நாட்பத்தை ஆராய்ந்தறிந்து, தன்னின் மூத்த அறிவுடையாரது சிநேகத்தைக்கொள்ளும்வகையைத் தெரிந்து கொள்ளக்கடவன் என்பது.

1. Let a king ponder well its value, and secure the friendship of men of virtue and of mature knowledge.

2. உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

பரி:—(இ - ள்.) தெய்வத்தாலாக மக்களாலாகத் தனக்குவந்ததுன்பங்களை நீக்குமாறறிந்து நீக்கிப் பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன்னறிந்து காக்கவல்ல தன்மையினையுடையாரை அரசன் அவருவப்பன செய்து துணையாகக் கொள்க, (எ - று).

தெய்வத்தான்வருந் துன்பங்களாவன: மழையின் இன்மை மிகுதிகளாலும், காற்றுத் † தீப்பிணி யென் றிவற்றாலும் வருவன. அவை கடவுளையுங் ‡ தக்கோரையும் நோக்கிச் செய்யுஞ் ¶ சாந்திகளான் நீக்கப்படும். மக்களான்வருந் துன்பங்களாவன: பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வாரென்றிவர்களான் வருவன. அவை $ சாம () பேத [] தான †† தண்டங்களாலிய நால்வகை உபாயத்துள் ஏற்றதனால் நீக்கப்படும். முற்காத்தலாவது தெய்வத்தான் வருவனவற்றை * உற்பாதங்களாலறிந்தஅச்சாந்திகளாற் காத்தலும், மக்களால் வருவனவற்றை அவர் குணம், இங்கிதம், ஆகாரம்,செயலென்பனவற்றுன் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றுற் காத்

† தீப்பிணி - நெருப்பும் நோயும்.

‡ தக்கோர் - கல்வியறிவு வொழுக்கங்கள் நிரம்பிய அந்தணர் முதலியோர்.

¶ சாந்தி - தோஷநிவாரண கர்மம்; அஃது ஓமம், ஜபம், அர்ச்சனை, நமஸ்கார முதலாயினவாம்.

$ சாமம் - சமாதானத்தினுல் காரியங்கொள்ளுதல்.

() பேதம் - ஒருவருடன் மற்றொருவரைச் சேராவாறு பிரித்துக் காரியங் கொள்ளுதல்.

[] தானம் - பொருள்கொடுத்துக் காரியங்கொள்ளுதல்.

†† தண்டம் - படைகொண்டு வருத்துதலால் காரியங்கொள்ளுதல்.

* உற்பாதம் - துர்நிமித்தம்; அஃதாவது பின்னிகழும் நீங்கை முன்னறிவிக்கும் குறி.

தலுமாம். † ஆகவே, புரோகிதரையும் அமைச்சரையுங் கூறியவாறுமாயிற்று. இங்ஙிதம் ‡ குறிப்பான் நிகழும் உறுப்பின் தொழில். ஆகாரம் - குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன - நன்குமதித்தன் ¶ முதலியன. இவை யிரண்டுபோட்டாலும்பெரியாரது இலக்கணமும், அவரைத் தூணையாகக் கோடல் வேண்டுமென்பதுமும், கொள்ளுமாறுங் கூறப்பட்டன.

தெளி:—(இ-ள்.) உற்ற - (தெய்வத்தாலாவது மனிதராலாவது தனக்கு) வந்த, நோய் - துன்பங்களை, நீக்கி - (நீக்கும்விதத்தையறிந்து) நீக்கி, உருஅமை - (பின் அத்துன்பமடையவாய துன்பங்கள்) வாராதபடி, முற்காக்கும் - முன் (அறிந்து) காக்கவல்ல, பெற்றியார் - தன்மையினையுடையாரை, பேணி - (அவர்) மகிழத்தக்கனவற்றைச் செய்து, கொளல் - (அரசன் தூணையாகக்) கொள்ளக்கடவன், (எ-று).

தெய்வத்தால்வருந் துன்பங்களாவன: மழையில்லாமையாலும், அதிக மழையாலும், காற்று, தீ, பிணி என்ற இவற்றாலும் வருவன. அத்துன்பங்கள் கடவுளரையும் தக்கோரையும் தோக்கிச் செய்யுஞ் சாந்திகளால் நீக்கப்படும். மக்களால்வருந் துன்பங்களாவன: பகைவர், கள்வர், சுற்றத்தார், தொழில் செய்வார் என்ற இவர்களால் வருவன. அத்துன்பங்கள் சாமபேதான தண்டங்களாகிய நால்வகையுபாயத்துள் தக்கவுபாயத்தால்நீக்கப்படும். முற்காத்தலாவது தெய்வத்தால் வருந்துன்பங்களை உற்பாதங்களால் அறிந்து அச்சாந்திகளால் காத்தலும், மனிதரால் வருந்துன்பங்களை அவரது குணம் இங்ஙிதம் ஆகாரம் செயல் என்பனவற்றால் அறிந்து அந்நால்வகை யுபாயங்களுள் ஒன்றால் காத்தலும் ஆம். ஆகவே, புரோகிதரையும் மந்திரிகளையும் சொல்லியபடியாயிற்று. இங்ஙிதம் - குறிப்பால் உண்டாகும் அவயவத்தினது தொழில், ஆகாரம்-குறிப்பில்லாது உண்டாகும் (உடம்பின்) வேறுபாடு. மகிழத்தக்கன-நன்கு மதித்தல் முதலாயின. இவையிரண்டு பாட்டாலும் பெரியாரது இலக்கணமும், அவரைத் தூணையாகக் கொள்ள வேண்டுமென்பதும், தூணைக்கொள்ளும் விதமும் சொல்லப்பட்டன. காத்தல் - நீக்குதல்

(க-து.) துன்பங்களை நீக்கும்விதமறிந்து நீக்கி, பின் அத்துன்பங்கள் வாராமல் தன்னைக் காக்கவல்ல பெரியாரை அரசன் தூணையாகக் கொள்ளக் கடவன் என்பது. (இ)

† தெய்வத்தால் வரும் துன்பங்களைச் சாந்திசெய்து நீக்குபவர் புரோகிதராயும், மக்களால் வரும் துன்பங்களை நால்வகையுபாயத்துள் ஒன்றால் நீக்குபவர் அமைச்சராயும் இருத்தலால் 'ஆகவே, புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறுமாயிற்று' என்று கூறப்பட்டது.

‡ குறிப்பான் நிகழும் உறுப்பின்தொழில் - தனது கருத்தைத் தன்னுடு சேர்ந்தவர் குறிப்பாகவறிந்து கொள்ளுமாறுண்டாகும் கண்முதலிய அவயவங்களின் தொழில். அஃதாவது கண்சிமிட்டல், தலையைச்சொரிதல் முதலியனவாம்.

¶ முதலியன் என்றதனால் - உயரச்செய்தல், அவர்வரை நிற்றல் முதலியவற்றையுங் கொள்க.

2. Let a king procure and kindly care for men who can overcome difficulties when they occur and guard against them before they happen.

ரு. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பரி:—(இ - ள்.) அப்பெரியவர்களை அவர் உவப்பன அறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக் கோள்ளுதல் அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் அரிது, (எ - று).

உலகத்து அரியனவெல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு † இப்பேறு சிறந்த தென்றது, ‡ இதனுல் ஆவையெல்லாம் உளவாதலுணர்க்கி.

தெளி:—(இ - ள்.) பெரியாரை-அப்பெரியவர்களை, பேணி - (அவர்) மகிழத்தக்கனவற்றை யறிந்து செய்து, தமரா - தமக்குச் சிறந்தவராக, கொளல் - கொள்ளுதல், (அரசர்க்கு), அரியவற்றுளெல்லாம் - அரியபேறுகள் எல்லாவற்றுள்ளும், அரிது - அருமையுடையதாம், (எ - று).

உலகத்துள்ள அரிய பொருள்க ளெல்லாவற்றையும் பெறுதற்குரிய அரசர்க்கு(பெரியாரைப் பேணித்தமராகக் கொள்ளும்)இப்பேறு சிறந்ததென்று கூறினது, இதனுல் அவையெல்லாம் உண்டாதலைக் குறித்தென்க.

(க - து.) *அரசர் பெரியவர்களை அவர் மகிழுத்தக்கனவற்றைச் செய்து தமக்குச் சிறந்தவராகக்கொண்டொழுகுதல் அவர் பெறும் பேறுகளெல்லாவற்றுள்ளும் சிறந்ததாம் என்பது.*

3. To cherish great men and make them his own, is the most difficult of all difficult things.

ரு. தம்மிற் பெரியார் தமரா வோழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

பரி:—(இ - ள்.) அறிவு முதலியவற்றால் தம்மின்மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர்வழி நின்றொழுகுதல் அரசர்க்கு எல்லா வலியுடைமையினுந் தலை, (எ-று).

¶ *பொருள், படை, அரண்களானுய வலியினும் இத்திணைவலி*

† *இப்பேற-இதனைப் பெறுவது.*

‡ *இதனுல் அவையெல்லாம் - பெரியாரைப் பேணித்தமராகக்கொள்ளும் பேற்றினுல் உலகத்து அரியனவெல்லாம்.*

¶ *பெரியவர் பொருள் படை அரண்களால் நீக்கப்படாத தெய்வத்தின்ப முதலியவற்றையும் நீக்குதற்குரியவரா யிருத்தலால். அரசருக்குப் பொருள் படை முதலியவற்றுலுண்டாகும் வலியினும் பெரியவரைத் துணைக் கொள்ளுதலாகிய திணைவலி சிறந்ததென்பதாம்.*

சிறந்ததென்றது, இவர் அவற்றுவீக்கப்படாத † தெய்வத்தின்ப ‡ முதலியனவும் நீக்குதற்கு உரியராகலின்.

தெளி:—(இ - ன்.) தம்மிற்பெரியார் - (அறிவு முதலியவற்றால்) தம்மைப்பார்க்கிலும் மிகுந்திருப்பவரை, தமரா - தமக்குச் சிறந்தவராக, (கொண்டு), ஒழுகுதல்-(தாம் அவர் வழியில்நின்று) நடத்தல், (அரசர்க்கு), வன்மையுஞ்செல்லாம் - வலியுடைமை யெல்லாவற்றிலும், தலை - முதன்மையானதாம், (எ - று).

பொருள், படை, அரண்களாகிய வலியிலும் (பெரியாரைத்துணைக் கொள்ளுதலாகிய) இத்துணைவலி சிறந்ததென்றது, இப்பெரியார் பொருள் முதலியவற்றால் நீக்கப்படாத தெய்வத்தின்ப முதலியவற்றையும் நீக்குதற்கு உரியவராதலாலென்க.

(க - து.) அரசர் தம்மைப்பார்க்கிலும் அறிவுமுதலியவற்றால் மேம்பட்டுள்ள பெரியோரைத் தமக்குச் சிறந்தவராகக் கொண்டொழுகுதல் அவர்க்குச் சிறந்த துணையாம்என்பது.

4 So to act as to make those men, his own, who are greater than himself, is of all power the highest.

நி. சூழ்வார் கண்ணுக வோழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

பரி:—(இ - ள்.)¶ தன்பாரம் §அமைச்சரைக் கண்ணுகக்கொண்டு நடத்தலான், அரசனீ அந்நன்மையாய அமைச்சரை யாராய்ந்து தனக்குத் துணையாகக் கோள்க, (எ-று).

இரண்டாவது விகாரதாற்றொக்கது. தானே சூழ வல்லனாயினும், அளவிறந்த தொழில்களான் ஆதலமெய்தும் அரசன்பாரம், அதுவே தொழிலாய அமைச்சரான் அல்லது இனிது நடவாமை பற்றி, அவரைக் கண்

† தெய்வத்தின்பம் - தெய்வத்தால் வரும்தின்பம்.

‡ முதலியன என்றது - மக்களால்வரும் தின்பத்தை.

¶ தன்பாரம் - தனதரசுரிமைப் பொறுப்பு (தனது ராஜ்யபாரம்).

§ அமைச்சர் அரசனுக்குக் கண்போலிருந்து அவனைக்காத்தலால், அரசன், அவ்வமைச்சரைக் கண்ணுகக் கொள்ளவேண்டியதாயிற்று. கண்ணில்லாதவன் ஒன்றையும் பார்க்க முடியாமைபோல அமைச்சரைக் கண்ணுகக் கொள்ளாத அரசன் தனது இராஜ்ய விஷயங்களிலொன்றையும் செவ்வையாக அறியாதவனுவனென்க. ''ஒற்றர் தங்களே'' என்னுஞ் சீவக சிந்தாமணிச் செய்யுளிலுள்ள 'கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்'' என்னு மடிக்குக்கினார்க்கினியர் 'நீதிநூல்கற்ற அமைச்சரைக் கண்ணென்று கோடலும்'' என்று பொருளுரைத்திருப்பது மிங்கறியத்தக்கதாம்.

ணைக் கூறினர். ஆராய்தல் - † அமைச்சியலுட் சொல்லப்படும் இலக்கண த்தின ரென்பதனையாராய்தல். இவை மூன்று பாட்டானும் பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) சூழ்வார் - மந்திரிகளை, கண்ணுக - கண்ணுகக் (கொண்டு), ஒழுகலால் - (தன்பாரம்) நடத்தலால், மன்னவன் - அரசன், சூழ் வாரை - அத்தன்மையராய மந்திரிகளை, சூழ்ந்து - ஆராய்ந்து, கொளல்- (தனக்குத் துணையாகக்) கொள்ளக்கடவன், (எ - று).

சூழ்வாரை யென்னும் (ஐயெண்ணும்) இரண்டனுருபு செய்யுள் விகா ரத்தால் தொக்குநின்றது. தானே ஆராயவல்லவனுயிருந்தாலும், அளவில் லாத தொழில்களால் வருத்தமடையும் அரசனதுபாரம், அவ்வாராய்த லொ ன்றையே தொழிலாகவுடைய மந்திரிகளால் அல்லாமல் இனிது நடவா மைபற்றி, அம்மந்திரிகளைக் கண்ணுகச் சொல்லினர். ஆராய்தல்-அமைச் சியலில் சொல்லப்படுகிற இலக்கணமுடையவரென்பதனை ஆராய்தல். இவை மூன்று பாட்டாலும் பெரியாரைத் துணைக்கொள்ளுதலின் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) அரசன் மந்திரிகளைத் தனக்குக் கண்ணுகக்கொண்டு இராஜ்யபாரத்தையறிந்துநடத்தவேண்டியவனுயிருத்தலின், அவர் களையாராய்ந்து தனக்குத்துணையாகக் கொள்ளக்கடவன்என்பது.

5. As a king must use his ministers as eyes in managing his kingdom, let him well examine their character and qualifications before he engages them.

ச. தக்கா ரினத்தனய்த் தானெழுக வல்லானைச்
செற்றூர் செயக்கிடந்த தில்.

பரி:—(இ- ள்.) தகுகாராகிய வினத்தை யுடையனய்த் தானும் அறிந்தொழுகவல்ல அரசனைப் பகைவர் செய்யக் கிடந்ததொரு துன்ப மும் இல்லை, (எ - று).

தக்கார் - அறிவொழுக்கங்களால் தகுதியுடையார். ஒழுகுதல்-‡ அற நீதிகளின்றெறி வழுவாமல் நடத்தல். $ வஞ்சித்தல், கூடினரைப்பிரித்தல், வேறு பகைவிளைத்தலென் றிவற்றுனும், வலியானும், பகைவர் செய்யுந் தின்பங்கள் பலதிறத்தவாயினும், தானுமறிந்து அறிவார்சொல்லுங் கொ ண்டொழுகுவான்கண் அவற்றுள் ஒன்றும் வாராதென்பார் 'செற்றூர் செ யக்கிடந்த தில்' என்றார்.

† அமைச்சதிகார முதல் அவையஞ்சாமை யதிகார மீறுயுள்ள பத் ததிகாரங்களில் அமைச்சியல் சொல்லப்பட்டிருக்கின்றது.

‡ அறம் - தருமசாஸ்திரம்.

$ வஞ்சித்தல் - தனது பொருளை வஞ்சனையாகக் கவருதல்.

தெளி:—(இ - ள்.) தக்காரினத்தனுய் - யோக்கியராகிய இனத்தினே யுடையவனுய், தானுமுக - தானும் (அறிந்து) நடக்க, வல்லானே - வல்ல அரசனே, செற்றூர்-பகைவர், செயக்கிடந்தது-செய்யக்கிடந்த தொருதுன் பமும், இல் - இல்லே, (எ - று).

தக்கார்-அறிவொழுக்கங்களால் தகுதியுடையவர். ஒழுகுதல்-அறநூல் நீதிநூல்கள் கூறியவழியில் தவருது நடத்தல். வஞ்சித்தல், கூடினவரைப் பிரித்தல், வேறுபகையுண்டாக்குதல் என்ற இவற்றலும், வலிமையாலும், பகைவர் செய்யும் துன்பங்கள் பல கூறுபாடுடையனவானுலும், தானும் அறிந்து அறிந்தோரது சொல்லையும் உட்கொண்டு நடக்கு மரசனிடத்து அத்துன்பங்களுன் ஒன்றும் வாராதென்பார் 'செற்றூர் செயக்கிடந்த தில்' என்றூர்.

(க - து.) பெரியோரினத்தை யுடையவனுப், தானும் ஆராய்ந்தொழுகவல்ல அரசனிப் பகைவர்வெல்லுதல்கூடாது என்பது.

6. There will be nothing left for enemies to do against him who has the power of acting so as to secure the fellowship of worthy men.

எ. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

பரி:—(இ - ள்.) தீயன கண்டால் நேருங்கிச்சொல்லுந் துணையாநீ தன்மையை யுடையாரை இவர் நமக்குச் சிறந்தாரென்றலும் அரசைக் கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்தியாவர், (எ-று).

தீயன-† பாவங்களும் ‡ நீதி யல்லனவும். துணையாந் தன்மையாவது தமக்கு அவையின்மையும் அரசன்கண் அன்புடைமையுமாம். ¶ அத்தன்மையுடையார் தெறியினீங்க விடாமையின், அவரையாலும் அரசர் ஒருவரானுங் கெடுக்கப்படா ரென்பதாம். § தெருங்கிச் சொல்லும் அளவினேயை யென்றுரைப்பாரு முளர். இவை யிரண்டு பாட்டானும் () அதன் பயன் கூறப்பட்டது.

† பாவங்கள் - பாவத்தையுண்டு பண்ணுஞ் செயல்கள்; அவை மதபானஞ் செய்தல், சூதாடல், பொய்பேசுதல் முதலியனவாம்.

‡ நீதியல்லன - தருமசாஸ்திரங்கள் சொல்லியவற்றுன் இக்காலத்திற்குப் பொருந்தாதனவற்றை யொழித்துச் சொல்லாதனவற்றுள் பொருந்துவனவற்றை மேற்கொண்டு உலகத்தோடு பொருந்த ஒழுகாது தான் விரும்பியவாறு செய்யுங் காரியங்கள்.

¶ அத்தன்மை யுடையார் - தீயனவின்மையும் அரசனிடத்து அன்புடைமையுமுடையார்.

§ இடிக்குந் துணையாரை என்பதற்கு தெருங்கிச் சொல்லும் அளவினேரை யென்று பொருள் கூறுவாரு முண்டென்பது.

() அதன் பயன் - பெரியாரைத் துணைக்கொள்ளுதலின் பிரயே

தெளி:—(இ - ள்.) (தீயனவற்றைக் கண்டால்) இடிக்கும் - நெருங்கிச் சொல்லும் (மிட்டிக் கோபித்துப் புத்திசொல்லும்), துணையாரை - துணையாந் தன்மையை யுடையவரை, ஆள்வாரை - (இவர் நமக்குச் சிறந்தவரென்று கொண்டு) ஆளுகின்ற அரசரை, கெடுக்குந் தகைமையவர்-கெடுக்கும் பெருமையையுடைய பகைவர், யார் - (உலகத்தில்) யாவர், (ஒருவருமில்லை), (எ - று).

தீயன-பாவங்களும் நீதியல்லாதனவுமாம். துணையாந் தன்மையாவது தமக்கு அத்தீயன வில்லாமையும் அரசனிடத்து அன்புடைமையும் ஆம். அத்தன்மையுடையவர் (அரசனை) கல்வழியி னீங்கவிடாமையால், அவரை யாளுகின்ற அரசர் ஒருவராலும் கெடுக்கப்படா ரென்பதாம். இவை யிரண்டு பாட்டாலும் அதன் பயன் சொல்லப்பட்டது.

(க - து.) தீயனவற்றைக் கண்டால் அஞ்சாது நெருங்கிக் கண்டித்துப் புத்திசொல்லும் மந்திரிகளைத் துணையாகக்கொண்டு அரசாளும் அரசரைக் கெடுக்கும் பகைவரொருவருமில்லை என்பது.

7. Who are great enough to destroy him who has as his advisers those that have power to rebuke him?

அ. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

பரி:—(இ - ள்.) † கழறுதற்குரியாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையிற் காவலற்ற அரசன் பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும், (எ - று).

‡ இல்லாத வமரா என்பன பெயரெச்சவடக்கு. கெடுப்பார் உளராவ ரென்பது தோன்ற, 'இலானும்' என்றார். தானே கெடுதலாவது பாகனில்லாத யானைபோல நெறியல்லா நெறிச்சென்று கெடுதல்.

தெளி:—(இ - ள்.) இடிப்பாரை - கண்டித்துப் புத்தி சொல்லுதற்குரியவரை, இல்லாத--(தனக்குத் துணையாகக்) கொள்ளாமையால், எமரா-

† கழறுதல் - இடித்துக் கூறல்; அஃதாவது உறுதிச்சொல் லுரைத்தல்.

‡. இல்லாத என்னும் எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சமும் எமரா என்னும் எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சமும் "மூவா முதலாவுல கம்" "கற்ற கேட்ட பெரியோர்" என்றாற்போல அடுக்கி மன்னன் என்னும் கருத்தாப் பெயர்கொண்டு முடிந்தன. "கழாக்கால்" என்பதனுள் கழுவாத என்னும் பெயரெச்சம் கழா என்றும், தழாத்தொடர் என்பதனுள் தழுவாத என்னும் பெயரெச்சம் தழா என்றும் வந்தாற்போன்று எமம்மருவாத என்னும் பெயரெச்சம் எமரா என்று வந்ததென்க. [எமம்மருவாத என்பதற்குக் காவல் பொருந்தாத என்பது பொருள்.] இல்லாத எமரா என்னும் பெயரெச்ச மிரண்டனுள் இல்லாத என்பது கொள்ளாமையின் என லினையெச்சப் பொருளில் வந்தமை யிங்குணர்தற் பாலதாம்.

காவலற்ற, மன்னன் - அரசன், கெடுப்பாரிலானும் - (பகையாகக்) கெடுப் பவர் இல்லையானாலும், கெடும் (தானே) கெடுவான், (எ - று).

இல்லாத என்னும் எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சமும் வமரா என்னும் ஈறுகெட்ட எதிர்மறைத் தெரிநிலைப் பெயரெச்சமும் அடுக்கி நின்றன. கெடுப்பார் உண்டாயிருப்ப ரென்பது தோன்ற 'இலானும்' என்றார். (அரசன்) தானே கெடுதலாவது பாகனில்லாத யானைபோல வழியல்லாதவழியிற் சென்று கெடுதல்.

(க - து.) இடித்துரைக்கும் மந்திரிகளைத் தனக்குத் துணை யாகக் கொள்ளாத அரசன் கெடுக்கும் பகைவரில்லாமற் போனா லும் தானே கெடுவான் என்பது.

8. The king, who is without the guard of men who can rebuke him, will perish, even though there be no one to destroy him.

கூ. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

பரி:—(இ - ள்.) முதற்பொரு ளில்லாத வணிகர்க்கு † அதனால் வரும் ஊதியம் இல்லையாம், அதுபோலத் தம்மைத்தாங்குவதாந் துணை யில்லாத அரசர்க்கு ‡ அதனான் வரும் நிலையில்லை, (எ - று).

முதலைப் பெற்றே இலாபம்பெற வேண்டுமாறு போலத் தாங்குவா ரைப் பெற்றே நிலைபெற வேண்டுமென்பதாம். நிலை - அரசர் ¶ பாரத் தோடு சலியாது நிற்றல்.

தெளி:—(இ - ன்.) முதலிலார்க்கு - முதற்பொரு ளில்லாத வணிகர் களுக்கு, ஊதியம் (அதனால் வரும்) இலாபமானது, இல்லை - இல்லையாம், (அதுபோல), மதலையாம் - (தம்மைத்) தாங்குவதாகிய, சார்பிலார்க்கு - துணையில்லாத அரசர்க்கு, நிலை - (அதனால் வரும்) நிலையானது, இல்லை.

முதற்பொருளைப் பெற்றே வணிகர் இலாபம்பெற வேண்டும்விதம் போலத் தாங்குவாரைப் பெற்றே அரசர் நிலைபெற வேண்டுமென்பதாம். நிலை-அரசர் தமது அரசாட்சியின் பாரத்தோடு அசையாது நிற்றல்.

(க - து.) தம்மைப் பாதுகாக்கும் மந்திரிகளைத் துணையாகப் பெறாத அரசருக்கு நிலைபெறுதலுண்டாகாது என்பது.

9. There can be no gain to those who have no capital; and there can be no permanence to those who are without the support of adherents.

† *அதனால் - முதற்பொருளால்.* ‡ *அதனான் - துணையால்.* ¶ *பாரம் அரசுரிமைப் பொறுப்பு.*

கo. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

பரி:—(இ-ள்.) தான் தனியனாயிவைத்துப் பலரோடும் பகை கொள்ளுதலிற் பதிற்றுமடங்கு தீமையுடைத்து; அரசன் பெரியாரோடு நட்பினைக் கொள்ளா தொழிதல், (எ-று).

† பலர் பகையாயக்கால் ‡ "மோதி முள்ளொடு மூட்பகை கண்டிடல், பேதசெய்து பினர்திடல்" என்பவையல்லது ஒருங்கு வினையாக்குதல் தீது; செய்தாலும் ஒருவாற்று ஓய்தல் கூடும், நல்லார் தொடர் கைவிட்டால் ஒருவாற்றலும் உய்தல் கூடாமையின், இது செய்தல் அதனினும் தீதென்பதாம். இவை மூன்று பாட்டானும் ¶ அது செய்யாதவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது

தெளி:—(இ-ள்.) (அரசன்) நல்லார் - பெரியவரோடு, தொடர் - கட்பினை,கைவிடல்,கொள்ளா தொழிதல்,(தான் தனியனாயிருத்தல்கொண்டு), பல்லார் - பலரோடும், பகைகொளலின் - விரோதங் கொள்ளுதலிற்பார்க்கிலும், பத்தடுத்த - பத்துப்பங்கு அடுத்த, தீமைத்து - தீமையை யுடையதாம், (எ - று).

பலர் பகையாய் ஒரு முகமாயிருந்த காலத்தித் தனக்குப் பகைவராயுறவா யிருப்பாரிருவரைத் தம்முள் வேற்றுமை யுண்டாக்கி ஒருவரைக் கொண்டு மற்றவரை வெல்லுதல், தம்முள் வேறுபாடின்றிக் கூடிவந்து போர்புரிவாரைத் தம்முள்ளே பிரித்து, ஒருவரைத்தன்னோடு சேர்த்துக் கொள்ளுதலென்பவை யல்லாமல், ஒருமிக்கப்போர் புரிதல் நீயதாம்;

† அரசன் தனக்குப்பலர் பகைவரான காலத்தில் முன்னேக்கொண்டு முள்ளே யொழிப்பதுபோன்று தனக்குப்பகைவரா யுறவாயிருப்பாரிருவரைத் தம்முள்ளே வேற்றுமையுண்டாமாறு செய்து ஒருவரைக்கொண்டு மற்றவரை யழித்தல், தம்முள்வேற்றுமை யின்றிக் கூடிவந்து போர்புரிவாரைத் தம்முள்ளே பிரித்து ஒருவரைத்தன்னோடு சேர்த்துக் கொள்ளுதல் என்பவையல்லாமல் ஒருமிக்க எல்லாரோடும் போர்புரிதல் கொடியதாம்; போர்புரிந்தாலும் ஒருவிதத்திலுலல் தப்பிப்பிழைக்கவும் கூடும்; நல்லவர்களது ஏகேகத்தை விட்டுவிட்டால் ஒருவிதத்திலும் தப்பிப்பிழைத்தல் கூடாமையால், நல்லார் ஏகேகத்தை விட்டுவிடல் பலரோடும் பகைகொள்ளுதலினுங் கொடிய தென்பதாம்.


‡ சீவகசிந்தாமணி விமலையாரிலம்பகம் கூஉ. இதன்பொருள்:முன்னேக் கொண்டு முள்ளேக்களையுமாறு போலத் தமக்கு ஒன்னராய் (பகைவராய்) உறவாயிருப்பவரிருவரைத் தம்மிற் பேது (கலகம்) செய்து ஒருவரைக்கொண்டு ஒருவரை மோதியிடுதல், தம்மிற்கூடிவந்து வினைசெய்வாரை(போர் புரிவாரை)ப் பிரித்துத் தம்மோடே கூட்டிக் கோடல் (கொள்ளுதல்) என்பது. (இது நச்சினார்க்கினியருரை).

¶ அது - பெரியாரைத் துணைக்கொள்ளுதல்.

போர் புரிந்தாலும் ஒருவித தத்தால் பிழைத்தல் (கூடினும்) கூடும், நல்லார் தொடர் கைவிட்டால் ஒருவித தத்தாலும் பிழைத்தல் கூடாமையால், இது செய்தல் அதிசெய்தலிலும் தீயதென்பதாம். இவை மூன்று பாட்டாலும் அது செய்யாதவிடத்து உண்டாகுங் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து.) அரசன் பெரியாரது சிநேகத்தை விடுதல் பலரது பகையைக் கொள்ளுதலிலும் தீயதாம் என்பது.

10. It is ten-fold more injurious to abandon the friendship of the good, than to incur the hatred of the many.



எட்டாம் அதிகாரம்.

சிற்றினஞ் சேராமை—

Against associating with evil persons.

பரி:—(இ - ள்.) அஃதாவது சிறிய வினத்தைப் பொருந்தாமை, சிறிய வினமாவது † நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லேன் போரும் ‡ விடரும் $ தூர்த்தரும் ¶ நடரும் * உள்ளிட்ட குழு. அறிவைத் தீரித்து இருமையுங் கெடுக்கும் இயல்பிற்றாய () அதனைப் பொருந்தாது பெரியாரைத் துணைக்கோடல் பயனின்றென்ப துணர்த்தற்று [] இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது சிறியினத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது நல்வினையின் பயனுகச்சுகமும் தீவினையின் பயனுகத் துக்கமும் இல்லையென்றுகூறும் லோகாயதரும், விடரும், தூர்த்தரும், நடரும்உள்ளிட்டுள்ள கூட்டம், அறிவை வேறுபடுத்தி (இம்மை மறுமையென்னும்) இருமையுங்கெடுக்குமியல்பினதாகிய அதனைப்பொருந்தாதுநல்பெரியாரைத் துணைக்

† "நல்ல வினைக்கு நற்பயனுந் தீய வினைக்குத் தீப்பயனும், இல்லையெனும்வல் லிழுதையரு மெள்ளும் விடருந் தூர்த்தர்களும்,சொல்லு நடருமுதலாகத் தொக்க குழுவைச் சீர்த்தொழுகின், புல்லு மறிவைத் திரித்திருமைப் பொருளுங் கெடுக்கும் புகழோடே" என்பது விநாயக புராணம்.

‡ விடர்—காமுகர் [பெண்கள் பலரைப் புணரவிரும்பியலையுங் காமமோகிகள்.]

$ தூர்த்தர்—வஞ்சகர் [உள்ளேபகையும் உதட்டில் உறவுமாயிருப்பவர்.]

¶ நடர்—கூத்தாடிகள்.

* உள்ளிட்டகுழு—உட்கொண்டுள்ள கூட்டம்.

() அதனை—நல்லதன் நலனும் தீயதன் தீமையுமில்லென்போர் முதலியோர் சேர்ந்துள்ள கூட்டத்தை.

[] இஃது—சிற்றினஞ் சேராமை; அதன்பின்-பெரியாரைத் துணைக்கோடலின் பின்.

கொள்ளுதல் பயனில்லையென்பது அறிவித்தற்கு இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

க. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

பரி:—(இ - ள்.) பெரியோரியல்பு சிறிய இனத்தை அஞ்சாநிற்கும்; ஏனைச்சிறியோரியல்பு * அது சேர்ந்தபொழுதே † அதனைத் தனக்குச் சுற்றமாக எண்ணித் துணியும், (எ - று).

‡ *தத்தம் அறிவு திரியுமாறும் ¶ அதனால் தமக்குவருந் தின்பமும் நோக்கலின் § பெருமை அஞ்சும் என்றும், அறிவொற்றுமையாற் பிறிது நோக்காமையின் () 'சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்து விடும்' என்றுங்கூறினர்.* [] *பொருளின் தொழில்கள் பண்பின்மேனின்றன. இதனாற் சிறிய இனம் பெரியோர்க் காகாதென்பது கூறப்பட்டது.*

தேளி:—(இ - ள்.) பெருமை - பெரியோரியல்பு, சிற்றினம் - சிறிய இனத்தை, அஞ்சும் - அஞ்சாநிற்கும், சிறுமைதான் - மற்றைச் சிறியோரியல்பு, (அது சேர்ந்த பொழுதே அதனை), சுற்றமா - (தனக்கு) உறவாக, சூழ்ந்துவிடும் - எண்ணித் துணியும், (எ - று).

தம்தம் அறிவு வேறுபடும் விதமும் அதனால் தமக்குவரும் தின்பமும் நோக்குதலால் பெருமை அஞ்சும் என்றும், அறிவு ஒற்றுமைப்பட்டு பிற்கையால் வேறு நோக்காமையால் 'சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்து விடும்' என்றும் சொல்லினர். பெரியோரும் சிறியோரும் ஆகிய பொருள்களினது அஞ்சுதலும் சுற்றமாச் சூழ்ந்துவிடுதலுமாகிய தொழில்கள் பெருமையுஞ் சிறுமையும் ஆகிய குணங்களின்மேலேற்றிச் சொல்லப்பட்டன. இதனால் சிறியவினம் பெரியோர்க்கு ஆகாதென்பது சொல்லப்பட்டது.

(க - து.) சிற்றினத்திற் கஞ்சுதல் பெரியோரியல்பாம்; அதனைச் சுற்றமாகக் கொள்ளுதல் சிறியோரியல்பாம் என்பது.

1. True greatness fears the society of the basc; it is only the low-minded who will regard them as friends.

---

* *அது—சிற்றினம்.* † *அதனை—சிற்றினத்தை.* ‡ *தத்தம்—தமதி தமது.* ¶ *அதனால்—தம்மறிவு வேறுபடுதலால்.*

§ *அறிவுடையாரஞ்சுவர் என்றும் பாடமுண்டு.*

() *அறிவிலாதார் தமக்குச்சுற்றமாகத் துணிவர் என்றும்பாடமுண்டு.*

[] *பெரியோர் சிறியோரென்னும் பொருள்களது அஞ்சும் சுற்றமாச் சூழ்ந்துவிடும் என்னும் தொழில்கள் பெருமை சிறுமை யென்னும் குணங்களின் மேல் நின்றன என்பது. "சிற்றின மஞ்சும் பெருமை, இது குணவினை குணிவினையானது" என்பர் பிரயோக விவேக நூலார்.*

உ. * நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

பரி:—(இ - ள்.) தான் சேர்ந்த நிலத்தினது இயல்பானே நீர் தன் தன்மை திரிந்து அந்நிலத்தின் தன்மைத்தாம்; அதுபோல, மாந் தர்க்குத் தாம் சேர்ந்த இனத்தினது இயல்பானே அறிவுந் தன்தன்மை திரிந்து அவ்வினத்தின் தன்மைத்தாம், (எ - று).

† எடுத்துக் காட்டுவமை. விசும்பின்கண் ‡ தன்தன்மைத்தாய $ நீர் நிலத்தோடு சேர்ந்தவழி, நிறம் சுவை ¶ முதலிய பண்புகள் திரிந்தாற்போலத் () தனிநிலேக்கண் தன் தன்மைத்தாய அறிவு [] பிற வினத்தோடுசேர்ந்தவழிக் | காட்சி ‡‡ முதலிய தொழில்கள் திரியுமென ‖ இதனுல்அதனது காரணம் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) நீர் - நீரானது, நிலத்து - (தான் சேர்ந்த) நிலத்தினது, இயல்பான் - இயல்பினுலே, திரிந்து - (தனது தன்மை) வேறுபட்டு, அற்றாகும் - அந்நிலத்தினது தன்மையதாகும், (அதுபோல), மாந் தர்க்கு - மனிதர்க்கு, அறிவு - அறிவும், இனத்து - (தாம் சேர்ந்த) இனத்தினது, இயல்பு - இயல்பினுலே, [திரிந்து - (தனது தன்மை) வேறுபட்டு,] அதாகும் - அவ்வினத்தினது தன்மையதாகும், (எ - று).

* "நிலத்தின வண்மையே நீரெனு மியற்கையா னீசக், குலத்தின் வண்மையாற் கொலேத்தொழிற் காலேய மானேன்" என்று பாரதம் அரச நீதிச் சருக்கத்திற் கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

† நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகும் என்னும் வாக்கியத்திற்கும், மாந் தர்க் கினத்தியல்ப தாகு மறிவு என்னும் வாக்கியத்திற்கு மிடையே அது போல என்னும் சொல் தொக்கு நின்றமையின், இஃதெடுத்துக்காட் டுவமையாயிற்று.

‡ தன் தன்மைத்தாய—நிலத்தின் சம்பந்தமின்றி யிருந்த.

$ "அப்பென்றும் வெண்மைய தாயினு மாங்கக் நிலத்தியல்பாய்த், தப்பின்றி யேகுண வேற்றுமை தான்பல சார்தலினுல்" என்று பட்டினத் தடிகள் கூறியிருத்தலு மிங்கறியத் தக்கதாம.

¶ முதலிய என்றதனுல் கனம், பரிசம் முதலியவற்றையுங் கொள்க.

() தனிநிலேக்கண்—ஒருவரிடத்துஞ் சேராது தனித்திருக்குமிடத்தி.

[] பிறவினத்தோடுசேர்ந்த வழி—வேறு கூட்டத்தோடு சேர்ந்தவிட த்து.

| "ஒட்டிய, காட்சி திரியி னறந்திரியு மென்றுரைப்பர்" என்று அறநெறிச்சாரங் கூறுகின்றது. காட்சி - காணுதல்.

‡‡முதலிய என்றதனுல், கருதுதல் (எண்ணுதல்) ஒழுகுதல்முதலிய வற்றையுங் கொள்க.

‖ இதனுல் (இக்குறளால்) அதனது காரணம் (அறிவு மாறுபடுதலின் காரணம்) கூறப்பட்டது.

இஃது எடுத்துக்காட் டவமையணி. நீர்கோசத்தில் தனது தன்மைய தாயிருந்த நீர் பூமியோடு சேர்ந்தலிடத்து, நிறம சுவை முதலிய குணங் கள் வேறுபட்டாற் போலத், தனித்திருக்கையில் தனது தன்மையதா யிருந்த அறிவு பிறவினத்தோடு சோந்தலிடத்துக் காட்சி முதலிய தொ ழில்கள் வேறுபடு மென்று இதனால் அதனது காரணம் சொல்லப்பட்ட தி.

(க - து.) மக்கட்கறிவு அவர் சேர்ந்த இனத்திற் கேற்ற வாறுகத் திரியுமென்பது.

2. As water changes its nature from the nature of the soil in which it flows, so will the character of men resemble the character of their associates.

௬. மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு
மின்னு னெனப்படுஞ் சொல்.

பரி:—(இ - ள்.) மாந்தர்க்குப் † பொதுவுணர்வு தம்மனங் காரண மாக வுண்டாம்; இவன் இத்தன்மையனென்று உலகத்தாராற் சொல் லப்படுஞ் சொல் இனங் காரணமாக வுண்டாம், (எ - று).

இயற்கையாய ‡ புலனுணர்வு மாத்திரத்திற்கு இனம் வேண்டாமை யின், ¶ அதனை 'மனத்தானும்' என்றும், செயற்கையாய விசேட வுணர்வு பற்றி கல்லனென்றுகத் தீயனென்றுக நிகழுஞ்சொற்கு இனம் வேண்டு தலின், () அதனை 'இனத்தானும்' என்றுங் கூறினர். § உவமையாவைகொ

† பொதுவுணர்வு—இயற்கையறிவு.

‡ புலனுணர்வு—சப்த முதலிய விஷயங்களை யறியும் அறிவு.

¶ அதனை-புலனுணர்வை (பொதுவுணர்வை). () அதனை-அச்சொல்லை.

§ மாந்தர்க்கு அறிவு இனத்தியல்ப தாகுமென்பதை "நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகும்" என்று உவமான வாயிலாக விளக்கியதை யொப்புக் கொள்ளாது பொதுவுணர்வேயல்லாமல் அத்திரிபும் (அறிவு தன் தன்மை திரிதலும்) மனங்காரணமாகவே யுண்டாகும் என்று கூறும் வாதியை நோ க்கி இக்குறளால் அக்கொள்கை மறுத்துக் கூறப்பட்ட தென்பது. [அம்மறு ப்பு:—இன்ன னெனப்படுஞ் சொல் இனத்தானும் என்பது.]

இயற்கையறிவு மனங் காரணமாக வுண்டாகின்றது, அதற்கு இன மாகிய காரணம் வேண்டுவதில்லை; செயற்கையாகிய சிறப்பறிவுபற்றி ஒரு வனை கல்லவனென்றுவது தீயவ னென்றுவது சொல்லுஞ் சொல்லுக் குக் காரணம் முறையே கல்லவர்களின் சேர்க்கையும் தீயவர்களின் சேர்க்கையும் என்று கொள்ளவேண்டி யிருத்தலால், செயற்கையாகியசிறப் பறிவு இனத்தின் சம்பந்தமில்லாமலே மனங்காரணமாக வுண்டாகுமென் பது பொருந்தா தாயிற்று; பொருந்தாதாகவே, இனங்காரணமாகவுண்டா கும் செயற்கையாய சிறப்பறிவை விளக்குவதற்கு இன்றியமையாது 'நிலத்

ள்ளாது அத்திரிபும் மனத்தாலு மென்பாரை நோக்கி இதனுன்அது மறுத்
தக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) மாந்தர்க்கு - மனிதர்க்கு, உணர்ச்சி-பொது வறி
வானது, மனத்தான் - (தம்) மனங்காரணமாக, ஆம்-உண்டாகும், இன்னு
னெனப்படும் - (இவன்) இப்படிப்பட்டவனென்று (உலகத்தாரால்) சொ
ல்லப்படுகிற, சொல் - சொல்லானது, இனத்தான் - இனங்காரணமாக, ஆம்-
உண்டாகும், (எ - று).

இயற்கையாகிய ஐம்புலவறிவு மாத்திரத்திற்கு இனம் வேண்டாமை
யால் அதனை 'மனத்தானும்' என்றும், செயற்கையாகிய சிறப்பறிவுபற்றி
நல்லவனென்றுவது தீயவனென்றுவது உண்டாகுஞ் சொல்லுக்கு இனம்
வேண்டுதலால் அதனை 'இனத்தானும்' என்றுஞ் சொல்லினர். உபமானப்
பிரமாணத்தை அங்கீகரியாமல் அவ்வறிவு வேறுபடுதலும் மனத்தாலா
மென்பாரை நோக்கி இதனுல் அது மறுதலைக் கூறப்பட்டது.

(க - து.) உலகத்தாரால் ஒருவன் நல்லவனென்றுவது தீயவ
னென்றுவது சொல்லப்படுதல் அவன் சேர்ந்துள்ள இனத்தினு
லேயாம் என்பது.

3. The power of knowing is from the mind; but from a man's associates will be determined what sort of a man he is.

ச. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

பரி:—(இ - ள்.) அவ்விசேடவுணர்வு ஒருவற்கு மனத்தின் கண்
ணே உளதாவது போலத் தன்னைப் புலப்படுத்தி அவன் சேர்ந்த இனத்
தின் கண்ணே உளதாம், (எ - று).

† மெய்ம்மை நோக்காமுன் மனத்துளதுபோன்று காட்டியும் ‡ பின்
னுக்கியவழிப் பயின்ற இனத்துளதாயும் இருத்தலின், 'காட்டி' எனஇறந்த
காலத்தாற் கூறினர். ¶ விசேடவுணர்வுதானும் மனத்தின் கண்ணே அன்
றியல்பா னீர்நிரிங் தற்றுகும்' என்னும் உவமைப் பிரமாணம் வேண்டிய
தாயிற் றென்க.

† மெய்ம்மை நோக்காமுன் - உண்மையை விசாரித்துப்பார்ப்பதற்கு
முன்னே.

‡ பின்னுக்கியவழி - பின்பு விசாரித்துப்பார்த்த விடத்து.

¶ சிறப்பறிவுதானும் பொதுவறிவு உண்டாதற்குக் காரணமான மன
த்தினிடத்தல்லவா உண்டாகின்றதென்பாரை நோக்கி, ஆண்டுப்புலப்படு
தலையே யுள்ளது (அம்மனத்தில் சிறப்பறிவு வெளிப்படுமளவே இருக்கி
றது), அச்சிறப்பறிவிற்குக்காரணம் இனம்என்பது இக்குறளால் சொல்லப்
பட்ட தென்பது. இதனுல் சிறப்பறிவு உண்டாதற்குக் காரணம் இனமென்
றும் அச்சிறப்பறிவு வெளிப்படுதற் கிடம் மனம் என்றும் பெற்றுமென்க.

றே உளதாவ தென்பாரை நோக்கி, ஆண்டுப்புலப்படுங் தீணையேயுள்ளது, அதற்கு மூலம் இனமென்பது இதனுற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) அறிவு - அச்சிறப்பறிவு, ஒருவற்கு - ஒருவனுக்கு, மனத்தி - மனத்தினிடத்தே, உளதுபோல - உண்டாவதுபோல, காட்டி - (தன்னே) வெளிப்படுத்தி, இனத்தி - (அவன்சேர்ந்த) இனத்தினிடத்தே, உளதாகும் - உண்டாகும், (எ - று).

சிறப்பறிவு உண்மையை நோக்கி யறியாததற்கு மூன்பு மனத்தின் ளது போலக்காட்டியும் பின்பு நோக்கியவிடத்துப் பழகிய இனத்துள்ளதா கியும் இருத்தலால், '(அறிவுமனத்தினதுபோலக்) காட்டி' என இறந்த காலத்தினுற் சொல்லினுர். சிறப்பறிவும் மனத்தினிடத்தே அல்லவா உண் டாவதென்பாரை நோக்கி, அங்கு வெளிப்படுமனவேயுள்ளது, அவ்வறி விற்குக் காரணம் இனமென்பது இதனுல் சொல்லப்பட்டது.

(க - து.) ஒருவனுக்குச் சிறப்பறிவானது அவன் சேர்ந் துள்ள இனத்தினுண்டாகும் என்பது

4. The knowledge of a man, while it appears to be from his mind, is really from his associates.

நி. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்.

பரி:—(இ - ள்.) அவ்விசேடவுணர்வு புலப்படுதற்கிடனய மனத்தூயை தற் றன்மையும் செய்யும்வினை தூயனுதற் றன்மையுமாகிய இரண்டும் ஒருவற்கு இனத்தூயனுதற்றன்மை பற்றுக்கோடாக உளவாம், (எ - று).

மனத்தூயனுதலாவது விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையின் நீங்குதல். செய்வினை தூயனுதலாவது மொழிமெய்களாற் செய்யும் நல்வினை யுடையனுதல். தூவென்பது † அப்பொருட்டாதல் ‡ "தூவறத் துறந்தாரை" என்பதனுலு மறிக. ஒருவன் இனந்தூயனுகவே அதனேடுபயிற்சி வயத்தான் மனந்தூயனுய் அதன்கண் விசேட வுணர்வு புலப்பட்டு அதனுற் சொல்லுஞ் செயலுந் தூயனுமென, இதனுல் () இனத் துள்ளவாமாறு கூறப்பட்டது.

† அப்பொருட்டாதல் - பற்றுக்கோடென்னும் பொருளேயுடையதா தல்.

‡ கலித்தொகை—நெய்தற்கலி, க. இதன்பொருள். பற்றுக்கோடொ ழிய நீங்கினவரை என்பது.கச்சினுர்க்கினியார் 'தூவறத் துறந்தாரை'என்று பாடங்கொண்டு "வலியில்லையாம்படி நம்மைத்துறந்தவரை"என்று பொரு ளுரைத்திருக்கின்றனர்.

() இனத்துள்ளவாமாறு-நல்லினத்தினுல் மனம் வாக்குக் காய மென் பனவற்றிற்குப் பரிசுத்தத்தன்மை யுண்டாகும் வகை.

தெளி:—(இ - ள்.) மனம் - (அச்சிறப்பறிவு வெளிப்படுவதற்கு இடமாகிய) மனம், தூய்மை - பரிசுத்தஞ்செய்தன்மையும், செய்வினை-செய்யுந்தொழில், தூய்மை - பரிசுத்தஞ்செய்தன்மையும், (ஆகிய),இரண்டும்—, இனந் தூய்மை - (ஒருவனுக்கு) இனம் பரிசுத்தஞ்செய்தல் தன்மை, தூவா - பற்றுக்கோடாக, வரும் - உண்டாகும், (எ - று).

மனம்பரிசுத்தஞ்செய்தலாவது சிறப்பறிவு வெளிப்படும்படி இயற்கையாகியஅறியாமையினின்றும் நீங்குதல். செய்வினைபரிசுத்தஞ்செய்தலாவது சொல்லாலும் உடம்பாலும் செய்யும் நல்லதொழிலேபுடையவனுதல். தூ என்பது பற்றுக்கோடென்னும் பொருளில் வந்தது. ஒருவன் இனத்தாற் பரிசுத்தஞ்செய்தவனே அவ்வினத்தோடு பழக்க வசத்தால் மனம் பரிசுத்தஞ்செய்து அம்மனத்தினிடத்துச் சிறப்பறிவு வெளிப்பட்டு அவ்வறிவால் சொல்லும் செயலும் பரிசுத்தமுடையவனுவனென்று, இதனால் இனத்தால் உண்டாகும் விதம்சொல்லப்பட்டது.

(க - து.) மனச்சுத்தமும் செய்தொழிற் சுத்தமும் ஒருவனுக்கு அவன் சேர்ந்துள்ள இனச்சுத்தத்தினு லுண்டாகும்.

5. Chaste company is the staff on which come, these two things, purity of mind and purity of conduct.

கூ. மனந்தூயார்க் கேச்சநன் ருகு மினந்தூயார்க்
கில்லாநன் ருகா வினை.

பரி:—(இ - ள்.) மனந்தூயராயினோர்க்கு ¶ மக்கட்பேறு நன்றாகும்; இனந்தூய ராயினோர்க்கு நன்றாகாத வினை யாதும் இல்லை, (எ - று).

‡ காரியங் காரணத்தின் வேறுபடாமையின் 'எச்சநன் ருகும்' என்றும், கல்வினத்தோடெண்ணிச் செய்யப்படுதலின் † நன்ருகா வினையில்லை என்றுங் கூறினர்.

¶ மக்கட்பேறு - மக்களைப் பெறுதல்.

‡ நிமித்தகாரணம் என்றுங் காரியத்திற்கு வேறுபட்டதாக விருத்தலால் இங்குக்காரண மென்றது முதற்காரணத்தை. காரியத்தோடு ஒற்றுமைச் சம்பந்தமுடையது முதற்காரணமாம். மனந்தூயராயினுரைக் காரணமாகவும் மக்கட்பேற்றைக் காரியமாகவும் கொண்டு 'மனந்தூயார்க் கேச்சநன் ருகும்' என்ற கூறியது மனுதரும சாஸ்திரம் ஒன்பதாவது அத்தியாயம் புத்திர விஷயத்தில் 'ஒரு தானியத்தை விதைத்தால் மற்றொரு தானியமாக வினைன்ற தென்பதில்லை; எந்தவித்தை விதைக்கிறேமோ அந்தப் பயிர்தான் முளையும்" என்றும், எதிகூற கூறுமிடத்தில் "தன்னுத்மாவிற்கும் பின்னேர்க்கும் வேற்றுமையில்லை" என்றும் கூறுவதாலும் நன்குவினங்கும். இங்குத்"தக்கார்தகவிலர்"என்னுங் குறளின் வீசேட வுரையும் அதன் குறிப்புரையும் கவனிக்கத்தக்கனவா மென்க. முதற்காரணத்தின் பொதுக்குணம் அதன் காரியத்திலு மிருக்குமென்பது இங்குணர்த்தப் பாற்றும்.

† எல்லாவினையு நல்லவாம் என்றும் பாடமுண்டு.

தேவி:—(இ - ள்.) மனந்தூயார்க்கு - மனம் பரிசுத்தமானவர்க்கு, எச்சம் - மக்கட்பேறு, நன்றாகும் - நல்லதாகும், இனந்தூயார்க்கு - இனம் பரிசுத்தமானவர்க்கு, நன்றாகாவினை - நல்லதாகாத செயல், இல்லை - (யாதும்) இல்லை, (எ - று).

காரியம் காரணத்திலும் வேறுபடாமையின் (மைந்தன் தந்தையினும் வேறுபடா னென்பதனால்) 'எச்ச நன்றாகும்' என்றும், (இனந்தூயரால் வினை) நல்லினத்தோடு எண்ணிச் செய்யப்படுதலால் (அவர்க்கு) நன்றாகா வினையில்லை என்றும் சொல்லினார்.

(க - து.) இனச்சுத்த முள்ளார்க்கு எல்லா நன்மையு முண்டாம் என்பது.

6. To the pure-minded there will be a good posterity; by those whose associates are pure, no deeds will be done that are not good.

எ. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்.

பரி:—(இ - ள்.) நிலைபேற்று உயிர்கட்டு மனத்தது நன்மை சேல்வத்தைக் கொடுக்கும்; இனத்தது நன்மை அதனோடு எல்லாப்புகழையுங் கொடுக்கும், (எ - று).

† மன்னுயிரென்றது ஈண்டு உயர்திணைமேனின்றது. ‡ தருமென்னும் இடவழுவமைதிச்சொல் முன்னும் கூட்டப்பட்டது. ¶ உம்மை-இறந்தது தழீஇய எச்சவும்மை. $ மனநன்றுதல்தானே அறமாகலின், அதனை

† மனத்தினது நன்மையையும் இனத்தினது நன்மையையும் உடைத்தாயிருத்தல் அஃறிணையுயிர்க் கில்லாமையினால் 'மன்னுயிரென்றது ஈண்டு உயர்திணைமேனின்றது' என்று கூறப்பட்டது.

‡ தனக்குரிய தன்மை முன்னிலையிடத்தைச்சொற்களைவிட்டு இனநலம் என்னும் படர்க்கையிடத்துச் சொல்லோடுகூடி வழுவமைதியாய்வந்ததரும் என்னும் வினைச்சொல் மனநலம் என்பதனோடும் கூட்டப்பட்டது. "அவற்றுள்—தருசொல் வருசொல் லாயிரு கிளவியும், தன்மை முன்னிலை யாயிரிடத்த" என்னுந் தொல்காப்பியச் சூத்திரம் இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

¶ புகழும் என்னும் உம்மை இனநலம் செல்வத்தைத் தருவதல்லாமல் என்னும் பொருளை யுணர்த்துதலால் இறந்தது தழுவிய எச்ச வும்மையாயிற்று.

$ "மனத்துக்கண் மாசில னுதல் லனைத்தறன்" என்று அறன் வலியுறுத்த லதிகாரத்திலிருப்பதும் இங்குக் கவனிக்கத் தக்கதாம்.

ஆக்கந்தரும் என்றும், ‡ புகழ் கொடுத்தற்குரிய நல்லோர்தாமே இனமாகலின் 'இனநல மெல்லாப் புகழுந் தரும்' என்றுங் கூறினர். † மேல் * மனநன்மை இனநன்மை பற்றிவரு மென்பதனே உட்கொண்டு அஃதியல்பாகவே உடையார்க்கு அவ்வினநன்மை வேண்டா வென்பாரை நோக்கி $ அதுவேயன்றி அத்தன்மைய பலவற்றையுந்தருமென அவர்க்கும் அது வேண்டுமென்பது இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி: —(இ - ள்.) மன்னுயிர்க்கு - நிலைபெற்றவுயிர்களுக்கு, மனநலம் - மனத்தினது நன்மையானது, ஆக்கம் - செல்வத்தை, தரும்—கொடுக்கும், இனநலம் - இனத்தினது நன்மையானது, எல்லாப்புகழும், (அச்செல்வத்தோடு) எல்லாப் புகழையும், தரும் - கொடுக்கும்,(எ - று).

மன்னுயிரென்னும் அஃறிணைப்பெயர் இங்கு (மக்களென்னும்) உயர்திணைப் பொருள்மேல் நின்றது. தரும் என்னும் இடவழுவமைதிச் சொல் மனநலம் என்பதனோடுங் கூட்டப்பட்டது. புகழும் என்ற உம்மை - இறந்ததழுவிய எச்சவும்மை. மனம் நன்றுதலதானே அறமாகலால் அமமனநலத்தை ஆக்கந்தரும் என்றும், புகழ்கொடுத்தற்குரிய நல்லோர்தாமே இனமாகலால் 'இனநல மெல்லாப் புகழுந் தரும்' என்றும் சொல்லினர். முன்னே மனந்தூய்மை இனந்தூய்மை தூவாவரு மென்பதனை யுட்கோரித்து அம்மன நன்மையை இயல்பாகவே யுடையவர்களுக்கு அவ்வின நன்மைவேண்டாமென்பாரை நோக்கி, அச்செல்வத்தையே யல்லாமல் அப்படிப்பட்ட பலவற்றையும்தருமென்று அவர்க்கும் அவ்வினநன்மை வேண்டுமென்பது இவ்விரண்டு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து.) இனநலமானது மனநலத்தால்வருஞ்செல்வத்தோடு எல்லாப் புகழையுந் தருமென்பது.

7. Goodness of mind will give wealth, and good society will bring all praise, to men.

‡ அறநெறிச்சாரம் "இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி, யும்மை யுயர்கதிக் குய்த்தலால் - மெய்ம்மையே, பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே, நட்டா ரெனப்படு வார்" என்று கூறியிருத்தலு மிங்கறியத்தக்கதாம்.

† மேல் - இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறளில்.

* மனந்தூய்மை யினந்தூய்மை தூவாவரும் என்றும் பாடமுண்டு.

$ அதுவேயன்றி அத்தன்மைய பலவற்றையும் தருமென அவர்க்கும் அது வேண்டுமென்பது - மனநன்மை தருஞ் செல்வத்தையே யல்லாமல் அச்செல்வம் போன்றனவாய பலபுகழையும் தருமென்று மனநன்மையை யியல்பாகவே யுடையார்க்கும் இனநன்மை வேண்டுமென்பது.

அ. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

பரி:—(இ - ள்.) மனநன்மையை முன்னைநல்வினையால் தாமே உடையராயினும் அமைந்தார்க்கு இனநன்மை அதற்கு வலியாதலை யுடைத்து, (எ - று).

† நன்காலென்னும் மூன்றனுருபு விகாரத்தாற்றொக்கது. அந்நல்வினை உள்வழியும் மனநலத்தை வளர்த்துவருதலின், அதற்கேமாப் புடைத்தாயிற்று.

தெளி:—(இ - ள்.) மனநலம் - மனநன்மையை, நன்கு - (முன்னை) நல்வினையினால், உடையராயினும் - (தாமே) உடையவராயிருந்தாலும், சான்றோர்க்கு -(குணங்கள் பலவற்றாலும்) நிறைந்தோர்க்கு, இனநலம்-இன நன்மையானது, ஏமாப்பு-(அம்மனநன்மைக்கு) வலியாதலே, உடைத்து - உடையதாம், (எ - று).

நன்கால் என்னும் மூன்றனுருபு செய்யுள் விகாரத்தினால் தொக்கு (நன்கு என) நின்றது. அந்நல்வினையுள்ளிடத்தும் மனநலத்தை வளர்த்து வருதலால், அம்மனநலத்திற்கு இனநலம் வலியாத லுடையதாயிற்று.

(க - து.) மனநன்மையை யுறுதிசெய்வது இனநன்மையாம்

8. Although they may have great natural goodness of mind, yet good society is an advantage to the wise.

கூ. மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

பரி:—(இ - ள்.) ஒருவந்த மனநன்மையானே மறுமையின்பம் உண்டாம்; ‡ அதற்கு அச்சிறப்புத்தானும் இனநன்மையான் வலிபெறுத லே யுடைத்து, (எ - று).

¶ 'மனநலத்தி னாகு மறுமை' என்றது மறுமை பயப்பது மனநன்மை தானே, பிறிதொன்றன்றென்னும் மதத்தை $ உடம்பட்டுக் கூரியவாறு

† நன்கால் எனக்கருவிப்பொருளில் வந்த மூன்றனுருபு செய்யுள் விகாரத்தால்தொக்கு நின்றது. நன்கு என்பது நல்வினையை (நன்மைக் கேதுவாய வினையை) யுணர்த்துதலின், காரியவாகு பெயராம்.

‡ அதற்கு அச்சிறப்புத்தானும் - மனநன்மைக்கு மறுமை யின்பத் தைத்தரு மச்சிறப்பும்.

¶ "கெடுக்க வல்லதுங் கெட்டவர் தங்களை, யெடுக்க வல்லது மிம் மன மென்றதை, யடக்க வல்லவ னேய பவக்கடல், கடக்க வல்லவ னுவன் கடிதரோ" என்பது பிரபுலிங்கலீலை. $ உடம்பட்டு - ஏற்றுக்கொண்டு.

† மற்ற - வினைமாற்ற.‡ உம்மை - இறந்ததுதழீஇய எச்சவும்மை. ஒரோ வழித் தாமதகுணத்தான் மனநலம் திரியினும் நல்லினம் ¶ ஒப்ப நிறுத்தி மறுமையப்பிக்குமென நிலைபெறச்செய்யுமாறு கூறப்பட்டது. இவை யைந்து பாட்டானும் §சிற்றினஞ் சேராமையது சிறப்பு நல்லினஞ்சேர்தலாகிய எதிர்மறை முகத்தாற் கூறியவாறறிக.

தேளி:—(இ - ன்.) (ஒருவனுக்கு) மனநலத்தின் - மனநன்மையா லே, மறுமை - மறுமையின்பம், ஆகும்-உண்டாம், மற்றஃதும் - (அம்மன நன்மைக்கு) அச்சிறப்புத்தானும், இனநலத்தின் - இனநன்மையால், எமாப்பு - வலி பெறுதலே, உடைத்து - உடையதாம், (எ - று).

'மனநலத்தினுகு மறுமை' என்றது மறுமையின்பத்தைத்தருவதுமன நன்மையே,மற்றொன்று அன்று என்கிற மதத்தை உடன்பட்டுச் சொல்லிய படியாம். மற்ற - வினைமாற்றுப் பொருளில் வந்தது. அஃதும் என்ற உம் மை - இறந்தது தழுவிய எச்சவும்மை. ஒரோவிடத்துத் தாமதகுணத்தி னால் மனநலம் வேறுபட்டாலும் அதனை நல்லினம் சிற்பெறத் திருத்தி மறு மையின்பத்தையடைவிக்குமென்ற இனநலம் மனநலத்தை நிலைபெறச் செய்யும் வகை சொல்லப்பட்டது. இவை ஐந்துபாட்டாலும் சிற்றினஞ் சேராமையினது சிறப்பு நல்லினம் சேர்தலாகிய எதிர்மறைமுகத்தாற்சொ ல்லியவாறறிக.

(கு - து.) இனநன்மை மனநன்மையால் வரும் மறுமை யின்பத்தை நிலைபெறச் செய்யும் என்பது.

9. Future bliss is the result of goodness of mind; and even this acquires strength from the society of the good.

† மனநலம் இனநலத்தினுல் வமாப்புடைய தாதலின்றுயின், அம்மன நலத்தினுல் மறுமையின்பமுண்டாகாது என்று ஆரும் என்னும் வினையை ஆகாதென்னும்வினையாக மாற்றியதினுல்,மற்ற வினைமாற்றுப்பொருளதா யிற்று.

‡ அஃதும் என்னும் உம்மை இனநலம் மனநலமாயிலாக மறுமை யின்பத்தைத் தருதலேயல்லாமல் என்னும் பொருளேயுணர்த்துதலின், இற ந்தது தழுவிய எச்சவும்மையாயிற்று.

¶ ஒப்பநிறுத்தி மறுமையப்பிக்கும் - பொருந்துமாறு (சரியான நிலை யில்) நிற்கச்செய்து (மனநன்மை வாயிலாக) மறுமையின்ப முண்டாகச் செய்யும்.

§ நல்லினஞ் சேர்தல் சிற்றினஞ் சேர்தலுக்கு எதிர்மறையாகவிருத்த லால் 'சிற்றினஞ்சேராமையது சிறப்பு நல்லினஞ் சேர்தலாகிய எதிர்மறை முகத்தாற் (வாயிலாகக்) கூறியவாறறிக' என்று கூறப்பட்டது.எதிர்மறை-விரோதம்.

கo. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

பரி:—(இ - ள்.) ஒருவற்கு நல்லினத்தின் மிக்க துணையும் இல்லை; தீயவினத்தின் மிக்க பகையும் இல்லை, (எ - று).

† ஐந்தனுருபுகள் ‡ உறழ்பொருளின்கண் வந்தன. ஊங்கென்பது பின்னுங்கூட்டி உம்மை மாற்றியுரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமையின் நீக்கித் தியருறுமற் காத்தலின் அதனைத் 'துணை' என்றும், தீயினம் அறிவின் நீக்கித் தியருறுவித்தலின் அதனை ¶ 'அல்லற்படுப்பதூஉம்' என்றுங் கூறினர். $ அல்லற்படுப்ப தென்பது எதுப்பெயர். இதனுல் * விதியெதிர்மறைகள் உடன் கூறப்பட்டன.

தேளி:—(இ - ள்.) (ஒருவனுக்கு) நல்லினத்தினூங்கு - நல்ல இனத்தின் மிக்க, துணை(யும்) இல்லை-துணையும் இல்லை, தீயினத்தின் (ஊங்கு)-தீய இனத்தின் மிக்க, அல்லற்படுப்பதூஉம்-பகையும், இல் - இல்லை,(எ-று)

நல்லினத்தினை, தீயினத்தின் என்னும் ஐந்தாம் வேற்றுமை யுருபுகள் உறழ்பொருளில வந்தன. ஊங்கு என்பது தீயினத்தின் என்பதனேடும் கூட்டி ஊங்கும் என்னும் உம்மையைப் பிரித்துத் துணையென்பதனேடு சேர்த்துச் சொல்லப்பட்டது. (ஒருவனை) நல்லினம்அறியாமையினின்றும் நீக்கித் தன்பமடையாவாறு காத்தலால் அதனைத் 'துணை' என்றும் தீயினம் அறிவினின்றும் நீக்கித் தன்பமடையச் செய்தலால் அதனை 'அல்லற்படுப்பதூஉம்' என்றும் சொல்லினர். அல்லற்படுப்பது என்பது காரணப்பெயர். இதனுல் விதியும் எதிர்மறையும சேர்த்துச்சொல்லப்பட்டன.

(க - து.) ஒருவனுக்கு நல்லினத்திற் சிறந்த துணையும் தீயினத்தின் மிகுந்த பகையுமில்லை என்பது.

† நல்லினத்தின் தீயினத்தின் என்பவற்றிலுள்ள இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை யுருபுகள்.


‡ ஒன்றினொன்று மிக்கு (சமானமாகாது) மாறுபடுவது உறழ் எனப்படும். நச்சினர்க் கினியார் "உறழ்தல் ஒன்றனுன் ஒன்றை மிகுத்தல்" என்பர்.

¶ பகை என்றும் பாடமுண்டு.

$ அல்லற்படுப்பது (தன்பத்தை யுண்டாக்குவது) ஒருவனுக்குப் பகையா யிருத்தலால், பகையை அல்லற்படுப்பது என்று கூறியது எது, (காரண)ப் பெயராயினமையால். எதுப்பெயர் - ஒரு நிமித்தம்பற்றி வரும்பெயர்.

* 'நல்லினத்தினூங்குந் துணையில்லை' என்று விதியும் (உடம்பாடும்) 'தீயினத்தி னல்லற் படுப்பதூஉ மில்'என்று எதிர்மறையும்உடன்சொல்லப்பட்டன. நல்லினத்திற்குத் தீயினம் எதிர்மறையா யிருத்தலால், நல்லினம் உடம்பாடும் தீயினம் எதிர்மறையு மாயின.

10. There is no greater help than the company of the good; there is no greater source of sorrow than the company of the wicked.



ஒன்பதாம் அதிகாரம்.

தெரிந்து செயல்வகை—

On Acting with Fore-thought.

பரி:—அஃதாவது அரசன் தான்செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத் துணைக்கோடல் பயனுடைத் தாயவழி அவரோடுஞ் செய்யப்படுவதாகலின், இது சிற்றினஞ்சேராமை யின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது அரசன் தான்செய்யுந் தொழில்களை ஆராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத் துணைக்கொளலுதல் பயனுடைய தாயவிடத்து அவரோடுஞ் செய்யப்படுவதாகலால், இது (தெரிந்து செயல் வகை) சிற்றினஞ் சேராமையின்பின் வைக்கப்பட்டது.

க. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

பரி:—(இ - ள்.) வினை * செய்யுங்கால் அப்பொழுது அதனுல் அழிவதனையும் அழிந்தாற்பின் ஆவதனையும் ஆய்நின்று பிற்பொழுது தரும் ஊதியத்தையுஞ் சீர்தூக்கி உறுவதாயிற் செய்க. (எ - று).

உறுவதாவது † நிகழ்வின்கண் அழிவதனில் ஆவது மிக்கு எதிர்வினும் அது வளர்ந்துவருதல். ‡ அழிவதின்மையின் எதிர்வின்கண்வரு மாக்கத்தை 'ஊதியம்' என்றார். எனவே, ¶ அல்ஊதியம் பெறின் நிகழ்வின்கண் அழி

* "செய்யும் பொழுதே யழிபொருளிற் சிறப்ப தொப்ப திரண்டிலு ளொன், றுய்ய வுதவி வழிபயக்கு மொண்மை வினையைத் தேர்ந்துளத் தில், ஐய மகன்ற வினத்தோடு மாய்ந்தக் தனித்தும் புரிந்திகை, வெய்ய வாக்கங் கருதிமுதல் விளிக்கும் வினையைப் புரியற்க" என்பது விநாயக புராணம்.

† நிகழ்காலத்தில் அழியும் பொருளிலும் ஆகும் பொருள் அதிகமாகி எதிர்காலத்திலும் அப்பொருள் விருத்தியடைந்து வருதல்.

‡ (காரியமுற்றுப் பெற்றபின் வரும்பொருளுக்கு) அழிவில்லாமை யினுல், எதிர்காலத்தில்வரும் பொருளை 'ஊதியம்' என்று கூறினர். (தொழில் செய்யும்போது வரும்பொருளை ஆவது என்றும், தொழில் முடிந்த பின்வரும் பொருளை ஊதியம் என்றும் கூறினர்.)

¶ எதிர்காலத்தில் பொருளைப் பெறுவதா யிருந்தால், நிகழ்காலத்தில் அழியும் பொருளும் ஆகும்பொருளும் தம்முள் ஒத்திருந்தாலும்

வதும் ஆவதுந் தம்மோடொத்தாலும் ஒழிதற்பாற்றன்றென்பது பெற்றும். † இரண்டு காலத்தும் பயனுடைமை தெரிந்து செய்கவென்பதாம்.

தெளி:—(இ - ன்.) (தொழில் செய்யுமிடத்து) அழிவதூஉம் - (அப்போது அத்தொழிலால்) அழிவதையும், ஆவதூஉம் (அழிந்தால் பின்னே) ஆவதையும், ஆயிஆய், (கின்று), வழிபயக்கும்-பிற்காலத்துத் தரும், ஊதியமும் - இலாபத்தையும், சூழ்ந்து - சீர்தூக்கி, (உறுவதாயின்), செயல் - செய்யக்கடவன், (எ - று).

உறுவதாவது நிகழ்காலத்தில் (செய்கிறபோது) அழிவதில் ஆவது மிகுந்து பிற்காலத்தும் அவ்வாவது வளர்ந்துவருதல். அழிவதில்லாமையால் பின்வரும் ஆக்கத்தை 'ஊதியம்' என்றார். எனவே அவ்வூதியத்தைப் பெற்றால் நிகழ்காலத்தில் (செய்கிறபோது) அழிவதும் ஆவதும் தம்முள் ஒத்திருந்தாலும் ஒழியும் பான்மையதன் றென்பது பெறப்பட்டது. இரண்டு காலத்திலும் பயனுடைமையை யறிந்து செய்யவேண்டு மென்பதாம். சீர்தூக்கல் - ஆராய்தல். ஒழியும்பான்மையதன்று - விடலாகாது.

(க - து.) அழிவதையும் ஆவதையும் இலாபத்தையும் ஆராய்ந்து தொழில் செய்யவேண்டும் என்பது.

1. Let a man reflect on what will be lost, what will be acquired, and from these what will be his ultimate gain, and then, let him act.

உ. தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

பரி:—(இ - ள்.) தாம்தெரிந்துகொண்ட ‡ இனத்துடனே செய்யத்தகும் வினையை ஆராய்ந்து பின்தாமேயும்எண்ணிச்செய்து முடிக்க வல்லஅரசர்க்கு எய்துதற்கரியபொருள் யாதொன்றும்இல்லை.(எ-று).

(தொடங்கிய காரியத்தை) விடுதல் கூடாதென்பது பெறப்பட்டது; படவே, நிகழ்காலத்தில் அழியும்பொருள் அதிகமாயும் ஆகும்பொருள் குறைவாயுமிருந்தால் அத்தகைய காரியத்தை விட்டுவிடவேண்டுமென்பதாயிற்றென்க. இதனால் ஒரு தொழிலைச் செய்யுமிடத்து அது காரணமாக அழியும் பொருள் குறைவாகவும் அப்போதாகும் பொருள் அதிகமாகவும், பின்வரும் பொருள்விருத்தியடைவதாகவும் இருக்கவேண்டுமென்றும், அவ்வாறன்றிப் பின்வரும் பொருளோடு அழியும்பொருளும் அப்போது ஆகும் பொருளும் சமமாகவாவது இருக்கவேண்டுமென்றும் பெற்றாமென்க.

† இரண்டுகாலத்தும் - நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும்.

‡ இனம் - புரோகிதரும் அமைச்சரும். பெரியாரைத் துணைக்கோடலதிகாரம் இரண்டாங் குறளின் விசேடவுரையில் "புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறுபிற்று" என்று கூறியிருத்தலு மிங்கறியத்தக்கதாம்.

ஆராயப் படுவனவெல்லாம் ஆராய்ந்து போந்த இனமென்றுமாம். 'செய்வார்க்கு' என்றதனால், வினையென்னுஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. வினையாவது † மேற்சேறன முதல் வேறல் ஈறுமயதொழில். பொருள்கட் கேதுவாய ‡ அதனிற் றவருமையின், அரியபொருள்களெல்லாம் எளிதினெய்துவ ரென்பதாம். இவை யிரண்டுபாட்டானுஞ் செய்யத் தகும் வினையும் அது செய்யுமாறும் கூறப்பட்டன.

தெளி:—(இ-ள்.) தெரிந்த - (தாம்)தெரிந்துகொண்ட, இனத்தொடு-இனத்துடனே, தேர்ந்து - (செய்யத்தகுந்தொழிலை) ஆராய்ந்து, எண்ணி-(பின்னேதாமேயும்) எண்ணி, செய்வார்க்கு - செய்துமுடிக்கவல்ல அரசருக்கு, அரும்பொருள் - பெறுதற்கரியபொருள், யாதொன்றும்—, இல்-இல்லை, (எ - று).

'தெரிந்த இனம்' என்பதற்கு ஆராயப்படுவனவெல்லாம் ஆராய்ந்து வந்த இனம் என்பு பொருளுரைப்பினும் பொருந்தும். 'செய்வார்க்கு' என்பு கூறியதினுல் செய்யத்தகுந்தொழில் என்னும் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. தொழிலாவது போர்க்குச் செல்லுதல், தம் மதிலைக் காத்தல், பகைவருடைய மதிலை வளைத்துக்கொள்ளுதல், பகைவரோடு போர் செய்தல், பகைவரை வெல்லுதல் என்னுந் தொழிலாம். பொருள்களுக்கேதுவாகிய அத்தொழிலில் தவருமையால், அரியபொருள்க ளெல்லாம் (தெரிந்த வினத்தொடு தேர்ந் தெண்ணிச் செய்வார்) எளிதிற் பெறுவாரென்பதாம். இவை யிரண்டுபாட்டாலும் செய்யத்தகுந தொழிலும் அத்தொழில் செய்யும் விதமும் சொல்லப்பட்டன.

† மேற்சேறன முதல் வேறல் ஈறுமயதொழில் என்றதனினமையின், இடைநின்றன தம்மதிலைக்காத்தல், பகைவருடைய மதிலை வளைத்துக் கொள்ளுதல், பகைவரோடு போர்செய்த லென்பனவாம்

மேற்சேறல் வஞ்சித்தினையாம்; தம்மதிலைக் காத்தல் நொச்சித் தினையாம்; பகைவருடையமதிலை வளைத்துக்கொள்ளுதல் உழிஞைத்தினையாம்; பகைவரோடு போர்செய்தல் தும்பைத்தினையாம்; பகைவரை வெல்லுதல் வாகைத்தினையாம்.

" மழிஞிசேரைகொள் வதுவெட்சி காஞ்சை மீட்டல் மாற்றார்பாற் செலல்வஞ்சி யூன்றல் காஞ்சி, பகர்மதிலைக் காக்குமது நொச்சி சுற்றிப் படைவளைத்த லுழிஞைபோல் தும்பை வென்று, புகழ்படைத்தல் வாகை" என்று சிதம்பரப்பாட்டியல் கூறுவதும், "மாற்றார் மேற்செலல் வஞ்சி யாகுமே", "காமரு தன்னாண் காப்பது நொச்சி", "பகைஞ ராணைப் பற்றுத லுழிஞை","அதிரப் பொருவது தும்பை யாகும்","மாற்று ரோட வருத்தி வெல்வது, வாகை யெனப்பெயர் வைக்கப் படுமே" என்று முத்தி வீரியங் கூறுவதும் இங்குணர்த்தற் பாலனவாம்.

‡ அதனிற்றவருமையின் - பகைவருடைய காட்டைக்கொள்ள வினத்திப் போர்செய்தற்கு அப்பகைவர்மேல் செல்லுதல் முதலிய தொழில்களில் சிறிதும் தவறிப்போத லில்லாமையால்.

(க - து.) நல்லினத்தோடாராய்ந்து பின்னர்த்தாமு மாலோசித்துத் தொழில் செய்வார்க்குப் பெறுதற்கரிதான பொருள் ஒன்றுமில்லை என்பது.

2. There is nothing too difficult to be attained by those who, before they act, reflect well themselves,and thoroughly consider the matter with chosen friends.

கூ. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

பரி:—(இ - ள்.) மேல் எய்தக்கிடவ ஊதியத்தினை நோக்கி முன் னெய்தி நின்ற முதல் தன்னையும் இழத்தற்கேதுவாய செய்வினையை அறிவுடையார் மேற்கொள்ளார், (எ - று).

கருதியென்னும் வினையெச்சம் இழக்குமென்னும் பெயரெச்சவினை கொண்டது. * எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. ஆக்கமே அன்றி முதலையும் இழக்கும் வினைகளாவன: வலியுங் காலமும் இடனும் அறியாது பிறர்மண் கொள்வான் சென்று தம்மண்ணும் இழத்தல் போல்வன. முன் செய்து போந்த வினையாயினுமென்பார் 'செய்வினை' என்றார்

தெளி:—(இ - ள்.) ஆக்கங்கருதி (பின்பெறக் கடவதாகிய) இலாபத்தை நோக்கி, முதல் - (முன்பெற்றுள்ள) முதலையும், இழக்கும் - இழத்தற்கு ஏதுவாகிய, செய்வினை - செய்தொழிலை, அறிவுடையார் - அறிவுடையவர், ஊக்கார் - மேற்கொள்ளார், (எ - று).

கருதியென்னும் வினையெச்சம் இழக்குமென்னும் பெயரெச்ச வினை கொண்டு (கருதி யிழக்கும் என) முடிந்தது. முதலும் என்னும் எதிரது தழுவிய எச்சவும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. ஆக்கத்தையே யன்றி முதலையும் இழக்குந் தொழில்களாவன: வலியும் காலமும் இடமும் அறியாமல் பிறர் தேசத்தைப் பிடிக்கப்போய்த் தன்தேசத்தையும் இழத்தல் போல்வன. முன் செய்துவந்த வினையாயினு மென்பார் 'செய்வினை' என்றார்.

(க - து.) அறிவுடையார் இலாபத்தை நினைத்து முதலையு மிழத்தற்கேதுவாய தொழிலைச் செய்யார் என்பது.

3. Wise men will not, for the sake of profit, undertake works that will consume their principal.



கூ. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

* ஆக்கமேயன்றி முதலும் என்னும் எதிரதுதழீய வெச்சவும்மை.

பரி:—(இ - ள்.) இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து துணிதலில் லாத வினையைத் தொடங்கார், தமக்கு இளிவாவென்னும் குற்றமுண் டாதலை அஞ்சுவார், (எ - று).

தொடங்கின் இடையின் மடங்கலாகாமையின் † 'தொடங்கார்' என் றார். இளிவரவு - அவ்வினையாற் பின்னழி வெய்தியவழி ‡ அதன்மேலும் அறிவும் மானமும் இலரென்று உலகத்தார் இகழும் இகழ்ச்சி. அஃதண் டாதல் ஒருதலை யாகலின், ¶ தெளிவுள்வழித் தொடங்குக வென்பதாம்.

தேளி:—(இ - ள்.) இளிவென்னும் - (தமக்கு) இளிவரவென்னும், எதப்பாடு - குற்றமுண்டாதலை, அஞ்சுபவர் - அஞ்சுவோர், தெளிவிலதனை - (இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து) நிச்சயித்தலில்லாத தொழிலை, தொடங்கார் - ஆரம்பித்துச் செய்யார், (எ - று).

(ஒரு தொழிலைச் செய்யத்) தொடங்கினுல் (அதனை) மேலிலே மடங் குதல் (விடுதல்) கூடாமையால் 'தொடங்கார்' என்றார். இளிவரவு - அத் தொழிலால் பின்னே அழிவை அடைந்த விடத்து அதன்மேலும் அறி வும் மானமும் இலரென்று உலகத்தார் இகழும் இகழ்ச்சியாம். அவ்விகழ்ச் சியுண்டாதல் நிச்சயமாதலால், தெளிவுள்ள விடத்தத் (தொழிற்செய்யத்) தொடங்குக என்பதாம். இளிவரவு - அவமானம்.

(க - து.) குற்றத்திற் கஞ்சும் அரசர் ஆராய்ந்து துணித லில்லாத தொழிலைத் தொடங்கிச் செய்யார் எனபது.

4. Those who fear reproach will not commence any thing which has not been thoroughly considered and made clear to them.



நி. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

பரி:—(இ-ள்.) சென்றுல் நிகழும் திறங்களையெல்லாம் முற்ற வேண் ணுது சில எண்ணிய துணையானே அரசன் பகைவர்மேற் § செல்லு தல் அவரை வளருநிலத்திலே நிலைபெறச் செய்வ தொரு நெறியாம்.

† ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தால் மேலே அக்காரியத்தை விட்டு நீங்குதல தகாதாகலின் 'தொடங்கார்' என்றார் என்பது.

‡ அதன்மேலும் - அவ்வழிவின்மேலும்.

¶ செய்யலாமென்னும் நிச்சயமுண்டாய விடத்து.

§ செல்லுதல் பயனில்லாத காரியமாய் முடிதலினுல், பகைவர் விழிப் புடையராய், வளரு நிலத்திலே பயிர் விருத்தியடைவது போன்று கால் வகைச் சேனையாலும் விருத்தி யடைந்து, தம்மை யெதிர்க்கு மரசனை யெ திர்க்கும் மனவெழுச்சியோடே இருப்பாரென்பதாம். அப்பகைவர் ஊக்க முடையவராய் விருத்தி யடைந்து எதிர்ப்பதற்குக் காரணம் வகையறச் சூழாதெழுதலா மென்க.

அத்திறங்களாவன: † வலி காலம் இடனென்றிவற்றுல் தனக்கும் பகைவர்க்கு மூளவரும் நிலைமைகளும், வினைதொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும், அதனாற் பெறும்பயனும் முதலாயின. அவற்றுள், ஏல எஞ்ஞான்றும் பகைவர்க்கு இடனும் ஆலான், முற்றப்பெற எண்ணவேண்டு மென்பதாம். இவைமூன்று பாட்டானும் ஒழியத்தகும் வினையும் ஒழியாவழிப்படும் இழுக்குங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) வகை - (சென்றுல் கடக்கும்) வகைகளே (எல்லாம்), அறச்சூழாதி - முற்றவெண்ணுமல், [சில வெண்ணிய வளவாலே], எழுதல் - (அரசன் பகைவர்மீது போர்க்குச்) செல்லுதல், பகைவரை - அப்பகைவரை, பாத்தி - வளருநிலத்திலே, பயிப்பது - நிலைபெறச் செய்வதாகிய, ஓராறு - ஒருவழியாம, (எ - று).

அவ்வகைகளாவன: வலி காலம் இடம் என்னும் இவற்றுல் தனக்கும் பகைவர்க்கும் உண்டாகும் நிலைமைகளும், தொழில்தொடங்கும் விதமும், அத்தொழிற்கு வரும் தடைகளும், அத்தடைகளை யொழிக்கும் வகையும், பகைவரை வெல்லும் விதமும், அவ்வெல்லுதலினு லடையும் பயனும் முதலானவை. அவ்வகைகளுன், சில குறைந்தாலும் பகைவர்க்கு இடமாம் ஆகலால் முற்றப்பெற எண்ணவேண்டு மென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் விடத்தகுந் தொழிலும் அதனை விடாத விடத்தண்டாகும் குற்றமும் சொல்லப்பட்டன.

(க - து) அரசன் நன்கு ஆராயாது பகைவர்மேற் போர்க்குச் செல்லுதல் அப்பகைவரை அவர் உள்ளவிடத்திலேயே யுறுதிப்படுத்துந் தன்மையினதாம் என்பது.

5. One way to promote the prosperity of an enemy, is for a king to set out to war without having thoroughly weighed his ability to cope with its chances.

கூ. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

பரி:—(இ - ள்.) அரசன் தன்வினைகளுள் செய்யத்தக்கன அல்லவற்றைச் செய்தலாற்கெடும்; இனி அதனையே அன்றிச் செய்யத்தக்கன வற்றைச் செய்யாமை தன்னையுங் கெடும், (எ - று).

† "வலியே காலம் வினையிவற்றுள மாற்றுன் றனக்கு மூனக்குமுள, பலவா நிலையும் வினைதொடங்கும் பண்பு மதற்கா மிடையூறும், விலகா தனவே விலக்குவதும் வெல்லு மாறும் வென்றதனுல், உலவாப் பயனு முதலனைத்து மோர்த்து தெளிந்தே வினைசெய்க" என்பது விராயக புராணம்.

செய்யத்தக்கனவல்லவாவன: பெரிய முயற்சியினவும், செய்தாற் பயனில்லனவும், அது சிறிதாயினவும், † ஐயமாயினவும், பின் தீயர்விளைப் பனவுமென இவை. செய்யத்தக்கனவாவன: ‡ அவற்றின் மறுதலையாயின. இச்செய்தல் செய்யாமைகளான் அறிவு ஆண்மை பெருமை யென்னும் மூவகை யாற்றலுள் பொருள் படையென இருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனும் ஆகலான் ¶ இரண்டுங் கேட்டிற் கேதுவா யின. இதனுள் செய்வன செய்து ஒழிவனவொழிகவென இருவகையன வும் உடனகூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) (அரசன் தனது தொழில்களுள்)செய்தக்கவல்ல-செய்யத்தகாத காரியங்களே, செய - செய்தலால், கெடும் - கெடுவான், (இனி அதனுலேயல்லாமல்), செய்தக்க - செய்யத்தக்க காரியங்களே, செய் யாமையானும் - செய்யாமையினுலும், கெடும் - கெடுவான், (எ - று).

செய்யத்தகாத காரியங்களாவன: - பெரிய முயற்சியை யுடையனவும், செய்தாற் பயனில்லாதனவும், அப்பயன் சிறிதாயினவும், ஐயமாயினவும், பின்னே தீயரம் விளைப்பனவுமென்னும் இவையாம். செய்யத்தக்க காரி யங்களாவன: அவற்றிற்கு மாறுபிருப்பன. இச்செய்தல் செய்யாமைகளால் அறிவு ஆண்மை பெருமை என்னும் மூன்றுவகை ஆற்றல்களுள் பொரு ளும் படையும் என விருவகையினதாய பெருமையானது சுருங்கிப் பகை வர்க்கு எளியனுவான் ஆதலால் இரண்டும் கேட்டிற்குக் காரணமாயின. இதனுல் செய்யத் தக்கவற்றைச் செய்து விடத்தக்கவற்றை விடுகவென்று இருவகைச்செயல்களும் உடன் சொல்லப்பட்டன. ஆற்றல் - வல்லமை.

(க - து.) அரசன் செய்யத்தகாதவற்றைச் செய்வதாலும், செய்பத்தகுகவற்றைச் செய்பாமையாலும் கெடுவான் என்பது.

6. He will perish who does what it is not fit to do; and he also will perish who does not do what it is fit to do.

எ. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

பரி:—(இ - ள்) செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தை யெ ண்ணித்தொடங்குக; § தொடங்கிவைத்துப் பின்னெண்ணிக் கடவோம் என்றெழிதல் குற்றமாதலான், (எ - று).

† முடிவனவோ முடியாதனவோ வென்று சந்தேகத்திற்கிடமா யிரு ப்பனவும்.

‡ அவற்றின் மறுதலையாயின - சிறிய முயற்சியினவும், செய்தாற்பய னுள்ளனவும், பயன் பெரிதாயினவும், ஐய (சந்தேக) மில்லாதனவும், பின்பு இன்பம் விளைப்பனவுமா மென்னுமிவை.

¶ இரண்டும் - செய்தக்கவல்ல செயலும், செய்தகை செய்யாமையும்.

§ தொடங்கிவைத்துப் பின்னெண்ணக் கடவோம் என்றெழிதல்—. ஆரம்பித்த பிறகு ஆலோசிப்போமென்று ஆலோசியாமல் விடுதல்.

† *துணிவுபற்றி நிகழ்தலின்*, துணிவெனப்பட்டது. நிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. உபாயமென்பது ‡ அவாய் நிலையான் வந்தது. அது கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தலென நால் வகைப்படும். இவற்றை வடநூலார் ¶ தான சாம பேத தண்ட மென்ப. அவற்றுள், § மூன்னைய இரண்டும் ஐவகைய; [] ஏனைய மூவகைய; அவ் வகைகளெல்லாம் ஈண்டைப்பிற் பெருகு ம். இவ்வுபாயமெல்லாம் எண் ணுது தொடங்கின், அவ்வினை மாற்முனும் விலக்கப்பட்டு முடியாமை யானும், இடையின் ஒழிதலாகாமையானும் அரசன் துயருறுதலின், அவ்வெண்ணுமையை 'இழுக்கு' என்றார். செய்வனவற்றையும் உபாயமறி ந்தே தொடங்குக வென்பதாம்.

தெளி:—(இ - ள்.) கருமம் - (செய்யத்தக்க) தொழிலும், எண்ணி - (முடிக்கும் உபாயத்தை) எண்ணி, துணிக - தொடங்கக்கடவன், துணிந்த பின் - தொடங்கிவைத்துப் பிறகு, எண்ணுவம் என்பது - எண்ணக்கட வோ மென்றொழிதல், இழுக்கு - குற்றம், (ஆதலால்), (எ - று).

† தொடங்குங் கருமம் துணிவினாலாதலால் 'துணிவுபற்றி நிகழ்த லின் (நடைபெறுதலின்) துணிவெனப்பட்டது' என்று கூறப்பட்டது. துணிவு காரணமாகத் தொடங்குங் கருமத்தைத் துணிவு என்று கூறின மையின், இது கருவியாகு பெயராம். இங்குத் துணிவு என்றது துணிந்த என்றதனை.

‡ எண்ணி யென்னும்வினை உபாயத்தை யென்னும் செயப்படுபொ ருளை அவாவி (விரும்பி) நின்றது.

¶ சாமம்—இனிதாகக்கூறல்; பேதம் — மென்மையாலும் வன்மை யாலும் மனத்தினைப் பேதித்தல்; தானம்—பகைவர் மனமகிழ (அவர்க்கு வேண்டிய வற்றைக்) கொடுத்தல்; தண்டம்—பின்பு அவர் ஆகாமலழித்தே விடுதல். இவ்வாறு நச்சினார்க் கினியர் "பண்ணியல் யாழை மேலான்" என் னுஞ் சீவகசிந்தாமணிச் செய்யுளி னுரையில் வரைந்திருக்கின்றனர்.

§ மூன்னைய இரண்டும் ஐவகைய—முனனுள்ள தானம் சாமமென்னு மிரண்டனுள் ஒவ்வொன்றும் ஐந்தைந்து வகைப்படும். அவை வருமாறு:— 1 கிடைத்தற் கரிய பொருளைக் கொடுத்தல், 2 தனக்குத் தரும்பொருளை வாங்காது விடுதல், 3 கொடுக்க வேண்டிய பொருளைக் கொடுத்தல், 4 பிறன்பொருள் கொடுத்தல், 5 சுபம் வாங்கா தொழிதலெனத் தானம் ஐவகையாம். 1 வணங்கல், 2 புகழ்தல், 3 எதிர்கொள்ளல், 4 உட்புக் கூறல், 5 உறவுகூறல் எனச்சாமம் ஐவகையாம்.

[] ஏனைய மூவகைய—மற்றைய பேதம் தண்டமென்னு மிரண்டனுள் ஒவ்வொன்றும் மும்மூன்று வகைப்படும். அவை வருமாறு:—1 உட்பொழி தல், 2 கூடினவரைப் பிரித்தல், 3 வேறுபகை விளைத்தல் எனப் பேதம் மூன்றுவகையாம். 1 தண்பஞ் செய்தல், 2 பொருளைக்கொள்ளுதல், 3 கொ ல்லுதல் எனத்தண்டம் மூன்றுவகையாம்.

தணிவு காரணமாக நிகழுதலால் கருமம் தணிவு என்று கூறப்பட்டது. கருமஞ்ம் என்னும் உயர்வு சிறப்புமை செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது. உபாயமென்பது அவாய்நிலையால் வந்தது. அவ்வுபாயம் கொடித்தல், இன்சொற் சொல்லல், வேறுபடித்தல், ஒறுத்தல் என நால் வகைப்படும். இவற்றை வடநூலார் தானம் சாமம் பேதம் தண்டம் என்பர். அர்களுள்,முன்னுள்ள இரண்டனுள் ஒவ்வொன்றும் ஐந்தைந்து வகையதாம்; பின்னுள்ள இரண்டனுள் ஒவ்வொன்றும் மும்மூன்று வகையதாம். அத்தவகைகளேயெல்லாம் இங்குச்சொன்னால் விரிந்துபோம். இவ்வுபாயங்களெல்லாவற்றையும் எண்ணுது தொடங்கினால், அத்தொழில் பலகையனால் விலக்கப்பட்டு முடியாமையாலும், நடுவேவிடுதல் கூடாமையாலும் அரசன் தியரத்தை யடைவானுதலால், அவ்வெண்ணுமையை 'இழுக்கு' என்றார். செய்யத்தக்கன வற்றையும் உபாயம் அறிந்தே தொடங்கவேண்டுமென்பதாம்.

(க - து.) *அரசன்செய்யுமாறு தான்மேற்கொண்ட தொழிலை நன்றாக ஆலோசித்துத் தொடங்கக்கடவன் என்பது.*

7. Think first, and then begin a work; after you have begun it, to say, "we will consider," is a reproach.

அ ஆற்றின் † வருந்தா வருத்தம் பலர்நின்று
சீறிற்றினும் பொத்துப் படும்

பரி:—(இ - ள்) முடியும் உபாயத்தாற் கருமத்தை முயலாதமுயற்சி, துணைவர்பலர் நின்று புரைபடாமற் காப்பினும் புரைபடும், (எ - று).

முடியும் உபாயத்தான் முயறலாவது கொடித்தலேப் பொருணசையாளன் கண்ணும்; இன்சொல்லேச் செப்பமுடையான், மடியாளன், முன்னே பிறரோடு பொருது கொந்தவனென இவர் கண்ணும்; வேறுபடித்தலேத் தகுணேப்படையாளன், ‡ தன் பகுதியோடு பொருந்தாதானென இவர் கண்ணும்; ஒறுத்தலே ¶ இவற்றின் வாராதவழி இவர்கண்ணுக் தேறப்படாத கீழ்மக்கள் கண்ணுஞ் செய்து, வெல்லுமாற்றுன் முயறல். புரைபடுதல் - கருதிய நன்மையன்றிக் கருதாத நீமை பயத்தல். உபாயத்தது சிறப்புக் கூறியவாறு.

தெளி:—(இ - ள்.) *ஆற்றின் - முடியும் உபாயத்தால், வருந்தா வருத்தம் - (மேற்கொண்ட கருமத்தை முடிக்க) முயற்சிசெய்யாத முயற்சியா*

† *வருந்தா வருத்தம் என்பது பிரயாசமின்மையை யுணர்த்துவதாம்.*

‡ *தன் பகுதியோடு - தன தபிப்பிராயத்துடன்.*

¶ *இவற்றின் வாராதவழி—கொடித்தல், இன்சொற் சொல்லுதல், வேறுபடித்தலென்னும் இவற்றின் வழி வாராதவிடத்து.*

னது, பலர் நின்று - (துணைவர்) பலர்நின்று, போற்றினும் (புரைபடாமல்) காப்பினும், பொத்தப்படும் - புரைபடும், (எ - று).

முடியும்உபாயத்தால்முயலுதலாவதுகொடுத்தலேப்பொருளாசையுடையானிடத்தும்; இன்சொற்சொல்லுதலே நடுவுநிலையானன்,சோம்பலானன், முன்னே பிறரோடுபோர் செய்து தொந்தவன் என்னும் இவர்களிடத்தும்; வேறுபடித்தலேத் துணைப்படையானன், தன்பகுதியோடு பொருந்தாதவன் என்னும் இவர்களிடத்தும்; ஒறுத்தலே இவற்றின் வழிவராதவிடத்து இவர்களிடத்தும் நம்பப்படாத கீழ்மக்களிடத்தும் செய்து, (பகைவரை)வெல்லும் வழியால் முயற்சி செய்தலாம். புரைபடுதல் - தானெண்ணிய நன்மையைத் தாராது எண்ணுத நீமையைத் தருதல். நால்வகை †யுபாயத்தின் நிறப்புக்கூறியவாறும். புரைபடுதல்-மேற்கொண்ட கருமம் முடியாதொழிதல்.

(க - து) மேற்கொண்ட கருமம் முடியுமுபாயத்தை யெண்ணுத முயற்சியானது துணைவர் பலர் நின்றுகாத்தாலும் குற்ற முடையதாம் என்பது.

8. The work, which is not done by suitable methods, will fail, although many stand up to protect it.

கூ. நன்றுற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

பரி:—(இ - ள்.) வேற்று வேந்தர்மாட்டு,நன்றலவுபாயஞ்செய்தற் கண்ணுங் குற்றமுண்டாம்; † அவரவர்தமக்களே ஆராய்ந்தறிந்து அவற்றிற் கியையச் செய்யாவிடின், (எ - று).

நன்றல வுபாயமாவது கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலுமாம் அவை யாவர்கண்ணும் இனியவாதற் சிறப்புடைமையின், உம்மை சிறப்புமை. ‡ அவற்றை அவரவர் பண்பறிந் தாற்றுமையாவது ¶ அவற்றிற்குரியரல்லாதார்கண்ணே செய்தல். தவறு - அவ்வினை முடியாமை.

தெளி:—(இ - ள்). (வேற்றரசரிடத்து) நன்று - நல்ல வுபாயத்தை ஆற்றலுள்ளும் - செய்தலுள்ளும், தவறு - குற்றம், உண்டு - உண்டாம்,

† அவரவர்—அந்தந்த வேற்று வேந்தர்களுடைய.

‡ அவற்றை—கொடுத்தலென்னுந் தானத்தையும் இன்சொற்சொல்லுதலென்னுஞ் சாமத்தையும்.

¶ பேதத்திற்கும் தண்டத்திற்கும் உரியவரிடத்தே தானமும் சாமமும் செய்தலாகாதென்பது. எனவே, எவரெவர்க்கு எது எது செய்யவேண்டுமோ அவரவர்க்கு அது அதுவே செய்யவேண்டும்; மாறிச்செய்தால் கெடுதியுண்டாமென்பது பெறப்பட்டது.

அவரவர்-அவரவருடையர், பண்பு-குணங்களை, அறிந்து - (ஆராய்ந்து) அறிந்து, ஆற்றுக்கடை - (அக்குணங்களுக்குப் பொருந்த) செய்யாவிடத்து.()

நல்லவுபாயமாவது கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலுமாம். கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலும் யாவரிடத்திலும் இனியனவாகும் சிறப்புடைமையினால், ஆற்றலுள்ளும் என்றவும்மை உயர்வு சிறப்பும்மை. அவற்றை அவரவர்குணங்களை யறிந்து செய்யாமையாவது அவற்றிற்கு உரியரல்லாதவரிடத்தே செய்தல். தவறு - அத்தொழில் முடியாமை.

(க - து.) செய்யவேண்டியவற்றை வேற்று வேந்தரது குணங்களை யறிந்து அவரவரது தகுதிக்கேற்பச் செய்யவேண்டும்.

9. There are failures even in acting well, when it is done without knowing the various dispositions of men.

கo. எள்ளாத வேண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

பரி:—(இ - ள்.) அரசர் வினைமுடித்தற் பொருட்டுத் தந் நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வாராயின் $ உலகந் † தம்மை இகழா நிற்கும்; ஆகலான், அஃது இகழா வுபாயங்களை நாடிச் செய்க, (எ - று).

தம்மென்பது ஆகுபெயர். தந்நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியராய்வைத்து மெலியார்க்குரிய கொடுத்தன் முதலிய மூன்றினைச்செய்தலும், மெலியராய்வைத்து வலியார்க்குரிய ஒறுத்தலைச் செய்தலுமாம். ‡ இவையிரண்டும் அறிவிலார் செய்வன வாகலின் உலகு கொள்ளாது என்றார். அஃது எள்ளாதன செய்தலாவது அவற்றைத் தத்தம் வண்மை மென்மைகட்கேற்பச் செய்தல். ¶ மேல் இடவகையான் உரிமைகூறிய உபாயங்கட்கு வினைமுதல் வகையான் உரிமைகூறிய

$ உலகம்-மேன்மக்கள். † தம்மை—அரசராகிய தம்மை.

‡ இவையிரண்டும்—வலியரானதாம் மெலியார்க்குரிய கொடுத்தல் முதலிய மூன்றினைச் செய்தலும், மெலியரானதாம் வலியார்க்குரிய தண்டத்தைச் செய்தலும்.

¶ மேல் (இவ்வதிகாரத்தின் எட்டாவதுகுறளில்)(இன்னின்ன உபாயங்களைச் செலுத்துவதற்கு இன்னின்னார் தக்கவரென்று) இடவகையால் உரிமைகூறிய உபாயங்களுக்கு (இன்னின்னார் இன்னின்ன உபாயங்களைச் செய்வதற்கு உரியவரென்று) வினைமுதல் வகையால் உரிமை சொல்லிய படியா மென்க. வினையைச் செய்வதற்கு முதலாயுள்ளது வினைமுதலெனப்படும். வினைமுதலெனினும், செய்பவனெனினும், கருத்தா எனினும் ஒக்கும்.


வாறு. இவை நான்கு பாட்டானுஞ் செய்வனவற்றிற்கு உபாயமும் அதனது உரிமையுங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) தம்மொடு - (அரசர் தொழில் முடித்தற்பொருட்டு) தமது நிலைமையோடு, கொள்ளாத - பொருந்தாத உபாயங்களே, (செய்வாராயின்), உலகு-உலகமானது, கொள்ளாது - அங்கீகரியாது, (தம்மை இகழும்), (ஆதலால்), எள்ளாத (அவ்வுலகம்) இகழாத உபாயங்களே, எண்ணி-ஆராய்ந்து, செயல்வேண்டும் - செய்யக்கடவர், (எ - று).

தம் என்பது தமது நிலைமையையுணர்த்துதலால்பொருளாகுபெயராம். தமது நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியவராயிருந்தும் மெலியார் செய்தற்குரியதான சாமபேதங்களென்னும் மூன்றினைச் செய்தலும்,மெலியவரா யிருந்தும் வலியார் செய்தற்குரிய தண்டத்தைச் செய்தலுமாம். இவை யிரண்டும் அறிவில்லாதவர் செய்வன ஆதலால் உலகுகொள்ளாது என்றார். அவ்வுலகம் இகழாத வுபாயங்களைச் செய்தலாவது அவ்வுபாயங்களைத் தமது தமது வன்மைக்கும் மென்மைக்கும்ஏற்பச் செய்தல். முன்னர் இடவகையால் உரிமைகூறிய வுபாயங்களுக்குச் செய்பவன் வகையால் உரிமை சொல்லியபடியாம். இவை நான்குபாட்டாலும் செய்யும் தொழில்களுக்கு உபாயமும் அவ்வுபாயத்தினது உரிமையும் சொல்லப்பட்டன. வன்மை - வல்லமையுடைமை; மென்மை-அஃதில்லாமை.

(கு - து.) அரசர் தங்காரியம் முடிதற் பொருட்டுத் தமது நிலைமையோடு பொருந்தாதவற்றைச் செய்வாராஞல், அவற்றை யுலகம் ஏற்றுக்கொள்ளாது என்பது.

10. Let a man reflect, and do things which bring no reproach; the world will not approve, with him, of things, which should not be approved of.



பத்தாம் அதிகாரம்

வலியறிதல்—*On the Knowledge of Resources.*

பரி:—அஃதாவது அவ் ¶ வுபாயங்களுள் ஒறுத்தல் குறித்த அரசன் ‡ நால்வகை வலியையும் $ அளந்தறிதல். † அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

¶ உபாயங்களுள் - தானமுதலிய நால்வகையுபாயங்களில் [உபாயம் - சூழ்ச்சி].

‡ நால்வகைவலி - வினைவலி, தன்வலி, மாற்றான்வலி, தினைவலி.

$ அளந்தறிதல் - வரையறுத்தறிதல்.

† தெரிந்து செயல்வகை என்னும் அதிகாரத்தின் பின் வலியறிதல் என்னும் அதிகாரம் வைத்த முறைமையும்.

தெளி:—அஃதாவது அவ்வுபாயங்களுள் தண்டஞ்செய்யக் கருதிய அரசன் நால்வகை வலியையும் அளந்து அறிதலாம். அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

க. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

பரி:—(இ - ள்.) தான்செய்யக்கருதிய வினைவலியையும் அதனைச் செய்து முடிக்கும் தன்வலியையும் அதனை விலக்கலுறும் மாற்றான்வலியையும் † இருவர்க்குந் துணையாவார் வலியையும் சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின், அவ்வினையைச் செய்க, (எ - று).

‡ இந்நால்வகைவலியுள் வினைவலியாவது முற்றலும் கோடலும் ¶ முதலியதொழிலானும், § ஏனைய மூவகையாற்றலானுங் கூறுபடுத்துத் தூக்கப்படும். தன்வலி மிகவின்கட் செய்கவென்ற விதியால், தோற்றல் ஒரு தலையாய குறைவின் கண்ணும் வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிகவென்பது பெற்றாம்.

தெளி:—(இ - ள்.) வினைவலியும் - (தான் செய்யக்கருதிய) தொழிலது வலியையும், தன்வலியும் - (அத்தொழிலைச்செய்து முடிக்கும்) தனது வலியையும், மாற்றான்வலியும் - (அத்தொழிலை விலக்கும்) பகைவனது வலியையும், துணைவலியும் - (இருவர்க்கும்) துணைபுரிவாரது வலியையும், தூக்கி - ஆராய்ந்து, (தனது வலி மிகுமாயின்), செயல் - (அத்தொழிலைச்) செய்யக்கடவன், (எ - று).

இந்நால்வகைவலியுள் வினைவலியானது கோட்டையை வளைத்தலும் பிடித்தலும் முதலிய தொழில்களாலும், மற்றையன மூவகையாற்றல்களாலும் கூறுபடுத்தி ஆராயப்படும். (அரசன் பகைவரோடு போர்செய்தலைத் தன்வலி மிகுந்த விடத்துச் செய்க என்ற விதியினால் தோற்றல் நிச்சயமாகிய குறைவினிடத்தும், வெல்லுதல் சந்தேகமாகிய சமநிலையிலும் அத்தொழிலை விடக்கடவனென்பது பெற்றாம்.

(க - து.) அரசன் வினைவலி முதலிய நான்கு வலியையும் ஆராய்ந்தறிந்து செய்காரியத்தைச் செய்யக்கடவன் என்பது.

† இருவர்க்கும் - தனக்கும் தன் பகைவனுக்கும்

‡ இந்நால்வகைவலியுள் - வினைவலிமுதலிய நால்வகை வலிகளில்.

¶ முதலிய என்றதனால் தம்மதிலைக்காத்தல், பகைவரது சூழ்ச்சி தலையெடுக்காவண்ணஞ் செய்தல் முதலியவற்றையுங் கொள்க.

§ ஏனைய மூவகையாற்றலானும் கூறுபடுத்து-மற்றையன(தன்வலி,மாற்றான்வலி, துணைவலிகளை) அறிவு, ஆண்மை பெருமை யென்னும் மூவகையாற்றலாலும் பகுத்து.

1. Let a king weigh well the strength of the deed he purposes to do; let him consider his own strength, the strength of his enemy, and the strength of the allies of both, and then let him act.

உ. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

பரி:—(இ - ள்.) தமக்கியலும் வினையையும் † அதற்கறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து எப்பொழுதும் ‡ மன மொழி மெய்களே அதன்கண்வைத்துப் பகைமேற்செல்லும் அரசர்க்கு முடியாத பொருளில்லை, (எ - று).

'ஒல்வது' எனவே ¶ வினைவலி முதலாய மூன்றும் அடங்குதலின், ஈண்டறிவதென்றது § தினைவலியேயாயிற்று. எல்லாப்பொருளுமெய்துவ தென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் வலியின் பகுதியும் அஃதறிந்து மேற்செல்வாரெய்தும் பயனுங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) ஒல்வது - (தமக்குப்) பொருந்தும் தொழிலையும், அறிவது - (அதற்கு) அறிய வேண்டுவதாயவலியையும், அறிந்து - தெரிந்து, அதன்கண் - அத்தொழிலினிடத்து, தங்கி - (மன மொழி மெய்களே எப்போதும்) வைத்து, செல்வார்க்கு - (பகைவர்மேல்) செல்லும் அரசருக்கு, செல்லாதது - முடியாதபொருள், இல் - இல்லை, (எ - று).

'ஒல்வது' என்று கூறவே வினைவலிமுதலியமூன்றும் அடங்குதலால், இங்கு அறிவதென்றது தினைவலியேயாயிற்று. (கால்வகை வலியுமுடையார் எளிதிலே) எல்லாப் பொருள்களையும் அடைவரென்பதாம். இவையிரண்டு பாட்டாலும் வலியின்பகுப்பும், அவ்வலியினே அறிந்து பகைவர் மேற் செல்வார்பெறும் பயனும் சொல்லப்பட்டன.

(க - து) தமதுவலியையும் அதற்கு வேண்டுவதாய தினை வலிபையுமறிந்து செய்யத்தக்க தொழிலைச் செய்வார்க்கு முடியாத காரியமில்லை என்பது.


† அதற்கு - அவ்வினைக்கு.

‡ மன மொழி மெய்களே யதன்கண் வைத்து - மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரணங்களையும் அத்தொழிலிற்செலுத்தி. (செலுத்தலாவது அதிபற்றி யாலோசித்தலும் புரோகிதர் அமைச்சர்களுடன் கலந்து பேசுதலும் அதற்குதவியாவாரைக் காணலுமாம்).

¶ வினைவலி, தன்வலி, மாற்றான் வலி என்னு மூன்றும்.

§ தினைவலி-தமக்கும் பகைவர்க்கும் தினை (உதவி) யாயுள்ளவரது வலிமை.

2 There is nothing which may not be accomplished by those who, before they attack an enemy, make themselves acquainted with their own ability, and with whatever else is needful to be known, and apply themselves wholly to their object.



கூ. உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

பரி:—(இ - ள்.) கருத்தாவாதலையுடைய தம்வலியின் அளவறியாதே † மனவெழுச்சியால் தம்மினவலியாரோடு ‡ வினைசெய்தலைத் தொடங்கி ¶ அவர் அடர்த்தலான் [] அது செய்து முடிக்கப்பெறுது இடையே கெட்ட () அரசர் உலகத்துப் பலர், (எ - று).

†† உடைய வென்பது அவாய் நின்றமையின், செயப்படுபொருள்வருவிக்கப்பட்டது. மூவகையாற்றலுள்ளுஞ் சிறப்புடைய அறிவுடையார் சிலராதலின் 'முரிந்தார் பலர்' என்றார். அதனுல் தம்வலியறிந்தே தொடங்குக வென்பது எஞ்சி நின்றது.

தெளி:—(இ - ள்.) உடை - (தலைவனுதலை) உடைய, தம்வலி - தமதுவலியினளவை, அறியார் - தெரிந்து கொள்ளாதவ ராகியே, ஊக்கத்தின் - மனவெழுச்சியால், ஊக்கி - (தம்மின் வலியாரோடு)போர்செய்தலைத்தொடங்கி, (அவ்வருத்தாதலால் அது செய்து முடிக்கப்பெறுமல்), இடைக்கண் - நடுவிலே, முடிந்தார் - கெட்டவரசர், பலர் - (உலகத்தில்) பலராவார், (எ - று).

உடைய என்பது தலைவனுதலை என்னும் செயப்படுபொருளை யவாவி (விரும்பி) நின்றமையின், அது வருவிக்கப்பட்டது. அறிவு, ஆண்மை, பெருமை என்னு மூவகையாற்றலு (வல்லமையு)ள்ளும் சிறப்புடைய, அறிவையுடையவர் சிலராதலால் 'முரிந்தார் பலர்' என்றார். அதனுல் தம் வலி அறிந்தே (போர்செய்தலைத்) தொடங்குக வென்பது குறைந்து நின்றது.

† மனவெழுச்சி - உற்சாகம்.

‡ வினைசெய்தலை - போர்செய்து வெல்லுந் தொழிலை.

¶ அவர் - தம்மிலும் வலியவரான பகையரசர்.

[] அதுசெய்து முடிக்கப் பெறுது - தாந் தொடங்கிய போர்த்தொழிலைச் செய்து முடித்தற்கியலாமல்.

() அரசர் என்றது இராவணன் துரியோதனன் முதலாயினோரை.

†† ஈறுகுறைத்து நின்ற உடையென்னும் குறிப்புப் பெயரெச்சம் செயப்படுபொருளை யவாவி (வேண்டி) நின்றமையின், கருத்தாவாதலை என்பது வருவிக்கப்பட்டது.

(க - து.) தமது வலியறியாது வலியாரோடு போர்புரிந்து புறங்கொடுத்தோடிய வரசர் பலர் என்பது.

3. There are many who, ignorant of their want of power to meet it, have haughtily set out to war, and broken down in the midst of it.

க. அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

பரி:—(இ - ள்.) அயல் வேந்தரோடு பொருந்தி ஒழுகுவதுஞ் செய்யாது தன் வலியளவறிவதுஞ் செய்யாது * தன்னை வியந்து அவரோடு பகைத்த அரசன் விரைவுக் கெடும், (எ - று).

† காரியத்தைக் காரணமாக உபசரித்து 'வியந்தான்' என்றார். ‡ விரையவென்பது திரிந்து நின்றது. கட்பாயொழுகுதல் வலியறிந்து பகைத்தலென்னும் இரண்டனுள், ஒன்றன்றே அயல்வேந்தரோடு செயற்பாலது; ¶ இவையன்றித் தான் மெலியனுமையை அவரோடு பகைகொண்டானுக்கு § ஒருபொழுதும் நிலையின்மையின் 'விரைந்துகெடும்' என்றார். இவையிரண்டுபோட்டானுந் தன்வலி யறியா வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது

தெளி:—(இ - ள்.) ஆங்கு - அயல்வேந்தருடன், அமைந்து - பொருந்தி, ஒழுகான் - ஒழுகுவதுஞ் செய்யாமல், அளவு - (தன்வலி) அளவை,

* தன்னை வியந்து - தன்னை மற்றை யரசரிலும் மேம்பட்டவனாக மதித்து.

† வியத்தலா லுண்டாகும் பகையை வியந்தான் என்று கூறினமையின், இது காரியங் காரணமாய உபசார வழக்காம்.

[அயல்வேந்தருடன் பகைத்தல் காரியம்; அதற்குக் காரணம் தன்னை வியத்தல். பகைத்தான் என்று கூறுது வியந்தான் என்றகூறினமையால் காரியத்தை (பகைத்தலை)க் காரணமாக (வியத்தலாக) உபசரித்து 'வியந்தான்' என்றார் என்று கூறப்பட்டது]

‡ கெடும் என்னும் (நிகழ்கால அல்லது எதிர்கால) செய்யுமென்னும் வினைமுற்றே உண்டென் நிகழ்வது செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சமாதலால், 'விரைய என்பது (விரைந்து எனத்) திரிந்து நின்றது' என்று கூறப்பட்டது. விரைந்து என்பது செய்தென்னும் வாய்பாட்டிறந்த கால வினையெச்சம்.

¶ இவையுன்றி - கட்பாயொழுகுதல் வலியறிந்து பகைத்தலென்னுமிரண்டு மல்லாமல்.

§ ஒருபொழுதும் நிலையின்மையின் - சிறிது பொழுதுகூட அழியாது நிற்கு மில்லாமையினால்.

அறியான் - அறிவதஞ் செய்யாமல், தன்னை வியந்தான் - தன்னை மெச்சிக்கொண்டு (அவ்வயல் வேந்தரோடு பகைத்த) அரசன், விரைந்து -விரைவாக, கெடும் - கெடுவான், (எ - று).

பகைத்தான் என்னும் காரியத்தை (வியந்தானென்னுங்) காரணமாகவுபசரித்து 'வியந்தான்' என்று கூறினர். விரையவென்பது விரைந்து எனத்திரிந்து நின்றது. ஈட்பாயொழுகுதல் வலியையறிந்து பகைத்தல் என்னும் இரண்டனுள், ஒன்றல்லவா வேற்றரசரோடு செய்யத்தக்கது; இவையல்லாமல் தான் மெலியவனு யிருந்தும் அவ்வேற்றரசரோடு பகையைக் கொண்டவரசனுக்கு ஒருபோதும் நிலைத்திருத்த லில்லாமையால் 'விரைந்து கெடும்' என்றார். இவை பிரண்டுபோட்டாலும் தன்வலியை யறியாதவிடத்தண்டாகுங் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) அயல் வேந்தருடன் அமைந்தொழுகுவதும் தன் வலியளவையறிவதஞ்செய்யாது தன்னைப் புகழ்ந்துகொண்டு அவ் வேந்தரோடு பகைத்த அரசன் விரைவாகக் கெடுவான் என்பது.

4. He will quickly perish who, ignorant of the measure of his resources flatters himself with an idea of his greatness and does not live in peace with his neighbours.



ஞ. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

பரி:—(இ - ள்.) பீலியேற்றிய சகடமும் * அச்சுமுறியும்; அப்பீலியை அது பொறுக்கு மளவின்றி மிகுத்தேற்றின், (எ - று).

† உம்மை சாகாட்டது வலிச்சிறப்பே அன்றிப் பீலியதுடைநொய்ம்மைச் சிறப்புந்தோன்ற நின்றது. ‡ இறுமென்னுஞ் சினைவினை முதன்மேனின்றது. ¶ எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனேயாயி

* அச்சு - உருள் (சக்கரம்) கோத்தமரம்.

† சாகாடும் என்னும் உம்மை உயர்வு சிறப்புப் பொருளையும் இழிவு சிறப்புப் பொருளையும் உணர்த்தி நின்றது.

§ நொய்ம்மை - மிகவிலேசாக விருக்கும் தன்மை.

‡ அச்சிறும் என்பதனுள், அச்சு என்பது சினை; அதனது வினை இறுதல். "சினைவினை சினையோடு முதலோடுஞ் செறியும்" என்று நன்னூல் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

சினை யெனினும் உறுப்பெனினும் அவயவமெனினும் ஒக்கும். முதலெனினும் பொருளெனினும் ஒக்கும். சினையும், குணமும், தொழிலும், சாதியும் என்றும் தனித்திராது ஒருமுதலேயேபற்றி நிற்கு மென்க.

¶ "குறைந்த வலிய ராயிடினுங் கொற்ற மைந்தர் பலர்கூடின், நிறைந்த வலியென் னுமதனு னோரா தொழிக பலரோடு" என்று விதாயக புராணம் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

ணும், அவர் தொக்கவழி வலியழியுமென்னும் பொருள்தோன்ற நின்றமை யின், இது * பிறிது மொழிதலென்னும் அலங்காரம். ஓதினை துவலாது வற்றி யென்பாரும் ஒட்டென்பாருமுளர். ஒருவன் தொகுவார் பலரோடு பகைகொள்ளற்க வென்றமையின், இதனுன் மாற்றுன் வலியும் அவன் தூணைவலியும் அறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) பீலி - மயிலிறகை, பெய் - ஏற்றிய, சாகாடும் - பண்டியும், அச்சிறும் - அச்சு முறியும், அப்பண்டம் - அம்மயிலிறகை, (அப்பண்டி சுமக்கு மளவி னல்லாமல்), சால மிகுத்து-மிகவும் அதிகப்படுத்தி, பெயின் - ஏற்றினால், (எ - று).

சாகாடும் என்னும் உம்மை பண்டியினது வலியின் சிறப்பே யல்லாமல் மயிலிறகினது மெலிமைச் சிறப்புந் தோன்ற நின்றது. அச்சிறும் என்னும் சினைவினை அச்சினையினது முதலாகிய பண்டியின்மேல் நின்றது. எளியரென்று பலரோடு பகையைக் கொள்வான் தான் வலியவனுகவே யிருந்தாலும் அவ்வெளியவர் பலர் கூடியவிடத்து வலி யழிவானென்னும் பொருள்பட நின்றமையால், இது பிறிது மொழிதலென்னும் அலங்காரமாம். ஒருவன் கூடுவார் பலருடன் பகைகொள்ளற்க வென்றமையின், இதனால் பகைவன் வலியையும் அவன் தூணைவலியையும் அறியாதவிடத் துண்டாகுங் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) தான் வலியவனென்று கருதி எளியார் பலரோடு பகைக்கும் அரசன் அவர் கூடி யெதிர்த்தபோதவரது கெடுவான் என்பது.

5. The axletree of a bandy loaded only with peacock's feathers will break, if it be greatly overloaded.

* ஒருபொருளைப் புலப்படுத்தற்கு அதனேடொத்த மற்றொரு பொருளைக்கூறுதல் பிறிதுமொழிதலெனனும் அலங்காரமாம்; அஃதாவது உவமானத்தைமாத்திரம்கூறி அதுவாயிலாக உவமேயத்தைப் பெறவைத்தலாம். இங்குப்'பீலிபெய் சாகாடு மச்சிறுமப்பண்டம்,சால மிகுத்துப் பெயின்'என்றுவமானத்தை மாத்திரம் கூறி அது வாயிலாக எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான் வலியனே யாயினும்,அவர் தொக்கவழிவலியழியும் என்னும் உவமேயத்தைப் பெறவைத்திருத்தலைக்காண்க. பண்டியின்அச்சு பலமுடையதாயிருந்தாலும் பலமில்லாத மயிலிறகை யளவுகடந்தேற்றிய விடத்து அதிமுறிவதுபோல, ஒருவன் எவ்வளவு பலமுடையவனுயிருந்தாலும் பலவீனர் பலர்கூடி எதிர்த்தவிடத்து அவன் அழிவான் என்பது இரண்ட பொருளாமென்க. இலக்கண விளக்கம் 'கருதிய பொருடொகுத்தது புலப் படுத்தற், கொத்ததொன் றுரைப்ப தொட்டா மதுவே'' என்னுஞ்சூத்திரத்தினுரையில் "ஒட்டெனினும், உள்ளுறையுவமமெனினும், உவமப்போலியெனினும், பிறிது மொழிதலெனினும், தவலாதவற்றி யெனினும் ஒக்கும்'' என்று கூறப்பட்டிருக்கின்றது.

சு. நுனிக்கொம்ப ரேறினு ரஞ்திறந் தூக்கி
ஞயிர்க்கிறுதி யாகி விடும்.

பரி:—(இ - ன்.) ஒருமரக்கோட்டினது நுனிக்கண்ணே ஏறி நின்றுர் தம் ஊக்கத்தால் * அவ்வளவினேக்கடந்து மேலும் ஏற † ஊக்குவாரா யின், ‡ அவ்வூக்கம் அவருயிர்க்கு இறுதியாய் முடியும், (எ - று).

¶ நுனிக்கொம்பரென்பது கடைக்கணெண்பதுபோலப் பின்முன்ஞகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. $ பண்மை அறிவின்மை பற்றி இழித்தற்கண் வந்தது. இறுதிக்கேதுவாவதனை () 'இறுதி' என்ருர். படைமேற் செல்வான் தொடங்கித் தன்ஞற் செல்லலாமளவுஞ் சென்று நின்ருன், பின் அவ்வளவின் நில்லாது மனவெழுச்சியான் மேலுஞ் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினேமுடிவிற் கேதுவாகாது அவன் உயிர்முடிவிற் கேதுவாமென்னும் பொருள் தோன்ற நின்றமையின், இதுவும் மேலே அலங்காம். அளவறிந்து நிற்றல்வேண்டுமென்றமையின், இதனுல் வினேவலி யறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) கொம்பர் - (ஒருமரக்) கொம்பினது, நுனி-நுனியிலே, ஏறினர் - ஏறி நின்றவர், (தமது மனவெழுச்சியால்), அஃது - அவ்வளவினை, இறந்து - கடந்து, ஊக்கின் - மேலும் ஏற) மனவெழுச்சி கொள்ளுவாராஞல், (அவ்வெழுச்சி), உயிர்க்கு - (அவர்) உயிர்க்கு, இறுதியாகி விடும் - முடிவாகிவிடும், (எ - று).

* அவ்வளவினைக்கடந்து - ஒரு மரக்கொம்பினது நுனியிலே ஏறி நின்ற அவ்வளவினைக்கடந்து.

† ஊக்குவாராயின் - முயலுவாராஞல். ‡ அவ்வூக்கம்-அந்த முயற்சி.

¶ கண்ணின்கடை யென்னும் ஆறும் வேற்றுமைத் தொகை பின்முன்ஞகமாறிக் கடைக்கண் என நின்றுற்போன்று கொம்பர் நுனியென்னும் ஆறும் வேற்றுமைத் தொகை பின்முன்ஞகமாறி நுனிக்கொம்பர் என நின்றது. இவ்வாறு நுனிகா இடைகா முதனு மீகண் எனவருதலேயுங் காண்க. இங்ஙனம் பின்முன்ஞக மாறிவருவன வெல்லாம் இலக்கணப்போலியாம். கொம்பர் என்பது இடக்கர் வண்டர் என்பன போன்று கடைப்போலி மொழியாம்.

$ ஏறினர் என்னும்பன்மை(பலர்பால்)இங்கிழித்து (இழிப்படுத்தி)க் கூறும் பொருளில் வந்தது. தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளவியாக்கம் ''ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்''என்னுஞ் சூத்திரத்தின் விசேட உரையில் சேனுவரையர் ''தாம்வந்தார் தொண்டனுர் எனப்பன்மைக் கிளவி இழித்தற்கண்ணும் வந்ததாலெனின், ஆண்டு உயர் சொற்ருனே குறிப்பு நிலேயால் இழிபு விளக்கிற்றென்பது'' என்று கூறுதலை மிங்கறியத்தக்கது.

() இறுதிக்குக் காரணமாய ஊக்கத்தை இறுதி என்று கூறினமையின், இது காரியவாகு பெயராம்; காரியம் காரணமாய வுபசாரவழக்குமாம்.

கண்கடை என்பது கடைக்கண் என முன்பின்னாயது போலக் கொம் பர்தனியென்பது தனிக்கொம்பர் என்றாயது. இஃது ஆரும் வேற்றுமை த்தொகை. வறிஞர் என்னும் பன்மை அறிவில்லாமை பற்றி இழித்துக் கூறுதலில் வந்தது. இறுதிக்குக் காரணமாகும் ஊக்கத்தை 'இறுதி' என்றார். பகைவர்மேற் போர்க்குச் செல்லத்தொடங்கித் தன்னுற் செல்லுதற்குரிய வளவுஞ் சென்று நின்றவன், பின் அவ்வளவிலே நில்லாமல் மனவெழுச்சி யினால் மேலுஞ் செல்லுவானாயின், அவ்வெழுச்சியானது தொழில் முடி தற்குக் காரணமாகாமல் அவனுயிர் முடிதற்குக் காரணமாம் என் னும் பொருள் தோன்ற நின்றமையின், இக்குறளும் மேற் கூறிய பிறிதுமொழிதல் என்னும் அலங்காரமாம். அளவறிந்து நிற்றல்வேண்டு மென்றமையின், இதனால் வினை வலியை அறியாதவிடத்துண்டாகும் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து) அரசன் தான்மேற்கொண்ட வினைக்குத் தக்க அள வைக் கடந்து நடப்பானாயின், அவ்வினை அவனுக்குக் கேட்டைத் தரும் என்பது.

6. There will be an end to his life who having climbed out to the end of a branch ventures to go further.

எ. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

பரி:—(இ - ள்.) *ஈயுநெறியானே தமக்குள்ள பொருளின் எல்லை யையறிந்து அதற்கேற்ப ஈக; அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக் கொண்டொழுகும் நெறியாம்,* (எ - று).

*ஈயும் நெறி மேல் * இறைமாட்சியுள் "வகுத்தலும் வல்லதரசு" என் புழி உரைத்தாம். எல்லைக்கேற்ப ஈதலாவது † ஒன்முன வெல்லையை*

---

* இறைமாட்சி யென்னுமதிகாரம் ஐந்தாவது குறளிலுள்ள 'வகுத்த லும் வல்லதரசு[(காப்பாற்றியபொருளை) அறம் பொருளின்பங்களின் பொ ருட்டுச் செலவு செய்தலும் வல்லவனே அரசன்]' என்ற லிடத்துக் கூறினும் என்பது. அந்துப் பரிமேலழகர் "கடவுளர் அந்தணர் வறியோர் என்றிவர்க்கும் புகழிற்குங் கொடுத்தலே அறப்பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் என்றிவற்றிற்கும் பகையோடு கூடலிற் பிரிக்கப்படுவோர்க்கும் தன்னிற் பிரிதலிற் கூட்டப்படுவோர்க்குங்கொடுத் தலேப் பொருட் பொருட்டாகவும், மண்டபம் வாவி செய்குன்று இள மரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களா னுகர்வனவற்றிற்குங் கொடு த்தலே இன்பப் பொருட்டாகவுங் கொள்க" என்று கூறியிருக்கின்றனர்.

† *ஒன்முன வெல்லையை நான்கு கூறுகி - ஒரளவுப்பட்டுத் தமக்குரி த்தாயுள்ள பொருளை நான்கு பாகமாக்கி.*

நான்கு கூறுக்கி அவற்றுள் இரண்டனைத் தன் செலவாக்கி ஒன்றனை மேல் இடர்வந்தழி அது நீக்குதற் பொருட்டு * வைப்பாகவி கின்றவொன்றனை யீதல். † பிறரும் ‡ "வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்" என்றார். பேணிக் கொண்டொழுகுதல் ¶ ஒருவரோடு நட்பிலாத அதனைத் தம்மோடு நட் புண்டாக்கிக் கொண்டொழுகுதல். $ முதலிற் செலவு சுருங்கிற் பொருள் ஒருகாலும் நீங்கா தென்பதாம்.

நேரி:—(இ - ள்.) ஆற்றின் - (கொடுக்கும்) வழியினுலே, அளவு - (தமக்குள்ளபொருளின்) அளவை, அறிந்து—தெரிந்து, ஈக - (அப்பொரு ளளவிற்கு ஏற்பக்) கொடுக்கக்கடவன், அது - அவ்வாறு கொடுத்தலானது, பொருள்—பொருளை, போற்றி வழங்குங்நெறி - காப்பாற்றிக்கொண்டு நடக்கும் வழியாம், (எ - று).

கொடுக்கும் வழி முன்னே இறைமாட்சி யதிகாரத்தில் "வகுத்தலும் வல்லதரசு" என்றவிடத்துக் கூறினும். பொருளின் அளவிற்கேற்பக் கொ டுத்தலாவது ஒன்றுன வளவை நான்கு பாகஞ் செய்து அவற்றுள் இரண்டு பாகத்தைத் தன் செலவுக்காகி ஒரு பாகத்தைப் பின்னே ஆபத்து வந்த விடத்து அவ்வாபத்தை நீக்குதற் பொருட்டு இருப்பாகி கின்ற ஒரு பாகத் தைக் கொடுத்தல். காப்பாற்றிக்கொண்டு நடத்தலாவது ஒருவரோடு நட் பில்லாத அப்பொருளைத் தம்மோடு நட்புண்டாக்கிக் கொண்டு நடத்தல். வரவிற் செலவு சுருங்கினுல் பொருள் ஒருகாலும் நீங்காதென்பதாம்.

(க - து.) அளவறிந்து கொடுக்கும் அரசனிடத்துப் பொ ருள் நிலே பெறும் என்பது.

* வைப்பாகி-ஆஸ்தியாகி.

† பிறரும் என்றது திரிகடுகமியற்றிய நல்லாதனரை.

‡ திரிகடுகம், உக. இதன்பொருள். (தமக்கு) வரும் பொருள்களுள் நான்கினொரு பாகத்தை (அறத்தின் பொருட்டுச்) செலவு செய்து வாழ்த லென்பது "வந்த பொருளிற் காற்கூறு வருமே லிடர்நீக் குதற்க மைத்து, மைந்த ரிருகா னினக் காக்கி மற்றைக் காலே வழங்கிடுக" என்று விகாயக புராணங் கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

¶ ஒருவரோடு நட்பில்லாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக் கொ ண்டொழுகுதல் - எத்தன்மை யாரோடும் ஒரேகங்கொள்ளுதலில்லாதபொ ருளைத் தம்முடன் ஒரேகமாக்கிக்கொண்டு தம்மைவிட்டு நீங்காவாறுசெய்து நடத்தலாம். பொருள் ஒருவரோடும் நட்புக்கொள்ளுதலின்றென்பது "திரு மக ணிலேமையுஞ் செல்வர் கேட்டிசேண்,மருவிய மனிதரை யிகந்து மற்ற வள், பொருவற புகழினர் புதிய காமுறு, மொருவர்கண் ணுறவில ளுண ர்ந்து கொண்மினே" என்று சூளாமணி கூறுவதாலும் பிறவாற்றுலு முணர்தற்பாற்றும்.

$ (தமக்கு வரும்) முதற் பொருளினும் செலவாகும் பொருள் குறை வாக விருந்தால் பொருள் ஒருகாலும் தம்மைவிட்டு நீங்கா தென்பதாம்.

7. Let a man know the measure of his ability to give, and let him give accordingly; such giving is the way to preserve his property.

அ. ஆகா தளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

பரி:—(இ - ள்.) அரசர்க்குப் * பொருள் வருகின்ற நேரியளவு சிறி தாயிற்றாயினும் † அதனற் கேடில்லையாம்; ‡ போகின்ற நேரியளவு [] அதனிற் பெருகாதாயின், (எ - று).

¶ இட்டிதெனவும் அகலாதெனவும் வந்த § பண்பின் தொழில்கள் () பொருண்மேனின்றன. பொருளென்பது அதிகாரத்தான் வருவித்து அளவென்பது பின்னுங் கூட்டி உரைக்கப்பட்டன. முதலுஞ் செலவுந் தம்முள் ஒப்பினுங் கேடில்லை யென்பதாம்.

தெளி:—(இ - ள்.) ஆகாதளவு - (அரசர்க்குப் பொருள்) வரு கின்ற வழியளவு, இட்டிதாயினும் — சிறிதாயிற்றாலும், கேடு - (அத னால்) கேடுதல், இல்லை—இல்லையாம், போகாறு (அளவு) - போகின்றவழி அளவு, அகலாக்கடை - (அதனில்) விரியாதாயின், (எ - று).

இட்டிது எனவும் அகலாது எனவும் வந்த அளவு என்னுங் குணத் தின் தொழில்கள் வழியென்னுங் குணியின்மேல் நின்றன. பொருளெ ன்பதவலியதிதலென்னும் அதிகாரத்தினால் வருவித்தி அளவு என்பது போகாறு என்பதனோடுங் கூட்டிச் சொல்லப்பட்டன. வரவும் செலவும் தம்முள் ஒத்திருந்தாலும் கேடில்லை யென்பதாம்.

(க - து.) அரசருக்குப் பொருட்செலவு பெருகாதாயின், அப் பொருளின்வரவு சிறிதாயிருப்பினும் அதனால் கெடுதியில்லையாம்.

* பொருள் வருகின்ற நேரியளவு - திரவியங் கிடைப்பதற்கு எதுவா யுள்ள மார்க்கத்தினளவு.

† அதனால் - பொருள் வருகின்றவழி சிறிதா யிருப்பதனால்

‡ போகின்ற நேரியளவு-பொருள் செலவாகின்ற மார்க்கத்தினளவு.

[] அதனிற் பெருகாதாயின் - பொருள் வருகின்ற வழியளவினும் அதிகரிக்காதிருக்குமாயின்.

¶ ஆகாறு அளவு இட்டிது ஆயினும் என்றும், போகாறு அளவு அகலாக்கடை என்றும் உள்ளவற்றில் இட்டிது என்னும் தொழிலும் அகலாது (அகலாக்கடை) என்னுந் தொழிலும் அளவென்னும் பண்பி (குணத்தி)ற்குரியனவாயிருந்தாலும், அத்தொழில்கள் அளவென்னும் பண் பையுடைத்தாயிருக்கின்ற நேரியென்னும் பொருளின்மேல் நின்றன என் பதாம். இது குணவினை குணிவினையாய உபசாரவழக்காம்.

§ பண்பின் - அளவென்னுங்குணத்தின்.

() பொருண்மேல் - நேரி (வழி) யின்மேல்.

8 Even though the income of a king be small it will be no loss to him if his outgoings be not large.

கூ அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றுக் கெடும்.

பரி:—(இ - ள்.) தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கேற்ப வாழமாட்டாதான் வாழ்கிகைகள் உள்ளனபோலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமும் இன்றிக்கெட்டுவிடும். (எ - று).

‡ அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது அதனிற் சுருங்கக் கூடாதாயின் ஒப்பவாயினும் ஈத்தும் துய்த்தும் வாழ்தல். தொடக்கத்திற் கேட வெளிப்படாமையின் † உளபோலத் தோன்று என்றார். ¶ முதலிற், செலவு மிக்கால்வரும் ஏதங் கூறியவாறு

தெளி:—(இ - ள்.) அளவு - (தனக்குள்ள பொருளின்) அளவை, அறிந்து-தெரிந்து (அவ்வளவிற்குப்பொருந்த), வாழாதான்-வாழமாட்டாதவனது, வாழ்க்கை - வாழ்க்கைகள், உளபோல - உள்ளனபோல, தோன்றுதோன்றி, இல்லாகி - (மெய்ம்மையால்) இல்லையாகி, (பின்பு அத்தோற்றமும் இல்லாமல்), கெடும் - கெட்டுவிடும், (எ-று).

அவ்வளவிற்குப் பொருந்த வாழ்தலாவது அவ்வளவிற் சுருங்கக் கூடாமலிருந்தால் அவ்வளவிற்குச் சமமாகவாயினும் கொடுத்தும் அனுபவித்தும் வாழ்தல். ஆரம்பத்தில் வாழ்க்கையின் கேடு வெளிப்படாமையால் உளபோலத்தோன்று என்றார். வரவிற் செலவு மிகுந்தால் வருங்குற்றம் சொல்லியபடியாம்.

(க - து.) தனக்குள்ள பொருளினளவை யறிந்து வாழாத அரசனது வாழ்க்கை விரைந்து கெடும் என்பது.

9. The prosperity, of him who lives without knowing the measure of his property, will vanish away and perish even while it seems to continue.



கூ0. உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

* அதற்கேற்ப - அப்பொருளளவிற் கேற்குமாறு.

‡ அவ்வெல்லைக்கேற்ப - அப்பொருளினளவிற்குப் பொருந்த

† உளபோலத் தோன்றி என்னும் பாடமுண்டு.

¶ இக்கு "ஆன முதலி லதிகஞ் செலவானுல், மான மழிந்து மதி கெட்டுப்-போன திசை, எல்லார்க்குங் கள்ளனு யேழ்பிறப்புந் தீயனுய், நல்லார்க்கும் பொல்லனு நாடு" என்று நல்வழி கூறுவது மறியத்தக்கதாம்.

பரி:—(இ - ள்.) தனக்குள்ள * அளவு நோக்காமைக் கேதுவாய † ஒப்புரவாண்மையால் ஒருவன் செல்வத்தினேல்லை விரைவிற் கெடும்.

ஒப்புரவேயாயினும் ‡ மிகலாகாதென்றமையான், ¶ இதுவுமது. இவை நான்குபாட்டானும் § மூவகையாற்றலுள் பெருமையின் பகுதியாய பொருள் வலியறிதல் சிறப்பு நோக்கி வகுத்துக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) உளவரை - (தனக்கு) உள்ளவளவை, நோக்காத—ஆராயாமைக்குக் காரணமாகிய, ஒப்புரவாண்மை-உபகாரமுடைமையால், வளவரை - (ஒருவனது) செல்வத்தினளவு, வல்லைக்கெடும் - விரைவிற்கெடும், (எ - று).

உபகாரமேயாயினும் மிகலாகாதென்று கூறினமையால், இதுவும் அது. இவை நான்கு பாட்டாலும் மூவகை ஆற்றலுள் பெருமையின் பகுதியாகிய பொருள் வலியறிதல் சிறப்புநோக்கி வகுத்துச் சொல்லப்பட்டது.

(க - து.) அரசன் தனக்குள்ள பொருளினளவை யாராயாது அளவு கடந்து செலவு செய்தால் அவனது செல்வம் விரைவிற் கெடும் என்பது.

10. The measure of his wealth will quickly perish, whose liberality weighs not the measure of his property.

பதினேன்றும் அதிகாரம்.

காலமறிதல்—

On the discernment of a suitable time.

பரி:—அஃதாவது () வலியான் மிகுதியுடையனெய்ப் பகைமேற்சே

---

* அளவு - பொருளினளவு.

† ஒப்புரவு - உலக நடையை யறிந்ததவி செய்தல். ஒப்புரவாண்மை - ஒப்புரவை யாளுந் தன்மை.

‡ மிகலாகாது - பொருளளவிற்கு மேற்படலாகாது.

¶ இதுவுமது - இக்குறளும் 'அளவறிந்து வாழாதான்' என்னுங் குறளிற் கூறியதுபோல என்பது; அஃதாவது முதலிற் செலவுமிக்கால் வரும் ஏதங்கூறியவாறு என்பதாம்.

§ அறிவு ஆண்மை பெருமை யென்னு மூவகையாற்றல்களுள் பொருள் படை யென்றிருவகைத்தாய பெருமையின் பகுதியாய பொருள், வலியறிதல் மற்றைய ஆற்றல்களே யறிதலிலும் சிறப்புடையதாயிருத்தல் பற்றி வகுத்துச் சொல்லப்பட்டதென்க.

() வலியான் மிகுதியுடையனும் - வினைவலி தன்வலி மாற்றான் வலி தினைவலி யென்னும் நான்கனுள் தன்வலியும் தினைவலியும் மிகுதியாக உடையவனும்.

றலுற்ற அரசன் * அச்செலவிற் கேற்ற காலத்தினையறிதல். † அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

தெளி:—அஃதாவது வலியினுல் மிகுதியுடையவனுப்ப் பகைவர் மேல் போருக்குச் செல்லத்தொடங்கிய அரசன் அச்செல்லுதலுக்கேற்ற காலத்தினை யறிதல். அதிகாரமுறைமையும் இதனுலே விளக்கும்.

க. ‡ பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

பரி:—(இ-ள்.) தன்னின் வலிதாய ¶ கூகையைக் காக்கை () பகற் பொழுதின்கண் வெல்லாநிற்கும். ‖ அதுபோலப் பகைவரது [] இகலே வெல்லக்கருதும் அரசர்க்கு அதற்கேற்ற †† காலம் இன்றி யமையாது.

§ எடுத்துக்காட்டுவமை, காலமல்லாவழி வலியாற் பயனில்லை யென்

* அச்செலவிற் கேற்ற காலத்தினை யறிதல் - அவ்வாறு பகைவர்மேற் போர்க்குச் செல்லுவதற்குத் தகுதியாயமைந்த காலத்தினை யாராய்ந்தறிதல்.

† வலியறிதலென்னும் அதிகாரத்தின்பின் காலமறிதலென்னும் அதிகாரம்வைத்த முறைமையும்.

‡"இடத்தொடு பொழுது நாடி யெவ்வினைக் கண்ணு மஞ்சார், மடப் படலின்றிச் சூழ மதிவல்லார்க் கரிய துண்டோ, தடத்திடைக் காக்கை யொன்றே யாயிரங் கோடி கூகை, யிடத்திடை யழுங்கச் சென்றுங் கின்னுயிர் செகுத்த தன்றே" என்பது சிவகசிந்தாமணி.

¶ "மரம்பயில் கூகையைக் கோட்டா னென்றலும்" என்பது தொல் காப்பியம் மரபியல்.

() பகற்காலத்தில் கூகைக்கு (கோட்டானுக்கு)க்கண்தெரியாமையால் அக்கூகையை வெல்லக்காக்கைக்கு அப்பகல் தக்க காலமாயிற்றென்க.

காக்கைக்கிரவிலும் கூகைக்குப் பகலிலும் கண்தெரியாதென்பதிங் குணர்தற் பாலதாம்.

‖ ஆதலால் என்றும் பாடமுண்டு.

[] இகல் -இருவர் தம்முள்ளே போர்செய்து வலிமை தொலைதற்குக் காரணமாய மாறுபாடு.

†† "சில மல்லன நீக்கிச்செம் பொற்றலைத், தால மன்ன தனிநிலை தாங்கிய, ஞால மன்னற்கு நல்லவர் சோகிய, காலமல்லது கண்ணுறுண் டாகுமோ" என்பது இராமாயணம்.

§ பகல்வெல்லுங் கூகையைக் காக்கை ; இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது என் றிரண்டொவ்வியம் வந்திடையே அதுபோல என் னும்மீற்றவுமவுருபு தொக்கு நின்றமையின், இக்குறள் எடுத்துக் காட்டுவமை யாயிற்றென்க.

பது விளக்கி நின்றது. * இனிக் காலமாவது வெம்மையும் குளிர்ச்சியுந் தம்முள் ஒத்து கோய் செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய உடைத் தாய்த் தானே வருந்தாது செல்லும் இயல்பினதாம். இதனுற் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது'.

தெளி:—(இ - ள்.) காக்கை - காக்கையானது, கூகையை - (தன்னிலும் வலியுடையதாகிய) கோட்டானை, பகல் - பகற்பொழுதில், வெல்லும்-வெல்லா நிற்கும்,(அதுபோல),இகல்-(பகைவரது)மாறுபாட்டை, வெல்லும் - வெல்லக்கருதுகின்ற, வேந்தர்க்கு - அரசர்க்கு, பொழுது - (அவ்வெல்லுதற்கேற்ற) காலம், வேண்டும் - (அவசியமாய்) வேண்டும். ()

இக்குறள் எடுத்துக்காட்டுவமையணி. இது காலமல்லாதவிடத்து வலியினுல் பயனில்லை யென்பதை விளக்கி நின்றது. இனிக்காலமாவது வெம்மையும் குளிர்ச்சியும் தம்முள்ளே சமமாய் கோய் செய்யாமல் தண்ணீரும் உணவும் முதலியனவுடையதாய்ச் சேனை வருந்தாமல் செல்லுந் தன்மைய தாம். இதனுல் காலத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க-து.) அரசர் பகைவரைக் காலமறிந்து கொல்லல்வேண்டும்.

1, A crow will overcome an owl in the day time: the king who would conquer his enemy must have a suitable time.

உ. பருவத்தோ டொட்ட வொழுக லிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

பரி:—(இ - ள்.) அரசன் காலத்தோடு பொருந்தி வினை செய்து ஒழுகுதல் ஒருவர் கண்ணும் நில்லாது நீங்குஞ் செல்வத்தைத் தன்னின் நீங்காமற் பிணிக்குங் கயிறும், (எ - று).

காலத்தோடு பொருந்துதல்—காலக் தப்பாமற் செய்தல். † 'தீராமை' என்றதனுல் தீர்தண்மாலேயதென்பது பெற்றும். வினை வாய்த்து வருதலான் ‡ அதனின் ஆருஞ் செல்வம் எஞ்ஞான்றும் நீங்காதென்பதாம்.

தெளி.—(இ - ன்.) (அரசன்) பருவத்தோடொட்ட - காலத்தோடு பொருந்த, ஒழுகல்-(தொழில் செய்து) நடத்தல், இருவினை - (ஒருவரிட

* மனுதருமசாஸ்திரம் ஏழாவதத்தியாயத்தில் "சுபமான மார்க்கழிமாதத்தில் அரசன் சண்டைக்குப் போகவேண்டும்; தனக்குப் பலக்குறைவில்லாதிருந்து பலகாலத்திலேயே சத்துருவின் தேசத்தை யெதிர்க்கவேண்டுமென்று மனமிருந்தால் பங்குனிசித்திரை மாதங்களிலும்போகலாம்.""மற்ற மாதங்களிலும் தனக்கு நிச்சயமாகவெற்றியுண்டாகுமென்றும், தன் சத்துரு சதுரங்கபல மில்லாமல் தன்பப்படுகிறுனென்றும், தோன்றினுல் போகலாம்." என்று கூறுவது மிக்கறியத் தக்கதாம்.

† (செல்வம்) தீராமை (நீங்காமல்) என்றதனுல் (அது)நீர்தண்மாலேய (நீங்குந் தன்மைய) தென்பது பெற்றும்.

‡ அதனின் - வினைவாய்த்து (தொழில் கைகூடி) வருதலால்.

த்தும் நில்லாது நீங்குஞ்) செல்வத்தை, நீராமை - (தன்னிடத்தினின்று) நீங்காமல், ஆர்க்கும் - கட்டும், கயிறு - கயிறுகும், (எ - று).

காலத்தோடு பொருந்துதல்—(மேற்கொண்ட தொழிலை) காலத்தப் பாமற் செய்தலாம். 'நீராமை' என்றதனால் செல்வம்நிருந்தன்மையதென் பது பெறப்பட்டது. தொழில் கைகூடிவருதலால் அதனாலுண்டாகும் செல்வம் எந்நாளும் நீங்காதென்பதாம்.

(க - து.) காலமறிந்து தொழில் செய்பவரிடத்துச் செல்வம் நீங்காதென்பது.

2. Acting at the right season, is a cord that will immoveably bind success to a king.

ரு. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

*பரி:—(இ - ள்.) அரசரால் செயதற்கரிய வினைகளென்று சொல் லப்படுவன * உளவோ, † அவற்றை முடித்தற்காங் கருவிகளுடனே செய்தற்காங்காலம் அறிந்து செய்வாராயின், (எ - று).*

*கருவிகளாவன ‡ மூவகையாற்றலும் ¶ நால்வகை உபாயங்களுமாம். * அவை உளவாயவழியுங் காலம் வேண்டுமென்ப தறிவித்தற்கு † 'கருவி யான்' என்றார். எல்லாவினையும் எளிதின் முடியு மென்பதாம்.*

தெளி:—(இ - ள்.) அருவினை யென்ப - (அரசரால்) செய்தற்கரிய தொழில்களென்று சொல்லப்படுவன, உளவோ - உண்டோ, கருவியான்- (அத்தொழில்களை முடித்தற்காகும்) சாதனங்களுடனே, காலம் - (செய் தற்காகும்) காலத்தை, அறிந்து செயின்-தெரிந்துசெய்வாராஞல், (எ - று).

கருவிகள் - மூவகையாற்றல்களும் நால்வகை உபாயங்களுமாம். அவை உண்டாகிய விடத்தும் காலம் வேண்டுமென்பது அறிவித்தற்குக் 'கருவி யான்' என்றார். இவ்வாறு செய்வார்க்கு எல்லாத் தொழில்களும் எளிதாக முடியுமென்பதாம்.

(க - து.) தாமேற்கொண்ட தொழிலைச் செய்தற்குரியகால மறிந்து அதற்குத்தக்க சாதனங்களுடனே செய்தால் அருமை யான தொழில் யாதொன்றுமில்லை என்பது.

** உளவோ என்பது இல்லை யென்னும் பொருளை யுணர்த்திநின்றது. (ஓகாரம் எதிர்மறைப்பொருளது.)*

† அவற்றை - செய்தற்கரியவினைகளை.

‡ மூவகையாற்றல் - அறிவு, ஆண்மை, பெருமை.

¶ நால்வகை யுபாயம் - தான சாம பேத தண்டம்.

** அவை - மூவகையாற்றல், நால்வகையுபாயம்.*

† கருவியாற் காலமறிந்து செயின் என்றும் பாடமுண்டு.

3. Is there anything difficult for him to do, who acts with the right instruments, at the right time?

ச. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

பரி:—(இ - ள்.) ஒருவன் ஞாலமுழுதுந் தானே ஆளக்கருதினுன் ஆயினும் * அஃது அவன் † கையகத்ததாம்; ‡ அதற்குச்செய்யும் வினையைக் காலமறிந்து இடத்தோடு பொருந்தச் செய்வனேயின், (எ-று).

இடத்தான் என்பதற்கு ¶ மேற் கருவியான் என்பதற்கு உரைத்தாங் குரைக்க. கைகூடாதனவும் கைகூடுமென்பதாம். இவை மூன்று பாட்டானுங் காலமறிதற்பயன் கூறப்பட்டது.

தேளி.—(இ - ன்.) (ஒருவன்) ஞாலம் - பூமிமுழுதும், கருதினும் - (தானே ஆள) நினைத்தானுலும், (அது). கைகூடும் - (அவன்)கைக்குள் ளாம், (அதற்குச் செய்யுந்தொழிலே), காலம் - காலத்தை, கருதி-அறிந்து, இடத்தான் - இடத்தோடு, (பொருந்த), செயின் - செய்வானேயின், (எ-று).

இடத்தான் என்பதற்கு மேலுள்ள குறளில் கருவியான் என்பதற்குச் சொல்லியவாறு சொல்லிக்கொள்க. இவ்வாறு செய்வார்க்குக் கைகூடாதனவும் கைகூடுமென்பதாம் இவைமூன்று பாட்டாலும் காலமறிதலின் பயன் சொல்லப்பட்டது. கைகூடுதல்-பெறப்படுதல்.

(கு-து) காலம் பார்த்து இடத்திற்குத் தக்கவாறு தொழில் செய்யும் அரசன் உலகமுழுதும் ஆளுவான் என்பது.

4. Though a man should meditate the conquest of the world, he may accomplish it, if he acts in the right time, at the right place.

ஞ. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

பரி:—(இ - ள்.) நப்பாது ஞாலமெல்லாங் கொள்ளக்கருதும் அரசர் தம் வலி மிகும்ஆயினும் * அதுகருதாது † அதற்கேற்றகாலத்தையே

* அஃது - உலகமுழுதும். † கையகத்ததாம்-வசத்ததாம்.

‡ அதற்கு-உலகமுழுதுந் தானே ஆளுதற்கு.

¶ மேல் ('அருவினையென்ப' என்னுங்குறளில்) மூவகையாற்றலும் கால்வகை யுபாயங்களுமாகிய கருவிக ளுண்டாயவிடத்தும் காலம் வேண்டுமென்றுரைத்தாற் போல இடம் உண்டாயவிடத்தும் காலம் வேண்டுமென்றுரைத்துக் கொள்க என்பது.

* அது கருதாது - தம் வலிமிகுதியை மூக்கியமாக எண்ணுமல்.

† அதற்கேற்ற - உலகத்தைக் கைக்கொள்ளுதற்குத் தக்க.

கருதி * அது வருந்துணையும் பகைமேற் செல்லார், (எ - று).

தப்பாமை ∴† கருதியவழியே கொள்ளுதல். வலிமிகுதி 'காலங்கருதி' என்றதனாற் பெற்றும். ‡ அது கருதாது செல்லின் இருவகைப் பெருமையுந் தேய்த்து வருத்தமும் உறுவராகலின் 'இருப்பர்' என்றார். இருத்தலாவது ¶ கட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்னும் அறுவகைக் குணங்களுள் மேற்செலவிற்கு மாறுயது. இதனாற் காலம் வாராவழிச் செய்வது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) கலங்காது - தப்பாமல், ஞாலம் - பூமியெல்லாம், கருதுபவர் - (கொள்ள) நினைக்குமரசர், (தம்வலி மிகுமாயினும் அதனை நினையாமல்), காலம் - (அதற்கு ஏற்ற) காலத்தையே, கருதி - நினைத்து, இருப்பர்-(அது வருமளவும் பகைவர்மேற்செல்லாது) இருப்பார், (எ - று).

தப்பாமை - நினைத்தபடியே கொள்ளுதல். வலிமிகுதி 'காலங்கருதி' என்றதனால் பெறப்பட்டது. அதை நினையாமற் (பகைவர் மீது போர்க்குச்) சென்றால் பொருளும் படையும் ஆகிய இருவகைப்பெருமையும் குறைந்து வருத்தமுமடைவராகலால் 'இருப்பர்' என்றார். இருத்தலாவது கட்பாக்கல், பகையாக்கல், பகைவர்மேற் செல்லுதல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்னும் அறுவகைக் குணங்களுள் பகைவர்மேற் செல்லுதற்கு மாறுயது. இதனாற்காலம் வாராதவிடத்துச் செய்வது சொல்லப்பட்டது.

(க - து.) பூமி முழுதும் ஆளநினைக்கும் அரசர் அதற்குரிய காலத்தை யெதிர்பார்த்திருப்பர் என்பது.

5 They who thoughtfully consider and wait for the right time for action, may successfully meditate the conquest of the world.

* அது வருந்துணையும் - (உலகத்தைக் கைக்கொள்ளுவதற்குத் தக்க) அக்காலம் வருமளவும்.

† கருதியவழியே கொள்ளுதல் - தாமெண்ணியபடியே உலகத்தைக் கைக்கொள்ளுதல்.

‡ அது கருதாது செல்லின் - அக்காலத்தை யறியாது நினைத்தபோது பகைவர்மீது போர்க்குச் சென்றால்.

¶ மனுதருமசாஸ்திரம் ஏழாவதத்தியாயத்தில் "சத்துருவுடன் சமாதானமாதல், யுத்தஞ் செய்தல், யுத்தத்திற்குப் போதல், போகாமலிருத்தல், தன்சேனையை யிரண்டாகப் பிரித்தல், பலமுள்ள மற்றொருவனைத் தானடைதல் இவ்வாறனேயும் ஆலோசிக்கவேண்டும்."

"இவ்வாறு யோசித்துப்பார்த்து எவ்வெந்தக் காரியங்களுக்கு எதையெதைச் செய்யவேண்டுமோ அதையதைச் செய்யவேண்டும்."

"இவ்வாறு குணங்களுள் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு விதமாகுமென்று சொல்லுகிறார்கள்." என்று கூறுவது மிக்கறியத்தக்கதாம். ஒவ்வொரு குணமும் இரண்டிரண்டு வகையாமென்பதை யூன்றிக்காண்க.

கூ. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

பரி:—(இ - ள்.) வலிமிகுதியுடைய அரசன் பகைமேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, பொருகின்ற தகர் † தன்பகை கெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால்வாங்குந் தன்மைத்து, (எ - று).

‡ உவமைக்கண் 'தாக்கற்கு' என்றதனால் பொருளிலும் வென்றி யெய்தற் பொருட்டென்பது கொள்க. இதனால் ¶ அவ்விருப்பின் சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) ஊக்கமுடையான்-வலிமிகுதியுடைய அரசன், ஒடுக்கம் - (பகைவர்மேற் செல்லாது) காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, பொருதகர் - போர்செய்கின்ற ஆட்டுக்கடா, தாக்கற்கு - (தன்பகை கெடப்) பாய்தற்பொருட்டு, பேருந்தகைத்து - பின்னே கால்வாங்குந் தன்மையதாம், (எ-று).

உபமானத்தில் 'தாக்கற்கு' என்று கூறியிருத்தலால் உபமேயத்திலும் வெற்றியடைதற் பொருட்டு என்பது கொள்க. இதனால் அவ்விருத்தலின் சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து). வலிமையுள்ள அரசன் பகைவர்மேற் போர்க்குச் செல்லா தொடுங்கிக் காலம்பார்த்திருத்தல் வெற்றி பெறுதற் பொருட்டாம் என்பது.

6. The self-restraint of the energetic while waiting for a suitable time to act, is like the drawing back of the foot of a fighting-ram in order to butt.

எ. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரோள்ளி யவர்.

பரி:—(இ - ள்.) அறிவுடைய அரசர் பகைவர் மீகைசெய்த பொழு

† தன்பகைகெட - தனதுபகையான மற்றே ராட்டுக்கடா அழியும்படி.

‡ பொருதகர் தாக்கற்குப் பேருந்தகைத்து என்னும் உவமானத்தில் தாக்கற்கு என்று கூறியதினால் ஊக்கமுடையானொடுக்கம் என்னும் பொருளினும் (உவமேயத்திலும்) வென்றி யெய்தற் பொருட்டு (ஜயமடையும் நிமித்தம்) என்பது கொள்க என்பது. வலிதிகுதியுடைய அரசன் பகைவர் மேற் செல்லாது வென்றி யெய்தற்பொருட்டுக் காலம் பார்த்திருக்கின்ற இருப்பு என்பது ஊக்கமுடையா னொடுக்கம் என்பதற்குப் பொருளாமென்க.

¶ அவ்விருப்பின் சிறப்பு - வெற்றியடையுமாறு பகைவர்மேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பின் பெருமை.

தே அவரறியப் * புறத்து வெகுளார் ; தாம் அவரை வெல்லுதற்கேற்ற காலத்தினையறிந்து † அது வருந்துணையும் உள்ளே வெகுள்வர்,(எ - று).

பொள்ளென என்பது குறிப்புமொழி. ‡ வேரார் வேர்ப்பரெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். அறிய வெகுண்டுழித் தம்மைக் காப்பராகலிற் 'புறம்வேரார்' என்றும், ¶ வெகுளி ஒழித்துழிப் பின்னும் மிகை செய்யாம லடக்குதல் கூடாமையின் 'உள்வேர்ப்பர்' என்றுங் கூறினர்.

தேவ்வி—(இ - ன்.) ஒள்ளியவர் - அறிவுடைய வரசர், ஆங்கே - (பகைவர் தவறுசெய்த) அப்பொழுதே, (அப்பகைவரறிய), பொள்ளென - விரைவாக, புறம்வேரார் - புறத்திற் கோபஞ்செய்யார், காலம் - (தாம் அப்பகைவரை வெல்லுதற்கேற்ற) காலத்தை, பார்த்து - அறிந்து, (அக் காலம்வருமளவும்), உள்வேர்ப்பர் - உள்ளே கோபஞ் செய்வார், (எ - று).

பொள்ளென என்பது விரைவுப் பொருளுணர்த்துங் குறிப்பிடைச் சொல். கோபஞ்செய்யார் கோபஞ்செய்வார் என்னுங் காரணத்தை வேரார் வேர்ப்பர் என்னுங் காரியமாக வுபசரித்துக்கூறினர். பகைவரறியக் கோபஞ்செய்த விடத்து அவர்தம்மைக் காத்துக்கொள்ளுவராகலால் 'புறம்வேரார்' என்றும், கோபம் ஒழித்த விடத்துப் பின்னுந் தவறு செய்யாமல் அவரை அடக்குதல் கூடாமையால் 'உள்வேர்ப்பர்' என்றும் சொல்லினர்.

(க - து.) அறிவுடைய அரசர் வெல்லுதற்கேற்ற காலம் வருமளவும் பகைவர்மேற் கொண்ட கோபத்தை யடக்கியிருப்பர்.

7. The wise will not immediately and hastily show their anger; they will watch their time, and restrain their anger within.

* வீரைவாகப் புறத்து வெகுளார் என்றும் பாடமுண்டு.

† அது வருந்துணையும் - பகைவரை வெல்லுதற்கேற்ற காலம் வருமளவும்.

‡ வெகுளார் வெகுள்வர் எனக்கூறுது வேரார் வேர்ப்பர் எனக்கூறினமையால், 'வேரார்வேர்ப்பர் எனக் காரணத்தைக் காரியமாகவுபசரித்தார்' என்று கூறப்பட்டது. வேர்த்தல்-உடம்பில் வேர்வை யுண்டாதல். வேர்த்தலுக்குக்காரணமான கோபத்தை வேர்த்தல் எனக் கூறினமையால், இது காரியவாகுபெயராம். இங்கு வெகுளுதலும் வெகுளாமையுங்காரணம்; வேர்த்தலும் வேர்க்காமையுங் காரியமாம்.

¶ வெகுளி யொழித்துழிப் பின்னும் மிகைசெய்யாம லடக்குதல் கூடாமையின் - அரசர் கோபத்தை விட்டவிடத்துப் பகைவர்பின்னும் தவறுசெய்யாதபடி அப்பகைவரை யடக்குதல் கூடாதபடியால். "மிகைமிக் கியற்றித் திரிந்திடினும் வெல்லுங் காலம் வருமளவும், பகைமை புறத்திற் சேறற்குமற் பகைவர் தம்மைப் பண்போடு, நகைசெய் தமர்போற் சுமந்திடுக" என்பது வீராயத புராணம். ஒன்றுஞ்செய்யாமல் அடக்குதல் கூடாமையின் என்றும் பாடமுண்டு.

அ. சேறுநரைக் காணிற் * சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

பரி:—(இ - ள்.) தாம் வெல்லக் கருதிய அரசர் பகைவர்க்கு இறுதிக்காலம் வருந்துணையும் அவரைக் கண்டாற் பணிக; † பணியவே, ‡ அக்காலம் வந்திறும்வழி ¶ அவர் தகைவின்றி யிறுவர், (எ - று).

o பகைமை ஒழியும் வகை மிகவுந் தாழ்கவென்பார் 'சுமக்க' என்றும், அங்ஙனந் தாழவே | அவர் தம்மைக்காத்த லிகழ்வராகலின் தப்பாமற் கெடுவ ரென்பார் || அவர்தலை கிழக்காம் என்றுங் கூறினர். § தலைமேற் கொண்ட தொருபொருளைத் தள்ளுங்கால் அது தன்தலை கீழாக விழுமாகலின் அவ்வியல்பு பெறப்பட்டது. இவை இரண்டு பாட்டானும் இருக்கும் வழிப் பகைமை தோன்றுமலிருக்க வென்பதுகூறப்பட்டது.

* சுமத்தல் - தலைமேற் கொள்ளுதல்; அஃதிங்கு இலக்கணையால் பணிதலுக்காயிற்று.

† பணியவே - அவ்வாறு பணிந்திருக்கவே.

‡ அக்காலம் வந்திறும் வழி - பகைவர்க்கு முடிவுக்காலம் வந்துமுடியுமிடத்து.

¶ அவர் தகைவின்றி யிறுவர் - அப்பகைவர் தடையில்லாம லழிவர்.

o பகைமையொழியும்வகை—தம்மீதுபகைகொள்ள வில்லை யென்ற பகைவர் நம்பிப் பகையொழியும்படி.

| அவர் தம்மைக்காத்த லிகழ்வராகலின் - அப்பகைவர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதலை யவமதிப்பாராதலால்.

|| அவர் தலைகீழாம் என்றும் பாடமுண்டு. இங்குக் கிழக்கு என்பது திசையையுணர்த்தாது கீழ் என்பதை யுணர்த்தி நின்றது. ''கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்'' என்னும் தொல்காப்பியம் உவமவியற் சூத்திரத்தின் விசேடவுரையில் நச்சினார்க்கினியர் ''கிழக்கிடு பொரு ளென்பது கீழ்ப்படுக்கப்படும் பொருள்'' என்றுகூறியிருத்தலிங்குணர்தற் பாலதாம்.

§ தலையின்மேற் கொண்டதொரு சுமையைத் தள்ளும்போது (போடும்போது) அச்சுமை தனது தலை (மேலிடம்) கீழாகுமாறு விழுமாதலால், அத்தன்மை பகைவர்க்கும் பெறப்பட்டது. அஃதாவது ஒருசுமையை வெளிப்படுத்த விரும்பியவன் அச்சுமையைத் தன் தலையின்மேற் சுமந்து சென்று அதனைப் போடுமிடத்தை யடைந்தபோது அச்சுமையைத் தலை கீழாகப் போடுதல்போல, பகைவரை யழிக்க விரும்பியவர் அதற்குத் தக்க காலம் வருமளவும் அவர்களைத் தலைமேற் கொண்டு சிலாகித்து அழித்தற் குரியகாலம் வந்தபோது அப்பகைவரைத் தலைகீழாகத் தள்ளியழிப்ப ரென்பதாம். கிழக்காந்தலை என்பதற்குத் 'தகைவின்றி யிறுவர்' என்ற பொருள்கூறி யிருத்தலால், அவர் தலை யுருண்டுவிழச் சாவர்என்பதுபெறப் படுகின்றதென்க.

தெளி:—(இ - வ்.) (தாம் வெல்லக்கருதிய அரசர்) செறுநரை - பகைவரை, காணின்-கண்டால், சுமக்க-(அப்பகைவர்க்கு முடிவுக்காலம் வரு மளவும்) பணியக்கடவர், (பணியவே), இறவரைகாணின் - அம்முடிவுக் காலம் வந்து முடியுமிடத்தி, தலை-(அவரது) தலை, (தடையில்லாது), கிழக் காம்-கீழ்விழும், (எ - று).

பகைமை நீரும்படி மிகவும் வணங்குக வென்பார் 'சுமக்க' என் றும், அவ்வாறு வணங்கவே அவர் தம்மைக் காத்துக்கொள்ளுதலேயிகழுவா ராதலால் தப்பாமல் கெடுவாரென்பார் 'கிழக்காந்தலை' என்றும் சொல்லி னர். தலைமீதுகொண்டதொரு பொருளைத் தள்ளும்போது அப்பொருள் தனது தலைகீழாக விழுமாதலால், அவ்விழுமியல்பு பெறப்பட்டது. இவ் விரண்டு பாட்டாலும் அரசர் காலம் பார்த்திருக்கு மிடத்துப் பகைமை தோன்றுமல் இருக்கவேண்டுமென்பது சொல்லப்பட்டது.

(க - து.) அரசர் பகைவரைக் கண்டால் அவர்க்கு முடிவுக் காலம் வருமளவும் பணிந்தொழுகி, அது வந்தபோதவரைவெல் லக்கடவர் என்பது.

8. If a king meets his enemy, let him show him all respect, until the time for his destruction is come; when that is come, his head will be easily brought low.

கூ. எய்தற் கரிய தியைந்தக்கா லங்னிலையே
செய்தற் கரிய செயல்.

பரி:—(இ - ள்.) பகையை வெல்லக்கருதும் அரசர் தம்மாலெய்து தற்கரியகாலம் வந்துகூடியக்கால், * அது கழிவதற்கு முன்பே † அது கூடாவழித் தம்மாற்செய்தற்கரிய வினைகளைச் செய்க. (எ - று).

‡ ஆற்றன் முதலியவற்றுற் ¶ செய்து கொள்ளப்படாமையின் 'எய் தற்கரியது' என்றும், அது தானேவந் தியைதல் அரிதாகலின் 'இயைந் தக்கால்' என்றும், இயைந்தவழிப் பின்னில்லாது ஒடுதலின் 'அக்நிலையே' என்றும், அது பெருவழிச் செய்யப்படாமையின் 'செய்தற்கரிய' என்

* அதுகழிவதற்கு முன்னே - (தம்மாலடைதற்கரிதான) காலம் நீங் குவதற்கு முன்பே (அக்காலம் வாய்த்தபோதே).

† அது கூடாவழித் தம்மாற்செய்தற் கரியவினைகளை - அக்காலம் வந்து கூடாதபோது தம்மால் செய்துமுடித்தற் கியலாதகாரியங்களை.

‡ ஆற்றன் முதலிய என்றதனுல் அறிவு ஆண்மை பெருமை யென் னும் மூவகையாற்றல்களே யன்றி நால்வகை உபாயமும், நால்வகை வலி யும், ஐவகைத் தொழிலும், அறவகைக் குணமும், பிறவும் கொள்க.

¶ செய்துகொள்ளப் படாமையின் - (தம்மாலடைதற்கரியகாலத்தை)

றங் கூறினர். இதனுற் காலம் வந்துழி வினைத்து செய்கவென்பது கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) (பகைவரைவெல்ல நினைக்கின்ற அரசர்) எய்தற் கரியது - (தம்மால்) பெறுதற்கரியகாலம், இயைந்தக்கால் - வந்துகூடினுல், அக்கிலேயே - அக்காலம் நீங்குவதற்கு முன்னே, செய்தற்கரிய - (அக்காலம் கூடாதபோதுதம்மால்), செய்தற்கு அரிய தொழில்களே, செயல் - செய் யக்கடவர், (எ - று).

ஆற்றல் முதலாயினவற்றுல் செய்துகொள்ளப்படாமையால் 'எய்தற் கரியது' என்றும், அக்காலம் தானே வந்து கூடுதல் அரிதாகலால் 'இயை ந்தக்கால்' என்றும், கூடியவிடத்துப் பின்னில்லாது ஒழிதலால் 'அக் கிலேயே' என்றும், அக்காலம் பெறுத விடத்துச் செய்யப்படாமையால் 'செய்தற்கரிய' என்றும் சொல்லினர். இதனுல் பகைவரை வெல்லக்கருது மரசர் அதனைக் காலம் வந்தவிடத்து வினைந்துசெய்யக்கடவரென்பதுசொ ல்லப்பட்டது.

(க-து.) பகைவரை வெல்லக்கூடிய காலம்வாய்த்தால், அக்கா லத்திலேயே அவரைவெல்லல் வேண்டும் என்பது.

9. If a rare opportunity occurs, while it lasts, let a man do that which is rarely to be done, but for such an opportunity.

கக * கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

பரி:—(இ - ள்.) வினைமேற் செல்லாதிருக்குங்காலத்துக் கொக்கு இருக்குமாறுபோல இருக்க; மற்றைச் செல்லுங்காலம் வாய்த்தவழி அது செய்து முடிக்குமாறுபோலத் தப்பாமற்செய்து முடிக்க,(எ - று).

மீன்கோடற்கு இருக்கும் வழி அது வந்தெய்துந் தூணியும் முன் னறிந்து தப்பாமற்பொருட்டு உயிரில்லதுபோன் றிருக்குமாகலானும், எய்தியவழிப் பின் தப்புவதற்கு முன்பேவினைந்து குத்துமாகலானும், இருப்பிற்குஞ் செயலிற்குங் கொக்கே † உவமையாயிற்று. 'கொக்கொக்க' என்றுராயினும் ‡ அது கூம்புமாறுபோலக் கூம்புகவென்றும், 'குத்தொ

* "அடக்க மூடையா ரறிவிலரென் றெண்ணிக், கடக்கக் கருதவும் வேண்டா-மடைத்தலையில், ஓமீ னேடு வுறுமீன் வருமனவும், வாடி யிரு க்குமாங் கொக்கு" என்பது மூதுரை.

† கொக்கொக்க என்பது இருப்பிற்குவமானமாம்; அதன்குத்தொக்க என்பது செயலிற்கு உவமானமாம்.

‡ அது கூம்புமாறுபோலக் கூம்புக - அக்கொக்கு அடங்கியிருக்கும் விதம்போல அடங்கி யிருக்கவேண்டும்.


க்க' என்றாயினும் * அது குத்துமாறுபோலக் குத்துகவென்றும் உரைக்கப்படும். இது † தொழில் உவமமாகலின், உவமை முகத்தால் இருப்பிற் குஞ் செயலிற்கும் இலக்கணங் கூறியவாறுயிற்று.

தெளி:—(இ - ள்.) கூம்பும் பருவத்து - தொழிலின்மேல் செல்லா நிருக்கவேண்டுங் காலத்தில், கொக்கொக்க - கொக்கு இருக்குமாறுபோல இருக்கக்கடவன், மற்றுச்சீர்த்தலிடத்து - மற்றைச் (செல்லுங்காலம்) வாய்த்தலிடத்தி, அதன்குத்தொக்க - அது தப்பாமற்செய்துமுடிக்குமாறு போலத் தப்பாது செய்து முடிக்கக்கடவன், (எ - று).

(கொக்கு) மீன்கொள்ளுதற்கு இருக்குமிடத்து அம்மீன் வருமளவும் (அம்மீன் தன்முயற்சியை) முன்னறிந்து தப்பிப்போகாமற் பொருட்டு உயிரில்லதுபோல இருக்கு மாகலாலும், (அம்மீன்) வந்தவிடத்துப் பின்பு தப்பிப்போவதற்கு முன்பே(அதனை) விரைந்து குத்துமாதலாலும், இருத்தலுக்கும் செய்தலுக்கும் கொக்கே உபமான மாயிற்று. 'கொக்கொக்க' என்றாயினும் அது கூம்புமாறுபோலக் கூம்புக என்றும், 'குத்தொக்க' என்றாயினும் அது குத்துமாறுபோலக் குத்துக என்றும் உரைத்துக்கொள்க. இது தொழிலுவமையணியாதலால், உவமானவாயிலாக இருத்தலுக்கும் தொழில் செய்தலுக்கும் இலக்கணம் சொல்லியவாறுயிற்று.

(க - து.) பகைவரை வெல்லக்கூடிய காலம் வாய்க்காதவிடத்து அடங்கியிருந்து, அதுவாய்த்தவழி அவரைத்தப்பாமற்கொல்லல்வேண்டும் என்பது.

10. At the time when a king should use self-control let him restrain himself like a heron; and, like it, let him strike, when there is a favourable opportunity.



பன்னிரண்டாம் அதிகாரம்.

இடனறிதல்—

On the Choice of a suitable place.

பரி:—அஞ்தாவது வலியுங் காலமும் அறிந்து பகைமேற்செல்வான் தான் வெல்லுதற்கேற்ற நிலத்தினை அறிதல். ‡ அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

தெளி:—அஞ்தாவது வலியும் காலமும் அறிந்து பகைவர்மேற் போருக்குச் செல்லுமரசன் தான் வெல்லுவதற்குத் தகுந்த இடத்தினை அறிதலாம். அதிகார முறைமையும் இதனுலே விளங்கும்.

---

* அது குத்துமாறுபோலக் குத்துக - அக்கொக்கு மீனைவிரைந்து குத்திக்கொல்வதுபோலப் பகைவரை விரைந்தழிக்கவேண்டும்.

† தொழிலை யுவமானமாகச் சொல்வது தொழிலுவமானமாம்.

‡ காலமறிதலென்னும் அதிகாரத்தின்பின் இடனறிதலென்னும் அதிகாரம் வைத்தமுறையும்.

க. தோடங்கற்க வெவ்வினையு மேள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

பரி:—(இ - ள்.) பகைவரை முற்றுதற்காவதோரிடம் * பெற்ற பின் அல்லது அவர்மாட்டு யாதோரு வினையையுந் தோடங்காதொழிக; அவரைச் சிறியரென் றிகழாதொழிக, (எ - று).

† முற்றுதல் - வளைத்தல். அதற்காம் இடமாவது ‡ வாயில்களாலும் ¶ நூழைகளாலும் அவர் புகலொடு போக்கொழியும்வகை ○ அரணினைச் சூழ்ந்து | ஒன்றற்கொன்று துணையாய்த் தம்முள் ‖ கலிலிலாத $ பலபடை யிருப்பிற்கும் மதிலும் † அகழு முதலிய ‡ அரண் செய்யப்பட்ட * அர சிருப்பிற்கும் ஏற்ற நிலக்கிடைக்கையும் நீருமுடையது. அது பெற்றால் இரண்டுஞ் செய்க வென்பதாம்.

தேளி:—(இ - ள்.) முற்றும் - (பகைவரை) வளைத்துக்கொள்வதற் காவதாகிய, இடம்-ஓரிடத்தை, கண்ட பின்னல்லது - பெற்றபின்னல்லா மல், எவ்வினையும் - யாதொரு தொழிலையும், தொடங்கற்க - (அப்பகைவ ரிடத்தில்) தொடங்காதிருக்கக் கடவர், எள்ளற்க - (அப்பகைவரைச் சிறி யரென்று) இகழாதிருக்கக்கடவர், (எ - று).

முற்றுதல்-பகைவரை வளைத்துக் கொள்ளுதல். அப்பகைவரை வளை த்தற்கா மிடமாவது வாயில்களாலும், நிழறைகளாலும், அப்பகைவர் வரு தலுடனே போகுதல் ஒழியும்வகை அரணைச்சூழ்ந்து ஒன்றற்கொன்று துணையாய்த் தம்முள்ளே கலிலில்லாத பலபடைகள் இருப்பிற்கும், மதி லும் அகழும் முதலாகிய அரண்செய்யப்பட்டஅரசிருப்பிற்கும் ஏற்ற நிலக் கிடக்கையையும் நீரையும் உடையது. அவ்விடத்தைப்பெற்றால் தொடங் குதல், இகழுதலாகிய விரண்டும் செய்கவென்பதாம்.

* பெற்றபின் அல்லது - பெற்றாலல்லாமல்.

† பகைவர் எவ்வகையாலும் வெளியிற் செல்லாதபடி அவரை வளைத் துக்கொள்ளுதல் முற்றுகை யெனப்படும்.

‡ வாயில் - பலரும் கோட்டையினுள் வெளிப்படையாகப் போக்கு வரவு செய்தற்குரிய வழி.

¶ நூழை - போர்செய்தற் குரியவர்கள் இரகசியமாகப் போக்குவரவு செய்தற்குரிய சுரங்கவழி. ○ அரண் - கோட்டை.

| ஒன்றற்கொன்று துணையாய் - முன்னுள்ள சேனைக்குப் பின்னு ள்ளசேனை யுதவியாய்.

‖ கலிலிலாத - இளைத்தலில்லாத. $ பலபடை - கால்வகைச்சேனை.

† அகழ் - கோட்டையைச் சூழ்ந்துள்ள நீர் நிலை; அஃதாவது அகழி.

‡ அரண் - காப்பு. * அரசிருப்பிற்கும் - அரசன் தங்குவதற்கும்.

(க - து.) பகைவரோடு போர்புரிவதற்கேற்ற இடத்தைப் பெறுதற்கு முன் அவரையெதிர்க்காதும் இகழாதும் இருத்தல் வேண்டும் என்பது.

1. Let not a king despise an enemy, nor undertake any thing against him, until he has obtained a suitable place for beseiging him.

உ. முரண்சேர்ந்த மோய்ம்பி னவர்க்கு * மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்.

பரி:—(@ - ள்.) மாறுபாட்டோடுகூடிய வலியினையுடையார்க்கும் அரணைச்சேர்ந்து நாகின்ற வாக்கம்பலபயன்களையுங்கொடுக்கும்,(எ-று).

மாறுபாடாவது ஞாலம் பொதுவெனப் பொரு அரசர் மனத்தின் கண் நிகழ்வதாகலானும், † வலியுடைமை கூறியவதனானும், ‡ இது பகை மேற்சென்ற அரசர்மேற்றாயிற்று. உம்மை-சிறப்பும்மை. ¶ அரண்சேராதா மாக்கமும் உண்மையின், ○ ஈண்டாக்கம் விசேடிக்கப்பட்டது. ஆக்கமென்றது | அதற்கேதுவாய முற்றினை. ‖ அது கொடுக்கும் பயன்களாவன: பகைவரால் தமக்கு §இலிவின்மையும், தாம் நிலைபெற்று நின்று (1) அவரை கலிதலும் முதலாயின.

* "மணிநீரு மண்ணு மலையு மணிமிழற்,நாடு முடைய தரண்"என்ற அரண் அதிகாரத்துக் கூறுவதிங்குணர்தற்பாற்றும்.

† மொய்ம்பினவர்க்கும் என்று வலியுடைமை கூறியவதனானும்.

‡ இது - மாறுபாடு (விரோதம்).

¶ அரண் சேராத ஆம் ஆக்கமும் இருத்தலால்'அரண் சேர்ந்தாம் ஆக்கம்' என்று கூறப்பட்டதென்க. இதனால் அரண் (காப்பு) இல்லாமல் தமது வலிமையினால் பகைவரை வளைத்தலும், அரணைச் சூடிப் பகைவரை வளைத்தலும் என இருவகை முற்றுகை பெற்றுமென்க.

○ ஆக்கம் என்பது அரண்சேர்ந்தாம் என்னும் விசேஷணத்தோடு (அடையோடு) கூடிவந்தமையின், 'ஈண்டாக்கம் விசேடிக்கப்பட்டது' என்று கூறப்பட்டது. விசேடிக்கப்படல் விசேஷணத்திடன்கூடிவருதல். இங்கு ஆக்கமென்பது அரண்சேர்ந்தாம் என்னும் விசேஷணத்திடன் கூடி 'அரண்சேர்ந்தாம் ஆக்கம்' என்று வந்திருத்தலைக் காண்க.

| அதற்கேதுவாய முற்றினை-ஆக்கத் (செல்வத்) திற்குக்காரணமான வளைத்தலை. ஆக்கத்திற்குக்காரணமான முற்றினை ஆக்கமென்றது காரிய வாகு பெயராம்.

‖ அது—தாம் அரணைச் சூடிப்பகைவரை வளைத்தல்.

§ இலிவின்மையும் - வருத்தமில்லாமையும்.

(1) அவரை கலிதலும் - பகைவரை வருத்திதலும்.

தெளி.—(இ - ன்.) மூரண் - மாறுபாட்டோடு, சேர்ந்த—கூடிய, மொய்ம்பினவர்க்கும் - வலியினை யுடையவருக்கும், அரண் - அரணை, சேர்ந்து - கூடி, ஆம் - ஆகின்ற, ஆக்கம் - பெருக்கமானது, பலவும் - பல பயன்களையும், தரும் - கொடுக்கும், (எ - று).

மாறுபாட்டாவது பூமி பலவரசர் ஆளுவதற்குப் பொதுவாயுள்ளதென்று பொறுக்காத அரசரது மனதிலேதோன்றுவதாதலாலும், வலியுடைமை சொன்னவதனாலும், இது பகைவர்மேற் போர்க்குச்சென்ற அரசர்மேல தாயிற்று. மொய்ம்பினவர்க்கும் என்ற வும்மை உயர்வு சிறப்பும்மை அரண்சேராதஆகின்ற ஆக்கமும் இருத்தலால், இக்கு ஆக்கம் விசேடிக்கப்பட்டது. ஆக்கமென்றது அவ்வாக்கத்திற்கு எதுவாகிய வளைத்தலே. அது கொடுக்கும் பயன்களாவன: பகைவரால் தமக்கு கலிவில்லாமையும், தாம் சிலை பெற்று நின்று அவரை கலிவுசெய்தலும் முதலானவை.

(க-து.) பகைவரரணை யடைந்துவலிக்கும் வலியுடைய வரசர்க்கு, அது பலபயன்களையும் கொடுக்கும் என்பது.

2. Even to those who are men of power and expedients, an attack in connection with a fortification will yield many advantages.

கூ. ஆற்றரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின்.

பரி:—(இ - ள்.) வலியர் அல்லாதாரும் வலியராய் வெல்வர், * அதற்கேற்ற இடத்தினையறிந்து தம்மைகீ காத்துப் பகைவர்மாட்டு வினை செய்வாராயின், (எ - று).

† தம்மை யென்பதூஉம் வினை யென்பதூஉம் அவாய் நிலையான் வந்தன. காத்தல் - பலகவரான் ‡ கலிவு வாராமல் ¶ அரணுறும்படையானுங் காத்தல் - o இவ்வாற்றான் வினை செய்வாராயின் || மேற்சொல்லிய வலியின்றியும் வெல்லுமென்பதாம்.

தெளி:—(இ - ள்.) ஆற்றரும் - வலியரல்லாதவரும், ஆற்றி - வலியுடையவராய், அடுப - வெல்வர், இடன் - (அதற்கேற்ற) இடத்தை,

* அதற்கேற்ற - (பகைவரை) வெல்லுதற்குத் தகுந்த.

† போற்றியென்னும் வினையும் செயின் என்னும் வினையும் செயப்படு பொருளை வேண்டி நிற்றலின், அதற்கேற்ப முறையே தம்மையென்பதும் வினையென்பதும் வருவித்துரைக்கப்பட்டன.

‡ கலிவு - கெடுதி. ¶ அரண் - மதில்முதலியன.

o இவ்வாற்றான்—பகைவரை வெல்லுதற்குரிய இடத்தினையறிந்து தம்மைக் காத்துக்கொள்ளும் இவ்வழியால். இவ்வாறரசர் என்னும் பாடமுண்டு.


|| மேற்சொல்லிய—இவ்வதிகாரத்தின் இரண்டாவதருளிச் கூறிய.

அறிந்து - தெரிந்து, போற்றி - (தம்மைக்) காத்துக்கொண்டு, போற்றார் கண்—பகைவரிடத்து, செயின் - (தொழிலைச்) செய்வாராயின், (எ - று).

தம்மையென்பதும் தொழிலை யென்பதும் அவாய் நிலையால் வந்தன. காத்தல் - பகைவரால் நலிவுவாரா திருக்கும்படி அரணலும் படையாலும் காத்தல். இவ்வாறுகத் தொழில் செய்வாராயின், முற்கூறிய வலியில்லா திருந்தாலும் அவர் பகைவரை வெல்வரென்பதாம்.

(க - து.) வலியில்லாத அரசரும் இடமறிந்து போர்புரிந்தால் வலியுடையவராய்ப் பகைவரை வெல்வர் என்பது.

3. Even the powerless will become powerful and conquer, if they select a proper field of action, and guard themselves, while they make war on their enemies.



ச. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

பரி:—(இ - ள்.) தாம் வினைசெய்தற்கேற்ற இடத்தினை யறிந்து சென்ற அரசர் அரணைப் பொருந்திநின்று அதனைச் செய்வாராயின் * அவரை வெல்வதாக எண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை யிழப்பர், (எ - று).

† அரணென்பது அவாய்நிலையான் வந்தது. ‡ எண்ணமென்றது எண்ணப்பட்ட தம்வெற்றியை. ¶ 'எண்ணமிழப்பர்' என்றார்; o அவர் வினைசெய்யாமல் தம்மைக் காத்தமையின். இதனால் | அவர் பகைவர் தோற்பரென்பதாயிற்று. இவை ஈன்குபாட்டானும் ‖ பகைவரரணின் புறத்திறுப்பார் அதற்காமிடம் அறிதல் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) இடன் - (தாம்தொழில் செய்தற்கேற்ற) இடத்தினை, அறிந்து - தெரிந்து, துன்னியார் - சென்றவரசர், துன்னி - (அரணைப்) பொருந்தி, (நின்று), செயின் - (அத்தொழிலைச்) செய்வாராயின்,

* அவரை - அவ்வரசரை.

† துன்னி என்னும் வினை செயப்படுபொருளை வேண்டி நிற்றலால், அதற்கேற்ப அரண் என்பது வருவிக்கப்பட்டது.

‡ எண்ணமென்பது எண்ணப்பட்ட தம் வெற்றியையுணர்த்துதலால், தொழிலாகு பெயராம். எண்ணம் என்பது அம்ஈற்றுத்தொழிற்பெயர்.

¶ அதனை யிழப்பர் என்றும் பாடமுண்டு.

o அவர்வினை செய்யாமல் - பகைவர் போர்செய்யாது.

| அவர்—இடமறிந்து போர்க்குச் சென்ற அரசர்.

‖ பகைவரது கோட்டையின் புறத்தே (வெளியே) தங்குவார் தங்கு தற் காகுமிடமறிதல் சொல்லப்பட்டது.

எண்ணியார் - (அவ்வரசரை வெல்வதாக) எண்ணியிருந்த பகைவர், எண்ணம் - அவ்வெண்ணத்தை, இழப்பர் - இழந்துவிடுவர், (எ - று).

அரண் என்பது அவாய்நிலையால் வந்தது. எண்ணமென்றது எண்ணப்பட்ட தம் வெற்றியை. பகைவர்போர்செய்யாமல் தம்மைச் சார்ந்துகொள்ளுதலால் 'எண்ணமிழப்பர்' என்றார். இதனுல் அவர் பகைவர்தோற் பரென்பதாயிற்று. இவை நான்குபாட்டாலும் பகைவரது அரணின்புறத்துத் தங்குவார் தங்குவதற்கு ஆகுமிடமறிதல் சொல்லப்பட்டது.

(கூ-து.) அரசர் இடமறிந்து சென்று போர்புரிந்தால், அவரை வெல்ல எண்ணியபகைவரது எண்ணம் முற்றுப்பெறுதென்பது.

4. If they who draw near to fight choose a suitable place to approach their enemy, those who have thought they will conquer them, will lose that thought.

கூ. நெடும்புனலுள் வெல்லு முதலே யடும்புனலி
னீங்கி னதனேப் பிற.

பரி:—(இ - ள்.) முதலே ஆழமுடைய நீரின்கண் ஆயின் † பிறவற்றை யேல்லாந் தான் வேல்லாநிற்கும்; அப்புனலின் நீங்குமாயின் அதனேப் ‡ பிறவெல்லாம் வேல்லாநிற்கும், (எ - று).

எனவே, எல்லாரும் தங்கிலத்து வலியரென்பது கூறப்பட்டது. பிற என்பது முன்னுங் கூட்டப்பட்டது. நிலப்படா நீரின்கண் பிறநிற்றல் ஆற்றுமையின், அவையெல்லாம் முதலேக்கெளியவாம்; அவை இயங்குதற்குரிய நிலத்தின்கண் அஃதியங்கல் ஆற்றுமையின் அஃதவற்றிற் கெல்லாம் எளிதாமென்றது, மேற்செல்லும் அரசர் பகைவர் நிற்றல் ஆற்றுவிடாநிற்க செல்வராயின் அவர் தமக் கெளியராவர்; அன்றித் தாம் நிற்றல் ஆற்றுவிடத்துச் செல்வராயின் அவர்க் கெளியராவரென்னும் பொருள் தோன்ற நின்றமையின், இது பிறிது மொழிதலென்னும் அலங்காரம். அவரை அவர்நிற்றல் ஆற்றுவிடத்துச் சென்றுவெல்க வென்பதாம்.

தேளி:—(இ - ள்.) முதலே—,நெடும்புனலுள் - ஆழமுடைய நீரில், (ஆனல்), பிற - பிறவுயிர்களெல்லாம், வெல்லும் - (தான்) வெல்லாநிற்கும், புனலின்-அந்நீரினின்றும், நீங்கின் - நீங்குமாளுல், அதனே - அம்முதலேயை, பிற-பிறவுயிர்களெல்லாம், அடும் - வெல்லாநிற்கும், (எ - று).

எனவே, எல்லாரும் தமதிடத்தில் வலியராயிருப்பாரென்பது சொல்லப்பட்டது. பிற என்பது வெல்லுமென்பதற்கு முன்னுங் கூட்டப்பட்டது. நிலப்படாத நீரினிடத்துப் பிறவுயிர்கள் நிற்றல் முடியாமையால் அவையெல்லாம் முதலேக்கு எளியனவாகும்; அவை சஞ்சரித்தற்குரிய நில

† பிறவற்றை - யானை முதலிய பிராணிகளே.

‡ பிறவெல்லாம் - நரி முதலிய பிராணிகளியாவும்.

தண்ணீரிடத்து அம்முதலை சஞ்சரித்தல் முடியாமையால் அஃது அந்த உயிர் கட்கெல்லாம் எளிதாமென்றது, பகைவர் மேற் போர்க்குச் சென்ற அரசர் பகைவர் கிற்றல் முடியாதவிடத்தையறிந்து செல்லுவாராஞல் அப்பகைவர் தமக்கு எளியவராவார்; அவ்வாறல்லாமல் தாம் கிற்றல்முடியாதவிடத்துச் செல்லுவாராஞல்அப்பகைவருக்கு எளியவராவர்என்னும் பொருள்தோன்ற கின்றமையால், இது பிறிது மொழிசலென்னு மலங்காரமாம். அப்பகை வரை அவர் கிற்கமாட்டாத விடத்துச் சென்று வெல்ல வேண்டுமென்ப தாம்.

(க - து.) *தமக்கு வாய்ப்பான விடத்தைவிட்டுப் போர்புரி யும் வலியவர், வாய்ப்பானவிடத்திலுள்ள எளியவரிடத்துத்தோ ல்வியடைவார் என்பது.*

5. In deep water, a crocodile will conquer all other animals; but if it leave the water, other animals will conquer it.

கூ. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

பரி:—(இ - ள்.) நிலத்தின்கண் ஓடுங் * கால்வலிய நெடிய தேர் கள் கடலின்கண் ஓடமாட்டா; இனி அக்கடலின்கண் ஓடும் † நாவாய்க ளும் நிலத்தின்கண் ஓடமாட்டா, (எ - று).

‡ *'கடலோடா' என்ற மறுதலையடையான் நிலத்தின்கண் ஓடுமென் பது வருவிக்கப்பட்டது. கால்வனெடுந்தேரென்பது ¶ ஓடுதற்கேற்றகாலும் பெருமையு முடையவாயினு மென்பதுபடநின்றது. மேற்சென்றூர் பகைவ ரிடங்களே யறிந்து அவற்றிற்கேற்ற கருவிகளான் வினை செய்க வென் பது தோன்றநின்றமையின், இதுவும் மேலை அலங்காரமாயிற்று.*

தெளி:—(இ - ள்.) *கால்வல் (நிலத்தில் ஓடும்) வலிமை பொருந்திய உருளைகளையுடைய, நெடுந்தேர் - பெரிய தேர்கள், கடல் - கடலில், ஓடா - ஓடமாட்டாவாம், கடலோடும் - (இனி) அக்கடலில் ஓடும், நாவாயும் - மரக் கலங்களும், நிலத்து - நிலத்தில், ஓடா - ஓடாமாட்டாவாம், (எ - று).*

'கடலோடா' என்ற எதிர்மறையடையால் (கால்வனெடுந்தேர்) நில த்தில் ஓடும் என்பது வருவிக்கப்பட்டது. கால்வனெடுந்தேர் என்பது

---

* *கால் - சக்கரம்.* † *நாவாய்கடாரமும் - மரக்கலங்களும்.*

‡ *கால்வல் நெடுந்தேர் என்பது கடலோடா என்னும் மறுதலை அடை யோ (விசேஷணத்தோ)கூடிவந்தமையின், நிலத்தின்கண் ஓடும் என்பது வருவிக்கப்பட்டது. [மறுதலையடை - எதிர்மறையாகவந்த விசேஷணம்.]*

¶ *(தேர்கள்) ஓடுதற்குத்தக்க சக்கரமும் உறப்புக்களின் அமைப்பால் பெருமையு முடையனவானலும்.*

ஓதற்கேற்ற காலும் பெருமையும் உடையனவா யிருப்பினுமென்பது தோன்ற நின்றது. பகைவர் மீது போர்க்குச் சென்றவர் பகைவரிடங்களை யறிந்து அவ்விடங்களுக்கு ஏற்ற சாதனங்களால் தொழில் செய்யவேண்டு மென்பது தோன்ற நின்றமையின், இக்குறளும் பிறிது மொழிதலென் னும் அலங்காரமாம். கால்வல் என்பது வல்கால் என்றன்வயிக்கப்பட்டது.

(க - து.) மிகமேன்மையுடையாரும் தமக்குரிய இடத்தை விட்டுச்சென்றால் ஒரு காரியமுஞ் செய்தல்முடியாதுஎன்பது.

6. The strong-wheeled, lofty charriot cannot run on the sea; and ships, which sail on the sea, cannot run on the land.

எ. அஞ்சாமை யல்லாற் றமேவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

பரி:—(இ - ள்.) பகையிடத்து வினைசெய்யுந் திறங்களெல்லாம் ஒழியாதெண்ணி † அவற்றை அரசர் இடத்தோடு பொருந்தச் செய்வாயின், ‡ அச்செயற்குத் தந்திரமையல்லதுபிறிதொரு துணை வேண்டுவதில்லை, (எ - று).

¶ திண்ணியராய் நின்று செய்துமுடித்தலே வேண்டுவதல்லது 'துணை வேண்டா' என்றார்; அவ்வினை தவறுதற் கேதுவின்மையின். இவை மூன்றுபாட்டானும் வினைசெய்தற்காம் இடனறிதல் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்) (அரசர்) எஞ்சாமை - (பகைவரிடத்துத் தொழில்செய்யும் வித்தங்களெல்லாம்) குறையாமல், எண்ணி - ஆலோசித்து, (அவற்றை), இடத்தால் - இடத்தோடு, (பொருந்த), செயின் - செய்வாராயின், (அச்செயலுக்கு), அஞ்சாமையல்லாமல் - (தமது) தைரியமல்லாமல், துணை - (வேறொரு) துணை, வேண்டா - வேண்டுவதில்லை, (எ - று).

அத்தொழில் தவறுதலுக்குக்காரணம் இல்லாமையால், தைரியமுடையவராய் நின்று செய்துமுடித்தலே வேண்டுவதல்லாமல் 'துணைவேண்டா' என்றார். இவை மூன்றுபாட்டாலும் போர்செய்தற்கு ஆகிடமறிதல் சொல்லப்பட்டது.

(க - து.) பகைவரிடத்துச் செய்யவேண்டிய தொழில்களைக் குறைவிலா தாலோசித்து இடத்தோடுபொருந்தச் செய்யவல்ல அரசர்க்குத் தைரியத்தையிட வேறுதுணை வேண்டுவதில்லை.

† அவற்றை - பகைவரிடத்து வினைசெய்யுந்திறங்களை.

‡ அச்செயற்கு - இடத்தோடு பொருந்தச் செய்தற்கு.

¶ திண்ணியராய்நின்று செய்துமுடித்தலே வேண்டுவதல்லது - கலங்காத மனமுடையவராய் எதிர்த்துநின்று போர்செய்து பகைவரை முடிக்க வேண்டியதே யல்லாமல்.

7. You will need no other aid than fearlessness, if you thoroughly reflect on what you are to do, and select a suitable place for your operations.

அ. சிறுபடையான் செல்லிடஞ் சேரி * னுறுபடையா
னூக்க மழிந்து விடும்.

பரி:—(இ - ள்.) பெரும்படையுடைய அரசன் ஒனைச் சிறுபடை யுடையானை அழித்தல் கருதி † அவன் புகலிச்சென்று சாருமாயின் ‡ அவனும் றன்பெருமை யழியும், (எ - று).

செல்லிடம் - அவனுக்குச் செல்லுமிடம். ¶ அழிந்திவிடு மென்பது எழுந்திருக்கு மென்றுற்போல ஒரு சொல். 0 ஊக்கத்தின் அழிவு உடை யான்மே லேற்றப்பட்டது. தன் $ படைப்பெருமைநோக்கி இடநோக்காது செல்வனுயின், அஃது அப்படைக் கொருங்குசென்று வினைசெயல் ஆரா மையானுகப் பயிற்சியின்மையானுக அப்பெருமையாற் பயனின்றித்தானழி ந்து விடுமென்பதாம்.

தெளி:—(இ - ள்.) உறுபடையான் - பெருஞ்சேனையை யுடைய அரசன், சிறுபடையான் - (மற்றைச்) சிறிய சேனையுடையவனை, (அழிக்க நினைத்து), செல்லிடம் - (அவனுக்குப்) புகலாயுள்ள விடத்தை, சேரின் - போய்ச் சேர்வானுனால், (அவனல்), ஊக்கம்-(தன்)பெருமை, அழிந்துவிடும்- அழியும், (எ - று).

செல்லிடம் - அச்சிறுபடையானுக்கதிகாரஞ் செல்லுமிடம். அழிந்து விடுமென்ப தொருசொல். ஊக்கத்தினழிவு ஊக்கமுடையான்மேலேற்றப் பட்டது.(உறுபடையான்)தன்சேனையின் பெருமையை நோக்கியிடம்நோக் காமல்செல்வானுயின்,அச்செலவு அச்சேனைக்கு ஒருமித்துச்சென்றுபோர்த் தொழில் செய்தல் கூடாமையாலாவது பழக்கமில்லாமையாலாவது அப்பெரு மையாற் பயனில்லாமல் தான் அழிந்துவிடுவா னென்பதாம்.

* உற - மிகுதிப்பொருளை யுணர்த்தும் உரிச்சொல்.

† அவன்புகலி - சிறுபடையான் தங்கியிருக்கும் இடத்தை.

‡ அவனும் - அச்சிறுபடையானும்.

¶ எழுந்திருக்கும் என்பது எழும் என்று பொருள்பட்டு ஒரு சொல் லாய் நின்றுற்போன்று, அழிந்திவிடும் என்பது அழியும் என்று பொருள் பட்டு ஒரு சொல்லாய் நின்றதென்க.

0 ஊக்கத்தின் (பெருமையின்) அழிவு ஊக்கமுடையான்மேல் எற் றிச் சொல்லப்பட்டது. உறுபடையான் ஊக்க மழிந்து விடும் என்பதி னும்பி பொன் பெரியன் என்றுற்போன்று நிலைமொழி வலிமையாம்.

$ படைப்பெருமை - சேனையின் மிகுதி.

(க - து.) சிறியசேனையுள்ள அரசன்மீது அவனது இடத்தே போர்செய்யக் கருதிச்செல்லும் அரசன் பெருஞ்சேனையுள்ளவனேயிருந்தாலும் அவனுலழிவான் என்பது.

8. The power of one who has a large army will perish, if he goes into ground where only a small army can act.

கூ. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

பரி:—(இ - ள்.) † ஆண்மை அழிந்தற் கருமையும் ‡ பெருமையாகிய ஆற்றலும் உடையர் அல்லராயினும், ¶ வினைக்குரிய மாந்தரை அவருறைகின்ற நிலத்தின்கட் சென்று $ தாக்குதலரிது, (எ - று).

0 நிலத்தோடென்பது வேற்றுமை மயக்கம். ஆண்மை யுடையாரைச் § சிறுமை நோக்கி இருப்பின்கட்சென்றுதாக்கின், * அவர்அவ்விடப்பிற்போதற்றுணிவினர் அன்றிச் சாதற்றுணிவினராவர்; ஆகவே, அவர்க்குப் பெரும்படை உடையு மென்பதாம்.

தெளி:—(இ - ள்.) சிறைநலனும் - அரணழித்தற் கருமையையும், சீரும் - பெருமையாகிய ஆற்றலும், இலரெனினும் - (உடையர்) அல்லராயினும், மாந்தர் - (தொழில் செய்தற்குரிய) மனிதரை, உறைநிலத்தோடு - (அவர்) வசிக்கின்ற இடத்தில், (சென்று), ஒட்டல் - தாக்குதல், அரிது - முடியாது, (எ - று).

நிலத்தோடென்பது நிலத்திலென்னும் பொருளில் வந்தமையின், வேற்றுமை மயக்கமாம். ஆண்மை யுடையவரைச் சிறுமை நோக்கி அவரிருப்பிடத்திற் சென்ற தாக்கினுல், அவர் அவ்விடத்தைவிட்டுப்போவதற்குத் துணிவினராகாமல் சாவதற்குத் துணிவுகொண்டவராய்ப் போர்செய்வாராவர்; ஆகவே, அவர்க்குப் பெரியசேனை தோற்றோடிப் போமென்பதாம்.

† ஆண் - கோட்டை. ‡ பெருமையாகிய ஆற்றல் - பொருளும் சேனையும்.

¶ வினைக்குரியமாந்தர் - போர் செய்தற்குரிய வீரர். $ தாக்குதல் - வெல்லுதல்.

0 நிலத்தோடு என்பதன் மூன்றனுருபு தனக்குரிய பொருளைவிட்டு (நிலத்தின் கண் என) ஏழாம்வேற்றுமைக்குரிய இடப்பொருளில் வந்தமையின் வேற்றுமை மயக்கமாயிற்று.

§ சிறுமை நோக்கி - சிறைநலனுஞ் சீரு மில்லாமையைப்பார்த்து.

* ஆண்மை (பராக்கிரமம்) உடையவர் தாமிருக்கும் இடத்தைவிட்டுப் போரும் நிச்சயமுடையவராகாமல் சாரும் நிச்சயமுடையராவர்; ஆகவே, அவ்வாண்மை யுடையார்க்குப் பெருஞ்சேனை தோற்கும் என்பதாம்.

(க - து.) போர்செய்தற்குரிய பகைவர் அரண்வலியும் பெருமையும் இல்லாதவராயிருப்பினும், அவரை அவரிருப்பிடத்திற் சென்று வெல்லுதல் அரிதாம் என்பது.

9. It is an hazardous thing to attack men in their own country, although they may neither have power nor a good fortress.



க0. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

பரி:—(இ - ள்.) பாகர்க் கடங்காவுமாய் † வேலாட்களைக் கோத்த கோட்டமுமாய ‡ களிறுகளை, அவை காலாழும் இயல்பிற்றய சேற்று நிலத்துப் பட்டுழி நரி கொல்லும், (எ - று).

முகம்—ஆகுபெயர். ஆண்மையும் பெருமையும் உடையாரும் ¶ தமக்கேலா நிலத்துச் செல்லின் அவற்றாற் பயனின்றி மிகவும் எளியரால் அழிவரென்பது தோன்ற நின்றமையின், இதுவும் அவ்வலங்காரம் வேலாழ் முகத்த என்ற பாடமோதுவாருமுளர். $ வேற்படை குளித்த முகத்தவாயின் 0 அதுவும் நரியதற் கேதுவாய் முடிதலின், அது பாடம் அன்மையறிக. இவை மூன்று பாட்டானும் பகைவரைச் சார்தலாகாவிடனும் சார்ந்துழிப் படும் இழுக்குங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) கண்ணஞ்சா - பாகர்க்கு அடங்காதனவுமாய், வேலாண்முகத்த - வேலேயுடைய ஆண்களைக்கோத்த கொம்பை யுடையனவும் ஆய, களிறு - யானைகளை, (அவை), காலாழ் - கால்புதையும் (இயல்பினதாகிய), களரில் - சேற்று நிலத்தில், (அகப்பட்டவிடத்து), நரி - நரிகள், அடும் - கொல்லும், (எ - று).

முகமென்னும் முதற்பொருளின் பெயர் அதன் சினைப்பொருளாகிய கொம்பை யுணர்த்துதலின், பொருளாகுபெயராம். ஆண்மையும் பெருமை

† வேலரட்கன் - வேற்படையையுடையவீரர்.

‡ களிறு - களிப்பையுடையது (யானை); களிப்பு - மதமயக்கம்.

¶ தமக்கேலா நிலத்துச்செல்லின் - தமக்குப் போர்செய்தற் குரியதாகாத விடத்துப்போனால். "தமக்குரிய வல்லா நிலத்துச்செல்லின்" என்றும் பாடமுண்டு.

$ வேற்படை தைத்த முகமுடையனவானால்.

0 அதுவும் நரி அதற்கேதுவாய் முடிதலின் - வேற்படை முகத்திற் குளித் (தைத்) திருத்தலும் நரி யானையைக் கொல்லுவதற்குக் காரணமாய் முடிதலால். [வேல்தைத்துப் பலவீனப்பட்டுப்போன யானையை நரி சேற்று நிலத்தில் கொல்லும் என்று கூறுவதில் யாதொரு சிறப்புமின்றா மென்பது.]

யும் உடையவரும் தமக்குத் தகாத இடத்திற்சென்றால் அவ்வாண்மைபெரு மைகளால் பயனின்றி மிகவும் எளியவரால் அழிவுசெய்யத் தோன்றுமிற் றமையால், இக்குறளும் பிறிதுமொழிதலலங்காரமாம். இவை மூன்றுபாட் டாலும் பகைவரைச் சார்தலாகாத இடமும் சார்ந்தலிடத்து உண்டாகும் குற்றமும் சொல்லப்பட்டன

(க - து.) வலிமையுடையவர்தமக்குப்பொருந்தாத இடத்திற் போர்க்குச்செல்லுவாராயின், எளியவரால் தோல்வியடை வார்.

10. A fox can kill a fearless, warrior-faced elephant if it go into mud in which its legs sink down.

பதின்மூன்றும் அதிகாரம்.

தெரிந்து தெளிதல்—On Reflection Before Decision.

பரி:—அஃதாவது அமைச்சர் † முதலாயினரைப் பிறப்புக்குணம் அறிவேன்பனவற்றையும் செயலையும் ‡ காட்சி, கருத்து, ஆகமமென்னும் அவைகளாலே ஆராய்ந்து தெளிதல். ¶ வலிமுதன் மூன்றுமறிந்துபகை மேற் செல்வானுக்குத் § தானே வினையுறுசீ செய்தற் பொருட்டும் $ அறைபோகாமைப் பொருட்டும் 0 இது வேண்டுதலின் [] அவற்றின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது மந்திரிமுதலாயினரைப் பிறப்புக் குணம் அறிவு என்பனவற்றையும் செய்கையையும் காட்சி, கருத்து, ஆகமம் என்னும் பிர மாணங்களினால் ஆராய்ந்து தெளிதல். வலிமுதலாகிய மூன்றையும்அறிந்து பகைவர்மேற் போர்க்குச் செல்லுவானுக்குச் சேனை போர்த்தொழிலே மன மொத்துச் செய்தற் பொருட்டும், அறைபோகாமைப் பொருட்டும் இது வேண்டுதலால் அவற்றின் பின் வைக்கப்பட்டது.

† முதலாயினர் - புரோகிதர், சேனாபதியர், தூதர், சாமணர்முதலான வர்.

‡ பிரத்தியட்சம், அனுமானம், சப்தமென்னும் பிரமாணங்களினால்.

¶ வலி முதன் மூன்றுமறிந்து - வலி, காலம், இடமென்னு மூன்றை யுந்தெரிந்து. § தான் என்றும் பாடமுண்டு.

$ அறைபோகாமற் பொருட்டும் என்றும் பாடமுண்டு.

அறைபோதல் - கீழறுத்துச் செல்லுதல். அஃதாவது சத்துருவிற்குப் பயந்து கீழறையால்(சுரங்கவழியால்)செல்லுதல். அறைபோகாமை—கீழறு த்துச்செல்லுதலின்மை, அஃதாவது பின்வாங்காதிருத்தல்.

0 இது—தெரிந்து தெளிதல்.

[] அவற்றின்பின் - வலியறிதல் முதலியவற்றின்பின்.

க. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
நிறந்தெரிந்து தேறப் படும்.

பரி:—(இ - ள்.) அரசனுற் றெளியப்படுவோன் ஒருவன் அறமும், பொருளும், இன்பமும், உயிர்ப்பொருட்டான் வரும் அச்சமும் என்னும் உபதை நான்கின் நிறத்தான் மனவியல்பு ஆராய்ந்தால் பின்புதெளியப் படும், (எ - று).

அவற்றுள், † அறவுபதையாவது புரோகிதரையும் ‡ அறவோரையும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோன் அன்மையின் இவனைப்போக்கி அறலும் ¶ உரிமையு முடையான் ஒருவனை வைத்தற்கண்ணினம்; இது தான் பாவர்க்கும் இயைந்தது, நின்கருத்து என்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத்தலைவனையும் அவனை

[அறவுபதை - அறநெறியைக் கூறிச் சோதித்தல்.]

† "அறவோர் புரோகி தரைவிடுத்திட் டவரா லிந்தவரசன்ருன்
அறவோ னல்ல னிவற்போக்கி யறனே ரிமை யுடையானை
உறவே வைத்தற் கெண்ணினமீ தொத்த தெவர்க்கு நினகருத்தென்
உறவோ தெனச்சூ ளுறவோடு மோர்த்தே யொருவன் றனைத்தெளிக.

[பொருளுபதை - பொருள் நெறியைக் கூறிச் சோதித்தல்.]

சேனைத் தலைவ னெமதுமனைச் சேர்ந்தா ரையுஞ்விட் டிவ்வரசன்
ஈனப் பொருளா சைய னிவனே யிழுக்கிக் கொடையோ ரிமையுடை
யானைப் புரத்தற் கெண்ணினமீ தமைந்த தெவர்க்கு நின்கருத்தென்
ஊனப் படாமை யுரைத்திடெனச் சூளோ டுரைப்பித் தேதெளிக.

[இன்பவுபதை—இன்பநெறியைக் கூறிச் சோதித்தல்.]

"தொன்ம தொட்ட வரிமையொடு சூழ்ந்த தவமூ தாட்டியைவிட்
டொன்று முரிமை தனிலின்ஞ ஞணைக்கண் யெய்தி யெனைவிடுத்தான்
சென்றங் கவனைக் கூடுதியேற் றெரிந்த பொருளுங் கூடுதினைக்
கென்று தெளியச் சூளுறவோ டிசைப்பித் திதனு ணுன்தெளிக.

[அச்சவுபதை—அச்சமுண்டாம் வழியைக் கூறிச் சோதித்தல்.]

ஒருமித்த மேலிட்டே யோரமைச்சா லவன்மனையிலேனையோரை [காவல்
யொருமையுற வழைப்பித்திங் கிவர்பிழைப்பக் குழீஇயினரென் றுறுத்திக்
ஒருவனிலிவ் வாசனமை யொறுக்குமுயன் றுனிவனை யொறுத்தி வேறே
ஒருவனைவைப் பதற்கிசைந்தே முன்கருத்தென் னெனச்சூளோ டுரைப்பித்
[தோர்க."

என்று அறமுதலிய நால்வகைச் சோதனைகளைப்பற்றி விரோகபுரா ணங் கூறுவது மிங்கறியத்தக்கதாம்.

‡ அறவோர் - முனிவர். ¶ உரிமை - சுதந்திரம்.

டியைத்தாரையும் விட்டு, அவரான் இவ்வரசன் இவறன் மாலையன் ஆகலின் இவனைப்போக்கிக் கொடையும் உரிமையுமுடையான் ஒருவனைவைத்தற் கெண்ணினம்; இதுதான் யாவர்க்கும் இயைந்தது, நின்கருத்தென்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது * தொன்மை தொட்டு உரிமையோடு பயின்முறை ஒரு † தவமுதுமகளிவிட்டு, அவனால் ‡ உரிமையுள இன்னுள் நின்னைக்கண்டு $ வருத்தமுற்றுக் ¶ கூடுவிக்கவேண்டுமென்று என்னை விடுத்தாள்; அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமையன்றிப் பெரும்பொருளுங் ககைகூடுமெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனுல் எனையோரை அவன் இல்லின்கண் அழைப்பித்து இவர் () அறை போவான் எண்ணற்குக் குழீஇயினுனென்று தான் காவல் செய்து ஒருவனுல் இவ்வரசன் கம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின் அதனை காமுற்படச் செய்து நமக்கினிய அரசனொருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கும்இயைந்தது, நின்கருத்தென்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இக்ஙனஞ் கிரிபிலனுயவழி எதிர்காலத்துங் கிரிபிலனெனக் கருத்தாவையாற் றெளியப்படுமென்பதாம். § இவ்வடநூற் பொருண்மையை யுட்கொண்டு இவரோதிய தறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்சமெனப் பாடங் கிரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்.

தெளி:—(இ - ன்.) (அரசனுல் தெளியப்படுவானொருவன்) அறம் - அறமும், பொருள் - பொருளும், இன்பம் - இன்பமும், உயிரச்சம் - உயிர்ப் பொருட்டால் வரும் அச்சமும், நான்கின் - (என்னும் உபதை) நான்கினை, திறம் - திறத்தினுல், தெரிந்த - (மனவியல்பு) ஆராய்ந்தால்,தேறப்படும்-(பின்பு) தெளியப்படுவான், (எ - று).

அந்நான்கு உபதைகளுள், அறவுபதையாவது புரோகிதரையும் அமைச்சரையும் அனுப்பி அவரால் இவ்வரசன் அறமில்லாதவனுயிருத்தலால் இவ்வரசனை நீக்கி அறமும் உரிமையும் உடையானொருவனை வைத்தற்கு

* தொன்மை தொட்டு-பழமைமுதல்தொடங்கி அஃதாவது வெகுகாலமாக.

† தவமுதுமகள் - தவமூதாட்டி [மூதாட்டி - வயதுசென்றவள்.]

‡ உரிமையுள் என்னும் பாடமுண்டு. உரிமையுள்-மனைவியருள்.

$ வருத்தமுற்று-காமவேதனையடைந்து.

¶ கூட்டுவிக்க என்னும் பாடமுண்டு.

() அறைபோவானெண்ணற்கு - கீழ்மைத்தைச் செல்லயோசித்தற்கு (நமக்குத் தீமை செய்ய ஆலோசித்தற்கு).

§ இவ்வடநூலி னருத்தத்தை யுட்கொண்டு திருவள்ளுவநாயனுர் கூறியதறியாமல், மற்றவரெல்லாம் உயிரச்சமென்பதனை உயிரெச்சமெனத் திரித்துப் பாடங்கொண்டு தமக்குத் தமக்குத் தோன்றியபடியே பொருள் கூறினுரென்பதாம்.

எண்ணினேம் ; இதுதான் யாவர்க்கும் சம்மதம், உன்கருத்தி என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத்தலைவனையும், அவனேடு சம்பந்தமானவரையும் அனுப்பி, அவரால் இவ்வாசன் உலோபருண முடையவனுயிருத்தலால்இவனே நீக்கி ஈகையும் உரிமையும் உடையா னொருவனே வைத்தற்கு எண்ணினேம் ; இதுதான் யாவர்க்கும் சம்மதம், உன் கருத்து என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது தொன்றுதொட்டு உரிமையோடு பழகிய வளாகிய ஒரு தலமுதிமகளே அனுப்பி, அவளால் (அரசனுக்கு) உரிமையுள்ளஇன்னுன் உன்னேக்கண்டு வருத்தமுற்றக்கூட்டவேண்டுமென்று என்னே அனுப்பினுன்; அவளேக் கூடலையாளுல் உனக்குப்பெருஞ் சுகமேயல்லாமல் பெருந்திரவியமும் மிடைக்குமென்று சபதத்தோடு சொல்லுவித்தல். அச்சவுபதையாவது ஒரு நிமித்தத்தின் மேல்வைத்து ஒரு மந்திரியினுல் மற்றவரை அவன் வீட்டில் அழைப்பித்தறிவர் அறைபோதலைப்பற்றிஎண்ணுதற்குக் கூடினுனென்று தான் காவல்செய்து ஒருவனுல் இவ்வாசன் நம்மைக்கொல்ல வெண்ணுகின்றமையால் அக்கொல்லுதலே காம் முற்படச் செய்து நமக்கு இனிய அரசனுருவனேவைத்தல் இங்கு யாவர்க்கும் சம்மதம், உன்கருத்தி என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல்.இக்கான்கு உபதையினுலும் வேறுபடாதவனுயிருந்த விடத்திப்பிறகாலத்திலும்வேறுபடானென்று அனுமானப் பிரமாணத்தினுல்தெளியப்படுவானென்பதாம்.

(க - து.) அரசனுல் தெளியப்படுவானெனுவன் அறமுதலிய நான்குபதைகளாலும் ஆராய்ந்து தெளியப்படுவான் என்பது.

1. Let a minister be chosen, after he has been tried by means of these four things, his virtue, love of money, love of sexual-pleasure, and fear of loosing his life.



2. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

பரி:—(இ - ள்.) உயர்நீத்ததடியிற்பிறந்து குற்றங்களினின்று நீங்கி நமக்கு வடு வருங்கொலென்று அஞ்சா நிற்கும் நாணுடையவனிடத்தில் அரசனது * தெளிவு, (எ - று).

குற்றங்களாவன: மேல் அரசனுக்குச்சொல்லிய † வகையாறும், ‡ மடி,

* தெளிவு - நம்பிக்கை.

† ஆறவகைக் குற்றமாவன - காமம், வெகுளி, லோபம், மானம், உவகை, மதமென்பனவாம்.

‡ மடி - செய்தொழிலில் ஊக்கமின்றிச் சோம்பிக்கிடத்தல்.

மறப்பு, * பிழைப்பு என்றிவை † முதலாயவுமாம். ‡ நாண் - இழிதொழில்களின் மனஞ்செல்லாமை. ¶இவை பெரும்பான்மையும் 'தக்கோர்வாய்க் கேட்டலாகிய ஆகமவளவையாற் றெரிவன. $ இந்நான்குமுடையவனே தெளிகவென்பதாம்.

தேளி:—(இ - ள்.) தெளிவு - (அரசனது) தெளிவாவது, குடிப்பிறந்த - (உயர்ந்த) குடியிற்பிறத்தி, குற்றத்தின் - குற்றங்களினின் றும், நீங்கி - விலகி, வகை - (நமக்குப்) பழுதி, (வருமோவென்று), பரியும் - அஞ்சாகிற்கும், நாணுடையான் கட்டே - நாணமுடையவனிடத்ததே,(எ - று).

குற்றங்களாவன; முன்னர் (குற்றங்கடிதலென்னு மதிகாரத்தில்) அரசனுக்குச சொல்லிய ஆறுவகையும், சோம்பல், மறதி, தவறு என்ற இவை முதலியனவுமாம். நாணம் - இழிதொழில்களில் மனஞ்செல்லாமை. இவை பெரும்பான்மையும் யோக்கியர் வாயிற்கேட்டலாகிய ஆகமப்பிரமாணத்தினுல் தெரிவன. இந்நான்கு முடையவனேயே தெளிக என்பதாம்.

(க - து.) அரசன் நற்குடியிற்பிறத்து குற்றமில்லாது தனக்கு வருங்குற்றத்திற்கஞ்சும் நாணமுடையவனைத் தனக்குரியவனுகத தெரிந்து கொள்ளல் வேண்டும் என்பது.

2. The king's choice should fix on him, who is of good family, who is free from faults, and who has the modesty which fears the wounds of sin.

கூ. அரியகற் றுசற்றார் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

பரி:—(இ - ள்.) கற்றற்கரிய நூல்களைக் கற்று o மேற்கொல்லிய குற்றங்கள் § அற்றார்மாட்டும் நுண்ணிதாக ஆராயுமிடத்து வெண்மை யில்லாமை அரிது, (எ - று).

* பிழைப்பு - செய்தொழிலை முறையாகச்செய்யாது தவறுதல்.

† முதலாய என்றதனுல் கூடாநட்பு, கூடாவொழுக்கம், பிற்றினஞ் சேருதல், ஒப்புரவறியாமை முதலியவற்றையுங் கொள்க.

‡ நச்சினர்க்கினியர் "ஒப்புமுருவும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தினுரையில் "நாணுவது செயத்தகாதனவற்றினகண் உள்ளமொடுங்குதல்" என்றனர்.

¶ இவை - குற்றமாதும் மடி முதலியனவுமாம்.

$ இந்நான்கும் - குடிப்பிறத்தலும், குற்றத்தினீங்குதலும், வடுப்பாராதலும், நாணுடைமையுமென்னு மிந்நான்கும்.

o இவ்வதிகாரத்தின் இரண்டாவது குறளில் கூறிய குற்றங்கள்.

§ அற்றார் - இல்லாதவர்.

* வெண்மை - அறியாமை ; † இஃது இவ்வாறு மெய்தாவது மனத்தது ‡ நிலையாமையான் ஒரோவழியாகலின் 'தெரியுங்கால்' என்றார். காட்சியளவையாற் தெரிந்தால் அதுவும் இல்லாதாரே தெளியப்படுவரென்பது குறிப்பெச்சம். ¶ இவ்வளவைகளான் இக் § குணமும் o குற்றமும் தெரிந்து குணமுடையாரைத் தெளிகவென்பது இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) அரிய - (கற்றற்கு) அருமையாகிய நூல்களை கற்று - படித்து, ஆசு - (முற்கூறிய) குற்றங்கள், அற்றார்கண்ணும் - அற்றவரிடத்தும், தெரியுங்கால் - (துட்பமாக) ஆராயுமிடத்து, வெளிறு - அறியாமையானது, இன்மை-இல்லாதிருத்தல், அரிது-அருமையாம், (எ-று).

வெளிறென்னும் அறியாமை இவரிடத்து மனத்தினது நிலையாமையால் ஒரோவிடத்து உண்டாவதாதலால், 'தெரியுங்கால்' என்றார். பிரத்தியட்சப் பிரமாணத்தினால் தெளிந்தால் அவ்வெளிறும் இல்லாதாரே தெளியப்படுவரென்பது குறிப்பெச்சமாம். இத்தப் பிரமாணங்களால் இக்குணமும் குற்றமும் தெரிந்து குணமுடையவரைத் தெளிகவென்பது இம் மூன்று பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து.) பேரறிவாளரிடத்தும் அறியாமை யுண்டென்பது.

3. When even men, who have studied the most difficult works, and who are free from faults, are carefully examined, it is a rare thing to find them without ignorance.

* வெண்மைப்பண்பு வெண்கரும்பென இனம்பற்றியும், வெண்டிங்களென இனம்பற்றுமலும், வெண்டாமரையென தனக்குரிய சினையை விட்டு உரிமையில்லாத முதலைப்பற்றியும், வெள்ளாடென வெதிர்வுபற்றியும், 'விலங்கண்ணர் வெள்ளறிவினர்' என இழிபுபற்றியும், வெண்களம வெள்ளாளர் எனச் சாதிபற்றியும், வெண்ணோட்டமெனப் புதுமைபற்றியும், வெண்டேர் எனப்பொய்பற்றியும், வெளிற்றுமரமென உள்ளீடின்மை பற்றியும், வெளியார் முன்னென இயல்புபற்றியும், இனனும்பிறவற்றைப் பற்றியும் வரும்.

† இஃது இவ்வாறு மெய்தாவது-அறியாமை அரியகற் ருசற்ருரிடத்துண்டாவது.

‡ நிலையாமையான்-தம்மாற்றத்தால்.

¶ அனுமானம், ஆகமம், பிரத்தியட்சமென்னும் பிரமாணங்களினுல்.

§ குணம் - குடிப்பிறத்து குற்றத்தினீங்குதல் முதலியன.

o குற்றம் - காமம், வெகுளிமுதலியன.

ச. * குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

பரி:—(இ - ள்.) குணங்குற்றங்களுள் ஒன்றே உடையார் உலகத்தின்மையின், ஒருவன் குணங்களே ஆராய்ந்து ஏனைக்குற்றங்களையும் ஆராய்ந்து பின் அவ்விருபகுதியுள்ளும் மிக்கவற்றை ஆராய்ந்து அவனை அம்மிக்கவற்றானே அறிக, (எ - று).

† மிகையுடையவற்றை 'மிகை' என்றார். அவையாவன:—‡ தலைமையாளைப் பண்மையாளாக உயர்த்தன. அவற்றான் அறிதலாவது குணமிக்கதாயின் வினைக்குரியனென்றும், குற்றமிக்கதாயின் தல்லனென்றும் அறிதல். குணமே உடையார் உலகத்தரியராகலின், இவ்வகை யாவரையுந் தெளிகவென்பது இதனாற் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (குணங்குற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகத்தில்லாமையால் ஒருவனது) குணம் - குணங்களே, நாடி - ஆராய்ந்து, குற்றமும் - (மற்றைய) குற்றங்களையும், நாடி - ஆராய்ந்து, அவற்றுள் - (பின்பு) (குணம் குற்றமென்னும்) அவ்விருவகையுள்ளும், மிகை - மிகுந்தவற்றை, நாடி - ஆராய்ந்து, மிக்க-அம்மிகுந்தவற்றாலே, கொளல்-(அவனை) அறியக்கடவன், (எ - று).

மிகையுடையவற்றை 'மிகை' என்று கூறினார். அம்மிகையாவன:—தலைமையினாலாவது பண்மையினாலாவது உயர்ந்தவை. அம்மிகுந்தவற்றால் அறிதலாவது (ஒருவனிடத்து) குணமிகுந்திருந்தால் (அவன்) தொழிலுக்குரியவனென்றும், குற்றமிகுந்திருந்தால் தொழிலுக்குரியவனல்லனென்றும் அறிதல். குணமாத்திரமுடையவர் உலகத்தில் அரியராகலால், இவ்வகையாக யாவரையும் தெளிக என்பது இதனாற் சொல்லப்பட்டது.

(க-து.) அரசன் ஒருவனிடத்துள்ள குணங்குற்றங்களை யாராய்ந்து, குணமிகுந்திருந்தால் அவனைத் தொழிலுக்குரியவனென்றறியக்கடவன் என்பது.

* "குற்றமு மேனைக் குணமு மொருவனே, கட்டபி ஞடித் திரிவே னேல்-கட்டான், மறைகாவா விட்டவன் செல்வழிச் செல்க, அறைகடல் சூழ் வைய கம்" என்பது நாலடி.

† மிகையென்னும் தருமத்தின் பெயர் மிகையுடைய தருமியை யுணர்த்தி நின்றது. தருமி-குணங்குற்றங்கள்.

‡ தலைமையால் உயர்தல் பண்மையால் உயர்தல்களைப்பற்றி "ஒரு பெயர்ப் பொதுச்சொல்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தினுரையில் நச்சினார்க்கினியார் "பிறரும் வாழ்வாருளரேனும் பார்ப்பனச்சேரி யென்றல் உயர்திணைக்கண் தலைமை பற்றியவழக்கு; எயினர் நாடென்பது அத்திணைக்கண் பண்மைபற்றிய வழக்கு. பிறபுல்லும்மரனும் உளவேனும் கருகர்தோட்டமென்றல் அஃறிணைக்கண் தலைமைபற்றிய வழக்கு; ஒலிவெங்கடமென்பது அத்திணைக்கண் பண்மைபற்றிய வழக்கு." என்று கூறியது மிங்குறியத்தக்கது.

4. Let a king consider a man's good qualities, let him also consider his faults, and then let him consider which of these are the greatest, and let him judge of his character by that which prevails.

நி. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

பரி:—(இ - ள்.) பிறப்புக் குணம் அறிவென்பனவற்றுள் மக்கள் எய்தும் † பெருமையாகிய பொன்னினளவறிதற்கும் மற்றைச் சிறுமை யாகிய பொன்னினளவறிதற்கும் உரைகல்லாவது தாம் தாம் செய யுங் கருமமே, பிறிதில்லை, (எ - று).

இம்மீ: ‡ ஏகதேசவுருவகம். மக்களது பெருமையும் சிறுமையும் தப் பாமல் அறியலுறுவார்க்குப் ¶ பிறகருவிகளும் உளவாயினும், § முடிந்த கருவி செயலென்பது தேற்றேகாரத்தாற் பெற்றாம். இதனாற் குணங்குற் றங்கள் காடற்குக் கருவி கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) (குடிப்பிறப்பு, குணம் அறிவு என்பனவற்றுல் மனிதரிடையும்) பெருமைக்கும்-பெருமையாகிய பொன்னின் மாற்றறிதற் கும், எனைச்சிறுமைக்கும் - மற்றைச்சிறுமையாகிய பொன்னின் மாற்றறி தற்கும், கட்டளைக்கல் - உரை கல்லாவது, தததங்கருமமே - தாம் தாம்செய் யும் செயல்களே, (மற்றொன்றில்லை), (எ - று).

இக்குற வேக தேச உருவகவணி. மனிதருடைய பெருமையையும் சிறுமையையும் தப்பாமல்அறியத்தொடங்கியவர்களுக்குவேறுசாதனங்களு மிருப்பனவாயினும், முடிவான சாதனம் அவர் செயல் என்பது 'கரு மமே' என்னும் தேற்றேகாரத்தாற் பெறப்பட்டது. இதனாற் குணங்குற் றங்களை அறிதற்குச் சாதனம் சொல்லப்பட்டது.

(க - து.) ஒவ்வொருவரிடத்து முள்ள பெருமையையும் சிறுமையையும் அறிதற்கு முடிவான சாதனமாயுள்ளது அவரவ ரது செய்கைகளேயாம் என்பது.

5. A man's deeds are the touch - stone of his greatness and littleness

† பெருமைக்கும் மற்றைச்சிறுமைக்கும் என்றும் பாடமுண்டு.

‡ கருமத்தைக்கட்டளைக்கல் (உரைகல்) என்றுருவகஞ் செய்தவர் பெருமை சிறுமைகளைப் பொன்னென்றுருவகஞ்செய்யாமையின், இக் குறள் ஏகதேசவுருவகமாயிற்றென்க.

¶ பிறகருவிகள் - இடம் பொருள் ஏவல் முதலியன.

§ முடிந்த கருவி - தேர்ந்த சாதனம்.

ஙு. * அற்றுரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி.

பரி:—(இ - ள்.) சுற்றமில்லாதாரைத் தெளிதலே யொழிக; அவர் உலகத்தோடு தொடர்பிலர்; ஆகலாற் பழிக்கஞ்சார், (எ-று).

'பற்றிலர்' என்பதனால் சுற்றமென்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பன வொழிதற்கும் புகழ்வன செய்தற்கும் ஏதுவாகிய உலகநடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப்படாரென்பதாம்.

தேளி:—(இ-ள்.) அற்றுரை - (சுற்றம்) இல்லாதவரை, தேறுதலோம்புக - தெளிதலே யொழியக்கடவன், அவர்-(சுற்றமில்லாத) அவர், மற்றுப் பற்றிலர் - உலகத்தோடு சம்பந்தமிலர், (ஆதலால்), பழி - பழிக்கு, நாணர்-அஞ்சார், (எ-று).

சுற்றம் என்பது 'பற்றிலர்' என்று கூறியதினால் வருவித்துரைக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பனவற்றை யொழிதற்கும், புகழ்வனவற்றைச் செய்தற்கும் காரணமாகிய உலகநடையினியல்பு சுற்றமில்லாதவர்க்கு இல்லாமையால், அவர் தெளியப்படாரென்பதாம். சுற்றம் - உறவினர்.

(க - து.) சுற்றமில்லாதவர் பழிக்கஞ்சாமையின், அவரை அரசன் தனக்குரியவராகத்தெளிதலொழியக்கடவன் என்பது.

6. Let a king avoid choosing men who have no relations ; such men have no attachments, and therefore have no fear of crime.

ஙூ. காதன்மை கந்தா வறிவழியார்த் தேறுதல்
† பேதைமை யெல்லாந் தரும்.

பரி:—(இ - ள்.) அன்புடைமை ‡ பற்றுக்கோடாகத் தமக்கறிய வேண்டுவன அறியாதானைத் தெளிதல் § அரசனுக்கு எல்லா அறியாமையையுங் கொடுக்கும், (எ - று).

தன்னெஞ்சி § அவரிடைநின்ற அன்புபற்றி $ அரசன் அறிவிலார்மேல் வினையைவைப்பின், அஃது அவரறிவின்மையாற் கெடும்; கெட்டால்

* "சுற்ற மிலரா னவர்தம்மைச் சூழேல் பழிபா வமுநாணர், பற்று மிலரா குவர்விடுக" என்பது விநாயகபுராணம்.

† பேதைமை - யாதுமறியாமை.

‡ பற்றுக்கோடு - ஆதாரம். § அவரிடை - அறிவறியாரிடத்து.

$ "உடைப்பெருஞ் செல்வத் தியர்த்த பெருமை, அடக்கமு ளுள்ளத் தஞ்சு - நடக்கையின், ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக், கொள்ளி கொடுத்து விடல்" என்பது பழமொழி.

* அவர்க்குளதேயன்றி வினைக்குரியாரை அறியாமை, மேல்வினாவறியாமை † முதலாக அவனுக்கு அறியாமை பலவும் உளவாமென்பதாம்.

தெளி:—(இ - ன்.) காதன்மை - அன்புடைமையானது, கந்தா - பற்றுக்கோடாக, அறிவு - (தமக்கு) அறியவேண்டுவனவற்றை, அறியார் - அறியாதவரை, தேறுதல் - தெளிதலானது, பேதைமையெல்லாம் - (அரசனுக்கு) எல்லா அறியாமையையும், தரும் - கொடுக்கும், (எ - று).

அரசன் தன்னெடு அவரிடத்துள்ள அன்புபற்றி அறிவில்லாதவரிடத்துத் தொழிலேவைத்தால், அத்தொழில் அவரறிவில்லாமையினாற் கெடும்; கெட்டால் அவர்க்குள்ளது மாத்திரமல்லாமல் தொழிலுக்குரியவரை அறியாமை, பின்னுண்டாம் பயனே அறியாமை முதலாக அவ்வரசனுக்கு அறியாமை பலவும் உண்டாகும் என்பதாம்.

(க - து.) அறியவேண்டுவனவற்றை யறியாதவரை அரசன் அன்புகாரணமாகத் தனக்குரியவராகத்தெளிதல் அவனுக்குப்பேதைமை பலவற்றையுமுண்டாக்கும் என்பது.

7. To choose ignorant men, through partiality, is the height of folly.

அ. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

பரி:—(இ - ள்.) தன்னெடு இயைபுடைய னல்லாதானைப் பிறப்பு ‡ முதலியவற்றினும் செயலானும் ஆராயாது தெளிதீத அரசனுக்கு அத் தெளிவு தன்வழிமுறையினும் நீங்காத துன்பத்தைக்கொடுக்கும், (எ-று).

இயைபு - ¶ தன் குடியொடு கோடா மரபு. இதனானே அதுவும் வேண்டுமென்பது பெற்றாம். தெளிதல்—o அவன்கண்ணே வினையை வைத்தல். அவ்வினை கெடுதலால் தன்குலத்துப் பிறந்தாரும் பகைவர் கைப்பட்டுச் சோய்வீடுவரென்பதாம். நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது.

* அவர்க்குளதேயன்றி - அறிவறியார்க்கு ஓரறியாமை யுளதா யிருத்தலே யல்லாமல்.

† முதலாக என்றதனால் வினைவின்பின் உண்டாகுந் துன்பம், அறிவுடையாரால் பழிக்கப்படுதல் முதலியவற்றையறியாமையுங் கொள்க.

‡ முதலிய என்றதனால் குணமும் அறிவுங் கொள்க.

¶ தன்குடியொடு கோடாமரபு - தன்னுட்டில்வாழும குடிகளுடன் மாறுபடாத முறைமை. "தன்குடியொடு தொடர்ந்த மரபு" என்றும் பாடமுண்டு.

o அவன் கண்ணே - அப்பிறனிடத்தே.

தேளி.—(இ - ள்.) பிறனை - தன்னோடு சம்பந்தமுடையனல்லாத வனை, தேரான் - (பிறப்பு முதலியவற்றாலும் செய்கையாலும்) ஆராயாதி, தெளிந்தான் - தெளிந்த அரசனுக்கு, (அத்தெளிவு), வழிமுறை - (அவன் றன்) சந்ததிக்கிரமத்திலும், தீரா - நீங்காத, இடும்பை - துன்பத்தை, தரும் - கொடுக்கும், (எ - று).

சம்பந்தம் - தன்குடியோடு கோணுதலில்லாத மரபு. இதனாலே அம் மரபும் வேண்டுமென்பது பெறப்பட்டது. தெளிதல் - அவனிடத்தே தொ ழிலேவைத்தல். அத்தொழில் கெடுதலால் தன்குலத்திற் பிறந்தவரும் பகைவர் வசத்தி லகப்பட்டுக் கீழாவரென்பதாம் தெளிந்தானுக்கு என்னும் நான்காவதனுருபு செய்யுள் விகாரத்தால் தொக்குநின்றது.

(க - து.) தன்னுடன் சம்பந்தமில்லாதவனைத் தனக்குரியவ னாகத் தெளிந்துகொண்ட அரசனுக்கு நீக்கமுடியாததுன்பமுண் டாகும் என்பது.

8. Sorrow that will not leave even his posterity will come upon him who chooses a stranger whose character he has not known.

உ. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்.

பரி:—(இ - ள்.) யாவரையும் ஆராயாது தெளியாதொழிக; ஆரா யிந்தபின் தெளியும் பொருள்களே ஐயுறதொழிக, (எ - று).

* தேறற்க என்ற பொதுமையான் ஒருவினைக்கண்ணுந் தெளியலா காதென்பது பெற்றும். ஈண்டித்தேறுக என்றது † தாற்பரியத்தால் ‡ ஐயு றவினது விலக்கின்மேனின்றது. தேறும் பொருள் என்றது அவரவர் ஆற்றற்கேற்ற வினைகளே. ¶ பொருள் - ஆகுபெயர்.

தெளி:—(இ - ள்.) யாரையும் - யாவரையும், தேராது - ஆராயாமல், தேறற்க - தெளியாதிருக்கக்கடவன், தேர்ந்தபின் - ஆராய்ந்த பிறகு, தே றும் பொருள்—தெளியும் பொருள்களே, தேறுக - தெளியக்கடவன், (சந் தேகமுறாதிருக்கக்கடவன்), (எ - று).

தேறற்க என்று பொதுப்படச் சொண்ணமையால் யாதொரு தொழி லிலும் தெளியலாகாதென்பது பெறப்பட்டது. இங்குத் தேறுக என்றது

* தேறற்க என்ற பொதுமையான் - இன்னதொழிலில் தெளிதலொ ழிக என்று சிறப்பு வகையாற் கூறுது பொதுவகையால் தேறற்க என்று கூறியதினால்.

† "கவிப்பொருள் சுருக்கிக் காட்டல்தாற் பரியம்" என்பதிருத்திரம்.

‡ ஐயுறவினது விலக்கு - சந்தேகமொழிதல்.

¶ பொருள் என்றது பொருளுக்குக் காரணமான வினையையுணர்த்து தலால் காரியவாகுபெயராம்.

கருத்துவகையால் சந்தேகத்தினது விலக்கின்மேல் நின்றது. தேறும் பொருள் என்றதனால் அவரவர் வல்லமைக்கு ஏற்றதொழில்களே. பொருள்-காரியவாகுபெயர்.

(க - து.) அரசன் ஆராய்வதற்குமுன் எவரையுந் தனக்குரியவராகத் தெளியாது நன்றாய் ஆராய்ந்தபிறகு தெளியக்கடவன் என்பது.

9. Let a king choose no one without previous consideration; after he has made his choice, let him unhesitatingly select for each such duties as are appropriate.

சo. தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணேயுறவுந்
தீரா விடும்பை தரும்.

பரி:—(இ - ள்.) அரசன் ஒருவனை ஆராயாது தெளிதலும் ஆராய்ந்து தெளிந்தவன்மாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும் அவனுக்குத் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும், (எ - று).

வினை வைத்தபின் ஒருதலை காணுதலைவைத்து ஐயுறுமாயின், * அதனை யவணறிந்து இனி இது நில்லாதென்னுங் கருத்தான் அவ்வினையை தெழித்துவிடும்; அதுவே யன்றிப் பகைவரால் எளிதிற் பிரிக்கவும் படும். ஆகலான் 'தெளிந்தான்கணேயுறவும்' ஆகாதாயிற்று தெளிவிற் கெல்லை கூறியவாறு. இவை ஐந்துபாட்டாலும் தெளியப்படாதார் இவரென்பதூஉம், அவரைத் தெளிந்தாற்படும் இழுக்கும், தெளிவிற்கெல்லையுங் கூறப்பட்டன.


தெளி:—(இ - ள்.) (அரசன்) தேரான் - (ஒருவனை) ஆராயாது, தெளிவும் - தெளிதலும், தெளிந்தான்கண் - ஆராய்ந்து தெளிந்தவனிடத்து, ஐயுறவும் - சந்தேகப்படுதலும், (இந்த இரண்டும் அவ்வரசனுக்கு), தீராவிடும்பை - நீங்காததுன்பத்தை, தரும் - கொடுக்கும், (எ - று).

அரசன் ஒருவனிடத்து ஒருதொழிலை வைத்தபின் ஒருதலை காணுதிருந்தும் (அவனிடத்து) சந்தேகமுடையனாயின், அதனை அவன் அறிந்து இனி இது நில்லாதென்னுங் கருத்தால் அத்தொழிலைத் தளரவிடுவான்; அதுவேயல்லாமல் பகைவரால் எளிதிற் பிரிக்கவும் படுவான். ஆதலால் 'தெளிந்தான்கணேயுறவும்' ஆகாதாயிற்று. தெளிவிற்கெல்லை கூறியவாறும். இவை ஐந்துபாட்டாலும், தெளியப்படாதவர் இவரென்பதும், அவரைத் தெளிந்தால் உண்டாகும் குற்றமும், தெளிவிற் கெல்லையுங்கொல்லப்பட்டன.

* அதனை யவணறிந்து இனி இது நில்லாதென்னுங் கருத்தான் - சந்தேகப்படுதலைத் தொழிலை (உத்தியோகத்தை) யேற்றுக் கொண்டவன் தெரிந்துகொண்டு இனி இத்தொழில் நம்மிடத்து நிலைபெறுதென்னும் அபிப்பிராயத்தால்.

(க - து.) ஆராயாம லொருவனைத் தெளிதலும், தெளிந்தவனிடத்துச் சங்கிக்கமுறுதலுமுடைய அரசனுக்கு அவை நீங்காத துன்பத்தைத் தரும் என்பது.

10. To make choice of one who has not been examined, and to entertain doubts respecting one who has been chosen, will produce irremediable sorrow.



பதினன்காம் அதிகாரம்.

தெரிந்துவினையாடல்—

On deliberation in the employment of servants.

பரி:—அஃதாவது அத்தெளியப்பட்டாரை அவர் செய்ய வல்ல வினைகளை அறிந்து அவற்றின்கண்ணே ஆளுந்திறம். * அதிகாரமுறைமையும் இதனுளே விளங்கும்.

தெளி:—அஃதாவது அத்தெளியப்பட்டவரை அவர் செய்யவல்லதொழில்களை அறிந்து அத்தொழில்களிலே ஆளுந்திறம். அதிகாரமுறைமையும் இதனுலே விளங்கும்.

க. † நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மைபா ளுளப் படும்.

பரி:—(இ - ள்.) அரசன் முதற்கண் ஒருவினையைத் தன்கண்ணை ந்தால், அதன்கண் ‡ ஆவனவும் ¶ ஆகாதனவும் ஆய செயல்களை ஆராயத்தறிந்து () அவற்றுள் ஆவனவற்றையே விரும்பிய இயல்பினையுடையான் பின் அவரைச் சிறந்த வினைகளிலே ஆளப்படும், (எ - று).

தன்னை o உரிமை அறிதற் பொருட்டி அகம் புறங்கட்கு நடுவாய தோர் வினையை அரசன் தன்கண் வைத்தவழி அதன்கண் ஆம்செயல்களையே செய்தவன் பின்னும் அவ்வியல்பின ஞெல்பற்றி அகமாய வினைக்கண்ணே ஆளப்படுவனென்பதாயிற்று. † 'புரிந்த' என்ற இறந்தகாலத்தான் முன் உரிமை அறிதற்பொருட்டு வைத்த வினைபாதல் பெற்றாம்.

* தெரிந்து தெளிதல் தெரிந்து வினையாடற் கேதுவா யிருப்பதுபற்றித் தெரிந்து தெளிதற்குப்பின் தெரிந்து வினையாடல் வைக்கப்பட்டது.

† "முன்னர்ப் பொதுவா யெவினையின் மூள விடித்துத் தீதகற்றி, நன்மை புரிந்து வருமாயி னஞ்சி யவனைச் சிறந்தவினை, தன்னில் விடுக்க" என்பது விதாயகபுராணம்.

‡ ஆவன - நன்மைதருவன. ¶ ஆகாதன - தீமைதருவன.

() அவற்றுள் - ஆவன ஆகாதனவாகிய செயல்களில்.

o உரிமை - நாடத்தும் வகை.

† புரிந்த என்பது இறந்தகாலத் தெரிநிலை யுடன்பாட்டுப் பெயரெச்சம்.

தெளி:—(இ - ள்.) (அரசன் முதலில் ஒரு தொழிலைத் தன்னிடத்து வைத்தால்) நன்மையுந் தீமையும் - (அத்தொழிலில்) ஆவனவும் ஆகாதனவும், (ஆகிய செயல்களை), நாடி - ஆராய்ந்தறிந்து, கலம் - (அச்செயல்களுள்) ஆவனவற்றையே, புரிந்த - விரும்பிய, தன்மையான் - இயல்பினையுடையவன், (பின்னே அவ்வரசனால்), ஆளப்படும் - (திறந்த தொழில்களிலே) ஆளப்படுவான், (எ - று).

தன்னே உரிமை அறிதற்பொருட்டு அகத்திற்கும் புறத்திற்கும் உடுவாகிய ஒருதொழிலை அரசன் தன்னிடத்து வைத்தவிடத்து அத்தொழிலில் ஆகுஞ் செயல்களையே செய்தவன் பின்னும் அத்தன்மையனுவது பற்றி அகமாகிய தொழிலிலே ஆளப்படுவா னென்பதாயிற்று, 'புரிந்த' என்ற இறந்தகாலத்தால் கூறியதால் முன்னர் உரிமையை அறிதற்பொருட்டு வைத்த தொழிலாதல் பெறப்பட்டது. அகம்-உள். புறம்-வெளி.

(க - து.) தான் செய்யுந்தொழிலில் நன்மை தீமைகளை யாராய்ந்தறிந்து ஆவனவற்றைச்செய்ய விரும்புகின்றவனை அரசனுலாளப்படுவான் என்பது.

1. He should be employed by a king, whose nature leads him to choose the good, after having considered both the evil and the good.

2. * வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை.

பரி:—(இ - ள்.) பொருள் வருவாயில்களை † வியப்செயது அப பொருளாற் செல்வங்களை வளர்த்து அவ்வாயில்கட்கும் பொருட்குஞ் செல்வங்கட்கும் உற்ற ‡ இடையூறுகளை நாடோறும் ஆராய்ந்து நீக்க வல்லவன் அரசனுக்கு வினைசெய்க, (எ - று).

வாயில்களாவன: மேல் இறைமாட்சியுள் ¶ 'இயற்றலும்' என்புழி

* வாரி - இகரவீற்றுத் தொழிலாகுபெயர்.

† வியப்செய்து - அதிகப்படுத்தி.

‡ இடையூறு - விக்கினம் (தடை). [ஒரு காரியம் செய்யும்போது அதற்கிடையிற்றடையுண்டாவது இடையூறெனப்படும்.] "பரிசனம் பகைவர் கள்வர் படர்தரு முயிர்க டாமென், முரைசெயைந் திடத்தி னலு முலகிடை யிடையூ றெய்தா, வரிசையிற் காத்து நீதி வழுக்கினுர் தம்மை மொத்திக், கரிசறப் பொருளுங் கோடல் காவலர் தருமமைத்தா" என்பது விநாயகபுராணம்.

¶ 'இயற்றலும்' என்பதற்குத் தனக்குப்பொருள்கள் வரும் வழிகளை மேன்மே லுளவாக்கலும் என்பது பொருள்.

* உரைத்தனவும், † உழவு, பசுக்காவல், வாணிகமென்னும் வார்த்தையுமாம். செல்வங்களாவன:‡ ஆண்டுப் ¶பொருளும்இன்பமுமாகவுரைக்கப்பட்டன. இடையூறுகளாவன: † அரசன்வினைசெய்வார், சுற்றத்தார், பகைவர், கள்வ ரென்று இவரான் வரும் நலிவுகள்.

தெளி:—(இ - ள்.) வாரி - (பொருள்) வரும் வழிகளை, பெருக்கி - விரியச்செய்து, வனம்படித்து - (அப்பொருளால்)செல்வங்களை வளர்த்து, உற்றவை - (அப்பொருள் வரும் வழிகளுக்கும் பொருளுக்கும் செல் வங்களுக்கும்) வந்த இடையூறுகளை, ஆராய்வான் - (தினந்தோறும்) ஆரா ய்ந்து நீக்கவல்லவன், (அரசனுக்கு), வினைசெய்க - தொழில் செய்யக்கட வன், (எ - று).

வரும் வழிகளாவன: முன் இறைமாட்சி அதிகாரத்தில் 'இயற்றலும்' என்றவிடத்து உரைத்தனவும், உழவு, பசுக்காவல், வாணிகம் என்னும் வார்த்தையுமாம். செல்வங்களாவன: அங்குப் பொருளும் இன்பமும் ஆகச்சொல்லப்பட்டவை. இடையூறுகளாவன: அரசன் தொழில் செய் வார், சுற்றத்தார், பகைவர், கள்வர் என்று இவர்களால் வரும் தீன்பங்கள்.

(க-து.) பொருள்வரும் வழிகளை விருத்திசெய்து அவ்வரும் வழி முதலியவற்றிற்கு வந்த இடையூறுகளை யாராய்ந்து நீக்க வல்லவன் அரசனுக்குத்தொழில் செய்யக்கடவன் என்பது.

2. Let him do the king's work who can enlarge the sources of revenue, increase wealth, and consider and prevent the accidents which would destroy it.

* "பொருள்களாவன: மணி, பொன், செம்முதலாயின. அவைவரும் வழிகளாவன: பகைவரை யழித்தலும், திறைகோடலும் (கப்பம் வாங்குத லும்), தன்ஞெதலையளித்த (காத்த)லும் முதலாயின" என்றுரைத்தனவும்.

† உழவு, பசுக்காவல், வாணிகமென்பனவற்றைப்பற்றிக் கூறும் வார்த்தையு (தருமசாஸ்திரமு)மாம். வார்த்தையாவது இது நன்மை பயப்பது இது தீமைபயப்பதென்றவற்றை விளக்கிக்கூறும் சாஸ்திரமாம். உழவினை விருத்தி செய்தலும், பசுக்களைப் பாதுகாத்தலும் வர்த்தகத்தை விருத்திசெய்தலும் அரசனுக்குப் பொருள்வரும் வழிகளாமென்பதிண் ணெனர்தற் பாலதாம். மனுதர்மசாஸ்திரம் ஏழாவதத்தியாயத்திலுள்ள நீர் வைலிதி யிங்குக் கவனிக்கத்தக்கது.

‡ ஆண்டு - 'இயற்றலும்' என்னுங்குறளின் விசேடவுரையில்.

¶ "யானை, குதிரை, படை, நாடு, அரணென்றிவற்றிற்கும், பகை யொடு கூடலிற்பிரிக்கப்படுவோர்க்கும், தன்னிற்பிரிதலிற் கூட்டப்படுவோர் க்கும் கொடுத்தலைப் பொருட்பொருட்டாகவும், மண்டபம், வாவி, செய் குன்று, இளமரக்கா (நந்தவனம்)முதலியசெய்தற்கும், ஐம்புலன்களாலுகர் வன (செவி முதலிய ஐந்திந்திரியங்களால் அனுபவிக்கப்படுவன) வற் றிற்குங் கொடுத்தலை இன்பப்பொருட்டாகவுங் கொள்க" என்றுரைக்கப் பட்டனவை. † ராஜகார்யஞ் செய்வார்.

கூ. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

பரி:—(இ - ள்.) அரசன்மாட் டன்பும் அவனுக் * காவன அறியு மறிவும் அவை செய்தற்கட் கலங்காமையும் அவற்றுப் பொருள் கையுற் றவழி அத்தன்மேல் அவாவின்மையுமாகிய இத்தான்கு குணங்களையும் நிலைபெற வுடையான்மேலதே வினையை விட்டிருத்தித் தெளிவு,(எ-று).

† இத்தான்கு நன்குடைமை இவன் செய்கின்ற வினைக்கண் யாதும் ஆராய வேண்டுவதில்லை யென்று அரசன் தெளிதற் கேதுவாகலின், ‡ அவனை அதன் பிறப்பிடனுக்கிக் ¶ கூறினர். இவை மூன்றுபாட்டானும் ஆடற்தரியாதது இலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) அன்பு-(அரசனிடத்து) அன்பும், அறிவு-(அவ்வரசனுக்கு ஆவனவற்றை யறியும்) அறிவும், தேற்றம் - (அவ்வாவனவற்றைச் செய்யுமிடத்துக்) கலங்காமையும், அவாவின்மை - (அவ்வாவனவற்றைச் செய்வதால் பொருள் கைகூடியவழி அப்பொருளின்மேல்) ஆசையில்லாமையும், (ஆகிய), இத்தான்கும் - இத்தான்கு குணங்களையும், நன்குடையான் கட்டே - நிலைபெற வுடையவனிடத்தே, தெளிவு-(தொழிலிலவிட்டிருக்கும்) தெளிவு, (எ - று).

இத்தான்கு குணமும் நன்றாகவுடைமை இவன் செய்கின்ற தொழிலில் சிறிதும் ஆராய வேண்டுவதில்லை யென்று அரசன் தெளிதற்குக் காரணமாகலால், அவனை அத்தெளிவின் பிறப்பிடமாக்கிச் சொல்லினார். இவை மூன்று பாட்டாலும் ஆடுகற்கருமியவனது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து) அன்பு அறிவு தேற்றம் ஆசையில்லாமை பென்னு மிந்நான்கு முடையவனிடத்தே அரசனுக்குத் தெளிவுண்டாகும்.

3. Let the choice of a king fall upon him who largely possesses these four things, love, knowledge, a clear mind and freedom from covetousness.

கூ. எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுசெ மாந்தர் பலர்.

பரி:—(இ - ள்.) எல்லாவகையானும் ஆராய்ந்து தெளிந்து வினை வைத்த பின்னும் அவ்வினையின் இயல்பானே வேறுபடுமாந்தர் உலகத்துப் பலர், (எ - று).

* ஆவன - அனுகூலமானவற்றை.

† இத்தான்கு நன்குடைமை - அன்பு, அறிவு, தேற்றம், அவாவின்மை யென்னும் இத்தான்கு குணங்களும் நிலைபெறவுடையவனுபிருத்தல்.

‡ அவனை - அன்பு முதலிய குணங்களுடையவனை.

¶ 'நன்குடையான் கட்டே தெளிவு' என்று கூறினர்.


* சட்டியங்காரன்போல அரச இன்பத்தினை வெஃகி விகாரப்படுவ தல்லது அதனைக் குற்றமென் றெழுதிந்து தம்மியல்பி னிற்பார் அரியராக லின் 'வேறுரு மாந்தர் பலர்' என்றார். வினை வைப்பதற்கு முன் எல்லாக் குணங்களும் உடையராய் வைத்தபின் விகாரப்படுவாரை இடையாயதொரு வினையை வைத்தறிந்து ஒழிக்க வென்பதாம். இதனுள் ஒருவகையா லொழிக்கப்படுவார் இவரென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) எவ்வகையால் - எல்லாவகையாலும், தேறியக் கண்ணும் - (ஆராய்ந்து) தெளிந்து தொழிலே வைத்த, பின்னும், வினை வகையான் - அத்தொழிலினியல்பினுலே, வேறுரும் - வேறுபடுகின்ற, மாந்தர் - மனிதர், பலர் - (உலகத்தில்) பலர், (எ - று).

கட்டியங்காரன்போல அரச வின்பத்தினை விரும்பி வேறுபடுவதல்லா மல் அவ்வரச வின்பத்தினைக் குற்றமென்றெழுதிந்து தம் மியல்பில் நிற்ப வர் அரியராதலால் 'வேறுரு மாந்தர் பலர்' என்றார். தொழிலே வைப்பதற்கு முன்னர் எல்லாக்குணங்களு முடையவராய் வைத்த பின் வேறுபடுவா ரை அகத்திற்கும் புறத்திற்கும் கடிவானதொரு தொழிலேவைத்து அறிந்து ஒழிக்கவேண்டு மென்பதாம். இதனுள் ஒருவகையால் ஒழிக்கப்படுவார் இவ ரென்பது சொல்லப்பட்டது.

(க - து.) ஆராய்ச்சிவகையால் வேறுபடாதிருந்து தொழில் வகையால் வேறுபடு மனிதர் பலராவரென்பது.

4. Even when a king has tried them in every possible way, there are many men who change, from the nature of the works in which they may be employed.



௫. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

பரி:—(இ - ள்.) செயியும் உபாயங்களே அறிந்து செயலானும் இடையூறுகளானும் வருந்துன்பங்களோப் பொறுந்து முடிவுசெய்ய வல் லானே அல்லது வினைதான் இவன் நம்மாட்டே அன்புடையனென்று † பிறனெருவனையேவும் இயல்புடைத்தன்று, (எ - று).

* கட்டியங்காரனென்பான் சீவகனது தந்தையான சச்சந்தனது மந் திரிகளுள் ஒருவன். இவன் சச்சந்தன் தன் மனைவியான விசயையிடத்து மிகுந்த காதல்கொண்டு அரசாட்சியைக் கவனியாது போகமனுபவித்திருக் கும்போது அச்சச்சந்தனைக் கொன்று அரசாட்சியைக் கவர்ந்து கொண்டா னென்பது கதை. இதன் விரிவைச் சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்திற் காண்க.

† பிறன் - செய்யு முபாயங்களே யறிந்து செயலாலும் இடையூறுக ளாலும் வரும் துன்பத்தைப் பொறுத்துத் தொழிலே முடிவுசெய்ய வல்ல மையில்லாதவன்.

* செய்கிற்பாற் கென்பது வேற்றுமை மயக்கம். அறி ‡ வாற்றல்க ளான் அல்லது அன்பான் முடியாதென இதனுல் வினையினது இயல்பு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வினைதான் - தொழில்தான், அறிந்து - (செய்யும் உபாயங்களை) அறிந்து, ஆற்றி - (செயலாலும் இடையூறுகளாலும் வருத்தன்பங்களைப்) பொறுத்து, செய்கிற்பாற்கல்லால் - (முடிவு) செய்ய வல்லவனே யல்லது, பிறந்தானென்று - (இவன் கும்பிடத்து) அன்புடை யவனென்று, ஏவற்பாற்றன்று - (வேறொருவனை) ஏவுந் தன்மையை யுடையதன்று, (எ - று).

செய்கிற்பாற் கென்பது செய்கிற்பானெயெப் பொருள்பட்டமை பின் வேற்றுமை மயக்கமாம். அறிவாற்றல்களா லல்லது அன்பினுல் முடி யாதென்று இதனுல் தொழிலினது இயல்பு சொல்லப்பட்டது.

(க - து.) செய்யுமுபாயங்களை யறிந்து முடிப்பவரிடத்தல்லா மல் மற்றவரிடத்துத் தொழிலைவைத்தல்கூடாது என்பது.

5. A king's works can only be accomplished by a man of wisdom and patient endurance; it is not of a nature to be given to another from mere personal attachment.

கூ. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

பரி:—(இ - ள்.) முதற்கண்ணே செய்வானது இலக்கணத்தை ஆராய்ந்து பின் செய்யப்படும் வினையினது இயல்பை ஆராய்ந்து பின் அவனையும் அதனையுங் காலத்தோடு பொருந்த அறிந்து அவனை அதன்கண் ஆடலைச் செய்க, (எ - று).

¶ செய்வானது இலக்கணமும் வினையினது இயல்பும் மேலே கூறப் பட்டன. காலத்தோ டெய்த வுணர்தலாவது இக்காலத்து இவ்விலக்கண முடையான் செய்யின் இவ்வியல்பிற்ற்ய வினை முடியுமென்று கூட்டி யுணர்தல்.

தெளி:—(இ - ள்). செய்வானை - (முன்னே) செய்பவனிலக்கணத் தை, நாடி - ஆராய்ந்து, (பின்னே), வினை - (செய்யப்படுந்) தொழிலினிய ல்பை, நாடி-ஆராய்ந்து, (பின்பு அச்செய்வானையும் அத்தொழிலையும்),

*செய்கிற்பாற்கு என்னும் நான்கனுருபு தனக்குரிய பொருளைவிட்டுச் செய்கிற்பானெயென இரண்டனுருபின் பொருளில் வந்தமையின், வேற்று மை மயக்கமாயிற்று. ‡ ஆற்றல் - பொறுமை.

¶ செய்வானது இலக்கணம் இவ்வதிகாரத்தின் முதல் மூன்று குறளி லும், வினையினது இயல்பு 'அறிந்தாற்றி' என்னும் ஐந்தாவது குறளிலும் சொல்லப்பட்டன.

காலத்தோடு - காலத்துடனே, (சேர்த்து), எய்த - பொருந்த, உணர்ந்து - அறிந்து, செயல் - (அச்செய்வானே அத்தொழில் னிடத்து ஆளுதலேச்) செய்யக்கடவன், (எ - று).

செய்வானது இலக்கணமும் தொழிலினது இயல்பும் முன்னே சொல்லப்பட்டன. காலத்தோடு பொருந்த அறிதலாவது இக்காலத்தில் இவ்விலக்கணமுடையவன் செய்தால் இத்தன்மையதாகிய தொழில் முடியுமென்று கூட்டி அறிதல்

(க - து.) அரசன் முன்னர்த் தொழில்செய்பவனே யாராய்ந்தறிந்து, பின்னர்த் தொழினியல்பை யாராய்ந்தறிந்து, அப்பால் அவனே அத்தொழிலில்வைத் தாளக் கடவன் என்பது.

6. Let a king act, after having well considered the agent whom he is to employ, the deed he desires to do, and the time which is suitable to it.

எ. இதனை யிதனு லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.

பரி:—(இ - ள்.) இவ்வினையை இக்கருவியால் இவன் முடிக்கவல்லனெனக் கூறுபடுத் தாராய்ந்து, * மூன்றுந்தம்முள் இயைந்தவழி அவ்வினையை அவன்கண்ணே விடுக, (எ - று).

கருவி - தினைவரும் பொருளும் † முதலாயின. வினைமுதலும், ‡ கருவியும், வினையுந் தம்முள் இயைதலாவது ¶ ஒன்றோடொன்று ஏனைய இரண்டற்கும் பொருத்தமுண்டாதல். விடுதல - அதற்கு அவனே உரியனுக்கு தல்.

தெளி:—(இ - ன்.) *இதனை - இத்தொழிலை, இதனுல் - இச்சாதனத்தால், இவன் முடிக்குமென்று—இவன் முடிக்கவல்லவனென்று, ஆய்ந்து - (கூறுபடுத்தி) ஆராய்ந்து, (மூன்றும் தம்முள் ஒத்திருந்தவிடத்து), அதனை - அத்தொழிலை, அவன்கண் - அவனிடத்தே, விடல் - விடக்கடவன், (எ - று).*

* *மூன்றும் - தொழில் கருவி செய்பவனென்னும் மூன்றும்.*

† *முதலாயின என்றதனுல் காலம், இடம், படை முதலியவற்றையுங் கொள்க.*

‡ *வினைமுதலின் (செய்பவனின்) தொழிற்பயனேச் செயப்படுபொருளிற் சேர்ப்பது கருவியெனப்படும். கருவியெனினும் காரகமெனினும் காரணமெனினும் ஏதுவெனினும் சாதனமெனினும் ஒக்கும்.*

¶ *தொழிலோடு கருவிக்கும் செய்பவனுக்கும், கருவியோடு தொழிலுக்கும் செய்பவனுக்கும், செய்பவனோடு தொழிலுக்கும் கருவிக்கும் பொருத்த முண்டாதல்.*

சாதனம் - தினைவரும் பொருளும் முதலானவை. செய்பவனும், சாதனமும், தொழிலும் தம்மூன் ஒத்திருத்தலாவது ஒவ்வொன்றோடு மற்றைய இரண்டற்கும் பொருத்தம் உண்டாகுதல். விதேல்—அத்தொழில் செய்தற்கு அவனே உரியவனுக்குதல்.

(க - து.) அரசன் எத்தொழில் எவனுல் முடியுமோ அத் தொழிலை அவனிடத்து வைக்கக்கடவன் என்பது.

7. After having considered, "this man can accomplish this, by these means," let the king leave with him the discharge of that duty.

அ. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்.

*பரி:—(இ - ள்.) ஒருவனை அரசன் தன்வினைசெய்தற் குரியனாக ஆராய்ந்து துணிந்தால், பின் அவனை * அதற்குரியனுமாறு உயரச்செய்க, (எ - று).*

உயரச்செய்தலாவது அதனைத் தானே செய்து முடிக்கும் ஆற்றலுடையானுக்குதல். † அது செய்யாக்காலும் கெடுமென்பது கருத்து.

தெளி:—(இ - ள்.) (ஒருவனை அரசன்) வினைக்கு - (தனது) தொழில் செய்தற்கு, உரிமை - உரியவனுக, நாடியபின்றை - ஆராய்ந்து துணிந்தால் பின்பு, அவனை—, அதற்கு - அத்தொழில் செய்தற்கு, உரியனாக—உரியவனுகும்படி, செயல் (உயரச்) செய்யக்கடவன், (எ - று).

உயரச்செய்தல் - அத்தொழிலைத் (அவன்) தானே செய்துமுடிக்கும் வல்லமையுடையவனுக்குதல். அது செய்யாதவிடத்தும் கெடுமென்பது கருத்து.

(க - து.) அரசன் ஒருவனைத் தன் தொழிற்குரியவனுயிருத்தலே யாராய்ந்தறிந்து, பிறகு அவனை அத்தொழிற்கு உரியவனுகச் செய்யக்கடவன் என்பது.

8. Having considered what work a man is equal to, let the king employ him in that work.

கூ. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே ரூக
நினைப்பானை நீங்குந் திரு.

பரி:—(இ - ள்.) எப்பொழுதுந் தன்வினையின் கண்ணே முயறலை

** அதற்குரியனுமாறு—அத்தொழில்செய்தற்குச் சுதந்தரனுகும்படி*

† அது செய்யாக்காலும் கெடும் - அத்தொழில்செய்தற்கு அவனைச் சுதந்தரனுக்காவிடத்தும் (தொழில் முடிவின்றிச்) கெட்டொழியு மென்பதாம்.

யுடையான் ¶ அவ்வுரிமையாற் றனக்குக் கேளாய் ஒழுகின்ற தன்மை யை * அது பொறுதார் சொற்கேட்டு அரசன் மாறுபடக் கருதுமாயின், திருமகள் அவனைவிட்டு நீங்கும், (எ - று).

கேளாயொழுகுகின்ற தன்மையாவது தான் பிறனுய்கில்லாது கேளிர் செய்யும் உரிமையெல்லாஞ் செய்தொழுகுதல். அவனை அமைதிப்பாகக் கொண்டு செறக்கருதுமாயின், பின் ஒருவரும் உட்பட்டு முயல்வாரில்லை யாம்; ஆகவே, தன்செல்வங் கெடுமென்பது கருத்து. இங்ஙான்கு பாட்டா லும் ஆடற்குரியானை ஆளுக்திறங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வினைக்கண் - (தனது)தொழிலினிடத்தே,வினை யுடையான் - (எப்போதும்) முயற்சி செய்தலை யுடையவன், (அவ்வுரிமை யால்), கேண்மை - (தனக்குச்) சுற்றமாய் நடக்கின்ற தன்மையை, (அது பொறுதலாது சொல்லைக் கேட்டு), வேறுக - மாறுபட, (அரசன்), நினைப் பானை - நினைப்பானுனுல், திரு - சீதேவி, நீங்கும் - (அவ்வரசனை) விட்டு நீங்குவான், (எ - று), (திரு-செல்வம்).

சுற்றமாய் நடக்கின்ற தன்மையாவது(வினையுடையான் அரசனுக்குத்) தான் பிறனுய் நில்லாமல் சுற்றத்தார் செய்யும் உரிமையை யெல்லாம் செ ய்து நடத்தல். (அரசன்) அவனை அமைதிப்பாகக்கொண்டு கோபிக்க நினைப் பானுயின், பின் ஒருவரும் உட்பட்டு (தொழிலில்) முயல்வாரில்லையாம்; இல்லையாகவே, தன் செல்வம் கெடுமென்பது கருத்து. இங்ஙான்கு பாட் டாலும் (அரசன்) ஆளுதற்கு உரியவனை ஆளும்வகை சொல்லப்பட்டது.

(க - து.) தனது காரியத்தில் முயற்சி யுடையவனை யிருப்பவ னைமா றுபடநினைக்கும் அரசனதுசெல்வம் அழிந்துபோமென்பது.

9. Prosperity will leave the king who doubts the friendship of the man who steadily labours in the discharge of his duties.

கூ0. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

பரி:—(இ - ள்.) வினைசெய்வான் † கோடாதொழிய ‡ உலகங் கோடாது; ஆதலான், அரசன் ¶ அவன்செயலை நாடோறும் ஆராய்க.

¶ அவ்வுரிமையால்—தன்தொழிலைச்செய்யுஞ் சுதந்தரத்தினுல்.

* அது பொறுதார்—கேளா யொழுகுகின்ற (சுற்றமாய் நடக்கின்ற) தன்மையைப் பொறுக்கமாட்டாதவர்.

† கோடாதொழிய—எண்ணம், சொல், செயல் என்பனவற்றுள் மாறுபடாதிருக்க.

‡ உலகங் கோடாது—உலகியல்பு மாறுபடாது. ¶ அவன்—வினை செய்வான்.


* அஃதொன்றனையும் ஆராயவே † அதன்வழித்தாய உலகமெல்லாம் ஆராய்ந்தானும்; ‡அதனால் அவனுரிமை அழியாமற் றன்னுளே ஆராய்ந்து போதல வென்பதாம். இதனுள் ¶ ஆண்டவழிச் செய்வது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வினை செய்வான் - தொழில் செய்பவன், கோடாமை - மாறுபடாதிருக்க, உலகு - உலகமானது, கோடாது-மாறுபடாது, (ஆதலால்), மன்னன் - அரசன், நாடோறும் - தினந்தோறும், நாடுக - (அவன் செயலை) ஆராயக்கடவன், (எ - று).

(அரசன்) அஃதொன்றனையும் ஆராயவே அதன் வழிப்பட்ட உலகமெல்லாம் ஆராய்ந்தவனுவன்; அதனால் அவனுரிமை அழியாமல் தன்னுள்ளே ஆராய்ந்துகொண்டு வரக்கடவனென்பதாம். இதனுள் (அரசன் வினை செய்வானை) ஆண்டவிடத்துச் செய்வது சொல்லப்பட்டது.

(க - து.) தனது தொழில் செய்பவன் மாறுபடாதுதொழில் செய்வதனால் உலகம் மாறுபடாதிருத்தலால், அவனை அரசன் நாள்தோறும் ஆராய்ந்து வரக்கடவன் என்பது.

10. Let a king daily examine the conduct of his servants; if they do not act crookedly,the world will not act crookedly.



பதினேந்தாம் அதிகாரம்.

சுற்றந்தழால்—*On kindness to relatives.*

பரி:—அஃதாவது அரசன் தன்கீழ்ஞரைத் தன்னினங்காமல்அணைத்தல். வினைசெய்வாரைக் கூறி ஏனைச்சுற்றங் கூறுகின்ற ராகலின், இது தெரிந்து வினையாடலின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது அரசன் தனது சுற்றத்தாரைத் தன்னைவிட்டு நீங்காதிருக்குமாறு தழுவுதல். தொழில் செய்வாரைச் சொல்லி மற்றைச் சுற்றத்தாரைச் சொல்லுகின்றார் ஆதலால், இது (சுற்றந்தழால்) தெரிந்து வினையாடலின்பின் வைக்கப்பட்டது.

க. பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

* அஃதொன்றனையும்—வினைசெய்வான் செயலொன்றைமாத்திரம்.

† அதன்—அச்செயலினது.

‡ அதனால் - அச்செயலினால்.

¶ ஆண்டவழிச் செய்வது—அரசன் ஒருவனை யொருதொழிற்கு உரியவனுக ஏற்படுத்திய விடத்து அவனது செயலைத் தினந்தோறும் ஆராய்ந்து வரவேண்டு மென்பது.

பரி:—(இ - ள்.) ஒருவன் செல்வந்தோலைந்து வரியறைய வழியும் விடாது தம்மோடு அவனிடைப் பழைமையை எடுத்துக்கொண்டாடும் இயல்புகள் சுற்றத்தார்மாட்டே உளவாவன, (எ - று).

* சிறப்பும்மை வதியறைவழிப் பாராட்டப் படாமை விளக்கின்றது. பழைமை - பற்றறுக் காலத்துத் தமக்குச் செய்த உபகாரம். பிற செல்லாம் அவன் பற்றற்றபொழுதே தாமும் அவனெடு பற்றறவராக வின், ஏகாரத்தேற்றத்தின்கண் வந்தது. இதனைற் † சுற்றத்தது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) பற்றற்றகண்ணும் - (ஒருவன்) செல்வந்தொலைந்து தரித்திரனை விடத்தும், பழைமை - (விடாமல் தம்மோடு அவனிடத்துள்ள) பழைமையை, பாராட்டுதல் - எடுத்துக் கொண்டாடு மியல்புகள், சுற்றத்தார்கண்ணே - சுற்றத்தாரிடத்தே, உள - உளவாவனவாம், (எ-று).

பற்றற்றகண்ணும்என்றசிறப்பும்மைதரித்திரனைவிடத்து(தம்மோடு அவனிடத்துள்ள பழைமையைப்) பாராட்டுதலில்லாமையை விளக்கின்றது. பழைமை - (அவன்) செல்வமொழியாத காலத்தில் தமக்குச்செய்த உபகாரம். (சுற்றத்தாரல்லாத) மற்றவரெல்லாம் அவன் செல்வ மொழிந்த பொழுதே தாமும் அவனெடு நெகிழ்ந்துவிட்டு நீங்குவாராதலால் 'சுற்றத்தார் கண்ணே' என்னும் ஏகாரம் (சுற்றத்தார் பழைமை பாராட்டுதலைத் தெளிவிக்கத்) தேற்றப்பொருளில்வந்தது. இதனால் சுற்றத்தினது சிறப்புச்சொல்லப்பட்டது.

(க - து.) ஒருவனது செல்வம் நீங்கிய விடத்தும் அவனை விடாதிருந்து கொண்டாடுதல் சுற்றத்தாரிடத்துண்டு என்பது.

1. Even when a man's prosperity is all gone, relatives will act towards him with their ancient kindness.



2. விருப்பறுச் சுற்ற மிவையி னருப்பறு
வாக்கம் பலவுந் தரும்.

பரி:—(இ - ள்.) அன்பறுத சுற்றம் ஒருவற்கெய்துமாயின் அஃது அவற்குக் ‡ கிளைத்தலறுத செல்வங்கள் பலவற்றையுங் கொடுக்கும்.

* இழிவு சிறப்பும்மை.

† "அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோல், உற்றழித் தீர்வா ருறவல்லர், அக்குளத்தில், கொட்டியு மாம்பலு மெய்தலும் போலவே, ஒட்டி யுறுவா ருறவு" என்பது மூதுரை.

‡ கிளைத்தலறுத-மேலுமேலும் விருத்தியாதலொழியாத.

* உட்பகையி னீக்குதற்கு 'விருப்பமுச்சுற்றம்' என்றும், † தானே வளர்க்கும் ஒருதலையாய செல்வத்தி னீக்குதற்கு 'அருப்பமுவாக்கம்' என்றும், ‡ விசேடித்தார். ¶ தொடைநோக்கி விகாரமாயிற்று. 'இயையின்' என்பது அதனது அருமை வினைக்கி னின்றது. § ஆக்கமென்பது ஆகுபெயர். பலவுமென்றது () அங்கங்கள் ஆறனையும் நோக்கி. பலர் கூடி வளர்த்தலின் ○ அவை மேன்மேற் கிளைக்கு மென்பது கருத்து.

தேளி:—(இ - ன்.) விருப்பமு - அன்பு நீங்காத, சுற்றம் - சுற்றமானது, இயையின் - (ஒருவனுக்குக்) கிடைக்குமாயின், (அச்சுற்றமானது), அருப்பமு - கிளைத்தல் நீங்காத, ஆக்கம் பலவும் - செல்வங்கள் பலவற்றையும், தரும் - (அவனுக்குச்) கொடுக்கும், (எ - று).

உட்பகையி னின்றும் நீக்குதற்கு 'விருப்பமுச் சுற்றம்' என்றும், தானே வளர்க்கும் உறுதியுடையதாய செல்வத்தி னின்றும் நீக்குதற்கு 'அருப்பமு வாக்கம்' என்றும் அடை கொடுத்துச் சொல்லினர். அருப்பு என்பது தொடை நோக்கி அருப்பு என விகாரமாயிற்று. 'இயையின்' என்பது அச்சுற்றம் கிடைத்தலினது அருமையை வினைக்கி னின்றது. ஆக்கம்-காரியவாகுபெயர். பலவு மென்றது அங்கங்கள் ஆறனையும் நோக்கியாம். சுற்றத்தார் பலர்கூடி வளர்த்தலால் அவை மேலுமேலும் கிளைக்குமென்பது கருத்து.

* உட்பகையாவது புறப்பகைக்கு இடமாக்கிக் கொடுத்து அப்புறப்பகையானது வெல்லு மளவும் உள்ளாய் நிற்கும் பகை. அஃதாவது வெளியே கட்பா யிருந்து உள்ளே பகை கொண்டிருப்ப தென்பதாம். இதனை நீதிநெறி விளக்க நூலார் "புறஞ்ட டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை" என்றனர்.

† "தூற்றுக்குமேல் ஊற்று" என்னும் பழமொழிப்படி வேறு செல்வங்களைப் பெருகச்செய்தற்கு உறுதியுடையதா யிருக்கும் செல்வத்தி னின்றும் நீக்குதற்கு 'அருப்பமுவாக்கம்' என்று கூறப்பட்டது.

‡ சுற்றம் என்பது விருப்பமு என்னும் விசேடணத்தோடும், ஆக்கம் என்பது அருப்பமு என்னும் விசேடணத்தோடும் கூடிவந்தமையின், சுற்றம் ஆக்கம் என்னு மிவ்விரண்டும் முறையே விருப்பமு அருப்பமு என்னும் விசேடணங்களால் விசேடிக்கப்பட்டனவாயின.


¶ அரும்பு என்னும் முதனிலைத் தொழிற்பெயர் தொடைநோக்கி அருப்பு என விகாரப்பட்டு நின்றது. [அரும்பமு என்பது விருப்பமு என்பதற்கியைய அருப்பமு என்று தொடைநோக்கி விகாரப்பட்டது. பல வடிகளிலேனும் பல சீர்களிலேனும் எழுத்துக்களொன்றி வருவது தொடையெனப்படும்.]

§ ஆக்கத்திற்கு (மேலும் மேலு முயர்தற்குக்) காரணமாய செல்வத்தை ஆக்கமென்றது காரியவாகு பெயராம்.

() அங்கங்கள் (உறுப்புக்கள்)—அமைச்சு, நாடு, அரண், பொருள் படை, நட்பு. ○ அவை—செல்லுங்கள்.

(க - து.) ஒருவனுக்கு அன்புள்ள சுற்றம் கிடைக்கு மானால், அஃதவனுக்குப் பல செல்வங்களையுந் தரும் என்பது.

2. If a man's relatives remain attached to him with unchanging love, it will be a source of ever-increasing wealth.



ந. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

பதி:—(இ - ள்.) அச்சுற்றத்தோடு நெஞ்சு கலந்தல் இல்லாதவன் வாழ்க்கை * குளப்பரப்புக் கரையின்றி நீர்நிறைந்தாற்போலும், (எ - று).

சுற்றத்தோடென்பது † அதிகாரத்தான்வந்தது. நெஞ்சுகலப்புத்தன் ‡ னாலும் அதனளவும் உசாவுதலான் வருவதாகலின், ¶ அளவளா என்பது ஆகுபெயர். வாழ்க்கை யென்றதனாலும் அதற்கேதுவாய செல்வங்களை. () நிறைதலென்னும் இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேனின்றது. சுற்றமில்லாதான் செல்வங்கள் ○ தாங்குவார் இன்மையிற் புறத்துப்போ மென்பதாம்.

தெளி:—(இ - ள்.) அளவளாவில்லாதான் - (அச்சுற்றத்தோடு) நெஞ்சு கலத்தலில்லாதவனது, வாழ்க்கை - வாழ்க்கையானது, குளவளா-குள

* குளப்பரப்பு - குளத்தின் வீரிவான இடம்.

† சுற்றத்தழால் என்னும் இவ்வதிகாரத்தால். ‡ அளவு - யோகக்ஷேமம். முன்பு கிடையாதபொருள் கிடைப்பது யோகம்; கிடைத்தபொருளைப் பரிபாலித்தல் க்ஷேமம்.

¶ அளவளாதல் (யோக க்ஷேமங்களின் எல்லையை விசாரித்தறிதல்) என்பது அளவளா என நின்றது. அளவளா என்பது முதனிலைத் தொழிற்பெயர். அளவளா என்பது அதன் காரியமான நெஞ்சுகலப்பை யுணர்த்துதலால் கருவியாகுபெயராம். (ஒருவர்க்கொருவர் யோகக்ஷேமங்களை விசாரித்தறிவதால் மனக்கலப்புண்டாகு மென்பது நிரண்டபொருள்).

() குளத்திலுள்ள நீரினது தொழிலான நிறைதலைக் குளத்தின் மேலேற்றிக் 'குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று' என்று கூறினமையின், 'நிறைதலென்னும் இடத்து (குளத்து) நிகழ் (இருக்கும்) பொருளின் (நீரின்) தொழில் இடத்தின் (குளத்தின்) மேனின்றது' என்று கூறப்பட்டது. பிரயோக விவேகநூலார் "மருளறு காரணம்" என்னுஞ் செய்யுளியலுரையில் "குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று, இந்தப்பானை சோறழி யாநிற் பொங்கும். இவை புலமென்னும் இடத்து நிகழ் பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றன" என்றனர்.

○ தாங்குவாரின்மையின் - வெளியிற் போகாவண்ணம் விழிப்போடு சாப்பவரில்லாமையினால்.

ப்பரப்பானது, கோடின்றி - கரையில்லாமல், நீர்நிறைந்தற்று - நீர்நிறைந்தாற்போலும், (எ - று).

சுற்றத்தோடு என்பது அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. நெஞ்சு கலப்புத் தன்னளவும் அச்சுற்றத்தினளவும் விசாரித்தறிதலால் வருவதாகலின், அளவளா என்பது கருவியாகுபெயர். * வாழ்க்கை யென்றதும் வாழ்க்கைக்குக் காரணமான செல்வங்களை. நிறைதல் என்னும் இடத்து நிகழ் பொருளான நீரினது தொழில் இடத்தின்மேல் நின்றது. சுற்றமில்லாதவனது† செல்வங்கள் தாங்குவாரில்லாமையால் வெளியே போய்விடுமென்பதாம்.

(க - து.) சுற்றத்தாரோடு மனங்கலந்து வாழாதவனது செல்வம் பாதுகாப்பவரில்லாமையால் அழிந்துபோம் என்பது.

3. The wealth of one who does not mingle freely with his relatives, will be like the full waters of a spacious tank, that has no banks.

ச. ‡ சுற்றத்தாற் சுற்றப் படவோழுகல் செல்வந்தான்
பேற்றத்தாற் பேற்ற பயன்.

பரி:—(இ - ள்.) செல்வம் பெற்றவதனால் ஒருவன் பேற்ற பயனது தன் சுற்றத்தால் தான் சூழப்படும் வகை அதனைத் ‡ தழீஇ யொழுகுதல், (எ - று).

¶ பெற்ற என்பதனுள் அகரமும் அதனலென்பதனுள் அன்சாரியையும் தொடைநோக்கி விகாரத்தாற்றொக்கன. இவ்வொழுக்குப் பகையின்றி அரசாடற் கேதுவாகலின், இதனைச் செல்வத்திற்குப் 'பயன்' என்றார். இவை மூன்றுபாட்டானும் சுற்றத்தால் செல்வத்திற் கேதுவும் அரணும் பயனுமா மென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) செல்வம் - செல்வத்தை, பெற்றதனால் - பெற்ற அதனால், பெற்றபயன் - (ஒருவன்) பெற்றபயனாவது, சுற்றத்தால்-(தனது) சுற்றத்தினால், தான் சுற்றப்பட - தான் சூழப்படும்வகை, ஒழுகல் - (அச் சுற்றத்தைத் தழுவி) ஒழுகுதலாம், (எ - று).

* வாழ்க்கையென்பது வாழ்க்கைக்குக் காரண மாய செல்வங்களை யுணர்த்துதலால் காரியவாகுபெயராம்.

† "சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்" என்பது கொன்றைவேந்தன்.

‡ தழீஇயொழுகுதல் - உபசரித்து நடத்தல்.

¶ பெற்றத்தால் என்பதனைப் பெற்ற அதனால் எனப்பிரித்துப் 'பெற்ற என்பதனுள் அகரமும் அதனால் என்பதனுள் அன்சாரியையும் தொடைநோக்கி(செய்யுள்) விகாரத்தாற் றொக்கன' என்று கூறப்பட்டது.

பெற்றவதனல் என்பது சுற்றத்தால் என்னும் தொடைகோக்கிச்செய்யுள் விகாரத்தால் பெற்றத்தால் எனவந்தது. (சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகும்) இவ்வொழுக்கம் (அரசன்) பகையில்லாமல் அரசாளுதற்குக் காரணமாகலால், இவ்வொழுக்கத்தினைச் செல்வத்திற்குப்'பயன்'என்ருர். இவை மூன்றுபாட்டாலும் சுற்றத்தைத் தழுவுதல் முறையே செல்வத்திற்குக் காரணமும்,அரணும்,பயனும் ஆமென்பதுசொல்லப்பட்டது அரண்பாதிகாப்பு.

(க - து.) ஒருவன்தான் அடைந்த செல்வத்தால் அடையும் பயன் தன் சுற்றத்தாரோடு மனங்கலந்து வாழ்தலேயாம்.

4. To live surrounded by relatives, is the advantage to be derived from the acquisition of wealth.

குறள். கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

பரி:—(இ - ள்.) ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலேயும் இன்சொற் சொல்லுதலேயும் வல்லனாயின் தம்மிற் § றொடர்ந்த பல வகைச் சுற்றத்தானே தழுப்படும், (எ - று)

† இரண்டும் ¶ அளவறிந்தாற்றுதல் அரிதென்பது தோன்ற 'ஆற்றின்' என்ருர். தம்மிற்றொடர்தலாவது சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமுமாய் ‡ அவற்றுற் பிணிப்புண்டுவருதல். இவ்வுபாயங்களேவடநூலார் தானமுஞ் சாமமுமென்ப.

தெளி:—(இ - ன்.) (ஒருவன் சுற்றத்திற்கு) கொடுத்தலும் - (வேண்டுவனவற்றைக்) கொடுத்தலேயும், இன்சொலும் - இன்சொற் சொல்லுதலேயும், ஆற்றின் - செய்ய வல்லவனுயின், அடுக்கிய - தம்மில் தொடர்ந்த, சுற்றத்தால் - (பலவகைச்) சுற்றத்தாலே, சுற்றப்படும் - சூழப்படுவான், (எ - று).

இரண்டும் அளவறிந்து செய்தல் அரிதென்பது தோன்ற 'ஆற்றின்' என்ருர். தம்மில் தொடர்தலாவது உறவினது உறவும் அதனது உறவும் ஆய் அவ்வுறவுகளால் சம்பந்தப்பட்டுவருதல். கொடுத்தலுமின்சொலுமாகிய இவ்வுபாயங்களே வடநூலார் தானமும் சாமமும் என்பர். கொடுத்தல்-தானமாம்; இன்சொற் சொல்லுதல்-சாமமாம்.

§ தொடர்தல் - உறவின் முறையாகத் தொடர்ந்திருத்தல்.

† இரண்டும் - சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலும்.

¶ *அளவறிந்தாற்றுதல்-(செல்வமுதலியவற்றில்)தனதளவையும் சுற்றத்தினளவையும் தெரிந்து அவ்வளவிற்கேற்பச் செய்தல்.*

‡ *அவற்றுற் பிணிப்புண்டு - சுற்றமும் அதனது சுற்றமும் அதனது சுற்றமுமாய அவற்றுல் நெருங்கச் சூழப்பட்டு.*

(க - து.) சுற்றத்தாரிடத்து ஈதலேயும் இன்சொற் சொல்லு தலேயும் உடையவன் அச்சுற்றத்தாரோடு என்றும் பிரிவின்றி வாழ்வன் என்பது.

5. He will be surrounded by numerous relatives who manifests generosity and affability.

கூ. பெருங்கோடையான் பேணுன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

பரி:—(இ - ள்.) ஒருவன் மிக்ககோடையை யுடையனுமாய் வெகுளியை விரும்பானும் ஆயின் அவன்போலக் கிளையுடையார் இவ்வுல கத்திலில்லே, (எ - று).

மிக்ககொடை - ஒன்றனும் வறுமை யெய்தாமற் கொடுத்தல். விரும்பாமை-† இஃது அரசற்கு வேண்டுவதொன்றென்று அளவிறந்து செய்யாமை.

தெளி:—(இ - ள்.) (ஒருவன்) பெருங்கொடையான் - மிகுந்த கொடையை யுடையவனுமாய், வெகுளி - கோபத்தை, பேணுன் - விரும்பாதவனும், (ஆனல்), அவனின் - அவனேப்போல, மருங்குடையார் - சுற்றமுடையவர், மாநிலத்து - (இப்)பெரிய உலகத்தில், இல்-இல்லே, (எ-று).

மிகுந்த கொடை - (சுற்றத்தார்) ஒன்றனும் வறுமை யடையாவாறு (அவர்க்கு வேண்டுவனவற்றைச்) கொடுத்தல். கோபத்தை விரும்பாமை—இஃது (கோபம்) அரசனுக்கு (அவசியமாய்) வேண்டுவ தொன்றென்று (கொண்டு அதனே) அளவுகடந்துசெய்யாமை.

(க - து.) வரையாது கொடுத்தலேயும் கோபத்தை யடக்குதலேயும் உடையவரைப்போலச் சுற்றத்தாரை யுடையவர் உலகத்தில் ஒருவருமில்லே என்பது.

6. No one, in all the world, will have so many relatives about him, as he who makes large gifts, and does not give way to anger.



† இஃதாதற்கு (இக்கோபம் செல்வம் விருத்தி யடைவதற்கு) என்றும் பாடமுண்டு.

'இஃது அரசற்கு வேண்டுவ தொன்றென்று அளவிறந்து செய்யாமை' என்றதனுல் அரசன் கோபத்தையளவறிந்து செய்யவேண்டுமென்பது பெறப்படுவதாம்; படவே, கோபம் பற்றற வொழிக்குங் குற்றமன்றென்றுரையிற்று. குற்றங்கடிதல் அதிகாரம் பத்தாவது குறளின் விசேடவுரையில "காமம் வெகுளி உவகையென்பன முற்றக்கடியுங் குற்றமன்மையின்" என்றும், பேதைமை யதிகாரத்தின் அவதாரிகையில் "அப்பகைதான் முற்றக்கடியுங் குற்றமன்மையி னுளவாய வெருளியானுங் காமத்தானும் வருவதாம்" என்றும் கூறியிருத்தலுமிங்குக் கவனிக்கத்தக்கதாம்.

எ. † காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள.

பரி:—(இ - ள்.) காக்கைகள் தமக்கிரையாயின கண்டவழி மறையாது இனத்தை யழைத்து அதனோடுங்கூட வுண்ணுநிற்கும்; ‡ சுற்றத்தான் எய்தும் ஆக்கங்களும் அப்பெற்றித்தாய இயல்பினை யுடையார்க்கே உளவாவன, (எ - று).

அவ்வாக்கங்களாவன: பகையின்மையும் பெருஞ்செல்வமுடைமையும் * முதலாயின. எச்சவும்மையான் அறமும் இன்பமுமே யன்றிப் பொருளும் எய்துமென்பது § பெறுதும். அப்பெற்றித்தாய வியல்பென்றது தாம நுகர்வனவெல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல்.

தெளி:—(இ - ள்.) காக்கை - காகங்கள், (தம்க்கு இரையாயுள்ள வற்றைக்கண்ட விடத்தி), கரவா-மறைபாது, கரைந்து - (தம்மினத்தை) அழைத்தி, உண்ணும் - (அவ்வினத்தோடுங்கூட) உண்ணுநிற்கும், ஆக்கமும் - (சுற்றத்தினுலடையும்) பெருக்கங்களும், அன்னநீரார்க்கே - அத்தன்மையதாய இயல்பினையுடையவர்க்கே, உள - உளவாகும், (எ - று).

அப்பெருக்கங்களாவன: பகையில்லாமையும் பெருஞ்செல்வ முடைமையும் முதலானவை; ஆக்கமும் என்ற இறந்ததழுவியவெச்ச வும்மையால் அறமும் இன்பமுமே யல்லாமல் பொருளும் வந்தடையுமென்பது பெறப்படும். அத்தன்மையதாய வியல்பென்றது தாம் அனுபவிப்பன வெல்லாம் அச்சுற்றத்தாரும் அனுபவிக்கும்படி வைத்தல்.

(க - து) தாம் அனுபவித்தற் குரியவற்றைச் சுற்றத்தாரோடு கூடியனுபவிப்பவர் பகையின்றிப் பெருஞ்செல்வராக வாழ்வார் என்பது.

7. The crows do not conceal their prey, but will call out for others to share with them while they eat it; wealth will be with those who show a similar disposition towards their relatives.

அ. பொதுநோக்காண் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

பரி:—(இ - ள்.) எல்லாரையும் ஒருதன்மையராக நோக்காது அரசன் தந்தந் நதுதிக்கேற்ப ¶ நோக்குமாயின், அச்சிறப்புநோக்கி அவனை விடாது வாழுஞ் சுற்றத்தார் பலர், (எ - று).

† "காக முறவு கலந்துண்ணக் கண்டீர்" என்றார் தாயுமானவர்.

‡ சுற்றத்தான் எய்தும் ஆக்கங்கள் - உறவின் முறையாரால் அடையும் பேறுகள்.

* முதலாயின என்றதனுல் கல்வரால் கலிவின்மை, வினை செய்வாரால் கெடுதியின்மை முதலியவற்றையுங் கொள்க. § பெறுதும் - பெறுவோம். ¶ நோக்குமாயின் - உபசரித்து நடப்பானுயின்.

† உயர்ந்தார் நீங்குதல் நோக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடா தொழுகுதல் நோக்கி வரிசைநோக்கை விதித்தார். இந்நான்கு பாட்டானுஞ் சுற்றத் தழுவும் உபாயங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வேந்தன் - அரசன், பொதுநோக்கான் - எல்லாரையும் ஒரு தன்மையராக நோக்காமல், வரிசையா - (அவரவர்) தகுதிக்கு ஏற்ப, நோக்கின் - நோக்குவானுயின், அது நோக்கி—அச்சிறப்பு நோக்கி, வாழ்வார் பலர்-(அவ்வரசனே விடாது) வாழுஞ்சுற்றத்தார் பலர், (எ - று.)

உயர்ந்தார் நீங்குதலைக் குறித்துப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடாதொழுகுதலைக் குறித்து 'வரிசையாநோக்கி' என வரிசை நோக்கை விதித்தார். இவை நான்கு பாட்டாலும் சுற்றத்தைத்தழுவும் உபாயம் சொல்லப்பட்டது. வரிசை - கிரமம்.

(க - து.) அரசன் பொதுநோக்கை விட்டுச் சிறப்பு நோக்கோடு ஒழுகுவானுயின், அவனைச் சுற்றத்தார் விடாதிருப்பர்.

8. Many relatives will live near a king, when they observe that he does not look on all alike, but that he looks on each man according to his merit.

கூ. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

பரி:—(இ - ள்.) முன்தமராய வைத்துத் தன்னோடு ‡ அமராது யாதானுமொரு காரணத்தால் தன்னைப் பிரிந்துபோயவர் பின்னும் வந்து சுற்றமாதல் அவ்வமராமைக் காரணம் தம்மாட்டில்லையாகத் தானே யுளதாம், (எ - று).

'அமராமைக் காரண மின்றி' என்றதனுல், முன் * அஃது

† அரசன் உயர்ந்தாரிழிந்தாரென்று கருதாது யாவரையும் ஒரு தன்மையராகக் கருதி நடந்தால், அந்நடக்கையை நோக்கி உயர்ந்தார் தம்மை யிழிவுபடுத்தியதாகவெண்ணி நீங்கிவிடுவது பற்றி அரசனுக்குப் பொது நோக்குக் கூடாதென்றுவிலக்கிச் சிறப்பு நோக்கு விதிக்கப்பட்டது. சிறப்பு நோக்காவது உயர்ந்தாரிழிந்தாரென்றறிந்து அவரவராது தகுதிக்கேற்ற வண்ணம் நடத்தல். மலையமான் திருமுடிக்காரி யென்னுமரசனை நோக்கிக் கபிலர் என்னும் புலவர்(புறநானூற்றில்)"ஒருநிசை யொருவனே யுள்ளி நாற்றிசைப், பலரும் வருவர் பரிசின் மாக்கள்,வரிசை யறிதலோ வரிதே பெரிது, மீத லெளிதே மாவண் டோன்றல், அதனுற் கறிந்தனே யாயிற், பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே" என்று கூறியது மிங்குறியத்தக்கதாம்.

‡ அமராது - மணங்கலவாது.

* அஃது - அமராமைக் காரணம் (மணங்கலவாமைக்குரிய ஏது).

† உண்டாய்த் திறத்தல்பெற்றும். அஃதாவது அரசன் தான் ‡ நெறிகெட வொழுகல் * வெறுப்பன செய்தலென்றிவை § முதலியவற்றுள் வருவது. ¶ ஆக்கம் வருவிக்கப்பட்டது. () இயற்கையாகவே அன்புடையராய சுற்றத்தார்க்குச் o செயற்கையான் வந்த நீக்கம் அதனை ஒழிய ஒழிந்தால் அவர்க்கன்பு செய்துகொள்ளவேண்டாம்; பழைய இயல்பாய் நிற்குமென்பார் 'வரும்' எனறார்.

தெளி:—(இ - ள்.) தமராகி - (முன்னே) சுற்றத்தாராயிருந்து, தற்றுறந்தார் - (தனஞ்ஞெடு பொருந்தாமல் யாதாயினும் ஒரு காரணத்தால்) தன்னைப் பிரிந்துபோனவர், சுற்றம் - (பண்ணுமலந்து) சுற்றத்தார் (ஆகுதல்), அமராமைக்காரணம் - அப்பொருந்தாமையின் காரணம், இன்றி - (தன்னிடத்து) இல்லையாக, வரும் - (தானே) உண்டாகும், (எ - று).

'அமராமைக் காரணமின்றி'என்று கூறினமையால், முன்பு அஃதிருந்து நீங்குதல் பெறப்படும். அவ்வமராமைக் காரணமாவது அரசன்தான் வழிதப்பி நடத்தல் வெறுப்பனவற்றைச் செய்தலென்றறிவை முதலியவற்றுள் வருவது. ஆகுதல் என்னும் ஆக்கச்சொல் வருவிக்கப்பட்டது. இயற்கையாகவே அன்புடையராகிய சுற்றத்தார்க்குச் செயற்கையால் வந்த பிரிவு அச்செயற்கையை ஒழிய ஒழியுமெ; (அப்பிரிவு) ஒழிந்துபோனால் அச்சுற்றத்தார்க்கு அன்பு செய்துகொள்ளவேண்டாம்;(அன்பு) பழைய இயல்பாய் நிற்குமென்பார் 'வரும்'என்றார்.

(க - து.) முன்சுற்றத்தாராயிருந்து பிரிந்தவர் பின்னுஞ் சுற்றத்தாராகுதல் அப்பிரிவின் காரணம் ஒழியத்தானே யுண்டாம்.

† உண்டாய்த் திறத்தல் - தன்னிடத்து உண்டாயிருத்தலால் சுற்றத்தார் தன்னை விட்டு நீங்கிப்போகுதல்.

‡ நெறிகெட வொழுகல் - அறநூல், பொருள்நூல், நீதிநூல் கூறிய வாறு நடவாது தான் விரும்பியவாறு நடத்தல்.

* வெறுப்பன செய்தல் - அறிவுடையாரியாவரும் வெறுக்கத்தக்க காரியங்களைச் செய்தல்.

§ முதலிய என்றதனால் பற்றறவொழிக்கும் குற்றமல்லாத காமம் வெகுளி யுவகைகளை அளவு கடந்து செய்தல், தீயகாரியங்கள் செய்வதைக் கண்டால் கண்டித்துப் புத்திசொல்லும் அமைச்சர் புரோகிதர்களை யாதரியாமை முதலியவற்றையுங் கொள்க.

¶ சுற்றம் என்பதனினுதியில் ஆதல் என்னும் ஆக்கச்சொல் வருவித்தரைக்கப்பட்டது. () இயற்கையாகவே - சுபாவமாகவே.

o நெறிகெடவொழுகல் வெறுப்பன செய்தல்முதலிய செயற்கையால் வந்தபிரிவு அதனை (நெறிகெட வொழுகல் முதலியசெயற்கையை)நீங்க நீங்கும்; நீங்கினால் அவர்க்கு (சுற்றத்தார்க்கு) அரசன் அன்புசெய்து சுற்றமாக்கொள்ளவேண்டாம்; அச்சுற்றத்தார் பழைய சுபாவமாகவேஅன்புடையராயிருப்பார் என்பதாம்.

9. Those who have been friends and have afterwards forsake nhim will return and join themselves to him, when the cause of disagreement is taken away.



௪0. † உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானே வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

பரி:—(இ - ள்.) காரணமின்றித் தன்னிடத்தநின்றும் பிரிந்துபோய்ப் ‡ பின்காரணத்தான் வந்த சுற்றத்தானை அரசன் அக்காரணத்தைச் * செய்து வைத்து ஆராய்ந்து தழுவிக்கொள்க, (எ - று).

§ வானா 'உழைப்பிரிந்து' என்றமையின், பிரிதற்குக் காரண மின்மை பெற்றும். ¶ வருதற்காரணத்தைச் செய்யாதவழிப் பினனும் பிரிந்து போய்ப் பகையோடு கூடுமாகலின் 'இழைத்திருந்து' என்றும், () அன்பினறிப் போய்ப் பின்னுங் காரணத்தான் வந்தமையின் 'எண்ணிக்கொளல்' என்றுங் கூறினர். பிரிந்துபோய சுற்றத்தாருள் ο நீமை செய்யப்போய் ‖ அதனை ஒழியவருவானும் × அது செய்யாமற்போய்ப் பின் ÷ நன்மை செய்யவருவானும் தழுவப்படுமாகலின், [] தழுவுமாறு முறைபிழைய இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) உழை - (தன்) இடத்தினின்றும், பிரிந்து-(காரணமில்லாமற்) பிரிந்துபோய், காரணத்தின் - (பின்பு) காரணத்தினால், வந்தானை - வந்தசுற்றத்தானை, வேந்தன் - அரசன், இழைத்திருந்து - (அக்காரணத்தைச்) செய்துவைத்து, எண்ணி - ஆராய்ந்து, கொளல் - (தழுவிக்) கொள்வக்கடவன், (எ - று).


சும்மா 'உழைப்பிரிந்து' என்றகூறினமையால், பிரிதற்குக் காரணமில்லாமை பெறப்பட்டது. வருதற்குக்காரணத்தைச் செய்யாதவிடத்துப் பின்னும் பிரிந்துபோய்ப் பகைவரோடு கூடுவாஞ்தலால் 'இழைத்திருந்து' என்றும், அன்பில்லாமற்போய்ப்பின்னுங் காரணத்தால்வந்தமையால் 'எண்ணிக்கொளல்' என்றும் சொல்லினர். பிரிந்துபோன சுற்றத்தாருள் நீமை

† உழை - இடம். ‡ பின் காரணத்தான் - பின்பொரு நிமித்தத்தால்
* செய்து வைத்து - பூர்த்திசெய்து (நிறைவேற்றி).
§ வானா - அடை கொடுக்காது சும்மா.
¶ வருதற் காரணத்தைச் செய்யாதவழி - காரணமின்றித் தன்னிடத்தினின்றும் பிரிந்துபோனவன் தன்னிடத்து வருவதற்குரிய காரணத்தைச் செய்யாதவிடத்து.
() அன்பின்றிப்போய் - தன்னிடத்து அன்பில்லாது பிரிந்தென்றும்.
ο நீமைசெய்ய - அரசனுடையதான் தீயகாரியங்களைச் செய்ய.
‖ அதனை-தீய காரியங்களை. × அது - நீமை.
÷ நன்மைசெய்ய - நன்மையான காரியங்களைச் செய்வதனால்.
[] தழுவுமாறு - அணைக்கும் வகை.

செய்யப்போய் அதனை விடவருவானும், அது செய்யாமற்போய்ப் பின்பு கண்மைசெய்ய வருவானும் தழுவப்படுமாதலால், (சுற்றத்தாரைத்) தழுவு மாறுமுறையே இவ்விரண்டு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து) காரணமில்லாமற் பிரிந்துபோய்ப் பின்பொரு காரணம்பற்றி வந்து கூடியவனை அரசன் ஆராய்ந்து கொள்ளக் கடவனென்பது.

10. When one may have left him, and for some cause has returned, let the king fulfil the object for which he has come back and thoughtfully receive him again.



பதினேழும் அதிகாரம்.

* பொச்சாவாமை—*Against Forgetfullness.*

பரி:—அஃதாவது † உருவுந் திருவும் ‡ ஆற்றலும் ¶ முதலாயவற்றுள் மகிழ்ந்து தந்காத்தலினும் பகையழித்தன் o முதலிய காரியங்களினும் சோர்தலிலே செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாராற் பயனுள்ளது இச்சோர்விலிவழி யாகலின், இது சுற்றத்தழாலின்பின் வைக்கப்பட்டது.

---

* பொச்சாப்பு-மறவி. பொச்சாவாமை - மறவாமை. பொச்சாப்பென்பதும் மறவியென்பதும் ஒரு பொருட்கிளவிகளாமென்பது "வழுக்கெடு மறவி புன்மை மறலொடு பொல்லாங் கேகிழ், இழுக்கொடு சோர்வு பொச்சாப் பிகழ்ச்சியு மறத்த லின்பேர்" என்று சூடாமணி நிகண்டு கூறுவதால் நன்குவிளங்கும். நன்னூலார் பொச்சாப்பு வேற, மறவிவேறு என்று கொண்டு, உரியியலின் "அறிவருளாசை" என்னுஞ் சூத்திரத்தில் "பொச்சாப் பூக்க மறமத, மறவி" என்று கூறுகின்றனர்.நச்சினார்க்கினியார் "ஆங்கவையொருபால்" என்னுஞ் சொல்காப்பியம் மெய்ப்பாட்டியற் சூத்திரவுரையில் "பொச்சாப்பென்பது அற்றப்படுதல்; அஃதாவது பாதுகாதற்குச் செல்கின்ற பொருட்கண் யாதானுமோ ரிகழ்ச்சியான் இடையறவு படுதல்" என்று கூறியிருக்கின்றனர்.

† "குலமு முருவுங் குணமுங் திருவு,நலவுமுடற் கல்வி நயமும்-வலமுஞ், செருக்கையிலோக் கினநனவிச் செம்மற்கு நாளுந், திருக்குறுங் மாண்பிற் செறிந்து" என்னுஞ்செய்யு ளிங்குக் கவனித்தற் குரியதாம். உருவு - வடிவழகு.

‡ ஆற்றல் - அறிவு, ஆண்மை, பொருள்படை யென விருவகைத்தாய பெருமை.

¶ முதலாய என்றதனால் நாடு, அரண் முதலியவற்றையுங் கொள்க.

o முதலிய என்றதனால் தனது சேனை பகைவர் வசமாகாவாறு செய்தல், அமைச்சர் புரோகிதர்களோடு கலந்தாலோசித்தல் முதலியவற்றையுங் கொள்க.

தெளி:—அஃதாவது அழகும் செல்வமும் ஆற்றலும் முதலாயவற்றுல் மிகழ்ந்து தன்னைக் காத்துக்கொள்ளுதலினும் பகைவரை யழித்தல் முதலிய காரியங்களினும் மறத்தலைச் செய்யாமையாம். முற்கூறிய சுற்றத்தாரால் பயனுள்ளது இம்மறதி யில்லாதவிடத்தாகலால், இது (பொச்சாவாமை) சுற்றத்தழாலின்பின் வைக்கப்பட்டது.

க. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

பரி:—(இ - ள்.) * மிக்க வுவகைக் களிப்பான் வரும் மறவி அரசனுக்கு அளவிறந்த வெகுளியினுந் தீது, (எ-று).

† மிக்கவுவகை-பெருஞ்செல்வம், ‡ பேரின்பம், ¶ பெருமிதமென் றிவற்றுன்வருவது. ○ அளவு பகைவரையடர்த்தற்கும் கொடியோரை யொறுத்தற்கும் வேண்டுவது. இறந்தவெகுளி ஒரோவழிப் பகைவரையுங் கொல்லும்; () இஃது அன்னதன்றித் தன்னையே கோறலின் அதனினுந் தீதாயிற்று.

தெளி:—(இ - ள்.) சிறந்த வுவகைமகிழ்ச்சியின் - பெருஞ் சந்தோஷக் களிப்பால், (வரும்), சோர்வு-மறதியானது, இறந்தவெகுளியின்-அளவு கடந்த கோபத்தினும், தீது-(அரசனுக்குத்) தீயதாம். (எ-று).

பெருஞ்சந்தோஷம் - பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதம் என்ற இயற்சொல் வருவழி. அளவு பகைவரை வெல்லுதற்கும் கொடியோரைத் தண்டித்தற்கும் வேண்டியது. அளவுகடந்தகோபம் ஒரோவிடத்துப் பகைவரையும் கொல்லும்; இஃது அத்தன்மையதல்லாமல் தன்னையே கொல்லுதலால் அதனினும் தீயதாயிற்று.

(க - து.) அரசனுக்கு மிகுந்த வுவகைக்களிப்பால் வரும் மறதியானது அளவுகடந்த கோபத்தினும் தீயதாம்.

---

* மிக்க வுவகைக்களிப்பு-பெருஞ்சந்தோஷத்தா லுண்டாகும் மதிமயக்கம். "உள்ளக்களித்தலும்" என்னுங் குறளின் விசேடவுரையில் பரிமேலழகர் களித்தல் - உணர்வழியாதது; மகிழ்தல் - அஃதழிந்தது என்று கூறியிருக்கின்றனர்.

† மிக்கவுவகை - அளவுகடந்த மகிழ்ச்சி. ‡ பேரின்பம்-மிகுசுகம்.

¶ பெருமிதம் - படை, அரண்முதலியன வாய்ப்பா யிருக்கின்றன வென்னுங் கர்வம். ○ அளவு-கோபத்திற்கு அளவு.

() இஃது (மிக்கவுவகைக் களிப்பான் வரும் மறவி) அன்னதன்றி (அளவுகடந்த கோபம் ஒரோவிடத்துப்பகைவரையுங் கொல்லுவதுபோலாகாமல்) தன்னையே கொல்லுதலால் அதனினும் (அளவுகடந்த கோபத்தினும்) கொடியதாயிற்று.[அளவுகடந்த கோபம் தன்னையும் ஒரோவிடத்துப் பகைவரையும் கொல்லும்;அளவுகடந்த வுவகைக் களிப்பால்வரும்மறதியோ தன்னையேகொல்லும்; ஆதலால் அளவுகடந்த கோபத்தினும் அளவுகடந்த வுவகைக்களிப்பால் வரும் மறதி மிகக்கொடியதாமென்க.]

1. More evil than excessive anger, is the thoughtlessness which springs from the intoxication of great joy.

உ. பொச்சாப்புக் கோல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கோன் ருங்கு

பரி:—(இ - ள்.) ஒருவனீ புகழினை அவனீ மறவி கெடுக்கும்; * அறிவினை நிச்சநிரப்புக் கெடுக்குமாறுபோல, (எ - று).

நிச்சநிரப்பு-நான்றோறும் இரவான் வருந்தித் தன்வயிறு நிறைத்தல். † அரீது அறிவுடையான்கணுண்டாயின் அவற்கு ‡ இளிவரவானும் பாவத்தானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன் ¶ நன்குமதிப்பினை அழிக்கும்; அதுபோல மறவியும் புகழுடையான்கணுண்டாயின் அவற்குத் தற்காவாமையானும் காரியக் கேட்டானும் எள்ளற்பாட்டினை விளைத்து அவன் நன்கு மதிப்பினை அழிக்குமென்பதாயிற்று. இவை யிரண்டு பாட்டானும் பொச்சாப்பினது குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ-ன்.) நிச்சநிரப்பு - நித்தியவறுமையானது, அறிவினை-அறிவை, கொன்முருந்து-கெடுக்கும் விதம்போல, புகழை (ஒருவனது) கீர்த்தியை, பொச்சாப்பு-(அவன்) மறதியானது, கொல்லும்-கெடுக்கும், (எ-று).

நித்தியவறுமை-தினந்தோறும் யாசகத்தால் வருந்தித் தன் வயிற்றை நிறைத்தல். அரிதாதியவறுமை அறிவுடையவனிடத்து உண்டாயின் அவனுக்கு இளிவாவாலும் பாவத்தாலும் இழுப்படுதலை உண்டாக்கி அவனது நன்குமதிப்பை அழிக்கும்; அதுபோல மறதியும் புகழுடையவனிடத்து உண்டாயின் அவனுக்குத் தன்னைக்காத்துக் கொள்ளாமையாலும் காரியக் கெடுதியாலும் இழுப்படுதலை உண்டாக்கி அவனது நன்குமதிப்பை அழிக்குமென்பதாயிற்று. இவ்விரண்டு பாட்டாலும் மறவியினது குற்றம்கொல்லப்பட்டது.

(க - து.) ஒருவனது கீர்த்தியைக் கெடுப்பது அவனது மறதியேயாம் என்பது.

2. Forgetfulness will destroy fame, even as constant poverty destroys knowledge.

* தரித்திரம் அறிவினைக் கெடுக்குமென்பது "நீர்மையே யன்றி நிரம்ப வெழுந்ததங், கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர்—கூர்மையின், முல்லே யிலைக்கு மெயிற்றாய நிரப்பென்னும், அல்ல லடையப்பட் டார்" என்று நாலடியார் கூறுவதாலு மறிதற்பாற்றும்.

† அரீது - நிச்சநிரப்பு. நிரம்புதல் என்னுந் தொழிற்பெயரின் விகாரமாய நிரப்பு என்னும் முதனிலைத் தொழிற்பெயர் எதிர்மறை யிலக்கணையால் நிரம்பாமை (தரித்திரம்) என்னும் பொருளையுணர்த்தி நின்றது. ‡ இளிவரவு - இழிவு (அவமானம்). ¶ நன்குமதிப்பு - கௌரவம்.

ரு. போச்சாப்பார்க் கில்லே புகழ்மை யதுவுலகத்
தெப்பாலு லோர்க்குந் துணிவு.

பரி:—(இ - ள்.) போச்சாந் தொழுதவார்க்குப் புகழுடைமை யில்லே; * அவ்வின்மை † இந்நீதிநூ லுடையார்க்கே யன்றி உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்தது, (எ - று).

அரசர்க்கே யன்றி ‡ அறமுதலிய நான்கினும் முயல்வார் யாவர்க்கும் ¶ அவை கைகூடாமையின் புகழில்லேயென்பது தோன்ற 'எப்பாலு லோர்க்குந் துணிவு' என்றார்.

தேளி:—(இ - ன்.) புகழ்மை - புகழுடையவராயிருத்தல், போச்சாப் பார்க்கு - மறந்து கடப்பவர்க்கு, இல்லே—, அது - அவ்வில்லாமையானது, (இந்நீதிநூலுடையார்க்கேயல்லாமல்), உலகத்து - உலகத்தில், எப்பாலு லோர்க்கும் - எப்படிப்பட்ட நூலுடையவர்க்கும், துணிவு - ஒப்பமுடிந் தது, (எ - று.)

அரசருக்கேயல்லாமல் அறமுதலாகிய நான்கினும் முயல்பவர் யாவர்க் கும் அவை கைகூடாமையினுல் புகழில்லே யென்பது தோன்ற 'எப் பாலு லோர்க்குந் துணிவு' என்றார். துணிவு - நிச்சயம்.

(க - து.) புகழுடையவராயிருத்தல் மறதியுடையார்க்கில்லே.

3. The thoughtless will never acquire fame ; this is the clear decision of all the books in the world.

ச. அச்ச முடையார்க் கரணில்லே யாங்கில்லே
போச்சாப் புடையார்க்கு நன்கு.

பரி:—(இ - ள்.) காடு மலே $ முதலிய அரண்களுள்ளே நிற்பினும், மனத்தினகண் அச்சமுடையார்க்கு () அவற்றாற் பயனில்லே; அதுபோலச் செல்வமெல்லாம் உடையராயினும் மனத்தினகண் மறவியை உடை யார்க்கு அவற்றாற் பயனில்லே, (எ - று).

o நன்மைக்கேதுவாகலின் 'நன்கு' என்றார். அச்சமுடையார் நின்ற அரணழியுமாறுபோல மறவியுடையாருடைய செல்வங்களும்அழியுமென்ப தாயிற்று.

* அவ்வின்மை-புகழுடைமையில்லாமை.

† 'போச்சாப்பார்க் கில்லே புகழ்மை'என்னும் நீதிநூலுடையவர்க்கே யல்லாமல்.

‡ அறமுதலிய நான்கு-தருமார்த்த காமமோட்சம். ¶ அவை-அறமுத லிய நான்கும்.

$ முதலிய என்றமையின், மதிலும் கடலும் கொள்க. () அவற்றால்-அவ்வரண (பாதுகாவல்க) னால்.

o நன்மைக்கேதுவாய செல்வத்தை நன்கு என்றது காரியவாகுபெய ராம்.

தெளி:—(இ - ள்.) அரண் - (காடு மலை முதலிய) அரண்களுள் ளே, (இருந்தாலும்), அச்சமுடையார்க்கு - (மனத்தில்) அச்சத்தை யுடை யவர்களுக்கு, இல்லை - (அவ்வரண்களால் பயன்) இல்லை, ஆங்கு - அது போல, கண்கு - செல்வமெல்லாம், (உடையவராயிருந்தாலும்), பொச்சாப் புடையார்க்கு - (மனத்தில்) மறதியையுடையவர்க்கு, இல்லை - (அச்செல் வங்களால் பயன்) இல்லை, (எ - று).

செல்வம் கண்மைக்குக் காரணமாயிருத்தலால் அதனை 'கண்கு' என் றார். அச்சமுடையவரிருக்கும் அரண் அழியும் விதம்போன்றமறதியுடை யவரது செல்வங்களும் அழியுமென்பதாயிற்று.

(க-து.) செல்வங்களால் வரும் பயன் மறதியுடையவர்க்கில்லை.

4. Just as the coward has no defence by whatever fortifications he may be surrounded, so the thoughtless has no good whatever advantages he may possess.

நி. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னு நிரங்கி விடும்.

பரி:—(இ - ள்.) தன்னுற் காக்கப்படுந் துன்பங்களை அவை வரு தற்கு முன்னே அறிந்து * காவாது மறந்திருந்தான் பின்வந்து உற்றகால த்துக் † காக்கலாகாமையின் ‡ அப்பிழைப்பினை நினைந் ¶ திரங்கி விடும், (எ - று).

காக்கப்படுந் துன்பங்களாவன: சோர்வு பார்த்துப் பகைவர் செய்வன $ ஊற்றின்கண் என்புழி உருபுஞ்சாரியையும் உடன்றொக்கன. o உற்ற காலத்துக் காக்கலாகாமையின் 'இரங்கிவிடும்' என்றார். இவை மூன்று பாட்டானும் பொச்சாப்புடையார்க்கு வரும் ஏதங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (தன்னுல் யாராமற் காக்கப்படுந் துன்பங்களை) முன்னுற - (அவைவருவதற்கு) முன்னே, காவாது - (அறிந்து) காவாமல்,

* காவாது - தடுக்காது. † காக்கலாகாமையின் - தடுத்தல் முடியா மையால்.

‡ அப்பிழைப்பினை - தன்னுற்காக்கப்படுந் துன்பங்களை அவை வருவ தற்கு முன்னேயறிந்து காவாது மறந்திருந்த தனது தப்பிதத்தை.

¶ இரங்கிவிடும் - அனுதாபப்படுவோன்.

$ உறுதல் என்னும் பொருளையுணர்த்தும் ஊறு என்னும் மூதனிலை திரிந்த தொழிற் பெயரினிடத்து ஏழனுருபும் இன்சாரியையும் உடன் றொக்கு நின்றன இங்கு ஊறு என்பது உற்றகாலத்தை யுணர்த்தினமை யின் தொழிலாகு பெயராம்.

o உற்றகாலத்துக் காக்கலாகாமையின் - (மறதியோக்கிப்பகைவர்செய் யுந் துன்பங்கள்) சோர்ந்தகாலத்தில் (அவற்றைத்) தடுத்தல் முடியாமை யால்.

இழுக்கியான் - மறந்திருந்தவன், பின் - பின்பு, (வந்து), ஊறு - உற்ற காலத்தில், (காத்தல் கூடாமையால்), தன்பிழை - தன்னுடைய அத் தப்பிதத்தை, (கினைந்து), இரங்கி விடும் - இரங்கிவிடுவான், (எ - று.)

காக்கப்படும் தன்பங்களாவன:மறதிபார்த்துப் பகைவர் செய்யுந்தன் பங்கள். ஊற்றின்கண் என்றவிடத்துக் கண்ணுருவும் இன்சாரியையும் உடன் தொக்கு நின்றன. ஊற்றின்கண் என்பது கண்ணென்னும் உருபும் இன்னென்னும் சாரியையுந் தொக்கு ஊறு என நின்றதென்பதாம். தன் பம் உற்றகாலத்தில் காத்தல்கூடாமையால் 'இரங்கிவிடும்'என்றார். இவை மூன்று பாட்டாலும் மறதியுடையவர்க்கு வரும் தன்பம்சொல்லப்பட்டது.

(க-து.) தன்பங்களை வருமுன் காக்காமல் மறந்திருந்தவன் பின்பு தனது குற்றத்தைக்குறித்து விசனப்படுவான் என்பது.

5. The careless man, who provides not against the calamities that may happen, will afterwards think with sorrow of his fault.



கூ. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னஃதொப்ப தில்.

பா:—(இ - ள்.) அரசர்க்கு மறவாமைக்குணம் யாவர்மாட்டும் எக் காலத்தும் ஒழிவின்றி வாயக்குமாயின் * அதனை ஒக்கும் நன்மை பிறி தில்லை, (எ - று).

† வினைசெய்வார் சுற்றத்தாரென்னுந் தம் பாலார்கண்ணும் ஒப்ப வேண்டுதலின் 'யார்மாட்டும்' என்றும், ‡ தாம் பெருகியஞான்றும் சுருங் கிய ஞான்றும் ஒப்பவேண்டுதலின் 'என்றும்' என்றும், எல்லாக்காரியங் களினும் ஒப்பவேண்டுதலின் 'வழுக்காமை' என்றுங் கூறினார். ¶ வாயினென் பது முதனிலைத் தொழிற்பெயரடியாக வந்த வினையெச்சம். வாய்த்தல்- § சேர்தல்.

தெளி:—(இ - ள்.) (அரசர்க்கு) இழுக்காமை - மறவாமைக்குணமா னது, யார்மாட்டும் - யாவரிடத்தும், என்றும் - எக்காலத்திலும், வழுக்கா

* அதனை - மறவாமைக்குணத்தை.

† பகைவரிடத்து மாத்திரமேயன்றி வினைசெய்வார் (இராஜகாரியஞ் செய்வார்) சுற்றத்தாரென்னுந் தப்பாலார்கண்ணும் என்றும் பாடமுண்டு.

‡ தாம் செல்வமுதலியவற்றால் விருத்தியடைந்த காலத்திலும் அவை யின்றிச் சுருங்கிய (குறைவடைந்துள்ள) காலத்திலும் சமமாக வேண்டுத லால் 'என்றும்' என்று கூறப்பட்டது.

¶ வாயின் என்பது வாய் (வாய்தல்) என்னும் முதனிலைத் தொழிற் பெயரடியாகப் பிறந்த செயின் என்னும் வாய்பாட்டு (எதிர்கால) வினை யெச்சம். § சேர்தல் - பொருந்துதல்.

மை - ஒழிவில்லாமல், வாயின் - சேர்படுமாயின், அஃதி - அதனை, ஒப்பது ஒக்கும் நன்மையானது, இல் - (வேறொன்று) இல்லை, (எ - று).

தொழில் செய்வார் சுற்றத்தார் என்னும் தம்மவரிடத்தும் (இழுக்காமை) சமமாக வேண்டுதலால் 'யார்மாட்டும்' என்றும், (செல்வ முதலிய வற்றால்) தாம் பெருகிய காலத்திலும் சுருங்கியகாலத்திலும் சமமாகவேண்டுதலால் 'என்றும்' என்றும், எல்லாக்காரியங்களிலும் சமமாகவேண்டுதலால் 'வழுக்காமை' என்றும் சொல்லினார். வாயின் என்பது வாய் என்னும் முதனிலைத் தொழிற்பெயரடியாகப் பிறந்த வினையெச்சம்.

(க - து.) யாவரிடத்தும் எக்காலத்தும் மறதியில்லாமை அரசனுக்கு இருக்குதமானால், அதனையொத்த நன்மை அவனுக்குப் பிறிதொன்றில்லை என்பது.

6. There is nothing to be compared with unfailing thoughtfulness, at all times, and towards all persons.

எ. அரியவென் றுகாத வில்லை * போச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

பரி:—(இ - ள்.) இவை செய்தற்கரியனவென்று சொல்லப்பட்டு ஒருவற்கு முடியாத காரியங்களில்லை, மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப்பெறின், (எ - று).

பொச்சாவாத என்பதன் † இறந்தகாலவினை விகாரத்தாற்றொக்கது. ‡ அந்தக் கரணமாகலின் 'கருவி' என்றார். இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியும் உடையார்க்கு எல்லாம் எளிதின் முடியுமென்பதாம். இவையிரண்டு பாட்டானும் பொச்சாவாமையது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்) அரியவென்று - (இவை செய்தற்கு) அரியனவென்று சொல்லப்பட்டு, ஆகாத - (ஒருவனுக்கு) முடியாத காரியங்கள், இல்லை—, பொச்சாவா - மறவாத, கருவியால் - மனத்தாலே, போற்றி - எண்ணி, செயின் - செய்யப்பெற்றால், (எ - று).

* பொச்சாவாக் கருவி என்பதுபற்றி "நிலனும் பொருளும்" என்னும் (தொல்காப்பியச்) சூத்திரவுரையில் சேனாவரையர் "நின்முகங் காணு மருந்தினே னென்னுமால்' என்புழிக் காட்சியை மருந்தென்று ஞாதலின், காணு மருந்தென்பது வினைப்பெயர் கொண்டதாம். 'பொச்சாவாக் கருவியாற் போற்றிச்செயின்' என்புழிப் பொச்சாவாக் கருவி யென்பது மது" என்றும், நச்சினார்க்கினியார் "பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்' என்பது கருவிக்கண் அடங்கும்" என்றும் கூறியிருக்கின்றனர்.

† இறந்தகால (தகர எழுத்துப்பேற்றோடு கூடிய அகரவிகுதி) விகாரத்தால் (செய்யுள் விகாரத்தால்) தொக்கு நின்றது.

‡ அந்தக்கரணம் - உட்கருவி; மனமென்பது அந்தக் கரணத்தின் ஒன்றும்.

பொச்சாவா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அத்தச் காரணமாதலால் மனத்தைக் 'கருவி' என்றார். இடைவிடாத நினைவும் தவறுத உபாயமும் உடையவர்க்கு எல்லாக்காரியமும் எளிதில் முடியுமென் பதாம். இவை இரண்டு பாட்டாலும் மறவாமையினது சிறப்புச் சொல்லப் பட்டது.

(க - து.) மறவாது கன்காலோசித்துச் செய்யும் அரசனுக் குச் செய்தற்கருமையான காரியம் ஒன்றுமில்லை என்பது.

7. There is nothing too difficult to be accomplished, if a man set about it carefully, with a thoughtful mind.

அ. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

பரி:—(இ - ள்.) நீதிநூலுடையார் இவை அரசர்க்குரியனவென்று உயர்த்துக்கூறிய செயல்களைக் * கடைப்பிடித்துச் செய்க, † அங்ஙனஞ் செய்யாது மறந்தவர்க்கு எழுமையினும் நன்மையில்லை ஆகலான்.

‡ அச்செயல்களாவன: ¶ மூவகையாற்றலும், § சால்வகையுபாயமும், o ஐவகைத்தொழிலும், () அறுவகைக் குணமும் | முதலாய செயல்கள்.

* கடைப்பிடித்தல் - மறவாது உறுதியாகக்கொண்டு.

† அங்ஙனம் செய்யாது - கடைப்பிடித்தல் செய்யாமல்.

‡ "உற்றிடு மாற்றன் மூன்று முபாயங்களுன்கு கன்மை. பற்றிய தொழில்க ளைந்தும் பண்புற குணங்க ளாறு,மற்றைய வினைத்திங் கேடாம் வளர்பிறப் பேழன் காறும்,பற்றிடு கன்மை யின்றும் பாழ்த்தபொச் சாப்புச் சாரின்" என்பது விராடக புராணம்.

¶ மூவகையாற்றல் - அறிவும், ஆண்மையும்,பொருள்படையென இரு வகைத்தாய பெருமையும் ஆம்.

§ சால்வகையுபாயம் - கொடுத்தல், இன்சொற் சொல்லல், வேறுபடுத் தல், ஒறுத்தலாம்.

o ஐவகைத்தொழில் - எளியமுயற்சியுடையது, செய்தாற் பயனுள் ளது, பெரும்பயன் தருவது, ஐயமில்லாதது, பின்பு இன்பம் தருவதாகிய தொழில்களாம். இவ்வாறு கொள்ளாது "பொருள்கருவி காலம் வினையிட னெடைந்து,மிருபே வெண்ணிச் செயல்" என்னுங் குறளிற் கூறிய ஐவ கைத் தொழிலைக் கொள்ளினுமொக்கும். கச்சினார்க்கினியார் "அறுவகைப் பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னுந்தொல்காப்பியச் சூத்திரவுரையில் அர சரின் ஐவகைத்தொழில் ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டஞ்செய் தல் என்று கூறுவர்.

() அறுவகைக் குணம் - கட்பாக்கல், பகையாக்கல்,பகை மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலாம்.

| முதலாய என்றதனால் அன்பு,ாண்,ஒப்புரவு, கண்ணோட்ட முதலி யவற்றையும் கொள்க.

சாதிதருமமாகிய * இவற்றின் † வழீஇயோர்க்குள்ளது நிரயத்தின்ப மே யாகலின் 'எழுமையும்மில்' என்றார். ‡ எழுமை ஆகுபெயர். இதனாற் போச்சாவாது செய்யவேண்டுவன கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) புகழ்ந்தவை - (நீதிநூலுடையார் இவை அரசர்க்கு உரியனவென்று) உயர்த்திச்சொல்லிய செயல்களே, போற்றி - கடைப்பிடித்து, செயல்வேண்டும் - செய்யக்கடவர், செய்யாது - (அப்படி) செய்யாமல், இகழ்ந்தார்க்கு - மறந்தவர்க்கு, எழுமையும் - எழுபிறப்பிலும், (கண்மையானது), இல் - இல்லை, (ஆதலால்), (எ - று).

அச்செயல்களாவன ; மூவகை யாற்றலும், கால்வகையுபாயமும், ஐவகைத்தொழிலும், அறுவகைக்குணமும் முதலான செயல்கள். (அரச) சாதிதருமமாகியஇவற்றினின்றும்வழுவியஅரசர்க்குவருவதாகத்தக்கமே யாதலால் 'எழுமையுமில்' என்றார். எழுமை-எண்ணலளவை யாகுபெயர். இதனால் மறவாது செய்யவேண்டுங்காரியங்கள் சொல்லப்பட்டன.

(க - து.) நீதிநூலுடையார் உயர்த்திக் கூறியசெயல்களைச் செய்யாது மறந்திருந்த அரசருக்கு ஏழுபிறப்பிலும் நன்மை யில்லை என்பது.

8. Let a man observe and do those things which have been praised by the wise ; if he neglects, and does not perform them, for him there will be no happiness throughout the seven births.

கூ. ¶ இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தார்த்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

பரி:—(இ - ள்.) அரசர் தம்மகிழ்ச்சிக்கண் தாம் வலியுறும்போ ழது முற்காலத்து அதனின் ஆய சோர்வாற் § கெட்டவர்களை நினைக்க.

o காரணங்களோடு அவர்க்குளதாய உரிமையை மகிழ்சியிலே லேற்

* இவற்றின் - மூவகையாற்றல் முதலியவற்றில்.

† வழீஇயோர்க்கு முள்ளது என்றும் பாடமுண்டு.

‡ எழு என்னும் எண்ணுப் பொருளேயுணர்த்தும் எழுமையென்பது எழுவகைப் பிறப்பினை யுணர்த்துதலால் எண்ணலளவை யாகுபெயராம்.

¶ "இகழ்ச்சி யிற்கெடு வார்களே யெண்ணுக, மகிழ்ச்சி யின்பத்தின் மைந்துறும் போழ்தெனப்,புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூவினுட்,டிகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மன்னனே" என்பதி சூளாமணி.

§ கெட்டவர்கள் - இராவணன், துரியோதனன், சச்சந்தன் முதலாயினோர்.

o காரணங்கள் - மகிழ்ச்சியடைதற்குக் காரணமாயுள்ள பொருள், படை, அரண், வலி, தினை முதலியவை.


றித் 'தம்மகிழ்ச்சியின்' என்றும், * இகழ்ச்சியுங் கேடும் உடன் தோன்று மாகலின் 'மகிழ்ச்சியின் மைத்தறும் போழ்து' என்றுங் கூறினர். கெட்டாரை உன்னவே, ஈரும் அவ்வாறே கெடுதலென்று அதன்கண் மைத் திரு ரென்பது கருத்து. † எண்ணுக வென்ற பாடமோதுவாருமுளர்.

தெளி:—(இ - ள்.) (அரசர்) தம்மகிழ்ச்சியின் - தமது மகிழ்ச்சியினி டத்து, தாமைத்துறும்போழ்து - தாம் செருக்குறும்பொழுது, இகழ்ச்சி யின் - (முற்காலத்தில் அம்மகிழ்ச்சியினல் ஆகிய) மறதியினல், கெட்டா ரை யுன்னுக - கெட்டவர்களை நினைக்கக்கடவர், (எ - று).

மகிழ்ச்சிக்குக்காரணமாயுள்ளவற்றோடு அவர்க்கு உண்டாகிய உரிமை யை மகிழ்ச்சியின்மே லேற்றித் 'தம்மகிழ்ச்சியின்' என்றும், இகழ்ச்சியும் கேடும் உடன் தோன்றுமாகலால் 'மகிழ்ச்சியின் மைத்துறும் போழ்து' என்றும் சொல்லினர். கெட்டாரை நினைக்கவே ஈரும் அப்படியே கெடுவோமென்று அம்மகிழ்ச்சியினிடத்துச் செருக்குறரென்பது கருத்து.

(க - து.) அரசர் மகிழ்சியினும் கருவமடையும்போது மறதியினும் கெட்டவர்களை நினைக்கக்கடவர் என்பது.

9. Let a king reflect on those who have been ruined by neglect, when his mind is elated with joy.



கo உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

பரி:—(இ - ள்.) அரசனுக்குத் தான் எய்த நினைத்த பொருளை அந்நினைத்த பெற்றியே எய்துதல் எளிதாம், பின்னும் அதனையே நினை க்கக்கூடுமாயின், (எ - று).

‡ அது கூடாதென்பது ஒழிந்து நின்றமையின், மன் ஒழியிசைக் கண் வந்தது. அதனையே நினைத்தலாவது மறவியின்றி அதன்கண்ணே முயறல். இவை யிரண்டோட்டாலும் பொச்சாவாமைக்கு உபாயங கூறப் பட்டது.

மகிழ்ச்சிக்குக்காரணமாயுள்ளவற்றோடன் அரசர்க்குளதாய உரிமையை (கதந்தரத்தை) மகிழ்ச்சியின் மீமிலேற்றிக்கூறியது காரணத்தினுரிமை காரி யத்தின் மேலாய உபசாரவழக்காம். பொருள் முதலியன - காரணம் - மகி ழ்ச்சி - அதன் காரியம்.

* மகிழ்சியினல் செருக்குறும்போது இகழ்ச்சியும் கேடும் உடன் தோன்று மென்க.

† உள்ளுக என்பதற்குப் பிரதியாக எண்ணுக என்றும் பாடமுண்டு.


‡ அது கூடாது (தானடைய நினைத்தபொருளை யிடைவிடாதுநினை த்தல் முடியாது) என்னும் ஒழிந்த சொற்பொருளை யுணர்த்தினமையின் மன் ஒழியிசைப் பொருளில் வந்தது.

தெளி:—(இ-ன்.) (அரசனுக்கு) தான்—,உள்ளியது-(அடைய) நினைத்த பொருளே, எய்தல் - (அந்நினைத்தபடியே) அடைதல், எளிதுமன் - எளிதாகும், மற்றும் - பின்னும், உள்ளியது - அந்நினைத்தபொருளையே, உள்ளப் பெறின் - நினைக்கக்கூடுமானால், (எ - று).

அது கூடாதென்பது ஒழிந்தகின்றமையின் மன் ஒழியிசைப் பொருளில் வந்தது. அந்நினைத்த பொருளையே நினைத்தலாவது மறதியில்லாமல் அந்நினைத்த பொருளினிடத்தே முயற்சிசெய்தல். இவை இரண்டுபாட்டாலும் மறவாமைக்கு உபாயம் சொல்லப்பட்டது.

(க - து.) அரசன் மறதியின்றி முயற்சியுடையவனாயிருந்தால் அவன் தான் நினைத்தபொருளை எளிதிலடைவான் என்பது.

10. It is easy for a king to obtain whatever he may think of, if he thoughtfully pursue it.



பதினேழாம் அதிகாரம்.

† செங்கோன்மை—*On upright Government.*

பரி:—அஃதாவது அரசனும் செய்யப்படும் ‡ முறையினது தன்மை. அம்முறை ஒருபாற்கோடாது ¶ செவ்விய கோல் போறலின் செங்கோலெனப்பட்டது. வடநூலாரும் $ தண்டமென்றார். அது கோவில்லாத அரசனும் செயற்பாலதாகலின், இது போச்சாவாமையின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது அரசனால் செய்யப்படும் முறையினதன்மை. அந்த முறையானது ஒரு பக்கத்திற் சாயாமற் செவ்வையாகிய கோல்போலிருத்தலால் செங்கோலெனப்பட்டது. இதனை வடநூலார் தண்டமென்றனர். அம்முறை மறதியில்லாத அரசனால் செய்யத்தக்கதாகலால், இது (செங்கோன்மை) போச்சாவாமையின்பின் வைக்கப்பட்டது.

† "படையுங் கொடியுங் குடையு முரசு, நடையவில் புரவியுங் களிறுந் தேரும், தாரு முடியு மேர்வன பிறவும், தெரிவுகொன் செங்கோ லரசர்க் குரிய" என்பது தொல்காப்பியம் மரபியல்.

‡ முறை - நீதி. ¶ செவ்வியகோல் என்பது செவ்விய கோல்போன்ற நீதியை யுணர்த்தியதால் உவமையாகு பெயராம்.

$ தண்டம் - கோல். ஒருபக்கத்திலும் கோணுதலில்லாத கோல்போன்ற நீதியை யுணர்த்துதலால் இதுவும் உவமையாகு பெயராம்.

க. † ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுங்
தேர்ந்துசெய் வஃதே ‡ முறை.

பரி:—(இ - ள்.) தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத் தை நாடி யாவர்மாட்டும் †† கண்ணோடாது ‡‡ நடுவுநிலைமையைப்பொ ருந்தி அக்குற்றத்திற்குச் சொல்லிய ¶தண்டத்தை § நூலோரோடும்ஆரா யிந்து அவ்வளவிற்றாகச் செய்வதே முறையாம், (எ - று).

நடுவுநிற்றல் இறைக்கியல்பாகலின் () அதனை ‖ 'இறை' என்றும், உயிரினுஞ் சிறந்தார்கண்ணும் என்பார் 'யார்மாட்டும்' என்றும் கூறினார். o இறைமை இறையெனவும் செய்வது செய்வஃதெனவும் நின்றன. இது ஞற் செங்கோன்மையது இலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (சன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத் தை) ஓர்ந்து - நாடி, யார்மாட்டும் - யாவரிடத்தும், கண்ணோடாது - முகங் கொடாமல், இறைபுரிந்து - நடுவுநிலைமையைப் பொருந்தி, தேர்ந்து-(அக் குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும்) ஆராய்ந்து, செய் வஃதே - (அவ்வளவினதாகச்) செய்வதே, முறை-நீதியாம், (எ - று).

நடுவுநிலைமையைப் பொருந்துதல் இறை என்றும் அரசனுக்கு இயல் பாகலால் அதனை 'இறை' என்றும், உயிரினும் சிறந்தவரிடத்தும் என்பார் 'யார்மாட்டும்' என்றும் சொல்லினர். இறைமை - இறை என்றும், செய் வது - செய்வஃது என்றும் விகாரப்பட்டு நின்றன. இதனால் செங்கோ லின் இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து.) அரசன் தன் கீழ்வாழ்வார் செய்புங்குற்றத்தை யாராய்ந்து யாவரிடத்தினும் நடுவுநிலைமையைப்பொருந்தியாசரன் வதே செங்கோலாம் என்பது.

† "எய்திய குற்றத் தோர்கள் யாவரா யினுங்கண் ணோடா, தைதென நாடி நீதி யறத்திலைப் பிழையாத் தண்டம், செய்தலே செங்கோ லாகும்" என்பது கிரிகாயத புராணம்.

‡ "முறையெனப் படுவது கண்ணோடா தியர்வெனவல்" என்பது கலித்தொகை செய்தற்கலி.

†† தன்னுடன் பழியெவரைக் கண்டால் அவர் கூறியவற்றை மறுக்க மாட்டாமை கண்ணோட்டமெனப்படும். இதி தாட்சண்ணியம் என்றும் முகங்கொடுத்தலென்றும் சொல்லப்படும்.

‡‡ பகைவர் தயலோர் நட்பினர் என்னு மிம்மூவகையோரிடத்தும் அறத்தின் வழுவாமல் ஒப்பநிற்கும் நிலைமை நடுவுநிலைமையெனப்படும்.

¶ தண்டம் - தண்டனை. § நூலோர் என்றது அமைச்சர் புரோகிதர் களை. () அதனை - நடுவு நிற்றலை.

‖ இறையென்னும் பொருட்பெயர் அதன்பண்பாகிய நடுவுநிற்றலை யுணர்த்தலால் பொருளாகு பெயராம். இறை - அரசன்.

o இறைமை இறையென்றுயது கடைக்குறைவிகாரமாம்; செய்வது செய்வஃது என்றுயது ஈறுதிரிந்தல் விகாரமாம்.

1. To examine into the crimes which may, be committed, to show no favor to any one, to desire to act with impartiality towards all, and to inflict such punishments as may be wisely resolved on, this is rectitude.

உ. † வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

பரி:—(இ - ள்.) உலகத்துயிரெல்லாம் மழையுளதாயிள் உளவா காநிற்குமே வெனினும் குடிகள் அரசள் செங்கோலுளதாயின் உளவாகா நிற்கும், (எ - று).

‡ நோக்கிவாழ்தல்-இன்றியமையாமை. ¶ வானிஞையவுணவை 'வான்' என்றும், கோலினுய எமத்தைக் 'கோல்' என்றுங் கூறினர். அவ்வேமம் நல்வழி உணவுளதாயினுங் குடிகட்கு அதனுற் பயனில்லை யென்பதாம்.

தெளி:—(இ - ன்.) உலகெல்லாம் - உலகத்துயிர்களெல்லாம், வானோக்கி, (மழைபெய்யுமாயின்) அம்மழையைநோக்கி, வாழும் - உளவாகாநிற் கும், (என்றுரை), குடி - குடிகள், மன்னவன் - அரசனது, கோனோக்க— (செங்கோலுண்டாஞல்) அரசெங்கோலை நோக்கி, வாழும் - உளவாகா நிற் கும், (எ - று).

நோக்கிவாழ்தல் - இல்லாமல் கூடாமை. வானினுல்லாகிய வுணவினை 'வான்' என்றும், கோலினுலாகிய காவலைக் 'கோல்' என்றுங் கூறினர். அக் காவல் இல்லாவிடத்து உணவு உண்டாயிருந்தாலும் குடிகளுக்கு அவ்வுண வாற் பிரயோசனமில்லை என்பதாம்.

† "தானியின்மை ஞாலத்திற் மக்கற்றற்றே யேகதனாயின்மை வாழு முயிர்க்கு" என்று பின் கொடுங்கோன்மையிற் கூறுவது மிதற்குக் கவனிக் கத் தக்கதாம்.

‡ உயிர்கள் மழையையும் குடிகள் செங்கோலையும் நோக்கிவாழ்தல் இன்றியமையாத (அத்தியாவசியகமாமெ)ன்பது "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை" "கோனோக்கி வாழுங் குடியெல்லா மி" "வானத் தளி நோக்கி வாழு முலகம்" என்றுள்ள பிரயோகங்களாலும் அறிதற்பாற்றும். நோக்குதலென்பது இங்கு மனவெழுச்சியின்மேல் நின்றது; அஃதாவது கண்ணுல் நோக்கும் நோக்கமின்றி மனத்தால் நோக்கும் நோக்கமாம்.

"தாளெனக்கா தெத்தையருஞ் செய்திடினுந் தார்வேந்தன், கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே" என்று குலசேகர ஆழ்வார் கூறுவது மிங்குணர்தற்பாலதாம்.

¶ வான் வானுலாகிய வுணவையும், கோல் கோலாலாகிய காவலையும் உணர்த்துவதால் அவை கருவியாகு பெயர்களாம். வான் என்னும் இடப் பெயர் மூன்றாம் மேகத்தையும் பின்னர் அம்மேகம் பொழியும் மழையை யும் அப்பால் அதனுலாகிய வுணவையும் உணர்த்துவதால் மும்மடியாகுபெய ராம்.

(க - து.) மழைபெய்வதால் உயிர்கள் இருத்தல்போன்று செங்கோல் நடைபெறுவதால் குடிகள் இருக்கும் என்பது.

2. When there is rain, the world enjoys prosperity; and when the king rules justly, his subjects prosper.

கூ. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

பரி:—(இ - ள்.) † அந்தணர்க்குரித்தாய வேதத்திற்கும் அதனாற் சொல்லப்பட்ட அறத்திற்கும் காரணமாய் நிலைபெற்றது அரசனுஞ் செலுத்தப்படுகின்ற செங்கோல், (எ - று).

அரசர் வணிகரென்னும் ஏனையோர்க்கும் உரித்தாயினும், ○ தலைமை

† அந்தணரென்பது இங்குச் சாதிப்பெயர் மாத்திரமாய் நின்றது.

○ அந்தணர்க்கு வேதத்தை யோதுதலேயன்றி யோதுவித்தலு முரிய தாயிருத்தலின், 'தலைமைபற்றி அந்தணர் நூல் என்றார்' என்று கூறப்பட்டது. தலைமை - முதன்மை. அரசர்க்கும் வணிகர்க்கும் வேதத்தைப் பிறர்க்கு ஓதுவித்தலில் அதிகாரமின்றி ஓதுதலில் அதிகாரமுண்டென்பது மனுதருமசாஸ்திரம் பத்தாவதத்தியாயத்தில் "கூத்திரியனுக்குக் கத்தி பாண முதலிய ஆயுதங்களைத் தரித்து உலகாள்வதும், வையினுக்கு வர்த்தகஞ் செய்வது பசுவைக்காப்பது பயிரிடுவது என்னுமிவையும் ஜீவனோபாயமாம். மேற்சொல்லிய யாகஞ்செய்தல் தானங்கொடுத்தல் (வேதம்) ஓதல் இவை தர்மோபாயமாம்" என்று கூறுவதாலறிக. சூத்திரனுக்கு வேதத்தையோதுவதற்கதிகாரமின்மையால் அவனுக்கு முத்திரித்தியாதோ வெனின், வேதமும் வேதத்தின் பொருளை யையந்திரிபின்றி யெடுத்துக் கூறும்பாரதமுதலிய நூல்களும்ஞானமாயிலாக முத்திக்குக்காரணமாயிருத்தலால் வேதம ஓதினவர்களுக்கே முத்தியுண்டாமென்பது பொருந்தாதாயிற்று; ஆகவே, வேதத்தின் பொருளை யையந்திரிபின்றி யெடுத்துக்கூறும் பாரதமுதலிய நூல்களைத்தக்கவாறு படிப்பவரியாவர்க்கும் ஞானவாயிலாக முத்தியுண்டாதற்குத் தடையின்மையுமென்க.

மனுதருமசாஸ்திரம் பத்தாவதத்தியாயத்தில் "ஹிம்சை செய்யாமை, சத்தியம், நீலியேயாற் பொருள் சம்பாதியாமை, ஒழுக்கம், இந்திரிய நிக்கிரகம்...(பிரஹ்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும்)நான்குவருணத்தா (சாதியா)ர்க்கும் முக்கியமான தருமமாமென்று சுருக்கமாய் மனு சொல்லியிருக்கிறார். அவை சகலசாதிகளுக்கும் இருக்கவேண்டியவை" என்றும், ஆபதத்தியாயத்தில் "இந்திரிய நிக்கிரகத்தாலும், இராகத்தி வேஷ மில்லாமையாலும், ஜீவஹிம்சை செய்யாமையாலும் மோட்சமடைதற்கு யோக்கியனாவான்" என்றும் கூறுவதும் இங்குக் கவனிக்கத் தக்கதாமென்க.

பற்றி 'அர்த்தசாஸ்திரம்' என்றார். ‡ மாதவர் நோன்பு மடவார் கற்பும், காவலன்

‡ இதன் பொருள்-பிறர்த தவங்களது விரதமும் பெண்களது கற்பும் அரசனது காவலில் தங்கமாட்டா என்பது. மாதவர் நோன்பு மடவார் கற்பும், காவலன் காவலன்றித் தங்கா என்றும் பாடமுண்டு. "காவலன்றித் தங்காவலா ளுலின்" என்றும் பாடமுண்டு. இதுபொருந்தும்.

"நிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்குங் காப்பே தலே" [நிறையாவது மறைபிறராயிமல் ஒழுகுதல் என்றனர் நச்சினார்க் கினியர்.] என்றும், "உற்றசோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை, யற்றே தவத்திற் குரு" என்றும் உள்ள குறன்களாலும், வான் சிறப்பு ஒன் பதாவது குறளின் விசேடவுரையில் "தவமாவது மனம் பொறிவழிபோ காது கிடந்தற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின" என் றும், தன்னாலாமை யதிகாரத்தின் அவதாரிகையில் "புறத்துப்போகாதடங்கி யொருதலேப்பட்டு உயிரையேயோக்கற்பாலதாய அவர் (துறவிகளின்) மன ம்" என்றும் பரிமேலழகர் கூறுவதாலும், மணிமேகலே உதையகுமரன் அம் பலம் புக்காதையில் "கண்ணிக் காவலும் கடியிற் காவலும், தண்ணு மு கணை ன் சாவுறிற் காவலும், நிறையிற் காத்தப் பிறர்பிறர்க் காணுது" என் று கூறுவதாலும், மனுதருமசாஸ்திரம் ஒன்பதாவதத்தியாயத் தில் "மாதர்கள் தங்களேத்தாமே காக்கவேண்டும்; அதுவே அவர்களுக்கு கல்லகாப்பாகும். கல்லகாவலரை வைத்து வெளியிற் போக வொட்டாமல் வீட்டிலேயே கண்ருகக்காப்பாற்றினலும் (அவர்கள்) காக்கப்படமாட்டார் கள்" என்றும், பண்னிரண்டாவதத்தியாயத்தில் "கண்ணுக்குத்தெரிகிறதா யும் தெரியாததாயுமிருக்கிற எல்லாப்பதார்த்தமும் பரமாத்மாவினிடத்து வாசஞ்செய்வதாக யோகத்தியானத்தால் பார்த்தலேபோலிடத்தில் மனம் வை யாதபிரஹ்மசாட்சாத்காரஞ்செய்கிறவன் அதர்மத்தில்மனததை வைக்கமா ட்டான்" என்றும், ஆறுவதத்தியாயத்தில் "பிரஹ்மசாட்சாத்காரஞ் செய்கி றவனுக்குக் கர்மசம்பந்தம் வரமாட்டாது. அஃதாவது ஜனன மரண ரூப மான சம்சார சக்கரத்தில் தண்டப்படமாட்டா னென்பது கருத்து" என் றும் கூறுவதாலும், மாதவர் நோன்பும் மடவார்கற்பும் [கற்பாவது தன்க ணவனேத் தெய்வமென்று உணர்வதோர்மேற்கோள் என்றனர் நச்சினார்க் கினியர்] மனவொழுக்கமாயிருத்தலின் அவை அரசனது காவலில்தங்கமா ட்டாவாயினவென்க. ஆகவே மாதவர் நோன்பு மடவர் கற்பும், காவலன் காவலன்றித் தங்கா என்று கொள்ளுதல் இக்குறத்தகுதியுடையதாகாது; வனினின், "ரண்டறமென்றது அவை யொழிந்தவற்றை" என்று கூறுத லாலென்க. மாதவரது விரதமும் பெண்களது கற்பும் அரசனதுகாவலி னலன்றித் தங்கமாட்டா என்பது அதன்பொருளாதலினலும், இதன்படி அரசனது காவலிலுலன்றித்தங்கமாட்டாத மாதவரது நோன்பையும்மட வாரது கற்பையும் ஒழித்துக் கூறுவது முரணுதலாலும் காவலன்றித் தங் கா என்பது பொருந்தாது. மாதவரது விரதமும் மகளிரதுகற்பும் அவ ரவரது மனவொழுக்கத்தினலேயே மனத்தில் நிலேபெறுவனவாயும் அரச னது பாதுகாவலில் தங்காதனவாயும் இருந்தாலும் அவைநிலேபெறுவதற்கு

காவலிற் றங்கா ஆசின், ஈண்டறமென்றது † அவை யொழிந்தவற் றை. ¶ வேதமும் அறனும் அநாதியாயினுஞ் செங்கோல் இல்வழி டவா ஆசின் அதனை அவற்றிற்கு 'ஆதி' என்றும், ○ அப் பெற்றியே தனக்கா தியாவது பிறிதில்லையென்பார் 'தின்றது' என்றுங் கூறினர். இவையிர ண்டுபாட்டானுஞ் செங்கோலது நெறுப்புக் கூறப்பட்டது.

நேளி:—(இன்.) மண்ணவன்கோல் - அரசனுற் செலுத்தப்படுகின்ற செங்கோலானது, அந்தணர் தூற்றும்—அத்தணர்க்கு உரியதாகிய வேதத் திற்கும், அறத்திற்கும்—(அவ்வேதத்தாற் சொல்லப்பட்ட) அறத்திற்கும், ஆதியாய் - காரணமாய், நின்றது - நிலைபெற்றது, (எ-று).

அரசனது காவல் பாகியத்தில் உதவியாயிருப்பதுபற்றி மணிமேகலை நிறைசெய்காதையில் "மாதவர் நோன்பு மடவார் கற்பும், காவலன் காவ லின்றெனி லின்றும்" என்றும், "நான் மணிக்கடிகை நாற்பத்தொன்பதாவது செய்யுளில் 'தவமும் அரசிலா ரில்வழி யில்லே' என்றும் கூறினவென்க. இதனேயுமன்றி இராமாயணம் பாலகாண்டத்தில் விசுவாமித்திரர் தசரத சக்ரவர்த்தியை நோக்கி "எண்ணேய மூனிவரரு மிமையவரு மிடையூ ருண்ண முடைய ராஞல், பண்ணகழ கதுவெள்ளிப் பனிவரையும் பாற்கடலு ம் பதும மீடத், தண்கருங் கற்பகநாட் டண்ணிகரு மணிமாட வயோத்தி யென்னும், பொன்னகரு மல்லாது புகலுண்டோ விகல்கடந்த புலவு வேலோய்" என்றும், "தருவனத்தின் யாகியற்றுந் தவமேன்மே லிடையூறு தவஞ்செய் வோர்கள், வெருவரச்சென் றடைகாம வெகுளியென நிருதர் டை லிலக்கா வண்ணம், செருமுகத்துக் காத்தியென கினைறவர் நால்வரி லும் கரிய செம்மல், ஒருவனேத் தந்திதி" என்றும் கூறியது நிங்குக்வ னிக்கத் தக்கதாம்.

† அவை - மாதவர் நோன்பும் மடவார்கற்புர்.

¶ சிவர்கள் அநாதியா (உற்பத்தியில்லாதவரா)யிருத்தலால் அவர்களுக் குத் தர்மோபாயமா யுள்ள வேதமும் அதனுற் சொல்லப்பட்ட அறமும் அநாதியாயிருக்கின்றன வென்க. மனுதருமசாஸ்திரம் பன்னிரண்டாவதற் தியாயத்தில் "அந்த வேதசாஸ்திரமானது சுயம்புவியல்லது ஒருவரால் செய்யப்பட்டதன்று", "அநாதியான வேதசாஸ்திரமானது ஜங்கம தாவர் ரூபமான சகலபூதங்களையுங் காப்பாற்றுகிறது" என்றும், பராசரஸ்மிருதி முதலத்தியாயத்தில் "ஒருவரும் வேதத்தைச்செய்தவர்களல்லர். பிரஜாபதி வேதத்தைக்கேட்டு அப்படியே ஸ்மிருதிகளைச்செய்திருர். கற்பங்களுக் கிடையிடையில் மனுவும் ஸ்மிருதிகளைச்செய்திருர்" என்றுங்கூறியுள்ள னையும் இங்கு அறியத்தக்கனவாம்.

○ அப்பெற்றியே தனக்காதியாவது பிறிதில்லை-[வேதத்தையும் வேத த்தாற்கூறப்பட்ட அறத்தையும் கடத்திதலாகிய] அத்தன்மையே (செங் கோலாகிய) தனக்குக் காரணமாவது வேறொருவகையாலன்றென்றதாம். செங்கோல் வேதத்தையும் அதனுற்கூறப்பட்ட அறத்தையும் கடைபெறச் செய்வது பற்றி அவற்றிற்குக்காரணமென்று சொல்லப்பட்டதென்க.

வேதமானது அரசர் வணங்கொண்ணும் மற்றையவர்க்கும் உரியதாயிறும், தலைமைபற்றி அதனை 'அத்தணர்நூல்' என்றார். அறவிலக்களது விரதமும் பெண்களது கற்பும் அரசனது காவலில் தங்குவனவன் றாதலால், இங்கு அறமென்றது அவையொழிந்தவற்றை. வேதமும் அறமும் அகனதியாயிருந்தாலும் செங்கோல் இல்லாதவிடத்து ஈடுபெறுவாகலால் அச் செங்கோலை அவ்வேகத்திற்கும் அறத்திற்கும் 'ஆகி'என்றும், அத்தன்மையே தனக்கு ஆகியாவது வேறில்லையென்பார் 'நின்றது' என்றும் சொல்லினர். இவை இரண்டுபாட்டாலும் செங்கோலது சிறப்புச்சொல்லப்பட்டது.

(க - து.) அரசனது செங்கோல் வேதமும் அதனால் சொல்லப்பட்டதருமமும் நிலைபெறுவதற்குக் காரணமாயிருக்கின்றது.

3. The sceptre of the king is the firm support of the Vedas of the Brahmin, and of all virtue.



ச. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

பரி:—(இ - ள்.) தன்குடிகளையும் அணைத்துச் செங்கோலையுஞ் செலுத்தும் பெருநில வேந்தனடியைப் பொருந்தி விடார் உலகத்தார்.

அணைத்தல் - இன்சொற் சொல்லுதலும் தளர்த்தழி வேண்டுவன கொடுத்தலும் * முதலாயின. இவ்விரண்டனையும் வழுவாமற் செய்வான் நிலமுழுதும் ஆளுமாகலின் அவனை 'மாநிலமன்னன்' என்றும், அவன் மாட்டியாவரும் நீங்கா அன்பினராவராகலின் 'அடிதழீஇ நிற்கு முலகு' என்றுங் கூறினர்.


தெளி:—(இ - ன்.) உலகு - உலகத்தார், குடிதழீஇ-(தன்) குடிகளையும் அணைத்து, கோலோச்சும் - செங்கோலையுஞ் செலுத்தும், மாநிலமன்னன் - பெருநிலவேந்தனை, அடிதழீஇ - அடியைப்பொருந்தி, நிற்கும்—(விடாது) நிற்பர், (எ - று).

அணைத்தல் - இன்சொற் சொல்லுதலும் (குடிகள்) தளர்த்தவிடத்து (அவர்களுக்கு) வேண்டுவனவற்றைக் கொடுத்தலும் முதலானவை. இவ்விரண்டையும் தப்பாமற் செய்பவன் நிலமுழுதும் ஆளுவானாகையால் அவனை 'மாநிலமன்னன்' என்றும், அவனிடத்து யாவரும் நீங்காத அன்புடையவராவராகலால் 'அடிதழீஇ நிற்கு முலகு' என்றும் சொல்லினர்.

(க - து.) தனதுகுடிகளோ டன்புடன் பாதுகாத்துச் செங்கோல்செலுத்தும் அரசனை யுலகத்தார் விடாதுபற்றுவரென்பது.

* முதலாயின என்றமையின் கல்வி முதலாயினவாற் கெடுதி யுண்டாகாதவாறு காத்தலையுங் கொள்க.

4. The world will constantly embrace the feet of the great king who rules his subjects with love.



ரு. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னுட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

பரி:—(இ-ள்.) * பருவமழையுங் குன்றதவினையும் ஒருங்கு கூடி நூல்கள் சொல்லிய இயல்பாறி செங்கோலைச் செலுத்தும் அரசனது நாட்டின் கண்ணவாம், (எ- று).

† உளியென்பது மூன்றுவதன் பொருள்படுவதோ ரிடைச்சொல்.


‡ வானும் நிலனுஞ் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக்கு மென்பதாம்.

தெளி:—(இ - ன்.) பெயலும் - பருவமழையும், விளையுளும் - (குறையாத) வினையும், தொக்கு - (ஒருமித்து) கூட, இயல்புளி - (நூல்கள்சொல்லிய) இயல்பால், கோலோச்சும் - செங்கோலைச் செலுத்தும், மன்னவன் - அரசனது, நாட்ட - நாட்டிலுள்ளவாம், (எ - று).

உளியென்பது மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. (இயல்புளிக் கோலோச்சும் மன்னவனது நாட்டில்) வானமும் நிலமும் சேரத்தொழிற் பட்டு வளஞ்சுரக்கு மென்பதாம்.

(க-து.) நீதியுள்ள அரசனது நாட்டில் காலமழையுங் குறையாத வினையும் உளவாகாநிற்கும் என்பது.

5. Rain and plentiful crops will ever dwell together in the country of the king who sways his sceptre with justice.



சு. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

---

* பருவமழை - பெய்யவேண்டுங்காலத்தில் தவறுத பெய்யுமழை.

† உளியென்னுமிடைச்சொல் மூன்றும் வேற்றுமையின் கருவிப் பொருளில் வந்தது. இலக்கணக்கொத்த "எழுவாய் வேற்றுமைக் குருபே யின்று" என்னுஞ்சூத்திரத்தினுரையில் "கொண்டு, பொருட்டு, உடைய, உளி, மாறு, ஒடு, ஓடு, கண்முதலியனவும் உவமவுருபுகளும் சொல்லே யுருபாஞ்போல வென்க" என்று கூறியிருத்தலு மிங்குக்வனிக்கத்தக்கது.

‡ வான் தொழிற்பட்டு வளஞ்சுரத்தல்-மேகம் பெய்யவேண்டுங்காலத்தில் தவறுத மழைபெய்தல். நிலம் தொழிற்பட்டுவளஞ்சுரத்தல் - விளைநிலங்கள் விளையவேண்டுங்காலத்தில் ஒன்றுனுங் குறையின்றி விளைதல்.

பரி:—(இ - ள்.) மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக் கொடுப்பது அவன் எறியும் வேலன்று, கோல்; அஃதும் * அப்பெற்றித்தாவது தான் கோடாதாயின், (எ - று).

கோல் செவ்விதாய வழியே வேல் வரப்பதென்பார் 'வேலன்று' என்றார். † 'மாண்டஉற வெறி முதற்றே யரசின் கொற்றம்" என்றார் பிறரும். ‡ கோடாதெனபது பாடமாயின், கருவியின்தொழில் விணைமுதன்மேனின்றதாக வுரைக்க.

தெளி:—(இ-ள்.) மன்னவன் - அரசனுக்கு, வென்றிதருவது - (போரில்) வெற்றியைக்கொடுப்பது, வேலன்று-(அவனெறியும்) வேற்படையன்றும், கோல் - (அவனது) செங்கோலாம், அதுவும் - அச்செங்கோலும், (அத்தன்மையதாவது), கோடாதெனின் - (தான்) கோணுதிருக்குமாயின்.

கோல் செவ்விதாயவிடத்தே வேல் பயன்படுவதென்பார் 'வேலன்று' என்றார். கோல்-நீதி. செவ்விதாதல் - ஒரு பக்கத்திற் சாயாதிருத்தல்.

(கு-து.) அரசனுக்கு வெற்றியைக்கொடுப்பது அவனது செங்கோலே யன்றி அவனெறியும் வேற்படையன்று என்பது.

It is not the javelin that gives victory, but the king's sceptre, if it do no injustice.

எ. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.

பரி:—(இ - ள்.) வையகத்தையெல்லாம் அரசன் காக்கும்; அவன் தன்னை அவனது செங்கோலே காக்கும், $ அதனை () முடவாத்துழியும் முட்டாமற் செலுத்துவனையின், (எ - று).

முட்டாமற் செலுத்திபவாறு ¶ மகனை முறைசெய்தான் கண்ணும்,

* அப்பெற்றித்தாவது - வெற்றியைக்கொடுப்பதாவது.

† புறநானூறு 99. இதன்பொருள் மாட்சிமைப்பட்ட வறநெறியை முதலாகவுடையது அரசரது வெற்றி என்பது.

‡ கோடான் என்பது பாடமாஞல் செங்கோலாகிய கருவியின் தொழில் மன்னவனுகிய விணைமுதல் (எழுவாய்) சேரல் என்றதாக வுரைத்துக் கொள்க என்தாம். தொழிலென்றது கோணுதலே.

$ அதனை - செங்கோலை.

() முட்ட (தடைப்பட) வந்துழியும் என்றும் பாடமுண்டு.

¶ திருவாரூரில் அரசு செலுத்திய மநுநீதிச்சோழன் தனது புத்திரனை வீதி விடங்கன் தேரேறிச் சென்றபோது அறியாது பசுவின் கன்றைக் கொன்றதற்காக, அப்புத்திரனைத் தேரே டெத்தித் தேரை பசுவின் மேற் செலுத்திக்கொன்ற மீண்டும் கடவுளருளால் அப்புத்திரனை யுய்யப் பெற்று வாழ்ந்தானென்பது கதை. "ஒருமைமகன் தன்குலத்துக் குன்ன

* தன்னை குறைத்தான் கண்ணுங் காண்க. ‡ முட்டாதென்பதன் இறுதி நிலை விகாரத்தாற் றொக்கது. இவை தான்குபாட்டாலும் அதனைச் செலுத்தினுன் எய்தும் பயன் கூறப்பட்டது.

நேளி:—(இ - ன்.) இறை-அரசனுவன், வையகமெல்லாம்-பூமியையெல்லாம், காக்கும்-காப்பாற்றுவான், முறை - (அவனது) செங்கோலே, அனேன—, காக்கும்-காப்பாற்றுவதாகும், முட்டாச்செயின்-(அதனைத்தடை சேரிட்டவிடத்தும்) தடை சேரிடாமற் செலுத்துவானுயின், (எ - று).

செங்கோலே முட்டாமல் செலுத்திய விதத்தைத் தன்மகனைத் தேர்க் காலில் வைத்தூர்ந்த சோழனிடத்தும், அயலார்வீட்டுக் கதவைத்தட்டிய தன்கையைக் குறைத்த பாண்டியனிடத்துங் காண்க. முட்டாது என்பது விருதிதொக்கு முட்டா என வந்தது. இவை தான்குபாட்டாலும் செங்கோலைச் செலுத்தினுன் அடையும் பயன் சொல்லப்பட்டது.

(க - து.) நீதிதவறுது உலகத்தைக் காக்கும் அரசனே அவனது செங்கோலே காக்கும் என்பது.

னென் பதுமுணரான், தருமந்தன் வழிச்செல்லை கடனென்று தன்மைத் தன், மருமந்தன் தோழி யுறவூர்ந்தான் மனுவேந்தன், அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்" என்று பெரிய புராணம் கூறுவது மிங்கறியத்தக்கதாம். இக்கதையின் விரிவைப் பெரிய புராணம் திருவாரூர்ச் சிறப்பிற் காண்க. முறை - நீதி.

* மதுரையில் அரசு செலுத்திய பாண்டியர்களுள் ஒருவன் தன்பாலடைக்கலமாக வைத்துச் சென்ற ஒருவேதியனது மனைவியைப் பாதுகாத்துவரும் காலில், ஒரிராத்திரி கார்சோதனை வரும்போது தன்பாலடைக் கலமாகவுள்ள வேதியனது மனையாள்வீட்டில் ஆண்குரல்கேட்டுச் சந்தேகங்கொண்டு, உள்ளே யார் என்று கதவைத்தட்டினுன்; தட்டவே, அன்று வந்து சேர்ந்த அவ்வேதியன் தட்டுபவன் யார் என்று கேட்க, அரசன் அச்சங்கொண்டு அங்குள்ள வீதிகளின் கதவுகளே யெல்லாம் தட்டிக்கொண்டே போய் அரண்மனை சேர்ந்து, வீடித்தவுடன் காலைக்கடனை முடித்துச் சபைக்குச் சென்று மந்திரி புரோகிதர்களோடு கூடித்திருக்கும் மகளிருள்ள வீட்டின் கதவை மோதிரியிற் சென்று தட்டினவனை யென்ன செய்யலாமென்று கேட்டான். அதற்கு அவர்கள் அவனது கையை வெட்டிவிட வேண்டுமென்றனர். உடனே அரசன் தன்கையை வாளால் வெட்டிக்கொண்டு கடந்த சமாச்சாரத்தைக் கூறிப் பொன்னுலகை யொன்று செய்து தரித்துக்கொண்டு பொற்கைப்பாண்டியன் என்னும் பெயரோடு விளங்கினு னென்பதுகதை. இவனது இயற்பெயர் குலசேகரப்பெருமான் என்று கூறப்படுகின்றது "எனக்குத் தவவன்று லென்பதே சோகித், தனக்குக் கரியவான் ருளுய்த் தவற்றை, யினைத்தத்தன் கைகுறைத் தான் றென்னவனு(பாண்டியனு)ங் காணுர், எனச்செய்யார் மாணு வினை" என்று பழமொழி கூறுவது மிங்குக் கவனிக்கத் தக்கதாம்.

‡ முட்டாது என்னும் எதிர்மறை வினையெச்சத்தின் இறுதி நிலை (தொவ்விகுதி) செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது.

7. The king defends the whole world; and justice, when it is administered without defect, defends the king.

அ. எண்பதத்தா னேரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் ருனே கெடும்.

பரி:—(இ - ள்.) * முறைவேண்டினர்க்கு † எளிய செவ்வியை யுடையனுய் ‡ அவர் சொல்லியவற்றை () நூலோர் பலரோடும் ஆராய்ந்து நின்ற வுண்மைக்கோப்ப முறைசெய்யாத அரசன் தாழ்ந்த பதத்தி லே நின்று தானே கெடும், (எ - று).

§ எண்பதத்தான் என்னும் முற்றுவினையெச்சமும், ஒராவென்னும் வினையெச்சமும் செய்யாவென்னும் பெயரெச்ச எதிர்மறையுட் செய்தல் வினை கொண்டன. தாழ்ந்தபதம் - பாவமும் பழியும் எய்திநிற்கும் நிலை. ¶ "அல்லவை செய்தார்க் கறங்கூற்றம்" ஆகலின் பலரவர் இன்றியும் 'கெடும்' என்றுர். இதனுள் § முறை செலுத்தாதானது கேடு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) (முறைவேண்டி வழக்குரைப்பவர்க்கு) எண்பதத்தான் - எளிய சமயத்தை யுடையவனுய், ஓரா - (அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோடும்) ஆராய்ந்து, முறைசெய்யா - (நின்ற உண்மைக்குப் பொருந்த) முறைசெய்யாத, மன்னவன் - அரசன், தண்பதத்தால் - தாழ்ந்தபதத்திலே, (நின்று), தானேகெடும் - தானே கெடுவான், (எ - று).

வினையெச்சப் பொருளில் வந்த எண்பதத்தானென்னு முற்றும், ஓராவென்னும் வினையெச்சமும், செய்யாவென்னும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் செய்தலென்னும் முதனிலை கொண்டு முடிந்

---

* முறைவேண்டினர்க்கு - பிறர் தமக்குச் செய்த தீமையைக்கூறி நீதியை விரும்பினவருக்கு.

† எளிய செவ்வியை யுடையனுதல் - கொலுமண்டபத்தில் அந்தணர் சான்றோ ருள்ளிட்டாரோடு யாவருங்கண்டு தங்குறைகளைச் சொல்லுவதற்கு எளிய சமயத்தை யுடையவனுயிருத்தல். ‡ அவர் - முறைவேண்டினர்.

() நூலோர் - அமைச்சர் முதலாயினோர்.

§ எண்பதத்தான் என்னும் முற்று வினையெச்சமும் (எண்பதத்தானென்னுங் குறிப்புவினைமுற்று இங்கு வினையெச்சப் பொருளில் வந்தது), ஓரா என்னும் (செய்யா என்னும் வாய்பாட்டிறத்தால்) வினையெச்சமும், செய்யா என்னும் (ஈறுகெட்ட எதிர்மறைத் தெரிநிலைப்) பெயரெச்சத்தின் முதனிலையான செய்தல் என்பதனைக் கொண்டன என்பது. வினைப்பகுதியெல்லாம் தொழிற் பெயரா மென்பது முன்னரே எழுதப்பட்டிருக்கின்றது.

¶ நான்மணிக்கடிகை. 85, இதன் பொருள். அறமல்லாத காரியங்களைச் செய்தவருக்கு அறம் யமனுகும் என்பது.

§ முறை செலுத்தாதானது - நீதியைச் செலுத்தாத அரசனது.

தன. தாழ்த்தபதம்-பாவமும் பழியும் அடைத்து நிற்கும் நிலை. நியகாரியஸ்தரைச் செய்தவர்க்குத் தருமம் யமனுயிருத்தலால் பகைவரில்லா திருந்தாலும் (முறைசெய்யா மன்னவன்) 'தானே கெடும்' என்றார். இதனால் முறைசெலுத்தாதவனது கேடு சொல்லப்பட்டது.

(க - து.) முறைவேண்டினார்க்கு எளிய சமயத்தை யுடையவனுய் நூலோர் பலரோடு மாராய்ந்து முறைசெய்யாத அரசன் ஒருவர் கெடுக்கவேண்டாது தானேகெடுவான் என்பது.

8. The king who gives not facile audience to those who approach him, and who does not examine and pass Judgment on their complaints, will perish in disgrace

கூ. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்.

பரி:—(இ - ள்.) குடிகளைப் † பிறர் நலியாமற் காத்துத் தானும் நலியாது பேணி, ‡ அவர்மாட்டுக் குற்ற நிகழின் (1) அதனை ஒறுப்பான் ஒழித்தல் வேந்தனுக்குப் பழியன்று, தொழில் ஆகலான், (எ - று).

தண்பஞ்செயதல், பொருட்கோடல், கோறலென ஒறுப்பு மூன்று; அவற்றுள், ஈண்டைக்கெய்தியன முன்னையவென்பது 'குற்றங்கடிதல்' என்பதனுற்பெற்றும், தன்கீழ் வாழ்வாரை ஒறுத்தல் அறனன்மையின் வடுவாமென்பதனை ஆசங்கித்து, § அஃதாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தினீக்கித் தூயராக்குதலுஞ் ¶ சாதிதரும் மென்றார்.

தெளி:—(இ - ள்.) குடி - குடிகளை, புறங்காத்து-(பிறர்வருத்தாமற்) காத்து, ஓம்பி - (தானும்வருத்தாமல்) ஆதரவுசெய்து, குற்றம் - (அவரிடத்தில்) குற்றம் (உண்டானுல்), கடிதல் - (அக்குற்றத்தைத் தண்டத்தால்) ஒழித்தல், வேந்தன்றொழில் - அரசனதுதொழிலாம், (ஆதலால் அஃதவனுக்கு), வடுவன்று - பழியாகாது, (எ - று).

தண்பஞ்செய்தல், பொருளைக் கொள்ளுதல், கொல்லுதல் என ஒறுப்பு(தண்டம்) மூன்றும்; அம்மூன்றனுள் இவ்விடத்திற்குப் பொருந்துவன முன்னுள்ள தண்பஞ் செய்தல் பொருளைக் கொள்ளுதலென்று மிரண்டு மென்பது 'குற்றங்கடிதல்' என்ற கூறியதினுல் பெற்றும், தன்கீழ்வாழ்

---

† பிறரென்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினாரை. ‡ அவர்மாட்டு - குடிகளிடத்து.

(1) அதனை யொழிப்பா ரொறுத்தல் என்றும் பாடமுண்டு.

§ அஃதாகாது - ஒறுத்தல் (குற்றஞ்செய்தவரைத்தண்டித்தல்) பழிப்பாகாது.

¶ சாதிதரும மென்பார் 'வடுவன்று வேந்தன் றொழில்' என்றார் என்றும் பாடமுண்டு.

வரை ஒறுத்தல் அறமாகாமையால் வடுவாமென்பதனை ஆட்சேபமாக் கிக்கொண்டு, அது வடுவாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தினின்று நீக்கிப் பரிசுத்தராக்குதலுஞ் சாதிதருமமென்பார் 'வடுவன்று வேந்தன் தொழில்' என்றார்.

(க - து.) அரசனது தொழில் குடிகளைப்பாதுகாத்து அவர் களிடத்துண்டாகுங் குற்றங்களை அவர்களைத் தண்டித்தொழித் தலாம் என்பது.

9. In guarding his subjects against injury from others, and in preserving them himself, to punish crime is not a fault in a king, it is his duty.

கo. † கோலியிற் கொடியாரை வேந்தோறுத்தல் பைங்கூழ் களைகட் டதனெடு நேர்.

பரி:—(இ - ள்.) அரசன் கொடியவர்களைக் () கோலையான் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல், உழவன் களையைக் களைந்து பைங் கூழைக் காத்ததனோடொக்கும், (எ - று).

கொடியவரென்றது ‡ நீக்கொளுவுவார், நஞ்சிவைவர், கருவியிற்கொல் வார், கன்வர், ஆலைப்பார், சூறைகொள்வார், பிறனில்விழைவாரென்றிவர் முதலாயினரை. இவரை வடநூலார் ஆதாயிகளென்ப. ¶ இப்பெற்றியா ரைக் கண்ணோடிக் கொல்லாவழிப் புன்களைக்கு அஞ்சாின்ற பைங்கூழ் போன்ற கலிவுபலவெய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதிதரும மென்பதாயிற்று. இவை யிரண்டோட்டாலுஞ் செங்கோல் செ

† "பயிரிடுகின்றவன் பயிருடனுண்டாய புல்முதலியவற்றைப் பிடுங்கி விட்டுப் பயிர்களைக்காப்பற்றுவதுபோல அரசன் தன் தேசத்திலுண்டான துஷ்டர்களைத் தண்டித்துவிட்டு நல்லோர்களைக் காப்பற்றல்வேண்டும்" என் பது மனுதர்மசாஸ்திரம் ஏழாவதத்தியாயம்.

() கோலையான் ஒறுத்தி - கோலைசெய்தலால் தண்டித்து.

‡ "(வீட்டுக்கு) நெருப்புவைத்தவன், (தன்னத்தில்) விஷங்கலந்த வன், ஆயுதத்தினால் கொல்லவந்தவன், பொருளையபகரித்தவன், பூமியை யபகரித்தவன், மனைவியையபகரித்தவனென்னும்இவ்வாறுவரும் ஆதாயிக ளென்று சொல்லப்படுவர். எதிர்ப்பட்ட ஆதாயிகளை விசாரிக்காமலே கொல்லல்வேண்டும். ஆதாயிகளைக் கொன்றவனுக்கு யாதொருதோஷமு மில்லை" என்று பத்ம புராணம் சிருஷ்டிகாண்டத்தில் கூறுகின்றது.

¶ "மாதிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத், தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தால், ஊனமிகு பகைத்திறத்தாற் கன்ற ரா லுயிர்த்தம்மால், ஆனபய மைம்துன்றீர்த் தறங்காப்பா னல்லனெனு" என்று பெரியபுராணம் கூறுவது மிக்கறியத்தக்கதாம்.


லுத்தழி † வெண்குடை வேந்தற்குத் ‡ தீயார்மாட்டே மூவகையொறுப்பும் ஒழியற்பாலவல்ல வென்பது கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) வேந்து - அரசனுடையவன், கொடியாரை - கொடியவர்களை, கொலியின் - கொலையினால், ஒறுத்தல் - தண்டித்தல், (தண்டித்து கல்லோரைக் காப்பாற்றல்), (உழவனுடையவன்), பைங்கூழ் - பயிரை, களைகட்டனெடு - களையைக் களைந்து காப்பாற்றலோடு, சேர் - ஒக்கும்.

கொடியவ ரென்றது நீக்கொளுவுவார், கஞ்சிவார், படையிற் கொல்வார், கல்வர், வழியலேப்பார், கொன்லேயிடுவார், பிறனில்லாளே விரும்புவார் என்ற இவர் முதலாயினோரை. இவரை வடலூலார் ஆதாயிகளென்பர். இத்தன்மை யுடையவரைத் தாட்சண்யஞ் செய்து கொல்லாத விடத்துப் புல்லுக்களேக்கு அஞ்சாகின்ற பயிர்போன்ற வருத்தம் பலவற்றை யடைத்து உலகத்தார் துன்பப்படுவராதலால், கொல்லுதலும் அரசனுக்குச் சாதி தருமமென்பதாயிற்று. இவை இரண்டுபாட்டாலும் செங்கோல் செலுத்தும் வெண்கொற்றக் குடையையுடைய அரசனுக்குத் தீயோரிடத்து மூவகைத் தண்டமும் ஒழிக்கத்தக்கனவல்ல வென்பது சொல்லப்பட்டது. களைகட்டல் - புல்லுதலிய களைகளைப் பிடுங்கியெறிதல்.

(க - து.) அரசன் கொடியவரைத் தண்டித்து நல்லவரைக் காப்பது உழுது பயிர்செய்வோன் களையைப்பிடுங்கிப் பயிரைக்காப்பதுபோலவாம் என்பது.

10. For a king to punish criminals with death, is like pulling up the weeds in the green corn.



பதினேட்டாம் அதிகாரம்.

கொடுங்கோன்மை—*On Unjust Government.*

பரி:—அஃதாவது ¶ அம்முறையினது கோடுதற் றன்மை. சண்டும்

† வெண்குடை - அரசனது வெற்றிக்கு அடையாளமாயுள்ளவற்றுள் ஒன்று. இது கலிங்கத்துப்பரணி அவதாரத்தில் "குலிகைகொ டாசர் சுற்றிய குளாதழ லபயன் முத்தணி, கவிகையினில வெறித்தது கலியெனு மிரு ளொளித்ததே" என்ற கூறலவதாலு முணரப்படும்.

‡ கொடியவர்களிடத்தில் தண்டஞ்செய்தல், பொருளைக்கொள்ளுதல், கொல்லுதல் என்னும் மூவகைத்தண்டமும் ஒழிக்கத்தக்கனவல்லவென்பது சொல்லப்பட்டது என்பதாம்.

¶ அம்முறையினது - அச்செங்கோலினது. (முறை-நீதி).

உவமையின் பெயர் * பொருண்மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறுகலின், † இஃது ¶¶ அதன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது அம்முறையினது கோணுதற்றன்மையாம். இக்கும உவமானமான கொடுங்கோலின் பெயர் உலமேயமான அரசியின் மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறுகலால், இஃது அதன்பின்வைக்கப்பட்டது.

க. கோலமேற்கோண் டாரிற் கோடிதே யலமேற்கோண்
டல்லவை செய்தோழுதும் வேந்து.

பரி:—(இ - ள்.) பகைமைபற்றிக் கொல்லுதற்றெழிலத் தம்மேற் கொண்டொழுதவரினுங் கொடியன், பொருள் வெஃகித் துடிகலோ ‡ அலத்தற் றெழிலத் தன்மேற்கோண்டு ¶ முறையல்லவற்றைச் செயி தொழுதும் வேந்தன், (எ - று).

0 அவர் செய்வது ஒருபொழுதைத் துன்பம், †† இவன் செய்வது எப் பொழுதுந் துன்பமாமென்பது பற்றி () 'கொலமேற்கொண் டாரிற்கொடிதே' என்றார். ‡‡ பாண்டியக்குறழ்ச்சி. வேந்தென்பது உயர்திணைப் பொருட்கண் வந்தஃறிணைச் சொல். அலை கொலியினுங் கொடிதென்ப தாயிற்று.

தெளி:—(இ - ள்.) அலை - (பொருளே விரும்பிக் குடிகளை) அலைத்தற் றெழிலை, மேற்கொண்டு - (தன்) மேற்கொண்டு, அல்லவை - முறை

* பொருள் உவமேயம்.

† இஃது - கொடுங்கோன்மை. ¶¶ அதன்-செங்கோன்மையின்.

‡ அலைத்தல் - வருத்துதல். ¶ முறையல்லவற்றை - அநீதிகளை.

0 அவர் - பகைமைபற்றிக் கொல்லுதற் றெழிலத் தம்மேற்கொண்டு நடப்பவர். †† இவன் - அரசன்.

() அவரினுங் கொடியன் என்றார் என்றும் பாடமுண்டு.

‡‡ அலமேற்கொண் டல்லவை செய்தொழுகும் வேந்து என்னும் ஒருமைப்பாலுக்குக்கொலமேற்கொண்டாரென்னும் பன்மைப்பால் உவமான மாகவந்து உறழ்ந்து நின்றமையின், பால்மயக் குறழ்ச்சியாயிற்றென்க. [ஒருமைப்பாலுக்கு ஒருமைப்பாலே உவமானமாகவாராது பன்மைப்பால் உவமானமாக வந்தும், கொண்டாரின் என்பதன்கணுள்ள (ஐந்தாம் வேற்றுமை) இன்னுருபு போலஎன்று ஒப்புப்பொருளில் வாராது காட்டிலும் என்னும் உறழ்ச்சிப்பொருளில் வந்தும் நின்றமையின், ஒருமைப்பால் பன்மைப்பாலோடு மயங்கியதாயும் இன்னுருபு உறழ்ச்சியதாயு மாயினவென்க. ஒன்றிலொன்றுமிக்கு (சமமாகாது) மாறுபடுவது உறழ்ச்சியெனப்படும். உறழ்ச்சியெனினும் உறழ்பொருள் எனினும் ஒக்கும்]. "முதலுஞ் சினையு மென் றுயிரு பொருட்கு" என்னும் (தொல்காப்பியச்) சூத்திரத்தின் விசேடவுரையில் "கடம்பமர் செல்வே ளென்ன மீளி, யுடம்படித்த நடக்கை யோடா வம்பலர்' என்பது ஒருமைப் பன்மை மயங்கிற்று" என்று நச்சினார்க்கினியார் கூறியது மிங்கறியத்தக்கதாம்.

யல்லாதவற்றை, செய்தொழுகும் - செய்து நடக்கும், வேந்து - அரசனை வன், கொலை (பகைமைபற்றிச்) சொல்லுதற்றொழிலை, மேற்கொண்டா ரின்-(தம்) மேற்கொண்டு நடப்பவரினும், கொடிதே - கொடியனாவன்.

அவர் செய்வது ஒரு வினைத்தன்பம், இவன் செய்வது எப்பாலும் தன்பமானென்பது பற்றித் 'கொலைமேற்கொண் டாரிற் கொடிதே' என் றார். இது பன்மைப்பா லுவமானத்திற்கு ஒருமைப்பா லுவமேயமாகவந்த பால் மயக்குறழ்சி. கொண்டாரின் என்னும் இன் உருபு உறழ்ச்சிப் பொ ருளில் வந்தது. வேந்து என்பது உயர்திணைப் பொருளில்வந்த அஃறிணைச் சொல். அலைத்தல் கொலையினும் கொடியதென்பதாயிற்று.

(க - து.) அரசி செய்தொழுகு மாசன் பகைமைபற்றிக் கொலைசெய்பவர்களிலும் கொடியவனாவன் என்பது.

1. More cruel than the man who lives the life of a murderer, is the king who gives himself to oppress and act unjustly towards his sujects.

உ. † வேலொடு நின்று னிடுவேன் றதுபோலுங்
கோலொடு நின்று னிரவு.

பரி:—(இ - ள்.) ஆறலைக்குமிடத்துத் தனியே வேல்கொண்டு நின்றகள்வன் ஆறுசெல்வானை நின்கைப் பொருள் தாவென்றுவேண்டு தலோடு ஒக்கும், ஒறுத்தற்றொழிலோடு நின்ற அரசன் குடிகளைப் பொ ருள் வேண்டுதல், (எ - று).

'வேலொடு நின்றான்' என்றதனைத் ‡ பிறரொடு நில்லாமையும், ¶'இரவு' என்றதனால் †† இறைப்பொருள் அன்மையும் பெற்றாம். தாரைக் கால் ஒறுப்பலென்னும் குறிப்பினாலின், இரவாற்கோடலுங் கொடுக் கோன்மையாயிற்று. இவை யிரண்டுபோட்டானுங் கொடுக்கோன்மையதி குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) கோலொடு-தண்டித்தற்றொழிலோடு, நின்றான்-நின்றஅரசன், இரவு - (குடிகளைப்பொருள்) வேண்டுதலானது, (வழியில் அலைத்துப் பொருள் பறிக்குமிடத்துத் தனியே), வேலொடு - வேற்படை கொண்டு நின்றான்-நின்றகள்வன், இடுவென்றதுபோலும்—(வழிப் போக் கனை யுன்னைப்பொருளைத்) தாவென்று வேண்டுவதோடு ஒக்கும், (எ-று).

'வேலொடு நின்றான்' என்றதனால் பிறரொடு நில்லாமையும், 'இரவு' என்றதனால் இறைப்பொரு ளல்லாமையும் பெறப்பட்டன.(பொருள்)தாரா

† "உறையில் வாளொடு மாவழங் குறவனைத் தோடி, மறவ னேற்பொரு டருகென வீரத்தேர் மானும், இறையவன் வாழ்குடி தன்னிலொன்றெரு பொரு ளிரத்தல்" என்ற பிரபுலிங்கலீலை கூறுவது மிங்கியத்தக்கதாம்.

‡ பிறர் என்றது அமைச்சர் புரோகிதர்களை. ¶ இரவு - யாசகம்.

†† இறைப்பொருள் - வரிப்பணம்.

வீட்டால் தண்டிப்பேனென்னுங் குறிப்புடையவனதலால் இரத்தலினுல் (பொருளை) வாங்குதலும் கொடுங்கோன்மையாயிற்று. இவையிரண்டோட்டாலுங் கொடுங்கோன்மையினது குற்றஞ் சொல்லப்பட்டது. அவைத்தல்-அடித்தல் வருத்துதல்.

(க - து.) கொடுங்கோலரசன் குடிகளைப் பொருள்வேண்டுதல் திருடன் வழிப்போக்கனைப் பொருள்வேண்டுதலை யொக்கும்.

2. The request for money of him who holds the sceptre is like the word of a robber who stands with a weapon and says "give up your wealth".

கூ. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்.

பரி:—(இ – ள்.) தன்னாட்டு நிகழுந் தீமைகளை நாடோறும் ஆராய்ந்து * அதற்கொக்க முறைமையைச் செய்யாத அரசன் நாடோறும் நாடிழக்கும், (எ - று).

அரசனுக்கு நாடு † உறுப்பாகலின், ‡ அரண்வினை அவன்மே னின்றது. இழத்தல் - பயனில்லாமை. ¶ மன்னவனுடை நாடொறுங் கெடுமென்றுரைப்பாரும் உளர்.

தெளி:—(இ - ன்.) நாடொறும் - தினந்தோறும், நாடி - (தன்னாட்டில் உண்டாகுந் தீமைகளை) ஆராய்ந்து, (அதற்கு ஒத்த), முறை - முறைமையை, செய்யா - செய்யாத, மன்னவன் - அரசன், நாடொறும்—தினந்தோறும், நாடுகெடும் - நாடிழப்பான், (எ - று).

அரசனுக்கு நாடு உறுப்பாகலால், அந்நாட்டின் கெடுதற்றொழில் அவன்மேல் நின்றது. இழத்தல் - (நாட்டின்) பயனில்லாமை.

* அதற்கொக்க - அவ்வாராய்ச்சிக்குப்பொருந்த.

† அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பென்னும் ஆறங்கங்களுள் நாடும் ஒருமுப்பாயிருத்தல் காண்க.

‡ அதன்வினை (நாட்டினது கேடு) அவன்மேனின்றது (அரசன்மேல் நின்றது). மன்னவன் நாடு கெடும் என்பது நம்பி நாடு பெரியன் என்றுற் போன்ற நிரனிறைமுறையன்றிப்பா. இங்கு நாடாகிய வுறுப்பினது கெடுதலாகிய தொழில் முதலாகிய அரசன் மேல் நின்றதென்க. மன்னவன் நாடு கெடும் என்பதற்கு அரசன் நாட்டின்பயனை யடையமாட்டானென்பது கருத்தாமென்க.

¶ அரசன் நாடு தினந்தோறும் இழக்கும் என்று (மன்னவனுடொறு நாடு கெடும் என்பதற்குப்) பொருளுரைப்பாரு முண்டென்பது. இதற்கு அரசன் தனது நாட்டினைத் தினந்தோறுஞ் சிறிது சிறிதாக இழக்கப்பெறுவான் என்பது கருத்தாம்.

(க - து.) தன்னுட்டி லுண்டாகுந் தீமைகளை நாள்தோறு மாராய்ந்து செங்கோல் செலுத்தாத அரசன் ஒவ்வொருநாளுந் தனது நாட்டினை யிழப்பான் என்பது.

3. The country of the king will daily fall to ruin, who does not daily examine into and punish crimes.

ச. * கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

பரி:—(இ - ன்.) † மேல்வினைவது எண்ணு முறை தப்பச் செய்யும் அரசன் ‡ அச்செயலான் முன்னீட்டிய பொருளையும் பின்னீட்டுதற் கேதுவாகிய குடிகளையுந் சேர விழக்கும், (எ - று).

¶ கோடவென்பது திரிந்து நின்றது. முன்னீட்டிய பொருள் இழத் தற்கேது வருகின்ற பாட்டாற் கூறப.

தெளி:—(இ - ன்.) சூழாது - (மேல்வினைவை) எண்ணுமல், கோல் கோடி - முறைதப்ப, செய்யும்—, அரசு - அரசனுனவன், (அச்செயலால்), கூழும் - (முன் சம்பாதித்த) பொருளையும், குடியும் - (பின் அப்பொரு ளைச் சம்பாதித்தற்குக் காரணமாகிய)குடிகளையும், ஒருங்கு-ஒருசேர, இழக் கும்-இழப்பான், (எ - று.)

கோடவென்னும் வினைபெச்சம் கோடியெனத் திரிந்து நின்றது. முன் சம்பாதித்த பொருளை இழத்தற்குக் காரணம் வருகிறபாட்டாற் சொ ல்லுவார்.

(க - து.) பின்வருவதைக்கருதாது முறைதப்ப நடக்குமர சன் பொருளையுங் குடிகளையும் இழப்பான் என்பது.

4. The King, who, without reflecting on its evil consequences, perverts justice, will lose at once both his wealth and his subjects.

நி § அல்லற்பட் டாற்றி தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

* கூழ் - உணவு. கூழிற்குக்காரணமாய பொருளைக் கூழ் என்றது காரியவாகு பெயராம் † மேல்வினைவது - பின்னுண்டாவது.

‡ அச்செயலான் - முறை (நீதி) தப்ப (தவற)ச் செய்தலால்.

¶ கோலினது வினையாயிய கோடி யென்னும் (செய்த என்னும் வாய்பாட்டு வினை) எச்சம் அரசனது வினையாயிய செய்யும் என்பதைக் கொண்டு முடிதற்கு விகிபில்லாமையின், 'கோட வென்பது (கோடியென த்) திரிந்து நின்றது' என்று கூறப்பட்டது.

§ "இருவர்தஞ் சொல்லையு மெழுதரன் கேட்டே,இருவரும் பொருந்த வையா வரின்,மனமுறை நெறியின் வழக்கிழக் தவர்தாம்,மனமுற மற

பரி:—(இ - ள்.) அரசன் முறைசெய்யாமையாற் குடிகள் துன்ப முற்று அதனைப் பொறுக்கமாட்டாது அழுத கண்ணீ †ரன்றே அவன் செல்வத்தைக் குறைத்துங் கருவி, (எ - று).

அழுதகண்ணீர் - அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத் தை டென்னுமையின், இஃது ஏகதேசவுருவகம். ‡ அல்லற்படுத்திய பாவ த்தது தொழில் அதற்கேதுவாகிய கண்ணீர்மேனின்றது. அக்கண்ணீரிற் கொடிது பிறிதின்மையின், செல்வங் கடிதிற் றேயுமென்பது கருத்து.

தேளி:—(இ - ள்.) செல்வத்தை - (அரசனது) செல்வமாகிய மரத் தை, தேய்க்கும் - குறைக்கும், படை - வாளாவது, (அவன் முறைசெய் யாமையினல்), அல்லற்பட்டு - (குடிகள்) துன்பமடைந்து, ஆற்றாது - (அத்துன்பத்தைப்) பொறுக்கமாட்டாமல், அழுதகண்ணீரன்றே - அழுத லால் வந்த கண்ணீரல்லவா, (எ - று).

கண்ணீரைப் படையாக உருவகஞ் செய்தவர் அதற்கேற்பச் செல்வத் தை மரமென்றுருவகஞ் செய்யாமையின், இஃதேகதேசவுருவகவணியாம். அல்லற்படுத்திய பாவத்தினது தொழில் அதற்குக் காரணமாகிய கண்ணீர் மேல் நின்றது. அக்கண்ணீரைக்காட்டிலும் கொடியது வேறில்லாமை யால், செல்வம் விரைந்து கெடுமென்பது கருத்து.

(க - து.) கொடுங்கோலரசனது செல்வத்தை விரைவாக ஒழிப்பது அவனது குடிகள் அழுத கண்ணீராம் என்பது.

5. Will not the tears, shed by a people who cannot endure the oppression which they suffer from their king become a saw to waste away his wealth?

கூ. மன்னர்க்கு மன்னுதல் சேங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி.

பரி:—(இ - ள்.) அரசர்க்குப் புகழ்கள்தாம் நிலைபெறுதல் சேங் கோன்மையான் ஆம்; அச்சேங்கோன்மை யில்லையாயின், அவர்க்கு அப்புகழ்கள்தாம் உளவாகா, (எ-று).

கின் றழுத கண்ணீர், முறையுறத் தேவர் மூவர் காப்பினூடும், வழிவழி யீர்வதோர் வாளா குமே" என்று வெற்றிவேற்கை கூறுவது மிங்குறியத் தக்கதாம்

† அன்றே என்பது நிச்சயத்தையுணர்த்தி நின்றது,

‡ துன்பப்படுத்திய பாவத்தினது தொழில் அப்பாவத்தொழில் வெளிப்படுவதற்குக்காரணமான கண்ணீர்மேல் நின்றது. துன்பப்படுத்திய பா வத்தினது தொழிலை அத்தொழில் வெளிப்படுவதற்குக் காரணமாய கண் ணீர் என்று கூறியது ஒருபொருளின் வினை (பாவத்தினது தொழில்) மற் றொரு பொருளா (கண்ணீரா) ன உபசாரவழக்காம்.

* விகாரத்தாற்றொக்க மூன்றுவது விரித்தது ஆக்கம் வருவித்துரைக் கப்பட்டது. மன்னுதற்கேது புகழாதல் † 'இக்கிலத்து மன்னுதல் வேண்டி னிலைசெடுமே'' என்பதனுளும் அறிக. மன்னுமை - ‡ ஒருகாலும் நிலையா மை. பழிக்கப்பட்டால் ஒளி மன்னுவாம்; ஆகவே, தாமும் மன்னு ரென்ப தாயிற்று. வென்றி, கொடை ¶ முதலிய வதிகளாற் புகழ்பகுதிப்படுத லின், பன்மையாற் கூறினர். அவையெல்லாம் செங்கோன்மை யில்வழி இலவாமென்பதாம். இவை நான்கு பாட்டாலுங் சோழங்கோலனையினுன் எய்தங் குற்றங்கூறப்பட்டது.

தேளி:—(இ - ன்.) மன்னர்க்கு - அரசர்க்கு, மன்னுதல் - (புகழ்கள் தாம்) நிலைபெறுதல், செங்கோன்மை - செங்கோன்மையால் (ஆம்), அஃதி - அச்செங்கோன்மை, இன்றேல் - இல்லையாயின், மன்னர்க்கு - அவ்வரசர்க்கு, ஒளி - அப்புகழ்கள் தாம், மன்னுவாம் - உண்டாகாவாம்,

செங்கோன்மை யென்பதன்கண் செய்யுள்விகாரத்தாற்றொக்கு நின்ற ஆல் என்னும் மூன்றும் வேற்றுமையுருபை விரித்து ஆம் என்னும் ஆக்கச்சொல் வருவித்துச் சொல்லப்பட்டது. அரசர் பூமியில் நிலைபெறு தற்குக் காரணம் புகழாம். மன்னுமை (புகழ்கள்) ஒரு போதும் நிலைத் திராமை. (தடிகளால் அரசர்) பழிக்கப்பட்டால், (அவர்க்கு) ஒளி (புகழ்கள்) நிலைபெறுவாம்; நிலைபெறுவாகவே, தாமும் (அரசரும்) நிலை பெறுவென்பது பெறப்பட்டது. வெற்றி, கொடை முதலாகிய வதிகளால் புகழ் பலவகைப் படுதலால் ஒளிமன்னுவாம் எனப்பன்மையாற் சொல்லி னர். அப்புகழ்களெல்லாம் செங்கோன்மை (நீதி) யில்லாதவிடத்து இல்லை யாமென்பதாம். இவை நான்குபாட்டாலும் கொடுங்கோன்மை யுடைய அரசனிடையுங் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து.) புகழ் செங்கோலுடைய அரசர்க்கன்றிக் கொடுங் கோலுடைய அரசர்க்குண்டாகாது என்பது.

6. Righteous government gives permanence to the fame of kings; without that their fame will have no endurance.

ஈ. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு.

* செங்கோன்மையென்பது ஆன் என்னும் மூன்றும் வேற்றுமை யுருபு தொக்கு நின்றமையின், அதனை (செங்கோன்மையான் என) விரி த்து ஆம் என்னும் ஆக்கச்சொல் வருவித்துச் சொல்லப்பட்டது.

† சான் மணிக்கடிகை 15. இதன்பொருள். இந்தப்பூமியில் நிலைபெறு தலே விரும்பினால் கீர்த்தியை ஸ்தாபிக்கக்கடவன் என்பது.

‡ ஒருகாலும் நிலையாமை - நிறைதலோதும் நிலைத்திராமை.

¶ ஈகையென்றமையின், கல்வி ஆண்மைமுதலியவற்றையுங்கொள்க.

பரி:—(இ - ள்.) மழை யில்லாமை வையத்து வாழும் உயிர்கட்கு எவ்வகைத் துன்பம் பயக்கும், அவ்வகைத் துன்பம் புயக்கும் அரசன் o தண்ணளி யில்லாமை அவனுடடு வாழுங் குடிகட்கு, (எ - று).

† நிறப்புப் பற்றித் தளியென்பது மழைமேனின்றது; ‡ உயிரென்பது குடிகண்மேனின்றது. மேல் ¶ 'வானேக்கி வாழும்" என்றதனை § எதிர்மறைமுகத்தாற் கூறியவாறு.

தெளி:—(இ - ள்.) வேந்தன் - அரசனது, அளியின்மை - அருளில்லாமையானது, வாழும் - (அவனுட்டில்) வாழும், உயிர்க்கு - குடிகளுக்கு, தளியின்மை - மழை இல்லாமையானது, ஞாலத்திற்கு - பூமியில் வாழுமுயிர்களுக்கு, ஏற்ற - எவ்வகைத் துன்பந்தருமோ, அற்று - அவ்வகைத் துன்பந் தரும், (எ - று).

தளியென்பது நிறப்புப்பற்றி மழைமேல் நின்றது; உயிரென்பது குடிகள்மேல் நின்றது. முன் 'வானேக்கி வாழும்' என்றதனை எதிர்மறை முகத்தாற் சொல்லியபடியாம்.

(க - து.) உயிர்களுக்கு மழை பெய்யாமைபால் எவ்வளவு துன்பமுண்டாகுமோ அவ்வளவுதுன்பம் அருளில்லாத அரசன் கீழ் வாழுங் குடிகளுக்குண்டாம் என்பது.

7. As is the world without rain, so live a people whose king is without kindness.

அ. இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

பரி:—(இ - ள்.) முறைசெய்யாத அரசனது கொடுங்கோலின் கீழ் வாழின், யாவர்க்கும் பொருளானதுஇன்மையினும் () உடைமை இன்னாது.

[] தனக்குரிய பொருளோடமையாத மேலும் வெஃகுவோனதுகாட்சி††வகுத்தோவ யாப்புண்டல் * முதலிய வருவது பொருளுடையார்க்கே

o தண்ணளி - பெருங்கருணை.

† பல பொருள் குறித்த தளியென்னுஞ் சிறிசொல் ஞாலத்திற்கு என்ற சிறப்பால் மழையை யுணர்த்தி நின்றது. பால்தளி, நெய்தளி என்பவும் பிரயோகமுமிக்குக் கவனிக்கத் தக்கதாம்.

‡ உயிரென்றது அதிகாரம் நோக்கி அரசனது ஆறங்கங்களுள் ஒன்றாகிய நாட்டில் வாழும் குடிகளை யுணர்த்தி நின்றது.

¶ செங்கோன்மை - உ.. § எதிர் மறை - துரியின்மை, அளியின்மை யென்பன. () உடைமை - பொருளை யுடைத்தாயிருத்தல்.

[] தனக்குரிய பொருளோடமையாதி-ருமுதலிய நூல்களில் தனக்கு விதித்துள்ள ஆறிலொருபங்குப் பொருளாயி னிருப்பினுமையாமல்.

†† வகுத்தோவ யாப்புண்டல்-கைகள் வருந்துமாறு கட்டப்படுதல்.

* முதலிய என்றமையின், அடித்தல், குத்தல், உதைத்தல், சிறைச்சாலையி லடைத்தல் முதலியவற்றையுங் கொள்க.

யாகலின், * அவ்வுடைமை இன்மையினும் இன்னாதாயிற்று. இவை யிரண்டு பாட்டாலும் அவனுட்டு வாழ்வார்க்கு வருங் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) முறை செய்யா - முறையைச் செய்யாத, மன்னவன் - அரசனது, கோற் கீழ் - கொடுங்கோலின் கீழ், படின் - வாழின், (பாவர்க்கும்), இன்மையின் - (பொருளினது) இல்லாமையினும், உடைமை - (பொருள்) உடைமையானது, இன்னாது-பெருந்துக்கம் தருவதாம்.

தனக்குரிய பொருளோடு அமையாது மேலும் (பொருளை) வீரும்பு மரசனது காட்டில் கைக்கோவக் கண்ணிண்டல் முதலாயின வருவது பொருளுடையார்க்கே துதவால், அவ்வுடைமை இல்லாமையினும் துன்பந்தருவ தாயிற்று. இவை இரண்டு பாட்டாலும் அவனுட்டில் வாழ்வார்க்கு வருங் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து.) நீதிதப்பிய அரசன்கீழ் வாழுஞ்செல்வர்க்குண்டா குந்துன்பம் வறுமையாலுண்டாகுந் துன்பத்திலுங் கொடியதாம்.

8. Property gives more sorrow than poverty, to those who live under the sceptre of a king without justice.

கூ. † முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
பொல்லாது வானம் பெயல்.

பரி:—(இ - ள்.) மன்னவன் தான் செய்யும் பொருளை ‡ முறைதப் பச் செய்யுமாயின், அவனுடைப் ¶ பருவமழை இன்றும்வகை மேகம் பொழிதலைச் செய்யாது, (எ - று).

o இரண்டிடத்தும் கோட வென்பன திரிந்து நின்றன. உறைகோ

* அவ்வுடைமை இன்மையினும் இன்னாதாயிற்று- அப்பொருளுடைமை தரித்திரத்திலுங் கொடியதாயிற்று.

† "கோணிலை திரிந்திடிற் கோணிலை திரியும், கோணிலை திரிந்திடின் மாரிவறந் கூரும், மாரிவறங் கூரின் மன்னுயிரில்லை" என்ற மணிமேகலை கூறியதும், "கோணிலை திரிந்த தாழி குறைபடப் பகல்கண் மிஞ்சி, நீணில மாரியின்றி விளைவஃஞ்சிப் பசியு நீடிப், பூண்முலை மகளிர் பொற்பிற் கற்பழித் தறந்கண் மாறி, யாணையில் வுலகு கேடா மரசுகோல் கோடி னென்னுஞ்" என்ற சேவகிந்தாமணி கூறுவது மிங்கறியத் தக்கனவாம். ‡ முறைதப்ப - நீதிகெட.

¶ பருவமழை - பெய்யவேண்டிய காலத்தில் பெய்யுமழை.

o முறைகோடி உறைகோடி என்னு மிரண்டிடத்து முள்ள கோடி யென்பன வேறு வினைமுதலின் வினையைக்கொண்டு முடிதற்கு விதியில் லாமையின், 'இரண்டிடத்தும் கோடவென்பன (கோடியெனத்) திரிந்து நின்றன' என்று கூறப்பட்டது. இந்து வேறு வினைமுதலின் வினை செய்யின் என்பதும் ஒல்லாது என்பதுமாம். "அவற்றுள்-முதலி னொடு மீற்றின் மூன்றும், வினைமுதல் கொள்ளும் பிறவுமேற் றும்மே" "சொற்றிரியினும் பொருடிரியா வினைக்குறை" என்னும் நன்னூற் சூத்திரங்கள் இங்குக் கவனிக்கத் தக்கனவாம்.

தேவதை பெய்யுங்காலத்துப் பெய்யாமை. அதற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப.

தேவி:—(இ - ள்.) மன்னவன் - அரசன், (தான் சம்பாதிக்கும் பொருளை), முறைகோடி-முறை தப்ப, செய்யின்-சம்பாதிப்பானாயின், (அவனது நாட்டில்), உறை - பருவமழையானது, கோடி - இல்லாமற் போம்படி, வானம் - மேகமானது, பெயல் - பொழிதலை, ஒல்லாது - பொருந்தாது, (செய்யாது), (எ-று).

இரண்டிடத்திலுங் கோட என்பன கோடியெனத் திரிந்துநின்றன. பருவமழை கோதலாவது பெய்யவேண்டுங்காலத்தில் பெய்யாதொழிதல். பருவமழையில்லாமைக்குக்காரணம் வருகின்ற பாட்டாற்சொல்லுவார்.

(க - து.) நீதிதப்பிய அரசனது நாட்டில் பருவமழை பெய்வதில்லை என்பது.

9. If the king acts contrary to justice, rain will become unseasonable, and the heavens will withhold their showers.

கo. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
* காவலன் காவா னெனின்.

பரி:—(இ - ள்.) காத்தற்குரிய அரசன்உயிர்களைக் காவான்ஆயின் அறனில்லாத அவருட்டுப் பசுக்களும் பால்குன்றும், அந்தணரும் நூல்களை மறந்து விடுவர், (எ - று).

ஆபயன் - ஆவாற் கொள்ளும் † பயன். அறுதொழிலாவன:—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ‡ ஈதல், ¶ ஏற்றல் என இவை. பசுக்கள் பால் குன்றிய வழி 0 அவியின்மையானும், $ அது கொடுத்தற்குரியார் ‡‡ மந்திரம் () கற்பமென்ப ஓதாமையானும் [] வேள்வி நடவாதாம்; ஆக

---

* காவலன் - காவலை யுடையவன். இது காரண விடுகுறிப் பெயராய் அரசனை யுணர்த்தி நின்றது.

† பயன் - பால். ‡ ஈதல் - கொடுத்தல். ¶ ஏற்றல் - வாங்குதல்.

0 அவி - செய் முதலிய தேவருணவு $ அது - அவி.

‡‡ "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப" என்பது தொல்காப்பியம்

() கற்பம் வேதாங்கமாறனுள் ஒன்று; இது வேதத்தில் விதித்துள்ள வேள்வி முதலியவற்றை நடத்தும் வகையைக் கூறும். போதாயநீயம், பாரத்வாசம், ஆபத்தம்பம் முதலிய நூல்கள் கற்பமாம்.

[] "தேவர்க்கோ கோத்ரியக்கினியிற செய்யுமோம (யாக)ங்கள் சூரியனையடைகின்றன; அசுரரிடத்தினின்றும் மழை யுண்டாகின்றது; அதனால் தானியங்கள் முண்டாகின்றன; அவற்றால் ஜீவகோடிகள் விருத்தியடைகின்றன வென்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது" என்று


வே, † வானம் பெயலொல்லா தென்பதாயிற்று. இவை இரண்டு பாட்டானும் அவனுட்டின்கண் நிகழுங் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) காவலன் - காப்பாற்றற்குரிய அரசன், காவானெனின் - (உயிர்களைக்) காப்பாற்றானாயின், (தருமமில்லாத அவனது நாட்டில்), ஆ - பசுக்களும், பயன் குன்றும் - பால் (தருவது) சுருங்கும், அறு தொழிலோர் - அந்தணரும், நூல் - நூல்களை, மறப்பர் - மறந்திவிடுவார்.

ஆபயன் - ஆவினின்றும் கொள்ளும் பயன். (அந்தணர்க்குரிய) அறு தொழிலாவன:—வேதமோதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்பன. பசுக்கள் பால் கறவாது குன்றியவிடத்து அவிர்ப்பாகமில்லாமையாலும், அது கொடுத்தற்குரிய அந்தணர் மந்திரம் கற்ப மென்பனவற்றை யோதாமையாலும், யாகம் நடவாதாம்; நடவாதாகவே, மேகம் மழை பொழிதலைச் செப்பாதென்பதாயிற்று. இவை இரண்டுபாட்டானும் அவன் நாட்டினிடத்து உண்டாகுங் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து.) உயிர்களைக் காப்பாற்றாத அரசனது நாட்டில் பசுக்களிடத்தும் அந்தணரிடத்தும்பிறத்தற்கபயன் குறைந்துபோம்.

10. If the guardian of the country neglects to guard it the produce of the cows will fail, and the men of six duties will forget the Vedas.



பத்தோன்பதாம் அதிகாரம்.

வெருவந்த செய்யாமை:—

Against acting with a reign of terror.

பரி:—அஞ்சாவது குடிகள் அஞ்சுவதும், பதறி அஞ்சுவதும், தானஞ்சுவதும் பூயதொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மைப்பாற் படுதலின், இஃது ‡ அதன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஞ்சாவது குடிகள் அஞ்சுவதும், பதறி (மற்றிரு முதலிய அங்கங்கள்) அஞ்சுவதும், தான் அஞ்சுவதும் ஆகிய தொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மையிற் சேர்தலால், இஃது (வெருவந்த செய்யாமை) அதன்பின் வைக்கப்பட்டது.

மறுதர்ம சாஸ்திரம் மூன்றுவ தத்தியாயத்திற் கூறுவதும்,'' பிரஹ்மா யக்ஞத்தோடுகூடிய ஜனங்களை யாதிகாலத்திற் சிருஷ்டித்து, இந்த யக்ஞத்தினாலே (நீங்கள்) விருத்தியடையுங்கள். இந்த யக்ஞ முக்கட்கு விரும்பிய போகத்தைத் தரக்கடவதாக வென்ற கூறினர்'' என்ற பகவத்கீதை மூன்றுவ தத்தியாயத்திற் கூறுவது மீண்டுணர்தற் பாலனவாம்.

† ''மழையின்றி மாகிலத்தார்க் கில்லை மழையும், தவமிலா ரில்வழி யில்லை தவமும், அரசிலா ரில்வழி யில்லை யரசனும், இல்வாழ்வா ரில்வழி யில்'' என்ற சான்மணிக் கடிகை கூறுவது மீண்டுரையத்தக்கதாம்.

‡ அதன்பின் - கொடுங்கோன்மையின்பின்.

க. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

பரி:—(இ - ள்.) ஒருவன் தன்னின் * மெலியார்மேற் சென்றவழி † அதனை நடுவாக நின்று ஆராய்ந்து பின்னும் அது செய்யாமற் பொருட்டு ‡ அவனை அக்குற்றத்திற்கோப்ப ஒறுப்பானே அரசனுவான். ()

¶ தக்காங்கு ஒத்தாங்கென்பன ஒருசொல். தகுதியென்பது நடுவுநிலைமையாதல் $ 'தகுதி யெனவொன்று கன்றே' என்பதனுனும் அறிக. இதனுனே தக்காங்கு நாடாமையும், பிறிதோர் காரணம்பற்றி மிகவொறுத்தலும், குடிகளஞ்சும் வினையாதல் பெற்றாம்.

தெளி:—(இ - ள்.) (ஒருவன் தன்னிலும் மெலியவன்மீது சென்ற விடத்து) தக்காங்கு-நடுவு நிலைமையாக, (கின்று),நாடி-(அதனை) ஆராய்ந்து, தலைச்செல்லாவண்ணத்தால் - (பின்னும்) அக்குற்றமான செயலைச் செய்யாமற்பொருட்டு, ஒத்தாங்கு - (அக்குற்றத்திற்கு) ஏற்ப, ஒறுப்பது - (அவனைத்) தண்டிப்பவனே, வேந்து - அரசனுவான், (எ - று).

தக்காங்கு ஒத்தாங்கு என்பன ஒருசொல். தகுதி - நடுவுநிலைமை. இதனுலே தக்காங்கு ஆராயாமையும் வேறொரு காரணம்பற்றி அதிகமாகத் தண்டித்தலும், குடிகள் அஞ்சுந்தொழிலாதல் பெற்றாம்.

(க - து) ஒருவனது குற்றத்தை நடுவுநிலைமையாக விருந்தாராய்ந்து, அவன்பின்னுங்குற்றஞ்செய்யாவாறு அவனை அக்குற்றத்திற்குத் தக்கவாறு தண்டிப்பவனே அரசனுவான் என்பது.

1. He is a king who having equitably examined any injustice which has been brought to his notice, suitably punishes it, so that it may not be again committed.

உ. கடிதோச்சி மெல்ல வெறிக வெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்.

* மெலியார் மேற்சென்றவழி - பலஹீனர்களிடத்துக் குற்றமான செயலைச்செய்தவிடத்து.

† அதனை - அக்குற்றமான செயலை. ‡ அவனை-குற்றஞ்செய்தவனை.

¶ தக்காங்கு ஒத்தாங்கு என்பன தொடர்மொழியாகாமல் ஒரு மொழியாய் நின்றன என்பது.

$ திருக்குறள் நடுவுநிலைமை, 1. இதன்பொருள்.நடுவுநிலைமை என்று சொல்லப்படும் ஓர்நூலுமே என்று என்பது. நடுவுநிலைமையாவது பகைவர் அயலார் சுற்றமென்னு மூவரிடத்தும் அறத்தினின்றும் வழுவாது ஒப்பநிற்கும் நிலைமையாம்.

பரி:—(இ-ள்.) அவ்வோத்தாங்து ஓறுத்தல் தோடங்குங்கால் அவ வீறப்பச் செய்வார்போற்றெடங்கி, செய்யுங்கால் அளவிறவாமற் செய்க, ஆக்கத் தங்கண் நேடுங்காலம் நீற்றலவேண்டுவார், (எ - று).

கடிதோச்சல் குற்றஞ்செய்வார் * அதனை யஞ்சுதற் பொருட்டும், மெல்லவெறிதல் யாவரும் வெருவாமைப்பொருட்டும் ஆம். தொடங்கின அளவிற்குறைதல்பற்றி மென்மைகூறப்பட்டது. † ஒச்சுதல் எறிதலென்பன இரண்டும் உவமைபற்றிவந்தன. இவையிரண்டு பாட்டானும் குடிகள் வெருவந்த செய்யாமையது இயல்பு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஆக்கம் - செல்வமாகாது, நெடிது - நெடுங்காலம், நீக்காமை - (தம்மிடத்து) நீக்காமையை. வேண்டுபவர் - விரும்புவோர், கடிதோச்சி - (அருந்தற்றிற் கேற்பத் தண்டஞ் செய்யத்தொடங்கும் போது) அளவு கடக்கச் செய்வார்போலத் தொடங்கி, மெல்லவெறிக - (செய்யும்போது) அளவுகடவாமற் செய்யக்கடவர், (எ - று).

கடிதோச்சல் குற்றஞ்செய்வார் அதனை அஞ்சுதற்பொருட்டும், மெல்ல வெறிதல் யாவரும் அஞ்சாமைப்பொருட்டும் ஆம். தண்டனை தொடங்கினவளவில் குறைதல்பற்றி 'மெல்ல' என அதற்குமென்மை கூறப்பட்டது. ஒச்சுதல் எறிதலென்னுமிரண்டும் கோலென்னும் உவமைபற்றி வந்தன. இவை இரண்டு பாட்டாலும் குடிகள் அஞ்சுவன வற்றைச் செய்யாமையினது இலக்கணஞ் சொல்லப்பட்டது.

(க - து.) ஒருவனை அவனது குற்றத்திற்குத்தக்கவாறு தண்டிக்கும்போது அத்தண்டனையைத் தொடக்கத்திற் பெரிதுபோற் காட்டி, முடிவில் எளிதாகச் செய்யும் அரசனிடத்துச் செல்வம் நிலைபெறும் என்பது.

2. Let the king, who desires that his prosperity may long remain with him, make enquiries with strictness, and then punish with mildness.

கூ. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல ஞயி
னெருவந்த மொல்லைக் கெடும்.

பரி:—(இ - ள்.) குடிகள் வெருவிய செயல்களைச்செய்து நடக்கும் வெங்கோலனுமாயின் அரசன் ஒருதலையாகக்கடிதிற் கெடும், (எ-று).

* அதனை - அத்தண்டனையை.

† (தண்டனை செய்யுமாறு போலே) ஒச்சுதல் (உயரத்தூக்குதல்) போலவும் எறிதல் (வீசுதல்) போலவும் இருத்தல்பற்றி "ஒச்சுதல் எறிதல் என்பன இரண்டும் உவமைபற்றி வந்தன" என்று கூறப்பட்டது.

* 'வெங்கோலன்' என்பது ஈண்டு † வாளா பெயராய்நின்றது. ஒருவந்தம், ஒருதலை, நிகாந்தம் என்பன ஒருபொருட்கிளவி.‡ அச்செயல்களுந் ¶ கேடுகளும் முன்னர்க் கூறப்படும்.

நேளி:—(இ - ன்.) (அரசன்) வெருவந்த - (குடிகள்) அஞ்சிய செயல்களோ, செய்தொழுகும் - செய்து நடக்கும், வெங்கோலனுயின் - கொடுங்கோலனுயிருந்தால், ஒருவந்தம் - நிச்சயமாக, ஒல்லை - கடிதில், கெடும் - கெடுவான், (எ - று).

'வெங்கோலன்' என்பது இங்கு வாளா பெயராய் நின்றது. ஒருவந்தம், ஒருதலை, நிகாந்தமென்பன (நிச்சயமென) ஒரு பொருணர்த்துஞ் சொற்கள். அச்செயல்களும் கேடுகளும் பின்னே சொல்லப்படும.

(க - து.) குடிகள் அஞ்சத்தக்க காரியங்களைச் செய்துவரும் அரசன் விரைவில் கெடுவான் என்பது.

3. The cruel-sceptred king, who acts so as to put his subjects in fear, will certainly and quickly, come to ruin.



ச. இறைகடிய னென்றுரைக்கு மின்னுச்சொல் வேந்த
னுறைகடுகி யோல்லைக் கெடும்.

பரி:—(இ - ன்.) குடிகளான் நம்மிறைவன் கடியனென்று சொல்லப்படும் இன்னுத சொல்லையுடைய வேந்தன் ஆயுளுந்துறைந்து செல்வமுங் $ கடிதின் இழக்கும், (எ - று).

செஞ்சுரொதது சொல்லுதலான், இன்னுமை பயப்பதாய சொல்லை

* வெருவந்தசெய்தொழுகும் வெங்கோலன் என்பதன்கண் வெருவந்த செய்தொழுகும் என்னும் அடை {விசேஷணம்) கொடுங்கோன்மையைக் குறித்தலாலே வெங்கோலன் என்பது யாதொரு விசேடமு மூணர்த்தாது அரசன் என்னும் பெயர் மாத்திரமாய் நின்றது. "பெயர்நிலைக் கிளவியு மஃகுவும்" என்னுந்தொல்காப்பியம் சொல்லதிகாரம் எச்சவியற் சூத்திரவுரையில் நச்சினர்க்கினியார் "ஒன்வான் - கறையடி யானைக் கல்ல, நிறைகழிப் பறியா வேலோ னூரே" என்புழிவேலோனென்பது வேலை யுடையோனென்னும் பொருள் பெயர்த்து ஒருபெயர்த்தன்மையாய் நின்றது. 'செழுந்தா மரையன்ன வாட்கண்' என்பதூஉம் அது" என்று வரைந்திருப்பது மிகுணர்தற் பாலதாம்.

† வாளா - சும்மா.

‡ அச்செயல்களும் - குடிகள் அஞ்சத்தக்க செயல்களும். ¶ கேடுகள் - குடிகளஞ்சத்தக்க செயல்களைச் செய்பவனுக்குண்டாகுங் கெடுதிகள்.

§ கடிதின் - விரைவில்.

'இன்னுச்சொல்' என்றார். * உறையென்பது முதனிலைத்தொழிற் பெயர். அஃது ஈண்டு † ஆகுபெயராய் உறைதலைச்செய்யும் நாண்மேனின்றது. ‡ அது குறைதலாவது அச்சொல்லில்லாதார்க்கு உள்ளதிற் சுருங்குதல்.

தெவி:—(இ - ன்.) இறை - (கம்) அரசனுவன், கடியனென்று - பொல்லாதவனென்று, உலகும் - (குடிகளால்) சொல்லப்படுகிற, இன்னுச் சொல் - துன்பந்தருஞ் சொல்லையுடைய, வேந்தன் - அரசன், உறை கடுகி - ஆயுளுங்குறைந்து, ஒல்லைக்கெடும் - (செல்வமும்) கடிதினிழப் பான், (எ - று).

(குடிகள்) மனம் வருந்திச் சொல்லுதலால், இன்னுமையை (துன்பத் தை) த்தருவதாயசொல்லை 'இன்னுச்சொல்' என்றார். உறையென்பது முத னிலைத் தொழிற்பெயர். அஃது இங்கு ஆகுபெயராய் உறைதலைச்செய்யும் நாளின்மேல் நின்றது. அது குறைதலாவது அச்சொல்லில்லாதவர்க்கு உள் ளவளவில் குறைதல்.

(க - து.) குடிகளால் கொடியவனென்று சொல்லப்படுமரசன் ஆயுளுங்குறைந்துசெல்வத்தையும் விரைவிலிழப் பான் என்பது.

4. The life of that king who is spoken of by his subjects as cruel will be shortened, and he will lose his wealth quickly.

நி. அருஞ்செவ்வி யின்னு முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

பரி:—(இ - ள்.) தன்னைக் காணவேண்டுவார்க்குக், ¶ காலம் அரி யனுயிக் கண்டால் ‖ இன்னுத முகத்தினையுடையானது பெரியசெல்வம் பேயாற் காணப்பட்டாற் போல்வதொரு தன்மம் உடைத்து, (எ - று).

* உறையென்னும் பகுதி (மூதனிலை) உறைதல் (இருத்தல்) என் னுந் தொழிலை புணர்த்திதலால் முதனிலைத்தொழிற்பெயராயிற்று. பகுதி யளவாய் நின்ற தொழிற் பெயர்ப்பொருளை புணர்த்துவது முதனிலைத் தொழிற் பெயரெனப்படும்.

† உறை யென்னும் முதனிலைத் தொழிற்பெயர் உறை (வசித்) தலைச்செய்யும் நாளை (ஆயுளை) புணர்த்தினமையின், முதனிலைத்தொழி லாகுபெயராம்.

‡ அது (உறைதலைச்செய்யும் நாள்) குறைதலாவது அச்சொல்லில்லா தார்க்கு (பொல்லாதவனென்னுஞ் சொல்லில்லாத அரசர்களுக்கு) உள்ள நிற் சுருங்கல் (உள்ள ஆயுள்நாளில் குறைதல்). பொல்லாதவனென்று குடி களால் சொல்லப்படுகின்ற அரசன் விரைவிற் கெடுவனென்பது நிரண்ட பொருளாம்.

¶ காலம் - காணுஞ்சமயம்.

‖ இன்னுதமுகத்தினையுடையானது - வெறுப்பைக்காட்டுகின்ற முக த்தையுடைய அரசனது.

எனவே, * இவை யிரண்டும் வெருவந்த செய்தலாயின. † இவை செய்வானைச் சார்வார் இன்மையின், ‡ அவனது செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன் படாதென்பதுபற்றிப் 'பேயக்கண் டன்ன தடைத்தி' என்றார். காணுதல் - தன்வயமாக்குதல்.

தேவி:—(இ. ன்.) அருஞ்செல்வி - (தன்னைக்காணவேண்டி வார்க்கு) அரிதாகிய சமயத்தை, (உடையனும்), இன்னுமுகத்தான் - (கண்டால்) இனிமையில்லாத முகத்தினையுடையவனது, பெருஞ்செல்வம் - பெரிய செல்வமானது, பேய் - பேயால், கண்டன்னது - காணப்பட்டாற் போல்வதொரு குற்றத்தை, உடைத்து - உடையதாம், (எ - று).

எனவே, இவை இரண்டும் அஞ்சுவனவற்றைச் செய்தலாயின. இவை செய்வானைச் சார்வாரில்லாமையால், அவனதுசெல்வம் தனக்கும் பிறர்க்கும்பயன்படாதென்பதுபற்றிப் 'பேயக்கண் டன்ன தடைத்தி' என்றார். காணுதல் - (பேய் பெருஞ்செல்வத்தைத்) தன்வசமாக்குதல்.

(க - து.) குடிகள் தன்னைக் காண்பதற்குச் சமயங் கொடாதவனையும், கண்டால் கடுகடுத்த முகத்தையுடையவனுடைய முள்ள அரசனது செல்வம் பேய்கண்ட செல்வம்போலப் பயன்படாதொழியும் என்பது.

5. The great wealth of him who is difficult of access and stern of countenance, is like that which a devil has obtained.

கூ. கடுஞ்சொல்லன் கண்ணில னுயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

பரி:—(இ - ள்.) அரசன் கடியசொல்லையும் உடையனுய்க் கண்ணோட்டமும் இலனுமாயின், அவனது பெரியசெல்வம் நீடுதலின்றி அப்பொழுதே கெடும், (எ - று).

¶ "வேட்டங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதுபொரு, ளீட்டக்கட் காமமோ டேழு" எனப்பட்ட வினங்களுட் கடுஞ்சொல்லையும் மிகுதண்

* இவையிரண்டும் - அருஞ்செல்வியும் இன்னுமுகமும்.

† இவைசெய்வானை - அருஞ்செல்வியும் இன்னுமுகமுமாயிருக்கின்றவனை.

‡ பொன்காக்கும் பூதம் அப்பொன்னைத் தானுமனுபவியாது பிறர்க்குங்கொடாதது போன்ற அருஞ்செல்வியும் இன்னுமுகமுமுடையவரசன் பெருஞ் செல்வத்தைத் தானும் அனுபவியாது பிறர்க்குங் கொடாது வீணே பொழிவான் என்பதாம்.

¶ இதன்பொருள். வேட்டையாடுதல், கடுஞ்சொற்களைச் சொல்லுதல், அளவுகடந்த தண்டனைசெய்தல், சூதாடுதல், (அரியபாடாற்பிறர்) பொரு

டத்தையும் இவர் இவ்வெருவர்த செய்தலுள் அடக்கினுர். * கண்-ஆருபெயர். † இவை செய்தபொழுதே கெடுஞ்செல்வம் என்றார். நீதேல் - நீட்டித்தல்.

தெளி:—(இ - ன்.) (அரசன்) கடுஞ்சொல்லன் - கடியசொல்லையும் உடையவனும், கண்ணிலனுயின் - கண்ணேட்டமு மில்லாதவனுயின், கெடுஞ்செல்வம் - (அவனது) பெரியசெல்வமானது, நீடின்றி - நீடுதலில்லாமல், ஆங்கே - அப்பொழுதே, கெடும் - அழியும், (எ - று).

"வேட்டல் கடுஞ்சொல் மிகுதண்டஞ் சூதுபொரு, ளீட்டல்கட் காம மோடேழு" எனப்பட்ட சப்த விசனங்களுள் கடுஞ்சொல்லையும் மிகுதண்டத்தையும் இவர் இவ்வெருவர்தசெய்தலுள் அடக்கிக் 'கடுஞ்சொல்லன் கண்ணிலனுயின்' என்றருளினர். கண் - கருவியாகு பெயர். இவை செய்த பொழுதே கெடுஞ்சிறமைய தன்முயினுமென்பார் 'கெடுஞ்செல்வம்' என்றார். நீதேல் - நீடித்திருத்தல்.

(க - து.) கடுஞ்சொல்லையும் இரக்கமின்மையையுமுடைய அரசனது செல்வம் விரைவிலழியும் என்பது.

6. The abundant wealth of the king whose words are harsh and whose looks are without kindness, instead of abiding with him, will instantly perish.

எ. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

பரி:—(இ - ள்.) கடியசொல்லும் தும்பத்தின்மிக்கதண்டமும் அரசனது பகை வெல்லுதற்கேற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அராமம், (எ - று).

‡ கடுமொழியால் தானேயும் கையிகந்ததண்டத்தால் தேசமும் கெட்டு ¶ முரண் சுருங்கி வருதலின் ‖ அவற்றை அராமாகி, நிண்ணிதாயினுர் னேச்சம்பாதித்தல், கள்ளுண்டல், காமதருகுதல் என (விசனங்கள்) ஏழாம் என்பது.

* கண் என்பது கண்ணேட்டத்தை (தாட்சண்ணியத்தை)புணர்த்தி தலால் கருவியாகு பெயராம். (ஒட்டம்-கண்ணினது காரியம்).

† இவை - கடுஞ்சொல்லும் மிகுதண்டமும்.

‡ கடுமொழியால் சேனையும் கையிகந்த தண்டத்தால் குடிகளும் மனமுடைந்து அரசனிடத் தன்பில்லாதபோவர்; அதனுல் அவனுக்கண்மை சுருங்கி வருமென்பதாம்.

¶ முரண் - வலிமை. ‖ அவற்றை - கடுமொழியையும் கையிகந்த தண்டத்தையும்.

தேயுமென்றற்கு அடுமுரணே இரும்பாக்கினர். எதேசவருவகம். * அரமென்பதனைத் தனித்தனி கூட்டுக. இவை ஐந்தபாட்டானும் செல்லியின்மை, இன்னுமுகமுடைமை, கண்ணோட்டமின்மை, கடுஞ்சொற் சொல்லல், கையிகந்த தண்டமென்றிவைகள் குடிகளஞ்சும் வினையென்பதனாலும், இவை செய்தான் ஆளுஞ் அடுமுரணுஞ் செல்வமும் இழக்கு மென்பதனாலும் கூறப்பட்டன.

தேவி:—(இ - ன்.) கடுமொழியும் - கடியசொல்லும், கையிகந்ததண்டமும் - (குற்றத்தின்) மிகுந்ததண்டமும், வேந்தன் - அரசனது, அடும் - (பகைவரை) வெல்லுதற்கு ஏற்ற, முரண் - மாறுபாடாகிய (இரும்பினை), தேய்க்கும்-தேயச்செய்யும், அரம் - அரமாம், (எ - று).

கடிய சொல்லாற் சேனையும் அளவுகடந்த தண்டத்தால் தேசமும் கெட்டு மாறுபாடு கருவிவருதலால் அவ்விரண்டையும் அரமாக்கி, வலிய தானுலும் தேயும் என்பதற்கு அடுமுரணே இரும்பாக்கிக் கூறினர். கடுமொழியையும் கையிகந்த தண்டத்தையும் அரமாகவுருவகஞ்செய்தவர் அதற்கேற்ப அடுமுரணே இரும்பாக வுருவகஞ் செய்யாமையினுல் இஃதுவதேசவுருவகவணியாம். அரமென்பதனைக் கடுமொழி யென்பதனோடும் கையிகந்த தண்டமென்பதனோடும் தனித்தனிகூட்டிக் கடுமொழியாகிய அரமும் கையிகந்த தண்டமாகிய அரமும் என்றுரைத்துக் கொள்க. இவை ஐந்தபாட்டானும் சமயமில்லாமை, இன்னுமுகமுடைமை, கண்ணோட்டமில்லாமை, கடுஞ்சொற்சொல்லல், அளவுகடந்ததண்டம் என்ற இவைகள் குடிகள் அஞ்சுந் தொழில்களென்பதும், இவற்றைச் செய்யுமரசன் ஆளுஞ்பகைவரைவெல்லும் வல்லமையும் செல்வமும் இழப்பானென்பதும் சொல்லப்பட்டன.

(க - து.) கடியசொல்லும் அளவுகடந்த தண்டனையும் அரசனது வலிமையை யழிக்கும் என்பது.

7. Severe words and excessive punishments will be a file to waste away a king's power for destroying his enemies.

அ. இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு.

* "ஆக்கும் பிரதிபதத்தடனே" என்னுஞ்செய்யுளின் வீசேடவுரையில் பிரயோக விவேகத்துலார் 'கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்த, னடுமுரண் டேய்க்கு மரம்' என்புழி அரமென்னும் ஒருமைப் பெயரை வாக்கிய பேதமாகத் தனித்தனிகூட்டி முடிப்பதனைத் தேர்வட மிழுப் பார்போலப் பிரத்தியேக பதார்த்தவயமென்பார். இதனுள் தாராதத்தவயத்துளடக்கிக்கொள்க" என்று கூறினானர். "ஒருசொன் னின்றே தனித்தனி யுதவுதல்" என்னும் (இலக்கணச்சொரூத்து) லிதியால் அரம் என்னும் ஒரு

பரி:—(இ - ள்) காரியத்தைப்பற்றி வந்த எண்ணத்தை அமைச்சர்மேல் வைத்து அவரோடு தானும் எண்ணிச்செய்யாத அரசன் அப் () பிழைப்பாற் றன்காரியந் தப்பியவழித் தன்னைச் சினமாகிய குற்றத் தின் கண்ணே செலுத்தி * அவரை வேதனுமாயின் அவன் செல்வம் நா டோறுஞ் சுருங்கும், (எ - று).

அரசர்பாரம் பொறுத்தற்றலொப்புமையான் அமைச்சரை † இனம் என்றும், ‡ தான் பின் பிழைப்பாதலறிந்த அமையாத அதனை அவர்மேல் ஏற்றிவெகுளின் அவர் வெரீஇ நீங்குவர்; நீங்கவே, அப்பிழைப்புத் தீரு மாறும் அப்பாரம் இனிதுய்க்குமாறும் இலனுமென்பது சோக்கித் திருச் றெருங் என்றுங் கூறினர். இதனுற் ¶ பகுதியுஞ்சும் வினையும், அதுசெய் தான் எய்துங்குற்றமுங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ன்.) (காரியத்தைப்பற்றி வந்தவெண்ணத்தை) இனத் தாற்றி-மந்திரிகள் மேல் வைத்து, எண்ணுச-(அவரோடு தானும்) எண்ணிச் செய்யாத, வேந்தன்-அரசன், (அப்பிழைப்பினல் தன்காரியந் தப்பியவிட த்து), னெத்தாற்றி - (தன்னைக்) கோபமாகிய குற்றத்திலே செலுத்தி, சிறின் - (அவரைக்) கோபிப்பானுயின், திரு - (அவனது) செல்வமானது, றெருங் - (நாடோறும்) சுருங்கும், (எ-று).

இராச்பெயபாரத்தைத் தாங்கிச்செலுத்துதற லொப்புமையால் மந்திரி களை இனம் என்றும், தான் பின்பு தவறிப்போயதையறிந்த அடங்காதஅத் தவறிப் போயதை அவர் மேல் ஏற்றிக் கோபித்தால் அவர் அஞ்சி நீங்குவர்; நீங்கவே, அத்தவற நீரும்விதமும் அவ்விராச்சிய பாரத்தை இனிது செலுத்தும்விதமும் இலனுமென்பது சோக்கித் திருச்சிறுகும் என்றும் சொல்லினர். இதனுல் மந்திரிகளாகிய பகுதி யஞ்சுஞ் தொழிலும், அது செய்தான் அடையுங் குற்றமுஞ் சொல்லப்பட்டன.

(க - து.) மந்திரிகளுடன் ஆலோசியாது தான் செய்த காரி யம் தவறியபோது அவர்களைக் கோபித்தல் அரசனது செல்வம் நாளுக்கு நாள் குறைந்துபோம் என்பது.

மைப்பெயர் கடுமொழி யென்பதனேடும் கையிகந்த தண்டமென்பத னேடும் தனித்தனி பிரித்து கூடெதலறிக.


() பிழைப்பு - தவறு.

* அவரை - அமைச்சரை. † இனம் - தன் சாதியாயுள்ளவர்.

‡ தான் (அரசனுகிய தான்) பின் பிழைப்பாதல் (தவறிப்போயதை) அறிந்த அமையாத (அடங்கி நிராமல்) அதனை (அத்தவறிப்போயதை) அவர் மேல் ஏற்றி (அமைச்சர்மேல் வைத்து) வெகுளின் (கோபித்தால்) அவர் (அமைச்சர்) வெரீஇ (அஞ்சி) நீங்குவர் என்பது.

¶ பகுதி - இராஜ காரியஞ் செய்வார் கூட்டம்.

8. The prosperity of that king will waste away, who without reflecting on his affairs himself, commits them to his ministers, and when a failure occurs gives way to anger and rages against them.



கூ. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

பரி:—(இ - ள்.) *செரு வருதற்குமுன்னே தனக்குப் * புகலாவ தோர் அரண் செய்துகொள்ளாத அரசன், அது வந்தகாலத்து ஏமமின்மை யான் வெருவிக் கடிதிற்கெடும், (எ - று).*


† பகையை வெருவிச் சேர்ந்தார் நீங்குதலின் தானுமஞ்சித் தானும் வெருவி அப்பகை வயத்தனுமென்பதாம். இதனால் ‡ தானஞ்சும் வினையும் () அது செய்தானெய்தும் பயனும் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்) *சிறைசெய்யா - (போர் வருதற்கு முன்னே தனக் குக் காப்பிடமாவதோர்) அரண் செய்துகொள்ளாத, வேந்தன் - அரசன், செருவந்த போழ்தில - அப்போர்வந்த காலத்தில், வெருவந்தி - (காவல் இல்லாமையால்) அஞ்சி, () வெப்தி-மிகையில், வெய்து கெடும்-கெடுவான், (எ-று).*

(செருவந்தபோழ்திற் சிறைசெய்யா வேந்தன்) பகைவர்க் கஞ்சித் தன் னோடு சேர்ந்தவர் நீங்குதலால் தானியானுமஞ்சி தானும் அஞ்சி அப்பகைவர் வசத்தனுவனென்பதாம். இதனால் தான் அஞ்சும் செயலும் அது செய் தான் அடையும் பயனுஞ் சொல்லப்பட்டன.

(க - து.) *தனக்குக் காவலாக வோரரண்செய்துகொள்ளாத அரசன் பகைவரெதிர்த்தகாலத்தில் விரைவிற்கெடுவான் என்பது.*

9. The king who has not provided a place of defence for himself, will in times of war be seized with fear and quickly perish.



கo. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

** புகலாவதோர் அரண் - பாதுகாப்பாயுள்ள தொருகோட்டை.*

*† பகைவர்க்குப் பயந்து தன்னோடு சேர்ந்தவர் நீங்கிப்போதலால் தனித்தவனுமஞ்சி தானும் *(அரசனும்) பயந்து அப்பகைவர் வசத்தனுவ னென்பதாம்.*

‡ தானஞ்சும் வினை - செருவந்தபோழ்திற் சிறைசெய்யாமை. அது செய்தானெய்தும் பயன் - வெருவந்து வெய்து கெடுதல்.

() அது - அஞ்சத்தக்க காரியம்.

பரி:—(இ - ன்.) கடுங்கோலனைய அரசன் நீதிநூல் * முதலிய கல்லாதாரைத் தனக்குப் † பகுதியாகக் கூட்டாகிற்கும், ‡ அக்கூட்டம் அல்லது நிலத்திற்கு ¶ மிகையாய பாரம் பிறிதில்லை, (எ - று).

() 'கடுங்கோல்' என்பது ஈண்டுமிக்கதண்டத்தின்மேற்றன்றிஅதனைச் செய்வான்மேற் குயிற்று. + அவன் அது செய்தற் கியைவாரை யல்லது கூட்டாமையின் 'கல்லார்ப்பிணிக்கும்' என்றும், †† ஏனையவற்றை யெல்லாம் பொறுக்கின்றது இயல்பாகலின் நிலக்குப் பொறை அதுவல்லதில்லை என்றல் கூறினர். நிலக்கென்பது செய்புள் விகாரம். இதனால் வெருவத்தக செய்தலின் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) கடுங்கோல் - கடுங்கோலனைய அரசன், கல்லார்-(நீதிநூல் முதலியவற்றைக்) கல்லாதவரை, பிணிக்கும் - (தனக்குப் பகுதியாகக்) கூட்டாகிற்பான், அதுவல்லது - அக்கூட்டமல்லாமல், நிலத்து - நிலத்திற்கு, பொறை-அதிகமான பாரம், இல்லை-(வேறு) இல்லை,(எ-று).

'கடுங்கோல்' என்பது இந்த அதிக தண்டனையின்மேல்நில்லாது அவ்வதிக தண்டனையைச் செய்யும் அரசன் மேல் நின்றது. அவன் அது செய்தற்குடன்படுவாரை யல்லது கூட்டாமையால் 'கல்லார்ப் பிணிக்கும்' என்றும், மற்றையவற்றை யெல்லாம் சுமக்கின்றது (நிலத்திற்கு) இயல்பாலால் நிலக்குப்பொறை அதுவல்ல நில்லை என்றுஞ் சொல்லினர். நிலத்திற்கென்பது செய்யுள் விகாரத்தால் நிலக்கு எனவந்தது. இதனால் அஞ்சுவனவற்றைச் செய்தலின் குற்றஞ் சொல்லப்பட்டது.

---

* முதலிய என்றமையின், அறநூல் பொருணூல்களையுங் கொள்க.

† பகுதி - அங்கம்.

‡ அக்கூட்டம் அல்லது - கல்லாதவர்களின் கூட்ட மல்லாமல்.

¶ மிகையாய பாரம் - அதிகமான பளுவு.

() கடுங்கோலை (அரசினை) யுடைய வரசனைக் கடுங்கோல் என்ற கூறியது குணங் குணியாய உபசாரவழக்காம்; பண்பாகுபெயருமாம்.

+ அவன் (கடுந்தண்டனை செய்யுமரசன்) அது (கடுந்தண்டனை) செய்தற் கியைவாரை யல்லது (செய்வதற்குச் சம்மதித்திருப்பவரை யல்லாமல்) கூட்டாமையின் (சேர்க்காமையினால்).

†† "அறனெஞ்சி யாற்றுங்கொல் வையம் புறனேக்கிப், புன்சொலுரைப்பான் பொறை" என்னும் குறளின் விசேடவுரையில் "எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற் கரிதென்னுங் கருத்தால் 'அறனெஞ்சி யாற்றுங் கொல்' என்றார்" என்றிருத்தலு மிங்குக் கவனிக்கத்தக்கதாம். ஏனையவற்றை யென்றது மலை சூறு கடல் முதலிய

(க - து.) கடுங்கோலரசன் நீதிநூல் முதலியவற்றைக் கல்லாதவர்களைத் தனக்குப் பகுதியாகச் சேர்த்துக்கொண்டு குடிகளை வருத்துவான் என்பது.

10. The earth bears up no greater burden than a cruel sceptre which attaches to itself ignorant men as the ministers of its evil deeds.



இருபதாம் அதிகாரம்.

கண்ணேட்டம்:—On a Gracious Demeanour.

பரி:—அஃதாவது தன்னெடு பயின்முரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. * இஃது அவர்மேற் கண் சென்றவழி † நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று. மேல் ‡ வெருவந்த செய்யாமையுட் கூறியவதனையே சிறப்புப் பற்றி விரித்துக் கூறுகின்றமையின், ¶ இஃததன்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது தன்னெடு பழகினவரைக் கண்டால் அவர் சொல்லியவற்றை மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேல் கண் ஓடியவிடத்து நிகழ்வதாகலால், அப்பெயரை யுடையதாயிற்று. இது தாட்சண்ணியமென்றும் முகங்கொடுத்தலென்றும் சொல்லப்படும். முன்னர் வெருவந்த செய்யாமை யென்னுமதிகாரத்தில் சொல்லிய அதனையே சிறப்புப்பற்றி விரித்துச் சொல்லுதலால், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

க. கண்ணேட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

பரி:—(இ - ள்.) கண்ணேட்ட மென்று சொல்லப்படுகின்ற சிறப்புடைய அழகு அரசர் மாட்டு உண்டாகலான் இவ்வுலகம் உண்டாகா நின்றது, (எ-று).

* இஃது - தன்னெடு பழகினவர் கூறியவற்றை மறுக்கமாட்டாமை.

† நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று - உண்டாவதாகலால் கண்ணேட்ட மென்னும் பெயரினை யுடையதாயிற்று.

‡ "கடுஞ்சொல்லன் கண்ணில னெயின்" என்னுங்குறளில் கண்ணேட்டமின்மையை வெருவந்தசெய்தல் எடுத்துக் கூறியிருப்பதின்குணர்தற் பாலதாம்.

¶ இஃததன்பின் வைக்கப்பட்டது - கண்ணேட்ட மென்னு மதிகாரம் வெருவந்த செய்யாமை யென்னு மதிகாரத்திற்குப் பின்னே வைக்கப்பட்டது.

'கழிபெருங்காரிகை' என்புழி * ஒருபொருட் பன்மொழி † இவ்வுயிரழகுதான் சிறப்புணர்கின்றது. ‡ இவ்வழகு அதற்குறுப்பாகலின் ¶ 'உண்மையான்' எனவிலேபெறுஞ் கூறினார். இன்மை வெருவந்த செய்தலாகலின், அவர் நாட்டு வாழ்வார் புலியை யடைந்த புல்வா யினம்போன்று மெஞ்சாராமை பற்றி () இவ்வுலகுண்டு என்றார்.

தெளி:—(இ - ன்.) கண்ணேட்ட மென்னும் - கண்ணேட்ட மென்று சொல்லப்படுகிற, கழிபெருங்காரிகை - மிகவும் பெரிய(சிறப்புடைய) அழகானது, உண்மையான்-(அரசரிடத்தி) உண்டாயிருத்தலால், இவ்வுலகு - இவ்வுலகமானது, உண்டு - உண்டாகா நின்றது, (எ - ம).

'கழிபெருங்காரிகை' என்ற விடத்துக் கழிபெரும் என்னும் ஒருபொருட்பன்மொழி இவ்வுயிரழகுதான் சிறப்புணருமாறு நின்றது. இவ்வழகு அவ்வுயிர்க்கு அவயவமாயிருத்தலால் (அவ்வழகிற்கு)'உண்மையான்' எனவிலே பெறுதலுஞ் சொல்லினார். கண்ணேட்டமில்லாமை வெருவந்த (அஞ்சுவனவற்றைச்) செயதலாகலால், அவர் நாட்டு வாழ்வார் புலியையடைந்த மானினம் போன்று காப்பிடம் பெருமை பற்றி இவ்வுலகுண்டு என்றார்.

(க - து.) கண்ணேட்ட மென்னுஞ் சிறப்புடைய அழகினையுடைய அரசனது நாடு குறைவின்றி வாழும் என்பது.

1. The world exists through that greatest ornament of princes, a gracious demeanour.

2. கண்ணேட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

* ஒருபொருளைக்குறித்து வரும் பல சொற்கள் ஒருபொருட் பன்மொழியெனப்படும். இங்கு அழகெனலும் பொருளதாகிய காரிகையென பதற்கு விசேடணமாய் வந்த கழிபெரும் என்பன சிறப்புஎன்னும்ஒருபொருளைக்குறிப்பது நின்றமையின், ஒருபொருட் பன்மொழி யாயின வெனக. ''ஒருபொருட் பன்மொழி சிறப்பி னின்வழா'' என்னும் நன்னூற் சூத்திரமீண்டுணர்த்தற்பாலதாம்.

† இவ்வுயிரழகுதான் - அரசனது உயிரின் அழகான கண்ணேட்டத்தினது.

‡ இவ்வழகு அதற்குறுப்பாகலின் - கண்ணேட்டமென்னும் அழகு அரசருயிர்க்கு உறுப்பாயிருத்தலால்.

¶ கண்ணேட்டமென்னும் கழிபெருங் காரிகை யுண்டாயிருத்தலால் என்று (கண்ணேட்டமென்னும் கழிபெருங்காரிகை) நிலைத்திருத்தலால் கூறினரென்பது.

() உண்மையா னுண்டிவ் வுலகு என்றார் என்றும் பாடமுண்டு.

பரி:—(இ - ள்.) உலகநடை கண்ணோட்டத்தின் கண்ணோ நிகழ்வது ஆகலான், அக்கண்ணோட்டமில்லாதார் உவராதல் இந்நிலத்திற்குப் பார மாதற்கே, பிறிதோன்றற்கன்று, (எ - று).

உலக நடையாவது ஒப்புரவு செய்தல், புறந்தருதல், * பிழைத்தன பொறுத்தலென்றிவை † முதலாயின. ‡ அவை நிகழாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பது பற்றி 'நிலக்குப் பொறை' என்றார். ¶ ஆதற்கென்பது சொல்லெச்சம். இவை யிரண்டு பாட்டானுங் கண்ணோட்டத்தது சிறப்புக் கூறப்பட்டது.

தேளி:—(இ - ள்.) உலகியல் - உலக நடையானது, கண்ணோட்டத்து - கண்ணோட்டத்தினிடத்தே, உள்ளது - நிகழ்வதாம், (ஆதலால்), அஃதிலார்-அக்கண்ணோட்டமில்லாதவர், உண்மை-உளராதல், நிலக்கு-இந்நிலத்திற்கு, பொறை - பாரமாதற்கே, (வேருன்றற்கு அன்று), (எ-று).

உலகநடையாவது உபகாரஞ் செய்தல், சாப்பாற்றல், பிழைத்தன பொறுத்தல் என்ற இவை முதலானவை. அவை உண்டாகாமையினால் கண்ணோட்டமில்லாதவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பது பற்றி 'நிலக்குப் பொறை' என்றார். ஆதற்கு என்னுஞ் சொல் எஞ்சி (குறைந்து) நின்றமையின், அது வருவிக்கப்பட்டது. இவை இரண்டுபாட்டாலும் கண்ணோட்டத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து) உலக நடையானது அரசரது கண்ணோட்டத்தின் கண்ணே நிகழுகின்றதாதலின், கண்ணோட்டமில்லாத அரச ருலகத்திற்குப் பாரமாவர் என்பது.

2. The prosperity of the world springs from the kindliness of kings; the existence of those kings who have no kindliness is a burden to the earth.



ரு. பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணோட்ட மில்லாத கண்.

---

* பிழைத்தன பொறுத்தல் - பிறர் செய்த குற்றங்களைப் பொறுத்திக் கொள்ளுதல்.

† முதலாயின என்றமையின், காட்சிக்கெளியனுதல், கடுஞ்சொல்லனல்லனுதல், எல்லே கடந்து இறைப்பொருள் (வரிப்பணம்), வாங்காமை முதலியவற்றையுங் கொள்க.

‡ அவை - ஒப்புரவு செய்தல் முதலாயின.

¶ பொறை (பாரம்) ஆதற்கு எனற்பாலது பொறை என நின்று ஆதற்கு என்னுஞ் சொல் எஞ்சி (குறைந்து) நின்றமையின், ஆதற்கு என்பதே சொல்லெச்சமாயிற்றென்க.

பரி:—(இ - ள்.) பகை என்ன பயத்ததாம் பாடற்றொழிலோடு பொருந்தும் இன்றியின்; அதுபோலக் கண் என்ன பயத்ததாம் கண்ணோட்டமில்லாதவிடத்து, (எ - று).

பண் கண் என்பன சாதியொருமைப் பெயர். * பண்களாவன:—பாலையாழ் முதலிய நூற்று மூன்று. பாடற் றொழில்களாவன:—யாழின் கண்ணார்தல்முதலிய எட்டும், ‡ பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின்

* (''செம்பாலை,படுமலைப்பாலை,செவ்வழிப்பாலை, அரும்பாலை,கோடிப் பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை யென்னும்) இவ்வேழு பெரும்பாலையினையும் முதலடித்து நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும். அவற்றுள்,செம்பாலையுட் பிறக்கும் பண்கள், பாலையாழ், காகராகம், ஆரி, தோடி, கௌடி, காந்தாரம், செந்துருத்தி, உதயகிரி யெனவிவை. பிறவும் விரிப்பின் உரைபெருகுமாதலின் அவற்றை வந்தவழிக் கண்டு கொள்க'' ''காற்பெரும் பண்ணுஞ் சாதி தான்கும். பாற்படு திறனும் பண்ணெனப் படுமே, என்மூர்'' என்றும், ''பண்ணிருபாலையின் ஒரு தொண்ணூற் றொன்றும் பண்ணிரண்டுமாய்ப் பண்கள் நூற்றுமூன்றுதற்குக் காரணமாமெனக் கொள்க'' என்றும், ''பெருந்தான மெட்டினும் கிரியைகளெட்டினும் பண்ணிப்படுத்தலாற் பண் என்ற பெயராயிற்று'' என்றும் இலப்பதிகார வுரையில் அடியார்க்கு நல்லார் கூறியிருக்கின்றனர்.

† ''வார்தலென்பது சுட்டுவிரற் செய்தொழில்; வடித்தலென்பது சுட்டுவிரலும் பெருவிரலுங் கூட்டி ரோமபை அகலமும் புறமும் ஆராய்தல்; உந்தலென்பது ரோமபுளே உந்தி வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும் கிரல்பட்டதும் கிரலிழிபட்டதும் என்றறிதல்; உறழ்தலென்பது ஒன்றிடையிடும் இரண்டிடையிட்டும் ஆராய்தல்; உருட்டலென்பது இடக்கைச் சுட்டுவிரல் தானேயுருட்டலும்,வலக்கைச் சுட்டுவிரல் தானேயுருட்டலும் சுட்டொடு பெருவிரல் கூட்டியுருட்டலும், இருபெருவிரலும் இயைந்து உடனுருட்டலும் எனவரும். 'தெருட்டலென்பது செப்புங்காலை, யுருட்டி வருவ தொன்றே மற்ற, வொன்றன பாட்டு மடையொன்ற கோற்கின்,வல்லோ ராய்ந்த நூலே யாயினும்,வல்லோர் பயிற்றுங் கட்டுரை யாயினும், பாட்டொழிந் தலகினி ஞெழிந்த செய்கையும், வேட்டது கொண்டு விரியுற காடி'' எனவரும்; இவை இசைத்தமிழ்ப்பதினெமு படலத்துட் காணலோத்துட் காண்க.'' ''பட்டடையென்பது ரோம்புகளில் இளிக்குப் பெயர்; என்னே? எல்லாப் பண்ணிற்கும் அடிமனையாதலின்'' என்றனர் சிலப்பதிகார அரும்பதவுரை யாசிரியர்.

‡ ''பண்ணல் பரிவட்டணையா மாய்தல் தைவரல், கண்ணிய செலவு வினையாட்டுக் கையூழ், கண்ணிய குறும்போக்கு என்றவெட்டும்'. பண்ணல் பாட வினைத்தபண்ணுக்கு இணை, ஜோ, பகை, உப்பான ரோம்புகள் பெயருந்தண்மை மாத்திரையறிந்து வீக்குதல். பரிவட்டணை அவ்வீக்கினரோம்பை அகலிரலாலும் புறவிரலாலும் காணஞ்செய்து தடவிப்பார்த்தல். ஆராய்தல் ஆரோகண அவரோகண வகையால் இசையைத்தெரிதல்.அது கருதி யேற்றுதல் தைவரல். ஆனத்தியிலே ரோம்பப்படுதல் செலவு. பாடினைத்த

கண்* எடுத்தல், படுத்தல், கலிதல், கம்பிதம், குடில மென்னும் ஐந்தும், † பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ண முதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். இவற்றோடியையாதவழிப் பண்ணைப் பயனில்லாதவாறு போலக் ‡ கண்ணேட்டத்தியையாதவழிக் கண்ணைப் பயனில்லையென்பதாம். கண் சென்ற வழி நிகழ்தல்பற்றி அதனை யிடமாக்கினர். இறுதிக்கட் கண்ணென்பதனைக் () 'கண்ணகன்ஞாலம்'' என்புழிப்போலக் கொள்க.

நேரி:—(இ - ள்.) பண் - இசையானது, பாடற்கு - பாடற்றொழிலோடு, இயைபின்றேல் - பொருத்தமில்லையாயின், என்னும் - என்னபயனுடையதாம், (அதுபோல), கண் - கண்ணானது, கண்ணேட்டமில்லாத கண் - கண்ணேட்டமில்லாத விடத்து, என்னும் - என்ன பயனுடையதாம், (எ-று).

பண் கண் என்பன ஈறுதோன்றாத சாதியொருமைப்பெயர். பண்களாவன:—பாலையாழ் (வீணை) முதலிய நூற்று மூன்று. பாடல் தொழில்களாவன:—யாழினிடத்து வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், வண்ணத்திற் சந்தத்தை விடுதல் விகோயாட்டு. வண்ணத்திற்செய்தபாடலெல்லாம் இன்பமாகப்பாடுதல் கையுழ். தொடக்கச்செலவுந்தளர்ந்த செலவுமாகப் பாடுதல் குறும்போக்கு'' என்று கச்சினார்க்கினியார் சீவகசிந்தாமணி-காந்தருவதத்தையாரிலம்பகம் ''நிலத்தொழில்'' என்னுஞ் செய்யுளின் விசேடவுரையிற் கூறினர்.

* ''எடுத்தல்பாட் டுச்சமாம் என்படுத்தல் மந்தம், தடுத்து கலிதல் சமமாம் - தொடுத்தியன்ற, தன்னாத கம்பிதம் தானடுக்கல் நற்குடிலம், உள்வாங்கிப் பாட லுணர்'' என்பதுங்கருதியத்தக்கதாம்.

† ''சொல்வகை நான்கு வகைப்படும்; சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என; சுண்ணம் நான்கடியான் வருவது, சுரிதகம் எட்டடியான் வருவது, வண்ணம் ஞான்கடியான் வருவது, வரிதகம் மூப்பத்திரண்டடியான் வருவது; என்னை? 'சுண்ண நான்கடி சுரிதக மெட்டடி, வண்ணநா ஞான்கு வரிதக மொண்ணூன்கென், றெண்ணிய வடித்தொகை செய்தவும் பெறுமே' என்றாகலின். வண்ணம் ஒருவகையான் மூன்றுவகைப்படும்; பெருவண்ணம் இடைவண்ணம், வனப்புவண்ணமென; அவற்றுள், பெருவண்ணம் ஆறடிவரும்; இடைவண்ணம் இருபத்தொன்றடிவரும்; வனப்பு வண்ணம் நாற்பத்தொன்பதாய்வரும்'' என்று அடியார்க்கு நல்லார் இலப்பதிகார வுரையில் கூறினர்.

‡ ''ஒன்று நாலம்பென்னோ வொன்றுதை வெண்பென்னோ, இன்றசை தானென்னோ யாதென்னோ - மென்றொடையாழ், பண்ணேட்டு மின்சொற் பிணைத்தோளாய் சேர்ந்தவர்பாற், கண்ணேட்ட மில்லாத கண்'' என்று பாரதிவெண்பா கூறுகின்றது.

() திரிகோகம் கடவுள்வாழ்த்து, இதன்பொருள், இடமகன்ற பூமி என்பது.

தெருட்டல், அள்ளல், பட்டடை என்னும் எட்டும்; பண்ணல், பரிவட்டணை, சூராய்தல், தைவரல், செலவு, வியோயாட்டு, வையூழ், குறும்போக்கு என்னும் எட்டும்; கண்டத்தினிடத்து எடுத்தல், படித்தல், லலிதல், கம்பிதம், குடிலம் என்னும் ஐந்தும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ண முதலியவண்ணங்கள்எழுபத்தாறுமாம். இப்பாடற்கருத்தில்களுடன் பொருந்தாத விடத்துப் பண்ணல்(இசையினல்)பயனில்லாததிற்போலக் கண்ணோட்டத்துடன் பொருந்தாத விடத்துக் கண்ணல் பயனில்லை என்பதாம்.(தாட்சண்ணியம் ஒருவர்மேல்)கண்சென்றவிடத்து உண்டாவதாயிருத்தலால் அக்கண்ணோ (தாட்சண்ணியத்திற்கு) இடமாகினர். 'இல்லாத கண்' என இறுதியிலுள்ள கண்ணென்பது இடம் என்னும் பொருளதாய் நின்றது.

(க - து.) தாட்சண்ணிய மில்லாதகண் பயனுடையதாகாது.

3. Of what avail is a song, if it be not fit to be sung? What is the value of eyes in which there is no kindness?

ச. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினைற்
கண்ணோட்ட மில்லாத கண்.

பரி:—(இ - ள்.) கண்டார்க்கு முகத்தினின்கண் உளபோற்றோன்றல் அல்லது வேறென்னபயனைச்செய்யும், அளவிறவாத கண்ணோடுதலையுடைய வல்லாத கண்களாள், (எ - று).

* தோன்றல் அல்லதென்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன.

† கழிகண்ணோட்டத்தினிக்குதற்கு, 'அளவினல்' என்றார். ‡ ஒரு பயனையுஞ் செய்யாவென்பது குறிப்பெச்சம்.

தெளி:—(இ - ன்.) அளவினல் - தகுமளவாக (அளவுகடவாத), கண்ணோட்டம்-கண்ணோடுதலை, இல்லாத - (உடையன) அல்லாத, கண்-கண்கள்,(கண்டார்க்கு), முகத்தி-முகத்தினிடத்து, உளபோல்-உள்ளனபோல,

* உளபோல் என்பது தோன்றல் அல்லது என்னுஞ் சொற்களை வேண்டி நிற்றலால் 'தோன்றல் அல்லதென்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன' என்று கூறப்பட்டது. ஒருபதம் தன்னை முடிப்பதொரு பதம் இல்லாத வழி முடிவு பெறுது நிற்றல் அவாய்நிலையெனப்படும்.

† கழிகண்ணோட்டம் - செய்யவேண்டிய அளவிற்கு மிஞ்சிய தாட்சண்ணியம்.

‡ 'எவன் செய்யும் என்ற' கூறினமையின், அளவினற் கண்ணோட்டமில்லாத கண் ஒரு பயனையுஞ் செய்யா என்பது குறிப்பாய் எஞ்சி (குறைத்து) நின்றது. குறிப்பாயறியுமாறு குறைத்து நிற்கும் பொருள் குறிப்பெச்சமெனப்படும். எச்சம் - குறைவு.

(தோன்றுதல் அல்லாமல்), எவன் செய்யும்-(வேறு) என்னபயனைச் செய்யும், (எ - று).

தோன்றுதல் அல்லாமலென்னுஞ் சொற்கள் அவாய்நிலையால்வந்தன. அளவுகடந்த கண்ணேட்டத்தினின்றும் நீக்குவதற்கு 'அளவினஞ்' என்றார். (அளவினற் கண்ணேட்டமில்லாத கண்கள்) ஒருபயனையுஞ் செய்யாவென்பது குறிப்பெச்சம்.

(க - து.) தருமளவாகத் தாட்சண்ணியஞ் செய்தலில்லாத கண்களால் யாதொரு பயனுமில்லை என்பது.

4. Beyond appearing to be in the face, what good do they do, those eyes in which there is no well-regulated kindness ?

நி. * கண்ணிற் கணிகலங் கண்ணேட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

பரி:—(இ - ள்.) ஒருவன் கண்ணிற்கு அணியுங்கலமாவது கண்ணேட்டம்; † அக்கலமில்லையாயின், அஃதறிவுடையாரால் புண்ணென்றறியப்படும், (எ - று).

‡ வேறணிகலம் இன்மையின் 'கண்ணிற் கணிகலம்' என்றும், கண்ணுற்றோன்றினும் நோய்களாலும் ¶ புலன்பற்றலாலும் § தியர்விளைத்

* "கண்ணிற் கணிகலங் கண்ணேட்டம்" என்பது திரிகடுகம்.

† அக்கலமில்லையாயின் - கண்ணிற்குக் கண்ணேட்டம் (தாட்சண்ணியம்) என்னும் ஆபரணமில்லையாயினல்.

‡ கண்ணிற்கு கண்ணேட்டமல்லாது வேறுபரணமில்லை யென்பது "பின்னுமணி, பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக், காணுங் கண்ணெக்குமோ காண்" என்று கன்னெறி கூறுவதாலு மறிதற் பாற்றும்.

¶ புலன்பற்றலாலும் - விஷயங்களே யறிதலாலும். புலன் (நீர்) பற்றலாலும் என்றும் பாடமுண்டு.

[புலி முதலியவற்றைக் கண்டபோதும், தன்னே வருத்தும் பகைவரைக் கண்டபோதும், தனக்குத் துரோகம் செய்த மனேலி முதலாயினேரைக் கண்டபோதும், அரியாசப் பிறரிடத்துப்போன தனதுபொருளைக் கண்டபோதும், அரிதிமான்களைக் கண்டபோதும் தன்பமுண்டாவதால் புலன் பற்றலும் தியர்விளைத்த லாயிற்றென்க].

[புலன் - உருவம், சையோகம், விபாகம், எண்முதலிய விஷயங்கள்; பற்றல்—உருவ முதலியவற்றை யறிதல்].

§ தியர் விளைத்தல் - தன்பத்தை யுண்டாக்குதல். [கண்ணேட்டமில்லாதகண் கண்ணுற்றோன்ற மாயினும் அது நோய்களினலும் விஷயங்களைப் பற்றுவதாலும் தன்னையுடையவனுக்குத் தன்பத்தை யுண்டாக்கு மென்பதாம்].

தல் கோக்கிப் 'புண்ணென்றுணரப்படும்' என்றும் கூறினர். இவை மூன்று பாட்டினும் ஓடாதிருந்த கண்ணின் குற்றங் கூறப்பட்டது.

தெளிவு:—(இ-ள்.) கண்ணிற்கு-(ஒருவனது) கண்ணிற்கு, அணிகலம்-அணியும் ஆபரணமாவது, கண்ணோட்டம்-தாட்சண்ணியமாம், அஃதின்றேல்-அவ்வாபரண மில்லையாயின், (அக்கண்), புண்ணென்று—, உணரப்படும்-(அறிவுடையவரால்) அறியப்படும், (எ-று).

கண்ணிற்குக் கண்ணோட்டமன்றி வேறுபரணமில்லாமையால் (கண்ணோட்டம்) 'கண்ணிற்கணிகலம்' என்றும், (கண்ணோட்டமில்லாதகண்) கண்ணுக்குத்தோன்றினாலும் நோய்களாலும் புலன்களைப் பற்றுதலாலும் தியரினைத்தலே நோக்கிப் 'புண்ணென்றுணரப்படும்' என்றும் சொல்லினர். இவையூன்றபாட்டாலும் கண்ணோட்டஞ்செய்யாதிருந்தகண்ணின் குற்றஞ் சொல்லப்பட்டது.

(க-து.) தாட்சண்ணியமென்னும் ஆபரணமில்லாதகண் புண்ணுக்குமன்றிக் கண்ணுக்காதுமென்பது.

5. Kind looks are the ornaments of the eyes; without these they will be considered to be merely two sores.

ச. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோட்டா தவர்.

பரி:—(இ-ள்.) * ஒடுதற்குரிய கண்ணோடு பொருந்தினவத்து அஃதோடாதவரி (இயங்காதிற்றர் ஆயினும் மண்ணோடு பொருந்தி நிற்கின்ற மரத்தினை யொப்பர், (எ-று).

† 'ஓடாதவர்' என்புழிச் இனவினை முதன்மேனின்றது. ‡ மரமும் கண்ணோடியைந்து கண்ணோடாமையின், இதுதொழிலுவமம். ¶ இதனைச்

* ஒடுதற்குரிய-கண்ணோட்டஞ் செய்யத்தக்கிய.

† 'ஓடாதவர்' என்றவிடத்து (கண்ணுடைய) இனையி (உடுப்பி) னது ஓடாமை (தாட்சண்ணியம் கொள்ளாமை) பென்னும் தொழில் முதன் மேல் (அக்கண்ணையுடையவர் மேல்) நின்றதென்பது. "இனையரே இனை யொடு முதலொடுஞ் செறியும்" என்னும் கண்ணூற் சூத்திரம் இங்கறியத் தக்கதாம்.

‡ மரமும் கண்ணோ (கண்ணுவோ) டியைந்து (பொருந்தி) கண்ணோடா மையின் (தாட்சண்ணியங் கொள்ளாமையால்), இது தொழிலுவமையணி யாம். தொழிலியலுவமானமாகச் சொல்வது தொழிலுவமையணியாம். இங் ருக் கண்ணோடாமை தொழில். மரம் கண்ணோடி கூடியிருந்தும் கண்ணோ டாதிருந்தல்போலத தாட்சண்ய மில்லாதவர் கண்ணோடி கூடியிருந்தும் கண்ணோடாதிருக்கின்றன ரென்பது திரண்டபொருள். எனவே, கண் ணோட்டமில்லாதவர் "நீட்டோலை வாசிபா கின்றூன் குறிப்பறிய, மாட் டா தவனன் மரம்" எனபதுபோல மரமாவ ரென்பதாயிற்று.

¶ இதனை-மண்ணோ டியைந்த மரத்தனைய ரென்பதற்கு.

* சுதைமண்ணேடு கூடிய மரப் † பாவையென் றுரைப்பாருமுளர். ‡அஃ தரை யன்மை () காணப்படுங் கண்ணனன்றி ¶ அதனுண் மறைத்து நிற் கின்ற †† ஒருசாருள்ளீட்டாற் கூறினமையானும், ‡‡ "மரக்கண்ணே மண் ணுள்வார் கண்ணென்-றிரக்கண்டாய்" என்பதனானுமறிக.

தெளி:—(இ - ள்.) கண்ணேடு - (ஓடுதற்குரிய) கண்ணேடு, இயை ந்து - பொருந்தியிருந்தும், கண்ணோடாதவர் - அக்கண்ணோடுதலில்லாதவர், (சஞ்சரிக்கின்றவராயிருந்தாலும்), மண்ணேடு—, இயைந்த - பொருந்திநிற்கி ன்ற, மரத்தினையர் - மரத்தினையொப்பர், (எ - று).

'கண்ணோடாதவர்' என்றவிடத்துக் கினையாகிய கண்ணினது ஓடு தல்வினை 'ஓடாதவர்' என்னும் முதல் மேல் நின்றது. மரமும் கண்ணோடு கூடிக்கண்ணோடாமையால், இது தொழிலுவமை யணியாம்.

(க - து.) தாட்சண்யமில்லாதவர் மரத்திற் கொப்பாவர்.

6. They resemble the trees of the earth, who, although they have eyes, never look kindly on others.

* சுதை மண் - சுண்ணாம்பும் மண்ணும் கலந்தரைத்த சாந்து.

† பாவை - பதுமை (பொம்மை).

‡ அஃதரையன்மை - அவ்வாறு கூறுதல் உரையாகாமை.

() காணப்படுங் கண்ணனன்றி அதனுண் மறைந்து நிற்கின்ற ஒரு சா ருள்ளீட்டாற் கூறினமையானும் என்பது சிலபிரதிகளில்லை.

¶ அதனுள் - அக்கண்ணினுள்.

†† ஒருசா ருள்ளீட்டால் - ஒருவகையான தாட்சண்ணியம்பற்றி.

‡‡ முற்றொள்ளாயிரம். இதன்பொருள். மண்ணுலகத்தை யரசாட்சி செய்யும் அரசரது கண் மரத்தினது கண்ணே என்று நினைத்து யாசித்தலை மேற் கொண்டாய் என்பது.

"வரக்கண்டு நாணுதே வல்லையா னெஞ்சே
மரக்கண்ணே மண்ணுள்வார் கண்ணென் - றிரக்கண்டாய்
வாளுழுவ வெல்கொடியான் வண்புனலூர் காடற்கென்
றோளுழுவத் தோன்றத் தொழுது".என்பது முற்றொள்ளாயிரம்.

பரிமேலழகர் மறுப்பின் விபரமாவது:—காணப்படுங்கண்ணலன்றி அக் கண்ணினுள் மறைந்து கிடக்குந் தாட்சண்ணியத்தைப்பற்றிக்கூறினமையா லும், 'மரக்கண்ணே மண்ணுள்வார் கண்' என்று பிரயோகமிருப்பதாலும், 'மண்ணே டியைந்த மரத்தினையர்' என்பதற்குச் சுதைமண்ணேடுகூடிய மரப் பாவை யொப்பாரென்றுரை கூறுதல் பொருத்தமென்பது. எனவே, மண் ணேடியைந்த மரத்தினையர் என்பதற்குச் சுதைமண்ணேடுகூடிய மரப்பாவை யொப்பாரென்று பொருள் கூறுதல் யாதொருபொருத்தமும் மில்லாது நின்ற தாயிற்றென்க.

எ. ‡ கண்ணேட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணேட்ட மின்மையு மில்.

பரி:—(இ - ள்.) கண்ணேட்டமில்லாதவர் கண்ணுடையரும் அல்லர்; கண்ணுடையவர் கண்ணேட்டமிலராதலும் இல்லை, (எ - று).

*கண்ணுடையராயின் † காட்சிக்கண்ணே அஃதோடும் என்பது பற்றிக் 'கண்ணேட்டமில்லவர் கண்ணிலர்' எனக்கூறிப் பின் அதனை ¶ எதிர்மறை முகத்தான் விளக்கினர். * உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. இவை யிரண்டு பாட்டானுங் கண்ணேடாதாரது இழிபு கூறப்பட்டது.*

தெளி:—(இ - ள்.) கண்ணேட்டமில்லவர் - கண்ணேடுதலில்லாதவர், கண்ணிலர் - கண்ணுடையவருமல்லர், கண்ணுடையார் - கண்ணுடையவர், கண்ணேட்டமின்மையும் - (கண்ணிலராதலன்றி) கண்ணேடுதலிலராதலும், இல்-இல்லை, (எ-று).

கண்ணுடையவராயிருந்தால் காட்சியினிடத்தே அக்கண் ஓடும் என்பது பற்றிக் 'கண்ணேட்டமில்லவர் கண்ணிலர்' என்றுகூறிப் பின்பு அக்கண்ணேட்ட மில்லாமையை யெதிர்மறை வாயிலாகக் 'கண்ணுடையார் கண்ணேட்ட மின்மையுமில்' என்று விளக்கினர். இன்மையுமென்ற வும்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. இவை யிரண்டுபாட்டாலும் கண்ணேட்டமில்லாதவ ரது இழிபு சொல்லப்பட்டது.

(க - து.) தாட்சண்ணியமில்லார் குருடரும் அஃதுடையார் கண்ணுடையவருமாவர் என்பது.

7. Men without kind looks are men without eyes; those who really have eyes are also not without kind looks.

ஏ. கருமஞ் சிதையாமற் கண்ணேட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

பரி:—(இ - ள்.) முறைசெய்தலாகிய தந்தொழிலழியாமற் கண்ணேடவல்ல வேந்தர்க்கு உரித்தாந் தன்மை யுடைத்து இவ்வுலகம்.

‡ *யாண்டுத்தியில்லை, ஆண்டுப்புகையில்லை; யாண்டுப் புகையுண்டி, ஆண்டுத் தீயுண்டி என்பதுபோல யாண்டுக்கண்ணேட்டமில்லை, ஆண்டுக்கண்ணில்லை; யாண்டுக்கண்ணுண்டி, ஆண்டுக்கண்ணேட்டமுண்டெனக்கொள்க. இதனுல் கண்ணேட்ட (தாட்சண்ய) மில்லாதவர் கண்ணில்லாதவ (குருட) ராவர்: கண்ணுடையவர் கண்ணேட்டமுடையவராவரென்பது நன்கு விளங்கும்.*

† *காட்சிக்கண்ணே அஃதோடும் - தன்னுடன் பழகினவரைக் கண்டவிடத்து அக்கண் தாட்சண்ணியமுடையதாயிருக்கும்.*

¶ *கண்ணிலர் என்பதற்கு எதிர்மறை கண்ணுடையார்.*

* *இன்மையும் என்னும் உம்மை கண்ணிலராதலன்றி யென்பதைத் தழுவிநிற்றலின், இறந்தது தழுவிய எச்சவும்மை யாயிற்று.*

தம்மொடு பயின்றூர் பிறரை * யிடுக்கண்செய்துழி அவரைக் † கண்ணேடி ஒருதார்க்கு ‡ முறை சிதைதல் மேல் ¶ "ஓர்ந்துகண் ணேடாது" என்ற முறையிலக்கணத்தானும் பெற்றும். முறை சிதையவரும்வழிக் கண்ணேடாமையும் வாராவழிக் கண்ணேடலும் ஒருவற்கியல்பாதலருமையின் 'கண்ணேடவல்லார்க்கு' என்றும், (1) அவ்வியல்புடையார்க்கு உலகமுழுதும் நெடுங்காலஞ் சேறலின் 'உரிமையுடைத்து' என்றுங் கூறினர். இதனைக் கண்ணேடுமாறு கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) இவ்வுலகு - இவ்வுலகம், கருமம் - (முறைசெய்தலாகிய தமது) தொழில், சிதையாமல் - அழியாமல், கண்ணேடவல்லார்க்கு - கண்ணேடுதல் செய்யவல்ல அரசர்க்கு, உரிமை - உரியதாந்தன்மையை, உடைத்து - உடையதாம், (எ - று).

தம்மோடுபழகினவர் பிறர்க்கு இடுக்கண்செய்தவிடத்து அப்பழகினவரைக் கண்ணேட்டஞ்செய்து தண்டியாதவரசர்க்கு முறைகெடுதல் முன்னே 'ஓர்ந்துகண் ணேடாது' என்றுங் குறளிற்கூறிய முறை இலக்கணத்தாலும் பெற்றும். முறைகெட வருமிடத்துக் கண்ணேடுதல் செய்யாமையும் முறை கெட வாராதவிடத்துக் கண்ணேடுதல் செய்தலும் ஒருவனுக்குச் சுபாவமாயிருத்தல் அருமையாகலால் 'கண்ணேடவல்லார்க்கு' என்றும், அச்சுபாவமுடையவர்க்கு உலகமுழுதும் நெடுங்காலம் வசப்பட்டுவருதலால் 'உரிமையுடைத்து' என்றும் சொல்லினர். இதனால் கண்ணேட்டஞ் செய்யும் விதம் சொல்லப்பட்டது.

(க - து.) நீதிதவறுவாறுதமக்குரியாரிடத்துச் தாட்சண்ணியஞ்செய்யவல்ல அரசர்க்கு இவ்வுலகம் நெடுங்கால முரிமையுடையதாகும்.

8. Those kings who are able to show kindness, without injury to their affairs, the world will be all their own.

கூ. ஒறுத்தாற்றும் பண்பினர் கண்ணுங்கண் ணேடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

* இடுக்கண் செய்துழி - துன்பஞ்செய்தவிடத்து.

† கண்ணேடி - தாட்சண்ணியஞ் செய்து. ‡ முறை - நீதி.

¶ திருக்குறள் செங்கோன்மை- 1. இதன் பொருள், தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத்தை யாராய்ந்து யாவரிடத்தும் தாட்சண்ணியஞ் செய்யாது நடுவு நிலைமையைப் பொருந்தி அக்குற்றத்திற்குச் சொல்லி யுள்ளதண்டத்தை யமைச்சர் புரோகிதர்களோடு மாராய்ந்துஅவ்வாராய்ச்சிக்கு ஏற்ற வண்ணம் செய்வதே நீதியாம் என்பது.

(1) அவ்வியல்புடையார்க்கு - நீதிகெட வருமிடத்துத் தாட்சண்ணியங் கொள்ளாமையும் நீதிகெட வாராவிடத்துத் தாட்சண்ணியங் கொள்ளுதலுமாகிய சுபாவமுடையவர்க்கு.

பரி:—(இ - ள்.) தம்மை ஒறுக்கும் இயல்புடையா ரிடத்தும் கண்ணோட்டமுடையராய்க் குற்றத்தைப் பொறுக்குமியல்பே அரசர்க்குத் தலையாய இயல்பாவது, (எ - று)

'பண்பினர்' என்றதனால் * அவர் பயிற்சிபெற்றும், † ஒறுத்தாற்றும் பொறுத்தாற்று மென்பன ஈண்டொருசொன்னீர.

தெளி:—(இ - ள்.) ஒறுத்தாற்றும் - (தம்மை) வருத்தும், பண்பினர் கண்ணும் - இயல்புடையாரிடத்தும், கண்ணோடி – கண்ணோடுதலுடையவராய், பொறுத்தாற்றும் - (குற்றத்தைப்) பொறுக்கும், பண்பே - இயல்பே, தலை - (அரசர்க்குத்) தலைமையான வியல்பு, (எ - று).

'பண்பினர்' என்றமையின் அவரது பழக்கம் பெற்றும். ஒறுத்தாற்றும் பொறுத்தாற்றும் என்பன இங்கு ஒருசொற்றன்மையன.

(க - து.) அரசர்க்குத் தலைமையான இயல்பாவது தம்மை வருத்தும் இயல்புடையவரிடத்தும் தாட்சண்ய முடையவராய், அவர் செய்த குற்றத்தைப் பொறுத்தலேயாம் என்பது.

9. Patiently to bear with, and shew kindness to those who grieve us, is the most excellent of all dispositions.

கo. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

பரி:—(இ-ள்.) பயின்றார் தமக்கு நஞ்சிடக்கண்டுவைத்தும் ‡ கண்மறுக்கமாட்டாமையின், அதனையுண்டு பின்னும் அவரோடு மேவுவர்; யாவரானும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை வேண்டுமவர், (எ - று).

நாகரிகமென்பது கண்ணோட்டமாதல் ¶ "மூன்றை யிருந்து கட்டோர் கொடுப்பி, னஞ்சு முண்பர் நனிநா கரிகர்" என்பதனானுமறிக. அரசர் அவரை ஒருது கண்ணோடற்பாலது தம்மாட்டுக் குற்றஞ் செய்துழி யென்பது இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

---

* அவர் - வருத்தும் இயல்புடையவர்.

† ஒறுத்தாற்றும் என்பது ஒறுக்கும் எனவும் பொறுத்தாற்றும் என்பது பொறுக்கும் எனவும் பொருள் திந்தமையின், அவைஒருசொல்லின் தன்மைய வாயின வென்க.

‡ கண்மறுக்கமாட்டாமையின் - தாட்சண்ணியத்தால் தடுக்கமுடியாமையால்.


¶ நற்றிணை 355. இதன்பொருள். முன்னரிருந்து சிநேகிதர்கள் கொடுத்தால் விஷத்தையுஞ் சாப்பிடுவர் மருந்த கண்ணோட்டமுடையவர் என்பது. தாட்சண்ணியமுடையவர் தமக்குத் தமது நேசர் விஷங்கலந்த வுணவை யிட்டாலும் அதனை மறுக்காமல் உண்பரென்பது இதன் திரண்ட பொருளாம்.

தெளி:—(இ - ள்.) நயத்தக்க - (யாவராலும்) விரும்பத்தக்க, நாகரிகம்-கண்ணோதலே, வேண்டுபவர் - விரும்புவோர், நஞ்சு - நஞ்சை, பெயக் கண்டும் - (பழகினவர் தமக்கு) இடப்பார்த்தும், உண்டு - (கண் மறுக்கமாட்டாமையால் அக்ஞ்சினை) உண்டு, அமைவர் - (பின்னும் அவரோடு) பொருந்துவர், (எ - று).

அரசர் அவரைத் தண்டியாது கண்ணோட்டஞ்செய்யவேண்டுவது (அவர் பிறரிடத்துக் குற்றஞ் செய்தவிடத்தன்று) தம்மிடத்துக் குற்றஞ் செய்தவிடத்து என்பது இவ்விரண்டு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து.) காட்சண்யமுடைய வேந்தர் தம்மோடு பழகினவர் தமக்கு நஞ்சுகலந்த உணவிட்டாலும் அதனையுண்டு அவரோடு பின்னும் நேசிப்பர் என்பது.

10. Those who desire to cultivate that degree of urbanity which all shall love, even after swallowing the poison served to them by their friends, will be friendly with them.



இருபத்தொன்றும் அதிகாரம்.

ஒற்றுடல்:—On the employment of spies.

பரி:—அஃதாவது பகை நோதுமலி நட்பென்னு முன்று திறத்தார் மாட்டும் * நிகழ்ந்தன அறிதற்கு † ஒற்றரை ஆளுதல். ‡ மேற்சொல்லிய இலக்கணத்தையுடைய அரசனுக்குத் தன்னுடு கெலுந்துங்காலும் பிறர் நாடு கொள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றாராகலின், ¶ அவ்விருமைக்கும் இன்றியமையாதாய இது முன் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது பகைவர் அபலார் நட்பினர் என்னு மூன்று திறத்தாரிடத்தும் நிகழ்ந்தனவற்றையறிதற்கு ஒற்றரை ஆளுதலாம். முன்னர்க்கூறிய இலக்கணமுடையவனுடைய அரசனுக்குத் தன்னுட்டைக் காக்கும்போதும் பிறர் நாட்டைப்பிடிக்கும்போதும் வேண்டுவனவற்றைக்கூறுகின்றாராதலால், அவ்விரண்டு காரியங்களுக்கும் அவசியம் வேண்டுவதாகிய இது (ஒற்றுடல்) முன் வைக்கப்பட்டது.

---

* நிகழ்ந்தன - நடந்த செயல்களே.

† ஒற்றர் - ஆங்காங்கு நடக்குஞ் செயல்களை மறைந்திருந்தறிந்து அறியும் வேவுகாரர். ஒற்றர், சாரணர், வேயர், சாரர், வேவுகாரரென்பன ஒரு பொருட்கிளவி. தூது என்று பின்னர்க்கூறுதலால் ஒற்றர் தூதராகாரென்க.

‡ மேற்சொல்லிய இலக்கணம் என்றது இறைமாட்சி முதல் கண்ணோட்டமிறுதியாயுள்ள அதிகாரங்களில் கூறியுள்ள இலக்கணங்களே.

¶ அவ்விருமைக்கும் - அரசன் தனது நாட்டினை யாளுதலும் பிறரது நாட்டினைப்பிடித்தலும் ஆகிய அவ்விரண்டற்கும்.

க. * ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுங்
தெற்றென்க மன்னவன் கண்.

பரி:—(இ - ள்.) ஒற்றும் புகழமைந்த நீதிநூலுமாகிய இவையிரண்டனையும் அரசன் தன்னிரண்டு கண்ணுமாகத் தெளிக, (எ - று).

ஒற்று, தன்கண் செல்லமாட்டாத பாப்பெலாஞ் சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தனவெல்லாம் உணர்த்தலானும், நூல், அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளே யெல்லாஞ் சொல்லி யுணர்த்தலானும் இவ்விரண்டனையுமே தனக் † கூனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் தூணிந்துகொண்டு ஒழுகுக என்பதாம். ஒற்றனே ஒற்றென்றார்; வேந்தனேவேந்தென்றாற்போல. தெற்றென்க என்பது தெற்றென் என்பது ‡ முதனிலையாக வந்தவியங்கோள். அது ¶ தெற்றென என்னுஞ் செயவெனெச்சத்தானறிக. இதனுல் ஒற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) மன்னவன் - அரசன், ஒற்றும் - ஒற்றனும், உரைசான்ற-புகழமைந்த, நூலும் - (நீதி) நூலும், (ஆகிய), இவை யிரண்டும் - இவை யிரண்டனையும், கண் - (தன்னிரண்டு) கண்ணுமாக, தெற்றென்க - தெளியக்கடவன், (எ - று).

ஒற்று (ஒற்றனனவன்),தன்கண்செல்லமுடியாத இடமெல்லாம்போய்க் கண்டு அங்கு நிகழ்ந்தவற்றை யெல்லாம் அறிவித்தலாலும், நீதிநூல்,அந்நிகழ்ந்தனவற்றிற்குத் தன்னறிவுசெல்லமுடியாததொழில்களேயெல்லாஞ்சொல்லி அறிவித்தலாலும், (ஒற்றும் உரைசான்ற நூலும் என்னும்) இவ்விரண்டனையுமே (அரசன்) தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாக நிச்சயித்துக் கொண்டு நடக்கக் கடவனென்பதாம். வேந்தனே வேந்து என்று பண்பாகுபெயராற் கூறுவது போன்று ஒற்றனே ஒற்று என்று தொழிலாகு பெயரால் கூறினர். தெற்றென்க என்பது தெற்றென் என்னும் இடைச்சொல் அடியாகப் பிறந்த வியங்கோள் வினை முற்று. தெற்றென் என்பதுபகுதியாதலுத் தெற்றென என்னும் செய வென்னும் வினையெச்சத்தாலறிக. இதனுல் ஒற்றனது சிறப்புச்சொல்லப்பட்டது. ஒற்று - முதனிலைத் தொழிற் பெயர். ஒற்றுதல்-வேடமாறிச்சென் றாராய்ந்தறிதல்

(க - து.) அரசனுக்கு ஒற்றன் ஊனக்கண்ணும் நீதிநூல் ஞானக்கண்ணுமாம் என்பது.

1. Let a king consider as his eyes these two things, a spy, and a book of laws universally esteemed.

---

* "உளக்க ணீதிநூ லாக வொற்றே வெளிக்கண் ணெனவிடுத்து" என்று விநாயகபுராணம் கூறுகின்றது.

† ஊனக்கண் - மாமிச வடிவான புறக்கண். ஒற்று - ஊனக்கண்ணும்; நீதிநூல் - ஞானக்கண்ணும்.

‡ முதனிலையாகவந்த - பகுதியடியாகப்பிறந்த

¶ "தெற்றென, அல்ல புரிந்தார்க் கறந்தோன்று" என்பது நான்மணிக்கடிகை.

உ. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

பரி:—(இ - ள்.) எல்லார்கண்ணும் நிகழ்வன எல்லாவற்றையும் நாடோறும் ஓர்ந்து விரைந்தறிதல் அரசனுக்கு உரியதொழில், (எ-று).

எல்லார்க்கும் என்றது மூன்று திறத்தாரையும். நான்காவது எழாவதன் பொருட்கண் வந்தது. † நிகழ்பவை யெல்லாமென்றது நல்லவுந் தீயவுமாய சொற்களையுஞ் செயல்களையும். ‡ அவை நிகழ்ந்தபொழுதே அவற்றிற்குத் ¶ தக்கவழியாகத் தேறுதலாகச் செய்யவேண்டுதலின் "வல்லறிதல்' என்றும், o அவ்விருதொழிற்கும் அறிதல் காரணமாகலின், அதனையே உபசாரவழக்கால் 'தொழில்' என்றுங் கூறினர். ஒற்றுனென்பது அதிகாரத்தான்வந்தது. இதனால் ஒற்றினுய பயன் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) *எல்லார்க்கும் - எல்லாரிடத்தும், நிகழ்பவை யெல்லாம் - நடப்பனவெல்லாவற்றையும், எஞ்ஞான்றும் - நாள்தோறும், வல்லறிதல் (ஒற்றரனல்) விரைந்தறிதல், வேந்தன் றொழில் - அரசனுக்கு உரிய தொழிலாம், (எ - று).*

---

† *நிகழ்வன வெல்லாமென்றது என்றும் பாடமுண்டு.*

‡ *அவை (நல்லவும் தீயவுமாய சொற்களும் செயல்களும்) நிகழ்ந்த பொழுதே (உண்டானகாலத்திலேயே) அவற்றிற்குத் தக்கவழியாக (தகுந்த படியாவது) தேறுதலாக(தெளிந்திருத்தலாவது)செய்யவேண்டுதலின் (செய்யவேண்டியிருத்தலால்) 'வல்லறிதல்' என்று கூறப்பட்டது. [பகைவர் அயலார் சுட்பினர் என்னும் மூன்றுதிறத்தாரிடத்தும் அப்போதப்போ தூண்டாகும் நல்லனவும் தீயனவுமாயசொற்களையும்செயல்களையும் அரசன்வேவுகாரால் உடனுக்குடன் விரைந்தறிந்து அவற்றிற்குத் தக்கவாறு காரியங்களைச் செய்து தெளிந்திருக்க வேண்டுமென்பது கருத்து.] இங்கு ஆக என்னும் இடைச்சொல் உறழ்ச்சிப்பொருளில் வந்தது.*

¶ *தக்க அளியாக என்றும் பாடமுண்டு. அளி – கருணை.*

o *அவ்விருதொழிற்கும் (பகைவர் முதலாயினரிடத் தூண்டாய சொற் செயல்களுக்குத் தக்கவாறு செய்தல் தெளிந்திருத்தலென்னுமிருதொழிலைச் செய்தற்கும்) அறிதல் (ஆங்காங்கு நடப்பனவற்றை யரசன் வேவுகாரர்வாயிலாகத்தெரிந்து கொள்ளுதல்) காரணமாகலின் (காரணமாயிருத்தலினால்) அதனை (அறிதலை)யே உபசாரவழக்கால் 'தொழில்' என்றுங்கூறினர் என்று கூறப்பட்டது. காரணமாகிய அறிதலை அதன்காரியமாகிய தொழிலோடொற்றுமைப்படுத்தி அறிதல் தொழில் என்று கூறினமையின், இதுகாரணம் காரியமாய வுபசாரவழக்காம். முதல்வேற்றுமையாயுள்ள இரண்டுசொற்கள் ஒருவாக்கியமாய் நிற்குமாயின், அங்கு அவ்விருசொற்களுக்கும் பொருள் ஒன்றேயா மென்பது இங்கறியத்தக்கது. வல்லறிதல் வேந்தன் றொழில்என்பதன்கண் அறிதல் என்பதும் தொழில் என்பதும் முதல் வேற்றுமையாயிருத்தலால் அவ்விரண்டும் அபேதமாயின வென்க.*

எல்லார்க்கும் என்றது பகைவர் அயலார் நட்பினர் என்னு மூன்று திறத்தாரையும். எல்லார்க்கு மென்னும் ஈன்கனுருபு எல்லாரிடத்தும் என எழனுருபின் பொருளில் வந்தது; இவ்வாறு வருதல் வேற்றுமை மயக்கமெனப்படும். நிகழ்பவை யெல்லாமென்றது நல்லனவும் தீயனவும் ஆகியசொற்களையும் செயல்களையும். அவை நிகழ்ந்தபொழுதே அவற்றிற்குத்தக்க வழியாகவாவது தேறுதலாகவாவது செய்யவேண்டுதலால் 'வல்லறிதல்'என்றும், அவ்விருதொழிலுக்கும் அறிதல் காரணமாகலால், அவ்வறிதலேயே உபசார வழக்கால் 'தொழில்' என்றுஞ் சொல்லினர். ஒற்றனுல் என்பது ஒற்றுடலெண்ணும் அதிகாரத்தால் வந்தது. இதனுல் ஒற்றினுலாகிய பயன் சொல்லப்பட்டது.

(க - து.) அரசனது தொழில் எல்லாரிடத்தும் நிகழும் சொற்களையும் செயல்களையும் ஒற்றனுல் விசைந்தறிதலாம் என்பது.

2. It is the duty of a king to know quickly what all happens, at all times, amongst all men.

கூ. * ஒற்றினு னெற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

பரி:—(இ - ள்.) **ஒற்றினுனே எல்லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றிவித்து † அவற்றுள் எய்தும் பயனை ஆராயாத அரசன் வென்றியடையக்கிடந்தது வேறெரு தெறியில்லை, (எ - று).**

அந்நிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்கெளியனுதல் பிறிதிற்றீராமையின் 'கொற்றங்கொளக்கிடந்தில்' என்றார். ‡ இதற்குக் கொளக்கிடந்தொரு வெற்றியில்லையென் றுரைப்பினு மமையும். இதனுல் ¶ அத்தொழில் செய்யாதவழி வருங் குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) ஒற்றினுல் - ஒற்றனுலே, ஒற்றி - (பகைவர் அயலார் நட்பினரென்னும் எல்லாரிடத்தும் நிகழ்ந்தனவற்றை) அறிந்துவரச் செய்து, பொருள் – (அந்நிகழ்ந்தனவற்றுள் அடையும்) பயனை, தெரியா - ஆராய்ந்தறியாத, மன்னவன் - அரசன், கொற்றங் கொளக்கிடந்தது-வெற்றியடையக்கிடந்தது, இல் - (வேறெருவழி) இல்லை, (எ - று).

* "ஒற்றினு லொற்றிப் பொருடெரிதன் முன்னினிதே" என்பது இனியவை நாற்பது.

† அவற்றுள் எய்தும் பயனை—(பகைவர் முதலாயினரிடத்து) உண்டாயவற்றுள் அடையும் பிரயோசனத்தை.

‡ இதற்கு - (கொற்றங் கொளக்கிடந்த தில் என்பதற்கு), கொள்ளக்கிடந்தொரு வெற்றியில்லை யென்று பொருள் கூறினுலும்பொருந்தும். இங்குக் கொற்றங் கொளக்கிடந்த தில் என்பதற்குக் கொளக்கிடந்தது கொற்றம் இல் என்றன்வயமாம்.

¶ அத்தொழில் - ஒற்றினு னெற்றிப் பொருள் தெரிதல்.

அங்ஙிகழ்ந்தனவற்றையும் அவற்றுலடையும் பயனையும் அறியாமல் பகைவர்க்கு எளியனுதல் (ஒற்றனுல் நீங்குவதன்றி) வேறொன்றனுல் (அரசனுக்கு) நீங்காமையால் (ஒற்றினு னெற்றிப் பொருடெரியா மன்னவன்) 'கொற்றங்கொளக்கிடந்ததில்' என்றார். இதனுல் அரசன் அத்தொழில் செய்யாத விடத்து வருங் குற்றம் சொல்லப்பட்டது.

(க - து.) ஒற்றனுல் பகைவர் முதலாயினரிடத்து நிகழ்ந்தனவற்றை யறியாத அரசன் வெற்றிபடையான் என்பது.

3. There is no way for a king to obtain conquests, who knows not the advantage of discoveries made by a spy.

ச. * வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றுங்
கனைவரையு மாராய்வ தொற்று.

பரி:—(இ - ள்.) தங்காரியஞ்செய்வார் சுற்றத்தார் பகைவரென்று சொல்லப்பட்ட அனைவரையும் சோற் செயல்களான் ஆராய்வானே ஒற்றனுவான், (எ - று).

தம்மென்றது அரசனேளைப்பதித்தி. அவனுக்குக் காரியஞ் செய்வார் செய்வனவும், சுற்றத்தார் † தன்னிடத்தும் நாட்டிடத்திஞ் செய்வனவும், பகைவர் ‡ தன் அற்றம் ஆராய்தலும் ¶ மேற்றேறப்படுதலும் முன்னிட்டுத் $ தன்னிடத்துச் செய்வனவு மறிந்து o அவற்றிற் கேற்றன செய்யவேண்டுதலின், () இம்மூவகையாரையும் எஞ்சாமல் ஆராயவேண்டுமென்பார் 'அனைவரையு மாராய்வ தொற்று' என்றார்.

தெளி:—(இ - ள்.) தம் - தம்முடைய, வினைசெய்வார் - காரியஞ்செய்வார், சுற்றம் - சுற்றத்தார், வேண்டாதார் - பகைவர், என்ற - என்று சொல்லப்பட்ட, அனைவரையும் - யாவரையும், ஆராய்வது - (சொல்லாலும் செயலாலும்) ஆராய்பவனே, ஒற்று - ஒற்றனுவான், (எ - று).

ஒற்றனே அரசனேடு உளப்படுத்தித் தம் என்று கூறப்பட்டது. அவ்வரசனுக்குக் காரியஞ் செய்வார் செய்வனவற்றையும், சுற்றத்தார் தன்னிடத்தும்

---

* வினைசெய்வார் - அரசனுக்குரிய காரியஞ் செய்யும் அமைச்சர் முதலாயினோர்.

† தன்னிடத்தும் - ஒற்றனுகிய தன்னிடத்தும்.

‡ தன் அற்றம் - தனது சோர்வாகிய சமயத்தை.

¶ மேற்றேறப்படுதலும் - பின் தெளியப்படுதலும்.

$ தன்னிடத்துச் செய்வனவுமறிந்து - ஒற்றனுகிய தன்னிடத்துச் செய்யுங் காரியங்களேயுந் தெரிந்து.

o அவற்றிற் கேற்றன - இராஜகாரியஞ் செய்வார் செய்வன, சுற்றத்தார் செய்வன, பகைவர் செய்வன என்பவற்றிற்குத் தக்க செயல்களே.

() இம்மூவகையார் - வினைசெய்வார், சுற்றத்தார், பகைவர்.

நாட்டிடத்தும் செய்வனவற்றையும், பகைவர் தன் சோர்வை ஆராய்தலும் மேல்தேறப்படுதலும் முன்னிட்டுத்தன்னிடத்துச்செய்வனவற்றையும் அறிந்து அவற்றிற்குத்தக்கனவற்றைச் செய்யவேண்டுதலால், இம்மூவகையாரையுங் குறையாமல் ஆராயவேண்டுமென்பார் 'அணைவரையு மாராய்வ தொற்று' என்றார். ஆங்கு - அசைநிலை யிடைச்சொல். என்ற என்புழி அகரம் தொக்கு நின்றது. உளப்படுத்தல் - ஒன்றுபடுத்தல்.

(க - து.) இராஜகாரியஞ் செய்பவரையும் உறவினரையும் பகைவரையும் அவர் தம் சொற்செயல்களால் ஆராய்பவனேஒற்றனுவான் என்பது.

4. He is a spy who watches all men, to wit, those who are in the king's employment, his relatives, and his enemies.



ரு. கடாஅ வுருவோடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யோற்று.

பரி:—(இ - ள்.) † ஒற்றப்பட்டார் கண்டால் ஐயுறத வடிவோடு பொருந்தி அவர் ஐயுற்றறியலுறின் செயிர்த்து நோக்கிய அவர் கண்ணிற் கஞ்சாது நின்று ‡ நான்குபாயமுஞ் செய்தாலும் மனத்துக்கொண்டவற்றை ¶ உமிழாமை வல்லவனே ஒற்றனுவான், (எ - று).

கடாஅ வென்பது கடுக்குமென்னும் பெயரெச்சத் தெதிர்மறை. ஐயுறுத வடிவாவன: பார்ப்பார் வணிகர் $ முதலாயினர் வடிவு.

தெளி:—(இ - ள்.) (ஆராயப்பட்டவர் கண்டால்) கடாஅ-சந்தேகியாத, உருவொடு - வடிவோடு,(பொருந்தி), (அவர் சந்தேகித்து அறியத்தொடங்கினால்), கண்ணஞ்சாது - (கோபித்துப் பார்த்த அவர்) கண்ணிற்கு அஞ்சாமல், (நின்று), யாண்டும் - (நான்குபாயமுஞ் செய்தாலும்) எவ்விடத்தும், உகாஅமை - (மனதிற்கொண்ட வற்றை) உமிழாதிருக்க, வல்லதே - வல்லவனே, ஒற்று-ஒற்றனுவான், (எ - று).

கடாஅ என்பது ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். இதற்குடம்பாட்டுப்பெயரெச்சம் கடுக்கும் என்பது. சந்தேகியாத வடிவாவன: பார்ப்பார் வணிகர் முதலாயினர் வடிவு.

(க - து.) சந்தேகியாத வடிவத்துடன் பொருந்தி, ஐயுற்றார் கோபித்துப்பார்க்கும் பார்வைக்குச் சிறிதும் அஞ்சாது,மனத்தில்கொண்டவற்றை அவர்க்குவெளிப்படுத்தாதவனேஒற்றனுவான்.

† ஒற்றப்பட்டார் - ஒற்றனுல் ஆராயப்படும் பகைவர் முதலாயினர்.

‡ நான்குபாயம் - தான சாம பேத தண்டம்.

¶ உமிழாமை - வெளிப்படுத்தாமை ; அஃதாவது சொல்லாமை. உமிழாமையில் (வெளிப்படுத்தாமையில்) என்றும் பாடமுண்டு.

$ முதலாயினர் என்றமையின், தீர்த்தயாத்திரை செய்வார், தவஞ்செய்வார், முற்றத்துறந்தார் முதலாயினோரையுங் கொள்க.

5. A spy is one who is able to assume an appearance which may create no alarm in the minds of others,who fears no man's face, and who never reveals his purpose.

சு. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று.

பரி:—(@ - ஸ்.) முற்றத்துறந்தாராயும் விரத வொழுக்கினராயும் *உள்புகுதற் கரியவிடங்களெல்லாம் உள்புக்கு ஆராயவேண்டுவன ஆராய்ந்தறிந்து ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து † எல்லாத்துன்பமுந் செய்து கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனுவான்,(எ-று).

விரத வொழுக்கம் - தீர்த்தயாத்திரை ‡ முதலாயின. ¶ செயினும் என்பது $ அறவோரென்று செய்வாரின்மை விளக்கி நின்றது. o மேல் நால் வகையுபாயத்தினுஞ் சோர்வின்மை சொல்லிவைத்து (ஈண்டுத்தண்டத்தைப் பிரித்துக் கூறியது அதனது பொறுத்தற் கருமைச் சிறப்பு நோக்கி. § இதனுள் படிவமென்றதனை வேடமாக்கித்துறந்தார் வேடத்தராகியென் றுரைப் பாரு முளர்.

** உள்புகுதற்கரிய விடங்கள் - உள்ளே பிரவேசிப்பதற்குச் சாத்தியமாகாதவிடங்கள். அவை அந்தப்புரம்,ஆயுதசாலை,தனசாலை,ஆலோசனை செய்யுமிடமுதலியனவாம்.*

† எல்லாத்துன்பமும் என்றது கைக்குக்கிட்டியிடல், அண்ணந்தாளிடுதல், தலைகீழாகக்கட்டி மூக்கில் மிளகு நீரை வார்த்தல், கொப்பூழில் (தொப்புளில்) பிள்ளைப் பூச்சியைவைத்துக்கட்டுதல், நகங்களில் ஊசியையேற்றுதல் முதலியவற்றை லுண்டாகுந் துன்பங்களை.

‡ முதலாயின என்றமையின், பஞ்சாக்கினிமத்தியில் நிற்றல், உண்டி சுருக்கல், தேவாலயவழிபாடு முதலியவற்றையுங் கொள்க.

¶ செயினும் என்ற உம்மை செய்வாரில்லாமையை விளக்கிநிற்றலால், எதிர்மறை யும்மையாம்.

$ அறவோர் - அற (தரும) நெறியிற்செல்வோர்; அவரிங்கு முற்றத் துறந்தார், விரத வொழுக்கினர். "தள்ளா விளையுளும்" என்னுங் குறளின் விசேடவுரையில் " அறவோர் - துறந்தோர், அந்தணர் முதலாயினர் " என் றிருப்பதிங் குணர்த்தற்பாற்றும்.

o மேல் என்றது இவ்வதிகாரத்தின் 8ந்தாவது குறளில் 'யாண்டு முகாமை'என்றதனை.

() ஈண்டு - இக்குறளில். ஈண்டும் என்றும் பாடமுண்டு.

§ இதனுள் - (இக்குறளில்) படிவமென்பதற்கு வேடமென்றபொருள் கொண்டு, துறந்தார் படிவத்த ராகி என்பதற்குத் துறவிகளின் வேடத்தினையுடையவராகி யென்று பொருள் கூறுவாருமுண்டென்பது.

தெளி:—(இ - ள்.) *துறந்தாராகி* - முழுதும் துறந்தாராயும், *படிவத்தராகி* - விரத வொழுக்கினராயும், *இறந்து* - (உள்ளே போதற்கருமையான விடங்களி லெல்லாம்) போய், *ஆராய்ந்து* (ஆராயவேண்டுவனவற்றை) *ஆராய்ந்தறிந்து*, என்செயினும் - (அவ்விடத்திருப்பவர் சந்தேகித்துப் பிடித்து) எல்லாத் தின்பமுஞ் செய்துகேட்டாலும், சோர்விலது - (தன்னை) வெளிப்படுத்தாதவனே, *ஒற்று* - ஒற்றனுவான், (எ - று).

விரதவொழுக்கம் - நீர்த்த யாத்திரை முதலாயின. செயினும் என்பது அறவோரொன்று செய்வாரில்லாமையை விளக்கி நின்றது. முன்னே நால்வகை யுபாயத்தினுலும் சோர்வில்லாமையைச் சொல்லிவைத்து இங்குத் தண்டத்தைப் பிரித்துச் சொன்னது அத்தண்டத்தினது சகித்தற் கருமைச் சிறப்புநோக்கியென்க.

(க - து.) *துறவிகள் முதலாயினர் வேடத்தைக் கொண்டுபல விடங்களிலுஞ்சென்று, ஆராய வேண்டுவனவற்றை யாராய்ந்தறிந்து, அங்குள்ளார் சந்தேகித்துப்பிடித்து யாது செய்யினுந் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனுவான் என்பது.*

6. He is a spy who, assuming the appearance of an ascetic, goes into whatever place he wishes, examines into all that is needful, and never discovers himself, whatever may be done to him.

எ. மறைந்தவை கேட்கவற் றுகி யறிந்தவை
பையப்பா டில்லதே யோற்று.

பரி:—(இ - ள்.) * **ஒற்றப்பட்டார் மறையச்செய்த செயல்களை † அவர்க்குள்ளாயினுராற் கேட்க வல்லராயக் கேட்டறிந்த செயல்களிற் பின் ஐயப்படாது துணிய வல்லவனே ஒற்றனுவான்,** (எ - று).

மறைந்தவை சொல்லுவாரை அறிந்து, அவர் அயிராமற் சென் ‡ றொட்டித் தாமே சொல்லும்வகை அதற்கேற்ற சொல்லாகச் செயலாக முன்னே விளைத்து, அத்தொடர்பாற் கேட்குங் காலும் உருதார் போன்று நின்று கேட்க வேண்டுதலின் 'கேட்கவற் றுகி' என்றும், கேட்டறிந்தவற்றைத் தானே யுற்றுவந்து சொல்லின் அரசனுல் அவற்றிற்கேற்ற வினை செய்யலாகாமையின் 'யப்பாடில்லதே' என்றுங் கூறினர். இவை நான்கு பாட்டானும் ஒற்றினிலக்கணங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) மறைந்தவை - (ஒற்றப்பட்டவர்) மறையச்செய்த செயல்களை, கேட்கவற்றுகி - (அவர்க்கு உள்ளாயினுரால்) கேட்க வல்லவ

---

* ஒற்றப்பட்டார் - வேவுகாராால் அடித்தறியப்பட்டவர்.

† அவர்க்குள்ளாயினுரால் - ஒற்றப்பட்டவர்க்கு அத்தரங்கமா யிருப்பவர்களால்.

‡ ஒட்டி - அடித்து.

ஞும், அறிந்தவை - (கேட்டு) அறிந்தசெயல்களில், யெப்பாடில்லதே - (பின்) சந்தேகப்படாது நிச்சயிக்கவல்லவனே, ஒற்று - ஒற்றனுவான், (எ - று).

ஒற்றப்பட்டவர் மறையச்செய்த செயல்களைச் சொல்லுவாரை அறிந்து, அவர் சந்தேகியாதபடிபோய் ஒட்டி அவர் தாமே சொல்லும்படி அதற்கு எற்ற சொல்லையாவது செயலையாவது முன்னே உண்டாக்கி, அச்சம்பந்தத்தினுல் கேட்கும்போதும் அன்னியர்போல நின்று கேட்கவேண்டுதலால் 'கேட்கவற் றுகி' என்றும், கேட்டறிந்தவற்றைத் தானே சந்தேகித்து வந்து சொன்னுல் அரசனுல் அக்கேட்டறிந்தவற்றிற்கு எற்ற காரியம் செய்தல்கூடாமையால் 'யெப்பாடில்லதே' என்றும் சொல்லினர். இவை நான்கு பாட்டாலும் ஒற்ற னது இலக்கணம் சொல்லப்பட்டது.

(க - து.) பகைவர் முதலாயினரது இரகசியச் செயல்களைச் சொல்ல வல்லாரிடத்துக் நக்கவாறு கேட்டறிந்து, கேட்டறிந்த வற்றிற் சந்தேகமில்லாதவனை ஒற்றனுவான் என்பது.

7. A spy is one who is able to discover what is hidden, and who retains no doubt concerning what he has known.

அ. ஒற்றேற்றித் தந்த போருளையு மற்றுமோ
ரோற்றினு லோற்றிக் கோளல்.

பரி:—(இ - ள்.) ஒரொற்றன் ஒற்றிவந் தறிவித்த காரியத்தனை யும் பிறனேரொற்றனுலும் ஒற்றுவித்து * ஒப்புமை கண்டுகொள்க.

ஒற்றப்பட்டாரோடொத்து நின்று † மாறுபடக்கூறலுங்கூடுமாகலின், ஒருவன் மாற்றம் தேறப்படா தென்பதாம்.

தெளி:—(இ - ள்.) ஒற்று - ஒரொற்றன், ஒற்றி - மறைவாயறிந்து வந்து, தந்த - அறிவித்த, பொருளையும் - காரியத்தையும், மற்றுமோ ரொற் றினுல், மற்றேரொற்றனுலும், ஒற்றி - அறிந்துவரச்செய்து, கொளல் - (ஒப்புமைகண்டு) கொள்ளக்கடவன், (எ - று).

ஒற்றப்பட்டவருடன் கலந்து நின்று மாறுபடச் சொல்லுதலுங் கூடு மாகையால், ஒருவன் சொல் தெளியப்படா தென்பதாம்.

(க - து.) அரசன் ஒரொற்றனறிந்துவந் தறிவித்த காரியத் தை மற்றேரொற்றனுலும் அறிந்துவரச்செய்து ஒப்புமைகாணக் கடவன்.

8. Let not a king receive the information which a spy has discovered and made known to him, until he has examined it by another spy.

* ஒப்புமைகாணல் - ஒத்திருக்கப்பார்த்தல்.

† மாறுபட - விபரீதமாக.

கூ. * ஒற்றேற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றேக்க தேறப் படும்.

பரி:—(இ - ள்.) ஒற்றரை ஆளுமிடத்து ஒருவனே ஒருவனறியாமல் ஆள்க; அங்ஙனமாண்ட லோற்றர் மூவரை † ஒருபொருண்மேல் ‡ வேறு வேறு விட்டால் ¶ அம்மூவர் சொல்லும் பயனுல் ஒத்தனவாயின், அது மெய்யென்று தெளியப்படும், (எ - று).

$ ஆயின் என்பது வருவிக்கப்பட்டது. ஒருவனே யொருவ னறியின் தம்மூளியைத்து ஒப்பக்கூறுவராகலின் 'உணராமை யாள்க' என்றும், மூவர்க்கு நெஞ்சொற்றுமைப் படுதலும் பட்டால் நீடு நிற்றலுங் கூடாமையின் 'தேறப்படும்' என்றுங் கூறினர். இதனனே § அஃதொத்திலதாயின், பின்னும் ஆராய்கவென்பதூஉம் பெற்றும்.

தெளி:—(இ - ள்.) (ஒற்றரை ஆளுமிடத்து) ஒற்று - ஒரொற்றனே, ஒற்று - மற்றேரொற்றன், உணராமை - அறியாதிருக்கும்படி, ஆள்க - ஆளக் கடவன், (அவ்வாறாண்ட ஒற்றர்மூவரை), உடன் மூவர்-(ஒருபொருள்மேல் வேறு வேறு விட்டால்) அம்மூவருடைய, சொல் - சொல்லும், தொக்க-(பயனுல்)ஒத்திருப்பன, (ஆயின்), தேறப்படும்-(அப்பொருள் மெய்யென்று)தெளியப்படும், (எ - று).

ஆயின் என்பது வருவிக்கப்பட்டது. ஒரொற்றனே மற்றேரொற்றன் அறிந்தால் தம்முள்கலந்துகொண்டு ஒப்பச்சொல்லுவாராகையால்'உணராமை யாள்க' என்றும், மூவர்க்கு நெஞ்சு ஒற்றுமைப்படுதலும் பட்டால் நீடித்திருத்தலும் கூடாமையால் 'தேறப்படும்' என்றும் சொல்லினர். இதனுலே அம்மூவர் சொல்லும் பயனுல் ஒவ்வா திருப்பனவாயின், பின்னும் ஆராய்கவென்பதும் பெறப்பட்டது. உடன்மூவ ரென்பதை மூவருடனென்றன் வயஞ்செய்து, உடனென்னும் மூன்றனுருபு ஆறனுருபின் பொருளில் வந்ததென்று கொள்க.

*** "ஒருவ ரொருவர் தமையறியா தொருமை வினைக்கண் மூவர்தமை, மருவ விடுக்க மூவர்களும் வந்து மொழிவ தொத்துவிடிற், கருமம் மதனை மிகத்தெளிக" என்பது விகாயகபுராணம்.**

† ஒருபொருண்மேல் - ஒருகாரியத்தின்மேல்.

‡ வேறுவேறுவிட்டால் - தனித்தனியாக அனுப்பினுல்.

¶ அம்மூவர் சொல்லும் - அந்த மூன்று ஒற்றர்களது வார்த்தையும்.

$ தொக்க என்னும் அன்சாரியை குறைந்தவினை ஆயின் என்பதை வேண்டி நிற்றலால், அது வருவிக்கப்பட்டது.

§ அஃது - (ஒருகாரியத்தின்மேல் ஒரு காலத்தில் தனித்தனியாக ஒரு வரை மற்றொருவரறியாதபடி அனுப்பிய மூன்றொற்றரும் அறிந்து வந்து சொல்லும் சொல்) ஒத்திலதாயின் (தம்முள் ஒத்தாதுவிரோதப்படுமாயுல்). அஃதொத்திலவாயின் என்றும் பாடமுண்டு.

(க - து.) அரசன் ஒரு காரியத்தை மூன்று ஒற்றர்களால் தனித்தனி யறிந்து தெளியக்கடவன் என்பது.

9. Let a king employ spies so that one may have no knowledge of the other; and when the information of three agrees together, let him receive it.



கo. சிறப்பறிய வோற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை.

பரி:—(இ - ள்.) † **மறைந்தவை அறிந்து கூறிய ஒற்றின்கட் செய்யுந் ‡ சிறப்பினை அரசன் பிறரறியச் செய்யாதொழிக; ¶ செய்தானையின், தன்னகத்து அடக்கப்படும் மறையைத் தானே புறத்திட்டானும்.**


மறையாவது அவனெற்றனையதூஉம் அவன் கூறியதூஉ மாம். சிறப்புப்பெற்ற இவன் யாவனென்றும் இது பெறுதற்குக் காரணம் யாதென்றும் வினவுவாரும் இறுப்பாரும் அயலாராகலின் 'புறப்படுத்தானாகும்' என்றார். இவை மூன்று பாட்டானும் ஒற்றரையாளுமாறும், அவரான் நிகழ்ந்தனவறியுமாறும், அறிந்தாற் சிறப்புச் செய்யுமாறுங் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) ஒற்றின்கண் - (மறைந்தவை அறிந்து சொல்லிய) ஒற்றனிடத்து, சிறப்பு - (செய்யும்) சிறப்பினை, அறிய - (அரசன் பிறர்) அறிய, செய்யற்க - செய்யாதிருக்கக்கடவன், செய்யின் - செய்தானையல்· மறை - (தன்மனத் தடக்கப்படும்) மறையை, புறப்படுத்தானாகும் - (தானே) வெளிப்படுத்தினவனவன், (எ - று).

மறையாவது அவன் ஒற்றனனதும் அவன் சொல்லியதும் ஆம். (அரசன் சிறப்பறியவொற்றின்கட்செய்தானையின்) சிறப்புப்பெற்ற இவன் யாவனென்றும், இச்சிறப்பைப் பெறுதற்குக் காரணம் யாதென்றும் வினவுவாரும் விடைகூறுவாரும் அயலாராகலால் (மறையைப்) 'புறப்படுத்தானாகும்' என்றார். இவை மூன்று பாட்டாலும் ஒற்றரை ஆளும் விதமும், அவ்வொற்றரால் நிகழ்ந்தனவற்றை யறியும் விதமும், அறிந்தால் அவர்க்குச் சிறப்புச்செய்யும் விதமும் சொல்லப்பட்டன.

(க - து.) ஒற்றர்க்குச் செய்யுஞ் சிறப்பினை அரசன் பிறரறியாது செய்யக்கடவன் என்பது.

10. Let not a king publicly confer on a spy any marks of his favor; if he does, he will divulge his own secret.



† மறைந்தவை - ஒற்றப்பட்டார் மறையச் செய்த செயல்களை.

‡ சிறப்பினை - வெகுமதியை.

¶ செய்தானையின் - பிறரறியச் செய்தானையல்.

இருபத்திரண்டாம் அதிகாரம்.

‡ ஊக்கமுடைமை—On energy.

பரி:—அஃதாவது மனம் மெலிதலின்றி வினை செய்தற்கட் ¶ இளர்ச்சி யுடைத்தாதல். ஒற்றான் நிகழ்ந்தன அறிந்து அவற்றிற்கேற்ற வினை செய்வானுக்கு இஃது இன்றியமையாமையின், ஒற்றுடலின்பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது மனந் தளருத லில்லாமல் தொழில்செய்தலில் எழுச்சியுடையதாதலாம். ஒற்றரால் நிகழ்ந்தனவற்றையறிந்து அவற்றிற்கு ஏற்ற தொழிலச்செய்யுமாசனுக்கு இஃது (ஊக்கமுடைமை) அவசியம் வேண்டுதலால், ஒற்றுடலின்பின் வைக்கப்பட்டது.

க. உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா
ருடைய துடையரோ மற்று.

பரி:—(இ - ள்.) ஒருவரை o உடையரென்று § சொல்லச்சிறந்தது ஊக்கம் ; அவ்வூக்கமில்லாதார் வேறுடையதுதானும் உடையராவரோ, ஆகார், (எ-று).

வேறுடையதென்றது முன்னெய்திநின்ற பொருளை. உம்மை விகாரத்தாற் றொக்கது. காக்கும் ஆற்றல் இலராகலின், அதுவும் இழப்பரென்பதாம்.

தெளி:—(இ - ள்.) உடையரெனப்படுவது - (ஒருவரை) உடையவரென்று சொல்லுதற்குச் சிறந்தது, ஊக்கம் - மனவெழுச்சியாம், அஃதில்லார் - அம்மனவெழுச்சியில்லாதவர், மற்றுடையது - வேறுடையதுதானும், உடையரோ - உடையவராவரோ, [ஆகார்], (எ-று).

வேறுடையதென்றது முன்னடைந்து நின்றபொருளை. உடையதும் என்னும் தெரிநிலை யும்மை செய்யுள் விகாரத்தாற்றொக்கு நின்றது. (ஊக்கமில்லாதவர் முன்னடைந்து நின்ற பொருளை) காப்பாற்றும் வல்லமையில்லாதவராதலால், அப்பொருளையும் இழப்பரென்பதாம்.

(க - து.) ஊக்கமுடையவரன்றி மற்றவர் பொருளுடையவராகார் என்பது.

1. Energy marks out the man of property; as for those who are destitute of energy, do they really possess what they possess?

---

‡ "முயற்சிதா னாண்மை யூக்க முதுதா னுற்றி யோகம், இயற்றலே யுளுர்றுழப்போ டாள்வினை யிவையும் சாகம்" என்பது சூடாமணி நிகண்டு.

¶ இளர்ச்சி - உற்சாகம். o உடையர் - பொருளுடையவர்.

§ சொல்லச் சிறந்தது - சொல்லுதற்குச் சிறந்த காரணமாயிருப்பது.

உ. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

பரி:—(இ - ள்.) ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையாவது; மற்றைப்பொருளுடைமை நிலைநில்லாது நீங்கிப்போம்.

*உள்ளம்—ஆகுபெயர். ஊக்கம் * உள்ளத்துப் பண்பாகலின் அதற்கு நிலைநிற்றலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிதன்மாலத்தாகலின் அதற்கு நிலைநில்லாமையுங் கூறினர்; கூறவே, அஃதுடைமை அன்றென்பது பெறப்பட்டது.*

தெளி:—(இ - ள்.) *(ஒருவனுக்கு) உள்ளமுடைமை - ஊக்கமுடைமையே, உடைமை - (நிலைபெற்ற) உடைமையாம், பொருளுடைமை - மற்றைப் பொருளுடைமையானது, நில்லாது - நிலைபெறாமல், நீங்கிவிடும் - நீங்கிப்போம், (எ - று).*

உள்ளத்தின் பண்பாகிய ஊக்கத்தை உள்ளமென்று கூறினமையின், உள்ளமென்பது பொருளாகுபெயராம். உள்ளம் - மனம்; ஊக்கம்-அம்மனத்தின் கிளர்ச்சி. ஊக்கம் உள்ளத்தினது குணமாகலால் அவ்வூக்கத்திற்கு நிலைபெறுதலும், பொருள் உடம்பிலும் வேறு யழியுந் தன்மையதாகலால் அப்பொருளுக்கு நிலைபெறுமையுஞ் சொல்லினர்; சொல்லவே, அப்பொருள் உடைமையன்றென்பது பெறப்பட்டது.

(க-து.) *ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைபெற்ற உடைமையாம்; பொருள் நிலைபெற்ற வுடைமையன்றும் என்பது.*

2. The possession of energy of mind is true property; the possession of wealth passes away and abides not.

ரு. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

பரி:—(இ - ள்.) † இழந்தாராயினும் யாம் கைப்பொருளை யிழந்தேமென்று அலமாரார்; நிலைபெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக வுடையார், (எ - று).

ஆக்கம்—ஆகுபெயர். ஒருவந்தமாய வூக்கமென்க. கைத்து—கையகத்தாய பொருள்; ‡ "கைத்துண்டாம் போழ்தே கறவா தறஞ்செய்மின்" என்றார் பிறரும். அல்லாவாமைக்கேது வருகின்ற பாட்டாற் கூறுப.

---

* *உள்ளத்தின் (மனத்தின்) பண்பாகிய ஊக்கம் உடம்பிலும் வேறாய பொருள்போல அழியுந் தன்மையதின்றி ஊக்கமுடையவ ளுள்ளவளவும் உடையதாயிருத்தல் பற்றி அதற்கு நிலைநிற்றல் (அழியாமை) சொல்லப்பட்டது.* † *இழந்தாராயினும் - கைப்பொருளை யிழந்தாரானாலும்.*

‡ *காலடியார் இளமை நிலையாமை-கூ. இதன்பொருள். கையகத்திப் பொருளுண்டா யிருக்குங் காலத்திலேயே (அப்பொருளை) யொளித்துவையாது தருமத்தைச் செய்யுங்கள் என்பது.*

தெளிவுரை:—(இ - ள்.) ஒருவந்தம் - நிலைபெற்றதாகிய, ஊக்கம் - மனவெழுச்சியை, கைத்து - கைப்பொருளாக, உடையார் - உடையவர், (இழந்தாராயினும்), ஆக்கம் - கைப்பொருளை, இழந்தேமென்று (யாம்) இழந்துவிட்டோமென்று, அல்லாவார் - மனஞ்சுழலார், (எ - று).

ஆக்கத்திற்குக் காரணமான கைப்பொருளை ஆக்கமென்றமையின், ஆக்கமென்பது காரியவாகுபெயராம், ஆக்கம்—மேல்மேலுயர்தல். ஒருவந்தம் என்பதனை ஊக்கமென்பதனோடு கூட்டி ஒருவந்தமாய ஊக்கமென் றுரைக்கப்பட்டது. கைத்து—கையினிடத் திருப்பதாய பொருள். அல்லாவாமைக்கு (மனஞ்சுழலாமைக்கு)க் காரணம் வருகின்ற பாட்டாற் கூறுவார்.

(க - து.) நிலைபெற்ற ஊக்கமுடையவர் கைப்பொருளையிழந் தாராயினும் வருத்தமுறார் என்பது.

3. They who are possessed of enduring energy will not trouble themselves, saying, "we have lost our property".

ச. ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.

பரி:—(இ - ள்.) * அசைவில்லாத ஊக்கத்தை உடையானிடம் பொருள் தானே வழிவினவிக்கொண்டு செல்லும், (எ - று).

அசைவின்மை - † இடுக்கண் ‡ முதலியவற்றாற் றளராமை. வழிவினவிச்சென்று சார்வார்போலத் தானேசென்று சாருமென்பார் 'அதர்வினுய்ச் செல்லும்' என்றார். எய்திநின்ற பொருளினும் அதற்குக் காரணமாய வூக்கஞ் சிறந்ததென்பது இவை நான்கு பாட்டானுங் கூறப்பட்டது.

தெளிவுரை:—(இ - ள்.) அசைவிலா - அசைவில்லாத, ஊக்கமுடையானுழை - மனவெழுச்சியை யுடையவனிடத்து, ஆக்கம் - பொருளானது, அதர்வினுய் - (தானே) வழிகேட்டுக்கொண்டு, செல்லும் - சென்றுசேரும்.

அசைவின்மை-இடுக்கண் முதலியவற்றால் மனந்தளராமை. வழிகேட்டுச்சென்று சேர்வார்போல (பொருள்) தானே சென்று (அசைவிலாவூக்கமுடையானுழை) சேருமென்பார் (ஆக்கம்) 'அதர்வினுய்ச் செல்லும்' என்றார். அடைந்துநின்ற பொருளிலும் அப்பொருளிற்குக்காரணமாகிய ஊக்கம் சிறந்ததென்பது இவை நான்கு பாட்டாலும் சொல்லப்பட்டது.

(க - து.) நிலைபெற்ற ஊக்கமுடையவனிடத்துப் பொருள் தானே வந்து சேரும் என்பது.

* அசைவில்லாத – சலித்தலில்லாத.

† "இடுக்கண் என்பது மலர்ந்தநோக்கமின்றி மையலுக்கம்பட வரும் இரக்கம்" என்றனார் நச்சினார்க்கினியர்.

‡ முதலியவற்றால் என்றமையின், பகைவர் தடுத்தல், செய்தொழிலில் சோர்வுண்டாதல் முதலியவற்றையுங் கொள்க.

4. Wealth will ask for a way to come to the man of unfailing energy.

சு. * வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு.

பரி:—(இ - ள்.) நின்றநீரி னளவினவாம் நீர்ப்பூக்களின் † தாளி னது நீளங்கள், அதுபோல மக்கள்தம் ஊக்கத்தளவினதாம் அவ நுயர்ச்சி, (எ - று).

மலர்-ஆகுபெயர். நீர்மிக்கதனையும் மலர்த்தாள் நீளுமென்பது பட 'வெள்ளத்தனைய' என்றார். இவ்வுவமை ஆற்றலான், ஊக்கமிக்கதனையும் மக் களுயர்வரென்பது பெறப்பட்டது. உயர்தல். பொருள் படைகளான் மிகுதல்.

தெளி:—(இ - ள்.) வெள்ளத்தனைய - நின்றநீரினளவினவாம், மலர் - நீர்ப்பூக்களின் தாளினது, நீட்டம் - நீளங்கள், (அதுபோல), மாந்தர்தம் - மக் களது, உள்ளத்தனையது - மனவெழுச்சி யளவினதாம், உயர்வு - (அவர்க ளது) உயர்ச்சி, (எ - று).

மலரினது தாளே மலரென்று கூறினமையின், மலரென்பது பொரு ளாகுபெயராம். நீர்மிகுந்தவளவும் மலரின்தாள்கள் நீளும் என்பது தோன்ற 'வெள்ளத்தனைய' என்றார். 'வெள்ளத் தனைய மலர்நீட்டம்' என்னும் உவமா னத்தின் வலியினால், ஊக்கம் மிகுந்தவளவும் மக்க ளுயர்வர் என்பது பெறப் பட்டது. உயர்தல் - பொருளாலும் படையாலும் மிகுதல்.

(க - து.) ஒருவர்க் குண்டாகும் உயர்வு அவரது ஊக்கத் தினளவேயாம் என்பது.

5. The length of a flower-stalk will be in proportion to the depth of the water in which it grows; the height of a man's greatness is in proportion to his mind.



சு. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

பரி:—(இ - ள்.) அரசாயினூர் கருதுவதெல்லாம் தம்முயர்ச்சியை யே கருதுக; அவ்வுயர்ச்சி ‡ பால்வகையாற் கூடிற்றில்லையாயினும், அக்கருத்துத் ¶ தள்ளாமை நீர்மையுடைத்து, (எ - று).

$ உம்மை தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. ○ தள்ளிய

* "நீரினவே யாகுமா நீராம்பல்" என்று மூதுரை கூறுகின்றது. † தாள் - அடிக்காம்பு. ‡ பால்வகையால் - விதிவசத்தால். ¶ தள்ளாமை - தவறுமை.

$ தள்ளினும் என்ற உம்மை தள்ளாமை பெரும்பான்மை யாதலையும் தள்ளுதல் சிறுபான்மை யாதலையும் விளக்கி நிற்றலால், முழுவதும் தழுவாத எதிர்மறைப் பொருளது. ○ தள்ளிய வழியும் - தவறிய விடத்தும்.

வழியுந் தாளாண்மையிற் றவறின்றி நல்லோராற் பழிக்கப்படாமையின், தள்ளாவியற்கைத் தென்பதாம். மேல் 'உள்ளத் தனைய துயர்வு' என்றதனையே வற்புறுத்தியவாறு.

நேஎ:—(இ - ன்.) (அரசராயினர்) உள்ளுவதெல்லாம் - நினைப்பதெல்லாம், உயர்வு - (தமது) உயர்ச்சியையே, உள்ளல்-நினைக்கக்கடவர், அது-அவ்வுயர்ச்சியானது, தள்ளினும் - (ஊழ்வகையால்) கூடியதில்லையாயினும், (அந்நினைப்பு), தள்ளாமை நீர்த்து - தள்ளாமைத் தன்மையதாம், (எ - று).

மற்று-அசைநிலை. தள்ளினுமென்ற உம்மை தள்ளாமை பெரும்பான்மையாதலை விளக்கியது. (அவ்வுயர்ச்சி ஊழ்வகையால்) தள்ளியவிடத்தும் முயற்சியிற் றவறுதல் இல்லாமல் நல்லோரால் பழிக்கப் படாமையால், (அந்நினைப்பு) தள்ளாத இயற்கையுடைய தென்பதாம். முன்னே 'உள்ளத்தனைய துயர்வு' என்றதனையே உறுதிசெய்தவாறும். உள்ளல் என்பது அல்லீற்று முடம்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

(க - து.) அரசர் முயற்சியிற் றவறாது நின்று தமக்குயர்ச்சியையே கருதக்கடவர் என்பது.

6. In all that a king thinks of, let him think of his greatness; and if it should be thrust from him by fate, it will have the nature of not being thrust from him.

எ. சிதைவிடத் தோல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டேன்றுங் களிறு.

பரி:—(இ - ள்.) களிறு புதையாகிய அம்பாற் புண்பட்டவிடத்துத் தளராது தன்பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல, ஊக்கமுடையார் தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்தவிடத்துத் தளராது தம் பெருமையை நிலைநிறுத்துவர், (எ-று).

புதை - * அம்புக்கட்டு; † பன்மை கூறியவாறு. பட்டாலென்பது ‡ பட்டென்றதிரிந்து நின்றது. ¶ ஒல்காமை களிற்றுடனும் பாடின்றுதல் உ

* அம்புக்கட்டு - அம்பின் தொகுதி. அம்பு - பாணம்.

† பன்மை - அம்பின் பன்மை.

‡ பட்டு என்ற செய்தென்னும் வாய்ப்பாட்டு வினை யெச்சம் ஈண்டும் என்னும் வேறு வினைமுதலின் வினையைக் கொண்டு முடிதற்கு விதியில்லாமையால் 'பட்டால் என்பது பட்டெனத் திரிந்துநின்றது' என்று கூறப் பட்டது. இங்கு வேறுவினைமுதல்களிறு; அதன்வினை ஈண்டும் என்பது.

¶ உரவோர் என்னும் உவமேயத்திற்குக் கூறிய ஒல்காமை உவமானமான களிற்றேடும், களிறு என்னும் உவமானத்திற்குக் கூறிய பாடின்றுதல் உவமேயமான உரவோரோடும் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது. ஒல்கார் என்பதன் பகுதி ஒல்காமை எனவும், பாடின்றும் என்பதன் பகுதி பாடின்றுதல் எனவும் அறிக. களிறு ஒல்காமை (ஒல்காமல்) பாடின்றும் என்றும், உரவோர் ஒல்காமை (ஒல்காமல்) பாடின்றுவர் என்றும் கொள்க. பாடின்றுதல் - பெருமையை நிலைநிறுத்தல். ஒல்குதல்-தளருதல்.

வோருடனும் சென்றியையந்தன. தள்ளினும் தவறுது * உள்ளியது முடிப்ப ரென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஊக்கமுடையாரது உயர்ச்சி கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) களிறு - யானை, புதையம்பின் - கட்டாகிய அம்பி னல், பட்டால் - (புண்) பட்டவிடத்து, பாடின்றும் - (தளராமல் தன்) பெ ருமையை நிலைநிறுத்தும், (அதுபோல), உரவோர் - மனவெழுச்சியையுடை யவர், சிதைவிடத்து - (தாம் நினைத்த உயர்ச்சிக்கு) அழிவுவந்தவிடத்து, ஒல் கார் - தளரார், (தளராமல் தம்பெருமையை நிலைநிறுத்துவார்), (எ - று).

புதை - அம்பின்கட்டு ; அப்புதையென்பது அம்பு பல வென்பதை அறிவித்து நின்றது. பட்டவிடத்து என்னும் பொருளதான பட்டால் என் பது பட்டு எனத்திரிந்து நின்றது. ஒல்காமை களிற்றுடனும், பாடின்றுதல் உரவோருடனும் சென்று பொருந்தின. (தாம் நினைத்த வுயர்ச்சி ஊழ்வகை யால்) கூடியதில்லாயினும் தவறுமல் நினைத்ததை முடிப்பரென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் ஊக்கமுடையாரது உயர்ச்சி சொல்லப்பட்டது.

(க - து.) ஊக்கமுடையவர் தாம் நினைத்த வுயர்ச்சிக்கழிவு வந்த விடத்துந் தளர்ச்சியடையார் என்பது.

7. The strong-minded will not faint, even when all is lost; the elephant stands firm, even when wounded by a shower of arrows.

அ. உள்ள மிலாதவ ரேய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

பரி:—(இ - ள்.) ஊக்கமில்லாத அரசர் இவ்வுலகத்தாருள் யாம் † வண்மையுடையமென்று தம்மைத்தா மதித்தலைப் பெறார், (எ - று).

‡ ஊக்கம் இல்லையாகவே முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவை முறையே இலவாமாகலின், செருக்கெய்தார் என்றார். ¶ கொடை வென்றியினை இன்பம் தமக்கல்லது பிறர்க்குப் புலனுகாமையின், o தன் மையாற் கூறப்பட்டது.

* உள்ளியது - தாமெண்ணிய உயர்ச்சியை.

† வண்மையுடையம் - ஈகைக் குணமுடையம்.

‡ ஊக்கத்தினுல் (உற்சாகத்தினுல்) முயற்சியும், முயற்சியினுல் பொரு ளும், பொருளினுல் கொடையும் (பிறர்க்குக் கொடுத்தலும்), கொடையினுல் (வள்ளியமென்னும்) செருக்கும் ஒன்றன்பின் ஒன்றாய்க் கிரமமாயுண்டா கின்றன. இவற்றுள், முதலாவதான ஊக்கம் இல்லாமல் போனுல் மற்ற வையும் முறையே இலவாய்ப் போமென்க. 'ஊக்கம் இவ்வியாகவே முயற் சி' என்றமையின், ஊக்கம் வேறு, முயற்சிவேறு என்பது நன்கு விளங்கும்.

¶ கொடைவென்றியினை என்பதற்குக் கொடைச் செருக்கினுலுண் டாய என்றும் பொருள் கொள்ளலாம்.

o தன்மையாற் கூறப்பட்டது - வள்ளியம் (ஈகைக் குணமுடையம்) என்று தனித் தன்மைப் பன்மை வினைமுற்றாற் சொல்லப்பட்டது.

தெளி:—(இ - ள்.) உள்ளமிலாதவர் - ஊக்கமில்லாத அரசர், உலகத்தை - இவ்வுலகத்தாருள், வள்ளியமென்னும் - (யாம்) வண்மையையுடையேமென்று (தம்மைத்தாம்) மதிக்கும், செருக்கு - மதிப்பை, எய்தார் - பெறார், (எ - று).

(அரசர்க்கு) ஊக்கமில்லாமையே முயற்சி, பொருள், கொடை, செருக்கு என்னும் இவை முறையே இல்லாமாதலால், (உள்ளமிலாதவர்) செருக்கெய்தார் என்றார். கொடை வெற்றிகளால் ஆகிய இன்பம் தமக்கல்லது பிறர்க்கு வெளியாகாமையால், 'வள்ளியம்' என்று தன்மை யிடத்தாற் சொல்லப்பட்டது.

(க - து.) ஊக்கமில்லாதவர் உலகில் மதிப்படையார்.

8. Those who have no greatness of mind, will not acquire the joy of saying in the world, "we have exercised liberality".

கூ. † பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

பரி:—(இ - ள்.) **எல்லா விலங்கினும் தான் பேருடம்பினது, அது வேயுமன்றிக் கூரியகோட்டையும் உடையது, ஆயினும், யானை தன்னைப் புலியெதிர்ப்படின் அதற்கஞ்சும், (எ - று).**

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய்வலியுங் ‡ கருவிச் சிறப்பும் உடைத்தாயினும் யானை ஊக்கமின்மையான் ¶ அஃதுடைய அதற்கு அஞ்சுமென்ற இது, பகைவரின் மிக்க மெய்வலியுங் கருவிச் சிறப்பும் உடையராயினும் அரசர் ஊக்கமிலராயின் ○ அஃதுடைய அரசர்க் கஞ்சுவரென்பது தோன்ற நின்றமையின், * பிறிதுமொழிதல்.

தெளி:—(இ - ள்.) யானை - பரியது - (எல்லா விலங்குகளிலுந் தான்) பெரிய உடம்பையுடையது, (அதுவேயுமன்றி), கூர்ங்கோட்டது - கூர்மையான கொம்புகளையு முடையது, ஆயினும் - ஆனாலும், புலி - தாக்குறின் - (தன்னை) எதிர்ப்படின், வெரூஉம் - (அப்புலிக்கு) அஞ்சும், (எ - று).

பேருடம்பால் (யானைக்கு) வலிமிகுதி சொல்லப்பட்டது. புலியைக் காட்டிலும் மிகுந்த உடல்வலியையும் வெல்லுதற்குச் சிறந்த தந்தத்தையும் உடையதாயினும் யானை ஊக்கமில்லாமையால் அதனையுடைய அப்புலிக்கு அஞ்சுமென்ற இக்குறள், பகைவரைக்காட்டிலும் மிகுந்த உடல்வலியையும்

---

† "நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாகநண்ணி, மறமனை வேங்கை யெனவரி யஞ்சும்" என்பது திருக்கோவையார்.

‡ கருவிச் சிறப்பு - தந்தமாகிய சிறந்த கருவியும்.

¶ அஃதுடைய - ஊக்கமுடைய. ○ அஃதுடைய - ஊக்கமுடைய.

* உவமேயத்தைக் கூறாமல் உவமானத்தைக் கூறி, அவ்வுவமானத்தினால் உவமேயத்தை விளங்க வைத்தல் பிறிது மொழிதலாம்.

வெல்லுதற்குச் சிறந்த ஆயுதத்தையும் உடையவராயினும் அரசர் ஊக்கமிலராயின், அதனையுடைய அரசர்க்கு அஞ்சுவதென்பது தோன்றநின்றலால், பிறிதுமொழிதலென்னு மலங்காரமாம்.

(க - து.) அரசர் உடல் வலியும் படையு முடையவராயினும் ஊக்கமிலராயின், அவர் ஊக்கமுடைய அரசர்க்கஞ்சுவர் என்பது.

9. Although the elephant has a large body, and a sharp tusk, yet it fears the attack of the tiger.

கo. உரமொருவற் † குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

பரி:—(@ - ள்.) ஒருவற்குத் ‡ திண்ணிய அறிவாவது ஊக்கமுதலி; அவ்வூக்கமுதலியில்லாதார் மக்களாகார், மரங்களாவார்; ¶ சாதிமரங்களோடு இம்மரங்களிடை வேற்றுமை வடிவு மக்கள்வடிவே, பிறிதில்லை.

உரமென்பது அறிவாதல் * 'உரனென்னுந் தோட்டியான்' என்பதனானுமறிக. மரமென்பது சாதியொருமை. மக்கட்குள்ள நல்லறிவுங் காரியமுயற்சியும் இன்மைபற்றி 'மரம்' என்றும், மரத்திற்குள்ள பயன்பாடின்மை பற்றி 'மக்களாதலே வேறு' என்றுங் கூறினர். பயன்-பழமுதலியவும், தேவர் கோட்டம், இல்லம், தேர், நாவாய்கட்கு உறுப்பாதலும் முதலிய. இவை மூன்று பாட்டானும் ஊக்கமில்லாதாரது இழிபு கூறப்பட்டது.

தெளி:—(இ-ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, உரம் - (திண்ணிய) அறிவாவது, உள்ள வெறுக்கை - ஊக்கமிகுதியாம், அஃது-அவ்வூக்கமிகுதியை, இல்லார் - இல்லாதவர், மரம் [மக்களாகார்] மரங்களாவார், வேறு - (சாதிமரங்களோடு இம்மரங்களிடத்து) வேற்றுமை வடிவு, மக்களாதலே-மக்கள்வடிவே, [வேறில்லை], (எ - று).

மரமென்பது வருமொழி நோக்காது பன்மைப்பொருளுணர்த்துதலின், சாதியொருமைப்பெயராம். (ஊக்கமில்லாதாரிடத்து) மக்களுக்குள்ள நல்லறிவும் காரியமுயற்சியும் இல்லாமைபற்றி (அவரை) 'மரம்' என்றும், மரத்திற்குள்ள பயன்படுதலில்லாமைபற்றி 'மக்களாதலே வேறு' என்றும் சொல்லினர். மரத்திற்குப் பயன் - பழமுதலியனவும், தேவாலயம், வீடு, தேர், மாக்கலமென்னுமிவற்றிற்கு உறுப்பாதலு முதலியன ஆம். இவை மூன்று பாட்டானும் ஊக்கமில்லாதவரது இழிவு சொல்லப்பட்டது.

† உள்ள வெறுக்கை - உள்ளத்தி னூக்க மிகுதி. உள்ளம்-மனம்; வெறுக்கை - ஊக்கமிகுதி.

‡ திண்ணிய - உறுதியான.

¶ சாதி மரங்களோடு இம்மரங்களிடை - இயல்பாயுள்ள மரங்களுடன் இம்மக்களாகிய மரங்களிடத்து.

* நீத்தார் பெருமை, ச.

(க - து.) ஊக்கமுடையவர் மக்களாவார்; மற்றவர் மரங்களாவார் என்பது.

10. *E*nergy is mental wealth; those men who are destitute of it are only trees in the form of men.

இருபத்து மூன்றும் அதிகாரம்.

மடியின்மை—*Against Idleness.*

பரி:—அஃதாவது கருதியன செய்யுங்கால் சோம்புதலில்லாமை. ஊக்கமுடையார்க்கு ஒரோவழிக் † குணவயத்தான் மடி வருதலுண்டாகி, இஃதொக்க முடைமையின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது எண்ணிய காரியங்களைச் செய்யுங் காலத்தில் சோம்புதலில்லாமை. ஊக்கமுடையவர்க்கு ஒரோவிடத்துத் தாமதகுண வசத்தால் மடி (சோம்பல்) வருதலே கோக்கி, இஃது (மடியின்மை) ஊக்க முடைமையின் பின் வைக்கப்பட்டது.

க. குடியென்னுங் குன்ற விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்.

பரி:—(இ - ள்.) தான்பிறந்த ‡ குடியாகிய நந்தா விளக்கு ஒருவன் மடியாகிய இருளடை நந்திப்போம், (எ - று).

¶ உலகநடையுள்ள தன்மையும் $ இடையுருதி + தன்னுட் பிறந்தாரை விளக்குதலின் குடியைக் ‘குன்ற விளக்கம்’ என்றும், * தாமதகுணத்தான்

† குணவயத்தான் - தாமத குணத்தின் வசப்படுதலால். தாமத குணத்தின் வடிவம் மோகமாம். பேருண்டி, அநீதி, உறக்கம், மறதி, சோம்பல், தவறுதல், கொலை, வஞ்சனை முதலியன தாமதகுணத்தாற் பிறன்றுவனவாம். “நிரமறு சகமெய் யென்றுந் தேகநா னென்று முன்னே, விரவிய மோகந் தானே விபரீத மென்பர் மேலோர்” என்று கைவல்லிய நவநீதங் கூறுகின்றது. ‡ குடி - உயர்ந்த குலம்.

¶ உலக நடை - அவன், அவள், அது, நான், நீ என்றற்றொடக்கத்தன வாக வழங்கும் உலகவியவகாரம்.

$ இடையுருதி - நடுவே நீங்காது.

+ தன்னுட் பிறந்தாரை - தன் வமிசத்திற் பிறந்தவரை.

* காரியவடிவினதாகிய தாமதகுணத்தினால் சோம்பலுண்டாதலின், தாமதகுணத்தின் கருமையை அதன் காரியமாகிய சோம்பலின்மே லேற்றி ‘மடியென்னு மாசு’ என்று கூறினர். தாமதகுணம்-காரணம்; சோம்பல்-காரியம்; குணம்-கருமை. இது காரணத்தின் குணம் காரியத்திற்காய உபசாரவழக்காம். “குறியு நீல மயக்கமுங் கோதிலா, நெறிக டம்மை யிகழ்தலு கித்திரை, செறித லானது மற்றிவற் றுற்றிண்ணெனின், றறிவை மாய்க்கு மதுதம மாவதே” என்று பகவத்கீதை கூறுவது மிங்கறியத் தக்கதாம்.

வருதலின் மடியை 'மாசு' என்றும், * அஃது எனையிருள்போ லாது † அவ் விளக்கத்தைத் தான் அடர்ந்து மாய்க்கும் வலியுடைமையின்'மாசுர மாய்ந்து கெடும்' என்றுங் கூறினர். கெடுதல்-பெயர் வழக்கமும் இல்லையாதல்.

தெளி:—(இ - ள்.) குடியென்னுங் குன்றுவிளக்கம் - (தான் பிறந்த) குடியாகிய மழுங்காத விளக்கானது, மடியென்னுமாசு - (ஒருவனது) சோம் பலாகிய இருளானது, ஊர - நெருங்க, மாய்ந்துகெடும் - மழுங்கிக் கெ டும், (எ - று).

உலகடை யுள்ளவளவும் இடையறாது தன்னுட் பிறந்தவரை விளக் குதலால் குடியைக் 'குன்றுவிளக்கம்' என்றும், தாமதகுணத்தினால் வருத லால் சோம்பலை'மாசு'என்றும், அது மற்றையிருள்போலாகாமல் அவ்விளக்க த்தைத் தான் நெருங்கி மாய்க்கும் வலியுடைமையால் 'மாசுரமாய்ந்துகெடும்' என்றும் சொல்லினர். கெடுதல்-குடிப்பெயர் வழங்குதலுமில்லாமற் போதல். மற்றையிருள் - புறவிருளாம்; மடியென்னுமாசு - அகவிருளாம்.

(கு-து.) சோம்பலுடையவனது குடியானது தன் பெயர்வழ ங்குதலு மில்லாது கெடும் என்பது.

1. By the darkness of idleness, the indestructible lamp of family rank will go out and be extinguished.

2. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

பரி:—**(இ - ள்.) தாம் பிறந்த குடியை மேன்மேலுயரும் நற்குடியா கவேண்டுவார் மடியை மடியாகவேகருதி முயற்சியோடொழுகுக,(எ-று).**

முயற்சியோடென்பது அவாய் நிலையான் வந்தது. நெருப்பிற் கொடி யது பிறிதின்மைபற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுகவென்றற்போல ‡ மடியிற்றீயது பிறிதின்மைபற்றிப் பின்னும் ¶அப்பெயர் தன்னனே கூறி னர். அங்ஙனங்கருதி அதனைக் கடிந்து முயன்றொழுகவே தாமுயர்வர்; உய ரவே, குடியுயருமென்பார் 'குடியைக்குடியாக வேண்டுபவர்' என்றார். அங்ங னம் ஒழுகாக்காற் குடியழியு மென்பது கருத்து.இனி †மடியாவென்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுகுகவென் றுரைப்பாருமுளர்.

* அஃது - மடியென்னு மாசு.

† அவ்விளக்கத்தை - குடியென்னுங் குன்றுவிளக்கத்தை. குடியென் னுங் குன்றுவிளக்கமென்பது உருவகமாம்.

‡ மடியிற்றீயது-சோம்பலினுந் நிமையைத்தருவது.

¶ அப்பெயர் தன்னனே-மடியா என மடியென்னும் பெயரினுலேயே.

†மடியா என்பதனைச் செய்யா என்னும் வாய்பாட்டுவினையெச்சமாக்கி மடியாவொழுகல் என்பதற்கு (மடியைக்) கெடுத்து நடக்கக் கடவர் என்று பொருள் கூறுவாருமுண்டென்பது.

தெளி:—(இ - ள்.) குடியை - (தாம்பிறந்த) குடியை, குடியாக -(மேல் மேலுயரும்) நீற்குடியாக, வேண்டுபவர் - விரும்புகின்றவர், மடியை - சோம்பலை, மடியா - சோம்பலாகவே, (நினைத்து), ஒழுகல் – (முயற்சியோடு) ஒழுகக் கடவர், (எ - று).

ஒழுகல் என்னும் அல்லீற்று வியங்கோள் வினைமுற்று முயற்சியோடென்பதை வேண்டி நிற்றலால், முயற்சியோடென்பது வருவித் துரைக்கப் பட்டது. நெருப்பைக் காட்டிலுங் கொடியது வேறில்லாமைபற்றி நெருப்பை நெருப்பாகவே நினைக்கவேண்டும் என்றதற்போல மடியைக்காட்டிலுங்கீழ்ய து வேறில்லாமைபற்றி (அதனை) பின்னும் (மடியா என) அப்பெயரினாலேயே சொல்லினர். மடியை மடியாகவே நினைத்து அம்மடியை யொழித்து முயற்சி செய்து நடக்கவே தாம் உயர்வர்; தாம் உயரவே, குடியுயருமென் பார் 'குடியைக் குடியாக வேண்டுபவர்' என்றார். மடியையொழித்து முயற்சி செய்து நடக்காவிட்டால் குடியழிந்துபோம் என்பது கருத்து.

(க - து.) சோம்பலை விட்டொழுகுவோர் தாம் பிறந்த குடியை மேல்மே லுயரச்செய்வ ரென்பது.

2. Let those, who desire that their family may be illustrious, put away all idleness from their conduct.

ரூ. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

பரி:—(இ - ள்.) விடத்தகுவதாய மடியைத் தன்னுள்ளே கொண்டொழுகும் அறிவில்லாதான் பிறந்தகுடி அவன் தன்னினும் முந்துற அழியும், (எ - று).

அறிவு தருவதனை அகத்தே கொண்டொழுகுதலின் 'பேதை' என்றும், * அவனுற் புறந்தரப்படுவதாகலின் † குடி தன்னினு முந்து மடியும் என்றும் கூறினர். ‡ ஆக்கத்திற் பிற்படினும் அழிவின் முற்படு மென்பதாம், (எ-று).

* அவனுல் (அறிவில்லாதவனுல்) புறந்தரப்படுவதாகலின் (பாதுகாக்கப்படுவதாகலால்) குடி (அவனதுமுயற்சியால் உண்டாவதான குடிவாழ்க்கை) தன்னினும் (அவ்வறிவில்லாதவனிலும்) முந்துமடியும் (முன்னே அழிந்தொழியும்) என்பது. ஒருவனுற் பாதுகாக்கப்படும் குடிவாழ்க்கை அவனுக்குப்பிற்பட்டதாயிருத்தலால், அவனுல் அக்குடி வாழ்க்கை பாதுகாக்கப் படாதொழியின், அஃது அவனழிவதற்கு முன்னே அழிந்துபோ மென்பது கருத்து.

(சோம்பலுடையவனது குடிவாழ்க்கை அவன் உள்ளபோதே கெட்டொழியும் என்பதாம்).

† குடி தன்னினு முந்துற அழியும் என்றும் பாடமுண்டு.

‡ ஆக்கத்திற் பிற்படினும் (குடிவாழ்க்கை மேன்மேலுயருதலில் பிற்பட்டாலும்) அழிவின் (அழிதலில் தன்னைப் பாதுகாவாதவனுக்கு) முற்படும் என்பதாம்.

தெளி:—(இ - ள்.) மடி - விடத்தகுவதாகிய, மடி - சோம்பலே, கொண்டு - (தன்னுள்ளே) கொண்டு, ஒழுகும் - நடக்கும், பேதை - அறிவில்லாதவன், பிறந்த குடி - பிறந்த குடியானது, 'தன்னினும் - அவன்தன்னினும் முந்து-முற்பட, மடியும் - அழியும், (எ - று).

அழிவதருஞ் சோம்பலே மனத்துள்ளேகொண்டு நடத்தலால் 'பேதை' என்றும், அவனால் காப்பாற்றப்படுவதாகலால் குடி தன்னினு முந்து மடியும் என்றும், சொல்லினர். (மடிமடிக்கொண்டொழுகும் பேதை பிறந்த) குடி ஆக்கத்தில் பிற்படினும் அழிவில் முற்படு மென்பதாம்.

(க - து.) சோம்பலுடையவன் பிறந்த குடி விரைந்துகெடும்.

3. The lustre of the family of the ignorant man, who acts under the influence of destructive laziness, will perish, even before he is dead.

ச. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுளூற்றி லவர்க்கு.

பரி:—(இ - ள்.) **மடியின் கண்ணே * வீழ்தலாற்றிருந்திய முயற்சியிலராயினர்க்கு குடியும் மடிந்து குற்றமும் பல்கும், (எ - று).**

மடிக்தெனத் திரிந்து நின்ற வினையெச்சம் இலவென்னும் குறிப்பு வினைப் பெயர் கொண்டது. குற்றங்கள் முன்னர்க்கூறப. இவை நான்கு பாட்டானும் மடியின் தீமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) மடி - சோம்பலிலே, மடிந்து - வீழ்தலால், மாண்டவுளூற்றிலவர்க்கு - திருந்திய முயற்சியிலராயினர்க்கு, குடி - குடியும், மடிந்து - அழிந்து, குற்றம் - குற்றங்களும், பெருகும்-அதிகரிக்கும், (எ-று).

மடிந்து எனத்திரிந்து நின்ற மடிதலால் என்னும் (செயின் என்னும் வாய்பாட்டு) வினையெச்சம் இலவர் என்னும் எதிர்மறைக் குறிப்புவினையால ணையும் பெயரைக்கொண்டு முடிந்தது. மடிதலால் இலவர் என்றும். குற்றங்களைப் பின்வருங் குறள்களிற் சொல்லுவார். இவை நான்கு பாட்டாலும் சோம்பலினது தீமை சொல்லப்பட்டது. உளூற்றிலவர்க்கு என்பது உளூற்று+இலவர்+கு என்று பிரிபடும்.

(க - து.) சோம்பலால் முயற்சியில்லாதிருப்பவர் குடியை யிழப்பது மன்றிக் குற்றமு மடைவர் என்பது.

4. Family greatness will be destroyed, and faults will increase, in those men who give way to laziness, and put forth no dignified exertions.

ரு. நெடுநீர் மறவி மடிதுயி லைந்துங்
கெடுநீரார் காமக் கலன்.

* வீழ்தலால் - ஆசைப்படுதலால்.

பரி:—(இ - ள்.) மடியும், விரைந்து செய்வதனை நீட்டித்துச்செய்யும் இயல்பும், மறவியும், துயிலும் ஆகிய இந்நான்கும் இறக்கும் இயல்பினை யுடையார் விரும்பி யேறும் மரக்கலம், (எ-று).

* முன்னிற்றற் பாலதாய மடி செய்யுள் நோக்கி இடை நின்றது. நெடுமையாகிய † காலப்பண்பு ‡ அதன்கண் நிகழ்வதாய செயன்மே னின்றது. கால நீட்டத்தையுடைய செயன் முதன் மூன்றும் தாமதகுணத்நிற் ரேன்றி உடன் நிகழ்வனவாகலின், மடியொடு ஒருங்கெண்ணப்பட்டன. இறக்கும் இயல்பு - காலுலத்தல். இவை தன்புறு நீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி அவர் விரும்பிச் கொண்டவழித் தன்பத்திடை வீழ்த்தலின், நாளுலந்தார்க்கு ஆக்கம் பயப்பதுபோன்றுகாட்டி அவர் விரும்பி யேறியவழிக்கடலிடை வீழ்க்குங் கலத்தினையொக்கு மென்னும் ¶உவமைக்குறிப்புக் 'காமக்கலன்'என்னுஞ் சொல்லாற் பெறப்பட்டது. + இதற்கு விரும்பப் பூணும் ஆபரணமென் றுரைப்பாரு முளர்.

தெளி:—(இ - ள்.) மடி - சோம்பலும், நெடுநீர் - (விரைந்து செய்யுங் காரியத்தை) நீட்டித்துச்செய்யுந் தன்மையும், மறவி - மறதியும், துயில் - துயிலும்,(ஆகிய), நான்கும் - இந்த நான்கும்,கெடுநீரார் - இறக்குமியல்பினை யுடையவர், காமக்கலன் - விரும்பியேறும் மரக்கலமாம், (எ - று).

---

* விரைந்து செய்யவேண்டியதைத் தாமதித்துச்செய்தல், மறதி, தூக்கமென்பனவற்றிற்கு மடி (சோம்பல்) தலைமையாயிருப்பதுபற்றி அது முன்கிற்றற் பாலதாயிற்று.

† காலப்பண்பு - காலத்தின்குணம். இங்குக் காலத்தின் குணம் நெடுமை.

‡ இங்குக்காலத்தின் நெடுமைக்குணம் (காலதாமசம்) அதன்கண் நடைபெறுவதாய செயல்மேல் நின்றதென்பது. இஃது இடத்தின் குணம் இடத்து நிகழ் செயலின்மே லாய உபசாரவழக்காம்.

¶ உவமைக்குறிப்பு-உருவகம். நச்சினர்க்கினியார் "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலே." என்னும் (தொல்காப்பியம் உவமவியற்)சூத்திரத்தின் விசேட வுரையில் "வாயென்ற பவளமெனவும், வாய் பவளமாகவெனவும், வாய் பவளமெனவும் வந்த பவளக்குறிப்புவமைகளோ யிக்காலத்தார் உருவக மென்றே வழங்குப. இனி வாய்பவளமெனவும், கண் கருவிளையெனவும், பெயர்ப்பயனிலை வரின் அவற்றை யொற்றுமைகாட்டி யுருவகம் என்ற ராகலின், அதுவும் உவமை யெனவேபடு மென்பது" என்றனர்.

+ காமக்கலன் என்பதற்கு விரும்பித்தரிக்கும் ஆபரணமென்று பொருள்கூறுவாருமுண்டென்பது. [மரக்கலம் மரணம்சமீபித்தவர்க்குப்பெருக்கந்தருவதுபோலத்தோன்றி அவர் விரும்பி ஏறியவிடத்து அவரைக்கடலில் விழுத்துமாறுபோல மடி முதலிய நான்கும் தன்பஞ் சமீபித்தவர்க்கு இன்பஞ் செய்வனபோலத்தோன்றி அவர் விரும்பிக்கொண்டவிடத்து அவரைத் தன்பத்தில் விழுத்தும் என்பதாம்.]

மடி நெடுநீர் மறவி துயில்என்று முன்நிற்றற்பான்மையதான மடியென் பது செய்யுள்நோக்கி 'நெடுநீர் மறவி மடி துயில்' என நடுவே நின்றது. நெடு மையாகிய காலப்பண்பு அக்காலத்தில் நடப்பதாய தொழிலின்மேல் நின் றது. காலதாமதத்தையுடைய செயல், மறவி, துயில் என்னும் மூன்றும் தா மதகுணத்தில் தோன்றி மடியுடன் நடைபெறுவனவாதலால், மடியுடன் ஒரு மித்தெண்ணப்பட்டன. இறக்குமியல்பு-வாழ்நாள்கெடுதல். இம்மடிமுதலியவா ன்கும்தின்புறுத்தன்மை யுடையவர்க்கு இன்பந்தருவனபோலக் காண்பித்து, அவர் விரும்பிக்கொண்டவிடத்து (அவரை) தன்பத்தில் தள்ளுதலால், வாழ் நாள் கெட்டவர்க்குப் பெருக்கத்தைத்தருவதுபோலக் காண்பித்து அவர் விரு ம்பியேறியவிடத்து (அவரை) கடலில் வீழச்செய்யும் மரக்கலத்தை யொக் கும் என்னும் உவமானக் குறிப்புக்'காமக்கலன்'என்னும் சொல்லாற்பெறப் பட்டது.

(க - து.) சோம்பல் முதலியவற்றை விரும்புவோர் விரை வாகக் கெடுவர் என்பது.

5. Procrastination, forgetfulness, idleness, and sleep, these four things, are the ornaments desired by those whose nature leads them to destruction.

கூ. படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது.

பரி:—(இ - ள்.) நிலமுழுதும் ஆண்டாரது செல்வம் தானே வந்தே தெய்தியவிடத்தும், மடியுடையார் அதனை * மாண்பயனே யெய்துதலில்லை, (எ - று).

† உம்மை எய்தாமை விளக்கி நின்றது. மாண்பயன் - பேரின்பம். ‡ அச்செல்வம் அழியாமற் காக்கும் முயற்சி யின்மையின் அழியும்; அழிய வே, ¶ தந்துன்ப நீங்காதென்பதாம். + இதற்கு நிலமுழுதுமுடையவேந்தர் துணையாதல் கூடியவிடத்தும் என்றுரைப்பாருமுளர்.

தெளி:—(இ - ள்.) படியுடையார்-நிலமுழுதும் ஆண்ட அரசாது, பற் று - செல்வமானது, அமைந்தக்கண்ணும்-(தானேவந்து) சேர்ந்தவிடத்தும்,

* மாண்ட - மாட்சிமையான.

† அமைந்தக்கண்ணும் என்றவும்மை எதிர்மறையும்மையாம். இவ்வெ திர்மறையும்மை மடியுடையார் படியுடையார் பற்று (நிலமுழுதும் ஆண்ட அரசாது செல்வத்தை) எய்தாமையை விளக்கி நின்றது.

‡ அச்செல்வம் - நிலமுழுதும் ஆண்டாரது செல்வம்.

¶ தந்துன்பம் - சோம்பலுடையார் தமது தின்பம்.

+ படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் என்பதற்குப் பூமிமுழுதும் உடைய அரசர் துணையாதல் கூடியவிடத்தும் என்று பொருள் கூறுவாரு முண்டென்பது.

மடியுடையார் - சோம்பலுடையவர், (அச்செல்வத்தால்); மாண்பயன் - பெரின்பத்தை, எய்தலரிது - அடைதலில்லை, (எ - று).

அமைந்தக்கண்ணும் என்ற உம்மை அடையாமையை விளக்கிநின்றது. (மடியுடையாரிடத்து) அச்செல்வமானது அழியாமற்காக்கும் முயற்சியில்லாமையினால் அழியும்; அழியவே, தமது தன்பம் ஒழியாதென்பதாம்.

(க - து.) சோம்பலுடையார் பெருஞ் செல்வத்தைப் பெற்றாயினும், அதனாற் பேரின்பத்தைப் பெறார் என்பது.

6. It is a rare thing for the idle, even if they receive the aid of kings, to derive any great benefit from it.

எ. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுளுற்றி லவர்.

பரி:—(இ - ள்.) மடியை விரும்புதலான் மாண்டழியுஞ்சியில்லாதார் தம் நட்டார் முன் * கழறுதலே மிகச்செய்து † அதனாற்பயன் காணுமையின் பின் இகழ்ந்து சொல்லுஞ் சொல்லைக் கேட்பர், (எ - று).

‡ இடியென்னும் முதனிலைத்தொழிற் பெயரான், நட்டாரென்பது பெற்றும். ¶ அவரிகழ்ச்சி சொல்லலே, பிறரிகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. + அவற்றிற்கெல்லாம் மாறுசொல்லும் ஆற்றலின்மையின் 'கேட்பர்' என்றார்.

தெளி:—(இ - ள்.) மடிபுரிந்த - சோம்பலை விரும்புதலால், மாண்ட - பெருமைபொருந்திய, உளுற்றிலவர் - முயற்சியில்லாதவர், இடிபுரிந்த - (தமது நட்டார் முன்னர் மிகவும்) கண்டித்துப்புத்திசொல்லி, (அதனாற் பயன்காணுமையினால்), எள்ளுஞ்சொல் - (பின்னர்) இகழ்ந்துசொல்லும் சொல்லை, கேட்பர்—, (எ - று).

கண்டித்துப் புத்திசொல்லுதல் என்னும் பொருளதான இடியென்னும் முதனிலைத் தொழிற்பெயரினால் அவ்வாறு சொல்லுவார் நட்டாரென்பது பெற்றும். அவரிகழ்தல் சொல்லலே, பிறரிகழ்தல் சொல்லாமலே பெறப்பட்டது. அவற்றிற்கெல்லாம் எதிர்பேசும் வலிமையில்லாமையால் 'கேட்பர்' என்றார்.

---

* கழறுதல்-இடித்துடித்துக் கட்டுரை (உறுதிமொழிகளைக்) கூறுதல்.

† அதனால் - கழறுதலை மிகச்செய்வதனால்.

‡ "நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண், மேற்சென் றிடித்தற் பொருட்டு" என்னுங்குறள் இங்குக் கவனிக்கத்தக்கதாம்.

¶ அவரிகழ்ச்சி - நட்டார் இகழ்ந்துபேசுதலே.

+ அவற்றிற்கெல்லாம்-நட்டாரும் பிறரும் இகழ்ந்துபேசுவனவற்றிற் கெல்லாம்.

(க-து.) சோம்பலுடையவர் தம்மைப்பற்றி நட்டாரும் பிறரும் இகழ்ந்துசொல்லுதலைக்கேட்பர் என்பது.

7. Those who love idleness, and do not engage in dignified exertions, will hear the words of rebuke and reproach.

அ. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஞெண்ணுர்க்
கடிமை புகுத்தி விடும்.

பரி:—(இ - ள்.) **மடியினது தன்மை குடிமை உடையான்கண்ணே தங்குமாயின்,* அஃது † அவனைத் தன் பகைவர்க்கு அடியனுந் தன்மையை அடைவித்துவிடும்,** (எ - று).

மடியினது தன்மை - ‡ காரியக்கேடு. ¶ குடிமை - § குடிசெய்தற்றன்மை. 0 அஃது அதனையுடைய அரசன்மேற்றாதல் 'தன்ஞெண்ணுர்க்கு' என்றதனுனறிக. அடியனுந்தன்மை - தாழ்ந்து நின்றேவல் கேட்டல். இவை நான்குபாட்டானும் மடிமைக்குற்றங்கள் கூறப்பட்டன.

தெளி:—(இ - ள்.) மடிமை - சோம்பலினது தன்மையானது, குடிமைக்கண் - குடிமையுடைய அரசனிடத்தே, தங்கின் - தங்குமாயின், (அஃது அவனை), தன்ஞெண்ணுர்க்கு - தன்பகைவர்க்கு, அடிமை - அடியனுந்தன்மையை, புகுத்திவிடும் - அடைவித்துவிடும், (எ - று).

சோம்பலினதுதன்மை - காரியக்கேடு. குடிமை - குடிசெய்தற்றன்மை. அஃது அதனையுடைய அரசன்மேலாதலை 'தன்ஞெண்ணுர்க்கு' என்றதனுல் அறிக. அடியனுந்தன்மை - (தன்பகைவர்க்கு) வணங்கி நின்றேவல் கேட்டல். இவை நான்குபாட்டாலும் சோம்பலின் குற்றங்கள் சொல்லப்பட்டன

(க - து.) அரசனிடத்துச் சோம்பலுண்டாயின், அஃது அவனது பகைவர்க் கவனை யடிமை யாக்கு மென்பது.

8. If laziness take up its abode in a king it will make him a slave of his enemies.

கூ. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

---

* அஃது - மடியினது தன்மை. † அவனை - குடிமையுடையானை.

‡ காரியக்கேடு - செய்தொழில் முற்றுப்பெருதழிதல்.

¶ "குடிமையாவது குடிப்பிறப்பிற்கேற்ற ஒழுக்கம்" என்பர் நச்சினர்க்கினியார்.

§ குடிசெய்தற்றன்மை - குடிவாழ்க்கையை விருத்திசெய்யுந் தன்மை.

0 அஃது - (குடிசெய்தற்றன்மை) அதனை (குடிசெய்தற்றன்மையை) யுடைய அரசன்மேற்றாதல் (அரசன்மேலாகுதல்) 'தன்ஞெண்ணுர்க்கு' என்றதனை (தனது பகைவர்க்கு என்றதனை) லறிக என்பது. குடிமை யென்னும் பண்புப்பெயர் குடிமை யுடையவனையுணர்த்திதலால் பண்பாகுபெயராம்.

பரி:—(இ - ள்.) ஒருவன் தன் மடியாளுந்தன்மையை ஒழிக்கவே, அவன் குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் கெடும், (எ-று).

மடியாளுந்தன்மை - மடியுடைமைக் கேதுவாய தாமதகுணம். குடியாண்மை யென்பது உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்த குற்றமென்றது மடியான் அன்றிமுன்னே †பிறகாரணங்களான் கிடந்தவற்றை.அவையும் மடியாண்மையை மாற்றி முயற்சியுடையனாக நீங்குமென்பதாம்.

தெளி:—(இ-ள்.) ஒருவன்,— மடியாண்மை-தனதுசோம்பலே யாளுந்தன்மையை, மாற்ற - ஒழிக்கவே, குடியுள் - (அவனது) குடியுள்ளும், ஆண்மையுள்-ஆண்மையுள்ளும், வந்த—, குற்றம் - குற்றங்கள், கெடும்-அழியும், (எ - று).

சோம்பலே யாளுந்தன்மை - சோம்பலுடைமைக்குக் காரணமாகிய தாமதகுணம். குடியாண்மை யென்பது உம்மைத்தொகை நிலைத்தொடர்; குடியும் ஆண்மையும் என விரியும். உள் என்னும் ஏழனுருபு குடியென்பதனோடுஞ்சென்றியைத்து நின்றது. குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்களென்றது சோம்பலாலன்றி முன்னே வேறு காரணங்களாலுண்டாயவற்றை. அக்குற்றங்களும் சோம்பலையாளுந் தன்மையை யொழித்து முயற்சியுடையவனுக ஒழியும் என்பதாம்.

(க - து.) ஒருவன் தனது தாமதகுணத்தை யொழிப்பானாயின், அவனது குடியினிடத்தும்ஆண்மையினிடத்தும் உண்டாகிய குற்றங்களொழியும் என்பது.

9. When a man puts away idleness, the reproach which has come upon himself and his family will disappear.

கo. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
நெடிய தெல்லா மொருங்கு.

பரி:—(இ - ள்.) தன்னடியளவானே எல்லாவுலகையும் அளந்த * இறைவன் ‡ கடந்த ¶ பரப்பு முழுதையும் மடியிலாத அரசன் 0 முறையான் அன்றி ஒருங்கே எய்தும், (எ - று).

† பிறகாரணங்கள் - காலமறியாமை, இடமறியாமை, செய்வினையின் மூலமறியாமை, முடிவறியாமை, சூழ்வன சூழாமை, தினைவலி தெரியாமை முதலியனவாம்.

* இறைவன் - திருமால். ‡ கடந்த - தாவியளந்த.

¶ பரப்பு முழுதையும் - சுவர்க்க மத்திய பாதாள மென்னு மூன்று கூற்றையும். பரப்பையுடைய உலகத்தைப் பரப்பென்றது பண்பாகு பெயராம்.

0 முறையான் அன்றி - நல்வினைக்கேற்பப்பெறுஞ் சோமத்தினுல்லாது.


* அடியளந்தானென்றது வாளா பெய்தாய் நின்றது. † தாவியதென்பது இடைக்குறைத்து நின்றது. எப்பொழுதும் வினையின்கண்ணே முயலலின், இடையீடின்றி யெய்துமென்பதாம். இவையிரண்டு பாட்டானும் மடியிலாதான் எய்தும் பயன் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) மடியிலா - சோம்பலில்லாத, மன்னவன் - அரசன், அடி - (தன்) அடியளவாலே, அளந்தான் - (எல்லாவுலகத்தையும்) அளந்த கடவுள், தாஅயதெல்லாம் - கடந்தபரப்பு முழுதையும், ஒருங்கு - (முறையாலல்லாமல்) ஒருசேர, எய்தும் - அடைவான், (எ - று).

அடியளந்தான் என்பது அடியால் உலகமளந்தவனென்னும் பொருளுணர்த்தாது திருமாலென்னும் பெயர் மாத்திரமாய் நின்றது. தாவியது என்பது இடைக்குறைந்து (இடைநின்ற வி என்பது குறைந்து) தாஅயது என அளபெடுத்து நின்றது. எப்பொழுதும் தொழில்செய்தலிலே முயலுதலால், (மடியிலா மன்னவன்) உலகமுழுவதையும் தடையில்லாது அடைவானென்பதாம். இவையிரண்டுபோட்டாலும் சோம்பலில்லாத அரசன் அடையும் பயன் சொல்லப்பட்டது.

(க - து.) சோம்பலில்லாத அரசன் எல்லா வுலகும் ஆளப் பெறுவான் என்பது.

10. The king who never gives way to idleness will obtain entire possession of the space passed over by Him who measured the worlds with His foot.



* பின்னிற்கும் தாஅயது என்பது திருமால் உலகமளந்த வரலாற்றைத்தெரிவித்து நிற்றலால், முன்னிற்கும் அடியளந்தான் என்பது அவ்வரலாற்றைத் தெரியாதி வாளா (சும்மா-யாதொரு விசேடமுங் கற்பியாது) திருமாலென்னும் பெயர் மாத்திரமாய் நின்றதென்க. "வெருவந்த செய்தொழுகும் வெங்கோல ஞாயின்" என்னுங் குறளின் விசேடவுரையில் "வெங்கோலனென்பது ஈண்டுவாளாபெயராய்நின்றது" என்றிருப்பது மிங்குணர்தற் குரியதாம். மாவலி யென்னுமோரசுரன் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் தன் வசப்படுத்திக்கொண்டு ஒருபெரிய யாகஞ்செய்து வருபவர்களுக்கு அளவிறந்ததானங்கொடுத்துவருகின்றபோது, திருமால் (விஷ்ணு) காஶ்ப முனிக்கும் அதிதிபெண்பாலுக்கும் குறுகிய வுருவமுள்ள பிள்ளையாகப்பிறந்து, அம் மாவலியிடத்துச்சென்று, மூன்றடி மண்யாசித்துப் பெற்றுப், பிறகு திரிவிக்கிரம வடிவங்கொண்டு, மண்ணுலகத்தை யோரடியாலும் விண்ணுலகத்தை மற்றோரடியாலும் அளந்து, மற்றோரடியை அம் மாவலியினது தலையின் மீதுவைத்து, அவனைப் பாதாளலோகத்திலிருக்கும் படியழுத்தி விட்டாரென்பது கதை. இதன் விரிவை இராமாயணம் பாலகாண்டம் வேள்விப்படலத்திற் காண்க.

† தாவியது என்பது தாயது என்றாயது தொகுத்தல் விகாரமாமென்பர் இக்காலத்திலக்கணிகள்.

இருபத்து நான்காம் அதிகாரம்.

ஆள்வினையுடைமை—*On manly effort.*

பரி:—அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சி உடையனாதல். அஃது * ஆளும் வினையெனக் காரியத்தாற் கூறப்பட்டது. மடிகெடுத்தாலும் வினை முயற்சியான் அன்றி ஆளப்படாமையின், இது மடியின்மையின் பின் வைக்கப்பட்டது.

தெளி:—அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சியை யுடையவனாதல். அம்மெய்ம்முயற்சி ஆளும் வினையெனக் காரியத்தாற் சொல்லப்பட்டது. சோம்பலைக் கெடுத்தாலும் தொழில் முயற்சியாலல்லாமல் ஆளப்படாமையின், இது (ஆள்வினையுடைமை) மடியின்மையின்பின் வைக்கப்பட்டது. மெய் - உடம்பு.

க. அருமை யுடைத்தென் † றசாவாமை ‡ வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

பரி:—(இ - ள்.) தஞ் ¶ சிறுமை நோக்கி நாம் இவ்வினை முடித்தல அருமை யுடைத்தென்று கருதித் தளராதொழிக; அது முடித்தற்கேற்ற பெருமையைத் தமக்கு முயற்சி யுண்டாக்கும், (எ - று).

சிறுமைநோக்கி யென்பது பெருமை தரும் என்றதனானும், வினை முடித்தலென்பது 0 அதிகாரத்தானும் வருவிக்கப்பட்டன. வீடாது முயலத்தாம் பெரியாரால்; ஆகலே, § அரியனவும் எளிதின் முடியுமென்பதாம்.

தெளி:—(இ - ன்.) (தமது சிறுமையை நோக்கி) அருமையுடைத்தென்று - (தாம் இத்தொழிலை முடித்தல்) அருமையை யுடையதென்று,

---

* மெய்ம்முயற்சியெனிய காரணத்தால் தொழிலை வாளுந்தன்மை யுண்டாதல்பற்றி, ஆள்வினை யுடைமை யென்னும் காரியப்பெயரால் மெய்ம்முயற்சி குறிப்பிக்கப்பட்டது. இவ்வாறு கூறுதல் காரிய வாகுபெயராம். ஆள்வினையென்பது ஆளும் வினையென விரிதலின், வினைத்தொகை நிலைத்தொடராம்.

† அசாவாமை - சோர்வடையாமை. அசா - சோர்வு (தளர்ச்சி).

‡ வேண்டும் என்பதை இலக்கணக்கொத்து நூலார் தேற்றப் பொருள்பட்டு நிற்கும் தொழிற்பெயரென்பர்; சேனாவரையர் முதலியோர் வியங்கோட்பொருட்டு என்றும், விதிப்பொருட்டென்றும், தகுதிப்பொருட்டென்றும், வேண்டுவது என்றும் கூறுவர்.

¶ சிறுமை - பொருள், படை, துணை முதலியவற்றின் குறைவு.

0 ஆள்வினை யுடைமை யென்னு மிவ்வதிகாரத்தாலும்.

§ "தண்டலைநீர் நின்ற தவத்தா னளிமருவும், புண்டரிகம் நின்வதனம் போன்றதால் - உண்டோ, பயின்ற ருணம்பருகும் பான்மொழியாய் பார்மேல், முயன்ற ருண்முடியாப் பொருள்" என்ற தண்டியலலங்காரத்தில் சம்சிருஷ்டாலங்காரத்திற்கு உதாரணமாகக் காட்டிய இவ்வெண்பாவும் இங்குக் கவனித்தற் குரியதாம்.

(*வினைத்து*), *அசாவாமைவேண்டும் - தளராதிருத்தல்வேண்டும், பெருமை-(அத்தொழிலே முடித்தற்கு ஏற்ற) பெருமையை, முயற்சி-முயற்சியானது, தரும்-(தமக்கு) உண்டாக்கும், (எ - று).*

பெருமையை நோக்கியென்பது பெருமைதரும் என்றதனலும், தொழிலே முடித்தலென்பது அதிகாரத்தாலும் வருவிக்கப்பட்டன. விடாது முயற்சிசெய்யத் தாம் பெருமையை யுடையவராவர்; ஆகவே, அரியதொழில்களும் எளிதில் முடியுமென்பதாம்.

(க - து.) *தாம் மேற்கொண்ட தொழில் செய்தற் கருமையதென்று தளராது முயற்சியோடிருப்பவர்க்கு அம்முயற்சி அத்தொழிலே முடித்தற்கேற்ற பெருமையை யுண்டாக்கும்.*

1. Yield not to the feebleness which says, "this is too difficult to be done;" labour will give the greatness of mind which is necessary to do it.

---

2. வினைக்கண் வினைகெட லோம்பல் † வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

பரி:—(இ - ள்.) வினையாகிய தூறையைச் செய்யாது விட்டாரை உலகம் விட்டது; ‡ அதனுற் செய்யப்படும் வினைக்கண் தவிர்ந்திருத்தலே ஒழிக, (எ - று).

*குறை - இன்றியமையாப் பொருள். ¶ அது 0 'பயக்குறை யில்லேத் தாம்வாழு ராவே' என்பதனலுமறிக.*இதற்குவினைசெய்பவேண்டுங்குறையை நீங்கினுரின் நீங்கிற்றென்றுரைப்பாருமுளர்.*

† *வினைக்குறை - இன்றியமையாது (அவசியமாகச்) செய்யவேண்டிய தொழில்.*

‡ *அதனுல் - செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாது விட்டவரை யுலகம் விட்டதனுல். ஆதலால் என்றும் பாடமுண்டு.*

¶ *அது - குறையென்பது இன்றியமையா (இல்லாது முடியா)ப் பொருளை யுணர்த்துதல்.*

0 *புற நானூறு கஅஅ. இதன்பொருள்.(இன்பத்தால் மயக்கும்பின்னே கூடியில்லாதவர்களுக்கு) பயனுடைய முடிக்கப்படும்பொருளில்லை; தாம் உயிர்வாழும் காளின்கண் என்பது. இதனது விசேடவுரையில் "குறையென்பது முடிக்கப்படுங்கால் முடிக்கப்படும் பொருள். இனிப்பயக்குறையுள்ளதென ஒரு சொல்வருவித்துத் தாம் வாழும் காளும் இல்லையென்று கூறுவாரு முளர்" என்று கூறப்பட்டிருக்கின்றது.*

* *தீர்ந்தாரின் தீர்ந்தன்று என்பதற்குத் தீர்ந்தாரின்-(தொழில்செப்பவேண்டுங்குறையை) நீங்கியவரினின்றும்,தீர்ந்தன்று—(உலகம்) நீங்கியது என்றுபொருள்கூறுவாருமுண்டு. தீர்ந்தன்று என்பதில் அன்சாரியையாம்.*

தெளி:—(இ - ன்.) உலகு - உலகமானது, வினைக்குறை - தொழிலாயெ குறையை, தீர்த்தாரின் - செய்யாதவிட்டவரை, தீர்த்தன்று - விட்டது, (அதனால்), வினைக்கண் - (செய்யப்படுங்) தொழிலினிடத்து, வினை செடல் - செயலற்றிருத்தலே, ஒம்பல் - ஒழியக்கடவன், (எ - று).

குறை - அவயெம் வேண்டியபொருள். ஒம்பல் - அல்லீற்றுடம்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

(க - து.) மேற்கொண்ட காரியத்தை முற்றுப்பெறச் செய்யாது விட்டவரை யுலகம் விட்டு நீங்கிப்போதலால், மேற்கொண்ட காரியத்தைத் தளர்ச்சியின்றி முடித்தல் வேண்டும் என்பது.

2. Take care not to give up exertion in the midst of a work, the world will abandon those who abandon their unfinished work.

கூ. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

பரி:—(இ - ள்.) முயற்சியென்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின் கண்ணே நிலைபெற்றது எல்லார்க்கும் உபகாரஞ் செய்த லென்னும் மேம்பாடு, (எ - று).

பொருள் * கைகூடுதலான் உபகரித்தற்குரியார் முயற்சி யுடையா சென்பார் † அவ்வக்குணங்கண்மேல்வைத்தும், ‡ அது ¶ பிறர்மாட்டில்லை யென்பார் 0 'தங்கிற்றே' என்றுங் கூறினர். இவை மூன்றுபாட்டாலும் முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) வேளாண்மையென்னும் - (எல்லார்க்கும்) உபகாரஞ் செய்தலென்னும், செருக்கு-மேம்பாடான, தாளாண்மை யென்னும்-முயற்சியென்ற சொல்லப்படுகிற, தகைமைக்கண் - உயர்ந்தகுணத்தினிடத்தே, தங்கிற்று - நிலைபெற்றது, (எ - று).

பொருள் கைகூடுதலால் (எல்லார்க்கும்) உபகாரஞ் செய்தற் குரியவர் முயற்சி யுடையவரென்பார் (தாளாண்மை யென்னுந்தகைமை, வே

* கைகூடுதலான் - கிட்டுதலால்.

† அவ்வக்குணங்கள் மேல் வைத்தலாவது தாளாண்மை (முயற்சி) யுடையாரே வேளாண்மை (எல்லார்க்கும் உபகாரஞ்செய்தலே) யுடையரா வர் என்ற கூறுதல், தாளாண்மை யுடையாரைத் தாளாண்மை யென்னுந் தகைமை யென்றும், வேளாண்மை யுடையாரை வேளாண்மை யென்னுஞ் செருக்கு என்றும், குணிகளைக் குணங்களின் மேல்வைத்துக் கூறியவாறு மென்க. தாளாண்மை யென்னுந் தகைமை, வேளாண்மை யென்னுஞ் செருக்கு என்பன குணங்கள்; அவற்றையுடையார் குணிகள்.

‡ அது - வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

¶ பிறர்மாட்டு - முயற்சி யில்லாதவரிடத்து. 0 ஏகாரம் - பிரிநிலைப் பொருளது.

ளாண்மை யென்னுஞ் செருக்கு என) அந்தந்தக் குணங்கள்மேல் வைத்தும், அது பிறரிடத்தில்லே யென்பார் (தாளாண்மை யென்னுந் தகைமைக்ணண்) 'தங்கிற்றே' என்றும் சொல்லினர். இவை மூன்று பாட்டாலும் முயற்சியது சிறப்புச் சொல்லப்பட்டது.

(க - து.) எல்லார்க்கும் உபகாரஞ் செய்கலென்னும் மேம்பாடு முயற்சியுடையாரிடத்து நிலேபெற்றுளது என்பது.

3. The lustre of munificence will dwell only with the dignity of laboriousness.

ச. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

பரி:—(இ - ளீ.) முயற்சி யில்லாதவன் உபகாரியாந்தன்மை படைகண்டால் அஞ்சும் பேடி அதனிடைத் தன் கையில் வாளே அளுத்தற்றன்மைபோல இல்லையாம், (எ - று).

* ஆனென்பது முதனிலேத்தொழிற் பெயர். † பேடி வாளேப் பணிகோடற் கருத்தினேயுளாயினும் ‡ அது தன் அச்சத்தான் முடியாதவாறு போல, முயற்சியில்லாதான் பலர்க்கும் உபகரித்தற் கருத்தினேயுளினும் ¶ அது தன் வறுமையான முடியாமை என்பதாம். வாளாண்மை யென்பதற்கு வாளாற் செய்யும் 0 ஆண்மையெனப் பரிமேலழகர் முதலாயினார் உரைத்தார். இதனுள் அஃதில்லாதானது குற்றங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) தாளாண்மையில்லாதான் - முயற்சியில்லாதவன், வேளாண்மை - உபகாரியாந் தன்மை, பேடி (சேனேயைக் கண்டால் அஞ்சும்) பேடியானவள், கைவாளாண்மைபோல-(அச்சேனேயினிடத்திற் தன்) கையில் வாளேயாளுதற்றன்மைபோல, கெடும் - இல்லேயாம், (எ-று).

* ஆன் என்பது ஆளுதல் என்ற பொருள் பட்டமையான், முதனிலேத் தொழிற்பெயராயிற்று. முதனிலே (பகுதி) தொழிற்பெயர்ப் பொருளே யுணர்த்தும்போது முதனிலேத்தொழிற்பெயரெனப்படுகின்றது.

† ஆணிலக்கணமும் பெண்ணிலக்கணமும் விரவி (கலந்து) ஒரு வகையேனும் நிரம்பாது நிற்பது பேடியாமென்பர் நன்னூல் விருத்தியுரைகாரர். "ஆண்மை நிரிந்த பெண்மைக் கோலத்திற், காம ஞெடிய பேடியாடலும்" என்பதன் விசேடவுரையில் அடியார்க்கு நல்லார் "ஆண்மைத் தன்மையிற்றிரிதலாவது விகாரமும் வீரியமும் நாரும் பெற்றியும் பத்தியும் பிறவுமின்றுதல். ஆண்மை நிரிந்த என்பதனுல் தாடியும், பெண்மைக் கோலத்து என்பதனுல் முலே முதலிய பெண்ணுறுப்புப்பலவுமுடையது ஆண்பேடென்று பெயர்பெறுமெனக்கொள்க" என்று கூறியிருப்பதிங்கு உணர்தற்பாலதாம். நிலப்பதிகாரம்—நடலாடுகாதை.

‡ அது - வாளேப் பணிகோடற் கருத்தி.

¶ அது - பலர்க்கும் உபகரித்தற் கருத்தி.

0 ஆண்மை - ஒன்றற்குந் தளராது நிற்றல்.

ஆனென்பது முதனிலைத்தொழிற் பெயர். பேடியானவன் வாளை (பகைவரை வெட்ட) உபயோகித்தற்குச் சருத்துடையவனாயினும் அஃது அவன் தன் அச்சத்தால் முடியாத விதம்போல, முயற்சியில்லாதவன் பலருக்கும் உபகாரஞ் செய்தற்குச் சருத்துடையவனாயினும் அஃது அவன் தன் வறுமையால் முடியாதென்பதாம். இதனால் அம்முயற்சியில்லாதவனது குற்றஞ் சொல்லப்பட்டது.

(க - து.) முயற்சியில்லாதவனிடத்துப் பிறர்க்கு உபகாரஞ் செய்யுந்தன்மை பொருவாற்றாமின்றாம் என்பது.

4. The liberality of him, who does not labour, will fail, like the manliness of a hermaphrodite, who has a sword in its hand.

இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

பரி:—(இ - ள்.) தனக்கின்பத்தை விரும்பாதுகி வினை முடித்தலையே விரும்புவான் தன் * கேளிராகிய பாரத்தின் றுன்பத்தினை நீக்கி † அதனைத் தாங்குந் தூணும், (எ - று).

‡ இஃது எகதேச வுருவகம். ஊன்ற மென்றது ¶ அப்பொருட்டாதல் 0 "மதலையாய் மற்றதன் வீழ்நன்றி யார்க்கு" என்பதனானுமறிக. சுற்றத்தார் கட்டாரது வறுமையுந்தீர்த்த + அவர்க்கு †† ஏமஞ் செய்யும் ஆற்றலையுடையனு மெனவே, ‡‡ தன்னைச் சூறவேண்டா வாயிற்று.

---

* கேளிர் - யோக கேஷமங்களுக்கு கேட்குந் தன்மையர்.

† அதனை - கேளிராகியபாரத்தினை.

‡ இன்பத்தை விரும்பாது தொழில் முடித்தலை விரும்புவானைத் தூண் என்ற உருவகப்படுத்தினவர் அதற்கேற்பக் கேளிரைப்பாரம்(பளுவு) என்ற உருவகப்படுத்தாமையின், இக்குறள் எகதேச வுருவகவணியாயிற் றென்க.

¶ அப்பொருட்டாதல் - தாங்கும் என்னும் பொருளினை யுடையதாதல்.

0 காலடியார் தானாண்மை எ. இதன் பொருள். (செல்லினால் தின்னப்பட்ட ஆலமரத்தை) தூணாய்ன்ற அவ்வாலமரத்தின் வீழுது தாங்கினாற் போல என்பது.

+ அவர்க்கு - சுற்றத்தார் கட்டாரென்னும் பற்றுமித்திரர்களுக்கு.

†† ஏமம் - பாதுகாத்தல்.

‡‡ தன்னைச் சூறவேண்டாவாயிற்று-இன்பத்தை விரும்பாது தொழில் முடித்தலை விரும்புவான் தன்னைப் பாதுகாத்துச் சொள்ளும் வல்லமையுடையவனை னென்பதைச் சொல்லவேண்டுமென்பதில்லையாயிற்று.

* காரியத்தைவிழையாது காரணத்தை விழைவான் எல்லாப்பயனுமெய்து மென்றதனால்,காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் யாதும் எய்தானென்பது பெற்றும். இதனால் அஃதடையானது, நன்மை கூறப் பட்டது.

தெளி:—(இ - ள்.) இன்பம் விழையான் - (தனக்கு) இன்பத்தை விரும்பாதவனும், வினைவிழைவான் - தொழில் முடித்தலேயே விரும்பு வான், தன்கேளிர் - தனது (சுற்றத்தார் - கட்பினென்னும்) கேளிராகிய பாரத்தினது, தின்பம் - தின்பத்தை, தடைத்து - நீக்கி, ஊன்றும் - (அப்பாரத்தைத்) தாங்கும், தூண் - தூணும், (எ - று).

இஃது ஏகதேச வுருவகவணி.(இன்பம் விழையாது வினை விழைவான்) கேளிரது வறுமையையுந்தீர்த்தலவர்க்குவமஞ்செய்யும்வல்லமையையுடை யவனுவனெனவே, (அவன்)தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுதலேச்சொல்ல வேண்டுவதில்லையாயிற்று. காரியமாகிய இன்பத்தைவிரும்பாமல் காரண மாகிய முயற்சியை விரும்புவான் எல்லாப் பயனும் அடைவானென்றதனால், காரணமாகிய முயற்சியை விரும்பாமல் காரியமாகிய இன்பத்தை விரும்புவான் ஒருபயனும் அடையானென்பது பெறப்பட்டது. இதனால் அம்முயற்சியுடையவனது நன்மை சொல்லப்பட்டது.

(க - து) இன்பத்தைவிரும்பாது அதற்குக்காரணமாகிய முய றசியை விரும்புவான் தனதுறவினர் கட்பினரது இன்பத்தையொ ழிப்பான் என்பது.

5. He who desires not pleasure, but desires labour, will be a pillar to sustain his relations, wiping away their sorrows.

சு முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

பரி:—(இ - ள்.) அரசர் மாட்டுளதாய முயற்சி அவரது செல்வத் தினை வளர்க்கும்; அஃதில்லாமை வறுமையை அடைவித்து விடும்.

செல்வம் † அறுவகை யங்கங்கள். வறுமை ‡ அவற்றுள்வறியராதல்.

* முயற்சியின் காரியமாகிய இன்பத்தைவிரும்பாமல் இன்பத்திற் குக் காரணமாகிய முயற்சியை விரும்புவான் எல்லாப்பயனும் அடை வான் என்ற கூறினமையின், இன்பத்திற்குக் காரணமான முயற்சியை விரும்பாமல் முயற்சியின் காரியமாகிய இன்பத்தைவிரும்புவான் யாதொ ருபயனும் அடையமாட்டானென்பது பெறப்பட்டதென்க.

† அறுவகையங்கங்கள் - அமைச்சு (மந்திரி), நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பன.

‡ அவற்றுள் வறியராதல் - அமைச்சுமுதலிய அங்கங்களால் குறைவு பட்டவராதல்.

* அதனை யடைவிக்கவே, பகைவரான் அழிவரென்பது கருத்து.

தெளி:—(இ - ள்.) முயற்சி - (அரசரிடத்து உண்டாகிய) முயற்சி யானது, திருவினை - (அவரது) செல்வத்தை, ஆக்கும்-வளர்க்கும், முயற் றின்மை - அம்முயற்சி யில்லாமையானது, இன்மை-வறுமையை, புகுத்தி விடும் - அடைவித்து விடும், (எ-று).

செல்வம் - அமைச்சு முதலிய அறுவகை யங்கங்கள். வறுமை-அவற் றால் தரித்திராதல். (முயற்றின்மை) அதனை யடைவிக்கவே, (தரித்திர முடைய அரசர்தமது) பகைவரால் அழிவரென்பது கருத்து.

(க - து.) முயற்சி செல்வத்தையும் அம்முயற்றின்மை தரித்திரத் தையு முண்டாக்கும் என்பது.

6. Labour will produce wealth; idleness will bring proverty.

எ. மடியுளாண் † மாமுகடி யென்ப மடியிலான்
ருளுளா டாமரையி ளாள்.

பரி:—(இ - ள்.) கரிய ‡ சேட்டை ஒருவன் மடியின் கண்ணே யுறையும்; தீருமகள் மடியிலாதானது முயற்சிக்கண்ணே யுறையுமென்று சோல்லுவர் அறிந்தோர், (எ-று).

¶ பாவத்தின் கருமை 0 அதன் பயனை முகடிமே லேற்றப்பட்டது.

* அதனை - வறுமையை(முயற்சியில்லாமையானது) அடைவிக்கவே, (வறுமையை யுடைய அரசர்) பகைவரால் அழிவரென்பது கருத்தாம். முயற்சியில்லாத அரசர் அமைச்சுமுதலிய அங்கங்களால் குறைவுபட்டிருத் தலால், அவர் எளிதில் பகைவரால் அழிவரென்பது திரண்டபொருளாம்.

† மா என்பது இங்குக் கருமை யென்னும் பொருண்மேல் நின்றது.

‡ சேட்டை என்பதற்கு மூத்தானென்பது பொருள். திருப்பாற்கடல் கடைந்த காலத்தில் அக்கடலில் இலக்குமிக்கு முன்னர் மூதேவியுண்டான மை பற்றி அவள் மூத்தான் எனப்பட்டான். இவன் செல்வங்களுக்குச் சோம் பல் முதலியவற்றை யுண்டாக்குச் செய்வமாவன்; கருமை நிறமும், சர்ப்பா பரணமும், கழுதைவாகனமு முடையவன். இவளுக்குக் கொடி - காகம்; ஆயுதம் - திடைப்பம்.

¶ பாவம் என்னும் குணம் கருமையென்னும் குணத்தை யேற்றலின் ஞாயினும், கலிஸயம்பற்றிப் பாவத்திற்குக் கருமைநிறம் கூறப்பட்டது. பொருள் குணத்தையும் தொழிலையும் சாதியையும் ஏற்ற நிற்குமென்றும், குணம் குணத்தையும் தொழிலையுர், சாதி சாதியையும் குணத்தையும் தொ ழிலையும் ஏற்ற நில்லாவென்றும் நூல்களுள் கூறுகின்றது. கீர்த்தி புண் ணிய ம சிரிப்பு முதலியன வெண்மை நிறமுடையன; ஆசை ஆண்மை முதலியன செம்மை நிறமுடையன; அபகீர்த்தி அஞ்ஞானம் முதலியன கருமை நிறமுடையன வென்ற கூறுதலுமுண்டு.

0 அதன்பயனை முகடிமேல் ஏற்றப்பட்டது—(பாவத்தின் கருமையா னது) அப்பாவத்தினது பயனைமுகடி (மூதேவி)யின்மேல் ஏற்றிச்சொல்

மடியும் முயற்சியும் உடையார் மாட்டு நிலையை;* அவை தம்மேல் வைத்துக் கூறினர். இவை இரண்டு பாட்டானும் † அவ்விருமைக்கும் ‡ எது கூறப்பட்டது.

தேளி:—(இ - ன்.) மாமுகடி - கரிய மூதேவியானவன், மடி - (ஒருவனது) சோம்பலிலே, உளான் - வசிப்பான், தாமரையினுள் - சீதேவியானவள், மடியிலான் - சோம்பலில்லாதவனது, தாள் - முயற்சியிலே, உளாள் - வசிப்பாள், என்ப - என்று சொல்லுவர் (அறிந்தோர்), (எ - று).

பாவத்தின் கருமை அதன்பயனுகிய முகடியின்மேல் ஏற்றப்பட்டது. சோம்பலை யுடையவனிடத்து மூதேவியும் முயற்சியை யுடையவனிடத்துச் சீதேவியும் வசித்தலை அவை தம்மேல் வைத்து (சோம்பலிலே மூதேவி வசிப்பாள் என்றும் முயற்சியிலே சீதேவிவசிப்பாள் என்றும்) கூறினர். இவை இரண்டு பாட்டாலும் செல்வத்திற்குக் காரணம் முயற்சியென்றும், வறுமைக்குக்காரணம் முயற்சியின்மை யென்றும் சொல்லப்பட்டன.

(க - து.) சோம்பலுடையவனிடத்து மூதேவியும் அஃதில்லாதவனிடத்துச் சீதேவியும் வசிப்பர் என்பது.

7. They say that the black Mùdévi (the goddess of adversity) dwells with laziness, and that Latchmi (the goddess of prosperity) dwells with the labour of the industrious.

அ. பொறியின்மை யார்க்கும் பழியன் ¶ றறிவறிந்
§ தாள்வினை யின்மை பழி.

பரி:—(இ - ள்.) பயனைத் தருவதாய † விதியில்லாமை () ஒருவர்க்கும் பழியாகாது; அறியவேண்டு மவற்றை யறிந்து வினை செய்யாமையே பழியாவது, (எ - று).

லப்பட்டது. இதனால் பாவஞ்செய்தவன் தான்செய்தபாவத்தின் பயனை அடைவது மூதேவியென்றுயிற்று; ஆகவே, அவன் வறுமையாளன் என்பது வெள்ளிடை மலையாயிற்றென்க.

* அவை தம்மேல் - மடி (சோம்பல்) முயற்சிகளின் மேல்.

† அவ்விருமைக்கும் - செல்வம் வறுமையென்னு மவ்விரண்டற்கும்.

‡ எது - முயற்சியும், முயற்சியின்மையும்.

¶ அறிவு என்னும் தொழிற்பெயர் அறியவேண்டுமவற்றை யுணர்த்துதலால் தொழிலாகு பெயராம். இவ்வாறு கூறுதல் இலக்கணநூற்கொள்கை; தருக்கநூற்கொள்கையின்படி பண்பாகுபெயராம்.

§ ஆள்வினையென்பதற்கு ஒரு சொல்லாய் நின்றது.

† விதியென்றது இங்கு முற்பிறப்பிற் செய்த நல்வினையை.

() எவர்க்கும் என்னும் பாடமுண்டு.

அறியவேண்டுவன- வலி ¶ முதலாயின. 0 தெய்வம் இயையாவழிஆள் வினை புடைபெயர்ந்து பயனில்லை யென்பாரை நோக்கி, உலகம் ‡ பழவினை பற்றிப் பழியாது ஈண்டைக் குற்றமுடைமை பற்றியே † பழிப்பதென்பார் 'ஆள்வினை யின்மை பழி' என்றார். * அதனால் விடாது முயல்க வென்பது குறிப்பெச்சம்.

தெளி:—(இ-ன்.) பொறியின்மை - (பயனைத் தருவதாகிய) வினையில்லாமை, யார்க்கும் - ஒருவர்க்கும், பழியன்று-பழியாகாது, அறிவறிந்த-அறியவேண்டுவனவற்றை யறிந்து, ஆள்வினையின்மை - தொழில் செய்யாமையே, பழி - பழியாவதாம், (எ - று).

அறியவேண்டுவன-வலிமுதலாயின. ஊழ் பொருந்தாதவிடத்துத் தொழில்செய்தலால் பயன் இல்லை யென்பாரை நோக்கி, உலகம் பழவினை பற்றிப் பழியாது இவ்விடத்துத் தொழில்செய்யாத குற்றமுடைமை பற்றியே பழிப்பதென்பார் 'ஆள்வினை யின்மை பழி' என்றார். அதனால் விடாது முயல்க வென்பது குறிப்பெச்சம்.

(க - து) அறியவேண்டுவனவற்றை யறிந்து தொழில் செய்யாமையே யார்க்கும் பழியாம் என்பது.

8. Adverse fate is no disgrace to any one; to be without exertion, and without knowing what should be known, this is disgrace.

கூ. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

பரி:—(இ-ள்.) முயன்றவினை பால்வகையாற் கருதிய பயனைத் தாராதாயினும், முயற்சி தனக்கிடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும் பாழாகாது, (எ-று).

+ தெய்வத்தானுயவழித் தன்னளவின்மிக்க பயனைத் தருமென்பது

¶ முதலாயின என்றமையின், காலமும் இடமும் கொள்க.

0 வினி பயனைத் தருவதற்கு அனுகூலமாகாதபோது தொழில் செய்தலால் பயனில்லை யென்பது "எண்ணி யெருகரும மார்க்குஞ்செய் யொண்ணாது, புண்ணியம் வர்தெய்து போதல்லால்" என்று ஔவைப்பிராட்டியார் கூறுதலாலு முணரப்படும்.

‡ பழவினை - பூர்வகர்மம்; இது சஞ்சிதமென்றுஞ் சொல்லப்படும்.

† பழிப்பதென்றார் என்றும் பாடமுண்டு.

* அதனால் (ஆள்வினையின்மை பழி என்றதனால்) விடாது முயல்க என்பது குறிப்பாக வுணரமாதெஞ்சி (குறைத்து) நின்றது.

+ முயன்று செய்ததொழில் ஊழினால் முடிவுபெற்ற விடத்துத் தன்னளவிற்கு மேற்பட்ட பயனைத் தருமென்பது தெய்வத்தா னாகா தெ


உம்மையாற் பெற்றும். † இருவழியும் பாழாகல் இன்மையின், தெய்வ கோக்கியிராத முயல்கவென்பது கருத்து.

தேளி:—(இ-ன்.) (முயன்று செய்ததொழில்) தெய்வத்தான் - ஊழ் வகையால், ஆகாதெனினும் - (கருதிய பயனைத்) தாராதாயினும், முயற்சி-முயற்சியானது, தன்மெய்-தனக்கிடமாகிய உடம்பு, வருத்தக்கூலி-(வருந்திய) வருத்தத்தின் கூலியளவு, தரும்-கொடுக்கும், (பழாகாது), (எ-று).

(முயன்று செய்ததொழில்) ஊழினுலாய வீடத்துத் தன்னளவின் மிகுந்த பயனைத் தருமென்பது எனினும் என்ற உம்மையாற்பெற்றும். முயன்று செய்த தொழில் ஊழ்வகையால் ஆயவிடத்தும் ஆகாதவிடத்தும் பாழாகலின்மையால், ஊழைநோக்கி யிராமல் முயல்கவென்பது கருத்து.

(க-து.) கருதிய பயன் தரும் கல்வினை யில்லா விடத்தும் முயற்சி உடல்வருத்தத்திற்கேற்ற பயனைத்தரும் என்பது.

9. Although it be said that, through fate, it cannot be attained; yet labour, with bodily exertion, will yield its reward.



கo. ஊழையு ‡ முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

பரி:—(இ-ள்.) பயனே விலக்குவதாய ஊழினையும் புறங்காண்பர் ¶ அவ்விலக்கிற் கினையாது வினையைத்தாழ்வற முயல்வார், (எ-று).

னினும் என்னும் எதிர்மறையும்மையாற் பெறப்பட்டது. தன்னளவின் மிக்க பயனுவது தான்கருதிய பயனிலும் அதிகமான பயனுண்டாதல்.

† இருவழியும் (முயன்று செய்த தொழில் ஊழ்வகையால் கருதிய பயனைத் தந்தவிடத்தும் தாராதவிடத்தும்) பாழாகல் (பயனில்லாதொழிதல்) இன்மையின் (இல்லாமையினால்) விதியை யெண்ணி யிராது மேற் கொண்டதொழிலே முயன்று செய்யவேண்டும் என்பது கருத்து. பாழாகலின்மையாவது முயன்று செய்ததொழில் ஊழ்வகையால் முற்றும் பெற்ற விடத்துப் பெரும்பயனையும் முற்றும்பெறுதவிடத்து உடல் வருத்தத்திற் கேற்பச் சிறிது பயனையும் தருதலாம்.

‡ இராமாநுஜக் கவிராயர் தமது நன்னூல் விருத்தியுரையில் சுட்டெழுத்துக்களோக் கூறுமிடத்து "உகரம் எதிர்முகமின்றிப் பின்னிற்கும் பொருளையும் சுட்டுமெனக்காண்க. உகரம் அவ்வாறு சுட்டிநிற்பதை 'ஊழையு முப்பக்கங்காண்பர்' என்றதற்குப் பின்பக்கமாய் முதுகுகாட்டக் காண்பர் எனப் பொருள் கூறுதலாற்காண்க" என்பர். திருக்கோவையார் "தெளிவளர் வான்சிலை" என்னும் பாட்டிலுள்ள "உங்கனே வந்து தோன்றுவனே" என்பது மிக்குக் கவனிக்கத் தக்கதாம்.

¶ அவ்விலக்கிற்கு - (தீவினை) பயனே விலக்குவதற்கு.


தாழ்வறுதல் - சூழ்ச்சியிலும், வலி * முதலிய அறிதலிலும், செயலிலும் குற்றமறுதல். ‡ ஊழ் ஒருகாலாக இருகாலாகவல்லது விலக்கலாகாமையின், ¶ பலகான் முயல்வார் பயனெய்துவரென்பார் 'உப்பக்கங் காண்பர்' என்றார். தெய்வத்தான் இடுக்கண் வரினும் முயற்சி விடற்பாலதன் றென்பது இவை மூன்று பாட்டாலுங் கூறப்பட்டது.

தேளி:—(இ - ள்.) ஊழையும் - (பயனை விலக்குவதாகிய) ஊழையும், உப்பக்கங்காண்பர் - புறங்காண்பர், உலையின்றி - (அவ்விலக்கிற்கு) இளையாமல், (தொழிலை), தாழாது - தாழ்வற, உஞற்றுபவர் - முயல்வோர்.

தாழ்வறுதல் - ஆலோசனையிலும், வலி முதலியவற்றை யறிதலிலும், செயலிலும் குற்றமறுதல். ஊழானது மேற்கொண்ட தொழிலை ஒருமுறையாவது இருமுறையாவது விலக்குதல்லாமல் பலமுறை விலக்கலாகாமையால், பலமுறை முயற்சிசெய்வார் பயனை யடைவாரென்பார் 'உப்பக்கங் காண்பர்' என்றார். ஊழினால் துன்பம் வரினும் முயற்சிவிடாதிருக்க தன் றென்பது இவை மூன்று பாட்டாலும் சொல்லப்பட்டது. ஊழென்றது இக்குப் போ கூழை (தீவினையை). புறங்காணல்- முதுகைப் பார்த்தல்.

(க - து.) தாம்மேற்கொண்ட தொழிலைத் தளர்வில்லாத முயற்சியோடு செய்பவர் பயனிலக்கும் ஊழையும் விலக்குவர்.

10. They who labour on, without fear and without fainting will see even fate (put) behind their back.



இருபத்தைந்தாம் அதிகாரம்.

இடுக்கணழியாமை—

On Perseverance in Spite of difficulties.

பரி:—அஞ்சாவது வினையின்கண் முயல்வான் தெய்வத்தானாகு, பொருளின்மையானாகு, மெய்வருத்தத்தானாகுத் தனக்கிடுக்கண்வந்துழி, அதற்கு மனங்கலங்காமை. †அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

---

* முதலிய என்றது காலத்தையும் இடத்தையும்.

‡ ஊழதிகாரத்தோடு இச்செய்யுள் முரணுமை 'ஊழ் ஒருகாலாக இருகாலாக வல்லது விலக்கலாகாமையின், பலகான் முயல்வார் பயனெய்துவரென்பார் 'உப்பக்கங்காண்பர்' என்றார் என்று கூறினமையால், கன்கு விளக்கும்.

¶ இக்கு மார்க்கண்டன் சுவேதன் முதலியவர்களது கதை ஞாபகத்திற்குக் கொண்டுவரற் பாலதாம்.

† ஆள்வினை யுடைமையென்னும் அதிகாரத்தின்பின் இடுக்கணழியாமை என்னும் அதிகாரம் வைத்த முறைமையும்.

தெளி:—அஃதாவது தொழில்செய்தலில் முயல்பவன் ஊழிஞலாவது பொருளில்லாமையினலாவது மெய்வருத்தத்தாலாவது தனக்குத்தன்பம் வந்தவிடத்தி, அத்தன்பத்திற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனுலே விளங்கும்.

கு. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

பரி:—(இ - ள்.) ஒருவனீ வினையாற் றனக்கிடுக்கணீ வருமிடத்து † அதற்கழியாது உண்மகிழ்க; அவ்விடுக்கணை மேன்மே ¶ லடரவல்லது அம்மகிழ்ச்சி போல்வது பிறிதில்லை ஆகலான், (எ - று).

வினையினிது முடிந்துழி சிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கிடையே இடுக்கண் வரும்வழிச் செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியொன் அதனைத்தள்ளி 0 அக்குறை முடிக்கும் ஆற்றலுடையனு மாகலின் 'அதனை யடித்தூர்வ தஃதொப்ப தில்' என்றார்.

தெளி:—(இ - ன்.) (ஒருவன்) இடுக்கண் - துன்பமானது, வருங்கால்- (தொழிலால் தனக்கு) வருமிடத்தி, நகுக - (அதற்கு அழியாமல் மன) மகிழக்கடவன், அதனை - அத்துன்பத்தை, அடுத்து - நெருங்கி (மேலுமேலும்), ஊர்வது - எதிர்க்கவல்லது, அஃதொப்பது- அம்மகிழ்ச்சி போல்வது, இல் - (வேறு) இல்லை, (ஆகலால்), (எ - று).

(ஒருவன் செய்யும்) தொழில்நன்றாக முடிந்தவிடத்து உண்டாவதாய மகிழ்ச்சியை அத்தொழில் முடிதற்கு நடுவில் துன்பம் வருமிடத்தச்செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியால் அத்துன்பத்தினைத்தள்ளி அக்குறையை முடிக்கும் வல்லமையுடையவனாகலின் 'அதனை யடித்தூர்வ தஃதொப்ப தில்' என்றார்.

(க-து.) மேற்கொண்ட தொழிலால் துன்பம் நேர்ந்தவிடத்துத் தளர்ச்சி யடையாது மகிழ்ச்சி யடைபவனுக்கு அத்துன்ப மொழியும் என்பது.

1. If troubles come, laugh; there is nothing like that, to press upon and drive away sorrow.

உ. வேள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

பரி:—(இ - ள்.) வேள்ளம்போலக் கையிலவாய இடும்பைக ளெல்லாம் அறிவுடையவன் தன்னுள்ளத்தான் †ஒன்றனை‡நினைக்க,அத்துணையானே கெடும், (எ - று).

† அதற்கழியாது - அவ்விடுக்கணுக்குத் தளர்ச்சியடையாமல்.
¶ அடரவல்லது - எதிர்த்தக்கெடுக்க வல்லமை யுடையது.
0 அக்குறை - அத்தொழிற்குறையை.
† ஒன்றனை - தன்பத்திற்கு மாறுபட்டதொன்றை.
‡ நினைக்க துணையானே கெடும் என்றும் பாடமுண்டு.

இம்மைபயவாது உள்ளத்து † ஓர் கோட்பாடேயன்றிப் பிறிதில்லை என்பதூஉம்அது ‡ மாறுபடக்கொள்ள நீங்குமென்பதூஉம் அறிதல் வேண்டுதலின் 'அறிவுடையான்' என்றும், ¶ அவ்வுபாயத்தெண்மைதோன்ற 'உள்ளத்தினுள்ள' என்றுங் கூறினர். இவை பிரண்பொட்டாலும் ஊழினுலிய இடுக்கணுல் அழியாமைக்கு உபாயங் கூறப்பட்டது.

தெளி:—(இ - ள்.) வெள்ளத்தனைய - வெள்ளம்போலக் கரையில்லாதனவாய, இடும்பை - துன்பங்களெல்லாம், அறிவுடையான்—அறிவுடையவன், உள்ளத்தின் - (தன்) உள்ளத்தினுல், உள்ள - (ஒன்றை) நினைக்க, கெடும் - (அந்நினைத்த அளவாலே) அழியும், (எ - று).

துன்பமாவது உள்ளத்தினது ஒரு கோட்பாடே யல்லாமல் மற்றொன்றன்று என்பதும் அத்துன்பம் மாறுபடக் கொள்ள நீங்குமென்பதும் அறிதல்வேண்டுதலால் 'அறிவுடையான்' என்றும், அவ்வுபாயத்தினெளிமை தோன்ற 'உள்ளத்தினுள்ள' என்றும் சொல்லினர். இவை யிரண்டுபாட்டாலும் ஊழினுலிய துன்பத்தினுல் அழியாமைக்கு உபாயம் சொல்லப்பட்டது

(க - து.) துன்பம் வந்த விடத்து அது மனத்தின் குணங்களுள் ஒன்று ; நிலைத்திருப்பதன்றென்று கருதுபவர்க்கு அது விரைந்து கெடும் என்பது.

2. A flood of troubles will be overcome by the courageous thought which the minds of the wise will entertain, even in sorrow.

கூ. இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

பரி:—(இ - ள்.) வினைசெய்யுங்கால் 0 அதற்கிடையே வந்த துன்பத்தினிற் வருந்தாதவர், + அத்துன்பத்தனக்குத் தாந்துன்பம் வினைப்பர்.

வருந்துதல் - இளைத்து ‡‡ விட வினைத்தல். மனத் திட்ப முடையராய் விடாது முயலவே வினை முற்றப்பெற்றுப் பயன்படும்; படவே,

† ஓர்கோட்பாடு - ஒருவகைக்கொள்கை (அபிப்பிராயம்).

‡ மாறுபடக்கொள்ள - இடும்பை யியல்பா யிருப்பதன்று என்னும் அபிப்பிராயத்தைக் கொள்ள.

¶ அவ்வுபாயத்தெண்மை தோன்ற - அவ்விடும்பையை யொழிக்கும் உபாயத்தின் எளிமை விளங்க. அவ்வுபாயம் - உள்ளத்தினுள்ளல்.

0 அதற்கு - அவ்வினை செய்தற்கு.

+ அத்துன்பத்தனக்கு - வினைசெய்யுங் காலத்து அதற்கிடையே வந்த துன்பத்திற்கு.

‡‡ விட - செய்யுமாறு மேற்கொண்ட தொழிலை முடியவிட்டுவிட.


எல்லா விடும்பையு மிலவாமாகலின் 'இடும்பைக் கிடும்பை படுப்பர்' என்றார். * வருகின்ற பாட்டிரண்டினும் இதற்கு இவ்வாறே கோள்க. † சொற் பொருட்பின் வருநிலை.

தேளி:—(இ - ள்.) இடும்பைக்கு - (தொழில் செய்யும்போது அதற்கு நடுவே வந்த) துன்பத்திற்கு, இடும்பைபடாதவர் - வருந்தாதவர், இடும் பைக்கு - அத்துன்பத்திற்கு, இடும்பை - துன்பத்தை, படுப்பர் - (தாம்) உண்டாக்குவார், (எ - று).

வருந்துதல் - இளைத்துச் செய்யாமல் விடுகின்றது. மனவுறுதி யுடையவராய் விடாது முயற்செய்யவே தொழில் முடிவுபெற்றுப் பயனு ண்டாகும்; உண்டாகவே, எல்லாத் துன்பங்களும் ஒழிவனவாமாதலால்'இடு ம்பைக் கிடும்பை படுப்பர்' என்றார். வருகின்ற பாட்டிரண்டிலும் இதற்கு இப்படியே பொருள் கொள்க. இது சொற்பொருட்பின் வருநிலையணி.

(க - து.) தொழில் செய்யும்போ துண்டாகிய துன்பத்திற்கு வருந்தாதவர் அத்துன்பத்திற்குத் துன்பமுண்டாக்குவர் என்பது.

3. They give sorrow to sorrow, who in sorrow do not suffer sorrow.



ச. மடித்தவா யெல்லாம் பகடன்ன ஞற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

பரி:—(இ - ள்.) விலங்கிய விடங்களெல்லாம்நிறுத்த சகடமீர்க் தும் பகடுபோல வினையை யெடுத்துக்கொண்டு உய்க்கவல்லானை வந் துற்ற இடுக்கண் தானே இடர்ப்படுதலை யுடைத்து, (எ - று).

'மடித்தவாயெல்லாம்' என்பது பொதுப்பட நின்றமையின், சகடத் திற்கு அளற்றுநில ‡ முதலியவாகவும், வினைக்கு இடையூறுகளாகவுங் கொள்க. ¶பகடு மருங்கொற்றியும் மூக்கூன்றியும் தாடவழ்ந்தும் அரிஞரும்

* கீழ் வரும்பாடலிரண்டிலும் "இடுக்க ணிடர்ப்பா டுடைத்து"என்றும்,'இடுக்க ணிடுக்கட் படும்'என்ற முள்ள இதற்கு இவ்வாறே கொள்ளுதலாவது"மனத்திட்பமுடையராய் விடாதுமுயலவே வினைமுற்றுப்பெற்றுப் பயன்படும்; படவே எல்லாவிடும்பையு மிலவாமாகலின்'இடுக்க ணிடர்ப்பா டுடைத்து'என்றார்; 'இடுக்கணிடுக்கட்படும்'என்றார் என்று கொள்ளுதலாம்.

† முன்வந்த இடும்பையென்னும் சொல்லும் அதன் பொருளும் பின்னும் வந்தமையின், இக்குறள் சொற்பொருட்பின் வருநிலை யணியாம். சொற்பொருட்பின் வருநிலையணியாவது:—முன்வந்த சொல்லும் பொரு ளும் பின்னும் பலவிடத்து வருவதாம்.

‡ முதலிய என்றமையின், மணல் நிலம், செங்குத்தான இடர், களர் நிலம் முதலியவற்றையுங் கொள்க.

¶ சீவக சிந்தாமணி முத்தியிலம்பகம் 186- வது செய்யுளின்கண் "மருங்கொற்றி மூக்கூன்றித் தாடவழ்ந்த வாங்கி" என்றுள்ள பிரயோக மிங்குணர்தற்பாலதாம்.

க்குமாறுபோலத் தன்மெய்வருத்த நோக்காது முயன்றுய்ப்பானென்பார் 'பகடன்னான்' என்றார்.

தெளி:—(இ - ன்.) *மடித்தலாயெல்லாம் - தடைப்பட்ட இடங்களெல்லாவற்றிலும், பகடன்னான் - பண்டியை யிழுத்துச்செல்லும் எருதுபோலத் தொழிலே மேற்கொண்டு செலுத்தவல்லவனே, உற்ற - (வந்து) அடைந்த, இடுக்கண் - துன்பமானது, இடர்ப்பாடு - (தானே) துன்பப்படுதலே, உடைத்து - உடையதாம், (எ - று).*

'மடித்தலாயெல்லாம்' என்பது பண்டியை யிழுத்துச் செல்லும் எருதிற்கும் தொழிலே மேற்கொண்டு செலுத்தவின்றவனுக்கும் பொதுவாகின்றமையின், அம்மடித்தலாயெல்லாமென்பதனைப் பண்டிக்குச் சேற்றிலே முசலியனவாகவும், தொழிலுக்குத் தடைகளாகவும் கொள்க. தடைநேரிட்டபோது எருது பக்கங்களில் உராய்ந்தும் நிலத்தில் மூக்கையூன்றியும் கால்களே மடக்கிவைத்துத் தவழ்ந்தும் அரிதாகப்பண்டியைச் செலுத்தும் விதம்போலத் தொழிலே மேற்கொண்டவன் தடைநேரிட்டபோது தன் சரீரப் பிரயாசத்தை நோக்காமல்முயற்சிசெய்து அதனைச் செலுத்திவான் என்பார் 'பகடன்னான்' என்றார்.

(க - து.) *மேற்கொண்ட தொழிலைத் தடை நேரிட்டபோது தளர்ச்சியின்றி முடிக்கவல்லவனே படைத்த துன்பமானது தானே துன்பப்படும் என்பது.*

4. Troubles will vanish before the man, who struggles against difficulties as a buffalo drawing a cart through deep mire.

நி. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

பரி:—(இ - ள்.) *இடைவிடாது மேன்மேல் வந்தன வாயினும், † தன்னுள்ளக் கோட்பாடு விடாதான் உற்ற விடுக்கண்டாம் இடுக்கணிலே பட்டுப்போம், (எ - று).*

ஒன்றே பலகால் வருதலும் வேறபட்டன வீராய்வருதலு மடக்க 'அடுக்கிவரினும்' என்றார். ‡ அழிவென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மேனின்றது. இவை மூன்றுபாட்டானும் தெய்வத்தானுயதற் கழியாமை கூறப்பட்டது.

தெளி:—(இ - ன்.) *அடுக்கி வரினும் - இடைவிடாது மேலுமேலும் வந்தனவாயினும், அழிவிலான் - (தன்னுள்ளக்கோட்பாடு) விடாதவனே,*

---

† *தன்னுள்ளக் கோட்பாடு - தன்மனக்கொள்கையாகிய தைரியம்.*

‡ *அழிவு - மனக்கலக்குதல்; அஃது இங்கு அதனுலாய உள்ளக்கோட்பாடு விடுதலே (மனவுறுதி யொழிதலே) புணர்த்ததலால், காரியாகுபெயராம். மனக்கலக்கத்தால் அதைரியமுண்டாம் என்பது கருத்து.*

உற்ற - அடைந்த, இடுக்கண் - துன்பங்கள், இடுக்கட்படும் - (தாம்) துன்பத்திலே பட்டுப்போம், (எ - று).

ஒருதுன்பமே பலமுறை வருதலும் வெவ்வேறு வகைபடட துன்பங்கள் கலந்து வருதலும் அடங்க 'அடுக்கிவரினும்' என்றார். அழிவென்னுங் காரணப்பெயர் அதன் காரியமாய உள்ளக்கோட்பாடு விடுதலின்மேல் நின்றது. இவை மூன்றுபாட்டாலும் ஊழினுலாகிய துன்பத்திற்கு அழியாமை சொல்லப்பட்டது.

(க - து.) தொழில் செய்யும்போது மனவுறுதி யுள்ளவனே யடைந்த துன்பமானது தானே துன்பப்படும் என்பது.

5. The troubles of that man will be troubled and disappear, who however thickly they may come upon him, does not abandon his purpose.

சு. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றேம்புத றேற்ற தவர்.

பரி:—(இ - ள்.) வறுமைக்காலத்து யாம் வறிய மாயினேமென்று மனத்தாற் றுயருழப்பரோ; செல்வக்காலத்து இது பெற்றேமென்று இவறுதலே யறியாதார், (எ - று).

பெற்றவழி இவறுமை நோக்கி * அற்றவழியும் † அப்பகுதி விடாதாகவின், அல்லற்பாடில்லை யாயிற்று. இதனுற் ‡ பொருளின்மையான் ஆயதற்கு அழியாமையும் ¶ அதற்குபாயமுங் கூறப்பட்டன.

தேவி:—(இ - ன்.) பெற்றேமென்று - (செல்வக்காலத்து இது) பெற்றேமென்று, ஓம்புதல்- உலோபஞ்செய்தலை, தேற்றுதவர் - அறியாதவர், அற்றேமென்று - (வறுமைக்காலத்து யாம்) வறியேமாயினேமென்று, அல்லற்படுபவோ - (மனத்தால்) துன்பத்தை யனுபவிப்போ, (எ-று).

செல்வத்தைப் பெற்றவிடத்து உலோபஞ் செய்யாமையை நோக்கி அஃது அற்றவிடத்தும் அம்மந்திரி முதலாயினோர் விட்டு நீங்காமையால்,

---

* அற்றவழியும் - செல்வம் ஒழிந்தபோதும்.

† அப்பகுதி யென்றது அமைச்சர், புரோகிதர், சுற்றத்தார், சேனைதர் முதலாயினோரை.

‡ பொருள் பெற்றபோது அரசன் உலோபஞ் செய்யாது மந்திரி முதலாயினோர்க்கு அப்பொருளைத் தக்கவாறு கொடுத்து வந்தானுனால் அவனை மந்திரி முதலாயினோர் விட்டுப் பிரியார்; விட்டுப் பிரியாராகவே, அவ்வரசன் பொருளில்லாத காலத்திண்டாய துன்பத்திற்கு மனங்கலங்குதல் வேண்டாமென்பது.

¶ அதற்கு (அழியாமைக்கு - மனங்கலங்காமைக்கு) உபாயமும் (பொருள் பெற்றபோது மந்திரி முதலாயினோர்க்கு உலோபஞ் செய்யாது அப்பொருளைத் தக்கவாறு கொடுத்த லென்பதும்).

அல்லற்படுதல் இல்லையாயிற்று. இதனால் பொருளில்லாமையால் வந்த துன்பத்திற்கு அழியாமையும், அவ்வழியாமைக்கு உபாயமும் சொல்லப்பட்டன.

(க - து.) செல்வமுள்ளபோது உலோபஞ் செய்யாத அரசர் வறுமை நேர்ந்தபோது யாம் வறியமாயினேமென்று மனம் வருந்தார் என்பது.

6. Will those men ever cry out in sorrow, "we are destitute," who, in their prosperity, give not way to undue desire to keep their wealth, saying "we are rich".

எ. * இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறுக் கொள்ளாதா மேல்.

பரி:—(இ - ள்.) † நாற்கதியினும் உள்ள உடம்புகள் இடும்பையென்னும் வாளுக்கு இலக்கென்று தெளிந்து, தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடையார், (எ - று).

ஏகதேசவுருவகம். உடம்பு - சாதியொருமைப் பெயர். கலக்கமென்னும் காரியப்பெயர் காரணத்தின்மேனின்றது. கையறென்பது ஒரு சொல். ‡ இதற்கு ஒழுக்கநெறியென் முரைப்பாருமுளர். ¶ இயல்பாகக் கொள்வரென்பது குறிப்பெச்சம்

தெளி:—(இ - ள்.) மேல் - அறிவுடையார், உடம்பு - (நால்வகைப் பிறப்பிலுமுள்ள) உடம்புகள், இடும்பைக்கு - துன்பமென்னும் வாளுக்கு, இலக்கமென்று - இலக்காமென்று, (தெளிந்து), கலக்கத்தை - (தம்மேல் வந்த) துன்பத்தை, கையாறு-துன்பமாக, கொள்ளாதாம்-கொள்ளார், (எ-று).

உடம்பை இலக்கமென்றுருவகப்படுத்தினவர் அதற்கியைய இடும்பையை வாள் என்றுருவகப்படுத்தாமையின், இக்குறள் ஏகதேச வுருவகவணியாம். உடம்பு ஈறு தோன்றாத சாதியொருமைப்பெயர். கலக்கமென்னுங்காரியப் பெயர் அதற்குக் காரணமாய துன்பத்தின்மேல் நின்றது. கையாறு என்பது (துன்பமென்னும் பொருள் தரும்) ஒருசொல். இயல்பாகக் கொள்வரென்பது குறிப்பெச்சம். இவக்கு -.குறி.

---

* "இடும்பைக் கிடும்பை படுமடம்பி தன்றே" என்பது நல்வழி.

† நாற்கதி-நால்வகைப்பிறப்பு அவை: மக்கள், தேவர், நாகர், விலங்கு என்னும் நால்வகைப் பிறப்பாம்.

‡ கையறென்பதனை யொருமொழியாகக் கொள்ளாது தொடர்மொழியாகக்கொண்டு அதற்கு ஒழுக்கவழி என்ற பொருள் கூறவாருமுண்டு.

¶ அறிவுடையார் இடும்பையை இயல்பாகக் கொள்வரென்பது குறிப்பாகவுணருமாறெஞ்சி நின்றது. இவ்வாறெஞ்சி (குறைந்து) நிற்பது குறிப்பெச்சமாம்.

(க - து.) அறிவுடையவர் துன்பக்கிற்குறைவிடம் உடம் பென்று தெளிந்திருத்தலால், தம்மிடத்து வரும் துன்பத்தைத் தன்பமாகக்கொள்ளார் என்பது.

7. The great will not regard trouble as trouble, knowing that the body is the butt of trouble.

அ. இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன்.

பரி:—(இ - ள்.) தன்னுடம்பிற்கு இன்பமாயவற்றை விரும்பாதே வினையால் இடும்பை எய்துதல் இயல்பென்று தெளிந்திருப்பான், தன் முயற்சியாற் றுன்பமுறான், (எ - று).

இன்பத்தை விழையினும், இடும்பையை * யியல்பென்னுது † காக்கக்கருதினும், துன்பம் ‡ வினைதலின், ¶ இவ்விரண்டுஞ் செய்யாதானைத் 'துன்பமுறுதலிலன்' என்றார்.

தெளி:—(இ - ள்.) இன்பம் - (தன்னுடம்பிற்கு) இன்பமாயவற்றை, விழையான் - விரும்பாமலே, இடும்பை - (தொழில்செய்தலால்) துன்பம் (அடைதல்), இயல்பென்பான் - இயல்பென்று தெளிந்திருப்பவன், துன்ப முறுதலிலன் - (தன் முயற்சியால்) துன்பமடையான், (எ - று).

இன்பத்தை விரும்பினாலும், துன்பமடைதலே இயல்பென்னுது காக்கக்கருதினாலும், துன்பம் வினைதலால், இவ்விரண்டும் செய்யாதவனைத் 'துன்ப முறுதலிலன்' என்றார்.

(க - து.) இன்பத்தை விரும்பாது துன்பமடைதல் சுபாவமென்று தெளிந்திருப்பவன் அதனை யடையான் என்பது.

8. That man never experiences sorrow, who does not seek for pleasure, and who considers trouble to be natural to man.

கூ. இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்.

பரி:—(இ - ள்.) 0 வினையாற் றனக்கின்பம் வந்துழி அதனை யனுபவியா நின்றே மனத்தான் விரும்பாதான், துன்பம் வந்துழியும் அதனை யனுபவியா நின்றே மனத்தான் வருந்தான், (எ - று).

* இயல்பு - சுபாவம் † காக்கக்கருதினும் - தடுக்க நினைத்தாலும்.

‡ வினைதலின் - உண்டாதலின்.

¶ இவ்விரண்டும் - இன்பமாயவற்றை விரும்புதலும் துன்பமடைதல் இயல்பென்றெண்ணுது அதனைத்தடுக்க நினைத்தலும்.

0 வினையால் - தொழிலைச்செய்தலால்.

*தன்பம் - முயற்சியான் வரும் * இடுக்கண். † இரண்டையும் ‡ ஒரு தன்மையாகக்கோடலின், ¶ பயன்களு மிலவாயின.*

தெளி:—(இ - ன்.) இன்பத்தின் - (வினையால் தனக்கு) இன்பம் வந்தவிடத்து, இன்பம் - அவ்வின்பத்தை, விழையாதான் - (அனுபவித்துக்கொண்டே மனத்தால்) விரும்பாதவன், துன்பத்தின் - துன்பம் வந்தவிடத்தும், துன்பம் - அத்துன்பத்தை, உறுதலிலன் - (அனுபவித்துக் கொண்டே மனத்தால்) வருந்தான், (எ-று).

துன்பம்-முயற்சியால்வரும் இடுக்கண். இரண்டையும் ஒரு தன்மையாகக் கொள்ளுதலால், பயன்களும் இலவாயின.

(க-து.) இன்பத்தை விரும்பாதவன் துன்பத்தை யடையான் என்பது.

9. He does not suffer sorrow in sorrow, who does not look for pleasure in pleasure.

க. இன்னுமை யின்ப மெனக்கொளி னுகுந்தன்
னென்னுர் விழையுஞ் சிறப்பு.

பரி:—(இ-ள்.) ஒருவன் வினைசெய்யுமிடத்து முயற்சியான் வருந் துன்பந் தன்னையே தனக்கின்பமாகக் கற்பித்துக்கொள்வானையின், 0 அதனுற் றன் பகைவர் நன்கு மதித்தற் கேதுவாய உயர்ச்சியுண்டாம்.

தன்பத்தானுண்டாயிர்க்கியல்பன்றிக்(*)கணிகமாய் மனத்திடை ()கிழ்வதோர் கோட்பாடாகலின், [] அதனே மாறுபடக்கொள்ளவே, + அதற்கழிவின்றி மனமகிழ்ச்சியுடையனாய் ‖ அதனுற் றொடங்கிய வினை முடிதலேயிடை மாற்றமுடையனு மென்பது கருத்து. இவை நான்கு பாட்டா

---

* இடுக்கண் - துன்பம். † இரண்டையும் - இன்பத்தையும் துன்பத்தையும். ‡ ஒருதன்மையாக - சமமாக.

¶ பயன்களும் - இன்பத்தை யனுபவித்தலும் துன்பத்தை யனுபவித்தலும்.

0 அதனுல் - கற்பித்துக்கொள்ளுவதால்.

(*) எப்பதார்த்தத்திற்குத் தனதுற்பத்திக் காரணத்தின் பிற்காரணத்திற் சம்பந்தம் சம்பவிப்பதன்றே, ஆனல், உற்பத்திக் காரணாதிரத்திலேயே சம்பந்தம் சம்பவிக்கின்றதோ அப்பதார்த்தம் காரணமாமென்ற நியாயநூல் கூறுகின்றது.

() கிழ்வதோர் கோட்பாடு - உண்டாவதோரபிப்பிராயம்.

[] அதனே மாறுபட - அத்துன்பத்தை யின்பமாக.

+ அதற்கு - அத்துன்பத்திற்கு. ‖ அதனுல்-அம்மன மகிழ்ச்சியால்.

னும் மெய்வருத்தத்தா னுயதற்கு அழியாமையும், ¶¶ அதற் குபாயமுங் கூறப்பட்டன.

தெளி:—(இ-ள்.) (ஒருவன் தொழில் செய்யுமிடத்து) இன்னுமை-(மூயற்சியால் வரும்) தன்பத்தையே, இன்பமெனக்கொளின் - (தனக்கு) இன்பமாக நினைத்துக்கொள்ளுவானுயின், (அதனுல்), தன்னெண்ணர் - தன் பகைவர், வீழையும்- நன்கு மதித்தற்கு எதுவாகிய, சிறப்பு -உயர்ச்சி, ஆகும்- உண்டாகும், (எ-று).

தன்பத்தானும் உயிர்க்கு இயல்பாகவன்றிக் கணப்பொழுது நிற்ப தாய் மனத்தினிடத்து உண்டாவதொரு கோட்பாடாகலின், அதனை மாறுபடக்கொள்ளவே, அதற்கு அழியாமல் மனமடிழ்ச்சி யுடையவனுய் அதனுல் தொடங்கிய தொழிலை முடித்தலிடும் வல்லமை யுடையவனுவ னென்பது கருத்து. இவை நான்குபாட்டாலும் மெய்வருத்தலாகிய தன் பத்திற்கு அழியாமையும், அதற்கு உபாயமும் சொல்லப்பட்டன.

(க-து.) தொழில்செய்யும்போ துண்டாகுந் துன்பத்தை யின் பமாகக்கொள்ளுமரசன் தன்பகைவரால் நன்கு மதிக்கப்படுவான்.

10. The elevation, which even his enemies esteem, will be gained by him, who regards trouble as pleasure.



¶¶ அதற்கு - அழியாமை (மனங்கலங்காமை)க்கு.

திருக்குறளகாதி.

குறள்.	பக்கம்.
அ	
அகடாரா	1006
அகப்பட்டி	1143
அகர்முதல	7
அகலா	768
அகழ்வாரைத்	153
அகனமர்ந்தீதலி	101
அகனமர்ந்து	93
அஃகாமை	176
அஃகியகன்ற	173
அக்கணத்து	797
அசையியற்	1171
அச்சமுடை	602
அச்சமே	1144
அஞ்சாமையல்லா	563
அஞ்சாமையீகை	432
அஞ்சுமறியா	938
அஞ்சுவதஞ்	485
அஞ்சுவதோரு	411
அடக்க	127
அடல்வேண்டு	375
அடற்றகையு	847
அடுக்கிய	1028
அடுக்கிவரினு	698
அடுத்தது	782
அணங்குகொ	1154
அணியன்றே	1086
அத்தணரென்போ	42
அந்தணர்நூற்கு	612
அமர்த்தற்றா	891
அமரகத்து	1096
அமிழ்தினு	76
அமைந்தால்	537
அரங்கின்றி	457
அரம்பொருத	960
அரம்போலுங்	1068
அரிதரோ	1229

குறள்.	பக்கம்.
அரிதாற்றி	1235
அரியகற்	571
அரியவற்று	503
அரியவென்	605
அருங்கேட	203
அருஞ்செவ்வி	636
அருட்செல்	238
அருமறை	921
அருமையுடைத்	684
அரும்பய	192
அருவினை	548
அருனல்ல	262
அருளில்லார்க்	255
அருளென்னு	836
அருளொடு	834
அருள்கருதி	300
அருள்சேர்ந்த	252
அருள்வெஃகி	174
அலந்தாரை	1373
அலரெழ	1216
அலர்நாண	1223
அல்லலரு	253
அல்லலவை	104
அல்லற்பட்	626
அவர்தந்தா	1258
அவர்நெஞ்	1361
அவசவில்லார்க்	413
அவாவினை	412
அவாவென்ப	104
அவிசொரிந்	268
அவையறிந்	788
அவையறியார்	791
அவ்வித்	165
அவ்விய	167
அழக்கொண்ட	735
அழச்சொல்லி	873
அழல்போலு	1300

குறள்.	பக்கம்.
அழிவதூஉ	522
அழிவரத	884
அழிவினவை	865
அழிவின்றை	843
அழுக்கற்	168
அழுக்காறவா	47
அழுக்காறுடையார்	163
அழுக்காறுடையா	138
அழுகாறென	166
அழுக்காற்றி	163
அனவல்ல	305
அளவளா	591
அளவறிந்தார்	304
அளவறிந்து	544
அளவின்க	301
அளித்தஞ்சு	1229
அற	178
அறஞ்சாரா	1117
அறஞ்சொல்லு	181
அறத்தாறிது	49
அறத்தாற்றி	60
அறத்தான்	51
அறத்திற்கே	87
அறத்தினூஉங்	44
அறம்பொரு	568
அறவாழி	16
அறவினையா	344
அறவினையு	981
அறனழீஇ	179
அறனறிந்தான்	710
அறனறிந்தமூத்த	500
அறனறிந்தவெ	176
அறனெஞ்சக்	162
அறனீயலா	149
அறனீழுக்கா	434
அறனீனு	833
அறனெனப்	62

குறள்.	பக்கம்.
அறனெனப்பட்ட	185
அறன்கடைநின்ற	145
அறன்வரையா	152
அற்றிலர்	1214
அற்றுகொன்	714
அற்றே	1184
அற்றைத்திங்கள்	583
அற்றைநாள்	479
அறிவிலார்	918
அறிவிலாரினெஞ்	917
அறிவினை	334
அறிவினு	196
அறிவின்மை	916
அறிவுடையாராவ	485
அறிவுடையாரெ	487
அறிவுரு	760
அறுவாய்	1191
அறைபறை	1145
அற்கா	362
அற்றதறித்து	1016
அற்றமறைக்கும்	1052
அற்றமறைத்தலோ	921
அற்றவ	410
அற்றாழிபெ	220
அற்றுரைத்	575
அற்றார்க்கொன்	1079
அற்றாலனவறிந்	1015
அற்றேமென்	699
அனிச்சப்பூக்	1189
அனிச்சமு	1194
அன்புகத்	89
அன்பறிவா	758
அன்பறிவு	582
அன்பில	937
அன்பிலா	83
அன்பிற்கு	82
அன்பின்வழிய	90
அன்பின்விழை	984
அன்பீனு	85
அன்புடை--லிவ	1004
அன்புடை--ல்லே	757
அன்புகா	1055
அன்புமறனு	59
அன்புற்றமர்ந்த	86
அன்பொரீஇத்	1080

குறள்.	பக்கம்.
அன்போ	84
அன்றறிவா	48
ஆ	
ஆகாரவிட்டி	843
ஆகூழாற்	419
ஆகுகருதி	525
ஆக்கமதர்வி	668
ஆக்கமிழக்	667
ஆக்கமுங்	718
ஆக்கமை	619
ஆபயன்	631
ஆய	990
ஆய்தாய்ந்தி	870
ஆரா	415
ஆவிற்கு	1134
ஆன்வினையு	1092
ஆற்றரு	559
ஆற்றினளவறிந்தி	541
ஆற்றின்வருந்தா	530
ஆற்றினில	794
ஆற்றினொழுக்கி	61
ஆற்றுபவர்க்கு	820
ஆறறிவாலிக	963
ஆற்றுவார்-ல்பசி	219
ஆற்றுவா-ல்பணி	1057
ஆற்றினளவறிந்து	802
இ	
இகலான	934
இகலிற்	932
இகலின்	930
இகலெதிர்	930
இகலென்ப	926
இகலென்னு	925
இகல்காணு	933
இகழ்ச்சியிற்	607
இகழ்தென்னா	1126
இடமெல்லாங்	1133
இடனில்	212
இடிக்குந	506
இடிபுரிக்	680
இடிப்பாரை	507
இடுக்கட்படினு	731
இடுக்கண்கால்	1100
இடுக்கண்வ	695

குறள்.	பக்கம்.
இடும்பைக்கி	696
இடும்பைக்கே	1098
இடைதெரிந்து	790
இணருப்பத	727
இணைவி	827
இனியிதனு	585
இமைப்பிற்	1202
இமையாரின்	978
இம்மை	1384
இயல்பாகு	377
இயல்பினு	61
இயல்புளிக்	616
இயற்றலு	486
இரக்க	1121
இரத்தலி	223
இரத்தலு	1124
இரந்து	1181
இரப்பனிரப்	1185
இரப்பாரை	1127
இரப்பான்	1129
இரவா	1100
இரவுள்ள	1137
இரவென்னு	1136
இருணீங்கி	387
இருநோக்	1164
இருத்தள்ளி	1314
இருதோமபி	91
இருபுனலும்	815
இருமனப்	992
இருமை	31
இருவே	422
இருள்சே	13
இலக்க	400
இலங்கிழா	1333
இலமென்றசை	1110
இலமென்று	172
இலர்பல	261
இலனென்று	198
இலனென்னு	217
இல்வாழ்வா	54
இலனெத	66
இல்லாரை	831
இல்லாரோ	977
இல்லாள்கட்	976
இல்லை	1390

குறள்.	பக்கம்.
இலுறலு	491
இழத்தொறூஉங்	1010
இழிவறிச்	1019
இழுக்கலுடை	471
இழுக்காமை	604
இழைத்த	858
இளித்தக்க	1358
இளிவரின்	1042
இளைதாக	953
இளைய	775
இறந்தமைந்த	972
இறந்தவெ	600
இறந்தா	328
இறப்பே	1049
இறலீனு	177
இறுதி	767
இறைகடிய	635
இறைகாகும்	617
இற்பிற-கண்ண	1025
இற்பிற-கண்ணே	1114
இனத்தாற்றி	669
இனம்போன்	899
இனியவுளவாக	106
இனியன்ன	1364
இனைத்துணைத்	96
இனைய	868
இன்க	1227
இன்சொலாலீத்	438
இன்சொலாலீர	100
இன்சொலினி	106
இன்பங்கடன்	1242
இன்பத்த-பய	929
இன்பத்த-விழை	701
இன்பமிடை	414
இன்பமொ	1122
இன்பம்விழை-னி	701
இன்பம்விழை-ன்	685
இன்மைமிடி	1132
இன்மையினி-த	1111
இன்மையினி-து	629
இன்மையு	154
இன்மையென	1112
இன்னம்மொ	1059
இன்றி	1035
இன்றும்	1118
இன்னுசெ-ரை	333
இன்னுசெ-ர்க்கு	1059
இன்னுநிரக்கப்	218
இன்னுநின	1233
இன்னுமை	702
இன்னுவெனத்தா	335
ஈ.	
ஈட்ட	1074
ஈத	225
ஈத்துவக்கு	222
ஈரிங்கை	1146
ஈவாக	1128
ஈன்ற	80
ஈன்ருண்முகத்	995
ஈன்ருள்பசி	733
உ.	
உடம்பா	962
உடம்பொ	1196
உடுக்கை	867
உடுப்பதூஉ	1147
உடைசெல்வ	1009
உடைத்தம்	536
உடைமையு	98
உடைய	666
உடையார்மு	450
உட்கப்	993
உட்பகை	956
உணர்வ	796
உணலினு	1395
உணடார்க	1163
உண்ணற்க	994
உண்ணுது	159
உண்ணுமையுள்ள	261
உண்ணுமைவே	266
உதவி	119
உப்பமைந்	1372
உயர்வகலன்	822
உயிருடம்பி	356
உயிர்ப்ப	954
உய்த்த	1357
உரமொருவற்	673
உரனசைஇ	1335
உரனென்னுங்	32
உருவகண்	743
உருளாய	1003
உரைப்பா	226
உலகதாதா	925
உலகதோ	142
உலகந்தழீஇய	482
உலேவிடத்	841
உவக்காணெங்	1261
உவந்தமை	1203
உவப்பத்	449
உழந்தும	1252
உழவினர்	1107
உழுதண்டு	1104
உழுவா	1102
உளர்ப்பிரித்து	598
உளபோன்	648
உள்ளொளினு	807
உளவென்னு	461
உளவரை	544
உள்ளக்	1352
உள்ளத்தா	1320
உள்ளதாலு	298
உள்ளத்தாற்	311
உள்ளமிலா	671
உள்ளமுடைமை	667
உள்ளம்போன்	1245
உள்ளற்க	876
உள்ளியதெய்த	608
உள்ளியவெல்லா	327
உள்ளினுங்	1275
உள்ளினே	1385
உள்ளுவதெல்	669
உள்ளுவன்-னு	1260
உள்ளுவன்-ன்ம	1199
உள்ளொற்றி	998
உறங்குவது	371
உறன்முறையா	958
உறுஅதவர்க்	1362
உறுஅதவர்போற்	1169
உறுஅதோ	1218
உறுஅர்க்	1274
உறினட்	889
உறினுயி	857
உறுதோ	1180
உறுபசியு	812
உறுபொருளு	835

குறள்	பக்கம்.
உதப்பம்மன்	840
உறப்பொத்தல்	1065
உறுதி	890
உறுதிரியா	755
உறுதேர்ப்பக்கி	501
உறுநோய்சே	271
உ[illegible]	1023
உ[illegible]	1022
ஊ	
ஊக்கமுடையா	551
ஊடலிற்றோற்	1396
ஊடலிற்றோன்	1391
ஊடலினி	1376
ஊடலுணர்ந	1379
ஊடலுணர்த்தல்	1183
ஊடற்கட்	1355
ஊடிய	1397
ஊடியவரை	1374
ஊடியிருக்	1381
ஊடுக	1398
ஊடுதல்	1399
ஊடுதலை	1084
ஊதிய	975
ஊதியர்	1222
ஊருணி	209
ஊழிபெயரினு	1060
ஊழிற்	427
ஊழையு	693
ஊற்றாக	738
ஊற்றீர்	1085
எ	
எச்சமென்	1075
எட்பக	961
எண்சேர்ந்த	982
எண்ணித்	528
எண்ணியா	560
எண்ணிய	743
எண்ணேற்ப	445
எண்பதத்தாலே	1063
எண்பதத்தானே	619
எண்பொருள	461
எதிரதூ	486
எந்தை	116

குறள்	பக்கம்.
எப்பொருள்	772
எப்பொருளை	391
எப்பொருள்	480
எய்தற்	554
எரியார்	968
எலுவப்	826
எல்லார்க்குநன்	129
எல்லார்க்குமெல்	657
எல்லாரையுங்	314
எல்லாரை	884
எவ	494
எழுதுங்கா	1356
எழுபிறப்பு	74
எழுமை	113
எளிதென	148
என்னாத	532
என்னாமை	295
என்னி	1368
எற்றிற்	1148
எற்றென்	731
எனைத்தானும்	472
எனைத்தானுமெ	336
எனைத்திட்பு	746
எனைத்தா	897
எனைத்துணைய	147
எனைத்தொன்	1280
எனைப்பகை	201
எனைமாட்சித்	829
எனைவகையா	582
என்பிலதனை	88
என்று	729
என்னோமுன்	850
ஏ	
ஏதம்	1077
ஏதிலாளாகத்	918
ஏதிலார்குற்	186
ஏதிலார்போலப்	1172
ஏந்திய	971
ஏமற்	948
ஏரிநுண்ணீர்	1109
ஏரினுழாஅ	28
ஏவன்மி	922

குறள்	பக்கம்.
ஐ	
ஐந்தவித்தா	33
ஐயத்தி	389
ஐயப்	779
ஐயுணர்	890
ஒ	
ஒட்டார்பின்	1039
ஒண்ணுதற்	1161
ஒண்பொருள்	889
ஒத்த	208
ஒப்புரவி	213
ஒருதலையா	1271
ஒருநா	1341
ஒருபொழுதும்	867
ஒருமைக்கட்	453
ஒருமைச	911
ஒருமைமகளிரே	1047
ஒருமையு	130
ஒலித்தக்கா	842
ஒல்லுகரும	895
ஒல்லும்வகையா	45
ஒல்லுமவா	749
ஒல்வ	535
ஒழுக்கத்தினெ	140
ஒழுக்கத்தினெ	139
ஒழுக்கத்த	29
ஒழுக்கமுடைமை	136
ஒழுக்கமுடைய	141
ஒழுக்கமும்	1026
ஒழுக்கம்விழுப்	135
ஒழுக்காருக்	161
ஒளியசும்	791
ஒளியொருவற்	1043
ஒறுதாஅ	156
ஒறுத்தார்க்	157
ஒறுத்தாற்றும்	653
ஒற்றிஞ	658
ஒற்றுமுறை	656
ஒற்றெற்றித்	668
ஒற்றெற்று	664
ஒன்ன	847
ஒன்னுமை	959
ஒன்னுவஞ்சித்	228
ஒன்னுவர்	182

குறள்.	பக்கம்.
[illegible]	1003
[illegible]	275
ஓ	
ஒத்தல்	730
ஒருவினைதே	1251
ஒலி	910
ஒப்பி	1230
ஓர்த்துள்ள	395
ஓர்ந்தகண்	610
க	
கடவுளின	1211
கடவோட்டா	562
கடன்றிந்து	763
கடனென்ப	1054
கடாஅக்களிற்	1160
கடாஅவுரு	660
கடிதோச்சி	633
கடிந்த	734
கடுஞ்சொல்லன்	637
கடுமொழியுங்	638
கடைக்கொட்கச்	740
கணைகொடுதி	292
கண்களவு	1166
கண்டது	1220
கண்டற்கு	1247
கண்டாருயி	1157
கண்டுதொட்	1174
கண்ணிறைத்த	1344
கண்ணிற்கணி	649
கண்ணிற்றுனி	1860
கண்ணின்ப	1311
கண்ணின்று	180
கண்ணுங்	1315
கண்ணுடைய	448
கண்ணுள்ளார்	1201
கண்ணுள்ளிற்	1200
கண்ணுறுப	1178
கண்ணோட்டத்	644
கண்ணோட்டமி	652
கண்ணோட்டமெ	648
கண்ணோக்கந்	134
கண்ணோடா	1249
கண்ணோடாண்	1285
கண்ணோடி	1238

குறள்.	பக்கம்.
கரப்பவர்க்	1138
கரப்பிடும்பை	1125
கரப்பிலாகெ	1123
கரப்பிலார்	1124
கரப்பினுங்	1343
கரவா	1130
கருமஞ்சிதை	652
கருமஞ்செய	1091
கருமணியிற்	1197
கருமத்தர்	1083
கருவியுங்	706
கலங்காது	744
கலக்குணாத்துங	1317
கல்லாதமேற்	920
கல்லாதவரிற்	806
கல்லாதவரு	459
கல்லாதாரெ	460
கல்லாதான்	458
கல்லாப்	641
கல்லாவொரு	460
கல்லான்	944
கவறும	1005
கவ்வையாற்	1219
கழாஅககால்	915
களவினு	299
களவின்கட்	300
களவின்வன்னுங்	803
களித்தறியே	999
களித்தானைக	1000
களித்தொறுங	1220
கள்வார்க்குத்	306
கள்ளுண்ணப்	1001
கறுத்தின்னு	332
கற்க	443
கற்றதனு	10
கற்றறிந்தார்	795
கற்றூருட்	800
கற்றூர்முற்	801
கற்றில	470
கற்றீண்டு	394
கற்றுக்கண்	762
கனவினு	1287
கனவினு	896
கா	
காணுச்	940

குறள்.	பக்கம்.
காணுதகு	924
காணிற்	1188
காணுங்காற்	1356
காண்கமற்	1337
காதலகாத	498
காதலரில்	1296
காதலர்தூ	1284
காதன்மை	575
காமக்கடன்	1240
காமக்கடு-லு	1208
காமக்கடுனி	1243
காமக்கணிச்சி	1322
காமமுநாணு	1239
காமமுழந்த	1205
காமமென	1322
காமம்விடு	1318
காமம்வெகுளி	401
காலங்கருதி	549
காலத்தி	110
காலாழ்களரி	566
காலைக்குச	1297
காலையரும்பிப்	1299
கான	852
காத	1313
காக்க	128
காகை	595
காட்சிக்	487
கு	
குடம்பை	369
குடிசெய்வ	1093
குடிசெய்வார்க்	1097
குடிதழீஇக்	615
குடிபுறங்	620
குடிப்பிறந்தார்	1030
குடிப்பிறந்துகு	570
குடிப்பிறந்தத	872
குடிமடிக்து	677
குடியாண்மை	681
குடியென்னுங்	674
குணகலஞ்	1054
குணனுடிக்	573
குணமென்னுங்	41
குணனிலஞ்ஞ்	942
குண்ணுங்	871
குலஞ்சுடுங்	1089

குறள்.	பக்கம்.
குழலினிதி	78
குறிக்கொண்டு	1168
குறித்தது	781
குறிப்பறிந்து	773
குறிப்பிற்-	781
குறிப்பிற்-	780
குற்றமிலனெம்ப	1095
குற்றமே	493
குன்றன்னர்	970
குன்றி	1038
குன்றேறி	837
கூ	
கூடிய	1356
கூத்தாட்	361
கூழுங்	626
கூறுமம	778
கூற்றங்குதி	281
கூற்றத்தைக்	966
கூற்றமோ	1159
கூற்றுடன்று	811
கெ	
கெடல்வேண்டிற்	965
கெடாஅ	886
கெடுக்காலங்	877
கெடுப்பதூஉ	23
கெடுவல்யா	122
கெடுவாக	122
கெட்டார்க்கு	1363
கே	
கேடறியாக்	814
கேடில்	455
கேடும்	121
கேட்டார்ப்	719
கேட்டினு	874
கேட்பினுங்	474
கேளிழுக்கங்	885
கை	
கைம்மாறு	206
கையறி	996
கைவேல்	851
கொ	
கொக்கொக்க	555
கொடியார்-பி	1245

குறள்.	பக்கம்.
கொடியார்-யு	1306
கொடுத்தலு	593
கொடுத்துங்	941
கொடுப்பதமுஞ்	164
கொடுப்பதூஉ	1076
கொடும்புருவ	1159
கொடையளி	441
கொலமேற்கொண்	623
கொலையிற்	621
கொலைவினைய	855
கொல்லாக	1056
கொல்லாமை	250
கொல்லான்	269
கொளப்பட்டே	776
கொளற்கரிதாய்க்	825
கொன்றன்ன	115
கோ	
கோட்பிழைச்	1882
கோனிழ்	17
ச	
சமன்செய்து	133
சலத்தாற்	796
சலம்பற்றிச்	1029
சா	
சாதலி	234
சாயலு	1259
சார்புணர்ந்து	899
சால்பிற்கு	1058
சான்றவர்	1051
சி	
சிதைவிடத்	670
சிறப்பறிய	665
சிறப்பீ-தீவு	43
சிறப்பீ-பெறினு	830
சிறப்பொடு	26
சிறியா	1018
சிறுகாப்பிற்	824
சிறுபனை-யான்	564
சிறுமைக	1302
சிறுமைபல	1005
சிறுமையுஞ்	848
சிறுமையுணீ	105
சிறைகாக்குஞ்	69
சிறைகலனுஞ்	565

குறள்.	பக்கம்.
சிற்றினஞ்	511
சிற்றின்பம்	171
சினத்தைப்	825
சினமென்னுஞ்	328
சீ	
சீரிடத்	893
சீரினுஞ்	1036
சீருடைச்	1081
சீர்மை	190
சு	
சுடச்சுடரும்	279
சுவையொளி	36
சுழலு	856
சுழன்றுமேர்ப்	1102
சுற்றத்தாற்	592
சூ	
சூழாமற்	1091
சூழ்ச்சி	717
சூழ்வார்	504
செ	
செப்ப	118
செப்பின்	959
செயற்கரியசெ	34
செயற்கரியயா	860
செயற்கை	713
செயற்பாலசெ	495
செயற்பாலதோ	52
செயிரிற்	267
செய்க	838
செய்தக்க	527
செய்தேமஞ்	892
செய்யாமற்செய்த	109
செய்யாமற்செ	382
செய்வானே	584
செய்வினை	753
செருக்குஞ்	490
செருவத்த	641
செல்லாமை	1227
செல்லாவிடத்	319
செல்லான்	1109
செல்லிடத்துக்	318
செல்வத்துட்	407
செல்வீருங்	95

குறள்.	பக்கம்.
செலினைப்பச்	440
செலீக்குண	468
செலீச்சொல்லுஞ்	771
செலியிற்	476
செலியுணவிற்	469
செறுஅச்	1170
செறிதொடி	1346
செறிவறிந்து	128
செறுவரைக்	553
செறுவார்க்குச்	943
செற்றவர்	1326
செற்றுரசெனக்	1316
செற்றுர்பின்	1325
சென்ற	479

சொ

சொலல்வல்லன்	724
சொல்லுக-லி	194
சொல்லுக-லே	722
சொல்லுதல்	741
சொல்லப்	1147
சொல்வணக்க	903
சொற்கோட்ட	124

ஞா

ஞாலங்	549

த

தகுதி	117
தக்காங்கு	633
தக்காரினத்	505
தக்காங்	119
தஞ்சங்	1370
தணந்தமை	1304
தண்ணங்	1348
தந்தை	73
தந்நலம்	988
தந்நெஞ்சத்	1278
தமச்சாகித்	596
தம்பொரு	75
தம்மிலிருந்து	1181
தம்மிற்பெரியார்	503
தம்மிற்றம்	79
தலேப்பட்டார்	882
தலேய்	1037

குறள்.	பக்கம்.
தவஞ்செய்வார்	277
தவமறைந்	287
தவமுந்தவ	273
தவறில	1394
தன்னா	803
தற்காத்துத்	69
தனக்குவமை	15
தனியே	1366
தன்குற்ற	494
தன்னுயிர்	949
தன்னுயிர்க்கின்	337
தன்னுயிர்தா	280
தன்னுயிர்நீ	351
தன்னுயிர்	259
தன்னெஞ்	309
தன்னேத்தான்காக்	322
தன்னேத்தான்காத	203
தன்னேயுணர்த்	1388

தா

தாமரை	454
தாம்வீழ்-த	1267
தாம்வீழ்-மே	1177
தாய்சொண்டி	1224
தார்தாழ்கிச	846
தானாண்மையி	687
தானாண்மையெ	686
தானார்ற்றித்	207
தானம்	26

தி

திருவினல்ல	157
திருவினறிந்து	721
தினற்பொரு	265
தினேத்தினேம	111
தினேத்தினேயாங்	492
தினேத்தினேயு	1353

தீ

தீப்பால	200
தியவைசெய்	201
தியவைதீய்	196
தியன	1020
தியினும்	133
தீவினேயா	195

து

துஞ்சினர்	997

குறள்.	பக்கம்.
துஞ்சுங்காற்	1290
துணேதல்	728
துப்பார்க்குத்	21
துப்பி	1241
துப்புர	1119
தும்முச்	1887
துளியின்மை	628
துறந்தா-த்	273
துறந்தா-ந்	56
துறந்தார்படி	661
துறந்தார்பெருமை	30
துறந்தாரிற்	159
துறப்பார்மற்	425
துறைவன்	1232
துனியும்	1375
துன்பத்திற்	1369
துன்பமுற	745
துன்புறாஉங்	102
துன்னுத்	1320
துன்னியார்	184

தூ

தூங்காமை	433
தூங்குக	748
தூய்மைதுணேமை	765
தூஉய்மையெ	408

தெ

தெண்ணீ	1134
தெய்வத்தா	692
தெய்வம்	68
தெரிதலுங்	709
தெரிந்த	523
தெரிந்துணரா	1248
தெருளாதான்	257
தெளிவி	525
தென்புலத்தார்	56

தே

தேரான்பிறனேத்	576
தேரான்தெளிவுங்	578
தேவ	1142

குறள்.	பக்கம்.
தேறற்க	577
தேறினுங்	950
தொ	
தொகச்சொல்லித்	761
தொடங்கற்க	557
தொடலைத்	1209
தொடிகோக்கி	1350
தொடிப்புழுதி	1108
தொடியொடு	1309
தொடிற்சுடி	1234
தொட்டனைத	451
தொல்வரவும்	1113
தொழுதகை	904
தோ	
தோன்றிற்	231
ந	
ககல்வல்ல	1070
ககுதற்	963
நகையீகை	1027
நகையுமுவகையும்	321
நகையுள்ளு	1066
நகைவகைய	804
நகையிலா	1273
நச்சப்	1079
நடுவின்றி	169
நட்டார்குறை	980
நட்டார்க்கு	754
நட்டார்போ	902
நட்பிற்குவீ	868
நட்பிற்குறுப்	880
நண்பற்ற	1069
நத்தம்போற்	230
நயக்கலர்க்கு	1257
நயந்தவர்கள்	1304
நயனிலசொல்	192
நயனில	189
நயனீன்று	104
நயனுடையா	213
நயனெடு	1006
நயன்சாரா	149
நலச் நரியார்	151

குறள்.	பக்கம்.
நலத்தகை	1374
நலத்தின்க	1031
நலமவேண்டி	1033
நல்குர	1115
நல்லவை	423
நல்லாண்மை	1096
நல்லார்கட்	463
நல்லாரெனை	848
நல்லாரெனை	216
நல்லாற்ற	239
நல்லினத்தி	521
நலிரெற்ற	872
நற்பொரு	1116
நனவினுட்கண்	1288
நனவினுந	1286
நனவினுமொ	1289
நனவினுளை	1292
நனவினுளை	1291
நனவெனை	1290
நன்மைபற	579
நன்றறி	1141
நன்றாகு	353
நன்றுகா	496
நன்றாற்ற	531
நன்றிக்கு	140
நன்றிமறப்பது	115
நன்றென்	793
நன்றோற	119
நனிசேர	1185
நா	
நாகுகாதல	1270
நாச்செற்ற	305
நாடாதி	869
நாடொண்ப	817
நாடொறுநாடி	625
நாடோறுநாடோ	537
நாணகத்	1070
நாணமை	999
நாண்டுணி	1038
நாணுத	1367
நாணென	1327
நாணென்னு	996
நாணெறி	1205
நாதனேவி	1031

குறள்.	பக்கம்.
நாநல	717
நாவொண்	303
நி	
நிணந்தீயி	1330
நிலத்தியல்பா	512
நிலதிதிரீ	1032
நிலவரை	226
நிலமக்கள்	85
நிலையஞ்சி	346
நிலையிற்	129
நில்லா	360
நிழலீரு	955
நிறைநீர	861
நிறைநெஞ்ச	989
நிறைமொழி	40
நிறையரியர்	1212
நிறையுடைமை	155
நிறையுடையே	1321
நினைத்திருந்து	1289
நினைந்தான்று	313
நினைப்பவர்	1277
நீ	
நீக்கான்	938
நீங்கி	1178
நீங்கின்	27
நீரின்	1378
நு	
நுணங்கிய	170
நுண்ணிய	121
நுண்ணியம	786
நுண்மா	462
நுனிகொம்ப	540
நூ	
நூலாரு	759
ந	
நெஞ்சத்தார்	1202
நெஞ்சிற்	289
நெடுங்கடலுங்	25
நெடுநீர்	677
நெடும்புனலுள்	561
நெய்யா	1228
நெருப்பிலுட	1119

குறள்.	பக்கம்.
நெஞ்சுள	866
நெஞ்சுநற்றுச்	1349
நோ	
நோக்கினு-கி	1167
நோக்கினு-கெ	1155
நோத	1377
நோயெல்லா	341
நோய்நாடி	1021
நோவதற்க	951
நோனு	1206
ப	
பகச்சொல்லித்	188
பகல்கருதிப்	927
பகல்வெல்	546
பகுத்தண்டு	345
பகைகட்பாக்	949
பகைகட்பாங்	906
பகைபாவ	149
பகைமையுவ்	785
பகையகத்துச்	801
பகையகத்துப்	805
பகையென்னும்	945
பசக்கமற்	1264
பசந்தா	1263
பசப்பெனப்	1265
படவாற்று	1250
படியுடை	679
படுபயன்	170
படைகுடி	430
படைகொண்	261
பணியுமா	1050
பணிவுடைய	103
பணீநீங்கிப்	1305
பண்டறியேன்	1156
பண்ணென்னும்	645
பண்பிலான்	1070
பண்புடையார்	1067
பதிமருண்டு	1301
பயனிலபல்	188
பயனில்சொற்	190
பயன்மர	210
பயன்றூக்கார்	110
பயன்றூக்கிச்	984
பரிந்தவர்	1319
பரிந்தோம்பிக்	136
பரிந்தோம்பிப்	97
பரியது	672
பரியினு	424
பருகுவார்	888
பருவத்தோ	547
பருவரலும்	1272
பல்குடை	1104
பலசொல்லக்	726
பலசொல்ல	900
பல்குழுவும்	812
பல்லவை	806
பல்லார்பகை	509
பல்லார்முனி	187
பழகியசெல்	1007
பழகியகட்	881
பழமை	879
பழிமலைக்	734
பழியஞ்சிப்	58
பழுதெண்ணு	715
பழைய	777
பற்றற்றகண்ணே	383
பற்றற்றகண்ணும்	588
பற்றற்றே	288
பற்றிவிடாஅ	381
பற்றுக	384
பற்றுள்ள	496
பனியருமும்பிப்	1295
பன்மாயக்	1328
பா	
பாடு	1308
பாத்தூண்	221
பாலொடு	1195
பி	
பிணிக்கு	1176
பிணியின்மை	816
பிணையர்	1162
பிரித்தலும்	708
பிரிவுரைக்கும்	1281
பிழைத்தணர்	473
பிறப்பென்னும்	396
பிறப்பெரக்கு	1045
பிறர்க்கின்னா	339
பிறர்மாணத்	1089
பிறர்பழியுக்	1087
பிறவிப்	19
பிறன்பழி	182
பிறன்பொரு	144
பிறன்மனை	150
பீ	
பீலிபெய்	538
பு	
புகழின்றூற்	1038
புகழ்ந்தவை	606
புகழ்பட	232
புகழ்புரிந்	71
புக்கி	371
புணர்ச்சி	864
புத்தே	207
புரந்தார்கண்	859
புலத்தலிற்	1392
புலப்ப	1330
புலப்பேன்கொல்	1339
புல்லவையுட்	796
புல்லா	1371
புல்லிக்கிடந்	1262
புல்லிவிடாஅப்	1393
புறங்குன்றி	290
புறங்கூறிப்	180
புறத்தாறப்	89
புறந்தூய்மை	315
புன்கண்ணை	1294
பெ	
பெண்ணியலா	1380
பெண்ணிற்	67
பெண்ணினுற்	1351
பெண்ணேவல்	979
பெயக்கண்டு	654
பெயலாற்று	1249
பெரிதாற்றிப்	1347
பெரிதினிது	914
பெரியாரைப்	964
பெருக்கத்து	1036
பெருங்கொடை	594
பெருமைக்கு	574
பெருமைபெ	1051
பெருமையு	1048

குறள்.	பக்கம்.
பெரும்பொரு	809
பெரியமை	1365
பெற்றென்னும்	1342
பெறாவற்றுள்	73
பெற்றாற்	70
பே	
பேணுதபேன்	975
பேணுதபெட்டா	1252
பேணுதபெப்ப	1354
பேதைபெரும்	893
பேதைப்பிக்கு	420
பேதைமையு	909
பேதைமையெ	908
பேதைமையொ	893
பேராண்மை	852
பொ	
பொச்சாப்பார்க்	532
பொச்சாப்புக்	601
பொதுலத்தார்	987
பொதுசோக்	595
பொய்படி	912
பொய்ம்மையும்	308
பொய்யாமைபொ	313
பொய்யாமைய	812
பொருஉச்ச	193
பொருட்பெண்டிர்	985
பொருட்பொருளா	986
பொருணீங்கிப்	254
பொருண்மாலை	1301
பொருள்கருவி	751
பொருள்செய்த்	1008
பொருள்வலத்	886
பொருள்வலவை	831
பொருளற்றார்	256
பொருளாட்சி	260
பொருளான	1074
பொருளென்னும்	832
பொள்ளென	551
பொறியின்மை	691
பொறிவாயி	14
பொறுத்த	153
பொறையொ	811

குறள்.	பக்கம்.
போ	
போற்றி	770
ம	
மகன்றந்தைக்	80
மக்கண்மெய்	77
மக்களே	1140
மக்கலமென்ப	72
மடவார்தல்	1211
மதமுடிக்	676
மடிமை	681
மடியிலா	682
மடியுளாண்	690
மடியை	675
மதித்லா	697
மணிக்கு	821
மணியிற்	1345
மண்ணு	650
மதிநுட்ப	711
மதியு	1190
மயிர்நீப்பின்	1041
மருந்தாகித்	211
மருந்தென	1014
மருந்தோமற்	1040
மருவுக	878
மலரன்ன-ண்	1193
மலரன்ன-ன	1217
மலரினு	1359
மலர்மிசை	11
மலர்காணின்	1186
மழித்தலு	293
மறத்தலெ	826
மறந்தும்	197
மறப்பினு	138
மறப்பினெவ	1280
மறமான	845
மறவன்க	118
மனத்தானை	662
மனமெம	1255
மனமுடைமை	1823
மனைமாட்சி	1287
மற்றிவர்	1279
மற்றல்	878
மனத்தது	291
மனத்தூய	518

குறள்.	பக்கம்.
மனத்தி	901
மனத்துக்கண்	46
மனத்துளது	514
மனத்தொடு	811
மனிலத்தி	519
மனைகலன்	519
மனைகலமன்	517
மனத்தூயார்க்	516
மனத்தூய்மை	515
மனமாணு	957
மனைத்தக்க	65
மனைமாட்சி	65
மனையாளே	976
மனைவிழைவார்	974
மன்னர்க்கு	627
மன்னர்விழை	709
மன்னுயிரெல்	1244
மன்னுயிரோம்பி	252
மா	
மாதர்	1192
மாலைநோய்	1298
மாலையோ	1293
மானுபா	1017
மி	
மிகச்செய்து	905
மிகின்மேவன்	931
மிகினும்	1012
மிகுதியான்	158
மு	
முகத்தா	101
முகத்தினினிய	901
முகத்தின்முதல்	783
முகந	865
முகநோக்கி	784
முகமொக்கு	1346
முடவு	752
முதலிலார்க்	503
முயல்வினைத்	1311
முயன்றிய	1310
முயற்றி	689
முளைசேர்ந்த	558
முறிமேனி	1187
முறைகோடி	680

குறள்.	பக்கம்.
முறைசெய்து	489
முறைப்படச்	716
மூற்றூற்றி	827
மூற்றியு	827
மூனைமுகத்தி	828
மூன்றுறக்	603
மே	
மேலிருத்து	1046
மேற்பிறந்தா	464
மை	
மைய	913
மோ	
மோப்பக்	98
யா	
யாகாயு	131
யாங்கண்ணிற்	1214
யாண்டுச்சென்	967
யாதனின்	373
யாதானு	452
யாமு	1277
யாமெய்யாக்	317
யாரிலுங்	1383
யாரெனை	381
யாரேனுக்குங்	1167
வ	
வருத்தான்	424
வகைமாண்ட	969
வகையறச்	526
வகையறிந்துத	952
வகையறிந்துவ	799
வசையிலா	234
வசையென்ப	233
வசையொழிய	235
வஞ்சமனத்தான்	288
வருகமற்கொ	1338
வருமுன்னர்க்	493
வருவிருத்தி	93
வரைவிலா	991
வலியார்க்கு	936

குறள்.	பக்கம்.
வலியார்முற்	258
வலியினில	285
வழங்குவ	1028
வழிநோக்கான்	939
வழுத்திநா	1386
வறியார்க்	215
வன்கண்	707
வா	
வாணிகஞ்	125
வாய்மை	307
வாராக்காற்	1254
வாரிபெருக்கி	580
வாழ்த	1198
வாழ்வார்க்கு	1268
வாளற்றுப்	1332
வானொடென்	804
வான்போற்	955
வானின்	20
வானுயர்	284
வானேக்கி	611
வி	
விசும்பிற்	24
விட்டஅது	1282
விடுமாற்றம்	766
விண்ணின்று	22
வித்து	94
வியவற்க	497
விருந்து	92
விருப்பறுச்	589
விஸ்ரத்து	725
விலக்கொடு	465
வில்லே	946
விழித்தகண்	854
விழுப்புண்	855
விழுப்பேற்றி	162
விழைதகையான்	882
விழையார்	887
விளக்கற்றம்	1262
விளித்தாரின்	146

குறள்.	பக்கம்.
விளியுமென்	1281
வினைகலந்து [கெ	1340
வினைக்கண்வினை	685
வினைக்கண்வினையு	586
வினைக்குரிமை	586
வினைசெய்வார்	659
வினைத்திட்ப	738
வினைபகை	750
வினையான்	753
வினைவலியுங்	534
வீ	
வீழப்	1269
வீழுநர்	1269
வீழுமிருவர்க்	1182
வீழ்நாள்	50
வீழ்வாரி	1273
வீறெய்தி	742
வெ	
வெண்மை	919
வெருவந்த	634
வெள்ளத்தனையம	669
வெள்ளத்தனையவி	695
வே	
வேட்ட	1179
வேட்பத்தாஞ்	723
வேட்பன	774
வேண்டற்கவெஃ	175
வேண்டற்கவென்	1002
வேண்டாமை	407
வேண்டிய	276
வேண்டிஞண்	374
வேண்டுங்கால்	405
வேண்டுதல்	12
வேலன்று	616
வேலொடு	624
வை	
வைத்தான்வாய்	1072
வையத்தள்	64

திருக்குறளகராதி முற்றிற்று.

சிவதரிசன விளக்கம்	ரூ.	0	8	சித்தர்கள் பிரபு		0	8
சுதாகரிசரசம்		1	4	பிரசாதாகரம் பிள்ளை		0	8
சதுர்த பரிசுகை		1	0	வைரவர்பிள்ளை சித்தி		0	8
சிவகோத்திரட்டு		1	0	வைரமுத்துச் சித்தி		0	8
வேதாந்த சங்கிர சந்தனம்		1	0	பரமேஸ்வர சித்தர்		0	6
விவேகானந்தர் ராஜயோகம்		0	12	பாலகுருசித்தர்		0	6
சச்சிதானந்த சிவம்		0	14	வியாசயோகினி 1 - பாகம்		0	5
வேல்முருகனேசரசம்		0	12	,, 2 - பாகம்		0	4
திருவாசகம் பாலிட்ட சாரம்		0	10	அரிவைகாந்த சித்தி		0	4
வேதாந்தசாரம்-வசனம்		0	10	[illegible] தறை-வசனம்		0	3
தெலிவுரைதுறை-வசனம்		0	8	பிரம்மவாசக வரிசி		0	1
வேதாந்தபிரகாசம்		0	10	புளிபாணி 0 2 [illegible] பாக மாலை		0	2
சூரிதிருபுராணம் உரை		2	8	விவேகானந்தர் கருத்துக்கள்		0	4
விவேகாந்த விநோதம்		1	4	சூரிய புராணம் வசனம்		8	0
விவேகாந்தர் பதிகாரம்		0	8	விசேஷதருமஞ்சரி		1	2
சூரிசம்பந்த புராணம் வசனம்		1	8	விசாரசாகரம், 3-ம் பதிப்பு		8	4
அருணாசல புராணம்		1	0	பிரபுலிங்கலீலை உரை		2	8
பிரபுலிங்கலீலை வசனம்		0	12	ஞான தரிசனி		0	10
பிரபோத சந்திரோதயவசனம்		1	0	தத்துவதரிசனி		0	10
இந்து வைபவம்		1	12	வேதாந்தொரு விளக்கம்		0	12
மத விருக்கம்		1	12	நில்ய தேசயாத்திரை		2	0
விருத்திப்பிரகாசம்		4	0	பகவத்கீதை வசனம்		1	4
தியாயப்பிரகாசம்		4	0	ஞானதேவ சரித்திரம்		0	10
வேதாந்த மகாசித்தாமணி		4	0	வள்ளலார் சரித்திரம்		1	4
வெளாவியோகி வேதாந்த உரை		0	8	தத்துவாதீதசந்தானம்		2	8
பத்தாவன வசனம் 192 பக்தர்களின் சரித்திரம்					ரூ.	3	8
பெருந்திட்டி குருநிட்டை		3	0	கைவல்ய மூலம் (பாக்கெட்)		0	3
பஞ்சதசி செய்யுள் பாலை		0	10	வேதாந்த சூளாமணி ,,		0	2½
தருக்கசித்தாந்தம் பிரமாணபரதம்		0	8	பகவத் கீதை ,,		0	5
வேதாந்தசாரசிந்தாமணி சூத்திரசமஞ்சரி மூலமும் உரையும்						0	6
[illegible]		0	6	ஞான சாமாயணம்		5	0
[illegible]						1	0
[illegible]						0	12
[illegible]							
[illegible]							
[illegible]							

[illegible] தென்னை.

தென்றது † கூடாவொழுக்கத்தை. ‡ துறவறம் மனத்தையும்பொறிகளையும் ஒருத்தடக்க வல்ல அருமையுடைத்தாய வழியே. அவற்றை ஒடுக்க வேண்டாது ஐம்புல வின்பங்க ளாரா துய்க்கு மேன்மை யுடைய வில்வாழ்க்கையோடு அறமென வொருங்கெண்ணப்படுவ தென்றவா ரையிற்று.

இவை நான்கு பாட்டினும் இன்னிலையே பயனுடைத்தென இதன் றெப்புக் கூறப்பட்டது.

தெளி.—(இ-ன்). (இருவகை யறத்திலும்) அறனெனப்பட்டது - (நூல்களால்) அறனென்று றெப்பித்துச் சொல்லப்பட்டது, இல்வாழ்க்கையே—, (மற்றைத்துறவறமோ வெனின்), அஃதும் - அத்துறவறமும், பிறன்பழிப்பது-பிறனுற்பழிக்கப்படுவது, இல்லாயின் - இல்லாதிருந்தால், நன்று-(அவ் வில்வாழ்க்கையோடு ஒரு தன்மையதாக) நன்றும். (எ-று).

பிரித்துக்கூட்டிய எகாரம் பிரிநிலைப் பொருளது. இவ்வேகாரத்தால் (இல்லறத்தினின்றும்) பிரிக்கப்பட்டது துறவற மாதலால் அஃதென்னுஞ் சுட்டுப் பெயர் அத்துறவறத்தின்மேல் நின்றது. பிறன்பழிப்ப தென்றது கூடாவொழுக்கத்தை. துறவறம் மனத்தையும் இந்திரியங்களையும் வருத்தியடக்கவல்ல அருமையுடைய தாயவிடத்தே, அம்மனத்தையும்இந்திரியங்களையும் வருத்தியடக்க வேண்டாது ஐம்புல வின்பங்களையும் கிரம்ப வனுபவிக்கும் மேம்பாடுடைய இல்வாழ்க்கையுடன் அறமென்று ஒன்றாக வெண்ணப்படுவது என்றவாரையிற்று. ஐம்புல வின்பம் - சப்தப் பரிசாதி ஐந்து விஷயங்களின் வாயிலாக வருஞ் சுகம்.

இவை நான்குபாட்டாலும் இல்லறமே பயனுடையதென்று இதன் றெப்புச் சொல்லப்பட்டது.

(க-து). துறவறம் பிறர் பழித்தற்கிடமின்றி யிருக்குமாயின் அறனென்று சொலலப்பட்ட இல்வாழ்க்கையுடன் ஒரு தன்மைய தாகச் சிறப்புடையதாம் என்பது. (கூ)

9. The marriage-state is truly called virtue The other (ascetic) state is also good, if *others* do not reproach it (for the vices of those who profess it).

† கூடாவொழுக்கமென்று மிந்நூலின் அதிகாரத்தைப்பார்க்க.

‡ துறவறத்தில் மனத்தையு மிந்திரியங்களையு மடக்க வேண்டிய வருத்தமிருத்தலால் அது முற்றப் பெறுவது அரிது; இல்லறத்திலே அவ் வருத்தமில்லாமையால் இது முற்றப்பெறுவது எளிது. அப்வாறிருந்தா லும் அத்தன்மையதாய துறவறம் தவறின்றி நடைபெறும் போது இல் லறத்துடன் சேர்த்து எண்ணப்படுவதாயின்ற தென்பதாம்.